தமிழில் இதழியல்

பதிப்பாசிரியர்

இ. சுந்தரமூர்த்தி

மா.ரா. அரசு

உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்

INTERNATIONAL INSTITUTE OF TAMIL STUDIES

தமிழில் இதழியல்

பதிப்பாசிரியர்

இ. சுந்தரமூர்த்தி

மா.ரா. அரசு

உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்

INTERNATIONAL INSTITUTE OF TAMIL STUDIES

இரண்டாம் முதன்மைச் சாலை, மையத் தொழில் நுட்பப்
பயிலக வளாகம், தரமணி, சென்னை-600113

BIBLIOGRAPHICAL DATA

Title of the Book	:	**Tamil̲il itaḻiyal**
Author	:	**E. Sundaramoorthy** **M.R. Arasu**
Publisher & ©	:	International Institute of Tamil Studies II Main Road, C.I.T. Campus Chennai-600 113 Ph: 22542992
Publication No.	:	730
Language	:	Tamil
Edition	:	First
Year of Publication	:	2011
Paper Used	:	18.6 Kg TNPL Maplitho
Size of the Book	:	1/8 Demy
Printing type used	:	10 Point
No. of Pages	:	vi + 600
No. of Copies	:	1200
Price	:	Rs.270/- (Rupees Two hundred and seventy only
Printed by	:	Sri Venkateswara Offset No.47, Rajanga Mathya Street Vadapalani, Chennai - 600 026
Subject	:	Studies on Tamil Journalism

திரு.கூ.வ.எழிலரசு, எம்.ஏ.,எம்.ஃபில்.,பிஎட்.,
இயக்குநர் (கூடுதல் பொறுப்பு)
உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்
சென்னை - 600 113

அணிந்துரை

உலகளாவிய நிலையில் இணையத் தளத்தில் ஆங்கிலத்திற்கு இணையாக நம் உயிர்மொழியாம் தமிழ்மொழி உலா வந்து கொண்டிருக்கும் காலமிது.

இன்றைய நாளில் வரும் மாத இதழ்கள், நாளிதழ்கள் அனைத்தையும் உடனுக்குடன் உலகத் தமிழர்கள் இணையத் தளத்தில் கண்டு மகிழ்கின்றனர். நம் முன்னோர்களின் பண்பாட்டை இதழ்கள் வழி அறிந்துகொள்ள முடிகிறது. அவர்களின் பெருந் தமிழ்ப்பணிகளை, மதிப்பிடும் நோக்கில் 'பன்னாட்டு இதழியல் கருத்தரங்கம்' நடத்தப் பெற்றது. பன்னாட்டுத் தமிழ் இதழ்களை, 1831-1881, 1882-1941, 1942-2000 எனக் காலமுறைப் பகுப்பில் அமைத்து அவற்றின் 'கருத்தியல் கோட்பாடு', 'அமைப்பும் ஆக்கமும்', 'மொழி' - ஆகியவற்றை ஆய்வு செய்து உருவாக்கப் பட்ட கட்டுரைகள் இந்நூலில் இடம் பெற்றுள்ளன. இவை மட்டுமன்றி இதழியல் துறையில் தடம் பதித்து வெற்றிவாகை சூடிய சாதனையாளர்கள் வரலாறும் இந்நூலில் பதிவாகியுள்ளமை மகிழ்ச்சிக்குரியது. திரைகடல் ஓடியும் திரவியம் தேடு என்பது மட்டுமல்ல, திரைகடல் தாண்டியும் தீந்தமிழ் வளர்ப்போம் எனும் தமிழர் பண்பாட்டை இந்நூல் பறை சாற்றுகிறது.

இந்நிறுவன வளர்ச்சிக்கு ஆக்கமும் ஊக்கமும் அளித்து வருவதோடு தம் தனிப்பட்ட அக்கறையைக் காட்டிவரும் **இந்து சமய அறநிலையம் மற்றும் தமிழ் வளர்ச்சி - பண்பாட்டுத் துறை அமைச்சர் மாண்புமிகு எஸ்.பி. சண்முகநாதன்** அவர்களுக்குத் தமிழுலகம் என்றும் நன்றிக் கடன்பட்டுள்ளது.

நிறுவனச் செயற்பாட்டுக்கு உறுதுணையாக இருந்துவரும் **தமிழக அரசின் தமிழ் வளர்ச்சி, அறநிலையங்கள் மற்றும் செய்தித் துறைச் செயலாளர் முனைவர் மூ. இராசாராம் இ.ஆ.ப.** அவர்களுக்கும் நன்றி.

நூல் வெளியீடு தொடர்பான அனைத்து ஏற்பாடுகளையும் செய்த நிறுவனப் பணியாளர் மற்றும் கணிப்பொறியாளர் திருமதி பா. கௌசல்யா ஆகியோருக்கும் என் நன்றிகள் என்றுமுண்டு. இந்நூலை அழகுற அச்சிட்டுத் தந்த ஸ்ரீ வெங்கடேஸ்வரா ஆப்செட் அச்சகத்தாருக்கு என் பாராட்டுகள்.

இயக்குநர் (கூ.பொ.)

பொருளடக்கம்

கருத்தரங்க முதன்மை உரை

கார்த்திகேசு சிவத்தம்பி

தமிழில் இதழியல் - விடப்படக்கூடாத வினாக்கள்- தாமதிக்கக் கூடாத விடயம்

உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம், டாக்டர் மா.இராசமாணிக்கனார் இதழியல் ஆய்வு மையம், காஞ்சி மணிமொழியார் ஆய்வுப் பேரவை ஆகியவை சென்னைப் பல்கலைக்கழகத்துடன் இணைந்து நடத்தும் இந்தக் கருத்தரங்கு 1997 முதல் இத்தலைப்பில் நடத்தப்பட்டு வரும் இதழியல் கருத்தரங்கத் தொடரின் இறுதி கருத்தரங்கு ஆகும். முன்பு விடுத்தலைக்கு முன்னர்-பின்னர் என்ற வரலாற்று பிரிகோடின் அடிப்படையிலும் சஞ்சிகைகளின் கருத்து நிலைகளின் அடிப்படையிலும் (திராவிட, பொதுவுடைமை) பால் அடிப்படையிலும் (மகளிர்) நடத்தப்பெற்று கணிசமான அளவு தரவு சேகரிக்கப்பட்டுள்ளது.

இந்தக் கருத்தரங்கில் இவை யாவற்றையும் தொகுத்து நோக்குவது போல் 1831-1881, 1882-1941, 1942-2000 என்ற அடிப்படையில், கருத்து நிலை (Ideology) அமைப்பும் ஆக்கமும் (Production), மொழி (Language) ஆகியவற்றுடன் அவ்வக் காலத்தே தொழிற்பட்ட முதன்மை ஆளுமைகள் பற்றியும் பார்ப்பதற்கு இக்கருத்தரங்கிலே கூடியுள்ளோம்.

மேலும் முக்கியமாகத் தமிழ் இதழ்கள் இடம்பெறும் இலங்கை, மலேசியா, சிங்கப்பூர் ஆகிய இடங்களில் தமிழ் இதழியல் எவ்வாறு வளர்ந்துள்ளது என்பது பற்றி அறிய முற்பட்டுள்ளோம். எனவே இந்தக் கருத்தரங்கு எம்மை சற்று விரிந்த, அதேவேளை சற்று ஆழமான தேடலுக்கு இட்டுச் செல்கிறது.

இந்தத் தேடலைப் பின்வருமாறு குறிப்பிடலாம்.

தமிழில் இதழியல் தொழிற்பட்டுள்ள முறைமையிலிருந்து சற்று விலகி இதழியல் என்னும் துறையில் அப்பெருவிடயத்தைத்

தமிழ், தமிழ்நாடு, தமிழ்கூறும் நல்லுலகம் எவ்வாறு உள்வாங்கியுள்ளன என்பதை அறிய முனைதல் அவசியமாகிறது.

இந்த நோக்கின் வழிச் செல்லும்போது கிளம்பும் முதலாவது வினா இதழியல் என்பது என்ன என்பதுதான். ஏறத்தாழ கடந்த பத்தாண்டுகள் வரை பொது வழக்காகவும் இன்றும் சாதாரண வழக்காகவும் உள்ள பத்திரிகை என்ற சொல்லையே நாம் இன்று இதழ் என்கிறோம். இலங்கையில் இது இன்றும் பத்திரிகையியல் பத்திரிகை ஆய்வியல் என்றே குறிப்பிடப்படுகிறது. 'பத்திரிகா' என்னும் வடமொழிச்சொல் இலையைக் குறிப்பது. பல பத்திரிகைகளின் வெளியீட்டில் மலர், இதழ் என்ற கணக்குக் குறிப்பும் உண்டு. இவை கவனமாக நாம் இன்று பத்திரிகைகளை இதழ்கள் என்றும் பத்திரிகை பற்றிய துறையினை இதழியல் என்றும் கூறுகின்றோம். இதழியல் என்பது இன்று நம்மிடையே Journalism என்பதற்கான தமிழ்ச் சொற்றொடராக உள்ளது. Journal என்ற சொல் பிரஞ்சு வரியாக நாள்-பகலைக் குறிக்கும் ஒரு சொல்லாக இருந்து பின்னர் 'பதிகை' (பதிவு) பற்றிய தொழிற்பாட்டுக்கான சொல்லாகிவிட்டது. இது இன்று இதழ்கள் பற்றிய ஒட்டுமொத்தமான எல்லா தொழிற் பாடுகளையும் குறிக்கும் ஒரு சொற்றொடராக உள்ளது.

எனவே, இதழியல் என்பது Journalism என்பதற்கான தமிழ்ச் சொல்லாகும்.

Journalism என்பது என்ன? ஓஃக்ஸ்ஃபோட் அகராதி பின்வருமாறு கூறும்:

The businesers or practice of writing and producing News paper

என்று கூறும் செய்திப் பத்திரிகைகளை எழுதுவது தயாரிப்பது பற்றிய வியாபாரம் அல்லது பயில்வு ஆகும்.

இதழியலாளரான Journalist-ஐ அது பின்வருமாறு விளக்கும்:

> A person employed to write for Edit or report for a News paper, Journal or News cast. [ஜர்னலிஸ்ட் பற்றிய இன்றைய ஆங்கில விளக்கம் அதனை ஒரு

ஊதியத் தொழிலாகவே குறிப்பிடுகிறது. ஆனால், தமிழ் இதழியல் வரலாற்றிலோ இப்பணியை ஊதியமாகக் கொள்ளாது தங்கள் உயிர்ப் பணியாகக் கொண்ட பலரையே காண்கிறோம். சிறப்பாகப் பாரதி முதலிய நமது முன்னோடிகள் இப்பணியைப் பிழைப்புக்காகச் செய்யவில்லை.

இதழியல் என்ற இச்சொற்றொடர் சில சிக்கல்களைக் கிளப்புகிறது. Magazine எனப்படும் சஞ்சிகைகளை எவ்வாறு குறிப்பிடுவது என்பது இன்னும் தெளிவில்லை. இதற்கான ஒரு தனி வழக்கு வருதல் அவசியம்.

ஆனால், இதழியலை ஆய்வு செய்யும் ஒருவருக்குக் குறிப்பாக அதன் தொடர்பியல் முக்கியத்துவங்களை விளங்கிக் கொள்வதற்கு நாம் உடனடியாக அச்சு ஊடகம் என்ற தொகுநிலை பார்வைக்கும் அதற்கு மேலாகத் தொடர்பியல் ஆய்விற்கும் (Communication Studies) இட்டுச் செல்லப்படல் வேண்டும்.

பத்திரிகைகள் தொடர்பு ஊடகம், தொடர்பாடல் என்பது என்ன? இது பற்றிய 'ஹரல்ட் லஸ்வெல்' (Harold Laswell)-ன் உலகப் பிரசித்தமான வாய்பாடு இதுதான்.

- யார்
- எதை
- யாருக்கு / எவருக்கு
- எந்த ஊடகம் மூலம்
- எத்தகைய தாக்கத்துடன் சொல்கிறார்.

இந்த வாய்பாட்டில் ஒவ்வொன்றும் மிகமிக முக்கியம். ஏனெனில், இதில் உள்ள ஒவ்வொன்றும் மற்றதைத் தீர்மானிக்கலாம். இந்த உண்மையைச் சிறிதேனும் மறந்துவிடக்கூடாது. இந்த முழு நடவடிக்கைகளையும் சுருக்கி,

- விடுப்போர் (Sender)
- செய்தி (Message)
- பெறுவோர் (Receiver)

என்ற வாய்பாட்டினுள் அடக்கிவிடலாம். இதனை ஆங்கிலத்தில்

SMR என்பர். இந்த ஊடகங்களை இரண்டு பெரும் பிரிவாகப் பிரிப்பர். அச்சு-மின்னியல். ஆனால் இன்று இந்தப் பிரிநிலை அதிகம் தொழிற்படுவது இல்லை. கணினிக்குள் அச்சும் உண்டு; மின்னியலும் உண்டு.

நீங்கள் இந்தக் கருத்தரங்கில் இது பற்றி ஆராய்ந்துள்ள தொடர்ந்து ஆராயவுள்ள இதழ் பற்றி இந்த வினாக்களைக் கேட்க வேண்டும். பெரும்பாலான விவரிப்புகளில் இந்த வினாக்களுக்கு விடையே கிடைப்பதில்லை. ஏன்? எதற்கு? எப்படி? என்ற வினாக்களை மனதில் கொள்ளாமல் தென்படுவனவற்றை மாத்திரம் பதிவு செய்து விடுவதால் வரலாறு வந்துவிடுவதில்லை என்பது பொதுவான ஒரு உண்மை.

நாங்கள் மேலே தந்த வினாக்களைத் தமிழ் இதழ்கள் பற்றிக் கிளப்பும்போது மிகச் சுவாரசியமான வினாக்கள் கிளம்பும். உதாரணமாகப் பின்வருவனவற்றைக் கேட்கலாம்.

1. உதயதாரகை ஏன் உதயதாரகைபோல் அமைந்தது.
2. தினத்தந்தி ஏன் அந்த மொழிநடையைப் பயன்படுத்திற்று.
3. இப்பொழுது ஏன் தினமணி தினத்தந்தி மாதிரியும் தினத்தந்தி தினமணி மாதிரியும் ஆவதற்கு முனைகின்றன.

இவ்வாறு மிக உன்னிப்பாக நோக்கும்போதுதான் இதழியலில் மொழி என்பது ஒரு கருவி மட்டுமே என்பது தெரியவரும். மேலே கூறிய SMRஇல் M(message)-ஐ கூறுவதற்கான முறைமைதான் மொழி. அந்த முறைமை மொழியாக இருக்க வேண்டியதில்லை. படமாகவும் இருக்கலாம். (கழிப்பிட வாயில்களில் ஆண், பெண் உருவம்) இங்கே படம் மொழியாகிறது. சினிமாவில் பாதி மொழி படம்தான். உண்மையில் படத்தின் அசைவுதான் சினிமாவின் மொழி, அச்சு ஊடகத்தின் பிரதான அம்சம் அது பலரைச் சென்றடைகிறது. இந்த இடத்திலேதான் அச்சு ஊடகத் துக்கும் ஜனநாயகத்துக்குமுள்ள தொடர்பு உணரப்படல் வேண்டும். மக்களாட்சி அச்சு எந்திரத்தின் சேயும் தாயும்தான். இந்த விடயம் நன்கு விளங்கிக் கொள்ளப்படாமல் தமிழ் இதழ்களின் அமைப்பையும் மொழியையும் வியாபார ஒழுங்கமைப்பையும் விளங்கிக்கொள்ள முடியாது. புதிய புதிய வாசக

வட்டங்களுக்குச் செல்லுதல், அந்த வாசக வட்டங்களின் தேவைகளை உணர்தல், அவர்களைக் கவர்தல் என்பன இந்தத் துறையின் அடிப்படை உந்துதல்கள் ஆகும். ஜி. சுப்ரமணிய ஐயர் நடைக்கும் அயோத்திதாசர் நடைக்கும் பெரியார் நடைக்கும் அண்ணாவின் நடைக்கும் கலைஞரின் நடைக்கும் எ.என். சிவராமனின் நடைக்கும் உள்ள வேறுபாடுகள் உண்மையில் தமிழ் இலக்கியத்துக்கு உரியனவல்ல. அவை தொடர்பியலில் அத்தியாவசியத் தேவைகள்.

இதற்கு மேல் நாம் இன்னொரு மிகமிக முக்கியமான இன்றைய தொடர்பியலின் அச்சாணியான ஒரு விடயத்துக்குச் செல்லல் வேண்டும்.

தொடர்பாடல் எப்பொழுது வெகுசன தொடர்பாடல் ஆகிறது

இது ஒரு ஆழமான, பிரச்சினை. தொடர்பு நிலை கொண்டு தொடர்பாடலைப் பல நிலைப்படுத்தி ஆராய்வர்.

1. ஆளுக்குள் (Intrapersonal)
2. ஆளுக்கு ஆள் (Interpersonal)
3. குழுக்களூடே (Inter Group)

இவற்றிற்கு மேலாகதான் Mass Communication வருகிறது. இன்று இதழியல் பற்றிய ஆய்வு இரண்டு நிலையினூடாக வருகிறது. ஒன்று மாஸ்மீடியா என்பதனூடாக. மற்றொன்று மீடியாஸ்டடிஸ் என்பதனூடாக. மீடியா ஸ்டடிஸ் உண்மையில் மாஸ் மீடியாவை முனைப்புறுத்தியே ஆராயப்படுகிறது. எனவே அதுபற்றிச் சற்று விளக்கமாக அறிந்துகொள்வது அவசியம்.

மாஸ் கம்யூனிகேஷனைத் தமிழகத்தில் மக்கள் தொடர்பியல் என்றே கூறுகிறார்கள். இது சில கருத்து மயக்கங்களுக்கு இடங்கொடுக்கும். மக்கள் என்பது People எனப்படுவதற்கான ஒரு பொதுவான நீண்ட காலமாக இருந்துவருகிற ஒரு சொற்றொடராகும். People Democracy, Peoples War என வரும் தொடர்களில் people என்பது ஒட்டுமொத்தமான மக்கள் நிலைப்பட்ட ஓர் எழுச்சியையே

குறிக்கிறது. விடுதலைப் போராட்டங்களை அவ்வாறு கூறுவது உண்டு. (Peoples Liberation Army PLA), Mass என்பது அப்படியல்ல. Mass என்பது ஒரு திரள்நிலையையே குறிப்பது (இயற்பியலை நோக்குக) Mass என்னும் நிலையில் மக்கள் தங்கள் தனித்துவங்களை இழந்தவர்களாய் (முகங்களற்றுப் போனவர்களாய்) முதலாளித்துவத்தின் வளர்ச்சி, சந்தைப் பொருளாதாரத்தின் உக்கிரம் ஆகியன காரணமாக மக்கள் இன்றைய அன்றாட சீவியத்தில் திரள்நிலைக் கூட்டங்களாகவே உள்ளனர். 'நுகர்வோர் பண்பாடு' என்பது இதுதான். யார் எவர் என்றில்லாமல் எல்லோரும் நுகர்வோர்தான். இந்த நுகர்வு வட்டம் வேறுபடும். பயணிகளாக, வீட்டுப் பெண்களாக, ஆபீஸ் குமாஸ்தாக்களாக, ஆஸ்பத்திரி நோயாளிகளாக, சினிமா விசிறிகளாக, டி.வி. பார்ப்போராக என நாங்கள் பல்வேறு திரள்நிலைகளில் இருக்கிறோம் அத்தகைய திரள்நிலைகளில் ஒன்றுதான் வாசகர்கூட்டம். இத்திரள்நிலைகளில் ஏதோ ஒரு ஆர்வநிலை அல்லது தேவைநிலை அவர்களைத் திரளாக்கும். இந்தத் திரள்நிலையைக் குறிப்பதற்கு - முகமற்ற மனிதத்திரள்களைக் குறிப்பதற்கு ஒரு சொல் வேண்டும். மக்கள் என்னும் அரசியல் வலுவுடைய பதத்தைப் பயன்படுத்துவது பொருந்துமோ என ஐயுறுகிறேன். இப்படியான திரள்நிலைகளைக் குறிப்பதற்கு நமது பேச்சுவழக்கில் "சனங்கள் . . . சனங்க" என்பது வழக்கம். இது உண்மையில் ஒரு வெகுசன நிலைதான். (கவிஞர் ஈரோடு தமிழன்பன் வெகுமக்கள்நிலை அல்லது மிகுமக்கள் நிலை என்று கூறினார். இதுபற்றி சிந்திக்க வேண்டும்) நான் எனது பேச்சில் இலங்கையில் வழக்கிலுள்ள வெகுசனம் என்னும் சொல்லையே பயன்படுத்துகிறேன்.

இந்தத் தமிழ் இதழ்களின் வளர்ச்சியில் குறிப்பாக 1942-லிருந்து வெகுசனம் என்ற எண்ணக்கரு மிக முக்கியமான இடத்தைப் பிடித்துள்ளது. தினத்தந்தி, குமுதம் ஆகியவை இந்த வெகுசன நோக்கிலேயே வருபவை. அவற்றின் வெற்றி இன்றைய உலகில் சில இன்றியமையாமைகளைத் தோற்றுவித்துவிட்டன. உதாரணமாக வணிகநிலை வெற்றிக்கு வெகுசன கவர்ச்சி முக்கியமாகும். இன்னொன்று சஞ்சிகைகள் வெகுசன தேவைகளைக் கருத்தில் கொண்டு பதிப்பிக்கப் படுகிறபோது கன தியான அமிசங்களை பிரசுரிக்க முடியாது. இதனால் ஒரு குறுகிய வாசகர் வட்டத்தையே கொண்ட இலக்கிய கருத்தாடல்களுக்கான

விடயங்கள் பல சிற்றிதழ்களுக்குரியனவாயின (Little Journal). அறிவியல் துறையில் பல சஞ்சிகைகள் வருவதை நாம் மறந்துவிடக் கூடாது.

எனவே, இதழ்கள் பற்றிய ஆராய்ச்சிகளில் எந்த வாசகர் கூட்டத்தை நோக்கி அவை பிரசுரிக்கப்பட்டன என்ற வினா முக்கியமாகும். எவை வெகுசனத்தை நோக்கியவை? எந்த வாசகர் கூட்டத்தை நோக்கியவை? என்பன முக்கியமாகும். இதற்கு மேலாக இன்னொரு முக்கியமான விடயமும் அது தொடர்பாடலின் தொழில் நுட்பம் பற்றியும் D.T.P. வந்ததன் பின்னர் கையச்சுக்கு வேலையில்லை. அது கவர்ச்சியாக இருக்கப் போவதுமில்லை. தொழில் நுட்ப வளர்ச்சியின் காரணமாக பிரதி தயாரிப்புச் செலவு நூலுக்கும் ஆயிரத்துக்கும் அதிக வித்தியாசமில்லை. ஆயிரத்துக்கும் ஐயாயிரத்துக்கும் அதிக வித்தியாசமில்லை. கணினிகள் வந்ததன் பின்னர் மின்னியல் சஞ்சிகைகள் வருவது தடுக்கப்படக்கூடிய ஒரு விடயமல்ல. மின்னியல் சஞ்சிகைகளில் ஒவ்வொரு நாளும் சில விடயங்களையாவது குறித்துக் கொள்ளுதல் வேண்டும்.

எல்லாவற்றிற்கும் மேலாக இதழ் வெளியீடு என்பது ஒரு வணிக நடவடிக்கை. அது ஒரு கைத்தொழில். முதலீடு, உற்பத்தி, விநியோகம், இலாபம் என்ற விடயங்கள் அதற்குள் அடங்கும். இவற்றை மனங் கொள்ளாமல் இதழை நடத்திவிட முடியாது. இப்போது வினா என்னவென்றால், தமிழில் இதழ்களின் வெளியீடு காலத்திற்குக் காலம் எவ்வாறு ஒழுங்கமைக்கப்பட்டு வந்துள்ளன என்பதை அறிவதாகும். அந்த ஒழுங்கமைப்பை அறிந்து கொள்ளாமல் இதழ்களின் போக்கை அறிந்துகொள்ள முடியாது. S.S. வாசனின் வணிக மேதாவிலாசத்தைத் தெரியாமல் ஆனந்த விகடன், கல்கி பற்றிய இலக்கிய விமர்சனத்தில் இறங்க முடியாது; கூடாது.

அடுத்து இதழியல் பற்றிய ஆய்வில் மிகமிக முக்கியமான இடம்பெற வேண்டியது இதழ் அமைவு ஆக்கத்தில் உள்ள தொழிற்பாடுகள் பற்றியதாகும். இதழியல் என்பது ஒரு தொழின்மை (profession). அதற்கெனச் சில சிறப்பு நடைமுறைகள் உண்டு. அவற்றைப் பற்றித் தமிழில் தெள்ளத்தெளிவாகப் பேசும் ஒரு நிலை ஏற்பட வேண்டும். ஆனால் துரதிர்ஷ்டவசமாக இன்று இவற்றிற்கான நேர்பதங்கள் இல்லை.

- Reporting
- Subbing
- Leader
- Writing
- Future writing
- Editing

என்பவற்றுக்கான பொருத்தமான பதங்கள் இன்னும் உருவாகவில்லை. உதாரணமாக இதழ் துறையில் எடிட்டிங் என்பது பதிப்பித்தல் ஆகாது. ஒரு பத்திரிகையில் வருகின்ற விடயங்களைச் செவ்வைப்படுத்தி ஒரு அமைப்புக்குள் கொண்டுவருவதே இங்கு எடிட்டிங் எனப்படும். இந்த எடிட்டர் உ.வே. சாமிநாத ஐயர், சி.வை. தாமோதரம் பிள்ளை போன்ற எடிட்டர் இல்லை. இந்தத் தெளிவு வேண்டும். இன்றும் இதழாளர்கள் செய்தித்தாளில் வரும் பல்வேறு விடயங்களை Story என்றே சொல்வார்கள். இதை நாங்கள் அப்படியே கதையெனச் சொல்லலாமா? இதழியலில் Storyக்கான தமிழ்ப்பதம் யாது? உண்மையில் இதழியலில் கலைச்சொல்லாக்கம் இன்னும் சரிவர நடைபெறவே இல்லை. இதழியல் பற்றிப் புலமை நிலையில் பேசுவது ஒன்று; அதனைத் தொழில் நிலையில் பேசுவது - ஊடாடுவது இன்னொன்று.

இதழியல் பற்றிய ஆய்வுகள் இவ்விடயத்தையும் கணக்கில் எடுத்துக்கொள்ள வேண்டும்.

வெகுசன உலகில் எழுத்தறிவின் பயன்பாட்டு விரிவாக்கம், நுட்பம், சுவாரசியம் ஆகியன பற்றிச்சென்ற நூற்றாண்டின் நடுக்கூறில் 'ரிச்சர்ட் ஹோகார்ட் (Richard Hoggard) 'The uses of Literacy' என்று எழுதினார். தமிழில் நாம் இந்த நூற்றாண்டின் தொடக்கத்திலாவது தமிழரிடையே அவர்தம் எழுத்தறிவு எவ்வாறு, எதற்கு, எவ்வெவ்முறைகளில் பயன்படுத்தப் படுகிறது என்பதைப் பற்றி அறிந்துகொள்ளல் வேண்டும். அதற்கான ஒரு நன்முயற்சியாக இந்தக் கருத்தரங்கு அமையும் என்ற நம்பிக்கையுடன் இந்த உரையை நிறைவு செய்துகொள்ளுகிறேன்.

தமிழ் இதழ்கள் 1831-1881 கருத்தியல் கோட்பாடு

பெ.சு. மணி

தமிழ் இதழியல் வரலாற்றில் சென்னையில் இருந்து 1831இல் வெளிவந்த 'தமிழ் மேகசைன்' (TAMIL MAGAZINE) முதல் தமிழ் இதழ் என்று கூறப்பெற்று வருகின்றது. 1882இல் சென்னையில் 'சுதேசமித்திரன்' வாரப்பதிப்பாக முதலில் வெளிவந்தது. இந்த நோக்கில் 1831 முதல் 1881 வரையிலான தமிழ் இதழியல் வரலாற்றின் முதல் கால கட்டமாக வகுக்கப் பெற்றுள்ளது.

இக்காலகட்டத்தில் சில அமைப்புகள் தோன்றியுள்ளன.

1830இல் சென்னையில் 'இந்து லிடரரி சொஸைடி' உருவாக்கப்பட்டது. இதன் தலைவர் காவேரி வெங்கட நரசிம்மய்யர்; செயலாளர் சி. சீனிவாசப் பிள்ளை. மேலைநாட்டு கல்வியறிவு, பிரிட்டிஷ் ஆட்சியைக் கொண்டு சமூக மாற்றம் காண இந்த அமைப்பு விரும்பியது. (இந்த அமைப்புப் பற்றி விவரமாக பெ.சு. மணியின் 'இந்திய தேசத்தின் தோற்றமும் வளர்ச்சியும் - 1973' எனும் நூலில் கூறப்பட்டுள்ளது.

'சதுர்வேத சித்தாந்த சபை' எனும் ஓர் அமைப்புப் பற்றிய குறிப்பு கிறித்துவ சமய மிஷனரி ஆவணம் ஒன்றில் (1846) குறிப்பிடப் பெற்றுள்ளது. இது, கிறித்துவ சமய எதிர்ப்பில் ஈடுபட்டது. இந்து சமயத்தைப் பரப்ப வெளியீடுகளை வெளியிட்டுள்ளது. பல மாவட்டங்களில் இந்து சமயப் பிரசாரத்திற்கான பேச்சாளர்களை உருவாக்கியுள்ளது.

1852இல் சென்னையில் 'மெட்ராஸ் நேடிவ் அசோசியேஷன்' எனும் முதல் மாநில அரசியல் அமைப்பு தோன்றியது. இதைத் தொடங்க மூலகர்த்தவாக விளங்கியவர் காஜுலு லட்சுமி நரசு செட்டி (1806-1868). சென்னையில் 'பொதுமக்கள் கருத்து' எனும் கோட்பாட்டை இவரே முதல்முதலில் உருவாக்கினார். (இந்த அமைப்பைப் பற்றியும் முற்கூறிய பெ.சு. மணியின் நூலில் விரிவாகக் கூறப்பெற்றுள்ளது.

'மெட்ராஸ் நேடிவ் அசோசியேஷன்' அரசியல் சீர்திருத்தம் காணப்பட்டது. அதில் இருந்த சி. சீனிவாசப் பிள்ளை சமூக சீர்திருத்தத்திற்கு முன்னுரிமை அளிக்க விரும்பி 1852 நவம்பர் 'இந்து ப்ரொக்ரசிங்க இம்ப்பூர்வமெண்ட் சொஸைடி' எனும் பெயரில் ஓர் அமைப்பை ஏற்படுத்தினார். இதைத் தொடர்ந்து வெங்கடராயலு நாயுடு என்பவர் 'இந்து டிபேட்டிங் சொஸைடி' எனும் சங்கத்தை நிறுவினார்.

1873இல் நாகர்கோயிலில் சேஷ ஐயங்கார் என்பவர் 'மெட்ராஸ் இந்து விதவை திருமண சங்கத்தை' உருவாக்கினார்.

இந்து விவாத சங்கத்தைச் சார்ந்த வி. ராஜரத்தின முதலியார் என்பவர் சதர்ன் இந்தியன் அசோசியேஷன் எனும் அமைப்பை நிறுவி, அரசியல் சமூகப் பிரச்னைகளைப் பற்றி விவாதிக்கப் பாடு பட்டுள்ளார்.

1874இல் திருவல்லிக்கேணியில் அரசியல் சமூகக் கண்ணோட்டத்தில் 'மறுசீரமைக்கப்பட்ட டிரிப்ளிகேன் லிடாரி சொஸைடி', 1864இல் 'டிர்ப்ளிகேன் நேடிவ் லைப்ரரி சொசைடி'யாக இயங்கியதின் அடுத்தக் கட்ட வளர்ச்சியாகும்.

இவற்றின் கருத்தியல் கோட்பாடுகளை விளக்கிடத் தமிழ் இதழ்கள் தோன்றவில்லை.

பொதுவாகத் தமிழ் இதழ்களின் தோற்றம் பற்றியும், வளர்ச்சிப் பற்றியும், சிறப்பாக அவற்றின் கருத்தியல் கோட்பாடு இக்கால கட்டத்தின் ஆய்வாக எடுத்துக்கொள்ளப் பெற்றுள்ளது.

இந்தியாவில் இந்திய மொழிகளில் இதழியல் தோற்றம் வளர்ச்சி பற்றியக் காலகட்டங்களைப் பின்வருமாறு நான்காகப் பகுத்துக் கொள்ளலாம்.

1. கிறிஸ்துவ மிஷனரிகள் தங்கள் சமயப் பிரசாரத்திற்காக இதழ்களைத் தொடங்கியது.
2. கிறிஸ்துவ சமயப் பிரசாரத்தை எதிர்க்க இந்து சமய சீர்திருத்தவாதிகள் இதழ்களைத் தொடங்கியது.
3. இந்து சமய சீர்திருத்தவாதிகளை எதிர்த்து வைதீக இந்துக்கள் இதழ்களைத் தொடங்கியது.

4. சமயப் பிரசாரத்திற்காகத் தொடங்கப்பெற்ற இதழ்கள் காலப்போக்கில் சமூக, அரசியல் இதழ்களாக மாற்றம் பெற்றது.

இந்த காலக்கட்டப் பாகுபாடு ஒரு பொதுத்தன்மையைக் கொண்டது. பிரிட்டிஷ் கிழக்கிந்தியக் கம்பெனி ஆட்சி, அதைத் தொடர்ந்து, பிரிட்டிஷ் அரசின் நேரடி ஆட்சி காலத்தில் காலனியாதிக்கத்தின்கீழ்க் கொண்டுவரப்பட்ட இந்தியப் பிரதேசங்களில் சமூக, அரசியல் தாக்கங்கள் சமச்சீருடையன அல்ல. எனவே இதற்கேற்ப இதழியல் தோற்றம், வளர்ச்சி பற்றிய கால கட்டங்களின் நோக்குகள், போக்குகள் வேறுபட்டன.

சமூக விழிப்பும் அரசியல் விழிப்பும் பத்தொன்பதாம் நூற்றாண்டின் தொடக்கத்தில் அன்றைய சென்னை மாநிலத்தில் ஊர்ந்து, ஊர்ந்து வந்தச் சூழலில் தமிழ் மொழி இதழ்களின் கருத்தியல் கோட்பாடும் போதிய வளர்ச்சி பெறவில்லை. இதே காலகட்டத்தில் வங்கம், மகாராஷ்டிரப் பிரதேசங்களில் ஏற்பட்ட சமூக விழிப்பும் அரசியல் விழிப்பும் மக்கள் மொழிகளில் தோன்றிய இதழ்களின் கருத்தியல் கோட்பாடுகளை எழுச்சி பெறச்செய்தன.

1864இல் கல்கத்தாவில் இருந்து சென்னை வந்த பிரம்ம சமாஜ இயக்கத் தலைவர் கேசவ் சந்திரன் (1838-1884) சென்னையில் "படித்தவர்களிடம் கூட ஒற்றுமை இல்லை; ஒத்துழைப்பையும் இணக்கத்தையும் ஏற்படுத்தும் என்பது கடினமகும்" என்று தமது நாட் குறிப்பில் எழுதியுள்ளார்.

1876-1877இல் இந்தியாவில் பல்வேறு மாநிலங்களில் நீண்ட அரசியல் சுற்றுப்பயணம் மேற்கொண்ட கல்கத்தா இந்தியன் அசோசியேடிவ் தலைவர் சுரேந்திரநாத் பானர்ஜி (1848-1897) சென்னை வந்து சென்றபிறகு சென்னை மாநிலத்தை "இருளடைந்த மாகாணம்" (Benighkd province) என்று குறிப்பிட்டார்.

1831 முதல் 1881 வரையில் வெளிவந்த தமிழ் இதழ்களில் முக்கியமானவை மட்டும் இங்கு ஆய்விற்கு எடுத்துக்கொள்ளப் பெற்றுள்ளன.

தமிழ் மேகசைன்

பத்தொன்பதாம் நூற்றாண்டில் இதழ்களில் தோற்றத்திலும் வளர்ச்சியிலும் சமயம் சார்ந்த இதழ்களின் பங்களிப்பு முதன்மை

பெற்றிருந்தது. இந்த நூற்றாண்டில் அச்சுயந்திர வசதி அரசு ஆதரவு முதலானவற்றைப் பயன்படுத்திக் கிறிஸ்துவ சமயப் பாதிரிமார்கள் சமயப் பத்திரிகைத் துறையில் முன்னோடிகளானார்கள்.

தமிழ் மேகசைன், பற்றியக் குறிப்பை முதன்முதலில் ஜான் மர்டாக் (1819-1904) எனும் புராட்டஸ்டென்ட் கிறித்துவப் பாதிரியாரின் 'அச்சிடப்பெற்ற தமிழ் நூல்கள் பட்டியல்' எனும் ஆங்கில நூலில் (1865) அறிகின்றோம்.

'மேகசைன்' எனும் சொல்லிற்கு வெடி மருந்துகள் சேர்த்து வைக்கும் இடம் எனும் ஒரு பொருளுண்டு. உரைநடைக் கட்டுரைகள் கொண்ட பருவ இதழ் எனும் பொருளையும் 'மேகசைன்' ஏற்றுக் கொண்டுவிட்டது.

கிறித்துவ சமய இதழான 'தமிழ் மேகசைன்', 'தமிழ்ப் பத்திரிகை', 'தமிழ் இதழ்' என்றும் குறிப்பிடப் பெற்றுவருகின்றது. இந்த இதழின் ஒரு பிரதிகூடக் கிடைக்காத நிலையில் ஜான் மர்டாக் கூறியுள்ளதே தமிழ் இதழியல் வரலாற்றில் தொடர்ந்து இடம் பெற்று வருகின்றது.

அவருடைய நூலில் 'பருவ இதழ்களும் செய்தி இதழ்களும்' எனும் தலைப்பில் அமைந்த பகுதி ஆறு பக்கங்களையே கொண்டுள்ளது.

"தற்காலத்தில் தமிழ் மொழியில் பன்னிரண்டு பருவ இதழ்கள் மாத இதழ்களாக வெளிவந்துள்ளன. இரண்டைத் தவிர பிற யாவும் கிறிஸ்துவர்களால் நடத்தப்படுகின்றன" எனும் வரிகளுடன் தொடங்குகிறது முற்கூறிய பகுதி.

தமிழ் மேகசைனைப் பற்றி ஜான் மர்டாக் எழுதியதாவது:

> 1831இல் சென்னை சமயத் துண்டுப் பிரசுரங்கள் வெளியீட்டுச் சங்கம் (Madras Religious Tract Society) 'தமிழ் மேகசைன்' எனும் பருவ இதழை வெளியிடத் தொடங்கியது. இது இந்தியாவில் வெளிவந்த முதல் பருவ இதழாக இருக்கலாம். அவ்வப்பொழுது ஆசிரியர்கள் மாற்றப்பட்டு வந்ததால் இந்த இதழ் மிகவும் பாதிக்கப்பட்டது. போகப்போக நீண்ட மத போதனைகள் சேர்க்கப்பட்டதும் இதழின்

> விற்பனைக்குத் தீங்கு விளைவித்திருக்கக் கூடும். 1846இல் இந்த இதழைக் கொண்டிருந்த 'ட்ருத்புல் மெஸஞ்சர்' எனும் செய்தி இதழுடன் இணைக்க முடிவு செய்யப்பட்டது. இந்த முடிவு, எதிர்பார்த்தவாறு நிகழவில்லை. இதற்குக் காரணம் எதிர்பார்ப்பில் வெற்றி கிட்டாது எனும் நினைப்பு ஒரு பக்கம். இந்த நிலையில் ஆறு மாதங்களின் முடிவில் இதழ் வெளியீடு நிறுத்தப்பட்டது.[1]

ஜான் மர்டாக் இந்தியாவில் முதல் பருவ் இதழாகத் தமிழ் மேகசைனைக் குறிப்பிட்டது தவறாகும். 1816இல் கல்கத்தாவில் கங்காதர் பட்டாச்சார்யாவும், ஹரசந்திர ராயும் சேர்ந்து 1816இல் தொடங்கிய வங்க மொழி இதழான 'பெங்கால் கெஜட்' வெளிவந்திருக்க, இதற்குப் பதினைந்து ஆண்டுகளுக்குப் பிறகு வந்த தமிழ் மேகசைனை முதல் இதழ் என்று கூறியது தவறாகும். ஆனால், 'தமிழில் முதல்' என்று அவர் கூறாதது, தமிழ் இதழியல் வரலாற்றில் எப்படியோ வழக்காற்றில் நிலைபெற்றுவிட்டது.

'தமிழ் மேகசைன்' முதல் தமிழ் இதழ் இல்லை என்று 'ராணி' ஆசிரியர் அ.மா. சாமி தமது '19ஆம் நூற்றாண்டுத் தமிழ் இதழ்கள்' (1995) எனும் நூலில் மறுத்துள்ளார். 1802இல் இலங்கை அரசின் கெஜட்டாக வெளிவந்த அரசாங்க வர்த்தமானியை முதல் தமிழ் இதழ் என்று குறிப்பிடுகின்றார்.[2] ஆனால், இந்த இதழ் மும்மொழி இதழாகும் என்பதை அவரே குறிப்பிட்டுள்ளார். ஆங்கிலம், சிங்களம், தமிழ் ஆகிய மூன்று மொழிகளில் இலங்கை அரசின் 'கெஜட்' வெளிவந்தது. தமிழ் மேகசைனுக்கு முன்பாக இலங்கை அரசின் அரசிதழ் தவிர மாசனத்தின் சரிதை (1812), யாழ்ப்பாணத் திருச்சபை இதழ் (1815), புதுவை அரசிதழ் (1828), சுஜந ரஞ்சனி (1829) ஆகிய இதழ்களை அ.மா. சாமி வரிசைப் படுத்தியுள்ளார். இவற்றுள் பதிப்பகத்தின் பெயரைக் கொண்ட மாசனத்தின் சரிதையை, இதழாக வரித்துக்கொள்ள அவர் வாதமிடுவதை ஏற்பதில் கருத்து வேற்றுமை இருந்தாலும் பிற இதழ்கள் வெளிவந்துள்ளதை ஏற்காமல் இருக்க முடியாது. எனவே, 'தமிழ் மேகசைன்' முதல் தமிழ் இதழ் இல்லை என்பது தற்சமயம் வரை கிடைத்துள்ள சான்றுகளைக் கொண்டு முடிவுசெய்ய வேண்டியுள்ளது.

ஜான் மர்டாக் குறிப்புகள் வழியே 'தமிழ் மேகசைன்', கிறித்துவ சமய போதனைகளை முக்கியமாக மேற்கொண்டது என்று அறியமுடிகின்றது. இதுவே இதன் கருத்தியல் கோட்பாடாக அமைந்தது என்பதை உய்த்துணர முடிகின்றது.

உதய தாரகை

இலங்கை யாழ்ப்பாணத்தில் பத்தொன்பதாம் நூற்றாண்டில் தோன்றிய தமிழ் இதழ்களின் கருத்தியல் கோட்பாடு விரிவான ஆய்விற்குறிய இவற்றுள் குறிப்பிடத்தக்கன. உயயாதித்தன் (1841) உயதாரகை இருமொழி இதழ் (1841) கத்தோலிக்கப் பாதுகாவலன் (1876), சத்திய வேதகாவலன் (இருமொழி இதழ் 1876), சத்தியவேத காவலன், ஆங்கிலம், தமிழ்ப் பகுதிகளாக வெளிவந்தது. ஆங்கிலப் பகுதிக்கு, "The Jaffna Catholic Guardian" என்று பெயரிடப்பெற்றது. 1855 இல் யாழ்ப்பாணத்தில் இருந்து வெளிவந்த 'சன்மார்க்க போதினி' எனும் கிறித்துவ சமயத்தின் மற்றொரு இதழும் குறிப்பிடத்தக்கது. முதல் இதழில் (31.1.1855) 'நமது பத்திரிகை' எனும் தலைப்பில் வெளிவந்த பின்வரும் கருத்து, கருத்தியல் கோட்பாட்டைச் சீரிய முறையில் விளக்கின்றது. "விசேஷமாய்ப் புதினப் பத்திரிகைகள் சில வகையெழுத்திற் பலவகைப் பொருளை நாட்டி வாசிப்பாருக்கு உலகம் முழுவதையுமுள்ளடக்கிக் காட்டி யெத்திறத்தார்க்கு மெக்கால தும் நற்பிரயோசனங்களுண்டாகும் வழியைத் திறப்பதாற் தேசத்தின் சுகவாழ்வு, சன்மார்க்கங்களைப் பயிற்சியாதியன கைகொடுத்துத் தூக்குவதுங் கடமையே".[2அ]

பத்தொன்பதாம் நூற்றாண்டில் இலங்கை யாழ்ப்பாணத்தில் வெஸ்லியின் (1814), அமெரிக்கன் (1816), சர்ச் மிஷன் (1818) முதலான கிறித்துவ சமய மிஷன்கள் முன்னிருந்தவர்களைக் காட்டிலும் பன்மடங்கு உத்வேகத்துடன் சமயப்பிரசாரத்தில் ஈடுபட்டன. இவற்றுள் யாழ்ப்பாணம் அமெரிக்கன் மிஷன் 1841 ஜனவரி முதல் மாதமிரு முறை இருமொழி இதழாக (ஆங்கிலம், தமிழ்) ஒன்றை வெளியிட்டது. ஆங்கிலப் பகுதி 'மார்னிங் ஸ்டார்' என்றும் தமிழ்ப் பகுதி 'உதயதாரகை' என்றும் பெயர் பெற்றது. இதன் உள்ளடக்கம், உருவம் பற்றி 'உதய தாரகை மார்னிங் ஸ்டாரின்' முதல் பக்கத்தில் வெளிவந்த பின்வரும் அறிவிப்பில் இருந்து அறியமுடிகின்றது.

> உதய தாரகைப் பத்திரத்தில் கற்கை, சாத்திரம், பொதுவான கல்வி, பயிர்ச் செய்கை, அரசாட்சி மார்க்கம் முதலானவை பற்றியும், பிரதான புதிய சங்கதிகளைப் பற்றியும் அச்சடிக்கப்படும். அது தமிழ்ப் பாஷையிலும் இடைக்கிடையே தமிழும் இங்கிலீஷும் கூடினதாயும், எட்டுப்புறமுள்ளதாக நான்காய் மடித்த தாளில் ஒவ்வொரு மாதத்து முதலாம் மூன்றாம் வியாழக் கிழமைகளில் பிரசித்தம் பண்ணப்படும்.

> ஹென்றி மார்டின், செத்பேசன் ஆகியோர் தொடக்க கால ஆசிரியர்கள். "பார்வைக்குக் கிடைத்த இதழ்களுள் மிகப் பழமை வாய்ந்த இதழ் இதுவேயாகும். . . இதழ்கள் வெளிவருதலில் முன்னேற்றமில்லா அந்தக் காலத்தில் இவ்விதழ் பொன்னெனப் போற்றப் பெற்றது

என்று பாராட்டப்பட்டுள்ளது.[4]

உதய தாரகையின் வளர்ச்சிப் போக்கில் ஏற்பட்ட மாற்றத்தைச் சுட்டிக்காட்டுவது, பின்வரும் விமர்சனவுரை:

> உதய தாரகைப் பத்தரிகை தமிழ் மக்களைப் பொறுத்த மட்டில் மறுமலர்ச்சிப் பத்திரிகையென்றே கூறுதல் வேண்டும். ஆரம்பத்தில் அது சமயப் பொறுமையுடன் தன்னை வளர்த்துச் சென்றமையால் ஆறுமுக நாவலர், காசிவாசி செந்திநாதையர் முதலான சைவப் பெரியோர்கள் அதற்கு விடயதானம் செய்து வந்தனர். காலப்போக்கில் இப்பத்திரிகை சைவ சமய கண்டனங்களை வாரி இறைக்க முற்பட்டு நின்றது.[5]

1897 ஜனவரியில் சுவாமி விவேகானந்தர் 'சிகாகோ வீரராக' யாழ்ப்பாணம் வந்தபொழுது உதயதாரகை மார்னிங் ஸ்டாரில் அவரையும் அவரை வரவேற்றுப் பாராட்டிய சைவ சமயத்தினரையும் தாக்கித் தலையங்கங்கள், கட்டுரைகள் பல வெளிவந்தன.[6]

'சத்திய வேதகாவலன்' இதழும் சுவாமி விவேகானந்தர், சைவ சமய எதிர்ப்பில் முன்நின்றது.

1897இல் உதயதாரகை நான்கு பக்கங்களில் வெளிவந்தது. முதல் - நான்காவது பக்கங்கள் ஆங்கிலத்திலும், இரண்டு -

மூன்றாவது பக்கங்கள் தமிழிலும் அச்சிடப்பெற்றன. இதழின் சிறப்பு வாக்கியங்கள் ஆங்கிலத்திலும், தமிழிலும் பின்வருமாறு அமைந்துள்ளன.

"Righteousness elevates a Nation - But sin is a reproach to any people."

"நீதி ராச்சியத்தாரை உயர்த்தும், பாவமோ எந்தச் சனங்களுக்கும் இகழ்ச்சி"

உதய தாரகை இலங்கைத் தமிழ் இதழியல் வரலாற்றில் அழுத்தமான சுவடுகளைப் பதித்துள்ளது.

1930இல் வார இதழாக வெளிவந்தது. நூற்றாண்டு விழாவைக் கண்டும் தொடர்ந்தது.

இலங்கை நேசன்

பத்தொன்பதாம் நூற்றாண்டில் இலங்கையில் உதய தாரகையில் சம காலத் தமிழ் இதழாக 'இலங்கை நேசன்' 1848இல் வெளிவந்தது. ஆசிரியர் குழு ஒன்று அமைக்கப்பட்டிருந்தது. யாழ்ப்பாணத்தில் இருந்து வெளிவந்தது. இலங்கை மக்களின் முன்னேற்றத்தை நாடுதல், உலகச் செய்திகளைச் சுருக்கமாக வெளியிடுதல் முதலானவற்றை நோக்கங்களாகக் கொண்டிருந்தது. இந்த இதழ்.

ராஜ்ய விருத்திபோதினி – 1855

1855இல் சென்னையில் இருந்து மாதம் மும்முறையாக வெளிவந்த இதழ். ராஜ்ய விருத்தி போதினி. 'ராஜ்ய விருத்தி' என்பதற்கு 'தேச விருத்தி' எனும் பொருள் கொள்ளலாம். பொது அறிவு வளர்ச்சி தொடர்பான கல்வி புகட்டும் கட்டுரைகள் வெளிவந்ததாகத் தெரிகின்றது. இதன் ஆசிரியர் அக்காலத்தில் புகழ் பெற்ற பெர்சிவல் பாதிரியாவார். இந்த இதழ் எவ்வளவு காலம் வெளிவந்தது என்பதை அறிய வாய்ப்பில்லை. 1861ஆம் ஆண்டு மெட்ராஸ் நேடிவ் நியூஸ் பேப்பர் ரிப்போட்டில் இந்த இதழின் படிகள் நூறு என்று தெரிகின்றது. இதழின் ஒரு பிரதிக் கூடக் கிடைக்காத நிலையில் இதழின் தோற்றம் வளர்ச்சி பற்றி முரண்பாடான செய்திகள் உலவுவது தவிர்க்க முடியாததே.

தினவர்த்தமானி - 1855

இதன் பெயரைக் கொண்டு இதை ஒரு நாளிதழாகப் பொருள் கொள்ளக்கூடாது. இது ஒரு வார இதழ். தெலுங்கு மொழியிலும் வெளிவந்தது. 1855இல் வெளிவரத் தொடங்கிய இந்த இதழிற்குச் சென்னை அரசு ஆண்டு தோறும் இருநூறு ரூபாய் நிதியுதவி செய்து வந்தது. திராவிடன் அச்சகத்தில் அச்சிடப்பெற்றது. பெரிய அளவில் எட்டு பக்கங்களுடன் வெளிவந்த இந்த இதழின் ஆண்டு சந்தா தமிழர்களுக்கு மூன்று ரூபாயாகவும், ஐரோப்பியார்களுக்கு ஐந்து ரூபாயாகவும் இருந்தது. ஆயிரம் படிகள் அச்சிடப் பெற்றன. விலை இரண்டணா. பொது அறிவு வளர்ச்சிக் கட்டுரைகள் பெரும் பான்மையாக வெளியிடப்பெற்றன. இந்த இதழில் வெளிவந்த கட்டுரைகள் பல, 'விநோதரசமஞ்சரி' எனும் நூலாகவும் வெளிவந்தது.

இதழாசிரியர் பெர்சிவெல் பாதிரியார் என இருந்தாலும், விசுவநாதப் பிள்ளை எனும் தமிழறிஞரின் உதவியுடன் தினவர்த்தமானி நடைபெற்று வந்தது. பெர்சிவல் பாதிரியார், யாழ்ப்பாணத்தில் இருந்தபொழுது தமிழ் ஞாயிறு ஆறுமுக நாவலரைக் கொண்டு பைபிளைத் தமிழாக்கம் செய்து வெளியிட்டார். பெர்சிவல் பாதிரியார் முதலில் "Society for the propagation of the Gospel in foreign parts" எனும் கிறிஸ்துவ சமய அமைப்பில் ஒரு மிஷனரியாக இருந்தார். சென்னையில் மாநிலக் கல்லூரியில் 'சுதேச இலக்கியப் பேராசிரியராக'ப் (Professor of Vernacular Literature) பணியாற்றியுள்ளார். இவருக்குப் பணி நீட்டிப்புத் தரப் பரிந்துரை செய்து அப்பொழுது கல்வித்துறை இயக்குநராக இருந்த ஏ.ஜே. அர்பத்நாட் 1858 மார்ச்சு 24இல் அரசாங்கத்திற்கு எழுதிய கடிதத்தில் தினவர்த்தமானியின் தமிழ் - தெலுங்குப் படிகள் மாநிலமெங்கும் பரவலாக விற்பனையாயிற்று எனக் குறிப்பிட்டுள்ளார். இக்கடிதத்தில் கூறப்பட்டுள்ள பின்வரும் செய்தியும் முக்கியமானதாகும்.

> இந்த நாட்டில் நீண்ட காலம் வாழ்ந்து வருபவரான ஓர் இங்கிலீஷ் பிரமுகர் ஆசிரியப் பொறுப்பில் வெளிவரும் இதழின் பயன்பாடு, சுதேச மக்களின் பழக்கங்கள், எண்ணங்கள், உணர்வுகள் முதலானவற்றில் போதுமான அளவு ஆழ்ந்த

> பார்வையுடையது. இதைக் கல்வி நோக்கிலோ, அரசியல் நோக்கிலோ எப்படி எடுத்துக் கொண்டாலும் மிகைப்படுத்தப்படுவதாகாது.[4]

தினவர்த்தமானியைப் பற்றித் தமிழ் இதழியல் துறையின் முன்னோடியும், தினவர்த்தமானியில் எழுதி வந்தவருமான சே.ப. நரசிம்மலுநாயுடு கூறியதாவது:

> குடிகளுக்கு அறிவை விருத்தியாக்க வேண்டுமென்ற எண்ணத்துடன் (பிரிட்டிஷ்) கவர்மெண்டால் மாதம் ஒன்றுக்கு 200 ரூபாய் நன்கொடையாகக் கொடுத்துத் தினவர்த்தமானி (வாரப்பதிப்பு) என்னும் பெயரால் கனம் பெர்சிவல் அவர்களையும் ஸ்ரீ விஸ்வநாதப் பிள்ளை யவர்களையும் பத்திராதிபர்களாக நியமித்துப் பதிப்பித்து வந்தார்கள். அவ்விருவருவர்களும் இறந்த பிறகு தினவர்த்தமானியும் இறந்துவிட்டது.

தினவர்த்தமானி வரலாற்றைப் பற்றிய மற்றொரு செய்தியை 1895 ஆகஸ்ட் 3ஆம் தேதி சுதேசமித்திரன் வாயிலாகப் பின்வருமாறு அறிகின்றோம்.

> வர்த்தமான பத்திரிகைகள் நம் சமஸ்தானத்தில் பிறந்துலாவச் செய்ய வேண்டுமெனும் கருத்தால் சர்க்கார் தினவர்த்தமானிக்கு வருஷம் இருநூறு ரூபாய் தந்து வந்தார்கள். பிறகிட்டு இங்கங்கு பத்திரிகைகள் பிறந்திட்டதினால் ஈந்து வந்ததை அம்மட்டோடு நிறுத்தினார்கள். இஷ்டர்கள் பலம்கொண்டு அது சில தினம் நடைபெற்று வந்தது. தம் கைப்பணம் செலவிட்டு கனம் விஸ்வநாதப் பிள்ளை அவர்கள் சில காலம் நடத்தியும் இஷ்டர்கள் ஆமளவிற்கு அதன் மீது கருத்து செலுத்தாது போனதினால் அவர் அதை மெல்ல கைநழுவ விட்டார்கள். பிறகிட்டு ஒரு கம்பெனியால் இதை நடத்தியும் அவர்களாலும் மாளாது போயிற்று.

எவ்வளவு காலம் 'தினவர்த்தமானி' நடைபெற்றது என்பதை அறியமுடியவில்லை. ஆயினும் பிரபல தெலுங்கு இதழியல் ஆய்வாளரான ஆருத்ரா அவர்களின் கட்டுரையின்

பின்னிணைப்பில், சனிக்கிழமை தோறும் வெளிவந்த தினவர்த்தமானி 1872 வரையில் நடைபெற்று வந்ததாகக் குறிப்பிடப்பட்டுள்ளது.

தினவர்த்தமானியின் தெலுங்குப் பதிப்பின் முதல் பக்கத்தை இதழியல் ஆய்வாளர் அ.மா. சாமி, அவருடைய 'தமிழ் கிறித்துவ இதழ்கள் ஆய்வு' (1996) எனும் நூலில் வெளியிட்டுள்ளார். அரிய இந்த முதல் பக்கத்தில் உள்ள அறிவிப்புகள் இதழ் குறித்த முகப்பு வாக்கியம் (ஆங்கிலம்), பொருளடக்கம் முதலானவற்றைக் கொண்டு தினவர்த்தமானியின் கருத்தியல் கோட்பாட்டை ஒருவாறு கட்டமைக்கலாம். இதில் தெலுங்குப் பதிப்பிற்கும், தமிழ்ப் பதிப்பிற்கும் வேற்றுமை இருப்பதற்கில்லை என்றும் உய்த்துணரலாம்.

"THIS JOURNAL IS DESIGNED TO CONVEY INTERSTING AND USEFUL INFORMATION ON SUCH TOPICS USUALLY CONTAINED IN THOSE OF EUROPE AND THEREBY TO PROMOTE THE ADVANCEMENT OF AND CIVILISATION OF THE HINDU COMMUNITY" - இது எண் 272, 1861 செப்டம்பர் 14இல் வெளிவந்த தினவர்த்தமானி, முகப்பில் உள்ள இதழ் பற்றிய அறிவிப்பு. (ஐரோப்பாவில் வழக்கமாக உள்ள பல்வேறு தலைப்புகளில் இருக்கும் பயனுள்ள சுவைமிக்க தகவல்களை எடுத்துரைத்து இந்து சமூகத்தின் நாகரிக முன்னேற்றத்தை மேம்படுத்தவே இந்த இதழ் உருவாக்கம் பெற்றுள்ளது)

ஆங்கிலத்தில் உள்ள இதன் பொருளடக்கத்தின் முக்கியத் தலைப்புகள் வருமாறு. ஐரோப்பியச் செய்திகள், இந்தியச் செய்திகள், உள்ளூர்ச் செய்திகள், மாநிலச் செய்திகள், அயல்நாட்டுச் செய்திகள், உள்ளூர் மற்றும் இந்தியப் பத்திரிகைகளிலிருந்து தேர்ந்தெடுக்கப் பெற்றச் செய்திகள்.

தமிழ், தெலுங்கு புத்தகங்களைப் பற்றிய அறிவிப்புகள் ஆங்கிலத்தில் உள்ளன. தமிழிலும் ஓர் அறிக்கை வெளிவந்துள்ளது. 'MADRAS RAILWAY - 'சென்னை இருப்புப் பாதை' எனும் தலைப்பில் வெளியிடப்பெற்ற அறிக்கையில் தமிழ்நடையைப் பின்வரும் பகுதியால் அறியலாம்.

"இதனால் அறிக்கை செய்யப்படுவது, - நாளது செப்தெம்பர் மாதம் 15-ந் தேதி (மாதம், தேதி அக்கால வழக்கப்படியானச்

சின்னங்களில் தரப்பட்டுள்ளன) ஞாயிற்றுக் கிழமை தொடங்கி முதல் வகுப்புப் பிரயாணிகள் கூலி முன் இருந்தபடி மயில் ஒன்றுக்கு ஒரு அணா அல்ல, அதைக் குறைத்து எட்டு பையாகவும் - இரண்டாம் வகுப்புப் பிரயாணிகள் கூலி மயில் ஒன்றுக்கு ஆறு பையல்ல, நாலு பையாகவும் விதிக்கப்பட்டுள்ளது. மூன்றாம் வகுப்பும் பிரயாணிகளின் கூலி முன் இருந்த படிதான். அவ்வகுப்பு வண்டிகளில் வைக்கப்பட்டிருந்த ஆசனங்கள் குறித்த தேதி முதலாக விலக்கப்படும்". மேலே, கட்டணம் என்பது கூலி என்று வழங்கப் பெற்றுள்ளதைக் கவனிக்கலாம். தமிழ்ப் பதிப்பு கிடைத்தால் மேலும் விவரம் அறிய வாய்ப்புள்ளது.

தத்துவபோதினி - 1864

சென்னையில் பிரம்ம சமாஜக் கொள்கைகளைப் பரப்புவதற்காக 7-4-1864இல் நிறுவப்பெற்ற வேதசமாஜம் தோற்றுவித்த மாத இதழின் பெயர் தத்துவபோதினி. வேதசமாஜம் சென்னையில் தோன்றுவதற்கானச் சூழலை ஏற்படுத்தியவர் கல்கத்தா பிரம்ம சமாஜத் தலைவர் கேசவ் சந்திரசென் (1838 - 1884). இவர் சென்னைக்கு இரு முறை வந்தார். முதல் பயணத்தில் 18-2-1864 முதல் 26-2-1864 வரையிலும், இரண்டாவது பயணத்தில் 6-4-1864 முதல் 10-4-1864 வரையிலும் சென்னையில் தங்கிப் பேருரைகள் நிகழ்த்தினார்.[7]

அக்காலத்தில் ஆங்கிலப் பேச்சாற்றலில் புகழ் பூத்தவர், கேசவ் சந்திர சென். இவருடைய பிரம்ம சமாஜக் கொள்கை விளக்கப் பேருரைகளைக் கேட்ட சென்னை உயர்நீதிமன்ற வழக்கறிஞர்களான வி. ராஜகோபாலாச்சாருலுவும், சேலம் பி. சுப்பராயலு செட்டியும் வேதசமாஜத்தை நிறுவினர்.[8]

வேத சமாஜம் அமைக்கப்பட்ட அடுத்த மாதத்திலேயே 'தத்துவபோதினி'யும் தோற்றுவிக்கப்பட்டது. இதன் தோற்றத்தைப் பற்றிய ஒரு விளக்கம் தத்துவபோதினியில் (1864-ஜூன்-7) பின்வருமாறு வெளிவந்துள்ளது:

> நம்முடைய தேசத்தாரின் விஞ்ஞான விருத்தியின் பொருட்டு சேலத்திலிருக்கும் ஸ்ரீ கோவிந்தசாமி செட்டியார் 1863 வருஷம் நவம்பர் மாதம் 16-ந் தேதியுள்ள விளம்பரத்தால் சேலம் கல்விக் களஞ்சியம்

என்னும் பெயருடைய ஒரு பத்திரிகையை மாதந்தோறும் தமிழில் பிரசித்தப்படுத்த நிச்சயித்திருக்கிறதாய் பிரேரபித்தது பலருக்குத் தெரிந்திருக்குமல்லவா?

அந்தப் பத்திரிகையை 8 அங்குல நீளமும், 5 அங்குல அகலமுள்ளதாயும், அதில் நம்முடையுவும், யூரோப்பியர் களுடையவும் நூல்களின் சாரங்களும், ஆசார, வியவஹார கோட்பாடுகளையும் குறித்த சுருக்கமான பிரசங்கங்கள் அடங்கியும் இருக்க வேண்டுமென்று அவர் உத்தேசித்திருந்தார்.

இப்பால் சென்னைப் பட்டணத்தில் வேத சமாஜம் ஏற்பட்ட உடனே அவர் எடுத்த இந்த யத்தனத்தை முடிப்பதை அந்த சமாஜத்தார் வசத்தில் விட்டுவிட்டார். ஆதியில் அந்தப் பத்திரிகைக்கு அவர் உத்தேசித்த பெயரை மாற்றி நாங்கள் தத்துவ போதினி என்ற பெயரை அதற்கிட்டு அவர் பிரேரபித்த விஷயங்களோடு நம்முடைய வர்கள் விரும்பத்தக்க கொஞ்ச வர்த்தமான சங்கிரகத்தை சேர்க்க நிச்சயித்தோம்.

'கல்விக் களஞ்சியம்' என்ற பெயரை வேத சமாஜத்தின் நோக்கத்திற்கு ஏற்ப 'தத்துவபோதினி' என மாற்றியதற்குரிய காரணம் முதல் இதழில் கூறப்படவில்லை. எனினும் உய்த்துணர்வதற்கு வாய்ப்பு உள்ளது.

கல்கத்தா பிரம்ம சமாஜ வழிகாட்டுதல்களில் ஒன்றான வலிமைமிக்க பத்திரிகைப் பணியைச் சென்னை வேத சமாஜமும் பின்பற்றியது. தத்துவ போதினி என்னும் பெயரில் கல்கத்தாவில் வங்கமொழிப் பத்திரிகை ஒன்று வெளிவந்தது. தேவேந்திரநாத் தாகூர் கல்கத்தாவில் அக்டோபர் 6, 1839இல் 'தத்துவ போதினி சபா' எனும் பெயரில் ஓர் ஆன்மீக அமைப்பை நிறுவினார். இதன் சார்பில் 1843இல் 'தத்துவ போதினி பத்ரிகா' வெளிவந்தது. வங்க மொழிப் பேரறிஞர்களான ஈசுவர சந்திர வித்யாசாகர், தேவேந்திரநாத் தாகூர், அக்சயகுமார் தத்தர், ராஜ்நாரயாணன் போஸ், ராஜேந்திரலால் மித்ரா ஆகியோர் 'தத்துவ போதினி பத்ரிகா'வில் எழுதிவந்தனர்.[9]

'வங்க மறுமலர்ச்சியும் தத்துவ போதினி சபாவும்' எனும் நூலின் ஆசிரியர் அமியாகுமார்ஸென், ''கால் நூற்றாண்டு காலம் வங்கமொழி அறிவு ஜீவிகளை வழி நடத்தியது" என தத்துவ போதினி பத்திரிகையைப் பற்றிக் குறிப்பிட்டுள்ளார்.

ராஜகோபலாச்சாருலுவும், சுப்பராயலு செட்டியாரும் வேத சமாஜத்திற்கு ஒரு பத்திரிகை தேவை என உணர்ந்த பொழுது, அவர்களுக்குக் கல்கத்தா தத்துவ போதினி பத்ரிகாவின் நினைவு இயல்பாகவே தோன்றியிருக்கும். சென்னை 'தத்துவபோதினி'யை "அதே பெயரில் உள்ள கல்கத்தா சமாஜ தத்துவ பத்திரிகையின் பிரதிபலிப்பு" என்று பிரம்ம சமாஜத் தலைவர் பண்டிட் சிவநாத சாஸ்திரி குறிப்பிட்டிருக்கிறார்.[10]

'தத்துவ போதினி'யின் முதல் இதழ், சென்னை மயிலாப்பூர் சாந்தோம் 'தத்துவ போதினி' அச்சுக்கூடத்தில் முதல் ஆண்டில் கா. தெய்வசிகாமணி முதலியாரால் பதிப்பக்கப் பெற்று, 7-5-1864இல் வெளிவந்தது. ராஜகோபலாச்சாருலு எனக் குறிப்பிடப்படும் வ.இராஜகோபாலாச்சாரியார், இதன் முதல் ஆசிரியர். ''கனவான்களே'' என விளித்து எழுதப்பெற்ற முதல் இதழ் தலையங்கத்தின் பின்வரும் பகுதிகள் தத்துவ போதினியின் கொள்கையை-கருத்தியல் கோட்பாட்டை விளக்கியுள்ளது.

"முதலில் நாங்கள் யாரெனில், உங்கள் பிருமத்தையே எங்கள் தெய்வமாயும், உங்கள் வேதத்தையே எங்கள் சுருதியாகவும், உங்கள் தேசத்தையே எங்கள் தாயாகவும், உங்கள் வேஷ பாஷாதிகளையே எங்கள் சுவரூப சின்னங்களையும், பெற்று அவைகளின் கவுரவத்தைக் காக்க வேண்டியதை எங்கள் கடமையாக நம்பி அதற்குத் தக்கபடி நடக்கவும், நடப்பிக்கவும், பிரத்திகினையைச் செய்துகொண்டவர்களே நாங்கள்.'

தைத்தரீய உபநிஷத்தில் உபதேசக் கிரமத்தில், நியாயம், சத்தியம், தியானம், பொறுமை, சாந்தம், அதிதிபூஜை, நமது கடமைகள் முதலிய சகல தர்மங்களையும் நாமும் அனுஷ்டித்து பிறருக்குத் தெரியச்செய்ய வேண்டுமென்று சாமானியமாய் எல்லார் விஷயத்திலும் விதித்திருக்கின்றமையால், இப்படி விதியாய் வந்த கடமைகளைச் செலுத்தும் பொருட்டும், நமது தேசத்தார் க்ஷேமத்திலும், கீர்த்தியிலும், ஞானத்திலும், சன்மார்க்கத்திலும்

விருத்தியடைய வேண்டுமென்கிற கருத்துக் கொண்டும், இந்தப் பிரசித்திப் பத்திரிகையை ஏற்படுத்தினோம்.

இந்தப் பத்திரிகையில் சகல சமயத்தாருக்கும் பொதுவான விதமாக நம்முடைய வேதங்களின் தாத்பரியங்களைக் கொஞ்சம் கொஞ்சமாக வெளியிட நாங்கள் நிச்சயித்தோம். வேதத்தை பிராமணாள் தவிர மற்றவர்களுச்சரிக்கக் கூடாதென்பதற்கு வேதத்தில் பிராமணமுண்டோ இல்லையோ வென்பதை இப்பொழுது விசாரிக்க வேண்டிய அவசியமில்லை. அப்படி நிஷேதமிருப்பதாய் சாதாரணமாய்க் கொள்ளப் பட்டிருக்கின்றமையால், அப்படியே வைத்துக்கொண்ட போதிலும் வேதார்த்தங்களைக் கூட இதரான் அறியக் கூடாதென்கிற விதியுமில்லை; அறியலாமென்பதற்குப் பிராமணமும் உண்டு.

நம்முடைய மதத்தில் ஓரெழுத்துந் தெரியாது தெளிவாய் அச்சிடப்பட்ட கிறிஸ்து மத புஸ்தகங்களைக் கண்டும், பாதிரிகளுடைய ஆதாரமற்ற தூஷணைகளைக் கேட்டுமல்லவோ, நம்முடைய சிறியோர்கள் மயங்கிப் போகிறார்கள். இச்சமயத்தில் நாம் அசிரத்தையாயிருப்பது நியாயமா, தர்மமா, கடவுளுக்குத்தான் இஷ்டமா? வேதார்த்தங்களை வெளிப்படுத்துவதற்கு இன்னும் பல ஹேதுக்களுளனவாயினும் இது ஒன்றே போதுமானதாயிருக்கிறது.

இது தவிர தமது தேசத்தாருக்குப் பிரயோஜனமாகும் பொருட்டு, பிரகிருதி சாஸ்திரம், பதார்த்த விக்கியான சாஸ்திரம், ராஜிய தந்திர சாஸ்திரம் முதலிய விஷயங்களில் இங்கிலீஷ் நூல்களின் பொருள்களைக் கூடிய வரையில் சங்கிரகித்து, இந்தப் பத்திரிகை மூலமாய் நம்முடைய ஜனங்களுக்குத் தெரிவிக்க நிச்சயித்திருக்கிறோம்.

கடைசியாக நம்முடைய ஏற்பாடுகளிலும் ஆசாரங்களிலும், சாஸ்திரத்திற்கும் யுக்திக்கும் முற்றும் விரோதமாயும், நம்முடைய க்ஷேமத்திற்கு விருத்திக்கும் ஹானியாயும் உள்ளவைகளைக் குறித்தும் பிரசங்கிக்கப்படும்.

நம்முடைய பாஷையின் வசன காவியமில்லாத குறையையும் கூடிய வரையில் பரிபூர்த்தி செய்ய நாங்கள் நிச்சயித்திருக்கிறோம்."

மாத இதழாக வெளிவந்தது, தத்துவபோதினி. ஆதரவு பெருகினால் மாதமிருமுறை அல்லது மாதம் மும்முறையாகவும் கொண்டுவர எண்ணமுள்ளது என்றும் முதல் தலையங்கத்தில் இறுதியில் தெரிவிக்கப்பட்டது.

வேத சமாஜத்தின் (பிரம்ம சமாஜத்தின்) "தத்துவ விசாரணைக்காக," 'தத்துவ போதினி' வெளிவந்த போதிலும் 'தத்துவம்' என்பதை எப்பொருளில் அந்த இதழ் கொண்டது என்பதைப் பற்றியும் ஒரு விளக்கம் இரண்டாவது இதழிலேயே பின்வருமாறு கூறப்பட்டுள்ளது.

தத்துவ போதினி யென்கிற பெயர், சரியானதல்லவென்று இரண்டொருவர் ஆக்ஷேபித்தார்களென்று கேட்ட நாங்கள் மதத்தைப் பற்றிய விஷயங்களில் மாத்திரம்தான் தத்துவமென்கிற பதத்தை உபயோகிக்கலாமென்று அவர்கள் கொண்டிருக்க வேண்டுமென்று நினைக்கிறோம். தத்துவமென்பதற்குப் பதார்த்தங்களின் சுவபாவம், குணம், உண்மை முதலிய பல பொருள்களுண்டாகையால் தத்துவ போதினியென்கிற இந்தப் பத்திரிகையில், பிரகிருதி சாஸ்திரம், பதார்த்த விஞ்ஞான சாஸ்திரம் முதலியவற்றைக் குறித்து விசாரிப்பதில் எவ்வித ஆக்ஷேபமும் இல்லையென்று எங்கட்குத் தோன்றுகிறது.

இந்த விளக்கத்திற்கேற்ப தத்துவ போதினியில் விஞ்ஞான, பொருளாதாரக் கட்டுரைகள் தொடர்ந்து வெளிவந்தன என்பதும் குறிப்பிடத்தக்கது.[12]

கருத்தியல் கோட்பாடு நோக்கில் 'தத்துவ போதினி'யின் பங்களிப்பைப் பின்வருமாறு தொகுத்து அறியலாம்.

1. தமிழகத்தில் பிரம்ம சமாஜச் கொள்கைகளைத் தமிழில் முதன்முதலாகப் பரப்பியது.

2. இராகம் - தாளக் குறிப்புகளுடன் பிரம்ம சமாஜ இசைப் பாடல்களையும் முதன்முதலில் வெளியிட்டுவந்தது.

3. கடவுளை உருவமற்ற நோக்கில் பாடிப் பரவிடப் பாடல்களைத் தமிழ்த் துதிப்பாடல்களில் முதன் முறையாகச் சேர்த்தது.

4. வேத, உபநிடதக் கருத்துகள் பலவற்றைத் தமிழாக்கம் செய்தது. பிரம்ம சமாஜ கொள்கை விளக்க நூலான 'பிரம்ம தருமம்' (தேவேந்திரநாத் தாகூர் இயற்றியது). பகவத் கீதை, மநுநீதி சாத்திரம் முதலானவற்றில் இருந்து தமிழாக்கம் பெற்றவை பத்திரிகையின் பெரும்பகுதியாக வெளிவந்தது. தமிழில் மொழிபெயர்ப்புத் துறையை வளர்த்தது.

5. மேலை நாட்டறிஞர் சிலரின் கட்டுரைகள், மொழிபெயர்ப்பு, பொருளாதார, விஞ்ஞானக் கட்டுரைகள், பொது அறிவு வளர்ச்சிக்கான கட்டுரைகள் முதலானவற்றையும் அவ்வப்பொழுது வெளியிட்டு வந்தது.

6. சில பல குறைகள் இருந்தாலும் தமிழ் உரைநடை வளர்ச்சிக்கு இயன்றவரை பாடுபட்டது.

7. பெண் கல்வி, சதிராட்டத்திற்கு எதிர்ப்பு, சாதி பேதம் பாராட்டுதலுக்கு எதிர்ப்பு, குழந்தை மண எதிர்ப்பு, விதவை மறுமண ஆதரவு, மூட்டப்பழக்க வழக்கங்களுக்கு எதிர்ப்பு, வேதம் பயிற்சி ஆண் - பெண் வேற்றுமையின்றி, பஞ்சமர் - பிராமணர் வேற்றுமையின்றி அனைவருக்கும் உரியது என்று சாற்றியது உட்பட பல சமூக சீர்திருத்த வழிமுறைகளைத் தொடர்ந்து வலியுறுத்தி வந்தது.

எமது பார்வைக்கு முதல் இதழிலிருந்து 1872 ஆகஸ்ட் 14 வரையிலான ஒன்பது ஆண்டு கால 'தத்துவ போதினி' கிடைத்தது. இதன் காரணமாக இந்த இதழில் வரலாற்றையும் கருத்தியல் கோட் பாட்டையும் பிற இதழ்களைக் காட்டிலும் விரிவான அளவில் எழுத முடிந்தது.

1872 மே 11இல் வெளிவந்த தத்துவ போதினியின் முதல் பக்கத்தில் வெளிவந்த 'இந்தப் பத்திரிகை' எனும் தலையங்கத்தில் பத்திரிகையின் தோற்றம், வளர்ச்சி, தேக்கம் பற்றிப் பல முக்கியச் செய்திகள் கூறப்பட்டுள்ளன.

தெலுங்கில் தத்துவ போதினி

1866இல் வேத சமாஜ செயலாளர் வழக்கறிஞர் பி. சுப்பராயலு செட்டி பி.ஏ., பி.எல். 'தத்துவ போதினி'யின்

ஆசிரியரானார். இந்த ஆண்டில் நவம்பர் முதல், தமிழ் தத்துவ போதினியைப் போன்று பதினான்கு பக்கங்களில் தெலுங்கு மொழியில் தத்துவ போதினி வெளிவந்தது.

1868இல் வ. ராஜகோபாலச் சாருலுவும், ப. சுப்பராயலு செட்டியும் காலமான பிறகு சற்று இழுபறி நிலையில் வெளிவந்த தத்துவ போதினி 1870இல் நிறுத்தப்பட்டது.

விவேக விளக்கம்

'தத்துவ போதினி' அச்சுக் கூடத்தில் இருந்து 1865இல் 'விவேக விளக்கம்' என்னும் மாத இதழ் வெளிவந்துள்ளது. இதனுடைய ஒரு பிரதிகூட கிடைக்கவில்லை. ஆனால் இதைப்பற்றிய செய்தி 'தத்துவ போதினியில் 1865 ஜூன் 7இல் பின்வருமாறு வெளிவந்துள்ளது.

'சில நாளாய் விவேக விளக்கமென ஒரு தமிழ்ப் பத்திரிகை சென்னையில் பிரசுரமாகி வருவது அனைவருக்கும் தெரிந்திருக்கலா மென நம்புகிறோம். இந்த ஜூன் மாதத்தில் விவேக விளக்கத்தில் சிலாகிக்கத்தக்க சஞ்சிகை யொன்றைக் கண்டோமாகையால் அதை நம்மனைவரும் படித்து ஆனந்திக்கும் பொருட்டு இத்துத்துவ போதினியில் அதையெடுத்துப் பதிப்பித்திருக்கின்றோம்.

1865 தொடக்கத்தில் வெளிவந்த வேத சமாஜக் கண்டனம் என்னும் நூலை 'விவேக விளக்கம்', மார்ச்சில் விமர்சனம் செய்ததை 'தத்துவ போதினி' தனது 1865 ஜூலை 7இல் வெளியிட்டது. வேத சமாஜக் கண்டனத்தில் வீண் கதைகளும், எதிரிகளைத் திட்டுவதும் 'முக்கால் பங்கை விழுங்கி விட்டிருக்கின்றனர்' என விவேக விளக்கம் கூறியதோடு பெண் கல்வியை வேத சமாஜக் கண்டன நூல் எதிர்த்ததும் தனக்கு உடன்பாடில்லை எனக் கூறியுள்ளது. அவரவர் சமய முறைமையைப் பின்பற்றி அந்தந்தச் சமய தெய்வங்களை வழிப்பட்டால்தான் மோட்சம் கிடைக்கும் என்பதை வேத சமாஜம் ஏற்கவில்லை. இதை வேத சமாஜக் கண்டனம் எதிர்த்துள்ளது. 'மதங்களெல்லாவற்றிலும் மோட்சமுண்டு' என்பதை வேத வாக்கியங் கொண்டு விளக்கியுள்ளது. இந்த விமர்சனத்தில் தன்னை வேத சமாஜ இதழாக விவேக விளக்கம் குறிப்பிடவில்லை என்பதும் கவனிக்கத் தக்கது. பின்வருவது, இதற்கொரு சான்று:

அது வேத சமாஜத்தார்க்கு எதிரான நூலாதலால், அதை எடுத்துப்பேச வேண்டியவர் அவரேயன்றி நாம் அல்ல. இவர் வேத சமாஜத்தாரிடத்தில் குற்றமாகக் காட்டியவை குற்றமல்லவென்றும் அவர்களிடத்தில் இருப்பதெல்லாம் குணமென்றும் நாம் அவர்கள் பக்கமாய் யாதொன்றும் சொல்லவில்லை. பொதுவாக, மற்றொரு நூலைக் கண்டிக்கும் நூலினிடத்தில் என்னென்ன குணங்களிருக்க வேண்டுமோ அவைகளை இக்கண்டனத்தில் இருக்கின்றனவா என்பதை மாத்திரம் விசாரிப்போம்.

பெண் கல்வியை மறுத்த வேத சமாஜக் கண்டன நூலின் கருத்தை எதிர்த்து விவேக விளக்கம் வெளியிட்ட கட்டுரையும் தத்துவ போதினியில் மறுவெளியீடாக வந்துள்ளது.

விவேக விளக்கம், வேத சமாஜ இதழ் என்பதற்கு வெளிப்படையான ஆதாரம் கிடைக்கவில்லையாயினும், கிடைத்த கட்டுரைகளில் இருந்து அந்த இதழ் தத்துவ போதினியின் தாக்கத்திற்கு உட்பட்டது என்பது தெரிகின்றது.

அமிர்தவசனி

அக்காலத்தில் (1831-1841) இந்து பெண்களுக்காக பெண்களாலேயே எழுதப்பெற்று சென்னையில் இருந்து 1866இல் வெளிவந்த மகளிர் இதழ் 'அமிர்தவசனி'. இந்த இதழைப் பற்றி 'தத்துவ போதினி' மூலம் அறிய முடிகனிறது. இதன் ஓர் இதழ்கூட கிடைக்கவில்லை. அமிர்தவசனியில் வெளிவந்த குழந்தை மண எதிர்ப்பு, பெண் கல்வி, பெண் ஒழுக்கம் முதலானக் கட்டுரைகளை தத்துவபோதினி மறுவெளியீடாக வெளியிட்டு 'அமிர்தவசனி'யின் கருத்தியல் கோட்பாட்டைப் புறச் சான்று வழியாக அறிய வைத்துள்ளது.

ஆய்வாளர் அ.மா. சாமி அவர்கள் 'அமிழ்த வசனி' எனும் வார இதழ் திருச்சியில் இருந்து 1860 முதல் வெளிவந்ததாகக் குறிப்பிட்டுள்ளார். தமிழில் வெளிவந்த முதல் மகளிர் இதழ் இதுவென்றும், அதன் ஆசிரியை திருமதி அமிர்தபாபு என்றும், 1865முதல் சென்னையில் இருந்து மாத இதழாக வெளிவந்தபொழுது இலவசமாக வழங்கப்பட்டதென்றும் அ.மா.சாமி தகவல் அளித்துள்ளார்.[13] "சுதேச கிறிஸ்தவப் பெண்களுக்கு மதக் கொள்கையை எடுத்தோதும் ஒரு பத்திரிகை" எனும் ஒரு செய்தி

தமிழ் நூல் விவர அட்டவணை நூலில் (அரசு வெளியீடு) காணப்படுகிறது.

தேசோபகாரி - 1861

இந்தியாவில் பிற மொழிகளில் போல, தமிழ் மொழியிலும் கிறித்துவம் இதழியல் துறையில் இதழ்கள் பலவற்றின் தொடக்கத்திற்கும் வளர்ச்சிக்கும் அரும்பாடுபட்டது. எடுத்துக்கொண்ட கால கட்டத்தில் பத்துக்கும் மேற்பட்ட கிறித்துவ சமய இதழ்கள் தோன்றியுள்ளன. இவற்றுள் நாகர்கோயில் கிறித்துவக் கல்வி அபிவிருத்தி சங்கத்தன் சார்பில் 1861 ஜனவரியில் மாத இதழாகத் தோன்றியது 'தேசோபகாரி'. நூற்றாண்டையும் கடந்து இன்றும் இவ்விதழ் வெளிவந்துக் கொண்டிருக்கின்றது என்பது வரலாற்றுச் சாதனையாகும்.

கிறித்துவச் சமயம் பிரசார இதழான இதன் கருத்தியல் கோட்பாடு, சமயப் பிரசாரத்தையும் கடந்துள்ளதையும் அறிய முடிகின்றது.

இந்த இதழின் 125ஆம் ஆண்டு விழா மலரில் கூறப்பெற்றுள்ள பின்வரும் செய்தி, இதழின் உள்ளடக்கம் பற்றிய தலைப்புகளை இனங்காண உதவுகின்றது.

> இவ் வெளியீடுகளில் அடங்கிய தலைப்புக்கள் சரித்திரம் தொட்டு விஞ்ஞானம் வரையிலும் பரந்தவை. பண்டைச் சரித்திரம், பழம் நாகரிகம், பல நாட்டுப் பழமொழிகள், புதுக் கண்டுபிடிப்புகள், விஞ்ஞானம், தாவரக்கலை, சமுதாயத் தீமைகள், நிகழ்காலச் சம்பவங்கள் என்பன இப்பதிவுகளில் சிலவாகும். கார்த்தேயு நகரின் அழிமேடு, சியாம்தேசன் தபிர், ஜான்சிபார் தீவு, யூதரும் பலஸ் தீனதேசமும், எகிப்தியர் நீர் பாய்ச்சும் முறை, சுமத்திரா தீவின் கற்பூர மரங்கள், கனம் பொருந்திய மீட் ஐயரின் மரணம், புனர்விவாக வான சாஸ்திர வியாக்கியானம், பூமியின் உள் அடுக்குகள், சாதிவேறுபாடு, அடிமை வியாபாரம் என்பவையெல்லாம் ஆரம்பகாலத்தில் தேசோப காரியில் வெளியிடப்பட்ட சில தலைப்புகள்.[14]

ஜனவிநோதினி - 1870

வாசகர்கள் பார்வைக்கும் கிடைக்கும் இதழ் தொகுதிகளுள் 'ஜனவிநோதினி' குறிப்பிடத்தக்கது. 1870 ஜனவரி முதல் மாத இதழாக வெளிவந்தது. இருபது ஆண்டுகள் தொடர்ந்து வெளிவந்தது. 'மாதந்தோறும்' என்று சொல்வதற்கில்லை. சில சமயம் இரு மாதங்களுக்கு ஒரு முறை வெளிவந்துள்ளது. சில சமயம் சில மாதங்கள் சேர்த்து வெளியிடப்பட்டுள்ளது. அன்றைய சென்னை அரசாங்க நிதியுதவி இந்த இதழிற்குக் கிடைத்தது. இது தெலுங்கிலும் வெளிவந்ததாகத் தெரிகிறது.

இந்த இதழ் "MADRAS SCHOOL BOOK AND VERNACULAR LITERATURE SOCIETY" எனும் அரசு ஆதரவு சார்ந்த அமைப்பால் வெளியிடப்பட்டது.

ஜனவிநோதினியின் கருத்தியல் கோட்பாட்டைப் பற்றிய ஒரு குறிப்பு அந்த இதழின் முதல் பக்கத்தில் ஆங்கிலத்தில் பின்வருமாறு வெளியிடப்பெற்றுள்ளது.

"A POPULAR MAGAZINE OR AMUSING AND INSTRUCTIVE INFORMATION IN TAMIL" (களிப்பூட்டும், கற்பிக்கும் தகவல்களைத் தமிழில் தரும் மக்கள் இதழ்)

பொது அறிவு வளர்ச்சி, கல்வியறிவு வளர்ச்சி இரண்டிற்கும் பாடுபடுதலை முதல் நோக்கமாகக் கொண்டது ஜனவிநோதினி. இந்த இதழில் வெளிவந்த கட்டுரைகள் பாடநூல்களில் பயன்படுத்தப் பட்டன. இத்துறையில் இந்த இதழின் பங்களிப்பு அக்காலத் தமிழ்ப் பேரறிஞர் கா. நமச்சிவாய முதலியார் அவர்களால் போற்றப் பட்டுள்ளது. இந்த இதழ்களை வரிசையாகத் தொகுத்து 4, 9, 13, 19 ஆகிய நான்கு தொகுதிகளை வெளியிட்டார், க. நமச்சிவாய முதலியார். தம்மிடம் இல்லாத முதல் மூன்று தொகுதிகளை வைத்திருப்போர், அவற்றை அனுப்பியுதவுமாறும் அவ்வாறு அனுப்புவோர்கள் விரும்பினால் தம்மாலான பொருளுதவி செய்வதாகவும் அறிக்கை வெளியிட்டார். கல்வி பரப்பும் இயக்கத்தில் அருந்தொண்டாற்றிய நமச்சிவாய முதலியாரின் இந்த வேண்டுகோள், ஜனவிநோதினியின் கல்வித் தொண்டை அடையாளங்காட்டிப் பாராட்டுகின்றது.

ஜனவிநோதினியில் முதல் இதழில் வெளிவந்த "இந்து தேசத்தின் பூர்வீக தற்கால ஸ்திதி -அதன் தற்காலக் குறிப்புகள்" எனும் கட்டுரையின் பின்வரும் இறுதிப் பகுதி இதழின் கருத்தியல் கோட்பாட்டை விளக்கவல்லது.

"இப்பொழுது நமது தேசத்திற்கு மிகவும் அவசியமாய் இருக்கிற நாகரீக விர்த்தி, பல கைத்தொழில் விர்த்தி, வியாபார விர்த்தி, வேளாண்மை விர்த்தி, கல்வி விர்த்தி, மனோ விர்த்தி, சன்மார்க்க விர்த்தியாகிய இவைபோலொத்த பல துறைகளில் எதிலாகினும் கல்வி பயன்களை அடைந்திருக்கிற நமது சுதேசிகளில் அநேகர் அவரவர் சக்திகேற்றபடி நன்முயற்சிகளைச் செய்து வருவார்களேயாகில், நமது தேசத்திற்கும் பெரிய நன்மைகள் விளையும் என்பதற்குச் சந்தேகமில்லை. இப்படிச் சம்பவிப்பதற்கு நமது ஜனங்களுக்குள் தேசாபிமானமும், பரோபகார குணமும் இருக்க வேண்டியது அவசியம். ஆனால் இக்குணங்கள் தற்காலத்தில் நமது தேசத்தில் மிகவும் குறைவாயிருக்கின்றன வென்பது வெளியரங்கமான காரியம். அவைகள் மாத்திரம் போதுமான அளவு நமது ஜனங்களுக்குள் பரிபாலனப்படுமானால், இத்தேசத்தில் உள்ள சிறியோர், பெரியோர் கற்றோர், மற்றோர், எளியோர், வலியோர்களில் எத்தனையோ பேர்கள் தங்கள் தேச நன்மைக்கென்று ஆவலுடன் முன்னுக்கு வந்து பெரும் பிரயத்தனங்களைச் செய்து நமது தேசத்தில் ஆச்சர்யமான நன்மாறுதல்களை உண்டாக்கக் கூடுமென்பதை யார்தான் சந்தேகிக்கலாம்?

சேலம் சுதேசாபிமானி – 1877

'சேலம் சுதேசபிமானி' எனும் உள்ளூர் செய்தி மாதமிருமுறை இதழை நிறுவி அதன் ஆசிரியராகவிருந்தவர் சேலம் பகடால நரசிம்மலு நாயுடு (1854-1922) ஆவார். பிரம்ம சமாஜ இயக்கம், இந்திய தேசிய காங்கிரஸ் இயக்கத்தில் முக்கியப் பங்கேற்றவர் சே.ப. நரசிம்மலு நாயுடு.

ஆன்மிகப்பற்று, நாட்டுப்பற்று, சமூக சீர்திருத்தப்பற்று, தமிழ் மொழிப்பற்று முதலானவற்றை இதழ்கள் வாயிலாகவும், நூல்கள் வாயிலாகவும், மேனாட்டு பேச்சுகள் வாயிலாகவும் வெளிப்படுத்தி பொதுவாழ்க்கையில் அழுத்தமானச் சுவடுகளைப் பதிப்பித்தவர்,

சோ.ப. நரசிம்மலு நாயுடு. இவருடைய விரிவான சாதனைகள், "தமிழகத்தில் பிரம்ம சமாஜம்" (1992 - ஆசிரியர், பெ.சு. மணி) எனும் நூலில் ஆய்வு செய்யப்பெற்றுள்ளன.

ஜி.சுப்பிரமணிய ஐயரைப்போல, இதழியல் முன்னோடியாகப் புகழ் பெற்றவர், சே.ப. நரசிம்மலு நாயுடு. 1869 முதல் 'சென்னை தினவர்த்தமானி'*திருச்சிராப்பள்ளி 'அமிர்தவசனி', பெங்களூர், "ஜைன மனோரஞ்சனி', சென்னை 'பிராம தீபிகை', ஸ்ரீரங்கம் ஸ்தல பூரணி' முதலான இதழ்களில் இவர் எழுதி வந்தார். இதழாசிரியராக வரலாற்றையும் அறிந்த ஆய்வாளராகவும் புகழ்பெற்றவர். இவர் 'புராதனப் பத்திரிகையாளர்' என்று பிற்காலத்தில் புகழ்பெற்ற இவரை இதழாசிரியராக முதன்முதலில் அரங்கேற்றம் செய்தது சேலம் 'சுதேசாபிமானி". அப்பொழுது அவருக்கு வயது 23; சேலம் அரசினர் பள்ளியல் அரசாங்க ஊழியராக இருந்தும் அச்சமில்லாமல், எழுதினார்.

"சேலம் 'சுதேசாபிமானி'யின் ஓர் இதழ் கூட கிடைக்கவில்லை. இவரைப் பற்றிய வரலாற்றிலும், அவருடைய சம கால பத்திரிகைத் துறையின் மூலவர் ஜி. சுப்பிரமணிய ஐயர் கடிதங்கள், குறிப்புகள், 'நேடிவ் நியூஸ பேப்பர் ரிப்போர்ட்' எனும் அரசாங்க அறிக்கைகள் மூலமாகவும் சேலம் சுதேசாபிமானி'யைப் பற்றியும், அதன் கருத்தியல் கோட்பாட்டைக் குறித்து இயன்றளவு அறிய முடிகின்றது.

'சேலம் சுதேசாபிமானி'யின் கருத்தியல் கோட்பாடு, 1903இல் வெளிவந்த சேலம் பகடால நரசிம்மலு நாயுடுகார் அவர்களின் சரித்திர சார சங்கிரகம்" எனும் நூலில் (பக்கம் 39) இருந்து பின்வருமாறு அறிகின்றோம்.

"இங்கிலீஷ் ராஜாங்கம் குடிகளுடைய சுகத்துக்கு ஸ்தாபிக்கப் பட்டும், இப்படிப்பட்ட தரும ராஜாங்கத்தில் போலீசு, சால்டு, ஆப்காரி, வனபரிபாலனம், ரெவினியூ, கிரிமினல், ஜமீன் முதலான இலாக்காக்களின் சில சில்லறை சிப்பந்திகள் குடிகளுக்குச் செய்து வரும் கஷ்டங்களைக் கண்டித்தும் குடிகளுடைய கஷ்ட நிஷ்டூரங்களை உள்ளது உள்ளபடி கவர்ன்மெண்டாருக்கும், கவர்ன் மெண்டாருடைய நல்ல எண்ணங்களைக் குடிமக்களுக்கும் தெரிவித்தும், இராஜபக்தியை

விருத்தியாக்கி ஜன சமூகத்தின் நேரத்தை விருத்தியாக்கக் கருதிச் சேலத்தில் சுதேசாபிமானி என்ற ஒரு பத்திரிகையை தாபிக்க 1877ஆம் வருஷம் மார்ச் மாதம் 10ஆம் தேதி தமிழில் ஒரு பிரசித்த பத்திரிகையை கலெக்டர் பிரசில் பதிப்பித்து அனேகருக்கு அனுப்பினார்."

இந்தச் சுற்றறிக்கை வெளிவந்து அடுத்த மாத்திலேயே 1877 ஏப்ரல் 11இல் "சேலம் சுதேசாபிமானி" வெளியிட்டார் சே.ப. நரசிம்மலு நாயுடு. முதலில் இது சென்னையில் பதிப்பிக்கப் பெற்றது. 'சேலம் பேட்ரியட்' என்று ஆங்கிலத்திலும் அச்சிடப்பெற்றது. மாதமிருமுறையாக வெளிவந்தது.

'சே.ப.வின் அருமை நண்பர் ஜி. சுப்பிரமணிய ஐயர் ஆசிரியராகவிருந்த 'இந்து', 1878 செப்டம்பர் 20இல் தேசிய அளவில் வார இதழாக முதலில் வெளிவந்தது. இதற்கு ஓராண்டிற்கு முன்பு மாறும் சுதேசபிமானி வட்டார இதழாக-மாவட்ட இதழாக வெளிவந்தது என்பது குறிப்பிடத்தக்கது.

மாவட்ட அதிகார வர்க்கத்தின் நிர்வாக ஊழல்களை அம்பலப்படுத்தி அரசாங்கத்திடம் நியாயம் கோருவதை' சேலம் சுதேசாபிமானி' முதற்கடமையாகக் கொண்டது. இரண்டாவதாக வசதி - வாய்ப்பும் கடந்த பணக்கார வர்க்கம் செய்யும் சமூக விரோதச் செயல்கள், ஆக்ரமிப்புகள், ஊழல்களை அம்பலப்படுத்துவதில் சுதேசாபிமானி தீவிரம் காட்டியது. மூன்றாவதாக பிரம்ம சமாஜ இயக்கம் பிரசாரத்தில் ஈடுபட்டது. நான்காவதாக உலக சமயங்கள் பலவற்றைப் பற்றியும் 'மத விருக்ஷம்' எனும் தலைப்பில் வாசகர்களுக்கு விளக்கி எழுதி சமயப் பொதுமை நெறியோங்க தொண்டாற்றியது. "சேலத்திலிருக்கப்பட்ட சகல மத ஜனங்களுடைய பொது நலத்தைப் பூர்துகாக்க" பாடுபட்டது.

1878 ஏப்ரல் 1இல் வெளிவந்த சேலம் 'சுதேசாபிமானி'யில் பஞ்ச நிவாரணப் பணியில் அரசு முயற்சியைப் பாராட்டப்பட்டது; வியாபாரிகள் வர்த்தகர்கள் மீது விதிக்கப்பெற்ற லைசன்ஸ் வரியைப் பற்றிக் குறை கூறப்பட்டது; பஞ்ச காலத்தில் வியாபாரம் ஸ்தம்பித்துவிட்ட நிலையும் வரிவிதிப்பைக் கூடுதலாக்கியது நியாயம் தானா? எனும் கேள்வியை எழுப்பப்பட்டது. "ஆண்டு தோறும் ஆயிரக்கணக்கணக்கில் சம்பளம் வாங்கும்

அதிகாரிகளுக்கு வரி விதிப்பு ஏன் செய்யக்கூடாது" என்றும் இதழாசிரியர் எழுதினார்.[15]

பத்திரிகை ஒடுக்குமுறைச் சட்டத்திற்குக் கண்டனம்

'சேலம் சுதேசாபிமானி' 1878இல் பிரிட்டிஷ் இந்தியாவின் ராஜிய பிரதிநிதி, (வைஸ்ராய்) பிரகடனப்படுத்திய "வெர்னாகுலர் பிரஸ் ஆர்ட்" எனும் நாட்டு மொழிப் பத்திரிகைச் சுதந்திர ஒடுக்குமுறைச் சட்டத்தைக் கண்டித்து 1-4-1878ஆம் இதழில் எழுதியது குறிப்பிடத்தக்கது. இந்த ஒடுக்குமுறைச் சட்டம், அன்றைய சென்னை மாகாணத்தில் நடைமுறைக்கு கொண்டு வரப்படவில்லை. ஏனெனில் சென்னை மாநில நாட்டு மொழி இதழ்கள் பிரிட்டிஷ் ஆட்சிக்கு பிரச்னையாக இல்லை. ஆனாலும்கூட, சேலம் சுதேசாபிமானி பத்திரிகை சுதந்திரத்திற்கு எதிரானச் சட்டத்தைக் கண்டித்து, அதன் துணிவையும் நேர்மையையும் எடுத்துக்காட்டியது இதன் விவரம் வருமாறு:

"சுதேச மக்களுக்கு வழங்கப்பெற்று வந்த பத்திரிகை சுதந்திரம் தற்சமயம் மறுக்கப்பட்டுள்ளது. 1856ஆம் ஆண்டில் வெளியிடப் பெற்ற மகாராணியின் பிரகடனத்தில் வெளியிடப்பெற்றப் புகழத்தக்க, பயனுள்ள பத்திரிகைச் சுதந்திரம் பற்றிய உறுதிமொழி இப்பொழுது மீறப்படுகின்றது. நாட்டு மொழிப்பத்திரிகைகள் கல்வியறிவற்ற பெரும்பான்மையான மக்களிடையே, ஆட்சிக்கு எதிரான விசுவாசமற்ற மனப்பாங்கை ஏற்படுத்தி, அவர்களைக் கலகம் செய்யத் தூண்டும் எனக் குறிப்பிட்டு பத்திரிகை ஒடுக்குமுறைச் சட்டம் கொண்டு வரப்பட்டுள்ளதாகக் கூறப்படுகின்றது. இந்தச் சட்டம் சுதேசப் பத்திரிகைகள் மீதான மரண அடியாகும்."[16]

இதே இதழில் "உள்ளூர் செய்திகள்" எனும், தலைப்பில் சேலம் செவ்வாய்ப்பேட்டை மற்றும் சிலவிடங்களில் வியாபாரிகள் ஏடைக் கற்களில் செய்யும் பித்தலாட்டங்கள் பற்றி எழுதப் பெற்றுள்ளது.

அரசாங்க ஊழியர்களும் இலஞ்சமும்

15-4-1878ஆம் இதழில் கீழ்மட்டத்தில் உள்ள அரசு ஊழியர்கள் கையூட்டு (லஞ்சம்) பெறும் வழக்கத்தின் மூல காரணம் பற்றி பின்வருமாறு விளக்கப் பெற்றுள்ளது.

"உள்நாட்டிலும் வெளிநாடுகளிலும் அரசாங்க வருவாய்க்கு அதிகமாக செலவிடப்படுகின்றது. இதன் விளைவாக மக்கள்மீது வரிச்சுமை ஏற்றப்படுகின்றது. இதற்குப் பதிலாக வெளிநாடுகளில் செலவழிக்கும் பணத்தைக் குறைத்துக்கொண்டால், மாதம் 500 ரூபாய்க்கு மேல் சம்பளம் பெறுவோர் ஊதியங்களைக் குறைத்துக் கொண்டால் அரசாங்கத்திற்குப் பயன்தரும் நகர்ப்புறங்களில் உள்ள கீழ்மட்ட அலுவலர்கள் மிகக்குறைந்த ஊதியம் பெறுகின்றனர். இந்த ஊதியம் அவர்கள் குடும்பச் செலவிற்குப் போதுமானதல்ல. ஆகவே அவர்கள் கையூட்டு வாங்கத் தள்ளப் படுகிறார்கள். சிறு அளவு செய்யும் பழக்கத்திற்கு ஆளாகின்றார்கள். கூடுதலான சம்பளம் பெறும் பொழுதும் கூடத் தொடர்கின்றன. இவர்களுக்கு ஒழுக்க நெறி போதனைகளைக் கற்பிக்க வேண்டும். இந்தத் தீமைகளுக்குக் காரணகர்த்தா யார்? என்பதைச் சுட்டிக்காட்ட முடியும்"

காவல்துறைக்கான நிதி ஒதுக்கீடு

15-5-1878இல் சேலம் நகராட்சி எல்லைக்.குள் உள்ள காவல் துறையினருக்கு, நகராட்சி நிதியில் இருந்து சம்பளம் வழங்க ஏற்பாடு செய்யப்பட்டுள்ள விதிமுறையைக் குறை கூறி எழுதப்பட்டுள்ளது. "நகராட்சியின் நிதிநிலைமை இந்தப் புதியச் செலவினத்தைத் தாங்கிக் கொள்ள இயலாது. சாலைகள், பள்ளிக்கூடங்கள் பராமரிப்பிற்காகக் குறைந்த அளவிலேயே நிதி ஒதுக்கீடு இருக்கின்றபொழுது காவல் துறையினர் சம்பளத்திற்கு பள்ளிக்கூட ஆசிரியர்களுக்கு மாதச் சம்பளம் ஒழுங்காக வழங்கப்படுவதில்லை. எனவே, காவல் துறையினருக்கான சம்பளம் வழங்க, நகராட்சி வருவாயைப் பயன்படுத்தாமல் வேறு வருவாய் இனத்திற்கு வகை செய்ய வேண்டும்". இவ்வாறு சேலம் சுதேசாபிமானி தலையங்கம் எழுதியது.

இரு கடிதங்கள்

15-11-1878இல் சேலம் சுதேசாபிமானியில் வாசகர் ஒருவரின் இரு கடிதங்கள் துணிவுடன் வெளியிடப்பெற்றன. ஒன்று, சேலம் நகராட்சியின் துணைத் தலைவரான மிஸ்டர் ஜான்ஸ்டைன் என்னும் ஆங்கிலேயரின் ஆணவம் மிக்க நிருவாக ஊழல் பற்றியது. மற்றொன்று சேலம் ஜமீன்தாரினியான மிஸ்ஸஸ் FF. பௌலக்ஸ்

அம்மையாரின் இந்துக்களுக்கு எதிரான ஒரு செயற்பாட்டைப் பற்றியது.[18]

பசிப்பட்டினியால் கற்றாழை தின்னும் கொடுமை

1-12-1878இல் சேலம் சுதேசாபிமானி சேலத்தில் உள்ள ஏழை எளியமக்கள், பஞ்சத்தால் ஏற்பட்ட விளைவுகளில் இருந்து மீளவில்லை யென்றும், நகரத்திற்கு வெளியேயுள்ள கற்றாழைகளைத் தின்ன வேண்டியதாகிவிட்டதுயென்றும் எழுதியுள்ளது. மழையின் காரணமாகச் சாலைப் பணியாளர்களுக்கு வேலையில்லாமற் போனதாம். அவர்களுக்கு நிவாரண ஏற்பாடுகள் செய்யாததைப் பற்றி மாவட்ட ஆட்சியர் நடவடிக்கை யெடுக்கவேண்டுமென்றும் எழுதியது. சேலம் செவ்வாய் பேட்டையில் பஞ்சத்தால் தாக்கப்பெற்ற சிலர் கழுதைப் பிணத்தை உண்பதாகவும் கேள்விப்பட்டோம் என்றும் சேலம் சுதேசாபிமானி, பஞ்சத்தின் கொடுமையை அம்பலப்படுத்தியது.

மதமாற்றத்திற்கு எதிர்ப்பு

1-10-1878இல் சில கிறித்துவ சமயப்பாதிரிமார்கள், இந்து சமய மாணவர்களை மதமாற்றம் செய்வதை அம்பலப்படுத்திக் கண்டித்து எழுதப்பெற்றது.

ஆபாசப் பாடல்களுக்கு எதிர்ப்பு

18-10-1879இல் சேலம் நகரத்திலும், நகர்ப்புறத்திலும் மாணவர்களும், வண்டி ஓட்டுபவர்களும் ஆபாசப் பாடல்களைப் பாடுவதைக் காவல்துறையினர் கண்டுகொள்ளாமல் இருப்பது கண்டித்து எழுதப்பட்டுள்ளது.

27-12-1879இல் ரயில்வே கைடுகள் நாட்டு மொழிகளில் அச்சிடப்படவேண்டும் எனும் கோரிக்கை எழுதப்பட்டுள்ளது.

அச்சுறுத்தலும் அஞ்சாமையும்

சேலம் உள்ளூர் பிரச்னைகள் பற்றி சேலம் சுதேசாபிமானி எழுதியது. அதிகார வருக்கத்தைச் சீற்றமடையச் செய்தது. நீதி விசாரணையில் சுதேசிகளுக்கு ஒருவிதமாகவும், ஆங்கிலேய அதிகாரிகளுக்கு வேறுவிதமாகவும் நடத்தும் அநீதிகளை உள்ளது உள்ளபடி எடுத்து பகிரங்கமாகப் பத்திரிகையில் வெளியிட்டு

வந்ததும் அதிகார வருக்கத்தின் ஆத்திரத்தை அதிகப்படுத்தியது. சேலத்தில் பல "பெரிய மனிதர்கள்" நரசிம்மலு நாயுடுவுடன் பேசவோ, பழகவோ பயப்பட்டார்கள். இதனால் அதிகார வருக்கத்தின் கோபத்திற்கு ஆளாகிவிடுவோமோ என்று கவலையடைந்தார்கள்.

சேலம் நகராட்சி தலைவர், நரசிம்மலு நாயுடு மீது நடவடிக்கை எடுக்க முடிவு செய்தார். அரசாங்க வழக்கறிஞர் மூலம் நரசிம்மலு நாயுடுவிற்கு "தாக்கீது" நவம்பர் 20இல் அனுப்பப்பட்டது. 1878 நவம்பர் 15இல் சேலம் சுதேசாபிமானியில் வெளிவந்த இரு கடிதங்களை வெளியிட்டதற்காக, பத்திரிகையில் பகிரங்கமாக மன்னிப்பு வெளியிடப்படாவிட்டால் சட்டப்படி நடவடிக்கை எடுக்கப்படும் என்று கூறப்பட்டது. இத்துடன் கடிதங்கள் எழுதியவர்களின் பெயர்களையும் வெளியிட வேண்டும் என்றும் கோரப்பட்டது.

இந்தத் தாக்கீதின் நகலை ஜி. சுப்பிரமணிய ஐயருக்கு அனுப்பினார் நரசிம்மலு நாயுடு. தமது நண்பருக்கு ஏற்பட்ட அச்சுறுத்தலை சமாளிக்க மன்னிப்பைப் பத்திரிகையில் வெளியிட்டுவிடலாம் என ஜி. சுப்பிரமணிய ஐயர் ஆலோசனை கூறினார். ஆனால், நரசிம்மலு நாயுடு அஞ்சாமையுடன் மன்னிப்பு வெளியிட விரும்பவில்லை. டிசம்பர் 9இல் சேலம் அரசு வக்கீலுக்கு நரசிம்மலு நாயுடு பின்வருமாறு தனது விளக்கத்தை எழுதினார்.

1. சேலம் சுதேசாபிமானி பத்திரிகையின் கொள்கையானது, சேலத்திலிருக்கப்பட்ட சகல மத ஜனங்களுடைய பொதுநலத்தையும் பரஸ்பர க்ஷேமத்தையும் கருதியதே யன்றி, யாதொருவருடைய அந்தரங்கமான விஷயங்களைப் பற்றிக் கருத்துப்படும்படி செய்வதல்ல. அப்படியிருக்க சென்ற பக்ஷத்துப் பத்திரிகைகளில் தூஷணை அவதூறான சங்கதிகளிருக்கிறதாகவும் அவைகளைப் பற்றி மன்னிப்புக் கேட்டுக்கொள்ளும்படியாகவும் எழுதியிருக்கிறீர்கள்.

2. அந்தப் பத்திரிகையின் எந்தெந்தப் பக்கங்களில், எந்தெந்த பாகங்களில், எந்தெந்த வார்த்தைகளில் தூஷணை அவதூறென்று மதிக்கும் பட்சத்தில், மேலே குறிக்கப்பட்ட பாகங்கள், வாக்கியங்களாதிகளுக்கு தங்களுடைய அபிப்பிராயமும், அருத்தமுமீதென்று விவரமாகத் தெரிவிக்கும்படி பிராத்திக்கிறேன்.

3. என் பத்திரிகையில் காணப்பட்டவர்களைப் பற்றி இதற்கு முன் எனக்கு யாதொரு மாச்சரிய க்ஷாத்திரியங்களும் கிடையா. ஆகவே, நான் அவர்களை தூஷிக்க வேண்டிய காரணமுங் கிடையாதே.

4. ஆனால், வீணாக தூஷித்தவதூறு செய்ததாகத் தங்களுக்கு அபிப்பிராயமிருப்பதை எண்ணி எண்ணி மெத்த விசனப் படுகின்றேன்.

5. எனது பத்திரிகை தமிழ்ப் பாஷையில் எழுதப்படுகின்ற பத்திரிகையாகையால், இந்தக் கடிதத்தில் குறிக்கப்பட்டிருக்கும் விஷயங்களுக்குத் தமிழ்ப் பாஷையிலேயே பதில் கடிதமெழுதப் பிரார்த்திக்கின்றேன்."

நரசிம்மலு நாயுடுவுக்கு விடுத்த அச்சுறுத்தல் அவர் பணியாற்றிக் கொண்டிருந்த பள்ளியின் 'இன்ஸ்பெக்டரி'டமிருந்து வந்தது. 'இன்ஸ்பெக்ட'ருக்கு சேலம் கலெக்டரிடமிருந்து, சேலம் தேசாபிமானியில் எழுதப்பெற்ற தலையங்கத்தையும் அதில் வெளிவந்த இரு கடிதங்களைப் பற்றியும் விசாரணை செய்து அறிக்கை தரும்படி, ஒருகடிதம் எழுதப்பட்டது.

'இன்ஸ்பெக்ட்'ருக்கு எழுதிய பதிலில் தாம் கலெக்டருக்குத் தக்க விடையெழுதிவிட்டதாகவும், இதில் 'இன்ஸ்பெக்டர்' தலையிட வேண்டாம் என்று குறிப்பிட்டார்.

இவ்வாறு, அச்சுறுத்தலும் அஞ்சாமையும் தொடர்ந்து வந்த காலத்தில் கலெக்டரும், 'டெப்டி கலெக்ட'ரும் வெளியூர்களுக்கு மாற்றப்பட்டுவிட்டதால் அச்சுறுத்தல் அகன்றது. இதன்பின்னர் குடும்ப விஷயமாக நரசிம்மலு நாயுடு கோயமுத்தூர் செல்ல வேண்டியதாயிற்று. 'சுதேசாபிமானி'க்கு ஷேக்மைதீன் என்னும் தனது நண்பரை உரிமையாளராக்கிவிட்டு, கோயமுத்தூரில் இருந்தபடியே பத்திரிகைக்கு எழுதி வந்தார். 'சேலம் சுதேசாபிமானி' எப்பொழுது நின்றது என்பதை முடிவு செய்ய இயலவில்லை. 1888 பிப்ரவரி வரையில் வெளிவந்த தமிழ் இதழ்ப் பட்டியலில் 'சேலம் சுதேசாபிமானி' பெயர் குறிப்பிடப்பட்டுள்ளது. மாதமிருமுறை என்றும், பிரதிகளின் எண்ணிக்கை 150 என்றும் குறிப்பிடப் பட்டுள்ளது.

'சேலம் சுதேசாபிமானி'யின் ஓர் இதழ்கூட கிடைக்காத நிலையில் புறச்சான்றுகளைக் கொண்டே அந்த இதழ், தமிழ் இதழியல் வரலாற்றில் பெறும் இடத்தை மதிப்பிட முடிகின்றது. பத்திரிகை ஆசிரியரே சுட்டிக் காட்டியதுபோல "சேலத்திலிருக்கப்பட்ட சகல மத ஜனங்களுடைய பொதுநலத்தை பாதுகாக்க" சேலம் சுதேசாபிமானி பாடுபட்டுள்ளது. உலக சமயங்கள் பற்றிய பொது அறிவை வாசகர்கள் பெற்று சமயப் பொதுமை நெறியோங்கவும் இந்த இதழ் தொண்டாற்றியுள்ளது. வளர்ச்சியுற்ற நகரப் பகுதிகளில், எழுந்தறிவுள்ள மக்கள் மிகுந்துள்ள பகுதிகளில் பத்திரிகையை நடத்துவதில் சோதனைகள் பலவற்றைச் சந்திக்க வேண்டியிருந்தது என்றால், முற்கூறிய நல்வாய்ப்புகள் இல்லாத சேலம் போன்ற பகுதியில், பத்திரிகையை "அற்றம் காக்கும் கருவி"யாக நடத்த மிக்க நேர்மையும், அறிவாற்றலும், துணிவும் வேண்டும். இவை யாவும் நரசிம்மலு நாயுடுவிடம் விளங்கியதை 'சேலம் சுதேசாபிமானி' எடுத்துக்காட்டிவிட்டது. பொருள் இழப்பைப் பொருட்படுத்தாத பத்திரிகையாளராகவும் விளங்கினார் நரசிம்மலு நாயுடு.

ஜி. சுப்பிரமணிய ஐயர் பாராட்டு

சேலம் 'சுதேசாபிமானி'யைப் படித்துப் பாராட்டியுள்ளார், பத்திரிகைத் துறை மூலவர் ஜி. சுப்பிரமணிய ஐயர். அதை ஆங்கிலத்தில் சுதேசாபிமானியில் எழுதினார். இதைப் படித்த இந்து ஆசிரியர், 1878 நவம்பர் 24இல் நரசிம்மலு நாயுடுவிற்கு எழுதிய கடிதத்தின் தமிழாக்கம் வருமாறு:

"தங்கள் பத்திரிகையின் கடந்த இதழ் எனக்கு மிக்க மகிழ்ச்சி அளித்தது. மிக நல்ல செய்திகள் பல அதில் இருந்தன. பத்திரிகை விற்பனை தங்களுக்கு நன்கு அமையவில்லை என்பதை அறிய வருந்துகின்றேன். பத்திரிகை விற்பனையைக் கூடுதலாக்க நான் முயற்சியெடுப்பேன். தங்கள் கடந்த இதழில் ஜமீன்தாரிணியின் அக்கிரமங்களைப் பற்றிய கடிதத்தைக் கண்டேன். விவரங்கள் என்னால் புரிந்துகொள்ள முடியவில்லை. கடிதம் எழுதியவர் ஆங்கில இதழ்கள் இவற்றையெல்லாம் கவனிப்பதில்லை எனப் புகார் கூறியுள்ளார். என்னுடைய பத்திரிகையில் அந்தச் செய்திகளை நான் வெளியிட்டு மகிழ்வேன். அடுத்த இதழில் தங்கள் பத்திரிகையில் இருந்து நிறைய எடுத்துக் கொள்வேன்."

ஜி. சுப்பிரமணிய ஐயர் கடிதத்தின் இறுதியில் உள்ள வரிகள் எழுதப்படுவதற்குக் காரணம், சேலம் சுதேசாபிமானியில் வெளிவந்த முற்கூறிய இரண்டாவது கடிதத்தின் பின்வரும் இறுதி வரிகளாகும்.

"இப்படிப்பட்ட விஷயங்களைப் பற்றி நமது கல்விமான்களாகிய இ.ஆ-க்களும், கனவான்களும், தனவான்களும் இங்கிலீஷ் பத்திரிகைக் கெழுதாமல் மவுனமாயிருப்பதற்குக் காரணம் கலெக்டர் கச்சேரியில் நல்ல உத்தியோகங்களைச் சம்பாதித்துக் கொள்வதற்கு கலெக்டருடைய தயவுக்கெதிர்பார்த்தலேயாம்."[19]

சேலம் சுதேசாபிமானியில் நரசிம்மலு நாயுடுவின் ஆற்றலைப் போற்றும் வண்ணம் ஜி. சுப்பிரமணிய ஐயர் வெளியிட்டுள்ள கருத்துகள், முதல் பத்திரிகையிலேயே 'இந்து' போன்ற இதழாசிரியரின் பெருமதிப்பைப் பெற்றுள்ளதை எடுத்துக்காட்டுகின்றது.

ஜி. சுப்பிரமணிய ஐயருக்குப் பாராட்டு

கோயமுத்தூரில் நடைபெற்ற சுதேசாமித்திரன் வெள்ளி விழாவின் (1907) சே.ப. நரசிம்மலு நாயுடு கலந்துகொண்டு ஜி. சுப்பிரமணிய ஐயரின் இதழியல் பணிச்சிறப்பைப் பாராட்டினார். "சுதேசபாஷையில் தெள்ளத் தெளியத் தெரிவித்தாலன்றி இந்நாட்டாருக்கு பொதுநல அறிவு விருத்தியாகாது" என்னும் சீரிய நோக்குடன் ஜி. சுப்பிரமணியம் ஐயர், 'சுதேசமித்திரனை'த் தொடங்கிய தாகப் பாராட்டிக் கூறியதாவது:

"அவர் பதிப்பிக்கும் மித்திரன் பத்திரிகைகளைத் தனவான்களாகிய இராஜாக்கள், அரண்மனைகளை அலங்கரித்து வருவதுபோலவே கேவலம் தாழ்ந்த வகுப்பாரிடத்தும், சங்க போயன், இராமபோயன் கையிலேயும் தாசி வேசிகள் கையிலேயும் குறித்து அவர்களுக்கு அறிவூட்டி வருகிறது."

கோயமுத்தூர் அபிமானி

சேலம் சுதேசாபிமானி தொடர்ந்து, உள்ளூர் செய்தியிதழாகக், "கோயமுத்தூர் அபிமானி' எனும் பெயரில் மாதமிருமுறையாக நடத்தினார் சே.ப. நரசிம்மலு நாயுடு. இந்த

இதழ் தோன்றிய ஆண்டு, மாதம் முதலானவற்றைக் கண்டுபிடிக்க முடியவில்லை. ஆனால், 1879இல் தொடங்கப் பெற்றிருக்கலாம் எனக் கருத சான்று உள்ளது. இவருடைய வாழ்க்கை வரலாற்றில் 'இவரது ஸ்ரீரங்கவாசம்' என்னும் தலைப்பில் உள்ள பின்வரும் சான்று, 'கோயமுத்தூர் அபிமானி' 1879-லேயே வெளிவந்துக் கொண்டிருந்தது என்பதை எடுத்துக்காட்டுகின்றது.

"1879ம் வருஷம் நவம்பர் மாதம் 20ஆம் தேதி கோயமுத்தூரை விட்டு ஸ்ரீரங்கத்துக்கும் அங்கிருந்து சென்னைக்கும், பிறகு ஸ்ரீரங்கம் வந்து தங்கி அங்கு கொஞ்ச காலம் நிம்மதியாகக் காலம் கழிக்கலா மென்றிருக்க, இவர் அங்கு சேலம் சுதேசாபிமானி, கோயமுத்தூர் அபிமானி பத்திரிகைகளுக்கு சங்கதிகளைத் தேடி எழுதி வருவதை. என்னும் செய்தியில் இவர் 1879இல் ஸ்ரீரங்கத்தில் வாழ்ந்த பொழுது 'கோயமுத்தூர் அபிமானி'க்கு எழுதி வந்தது உறுதியாகின்றது.

"ஸ்ரீரங்கத்திற்கு போனபோது அதை வெங்கடரங்கையரிடம் ஒப்புவித்துவிட்டு போனார்'' என்னும் மற்றொரு குறிப்பு 'கோயமுத்தூர் அபிமானி' தோன்றிய ஆண்டைக் கணிக்க உதவுகின்றது. இந்த இதழ், கோயமுத்தூர் குடிமக்களின் பொதுநலத்தைக் கருதியது. வெங்கடரங்கையருடைய நிருவாகத்தில் பத்திரிகைக்கு வேண்டிய கையொப்பத் தொகை ஒழுங்காகக் கேட்டு வாங்கப்படாததினால், பத்திரிகை நின்றுவிட்டது. இவ்வளவிற்கு மேல் 'கோயமுத்தூர் அபிமானி'யைப் பற்றிய செய்திகள் கிடைக்கவில்லை.

ஸ்ரீரங்க ஸ்தல பூஷணி

ஸ்ரீரங்கத்தில் நரசிம்மலு நாயுடுவின் நண்பர்களான பண்டிதர் அன்பில் வெங்கடாசாரியார், கிருஷ்ணமாச்சாரியர் முதலானவர்கள், நாயுடு அவர்களின் பத்திரிகைத் தொடர்பை அறிந்து, ஸ்ரீரங்கத்தில் ஓர் இதழைத் தொடங்கும்படி கேட்டுக் கொண்டனர்.

உள்ளூர் செய்தித்தாள்களின் முக்கியத்துவத்தை வலியுறுத்தும் நோக்கைக் கொண்டிருந்த நரசிம்மலு நாயுடு, 'ஸ்ரீரங்க ஸ்தல பூஷணி' என்னும் பெயராலேயே ஒரு பத்திரிகையா, எப்பொழுது வெளிவந்தது முதலானவற்றை அறியவும்

வாய்ப்பில்லை; நான்கு பக்கங்களாகச் சென்னை கார்டியன், திருச்சி தென்னிந்திய அச்சகங்களில் பதிக்கப்பட்டது.

சேலம், கோயமுத்தூர், ஸ்ரீரங்கம் ஆகிய மூன்று இடங்களில் இருந்து வெளிவந்த மூன்று பத்திரிகைகளுக்கும் எழுதுவதென்பது எளிதன்று. ஆனால், பல துறைகளில் அறிவாற்றல் வாய்க்கப் பெற்ற நரசிம்மலு நாயுடு ஒரே காலத்தில் மூன்று பத்திரிகைகளுக்கும் எழுதி அரிய சாதனையைப் படைத்தார்.

'ஸ்ரீரங்க ஸ்தல மகத்துவம்' என்னும் தலைப்பில் இவர் எழுதி வந்த தொடர்க் கட்டுரை ஸ்ரீரங்க திருத்தலத்தின் தோற்றம், வளர்ச்சியைப் பற்றிக் கூறியது. இதற்காக அவர் 'கோயில் ஒழுகு' முதலான பல நூல்களை ஆய்ந்து, பண்டிதர்களுடன் விவாதித்து விரிவாக எழுதினார். ஸ்ரீரங்கத்தின் வரலாற்றைச் சாதாரண பெண்கள் அறிந்து பாட, கும்மி பாட்டுகளாகவும் இயற்றினார். கோயிலில் சில வைணவர்கள் கருட மண்டபத்தில் கூடி வீண் பேச்சுகளில் பொழுதுபோக்காகக் காலம் கழித்ததையும் கண்டித்து எழுதினார், நரசிம்மலு நாயுடு.

'ஸ்ரீரங்கஸ்தல பூஷணி'யில் வெளிவந்த கட்டுரைகளைத் தொகுத்துச் சிறு வெளியீடுகளாகவும் பதிப்பித்தார் நரசிம்மலு நாயுடு. 1882இல், 'ஸ்ரீரங்க ஸ்தாபன கொம்மிகள்' (24 பக்கங்கள்), 1898இல் 'ஸ்ரீரங்க க்ஷேத்திர மகத்துவம்' (98 பக்கங்கள், கும்மிப் பாட்டுகளுடன்) ஆகிய இரண்டும் வெளிவந்தன. ஸ்ரீரங்க திருத்தலத்தை விவரமாகக் காட்டும். 'ஸ்ரீரங்க படம்' என்னும் நான்கு பக்க மிகச் சிறிய வெளியீட்டையும் பதிப்பித்தார், நரசிம்மலு நாயுடு.

இந்த இதழின் பிரதி ஒன்றுகூட கிடைக்கவில்லை. 1880, ஆகஸ்டு மாதம் நரசிம்மலு கோயமுத்தூருக்கு திரும்பிவிட்டார். இதற்குப் பிறகு பத்திரிகை வெளிவந்ததா என்பதையும் அறிய முடியவில்லை.

கோயமுத்தூர் கலாநிதி

உள்ளூர் செய்தித்தாள்களின் முக்கியத்துவத்தை உணர்த்தும் பொருட்டு சே.ப. நரசிம்மலு நாயுடு தொடங்கிய மற்றொரு இதழ் 'கோயம்முத்தூர் கலாநிதி'.

சில பிரமுகர்கள் நிதியுதவியுடன் 'கோயமுத்தூர் கலாநிதிப் பத்திரிகை' என்று தமிழிலும், 'Coimbatore Crescent' என்று ஆங்கிலத்திலும் பெயரிடப்பெற்று பத்திரிகை வெளிவந்தது.

இந்தப் பத்திரிகை 1881, அக்டோபர் 15 முதல் மாதமிரு முறையாக வெளிவரத் தொடங்கியது. ஆங்கிலம், தமிழ் இரு மொழிகளிலும் பதிப்பிக்கப்பட்டது. கல்வி, நாகரிகம், அரசியல், சமயம், தத்துவம் முதலான செய்திகள் பத்திரிகையில் வெளிவந்தன.

இரண்டாவது இதழிலேயே (1881 நவம்பர்) வனத் துறையைச் சார்ந்த அதிகாரிகள் சிலர் ஏழைகளைத் துன்புறுத்தி "சுமார் 70 ரூபாய் வரையில்" லஞ்சம் வாங்கியதை விரமாக எழுதி, அரசாங்க கவனத்திற்கும் அனுப்பினார் நரசிம்மலு. இதன் தொடர்பாக நடைபெற்ற வழக்கில் சம்பந்தப்பட்ட வனத்துறை அதிகாரிகள் தண்டிக்கப்பட்டனர். இது 'கோயமுத்தூர் கலாநிதி'யின் முதல் பொதுநலப் பிரசாரத்தின் வெற்றியானது. இந்த வழக்கில் நரசிம்மலு நாயுடு உடல் நலத்தைப் பாராமல் போராடியதால் காலில் ஏற்பட்ட ஒரு வியாதியினால் உட்கார முடியாமல் தவித்தார். இந்த நிலையிலும் வீட்டில் படுத்துக்கொண்டே பத்திரிகைகளுக்கு எழுதிவந்தார்.

சென்னை மாநில ஆளுநர் பார்வைக்குச் சில கோரிக்கைகள்

'கோயமுத்தூர் கலாநிதி'யின் 26.11.1881ஆம் இதழில் சென்னை மாநில ஆளுநர் பார்வைக்குப் பின்வரும் சில கோரிக்கைகளை இதழாசிரியர் வெளியிட்டார்.

1. நாட்டு மொழிகள் கல்விக்கு ஊக்கமளிக்க வேண்டும்.
2. ஊழலை ஒழிக்க வேண்டும்
3. பயிரிடும் முறைகளையும், கைவினைத் தொழில்களையும் மேம்படுத்துதல்
4. மாஜிஸ்ட்ரேட்டுகள், தாசில்தார்கள், முன்சீப்புகளாக நேர்மையும் தகுதியும் உள்ளவர்களை நியமிக்கவேண்டும்.
5. வருவாய்த் துறையினராய் ஏழை விவசாயிகளுக்கு ஏற்படும் துன்பங்களை நீக்க வேண்டும்.

6. நீர்ப்பாசனமும் பொதுப்பணித்துறை வேலைகளும் ஒழுங்காகக் கவனிக்கப்பட வேண்டும்.

7. மக்களால் தேர்ந்தெடுக்கப் பெற்றவர்களை நகராட்சி உறுப்பினர்களாக்கிப் பொதுமக்கள் நலன்களை மேம்படுத்த வேண்டும்.

8. கோயில்களில் அறக்கட்டளைகளைக் கொள்ளைக்காரர் களிடமிருந்து பாதுகாக்கவேண்டும்.[20]

கலிராஜ நாடகம்

'துர்ஜனங்களுடைய' நடவடிக்கைகளை விளக்க 'கலிராஜ நாடகம்' எனும் தலைப்பில் 'கலாநிதி' இதழின் தொடக்கத்தில் இருந்து ஒரு நாகடத்தை சோ.ப. நரசிம்மலு நாயுடு எழுதி வந்தார். இந்த நாடகம், "காட்டன் மில் நூல் ஆபீஸ் டைரக்டர்களைப் பற்றி எழுதப்பட்டதாக" அதன் செயலாளர் 1890 ஜூலை 5 இதழாசிரியருக்கு எழுதி மன்னிப்பு கோரவேண்டும் என்று அச்சுறுத்தினார்.

இந்தக் குற்றசாட்டிற்கு இதழாசிரியர் பின்வருமாறு விளக்கமளித்தார்.

"பத்திரிகையின் தொடக்கத்தில் இருந்து இந்த நகைச்சுவை நாடகம் எழுதப்பட்டு வருகின்றது. இதைத் தொடர்ந்து படித்து வருபவர்கள், இந்த நாடகம் எந்த ஒரு தனிநபருக்கோ, தனிநிறுவனத்திற்கோ எதிரானதன்று இந்த நாடகம் அவதூறு என்றால் எல்லாக் காலங்களிலும், எல்லா மொழிகளிலும் எழுதப்படும் ஒவ்வொரு நாடகமும் அவதூறு நாடகமாகும்". இது தனி வெளியீடாக வந்தது.

நாடக உத்தியைக் கொண்டு இதழின் கருத்தியல் கோட்பாட்டை சோ.ப. நரசிம்மலு நாயுடு விளக்கியது குறிப்பிடத்தக்கது.

பிரம்ம சமாஜப் பிரசாரம்

'கலாநிதி', பிரம்ம சமாஜப் பிரசாரத்தையும் செய்தது. இந்திய பிரம்ம சமாஜத் தலைவர் கேசவ சந்திர ஸென்னின் 'நியூ டிஸ்பென்ஸேஸன்' எனும் பிரம்ம சமாஜ நூலைத் தமிழில்

'நவஸம்ஹிதை' என்று தமிழில் மொழிபெயர்த்து கலாநிதியில் வெளியிட்டு வந்தார். நாயுடுவின் உயர்தனிச்செம்மை நூலான 'இந்து பைபில்' கலாநிதியில் தொடர்ந்து எழுதப் பெற்றதின் தொகுப்பாகும். பிரம்ம சமாஜக் கொள்கைகளைக் கட்டுரைகள் வாயிலாகவும் பாடல்களாகவும் சைவ-வைணவ, வேத உபநிடத மேற்கோள்களுடன் மிக விரிவாக விளக்கும் நூல் 'இந்து பைபில்'. இந்த நூல் 1898இல் வெளிவந்தது.

வார இதழாகவும் மாதமிருமுறை இதழாகவும்

1886இல் வடபாரதத்தில் சுற்றுப்பயணம் செய்த பொழுது அவ்விவிடங்களில் இருந்து கலாநிதிப் பத்திரிகைக்குச் செய்திகளைத் திரட்டி எழுதி வந்தார்.

1890இல் 'கலாநிதி' *வார இதழாகச்* சில காலம் வெளிவந்தது; மீண்டும் மாதமிருமுறையாக ஆக்கப்பட்டது. இதன் விவரத்தைப் பின்வருமாறு அறிகின்றோம்:

> 1890ஆம் வருஷம் ஐகோர்ட்டு வக்கீல்களாகிய பாலகிருஷ்ண யைர், இலக்ஷ்மி நாராயண ஐயர், என். இராமசாமி ஐயர் மூன்று படிப்பாளிகளும் உதவி செய்ய வந்து, இந்தியன் கான்கிரசு என்றும் பெயரால் ஒரு ஆங்கிலேயப் பத்திரிகையை ஸ்தாபிக்கக் கருதி ஒரு பிரகடனப் பத்திரம் வெளியிட, அதற்கு பொம்பாய் ஜட்ஜி காசிநாத டிரம்பக் டிலாங்கு முதலானவர்கள் தக்கபடி உதவி செய்ய வராமையால், அதை விட்டு கலாநிதியையே இங்கிலீஷ் பாஷையில் ஒரு பத்திரிகையாகவும் தமிழ் பாஷையில் ஒரு பத்திரிகையாவும் வகுத்து, வாராந்தரப் பத்திரிகையாக்கி விசேஷ சங்கதிகளைச் சேர்த்துப் பதிப்பு வெளியாக்கியதில், நம் நாட்டார் பொருளுதவி செய்ய முன் வராமையால், அம்மூவரும் நஷ்டமடைந்ததுடன் நாயுடவர்களுக்கும் நஷ்டமாகி மறுபடியும் மாதம் இருமுறை பத்திரிகையாகவே மாற்றப்பட்டது.[21]

கோயமுத்தூர் கலாநிதி அடுத்து இரு ஊழல்களை அம்பலப்படுத்தி எழுதியது. "கோயமுத்தூர் சுதேச திரவிய சேகர நிதி"யைச் சேர்ந்த இயக்குநர்களைப் பற்றியும். 'கோயமுத்தூர்

ஜனோபகார நிதி'யின் செயலாளர் செய்த தவறுகளையும் கலாநிதியில் எழுதினார் நரசிம்மலு நாயுடு.

கோயமுத்தூர் மருத்துவமனைக் கிளை யொன்றில் மருத்துவம் சரிவர செய்யப்படுவதில்லை யென்றும், கோயமுத்தூர் அரசு ஆசிரியைப் பயிற்சி பள்ளியின் தலைமையாசிரியர் நிருவாகக் குறையைப் பற்றியும் கலாநிதியில் எழுதப்பட்டது.

வேதனைக்குரல்

'கோயமுத்தூர் கலாநிதி'க்குப் போட்டியாக, 'கோயமுத்தூர் சுதர்சினி', 'கோயமுத்தூர் நியூஸ்', 'கோயமுத்தூர் தூதன்', 'பொள்ளாச்சி வர்த்தமானி', 'ஈரோடு மனோரஞ்சனி', 'வித்தியாபானு' ஆகிய பத்திரிகைகள் வெளிவந்தன. இவற்றுள் எதுவும் ஓராண்டு கூட வாழ்வு பெறவில்லை. இந்த நிலை கோயமுத்தூர் கலாநிதிக்கு ஏற்பட்டிருக்கும். ஆனால், நரசிம்மலு நாயுடு தியாகச் செம்மலாக, தேசபக்தராக விளங்கி பத்திரிகை மூலம் மக்களை விழிப்படையச் செய்து நாட்டு நலன்களிலும் பொதுநலன்களிலும் ஈடுபடச் செய்ய இரவும் பகலும் பாடுபட்டார். அச்சுக்கூடத் தொழிலாளர்களுக்கும் பத்திரிகையைத் தபாலில் அனுப்பும் செலவிற்கும் கூடப் படாதபாடு பட்டார். இதை, அச்சகத்தில் வேறு சிறு அச்சிடும் தொழில் இருந்து (ஜாப் ஒர்க்) வந்த பணத்தைக் கொண்டு சமாளித்து வந்தார் நாயுடு. இதிலும் போட்டி பொறாமைகளால் நெருக்கடிகள் தோன்றின. இந்தச் சூழலில் கலாநிதியின் ஆங்கிலப் பதிப்பை, 1898, மார்ச் மாதத்தில், ஆசீர்வாதம் டேவிட் என்னும் அன்பரிடம் ஒப்படைத்தார். இவர் கையொப்பத் தொகையை மட்டும் வசூல் செய்து பத்திரிகையை ஒழுங்காக நடத்தாததினால், நாயுடு அவர்களுக்கு அதிலும் பேரிழப்பு ஏற்பட்டது மறுபடியும் ஆங்கில, தமிழ்ப் பதிப்புகளை இணைத்து மாத இதழாக நடத்தினார், நாயுடு அவர்கள். அச்சகத் தொல்லை காரணமாக, மீண்டும் மாதமிரு முறையாயிற்று, கலாநிதி.

பத்திரிகைத் துறையில் தமக்கு ஏற்பட்ட பொருள் இழப்பையும் பெருந்துன்பங்களையும் வாசகர்களின் ஆதரவற்ற போக்கையும் குறிப்பிட்டு ஓர் இலட்சிய இதழாசிரியரின் - நரசிம்மலு நாயுடுவின் வேதனைக் குரல், பின்வருமாறு ஒலித்தது.

"கலாநிதிப் பத்திரிகையை ஸ்தாபித்து வந்ததில் நாளது வரையில் 7000 ரூபாய் நஷ்டமடைந்திருக்கிறேன். இத்துடன்

எனக்கு எடிடர் சம்பளமும் சேர்த்தால் 10,000 ரூபாய் நஷ்டமிருக்கும். இப்படி ஒரு பத்திரிகைக்கே சென்ற 20 வருஷத்தில் இவ்வளவு நஷ்டமானால் இந்துவைப் போன்ற தினசரிப் பெரிய பத்திரிகைக்கு எவ்வளவு நஷ்டமுண்டாயிருக்க வேண்டுமென்பது சமாசாரப் பத்திரிகைகளைப் பதிப்பித்து அவற்றுடன் ஊடாடி உறவாடியவர்களுக்கே உண்மை வெளியாகும். இப்படிப் பத்திராதிபர் நஷ்டமடைவதற்குக் கையொப்பக்காரர்களே காரணம். நம்முடைய தேசாபிமானம் வாசாகைங்கர்யம், சோதிப்போமாகில் நம்மவர் நெல்லிக்காய் மூட்டையை அவிழ்த்துவிட்டால் மூலைக்கொன்றாக ஓடும் தன்மையைப் போன்றவர்கள். அப்படி ஓடும் ஒரு நெல்லிக்காயை எடுத்துப் பார்த்தால் அதைச் சுற்றிலும் ஆறு கோடுகளிருக்கக் காணலாம். அக்கோடுகளென்னவென்றால் சைவம், வைணவாதி ஆறு சமயங்களுக்கு உவமையாகும். எப்படி ஆறு சமயத்தார் ஒன்றாகச் சேருகிறதில்லையோ அப்படியே பொதுவிஷயத்தில் நம்மவர்கள் ஒன்று சேர்வது அபூர்வம். ஆகவே அன்று பார்த்ததற்கு அழிவில்லாமல் இப்போதுமிருக்கிறோம். இனி இப்படி இருந்தால் நமது தேசம் க்ஷேமமடைவதெப்படி? இத்யாதிகளை இனிமேலாகிலும் ஆழநீள ஆராய்ந்து ஆரியதேசமாகிய நமது அருமைத் தாயாரிடம் அன்பைக் காட்டி அதன் பெருமையைப் பிரபலமாக்கும் சாதனங்களாகிய சமாசார பத்திரிகைகளைப் பரிபாலித்து வரப் பிரார்த்திக்கின்றனன்".

5-1-1908இல் சுதேசமித்திரன் வெள்ளிவிழாவை முன்னிட்டு கோயமுத்தூர் பிரம்ம ஞான சபைக் கூட்டத்தில் நரசிம்மலு நாயுடு பேசிய பொழுது கலாநிதியின் தாக்கத்தைப் பற்றி பின்வருமாறு குறிப்பிட்டார்.

> தற்காலம் நான் இக்கோவை நகரில் பதிப்பித்து வரும் 'கலாநிதி' பத்திரிகையைப் பார்த்து 10, 12 பத்திரிகைகள் ஸ்தாபித்தார்கள். ஸ்தாபித்தாலென்ன? அவைகள் ஒன்றாவது இரண்டொரு வருஷம் நிற்கவில்லை.

'கலாநிதி'யின் இதழ்கூடக் கிடைக்கவில்லை. இதன் உள்ளடக்கத்தை மேலே ஒருவாறு அறிந்தாலும், உருவம் பற்றிய அறிய தமிழ்நூல் விவர அட்டவணை (அரசாங்க வெளியீடு)யில் உள்ள பின்வரும் செய்தி பயன்படுகின்றது.

கோயமுத்தூர் கலாநிதி

ஆசிரியர் எஸ்.பி. நரசிம்மலு நாயுடு, கிரசண்ட் பிரஸ், கோயமுத்தூர், பிப்ரவரி, மார்ச் 1900. உ.ப.24; 21X14 செ.மீ; மாதப் பத்திரிகை. 21ஆம் புத்தகத்தில் முதல் இதழ்."

சிற்சில சமயங்களில் இரு இதழ்களும் சேர்ந்து வந்ததும் உண்டு; சான்றாக 21ஆம் புத்தகத்தின் 2, 3ஆம் புத்தகத்தின் முதல் இதழ் - உ.ப. 28, என்னும் குறிப்பு உள்ளது.

மேற்காணும் குறிப்பில் இருந்து கலாநிதி 14 பக்கங்களுடன் வெளிவந்துள்ளது என்பதையும் அதன் அளவு 21X14 செ.மீ. என்பதையும் அறிகிறோம்.

நரசிம்மலு நாயுடுவின் பிற பத்திரிகைகளைப் போலவே, இந்த இதழும் எவ்வளவு காலம் வெளிவந்தது என்பதை அறிந்திட வாய்ப்பில்லை. கிடைத்துள்ள சான்று மூலம் கலாநிதி 1910ஆம் ஆண்டில் வெளிவந்துள்ளதை அறிய முடிகின்றது. இந்தச் சான்றில் பத்திரிகையைப் பற்றியும், அதன் ஆசிரியரைப் பற்றியும், பத்திரிகையின் தொனி அதன் செல்வாக்குப் பற்றியும் பின்வருமாறு அறிகின்றோம்.

1. 1910இல் மாதமிருமுறையாக இருமொழி இதழாக வெளிவந்துள்ளது.

2. விற்பனைப் பிரதிகள் 200; ஆண்டுக் கையொப்பம் ரூ.2.00

3. எஸ்.பி. நரசிம்மலு நாயுடு, இந்து பலிஜா, வயது 55, நிலக்கிழார்; கௌரவ மாஜிஸ்ட்ரேட், கோயமுத்தூர் தாலுக்கா - ஜில்லா போர்டு உறுப்பினர், கிரசண்ட் அச்சக உரிமையாளர்; முற்சான்றுகள் நல்லன.

4. உள்ளூர் செய்திகள்-குறிப்புகளை வெளியிடுகின்றது- அரசியல் சார்பற்றது; பத்திரிகைத் தொனி திருப்திகரமானது, தாக்கம் ஏதும் இல்லை.[22]

1914ஆம் வருடம் மார்ச்சு மாதம் 20ஆம் தேதி எழுதப்பட்ட நரசிம்மலு நாயுடுவர்களின் 'வில்சான'த்தில் கலாநிதிப் பத்திரிகையைப் பற்றிப் பின்வரும் குறிப்பு உள்ளது: "எனது கலாநிதி அச்சாபீஸ் 1881 வருஷம் நான் ஸ்தாபித்த கலாநிதி அச்சாபீசில் தான்

பதித்து வரும் கலாநிதி பத்திரிகை சமயோசிதமாக ஒரு வாரத்திற்கு அல்லது பக்ஷத்திற்கோ அல்லது மாதத்திற்கோ ஒரு தடவை ஜாதி பேதம், மத பேதம், இராஜ தூஷணை அற்ற பொது சமாசாரங்களை பதிப்பித்து சுலப கையொப்பத்திற்கு விற்று வரவேண்டும்". (ப. 22)

ஆதிதிராவிடர் நடத்திய இதழ்கள்

1831 - 1881 காலகட்டத்தில் - 'பஞ்சமர்', 'பூர்வத் தமிழர்', 'ஆதி தமிழர்', 'ஆதி திராவிடர்' என்று பலவாறாக அழைக்கப் பெற்றத் தாழ்த்தப்பட்ட மக்களிடையே விழிப்புணர்ச்சியும் கல்வியறிவும் ஏற்பட வாய்ப்பற்ற காலகட்டத்தில் அவர்கள் தங்களுக்காக இதழ்களைத் தொடங்கி நடத்த இயலாது போயிற்று. பண்டிதர் க. அயோத்தி தாஸ் (1845 - 1914), இரட்டைமலை சீனிவாசனர் (1859-1945), எம்.சி. ராஜா (1883 - 1947) முதலானவர்கள் முதற்கட்ட முப்பெரும் தலைவர்களாக ஆதி திராவிடர்கள் முன்னேற்றத்துக்கு அரும்பாடுபட்டனர். ஆதி திராவிடர் இயக்க வரலாற்றில் மூன்று அமைப்புகள் முன்னோடிகளாகத் தோன்றின. 1882இல் தோன்றிய ஆதிதிராவிடர் ஜனசபை, 1892இல் நிறுவப்பெற்ற ஆதிதிராவிட மகாஜன சபை, 1928இல் தோற்றுவிக்கப் பெற்ற அகில இந்திய ஆதிதிராவிட மகாஜனசபை என்பன முப்பெரும் முன்னோடி அமைப்புகளாகும்.

இக்கால கட்டத்தில் ஆதிதிராவிடர்களுக்காக ஆதிதிராவிட ராலேயே 'மகா விகட தூதன்' எனும் 1866இல் இதழ் வெளி வந்துள்ளது. இதன் ஆசிரியர் ஆதிதிராவிடர் தலைவர் பூஞ்சோலை முத்து வீரநாவலர். இந்த இதழ் கிடைக்கவில்லை. இந்த இதழ் பற்றிய ஒரு குறிப்பு 'ஆதிதிராவிடர் வரலாறு' எனும் நூலில் கூறப்பெற்றுள்ளது. ஆதிதிராவிடர் மகாஜனசபையின் வரலாற்றை 1890ஆம் வருஷம் ஏப்ரல் மாத 8ஆம் தேதி இதழில் அறியலாம் என்பதே அந்தக் குறிப்பு.[23]

விகட தூதன்

24-4-1898இல் சென்னை அரசாங்கத்திடம் அரசாங்க மொழி பெயர்ப்பாளர் டி. பாலசுந்தர முதலியார் அளித்த அறிக்கையில் 'விகட தூதன்' எனும் பெயர் காணப்படுகின்றது.[24]

29.4.1898இல் 'தமிழ்ப் பயின்றவர்கள்' எனும் தலைப்பில் 'விகடதூதன்' இதழில் வெளிவந்தக் கட்டுரையின் பின்வரும் பகுதி, கவனிக்கத்தக்கது.

"தற்காலம் தமிழ் வல்லவர்கள் நமது தேசத்தில் அனேகருண்டு. சிலர் ஆங்கிலேயப் பாஷைகளையும் பயின்று உத்தியோகம் முதலிய சுக வாழ்விலிருக்கின்றார்கள். மற்றும் சிலர் இங்கிலீஷ் பாஷையே தெரியாமலிருப்பவர்கள். இவர்கள் உத்தியோக முதலிய துறைகளுக்கு முக்கி முக்கி முயற்சித்தும் இங்கிலீஷ்ப் பாஷையில்லாததால் கூடி வராமல் நீர்பாக்கிய வாழ்விலிருக்கிறார்கள். தமிழ்ப் படிப்பாளிகளைப் பார்த்தாலும் அதிகமாகப் புது நாகரிக பாஷைப் படித்து விட்டவர்களுக்கு சகப்புத்தான். தமிழ் வித்துவானென்றால் கேவலம் மட்டுமல்ல, வெகு கேலி, வெகு அசங்கதிம், மூக்கை அப்போதே அறுத்துப்போட்டுக் கொள்வார்கள்."[25]

தமிழ்ப் புலவர்கள் அக்காலத்தில் ஆங்கிலம் கற்றவர்கள் சிலரால் எவ்வாறு அலட்சியப்படுத்தப் பெற்றனர் என்பதை 'விகட தூதன்' சுட்டிக்காட்டியுள்ளது. மொழிபற்றியக் கோட்பாடு, கருத்தியலில் எடுத்துரைக்கப்பெற்றுள்ளது.

1869இல் ஆதிதிராவிடர் இதழாக 'சூரியோதயம்' சென்னை சிந்தாதரிப்பேட்டையில் இருந்து வெளிவந்துள்ளது. இதன் ஆசிரியர் புலவர் வெங்கடபதி என்று கூறப்படுகிறது.

1871இல் 'பஞ்சமன்' எனும் பெயரில் ஓர் இதழ் வந்துள்ளது. இதைப் பற்றியும் மேற்கொண்டு அறியமுடியவில்லை.

ஆதிதிராவிடர் இதழ்கள் தோற்றம், வளர்ச்சி பற்றிய ஆய்வு மேற்கொள்ளப்பட வேண்டியது. சமூக ஒடுக்குமுறைக்குப் பயங்கரமாக ஆட்பட்ட தாழ்த்தப்பட்ட மக்களின் மனக்குமுறலை அக்காலத்தில் இந்த இதழ்கள் பதிவு செய்திருக்கும். இந்த இதழ்களின் கருத்தியல் கோட்பாடு, இன்னமும் புதையுண்டு இருப்பது தமிழ் இதழியல் வரலாற்றின் மாபெரும் சோகமாகும்.

குறிப்புகள்

1. Classified Catalogue of Tamil Printed Books, Reprint, 1968, JOHN MURDOCH, TAMIL DEVELOPMENT AND RESEARCH COUNCIL, GOVT. OF TAMILANDU, pp.222-223
2. 19ஆம் நூற்றாண்டுத் தமிழ் இதழ்கள், விரிவாக்கம், மூன்றாவது பதிப்பு, 1995, அ.மா. சாமி, நவமணி பதிப்பகம், சென்னை - 600 004, ப. 278
3. விடுதலைப்போரில் தமிழ் இதழ்கள், 1998, பெ.சு.மணி, ப. 145
4. உதயதாரகை, மார்னிங் ஸ்டார், வியாழன், பிப்ரவரி 4, 1841
5. நாள், கிழமை, திங்கள் இதழ் விளக்க வரிசை, 1961. க.அ. இராமசாமிப் புலவர், ப. 44
6. "ஒரு நூற்றாண்டு காணும் இந்து சாதனம் ஆங்கிலம் தமிழ்" கட்டுரை, பேராசிரியர் இரா. கனகரத்தினம், இந்து சாதனம், 11.9.1985, யாழ்ப்பாணம்.
7. "சுவாமி விவேகானந்தர் யாழ்ப்பாண விஜயத்தின் எதிரொலி", இலங்கையில் இராமகிருஷ்ணர் இயக்கம், 1991, பெ.சு. மணி, ராமகிருஷ்ண மிஷன், கொழும்பு, பக். 138, 170
8. தமிழகத்தில் பிரம்ம சமாஜம், 1992, பெ.சு. மணி, பூங்கொடி பதிப்பகம், சென்னை, 600 004, ப. 63
9. வேத சமாஜம் பற்றிய வரலாற்றாய்விற்கு, 'தமிழகத்தில் பிரம்ம சமாஜம்' எனும் நூலைப் பார்க்கவும்.
10. TATTWA BODHINI SABHA AND THE BENGAL RENAISSNCE, 1979, FIRST EDITION, AMIYAKUMARSEN, SADHARAPN BRAHMO SAMAS, CALCUTTA, p.13
11. HISTORY OF BRAUMO SAMAJ : SECOND EDITION, 1974, SIVANATH SASTRI, SADHARAN BRAHMO SAMAJ, CALCUTTA, p.478
12. தத்துவபோதினி, 1864, மே. 7
13. 'தத்துவ போதினி' பற்றிய விரிவான ஆய்விற்குத் 'தமிழகத்தில் பிரம்மசமாஜம்' எனும் நூலைப் பார்க்கவும்.

14. தமிழ்க் கிறிஸ்துவ இதழ்கள் ஓர் ஆய்வு, 1996, அ.மா. சாமி, நவமணி பதிப்பகம், சென்னை - 600 004, ப. 102
15. மேலது, ப. 291
16. MADRTAS NATIVE NEWS PAPER REPORT WEEK ENDING 13th April 1878, சென்னை மாநில அரசு வெளியீடு
17. மேலது
18. தமிழகத்தில் பிரம்ம சமாஜம், ப. 170
19. இரு கடிதங்களின் சுருக்கங்கள் 'தமிழகத்தில் பிரம்ம சமாஜம்' எனும் நூலில் வெளியிடப்பெற்றுள்ளன.
20. தமிழகத்தில் பிரம்ம சமாஜம், பக். 174-175
21. மெட்ராஸ் நேடிவ் நியூஸ் பேப்பர் ரிப்போர்ட், 1881
22. முற்கூறிய நரசிம்மலு நாயுடுவின் வாழ்க்கை வரலாற்று நூல், ப. 64
23. மெட்ராஸ் நியூஸ் பேப்பர் ரிப்போர்ட், 1910, தமிழ்நாடு அரசு ஆவணக் காப்பகம், சென்னை
24. ஆதிதிராவிடர் வரலாறு, 1922, திரி சிரபுஜ், ஆ. பெருமாள் பிள்ளை, பக். 87-101
25. G.O. No.736 (Confdil), 6-6-1896, தமிழ்நாடு ஆவணக் காப்பகம்.
26. மேற்கோள், தமிழ்ப் புலவர் மரபும் பாரதி மரபும், 1995, பெ.சு. மணி, ப. 30

தமிழ் இதழ்கள் 1831 - 1881
அமைப்பும் ஆக்கமும்

இளந்தமிழன்

எந்த ஒரு பத்திரிகையின் வெற்றிக்கும் உள்ளடக்கம் எந்த அளவுக்கு முக்கியத்துவம் வாய்ந்ததோ, அதை விட பல மடங்கு முக்கியத்துவம் வாய்ந்தது பத்திரிக்கையின் வடிவமைப்பு (Lay-Out) ஆகும். சுமாரான தகவல்களுடன் கூடிய இதழ்கள் கூடத் தரமான வடிவமைப்பு காரணமாக வெற்றி பெற்றுவிடுகின்றன.

ஒரு செய்தி அல்லது தகவல், கதை, கட்டுரை எதுவாக இருந்தாலும் அதை படிக்கும் விதமாக மாற்றி அமைப்பது பக்க வடிவமைப்பு (Page Lay-out) தான்.

இதைத்தான் சோமலே அவர்கள், "ஒரு பத்திரிகைக்கு லே-அவுட்தான் உயிர் நாடி. எந்த இதழில் எந்தப் பக்கத்தைப் புரட்டினாலும் அது அதற்குமுன் பார்த்திராத புதுமையாக இருக்க வேண்டும்.

தமிழ் நாட்டில் ஒரு பத்திரிகை லே-அவுட்களை மட்டும் வாரந்தவறாமல் விலை கொடுத்து வாங்கிப் பயன்படுத்துகிறது என்பது பல பேருக்குத் தெரியாது"[1] என்று தெரிவித்துள்ளார்.

இதழ்களுக்குப் படைப்புகள் மட்டுமல்ல; வடிவமைப்பும் இன்றியமையாத கூறு என்பது இதன் மூலம் விளங்கும்.

தமிழ் இதழியல் துறை தற்போதைய சூழலில் வளர்ச்சிப் பெற்ற துறையாக விளங்குகிறது. செய்தி சேகரிப்பது எப்படி, கதை எழுதுவது எப்படி, கட்டுரை எழுதுவது எப்படி, துணுக்குகள் எழுதுவது எப்படி, ஏன், பத்திரிகைகள் நடத்துவது எப்படி என்று கூட பலர் பல நூல்களை எழுதியுள்ளனர். ஆனால் இதுவரையில் இதழ்களை வடிவமைப்பது எப்படி என்று ஒருவரும் நூல் எழுதாததின் காரணம் என்ன என்று விளங்கவில்லை.

தற்போது வெளிவந்து கொண்டிருக்கும், விற்பனையில் பெரிய சந்தையை பெற்றுள்ள முன்னிலை இதழ்கள்

தங்களுக்கென்று தனியாக வடிவமைப்புக் கொள்கையைக் கொண்டு செயல்பட்டு வருகின்றன. இதழ் வடிவமைப்புக்கென்று ஆய்வுகள் செய்கின்றன. புதிய, புதிய பல முயற்சிகளில் ஈடுபட்டுப் புதுப்புது உத்திகளுடன் தங்கள் இதழ்களை வடிவமைக்கின்றன. ஆக, வடிவமைப்பு என்பது ஒரு கலை. ஒரு செய்தியை முக்கியத்துவம் வாய்ந்ததாகச் செய்வதும் ஒரு கதையைப் படிக்கத்தூண்டும்படிச் செய்வதும் வடிவமைப்பின் மூலம் முடியும். இந்த வடிவமைப்பை இரண்டு விதமாகப் பிரிக்கலாம். ஒன்று இதழ் வடிவமைப்பு, மற்றது பக்க வடிவமைப்பு.

பக்க வடிவமைப்பு என்பது, அந்த பக்கத்திற்குரிய படங்கள், ஓவியங்கள், தலைப்பு, துணுக்குச் செய்திகள், பெட்டிச் செய்திகள் ஆகியவற்றினைக் கொண்டோ, இவற்றில் ஒன்றிரண்டு இல்லாமலோ பக்கத்தைச் செம்மைப் படுத்துவதற்குப் பக்க வடிவமைப்பு என்று கூறலாம்.

இதழ் வடிவமைப்பு என்பது மேலட்டை தொடங்கிப் பின்பக்க அட்டை வரை இதழின் சுவை குன்றாமல் வாசகர்களை வாசிக்க வைக்கும் முயற்சியில் ஈடுபடுவது. இதில் மேலட்டையில் இடம் பெறும்படம், அதில் இடம்பெற வேண்டிய வாசகங்கள் அமைப்பது, தொடர்ந்து, உள்ளே தகவலின் தன்மை மற்றும் முக்கியத்துவம் கருதி அவற்றைப் பக்கங்களுள் செலுத்துவது, தொடர்கள் இருக்குமானால் அந்த தொடர்களின் முக்கியத்துவம் குன்றாத வகையில் அமைப்பது, விளம்பரதாரர்கள் கொடுத்துள்ள விளம்பரங்களின் முக்கியத்துவம் குன்றிவிடாத வகையில் அதற்குப் பக்கத்தில் வரும் தகவல்களைத் தேர்ந்தெடுத்து, வடிவமைப்பது இன்ன பிற வேலைகளை இதழ் வடிவமைப்பு எனலாம்.

இது தற்போது வழக்கில் இருக்கும் தமிழ் இதழியல் வடிவமைப்பு முறை, தமிழ் இதழியலின் தொடக்க காலத்தில் வெளிவந்த தமிழ் இதழ்களின் வடிவமைப்பு நிலை எவ்வாறு இருந்தது என்பதை இனி பார்ப்போம்.

தொடக்கக் கால தமிழ் இதழ்களின் வடிவமைப்பு உத்திகளை தெரிந்து கொள்வதற்கு அக்காலத்தில் வெளிவந்த இதழ்களின் படிகள் தேவை. ஆனால் 19ஆம் நூற்றாண்டில் தமிழ் இதழ்கள் தொடங்கப் பட்ட பிறகு உள்ள 50 ஆண்டு கால

இதழ்களின் படிகள் ஒன்றுகூட கட்டுரையாளரின் பார்வைக்குக் கிடைக்கவில்லை. 1870இல் தொடங்கப்பட்ட ஜனவிநோதினி மாத இதழும், தத்துவ போதினி என்கிற இதழும் மட்டுமே கட்டுரையாளரின் பார்வைக்குக் கிடைத்தன.

ஜனவிநோதினி

சென்னைக் கல்விக் கழகத்தினால் 1870இல் தொடங்கப்பட்ட இவ்விதழின் தொடக்க காலப்படிகள் எதுவும் கிடைக்கவில்லை. 1874ஆம் ஆண்டின் பிப்பிரவரி இதழில் இருந்து சில இதழ்கள் சிடைத்தன. கிடைத்த இதழ் படிகளைக் கொண்டு ஜனவிநோதினி இதழின் வடிவமைப்பு பற்றி அறிந்துகொள்ள முயற்சி செய்வோம்.

இதழ் அமைப்பு

இதழின் அட்டையில் இதழில் பெயர் சிறிய எழுத்துக்களில் ஆங்கிலத்தில் முதலிலும் அதன் கீழே தடித்த எழுத்துக்களில் தமிழிலும் அமைந்துள்ளன. அதற்குக் கீழே இதழின் வயதைக் குறிக்கும் தகவல்கள் அடங்கி உள்ளன. இதையடுத்து இதழின் பொருளடக்கத்தை அட்டவணை என்ற பெயரில் தமிழிலும் ஆங்கிலத்திலும் தந்துள்ளனர். இறுதியில் வெளியிட்டாளர் மற்றும் அச்சகத்தார்களின் முகவரிகள் அச்சிடப்பட்டுள்ளன. இதழின் மேல் அட்டை வடிவமைப்பு இவ்வாறுதான் அமைந்துள்ளது.

1874, 75-களில் ஒவ்வொரு மாதமும் இந்த வடிவமைப்பில் எந்த மாற்றமும் இன்றி ஒரேமாதிரியாக எல்லா இதழ்களும் அச்சிடப்பட்டுள்ளன. 1879இல் வெளிவந்த இதழ்களில் பத்திரிகையின் தலைப்பில் எழுத்துக்கள் மாற்றம் செய்யப்பட்டுள்ளன. அதாவது அதுவரை '*ஜன விநோதினி*' என்று அச்சிடப்பட்டு வந்த எழுத்துக்கள் மாறி '*ஜந விநோதிநி*' என்ற எழுத்துக்களைக் கொண்டு பெயர் அமைக்கப்பட்டுள்ளது. மேலும் அச்சகத்தாரின் பெயர், முகவரி விடுபட்டுள்ளது. மற்றபடி மேலட்டையில் குறிப்பிடத்தக்க எந்த மாற்றமும் இல்லை.

இதழின் இரண்டாம் பக்கத்தில் நான்கு விதமான எழுத்துருக்களைக் கொண்ட அறிவிப்பு வாசகர்களுக்காக

வெளியிடப்பட்டுள்ளது. இது ஆங்கிலத்திலும் தமிழிலுமாக வெளியிடப்பட்டுள்ளது.

இந்த அறிவிப்பில் அவர்களுக்கு இருந்த அக்கறை வடிவமைப்பில் தெரிகிறது. அந்த அறிவிப்பின் ஒரு பகுதி:

> இந்த ஜன விநோதினியை வாசிக்கும் நாட்டுக் கையொப்பக்காரர்கள் தங்கள் பந்து மித்திரர்களுக்கும் சில சஞ்சிகைகளைக் காட்டிப் படிக்கச் செய்யும் படி வேண்டுகிறோம் நாட்டுக் கையொப்பக்காரர் அதிகரிப்பது இந்த பத்திரிக்கைக்குப் பிரயோஜனமாக இருக்கும்.

மூன்றாம் பக்கத்தில் ஒரு முழுப்பக்க படம் இடம் பெற்றுள்ளது. அந்தக் கால இதழ்களில் முதலில் படம் வெளியிட்டப் பத்திரிகை இதுவாகத்தான் இருக்க வேண்டும். இந்த முழுப்பக்க படம், அடுத்தப் பக்கத்தில் இடம் பெற்றுள்ள செய்தியையோ அல்லது கட்டுரையையோ சார்ந்தே அமைந்துள்ளது.

படங்கள்–ஓவியங்கள்

இதழின் உட் பகுதிகளில் பொதுவாக எந்தப் படங்களும் ஓவியங்களும் இடம் பெறவில்லை. இதழின் முதல் கட்டுரைக்கு மட்டும் ஒரு முழுப்பக்க படம் இடம் பெற்றுள்ளது. பெரும்பாலும் அவை ஓவியப் படங்களாகவே அமைந்துள்ளன. 1874ஆம் ஆண்டில் வெளிவந்த இதழ்கள் ஒன்றில்கூட கட்டுரைகள் மற்றும் செய்திகளுக்கு நடுவே எந்தப் படமும் இடம் பெறவில்லை. ஆனால் ஜன விநோதினி இதழாளர்கள் தொடர் முயற்சிகள் மட்டும் செய்துள்ளார்கள். அதன் விளைவாக 1879ஆம் ஆண்டில் வெளிவந்த இதழ்களில் பல்வேறு அதிசயங்கள் வெளிப்பட்டுள்ளன. அவை ஒரு இதழியல் வடிவமைப்பாளருக்கு வியப்பு தரக்கூடிய சங்கதிகளாக அமைந்துள்ளன.

முதல் பக்கத்தில் வெளிவந்த கட்டுரைக்கு மட்டுமே படம் அமைத்திருந்த நிலை மாறி 1879ஆம் ஆண்டில் வெளியான இதழ்களில், உள்ளே உள்ள கட்டுரைகளுக்கும் படங்கள் அமைக்கப்பட்டுள்ளன. மனித நாக்கு பற்றிய கட்டுரை ஒன்றில் மனித நாக்கின் படம் கட்டுரைக்கு நடுவே அமைக்கப்பட்டுள்ளது. இது ஆரம்பகால முயற்சியாகும்.

இவற்றையெல்லாம் தாண்டி ஒரு தரமான பக்க வடிவமைப்பை 1879ஆம் ஆண்டில் வெளிவந்த இதழ் 7இல் 'ஒளியின் அதிசயங்கள்' என்ற கட்டுரையில் தற்காலத்தில் வெளிவரும் வார இதழ்களில் படங்கள் வைத்து வடிவமைக்கப்படும் அமைப்புக்கு ஈடான ஒரு வடிவமைப்பு காணப்படுகிறது. பக்கத்தின் இடது மேல் மூலையில் படம் அமைக்கப்பட்டு அது தொடர்பான தகவல்கள் சுற்றிலும் இடம் பெற்றுள்ளன. இந்தப் படத்தில் ஒளி மரக்கிளைகளின் வழியாக உள்ளே வருவது தெரியும் படித் தோற்றம் காட்ட முயற்சி செய்யப்பட்டுள்ளது. இந்த ஆண்டில் வெளிவந்த வேறு எந்த ஒரு இதழிலும் இந்த வடிவமைப்பு உத்தி கையாளப்படவில்லை.

தலைப்புகள் அமைக்கப்பட்டுள்ள விதம்

கட்டுரை, கதை அல்லது செய்தி ஆகியவற்றின் தலைப்பில் பயன்படுத்துப்பட்டள்ள வாசகங்கள் அவற்றின் கவர்ச்சித் தன்மை, எழுத்துருக்கள் ஆகியவற்றின் மூலம் வாசகரைக் கவர்ந்து கட்டுரையைப் படிக்கும்படி தூண்டுகின்றன. 1875 ஜூலை மாதம் வெளிவந்த ஜனவிநோதினி இதழில் அமைக்கப்பட்டுள்ள தலைப்புகள்.

1. சீனாகாகிதம் செய்ய உதவும் செடி
2. பழைய நேசர்கள்
3. ஆகாரம் ஜீர்ணமாதல்
4. வீண் பெருமையையும் திருப்தியையும் பற்றிய கதை (தொடர்)
5. லார்ட் எர்ஸ்லின் விருத்தாந்தம்
6. தசகுமாரசரிதம்
   மூன்றாவது
   ஸோமதத்தன் கதை
7. சமாச்சாரம்

தலைப்புகளுக்குப் பொதுவாக 12 புள்ளி அளவு கொண்ட எழுத்துருக்கள் பயன்படுத்தப்பட்டுள்ளன. இதழில் உள்ள எல்லா தலைப்புகளும் ஒரே விதமான எழுத்துருக்கள் மற்றும் ஒரே அளவு புள்ளிகள் கொண்டு அமைக்கப்பட்டுள்ளன.

இப்போதைய இதழியல் பார்வையின் படித் தலைப்புகளில் கவர்ச்சித் தன்மை சிறிதும் இல்லை. தலைப்புகள் கட்டுரையின் தொடக்கத்தில் மேலேயே அமைக்கப்பட்டுள்ளன. பெரும்பாலும் தலைப்புகள் ஒரு வரியிலேயே அமைக்கப் பட்டுள்ளன. சொற்கள் அதிகமாகக் கொண்ட தலைப்புகள் மட்டுமே இரண்டு வரிகளில் அமைக்கப்பட்டுள்ளன.

ஒவ்வொரு இதழிலும் இறுதியில் சமாசாரம் என்ற தலைப்பில் நடப்புச் செய்திகள் வெளியிடப்பட்டுள்ளன, பெரும்பாலும் ஒவ்வொரு இதழிலும் நான்கு அல்லது ஐந்து துணுக்குச் செய்திகள் இடம்பெற்றுள்ளன. இவற்றில் ஒவ்வொரு துணுக்குச் செய்திக்கும் ஒரு துணைத்தலைப்பு கொடுக்கப்பட்டுள்ளது. இவை 10 புள்ளிகள் கொண்ட தடித்த எழுத்துக்களில் அமைக்கப்பட்டுள்ளன.

பத்தி பிரிப்பு முறை (Column)

தற்போது வெளிவந்து கொண்டு இருக்கும் பருவ இதழ்கள் பெரும்பாலும் இரண்டு பத்தி (Two column) ஆகப் பிரிக்கப்பட்டு பக்கங்கள் வடிவமைக்கப்படுகின்றன. நாளிதழ்கள் எட்டு பத்தி ஆகப் பிரிக்கப்பட்டு வடிவமைப்புச் செய்யப்படுகின்றன. ஜனவிநோதினி இதழில் பருவ இதழ் முறை இன்றி புத்தகங்கள் வடிவமைக்கும் முறையில் ஒரே பத்தியாகப் பக்கங்கள் வடிவமைக்கப்பட்டுள்ளன.

இட நிரப்பிகள்

படைப்பாளரின் ஒரு படைப்பை இரண்டு பக்கங்களிலோ அல்லது மூன்று பக்கங்களிலோ படங்கள், ஓவியங்கள், தலைப்புகளுடன் பக்க வடிவமைப்பு செய்யும் போது குறிப்பிட்ட பக்க வரையறைக்கு அதிகமாகவோ அல்லது குறைவாகவோ படைப்பு முடியும். அப்படிப்பட்ட சூழல்கள் அதிகமாக வரும்போது குறிப்பிட்டப் படைப்பாளரை அழைத்துச் சுருக்கித் தரச் சொல்வதோ அல்லது ஆசிரியர் குழுவே அந்தப் படைப்பைச் சுருக்கிப் பக்க வரையறைக்குள் அடக்குவதோ உண்டு. அதிகமாக வந்த படைப்பு அரை பக்க அளவுக்கு இருந்தாலோ மீதம் உள்ள அரை பக்கத்துக்கு ஏதாவது ஒரு விளம்பரதாரரின் விளம்பரத்தை வைத்துப் பக்கத்தை முடித்துவிடுவதும் உண்டு.

பக்க வரையறைக்குக் குறைவாக வரும் போது மீதம் உள்ள இடத்தை ஒழுங்குபடுத்தி அந்த இடத்தில் ஏதாவது ஒரு துணுக்குச் செய்தியையோ அல்லது அறிவிப்புகளையோ அல்லது சிறு விளம்பரங்களையோ, நகைச்சுவை துணுக்குகளை வைத்து அந்த இடத்தை நிரப்பிப் பக்கத்தைச் செம்மைப்படுத்துவது இக்கால இதழியல் வடிவமைப்பு முறை.

ஜனவிநோதினி இதழின் எந்தப் பக்கத்திலும் இடநிரப்பிகளைப் பயன்படுத்தவே இல்லை. பக்க வரையறைக்குள் படைப்புகளை முடிக்க வேண்டும் என்கிற வரையறை ஏதும் இன்றி எழுத்தாளரின் படைப்புக்கு ஏற்ப எவ்வளவு எழுதப்பட்டுள்ளதோ அவற்றை அப்படியே பக்கங்களுக்குள் ஏற்றி அந்தப் படைப்பு முடிந்த உடன் அதற்குக் கீழேயே அடுத்த தலைப்பை வைத்து படைப்பைத் தொடங்கி விடுகின்றனர்.

படைப்பில் உள்ள கருத்துக்குக் கொடுத்த முக்கியத்துவத்தை அந்தப் படைப்பை அழகான பக்க வடிவமைப்புக்குள் கொண்டு வர வேண்டும் என்ற முயற்சியை அவர்கள் எடுக்கவில்லை அல்லது வடிவமைப்பின் முக்கியத்துவத்தை அவர்கள் உணர்த்திருக்கவில்லை என்று எண்ணத் தோன்றுகிறது.

பெட்டிச் செய்திகள்

ஒரு குறிப்பிட்ட செய்தியையோ, தகவலையோ முக்கியத்துவம் கூட்டிக் காட்ட வேண்டும் என்றால் பெட்டிக்குள் அடைத்து வெளியிடுகின்ற வழக்கம் தற்போது நடைமுறையில் உள்ளது. பருவ இதழ்களைவிட நாளிதழ்களில் இந்த உத்தி அதிகமாகக் கடைபிடிக்கப்படுகிறது.

இந்த பெட்டிச் செய்தி உத்தி 1884ஆம் ஆண்டில் வெளிவந்த ஜனவிநோதினி இதழில் 'சமாச்சாரம்' என்கிற பகுதியில் ஒரு பிரமுகரின் மரணச் செய்தியை வெளியிடப் பயன்படுத்தப்பட்டுள்ளது.

விளம்பரங்கள்

வணிக நிறுவனங்கள் மற்றும் அரசு நிறுவனங்கள் என எந்தத் துறை சார்ந்த விளம்பரங்களுள் இதழின் எந்த இடத்திலும்

காணப் படவில்லை. ஜனவிநோதினி இதழில் தொடராக வரும் கட்டுரைகளின் விளம்பரங்களும் பத்திரிகைக்கு சந்தா சேர்க்கும் வகையில் அமைந்த விளம்பரங்களும் மட்டுமே இடம் பெற்றுள்ளன.

தத்துவ போதினி

1863ஆம் ஆண்டிலிருந்து சென்னை கா. தெய்வசிகாமணி முதலியாரால் தத்துவ போதினி அச்சுக் கூடத்தில் இருந்து வேத சமாஜத்தாரால் மாத இதழாக வெளியிடப்பட்டது.

இருபத்தி இரண்டு பக்கங்களைக் கொண்டு வெளிவந்த இந்த மாத இதழ் முழுக்க முழுக்க இந்து சமயம் சார்ந்த கருத்துக்களைக் கொண்ட இதழாக வெளிவந்துள்ளது.

தமிழ், மணிப்பிரவாளம், தெலுங்கு ஆகிய மொழிகள் கலந்து இதழ் தயாரிக்கப்பட்டுள்ளது. இவ்விதழின் அட்டை பக்கத்தில் தத்துவ போதினி என்ற பெயருக்குக் கீழே இந்தியாவின் படம் அச்சிடப்பட்டு “இஃது வேத ஸமாஜத்தாரால் இயற்றப்பட்டு, தத்துவ போதினி அச்சுக் கூடத்தில் பதிப்பிக்கப்பட்டது” என்கிற குறிப்போடு காணப்படுகிறது. அதற்கும் கீழே சென்னை நகர் என்றும் தமிழ் ஆண்டும் அச்சிடப்பட்டுள்ளன.

இதழின் முதல் பக்கத்தில் இதழின் பெயர் தடித்த எழுத்துக்களால் அமைக்கப்பட்டு அதற்குக் கீழே இரண்டு கோடுகளுக்கு இடையில் இதழின் வயது, வெளியிடப்படும் இடம் மற்றும் வெளிவந்த நாள் ஆகிய குறிப்புக்கள் காணப்படுகின்றன. அதற்குக் கீழே மணிப்பிரவாள நடையில் சிறு குறிப்பு காணப்படுகிறது, அதற்கும் கீழே ஒரு கோடு இடப்பட்டு அட்டவணை என்ற பெயரில் பொருளடக்கம் அமைக்கப் பட்டுள்ளது. இந்தப் பொருளடக்கத்தில் வரிசை எண்கள், மற்றும் பக்க எண்கள் அனைத்தும் தமிழ் எழுத்துக்களாலான எண்களாக அமைக்கப் பட்டுள்ளன. இதழின் உள்ளே உள்ள பக்க எண்கள் கூடத் தமிழ் எழுத்துக்களாலேயே அமைக்கப்பட்டுள்ளன. முதல் பக்கத்திலேயே கடவுள் துதியும் இடம் பெற்றுள்ளது. ஒவ்வொரு இதழுக்கும் இந்தக் கடவுள் துதி மாறி மாறி இடம் பெற்றுள்ளது. சில இதழ்களில் முதல் பக்கத்தில் இடம் பெறும் கடவுள் துதி இரண்டாம் பக்கத்திலும் தொடர்ந்துள்ளது.

இதழ் அமைப்பு

தத்துவ போதினி இதழ் 22 பக்கங்களைக் கொண்டு அமைந்துள்ளது. இதழின் இரண்டாம் பக்கத்தில் இதழ் சந்தா விவரம் மற்றும் புத்தக விளம்பரங்கள் அடங்கியுள்ளன. மூன்றாம் பக்கத்திலும் இந்த விளம்பரங்கள் தொடர்ந்துள்ளன. இவ்விளம்பரங்களுக்கு அடுத்துத் தத்தவ போதினிக்கு எழுதுவோர்க்கான அறிவிப்பு "நிருபக்காருக்கான விளம்பரம்" என்று பெயரில் தரப்பட்டுள்ளது.

இதற்கு அடுத்தபடியாக இன்றைய இதழ்களில் வரும் தலையங்கம் போன்ற அமைப்பில் ஒரு கட்டுரை அமைக்கப் பட்டுள்ளது. இது சில இதழ்களில் மூன்றாம் பக்கத்தில் தொடங்கப் பட்டுள்ளது. மற்றும் சில நான்காம் பக்கத்தில் இருந்து தொடங்குகின்றன.

ஆக, தத்துவபோதினி இதழின் தொடக்க பக்கங்களின் வடிவமைப்பு முதல் மூன்று, நான்கு பக்கங்களுக்குச் சிறிய இட மாற்றங்களுடன், ஒரே மாதிரியாக, எல்லா இதழ்களிலும் அமைக்கப்பட்டுள்ளன. இந்தச் சிறிய இட மாற்றம் முதல் பக்கத்தில் வரும் கடவுள் துதி பாடலின் அளவைப் பொறுத்தே வேறுபடுகிறது. மற்றபடி எந்த மாற்றமும் இன்றியே தொடக்கப் பக்கங்கள் வடிவமைக்கப்பட்டுள்ளன.

தத்துவ போதினியின் இதழ்கள் ஒவ்வொன்றும் 12 முதல் 17 தகவல்களுடன் (இங்குத் தகவல் என்பது செய்தி + கட்டுரை என்று பொருள்படும்) வடிவமைக்கப்பட்டுள்ளன.

இதழின் இறுதிப் பக்கங்களில் ஒவ்வொரு மாதமும் தத்துவ போதினிக்குச் சந்தாதாரர் ஆவோரின் பெயர்கள் அட்டவணைப் படுத்தப் பட்டுள்ளன.

1865ஆம் ஆண்டு மே திங்கள் வெளிவந்த தத்துவ போதினி இதழின் இறுதிப் பக்கத்தில் அக்கால இதழ்கள் எதிலும் பார்க்க முடியாத விளம்பரம் ஒன்று வெளியிடப்பட்டுள்ளது. 'புனர்விவாஹ விளம்பரம்' என்ற தலைப்பில் 'மணமகள் தேவை' விளம்பரங்கள் இரண்டு இடம் பெற்றுள்ளன. இதுவே இக்கட்டுரையாளரை ஆய்வு எல்லையான வடிவமைப்பையும் மீறிக் கருத்துக்குச் செல்ல வைத்தன. அந்த விளம்பரங்கள் எப்படி இடம் பெற்றுள்ளதோ அப்படியே இங்குத் தரப்படுகிறது.

க. சென்னைப்பட்டணம் நிவாசியாகிய ஸ்மார்த்த பிராமணன், சுமார் முப்பது வயது, சர்க்கார் உத்தியோக ஜீவனம், ஸ்மார்த்த பிராமணர்களில் பிரவிடையாகாத முன் பதிவியோகமடைந்த பாலிகையை சாஸ்தீர சம்மந்தமான புனர்விவாகஞ் செய்துகொள்ள விரும்புகிறார்.

உ. கூடலூர் வாசியாகிய சுமார் இருபத்துநாலு வயது, சர்க்கார் உத்தியோக ஜீவனமுள்ள ஒரு ஸ்மார்த்த பிராமணர்களில் பிரவிடையாகாத முன்பதிவி யோகமடைந்த பாலிகையை சாஸ்திரசம்மந்தமான புனர்விவாகஞ் செய்துகொள்ள விரும்புகிறார்.

மேற்கண்ட படி பதிவியோகமடைந்த புத்திரிகளை யுடையவர்கள் இஷ்டமிருந்தால் மற்ற சங்கதிகளைத் தத்து வபோதினி அச்சுக் கூடத்தில் தெரிந்த கொள்ளலாம்.

இந்த விளம்பரத்தின் பரிணாம வளர்ச்சிதான் இக்காலத்தில் வரும் 'மணமக்கள் தேவை வரிவிளம்பரங்கள்' என்பதை உணர்ந்து கொள்ள முடிகிறது.

இந்த விளம்பரத்தை மேலும் விரிவாக ஆய்வு செய்தால் பல சமூகவியல் சார்ந்த தகவல்கள் புலப்படும்.

பக்க வடிவமைப்பு (Page Lay-out)

தத்துவபோதினி இதழின் எல்லா பக்கங்களும் இரண்டு பத்திகளாக (Column) பிரிக்கப்பட்டுள்ளன. கட்டுரைகள் அல்லது தகவல்களுக்குத் தலைப்புகள் அமைக்கும் போது ஒரு பத்திக்குள்ளாகவே அடங்கும்படி அமைக்கப்பட்டுள்ளன. கட்டுரைகள் அரைப் பக்க அளவுக்கு வரும் போது இரண்டு பத்திகளாக சமமாகப் பிரித்து அமைக்காமல் ஒரே பத்தியாக நீள்வாக்கில் வடிவமைத்துள்ளனர். மேலும் ஒரு கட்டுரையை அடுத்துக் கீழே பத்தி வரையரைக்குள்ளேயே அடுத்த கட்டுரைக்குரிய தலைப்பையும் அமைத்துக் கட்டுரையைத் தொடங்கிவிடுகின்றனர். கட்டுரை, செய்தி, தகவல் என எல்லாவற்றுக்கும் படங்களோ ஓவியங்களோ எங்கும் இடம்பெறவில்லை; கார்ட்டூன்களும் எங்கும் இடம் பெறவில்லை.

சமயம் சார்ந்த இதழ் இது என்பதால் அதிக அளவில் சமயம் சார்ந்த பாடல்கள் இடம் பெற்றுள்ளன. இந்தப் பாடல்களைக் கூட பத்தி அமைப்புக்குள்ளேயே வடிவமைத் துள்ளனர். அவ்வாறு அமைக்கும் போது 'ஆசிரியப்பா' போன்ற வகைகளைச் சார்ந்த பாடல்களில் ஒரு வரியில் உள்ள சொற்கள் அனைத்தையும் பத்திக்குள் அடக்க முடியாமல் அடுத்த வரிக்குச் செல்லும் போது சொற்களாகப் பிரிக்காமல் எழுத்துக்களாகப் பிரித்துள்ளனர்.

தலைப்புகள்

தலைப்புகள் 12 புள்ளிகள் கொண்ட தடித்த எழுத்துக்களில் அமைந்திருக்கின்றன. இவை பெரும்பாலும் ஒரு வரி தலைப்புகளாகவே அமைந்துள்ளன.

எழுத்துருக்கள்

ஒரே விதமான எழுத்துருவே இதழ் முழுவதும் பயன்படுத்தப் பட்டுள்ளது. புள்ளி அளவுகள் மட்டுமே மாறுகின்றன. பொதுவாக 10 புள்ளிகள் அளவுள்ள எழுத்துக்களும் 8 புள்ளிகள் அளவுள்ள எழுத்துக்களும் பயன்படுத்தப்பட்டுள்ளன.

இடநிரப்பிகள்

பக்க வடிவமைப்புக்கு இடநிரப்பிகளையோ துணுக்குச் செய்திகளையோ இதழாசிரியர் எங்கும் பயன்படுத்த வில்லை. ஒரே ஒரு இதழில் மட்டும் கட்டுரையின் முடிவில் காலி இடத்தை நிரப்ப எந்தத் தொடர்பும் இல்லாமல் பத்து பழமொழிகளை அமைத்துள்ளனர். அதாவது பழமொழிகளை இடநிரப்பியாகப் பயன்படுத்தி உள்ளனர்.

படங்கள், ஓவியங்கள், பெட்டிச் செய்திகள் ஆகியன தத்துவ போதினி இதழில் எங்கும் இடம் பெறவில்லை.

முடிவுரை

தமிழ் இதழியலின் தொடக்க காலத்தில் வெளிவந்த இதழ்களின் இதழாளர்கள் கருத்துக்கு அதிக முக்கியத்துவம் கொடுத்துள்ளனர். வணிக ரீதியான போட்டிகள் குறைவாக இருந்த காரணத்தாலும் தொழில்நுட்ப வசதிகள் இல்லாத காரணத்தாலும் அவர்கள் வடிவமைப்பைப் பற்றிக் கவலைப்படவில்லை என்று உணர முடிகிறது.

தமிழ் இதழ்கள் 1831 - 1881 மொழி

மோ. தமிழ்மாறன்

இந்தியா, கிழக்கிந்தியக் கம்பெனியாரின் ஆட்சிக்குட்பட்டிருந்த காலகட்டத்தில், தம் சமயத்தை இந்தியாவில் பரப்பவந்த மேலைநாட்டு கிறித்தவ பாதிரிமார்களும் அறிஞர்களும் இந்தியாவிற்கும் குறிப்பாகத் தமிழகத்திற்கும் வழங்கிய கொடைகள் பலவாகும். கல்வி நிறுவனங்கள், மருத்துவக்கூடங்கள், இருப்புப் பாதைகள், பெருந்தொழிற்கூடங்கள் அச்சு இயந்திரங்கள் என அவர்கள் வழி நாம் பெற்ற நன்மைகளோடு கூட நவீன இலக்கிய வடிவங்கள், இதழியல் துறை என்னும் இருபெரும் அறிவுத்துறைகளும் குறிப்பிடத்தக்கனவாகும். இன்று நாளிதழ்களும் வார, மாத இதழ்களும் மிகப்பலவாக வெளிவந்து கொண்டிருப்பதற்கு மேலைநாட்டவரே கால்கோள் செய்து வைத்தனர். அவர்களைத் தொடர்ந்து, சமூக உணர்வு கொண்ட தமிழறிஞர் பலரும் இதழ்கள் தொடங்கி அவற்றின் வழி மக்கள் தொண்டு புரியத் தொடங்கினர்.

தமிழில் இதழியல்

தமிழில் இதழியல் தோன்றி வளர்ந்த வரலாற்றை மூன்று காலகட்டங்களாகப் பகுத்துக் காணலாம். அவற்றை 1831 முதல் 1881 ஆம் ஆண்டு வரை உள்ள காலத்தை முதல் காலகட்டம் என்றும், 1882 முதல் 1941 வரை உள்ள ஆண்டுகளை இரண்டாம் காலகட்டம் என்றும், 1942 முதல் 2000 வரை உள்ள ஆண்டுகளை மூன்றாம் காலகட்டம் என்றும் வரையறுத்துக் கொள்ளலாம். இவற்றுள் முதல் காலகட்டத்தில் வெளிவந்த தொடக்ககாலத் தமிழ் இதழ்களின் மொழிநடையை பற்றி இக்கட்டுரை எடுத்துரைக்க முற்படுகிறது.

1831–1881ஆம் ஆண்டுகளில் வெளிவந்த இதழ்கள்

தமிழ் மேகசின் (1831), புனித ஜார்ஜ் கெசட்டு (1832), இராச விருத்தி போதினி (1833), மெட்ராஸ் கிரானிகல் (1835),

வித்தியாதர்ப்பணம், (இலங்கை, 1835) யாழ்ப்பாண சுதந்திரன் (இலங்கை 1835), சத்தியதூதன் (1835) மதராசு செர்னல் ஆப் லிட்டரேச்சர் அண்டு சயின்சு (மதராசு செர்னல் 1835), புதுவை நடுநிலை (1838), இந்திய ஞாயிறு (1838), விருத்தாந்தி (1838), வித்தியாவிருத்தி (1838), பாலதீபிகை (1840), பொதுஜனபிரசாரணி (1840), உதயதாரகை (இலங்கை 1841), உதயாதித்தன் (இலங்கை 1841), ஜனசிநேகன் (1841), சுவிசேஷ பிரபல விளக்கம் (1842), வர்த்தமான தரங்கினி (1842), அரோரா (1842), மதியம் (1844), உரை கல்லு (1845, இலங்கை) திராவிட தீபிகை (1847), நற்போதகம் (1847), பாலியர்நேசன் (1848), இலங்கை நேசன் (1848), சிறுபிள்ளையின் நேசத்தோழன் (1945), தரங்கை நேசன் (1849), மொனித்தோர் ஒப்பிசியல் (1850), உதயநட்சத்திரம் (1850), கிறிஸ்துமார்க்க விளக்கம் (1854), ஞானதீபிகை (1854), தினவர்த்தமானி (1855), கிறித்துவமறுப்பு (1855), பாலியர்மித்திரன் (1855), விவேக விலாசம் (1855), சத்தியதுவஜம் (1855), தர்மப்பள்ளிப்போதம் (1859), அமிழ்தவசனி (1860), விவேகசிந்தாமணி (1860), கதாமஞ்சரி (1860), தேசோபகாரி (1861), சத்தியதீபம் (1861), ஜனோபகாரப் பத்தரிகை (1861), அருணோதயம் (1863), சுவிசேஷ தூதிகை (1863), இலங்காபிமானி (1863), திருச்சபை பத்திரிகை (1863) இலங்கைப் பாதுகாவலன் (1863), புனித தாமஸ் கதிட்ரல் வர்த்தமானி (1863), தத்துவபோதினி (1864), கற்பகவிருட்சம் (1864), விவேகவிளக்கம் (1865), வேதியர் விளக்கு (1865), கலாவர்த்தினி (1866), நட்புப்போதகன் (1867), சித்தாந்த ரத்நாகரம் (1867), சன்மார்க்க விவேக விருத்தி (1867), தேசாபிமானி (1867), முதலாயிரம் (1867), சென்னை உயர்நீதிமன்றத் தீர்ப்புச் சுருக்கம் (1867) இலங்கைப் பாதுகாவலன் (1867), மனுக்குலத்துக்கு இறைவனின் செய்தி (1869), சூரியோதயம் (1869), முனியாண்டி (1869, இலங்கை), அலாமத் இலங்காபுரி (1869), சத்தியவர்த்தமானி (1870), நேடிவ் பப்ளிக் ஒபினியன் (1870), சத்திய தீபம் (1870), புதினாதிபதி (1870, இலங்கை), மகாபத்தவிஜயம் (1870), சர்வசன மனோரஞ்சனி (1870), கதாசிந்தாமணி (1870), பிரம்மதீபிகை (1870), விவேகவிளக்கம் (1870), ஞானபானு (1870), அஜாய்புல் அக்பர் (1870), ஆந்திரா பாசா சஞ்சீவினி (1871), தத்துவவிசாரணி (1871), தரங்கை நேசன் (1871), பாகவத புராண வசனம் (1871), குருபரம்பரா விரபாவம் (1871), பிரம்மக்கியான போதினி (1871), வியவகார தரங்கிணி (1872), உண்மை விளக்கம் (1872), இந்தியன் அண்டிகியூட்டி (1872), திருக்கச்சி (1872), சுக இரஞ்சனி (1873), சுதேச பூசணி (1873), திருவாங்கூர் அபிமானி (1874), வெற்றிக்கொடியோன் (1874), சத்தியபோதினி (1874), சிநேகபோதன் (1875), நெடுங்கணக்கு இதழ்கள்

(1875), பிரமானந்த ரஞ்சனி (1875), சிங்கை வர்த்தமானி (1875), சென்னை நியாயபோதினி (1875), கிராமப்பள்ளி ஆசிரியர் துணைவன் (1875), மச்ச புராணம் (1876), சத்தியவேத பாதுகாவலன் (1876), கத்தோலிக்க பாதுகாவலன் (1876) வர்த்தமான தரங்கினி (1876), சுஜநரஞ்சனி (1876), புதினாலங்காரி (1876), சித்தாந்த சங்கிரகம் (1877), பழனி தல விநோதம் (1877), இலங்கைநேசன் (1877), வால்மீகி இராமாயண வசனம் (1877), திருவாய் மொழி (1877), பராசுர சுமிருதி (1877), சேலம் சுதேசாபிமானி (1877), ஐகோர்ட்டு விதிகள் (1878), மகாபாரத வசனம் (1878), யதார்த்த வசனி (1878), காரைக்கால் முன்னேற்றம் (1879), காலக்கணிதன் (1879), தத்துவ விவேசினி (1879), வித்தியாவர்த்தினி (1879), கோயமுத்தூர் அபிமானி (1879), நாகரிக வர்த்தமானி (1880), மார்க்கண்டேயபுராணம் (1880), சத்தியாபிமானி (1880), சிலுவைக்கொடி (1880), சிறீரங்கம் தல பூசணி (1880), திருப்பாவை (1880), சைவ உதயபானு (1880), முதலாயிரவியாக்கியானம் (1880), பரதத்துவப்பிரகாசிகை (1881), தேவாரப்பதிகத்திருமுறைகள் (1881), பெரிய திருமொழி (1881), விவேகவர்த்தினி (1881), சைவசம்போதினி (1881), இந்துநேசன் (1881), கோயமுத்தூர் கலாநிதிப்பத்திரிகை (1881), சுதேசமித்திரன் (1881) முதலிய 160 தமிழ் இதழ்கள் இதழியலின் தொடக்கக் காலகட்டத்தில் வெளிவந்தன என்பதாகத் தமிழ் இதழியல் வரலாற்று நூலாசிரியர்களால் சுட்டப்பட்டுள்ளது. இவற்றுள் நற்போதகம், பாலியர்நேசன், அருணோதயம் இன்றும் தொடர்ந்து வெளிவந்து கொண்டிருக்கின்றன. தென்னிந்திய திருச்சபையின் திருநெல்வேலி திருமண்டலத்தார் நற்போதகம், பாலியர்நேசன் ஆகிய மாத இதழையும், திருச்சியில் அமைந்துள்ள தமிழ்ச்சுவிசேஷ லூத்தரன் திருச்சபையின் தலைமை அலுவலகத்தார் அருணோதயம் என்னும் மாத இதழையும் வெளியிட்டு வருகின்றனர்.

மொழிநடை

மேலே சுட்டப்பட்ட இதழ்களுள் கட்டுரையாளர்க்கு 1870 முதல் வெளிவந்த ஜனவிநோதினி என்னும் இதழ்கள் சிலவும் தத்துவபோதினியின் சில இதழ்களும் கிடைத்தன. இவற்றை அடிப்படையாகக் கொண்டு முதல் காலகட்ட இதழ்களின் மொழிநடையைக் குறித்துச் சில கூறலாம்.

ஜனவிநோதினி

சென்னை மாகாண அரசின் கல்வித்துறையினர் 1870 முதல் 1890 வரை ஜனவிநோதினியை வெளியிட்டு வந்தனர். சென்னை

மாகாண ஆட்சிக்குட்பட்ட மக்களின் அறிவுவளர்ச்சிக்குத் துணைபுரிவதையே நோக்கமாகக் கொண்டு ஜனவிநோதினி வெளிவந்தது. ஒவ்வொரு இதழிலும் அறிவியல் கட்டுரைகள், வாழ்க்கை வரலாற்றுக் கட்டுரைகள், வரலாற்றுக் கட்டுரைகள், தொடர்கதைகள், அறிவுரைக் கொத்துகள், சிறுவர்களுக்குரிய கதைகள், உரையாடல் வடிவில் அமைந்த கட்டுரைகள், செய்திகள் ஆகியன இடம்பெற்றுள்ளன.

தலைப்பு - சொல் தேர்வு

ஒவ்வொரு கட்டுரைக்கும் அல்லது கதைகளுக்கும் தலைப்பிடும்போது, படிக்கும் வாசகர்களை ஈர்க்கும் வண்ணம் தலைப்பிற்குரிய சொல்லைத் தேர்ந்தெடுத்து ஜனவிநோதினி பயன்படுத்தியுள்ளது. எடுத்துக்காட்டாகச் *சொந்த வீடு* என்னும் கட்டுரையைச் சுட்டலாம். வருவாயைக் குடி முதலிய தீய வழிகளில் செலவிடுதலைக் கண்டித்தல், கணவனின் கடமை, குழந்தை வளர்ப்புமுறை முதலியனவற்றை வாசகர்களுக்கு உணர்த்தவே சொந்த வீடு என்ற கட்டுரை எழுதப்பட்டுள்ளது. ஆனால் அதன் தலைப்பும் முன்னுரையாகக் கூறப்பட்டுள்ள செய்திகளும் சொந்தமாக வீடு கட்டுதல் அல்லது தமக்கென வீடு ஒன்றைவாங்குதல் ஆகியவற்றின் முக்கியத்துவத்தைக் கூறுவது போல் அமைக்கப்பட்டுள்ளது. அதனை இங்கு எடுத்துக் காட்டலாம்.

> சொந்தவீடு என்று சொல்லும்போதே காதுக்கு ஓர்வித இன்பமும், மனதுக்கு ஓர்வித ஆனந்தமும் உண்டாகிறது. விவாக முதலிய மஹோச்சவங்களில் வீணை முதலான வாத்தியங்கள் எப்படி இனிப்பாயிருக்குமோ, அதைவிட ஆயிரமடங் கதிகமான மதுரத்தையும் களிப்பையும் அந்தச் சொல் தருகின்றது. கூரைவீடானாலுஞ் சரி, உப்பரிகைகள் அமைந்த மாளிகையானாலுஞ் சரி, எது மனதுக்கு ரம்மியமாயிருக்கிறதோ அதுவே சொந்த வீடு அதற்கு ஈடுஎதிர் இவ்வுலகத்தில் வேறொரு இடமில்லை: அதற்கு அதுவே நிகர்-பட்சிகள் தத்தம் கூடுகளை மேலாக எண்ணுகின்றன. அழிந்துபோய்ப் பாழடைந்திருக்கும் இடத்துக்குச் சமானமில்லை

> யென்று ஆந்தை நினைக்கிறது; எலியோ தன்னுடைய வளையைவிட வசதியான இடமே கிடையாதென்று அதனிடத்தில் மிகவும் அன்பு வைத்திருக்கிறது. வீட்டிலிருந்து வெளியிலே போகும்போது குத்திக்குத்தித் தள்ளினாலும் அசையாத வண்டிமாடு வீட்டுக்குத் திரும்பும்போது தானே சுறுசுறுப்பாய் ஓடிவரும். அவனவன் வீடு அவனவனுக்குச் சுகமானதென்பது எல்லோருக்கும் தெரிந்த விஷயம்[1]

என்று தொடங்கும் இக்கட்டுரை தொடர்ந்து கூறும் செய்திகளே, அவ்விதழ் வாசகர்களுக்கு உணர்ந்த விரும்பிய செய்திகளாகும். அவை,

> சொந்தவீட்டில் . கிடைக்காத சுகம் எங்கே கிடைக்கப் போகிறது. அநேகர் தங்களுடைய வீட்டில் பெண்பிள்ளை பெண்சாதி முதலியவர்களை விட்டுவிட்டு வெளியில் ஓரிடத்தில் கும்பல் சேர்ந்து பணச்செலவு பண்ணி வீம்புப் பேச்சுகள் பேசியிருந்து சௌக்கியம் அனுபவித்ததாக எண்ணிக்கொண்டு வருகிறார்களே; ஏன் அப்படி புத்திகெட்ட காரியம் செய்கிறார்களோ தெரிய வில்லை. அப்படி வீணாகப் பாழ்பண்ணுகிற பணத்தில் நான்கிலொரு பாகத்தைக் கொண்டு தங்களைப்பற்றிக் கொண்டிருக்கும் அன்பராகிய சொந்தவீட்டு மனுஷருக்குத் திருப்திபண்ணுவித்துத் தாங்களும் "இனிது வாழ்ந்திருக்கலாமே. இது ஒன்று மாத்திரமோ? சாதாரணமாய்த் தாழ்ந்த வேலைக் காரர்கள் தாங்கள் சிரமப்பட்டுச் சம்பாதிக்கும் பணத்தை வீட்டுக்குக் கொண்டுவந்து தேவையான காரியங்களுக்கு உபயோகப்படுத்தி இல்லாளோடு ஒத்து சௌக்கியம் அனுபவிக்காமல், சம்பாத்தியத் தைத் தாறுமாறாகக் கள், சாராய முதலிய பானங்களில் செலவழித்து மதிமயங்கி விழுந்து கிடக்கிறார்கள். அதனால் எத்தனையோ குடித்தனங்கள் சேதப்படுகின்றன. அப்படிப்பட்ட

துன்மார்க்கர்களை மூக்கோணத்தில் கட்டியடித்தாலும் தோஷமில்லை. அந்தப் புத்தியீனமாகக் காரியத்துக்கு இடமுண்டாகும்படி கட்கடைகளையும் சாராயக் கடைகளையும் திறந்து வைக்கும்படி துரைத்தனத்தார் விட்டுவைக்கிறது. யுக்தமொன்று விவேகமுள்ளவன் ஒருவனும் சொல்லான் இல்வாழ்க்கைக்கு விரோதமாய் நிற்கும் செய்கைகள் எல்லாவற்றையும் வேரோடு பிடுங்கி நாசமாக்க வேண்டியது.

வீட்டுக்குப் புருஷனாயிருக்கிறவன் இல்லறத்தைச் செவ்வையாக நடத்தப் பாடுபடவேண்டும். யாரொருவன் அக்கறையில்லாமல் தன் இல்லறத்தைக் கேடுகெட்ட ஸ்திதியில் வைத்திருக்கிறானோ அவனைவிடக் கொடியனும் பாபியும் ஒருவருமில்லை. சிறைச்சாலையைப்போல கண்டிப்பாயும் கடூராமாயு மிராமல், வீடு அன்புக்கு ஆதாரமாயும், இன்பத்துக்கு இருப்பிடமாயுமிருக்க வேண்டியது. புருஷனும் ஸ்திரீயும் மனதொத்து ஒருவருக்கொருவர் பிரியமாய் நடந்து கொள்ள வேண்டியது; அப்படி நடந்தால்தான் இருவர்க்கும் சௌக்கியமுண்டு. ஒரு வீட்டுக்கு உறுப்பாயிருக்கிறவர்கள் எல்லாரும் ஒருமிக்கக்கூடி உழைத்து வீட்டினுடைய மொத்த ஷேமத்தின் மேல் கண்ணாயிருக்க வேண்டியது; வீட்டுக்குத் தலைமையாக நிற்கும் புருஷன் அவ்வுறுப்புகளெல்லாம் தளராமல் பாதுகாத்து வரவேண்டியது. வீட்டிலே அதிகாரம் கடூரமாயிருக்கக் கூடாதென்றால், ஒழுங்காயிருக்கக் கூடாதென்றபடியல்ல; ஒழுங்கு தப்பினால் கேடு சம்பவிக்கும். வீட்டின் கடிவாளத்தை புருஷன் இழுத்துப் பிடிக்காவிட்டால், அந்த வீடு பள்ளத்தில் விழுந்து ஹதமாய்ப் போகும். சிடுசிடுப்பும் உதவாது, வழவழப்புங் கூடாது; நேசமும் உறுதியும் தக்கபடி கலந்துவரவேண்டியது. பிள்ளைகள் அடங்கியிராத வீடு வீடேயல்ல; அப்படிப்பட்ட வீட்டிலிருப்பதைப்

பார்க்கிலும் வனவாசம் பண்ணுவது நலம். பிள்ளைகளினால் சந்தோஷம் பெறும் தகப்பனே தகப்பன்; தகப்பனால் விர்த்தியடையும் பிள்ளைகளே பிள்ளைகள். பிள்ளைகளை சிறு வயதில் எப்படி நடத்திக்கொண்டு போகவேணுமோ அது எல்லாருக்குமே தெரியாது. சிலர் தங்களே தங்களுடைய பிள்ளைகளைத் தலைக்கேற விட்டுக்கொண்டு கெடுத்துப் போடுகிறார்கள். பாலியர்களை இஷ்டமான வழியில் போகும்படி விட்டுவிட்டால், அவர்கள் கடைசியில் தகப்பன் மேலேயே திரும்புவார்கள். அவசியமான போது பிள்ளைகளிடத்துப் பிரம்பு பிரயோகம் பண்ணாதவனுக்கு அந்தப் பிள்ளைகளே பிரம்பு ஆவார்களென்பதற்கு ஐயமில்லை. 'உன் பிள்ளையைத் திருத்து அவன் உனக்குத் தொந்தரவு கொடாமலிருப்பான். அன்றியும் ஈன்ற வயிற்றுக்கு களிப்பும் கொடுப்பான்' என்று விவேகிகளுக் கெல்லாம் விவேகியென்று பெயரெடுத்துப் பிரசித்திபெற்ற ஒருவர் சொல்லியிருக் கிறார். புதிதாக வரும் முரட்டுக் குதிரைகளைப் பழக்கித் திருப்புவது எப்படி அவசியமோ, அப்படியே சிறுபிள்ளைகளை நல்லவழியில் கொண்டு திருப்ப வேண்டும். இந்தக் கருத்தைப் பூரணமாகக் கொண்டு சிலர் தங்கள் பிள்ளைகள் செய்யும் ஒவ்வொரு அற்பக் குற்றத்தையுங் கடிந்து எப்போதும் அவர்களிடத்தில் மூஞ்சியை சிடுசிடுவென்று வைத்துக் கொள்ளுகிறார்கள்; இது பின்னையும் பிசகு; போனவழியில் விட்டு விட்டாலும் விடலாமேயன்றி, பொறுமையினாலும், உபாயத்தினாலும் ஆகவேண்டிய காரியம் கோபத்தினால் ஆகாது. கோபம் மிகுந்த கடுநெஞ்சுடையவனாய் ஒருவன் ஒரு காரியத்தைச் செய்யப்புகுந்தால், அது தப்பிப் போகாமல் கைகூடிவருவது அரிது. குதிரையின் வாய்க்குச் சேதம் வராமல் கடிவாளத்தை இழுத்துப் பிடிக்கவேண்டியது போல, துன்மார்க்ச் சிந்தையைக் கடியும்படியாகப் பிள்ளைகளைத் தகுந்தபடி

சிட்சைசெய்யவேண்டு மானாலும் அந்தச் சிட்சை மனவேதனைக்கு இடங்கொடாமலிருக்க வேண்டும்.

புருஷன் மாத்திரம் செவ்வையாய் நடந்து மனைவி தகுந்த நடத்தையுள்ளவளாயிராவிட்டால் இல்லறத்தில் சௌக்கியம் இராது. நம்முடைய கணவன், நம்முடைய வீடு, நம்முடைய வாசல் என்று அபிமானம் வைத்து, மனைவி வீட்டின் விஷயத்தில் அக்கறையாயிருந்து இல்லறத்தை நடத்துவதில் முதன்மையாக நிற்கவேண்டியது; கணவன் சொல்லைக் கடவாமல் அடக்கமும் நற்குண நற்செய்கையுடையவளாயிருக்க வேண்டும். அப்படியின்றி புருஷனோடு சண்டைபோட்டு அவனுக்கு மனவருத்தங் கொடுத்து வெளியே ஓட்டிவிடும் வாய் நீண்ட ஸ்திரி இல்லறத்துக்கு உதவமாட்டாள். புருஷன் வீட்டில் தங்காமல் வெளியே திரிவதற்குச் சாதாரணமாய் மனைவியின் உபத்திரமே காரணமாகிறது. கணவனைத் தெய்வம் போல் எண்ணி அவனை அன்பாகப் பாதுகாத்து வராமல் அவனை எப்போதும் சண்டைக்கழைத்துப் பழித்துக் கொண்டிருக்கும் ஸ்திரியோடுகூட வாழ்வதிலும் நரகத்தில் வசிப்பது நன்று.

நேசமுள்ள புருஷனும் அன்புள்ள ஸ்திரீயும் நல்ல பிள்ளைகளுங் கூடி வாழும் வீடு சுவர்க்கத்துக்குச் சமானமென்று விஷயங்களைப் பற்றிப் பேசுவது முதலான பெரிய காரியங்கள் இருக்கட்டும்; நம்முடைய வீட்டில் பெண்சாதி பிள்ளைகளோடு வாழ்வதைவிடச் சுகந் தருவது ஒன்றுமில்லை. சொந்தவீடு வாசல் இல்லாவிட்டால் இவ்வுலகம் நமக்கு ஒரு பெரிய நிர்ப்பந்தமான சிறைச்சாலை யாயிருக்குமே.[2]

குடும்ப உறுப்பினர்களாகிய கணவன், மனைவி, பிள்ளைகள் ஆகியோரின் பண்புகளும், செயல்களுமே அமைதியான குடும்ப வாழ்க்கையை அமைத்துத்தர வல்லன என்னும் செய்தியே மேற்சுட்டிய பகுதியில் வலியுறுத்துப் பெறும்

முதன்மைக் கருத்தாகும். இச்செய்தி படிப்போர் உள்ளத்தில் பசுமரத்தாணிபோலப் பதிவதற்கு இதழாசிரியர் தேர்வு செய்துள்ள *சொந்தவீடு* என்னும் தலைப்பே காரணமாக அமைகிறதெனலாம்.

வாசகர்களை முன்னிலைப்படுத்தும் தொடரமைப்பு (Readers Friendly Style)

'ஆகாயம் நீலமாயிருப்பதேன்' என்பது ஓர் அறிவியல் கட்டுரையின் தலைப்பாகும். வாசகர்களை முன்னிலைப்படுத்தி, அவர்களோடு நேருக்கு நேராகப் பேசுவதைப் போன்ற உணர்வை ஏற்படுத்தும் நடையில் இந்தக் கட்டுரை அமைக்கப்பட்டுள்ளது.

> உலகத்திலுள்ளோர் அனைவரும் ஆகாயத்தில் மிகவும் பளபளப்பான மாசற்ற நீலநிறத்தைக் கண்டு வியந்து கொண்டிருக்கிறார்கள். ஆயினும் எவராகிலும், எப்பொழுதாவது சிறிது நேரம் நிதானித்து இந்த விஷயத்தைப் பற்றி ஆலோசித்து ஆகாயம் நீலநிறமாயிருப் பதேன் என்று சிந்தித்துப் பார்த்தது உண்டா? ஆய்ந்து பார்த்தால் இதற்குக் காரணம் மிகவும் சுலபமானதுதான். ஆயினும் அதைத் தெரிந்து கொள்ள முயல்வதற்கு முன்னே ஒளியின் இயற்கையைப் பற்றி நாம் கொஞ்சம் தெரிந்து கொள்வது மிகவும் அவசியமானது[3]

என்று தொடங்கும் கட்டுரை நான்கு பக்க அளவில் அறிவியல் செய்திகளைப் படிப்படியாக விளக்கிவிட்டு தன்வயப்படும் தொடர் அமைப்புகளால் மீண்டும் வாசகர்களோடு ஒன்றிப்போவதை,

> இப்படிச் சூரியகிரணங்கள் சிவப்பும் நீலமுமாய் இரண்டாக நம்முடைய வாயுமண்டலத்தால் பிரிக்கப்படுகின்றன. சிவப்பு காந்தி நேராய் நம்முடைய கண்களண்டை வந்து குவிகின்றது. அதனால் நாம் சிவப்பு காந்தியை மட்டும் பெற்றுக்கொண்டு நீல காந்தியை இழந்து போகிறோம். ஆயினும் சந்திரனிடத்திற்கும், கிரகங்களிடத்திற்கும் போகிற காந்தியினின்றும் நீலநிறமானது நமது வாயுமண்டலத்தால் கவரப்பட்டு ஆகாயத்தில் நமக்கு நன்றாய்ப்

> புலப்படுகின்றது. ஆகாயம் நீலமாயிருப்பது இதனாலென்பது இப்போது நன்றாய்த் தெரிந்ததல்லவா[4]

என்று வரும் பகுதிகள் உணர்த்துகின்றன.

உரையாடல் நடை

கருத்தை எளிமையாக விளக்குவதற்கு உரையாடல் நடை உகந்தது; மேலும் உரையாடல் வடிவில் அமைக்கப்பட்டிருக்கும் செய்தியை இயல்பாகவே அனைவரும் விரும்பிப் படிப்பர். எனவே சிறந்த கருத்துக்களை உணர்த்த முற்படும்போது ஜனவிநோதினி உரையாடல் நடையைக் கையாண்டுள்ளதை அறியமுடிகிறது. இக்கருத்தை இனிவரும் உரையாடல் பகுதிகள் உணர்த்துகின்றன.

> அலெக்சாந்தர் மகாராஜன்: அடே! திரேஷியா நாட்டுக் கள்ளா, நீ செய்துவருகிற கொடுஞ் செய்கைகளைக் குறித்து வெகுசாய்க் கேள்விப் படுகிறேனே, அதென்ன? என்று வினாவ,
>
> கள்ளர்களதிபதி : நான் ஒரு திரேஷிய நாட்டான்; நான் ஒரு படை வீரன் என்றான்.
>
> அலெக்: என்னடா, நீ ஒரு படைவீரனா? அல்ல. நீ ஒரு கள்ளன். ஒரு கொள்ளைக்காரன். உயிர்வதை செய்ய அஞ்சாத பாவி! நான் உன் மனோதயிரியத்தை நன்கு மதிக்கக்கூடியதாயினும், உன் கொடிய அக்கிரமச் செய்கைகளையோ நான் வெறுத்து, உன்னைத் தண்டனை செய்யவேண்டும் என்றான்.
>
> கள்ள: நீ இவ்வளவு கூக்குரலிட்டுப் பேசுகிறதற்கு நான் செய்ததுதான் என்ன? என்றான்.
>
> அலெக்: நீ என்னுடைய ராஜாக்கினைக்கு எவ்வளவேனும் அஞ்சாதநெஞ்சனாய் நடக்க வில்லையா? குடித்தனக் காரரர்களைக் கலக்கி அவர்கள் மனம் நடுநடுங்கித் திரியும்படிச் செய்யவில்லையா? உன் அயலவர்களாகிய பசுங்குடிகளைக் கெடுத்து, அவர்கள் ஆஸ்திகளைச் சூறையாடவில்லையா? என்றான்.

கள்ள: ஓ அலெக்சாந்தரே! நான் உன் கையில் அகப்பட்டிருக்கிற கைதி; உன் வாய்ப்பேச்சை நான் கேட்கத்தான் வேண்டும். நீ செய்யும் ஆக்கினைக்கு உட்படத்தான் வேண்டும். என் மனமோ உனக்கு அடங்கவில்லை. நீ பேசுகிற நிந்தை மொழிகளுக்கு நான் பிரதிவசனங் கூறுவேனாயாயின், ஸ்வாதீன புருஷன்போல் மறுமொழி கூறுவேன் என்றான்.

அலெக்: ஸ்வாதீனன்போல் தாராளமாய்ப் பிரதியுத்தரஞ் சொல்லு; நான் யாரோடு சம்பாஷிக்க மனமிசைந்திருக்கிறேனோ அவனுடைய வாயை ஒருபோதும் பலாத்காரமாய் அடக்கேன் என்றான்.

கள்ள: அப்படியாயின் நீ கேட்ட வினாவுக்கு மறுவிடையாக நான் ஒரு வினா கேட்கிறேன். கேள்; நீ உன் ஜீவிய காலத்தை எவ்வாறு கழித்து வந்திருக்கிறாய்? என்றான்.

அலெக்: ஒரு சுத்தவீரனாகக் கழித்து வந்திருக்கிறேன். விஜயலஷ்மியைக் கேள். அவள் அதை உனக்குத் தெரிவிப்பாள். சுத்தவீரர்களுக்குள் நான் மகா சுத்தவீரன்; ஸ்வாதிபதிகளாகிய சக்கரவர்த்திகளுக்குள் நான் மகா சக்கரவர்த்தி; புஜபலபராக்கிரமர்களாகிய வெற்றிவேந்தர் களுக்குள் நான் மகா புஜபலபராக்கிரமங்கள் பொருந்திய வெற்றிவேந்தன் என்றான்.

கள்ள: நீ சொல்லியபிரகாரம் விஜயலஷ்மியானவள் என்னைக் குறித்தும் பேசாளோ? மிகு புஜபலபராக் கிரமர்களாகிய படைவீரர்களுக்கு என்னிலும் மிகு புஜபலபராக்கிரமங்கள் பொருந்தி படைத் தலைவ னொருவன் எக்காலத்திலாவது இருந்ததுண்டா? ஆயினும், இவ்வாறு பெருமை பேசுதலை வேண்டா வெறுப்பாய் விட்டிருக்கிறேன். சுலபத்தில் என்னை ஜெயித்தடக்குவது அரிதென்று உனக்கே நன்றாய்த் தெரியுமல்லவா? என்றான்.

அலெக்: அப்படிக்கெல்லாம் இருந்தபோதிலுந் தானென்ன? நீ ஒரு கள்ளன்தானே; அதிலும் நீ

மகா கொடிய நீசத்துரோகியாகிய கள்ளனல்லவா? என்றான்.

கள்ள: "வெற்றிவேந்தனென்பதுதானென்ன? நீயும் பூலோகமெங்கும் பேய்போலத் திரிந்தலைந்து, தேசங்களைக் கட்டி ஆளவேண்டுமென்கிற பேராசையால் பசுங்குடிகளுடைய சமாதானத்தைக் குலைத்து, பயிர்பச்சைகளை நாசஞ்செய்து, ஏதொரு நீதிநியாயமுமின்றிக் குடிகளைச் சங்காரஞ்செய்து, அவர்கள் ஆஸ்திகளைச் சூறையாடி, நாடு நகரங்களை அழித்துப் பாழாக்கவில்லையா? நான் நூறு பேரோடு கூடி ஒரு சிறுநாட்டிற் புகுந்து கொடுமைகள் செய்தேன். நீயோ, ஒருலட்சம் சேனைகளோடு கூடிப் பலபல தேசங்களிற் புகுந்து, பலபல கொடுமைகள் செய்துவந்திருக்கிறாய். நான் ஒன்றியொற்றையாய் வந்தவர்களைப் பிடித்துப் பறிமுதல் செய்துவந்தேன். நீயோ அரசர்களையும் பிரபுக்களையும் பிடித்து, அவர்கள் நாடு நகரங்களைப் பறித்துக்கொண்டு, அவர்களை நாசஞ்செய்து வந்திருக்கிறாய். நான் சில சிற்றூர்களை அக்கினிக்கிரையக்கிப் பாழ்செய்தேன். நீயோ பூமியிலுள்ள மகா செழிப்பான ராஜ்ஜியங் களையும் நகரங்களையும் அழித்துப் பாழாக்கி வந்திருக்கிறாய். நீ ஒரு ராஜாவாகப் பிறந்ததனாலும், நான் ஒரு குடித்தனக் காரனாகப் பிறந்ததனாலும் உனக்கும் எனக்கும் வித்தியாச மென்ன? நீ என்னைவிட மகாப்பிரபலமான கள்ளனானாய் என்பதே எனக்கும் உனக்கும் உள்ள வித்தியாசம் என்றான்.

அலெக்: நான் ஒரு அரசனைப் போலப் போய் பிடுங்கி, ஒரு அரசனைப் போல நன்கொடையளித்து வந்திருக் கிறேன். ராஜ்ஜியங்களை உண்டு பண்ணியிருக் கிறேன். கல்வி வித்தைகளும் வியாபார முயற்சிகளும் கலைஞான சாஸ்திர அறிவுகளும் தேசங்கடோறும் விருத்தியடையச் செய்து வந்திருக்கிறேன் என்றான்.

> கள்ள: நானும் தனவான்களிடத்தில் பிடுங்கிய பொருள்களை ஏழை எளியவர்களுக்கு நன்கொடையாகக் கொடுத்து வந்திருக்கிறேன். மகா துஷ்டர்களாகிய கள்ளர் கூட்டத்தாருக்குள்ளே நல்லொழுக்க ஆசார விருத்தி உண்டுபண்ணி வந்திருக்கிறேன். ஒடுக்கப்பட்டவர்களைப் பாதுகாத்து வந்திருக்கிறேன். நீ பேசுகிற கலைஞான சாஸ்திர அறிவுகளிலும் எனக்குக் கொஞ்சந் தெரியும். ஆயினும், நீயும் நானும் பூலோகத்தாருக்குச் செய்துவந்திருக்கிற கொடுமைகளுக்கு நிவிர்த்தி உண்டு பண்ணுதற்கு உனக்கும் சக்தியில்லை. எனக்கும் சக்தியில்லை என்று நம்புகிறேன் என்றான்.
>
> அலெக்: இவ்வசனங்கேட்டு ஆழ்ந்த மனவுணர்ச்சியுடையோனாய்த் தன் பக்கத்தில் நின்ற மந்திரிகள் படைத்தலைவர்கள் முதலானவர்களைப் பார்த்து எல்லாரும் வெளியே போங்கள்; இவன் கைகளைக் கட்டியிருக்கிற சங்கிலிகளை விலக்கிவிடுங்கள். இவன் கால்களில் போட்டிருக்கிற விலங்குகளைத் தறித்துப் போடுங்கள். நீயும் நானும் சரி சரியொத்தவர்களா? அலெக்சாந்தரும் ஒரு கள்ளனா இதை நான் சற்று யோசித்துப் பார்க்கவேண்டும் என்றான்"[5]

பிற நாட்டைக் கவர்தல் வேண்டும் என்னும் பேராசையால் படையெடுக்கும் மன்னன் செயலும், தன் உழைப்பால் வராத பிறர்பொருளைத் திருடும் திருடனின் செயலும் ஒன்றே என்னும் கருத்தை மேலே சுட்டிய உரையாடல் நடைவழி எளிதில் ஜனவிநோதினி புலப்படுத்துகின்றது.

நேரடிக்கருத்துப் புலப்பாட்டு நடை

தம் வாசகர்களுக்கு ஜனவிநோதினி புலப்படுத்தக் கருதிய கருத்துக்களை நேரடியாகத் தெரிவிக்கும் எளிய நடையைக் கையாண்டுள்ளது. வருணனைக்கு இடங்கொடாமல், சுற்றிவளைத்துக் கூறிப் பக்கத்தை வளர்க்காமல் ஆற்றொழுக்கான நடையில் எளிய சொற்களில் தம் கருத்தைப் புலப்படுத்தும் போக்குக்குச் சான்றாக,

புதுவருஷம் ஆரம்பிக்கும்போதெல்லாம் புதிதாய் ஏதாவது ஒரு நல்ல காரியஞ்செய்து முடிக்க வேண்டுமென்கிற நல்ல பிரதிக்கினை கொள்வது மிக நலமென்று பல சிறுவர்கள் நினைப்பதுண்டு. நாம் புதிய புத்தகம் படித்து நல்வழியில் நடக்கப் போகிறோமல்லவா என்று அவர்கள் சொல்வார்கள்.

ஆயினும் அப்படி ஒரு நல்ல தீர்மானங்கொண்டால் அவ்வளவோடே தாங்கள் சகல காரியத்தையும் சாதித்துவிட்டதாக அநேகர் எண்ணுகிறார்கள். முதலில் ஒரு பிரதிக்கினை செய்துகொள்வது வேறு; பிறகு அந்தப் பிரதிக்கினையை நிறைவேற்றுவது வேறு. புதுப்புத்தகத்தைப் படித்து அதிலுள்ள விஷயங்களைத் தெரிந்துகொள்ளாமல் அழகாய்ப் புத்தகத்தைக் கையில் எடுத்துவைத்துக் கொண்டிருப்பதில் ஏதாவது நன்மை உண்டோ? முதலில் நாம் ஒரு தீர்மானஞ்செய்து பின்பு அதை நிறைவேற்றாமல் விடுவதைவிடச் செய்யாமலிருப்பதே நலம். பின்பு அந்தப் பிரதிக்கினை நிறைவேற்றி னாலும் நிறைவேறாமற்போனாலும், முதலில் ஒரு நல்ல பிரதிக்கினை செய்துகொண்டே புதுவருஷம் ஆரம்பிக்க வேண்டுமென்று கருதுகிறவர்கள் அதனால் என்ன பயன்பெறக் காத்திருக்கிறார்களோ?

தினந்தோறும், காலையில் மிகவும் சோம்பலாய் விடிந்து யாமம் வரையில் தூங்குகிற கெட்டவழக்கமுள்ள ஒருவன் புதுவருஷம் ஆரம்பித்தபோது தன் தந்தையைப் பார்த்து, ஐயா! நான் இந்த வருஷம் முதல் மிகவும் சுறுசுறுப்புடன் சிற்றஞ் சிறுகாலேயெழுந்து வேலைகளை நன்றாய் நடத்தத் தீர்மானித்திருக்கிறேன் என்று சொல்லி அவ்வளவோடு திருப்தியடைந்தான். அந்தப்படி ஒருநாளாவது நடத்தினானா? இல்லை. மறுநாள் காலை முதல் முன்னிலும் நாலு நாழிகை அதிகமாகவே தூங்க ஆரம்பித்தான்.

இப்படியெல்லாம் நேரிடுவதற்குக் காரணமென்ன வெனில், நாம் இப்போது ஆரம்பிக்கிற காரியம்

செம்மையாய் முடியுமா முடியாதாவென்பதை நன்றாய்க் கருத்துடனே ஆலோசித்துப் பாராமல் திடீரென்று ஒரு பிரதிக்கினை செய்வதனால் இப்படியாயிருக்கின்றது; இக்காரியம் நம்மால் செய்து முடிக்கக்கூடும் என்று நம்முடைய மனதுக்குத் தைரியமாய்த் தோன்றினாலொழிய நாம் ஒன்றையும் தீர்மானிப்பது தகுதியன்று.

புதுவருஷத்தைத் தொடங்க வேண்டிய விதம் எப்படிப்பட்டது தெரியுமா? நாம் இவ்வளவு காலத்தையும் நல்ல வழியில் செலுத்தாமலே வீணாய்க் கழித்துவிட்டோமே, நமது மனதோ மிகவும் கெட்டதாயிருக்கிறது; அதனுடைய கெட்ட எண்ணம் இன்னும் நம்மைக் கெட்டவழியிலேயே செலுத்தக் காத்திருக்கிறது; நாம் எச்சரிக்கையின்றிக் கொஞ்சம் ஏமாந்திருப்போமானால் அது நம்மைப் படுகுழியில் தள்ளிவிடும்; ஆதலால், கடவுள் நம்மை இவ்வுலகத்தில் பிறப்பித்தது, நாம் நற்காரியங்களைச் செய்து நாளுக்குநாள் நல்வழியில் விருத்தியடைந்து அவருடைய பொற்றாமரையடியைப் பெறுவதற்காகவே யென்பதை நினைத்து, அதற்கு வேண்டிய நற்செய்கைகளைச் செய்யத் தீர்மானித்து அதை அவ்வாறே நிறைவேற்ற வேண்டும்.

இவ்வளவு காரியமும் நம்முடைய முயற்சியாலேயே செய்து முடியுமா? நாம் எக்காரியம் செய்ய ஆரம்பித்தாலும் நம்முடைய மதிக்குறைவால் அதற்கு வேண்டிய மனவுறுதி தவறிப்போவது மாத்திரமேயன்றி இன்னும் பல இடையூறுகளும் மத்தியில் சம்பவிக்குமாதலின் அவையொன்றும் இல்லாமல் நாம் செம்மையாய் விருத்தியடையும் பொருட்டுக் கடவுளை நாள்தோறும் தொழுது வணங்கி- நம்முடைய நல்லெண்ணங்களும் நற்செய்கைகளும் மேன்மேலும் அதிகரிக்கும்படி அவரைப் பிரார்த்தித்துக்கடவோம். இப்படிக் கடவுளைத் தொழுது மனவுறுதியோடு புது

> வருஷத்தைத் துவக்குவோமானால், நன்மை தீமைகளை நன்றாய்ப் பகுத்தறிந்து வாழ்நாளை நல்வழியாய்ப் போக்கிச் சவுக்கியம் அடைய வல்லவர்களாவோம்[6]

என்னும் பகுதிகளால் அறியலாம்.

இலக்கிய நடை

செய்யுட்களுக்கு விளக்கவுரை அல்லது பொழிப்புரை எழுதும் கட்டுரைகளில் இலக்கியநடை பயன்படுத்தப் பெற்றுள்ளது.

பருவம் எனக்கு பதினேழானபொழுது

(மணஞ் செய்வதற்குமுன் தனக்கும் தன் நாயகனுக்கும் இருந்த நிலையை நினைத்து ஒருத்தி சொன்ன பாட்டின் பொழிப்புரை)

> பருவம் எனக்கு ஆகப் பதினேழு, உமக்கு இருபத்துமூன்றில் பூலோக வாழ்விற்கு இருந்த வைபவம் ஆ! ஆ!! அன்றுள்ளபடி இன்றளவும் என் நினைவினின்று நீங்காதிருக்கின்றது!
>
> இவ்வுலகு இப்பொழுதிலும் அப்பொழுது என் கண்ணுக்கு மிக இனிதாயிருந்தது. நாம் செய்துகொண்ட பிரமாணத்தைச் செவிகூர்ந்து கேட்ட வெய்ய மேல்காற்று எத்தனை மிருதுவாக வீசியது! கண்டுபேசக் குறித்திருந்த மரத்தின்கீழ் கன இருளில் காதோதி வாக்குத்தத்தஞ் செய்தோம். அம்மம்ம! அப்பொழுது பருவம் எனக்கு ஆகப் பதினேழு, உமக்கு இருபத்துமூன்று! ஆற்றின் அலை மெல்லெனத் தத்திப்புரண்டு சலசலவென்று ஒலித்த ஒலி மனதிற்கினிதென்று உவக்கும் கீர்த்தனை பாடியது போலிருந்தது; பழைய கல்வாரதியில் நின்று நாம் பார்த்த கண்ணுக்கு இவ்வையகமெல்லாம் யௌவனமாயிருந்தது. அங்கே நின்று ஒரு முத்தம் தந்து என் உள்ளம் கவர்ந்தீரே; ஆ ஆ! அப்பொழுது பருவம் எனக்கு மெத்தவல்ல பதினேழு; உமக்கு இருபத்துமூன்று!

> தொன்றுதொட்டுள்ள பெருங்குன்றுகள் வெகு தொலைவில் தெரிந்தன. வானத்தில் நஷத்திரங்கள் பிரகாசித்தன; இரா முப்பது நாழிகையும் சிறந்து இனிதாகி, ஆகாயம் அன்பு கூர்ந்திருந்தது. பதினேழு வயதில் நானும் நீரும் இருந்த இருப்பை இருபத்து மூன்று வயசில் நீர் பரிவுகூர்ந்து நினைப்பதுண்டா? இதைக் குறித்து என் மனதிற் பலகால் விருப்புடன் வியப்புண்டாகின்றது.
>
> நாம் இவ்வண்ணம் கொண்டாடிச் சுகித்து வெகுநாட் செல்லவில்லை; செல்லாதிருந்தும், நான் மனம் நொந்து வருந்தி அழுத கண்ணருவி பெருகி, நீர் உள்ளன்பு உருகி முத்திசெய்த முகம் நனைந்தது. முன் வாழ்வை முழுதும் மறந்திடுவேனாகில், ஆ! எத்தனை பாக்கியம்! எனது ஆசைக்கண்ணாளரே நீர் பத்தினி விரதம் தப்பியதேன்? பருவம் எனக்குப் பதினேழு, உமக்கு இருபத்துமூன்று கழிந்தபின்.. என் கண்ணுக்கு இவ்வுலகம் கோலம் மாறியது!
>
> ஆற்றங்கரை நெடுக இராக்காற்று வீசும்பொழுது என் இருதயம் அம்மதுர வாக்குப் பிறந்த சுபமுகூர்த்தத்தை விரும்பி வருந்தி நினைக்கின்றது. வருந்தினும் அந்த நினைவு எனக்கு இனிதாயிருக் கின்றது. ஆ கெட்டேன்! அவ்வாழ்வு இனி ஏது! பின்னும் ஒருமுறை பருவம் எனக்குப் பதினேழு. உமக்கு இருபத்துமூன்று வருமோ!"[7]

ஜனவிநோதினியின் இலக்கிய நடைக்கு மேலே காட்டியவை சான்றுகளாகும்.

மணிப்பிரவாள நடை

கட்டுரைகளிலும் கதைகளிலும் மிகுதியான அளவில் மணிப்பிரவாள நடையை ஜனவிநோதினி பயன்படுத்தவில்லை. வடசொற்களைக் கலந்தே எழுத இயலும் என்ற உள்ளடக்கங்களைக் கொண்டுள்ள கட்டுரைகளிலும் நாட்டு நடப்புகளைத் தெரிவிக்கும் சமாசாரம் என்னும் செய்திப் பகுதிகளிலும் வடசொற்கள் தேவைக்கேற்பப் பயன்படுத்தப் பட்டுள்ளன.

'ஜீவதசையையும் ஆயுள் பிரமாணத்தையும் பற்றி' என்னும் கட்டுரையை வடசொற் கலந்த கட்டுரைக்கு எடுத்துக்காட்டாக கூறலாம்.

> தேஹதத்துவ விசாரம் செய்கிறவர்கள் மனுஷியனுடைய ஜீவதசையை பைண்டம், பால்லியம், கௌமாரம், வார்த்தகம் என்று நான்காகப் பாகித்திருக்கிறார்கள். அவற்றுள் பிரதம தசையானது ஜநநகாலம் வரையிலும், இரண்டாவது யௌவனம் உண்டாகும் வரையிலும், மூன்றாவது மாதர்கள் மக்களைப் பெறுவதற்கு காலாவதியாகிய 45-ம் வயது வரையிலும், நான்காவது 100 அல்லது அதற்கு அதிகப்பட்ட வயது வரையிலும் உள்ளது.
>
> சமுதாயத்தில் ஜீவதசையை இவ்வாறு பகுத்திருந்தாலும் ஒவ்வொருவனது உயிர் வாழ்க்கையைப் பார்க்குமிடத்தில் உடம்பிலிருந்து உயிர்நீங்குதல் இந்த ஷணமென்று நிச்சயிப்பது அசாத்தியம். ஜீவித கால நிபந்தனை அவனுடைய ஸ்திதிக்கும் யத்தனங்களுக்கும் பிரகிருதி தர்மங்களுக்கும் தக்கபடி பிரதி வருஷமும் மாறிக்கொண்டேயிருக்கும். குழந்தைப் பருவத்திலும் விருத்தாப்பியத்திலும் உயிருக்கு அபாயம் மிகுதியாய் நேரிடும். தேஹவளர்ச்சியும் மனோதிடமும் விசேஷமாய் விருத்தியாகிற யெவனதசையில் மரணாதி அவஸ்தை அவ்வளவு நேரிடாது. ஒருவனுக்குப் பிறந்தது முதல் வயது ஏறஏற 15 வயது ஆகுமளவும் ஆயுள்ப்பலம் திடப்பட்டுக் கொண்டேயிருக்கும். அதற்குமேல் ஏறக்குறைய 56 வயதாகிற வரையில் படிப்படி மந்தகதியாய் குறைந்து அதன்பின் துவரிதமாக ஷீணித்துப் போகும்.[8]

இக்கட்டுரையில் வடசொற்கள் மிகுந்த அளவிலும் பயன்படுத்தப் பட்டுள்ளன.

இலக்கணப் பிழைகள்

தொடர்ப் பிழைகளும் எழுத்துப் பிழைகளும், கட்டுரை களிலும் தலையங்களிலும் இடம்பெற்றுள்ளன.

எடுத்துக்.காட்டாக,

'பஞ்சம் நேரிடாமல் போகாது' என்பது
'பஞ்சம் நெரிடாமற் போகாது'

என்றும்,

'ஆயுள்' என்பது 'ஆயுர்'

என்றே பல இடங்களிலும் ஆளப்பட்டுள்ளன.

ஆசிரியர் உரையிலேயே தொடர்ப்பிழைகள் உள்ளன.

> இந்த ஜனவிநோதினி இதுவரையிலுண்டான தமிழ்ப்பத்திரிக்கைகளைக் காட்டிலும் மிக்க நயமாயிருப்பது போல் *யாவர்க்கும்* அங்கீகரிக்கத் தக்கதாயும் இருக்கலாமென்று எண்ணுகிறோம். ஆகவே தமிழ்நாட்டிலுள்ள ஜமீந்தார்கள், வித்தியாசாலைத் தலைவர்கள், இன்னும் ஜனங்களுக்குள் இதைப் பிரசுரஞ் செய்ய வேண்டுமென்று கருத்துகொண்ட புத்திசாலிகள் இவர்கள் இப்பத்திரிக்கையை ஆதரித்துப் பெற்றுக் கொள்ளும்படி கோருகிறோம். இப்பத்திரிக்கையில் எழுதும் விஷயங்கள் ஒரு மதத்திற்கும் சம்பந்தப் படாமலிருக்கக் காணலாம்.'

ஆசிரியர் உரையாக அமைந்த இந்தப் பகுதியில் முதல் தொடர், இந்த 'ஜனவிநோதினி இதுவரையிலுண்டான தமிழ்ப் பத்திரிக்கைகளைப் பார்க்கிலும் மிக்க நயமாயிருப்பது போல யாவர்க்கும் அங்கீகரிக்கத்தக்கதாயும் இருக்கலாமென்று எண்ணுகிறோம்' என்பதும் 'யாவரும் அங்கீகரிக்கத்தக்கதாயும்' என்று அமைக்கப்பட்டிருக்க வேண்டும். அதுபோலவே இறுதி அடியாகிய, 'இப்பத்திரிகையில் எழுதும் விஷயங்கள் ஒரு மதத்திற்கும் சம்பந்தப்படாமலிருக்கக் காணலாம்' என்னும் தொடர், 'இப்பத்திரிகை எழுதும் விஷயம் என்று அமைந்திருந்தால்' தொடர்ப் பிழையற்றதாக அமைந்திருக்கும்; அல்லது இப்பத்திரிக்கையில் எழுதப்படும் விஷயங்கள் என்று அமைதல் வேண்டும்.

> நடையென்பது நமது அபிப்ராயங்களுக்கு உடையாகும். நமது சரீரம் எவ்வளவு அழகாய் இருப்பினும் நாம் நல்ல உடையில்லாமல் சுந்தல்

> கிழிசல்களுடன் வெளிப்படுவோமானால் எவ்விதமாய் ஜனங்களின் மனதைக் கவர மாட்டோமோ அதுபோலவே நாம் எழுதும் விஷயங்கள் எவ்வளவு நியாயமாயும் உண்மையாயு மிருந்த போதிலும் நல்ல நடையில் எழுதப் பட்டிராவிடின் படிப்பவர்கள் மனதைக் கவரவே U ôh P ô[10]

என்பது இதழியல் மொழிநடைக்கு ஜனவிநோதினி தரும் விளக்கமாகும். இவ்விளக்கத்திற்கேற்ப ஜனவிநோதினியின் படைப்புகள் அமைந்துள்ளன.

தத்துவபோதினி

1864-முதல் சென்னை வேதசாமாஜத்தாரால் வெளியிடப் பெற்றதே தத்துவபோதினி என்னும் இதழாகும். இவ்விதழ் தன் நடை குறித்து,

> இந்தப் பத்திரிகையின் முக்கிய உத்தேசியம் ஞானவிருத்தியேயல்லாமல் சமாசாராப் பிரவசனமல்ல. நமது தேச பாஷைகளிலும் நூற்களெல்லாம் முக்கியமாய் செய்யுளாயிருப்பதால் சீரான வசனநடை இனிமேல் ஏற்பட வேண்டியதாயிருக்கிறது. சுத்தத் தமிழாயெழுதினால் பலருக்கு அர்த்தமாகாது. சமஸ்கிருதத்தை விசேஷமாய்க் கலந்தால் பலருக்கு நன்றாய்த் தெரியாது. அல்லாமலும் இந்தப் பத்திரிகையினால் வெளிப்படுத்த நிச்சயித்திருக்கும் விஷயங்களின் கவுரவத்தை யோசிக்கையில் முற்றும் கடைத்தெருத் தமிழாயெழுதுவதும் சரியாயிராது. சூரியனுடைய ஒளியினால் சந்திரன் பிரகாசிப்பது போல தாய்ப்பாஷையாகிய பரிமளிக்க மாட்டாதென்பதை எல்லோரும் ஒத்துக்கொள்வார்கள்"

என்பதாகக் குறிப்பிடுகிறது. இதிலிருந்து வடமொழியின்பால் இவ்விதழ் கொண்டிருக்கும் பற்று புலப்படும். இதனை மெய்ப்பிக்கும் வண்ணமாகவே, தத்துவபோதினியின் மொழிநடை இருந்ததை,

கனவான்களே! இந்தப் பத்திரிகையை எழுதத் தொடங்கியதால் எங்களுடைய உத்தேசியம் இன்னதென்று உங்களுக்குத் தெரியாத பக்ஷத்தில் எப்போதாவது எங்கள் கருத்தை நீங்கள் பிசகாய் கிரகிக்கவும், உங்கள் மனம் நோகவும், இடமுண்டாகலாமாகையால், நாங்களின்னா ரென்றும் நமக்குள்ளே சம்பந்தமிப்படிப்பட்ட தென்றும் எங்கள் உத்தேசம் இன்னதென்றும் முன்னதாய்ச் சொல்லுகிறோம்.

முதலில் நாங்கள் யாரெனில், உங்கள் பிரும்மத்தையே எங்கள் தெய்வமாயும், உங்கள் வேதத்தையே எங்கள் சுருதியாயும், உங்கள் தேசத்தையே எங்கள் தாயாகவும், உங்கள் வேஷபாஷாதிகளையே எங்கள் சுவரூப சின்னங்களாயும் பெற்று அவைகளின் கவுரவத்தைக் காக்கவேண்டியதை எங்கள் கடமையாக நம்பி அதற்குத் தக்கபடி நடக்கவும் நடப்பிக்கவும் பிரதிக்னையைச் செய்துகொண்டவர்களே நாங்கள்.

நமக்குள்ள சம்பந்தம் யாதெனில் நாங்கள் உங்களுடைய அன்புகூர்ந்த சகோதரரும் சிநேகிதருமேயன்றி, அன்னிய நாட்டிலிருந்து வந்த பகைவருமல்ல, பொறாமை கொண்டவருமல்ல.

எங்களுக்குத் தேசியமோவெனில் நமக்கெல்லாம் பொதுவாயுள்ள பழிப்புகளையும், குறைகளையும் நீக்குவதும் பொதுப்பிரயோஜனங்களை விருத்தி செய்வதுமே யன்றி உங்களைத் தனித்துச் சிந்திக்க வேண்டுமென்பதாவது, எங்களைச் சிறப்பித்துக் கொள்ள வேண்டுமென்பதாவதல்ல.

இப்படிச் செய்யத் தொடங்குவதில் நாங்கள் சர்வாக்கியர்களென்றாவது, நீங்களெல்லோரும் முற்றும் அஞ்ஞானிகளென்றாவது நாங்கள் நினைக்கவுமில்லை; நினைத்தாலும் நீங்கள் கொள்ளவும் கூடாது!

தைத்ரீய உபநிஷத்தில் உபதேசக்கிரமத்தில், நியாயம், சத்தியம், தியானம், பொறுமை, சாந்தம், அதிதி பூஜை, நமது கடமைகள் முதலிய சகல தர்மங்களையும் நாமும் அனுஷ்டித்து பிறருக்குத் தெரியச் செய்ய வேண்டுமென்று சாமானியமாய் எல்லார் விஷயத்திலும் விதித்திருக்கின்றமையால் இப்படி விதியாய் வந்த கடமைகளைச் செலுத்த பொருட்டும், நமது தேசத்தார் ஷேமத்திலும் கீர்த்தியிலும் ஞானத்திலும் சன்மார்க்கத்திலும் விருத்தியடைய வேண்டுமென்கிற கருத்துக் கொண்டும், இந்தப் பிரசித்தப் பத்திரிகையை யேற்படுத்தினோம்.

நமது தேசத்தாரிகள் பல வகுப்புகளில், ஒன்றைச் சிறப்பித்தவாறு, மற்றொன்றைப் பழித்தாவது, அக்கிரமாயும் வீண் துவேஷ விருத்திக்கு ஹேதுவாயும் உள்ள விஷயங்களை அடியுடன் தொடாமலிருக்க நாங்கள் உறுதியாய் நிச்சயித்துக் கொண்ட போதிலும், அனைவருக்கும் பொதுவான குற்றங்களையும் குறைகளையும் குறிக்கச் சமயானுகாரமாகப் பிரஸ்தாபிக்கமலிருக்கும் பஷத்தில் எங்களுடைய உத்தேசியம் நிறைவேற மாட்டாதாகையால், எப்போதாவது இவ்விதப் பிரஸ்தாபம் வரும்போது, நமது தேசத்தாரனைவரும் சொல்வழுக்களைக் கவனியாது, எங்கள் கோரிக்கையை மனதிற்கொண்டு மன்னிக்க வேண்டுமென வெகுதாழ்வாய்க் கேட்டுக் கொள்கின்றோம்.

நாங்கள் அன்னிய தேசத்தாராயாவது, அன்னிய மதஸ்தாராயாவது இருந்து உங்களை நிந்திக்கக் கருதியாவது, அல்லது தேசத்திலும் மதத்திலும் பேதப்படாமலேயிருந்தது, ஆத்ம ஸ்திதியையும் பரநிந்தனையையும் பொருட்டாவது நாங்கள் பிரசங்கிக்கும் பஷத்தில் நீங்களும் மன்னிக்க மாட்டீர்கள்; நாங்களும் மன்னிக்கும்படி கேட்கக் கூடாது.

நம்முடைய குற்றங்களை நாமே எடுத்துக்காட்டிக் கொள்ளக் கூடாதென்னும் பஷத்தில், நாம் ஒருநாளும் சீரடைவோமென்று கோர வேண்டியதில்லை யாகையால், நீங்கள் இதற் கெல்லாம் மனம் நோகாது ஆயுக்கத்தை தியானித்து, யுக்தத்தை அனுசரித்து, சீர்திருத்துவீர்க ளென்று நம்புகிறோம்.

இந்தப் பத்திரிகையில் சகல சமயத்தாருக்கும் பொதுவான விதமாக நம்முடைய வேதங்களின் தாத்பரியங்களைக் கொஞ்சம் கொஞ்சமாக வெளியிட நாங்கள் நிச்சயித்தோம்.

வேதத்தை பிராமணாள் தவிர மற்றவர்கள் உச்சரிக்கக் கூடாதென்பதற்கு வேதத்தில் பிரமாணமுண்டோ இல்லையோ வென்பதை இப்பொழுது விசாரிக்க வேண்டிய அவசியமில்லை.

அப்படி நிஷேதமிருப்பதாய் சாதாரணமாய்க் கொள்ளப் பட்டிருக்கின்றமையால், அப்படியே வைத்துக்கொண்ட போதிலும், வேதார்த்தங்களைக் கூட இதராள் அறியக்கூடாதென்கிற விதியுமில்லை. அறியலா மென்பதற்குப் பிரமாணமும் உண்டு! சடகோபர் பாடிய திருவாய்மொழியென்னும் தமிழ்ப் பிரபந்தம் தமிழ் வேதமென்றும், அது ஸ்திரி சூத்திரர்களுக்காகவே உண்டானதாயும் எல்லோராலும் ஒத்துக்கொள்ளப் பட்டிருக் கின்றதல்லவா?

இதெப்படியிருந்த போதிலும், காலதேச வர்த்தமானங்களை யனுசரிக்க வேண்டியது அவசியமென்று எல்லோரும் ஒத்துக்கொள்ளத் தக்கதென்பதற்கு ஒரு உதாரணம் சொல்லுகிறோம். பூர்வத்தில் வைஷ்ணவாசாரியார்களில் ஓராம் வழியாய் ஆசாரிய புங்கஸ்த்துலம் வந்து கொண்டிருக்கையில், அந்த மார்க்கத்தையே அனுசரிப் பதினால் மதத்துக்கே லோபம் வருமென்று பயந்து வைஷ்ணவ மதத்தோராகிய ராமாநுஜ

> பாஷியகாரர் தான் ஆசாரியாருக்குச் செய்துகொடுத்த பிரமாணத்தையும் கவனிக்காது பொது நன்மையே யோசித்து கோபுரத்தின் மீதேறி அனைவருக்கும் தெரியும்படியாக கோஷித்தாரென்று பெரியோர் சொல்லக் கேட்டிருக் கின்றனமல்லவா?
>
> நம்முடைய மதத்தின் பிரிவுகளிலொன்றுக்கு மாத்திரம் லோபம் வருமென்கிற பயத்தினால் இவ்வளவு செய்ததைச் சரியென ஒத்துக்கொள்ளும் நாம் நம்முடைய மதம் முழுமையும் கூண்டோடு கைலாசத்துக்குச் செலுத்த அன்னிய மதத்தார் பலவாறாய் முயற்சி செய்யும் இக்காலத்தில், நம்முடைய மதத்தை நிலைநிறுத்துவதற்காக என்னதான் செய்யலாகாது![12]

முடிவுரை

ஜன விநோதினி, கட்டுரைகளின் தலைப்பு, கதைகளின் தலைப்பு ஆகியனவற்றிற்குச் சொற்களைத் தேர்வு செய்யும்போது மிகுந்த கவனம் செலுத்தியுள்ளது. தலைப்பே கட்டுரையைப் படிக்கும் ஆர்வத்தைத் தூண்டுகிறத. எளிய ஆற்றொழுக்கான நடையைப் பின்பற்றியுள்ளது. மிகுந்த அளவில் வடசொற்கள் ஆளப்படவில்லை. படிப்போரை முன்னிலைப் படுத்தும் அகவயத்தன்மை அமைந்த தொடர்களில் அறிவியல் கட்டுரைகளை ஜனவிநோதினி வெளியிட்டுள்ளது.

ஜன விநோதினி தொடங்கப்பெற்று வெளிவந்த சில ஆண்டுகள் வரை அதன் தலைப்பு 'ஜன விநோதினி' என்றும், அதன்பின்னர் 'ஜந விநோதிநி' என்றும் அச்சிடப்பெற்றுள்ளது. தொடக்கத்தில் 'ன' பயன்படுத்தப்பெற்று, பின்னர் 'ந' பயன்படுத்தப் பெற்றமைக்குரிய காரணங்கள் எவையும் அவ்விதழின் ஆசிரியர் குழுவினரால் கூறப்பெறவில்லை.

தத்துவபோதினி, "சமஸ்கிருதமே தேச பாஷைகளின் தாய்" என்ற தவறான மொழிக்கொள்கையைக் கொண்டிருந்தமையாலும் வேத சமயக் கருத்துகளைப் பரப்பவதையும் விளக்குவதையுமே தன் நோக்கமாகக் கொண்டிருந்தமையாலும், அதன் மொழிநடையில் வடமொழியின் கலப்பும் ஆதிக்கமும் மிகுதியாகவே காணப் பெறுகின்றன.

குறிப்புகள்

1. ஜநவிநோதிநி, புஸ்த. IX, இல. 1,2 ஜனவரி 1878 பக். 106-107
2. மேலது, பக். 108-110
3. ஜநவிநோதிநி, புஸ்த. X, இல. 1, ஜனவரி 1879, ப. 9
4. மேலது, ப. 13
5. ஜநவிநோதிநி, புஸ்த. V, இல. 3 மார்ச் 1874, பக். 68-69
6. ஜநவிநோதிநி, புஸ்த. X, இல. 1, ஜனவரி 1879, பக். 21-22
7. ஜநவிநோதிநி, புஸ்த. XI, இல. 3 மார்ச் 1880, ப. 22
8. ஜநவிநோதிநி, புஸ்த. V, இல. 3 மார்ச் 1874, பக். 75-76
9. ஜநவிநோதிநி, புஸ்த. IV, இல. 1, ஜனவரி 1873, ப. 3
10. ஜநவிநோதிநி, புஸ்த. XVI, இல. 10 ஜனவரி 1885, ப. 174
11. தத்துவபோதினி, அக்டோபர் 1865, ப. 17
12. தத்துவபோதினி, மே 1864, பக். 12-14

தமிழ் இதழ்கள் 1882-1941
கருத்தியல் கோட்பாடு

பெ.சு. மணி

தமிழ் மொழியின் மூலம் ஊடகத் துறையில் அரசியல் அறிவையும் விழிப்பையும் ஏற்படுத்திய சுதேசமித்திரன் 1882இல் தொடங்கியது. அரசியல் செய்தி இதழை மிக ஏழை எளிய மக்களும் கொச்சை நீங்கிய பேச்சுவழக்குத் தமிழில் படித்துப் பயன்பெறும் வகையில் புரட்சிகரமான வாசிப்பை பரவலாக்கியத் தினத்தந்தி முதலில் 'தந்தி' எனும் பெயரில் மதுரையில் இருந்து 1942 நவம்பர் 1இல் வெளிவந்தது. 1948இல் சென்னையில் இருந்து தினத்தந்தி தோன்றியது. இந்த இரண்டிற்கும் இடைப்பட்ட காலத்தைக் குறிப்பதுதான் 1882 முதல் 1941 வரையிலான கால கட்டமாகும்.

இந்தக் காலகட்டத்தில் அரசியல், சமூக, இலக்கியத் துறைகளில் அமைப்புகள் பல உருவாக்கப்பட்டன. கல்வியறிவும், கருத்தியல் கோட்பாடும் மேற்கொண்டு வரை இந்த அமைப்புகள் துணைநின்றன.

அவற்றுள் அரசியல் களத்தில் 1884இல் தோன்றிய சென்னை மகாஜன சபையும், 1865இல் தோன்றிய இந்திய தேசிய காங்கிரஸ் மகா சபையும் குறிப்பிடத்தக்கன.

சமூகத் துறையில் தோன்றிய சில அமைப்புகள் வருமாறு:

1. Hindu Free Thought Union - 1882

1882இல் சென்னையில் இந்து சுதந்திர சிந்தனையாளர் சங்கம் என்று பொருள் கொள்ளும் இந்து ஃப்ரீ தாட் யூனியன் எனும் பெயர்கொண்ட அமைப்பு தோன்றியது. அக்காலத்தில் புகழ்பூத்த பிரிட்டனின் நாத்திகவாதியும், அரசியல், சமூகசீர்திருத்தவாதியுமான சார்லஸ் பிரலட்லா (1833 - 1891) எனும் அறிஞரின் கொள்கைகளை இந்த அமைப்பு பிரச்சாரம் செய்தது. சார்லஸ் பிராட்லா 1860இல் நாத்திக இதழான தி நேஷனல் தி பார்மர் எனும் இதழை நிறுவினார். 1866இல் 'நேஷனல் செக்குலர்

சொஸைடி' எனும் அமைப்பை உருவாக்கி - தோற்றுவித்து அதன் தலைவராக 1890வரையில் இருந்தார் பிராட்லா. அன்னிபெசன்ட் (1847-1933) பிராட்லாவுடன் இணைந்து நாத்திகப் பிரசாரத்தில் ஈடுபட்டுவந்தார். 'நேஷனல் செக்குலர் சொஸைட்டி'யில் 1874இல் சேர்ந்தார். 'நேஷனல் தி பார்மர்' இதழின் துணையாசிரியராகவும் பணியாற்றினார். பிராட்லாவுடன் பதினைந்து ஆண்டு காலம் இணைந்திருந்த அன்னிபெசன்ட், 1889 இல் மேடம் பிளாவட்ஸ்கியின் "The Secret is Doctrines" எனும் தியோசபி இயக்கப் பிரச்சார நூலைக் கற்று, திசோசலிஸ்ட் இயக்கத்தில் சேர்ந்தார்.

பிராட்லா இந்திய தேசிய காங்கிரசின் ஆதரவாளராகவும் செயல்பட்டார். 1889இல் பம்பாயில் கூடிய காங்கிரஸ் மகாசபையில் கலந்துகொண்டார்.

'இந்து ஃப்ரீ தாட் யூனியன்' சார்பில் 'தத்துவ விவேசினி' எனும் தமிழ்ப் பகுதியையும், 'Thinker' எனும் ஆங்கிலப் பகுதியையும் கொண்ட இருமொழி இதழ் 1882இல் இருந்து வெளிவந்தது. 'இந்து ஃப்ரீ தாட் யூனியன்' என்பதைத் தத்துவ விவேசின் 'இந்து சுவஞானச்சங்கம்' என்று தமிழில் குறிப்பிட்டது.'

2. *உபயோகமான அறிவைப் பரப்பும் கலை – 1883*

இந்தச் சபை சென்னை திருவல்லிக்கேணியில் சிங்காரச் சாரியார் தெருவில் 1.3.1883இல் நிறுவப்பெற்றது. "வருஷத்தில் ஒரு ரூபாய் அல்லது அதற்கு மேற்பட்டுக் கொடுப்பவர்கள் கையொப்பக் காரர்களாகவும், 10 ரூபாய் அல்லது அதற்கு மேற்பட்டுக் கொடுப் பவர்கள் சபையின் பரிபாலகராகவும் ஏற்படுத்தப்படுவோர் கள்" என்று தத்துவ விவேசினி (ஜனவரி 7, 1883) செய்தியொன்று குறிப்பிட்டுள்ளது. இதை உருவாக்கியதில் 'இந்து' இதழாசிரியர் ஜி. சுப்பிரமணிய ஐயர், 'இந்து' இதழின் 'மானேஜர்' மு. வீரராகவசாரியார், 'விவேகசிந்தாமணி' ஆசிரியர் சிவி. சுவாமிநாதய்யர் ஆகியோர்க்கு முக்கியப் பங்கு உண்டு. இந்தச் சபையின் தோற்றம் குறித்த ஒரு செய்தி வருமாறு:

'உபயோகமான அறிவைப் பரவச் செய்யும் சபை' நமது தேசத்திலுள்ள சாதாரண ஜனங்கள் துரைத்தன விஷயமாயும், கைத்தொழில் விஷயமாயும் புரிந்துக்கொள்ள வேண்டிய

உபயோகமான விஷயங்களைத் திரட்டி, கூடிய திரவிய சகாயத்தைக் காட்டி அடிக்கடி சிறிய புத்தகங்களாகவும், பத்திரிகைகளாகவும் எல்லோருக்கும் விலையின்றிக் கொடுக்கவேண்டுமென்ற கருத்துடன் மேற்குறித்த பெயர் கொண்ட ஓர் சபை சென்னைப்பட்டணம் திருவெல்லிக்கேணியில் இப்போது ஏற்படுத்தியிருக்கிறது."[2]

தமிழில் வெளிவந்த முதல் அரசியல் அரிச்சுவடி எனப் புகழ்பெற்ற ஜி. சுப்பிரமணிய ஐயரின் 'சுய அரசாட்சி வினாவிடை' (1883) எனும் சிறு வெளியீடு இச்சபையாரால் வெளியிடப்பெற்றது. பதினெட்டு உறுப்பினர்களைக் கொண்ட நிருவாகச் சபையின் செயலாளர்களாக மு. வீரராகவசாரியார் பி.ஏ.வும் என். பட்டாபி ராம் பி.ஏ.வும் பணியாற்றினர்.

3. இந்து டிராக்ட் சொஸைடி – 1887

இந்து சமயத்தைக் கண்டனம் செய்து அக்காலத்தில் கிறித்துவ மிஷனரிகளால் வெளியிடப்பெற்று வந்த துண்டறிக்கை களுக்கு எதிர்ப்பு தெரிவித்து இந்து சமயத்தினர் சார்பில் துண்டறிக்கைகளை வெளியிட 1887 பிப்ரவரியில் சென்னை நகரத்தில் - தம்புச்செட்டித் தெருவில் - இந்து டிராக்ட் சொஸைடி (Hindu Tract Society) அமைக்கப்பட்டது. இதை நிறுவியவர் (ஆர். சிவசங்கரபாண்டியாஜி (1853 - 1899).[3]

பி.ஏ. பட்டதாரியான இவர் பச்சையப்பன் உயர்நிலைப் பள்ளியில் ஆசிரியராவதற்கு முன்பு தஞ்சாவூரில் வழக்கறிஞராகப் புகழ்பெற்றவர். இந்து சமயப் பிரசாரத்தில் தீவிர ஈடுபாடு கொண்டவர். சென்னையில் 1889இல் "இந்து தியோலாஜிகல் உயர்நிலைப்பள்ளி"யை நிறுவினார். குஜராத்தியரான இவர் ஆங்கிலம், தமிழ், சம்சுகிருதம், தெலுங்கு மொழிகளில் புலமைப்பெற்றவர். இவருடைய வழிகாட்டுதலில் தமிழில் துண்டறிக்கைகள் பல வெளிவந்தன.

1887 ஜூலையில் வெளிவந்த "இந்துக்கள் அவசியம் கவனிக்க வேண்டிய விஷயம்" எனும் துண்டறிக்கை இந்து டிராக்ட் சொஸைடி அமைக்கப்பட்டதைப் பற்றி பின்வருமாறு கூறப்பெற்றுள்ளது.

"பாதிரிமார்கள் பிரசாரம், மதமாற்றம் முதலானவற்றைக் கண்டித்து இந்துக்கள் விழிப்படையக் கோருவது இவற்றையெல்லாம் யோசித்துத்தான் சென்னையில் இந்து டிராக்ட் சொஸைட்டி என்று ஓர் சங்கம் ஏற்படுத்தப்பட்டிருக்கிறது. அதில் அடிக்கடி பிரசுரமாகும் பத்திரிக்கைகளை வாசித்துப் பார்ப்பதனால் கிறிஸ்து மத ஓதலும், நமது மத சிரேஷ்டமும் தெரிந்து கொள்ளலாம்" 10,000, 15,000, துண்டறிக்கைகள் அச்சிடப்பெற்று பரப்பப்பட்டன. சில துண்டறிக்கைகளின் பெயர்களாவன: "Judgement - நியாயத் தீர்ப்பு"; "Vibuthi and Namam - திருநீறு திருமண் காப்பு"; "திருஞான சம்பந்த சுவாமிகள் சரித்திரச் சுருக்கம்"; "Necessity of Divine Worship - பரப்பிரம்ம வணக்கம்"; "General and Technical Education - கல்வியும் கைத்தொழிலும்", "An absurdity of Christinaity - கிறிஸ்து மதத்தின் ஓராபசம்"; "பாதிரிமார்கள் தம் சமயம் ஆராயாது பிறர் சமயம் தூஷிப்பதேன்?" மாவட்டங்களில் இந்து சமயம் பிரசாரகர்கள் சுற்றுப் பயணம் செய்ய இந்த அமைப்பு ஏற்பாடு செய்தது.

4. தென்னாட்டுத் தமிழ்ச் சங்கம் - 1890

ஆங்கிலம்-தமிழ் இரண்டிலும் புலமை பெற்றோரில் சிலர் 'தேசாபிமானம்', 'மதாபிமானம்', 'பாஷாபிமானம்' பற்றிப் பெருமிதமாகப் பேசித் தமிழ்ப் பணியில் நாட்டம் செலுத்தியதும் இக்காலகட்டத்தின் (1882-1941) தொடக்கத்தில் ஏற்பட்ட ஒரு வளர்ச்சியாகும். இவர்களில் சிலர் சென்னையில் 1890இல் தென்னாட்டு தமிழ்ச் சங்கம் எனும் பெயரில் ஓர் அமைப்பை ஏற்படுத்தினர். இது குறித்து 10.5.1890இல் 'சுதேசமித்திரன்' இதழில் பின்வரும் செய்தி வெளிவந்தது.

"மேற்குறித்த பேரால் தமிழ் பாஷாபிவிர்த்தியை நாடிய சங்கமொன்று ஸ்தாபிப்தற்காகச் சென்ற மாதம் சென்னைப் பட்டணம் தொண்டை மண்டலம் ஸ்கூல் ஹாலில் கூடிய கூட்டத்தில் நியமிக்கப்பட்ட கமிட்டியில் நாளது மாதம் 1-ந் தேதி "காஸ்மா பொலிடன் கிளப்" கட்டடத்தில் ஒரு கூட்டம் கூடினார்கள். அப்பொழுது ஸ்ரீசோம சுந்தரம் செட்டியார் அவர்கள் அக்கிரா சனாதிபதியாக இருக்கப் பின்வரும் கனவான்கள் கமிட்டி மெம்பர்களாக ஆஜராயிருந்தார்கள்.

ராவ்பகதூர் பூண்டி அரங்கநாத முதலியார் அவர்கள் எம்.ஏ, மகா ஸ்ரீ பி.வி. விஜயரங்க முதலியார் அவர்கள், சேஷகிரி

சாஸ்திரியார் அவர்கள் எம்.ஏ., சி. டபிள்யூ, தாமோதரம் பிள்ளை. அவர்கள் பி.ஏ.பி.எல்., எம். வீரராகவாசாரியார் அவர்கள் பி.ஏ., டி. பாலசுந்தர முதலியார் அவர்கள் பி.ஏ. (தற்கால காரியதரிசி). இந்தச் சங்கத்தின் மூன்று முக்கிய நோக்கங்களில் பின்வருவன:

1. "தமிழில் சுயமாகவேனும், மொழிபெயர்ப்பினாலேனும் எளிய செந்தமிழ் நன்னடையில் ஜனங்களுக்கு அனுபவத்தில் உபயோகப் படத்தக்கதாகவாவது சாஸ்திர சம்பந்த மானதாகவாகயுள்ள நூல்களை வசன ரூபமாகச் சித்தஞ்செய்து பிரசுரிக்க வேண்டிய ஏற்பாடுகள் செய்யல்"

2. "தத்துவஞான சம்பந்தமாகவாவது, வித்தியாசம் பந்தமாகவாவது அருமையாகவுள்ள விஷயங்களைப் பற்றிச் சிறந்த பிரபந்தங்கள் எழுதி வாசிக்க அல்லது உபந்நியாசங்கள் செய்ய ஏற்பாடு செய்யல்."

3. "இதுவரையிலும் அச்சிடப்படாது இப்போது கையேட்டுப் பிரதிகளாயிருக்கும் நூல்களில் பிரசுரிக்கத் தகுந்தனவும் பார்த்து எடுத்து அவற்றைப் பிரசுரிக்க உதவி செய்யல்."

மெட்ராஸ் ஹிந்து சோஷல் ரிபார்ம் அசோசியேஷன் – 1892

9-11-1892இல் இந்த அமைப்பு சீர்திருத்தச் செம்மல் ஜி. சுப்பிரமணிய ஐயர் வீட்டில் கூடிய கூட்டத்தில் நிறுவப்பெற்றது. 'இந்து', 'சுதேசமித்திரன்' ஆசிரியராக ஜி. சுப்பிரமணிய ஐயர் இந்த அமைப்பிற்குப் பேராதரவு அளித்தார். அவருடைய வழிகாட்டுதலில் 1890 செப்டம்பர் 1இல் சென்னை திருவல்லிக்கேணியில் வெளிவரத் தொடங்கிய 'இந்தியன் சோஷல் ரி பார்மர்' எனும் ஆங்கில வார இதழ் இந்த அமைப்பிற்கு ஆதரவளித்தது. இதன் ஆசிரியர் காமாட்சி நடராசன் பி.ர., ஜி. சுப்பிரமணிய ஐயரின் பத்திரிகைத்துறைச் சீடராவார்.

எட்டு உறுப்பினர்களையும் ஓர் ஆதரவாளரையும் கொண்டு தோன்றிய இந்த அமைப்பு அக்காலத் தமிழில் 'சென்னை இந்து ஆசார திருத்த சங்கம்' என்ற பெயரில் அழைக்கப்பட்டது. ஓராண்டிற்குள் நாற்பத்தைந்து உறுப்பினர்களையும், பதின்மூன்று ஆதரவாளர்களையும் கொண்டு வளர்ச்சிபெற்றது.[4]

கந்துகூரி வீரேசலிங்கம் பந்துலு, சங்கரன் நாயர், நீதிபதி எஸ். சுப்பிரமணிய ஐயர் உட்படப் பலர் இச்சங்கத்தின் உறுப்பினர் ஆவார்கள்.

இந்த அமைப்பின் கொள்கைகள் வருமாறு: 1. பெண் கல்வி பரவப் பாடுபடுதல், 2. திருமணச் சீர்திருத்தம், 3. குடும்பத்தில் சீர்திருத்தம், பழக்கவழக்கங்களில் சீர்திருத்தம், 4. ஒவ்வொரு சாதியிலும் உள்ள கிளைச் சாதிகளை ஒன்றாக்குதல்.

வழிமுறைகளாவன : 1. சொற்பொழிவுகள், துண்டுப் பிரசுரங்கள் வெளியிடுதல், 2. கிளை அமைப்புகள் நிறுவுதல், 3. செயலில் ஈடுபடுவோர்க்கு உதவுதல், 4. சொந்த வாழ்க்கையில் உதாரணமாய் விளங்குதல்.

சங்கத்தின் தலைமை அலுவலகம்: 18, சிங்கராச்சாரி தெரு, திருவல்லிக்கேணி.

1897 பிப்ரவரி 11இல் சுவாமி விவேகானந்தர், சென்னை இந்து ஆசாரத்திருத்தச் சங்கத்திற்கு வருகைபுரிந்தார். விதவை மறுமணம், அயல்நாடுகளுக்கு கடல் யாத்திரை செல்லல் முதலான சமூகப் பிரச்னைகள் குறித்து சுவாமி விவேகானந்தருடன் உறுப்பினர்கள் உரையாடினர். 1897 பிப்ரவரி 14இல் சுவாமி விவேகானந்தருக்குச் சென்னை விக்டோரியா பப்ளிக் ஹாலில் இந்தச் சங்கம் வரவேற்பளித்தது.[5]

'மெட்ராஸ் இந்து சோஷல் தி பார்ம் அசோசியேஷனி'ன் வெள்ளிவிழா சென்னையில் 1918 டிசம்பர் 15இல் நடைபெற்றது. விழா நிகழ்ச்சி முழுவதையும் நீதிக்கட்சியினரின் ஆங்கில இதழான 'ஜஸ்டிஸ்' வெளியிட்டது. விழாவிற்குத் தலைமை வகித்த பிரபல தேசபக்தர் எஸ். சீனிவாச ஐயங்கார், சங்கத்திற்கு ஆரம்ப காலத்தில் ஏற்பட்டத் தொல்லைகளை விவரித்தார்.6

திராவிட பாஷா சங்கம் - 1899

1899 மார்ச் 5ஆம் தேதி சென்னை பச்சையப்பன் ஹாலில் நீதிபதி எஸ். சுப்பிரமணிய ஐயர் தலைமையில் நடைபெற்ற ஆங்கில மொழியோடு தென்னாட்டு சுதேச மொழிகளையும் கற்ற அறிஞர்கள் கூடிய கூட்டத்தில் "திராவிட பாஷா சங்கம்" அமைக்கப்பெற்றது. ஐம்பது பிரமுகர்களும், பச்சையப்பன் கல்லூரி

மாணவர்கள் பலரும் இக் கூட்டத்தில் கலந்துகொண்டனர். இந்தச் சங்கத்தின் தமிழ், கன்னட, மலையாள, ஆந்திர அறிஞர்கள் பெயர்கள் பின்வருவன:

விடி. சேஷாத்ரியாச்சாரியார், ராவ்பகதூர் வீரேசலிங்கம் பந்துலு, ஜி. சுப்பிரமணிய ஐயர், எஸ். ரங்கய்ய செட்டியார், ர. நாராயண ராவ், திவான் பகதூர், வி. கிருஷ்ணமாச்சாரியார், ஜே. லாஸ்ரஸ், டி. ராமகிருஷ்ண பிள்ளை, எம். சேஷகிரி சாஸ்திரிகள், எம். ரங்காச்சாரியார், டிஎம். சுப்பு நெடுங்கசாடி, எஸ். மங்கோஷ் ராவ், எம். கிருஷ்ணன், 'விவேகசிந்தாமணி' டி. சம்பந்த முதலியார், டாக்டர் டங்கன் எனும் ஆங்கிலேய கல்வியாளர் ஆதரவும் இந்தச் சங்கத்தின் தோற்றத்திற்கு உதவியது.[7]

திராவிட பாஷா சங்கத்தைத் தமிழறிஞர்கள் வி.கோ. சூரியநாராயண சாஸ்திரியாரும், எம்.எஸ். பூர்ணலிங்கம் பிள்ளையும் நடத்திய 'ஞான போதினி' இதழ் வரவேற்று எழுதியது.[8]

இந்த சங்கத்தின் முக்கியக் குறிக்கோள்களாவன:

1. பழமைமிக்க திராவிட மொழி நூல்களை வெளியிடுதல்

2. அவ்வப்பொழுது தமிழ், தெலுங்கு, கன்னடம், மலையாளம் ஆகிய மொழிகளில் சிறப்புச் சொற்பொழிவுகளுக்கு ஏற்பாடு செய்தல்.

3. தரமான விஞ்ஞான-இலக்கிய நூல்களை மேற்படி மொழிகளில் வெளியிடவோ அல்லது வெளியிட முன்வருவோர்க்கு உதவி அளித்தல்

4. சிறந்த நூல்களுக்குப் பரிசுகள், பதக்கங்கள் வழங்குதல்

5. ஒவ்வொரு மொழியிலும் பத்திரிகைகள் வெளியிடுதல்

திராவிட பாஷா சங்கத்தின் அமைப்புக் கூட்டத்தில் ஜி. சுப்பிரமணிய ஐயர், மேலைநாட்டு கல்விப் பயிற்சியின் சேவையை வலியுறுத்தினர். மேற்கத்திய ஞானத்தைக் கற்பிக்கப் பத்திரிகைகளைப் பயன்படுத்த வேண்டும் என்றும் வலியுறுத்தினார்.[9]

''திராவிட பாஷா சங்கம் வளர்ச்சியின்றிப் பிறந்த நிலையிலேயே இருந்து இருக்குமிடமும் தெரியாது மழுங்கிக்

கிடந்தது யாவரும் பரிதவிக்கத்தக்கதே" என்று ஞானபோதினி ஆகஸ்டு, 1901ஆம் இதழ் குறிப்பிட்டுள்ளது.

மேற்கூறிய அமைப்புகள் சிலவற்றின் தோற்றம், அரசியல், சமூக, இலக்கியச் சூழலை உருவாக்கவும், அவ்வழியில் கருத்தியல் கோட்பாடுகள் வளர்த்தெடுக்கப்படவும் துணைபுரிந்தது.

சென்னைத் திராவிட பத்திரிகா சபை

சென்னையில் 'திராவிட பத்திரிகா சபை' எனும் பெயரில் ஓர் அமைப்பு 1885 மார்ச் 14இல் நிறுவப்பெற்றது. "சுதேசமித்திரன், பிரம்ஹ ப்ராகசிகை, தத்துவ விவேசினி, இந்து ஜனபூஷணி முதலிய, 'பத்ராதிபர்களும், அவர்களுடைய ரிப்போர்டர்கள், பண்டிதர்கள் முதலானோர் 18 பேர் வந்திருந்தனர் என்று தத்துவ விவேசினி இதழில் (மார்ச்சு 22, 1885) செய்தி வெளியாகியுள்ளது.

மு. வீரராகங்காரியார் சபையில் பேசியபொழுது, "இந்த மீடிங்கு கூடுவதின் முக்கிய காரணம் ருஷிய கவர்ன்மெண்டார் இப்போது சண்டைக்குத் தயாராய் இருப்பதால் நாம் கொஞ்சம் யோசனைக் குறைவாயிராதப்படி ஜாக்கிரதையாய் இருக்கவேண்டும் வெளிநாட்டுப் பத்திராதிபர்களுக்கும் நாமிப்படிக் கூடும் சமாசாரங்களை அடிக்கடி தெரிவித்தல் நலமாயிருக்கும்" என்று குறிப்பிட்டார்.

இந்தச் சபையின் நடவடிக்கைகளைப் பற்றியும், அது எவ்வளவு காலம் இயங்கியது என்பதையும் கண்டறிய முடியவில்லை. இதழாசிரியர்கள் சிலர் ஒன்றுகூடி ஓர் அமைப்பை உருவாக்கியதும், கருத்தியல் கோட்பாடு பற்றிய ஒரு பொதுநோக்கை வகுத்துக் கொள்ளவும் சிறு முயற்சி 1885இல் தோன்றியது கவனத்திற்குரியது.

சுதேச மித்திரன் - 1882

அனைத்திந்திய அளவில் 1885இல் அமைக்கப்பெற்ற முதல் அரசியல் அமைப்பான இந்திய தேசிய காங்கிரஸ் எனும் தேசிய இயக்கத்திற்கு முன்பும், அதன் பிறகு காங்கிரசின் ஹ்யூம் சகாப்தம், திலகர் சகாப்தம், காந்தி சகாப்தம் என்னும் மூன்று கால கட்டங்களையும் தொடர்ந்தாற்போன்று பிரதிநிதித்துவப்படுத்திய வரலாற்றுச் சிறப்பு, தமிழ் இதழ்களில் சுதேசமித்திரனுக்கே உரியது.

முதலும் முடிவுமாக முற்றிலும் அரசியல் இதழாகப் பொதுமக்கட் கருத்தைத் தமிழில் உருவாக்க, அரசியல் அறிவின் பாலபாடங்களைத் தமிழில் கற்பித்த முதல் தமிழ் இதழும் சுதேசமித்திரனே ஆகும். அரசியல், சமூக, பொருளாதாக் கருத்தியல் கோட்பாடுகளை ஒருங்கிணைந்து தமிழ் மட்டுமே அறிந்த பாமர வாசகர்களிடையே கொண்டு சேர்ந்த முதல் இதழும் சுதேச மித்திரனேயாகும்.

"தமிழ் நாட்டின் பத்திரிகையுலகிற்குச் சுதேசமித்திரன் தந்தையென்று கூறுதல் மிகையாகாது" என்று தமிழ் இதழியல் வரலாற்றில் அழுத்தமானச் சுவடுகளைப் பதித்த 'திரு.வி.க.' சாற்றியுள்ளார்.[10]

மூன்று கால கட்டங்கள்

சுதேசமித்திரனின் கருத்தியல் கோட்பாடுகளின் தோற்றம் வளர்ச்சியைப் பற்றி 1941 வரையில் அறிய அதன் வரலாற்றை மூவேறு கால கட்டங்களாக வகுத்துக் கொள்ளலாம். இந்த மூன்று கால கட்டங்களில் சுதேசமித்தரன் ஆசிரியர்களாக மூவர் விடுதலைப் போராட்ட வரலாற்றில் இவ்விதழ் வரலாற்றை இரண்டற இணைத்து உருவாக்கினார்.

முதல் கால கட்டத்தை உருவாக்கியவர், சுதேசமித்திரனைத் தோற்றுவித்த ஜி. சுப்பிரமணிய ஐயர் (1855-1916); இரண்டாவது கால கட்டத்திற்குரியவர் ஏ. அரங்கசாமி அய்யங்கார் (1877-1934); மூன்றாவது காலகட்டத்தை முன்னெடுத்துச் சென்றவர் சி.ஆர். சீனிவாசன் (1889-1962).

1882 மார்ச் முதல் 1915 ஆகஸ்ட் வரையிலான கால கட்டம் முதல் கால கட்டமாகும். 1882 மார்ச் மாதம் சுதேசமித்திரன் வார இதழாக வெளிவந்த காலம் முதல் 1915 ஆகஸ்ட் 15இல் ஜி. சுப்பிரமணிய ஐயர் ஏ. அரங்கசாமி அய்யங்காரிடம் சுதேசமித்திரனை விற்றுவிட்ட காலம் வரையிலானது முதல் கால கட்டமாகும்.

1915 ஆகஸ்ட்டில் இருந்து சுதேசமித்திரன் உரிமையாள ராகவும், ஆசிரியராகவும் பணியாற்றிய அரங்கசாமி அய்யங்கார், தம்மிடம் சுதேசமித்திரன் மேனேஜராகவும், துணையாசிரியராகவும் பணியாற்றிய சி.ஆர். சீனிவாசனை 1928இல் இதழாசிரியராக

அறிவித்தது வரையிலான காலகட்டம், இரண்டாவது காலகட்டமாகும்.

மூன்றாவது கால கட்டம் 1928இல் இருந்து தொடங்கியது.

1882 முதல் வார இதழாகவும், 1893இல் வாரம் இருமுறையாகவும், 1897இல் வாரம் மும்முறையாகவும், 1899இல் நாளிதழாகவும் சுதேசமித்திரனது வரலாறு அமைந்தது. தினப்பதிப்புடன், சில ஆண்டுகள் வாரம் மும்முறைப் பதிப்பும் வெளிவந்துள்ளது. அரங்கசாமி அய்யங்கார் காலத்து சுதேசமித்திரன் ஆங்கிலத்தில் வார இதழாக வெளிவந்துள்ளது.

முதல் கால கட்டம் - சிறப்பாய்வு

'இந்து' பத்திரிகை வாயிலாக ஆங்கிலம் கற்ற வாசகர்களிடையே அரசியல், சமூக, பொருளாதாரக் கண்ணோட்டங்களை தேசிய - சர்வதேசியப் பின்னணியில் வளர்த்தெடுத்த ஜி. சுப்பிரமணிய ஐயர், எளிய தமிழ் மூலம், பாமரத் தமிழ்வாசகர்களும் அரசியல் விழிப்பு, சமூக விழிப்புப் பெறவேண்டும் எனும் ஆரா வேட்கையால் 'சுதேசமித்திரன்' இதழை, 'இந்து' ஆசிரியராக இருந்துக்கொண்டே தொடங்கினார்.

சென்னையில் தோன்றிய 'மெட்ராஸ் நேடிங் அசோசியேஷன்', திருவல்லிக்கேணி இலக்கியச் சங்கம், தென்னாட்டுத் தமிழ்ச் சங்கம், திராவிட பாஷாபிவிர்த்திச் சங்கம், மெட்ராஸ் இந்து சோஷல் போர்ம் அசோசியேஷன், சென்னை மகாஜன சபை முதலான அமைப்புகளில் பங்கேற்றவர் ஜி. சுப்பிரமணிய ஐயர். 1885 இல் பம்பாயில் காங்கிரஸ், தோன்றுவதற்கான வேண்டுகோளையும், பிரசாரத்தையும் 'இந்து' இதழ் மூலமாக எழுதிவந்தவர் ஜிசுப்பிரமணிய ஐயர். அரசியல் மேடைப் பேச்சிற்காக முதன்முதலில் சுற்றுப்பயணம் மேற்கொண்டவர்! பொதுக் கூட்டங்கள் முடிந்ததும், அரசியல் தமிழ்த்துண்டுப் பிரசுரங்களை மக்களிடையே இலவசமாக வழங்கியவர்.

துண்டுப்பிரசுரங்கள்

இந்தத் துண்டுப்பிரசுரங்கள் கிடைக்காத நிலையில் அரசாணை ஒன்றின் வாயிலாகத் துண்டுப் பிரசுரங்கள் பற்றி அறியமுடிகின்றது.[11]

அமெரிக்க அரசியல் தலைவரும், வழக்கறிஞரும், 'COMMONER எனும் வார இதழின் ஆசிரியரும் பிரிட்டிஷ் ஏகாதிபத்ய எதிர்ப்பாளரும் இந்தியாவில் சுற்றுப்பயணம் செய்தவருமான வில்லியம் ஜென்னிங்ஸ் ப்ரெய்ன் (1860 - 1925) என்பவர். பிரிட்டிஷ் நிருவாகத்தைத் தாக்கிப் பேசியதின் தமிழாக்கத்தை ஜி. சுப்பிரமணிய ஐயர் துண்டுப் பிரசுரமாக வழங்கினார். பிரெயனைப் பற்றி "பிரிட்டிஷ் ஆட்சியின் விளைவுகளை நன்கு எடுத்துக்காட்டி தண்டனை புரிந்த அமெரிக்க ஞானி மிஸ்டர் பிரெய்ன்" என்று பாரதியார் 'இந்தியா' இதழில் (ஆகஸ்ட் 11, 1906) குறிப்பிட்டுள்ளார்.

இரண்டாவது வெளியீடு, ஜான்மார்லி (1838 - 1923) இந்திய ராஜாங்கச் செயலாளரின் 'பட்ஜெட்' உரையின் தமிழாக்கம். இந்த வெளியீட்டின் நோக்கம் யாதெனில், இந்தியாவின் செல்வம் இங்கிலாந்திற்கு எவ்வாறு வெளியேறுகின்றது என்பதையும் ஆங்கிலேயர் ஆட்சி நிருவாகம் தோல்வியுற்றது என்பதையும் இப்பொழுது இருக்கின்ற ஆட்சியைக் காட்டிலும் வேறு எந்த ஆட்சியும் மேலானது என்பதையும் விளக்குவதேயாகும்.

பிரெய்ன், மார்லியின் வாழ்க்கை வரலாறுகள் மூன்றாவது, நான்காவது வெளியீடுகளாகும். தூத்துக்குடியில் வ.உ..சி.க்கு ஆதரவாக சொற்பொழிவாற்றிய பிறகு, இந்த வெளியீடுகளை ஜி. சுப்பிரமணிய ஐயர் மக்களிடையே வழங்கினார் என்று அக்கால சென்னை அரசின் புலனாய்வுத் துறைக்கு மாவட்ட நீதிபதி அனுப்பியக் குறிப்பில் கூறப்பெற்றுள்ளது.[12]

முற்கூறியன யாவும் 'சுதேசமித்திரன்' கருத்தியல் கோட்பாடுகளை உருவாக்க ஜி. சுப்ரமணிய ஐயருக்கு எவ்வகையில் பயன்படுத்தப் பட்டன என்பதைப் புரிந்துகொள்ள வாய்ப் பளிக்கத்தக்கன.

'சுதேசமித்திரன்' தோற்றம் குறித்து சில கருத்துகள்

சுதேசமித்திரன், 1855இல் தோன்றிய தமிழ் வார இதழான 'தினவர்த்தமானி' மறைந்த பிறகு தோன்றியதாக 1895 ஆகஸ்ட் 23இல் 'மித்திரன் விருத்தி' எனும் தலைப்பில் வெளிவந்த செய்தியில் பின்வருமாறு கூறப்பெற்றுள்ளது.

முதலில் தினவர்த்தமானியைக் கையேந்தினோம். அதற்கு முன் தமிழ் பத்திரிகை நம் சென்னை சமஸ்தானத்தில் இருக்கவில்லை. வர்த்தமான பத்திரிகைகளில் நம் சமஸ்தானத்தில் பிறந்துலாவச் செய்ய வேண்டுமெனும் கருத்தால் சர்க்கார் தினவர்த்தமானிக்கு வருஷம் இருநூறு ரூபாய் தந்து வந்தார்கள். பிறகிட்டு அங்கங்கு பத்திரிகைகள் பிறந்திட்டதனால் ஈந்து வந்ததை அம்மட்டோடு நிறுத்தினார்கள். இஷ்டர்கள் பலம் கொண்டு அதுசில தினம் நடைபெற்று வந்தது. தம் கைப்பணத்தையும் செலவிட்டு கனம் விஸ்வநாதப் பிள்ளை அவர்கள் சில காலம் நடத்தியும் இஷ்டர்கள் ஆமளவிற்கு அதன்மீது கருத்து செலுத்தாது போனதினால் அவர் அதை மெல்ல கைநழுவவிட்டார். பிறகிட்டு ஒரு கம்பெனியால் இதை நடத்தியும் அவர்களாலும் மாளாது போயிற்று.

. . .

அது அவ்வாறு ஒழிந்துபோன சில தினங்களுக்குள் நம் மித்திரனும், பின் சில வர்த்தமான பத்திரிகைகளும் பிறந்துலாவின. அவைகளில் நம்மித்திரன் நட்சத்திரக் கூட்டங்களில் சந்திரன் நடுநாயமாகத் தோன்றியது.

சுதேசமித்திரனின் தோற்றம் எவ்வாறு வரலாற்றுச் சிறப்புக் கொண்டது என்பதைக் குறித்து இதழாசிரியர் ஜி. சுப்பிரமணிய ஐயர், வ.உ.சி, சுப்பிரமணிய சிவா, விருதை சிவஞானயோகி ஆகியோர் கருத்துகள் வெளியிட்டுள்ளனர்.

'ஜி. சு.'

17.1.1908இல் சுதேசமித்திரன் அலுவலகத்தில் விருதை சிவஞானயோகி தலைமையில் நடைபெற்ற சுதேசமித்திரன் வெள்ளி விழாவில் 'ஜி.சு.' வெளியிட்ட ஒரு கருத்து வருமாறு :

"ஹிந்து பத்திரிகை ஆங்கிலப் பத்திரிகையாகவிருப்பதால் இங்கிலீஷ் பத்திரிகையாகவிருப்பதால், இங்கிலீஷ் பாஷை அறியாத தமிழ் ஜனங்களும், தேச சமாசாரங்களை அறிந்துகொள்ள

மார்க்கமில்லாதிருப்பதை யோசித்து, 'சுதேசமித்திரன்' பத்திரிகையை 1882ம் வருஷம் மார்ச்சு மாதத்தில் வாராந்திரமாகத் துவங்கினேன். தமிழ் ஜன ஸமூகத்தாரின் அறிவை வளர்ப்பதே மேன்மையென்று கருதினேன்."

இதே கருத்தை, 'சுதேசமித்திரன்' உதவி ஆசிரியராகப் பணியாற்றிய வரகவி அ. சுப்பிரமணிய பாரதியும் பின்வருமாறு குறிப்பிட்டுள்ளார்.

"நம் நாடு தழைக்க வேண்டும்; நம் நாட்டில் கல்வி, கைத்தொழில், செல்வம், ஆசாரச் சீர்திருத்தம், தேசாபிமானம், தன்னைத்தானே காத்துக் கொள்ளத்தக்க ஆற்றல், சபைகள் பெருகவேண்டும் என்கிற விருப்பம் என்னுடைய இளம் வயதிலேயே முளைத்தது. ஆனாலும் அந்த விருப்பம் 1878ஆம் வருஷத்திலேதான் 'ஹிந்து' எனும் பத்திரிகையாகப் பரிணமித்தது. அப்பால் ஆங்கிலங் கற்ற நம்மவர்களுக்கு உழைப்பதை விட சாமான்ய தென்னிந்தியத் தமிழ் நாட்டுக் குடிமக்களுக்குத் தக்க அறிவை யூட்டுவதுதான் சிறந்தது என்கிற விருப்பம் உதித்த அடுத்த நான்கு வருட காலத்திற்குள் அதாவது 1882ஆம் வருஷத்தில் அவ்விருப்பம் சுதேசமித்திரன் பத்திரிகையாகப் பரிணமித்தது."[13]

வ.உ.சி.

சுதேசமித்திரனில், 27.5.1916இல் 'ஜி.சு.' மறைவு குறித்து வ.உ.சி. எழுதிய இரங்கற் பாக்கள் பத்து வெண்பாக்களாக வெளிவந்தன. இவற்றுள் ஒரு வெண்பா சுதேசமித்திரன் மூலம் 'ஜி.சு., சாவில் அமிழ்ந்துக் கொண்டிருந்த தமிழரை உயிர்ப்பித்து எழுப்ப சுதேசமித்திரனைத் தொடங்கியதைப் பின்வருமாறு விளக்கியது.

தமிழ்மைந்தர் தூக்கத்தால் தாழ்வுற்றுச் சாவில்
அமிழ்கின்ற தன்மைகண் டன்னார்க்-கமிழ்தென்னச்
செந்தமிழில் நம்முயர் சுதேசமித்திரன் தொடங்கி
நந்தமிழரை யெழுப்பி நன்கு.

பாரதியாரும், 'ஜி.சு.,' வை தமிழ் நாட்டின் புதிய விழிப்பில் ஆதிகர்த்தாக்களுள் ஒருவராகக் குறிப்பிட்டவிடத்தில் 'சுதேசமித்திரன் ஜி. சுப்பிரமணிய ஐயர்' என்று குறிப்பிட்டதிலும் சுதேசமித்திரன் வழியாக 'ஜி.சு.' புதிய விழிப்பை ஏற்படுத்தினார் என்பதை நுட்பமாகச் சுட்டிக்காட்டியுள்ளார்.

சுப்பிரமணிய சிவா

"சாமான்ய தென்னிந்தியத் தமிழ்நாட்டுக் குடிமக்களுக்கு" பத்திரிகைப் படிக்கும் பழக்கமோ, விருப்பமோ, மொழியறிவோ, பொது விஷயமறியும் நாட்டமோ இல்லாத காலச் சூழலில் 'ஜி.சு.' சுதேசமித்திரன் தொடங்கியது பாரதியார் கூறியது போல் அவரின் "உள்ளத்திலிருந்து மூலதர்தங்களுள்" ஒன்றாகும். "கற்கும் கலைகளெல்லாம் தமிழ்வழியே கற்க வேண்டும்" என்றும் பாரதியார் சுதேசமித்திரனில் தமது பத்திரிகைத்துறை குருநாதர் 'ஜி.சு.'வின் மறைவு குறித்துச் சுதேசமித்திரனில் 25.1.1916இல் எழுதியக் கட்டுரையில் குறிப்பிட்டுள்ளார்.

'ஜி.சு.'வின் இதழியல் துறையின் மூல தர்மங்களுள் ஒன்று. தமிழ் மட்டுமே அறிந்த எளிய பாமர மக்கள் அரசியல் அறிவு பெறவேண்டும் என்பதாகும். இது, வியப்பிற்குரியது என்று 1916இல் சுப்பிரமணிய சிவா பின்வருமாறு கூறியுள்ளார்.

"பிரம்ம ஸ்ரீ சுப்பிரமணிய ஐயரவர்கள் தாம் நடத்திக் கொண்டிருந்த ஹிந்து எனும் ஆங்கிலப் பத்திரிகையை விட்டு விட்டுச் சாதாரண ஜனங்களுக்குள் அறிவைப் பரப்பும் பொருட்டுத் தமிழ்ப் பத்திரிகையை ஆரம்பித்தது வியக்கத்தக்கது."

விருதை சிவஞான யோகி

சுதேசமித்திரன் வெள்ளி விழாவிற்குத் தலைமை வகித்தவர் விருதை சிவஞான யோகி இவருடைய சுதேசிய இயக்கப் பேச்சுகள் 1908இல் சுதேசமித்திரனில் வெளிவந்துள்ளன. 5-3-1908இல் சுதேசமித்திரனில் சுதேசியத்தைப் பற்றி வெளிவந்த இவர் பேச்சு அரசாங்கத்தின் கண்டனத்திற்கு ஆளாகியது. 19.11.1908இல் திருக்குற்றாலத்தில் 'திருவிடர் கழகம்' எனும் அமைப்பை நிறுவித் தனித்தமிழ், தமிழர் தொன்மை பற்றிய கொள்கைகளைப் பரப்பியவர்.[14]

1914இல் நடைபெற்ற ஜி. சுப்பிரமணிய ஐயரின் அறுபதாம் ஆண்டு நிறைவு விழாவின்போது 128 வரிகள் கொண்ட வாழ்த்துப் பாவை விருதை சிவஞான யோகி, இயற்றினார். இந்த வாழ்த்துப்பாவில் 'சுதேசமித்திரன் தோற்றமும் செயலும்' எனும் தலைப்பில் காணப்பெறும் பாவடிகள், வருமாறு:

ஆங்கில மறியா ரதைவேண்டா மைமிற்
செந்தமி ழறிந்தோரும் பயன்பட வெண்ணி
ஆயிரத் தெண்ணூற் றெண்பத்திரண்டாம்
ஆண்டினிற் சுதேச மித்திர னென்னும்
நீளெழிற் புதினத் தாளைத் தந்ததில்
செந்தமிழ் நிலத்தின் முற்றுசீர்த் தேற்றமும்
மற்றுள நாட்டிற் கற்றவர் செய்தியும்
அரசிய லறிவும் பிறர்சீர்த் தேற்றமும்
பயன்மிகு முலக வியற்கை யுணர்வும்
பெற்புறு கைத்தொழில் நுட்பமுஞ் செட்டும்
நாட்டன் புணர்ச்சியுஞ் சேட்புலச் செய்தியும்
பற்பல நூல்களின் தட்பமும் பிறவும்
தமிழ் நாடெங்கு மமர்ந்து தாமுறை
சிற்றூ ரன்றி மற்றொன் றறியா
மக்களு மோர்ந்துயுத் தக்க படியறைந்
தறிவுதருந் தெய்வ தருவே வாழ்க![15]

பத்திரிகைத் தமிழ்

சுதேசமித்திரனின் கருத்தியல் கோட்பாட்டில் முதலாவதாகக் குறிப்பிடத்தக்கது, பத்திரிகைத் தமிழ் உருவாக்கத்திற்கும் வளர்ச்சிக்கும் பாடுபட்டதாகும்.

சுதேசமித்திரனுக்கு முன்பு தேசிய, சர்வ தேசிய அரசியல் செய்திகளைத் தமிழில் தருவதற்கான தமிழ்ச் சொல்லாக்கங்களை எளிய தமிழ் நடையைக் கொண்ட பத்திரிகைத் தமிழ் உருவாகவில்லை. காலத்தேவைக்கேற்ற இந்த இதழியல் பொறுப்புப் பணியை சுதேசமித்திரன் மேற்கொண்டது. இது, ஒரு பிரச்னையாகவும் விளங்கியதை ஜி.சு. சுதேசமித்திரன் வெள்ளிவிழாப் பேச்சல் பின்வருமாறு எடுத்துரைத்துள்ளார்.

"இப்பத்திரிகையில் விளையும் நன்மைகள் அநந்தம் என்றாலும் இதை நடத்தும் விஷயத்தில் ஏற்படும் சிரமம் மிகுதி. இங்கிலீஷ் பத்திரிகைகளானால் மற்ற பத்திரிகைகளில் வெளியாகும் விஷயங்களைக் கத்திரிக்கோல் துண்டுபடுத்திக் கோந்து போட்டு ஒட்டிக் கொடுத்து விட்டால் கம்பாசிடர்கள் வேலையை முடித்து விடுவார்கள். தமிழ்ப் பத்திரிகைகளுக்கு அவ்வாறு செய்யத்தக்க

பத்திரிகைகள் அதிகமில்லை. இங்கிலீஷும் தமிழும் தெரிந்தவர்களே இதற்கு வேலை செய்ய வேண்டியிருக்கிறது. இங்கிலீஷை மொழி பெயர்த்து எழுதிக்கொடுக்க வேண்டியிருக்கிறது. தமிழ்ப் பத்திரிகைக்கு எடிட்டர் வேண்டுமென்றாலும் கிடைப்பதில்லை."

அரசியல் செய்திகளை கருத்துக்களை வெளியிடத் தமிழ்ச் சொல்லாக்கத்தில் ஜி.சு. படாதபாடுபட்டார். இதை நேரில் கண்ட துணையாசிரியர் வரகவி அ. சுப்பிரமணிய பாரதியார் பின்வருமாறு விளக்கியுள்ளார்.

"சில அரசியல் விஷயங்களை விவரிக்கும்போது சில ஆங்கிலப் பதங்களுக்குச் சரியான தமிழ்ப்பதம் கிடைக்காமற் போகும். அப்போது ஐயர் "என்னடா பாரதி! உன் தமிழ் படாதபாடு படுத்துகிறது. Passive Resistence, இதற்கென்னடா தமிழ் வார்த்தை போடலாம்? சாத்வீக எதிர்ப்பு என்று போடு" என்று சொல்லுவார். அப்போதுதான் சொல்லும் வேகம் மட்டுப்படும். இப்படியே அநேக ஆங்கிலப் பதங்களுக்கு ஐயர் தாமே தமிழ்ப்பதங்களை உண்டாக்கினார். அதனாலேதான் சுதேசமித்திரன் தமிழ் ஒருவித மாறுபாடு உடையதாயிருக்கிறது. ஏனைய தமிழ்ப் பத்திரிகைகள் அரசியல் தத்துவங்களை வெளியிட சுதேசமித்திரன் பாஷையையே ஆதாரமாகக் கொள்ள வேண்டிய அவசியத்திற்குள்ளாயின."[16]

"விஷயத்துக்கு மூளையைச் செலுத்துவதைவிட, விஷயத்தைத் தகுந்த முறையில் வெளிப்படுத்தத்தக்க தமிழ் மொழியைக் கண்டு பிடிப்பதிலேதான் என் மூளை சிதறுகிறது" என்று வரகவி அ. சுப்பிரமணிய பாரதியிடம் 'ஜி.சு.' கூறுவாராம்.

சுதேசமித்திரனுக்கெனத் தமிழ் நடையை 'ஜி.சு.' உருவாக்கப் பாடுபட்டதைக் குறித்து 'சு.மி.' உதவி ஆசிரியர் குருமலை சுந்தரம் பிள்ளை, வ.வே.சு. ஐயர், தேசியக்கவி சி. சுப்பிரமணிய பாரதியார், அரங்கசாமி அய்யங்கார் ஆகியோர் கூறியுள்ளனர்.

'மறுமலர்ச்சி' என்னும் கட்டுரையில் வ.வே.சு. ஐயர், சு.மி.யின் தமிழ் நடையைப் பற்றி எழுதியதாவது.

"சுதேசமித்திரனானது மேல்நாட்டுப் பத்திரிகைகளின் போக்கை அனுசரித்து சமாச்சாரங்களைப் பரப்புவதற்குப் புதிய எண்ணங்களுக்கேற்ற நடையையும் உண்டாக்கித் தந்திருக்கிறது."[17]

பத்திரிகைச் சுதந்திரம்

சுதேசமித்திரனின் கருத்தியல் கோட்பாடுகளில் ஒன்று, பத்திரிகைச் சுதந்திரத்தை வற்புறுத்தியதாகும்.

1909இல் வெளிவந்த 'ஜனநிர்மாணம்'[18] எனும் தமது தமிழ் நூலின் நூன்முகத்தில் ஜி.சு. இறுதியாகப் பின்வரும் கருத்தைக் குறிப்பிட்டுள்ளார்.

"தேச பாஷைப் பத்திரிகைகளும், தேச பாஷை நூல்களும் அதிகமாய்த் தோன்றி ஜனங்களுக்கு சகாயம் செய்யாவிட்டால் இந்த நவீன ஜனநாயக முறை நிறைவேறுதல் கஷ்டமாகும்."

சுதேச பத்திரிகைகள் அரசியல் அஞ்ஞானத்தைப் போக்க பாடுபட்டது. ஆங்கிலேயருக்கு அச்சத்தைக் கொடுத்தது என்று குறிப்பிடும் தலையங்கம். வாரம் இருமுறையாக வெளிவந்த சுதேசமித்திரனில் வெளிவந்தது. "சுதேசப் பத்திரிகைகளின் மீது வெறுப்பு" எனும் தலையங்கத்தின் ஒரு பகுதி வருமாறு:

"நமது தேசத்தை ஆண்டு வரும் ஆங்கிலேயர்களை எந்த சத்துருக்களுக்கும் அஞ்சாமற் போன போதிலும், சுதேசப் பத்திரிகைகளுக்கு வெகு அஞ்சிக் கைப்படுவதாகத் தோன்றுகிறது. இப்பத்திரிகைகள் இத்தேசத்தாருக்குள் மலைபோல் வளர்ந்திருக்கும் அக்கியானத்தைப் போக்கடிக்க வல்லதென்று அனேக ஆங்கிலேயர்கள் அறிந்து எவ்விதத்திலாவது இப்பத்திரிகைகளை அடக்க வேண்டுமென்று முயன்று வருகிறார்கள்."[19]

இதழாசிரியர்கள் பத்திரிகைச் சுதந்திரத்தை மிக்கப் பொறுப்புடன் பேண வேண்டும் என்றும் சுதேசமித்திரன் தலையங்கம் ஒன்றில் பின்வருமாறு விளக்கியுள்ளார்.

"பத்திரிகையாசிரியர்கள் பெற்றிருக்கும் சுதந்திரமானது மிகவும் பொறுப்புள்ளது. பொதுவிஷயங்களாகட்டும், மனிதருடைய குணாகுணங்களென்ன, நடவடிக்கைகளென்ன, இவைகளை யாகட்டும், பயமில்லாமலும் தயவை எதிர்பார்க்காமலும் குணதோஷங் காட்டுவது இவர்களுடைய சுதந்திரமும் கடமையுமாகும். ஆயினும் இப்படிச் சுதந்திரமிருக்கிறதென்று தாறுமாறாகப் பிறர்க்குத் தீங்கு விளையும்

படியாகவும், தகுந்த முகாந்தரமில்லாமலும் எழுதக் கூடாது. பத்திராசிரியர்கள் செய்யக் கூடிய நன்மைக்களவில்லை. ஆனால் இவர்கள் செய்கிற தன்மையானது இவர்களிடத்தில் ஜனங்களுக்கு எவ்வளவு நம்பிக்கையிருக்கின்றதோ, அதற்குத் தக்கனவாயிருக்கும். இப்படியிருக்கும் நம்பிக்கையும் பத்திராசிரியர்கள் எவ்வளக் கெவ்வளவு அன்னியரது மனத்தைப் புண்படுத்தாமலும் சுய நன்மையைக் கருதாமலும் எழுதுகிறார்களோ, அதற்குத் தக்க தாயிருக்கும்."[20]

சுதேசமித்திரன் வாசகர்கள் பற்றி . . .

பத்திரிகையின் வளர்ச்சிக்காக சுற்றுப்பயணம் மேற் கொண்டார் 'ஜி.சு.' "தமிழ் நாட்டின் முக்கிய பட்டினங்களுக் கெல்லாம் விஜயம் செய்து ஜனத்தலைவர்களை எல்லாம் சந்தித்து, பத்திரிகையால் வரும் நற்பயனை எடுத்தோதினர்". இவ்வாறு திருவனந்தபுரத்தில் இருந்து வெளிவந்த 'தமிழன்' எனும் மாதப் பத்திரிகை 1914இல் குறிப்பிட்டுள்ளது.

சுதேசமித்திரன் உருவாக்கிய வாசகர்களைப் பற்றிப் பின்வருமாறு 'ஜி.சு.' பெருமிதத்துடன் கூறியுள்ளார்.

"நமது மித்திரனைச் சிறு கிராமங்களிலுள்ளவர்களும் படிப்பதால், அவர்களும் தேச சமாசாரங்களைத் தெரிந்துக்கொள்ள விருப்பம் உள்ளவர்களாயிருப்பதை நானே நேரில் கண்டிருப்பதுடன் பல நேரங்களும் என்னிடம் கூறிச் சந்தோஷப் பட்டிருக்கிறார்கள். ஆங்கிலப் பத்திரிகைகளைப் படிப்பவர்களை விட 'சுதேசமித்திரன்' படிப்பவர்கள், தேச க்ஷேமத்தில் அதிகக் கூர்மையான உணர்ச்சியுள்ளவர்கள். அநேகமாக அவர்கள் ஸ்வராஜ்யமே தம் இலக்காகக் கருதும் அமிதவாதிகள்."

அரசியல் கருத்தியல் கோட்பாடு

சுதேசமித்திரன், 'இந்து', பத்திரிகையுடன் சேர்ந்து தனது வாழ்க்கையை ஆரம்பித்தது. அப்பத்திரிகையின் நோக்கத்தையே சுதேசமித்திரன் தனது நோக்கமாகக் கொண்டது. அதாவது பத்திரிகைகள் அதிகம் இல்லாத காலத்தில் தேசத்திற்குச் செய்தியைப் பரப்பி அறிவைப் பெருக்கியும், படித்தவர்கள் சமான்ய ஜனங்கள் அபிப்ராயங்களை வெளிப்படுத்தி அதை உருவாக்கியும்,

ஜனங்களுக்கு வழிகாட்டியும் தேச சேவை செய்வதே பொதுநோக்காக இருந்தது.

தொடக்கக் காலத்தில் சுதேசமித்திரனில் பொதுவாக, 'இந்து' பத்திரிகைச் செய்திகளின் மொழிபெயர்ப்புகள் இடம் பெற்றன என்றும், சுதேசமித்திரன் நிருபர்கள் தரும் முக்கியமான செய்திகள். 'இந்து'விலும் பயன்படுத்தப்பட்டன.[21]

இந்து இதழின் அரசியல் நோக்கு சுதேசமித்திரன் அரசியல் கருத்தியல் கோட்பாட்டு உருவாக்கத்தில் தாக்கம் செலுத்தியுள்ளது.

1884இல் தோன்றிய சென்னை மகாஜன சபை, 1885இல் தொடங்கப்பெற்ற இந்திய தேசிய காங்கிரஸ் ஆகிய அமைப்புகளின் அரசியல் கொள்கைகளை சுதேசமித்திரன் ஆதரித்தது.

'சுதேசமித்திரன் பத்திரிகையும் தமிழ் நாடும்' எனும் கட்டுரையால், "தென் இந்தியாவில் தேசீய கக்ஷிக்கு மூலபலமாக சுதேசமித்திரன் பத்திரிகை யொன்றுதான் ஆரம்ப முதல் இன்று வரை ஒரே நெறியாக நிலை தவறாமல் நின்று வேலை செய்துகொண்டு வருகிறது'' என்று பாரதியார் 1920இல் எழுதியுள்ளார்.[22]

சுதேசமித்திரனின் தலையங்கங்கள்

ஜி. சுப்பிரமணிய ஐயர் காலத்தில் வெளிவந்த சுதேசமித்திரனின் தலையங்கங்கள் இதழின் பல்வேறு கருத்தியல் கோட்பாடுகளை விளக்கவல்லன. நாட்டுப் பற்று, சமூக சீர்திருத்தப் பற்று, மொழிப்பற்று, பொருளாதாரச் சுரண்டல், எதிர்ப்பு முதலானவற்றை விளக்கும் எண்ணற்ற தலையங்கங்கள் வெளிவந்துள்ளன.

1886இல் சென்னை அரசாங்கத்தின் பத்திரிகைத் துறை மொழிபெயர்ப்பாளர் திரு. சி.டி. மாக்லீன் என்பவர் அன்றைய சென்னை மாநில ஆளுநரிடம் அளித்த அறிக்கையில் 1886இல் வெளிவந்த தலையங்கங்களை தேர்வு செய்து மூன்று வகையாகப் பிரித்து சுதேசமித்திரன் ராஜத்துரோகத்தை வளர்த்ததாகக் குற்றம் சாட்டினார்.

1886இல் இந்திய தேசிய காங்கிரசில் தீவிர தேசிய எழுச்சியைத் தூண்டாத காலத்திலேயே சுதேசமித்திரன்

தலையங்கங்கள் ராஜத்துரோகமானவைகளாக இருந்தன என்றால், 1906 முதல் தேசிய அரசியல் வீறுகொண்டெழுந்த, வந்தேமாதர இயக்கம், சுதேசியக் கிளர்ச்சி காலத்தில் வெளிவந்த தலையங்கங்களைப் பற்றி மாக்லீன் இருந்திருந்தால் என்ன கூறியிருப்பாரோ தெரியவில்லை.

மாக்லீன் சுதேசமித்திரன் தலையங்கங்களைப் பின்வருமாறு மூன்றாக வகைப்படுத்தியுள்ளார்.[23]

1. சென்னை மாநிலத்திற்கு வெளியே நிகழும் நாட்டு நடப்புகளைப் பற்றிய எண்ணிக்கை 10.

2. சென்னை மாநிலத்திற்குட்பட்டு இனவேறுபாடுகள் பற்றிய சுட்டு இல்லாத செய்திகளைப் பற்றிய தலையங்கங்களின் எண்ணிக்கை 45.

3. ஆட்சியாளர்களுக்கும் - சுதேசிகளுக்கும் இடையே நிலவும் உறவுபற்றிய தலையங்கங்களின் எண்ணிக்கை 45.

பரவலாக அறியப்பெற்ற இதிகாச செய்திகளைப் பயன்படுத்தி வாசகர்களுக்குப் புரிகின்ற பாணியில் *மேம்பட்டு மிடங்களில்* தலையங்கங்கள் எழுதப்பட்டன. சான்றாக 17.5.1886இல் வெளிவந்த தலையங்கத்தில் ஆள்வோரின் ஆணவப் போக்கையும், சூழ்ச்சியையும் புரியும் வழியில் மகாபாரதத்தின் துரியோதனன், சகுனி ஆகியோரின் நோக்கு - போக்குகளைக் கொண்டு எடுத்துரைக்கப்பெற்றுள்ளது. இந்தத் தலையங்கத்தை மாக்லீன் ஆங்கிலத்தில் மொழிபெயர்த்து, அரசாங்கத்தின் பார்வைக்குக் கொண்டுவந்தார் என்பதும் குறிப்பிடத்தக்கது. எடுத்துரைப்புத் திறனுக்கான கருத்தியல் கோட்பாட்டிற்கு இந்தத் தலையங்கம் ஒரு சான்றாகும்.

இந்திய தேசிய காங்கிரஸ் தோன்றி இரண்டாண்டுகள் முடிவுற்று மூன்றாம் ஆண்டில் சென்னையில் தோன்றிய ஜனங்களினுடைய அனுதாபத்தையும் ஆதரவையும் 'பெறத் தொடங்கிவிட்டது' எனும் கருத்தைச் சுட்டிக்காட்டும் வண்ணம் 24-12-1887இல் சுதேசமித்திரனில் 'நாஷனல் காங்கிரஸ் சபை' எனும் தலையங்கம் வெளிவந்தது. இதன் ஒரு பகுதி, வருமாறு:

"வங்காளத்தில் ஐசுவரிய மிகுந்த பெரிய ஜமீன்தார்கள் எத்தனையோ பேர்களிலிருக்கிறார்கள். பம்பாயில் இராஜ ஐசுவரியம்

பெற்ற வர்த்தகர்கள் ஏராளமாயிருக்கிறார்கள். இவர்களைப் போல ஐசுவரியம் படைத்த வியாபாரிகளாவது பெங்காளத்திலுள்ளவர்களைப் போல் மிக ஐசுவரியம் படைத்த பெரிய ஜமீன்தார்களாவது மிகுதியாக இங்கு இல்லை. ஆகையால் கல்கத்தா - பம்பாய்வாசிகள் அவர்களுடைய ஐசுவரிய மிகுதியால் செய்யக்கூடியது. இவ்வித ராஜதானியில், ஜனங்களுடைய ஒற்றுமையாலும் அவர்கள் ஒன்றுகூடி குமுக்கமாயிருந்து ஊக்கமும் தேசாபிமானமும் காட்டி உழைப்பதினாலுமே கைகூடத்தக்கதாய் இருக்கிறது.

அனேக கிராமங்களில் குடிகள் 1 அணா முதல் காங்கிரஸ் சபைக்கு கையொப்பம் செய்து வந்ததையும் பார்த்து எவர்தான் காங்கிரஸ் சபை சாமான்ய ஜனங்களினுடைய அனுதாபமும் ஆதரவும் பெற்றதில்லை யென்று சொல்லத் துணிவார்கள்."[24]

பொதுமக்கள் பிரதிநிதித்துவம் தேவை

1887இல் சென்னையில் கூடிய இந்திய தேசிய காங்கிரஸ் மகா சபைக்கு 'சாமான்ய ஜனங்க'ளின் ஆதரவு திரட்டப்பட்ட போதிலும், காங்கிரசில் ஆதிக்கம் செலுத்திய தலைவர்களில் பெரும்பாலோர் வக்கீல்களே. இவர்கள், சென்னை சட்டமன்றத்திலும் ஆதிக்கம் பெற்றனர். இந்த நிலைமையை சுதேசமித்திரன் கண்டித்து 1893 மே 5இல் வெள்ளிக்கிழமையன்று, 'வக்கீல்! வக்கீல்! எங்கும் வக்கீல்!' எனும் துணைத்தலையங்கத்தை எழுதியது. இந்தத்துணைத் தலையங்கம், 'சென்னை சட்டநிரூபண மெம்பர்கள் எலெக்ஷன்' எனும் தலையங்கத்தைத் தொடர்ந்து எழுதப்பெற்றது. இந்தத் தலையங்கத்தில் பின்வரும் பகுதி காங்கிரசின் பொதுமக்கள் பிரதிநிதித்துவக் கோட்பாட்டைப் பற்றிய ஆழ்ந்த சிந்தனையை வெளிப்படுத்தியது.

"பி.ஏ., பி.எல்.களும், வக்கீல்களும் போதுமானவரையில் சட்ட நிரூபணசபையில் இருக்கிறார்கள். ஆனால் விவசாயம், கைத்தொழில், வியாபாரம் இந்த விஷயங்களில் விசேஷ அனுபவமும் - இவைகளை விருத்தி செய்வதற்கேற்ற ஆலோசனை சொல்லத்தக்கவர்களும் சட்ட நிரூபண சபையில் ஒருவர் கூடவில்லை"[25]

இதைத் தொடர்ந்து 'வக்கீல்! வக்கீல்! எங்கும் வக்கீல்!' எனும் துணைத்தலையங்கம் வெளிவந்தது. இதன் ஒரு பகுதி வருமாறு:

"இப்பொழுது புதிய நிபந்தனைகளின்படி இச்சென்னை சட்ட நிருபண சபைக்கு மெம்பராக வேண்டுமென்று பிரயத்தனப்படும் சுதேசிகள் அநேகமாய் எங்கும் வக்கீல்களே!. . . இப்படி வக்கீல்களே அச்சபைக்கு நியமிக்கப்பட்டு வந்தால் கவுரவம் அச்சபைக்குக் குறைவுபடும். . . இச்சமயத்தில் அங்குமிங்குமுள்ள மற்ற தொழிலாளிகளை நமது தேசத்தில் சட்ட நிருபண சபைக்கு நியமிக்க வேண்டும். இப்படிச் செய்தால்தான் அச்சபை கவுரப்படும்."[26]

சுதேசமித்திரன் கருத்தியல் கோட்பாட்டில் காங்கிரஸ் மகாசபையின் வருக்க உள்ளடக்கம் பற்றிய சிறு சிந்தனைப் பொறியும் இடம் பெற்றுள்ளது, குறிப்பிடத்தக்கது.

சாதிக்கொரு நீதியா?

சமூகச் சீர்திருத்தப் பிரசாரத்திலும் சுதேசமித்திரனது கருத்தியல் கோட்பாட்டை உருவாக்கினார் சீர்திருத்தச் செம்மல் ஜி. சுப்பிரமணிய ஐயர். 'இந்து' பத்திரிகை ஆசிரியராக அவர் சமூக சீர்திருத்தத்திற்காகப் போர்முரசு கொட்டி எழுதியத் தலையங்கங்கள், தமிழக சமூக சீர்திருத்த இயக்க வரலாற்று ஆவணங்களாகத் திகழ்கின்றன. சுதேசமித்திரனிலும் சமூக சீர்திருத்தச் செய்திகளை வெளியிட்டு ஆதரவளித்தார்; தலையங்கங்கள் எழுதினார். விரிவஞ்சி, இரு தலையங்கள் மட்டும் இங்குக் குறிப்பிடப்படுகின்றன.

'சட்ட நிருபணத்தில் ஓர் விநோதம்' எனும் தலைப்பில் 11-6-1989இல் வெளிவந்தத் தலையங்கத்தில் சாதிக்கொரு நீதியே தம் கொடுமை நிறுத்தப்படவேண்டும் என்று சென்னை அரசாங்கத்திடம் முறையிடப்பட்டது. "எவ்விதமான கொடூரமான கொலை செய்த போதிலும் பிராமணர்களும் ஸ்தீரீகளும் சட்டத்தில் மிக்க கொடூர தண்டனையாகிய தூக்கில் வாங்கும் தண்டனை விதிக்கப்பட மாட்டாது" எனும் ஒரு சட்டத்தைத் திருவாங்கூரில் தாணுப்பிள்ளை என்னும் அரசு தலைமைச் செயலாளர் கொண்டு வந்தார். இதை எதிர்த்து சுதேசமித்திரனில் எழுதப்பெற்ற முற்கூறியத் தலையங்கத்தின் ஒருபகுதி பின்வருமாறு:

"கொலை செய்யும் இருவருள் ஒருவன் ஒரு ஜாதியான படியினால் ஒருவித தண்டனையும், மற்றொருவன் வேறு ஜாதியான

படியினால் வேறு தண்டனையும் விதிப்பது மிகவும் கொடூரம். . . இவ்விதம் கொடூர மூட பக்தியைத் திருவாங்கூர் கவர்ன்மெண்ட் உடைத்தாயிருந்த போதிலும் இவைகளை யெல்லாம் இச்சென்னை கவர்ன்மெண்டார் அவர்களிடத்தி லிருந்து நீக்கி விடுவார்கள் என்று நம்புகிறோம்".

"பழைய ஆசாரங்களை மாற்றிப் புதிய ஆசாரங்களை அனுஷ்டித்து சில உத்தம குணங்களைப் பெறவேண்டும்" என்பதை உணர்த்துவதற்காகப் 'பழைய ஆசாரங்களும் புது நாகரிகமும்' எனும் தலைப்பில் 15-4-1005இல் சுதேசிமித்திரனில் ஒரு துணைத் தலையங்கம் வெளிவந்து இதன் ஒரு பகுதி, வருமாறு:

"பழைய ஆவணங்களில் எவை தற்கால நாகரிகத்தையும் மாறுபட்ட நிலைமைகளையும் நோக்கி நமக்குத் தீங்கு செய்யாதவையாயிருக்கின்றனவோ, அவைகளை வைத்துக்கொண்டு எவை தற்கால நாகரிகங்களயைும் மாறுபட்ட நிலைமைகளையும் நோக்க மாறுபட்டு நம் நன்மைக்கு அவசியமோ அவைகளைத் தைரியமாக மாற்றுதலே—தேச நன்மைக்குள்ள நெறியென்று ஏற்படுகிறது. ஆசாரங்கள் என்பன நாகரித்தின் வெளிக்குறிகள் - அதன் உள்பட்ட சாரம் வேறு. அந்த சாரத்தை ஹிந்துக்கள் வெகுவாக இழந்து விடுவார்களானால் அவர்களை விட அற்பர்கள் எவருமிலர்."

சுதேசமித்திரனில் வெளிவந்த பல சமூக சீர்திருத்தத் தலையங்கங்களை தொகுத்து 1914இல் சுதேசமித்திரன் அலுவலகம் தனி நூலாக வெளியிட்டது. இந்த நூலைப்பற்றிய ஒரு விளம்பரம் சுதேசமித்திரனில் ஜூலை 3, 1918இல் பக்கம் மூன்றில் வெளிவந்துள்ளது. இதில் இந்த நூல் "ஸ்திரீகளுக்கு அவசியமான புத்தகம்" எனும் ஒரு குறிப்பு உள்ளது. பெண்கள் முன்னேற்றம் அவாவிய 24 தலைப்புகள் இந்த நூலில் உள்ளதாகவும் விளம்பரம் கூறியது. ஆகவே, சுதேசமித்திரன் பெயர் விடுதலைப் புராணத்தையும் கருத்தியல் கோட்பாடாகக் கொண்டது என்பது புலனாகும்.

மொழிப்பற்று பற்றியக் கோட்பாடு

பண்டைய பெருமையை மட்டும் பேசும் மொழிப்பற்றுடன், தமிழ் மொழியை நவீன காலத் தேவைகளுக்கு ஏற்ப வளர்த்து

சாதாரண பொதுமக்களிடம் கொண்டுபோகப் பாடுபட்டவர் 'சுதேசமித்திரன்' ஆசிரியர் ஜி. சுப்பிரமணிய ஐயர்.

சுதேசமித்திரன் தமிழ்மொழிப்பற்று கருத்தியலை, 'நம் பண்டிதர்கள்' சமஸ்கிருதப் படிப்பும் தேவபாஷைப் படிப்பும்', 'ஆங்கிலங் கலந்த இந்தியர்களும் கல்லாத ஜனங்களும்' எனும் மூன்று தலையங்கங்கள், வாயிலாக அறிகின்றோம்.

1. நம் பண்டிதர்கள்

9-8-1898இல் வெளிவந்த துணைத் தலையங்கத்தில் தமிழ் விடைத்தாள்களைத் திருத்தும் பொறுப்பிற்குத் தமிழ்ப் பண்டிதர்களையே நியமிக்க வேண்டும் என்று குறிப்பிட்டு பின்வரும் கருத்தும் கூறப்பட்டுள்ளது.

"இவ்வகுப்பாருக்கு உதவி செய்ய வேண்டியது நமது ஜன சமூககத்தாரையும், நமது யூனிவேர்ஸிடிகளையும், நமது துரைத்தனத்தையும் பொறுத்த கடமை."

இந்தத் தலையங்கத்தின் பின்வரும் கருத்தும் பண்டைத் தமிழ் இலக்கியப் பாதுகாப்புத் தேவையை உணர்த்தியது.

"கிணற்றில் விழுந்தவர்களை தைரியமாக எடுத்து மீட்போருக்குச் சீமையிலுள்ள சங்கத்தார் வெகுமதியளிப்பதுபோல, கரையான் வாயினின்றும மீட்பித்து அரிய கிரந்தங்களை உயிர்கொடுத்து எழுப்பி உலகம் முழுவதும் உலாவச் செய்யும் தீரர்களுக்கு ஏதேனும் வெகுமதியும் செய்யவேண்டும்."

தமிழ்ப் புலவர்கள் ஏட்டுச் சுவடிகளை கண்டெடுத்து பதிப்பிக்கும் முயற்சிக்கு ஜி. சுப்பிரமணிய ஐயர் அளித்த உதவியை ஏடுகாத்தத் தமிழறிஞர்களுள் ஒருவரான யாழ்ப்பணம் சி.வை. தாமோதரம் பிள்ளை தமது கலித்தொகைப் பதிப்பில் (1887) நன்றியறிதலுடன் குறிப்பிட்டுள்ளார்.

2. சமஸ்கிருதப் படிப்பும் தேச பாஷைப் படிப்பும்

இந்தத் தலையங்கம் சுதேசமித்திரனில் 5-4-1905இல் வெளிவந்துள்ளது. இதன் ஒருபகுதி, வருமாறு:

"காலேஜ்களில் தேசபாஷை கற்பிக்கப்பட வேண்டியதில்லை யென்றும், சமஸ்கிருதம் கட்டாயமாகப்

படிப்பிக்க வேண்டுமென்றும் சர்வகலாகாலம் பரிசீலனைக் கமிஷனர் சிபார்சு செய்ய, அதை நாம் சரியல்ல வென்று வாதித்த போது நம் வாதத்தை வெகுபேர் ஒப்புக் கொள்ளவில்லை. யோசித்துப் பார்த்தாலும் தேச பாஷைகள் அபிவிருத்தியாவது தேச க்ஷேமத்துக்கு எவ்வளவு தூரம் அவசியம் என்பது விளங்கும். சர்வ ஜனங்களும் அந்தரங்கத்திலும் பகிரங்கத்திலும் பேசுவது தேச பாஷையே தவிர சமஸ்கிருதப் பாஷையல்ல. சமஸ்கிருத பாஷையைக் கற்றலும் ஆதரித்தலும் தேசாபிமானத்தைக் காட்டினாலும் தேசபாஷையைக் கற்பதும் ஆதரிப்பதும் தேசாபிமானத்தைக் குறைவாகக் காட்டக்கூடியனவல்ல"

பல்கலைக்கழகம் தாய்மொழிக் கல்வியைப் பரப்புவதில் ஆர்வம் காட்டாததைக் கண்டித்த ஜி. சுப்பிரமணிய ஐயர் 1899இல் 'இந்து' நாளேட்டிலும் "REVIVAL OF TAMIL LEARNING" எனும் தலையங்கத்தை எழுதியுள்ளனர்.[27]

3. *'ஆங்கிலங் கற்ற இந்தியர்களும் கல்லாத ஜனங்களும்'*

ஆங்கிலம் கற்றவர்கள் மேற்கொள்ளவேண்டிய கடமையொன்றைக குறிப்பிடும் இந்தத் தலையங்கம் 6.6.1905இல் வெளி வந்தது. இதன் இறுதிப் பகுதி, பின்வருமாறு:

"நம்மவர்க்கு ஆங்கிலத்தில் அவ்வளவு மோகமிருக்கின்றது. இந்த மோகம் தீங்கென்று நாம் சொல்லவில்லை. நாம் தாய் மடியில் கற்றுக் கொண்ட தேச பாஷையிலும் அபிமானம் வைத்து அதன்மூலமாகத் தம் தேசத்தவராகிய சகோதரர்களது அறிவைப் பரவச்செய்வதில் ஊக்கம்காட்ட வேண்டும். அப்படி ஊக்கங் காட்டினால் கற்றவர் கல்லாதவர் இரு வகுப்பார்க்கும் மத்தியில் இப் போதிருக்கும் ஆழ்ந்த பள்ளத்தாக்கானது ஒருவாறு பாலங் கட்டி இணைக்கப்பட்டது போல இணைக்கப்படக்கூடும்"

ஆங்கிலம் கற்றவர்கள் தமிழ்மொழியில் ஆர்வம் காட்ட மறுப்பதைக் கண்டித்த ஜி. சுப்பிரமணிய ஐயர் 1906 செப்டம்பரில் சுதேசமித்திரனில் பின்வருமாறு சீற்றமுடன் சாடினார்.

"தமிழ் மட்டுமே தெரிந்த ஜனங்களில் சிறுபாலோர் தமிழ் விஷயத்தில் ஒருவிதமான மூடபக்தியாவது வைத்துக்கொண்டிருக் கிறார்கள். ஆனால் ஆங்கிலம் கற்றுணர்ந்தவர்கள் இவ்விஷயத்தில்

தமது கடமையை முற்றும் மறந்துவிடுகிறார்கள். இவர்கள் தமிழ் பாஷை விஷயத்தில் கொண்டிருக்கும் எண்ணத்தையும், இவ்விஷயத்தில் இவர்கள் வகிக்கும் அசிரத்தையையும் டாக்டர் போப்பைப் போன்ற ஆங்கிலேயர்கள் அறியும் பக்ஷத்தில் இவர்கள் இருக்கும் திசையை நோக்கிக் காறியுமிழும் வண்ணமாக நம்மவர்கள் நடந்துக்கொள்கிறார்கள்."

தென்னாப்பிரிக்க இந்தியர் அறப்போருக்கு ஆதரவு

தென்னாப்பிரிக்கா வெள்ளையர் அரசு இனவொதுக்கல் முறை, ஒழுக்கமுறைக் கூட்டங்களை இந்தியர்களுக்கு எதிராக ஏவிய பொழுது 1893 முதல் 1914 வரையில் அகிம்சை, சத்தியாக்கிரகம் எனும் புதிய அறப்போர் முறைகளைக் கொண்டு காந்தியடிகள் போராட்டம் நடத்தினார். இந்த அறப்போராட்டத்தை ஆதரித்தும், தென்னாப்பிரிக்க இந்தியர் பிரச்சனைகளைத் தமிழ்நாட்டு மக்கள் அறிய 1892முதல் 1914 வரையில் ஜி. சுப்பிரமணிய ஐயர் கால கட்டத்தில் சுதேசமித்திரன், செய்திகள், தலையங்கங்கள் வாயிலாக வாய்ப்பளித்தது. தலையங்கங்கள் மட்டும் எழுபதுக்கும் மேற்பட்டவையாகும்.

22-9-1906இல் 'நேடாவில் இந்தியர்கள்' எனும் தலைப்பில் எழுதப்பெற்றத் தலையங்கத்தில் தென்னாப்பிரிக்க வெள்ளையர் அரசின் இனத்து வேஷக் கொடுங்கோன்மை விரிவாக எடுத்துரைக்கப் பெற்றுள்ளது. 24-12-1912இல் எழுதப்பெற்றத் தலையங்கத்தில் 'மிஸ்டர் எம்.கே. காந்தி' பின்வருமாறு பாராட்டப் பட்டுள்ளார்.

'தென்ஆப்பிரிக்கா இந்தியரின் கஷ்டங்களை நிவர்த்திசெய்ய வேண்டுமென்று தீக்ஷை செய்துகொண்டிருக்க மிஸ்டர் காந்தி, ஒரு மகாத்துமாவோ, ஈஸ்வராவதாரமோ வென்று உலகோர் நினைக்கும்படி தன் மறுப்பையும் உறுதியையும் சமாதானத்தையும் காட்டி வருகின்றார்."

சுதேசமித்திரனுக்குத் தென்னாப்பிரிக்காவில் சந்தாதாரர்கள் நிறையபேர் இருந்தார்கள். நிருபநேயர்களும் பலர் இருந்தார்கள். 1914ஆம் ஆண்டுவரை சுதேசமித்திரனில் வெளிவந்த தென்னாப்பிரிக்கத் தமிழர்கள் கடிதங்களின் எண்ணிக்கை 195. சுதேசமித்திரன் கருத்தியல் கோட்பாடுகளில் வெளிநாட்டில் வாழும் தமிழர்கள் பிரச்னைகளைப் பரிவுடன் நோக்கியது ஒன்றாகும்.

சுதேசமித்திரன் மீது வழக்குகள்

13-1-1908 முதல் 25-6-1908 வரையில் சுதேசமித்திரனில் வெளிவந்த பல செய்திகள் பல ராஜத்துவேஷக் குற்றச்சாட்டுகளுக்கு உரியனவாகச் சென்னை அரசினால் கருதப்பெற்று வழக்குகள் தொடுக்கப்பட்டன. இவற்றுள் பதினாறு செய்திகள் கப்பலோட்டிய தமிழர் வ.உ.சி.யின் 'சுதேசி ஸ்டீம் நேவிகேஷன் கம்பெனி" மீது ஏவப்பெற்ற அடக்குமுறைகள் மீதான கண்டனங்கள். தென்னாப்பிரிக்கா இந்தியர்கள் அறப்போர் தொடர்பானச் செய்திகள் நான்கும் ராஜத்துவேஷம் பிரசாரத்திற்குரியன என்று தொகுக்கப்பெற்றன. இறுதியாக ஆறு கட்டுரைகள் மட்டும் ராஜத்துவேஷ வழக்கிற்குரியன என்று முடிவு செய்யப்பெற்றது. இதன் விளைவாக ஆகஸ்ட் 21, 1908இல் ஜி. சுப்பிரமணிய ஐயர் கைது செய்யப்பட்டார். ஆளுநர் சபையில் உறுப்பினராகவிருந்த வி. கிருஷ்ணசாமி ஐயர், 'அட்வகேட் ஜெனரல்' பி.எஸ். சிவசுவாமி ஐயர் முதலானோர் முயற்சியால் சில நிபந்தனைகளுக்கு உட்பட்டு செப்டம்பர் 1908இல் விடுதலை செய்யப்பட்டார். இரு வாரங்கள் சிறையில் இருந்தார். அரசிடம் விசுவாச உறுதிமொழி, நன்னடத்தை ஜாமீன் முதலானவை சுதேசமித்திரன் கருத்தியல் கோட்பாட்டிற்குப் பெரும் சோதனைகளை ஏற்படுத்தின. என்றாலும், கருத்தியல் கோட்பாட்டின் தீவிரம் காரணமாகச் சிறை சென்ற பத்திரிகையாளர் எனும் 'புகழ்' பெற்றார்.

சுதேசமித்திரன் 1915 ஆகஸ்ட் 15இல் அப்பொழுது 'இந்து' பத்திரிகையாசிரியராகவிருந்த ஏ. அரங்கசாமி ஐயங்கார் பொறுப்பில் வந்தது. 1915 நவம்பர் 1இல் 'இந்து' பத்திரிகையில் இருந்து விலகி சுதேசமித்திரனின் ஆசிரியரானார், அரங்கசாமி ஐயங்கார். (இவருடைய காலகட்டத்தில் '1915 - 1927) தேசிய அரசியலில் இயங்கிய அன்னி பெசண்ட்டின் 'ஹோம்ரூல்' இயக்கம், சி.ஆர். தாசின் 'சுயராஜ்யக் கட்சி' இயக்கம், காந்தியடிகளின் ஒத்துழையாமை இயக்கம் முதலானவற்றில் சுதேசமித்திரனின் கருத்தியல் கோட்பாடு கருத்து செலுத்தியது. சுயராஜ்யக் கட்சியில் தீவிரமாகப் பங்கேற்ற அரங்கசாமி ஐயங்கார், காந்தியடிகளின் ஒத்துழையாமை இயக்கத்தை ஆதரிப்பதில் ஆர்வம் காட்டவில்லை.

இவர் காலத்தில் பாரதியார் கட்டுரைகள், கதைகள் சுதேசமித்திரனில் தொடர்ந்து வெளிவந்தன. சுதேசமித்திரனின்

'வருஷ அனுபந்தங்கள்' வெளியிடப்பெற்றன. இவை இதழின் இலக்கியப் பணியைச் செழுமைப்படுத்தின.

இவர் காலத்தில் 'சுதேசமித்திரன்' வாரப் பதிப்பாக 1924இல் ஆங்கில மொழியில் வெளிவந்தது குறிப்பிடத்தக்கது.

1928இல் சுதேசமித்திரனின் ஆசிரியராக சி.ஆர். சீனிவாசன் பொறுபேற்றார். இவர் 1915 முதல் சுதேசமித்திரன் பத்திரிகையில் மேலாளராகவும் துணையாசிரியராகவும் பணியாற்றியுள்ளனர். இவர் காலத்தில் இதழின் கருத்தியல் காங்கிரஸ் பிரசாரத்திற்கு உறுதுணையாக விருந்தது. சி.ஆர். சீனிவாசனுக்குப் பிறகு சுதேசமித்திரன் வரலாற்றில் தேய்பிறைக் கட்டம் தொடங்கிவிட்டது. நிருவாகப் பொறுப்பு, ஆசிரியர் பொறுப்பு கைமாறி ஒரு கட்டத்தில் பதினாறு ஆண்டுகள் வெளிவராமல், இறுதியில் முன்னாள் ஐ.ஏ.எஸ். அதிகாரி ஆர். நாகராசன் பொறுப்பில் 3.11.1984இல் சுதேசமித்திரன் காலை இதழாக வெளிவந்தது. வழக்கம் போல் பொருள் இழப்பின் சுமை தாங்கப்படாமல் 1-5-1996இல் 'சுதேசமித்திரன்' ஒரேயடியாக நின்றுவிட்டது. *முறையான* நூற்றாண்டு விழா சுதேசமித்திரனுக்கு வாய்க்கவில்லை என்பது வரலாற்று சோகமாகும்.

பாரதியார் பார்வையில் சுதேசமித்திரன்

1904 நவம்பரில் சுதேசமித்திரனின் துணையாசிரியர் குழுவில் ஒருவராகச் சேர்ந்த பாரதியார், 1904முதல் 1906 ஏப்ரல் வரையில் பெரும்பாலும் மொழிபெயர்ப்பாளராகப் பணியாற்றினார். பாரதியார் இதழியல் பயிற்சியைச் சுதேசமித்திரனில் பெற்றார். ஜி.சு. வை தமது பத்திரிகைத் துறை குருவாகவும் கருதினார்.

1906 மே 9இல் சென்னையில் இருந்து வெளிவந்த 'இந்தியா' இதழின் ஆசிரியரானப் பிறகு சுதேசமித்திரன் இதழை அவ்வப்பொழுது பாரதியார் விமர்சனம் செய்துள்ளார். சுதேசமித்திரன் திலகர் தலைமையிலான நேஷனலிஸ்ட் பார்ட்டியை ஆதரிக்கத் தயங்கியதையும் பிறகு முற்றிலுமாகப் புதிய கட்சியை அதாவது திலகர் கட்சியைச் சார்ந்துவிட்டது என்று பாரதியார் குறிப்பிட்டுள்ளார்.

1920 நவம்பரில் சுதேசமித்திரனில் மீண்டும் பாரதியார் துணையாசிரியரானார். பாரதியாரின் பலவகைப்பட்ட கட்டுரைகள், சிறுகதைகள், அரசியல் குறிப்புகள் சுதேசமித்திரனின் புதிய பரிமாணத்திற்கு ஆக்கமளித்தன.

தத்துவ விவேசினி – தமிழில் முதல் நாத்திக இதழ்

தமிழ் இதழியல் வரலாற்றில் நாத்திகவாத கருத்தியல் கோட்பாட்டை அறிமுகப்படுத்தி வலியுறுத்திப் பிரசாரம் செய்த இதழ் 'தத்துவ விவேசினி' எனும் இதழாகும். சென்னையில் 1878இல் தோன்றிய 'தத்துவ விசாரணி' எனும் வார இதழ், 1882 ஜூலை மாதம் முதல் 'தத்துவ விவேசினி' எனும் பெயர் மாற்றம் பெற்று ஞாயிறு தோறும் வெளிவந்தது.

இது இந்து சுயக்கியான சங்கத்தின் சார்பில் வெளிவந்தது. "HINDU FREE THOUGHT UNION" எனும் அமைப்பின் தமிழாக்கமாக, இந்தச் சங்கத்தின் பெயர் அமைந்தது.

"இந்து சுயக்கியான சங்கத்தாரால் பரிபாலிக்கப்பட்டு வருகின்ற வாராந்தர ஆங்கிலோ திராவிட சுயாக்கியான பத்திரிகை" என்று தத்துவ விவேசினி சுய அறிமுகம் செய்துகொண்டது.[28]

ஆங்கிலோ திராவிட "பத்திரிகை எனும் குறிப்பிற்கு ஏற்ப" 'THE THINKER' என்று நான்கு பக்கங்களிலும் ஆங்கிலத்திலும் 'தத்துவ விவேசினி' என்று நான்கு பக்கங்களிலும் சேர்ந்து எட்டு பக்கங்களாக இணைந்து வெளிவந்தது. இதன் அலுவலகம் சென்னை முத்தியாலுபேட்டை இலிங்க செட்டித் தெருவில் இருந்தது.

தத்துவ விவேசினியின் ஆசிரியர் பு. முனிசுவாமி நாயகர். "மதப்பித்தேறிய அனைவருடைய அஞ்ஞான இருளை ஓட்டச் சகோதர வாஞ்சையுடன் முயலா நின்றது" என்று 'தத்துவ விவேசினி'யை சமகால இதழான 'ப்ரம்ப வித்தியா' (அக்டோபர் 1886, ப.81) குறிப்பிட்டுள்ளது.

தமிழ்ப் பற்றும் இனமானமும் மூடநம்பிக்கை எதிர்ப்பும் சமூக சீர்திருத்தப் பிரசாரமும் பகுத்தறிவுவாதமும் கடவுள் மறுப்பும் தத்துவ விவேசினியின் கருத்தியல்களாகும். "ஆஸ்திக - நாஸ்திக சம்வாதம்" எனும் தொடர்பானவை 1884 டிசம்பர் முதல் 1855

ஆகஸ்ட் வரையில் வெளிவந்துள்ளது. இக்கட்டுரையாளர் பார்வைக்கு நவம்பர் 28, 1886 வரையிலான இதழ்கள் கிடைத்தன. 1888ஆம் ஆண்டிற்கான மெட்ராஸ் நேடிவ் நியூஸ் பேப்பர் ரிப்போர்ட்டில் தத்துவ விவேசினி வெளிவந்ததற்கான குறிப்பு உள்ளது.

இதன் ஆங்கிலம் பகுதியின் பெயரான 'THE THINKER', தமது அறிவிப்பில், "A CRUSADE AGAINST, CUSTOM, POVERTY AND PROSTITUTION" என்று பிரகடனப்படுத்திக் கொண்டது.

இரு பகுதிகளும் அக்காலத்தில் பிரபல நாத்திகராக விளங்கிய சார்லஸ் பிராட்லாவின் (1833 - 1891) நாத்திகர் கொள்கையைப் போல, தத்துவ விவேசினி, சைவ, வைணவ, பிராம்மணிய இந்து சமய எதிர்ப்பில் ஈடுபட்டது.

1886 சனவரி 3 முதல் ஆங்கிலத்தில்தான் இதழ் எட்டு பக்கங்களிலும், தமிழில் தனி இதழ் நான்கு பக்கங்களிலும் வார இதழ்களாக வெளிவரத் தொடங்கின.

'இந்தியா' - வார இதழ்

பிரிட்டிஷ் இந்தியாவில் சென்னை நகரத்திலிருந்தும் பிரெஞ்சு இந்தியாவில் புதுச்சேரியில் இருந்தும் இரண்டு கால கட்டங்களில் 'இந்தியா' வெளிவந்தது. சென்னையில் முதல் இதழ், மே 9, 1906இல் வெளிவந்தது. கடைசி இதழ் செப்டம்பர் 5, 1908இல் வெளிவந்தது. புதுச்சேரியில் முதல் இதழ் அக்டோபர் 10, 1908லும், கடைசி இதழ் மார்ச் 12, 1910லும் வெளிவந்தது. சென்னையிலும் புதுச்சேரியிலும் பாரதியாரே ஆசிரியராக விருந்தார்.

திலகர் தலைமையிலான தீவிரவாத தேசியக் கட்சியான 'புதிய கட்சி' (பாரதியார் வைத்த பெயர்) யின் 'ஒரே பிரதிநிதியாய்' 'இந்தியா' வெளிவந்தது என்று பாரதியாரே குறிப்பிட்டுள்ளார். 'சென்னை மாநில அரசியலின் பரிணாம வளர்ச்சி' எனும் ஆங்கிலக் கட்டுரையில் (1918இல் எழுதப்பெற்று அவர் மறைவிற்கும் பல ஆண்டுகள் கழிய 1962இல் 'இந்து'வில் வெளிவந்தது) பத்திரிகையின் கருத்தியல் பின்வருமாறு குறிப்பிடப்பட்டுள்ளது.

"அரசியல் சாசனத்திற்கு உட்பட்ட வழிமுறைகள் வாயிலாக பரிபூரண விடுதலைக்காக 'இந்தியா' வாதாடியது. இந்த

வழிமுறைகள் காங்கிரசின் 'கையேந்தும்' (MENDICANCY) முறைகளில் இருந்து முற்றிலும் மாறுபட்டது. . . . இளைஞர்கள் எதிர்பார்த்த வரலாற்றுப் பாத்திரத்தை 'இந்தியா' எடுத்துக்கொண்டது.

கேலிச்சித்திரங்கள்

இந்தியாவின் கருத்தியல் கோட்பாட்டிற் பாரதியார் 'கார்ட்டூன்' என்று சொல்லப்படும் அரசியல் கேலிச்சித்திரங்களை முதலில் பயன்படுத்தினார். 'கார்ட்டூன்' என்பதை விகட சித்திரம் என்பார், பாரதியார். பாரதியாருக்கு முன் சமூக சீர்திருத்தம் தொடர்பான கார்ட்டூன்கள் சில வெளிவந்துள்ளன' ஆனால் அரசியல் பிரசாரத்திற்காகக் கேலிச்சித்திரங்களை அறிமுகப்படுத்தி, சக்தி வாய்ந்த கருத்தியலாகப் படைத்த முதல்வர் பாரதியாரே.

1909 மார்ச் 13இல் "இந்தியா பத்திரிகையில் ஓர் புதிய அபிவிருத்தி" எனும் தலைப்பில் பாரதியார் எழுதியக் கட்டுரையில் குறிப்பிடப்பெற்றுள்ள பின்வரும் செய்தி அரசியல் கேலிச் சித்திரங்கள் படைப்பின் மூலவர் அவரே என்பதைச் சுட்டிக்காட்டுகின்றது.

"தமிழ் நாட்டு வர்த்தமானப் பத்திரிகைகளில் நமது பத்திரிகையொன்றுதான் விகடச்சித்திரங்களைப் பதிப்பித்து வருவதென்ற விஷயம் நேயர்களுக்குத் தெரிந்திருக்கும். ஆனால் அடுத்த வாரம் முதல் இன்னுமொரு புதிய அலங்காரம் நமது பத்திரிகைக்குச் செய்யக் கருதியிருக்கின்றோம். அதாவது தலைப்பக்கத்திலுள்ள ஒரு சித்திரம் மட்டுமேயன்றி, பக்கத்துக்கும் பக்கமுள்ள முக்கியமான வர்த்தமானங்களை விளக்குவதன் பொருட்டு அங்கங்கே சிறிய சிறிய படங்களும் சித்திரங்களும் போடுவதாக உத்தேசம். தென்னிந்தியாவிலே இம்மாதிரி ஏற்பாடு, தமிழ், இங்கிலீஷ், தெலுங்கு, கன்னடம் முதலிய எந்த பாஷைப் பத்திரிகைகளிலும் இதுவரை கிடையாது" (ப. 4)

'இந்தியா' பற்றி (பாரதியாரின் இதழியல் கருத்தியல் கோட்பாடுகள் எனும் தனிக்கட்டுரையில் விரிவாகக் கூறப்பட்டுள்ளன)

தேசபக்தன்

சென்னை மாநிலத்தில் 1917இல் தோன்றிய 'ஜஸ்டீஸ் பார்ட்டி' எனும் நீதிக்கட்சியின் தோற்றமும், தமிழில் அதன் பிரசுர

இதழாக 1-6-1917இல் வெளிவந்த 'திராவிடர்' நாளேடும் இந்திய தேசிய காங்கிரசிற்கு எதிராகவும், பிராமணரல்லாதர் முன்னேற்றத்திற்காகவும் பாடுபட்டன.

புதிதாகத் தோன்றிய இந்த அரசியல் சமூகச் சூழலில் காங்கிரஸ் கட்சிக்குப் புதிய வலிமையையும் பொலிவையும் உருவாக்க 'தேசபக்தன்' நாளிதழ் 7-12-1917இல் திரு.வி.க.வை ஆசிரியராகக் கொண்டு தோன்றியது.

திலகர், பெசண்ட் அம்மையார், காந்தியடிகள் ஆகியோர் கொள்கைகளைத் தீவிரமாக ஆதரிப்பதையும், நீதிக் கட்சி திராவிடனின் "வகுப்புவாதம் பிரசாரத்தையும் காங்கிரஸ் எதிர்ப்புப் பிரசாரத்தையும் முறியடிக்கத் தக்கவகையில் தேசபக்தர் கருத்தியல் கோட்பாடுகளை உருவாக்கினார் திரு.வி.க.

'திராவிடன்' இதழிற்கும் 'தேசபக்தன்' இதழிற்கும் இடையே நிகழ்ந்த வாதப் போரைக் குறித்துத் திரு.வி.க. தமது "வாழ்க்கைக் குறிப்புகள்" நூலில் பின்வருமாறு எழுதியுள்ளார்.

"தேசபக்தன் வகுப்புவாதக் கொள்கையைத் தேய்த்தல் வேண்டுமென்ற நோக்குடன் தோன்றினவன். 'திராவிடன்' அவ்வாதத்தை வளர்த்தல் வேண்டுமென்ற நோக்குடன் தோன்றினவன். வகுப்பு வாதத்தால் விளையுந் தீமைகளைத் 'தேசபக்தன்' எடுத்துக்காட்டுவான். நலங்களைத் 'திராவிடன்' எடுத்துக்காட்டுவான். வகுப்பு வாதம் புன்மை நாட்டுக்கு நன்கு விளங்கியது. 'தேசபக்தன்' தோன்றியிராவிட்டால் வகுப்புவாதம் கிளைத்து ஓங்கியிருக்கும். வகுப்புவாதக் கட்சியின் நச்சுப்பல் தேச பக்தனால் பிடுங்கப்பட்டது. அக் கட்டுரையின் வேகம் ஒடுங்கியது. அது வறுத்த நெல்லாயிற்று. பல்லிழந்த பாம்பாயிற்று."

"காங்கிரஸ் நோக்கத்துக்கு முரண்படாத வகையில் தென்னாட்டு பிராமணரல்லாதவர் நலன் நாடுவது" எனும் கொள்கையைக் காங்கிரஸ் தலைவர்கள் சிலரால் 1917இல் ஏற்படுத்தப் பட்ட 'சென்னை மாகாணச் சங்கம்' எனும் அமைப்பை 'தேச பக்தன்' ஆதரித்து பிரசாரம் செய்தது. காந்தியடிகளின் சத்யாக்ரக இயக்கத்தை அன்னிபெசண்ட் அம்மையார் கடுமையாகக் கண்டித்ததைப் பொறுத்துக்கொள்ள முடியாமல் தேசபக்தனில் 16-6-1919இல் "ஐயோ! தெய்வமே" என்று தலைப்பிட்டு திரு.வி.க.

துணைத் தலையங்கம் எழுதினார். தேசபக்தன் தோன்றுவதற்குக் காரண கர்த்தாக்களுள் ஒருவராக இருந்தவரும், "அன்னை வசந்தா" என்று தம்மால் பாராட்டப்பட்டவருமான பெசண்ட் அம்மையாரைத் தாம் கடைப் பிடித்தக் கருத்தியல் கோட்பாடு காரணமாகத் திரு.வி.க. கண்டித்தார்.

"இந்திய பெசண்ட் அம்மையார் இங்கிலாந்து பெசண்ட் அம்மையராக மாறிவிட்டனரோ என்று சந்தேகிக்கின்றோம். திலகர் பெருமானையும் காந்தியடிகளையும் குறை கூறுவோர் முயற்சியால் இந்தியாவிற்கு நன்மை விளையுமேல், அந்நன்மையை யாம் விஷமாக்கிக் கொள்வோம். பாரத மாதாவே! உன் பொருட்டாக உழைத்து வந்த ஓரம்மையாரும் உன் உண்மை நிலையை உணரவில்லை. யாம் என் செய்வோம்! ஐயோ தெய்வமே! என்றழைத்து வேறென் சொல்லி அழவல்லோம்" என்று தேசபக்தன் வருந்தி எழுதியது.

''கிளர்ச்சிக்காகத் தோன்றிய பத்திரிகை'' என்று தேசபக்தனைக் குறிப்பிட்டார், திரு.வி.க. 'கிலாபத் கிளர்ச்சி', 'சத்யாக்ரக இயக்கம், 'பஞ்சாப் படுகொலை எதிர்ப்பு' முதலான அரசியல் கிளர்ச்சிகளில் தேசபக்தன் தீவிரமாக ஈடுபட்டது. "தேச பக்தன் நிலையம் காளிகட்டமாயிற்று. அங்கே காளி வீரநடம் புரிந்த வண்ணமிருப்பாள். அந்த நடனம் உமிழும் சுவாலை எரிமலை போன்றிருக்கும்" என்று அக்காலகட்ட தேசபக்தன் பிரசாரப் போரை வருணித்தார் திரு.வி.க.[29]

பத்திரிகைத் தமிழ் வளர்ச்சியில்

பத்திரிகைத் தமிழ் வளர்ச்சியிலும் 'தேசபக்தன்' புதுத் திருப்பத்தை ஏற்படுத்தியது.

"செவ்விய தமிழ்நடை, தமிழ் நாட்டிலுள்ள பல்லோர்க்கு இது போழ்து பயன்படாதென்று கருதித் 'தேசபக்த'னுக்கெனச் சிறப்பாக ஒருவகை உரைநடையைக் கொண்டுள்ளேன். இது காலைத் தமிழ்நாட்டு வழக்கிலுள்ள பிற மொழிக் குறியீடுகளையும், இக்கால வழக்குச் சொற்களையும், ஆன்றோராட்சி பெறாத சில முறைகளையும் பண்டைத் தமிழ் மக்கள் கோலிய வரம்பிற்குப் பெரிதும் முரணாக தவாறு ஆண்டு வருகின்றேன்'' என்று "தேசபக்தன்" உரைநடையைக் குறித்து எழுதியுள்ளார். (முன்னுரை: தேசபக்தாமிர்தம் - 1919)

"தேசபக்தன் பத்திரிகையுலகில் புரட்சி செய்தான். தேசபக்தன் தமிழாக்கிய அரசியல் சொற்களும் சொற்றொடர்களும் குறியீடுகளும் இப்பொழுது பத்திரிகைகளிலும் மேடைகளிலும் பிற இடங்களிலும் ஏற்றமுற்று அரசு புரிதல் வெள்ளிடைமலை"[30]

'தமிழுஞ் சுய ஆட்சியும்' எனும் கட்டுரையில் (4-1-1918) "தமிழ் மக்கள் சுய ஆட்சி பெற முயல்வது தமிழ்த்தாய்க்கு உயிர் கொடுப்பதாகும்" என்று கூறப்பட்டது.

தேசபக்தன் கருத்தியலும், அதன் பிரசார நடையும் அந்த இதழ் "அதிகார வர்க்கத்துக்கு இரையாகும் நிலை"யை ஏற்படுத்தியது. சென்னை அரசாங்கம் தேசபக்தன் மீது அடக்குமுறையை ஏவியது. ஐயாயிரம் ரூபாய் ஈடு காரணமாக (ஜாமீன் தொகை) கட்டாவிட்டால், பத்திரிகை பறிமுதல் செய்யப்படும் என்று கட்டளை பிறப்பிக்கப்பட்டது. இராசகோபாலாச்சாரி, அன்னிபெசண்ட் உதவியால் திரட்டப்பெற்ற நிதியைக் கொண்டு நீதிமன்றத்தில் ஈடுகாணம் செலுத்தப்பட்டது. திரு.வி.க.வை கலக்காமல் எடுக்கப்பெற்ற சில நடவடிக்கைகள் காரணமாக ஏற்பட்ட கருத்து வேற்றுமையால் திரு.வி.க. 22-7-1920இல் தேசபக்தன் ஆசிரியர் பொறுப்பில் இருந்து விலகினார்.

தேசபக்தனில் வெளிவந்த தமது கட்டுரைகளில் சிலவற்றைத் தொகுத்து 1919இல் 'தேச பக்தாமிர்தம்' எனும் நூலாக வெளியிட்டார் திரு.வி.க.

தேசபக்தனில் வ.வே.சு. ஐயர்

புதுச்சேரியில் இருந்த வ.வே.சு. ஐயரோ 'தேசபக்தன்' லிமிடெட் நிருவாகத்தினர் சென்னைக்கு வரவழைத்து தேசபக்தன் ஆசிரியர் பொறுப்பை அளித்தனர். 31.7.1920இல் வ.வே.சு.ஐயர் 'தேசபக்தனின் ஆசிரியரானார். திரு.வி.க. உருவாக்கிய 'தேசபக்தன்' கருத்தியல் கோட்பாடுகளை வ.வே.சு. ஐயர் பின்பற்றினர்.

வ.வே.சு. ஐயரின் 'தேசபக்தன்' இதழ்கள் கிடைக்காத நிலையில் அவருடன் துணையாசிரியராகப் பணியாற்றிய வெ. சாமிநாத சர்மா (இவர் திரு.வி.க.வின் தேசபக்தனிலும் துணையாசிரியராக விருந்துள்ளார்) வ.வே.சு. ஐயரைப் பற்றி 'நான் கண்ட நால்வர்' எனும் நூலில் எழுதிய பின்வரும் கருத்துக்கள்,

'தேசபக்தன்' இதழின் கருத்தியல் கோட்பாடுகளை அறிந்துகொள்ள வாய்ப்பளிக்கின்றன.

"ஐயர், தேசபக்தன் பத்திரிகையில் ரோம எண்களுக்குப் பதிலாகத் தமிழ் எண்களையே உபயோகிக்க வேண்டுமென்ற புதிய ஏற்பாட்டைச் செய்தார். ஹிந்துக்களும் முஸ்லீம்களும் ஒன்றுபட்டு வாழ வேண்டியவர்கள் என்பதை ஐயர் பலமுகாந்தரங்களைக் காட்டி தேசபக்தன் பத்திரிகையில் எழுதி வந்தார். தேசபக்தன் ஆசிரியரிடத்தும் அமர்ந்து சுமார் பதினான்கு மாத காலம் அரும்பணியாற்றினார் அப்பொழுது இவர் எழுதிய கட்டுரைகள் பலவும், சத்தியாக்கிரக இயக்கத்திற்கு ஆக்கந் தருவனவாகவும் சுயராஜ்யம் அடைவதற்கான வழிமுறைகளை வகுத்துக் கொடுப்பனவாகவும் பொதுவாக நமது பாரத தேசத்தின் பண்பாட்டை விளக்குவனவாகவும் இருந்தன. சுருக்கமாக இவருடைய பலதுறைப் புலமைக்கு இந்தக் கட்டுரைகள் சிறந்த சான்றுகளாக விளங்கின."

சிறைவாசம்

தேசபக்தனில், 1921 மே 6இல், 'அடக்குமுறை' எனும் தலையங்கம் வெளிவந்தது. இந்தத் தலையங்கம் வ.வே.சு. ஐயரால் எழுதப்படவில்லை. அவர் செட்டி நாட்டில் சுற்றுப்பயணம் மேற்கொண்டபொழுது அவருக்குத் தெரிவிக்காமல் வேறொருவரால் எழுதப்பெற்றது. இந்தத் தலையங்கம் சட்டவிரோதமானது; அரசு நிந்தனைக் குற்றத்திற்குரியது என்று தேசபக்தன் மீது வழக்கு தொடரப்பெற்றது. நிருவாகத்தினர் மூவர் மன்னிப்புக் கேட்டுக் கொண்டு வழக்கில் இருந்து விடுவித்துக் கொண்டனர். ஆசிரியர் எனும் பொறுப்பிற்காக வ.வே.சு. ஐயர் மீது மட்டும் விசாரணை நடைபெற்றது. கட்டுரையைத் தாம் எழுதவில்லை என்று கூறியதோடு தலையங்கம் ராஜத்துவேஷக் குற்றத்திற்கு உரியதன்று என்றும் வாதிட்டார், வ.வே.சு. ஐயர். எனினும் 'ஆசிரியர்' எனும் பொறுப்பில் விதிக்கப்பட்ட ஒன்பது மாத சிறைவாசத்தை ஏற்க வ.வே.சு. ஐயர் பெல்லாரி சிறைக்குச் சென்றார்.

1921 செப்டம்பர் 23இல் 'தேசபக்தன் மீது வழக்கு' எனும் தலைப்பில் திரு.வி.க. தமது 'நவசக்தி' வார இதழில் எழுதினார். இதில் ஒரு பகுதி வருமாறு:

"ஸ்ரீமான் ஐயர், தேசபக்தி காரணமாகச் சிறைபுக உடன்பட்டதை மாத்திரம் ஈண்டு பொதுஜனங்களுக்கு அறிவுறுத்து கிறோம். ஸ்ரீமான் வா.வே.சு. ஐயர் ஏனைய கூட்டணிகள் பற்றிய இருள் நெறியில் விழாது, அருள் நெறியாகிய ஒத்துழையாமை வழிநின்று பாரத மாதாவின் உண்மைப் புதல்வராக மிளிர்வதைத் தமிழ்நாடு என்றும் மறவாது.

24.6.1922 இல் வ.வே.சு. ஐயர் சிறைவாசம் நீங்கி சென்னை வரவிருப்பதையொட்டி அவரை வரவேற்று 'நவசக்தி'யில் எழுதியத் தலையங்கத்தில் "தேசபக்தன் முதல்முறை ஆயிரம் ரூபா அதிகாரவர்க்கத்துக்கு அழுதார்; பின்னர் தன் ஆசிரியரைச் சிறைக்கனுப்பினார். இப்போது உறங்குகிறார்" என்று குறிப்பிட்டார்.

'நவசக்தி' வார இதழ்

தேசபக்தனில் இருந்து விலகியப்பிறகு, 'நவசக்தி' எனும் பெயரில் ஒரு வார இதழைத் தொடங்கினார் திரு.வி.க. முதல் இதழை 1920 அக்டோபர் 22இல் வெளிவந்த 'நவசக்தி' பின்வரும் "ஒன்பது வழிகளில்" தொண்டாற்றும் என்று முதல் இதழில் பிரகடனப் படுத்திக்கொண்டது.

1. மக்கள் சுதந்திரத்துக்கு அடிப்படையாக உள்ளது ஜனநாயக முறையாதலால், அதை நாடி உழைத்தல்.

2. ஜனநாயக முறைக்கு அடிகோல வேண்டுவது தொழிலாளர் இயக்கமாதலால், அவ்வியக்கத்தை வளர்க்க முயலல்.

3. தொழிலாளர் இயக்கத்தை வலுப்படுத்தவும் அவர்கள் முறைகளை நிவர்த்திக்கவும் அவர்கள் வழி ஆட்சி முறையைத் திருப்பவும் அவர்கட்கெனத் தனியாக உழைக்கவும் தொழிற்கட்சியை வகுத்தல்.

4. இந்தியாவின் விவசாயம் கைத்தொழில் முதலியவற்றை ஓம்பலும் விவசாயிகளின் கஷ்டங்களைப் போக்க முயலுதலும் தொழிற்சாலைகளைப் பெருக்குதலும்.

5. பெண் மக்கள் நலத்துக்கும் பாடுபடுதல்.

6. தமிழ் மொழி, தமிழ்நாட்டுப் பழைய வழக்க ஒழுக்கங்கள் முதலியவற்றைச் செப்பம் செய்தல்.

7. தமிழ்நாட்டில் தோன்றியுள்ள சாதிப்பகை, வகுப்புத் துவேஷம் முதலியவற்றை ஒழித்துச் சகோதர நேயத்தை வளர்த்தல்.

8. தேசத்துக்குத் தீங்கிழைக்கும் கட்சிகளை கண்டித்து, அக்கட்சித் தலைவர்களை நேசித்துத் தேசவளர்ச்சியை நாடும் கட்சியில் அவர்களைத் திரும்ப முயலல்.

9. இந்தியாவில் பிறந்த அனைவரையும் இந்தியராகக் கருதி, அவரை ஓரினமாக்கி, அவர் நலத்துக்காகத் தியாகஞ் செய்தல்.

தொழிலாளர் மூலதனத்தில் மலர்ந்த நவசக்தியில் தொழிலாளர் இயக்கச் செய்திகளும் தலையங்கங்களும் நிறைந்துள்ளன. தமிழ் இதழ்கள் கருத்தியல் கோட்பாட்டில் 'நவசக்தி' தொழிலாளர் இயக்க முன்னேற்றத்தை வலியுறுத்தியது முற்போக்கான ஒரு திருப்பமாகும். முதல் இதழிலேயே தொழிலாளர் இயக்கம் குறித்து எழுதிய தலையங்கத்தில் "உலகத்தில் இதுகாறும் தோன்றியுள்ள இயக்கங்கள் பலவற்றுள்ளும் தலையாயது தொழிலாளர் இயக்கமென்று கூறுவது மிகையாகாது. தொழிலாளர் இயக்கமில்லாத ஏனைய இயக்கங்களால் உலகம் பூரண இன்பத்தை நுகர்தல் அருமை ஆதலால் தொழிலாளர் இயக்கத்தை உலக இயக்கம் என்று கூறலாம்" என்று கூறியுள்ளார், திரு.வி.க.

காந்திய இயக்கத்தைத் தெய்வீக இயக்க மென்று ஏற்றிப் போற்றிக் காந்தியடிகளின் ஒத்துழையாமை சத்தியாக்ரக இயக்கங்களின் செய்திகளை விரிவாக வெளியிடுவதை முக்கிய கடமைகளுள் ஒன்றாகக் கருதியது, 'நவசக்தி'.

ஜஸ்டீஸ் கட்சியின் வகுப்புவாதக் கொள்கையை 'நவசக்தி'யும் கண்டித்து வந்தது. 21-5-1926இல் "வகுப்பா தேசமா?" 12-12-1928இல் "வகுப்பும் தேசமும்" எனும் தலையங்கங்கள் வாயிலாக ஜஸ்டீஸ் கட்சியின் 'வகுப்புவாத'க் கொள்கையை மறுத்தது. 'நவசக்தி'. இவ்வாறே வேறு சில தலையங்கங்களிலும் கூறப்பட்டுள்ளன.

'நவசக்தி'யின் பல்வேறு தலையங்கங்கள் பற்றிய ஆய்வு, பெசு. மணியின் "விடுதலைப்போரில் தமிழ் இதழ்கள்" எனும் நூலில் பதிவுச் (1998) செய்யப்பெற்றுள்ளது.

'நவசக்தி'யின் கட்டுரைகள் (தலையங்கங்கள் உட்பட) தொகுக்கப்பெற்று 1935இல் "தமிழ்ச்சோலை அல்லது கட்டுரைத்

திரட்டு" எனும் நூல் இரு தொகுதிகளாக வெளிவந்தது. முதல் தொகுதியில் 62 கட்டுரைகளும் இரண்டாவது தொகுதியில் 60 கட்டுரைகளும் உள்ளன.

தேசபக்தனும் நவசக்தியும்

தேசபக்தன், நவசக்தி இரண்டையும் ஒப்பிட்டு திரு.வி.க. கூறியதாவது:

"தேசபக்தனில் பெரிதும் அழிவு வேலை நடந்தது. 'நவசக்தி'யில் பெரிதும் ஆக்கவேலை நடந்தது. ஆவேசமும் பரபரப்பும் 'தேசபக்த'னில் அலைத்தன; அன்பும் அமைதியும் 'நவசக்தி'யில் தழைத்தன. 'தேசபக்தன்' அதிதேவதை ருத்ரன், எழுதுகோல் பாசுபதம்;' 'நவசக்தியின் அதிதேவதை சிவம், எழுதுகோல் குழல், 'தேசபக்தன்' நடையில் காளி; நவசக்தி நடையில் உமை."[31]

தேசபக்தனைப் போலவே, நவசக்தியும் பொதுவான அரசியல் செய்திகளுக்கு இடமளிக்கவில்லை. செய்திப் பத்திரிகையாக மட்டும் அடையாளங்காட்டிக்கொள்ளாமல் இலக்கியம், சமயம் போன்ற பொதுவான கட்டுரைகளுக்குச் சற்று தாராளமாகவே இடமளித்தது, நவசக்தி. "நவசக்தி அரசியலுடன் வேறு பல துறைகளிலும் இறங்கும் பணி செய்தமையால் அரசியலில் மாறுபட்ட கருத்துரையும் அவள் வயப்படுத்தினாள்" என்று 'நவசக்தி'யை திரு.வி.க. குறிப்பிட்டுள்ளார். 'தேசபக்த'னில் 'அரிமா நோக்கு' எனும் பகுதியைப் போல, 'நவசக்தி'யின் 'இடியேறு' பகுதியும் செய்திவிமர்சனங்களாகப் புகழ் பெற்றன.

'பிராமணரல்லாதார்' ஒரு குறிப்பு

1917 ஜூன் 8இல் 'திராவிடன்' நாளிதழில் வெளிவந்த தலையங்கத்தின் பின்வரும் குறிப்பு கவனிக்கத்தக்கது.

"நந்தம் தென்னிந்திய இந்துக்களில் இருபெரும் பிரிவினரே தற்காலத்திற்கு ஏற்றபெரும் பிரிவினராயிருக்கின்றனர். அவராவார் பிராமணர், பிராமணரல்லாதர் என்பவரே. இப்பிரிவும் சிறிது பிரிவுகளையெல்லாம் ஒருசேர ஒழித்து இந்துக்களென்கிற ஒருபெரும் ஜனசமூகத்தை யுண்டாக்குவதற்கேயன்றி வேறன்று."

திராவிடனின் முதல் இதழ் தலையங்கத்தில், "பொதுவாக இந்தியர்களுடைய நன்மையை உத்தேசித்தும் முக்கியமாக பிராமணரல்லாத மூன்றரை கோடி ஜனத்தொகையுள்ள இந்துக்களின் நன்மையை உத்தேசித்தும் ஆரம்பிக்கப்படும் இப்பத்திரிகை" எனும் குறிப்பும் உள்ளது.

பிராமணரல்லாத இந்துக்களை மொழிவழியில் தெலுங்கர், தமிழர், கன்னடர் என்று பிரித்துப் பேசுவது விரும்பத்தக்கதன்று எனும் கருத்தையும் 'திராவிடன்' இதழ் (சூன் 8, 1917) தலையங்கம் பின்வருமாறு குறிப்பிட்டுள்ளது.

"இந்த சந்தர்ப்பத்தில் தெலுங்கர், கலிங்கர், தமிழர், கன்னடர் என்கிறபடி பற்பல வித்தியாசங்களை உற்பவஞ் செய்துகொள்ளுதல் ஒரு வரியானாலுஞ் சரி வழிப்பட்டதன்று. நமது ஆந்திர நண்பர்களாகிய தேசீய திராவிடர்கள் - பிராமணரல்லாத மற்ற இந்துக்கள் ஆந்திரருக்கு ஆந்திரம் என்னும் வழக்கை விட்டுப் பிராமணரல்லாத இதர இந்துக்களுடன் ஒத்து உழைப்பார்களானால் நம் தேசம் முற்றவும் சரிப்பட்டுவரும்".

இந்த வாசகங்கள், 'THE ANDHRA AGITATION FOR A SEPARATE PROVINCE - தனி மாகாணத்திற்கென்று ஆந்திரர்கள் செய்யும் தடபுடலான ஆர்ப்பாட்டங்கள்' எனும் தலையங்கத்திற் குரியன.

1909இல் ஓர் பிராமணரல்லாதார் அமைப்பு

நீதிக்கட்சியின் தோற்றத்திற்கு முன்பு பிராமணரல்லாதார் அமைப்பு ஒன்று 1909இல் சென்னை நகரத்தில் தோன்றியுள்ளது. இந்த அமைப்பின் பெயர் 'THE MADRAS NON BRAHMIN ASSOCIATION - சென்னை பார்ப்பனரல்லாதாரின் சங்கம்' என்பதாகும். பாரதியாரின் 'இந்தியா' வார இதழ் 15-5-1909இல் முற்கூறிய சங்கத்தின் தோற்றம் குறித்துப் பின்வருமாறு செய்தி வெளியிட்டுள்ளது.

"மேல்குறித்த பெயரை வகித்த ஓர் சங்கம் இப்பொழுது சென்னையில் ஏற்பட்டிருக்கின்றது. இச் சங்கத்தாரின் நோக்கம் பிராமண வர்ணமில்லாத பிற வர்ணத்தாரின் ஸ்திரியை நன்னிலைக்குக் கொண்டுவர வேண்டுமென்பதாம். இவ்வகுப்பைச் சார்ந்த ஏழை சிறுவர்களுக்குத் திரவிய சகாயம் செய்து படிப்பையும் கைத்தொழில்களையும் கற்றுக்கொள்ள வேண்டிய தேவைகளைச் செய்யத் தீர்மானித்திருக்கிறார்களாம்."

இந்தச் சங்கத்தின் செயற்பாடுகள், அதன் வளர்ச்சி பற்றிய மேல் விவரத்தை அறிய வாய்ப்பில்லை. சென்னையைச் சார்ந்த எம். புருஷோத்தம நாயுடு, பி. சுப்பிரமணியம் எனும் இரு வழக்கறிஞர்கள் நிறுவியதாகத் தெரிகிறது.

"பண்டிதர் க. அயோத்திதாஸ் பார்வையில் இந்தச் சங்கத்தின் பெயரில் உள்ள 'NON BRAHMIN' எனும் கருத்தமைப்பைக் குறித்துப் பண்டிதர் அயோத்திதாஸ் (1845-19145) செய்துள்ள விமர்சனம் குறிப்பிடத்தக்கது. "நன்பிராமின் கூட்டத்தோரென்றால் யாவர்?" எனும் அடிப்படைக் கேள்வியைத் தமது விமர்சனத்தில் எழுப்பியுள்ளார் அயோத்திதாஸ். 'நான்பிராமின்' எனும் ஆங்கிலச் சொல்லை, அயோத்திதாஸ் 'நன்பிராமின்' என்று குறிப்பிட்டுள்ளார். அவருடைய விமர்சனம் வருமாறு:

"சைவம், வைணவம், வேதாந்த மென்னும் சமயங்களையும் அப் பிராமணரென்போர்களே ஏற்படுத்தி அச்சமயத்தை எவரெவர் தழுவி நிற்கின்றனரோ அவர்களும் பிராமணச் சார்புடையவர்களே யாவர். இத்தகையச் செயலுள் சாதி ஆசாரங்களையும் சமய ஆசாரங்களையுந் தழுவிக்கொண்டே (நன்பிரமன்ஸ்) என்று சங்கங்கூடியிருக்கின்றனரா அன்றேல்' சாதியாசாரங்களையும் சமயவாசாரங்களையும் ஒழித்து (நன்பிரமன்ஸ்) என்று சங்கங் கூடியிருக்கின்றனரா, விளங்கவில்லை. அங்ஙனம் ஒழித்துள்ளக் கூட்டமாயிருக்குமாயின் அவர்களுடன் சேர்த்துழைப்பதற்கு அனந்தம் பெயர் காத்திருக்கின்றார்கள். பிராமணர் என்போரால் வகுத்துள்ள சாதி ஆசாரங்களையும் சமய ஆசாரங்களையும் வைத்துக்கொண்ட நன்பிராமின்ஸ்' எனக் கூறுவது வீணேயாகும். காரணம் சாதியாசாரக் கிரியைகளிலும் பிராமணர்களென்போர் வரவேண்டியவர்களாய் இருக்கின்றார்கள். ஆதலின் இவ்விரண்டிற்குஞ் சம்பந்தப்பட்டவர்கள் யாவரும் நன்பிராமின் ஆகார்கள்."[32]

1909இல் எழுப்பப்பெற்ற முற்கூறிய விமர்சனம் 1917இல் தோன்றிய 'நான்பிராமின்' இயக்கமான நீதிக் கட்சிக்கும் பொருந்தியதாகும்.

நீதிக் கட்சிக்கு முன்பே தமிழகத்தில் ஆதி தமிழர் (ஆதி திராவிடர்களான தாழ்த்தப்பட்ட மக்கள் பிராம்மணீய

மேலாண்மையை எதிர்க்கத் தங்களுக்கான சில அமைப்புகளை அமைத்துள்ளார்கள். நீதிக் கட்சிக்கு ஆதரவளித்த ஆதிதிராவிடர்கள் முற்கூறிய அயோத்திதாசரின் கருத்தியலை அறிந்தவர்களாகவோ புரிந்துக்கொண்டவர்களாகவோ செயல்படவில்லை. பாபாசாகர் அம்பேத்கர் வழியில் புதிய விழிப்பும் பெற்றுள்ள இன்றைய தலித்துகளில் பலர் அயோத்திதாசரின் முற்கூறிய சிந்தனை யோட்டத்தைத் தெளிவாகப் புரிந்துக்கொண்டவர்களாக இயங்குகின்றனர்.

'நான் பிராமின்' இதழ்

'நான் பிராமின்' எனும் பெயரில் ஓர் ஆங்கில இதழ் நீதிக் கட்சிக்கு முன்பாக, வெளிவந்துள்ளது. நீதிக் கட்சியின் நிறுவனர்களில் ஒருவரான ராவ்பகதூர் பிட்டி தியாகராய செட்டியாரை ஆசிரியராகக் கொண்டு இந்த இதழ் வெளிவந்துள்ளதை அன்றைய சென்னை அரசின் 'நேடிவ் நியூஸ் பேப்பர் ரிப்போர்ட்' வழியே அறிய முடிகின்றது. 1916 நவம்பர் 26இல் வெளிவந்த இதழில், ''பிராமணரல்லாதவர்களின் ஒற்றுமைக்காக முதற்குரல் கொடுத்த இதழ் இதுவே" என்று 'நான் பிராமின்' இதழைப் பற்றிய ஒரு செய்தி நேடிவ் நியூஸ் பேப்பர் ரிப்போர்ட் மூலம் அறியமுடிகின்றது. 3.12.1916இல் வெளிவந்த 'நான் பிராமின்' இதழ் பற்றி 'நேடிவ் நியூஸ் பேப்பர் ரிப்போர்ட்டில்' குறிப்பிடப்பெற்றுள்ள ஒரு செய்தி வருமாறு:

''ஹோம்ரூல் இயக்கத்தின் உண்மை நிலையைப் பிராமணரல்லாதாருக்கு விளக்கிக்காட்டிப் பிராமணரல்லாதாருக்கு உண்மைத் தலைவர்கள் யாவர் என்பதையும் இளைஞர்களுக்கு இனங்காட்டியது இந்த இதழ். இந்த இதழின் தோற்றம் மறைவு குறித்து அறியமுடியவில்லை. இவ்விதழ் 1917 வரையில் வெளிவந்துள்ளது என்பதை 'நேடிவ் நியூஸ் பேப்பர் ரிப்போர்ட் மூலம் அறியமுடிகின்றது. ஏப்ரல் 16, 1917 சுதேசிமித்திரன் இதழில் 'நான் பிராமின்', 'ஜஸ்ட்டீஸ்' இதழ்கள் பற்றிய செய்திகள் வெளிவந்துள்ளன.

ஜி. பரமேஸ்வரன் பிள்ளை (1864 – 1903)

பிராமணரல்லாதார் இயக்கச் சிந்தனை உருவாக்கத்தில் மலையாளிகள், தெலுங்கர்கள் நோக்குகள்- முயற்சிகள் தனி

ஆய்விற்குரியன. அன்றைய திருவாங்கூர் சமஸ்தானத்தில் நிலவிய பிராமணர்களின் அரசியல் ஆதிக்கத்தை எதிர்த்து ஜி. பரமேசுரன் பிள்ளை 1893இல் சிறுவெளியீட்டை அச்சிட்டு வெளியிட்டார். ஆங்கிலத்தில் எழுதப்பெற்ற இந்த வெளியீட்டில் பெயர், "The ways and means for the amelioration of the condition of the NON-BRAIHMAN RACES".

திருவாங்கூரில் 1880, 1890-களில் நாயர் சமூகத்தில் படித்தவர்கள் சிலர் உருவாக்கிய பிராம்மணீய எதிர்ப்பு அப்பொழுது அங்கிருந்த பிரிட்டிஷ் அதிகார வர்க்கத்தின் ஆதரவைப் பெறவில்லை. சென்னையில் 1910க்குப் பிறகு 'படித்த நாயர் சமூகத்தினர்' முனைந்து உருவாக்கிய பிராமணீய எதிர்ப்பு அதிகார வர்க்கத்தின் ஆதரவை அரசியல் தளத்தில் பெற்றது.

அந்தக் காலத்தில் சென்னை நகரத்தில் 1500 மலையாளிகள் இருந்தனர். இவர்களுள் பெரும்பான்மையினர் நாயர்கள். படித்த இளைய தலைமுறையினர்களாகச் சி. சங்கரன் நாயர் (1852-1934), எம். கிருஷ்ணன் நாயர் (1870-1938), கே.பி. ராமன், மேனன் (1866-1942), டி.எம். நாயர் (1869-1919), ஜி. பரமேஸ்வரன் பிள்ளை முதலானோர் இருந்தனர். இவர்களுள் டி.எம். நாயர், பிட்டி தியாகராயருடன் இணைந்து செயல்பட்டார்.

திராவிடர் சங்கம்

நீதிக் கட்சிக்கு முன்னோடியாக 'மெட்ராஸ் திராவிடன் அஸோசியஷன்' (திராவிடர் சங்கம்) 10-11-1912இல் அமைக்கப்பெற்றது. இதை உருவாக்கியவர் டாக்டர் சி. நடேசனார் (1875 - 1937). இவர் செயலாளராகவும், சே. ரங்கராமானுஜம் முதலியார் பி.ஏ.பி.எல்.., துணைச் செயலாளராகவும் பொருளாளராகவும் இருந்தனர். நடேசனார் 1914இல் பிராமணரல்லாத மாணவர்களுக்காகத் 'திராவிடன் இல்லம்' எனும் அமைப்பை நிறுவினார்.

"தென்னிந்திய ஜனசமூகம் உற்பத்தியானதற்கும் இத்திராவிட சங்கமும் ஆதிமூலம்" என்று 'திராவிடன்' இதழில் (ஜூலை 18, 1917) ஒரு செய்தி வெளியாகியுள்ளது.

'மெட்ராஸ் திராவிடன் அசோசியேஷன்' சர். சி. சங்கரன் நாயர் பற்றியும், 'நான் பிராமின் லெட்டர்ஸ்' எனும் பெயரிலும் இரு வெளியீடுகளைப் பதிப்பித்தது.

இதுகாறும் விரித்துரைக்கப்பெற்ற வரலாற்றுப் பின்னணியில் நீதிக் கட்சியின் தோற்றம் குறித்தும், அது தொடங்கிய மூன்று இதழ்களுள் ஒன்றான 'திராவிடன்' இதழின் தோற்றத்தையும் அறிவோம்.

டாக்டர் டி.எம். நாயர் (1868-1917), பிட்டி தியாகராய செட்டி (1852-1925) இருவரும் இணைந்து 1916 நவம்பர் 20இல், 'SOUTH INDIA ON LIBERAL FEDERATION' எனும் 'தென்னிந்திய நல உரிமைச் சங்க'த்தை அமைத்தனர். இந்த அமைப்புடன் சங்கத்தின் நீதித் தொடர்பான பணிகளுக்காகத் 'தென்னிந்திய மக்கள் சங்கம்' (SOUTH INDIAN PEOPLE ASSOCIATION LTD.) என்பதும் ஏற்படுத்தப் பட்டது. 1916இல் 'THE NON BRAMIN MANIFESTO' எனும் அறிக்கை பிட்டி தியாகராயசெட்டி கையெழுத்துடன் வெளியிடப்பெற்றது. "தென்னாட்டு பிராமணரல்லாதார் பெருங்குடி மக்களின் சுதந்திர சாசனம் என்று நீதிக் கட்சியினரால் புகழப்படும் இந்த அறிக்கை 'திராவிடன்' இதழின் கருத்தியல் கோட்பாடு உருவாக அடித்தளமாக அமைந்தது.

திராவிடன்

சுதேசமித்திரனுக்குப் பிறகு செல்வாக்குடன் தொடர்ந்து பல ஆண்டுகள் வெளிவந்த அரசியல் நாளிதழ் 'திராவிடன்' ஆகும். இது ஜூன், 1917 முதல் சென்னை மவுண்ட் சாலையில் இருந்து வெளிவரத் தொடங்கியது. 'சவுத் இந்தியன் பீபில்ஸ் அசோசியேஷன் (லிமிடெட்)' சார்பில் வெளிவந்தது. ராவ்பகதூர் பி. தியாகராய செட்டி பிஏ., அச்சிடுபவர், வெளியிடுபவராகக் குறிப்பிடப்பட்டது. ஆசிரியர் பெயர் குறிப்பிடப்படவில்லை.

1917 பிப்ரவரி 26 முதல் 'ஜஸ்டீஸ்' எனும் ஆங்கில நாளிதழிற்கும், 'ஆந்திர பிரகாசிக' எனும் தெலுங்கு நாளிதழிற்கும் துணையாக நீதிக் கட்சியின் பிரசார முரசாகத் தமிழில் நாளிதழாகத் திராவிடன் வெளிவந்தது. தொடக்கத்தில் இதன் ஆசிரியராகப் பக்தவத்சலம் பிள்ளையும் துணையாசிரியர்களாக சுவாமி ருத்ர கோடீச்வரரும் பண்டிதர் வில்வதிபதி செட்டியாரும் பணியாற்றினர்.

'திராவிடன்' இதழின் உருவம் அளவு 50x34 செ.மீ., பக்கங்கள் எட்டு, ஒவ்வொரு பக்கமும் நான்கு பத்திகளாகப் பகுக்கப்பட்டுள்ளது. தனி இலச்சினை ஏதும் இல்லாமல்,

'திராவிடன்' எனும் பெயர் அச்சிடப்பெற்றுள்ளது' தலையங்கம் நான்காம் பக்கத்தில் அமைந்தது.

இதழின் நோக்கங்கள் பற்றி 1-6-1917இல் பக்கம் நான்கில் கூறப்பெற்றுள்ளன. இதில் ஒரு பகுதி, வருமாறு:

1. தேசிய திராவிடர்களாகிய நம்மனோர் முன்னுக்கு வருவதற்குத் தடையாயுள்ள அபிப்பிராயங்களையும் விபரீதக் கொள்கைகளையும் பேசித் தெளிந்து உண்மையைச் சாதித்து நிலை நிறுத்துவதே திராவிடனாகிய இப்பத்திரிகையின் திருத்த முள்ளதொரு நோக்கமாகும்.

2. நமக்கு எவ்வளவோ நன்மை தந்துதவிய பிரிட்டிஷ் ராஜாங்கத்தின் மீது இடையறாத அன்பையும் தளர்வுறாத விஸ்வாஸத்தையும் என்றென்றும் காட்டிச்செல்வதே இணையில்லாத நமது நோக்கமாயிருக்கும்.

3. இந்தியாவில் ஜாதி மதப் பிரிவுகள் அநேகமிருக்கின்றன. ஜாதி பேதங்கள் முற்றிலும் ஒழிந்து தேசம் சீர்படுகிறவரைக்கும் சகல வகுப்பாருக்கும் நியாயம் கிடைப்பதற்கு ஒவ்வொரு பிரதிநிதிகள் மூலமாகவும் தேசத்தில் தங்கள் தங்களுக்குரிய மேன்மையையும் அந்தஸ்தையும் ஜனத்தொகையையும் அனுசரித்தும் விஷயங்கள் செம்மைப்படுத்த வேண்டும்.

4. பொதுவாக இந்தியர்களுடைய நன்மையை உத்தேசித்தும் முக்கியமாகப் பிராமணரல்லாத மூன்றரை கோடி ஜனத்தொகையையும் அனுசரித்தும் விஷயங்கள் செம்மைப்படுத்த வேண்டும்.

'OURSELVES - நமது பத்திரிகையாளர் நோக்கங்கள்', எனும் முதல் இதழின் தலையங்கம், 'பத்திரிகைகளென்கிற பலமுள்ள ஆயுதங்கள்' தேவையைப் பற்றிப் பின்வருமாறு கூறியுள்ளது.

"இந்துக்களிற் பெரும்பாலோர் பிராமணரல்லாதவர்களா யிருக்கிறார்கள். தென்னிந்தியாவின் ஜனத்தொகை சுமார் நான்கு கோடியில் பிரமாணரல்லாத இந்துக்களின் தொகை மூன்றரை கோடிக்கு அதிகமாகிறது. இவ்வளவு பெருந்தொகையினராகிய நம்மவர்களுடைய குறைபாடுகளையும் முறையீடுகளையும் ராஜாங்கத்தாருக்குத் தக்கபடி தெரிவித்து இவர்களுடைய

செல்வாக்கை அபிவிருத்தி செய்துகொள்வதற்கு - இதுவரை இயலாமற் போயிற்று. பொதுவாக இந்துக்களில் மொத்த பெயரை வைத்துக்கொண்டே இந்துக்களின் மிக மிகச் சிறிய பிரிவினராகிய சிலரே எல்லா நலன்களையும் எல்லாப் பலன்களையும் இதுவரைக்கும் அநுபவித்து வந்திருக்கிறார்கள். இப்பொழுதும் அனுபவித்து வருகிறார்கள். முக்கியமாய் இதற்குக் காரணம் பத்திரிகைகளென்கிற பலமுள்ள ஆயுதங்கள் அவர்களிட மிருப்பதுதான்."

'திராவிடன்' கருத்தியல் கோட்பாடுகளை, அரசியல், சமூகம், சமயம், மொழிதுறை எனும் நோக்குகளில் மிகச் சுருக்கமாக அறிவோம்.

அரசியல்

'திராவிடன்', இந்திய தேசிய காங்கிரசையும் அன்னிபெசன்ட் அம்மையாரின் 'ஹோம் ரூல்' இயக்கத்தையும் எதிர்த்துப் பிரிட்டிஷ் ஏகாதிபத்ய ஆட்சிக்கு முழு ஒத்துழைப்பைத் தந்தது. 1917 செப்டம்பர் 9ஆம் தேதி இதழில் 'பிரிட்டிஷ் ஆட்சியே மிக்க நலந்தரும் ஆட்சியாம்' என்று தமிழிலும் ஆங்கிலத்திலும் எழுதப்பெற்றுள்ளது. 1917 ஆகஸ்டு 3ஆம் தேதி இதழில் 'சுய ஆட்சி பிராமணர் ஆட்சியாம், திராவிடர்களே! ஏமாறாதீர்கள்' என்று தமிழிலும் ஆங்கிலத்திலும் எழுதப்பெற்றுள்ளது. 'சுயஆட்சி என்பது ஹோம் ரூல்' என்பதைக் குறித்தது. அரசியல் களத்தில், ஆட்சித் துறையில் பிராமணர்கள் ஆதிக்கத்தை எதிர்த்து வந்தது 'திராவிடன்'.

சமூகத் துறையில்

சமூக ஆதிக்கவுணர்வுடன், செயல்பட்ட பிராம்மணீயத்தைக் கடுமையாகத் தாக்கிவந்தது 'திராவிடன்'. 1913 ஜூன் 20இல் வெளிவந்த 'தமிழர் சூத்திரரா?' எனும் கட்டுரை வெளிவந்தது. இதில் வெ.ப. சுப்பிரமணிய முதலியார்; 'மனோன்மணீயம்' பி. சுந்தரம் பிள்ளை, 'இந்தியன் சோஸியல் ரிபார்மர்' எனும் ஆங்கில இதழின் ஆசிரியர் கே. நடராசன், மராட்டிய அறிஞர் பண்டாரகர் ஆகியோர் கருத்துகள் தொகுக்கப்பெற்று, 'தமிழர் சூத்திரர் அல்லர்' என்பது விளக்கம் பெற்றுள்ளது. இவர்களில் பின்னிருவர் பிராமணர்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

1917 செப்டம்பர் 26ஆம் தேதி இதழில் "புரோகித பாட சாலைகளை ஏற்படுத்தித் திராவிடர்களை அவ்வேலைக்கு உரியவர்களாகச் செய்யவேண்டும். கோயில்களிலேயும் திராவிடர் குருக்களாக ஏற்பாடுசெய்து அதற்குரிய மந்திரங்களையும் சாஸ்திரங்களையும் படிக்கச் செய்யவேண்டும். திராவிடன் கொடுக்கப் பிராமணர் பிரசாதங்கள் வாங்கவேண்டும்," என்று புரட்சிகரமான கருத்து கூறப்பட்டது.

1927 பிப்ரவரி 1இல், 'பார்ப்பனர் எதிர்ப்பை' வெளிப்படுத்தும் பின்வரும் பெட்டிச் செய்திகள் வெளியிடப்பெற்றன.

"பார்ப்பனரல்லாத இந்து, மகமதிய, கிருஸ்துவ சகோதரர்கள் ஓட்டலில் ஒன்றாயிருந்து ஒற்றுமையுடன் சாப்பிட, பார்ப்பனர் களுக்கு மட்டும் தனி இடம் ஏன்?"

"பார்ப்பனர்களுக்கு இடம் வேறு, உங்களுக்கு இடம் வேறு என்று வித்தியாசம் இருக்கிற காபி, சாப்பாடு ஓட்டல்களுக்கும் போகாதீர்கள்."

'திராவிடன்' கருத்தியல்கள் பெரியாரின் சுயமரியாதை இயக்கத்திலும் திராவிடர் கழகத்திலும் மேலும் வளர்த்தெடுக்கப் பெற்றன. 'திராவிடன்' கருத்தியல் கோட்பாட்டில் வெளியிடப்படாத சமய - சடங்காசார எதிர்ப்பு பெரியாரின் 'குடி அரசு' (1925), 'விடுதலை' (1937) இதழ்களில் செல்வாக்கு பெற்றன.

சமய நோக்கு

செப்டம்பர் 22, 1917, 'திராவிடன்' இதழில், "திராவிடன் மத தூஷணை செய்கிறதா? - DOES 'DRAVIDAN' DESPISE RELIGION-" எனும் தலையங்கம் வெளிவந்தது. இதில் ஒரு பகுதி வருமாறு:

"நம் திராவிடனில் நிர்க்குணோபாசனா, சகுணோபாசனா என்னும் இரண்டு முறைகளையும் அனுஷ்டிக்கும் பக்தர்களுடையக் கட்டுரைகள் வெளிவருகின்றன. சிவ பக்தியிற் சிறந்த திருநாளைப் போவார் சரித்திரமும் காரைக்காலம்மையாரின் சரித்திரமும் விஷ்ணு பக்தியில் மிகுந்த திருப்பாணாழ்வார் சரித்திரமும் இன்னும் தாச மார்க்க, சற்புத்திர மார்க்கம் சம்பந்தமான விஷயங்கள் பலவும் நம் பத்திரிகையில் வெளிவந்துள்ளன. . நாம் பொது; நாம் நடுநிலைமையுடையோம். . . . இப்பத்திரிகை சைவ

சமயத்தார் கென்றும் அல்லது வைஷ்ணவ சமயத்தார்க்கென்றும் அல்லது பௌத்த சமயத்தார்க்கென்றும் அல்லது பிரம சமாஜத்தார்க் கென்றும் ஏற்பட்டதல்ல. இது நாஸ்திகப் பத்திரிகை யென்றும் தன் மனம் போனவாறு துணிந்துகூறுவது அவர்தம் பெருமைக்கு அழகாக மாட்டாது-

1917 அக்டோபர் 5இல் வெளிவந்தத் தலையங்கத்தில் இதழாசிரியர் டி. பக்தவத்ஸலம் பி.ஏ. "இனி ஒருகாலும் நம் பத்திரிகை இத்தகைய வாதங்களுக்கு (சமய வாதங்களுக்கு) இடங் கொடாதென்பது திண்ணம்" என்று குறிப்பிட்டுள்ளார்.

மேற்காணும் தலையங்கக் கருத்துக்கள் 'திராவிடன்' இதழின் சமயக் கோட்பாட்டை விளக்குகின்றன.

மொழிநோக்கு

தமிழ் மொழிப்பற்று, தமிழ் இலக்கியக் கட்டுரைகள் வெளியிடல் இரண்டும் 'திராவிடன்' இதழின் மொழி நோக்கை வெளிப்படுத்தின.

1917 நவம்பர் 21இல் 'ANCIENT TAMIL SCHOLARS - பண்டைத் தமிழ்ப் புலவர்கள்' எனும் துணைத்தலையங்கம் இதழின் மொழிப்பற்றையும், இலக்கியப் பற்றையும் சுட்டிக் காட்டியது. இதன் ஒரு பகுதி, வருமாறு:

"நவீன நாகரீகம் தலையாடி நிற்கும் இக்காலத்தே, இராஜீய விசயங்களையும் பற்றி அறிய நந்தமிழ் மக்கள் அவாவுற்றிருக்கின்ற மையால், பண்டைத் தமிழ்ப் புலவர்கள் பெரும்பாலும் அவர்கள் கவனத்தினின்றும் விலகி நிற்கின்றனர். பண்டைத் தமிழ்ப் புலவர்கள் திருவிழாக்கள் கொண்டாடப்படவேண்டும். புலவர்களுடைய பெயர்களைக் குழந்தைகளுக்கு இட்டுவரவேண்டியது மிகவும் அத்தியாவசியமாகும். இங்ஙனம் நாம் செய்வோமாயின் இம்முயற்சி ஜாதி பேதத்தை நம் நாட்டில் நாளடைவில் தொலைத்தற்கு அனுகூலமாகும்.

ஆகஸ்ட் 21, 1917இல் வெளியிடப்பெற்ற விருதை சிவஞான யோகிகளின், 'இந்தியாவுக்கும் பொதுபாஷை' எனும் கட்டுரையில் மொழித்துறையில் ஆங்கிலம், தமிழ் இரண்டிற்குமுரிய இடங்கள் பின்வருமாறு கூறப்பெற்றுள்ளது:

"ஆங்கிலமே பொதுபாஷையாகக் கவர்ன்மெண்டார் செய்வதோடு நாமும் ஒற்றுமையெய்தி சிற்றூர்கள் தோறும் தாய் மொழியும் ஆங்கிலமும் கற்பிக்கும் பாடசாலைகளை ஏற்படுத்த வேண்டும்."

பழந்தமிழ் இலக்கியங்களைப் போற்றும் கட்டுரைகள் பல திராவிடனில் வெளிவந்தன. சங்க இலக்கியம் தமிழரின் தேசிய இலக்கியம் எனும் கோட்பாடு உருவாக்கம் பெறத்தக்க வகையில், அது திராவிடனில் பாராட்டப்பட்டுள்ளது. இவ்வகையில் 1917 ஆகஸ்ட் 9இல் வெளியிடப்பெற்ற பின்வரும் 'பெட்டிச்செய்தி' குறிப்பிடத்தக்கது.

"திராவிட மக்கள் சமத்துவமுடையார், சுயாதீனர், சகோதரர் என்ற இவ்வுண்மைகளை விளக்கும் தமிழ் நூல்கள் சங்க நூல்களே யாகும்."

தமிழ் நூல்களுக்கான 'மதிப்புரை' எழுதுவதிலும் சாதி மதக் கட்சிக் காழ்ப்பறக் கோட்பாட்டைத் 'திராவிடன்' பின்பற்றியுள்ளது. பாரதியாரின், 'கண்ணன் பாட்டு', 1917 செப்டம்பர் 1ஆம் தேதி இதழிலும், வ.உ.சி.யின் "திருக்குறள் அறத்துப்பால் - மணக்குடவர் உரை" 1917 ஜூலை 14ஆம் தேதி இதழிலும் பாராட்டப்பெற்று மதிப்புரைகள் வெளிவந்துள்ளன.

தலித்திய இதழ்கள்

'தலித்தியம்', 'தலித்துகள்' என்னும் சொற்கள் அண்மைக் காலமாகப் பெருவழக்காக அனைத்திற்கும் அடிப்படையில் செல்வாக்கு பெற்றுவருகின்றன. 'ஷெட்யூல்ட் வகுப்பினர்,' ஆதி எனும் பல உட்பிரிவுகளைக் கொண்டத் தாழ்த்தப்பட்ட மக்களை 'தலித்துகள்' என்ற ஒரே சொல்லால் குறிப்பிடும் போக்கு பரவலாகி வருகின்றது. இவர்கள் 'விடுதலை' பெறப் பாடுபடும் தமிழ் இதழ்கள், இங்குத் 'தலித்திய இதழ்கள்' என்று குறிப்பிடப் படுகின்றன.

1869 முதல் 1940 வரையில், கிடைத்துள்ள சான்றுகள் வழியே வெளிவந்த தலித்திய இதழ்கள் பின்வருவனவாகும்.

சூரியோதயம் (1869), பஞ்சமன் (1871), திராவிடப் பாண்டியன் (1886), திராவிட மித்திரன் (1885), மகாவிகடதூதன் (1888), பறையன்

(1893), இல்லற ஒழுக்கம் (1898), பூலோக வியாசன் (1900), ஒரு பைசாத் தமிழன் (தமிழன்) (1907), ஆன்றோர் மித்திரன் (1910), தமிழன் (கோலார்) (1926), ஆதிதிராவிட மித்திரன் (1934), புத்துயிர் (1940), உதய சூரியன் (கோலார்), (1940).

தலித்திய இதழ்கள் தோற்றத்திலும் வளர்ச்சியிலும் தலித்துகள் (ஆதிதிராவிடர்கள்) பொதுக்கருத்தை உருவாக்கச் சில அமைப்புகள் தோன்றின.

1857இல் 'ஆதிதிராவிட மகாஜன சபா' தோன்றியது. இந்த அமைப்பின் முதல் பொதுச்செயலாளர் எம்.சி. சின்னத் தம்பிப் பிள்ளை, இவர் திவான்பகதூர் எம்.சி. ராஜாவின் தந்தையாவார். இந்த அமைப்பை உருவாக்கியவர் அக்காலத்தில் "ஊறுகாய் வியாபார சக்ரவர்த்தி" என்று புகழ்பெற்ற பி.வி. சுப்பிரமணியம் பிள்ளை, 'ஆதிதிராவிட மகாஜன சபை' எனும் பெயரில் ஓர் அமைப்பு 1892லும் தோன்றியது. 1893இல் திவான்பகதூர் இரட்டைமலை சீனிவாசன், 'பறையர் மகாஜன சபை'யை நிறுவினார். 1917இல் 'பஞ்சமர் மகாஜனசபை' எனும் பெயரில் ஒன்றும், 1928இல் "அகில இந்திய ஆதிதிராவிட மகாஜனசபை' என்ற பெயரிலும் இரு அமைப்புகள் அமைந்தன.

திவான்பகதூர் இரட்டைமலை சீனிவாசன் (1860-1945), பண்டிதர் க. அயோத்திதாஸ் (1845- 1914) ஆகியோர் தலித் இதழ்களின் கருத்தியல் கோட்பாடுகளை உருவாக்கியவர்களில் முன்னோடிகளாகத் தடம்பதித்தனர். இரட்டைமலை சீனிவாசன் 'பறையன்' என்ற இதழ் மூலமாகவும் அயோத்திதாஸ், 'தமிழன்' இதழ் வாயிலாகவும் பாடுபட்டனர்.

பறையன் - 1893

'தாத்தா ரெட்டமலை சீனிவாசன்' என்று பாசத்தோடும் பரிவோடும் கொண்டாடப்பெற்றுவரும் தலித்துகளின் முதுபெரும் தலைவர் திவான்பகதூர் ரெட்டமலை சீனிவாசன் 'பறையன்' எனும் பெயரிலேயே 1893 அக்டோபர் மாதம் மாத இதழாகத் தொடங்கினார். 'பறையன்' சென்னை ராயப்பேட்டை கோவாபரேட்டிவ் பிரஸ்ஸில் அச்சிடப்பெற்றது. இந்தப் பெயரைச் சூட்டியதற்கான விளக்கத்தையும் 1939இல் வெளிவந்த 'திவான்பகதூர் இரட்டைமலை சீனிவாசன் அவர்கள் ஜீவிய

சரித்திரம்' எனும் தன் வரலாற்று நூலில் பின்வருமாறு அறிகின்றோம்.

"தான்! நான்!! என்ற மகாமந்திரத்தை ஜெபித்துக் கொண்டிருப்பவன் தன்னை யுணர்ந்து சகலமுமறியும் ஞானியாகி தலைவனைக் காண்பது போல நான்! நான்!! என்று எவன் ஒருவன் தன்னையும் தன் இனத்தையும் மறக்காமல் அச்சமும் நாணமுமில்லாமல் உண்மை பேசித் தன் சுதந்திரத்தைப் பாராட்டுகிறானோ அவன் மதிக்கப்பெற்று இல்வாழ்க்கையில் சம்பத்துள்ளவனாய் நித்திய சமாதானத்துடன் வாழ்வானாகையால் பறையர் இனத்தவனொருவன், 'பறையன் என்பவன் நான்தான்' என்று முன்வந்தாலொழிய அவன் சுதந்தரம் பாராட்டுகையில், 'பறையன்' என்னும் மகுடம் சூட்டி ஒரு பத்திரிகை பிரசுரித்தேன்."

பாரதியார் 1917களில் சுதேசமித்திரனில் 'பறையன்' எனும் தலைப்பில் எழுதியதாவது. "இது (பறையர்) குற்றமுள்ள பதமில்லை யென்பதற்கு ருஜு வேண்டுமானால் மேற்படி கூட்டத்தாரால் சென்னையில் நடத்தப்பட்ட சபைக்கு 'பறையர் மகாசபை' என்று பெயர்வைத்திருப்பதைக் காண்க".

'பறையர் மகாஜன சபை'யைத் தோற்றுவித்து அதன் செயலாளராகவும் இருந்த காலத்தில் 'பறையன்' இதழ் வெளிவந்தது. இதழ், மாத வெளியீடாக மூன்று மாதங்கள் வந்தபிறகு வார இதழாக வெளிவந்தது. "ஏழு வருடம் தொடர்ந்து நடைபெற்று வந்தது" என்று இதழாசிரியர் ரெட்டமலை சீனிவாசன் அவர்களே குறிப்பிட்டுள்ளார்."

இதழின் நோக்கு குறித்துப் பின்வருமாறு கூறப்பெற்றுள்ளது:

"பறையர் என்ற ஜன அங்கத்தவர்களுக்காகப் பரிந்துபேசுவதும், 'கவர்ன்மெண்டார் அனுக்கிரகத்தை நாடியும் நல்லொழுக்க ஆசாரங்களைப் பற்றியும் பத்திரிகை பிரஸ்தாபித்து வந்தது. . . இந்த இனத்தவர் வாய் திறக்கப்பட்டதற்கும் முன்னேறி வந்ததற்கும் சபைகளும் சமூகமும் முன்னேற்றப்பட்டதற்கும், 'பறையன்' என்ற பத்திரிகையே மூலகாரணமென விளங்கும்."

மேற்காணும் செய்திகள் அனைத்தும் ரெட்டமலை சீனிவாசன் தன் வரலாற்றில் இருந்து எடுத்தாளப்பட்டுள்ளன.

ஏழாண்டு காலம் நடைபெற்ற இதழின் ஓரிரு பிரதிகளே எம் பார்வைக்குக் கிடைத்தன.

கிடைத்த இதழ்களில் இருந்து 'பறையன்' கருத்தியல் கோட்பாடுகளில் மூன்று குறிப்பிடத்தக்கன.

ஆதிதிராவிட மகாஜன சபை - 1857

சென்னையில் 1857இல் ஆதிதிராவிடர்களுக்காக அவர்களாலேயே ஏற்படுத்தப்பெற்ற முதல் அரசியல் அமைப்பான "ஆதிதிராவிட மகாஜன சபை" தோன்றியது.[37] இந்த அமைப்பை உருவாக்கியவர் அக்காலத்தில் 'ஊறுகாய் வியாபார சக்ரவர்த்தி' என்று பெரும்புகழ்பெற்ற பி.வி. சுப்பிரமணியம் பிள்ளையாவார். ஆதி திராவிடர்களின் தலைவர்களுள் ஒருவரான திவான்பகதூர் எம்.சி. ராஜாவின் தந்தை திரு. எம்.சி. சின்னதம்பி பிள்ளை இந்த அமைப்பின் முதல் பொதுச்செயலாளராவார்.

'ஆதிதிராவிட மகாஜன சபை' எனும் பெயரில் 1892, டிசம்பர் 26இல் ஓர் அமைப்பு தோன்றியது என்றும் அறிகின்றோம்.[38] இதைத் தொடங்கியவர்கள் சென்னை காசிமேடு ஷட்டாவதானம் வைரக்கண் வேலாயுத புலவர் அரங்கையதாசப் பண்டிதர். இந்தச் சபை 1890இல் நிறுவப்படுகிறது.[39] "மேற்படி ஆதிதிராவிட மகாஜன சபைக்குத் தனது நீடிய ஆயுள் பரியந்தம் சபாநாயகமாய் விளங்க நேர்ந்துகொண்டார் பெருந்தகையாளர் ஸ்ரீமான் ஷாப்பு P.U. சுப்பிரமணியம் பிள்ளையவர்கள்" என்று 'ஆதிதிராவிடர் வரலாறு' எனும் நூலில் கூறப்பெற்றுள்ளது.

'ஆதிதிராவிட மகாஜன சபை'யையும், 'பஞ்சம மகாஜன சபை'யையும் (இந்தச் சபையின் தோற்றம் குறித்து அறியமுடியவில்லை) இணைப்பதற்காக 24-10-1917இல் சென்னையில் 'பஞ்சம குடிகளால்' ஒரு கூட்டம் ஏற்பாடு செய்யப்பட்டது. '300 பேர்கள் வந்திருந்தனர். 'திராவிட பாண்டியன்' பத்திராசிரியர் மிஸ்டர் டி.ஜெ. ரத்தினம் பிள்ளை தலைமை வகித்தார். 'விகட தூதன்' ஆசிரியர் மிஸ்டர் ராஜேந்திரம் பிள்ளை, எம்.சி. ராஜா முதலானோர் பலர் கலந்து கொண்டார்" எனும் செய்தி 'திராவிடன்' இதழில் (அக்டோபர் 26, 1917) வெளிவந்துள்ளது.

கிராமங்கள் தோறும் ஆதிதிராவிட சமூகப் பேரறிஞர்கள் சுற்றுப்பயணம் சென்று விழிப்புணர்ச்சி ஏற்படுத்தியதில் திராவிட மகாஜன சபைக்குப் பெரும் பங்குண்டு.

1917 டிசம்பர் 24இல், காந்திய அரசியல் சீர்திருத்த அறிக்கை தயாரிப்புத் தொடர்பாகக் கருத்தறிய சென்னைக்கு வந்த அக்கால இந்திய ராஜப்பிரதிநிதி (வைஸ்ராய்) செம்ஸ்போர்டு பிரபு, இந்தியா மந்திரியாக இருந்த மாண்டேகு ஆகியோரைச் சந்தித்து ஆதிதிராவிடர் எனும் பெயர் பற்றியும் அவர்கள் முன்னேற்றத்திற் கான திட்டங்களைப் பற்றியும் குறித்த பொதுவிண்ணப்பத்தை இந்தச் சபை அளித்தது.

அன்றைய சென்னை மாநில ஆளுநர் வில்லிங்டன் பிரபு எம்.சி. ராஜாவை, "ஆதிதிராவிடர்களின் பிரதிநிதியாகச் சட்டசபையில் அமர்த்தினார்". ஒன்று, காங்கிரஸ் கட்சி, 'பார்ப்பனர் கட்சி' என்பதாகும். இரண்டாவது ஆங்கிலேயர் ஆட்சியில் 'பறையர்கள்' பெற்ற பயன்கள் என்பதாகும். மூன்றாவதாக, பறையர்கள் ஒடுக்கியும் ஒதுக்கியும் இழித்தும் பழித்தும் சமூக அநீதியைத் தட்டிக்காத்து வருவது பார்ப்பனியம் என்பதை வலியுறுத்தி சாதி ஒழிப்பை முழங்கியது. 1938இல் திவான்பகதூர் ஆர். இரட்டைமலை சீனிவாசன் எம்.எல்.சி. வெளியிட்ட 'ஆலய பிரவேசம்' எனும் துண்டறிக்கையில் கூறப்பெற்றுள்ள பின்வரும் கருத்து, பறையனின் கருத்தியல் கோட்பாடுகளில் ஒன்றாகும்.

"ஆரியர் என்போர் நமது தேசத்தில் குடியேறி ஜாதி அனாச்சரத்தை பரவச்செய்தபோது நமது ஆதிதிராவிட முன்னோர்கள் அதைத் தடுத்து எதிர்த்த போது அவர்களின் சொத்து - சுதந்திரம், ஆலயங்கள், நிலபுலங்கள் முதலியவைகளைக் கைப்பற்றிக்கொண்டு அன்னியராக பாவித்து அடித்து நகரங்களுக்குப்பால் காட்டில் துரத்தினது மல்லாமல் தீண்டப்படாதவர்கள் என நசித்து நாசப்படுத்தினார்கள். அதுமுதல் பல ஆயிர வருடங்களாகப் பரதவித்துப் பாடுபாட்டுக் கொண்டிருக்குங் காலத்தில் ஆங்கிலேயர் இந்திய தேசத்தை நாடி வந்து நிலைத்து அரசாள ஆரம்பித்தது முதல் ஆதிதிராவிட ஜனபல சமூகத்தவர்கள் சென்ற நூற்றைம்பது வருடங்களாக ஜாதி இந்துக்கள் செய்துவரும் கடும் கொடுமையினின்று நாளுக்கு நாள் மீண்டு கொண்டு வருகிறார்கள். இந்தியர்கள் தங்கள் தேசத்தைத் தாங்களே ஆண்டுகொள்ள சில நிபந்தனைகளை யேற்படுத்தி அரசியலை நடத்தும்படி ஆங்கிலேய கவர்ன்மெண்டார் அனுகிரகம் செய்திருக்கின்றார்கள் என்றாலும் ஜாதி அனாச்சாரம் தேசத்தில் இருந்தே வருகின்றது."

ஒரு பைசாத் தமிழன்

தமிழ் இதழியல் வரலாற்றில் அயோத்திதாசரின் பங்களிப்பை அவர் தொடங்கிய "ஒரு பைசாத் தமிழன்" என்னும் வார இதழ் வழியே அறியமுடிகிறது.

முதல் இதழ் நான்கு பக்கங்களுடன் அன்றைய காலணா விலையில் சென்னை ராயப்பேட்டையில் இருந்து புதன்கிழமை தோறும் 19.6.1907 முதல் வெளிவந்தது.

'ஒரு பைசாத் தமிழன்' என்று சற்று வித்தியாசமாகப் பெயர் சூட்டப்பட்டிருந்தாலும், பத்திரிகை 'ஒரு கோடிப் பொன்' மதிப்பிற்குரியது என்பதைத் 'தமிழ் வாழ்த்து' என்னும் கவிதையில், முதல் இதழிலேயே, பின்வருமாறு குறிப்பிட்டார் அயோத்திதாஸ்:

ஒரு பைசாத் தமிழனிவனு தவானென்பார்
ஒரு பைசாத் தமிழருமை யறியாமாந்தர்
ஒரு பைசாத் தமிழிலுண்மை யறிவராயின்
ஒரு கோடிப் பொன்னிஃதென் றுரைப்பர்மாதோ.

ஓராண்டிற்குப் பிறகு 26.8.1908 முதல் 'ஒரு பைசா' என்பது எடுக்கப்பெற்று, 'தமிழன்' எனப்பெயர் மாற்றம் பெற்றது. இந்தப் பெயர் மாற்றம் வாசகர்கள் பலர் வேண்டுகோளுக்கிணங்கச் செய்யப்பட்டது.

பௌத்த தரும விளக்கமே, பத்திரிகையின் முதல் நோக்கம். இதில், பௌத்த சமய தமிழ் இலக்கியங்கள் அனைத்தையும், பிற தமிழ் இலக்கியங்கள் அனைத்தையும் பிற தமிழ் இலக்கியச் செய்திகளையும் புலமைத் திறம் நனிவிளங்க அணிவகுத்துக் காட்டியுள்ளார் இதழாசிரியர் அயோத்திதாஸ். "இப் பத்திரிகையை வாசிப்பதால் பல புராதன நூல்களின் கருத்துகளையும் எளிதிலறியலாகும்" எனத் 'தமிழ் மாது' என்னும் பத்திரிகையின் ஆசிரியர் கோ. ஸ்வப்பநேஸ்வரி சுட்டிக்காட்டியுள்ளார். இவருடைய, 'இந்து தேச பூர்வ பெண்களின் கல்வி' என்னும் கட்டுரை ஒரு பைசாத் தமிழனில் வெளிவந்தது.

'பூர்வத் தமிழொளி' என்னும் தலைப்பில் பௌத்த தொடர் கட்டுரை கலையரங்கப் பகுதியாக வெளிவந்தது என்பதும்

குறிப்பிடத்தக்கது. வேத எதிர்ப்பு, பிராமணீய ஆதிக்க எதிர்ப்பு மூலம் தாழ்த்தப்பட்டோர் மனக்குமுறல்களை வெளிப்படுத்துவதில் அயோத்திதாஸ் முனைப்புடன் எழுதிவந்தார். 'தலித் இலக்கியம்', 'பகுத்தறிவு இலக்கியம்' ஆகியவற்றிற்கான வித்துகள், ஒரு பைசாத் தமிழனில் பரவலாகத் தூவப்பட்டுள்ளன.

'வர்த்தமானம்' போன்ற தலைப்புகளில் அக்கால அரசியல் செய்திகள் மிகச் சுருக்கமாக வெளியிடப்பட்டன. பிரிட்டிஷ் ஆட்சிக்கு எதிரான போராட்டத்தை ஆதரிக்காத போக்கில் செய்திகள் வெளிவந்தன. சான்றாக, 'கப்பலோட்டிய தமிழர்' வ.உ.சி.யும், 'வீர முரசு' சுப்பிரமணிய சிவாவும், திருநெல்வேலியில் நிகழ்த்திய போராட்டத்தைத் திசை திருப்பும் வகையில் பின்வரும் செய்தி விமர்சனத்தை 25.3.1908-ம் 'ஒரு பைசாத் தமிழன்' இதழில் காண்கிறோம்.

"அமிதாவாதிகளென்னும் ஓர் கட்சியும், மிதவாதிகளென்னும் ஓர் கட்சியு மித்தேசத்திற்றோன்றி ரூபாயிற்கு நாலுபடியரிசியிலும் குண்டுபட்டு சாவுங் குடும்பத்தார், குடிக்கக் கூழுக்கும், கட்டத் துணிக்கு மலைவதிலும் ஓர் பெரும் பலனைத் தேடிவிட்டார்கள். அந்தோ! இவ்வகை வீண் வீராப்பில் மடிந்தவர்கள் ஓர்அரசாங்க யுத்தத்திற் சென்று மடிந்திருப்பார்களாயின் தனது பெண்சாதி பிள்ளைகளுக்கு உபகாரச் சம்பளமேனுங் கிடைக்கும்".

நூல் மதிப்புரையும் அவ்வப்பொழுது வெளியிடப்பட்டுள்ளது. 'இராஜாம்பாள்' என்னும் நாவலின் மதிப்புரை 29.1.1908இல் வெளிவந்தது. இந்த நாவலில் - முனுசாமி என்னும் 'பண்ணைப் பறையன்' பண்ணையார் வீட்டில் புகுந்து பாம்பையடிக்க நடுங்கிக் கொண்டே சென்றதை இதழாசிரியர் மதிப்புரையில் குறிப்பிட்டு மனக் குமுறலைப் பின்வருமாறு வெளியிட்டார்.

"அவன் பாம்புக்குப் பயப்பட வில்லை. சாஸ்திரியார் வீட்டிலுள்ள லட்சுமி நீங்கிவிடுவாளென்று நடுங்கி உள்ளுக்குச் சென்றானாம். . . பண்ணைப் பறையன் காலினால் மிதிக்கப்பட்ட அரிசி மூட்டை, புளி மூட்டை, வெல்ல மூட்டை... லட்சுமி சாஸ்திரியார் வீட்டிலிருக்கிறாளா யில்லையா வென்றாராய்வரேல்

இலட்சுமி சம்பத்து விளங்கும். . . இவ்வகை இந்து தேச முதுகெலும்பாக விளங்கும் பறையனென்போனைப் பழி கூறிய பாவலரை யொத்த நாவலர்கள் இன்னும் பத்து பன்னிரண்டு பெயர் தோன்றுவார்களாயின் சுதேசியமும் சீர்கெட்டு சுயராச்சியமும் பேர் கெட்டு அழியவேண்டியதேயாம்."

தமிழ் இதழ்கள் வளர்ச்சியில் சாதியுணர்ச்சி காரணமாக ஏற்படும் சீரழிவைப் பற்றிய முக்கியக் கருத்தை அயோத்திதாசர் 'தமிழன்' இதழில் பின்வருமாறு எடுத்துரைத்துள்ளார்.

"இத்தமிழ் வழங்கும் தென்னிந்தியாவிலோ சாதி நாற்றம் மென்னுங் கசிமலத்தால் தங்கள் சாதியார் மட்டிலும் வாசிக்கலாம்; ஏனை சாதியோர் வாசிக்கப்படாதென்னும் பொறாமையும் பொச்சரிப்பும் வாய்ந்தவர்களாதலின் பொதுநலங் கருதிப் பத்திரிகைகளை வாசிக்கப் பிரியமில்லாமல் விட்டுவிடுகிறார்கள்."

ஏழாண்டுக் காலம் 'தமிழன்' வார இதழைத் தமிழ் இலக்கிய வளர்ச்சிக்கும் தாழ்த்தப்பட்டோர் வளர்ச்சிக்கும் பயன்படுத்தினார் அயோத்திதாஸ். அவர் மறைவிற்குப் பிறகு அவருடைய புதல்வர் பட்டாபிராமன், 17.6.1914. முதல் 26.8.1915 வரையில் 'தமிழன்' இதழை நடத்தினார். பிறகு கோலார் தங்கவயல் பண்டிதமணி ஜி. அப்பாதுரையார் ஆசிரியர் பொறுப்பில் 7.7.1926 முதல் 27.6.1934 வரையில் 'தமிழன்' வெளிவந்தது.

தமிழ்நாடு

'சுதேசமித்திரன்' ஜி. சுப்பிரமணிய ஐயர், பாரதியார், திரு.வி.க. வரிசையில் தமிழ் இதழியல் துறையைத் தேசிய போராட்ட வுணர்வுடன் 'தமிழ்நாடு' இதழை வெற்றிகரமாக நடத்தினார் விடுதலைப் போராட்டத் தளபதி டாக்டர் பி. வரதராசுலு நாயுடு (1887 - 1957).

1919ஆம் ஆண்டு இறுதியில் 'தமிழ்நாடு' சேலத்தில் வாரப் பதிப்பாகத் தோன்றியது. 1923இல் வாரப் பதிப்பில் 21 வயதான விடுதலைப் போராட்ட வீரரான டி.எஸ். சொக்கலிங்கம் துணையாசிரியரானார். இதழின் முன்னேற்ற வாய்ப்புகளைக் கருதித் 'தமிழ்நாடு' 1925இல் சென்னைக்கு மாற்றப்பெற்று பிராட்வே தெரு எண் 31ஆம் கட்டடத்தில் இருந்து வெளிவரத்

தொடங்கியது. பேனா மன்னர் எனும் பெயருக்கு ஏற்ப டி.எஸ். சொக்கலிங்கத்தின் கனல் மணந்த தமிழ்நடை, இதழின் வளர்ச்சிக்குப் பேருதவியாக அமைந்தது.

வாரப்பதிப்பாகத் 'தமிழ்நாடு' பெற்ற முன்னேற்றத்தில் ஊக்கம் பெற்று 1926 ஏப்ரல் 14இல் வாரப் பதிப்புடன் நாளிதழையும் தொடங்கினார் தேசிய சங்கநாதம் வரதராஜுலு நாயுடு.

எமது பார்வைக்குக் கிடைத்த 'தமிழ்நாடு' நாளிதழ் 1936 செப்டம்பர் 2இல் வெளிவந்ததாகும்.

உருவமைப்பு

கிடைத்த இதழைக் கொண்டு உருவமைப்பைப் பற்றி அறியமுடிகின்றது.

இதழின் பதிவு எண் : 2230; ஆசிரியர், அச்சிடுவோர், வெளியிடுவோர்- பி. வரதராஜுலு நாயுடு என்று ஆங்கிலத்தில் அச்சிடப்பட்டுள்ளது. ஜார்ஜ் டவுன் சென்னையில் 42, மூக்கூர் நல்லதம்பி தெருவில் இருந்த தமிழ்நாடு அச்சகத்தில் இதழ் அச்சடிக்கப்பட்டது. இதழின் பக்கங்கள் எட்டு; தனிப்பிரதியின் விலை ஒன்றரை அணா.

ஏர்முனை - போர்முனை இணைப்பைக் காட்டுவதுபோல் இதழின் முகப்புச் சின்னம் (EMBALEM) அமைந்துள்ளது. (பிற்காலத்தில் பாரதப் பிரதமர் உருவாக்கும் "ஜெய் கிசான், ஜெய் ஜவான்" எனும் கோஷத்திற்கு முன்னோடியானது, இந்தச் சின்னம் என்பது குறிப்பிடத்தக்கது). மையத்தில் தேசியக் கொடி.

'தமிழ்' என்று அச்சிடப்பெற்று இடையில் முற்கூறிய சின்னம் அமைய, தொடர்ந்து நாடு அச்சிடப்பெற்றது. அதில் கலப்பை ஏந்திய ஓர் உழவன் படம்; கொடியின் இரு பக்கங்களிலும் நீண்ட இரு போர்வாள்கள் எதிரும் புதிருமாக இணைந்துள்ளன. சின்னத்தின் கீழே 'சுயராஜ்ய வாழ்வே சுகவாழ்வு' என்று அச்சிடப் பெற்றுள்ளது. இந்தத் தேசியச் சின்னமே இதழின் கருத்தியல் கோட்பாட்டை விளக்கவல்லது. மலர் 10, இதழ் 120 என்றும் அச்சாகியுள்ளது. பக்கம், எழு பத்திகளாகப் பகுக்கப்பட்டுள்ளது. அளவு இன்றைய தினமலர் நாளிதழை ஒத்திருந்தது.

உள்ளடக்கம்

முதல் பக்கத்தில் செய்திகள் பெரிய சிறிய தலைப்புக்களுடன் அச்சிடப் பெற்றுள்ளன. சினிமாச் செய்திகள், கப்பல் செய்திகள், நூல் விமர்சனம், ஜஸ்டிஸ், சுயமரியாதை இயக்கச் செய்திகள் பக்கங்களை நிறைவுசெய்கின்றன. தலையங்கம் நான்காம் பக்கத்தில் வெளிவந்தது. துணைத்தலையங்கமும் உண்டு.

காந்தியடிகளின் அகிம்சா நெறியைக் கொள்கை அளவில் ஏற்றுக்கொண்டிருந்தாலும், டாக்டர் நாயுடு அவ்வப்பொழுது ஆயுத மேந்திப் போராட்டம் வேண்டும் எனும் கருத்தையும் வெளியிட்டதுண்டு. இத்தகைய அவருடைய கட்டுரைகள் 'தமிழ்நாடு' இதழ்களில் வெளிவந்தன.

12.6.1921இல் வெளிவந்த 'சுதந்திரப் போராட்டம்' எனும் கட்டுரையும், 3.9.1921இல் வெளிவந்த 'இந்தியா சுதந்திரம் பெற ஆயுதமேந்தவேண்டும்' எனும் கட்டுரையும் அரசாங்கத்தினால் ராஜத்துரோக வழக்கிற்கான கட்டுரைகளாக அறிவிக்கப்பட்டன. சேலம் மாவட்ட நீதிமன்றத்தில் நடைபெற்ற வழக்கு விசாரணையில் டாக்டர் நாயுடுவிற்கு ஒன்பது மாதக் கடுங்காவல் தண்டனை விதிக்கப்பட்டது.

1936 செப்டம்பர் 26 – தலையங்கம்

இந்தத் தலையங்கத்தின் சுருக்கம், வருமாறு:

"தமிழ்நாடு' தோன்றியது முதல் இன்று வரையில் ஒரே ஒரு நாள் மட்டும் பத்திரிகை வெளிவராமல் நின்றது என்பதைக் கண்டு தமிழர் மனம் மகிழ்ச்சியடையு மென்பதில் சந்தேகமில்லை. தேசத்திற்காக நான் மேல் போட்டுக் கொண்ட இப்பத்திரிகையை நடத்துவதற்கு, ஆதி முதல் இதுவரையில் பொது ஜனங்களிடத்தில், பங்காகவோ, தானமாகவோ பணம் வாங்காமல் இத்தனை ஆண்டுகளாக 'தமிழ்நாடு' பத்திரிகையை நடத்தி வந்திருக்கிறேன் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன். . . 18 வருடங்களில் மொத்த நஷ்டம் 4216 - 6- 6 ரூபாயாகின்றது. சென்ற சில காலமாகப் பத்திரிகைக்கு நஷ்டம் உண்டாக

வில்லையாயினும் - ஆரம்பத்தில் ஏற்பட்ட நஷ்டத்தை ஈடுசெய்ய முடியவில்லை. நாற்பதினாயிரம் நஷ்டத்தை ஈடுசெய்த கொள்ள வேண்டுமென்ற கவலை எனக்குமில்லை. எனது நண்பர்களுக்கும் கிடையாது. தேசியக் கொள்கையுடன் தென்னாட்டில் வளர்ந்த பத்திரிகைகளில் 'தமிழ்நாடு' முதன்மை பெற்றதாகும்.

'திராவிட கடபடா' - தலையங்கம்

1936 அக்டோபர் 8இல் வெளிவந்த 'திராவிட கடபடா' எனும் தலையங்கம், *மொழிநோக்கில் முக்கியமானத் தலையங்கமாகும்.* தலையங்கத்தன் ஒருபகுதி, வருமாறு:

"திராவிட தேசமாகிய தென்னாட்டில், ஹிந்தி பாஷையைக் கற்றுக் கொள்ளும் விஷயமாக நாம் கொண்டுள்ள முரண்பட்ட அபிப்பிராயத்தை நன்கு அறிவார்கள். இங்கிலீஷ் படித்தவன்தான் பெரிய மனிதன் என்று கைகட்டி சேவிக்க வேண்டிய துர்பாக்கியம் தமிழ்த் தேசத்தில் இப்பொழுது இருந்துவருகிறது. போதாக்குறைக்கு ஹிந்தி தெரிந்தவன்தான் தேசத்தில் பெரிய மனிதன் என்ற மாயையை உண்டாக்குவது கூடாதென்பது நமது கருத்தாகும். ஹிந்தி பிரசார சபையில் சென்னையில் நேற்று பண்டித நேரு பேசியதில் திராவிட பாஷைகள் 'கடாபடா' பாஷைகளாகத் தமக்குத் தோன்றுவதாகச் சொல்லியிருப்பதைக் கண்டு வருந்துகிறோம். பண்டிதர் இவ்வளவு அலட்சியமாகக் கூறிய பொழுது, சபையிலிருந்தவர்கள் சிரித்தார்களாம். திராவிட தேசத்திற்கு முற்றிலும் அன்னிய பாஷையாகிய ஹிந்தியைப் போற்றுவதால் தமிழ் பாஷைக்கு உண்டாகும் தாழ்வை எடுத்துக்காட்ட இதைவிட வேறு உதாரணம் தேவையில்லை".

1938இல் இந்தி எதிர்ப்பு இயக்கம் தோற்றுவதற்கு முன்பாகவே தேசியவாதியாக நின்று இந்தி எதிர்ப்புக்கு கருத்தைத் 'தமிழ்நாடு' வெளியிட்டது. இது இதழின் மொழி வழிபட்ட கருத்தியல் கோட்பாட்டிற்குத் தகுந்த சான்றாகும்.

திரு.வி.க. பார்வையில்

தமிழ்நாட்டில் காங்கிரஸ் இயக்கம் பிரசாரத்தில் 'நாயுடு, நாயக்கர், முதலியார் முன்னணித் தலைவர்களாகப் புகழ்

பெற்றிருந்தனர். ஆம், வரதராஜுலு நாயுடு, இராமசாமி நாயக்கர், திரு.வி. கலியாணசுந்தர முதலியார் ஆகிய மூவர் கூட்டு தேசிய மேடைத் தமிழின் பேராற்றலுக்குச் சின்னமாகத் திகழ்ந்தது. திரு.வி.க. அவர்கள் நாயுடுவைப் பற்றிக் கூறியக் கருத்துகளில் பின்வருவது ஒன்றாகும்.

"பிராமணரல்லாதார் நலன்களில் சற்றும் விட்டுக் கொடுக்கதாவர் டாக்டர் நாயுடு. எனினும் விடுதலைப் போராட்டத்திற்கு எதிராகச் செயல்படும் போக்கை எதிர்த்து 'ஜஸ்டிஸ்' கட்சி முளைவிட்டபோது அதைக் கிள்ளி எறிவதற்குப் புறப்பட்டவர் டாக்டர் வரதராஜுலு நாயுடு. இவரது பிரசாரம் தமிழ்நாட்டில் நாலாப் பக்கங்களிலும் பரவாவிடின் 'ஜஸ்டிஸ்' கொடி நாடு முழுவதும் பரவிக் காங்கிரசார் உணர்ச்சிக்குக் கேடு சூழ்ந்திருக்கும் தென்னாட்டில் காங்கிரஸ் பக்தியை வளர்த்த பெருமை நாயுடுவுக்கு உண்டு."

'தமிழ்நாடு' இதழ் தேசியத்திற்குத் தீங்கு நேரிடாவண்ணம் பிராமணரல்லாதார் நலன்களுக்கு ஆதரவளித்தது. "ஜஸ்டிஸ் கட்சியில் பிராம்மணர் மீது துவேஷங்கொண்டவர்கள் சிலர் இருப்பது போலவே, காங்கிரசில் பிரமணரல்லாதார் மீது வெறுப்பு கொண்ட பிராமணர்கள் சிலர் இருக்கிறார்களென்பதை ஒருவரும் மறுக்கமுடியாது" எனும் கருத்தையும் 'தமிழ்நாடு' வெளியிட்டுள்ளது. 1936 செப்டம்பர் 7இல், "இந்திய தேசிய காங்கிரசானது குறிப்பிட்ட எந்த ஜாதியினருக்கும் கைபோகச் சொத்து அல்ல என்பதை ஸ்ரீ நாயக்கர் மறந்துவிடக் கூடாது" எனும் கருத்தை முன்வைத்து 'ஈ.வேரா.' வைக் காங்கிரசில் சேர அழைப்பு விடுத்துச் செய்தியும் வெளிவந்துள்ளது. 'இருவருக்கு அழைப்பு' எனும் துணைத் தலையங்கத்தில் முற்கூறியக் கருத்து கூறப்பட்டுள்ளது. ஈ.வெ.ரா.வும் எஸ். சீனிவாசய்யங்காரும் 'இருவர்' என்று குறிப்பிடப் பெற்றனர்.

வ.வே.சு. ஐயரின் சேரமாதேவி குருகுலம் வித்தியாலயாவில் பிராமணர், பிராமணரல்லாதார் மாணவர்களிடையே சம ஆசனம், சமபோஜனம் கடைப்பிடிக்காதரை நேரில் கண்டறிந்த நாயுடு அந்த நடைமுறையை எதிர்த்துத் 'தமிழ்நாடு' இதழில் தொடர்ந்து எழுதி வந்தார்.

'பேனா மன்னர்' டி.எஸ். சொக்கலிங்கம், 'தினமணி' நாளிதழில் (1936 பிப்ரவரி 29), 'தமிழ்ப் பத்திரிகை உலகில் புரட்சி' எனும் தலைப்பில் தேவிதாஸன்' எனும் புனைபெயரில் எழுதியக் கட்டுரையில், 'சுதேசமித்திரன்' - 'தமிழ்நாடு' இடையே நிகழ்ந்த போட்டிகள் சிலவற்றைக் குறிப்பிட்டுள்ளார். அளவு, பக்கங்கள், கொள்கை, விலை முதலானவற்றில் நிகழ்ந்த போட்டிகளில் தமிழ்நாடு' செய்தி புரட்சியை விளக்கியுள்ளார். இந்த விளக்கத்தில் கூறப்பட்ட ஒரு செய்தி பின்வருவது.

'தமிழ்நாடு'க்கு எப்பொழுதுமே விளக்கெண்ணெய் கொள்கை கிடையாததாகையால், 'தமிழ்நாடு வாசகர்கள் அதிகமாயிருந்தது இயற்கையே. இதில் மற்றொரு முக்கியமான விஷயம் சாதியைத் தவிர பாக்கி நாட்களில் தமிழ்நாடு முதல் வருஷத்தில் 8 பக்கங்களுடனும் இரண்டாவது வருஷத்தில் 10 பக்கங்களுடனும் வெளிவந்தது. மூன்றாவது வருஷத்தில்தான் 12 பக்கங்கள் போட்டது. அப்படியிருந்தும் பக்கங்கள் குறைவு என்பதற்காக அதற்கு ஆதரவு குறைந்து விடவில்லை. எனவே போட்டியிலோ புரட்சியிலோ பக்கங்கள் மட்டும் ஒரு முக்கிய காரணமாய் இருப்பதில்லை. அதற்குமுன் தோன்றிய பத்திரிகைகளைப் போல இல்லாமல், 'தமிழ்நாடு' நிலைத்துவிட்டது. தமிழில் பத்திரிகைப் புரட்சியில் இது ஒரு முக்கியமான சம்பவம்".

1930 - 32களில் காந்தியடிகள் நடத்திய உப்பு சத்யாக்கிரகம், சட்டமறுப்பு இயக்கம் இரண்டையும் எதிர்த்ததால் 'தமிழ்நாடு' தேசபக்தர்களின் ஆதரவை இழந்துவிட்டது.

சுதந்திரச் சங்கு – 1930

தமிழ் இதழியல் வரலாற்றில் முதன்முதலில் மூன்று லட்சம் பிரதிகளை விற்பனை செய்து காட்டிய சாதனையைச் செய்தது, சுதந்திரச் சங்கு. 1930இல் வீறுகொண்டெழுந்த உப்பு சத்யாக்ரக இயக்கம், சட்டமறுப்பு இயக்கம் முதலானவை சுதந்திரச் சங்கு 1930இல் தோன்றுவதற்கான சூழலை ஏற்படுத்தின. முதல் இதழ் 1930 ஜனவரி 26இல் வெளிவந்தது. எஸ். கணேசன், எஸ். சுப்பிரணியன் ஆகியோரை ஆசிரியர்களாகக் கொண்டு முதலில் வார இதழாகவும், பின்பு வாரமிரு முறையாகவும், அடுத்த வாரம் மும்முறையாகவும் வளர்ச்சி பெற்றது சுதந்திரச் சங்கு. காந்திய

இயக்கத்தின் கொள்கைகள் அனைத்தையும் பரப்புவதையே கருத்தியல் கோட்பாடாகக் கொண்டது, சுதரந்திரச் சங்கு. பாமர மக்களைக் கவரும் வகையில் நாட்டுப் பாடல்களையும் பாமர வழக்குகளையும் நகைப்பூட்டும் கருத்துப் படங்களையும் (கார்ட்டூன்கள்) பெருமளவில் பயன்படுத்தியது. சுதந்திரச் சங்கு, செய்திப் பத்திரிகையாகவும் செய்தி விமர்சனப் பத்திரிகையாகவும், தனிப்பிரதி விலையைக் காலணாவாகவும் வைத்தும் பரபரப்பை ஏற்படுத்தியது சுதந்திரச் சங்கு. ரிக்ஷா வண்டிக்காரர், சாதாரண கூலியாள் முதலான ஏழை எளிய மக்கள் அரசியல் பத்திரிகையைப் படிக்கவைத்த பெருமையும் சுதந்திரச் சங்கிற்கு உரியது. 1933-34களில் சுதந்திரச் சங்கு இலக்கிய இதழாகவும் புகழ் பூத்தது. 1934 ஜூன் மாதம் முதல் சுதந்திரச் சங்கு நின்றுவிட்டது.

சுதந்திரம் – 1934

புதுச்சேரியில் இருந்து 1934 ஜூன் 15இல் வெளிவந்த 'சுதந்திரம்' எனும் மாத இதழ் தொழிலாளர் இயக்கத் தலைவர் வ. சுப்பையா அவர்களை ஆசிரியராகவும், உரிமையாளராகவும், இந்தியாவில் பிரிட்டிஷ் ஏகாதிபத்திய எதிர்ப்பையும் இணைத்து கருத்தியல் கோட்பாடு தமிழ் இதழியல் வரலாறு கண்ட முதல் புதுமையாகும். புதுச்சேரியை, இந்தியாவுடன் இணைக்க நிகழ்ந்த போராட்டத்தின் போர் முரசை ஒலித்த சுதந்திரம். சென்னை ஜனசக்தி இதழிற்கு முன்பாக மார்க்சியப் பார்வையுடன் கட்டுரைகளை வெளியிட்ட பெருமையும், 'சுதந்திரம்' இதழிற்கு உரியது.

ஜனசக்தி – 1937

1937 நவம்பர் 7இல் காங்கிரஸ் சோஷலிஸ்ட் கட்சியின் வாரப்பத்திரிகையாகத் தோன்றியது. ஜனசக்தி 1942 செப்டம்பர் 30இல் கம்யூனிஸ்ட் கட்சியின் வாரப் பத்திரிகையாக மாறியது. பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத்தின் கடுமையான அடக்குமுறைகள் காரணமாக அவ்வப்பொழுது வெளிவராமல் தடைப்பட்டதும் உண்டு.

விடுதலைப் போராட்டத்தில் தொழிலாளர், வியாபாரிகள் ஆகியோரைப் பங்கேற்கச் செய்து, விடுதலைப் போராட்டக் களத்தை விரிவுப்படுத்தி மார்க்சிய போதனைகளைத் தமிழில் வாசககர்கள் புரிந்து கொள்ளச்செய்தது.

தினமணி - 1934

காந்தியுக அரசியல் போர்க்களத்தில் தோன்றிய இதழியல் போர்க்கலன்களில் ஒன்றாக 'தினமணி' பாரதி நினைவு நாளான செப்டம்பர் 11, 1934இல் நாளேடாகத் தோன்றியது. பாரத உணர்வு கொண்ட தேசபக்தர்களால் நடத்தப்பெற்று வந்தது.

முதல் தலையங்கத்திலேயே பின்வருமாறு குறிப்பிடப்பெற்ற கருத்தியல் கோட்பாட்டில் பாரதிவுணர்வு எதிரொலித்தது.

"சுதந்திர சூரியனைக் காண விரும்பிய தெய்வீகப் பித்தரான சுப்பிரமணிய பாரதியாரின் வருஷாந்திரத் தினத்தன்று அவருடைய சுதந்திர தாகத்தையும் சமத்துவக் கொள்கைளையும் தமிழ்நாட்டில் பரப்பும் நோக்கத்துடன் பிறந்திருக்கும் 'தினமணி'யைத் தமிழ்மக்கள் மனமுவந்து வரவேற்பார்கள் என்பது எமது பூர்ண நம்பிக்கை".

'தினமணி'யை நிறுவியவர் எஸ். சதானந்தம் (1900-1953) எனும் புகழ்பெற்ற பத்திரிகையாளர். இவர் சுதேசி செய்தி நிறுவனமாக "ப்ரீபிரஸ் இந்தியா நியூஸ் ஏஜன்சி" எனும் அமைப்பை உருவாக்கியவர்.

இவரிடமிருந்து 'தினமணி' ராம்நாத் கோயங்கா (1904 - 1991) எனும் தேசபக்தருக்கு உரிமையாயிற்று. 'தினமணி' ஆசிரியராகப் பொறுப்பேற்று டி.எஸ். சொக்கலிங்கம் செய்த சாதனைகளும் இவரைத் தொடர்ந்து, ஏ.என். சிவராமன் சாதனைகள் புரிந்தும் தினமணியின் கருத்தியல் கோட்பாடுகளின் அரசியல், பொருளாதாரம், இலக்கியம் பற்றிய பன்முக அம்சங்களை வளர்த்தெடுத்தன.

முதல் தலையங்கம்

'தினமணி'யின் முக்கியமான மூன்று குறிக்கோள்கள் பின்வருமாறு முதல் தலையங்கத்தில் குறிப்பிடப்பெற்றுள்ளன.

1. "நமது நாட்டில் சென்ற பதினைந்து வருஷங்களாக ஓர் அபூர்வ சுதந்திரப் போர் நடந்து வருகின்றது. அதன் நடுவில் ஏற்படும் அற்ப வெற்றிகளால் மயங்காமலும் சிறிய தோல்விகளால் தன்மையிலும் பாரததேசம் விடுதலை அடையும்வரையில் தமிழ் மக்களைப் போற்றியும் தோன்றியும், 'தினமணி' துணைபுரியும்.

2. "எல்லா வியாதிகளிலும் மனோவியாதி கொடியது. நமது மக்களின் மனத்தில் அடிமைத்தனம் குடிகொண்டிருக்கின்றது. காந்தியடிகளின் பெருமுயற்சியால் சிறிது காலமாகப் பாரத மக்கள் மற்ற நாட்டினரைத் தலையெடுத்துப் பார்க்க ஆரம்பித்திருக்கின்றனர். ஆயினும், நமது பெரியோரிடத்தும் சிறியோரிடத்தும் அடிமைப்புத்தி அகன்ற பாடில்லை. அதை அடியோடு அழித்துத் தமிழ் மக்களை மானிகளாகச் செய்வதற்குத் 'தினமணி' ஓயாது பாடுபடும்."

3. இந்திய ஜனங்களில் பெரும்பாலோர் அழியாப் பஞ்சத்தில் ஆழ்ந்திருக்கின்றனர். இதற்குப் பல காரணங்களுள்ளன. அவற்றுள் முதன்மையானது . முதலாளிகளும் ஜமீன்தாரர்களும் நமது தொழிலாளர்களின் உழைப்பினால் உண்டாகும் செல்வத்தை எல்லாம் பிடுங்கிக்கொண்டு தங்கள் ஆடம்பரங்களுக்காக அழிப்பதுதான். இம்முறை மாறி நாட்டின் செல்வத்தின் பெரும்பகுதி தொழிலாளர்களுக்குச் சேரக்கூடிய புதியதோர் சமூகம் அமைக்கப்பட வேண்டும். அதற்கு வேண்டிய அறிவையும் ஆற்றலையும் தமிழ் மக்களுக்குத் தினந்தோறும் ஊட்டுவது 'தினமணி'யின் தனித் தொண்டாகும்.

மேலே, மூன்றாவதாகக் கூறப்பெற்றுள்ள கருத்து, தேசிய நாளிதழில், இடதுசாரி இயக்கப் பார்வையைக் கொள்கையாகக் கொள்ளாத நாளிதழில், சற்று முற்போக்கானதாகும். இதற்குமுன்பாக 1920 வெளிவந்த திரு.வி.க.வின் 'நவசக்தி' வார இதழில் தொழிலாளர் இயக்கம் பற்றிய செய்திகளும் தலையங்கங்களும் நிறைந்திருந்தன.

1941-க்கு பிறகு 'தினமணி'யில் வரலாற்றில் காணப்படும் கருத்தியல் கோட்பாடுகள் தனி ஆய்விற்குரியன.

மகளிருக்கான இதழ்கள்

பத்தொன்பதாம் நூற்றாண்டில் ஏற்பட்ட புதிய சமூக விழிப்பிற்கு முதலில் வங்கத்தில் அரிய - பெரியத் தொண்டாற்றியது பிரம்ம சமாஜம். பெண்ணுரிமை இயக்கத்திற்கும் கல்வி விழிப்பிற்கும் சமூக சீர்திருத்த எழுச்சிக்கும் பிரம்ம சமாஜம் பாடுபட்டது.

தமிழகத்தில் பிரம்மசமாஜத்தின் தாக்கம், 1864இல் சென்னையில் 'வேதசமாஜம்' எனும் பெயரில் 7-4-1864இல் ஓர்

அமைப்பு ஏற்பட வழிவகுத்தது. (இது பற்றிய விவரமறிய, "பெ.சு. மணியின், "தமிழகத்தில் பிரம்ம சமாஜம்" எனும் நூலை (1992)ப் பார்க்கவும்.

வேத சமாஜத்தின் பிரசார இதழாகத் 'தத்துவ போதினி' சென்னையில் இருந்து, 7.5.1864இல் வெளிவரத் தொடங்கியது. வேதசமாஜம் 'தென்னிந்திய பிரம்ம சமாஜம்' எனும் பெயர் மாற்றத்தை 1871இல் பெற்றது.

வேத சமாஜத்தின் பதினான்கு சட்டதிட்டங்களில் மகளிர் முன்னேற்றம் தொடர்பானவை, பின்வருவனவாகும்.

1. விபசாரத்தைக் கண்டிப்பேன்

2. விதவைகள் மறுமணம், குழந்தை மண எதிர்ப்பு ஆகியவற்றில் என் சக்தியனைத்தையும் கொண்டு செயலாற்றுவேன்.

3. இருதார மணத்தையோ பலதார மணத்தையோ செய்யும் குற்றத்தைப் புரியமாட்டேன்.

4. பொதுவான கல்வி வளர்ச்சிக்கும் பெண் கல்விக்கும் அவர்கள் விழிப்பிற்கும் பாடுபடுவேன். இப்பணியை என் குடும்பத்தில் இருந்தே தொடங்குவேன்.

பெண்ணடிமைத்தனமும் நாட்டின் அடிமைத்தனமும்

'தத்துவபோதினி'யில் 1865 ஜூன் 7ஆம் தேதி இதழில் பெண்களுக்குக் கல்வி' எனும் தொடர் கட்டுரையில் பெண் அடிமைத்தனம், நாட்டின் அடிமைத்தனத்திற்கு ஆதாரமாயிற்று என்பது பின்வருமாறு விளக்கப் பெற்றுள்ளது.

"நாம் தைரிய சூன்னியர்களாகிப் பராதீனப் பட்டுப் போனதற்கு முக்கியமான காரணம் நமது பெண்களுடைய மடமையும், அடித்தன்மையுமே என்பதற்குச் சந்தேகமேயில்லை. மடமையும் அடிமைத்தன்மையுமே பெண்களுக்கு அத்தியுசிதமான சத்குணங்க ளென்றும் அநேக நூல்கள் போதிக்கின்றன. இது சத்தியமென்று பெண்களும் வெகுகாலமாக நம்பிவிட்டார்கள். இவ்வித மக்களல்லவோ நம்மைப் பெற்று ஊட்டி வளர்க்குந் தாய்மார்கள். இவர்களுடைய அடிமைத்தன்மையன்றோ நமது இளைய மனதிற் படிந்து நம்மோடு வளர்ந்து நம்மை அந்நிய

தேசத்தாருடைய ஆளுகைக்குட்படுத்தியது. மெலியாரை வலியாரடித்தால் வலியாரைத் தெய்வமே அடிக்கும் என்கிற பழமொழியின்படி, நாம் பேதையராகிய நமது பெண்களை வருத்தி அகௌரப்படுத்தினதால், கடவுள் நமது தேச கௌரவத்தை அழித்து நம்மைப் பல நூற்றாண்டும் அந்நியருடைய ஆதீனமாக்கிப் பல துன்பங்களையும் அனுபவிக்கும்படிச் செய்தனர்."

அமிர்தவசனி – 1866

"ஸ்திரீகளின் பொருட்டு ஸ்திரிகளாலேயே எழுதப்பட்டு அழகிய சிறுபுத்தகமாய் அச்சிடப்பட்டு வருகின்றது" எனும் ஓர் குறிப்பு 'அமிர்தவசனி'யைப் பற்றி 1866 ஜூலை 7ஆம் தேதியில் வெளிவந்த 'தத்துவ போதினி'யில் கூறப்பெற்றுள்ளது.

பெண்களுக்காகப் பெண்களாலேயே எழுதப்பட்டு வெளிவந்த இந்த இதழைப் பற்றி 'தத்துவபோதினி' மேலும் எழுதியதாவது:

"இதன் அழகிய நாமத்துக்குத் தக்கபடியே இதிலடங்கிய வாக்கு அமிருதமயமாயிருக்கக் கண்டு யாங்களடைந்த ஆனந்தத்துக்களவில்லை. இதில் பற்பல உபயோகமுள்ள விஷயங்களைப் பற்றி யாவருக்கும் எளிதில் விளங்கும்பட அதில் சுலப நடையில் எழுதியிருப்பது போலவே வேறெவ்விடத்தும் யாங்களிது வரையில் பார்த்தோமில்லை. இதன் அழகும் மேன்மையும் இதை வாசிப்போருக்கன்றி, செம்மையாய் விளங்க மாட்டாதாகையால், இதிலிருந்து சில பாகங்களை இப்பத்திரிகையில் பிரசுரம் செய்கிறோம்."

இந்த இதழின் பிரதி ஒன்று கூட கிடைக்கவில்லை. இதில் வெளிவந்த கட்டுரைகளில் சில 'தத்துவபோதினி'யில் மறு வெளியீடுகளாக வந்துள்ளன.

இதன் கருத்தியல் கோட்பாடுகள், 'தத்துவபோதினி'யில் வெளிவந்துள்ள பின்வரும் விளம்பர வாசகங்கள் வழியே அறியத்தக்கன.

"இச் சென்னையம்பதிலுள்ள பற்பல பாடசாலைகளில் கல்வி பயின்றவர்களும், தற்காலத்தில் கல்வி கற்பவர் களாகிய எம்போலிய ஹிந்து ஸ்திரீகளுக்கு நல்லறிவு நல்லொழுக்கங்களை

விர்த்தி செய்விப்பதே இப்பத்திரிகையின் கருத்தாம். சமயதருமம், ஆசாரதருமம், இலக்கிய இலக்கணங்கள், கணிதம், ஜெந்து சுபாவம், பாக சாஸ்திரம், பலவகைப்பட்ட தையல்கள், விடுகதைகள், விநோத கதைகள், பழமொழிகள் முதலிய பல பிரயோஜனமான விஷயங்களை எங்களாலியன்றவரையில் இப்பத்திரிகையின் கண்ணே இயற்றுவிக்க முயலுவோம். எங்கள் அபிப்ராயங்களை விளக்கத்தக்க சில உசிதமான சித்திரப் படங்களையும் இதிற் காணலாம்" (தத்துவபோதினி, ஆகஸ்டு 7, ப. 59).

இந்த இதழிற்கு ஓராண்டு சந்தா 5 அணாவாகவும் ஒரு மாத சந்தாவாக அரை அணாவாகவும் நிர்ணயம். இதழின் தொடக்க முகவரியாக, 'பத்திராதிபர்கள், ப்ரீ சர்ச்சு மிஷன் பாலிகா பாடசாலை, சென்னை பூக்கடை வீதி' அல்லது சென்னை ஆசாரப்பன் வீதியிலுள்ள ப்ரீ சர்ச்சு மிஷன் பாலிகா பாடசாலை' என்று விளம்பரத்தில் குறிப்பிடப்பெற்றுள்ளது.

விளம்பர வாசகங்களில் இருந்து 'அமிர்த வசனி' ப்ரீசர்ச்சு மிஷனால் நடத்தப்பட்டிருக்கலாம் என்று அறியமுடிகின்றது.

"இப்பாடசாலை கிறிஸ்துவர்களால் ஏற்படுத்தப்பட்டு கிறிஸ்துவர்களால் போதிக்கப்பட்டபோதிலும் இதில் கிறிஸ்துவர்களை யாவது மஹம்மதீயரையாவது, வேசிகளையாவது சேர்ப்பதில்லை".

கிறிஸ்துவ மிஷனரிகளால் நடத்தப்பெற்ற பெண்கள் பாடசாலையில் கிறிஸ்துவப் பெயர்கள் சேர்க்கப்படவில்லை எனும் செய்தி வியப்பிலும் வியப்பாகத் தெரிகின்றது. இதழின் கட்டுரைகளும் இந்து மகளிர் பொது - கல்வியறிவுக்கே முதலிடம் தந்துள்ளதாகத் தெரிகின்றது.

சுகுணபோதினி - 1883

'மாதமிருமுறை பிரசுரம் செய்யப்படும்' எனும் அறிவிப்புடன் கூடிய 'சுகுணபோதினி' 1888ஆம் ஆண்டு மார்ச்சு மாதம் 1ஆம் தேதி இதழ்தான் கிடைத்துள்ளது. இதில் 'ஆறாவது புத்தகம்' எனும் தலைப்பில் எழுதப்பெற்றக் கட்டுரையைக் கொண்டு 'சுகுணபோதினி' 1883இல் வெளிவந்ததாக அறியமுடிகின்றது.

பெயருக்கு ஏற்ப நற்குணங்களை - ஆண் - பெண் இருபாலர்க்கும் பெரும்பாலும் பெண் கல்விக்கும் பெரும்

முன்னேற்றத்திற்கும் முன்னுரிமை தரப்பட்டுள்ளது. போதிப்பதை ஒரு கருத்தியல் கோட்பாடாகக் கொண்டது 'சுகுணபோதினி'. இந்த இதழில் கிடைத்த சில படிகளைக் கொண்டு மா.ரா. சிவ அரசி ஆய்வு செய்துள்ளார். இவர் ஆய்வில் சுட்டிக்காட்டப்பெற்றுள்ள சில கருத்தியல் கோட்பாடுகளை அறியமுடிகின்றது.

பெண் கல்வியை வலியுறுத்தியதோடு, குழந்தை மண எதிர்ப்பு, விதவை மறுமண ஆதரவு, இல்லறப் பண்புகளைப் பேணுதல் முதலானவை கருத்தியல் கோட்பாடுகளாகக் கொள்ளப்பட்டுள்ளன.

ஆசிரியர் பெயரை அறியமுடியவில்லை. எவ்வளவு காலம் வெளிவந்தது என்பதையும் அறியமுடியவில்லை. பெண்களுக்காக, பெண்களால் நடத்தப்பெற்ற இதழாக 'சுகுணபோதினி' வெளிவராவிடினும், பெண்கள் விழிப்புப் பெறப்பட்டுள்ளது.

தமிழ்மாது

பெண்களுக்காக, பெண்களாலேயே நடத்தப்பெற்ற மகளிர் இதழ்களில் 'தமிழ்மாது' ஒன்றாகும். ஏப்ரல் 13, 1905இல் மாத இதழாக சென்னையில் இருந்து வெளிவந்தது. இதன் ஆசிரியை அக்காலத்தில் சிறந்த பெண் எழுத்தாளராகப் புகழ்பெற்ற கோ. ஸ்வப்பநேஸ்வரி ஆவார். சென்னை கோமளேசுவரர் பேட்டையில் இருந்து ஆசிரியையால் வெளியிடப்பெற்றது. ஆசிரியை பாரதியாரின் 'சக்ரவர்த்தினி' எனும் மகளிர் இதழிலும் எழுதியுள்ளார்.

முதல் இதழின் தலையங்கத்தின் ஒரு பகுதி, வருமாறு:

"மகம்மதியரால் ஒளி மழுங்கிக் கிடந்த பெண் கல்வியை மறுபடி உயிர்ப்பிக்கச் செய்த காருண்ய வள்ளலாகிய விக்டோரியா சக்ரவர்த்தினியாரின் அனுபோக குணத்தைப் பாடித் துதிப்போமாக. பெண்கல்வி வேண்டுமென்றும் அதை விருத்தியடையச் செய்ய வேண்டும் என்றும் இடைவிடாது விளக்கி வரும் நமது இந்து ஆசார சீர்திருத்தக்காரரின் நன்முயற்சிக்கு நன்றி செலுத்துவோமாக." (ப.1)

மேலே குறிப்பிடப்பெற்றுள்ள 'நமது இந்து ஆசாரச் சீர்திருத்தக்காரரின்' என்பது 9.11.1892இல் ஜி. சுப்பிரமண்ய ஐயர் வீட்டில் நிறுவப்பெற்ற 'மெட்ராஸ் இந்து சோஷல் ரிபாக்ரீம் அசோசியேஷ்'னைச் சார்ந்தவர்கள்.

விதவை மறுமணத்தை ஆதரித்து 'தமிழ் மாது' எழுதியுள்ளது.

இந்து இதழின் வரலாறும் கண்டறியப்பட வேண்டிய தொன்றாகும்.

சக்ரவர்த்தினி

"தமிழ் நாட்டு மாதர்களின் அபிவிருத்தியே நோக்கமாக வெளியிடப்படும் மாதாந்தரப் பத்திரிகை" என்று தமிழிலும், "A Tamil Monthy devoted manily to the elevation of Indian Ladies" என்று ஆங்கிலத்திலும் 'சக்ரவர்த்தினி' தன்னை அறிமுகப்படுத்திக் கொண்டது.

'தமிழ் நாட்டு மாதர்கள்' என்று தமிழில் குறிப்பிடப்பெற்றது. ஆங்கிலத்தில் 'இந்திய மாதர்கள்' என மாற்றம் பெற்றுள்ளதும் கவனிக்கத்தக்கது.

பாரதியாரை ஆசிரியராகக் கொண்டு முதல் இதழ் 1905 ஆகஸ்ட்டில் வெளிவந்தது. ஓராண்டு காலம் 1906 ஆகஸ்டு வரை - பாரதியார் ஆசிரியராகவிருந்து மிகக் குறுகியக் காலத்தில் 'சக்ரவர்த்தினி'யைப் பெண்கள் முன்னேற்றத்திற்கான வகையில் கட்டுரைகள், கவிதைகள், சிறுகதைகள், நாடகங்கள், விவாதங்கள், நாட்டு நடப்புச் செய்திகள், கல்விச் சிந்தனைகள் முதலானவற்றிற்காகப் பயன்படுத்தினார்.

சக்ரவர்த்தினிக்கான முகப்பு கோட்பாடாகப் பாரதியாரே பின்வரும் குறட்பாவை இயற்றினார் என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

பெண்மை யறிவுயரும் பீடோங்கும் பெண்மைதா
னொண்மை யுறவோங்கு முலகு

இந்தக் குறட்பா, தலையங்கத்தின் மேற்புறத்தில் அச்சிடப் பெற்றுவந்தது.

இரண்டாம் ஆண்டுத் தொடக்கத்தைக் குறித்து, 'நமது பத்திரிகையின் அபிவிருத்தி' எனும் தலையங்கத்தைப் பாரதியார் எழுதினார். இதில் பெண்கள் பத்திரிகைக்குப் போதுமான அளவு ஊக்கமளிக்கவில்லை என்பதைப் பற்றிப் பின்வருமாறு குறிப்பிட்டுள்ளார்.

"தமிழ்நாட்டுப் பெண்மணிகளின் சீரையும் சிறப்பையும் அறிவுநலத்தையும் அபிவிருத்தி புரிவதே பெருநோக்கமாகக்

கொண்ட இப்பத்திரிகை விஷயத்தில் மாதர்கள் நாம் விரும்பியபடி சிரத்தை யெடுக்காமை பற்றி அவர்களிடம் நாம் குற்றம் கூற சுதந்திரம் பெற்றிருந்தோம். நமது பத்திரிகையைப் படிக்கும் மாதர்களிலே பலர் இதற்குச் சிறிய உபந்யாசங்கள், கதைகள், பாடல்கள், நாட்டுவர்த்த மானங்கள், சந்தேகங்கள் முதலின எழுதியனுப்ப வேண்டுமென்று வற்புறுத்திக் கேட்டுக் கொள்கிறோம். இதுவரை இப்பத்திரிகையிலே மாதர்களனுப்பிய விஷயங்கள அதிகமாக இல்லாது போயினமை அதிருப்திக்கிடமாகின்றது."

சக்ரவர்த்தினியில் இரு விவாதக் கட்டுரைகளுக்கு இடமளித்தார் பாரதியார். விவாதங்களில் பங்கேற்றவர்கள் ஆண்கள். ஆனால் பெண்கள் தொடர்பான இரு தலைப்புகளைத் தந்தார் பாரதியார். ஒரு தலைப்பு, "நமது மாதர்களுக்கு இங்கிலீஷ் கற்பித்தல் அவசியந்தானா?" என்பதாகும். 'ஆம்', என்றும் 'இல்லை' என்றும் எழுதப்பெற்ற இரு கட்டுரைகளையும் வெளியிட்டார். ஆசிரியர் முடிவைக் கூறாமல், "நியாயத்தைக் கண்டுபிடிக்கும் வழக்கம் நமது மாதர்களுக்குள்ளே, பலப்படும் பொருட்டு இம்முறை அனுசரிக்கப் படுகின்றது" என்று குறிப்பிட்டுள்ளார்.

இரண்டாவது தலைப்பு, "பெண்கள் அறிவுத் திறமையிலே புருடரிலும் குறைந்தவர்களா?" என்பதாகும். இதிலும் இருதரப்பு வாதங்களையும் வெளியிட்டு, முடிவைப் பெண்வாசகர்களே தீர்மானிக்கட்டும் என்று விட்டுவிட்டார், பாரதியார்.

பாரதியாருக்குப் பிறகு 'சக்ரவர்த்தினி' சில ஆண்டுகள் வெளி வந்தது. 1912இல் தமிழில் பேரறிஞரும், வேதாந்த வித்தகருமான கோ. வடிவேலு செட்டியார் பொறுப்பில் வெளிவந்தது, சக்கரவர்த்தினி. இவர் பின்வரும் குறட்பாவை இதழின் முகப்பில் வெளியிட்டு வந்தார்.

கற்றீண்டு மெய்பொருள் கண்டார் தலைப்பமுள்
மற்றீண்டு வாரா நெறி

சக்ரவர்த்தினியின் இதழியல் கோட்பாடு எவ்வாறு மாறியது என்பதற்கு மேற்காணும் குறட்பா, ஒரு சான்றாகும்.

முடிவுரை

1882 முதல் 1941 வரையிலான தமிழ் இதழ்களின் கருத்தியல் கோட்பாடுகளை மேலும் விரைவாக அறிய இதழ்களனைத்தையும் ஆய்வு செய்தல் வேண்டும். இதற்குத் தனி ஆய்வு செய்தல் வேண்டும்.

தமிழ் இதழ்கள் 1882 - 1941 அமைப்பும் ஆக்கமும்

மு. சுதந்திர முத்து

தமிழின் முதல் நாளிதழான சுதேசமித்திரனின் நிறுவன ஆசிரியர் ஜி. சுப்பிரமணிய ஐயரின் புதல்வர், டி.எஸ். விசுவநாத ஐயர், சுதேசமித்திரனின் இதழியல் முயற்சிபற்றி, "தமிழ்நாட்டு ஜனங்கள் அதுவரையில் சமாச்சாரப் பத்திரிகை என்பதைப் பார்த்ததில்லை. ஆகையால் பத்திரிகை படிக்க முதலில் ஒரு ருசியை உண்டாக்கி அதன் பிறகு அந்த ருசியைத் திருப்தி செய்ய வேண்டியது மித்திரனின் முதல் கடமையாக இருந்தது" (1932) என்று குறிப்பிடுகிறார். 'பத்திரிகை படிக்க ஒரு ருசியை உண்டாக்குவது என்று அவர் குறிப்பிடுவது அமைப்பும் ஆக்கமும் குறித்த சிந்தனை என்றே கொள்ளவேண்டும். முந்தைய இதழாளர்கள் காலத்திற்கேற்ற வகையில் அமைப்பாக்கத்தை மேற்கொள்ள முயன்றார்கள் என்றே கொள்ளவேண்டும்.

முற்கால இதழ்களில், இன்றைய வடிவமைப்புக் கூறுகளைக் காண முடியவில்லை. புதுப்புது மாற்றங்களைச் செய்து மக்களைக் கவரவேண்டும் என்ற நெருக்கடி அன்று இல்லை. ஆங்கிலேயர்களை எதிர்க்கும் குரலாக ஒலித்த முந்தைய இதழ்கள் காங்கிரசு இயக்கத்தின் எழுத்துப் பதிவாகவும் அமைந்திருந்தன. தொடர்ந்து இனவுணர்வின் வெளிப்பாடாகவும் வளர்ந்துவரும் இலக்கிய ஆர்வத்தின் வெளிப்பாடாகவும் ஆயின. செய்திகளைத் தொகுத்துத் தருதல், சொற்பொழிவுகளைத் தருதல், அரசியல் கட்டுரைகளைத் தருதல், சிந்தனைகளை மொழிபெயர்த்துத் தருதல், சீர்திருத்தக் கருத்துக்களைத் தருதல், முட்டுக்கட்டைகளை எதிர்த்தல் என்ற போக்கிலும் புதுப்புது இலக்கியவகைகளை அறிமுகப்படுத்துதல் என்ற போக்கிலும் இதழ்கள் உள்ளடக்கங்களைக் கட்டமைத்துக் கொண்டன.

1831 முதல் 1920 வரையான இதழ்களுக்குத் தக்க முன்மாதிரி இதழ் என்பதும் இல்லை. திங்கள் இதழாக - திங்கள் இருமுறை

இதழாக - வார இதழாக - வாரம் இருமுறை இதழாக - வாரம் மும்முறை இதழாக - நாளிதழாக அவை வளர்ச்சி பெற்றன.

1920ஆம் ஆண்டிற்குப் பின்னால் ஏற்பட்ட புனைகதை வளர்ச்சி, திரைப்பட வளர்ச்சி, வணிக வளர்ச்சி, தொழில் நுட்ப வளர்ச்சி இதழ்களின் உருவாக்க வளர்ச்சி இவற்றின் விளைவாக இதழ்கள் தங்கள் வடிவமைப்பில் சில புதுமைகளைச் செய்ய முற்பட்டன. பல கூறுபாடுகள் 1940ஆம் ஆண்டிற்குப் பின்னரே தமிழ் இதழுலகில் இடம்பெற்றன.

வடிவமைப்பு

அமெரிக்காவில் ஜோசப் புலிட்சர், வில்லியம் ராண்டால்ஃப் ஹெர்ஸ்ட் ஆகியோருக்கு இடையே நிகழ்ந்த விற்பனைப்போர், பக்க அமைப்பில் புதுமைகைளத் தோற்றுவித்தது என்பார்கள்.

தொடக்கத்தில் பெரிய எழுத்துத் தலைப்புகள், கவன ஈர்ப்பு உத்திகள் என்று வாசக ஈர்ப்பு மேற்கொள்ளப்படுகிறது. தொழில்நுட்ப வளர்ச்சியும் பக்க அமைப்பில் பெரும் மாற்றங்களைச் சாத்தியமாக்கியிருக்கிறது.

இன்று கணினியின் திரையிலேயே பக்க வடிவமைப்புச் செய்யும் (Pagination) உத்தி நடைமுறையில் உள்ளது. இதனால் உள்ளடக்கங்களை வெட்டுவதம் ஒட்டுவதும் விரிப்பதும் சுருக்குவதும் இடத்தை மாற்றுவதும் கணினியின் திரையிலேயே மேற்கொள்ளப்படுகிறது.

வடிவமைப்பு என்பது இதழ் தயாரிப்போடும் வாசக நுகர்வோடும் தொடர்புடையது. அட்டை, ஓவியம், ஒளிப்படம், எழுத்து அமைப்பு, தலைப்புமுறை, வெற்றிடம் போன்ற காட்சிக்குரிய கூறுகளை நோக்கத்திற்கேற்பத் திட்டமிட்டு அமைத்தலே வடிவமைப்பு.

இதழின் வடிவமைப்பு, அணிகலனாகவும் செய்தித் தொடர்பாகவும் செயல்படுகிறது. இதழின் வடிவமைப்பு மேற்பூச்சு அல்ல; பகட்டும் அல்ல. இதழின் எல்லா உறுப்புகளையும் கவர்ச்சிமிக்க பயன்மிக்க வகையில் ஒரு கட்டுக்குள் அமைப்பது என்பதையே வடிவமைப்பு என்கிறோம். இதழின் உயிர் உள்ளடக்கம் என்றால் அதன் உடல் வடிவமைப்பு எனலாம். வடிவமைப்பு காட்சி; உள்ளடக்கம் கருத்து.

எல்லா இதழ்களுக்குமே ஏதேனும் நோக்கம் இருக்கும்; ஒரு வாசகர் வட்டம் இருக்கும். அந்த வகையில் எந்த இதழும் நடுநிலைமையானது என்று கூறமுடியாது. செய்திகளையும் தகவல்களையும் தேர்ந்தெடுப்பதிலிருந்து அதை நாம் பார்க்கும் வடிவத்தில் உருவமாற்றித் தரும் வரையில் அதனுள் சார்புகள் செயல்படும். தனிப்பட்ட கருத்துக்களும் மதிப்பீடுகளும் இவற்றில் கலந்துவிடும். இலட்சிய நோக்கோ வணிக நோக்கோ இதில் ஊடாடும்.

வானொலியிலும் தொலைக்காட்சியிலும் செய்திகள் கால அளவைக்கொண்டு இயங்குகின்றன. கால நகர்வில் செய்திகளைக் கட்டுப்படுத்தித் தருகின்றனர். ஒருவரே செய்தி வாசிப்பின் சலிப்பு ஏற்படும் என்று வேறு வேறு வாசிப்பாளர்களைக் கொண்டு வாசிக்கச் செய்கின்றனர். இடைநிறுத்தமாகவும் விளக்கமாகவும் படங்களையும் காட்சிகளையும் பயன்படுத்துகின்றனர். நல்ல தோற்றமும் குரலும் உடையவர்களை வாசிக்கச் செய்கின்றனர். தலைப்புச் செய்திகளை விரைவாகவும் ஓங்கிய குரலிலும் திரும்ப வாசித்தலிலும் வேறுபடுத்துகின்றனர். முக்கியச் செய்திகளையும் உள்நாட்டுச் செய்திகளையும் முதலிலும் வெளிநாட்டுச் செய்திகள், விளையாட்டுச் செய்திகள், வானிலைச் செய்திகள் போன்றவற்றை இறுதியில் தருகிறார்கள்.

செய்தித்தாளில், இடம் செய்திகளால் நிரப்பப்படுகிறது. வாசிப்பவரின் பார்வை நகர்ந்து நகர்ந்து செய்தியை உள்வாங்குகிறது. பார்வையின் வீச்சை விரிவுபடுத்தாமல் எளிமைப்படுத்தவே கள அமைப்பு (Column) பயன்படுத்தப்படுகிறது. ஒரு களத்தின் அளவு 2½அங்குலம். களத்தின் அளவு இதைவிடக் குறைவாக இருப்பின் எழுத்து வெட்டுப்படும்; பார்வை வீச்சை மிகக் குறுக்குவதும் இடையூறு தரும். தலையங்கப் பகுதி பெரும்பாலும் இரண்டு கள அளவில் தரப்படுகிறது.

பக்க வடிவமைப்பின் அழகுக்கு எழுத்தின் அமைப்பு, உதவுகிறது. கண்ணுக்கு ஊறுசெய்யா வகையில் அச்செழுத்தின் அமைப்பு இருக்க வேண்டும். எழுத்துக்களின் அழகும் தெளிவும் இதழைத் தொடர்ந்து படிக்கத் தூண்ட வேண்டும். இற்காக ஒரே குடும்ப எழுத்தைப் பயன்படுத்த வேண்டும். குமுதம் இதழ் பெரிய எழுத்தாயினும் சிறிய எழுத்தாயினும் ஒரே குடும்ப எழுத்தைப்

பயன்படுத்தியது. தினத்தந்தியும் அவ்வாறே பயன்படுத்துகிறது. அச்செழுத்தின் அளவு உணர்வுகளை வேறுபடுத்தி வெளியிடுகிறது. பெரிய எழுத்து உரத்த குரலில் பேசுவது போன்றும் சிறிய எழுத்து கிசுகிசுப்பது போன்றும் தோன்றும். எழுத்தின் அளவு, தொனி வேறுபாடு காட்டுவது கொண்டு இதழியலில் நிறையச் சாதிக்க முடியும்.

தலைப்பின் அளவைக் கொண்டு செய்தியின் சிறப்பை உணர்த்தலாம். களங்களின் எண்ணிக்கையைக் கொண்டும் சிறப்பை உணர்த்தலாம். துணைத்தலைப்புப் போட்டுச் செய்தி வேறு பாட்டை உணர்த்தவேண்டும். மூன்று பத்திகளுக்கு ஒருமுறை துணைத்தலைப்பு இடவேண்டும். ஒரு துணைத் தலைப்பின் கீழ் 10 அங்குல நீளம் மட்டுமே செய்தி வரவேண்டும். பத்தி இரண்டு அங்குலம்தான் இருக்க வேண்டும்.

தொடர்ந்து வாசிப்பதால் ஏற்படும் களைப்பைப் போக்க இடையே இடைநிறுத்தங்களைப் பயன்படுத்த வேண்டும். இப்பொழுது எல்லா இதழ்களிலும் இடைநிறுத்தங்களைப் பயன்படுத்துகிறார்கள். இடைநிறுத்தமான துணுக்கு எல்லாப் பக்கங்களையும் படிக்க வைக்கும். நகைச்சுவை, தகவல், படம், பொது அறிவுச் செய்தி என்று துணுக்குகள் பல வகையின.

இதழ்களில் வரும் விளம்பரங்கள், வாசகர்களின் நுகர்வுகளுக்குத் தீனியாக அமைகின்றன. விளம்பரங்கள் இதழ்களின் பொருளியல் நிலையை நிலைப்படுத்துகின்றன. ஒளிப்படங்கள் வழியாகவும் கேலிப்படங்கள் வழியாகவும் கவர்ச்சி நடையாலும் அமையும் விளம்பரங்கள் இதழின் விற்பனையைப் பெருக்குகின்றன. விளம்பரத்தை அச்சு வடிவில் இருக்கும் வணிகர் என்பார்கள். விளம்பரங்கள், இதழ்களில் இடைநிறுத்தமாகவும் இடநிரப்பியாகவும் பயன்படுகின்றன.

சிறப்பு பகுதிகளை, வாசகர்களின் பார்வையில் தவறாது படும்வகையில் பக்கத்தின் மேல் பகுதியில் இடம்பெறச் செய்ய வேண்டும். இப்பகுதி, நெற்றி எனப்படுகிறது. இவ்விடத்தைக் குவிய முனை என்பார்கள். பார்வை, தெளிவாகப்படும் இடம் குவிய முனை.

பக்கங்கள், மணல் நிறைந்த பாலைவனம் போல் எழுத்துக்கள் நிறைந்த வறண்டதாக () இருக்கக்கூடாது. செய்தியின்

ஊடே, துணைத்தலைப்புகள், படங்கள் என்று வெளியிட வேண்டும்.

நாளிதழ்களில் முதல்பக்கம் முழுக்க விளம்பரங்களால் நிறைக்கக்கூடாது.

பார்வைபடாத இடத்தில் () முக்கியமல்லாத செய்திகளை வெளியிட வேண்டும். இடப்பக்கங்களின் முதலிரண்டு களங்களின் அடிப்பகுதியும் வலப்பக்கங்களின் கடைசியிரண்டு களங்களின் அடிப்பகுதியும் பார்வைபடாத இடங்கள் எனலாம்.

செய்திகளை அரசியல், மனிதநேயக்கருத்து, வழக்குச்செய்தி என்று வகைவகையான முறையில் நிரவி வெளியிட வேண்டும். அரசியல் செய்தி மூன்று பகுதி என்றால் ஒரு பங்காவது வேறு செய்தியைக் கலக்கவேண்டும்.

ஒட்டுமொத்தமாகச் சொல்வதென்றால், ஒவ்வொரு பக்கமும் சிறந்து அமையவேண்டும் என்ற நோக்கில் வேறுபட்ட செய்திகள், செய்திகளுக்கான படங்கள், பல்துறைச் செய்திகள் துணுக்குகள், கருத்துப் படங்கள், பெட்டிச் செய்திகள், விளம்பரங்கள், கட்டுரைகள், புனைகதைகள் ஆகியவற்றைப் பொருத்தமாக அமைப்பதே வடிவமைப்பு.

குமுதம் போன்ற இதழ்களைப் படிப்பவர் மட்டுமன்றிப் பார்ப்பவரும் ரசிக்கமுடியும். அவ்வகையில் வடிவ உத்திகளை அவ்விதழ்கள் கையாள்கின்றன. அரைகுறையாகக் கற்றவர்களுள்ள நாட்டில் காட்சிக்கு வரவேற்பு இருக்கும். 'தினத்தந்தி' நாளிதழின் வெற்றிக்கு இத்தகைய காட்சி உத்தியே காரணம் எனலாம்.

பக்க வடிவமைப்பால் இதழ்களின் தனித்தன்மை புலப்படுகிறது. குறிப்பிட்ட செய்தியின் அல்லது பகுதியின் முக்கியத்துவம் அல்லது செல்வாக்கு புலப்படுகிறது. எந்தச் செய்தி எங்கு வரும் என்பது உறுதிப்படுவதால் வாசகரின் நேரம் மிச்சமாகிறது. இதழின் பக்க வடிவமைப்பும் படைப்பாற்றலைப் போன்று மதிக்கத்தக்கது.

இன்றைய பக்க வடிவமைப்புக் குறித்த நோக்குகளோடு நாம் 1882 முதல் 1941 வரையான காலகட்டத்து இதழ்களின் அமைப்பும் ஆக்கமும் குறித்துக் காண்போம்.

இதழ்களின் வகையும் அளவும்

தொடக்க காலச் செய்தியிதழ்களுக்கும் பருவ இதழ்களுக்கும் இப்போதிருப்பதைப்போல வேறுபாடுகள் அதிகமில்லை. தொடக்க காலப் பருவ இதழ்கள் பெரும்பாலும் செய்தியிதழ்களாகவே இருந்தன.

பல இதழ்கள் பருவ இதழ்களாக இருந்து நாளிதழ்களாக ஆயின. சுதேசமித்திரன் (1882) வார இதழாக, வாரம் இருமுறை இதழாக (1893), வாரம் மும்முறை இதழாக (1897) வளர்ந்து நாளிதழாக (1899) ஆனது. தமிழ்நாடு (1919) வார இதழகாத் தொடங்கப்பட்டு நாளிதழாக (1926) ஆயிற்று. சுதந்திரச்சங்கு (1930) வாரம் இருமுறை, வாரம் மும்முறை (1931) ஏடாக இருந்து சிலநாட்கள் நாளிதழாகவும் வெளிவந்தது. லோகோபகாரி திங்கள் இதழாக (1895) திங்கள் இருமுறை இதழாக (1897) வார இதழாக (1898) வெளிவந்தது. ஆனந்த விகடன் திங்கள் இதழாக (1926) இருந்து வார இதழாக (1928) ஆனது. மணிக்கொடி வார இதழாக (1933) இருந்து திங்கள் இருமுறை இதழாக (1935) ஆனது.

மக்கள் ஆதரவைப் பொறுத்தும் இதழ் நடத்தியவர்களின் விடாப்பிடியான ஆர்வத்தாலும் காலமாற்றங்கள் நேர்ந்தன.

நாளிதழ்களும் பருவ இதழ்களும் இப்போதுள்ள தரப்படுத்தப்பட்ட அளவுகளில் இல்லை. சுதேசமித்திரன் நாளிதழ் 45 செ.மீ. உயரமும் 30 செ.மீ. அகலமும் கொண்டிருந்தது. இந்தியா நாளிதழ் 1906இல் 30 செ.மீ. உயரமும் 26 செ.மீ. அகலமும் கொண்டிருந்து 1908இல் 53 செ.மீ. உயரமும் 26 செ.மீ. அகலமும் கொண்டதாக ஆக்கப்பட்டது. மணிக்கொடி 1933இல் செய்திப்பத்திரிகை அளவு இருந்தது. முகவர்களின் முறையீட்டால் செய்திப்பத்திரிகையை மடித்த அளவாகி இறுதியில் கலைமகள் இதழின் வடிவம் கொண்டது. தேசபக்தன் நாளிதழ் 49 செ.மீ. உயரமும் 34 செ.மீ. உயரமும் கொண்டிருந்தது. லோகோபகாரி 41.5 செ.மீ. உயரம் 28.5 செ.மீ. அகலத்தில் இருந்து 32 செ.மீ. உயரம் 25 செ.மீ. அகலம் கொண்டு, இறுதியில் 24 செ.மீ. உயரமும் 18.14 செ.மீ. அகலமும் கொண்டதாக மாறியது.

அளவு மாற்றத்திற்கு அச்சுயந்திரங்கள் மாறியதும் அச்சகங்கள் மாறியதும் வெளியீட்டின் பருவமுறை மாறியதும்

காரணங்கள் எனலாம். மணிக்கொடி இதழை பி.எஸ். ராமையா நடத்த முன் வந்த போது அதன் அளவு மாற்றத்திற்கு அச்சக உரிமையாளர் கன்னியப்பன் காரணமானார். அவரிடமிருந்த அச்சு எந்திரத்தின் தன்மை கொண்டு அந்த அளவை அவர் பரிந்துரைத்தார்.

இதழ் எண் முறை

இதழ்களின் வரிசை, மலர்-இதழ், சுவடி-ஏடு, மணி-ஓசை, மலர்-இதழ், சிலம்பு-பரல் என்று பல விதமாகக் குறிக்கப்பெற்றது. ஆனந்த விகடன் குலை-காய் என்று இருந்து வாசன் கைக்கு வந்தவுடன் மாலை-மணி என்று மாற்றப்பட்டது. இப்படி மாறுதல்களும் நேர்ந்தன.

தொடக்கத்தில் இதழ்களுக்குப் பக்க எண்கள் தொடர்ச்சியாகக் கொடுக்கப்பட்டது. கட்டமைப்புச் செய்து கொள்வதற்கு ஏற்ற வகையில் அவ்வாறு செய்யப்பட்டது.

இதழ் வெளியாகும் ஆண்டும் திங்களும் நாளும் தமிழிலும் ஆங்கிலத்திலும் தரப்பட்டன. பக்க எண்கள் சில இதழ்களில் தமிழில் தரப்பட்டன.

இதழ்களின் பெயர்கள்

இதழ்கள் நாட்டின் அரசியல் நிலைக்கேற்ப விடுதலையுணர்வை ஒட்டியும் சுதேசிய உணர்வை ஒட்டியும் அமைந்தன; கொள்கைப் பிடிப்பின் அடிப்படையிலும் அமைந்தன. 'இந்து'வைத் தொடங்கிய சுப்பிரமணிய ஐயர், தமிழில் இதழ் தொடங்கியபோது, சுதேச உணர்வுடன் 'சுதேசமித்திரன்' என்று பெயரிட்டார். திரு.வி.க. 'தேசபக்தன்', 'நவசக்தி' எனப் பெயரிட்டார். பாரதியார் 'இந்தியா' எனப் பெயரிட்டார். பாரதி பாடல்களின் ஈடுபாட்டால் 'சுதந்திரச் சங்கு', 'மணிக்கொடி' ஆகிய இதழ்கள் பெயர்பெற்றன. காந்தியாரிடம் கொண்ட ஈடுபாடு 'காந்தி' இதழ்ப் பெயருக்குக் காரணமானது. பிராமணரல்லாதார் உணர்வை வெளியிட்ட இதழுக்குத் 'திராவிடன்' எனப் பெயரிட்டது. அறிவு வளர்ச்சி நோக்கால் 'கலைமகள்' என்ற பெயரும் வணிக நோக்கால் 'ஆனந்த விகடன்' என்ற பெயரும் அமைந்தன. பழைய இதழ்கள், பெண்களை ஈர்க்கும் நோக்கில் அல்லது வெளியீட்டாளர்களின்

சார்பை உணர்த்தும் நோக்கில் பெயரிடப்படவில்லை. பெரும்பாலும் இலட்சியம் சார்ந்த பெயர்களையே கொண்டிருந்தன.

இலச்சினை

இப்போதைய இதழ்களுக்குப் போலவே பழைய இதழ்களுக்கென்று இலச்சினைகளும் பொன்மொழிகளும் அடையாளங்களாக இருந்தன. சில இதழ்கள் இலச்சினை இன்றிப் பொன்மொழிகளை மட்டும் கொண்டிருந்தன. திருக்குறள் வரிகள், தாயுமானவர் பாடல் வரிகள், பாரதியார் பாடல் வரிகள் இதழ்களின் பெயர்களோடு இடம்பெற்றன. சுதேசமித்திரன் இதழில் இருபக்கமும் குதிரைகள் படம் நடுவில் அரசின் மகுடமும் அமைந்த இலச்சினை இருந்தது. பின்னால், அது இரு அன்னப் பறவைகள் நடுவில் தாமரையில் பாரதத்தாய் சாட்டைக் கொடியுடன் இருக்கும் இலச்சினையாக மாற்றப்பட்டது. 'காந்தி' இதழில் காந்தியாரின் படம் இலச்சினையாக இருந்தது. தினமணியில் தினமணி என்ற சொற்களிடையில் குறுக்குபட கொடிகள் என்ற இலச்சினை வைக்கப்பட்டது. ஜெயபாரதியில் ஜெய-பாரதி என்ற சொற்களிடையே இந்தியப் படம், கொடிகள் இரு பக்கம் அமையும் இலச்சினை இருந்தது. ஆனந்த விகடன் இதழில் தொடக்கத்தில் விநாயகர் ஆனந்த விகடன் படிக்கும் காட்சி இலச்சினையாக இருந்து இப்போதுள்ள இலச்சினையான குடுமிவைத்த விகடன் இலச்சினையாக ஆக்கப்பட்டது. கலைமகள் இதழில் தாமரையில் கலைமகள் பாதம் இருப்பது போலப் படம் இலச்சினையாக இருந்தது. பின் அது கலைமகள் உருவத்துடன் இலச்சினை ஆக்கப்பட்டது; கலைமகள் நின்ற தோற்றமும் பின்னால் இலச்சினை ஆனது.

இலச்சினை இல்லாத இதழ்களுக்குப் பெயர் அமைப்பையே இலச்சினை ஆக்கியுள்ளனர். 'பாரததேவி', 'ஜோதி' ஆகிய இதழ்களின் பெயர்கள் கறுப்புப் பின்னணியில் வெள்ளை எழுத்தில் தரப்பட்டன 'ஊழியன்' இதழின் பெயர் முதலிய எழுத்தில் அமைந்தது.

இவ்விலச்சினைகள் தலையங்கப் பகுதியின் மேற்பகுதியின் சிறப்பைக் காட்டும் வகையில் அமைக்கப்பட்டன. இலச்சினை யையும் இதழின் பெயருக்கான எழுத்தையும் 'குறி' போல ஒரே மாதிரியாக வைப்பது என்பதை அன்றைய இதழ்கள் பின்பற்றின.

இதழ்களின் கள அமைப்பு

இன்று, நாளிதழ்களுக்கு எட்டுக் களங்கள் என்றும் பருவ இதழ்களுக்கு அளவைப் பொறுத்து மூன்று அல்லது இரண்டு களங்கள் என்றும் தரப்படுத்தப்பட்டுள்ளது. பழைய இதழ்களில் தரப்படுத்தப்பட்ட கள அமைப்பு இல்லை. எட்டு, ஏழு, ஐந்து, நான்கு, மூன்று, ஒன்று எனக் களங்கள் அமைந்துள்ளன. தலையங்கப் பகுதியை இரண்டு கள அளவில் ஒற்றைக்களமாக அமைப்பது இன்று வழக்கிலுள்ளது. ஆனால் அன்றைய இதழ்கள் நேற்றைக் கள அமைப்பிலேயே தலையங்கத்தை வெளியிட்டன.

பெரும்பாலான பழைய இதழ்களில் களப்பகுப்பிற்குச் செங்குத்தாகக் கோடுகளை இட்டிருக்கிறார்கள். ஆனால் இன்றுள்ள இதழ்களில் களப்பகுப்பிற்கு வெற்றிடத்தையே பயன்படுத்துகிறார்கள். சுதேசமித்திரன் வாரப்பதிப்பில் களப்பகுப்பிற்கு வெற்றிடத்தைப் பயன்படுத்தியுள்ளனர். குமரன் இதழில் களப்பகுப்பு கோடு இருப்பினும் தெளிவாக உள்ளது.

களங்களை முன்பு அமைக்கையில் அச்சுக்கோப்பவர்கள் பெரும் தொல்லைப்பட்டார்கள்; மிகுந்த நேரச்செலவும் ஆனது. இப்பொழுது கணிப்பொறி மூலம் எளிதாக அமைக்கிறார்கள். களம் என்ற அமைப்பு இன்றி எளிமையாகவும் ஒழுங்காகவும் சிக்கனமாகவும் செய்தியை வெளியிட முடியாது. ஆயினும் தொடக்க நிலையில் கலைமகள் இதழ் ஒற்றைக் களத்தையே (நூல்போல) பயன்படுத்தியது.

ஒரு செய்தியின் முடிவை இன்னொரு செய்தியின் தலைப்பு மூலம் இன்றைய இதழ்கள் உணர்த்துகின்றன. பழைய இதழ்களில் செய்தியின் முடிவை உணர்த்தக் குறுக்குக் கோடுகள், சிறுகோடுகள், உடுக்குறிகள் ஆகியன உதவின.

செய்திகளை இடைநிறுத்தமின்றிக் களம் முழுக்கக் கீழே வரை கொண்டு செல்வதும் தொடர்ச்சியை அடுத்த களத்தில் தொடங்குவதும் காணப்படுகிறது.

தலைப்புகள்

செய்திகளுக்குத் தலைப்பிடுதலைப் பொறுத்தவரை நெற்றித் தலைப்பைப் பெரிதாக அமைப்பதும் நேர்வரிசையில் தலைப்பை

அமைப்பதும் இரண்டு அடுக்காகத் தலைப்பை அமைப்பதும் தலைப்பு, துணைத் தலைப்பு என்று தலைகீழ் முக்கோண வடிவில் அமைப்பதும் நடைமுறையில் உள்ளது. இரண்டு களச் செய்தியாயின் இரண்டு களத்திலும் விரவித் தலைப்பு அமைப்பதும் நடைமுறையில் உள்ளது. துணைத் தலைப்புகள் இட்டும் வினாக்குறி வியப்புக் குறியுடன் தலைப்புகளை அமைப்பதும் நடைமுறையில் உள்ளது. தலைப்பின் கீழ் கோட்டின் எழுத்தின் தடிமன் அளவிலேயே கோட்டின் தடிமனும் அமைவது சிறப்பு என்பதும் ஏற்றுக்கொள்ளப்பட்டிருக்கிறது.

பாரதி தலைப்பிடுவதன் இன்றியமையாமையை உணர்ந்திருந்தார். தலைப்பிடுவதை அவர் 'மகுடமிடல்' என்று குறிப்பிட்டிருக்கிறார். பழைய இதழ்களில் மேற்கூறிய முறையில் தலைப்பிடுவது பெரும்பாலும் பின்பற்றப்படவில்லை. முக்கியச் செய்திகளை மையத்தில் தொடங்காமல் ஓரத்தில் தொடங்குகின்றனர். மையப்பகுதியில் தொடங்கினாலும் பெரிய தலைப்பு இடுவதில்லை. துணைத்தலைப்பிடுதலையும் பெரும் பாலும் பின்பற்றுவதில்லை. கள அமைப்பில் எழுத்துக்கள் நிரம்பிய தன்மையே காணப்படுகிறது. இருபத்தில் செய்திக்கு ஒரு களத்தில் மட்டும் தலைப்பு அமைந்துள்ளது. சுதேசமித்திரன் தலைப்பை ஆங்கிலத்திலும் தமிழிலும் தரும் முறையைக் கொண்டிருந்தது. பாரதி அம்முறையை மாற்றினார்; தமிழில் மட்டும் தந்தார். திரு.வி.க. தேசபக்தனிலும் நவசக்தியிலும் தமிழிலில் மட்டும் தலைப்பிட்டார்.

அடுத்த செய்தியின் தலைப்பை நிறுத்தக்கோடாக்குவதும் இடநிரப்பியாகப் பயன்படுத்துவதையும் காணமுடியவில்லை.

நாளிதழ்களில் செய்தித் தலைப்பு மேலேதான் இருக்கும். ஆனால் பருவ இதழ்களில் தலைப்பு இடம் மாறியும் இருக்கும். இடமோ, வலமோ, கீழோ, பக்கவாட்டிலோ, செங்குத்தாகவோ தலைப்புகள் அமைக்கப்படும்: நடுவிலும் கூட அமைக்கப்படும். அன்றைய பருவ இதழ்களில் தலைப்புகள் நாளிதழ்களில் போல மேல் பகுதியில்தான் அமைக்கப்பட்டுள்ளன. இருபக்கமும் தலைப்பு அமைவது என்பது குறைவாகவே காணப்படுகிறது.

நாளிதழ்களில் தலைப்பை ஓவிய எழுத்து முறையில் அமைப்பது இல்லை. பருவ இதழ்களில் தற்போது இந்த முறை பின்பற்றப்படுகிறது. ஒளிப்படங்கள் போல ஓவியத் தலைப்புகள்

ஈர்க்கின்றன; நமக்கு விளக்கம் தருகின்றன; நம்மை எதிர்பார்க்க வைக்கின்றன.

சுதேசமித்திரன் வாரப் பதிப்பில் இந்திய வர்த்தமானம், பிரபஞ்ச வர்த்தமானம் போன்ற பல தலைப்புகள் ஓவிய எழுத்தால் அமைந்துள்ளன. விநோதக் கொத்து, ஆடை ஆபரணங்கள், வியாபாரப் பகுதி, நாடகமும் சங்கீதமும், புத்தக விமர்சனம் போன்ற தொடர்ப் பகுதிகளுக்கு எழுத்துக்கள் ஓவியங்களுக்குள் அமைந்துள்ளன. எடுத்துக்காட்டாக 'புத்தக விமர்சனம்' என்ற பகுதியில் இடது பக்கம் புத்தக அடுக்கிலிருந்து ஒருவர் புத்தகம் எடுத்துப்படிக்கும் காட்சியும் வலது பக்கத்தில் பெரிய புத்தக அலமாரியின் ஓவியமும் இருக்க நடுவில் எழுத்து அமைந்துள்ளது. அன்றைய வேறு இதழ்களில் இத்தகைய தலைப்பிடும் முறை காணப்படவில்லை. இதில் குமுதம் போன்ற இதழ்களுக்குச் சுதேசமித்திரன் முன்னோடியாக அமைந்துள்ளது எனலாம்.

ஒளிப்படங்கள்

இன்றைய இதழ்கள் ஒளிப்படங்களை - அதிலும் வண்ணப்படங்களை மிகுதியாகக் கொண்டுள்ளன. இன்றைய காட்சி ஊடகத்தின் தாக்கத்தால் இது உருவானதெனலாம். இப்படிப்பட்ட முறையை ஒளிப்பட இதழியல் (Photo Journalism) என்பார்கள்.

ஒளிப்படங்களை இடநிரப்பியாகவும் இடைநிறுத்தமாகவும் பயன்படுத்துவது இன்றுள்ள நடைமுறை. தொழில்நுட்பம் இதற்குத் துணைபுரிகிறது. எட்டுக்களச் செய்திக்கு ஒரு படம் வைக்க வேண்டும் என்பதும் இன்றைய நடைமுறையாக உள்ளது. செய்தியை முக்கியத் தன்மையுள்ளதாக்க ஒளிப்படம் உதவுகிறது. முழுப் படம், மார்பளவுப் படம், வண்ணப் படம், கருப்புவெள்ளைப் படம் ஆகியன பயன்படுத்தப்படுகின்றன. ஒளிப் படம் லட்சம் சொற்களுக்குச் சமம் என்பார்கள். செய்தியின் மீது நம்பிக்கை உண்டாக்கப் படங்கள் பயன்படுகின்றன. தினமணி இதழிலும் ஜுனியர் விகடன் இதழிலும் சில ஆண்டுகட்கு முன்னர் ஜெயலலிதாவுடன் தாணுவும் சிவராசனும் இருப்பது போன்ற படம் வெளியிடப்பட்டுப் பரபரப்பு ஏற்பட்டதற்குக் காரணம் இந்த நம்பகத் தன்மையே. செய்தி தரும் தாக்கத்தை ஒளிப்படம் தரும்.

ஒளிப்படங்கள் எளிதாகக் கிடைக்காத அந்நாளில் பாரதி 'பாரிஸ் நகரில் வெள்ளம் ஏற்பட்ட நிகழ்ச்சியை ஓவியமாக வரைந்து இந்தியாவில் வெளியிட்டார். சுதேசமித்ரன் வாரப்பதிப்பிலும் ஆண்டு மலர்களிலும் நிறைய ஒளிப்படங்கள் வெளியிடப் பட்டுள்ளன. அதிசயமான செய்திகளைத் தெரிவிக்கும் படங்கள், இயற்கைக் காட்சிகள், வெள்ளச் சீற்றம், புயல் சீற்றம், கோயில்கள் என்று பெரிய ஒளிப்படங்கள் வெளியிடப்பட்டுள்ளன. நடுப்பக்கத்தில் முழுதும் படங்கள் இடம்பெற்றன. ஒரே படம் இரு பக்கங்களிலும் விரவி வருமாறும் வெளியிடப்பட்டுள்ளது. திரைப்பட விளம்பரமாகவும் 1திரைக்காட்சிகளாகவும் ஒளிப் படங்கள் தரப்பட்டுள்ளன. படங்களே செய்திகளைத் தெரிவிக்கும் வண்ணம் மிகச் சுருக்கமான குறிப்புகளும் தரப்பட்டுள்ளன. கண்ணோட்டம் என்ற பகுதியில் சாதனையாளர்களின் ஒளிப்படங்கள் வெளியிடப்பட்டன.

நவசக்தியில் ஒளிப்படங்கள் அரிதாகவே வெளியிடப் பட்டன. ஸர். தியாகராஜ செட்டியாரின் படம் வெளியிடப்பட்டது. ரெயில்வே தொழிலாளர் சங்கப் படம் வெளியிடப்பட்டது. பால்வினை நோயால் பாதிக்கப்பட்ட பெண்கள் சிலரின் படம் வெளியிடப்பட்டது. ஆனால் படங்களுக்குக் கீழே குறிப்புகள் தரப்படவில்லை. செய்தியைப் படித்தே படத்தைப் புரிந்துகொள்ள வேண்டியிருந்தது. 'காந்தி' இதழ் வட்டமேஜை மாநாட்டின் படத்தை வெளியிட்டது. மணிக்கொடி இதழில் 'நமது விருந்தினர்' என்ற பகுதியில் தலைவர்களின் படங்கள் தரப்பட்டன; திரைப்படக் காட்சிகள் சுவையான குறிப்புடன் தரப்பட்டன; திரை விமர்சனத்திற்குக் காட்சிகள் தரப்பட்டன. இதிலும் முழுப்பக்க ஒளிப்படங்கள் வெளியிடப்பட்டன; அறிவியல் பற்றிய செய்திகளின் அருகில் விஞ்ஞானிகளின் படங்கள் வெளியிடப்பட்டன.

ஓவியங்கள்

ஒளிப்படங்களின் வருகையால் ஓவியக்கலை பாதிக்கப் பட்டாலும் பருவ இதழ்களில் கதைகளுக்கும் துணுக்குகளுக்கும் நகைச்சுவைக்கும் ஓவியங்களைப் பயன் படுத்துகின்றன.

மணிக்கொடி கதை இதழில் ரவி, சூர்யா, சர்மா போன்ற ஓவியர்களின் படங்கள் கதைகளுக்கு விளக்கமளிக்கும் வகையில்

இடம்பெற்றன. கதைகளும் கட்டுரைகளும் முடிந்து அரைப்பக்கமோ கால்பக்கமோ இடமிருப்பின் இடநிரப்பிகளாக ஓவியங்கள் இடம்பெற்றன. கதைகளுக்கான ஓவியங்கள் கதைக்கு மேலோ, கீழோ, நடுவிலோ, இருபக்கங்களிலுமோ தரப்பட்டன. ஓவியங்களுடன் கதையின் எந்தப் பகுதிக்கு ஓவியம் விளக்கம் தருகிறதோ அந்தப் பகுதியின் கதை வரிகளையும் எடுத்துக் குறிப்பாகத் தந்துள்ளனர். ஓவியங்களுக்காகக் கள அமைப்பு மாற்றப்பட்டுள்ளது. மணிக்கொடியில் இலக்கியக் காட்சிகளுக்கும் ஓவியங்கள் வெளியிடப்பட்டன. கலைமகள் இதழிலும் ஓவியங்கள் நல்ல கலைத்தாளில் () தரப்பட்டன. அகலிகை கால விமோசனம் பற்றிய படம் (1933) முழுப்பக்கத்தில் வெளியிடப்பட்டுள்ளது.

துணுக்குகளுக்குப் படம் போடுவது சுதேசமித்திரன் வார மலரிலும் ஆனந்த விகடனிலும் காணப்படுகிறது. விகடனில் அரைப்பக்க அளவுக்குப் பெரிதாக நகைச்சுவைப்படம் வெளியிடப்பட்டது.

அட்டை ஓர் இதழின் முகம் எனலாம். பருவ இதழ்களுக்கு மட்டுமே அட்டை தேவைப்படுகிறது. நவசக்தி வார இதழ் அட்டையின்றி வந்தது. அளவு குறைக்கப்பட்ட போது அட்டையுடன் வந்தது. அட்டையில் கவிதைகளைத் தாங்கியும் வந்தது. அன்றைய இதழ்கள் பெரும்பாலும் பத்திரிகைத்தாள் () அட்டைகளையே பயன்படுத்தின. நீலம், பச்சை, மஞ்சள் போன்ற வண்ணத் தாள்களையும் பயன்படுத்தின. 'லோகோபகாரி' அட்டைப்படத்தில் சங்கக் கவிதைக் காட்சிகள், திரைக்காட்சிகள் தரப்பட்டன. சூறாவளி இதழில் சூறாவளிக் காட்சி தொடர்ந்து ஐந்து இதழ்களில் வேறு வேறு வண்ணங்களில் வெளியிடப் பட்டது. 'குமரன்' இதழில் வண்ணத்தாளில் அட்டை விளம்பரத்துடன் வந்தது. பெரும்பாலும் பின் அட்டையை விளம்பரத்திற்கே பயன்படுத்துகின்றனர். குமுதம் இதழ் மட்டுமே வடிவமைப்புக்காக விளம்பர வருமானத்தைப் புறக்கணிக்கிறது.

கருத்துப்படங்கள் நாளிதழ்களிலும் பருவ இதழ்களிலும் இன்றியமையாத கூறாக ஆக்கப்பட்டிருக்கின்றன. ஆர்.கே. லட்சுமணன் வரைந்த கருத்துப்படங்களில் தொடர்ந்து தவறாமல் இடம்பெறுகிற பொது ஜனம் (Common man) பாத்திரத்திற்கு புனே நகரில் சிலை எழுப்பப்பட்டு அது குடியரசுத் தலைவரால் திறந்து

வைக்கப்பட்டது. 19.12.2001 அன்று நிகழ்ந்த இந்நிகழ்ச்சி கருத்துப்படங்களின் செல்வாக்கை உணர்த்துகிறது எனலாம்.

பாரதியார், கருத்துப்படங்களை விகடச்சித்திரம் என்பார். கருத்துப்படத்தில் எது வலியுறுத்தப்பட வேண்டுமோ அதற்கு அழுத்தம் தரப்பட்டிருக்கும். கருத்துப்படங்கள், செய்திகளைப் போலவே சுடச்சுடப் பரிமாறப்பட வேண்டியவை.

மேலைநாடுகளில் கருத்துப்படம் வரைவதற்கென்றே ஓவியர்கள் இருக்கிறார்கள். நம் நாட்டில் ஆசிரியர் கூற அதன்படி கருத்துப்படம் வரையப்படுகிறது. பாரதியார் தாமே நடித்துக் காட்டி வரையச் செய்வார் என்பார்கள். பாரதியின் இந்தியாவில் முதல் பக்கத்திலேயே கருத்துப்படம் இடம்பெற்றது. விரிவான சித்திர விளக்கத்தையும் பாரதியார் வெளியிட்டார். இந்தியாவில் வந்த கருத்துப் படங்களை வெட்டி எடுத்து அட்டையில் ஒட்டி வீடுகளில் தொங்கவிடுவார்கள் என்று பாரதிதாசன் குறிப்பிட்டுள்ளார். சமகால அரசியலும் விமரிசனமும் பாரதியின் கருத்துப் படங்களின் கருப்பொருள் எனலாம். பாரதி இந்த ஈடுபாட்டால் சித்ராவளி என்ற பட இதழ் தொடங்கவும் திட்டமிட்டிருந்தார்.

விகடனில் கருத்துப்படங்கள் ஓவியர் மாலியால் எழுதப்பட்டு வெளியிடப்பட்டன. மணிக்கொடியிலும் கருத்துப்படங்கள் வெளிவந்தன. ராஜாஜி விமோசனம் இதழில் 'குடி-ஒழிப்பு' கருத்துப்படமாயிற்று. தேசபக்தனில் வ.வே.சு. ஐயர் வாரம் ஒருமுறை கருத்துப்படங்களை வெளிட்டார். சுதந்திரச்சங்கும் கருத்துப் படங்களை வெளியிட்டது. காந்தி இதழில் தலையங்க விளக்கமாகக் கருத்துப் படங்கள் வெளியிடப்பட்டன. காந்தி இதழின் கருத்துப்படங்கள் லண்டன் 'ரிவ்யூ ஆப் ரிவ்யூ' இதழில் எடுத்தாளப்பட்டன. காந்தி இதழில் முகப்புப் பக்கத்தில் கருத்துப்படத்திற்கு இடமளிக்கப்பட்டது.

தமிழ்நாடு இதழில் கருத்துப்படம் அதன் அங்கமாக வெளியிடப்பட்டு இதழின் விற்பனையே அதனால் மிகுதியானது. சுதேசமித்திரன் வார இதழிலும் கருத்துப்படங்கள் வந்தன.

வாசகர்களில் சிறுவர்கள், பெண்கள், தொழிலாளர்கள் குறிப்பிடத்தக்கவர்கள். இவர்களுக்கான சிறப்புப் பகுதிகளை

இதழ்கள் இன்று மலர், மணி என்ற பெயர்களில் வெளியிடுகின்றன. அவற்றில் இவர்களை மையப்படுத்திய செய்திகள் தரப்படுகின்றன.

முந்தைய கட்டத்து விகடனில் 'மாணவர் பகுதி' என்பது வெளியிடப்பட்டது. சுதேசமித்திரன் வார இதழில் 'சிறுவர் பகுதி' என்ற பிரிவில் அறிவியல் செய்திகள் தரப்பட்டன. லோகோபகாரியிலும் சிறுவர் பகுதி இருந்தது. கலைமகளில் 'உபாத்தியாயர் பகுதி' என்பது சிறுவர்களுக்கு அறிவியல் கருத்துக்களைத் தருவதாக இருந்தது.

பெண்களுக்கான பகுதி பழைய இதழ்களில் ஒரு சில இதழ்களில் மட்டுமே காணப்படுகிறது. சீவகசிந்தாமணியின் மாதர் மஞ்சரி, விகடனின் பெண்கள் பகுதி ஆகியனவற்றிலும் கலைமகளின் மாதர் பகுதியிலும் பெண்களுக்கான செய்திகள் வெளியிடப்பட்டன. கலைமகள் சமயல் நுட்பங்களை மட்டுமே எடுத்துரைத்தது. சுதேசமித்திரனின் 'ஆடை ஆபரணம்' என்ற பகுதி புடவைகள் நகைகள் பற்றிய தகவல்களைத் தந்தது. சூறாவளி இதழில் 'சிங்காரி' என்ற பகுதி இதே மாதிரியான செய்திகளைத் தந்தது. நவசக்தி மட்டுமே பெண்ணினம் என்ற பகுதியில் பெண் கல்வி போன்றவற்றை எடுத்துரைத்தது. மணிக்கொடி இதழ் ஒன்று (26.5.1935) அடுத்த இதழில் 'அவ்வளவும் எழுதிய கதைகள்' என்று முக்கியத்துவம் தந்து விளம்பரம் கொடுத்தது. ஆனால் எதிர்பாராத வகையில் இரண்டு கதைகளைப் பி.எஸ். ராமயையாவும் இராமச்சந்திரனும் எழுதிப் பெண்கள் பெயரில் வெளியிட நேர்ந்தது.

தொழிலாளருக்கான பகுதி என்பதைத் திரு.வி.க. அவர்கள் மட்டுமே தமது தேசபக்தனிலும் நவசக்தியிலும் தந்திருக்கிறார். தேசபக்தனில் தொழிலாளர் அநுபந்தங்கள் வெளியிட்டார். ரெயில்வே தொழிலாளர் மாநாடு நடந்த போது நவசக்தியில் விரிவாகச் செய்திகளையும் படத்தையும் வெளியிட்டார். தொழிலாளருக்கு ஒதுக்கிய பகுதியில் தொழில் தொடர்புடைய தொழிலாளர் இயக்கம் தொடர்புடையவற்றையே வெளியிட்டிருக்கிறார்.

தலையங்கம்

தலையங்கங்கள் இதழ்களின் கொள்கை வெளியீடாகக் கருதப்படுகின்றன. இதழின் இதயப்பகுதி தலையங்கம்தான்.

அரசியல், முக்கிய நிகழ்வுகள், அரசுக்குப் பரிந்துரை, வெளிநாட்டுக் கொள்கை, போராட்டங்கள் என்று மிக இன்றியமையாத செய்திகள் தலையங்கத்தில் இடம்பெறுகின்றன. அறிவுறுத்தவும் விளக்கவும் பரிந்துரைக்கவும் விரைவுபடுத்தவும் பாராட்டவும் கண்டிக்கவும் தலையங்கங்கள் பயன்படுகின்றன. இரண்டாம் நிலை முக்கியத்துவம் மிக்க செய்திகளைத் துணைத் தலையங்கமாக வெளியிடுவர். நாளிதழ்களில் அனைத்து இதழ்களிலும் பருவ இதழ்களில் பல இதழ்களிலும் தலையங்கங்கள் வெளியிடப்படுகின்றன. அது தலைமை சான்ற பகுதி என்பதால் தலையங்கப் பகுதிக்கு மேல்பகுதில் இதழின் இலச்சினை பதிக்கப்படுகிறது.

நாளிதழ்களில் பெரும்பாலும் நடுப்பகுதியில் தலையங்கங்கள் இடப்பக்கமாக வெளியிடப்படுகிறது. அப்போதைய செய்திகளில் பிரச்சினைக்குரிய செய்திக்கே தலையங்கம் எழுதப்படுகிறது. திரு.வி.க. தலையங்கங்களை 'எழுத்துப்பேச்சு' என்பார்.

சுதேசமித்திரன் நாளிதழில் நடுப்பகுதியில் தலையங்கம் அமைந்தது. வடமொழியும் ஆங்கிலமும் விரவிய தமிழ் நடையில் தலையங்கம் அமைந்தது. தலைப்புக் கூடத் தமிழிலும் ஆங்கிலத்திலுமாக அமைந்தது. உலகச் செய்திகள் உள்நாட்டுச் செய்திகள், தலையங்கங்களாயின. 'தேசபக்தன்' நாளிதழில் சமூகப் பிரச்சினைகள் பல தலையங்கமாயின. தாழ்த்தப்பட்டோர், தேவதாசிகள் ஆகியோரது பிரச்சினைகளும் தீண்டாமையின் தீமையும் தலையங்கத்தில் உணர்த்தப்பட்டது. வ.வே.சு. ஐயரின் சேரன்மாதேவி ஆசிரமத்தில் சமபந்தி உணவு மறுக்கப்பட்டதைத் தேசபக்தன் தலையங்கம் கண்டித்தது. பஞ்சாப் படுகொலை நிகழ்ந்த போது தலையங்கம் எழுத இயலாத கொந்தளிப்பான மனநிலை காரணமாக திரு.வி.க. தலையங்கம் இன்றியே அப்போதைய இதழை வெளியிட்டார்.* திரு.வி.க. தம் தலையங்க இறுதியில் கீதை, குரான், பைபிள் வாசகங்களையும் மகான்களின் வாசகங்களையும் வெளியிட்டார். 'தேசபக்தன்' இதழில் ஆண்டு இறுதியில் செய்திகளைக் தொகுத்துத் தலையங்கம் வெளியிட்டார். அவருடைய தலையங்கங்கள் 'தேசபக்தாமிர்தம்' எனத் தொகுப்பாக ஆக்கப்பட்டுள்ளன. தேசபக்தனில் 'அரிமா நோக்கு' என்ற பகுதியைத் துணைத் தலையங்கமாக வெளியிட்டார். 'திராவிடன்'

நாளிதழின் தலையங்கங்கள் திராவிடக் கொள்கைக்குத் தடையாகவுள்ள கொள்கைகளையும் ஆட்களையும் விமரிசனம் செய்வனவாக அமைந்தன. தலையங்கம் குறிப்பிட்ட பக்கத்தில் வெளியாக வேண்டும் என்ற மரபைத் திராவிடன் இதழ் பின்பற்றவில்லை. வேறுவேறு பக்கங்களில் தலையங்கத்தை அது வெளியிட்டது.

'சுதந்திரச் சங்கு'வில் முதல் பக்கத்திலேயே தலையங்கம் வெளியானது. லோகோபகாரி வார இதழில் நடுப்பகுதியில் (6ஆம் பக்கம்) தலையங்கம் இடம்பெற்றது. நாற்பது பக்கங்களுடைய 'விமோசனம்' திங்கள் இதழில் இரண்டாம் பக்கத்தில் தலையங்கம் வெளியானது. 'ஆனந்த விகடன்' இதழில் தலையங்கம் முன்பகுதியில் (விளம்பரங்களை) அடுத்து அமைந்தது.

மதிப்புரை

நூல் மதிப்புரை என்பது நாள் இதழ்களில் வாரத்தில் ஒருநாளில் வெளியிடப்படுகிறது. ஏதேனும் ஒரு குறிப்பிட்ட கிழமையில் வெளியிடும் வழக்கம் உள்ளது. பருவ இதழ்களிலும் மதிப்புரைகள் வெளிவருகின்றன. இது தவிர புது நூல்களின் லரவு குறித்த அறிமுகங்களும் 'வரப்பெற்றோம்', 'புத்தகம்' போன்ற பகுதிகளில் செய்யப்படுகின்றன. அன்றைய நாளிதழ்களில் சுதேசமித்திரன் வாரத்தில் ஒரு பக்கத்தை மதிப்புரைக்காக ஒதுக்கியது. 'தமிழ்நாடு', 'விவேகசிந்தாமணி', 'மணிக்கொடி', 'கலைமகள்' ஆகிய இதழ்களில் மதிப்புரைப்பகுதி இடம்பெற்றது. சுதேசமித்திரன் வாரப்பதிப்பில் 'புத்தக விமர்சனம்' என்ற பகுதியில் ஒரு பக்க அளவு மதிப்புரை வெளியானது. ஆயினும் நூல்களில் பெரும்பாலும் பக்தி தொடர்பான நூல்களே மதிப்புரை செய்யப்பட்டன. அன்றைய இதழ்களில் புத்தக விளம்பரங்கள் நிறைய வெளியாகியிருப்பது குறிப்பிடத்தக்கது.

'வாசகர் கடிதம்' என்ற பகுதியும் இதழ்களின் அங்கமாக உள்ளது. நாளிதழ்களில் இவை, தலையங்கம் வருகின்ற பக்கங்களில் வெளியிடப்படுகின்றன. விகடன், குமுதம் போன்ற இதழ்களிலும் தொலைக்காட்சி ஊடகத்திலும் வாசகர் கருத்துக்கு இடமளிக்கப்படுகிறது. இன்றைய நாளிதழ்களிலும் இது இன்றியமையாத பகுதியாக உள்ளது. சுதேசமித்திரனில் தென்

ஆப்பிரிக்கத் தமிழர்களின் கடிதங்கள் நிறைய வெளியாயின. 'காந்தி' இதழில் 'நமது தபால்' என்ற பகுதியில் ஆசிரியர் வாசகர்களுக்கு விடையும் தந்தார். 'சுதந்திரச் சங்கு'வில் கடிதப் பகுதியும் 'இந்தியா'வின் வாசகர் மடல் பகுதியும் குறிப்பிடத்தக்கன. பாரதியார் லண்டன் கடிதங்கள் என்ற தலைப்பில் வ.வே.சு. ஐயர் போன்றவர்களின் கடிதத்தை வெளியிட்டிருக்கிறார். 'நவசக்தி'யில் முறையீடு என்ற தலைப்பில் கடிதங்கள் வெளியிடப்பட்டன. அதில் கனமான பிரச்சினைகள் திறந்த மடலாக விவாதிக்கப்பட்டன. மூவலூர் இராமாமிர்தம் அம்மாள் தேவதாசிகளை விளித்து எழுதிய கடிதம் குறிப்பிடத்தக்கது. தேசபக்தனில் வாசகர் கடிதம் பகுதி இருந்தது.

மணிக்கொடி 'டமாரக் கடிதங்கள்' என்ற பெயரில் பிரமுகர்களுக்கு வெளிப்படையாகக் கடிதங்கள் எழுதியது.

துணுக்குகள்

பருவ இதழ்கள்தான் துணுக்குகளை மிகுதியாகப் பயன்படுத்துகின்றன. கட்டுரைகளையோ, தொடர்கதைகளையோ தொடர்ச்சியாக வெளியிடாமல் இடைநிறுத்தமாக - சலிப்பை மாற்றுவதற்காகத் துணுக்குகள் உதவுகின்றன. ஒரே பகுதி பக்கத்தை நிரப்புவதால் தோன்றும் வறட்சியைப் போக்குவதற்கு இவ்வுத்தி உதவுகிறது. திரைப்படங்களில் நகைச்சுவைக் காட்சியையும் பாடல் காட்சியையும் சலிப்பு மாற்றத்திற்கு இடைநிறுத்தமாகப் பயன்படுத்துகிறார்கள். துணுக்கின் மூலம் எல்லாப் பக்கங்களுக்கும் மதிப்புக் கிடைக்கிறது. வேக உலகின் மக்கள் சிறுசிறு செய்திகளுக்காகவே இதழ்களைப் படிக்கிறார்கள். மருத்துவமனை, சிகையலங்கார நிலையம் போன்ற இடங்களில் துணுக்குகளைப் படிப்பது பரவலான வழக்கமாகியிருக்கிறது.

பழைய இதழ்களில் துணுக்குகளை இடைநிறுத்தமாகப் பயன்படுத்தாமல் ஓர் இதழின் அங்கமாகவே ஆக்கியிருக்கிறார்கள். ஒரு பக்கம் முழுதும் 'ஹாஸ்யத் துணுக்குள்' என சுதேசமித்திரன் நாளிதழ் வெளியிட்டது. 'நாட்டு நடப்புகள்', 'உலகச் செய்திகள்', 'பழமொழிகள்', 'பெட்டிச் செய்திகள்', 'துணுக்குச் செய்திகள்' என்று சுதேசமித்திரன் வேறு பல துணுக்குகளை வெளியிட்டிருக்கிறது. சுதேசமித்திரன் வாரமலரில் 'விநோதக் கொத்து', 'ஹாஸ்யப்பகுதி'

'அதிசயம் ஆனால் உண்மை' என்றும் ஆனந்த விகடனில் 'திரட்டுப்பால்', 'சின்னஞ்சிறு தமாசு' என்ன? எங்கே? எப்பொழுது? என்றும் சுதந்திரச் சங்குவில் 'நமது கிளஞ்சக் குவியல்' 'துண்டு துணுக்குகள்', என்றும் 'காந்தி'யில் 'உங்களுக்குத் தெரியுமா?' 'மின்வெட்டு', 'நண்பர்கள் சிரிப்பு' என்றும் துணுக்குகள் தரப்பட்டன. நவசக்தி வார இதழில் 'கலம்பகம்', 'ஊர்வம்பு' ஆகிய பகுதிகளில் பல்வேறு செய்திகள் துணுக்குகளாகத் தரப்பட்டன. இப்பகுதிகள் ஒரே பக்கத்தில் மிக நெருக்கமாகத் தரப்பட்டன. 'ஊர்வம்பு' பகுதியைத் 'தேனீ' என்ற புனைபெயரில் கல்கி எழுதினார். மிகவும் அங்கதச் சுவையுடன் அப்பகுதி அமைந்துள்ளது. நவசக்தியில் 'அறிவுத் துணுக்கு' என்ற பகுதியும் காணப்படுகிறது. துணுக்குப் பகுதிகள் நவசக்தியில் சில இதழ்களில் இரண்டு பக்கங்கள் கூடத் தொடர்ச்சியாக வெளியாகியுள்ளன. 'கலைமகள்' இதழில் 'குறிப்பும் திரட்டும்' பகுதி வெளியாகியுள்ளது.

துணுக்குகள் சலிப்பு மாற்றுக்களாக-இடை நிறுத்தங்களாகப் பயன்படாமல் இவையும் பகுதியாகத் தரப்படுவது அக்கால இதழ்களின் நடைமுறையாக இருந்திருக்கிறது. துணுக்குகளை மற்ற பகுதிகளிலிருந்து மாறுபட்ட அவ்வெழுத்திலோ புள்ளி எழுத்திலோ வெளியிடாமல் மித வகை எழுத்தில் வெளியிட்டிருக்கிறார்கள். எனவே செய்திகளுக்கும் துணுக்குகளுக்கும் எழுத்து தருகிற தொனி வேறுபாடு உணர்த்தப் படவில்லை.

விளம்பரங்கள்

விளம்பர நிறுவனங்கள் இல்லாத அக்காலத்தில் இதழ்கள், முகவர்களை வைத்து விளம்பரங்களை வாங்கி வெளியிட்டன. பி.எஸ். ராமையா மணிக்கொடியில் தொடக்கத்தில் விளம்பர முகவராகத்தான் பணியாற்றினார் என்பதும் விளம்பர நிறுவனம் ஒன்று தந்த காசோலையைக் கொண்டுதான் தமது காலகட்டத்தில் 'மணிக்கொடி'யை மீண்டும் தொடங்கினார் என்பதும் குறிப்பிடத்தக்கது. அன்றைய நாளிதழ்கள் விளம்பர வருமானத்தை நம்பியே இதழ்களை நடத்த வேண்டிய நிலையிலிருந்தது. இன்றும் கூட அந்நிலை தொடர்கிறது. பரிசுத் திட்டங்களையும் இலவசப் பொருள்களையும் காட்டித்தான் இதழ்களின் எண்ணிக்கையைப் பெருக்கி விளம்பரங்கள் பெற்று இயங்க வேண்டியுள்ளது.

தமிழின் முதல் இதழே விளம்பரத்துக்கான இதழ்தான் (தினவர்த்தமானி). சுதேசமித்திரனின் தொடக்க இதழ்களில் முதல் இரண்டு பக்கங்களில் விளம்பரங்கள் வந்தன. இன்றைய இதழியல் மரபுக்கு முற்றிலும் மாறான நிலை இது. இதழின் இறுதிப் பக்கங்களிலும் விளம்பரங்கள் இடம்பெற்றன. சுதேசமித்திரன் வாரப்பதிப்பு, நவசக்தி வார இதழ், குமரன் இதழ் போன்றவற்றிலும் நிறைய விளம்பரங்கள் பின்பகுதிகளில் வெளியிடப்பட்டன. குமரன் இதழின் அட்டைப் பகுதியிலேயே விளம்பரம் வந்தது. நவசக்தியில் முன்பக்கத்தில் விளம்பரம் வெளியிடப்படுவதில்லை. சுதேச மித்திரன் சில இதழ்களில் முன் பகுதிகளிலும் விளம்பரங்களை வெளியிட்டது. குறிப்பாக ஆண்டு மலர்கள், வெள்ளிமலர், பொன்மலர் ஆகியவற்றில் பாதிக்கும் மேற்பட்ட பக்கங்களில் விளம்பரங்கள் வெளியாயின. பிற செய்திகளின் ஊடே விளம்பரம் வருவது குறைவாகவே காணப்படுகிறது. சுதேசமித்திரன் வார இதழில் செய்திகளின் ஊடே விளம்பரங்கள் வந்துள்ளன. இந்தியா இதழில் இறுதிப்பகுதியில் விளம்பரங்கள் வந்தன.

மணிக்கொடி இதழில் தொடக்க காலத்தில் இதழின் ஊடே விளம்பரங்கள் பல அளவுகளில் வந்தன. இறுதிப் பக்கங்களிலும் விளம்பரங்கள் வந்தன. விளம்பரங்களை இடப்பக்கம் வலப்பக்கம் என்று வேறுபாடின்றி வெளியிட்டிருக் கிறார்கள். விகடன் இதழில் (எஸ்.எஸ். வாசன் காலம்) நிறைய விளம் பரங்கள் வந்தன. கலைமகள் இதழில் 1937வரை விளம்பரங்கள் வெளியிடப்படவில்லை. 1937 முதல் இடையிலும் அட்டையின் பின்பகுதியிலும் பின் அட்டைப் பக்கங்களிலும் விளம்பரங்கள் வந்துள்ளன. காந்தி இதழில் முதல் கட்டத்தில் சுதேசி விளம்பரங்களே வந்தன; பிற்கட்டத்தில் வணிகத் தன்மையோடு கூடிய விளம்பரங்களும் வந்தன.

மணிக்கொடி இதழில் விளம்பரத்திற்கு விளம்பரம் வந்தது. 'இந்த மணியில் வெளியாகியிருக்கும் விளம்பரங்களைப் பார்த்தீர்களா! என்று வாசகத்துடன் 'விளம்பரம் அமைந்தது. மணிக்கொடி இதழ் வாசகர்களிடம் 'பொருள்களை வாங்கும்போது மணிக்கொடியில் வந்த விளம்பரத்தைப் பார்த்து வாங்குவதாகக் குறிப்பிடும் படியும் வேண்டுகோளை விளம்பரமாக வெளியிட்டது.

இதழ்களின் தன்மையைப் பொறுத்து விளம்பரங்கள் வேறுபட்டன. வணிகர்கள் நிறைந்த காரைக்குடி இதழான

குமரனில் கார் விளம்பரங்கள் நிறைய வந்தன. ஆனால் நவசக்தி இதழில் இத்தகைய விளம்பரம் இல்லை. விளம்பரங்களைப் படங்களுடன் வெளியிடும் போக்கு குறைவே எனலாம். எனினும் அன்றும் பெண்களின் ஓவியங்களுடன் விளம்பரங்கள் வந்துள்ளன. பெரும்பாலும் தலைவலி மருந்து, சேலை, பாத்திரங்கள், நகை, புத்தகம், தாயத்து, காமத்தைத் தூண்டும் மருந்துகள் ஆகியவற்றின் விளம்பரங்களே மிகுதியாக வந்தன. விமோசனம் இதழ் மட்டும் மதுவிலக்குப் பிரசாரத்தையே விளம்பரமாக வெளியிட்டது.

விளம்பர வடிவமைப்பில் சிறப்பான உத்திகளை இதழ்களில் காணமுடியவில்லை. அமிர்தாஞ்சனம் விளம்பரம் 'டப்பா' வடிவக் கட்டத்துக்குள் வெளியிடப்பட்டது இதுபோன்ற போக்கு பரவலாக இல்லை. தொடக்க காலத்தில் சிறுசிறு அளவில் விளம்பரங்களும் பின்னாளில் முழுப்பக்க, இரண்டு பக்க அளவு விளம்பரங்களும் வந்துள்ளன. திரு.வி.க. பின் நவசக்தியிலும் மணிக்கொடியிலும் தங்கள் படைப்புகளைப் பற்றிய விளம்பரங்களை நிறைய வெளியிட்டுக் கொண்டார்கள்.

இன்றைய இதழ்களில் விளம்பரங்களை வகைப்படுத்திப் பிரித்து வெளியிடுவது போல அன்றைய இதழ்களில் வெளியிடவில்லை. விளம்பரக் கட்டணங்கள் குறித்த அறிவிப்புகள் இதழின் பெயர் அமைந்திருந்த மேல்பகுதியில் தரப்பட்டன. சந்தா அறிவிப்புக்கு இணையாக விளம்பரக் கட்டண அறிவிப்பும் இருந்தமை விளம்பரங்களை நம்பி இதழ் நடத்தப்பட்ட நிலையை உணர்த்துகிறது.

இதழ்களில் மேற்காட்டிய கூறுகள் தவிரப் பிற கூறுகளான கட்டுரைகள், கதைகள், கவிதைகள் ஆகியவற்றையும் செய்திகளைப் பல்வேறு வகையாகப் பிரித்துத்தரும் முறையையும் காணமுடிகிறது.

நாளிதழ்களில் நிருபர்களை வைத்தும் வாசக நிருபர்களைக் கொண்டும் செய்தி நிறுவனங்கள் மூலமாகவும் பிற நாட்டு மாநில இதழ்கள் மூலமாகவும் பெற்ற செய்திகளைத் தங்கள் நோக்கிற்கேற்பப் பகுத்து வெளியிடும் போக்கு காணப்படுகிறது.

சுதேசமித்திரன், விளம்பரங்கள், சோதிடக் குறிப்புகள், செய்திகள், செய்திக் குறிப்புகள், உலகச் செய்திகள், உள் நாட்டு

நடப்புகள், அரசின் குறைகள் பற்றிய கண்டனக் கட்டுரைகள், பழமொழிகள், பஞ்சாங்கக் குறிப்புகள், விளம்பரங்கள் என உரிமைப்படுத்திக் கொண்டு (பெரும்பாலும்) வெளியிட்டது. நாட்டு விடுதலையை மையப்படுத்தும் வகையில் சுதேசமித்திரனின் அமைப்பாக்கம் இருந்தது. கொட்டை எழுத்துக்களில் தலைப்போ குறுக்குத்தலைப்போ, கட்டம் கட்டிப்போடுவதோ, பெட்டிச் செய்தியோ, ஒளிப்படங்களின் வெளியீடோ, கருத்துப் படமோ சுதேசமித்ரனில் ஜி. சுப்பிரமணிய அய்யர் ஆசிரியராக இருந்த 1916ஆம் ஆண்டு வரை இடம்பெறவில்லை. அதன் பின்னரே கொஞ்சம் கொஞ்சமாக வடிவமைப்பு மாற்றங்களைக் கொண்டது.

திராவிடன் நாளிதழில் முதல் பக்கத்தில் பெரும்பாலும் சமூக விழிப்புணர்வுக் கட்டுரைகள் இடம்பெற்றன. அரசியல் நிகழ்வுகளை விடவும் சமுதாய நலனில் கொண்டிருந்த அக்கறையின் அடிப்படையில் மூடநம்பிக்கை, சாதி எதிர்ப்புக் கட்டுரைகளை நிறைய வெளியிட்டது. நாட்டு நடப்புகளும் உலகச் செய்திகளும் குறைவாகவே இடம்பெற்றன. இது கருத்துக் கூறும் இதழாக இருந்தது. 1923ஆம் ஆண்டிற்குப்பின் உலகச் செய்திகளுக்கும் நடப்புகளுக்கும் இடமளிக்கப்பட்டது. மாநிலச் செய்திகள், ஊர்ச்செய்திகள், வெளிநாட்டுச் செய்திகள், மார்கெட் நிலவரம், கப்பல் விஷயங்கள், வழக்குகள், செயலகச் செய்திகள், நிருபகாரம், கண்ணோட்டம், அகமும் புறமும் என்று செய்திகள் பகுத்துத் தரப்பட்டுள்ளன. நவீன கதைப் பகுதி என்று தொடர் கதைகளையும் திராவிடன் வெளியிட்டது.

தேசபக்தன் நாளிதழ் மக்களுக்கு எளிதான வகையிலும் அறிவுப் உணர்வும் ஊட்ட வேண்டுமென்ற நோக்கத்துடன் இலக்கியம், சமயம், பயணச் செய்திகள், துணுக்குகள், கதைகள், திறனாய்வுகள் என்று பல விரிவுகளைக் கொண்டு அமைந்தது. 'தொழிலாளர் அநுபந்தம்' என்று வாரந்தோறும் வெளியிட்டு தொழிலாளர் இயக்கத்தை வளர்த்தது. மாவட்டச் செய்திகள், மாநிலச் செய்திகள், தனிப்பட்டவர்களின் கடிதங்கள், கப்பற் செய்திகள், உள்ளூர்ச் செய்திகள், வெளியூர்ச் செய்திகள் என்று வகைப்படுத்திச் செய்திகள் வெளியிடப்பட்டன.

இந்தியா வார இதழ் கருத்துப்படம், செய்திகள், உழவு, கல்வி, அறிவியல் முன்னேற்றம், தலவரலாறு, சமயம், வாசகர் மடல்,

லண்டன் கடிதங்கள் என்று பகுத்து வெளியிட்டது. இலக்கியப்பகுதி, நாகரீகப்பகுதி, கைத்தொழில்பகுதி, வர்த்தமானங்கள் என்று தலைப்பிட்டு வெளியிடப்பட்டது. 'இந்தியாவின் குழப்பம்' என்ற பகுதியில் ஆங்கில ஆட்சியில் நிகழும் கொலை, கொள்ளை, கலவரங்கள் பற்றிய செய்திகள் வந்தன. இதழின் இறுதியில் விளம்பரங்கள் வந்தன.

மணிக்கொடி அரசியல் இதழாக இருந்தபோது கொண்டிருந்த அமைப்பு வேறு; கதை இதழாக மாறிய பிறகு கொண்டிருந்த அமைப்பு வேறு; மீண்டும் அரசியல் கலந்த இதழாக ஆனபோது கொண்ட அமைப்பு வேறு.

எனவே இதழ்கள் நாளிதழ்கள் ஆயினும் வார இதழ்கள் ஆயினும் செய்திகளைத் தமது நோக்கங்களுக்கேற்ப வரிசைப்படுத்திக் கொண்டன; கூட்டின; குறைத்தன. ஆயினும் முற்கால இதழ்கள் உள்ளடக்கத்திற்கு அதிக அழுத்தம் தந்தன என்பது பொதுவான போக்காக இருந்தது. வடிவமைப்பிற்கு அவை இரண்டாமிடம் அளித்தன. செய்திகளைத் திரட்டி ஒரே இடத்தில் தருவதையே அமைப்பாகக் கொண்டன. இன்றைய இதழியலில் காணப்படும் இடைநிறுத்த உத்தியோ, இடநிரப்ப உத்தியோ, வல பக்கத்தில் வெளியிடுவது, வடிவம் மாற்றி வெளியிடுவது, அச்செழுத்து அளவுமாற்றிக் கவர்வது களப்பகுப்பை மாற்றிக் கவர்வது என்பதைக் காண முடியவில்லை. பக்க வடிவமைப்பிற்கான தொழில்நுட்பம் இன்மையாலும், உத்திகளைப் புகுத்த அவர்களால் இயலவில்லை எனலாம்.

இன்றைய வடிவமைப்பு மரபு ஒரே பக்கத்தில் பல வகைச் செய்திகளைப் படிக்க வாய்ப்பளிக்கிறது. அன்றைய வடிவமைப்பில் ஒரே வகையான வாழ்வை மட்டுமே ஒரு பக்கத்தில் காணமுடியும்.

இன்றைய வடிவமைப்பில் நம் உணர்வை ஆட்கொள்ள வேண்டிய சோக நிகழ்ச்சிக்கு அருகிலேயே நகைத் துணுக்கும் கவர்ச்சிப் படமும் செய்திகளும் வைக்கப்பட்டு, உணர்வு மழுங்கடிக்கப்படுகிறது. எல்லாவற்றையும் ஒன்றாகப் பார்க்க உளவியலை வளர்க்கிறது. நம்மை வேடிக்கை பார்ப்பவர்களாக ஆக்குகிறது. இந்த வேடிக்கை உளநிலை முந்தைய இதழ்களின் வடிவமைப்பால் உருவாக்கப்படவில்லை என்பது நம் சிந்தனைக்குரியது.

இன்றைய இதழ்கள் பொருள்களை நமக்கு விற்கும் வகையில் விளம்பரங்களை வெளியிடாமல் விளம்பரங்களுக்கு நம்மை விற்கும் வகையில் வெளியிடுகின்றன. விளம்பரங்களுக்கு இடையிலே செய்திகள் என்ற நிலையை உருவாக்கியிருக்கின்றன.

எனவே செய்திகளுக்கு முந்தைய இதழ்களில் தரப்பட்ட முதன்மை நம் கவனத்திற்குரியது. செய்திகளின் கனம் அழுத்தாமல் சலிப்பைத் தடுக்கும் வகையிலும் விளம்பரங்கள் துணுக்குகள் முதலான இடைநிறுத்தங்களின் கனம் நம் உணர்வுகளை மழுங்கடிக்காத வகையிலுமான வடிவமைப்பு முறை தேவை. நம்முந்தைய இதழ்கள் தருகிற பாடம் இதுதான்.

"அமைப்பாலும் பொலிவாலும் இதழ்கள் வாசகரைக் கவரவேண்டும் என்பது பொது விதியாக இருக்கலாம். அதைக் காட்டிலும் அதனுள் அடங்கியிருக்கும் செய்திகளுக்கு முக்கியத்துவம் தரப்படவேண்டும்"[7] என்று இதழியலறிஞர் மா.ரா. இளங்கோவன் அவர்கள் கூறுவது நாம் எண்ணிப்பார்க்கத் தக்கது.

க. சுப்பிரமணிய ஐயர்

செ. போத்திரெட்டி

இசை விற்பன்னர் தியாகையர் பிறந்த திருவையாற்றில் 1855ஆம் ஆண்டு கணபதி ஐயர், தர்மாம்பாள் தம்பதியருக்கு மகனாகப் பிறந்தவர் திரு க. சுப்பிரமணிய ஐயர். 1874ஆம் ஆண்டு ஆசிரியர் பயிற்சிப் படிப்பிற்காகச் சென்னை மாநகருக்குச் சென்றவர். ஆசிரியப் பயிற்சியை முடித்து 1875ஆம் ஆண்டு முதல் ஆசிரியராகச் சில காலம் பணிபுரிந்தார். பள்ளித் தலைமை யாசிரியராகப் பணிபுரிந்து கொண்டே, பத்திரிகை யாளராகவும் பணிபுரிந்தார். 'இந்து' ஆங்கில நாளேடு 'சுதேசமித்திரன்' தமிழ் நாளேடு ஆகிய இரு நாளேடுகளின் ஆசிரியராக ஏக காலத்தில் பொறுப்பு வகித்த இருமொழிப் பத்திரிகையாளர். சுதேசமித்திரன் உதவி ஆசிரியர் திரு. குருமலை சுந்தரம்பிள்ளையவர் குறிப்பிடுவது போல ஆங்கிலத்தில் திரு. சுரேந்திரநாத் பானர்ஜியைப் போன்றோ, தமிழில் நல்லூர் ஆறுமுக நாவலர் போன்றோ பேசும் நாவன்மை படைத்த பெருநாவலர் அல்லர் அவர். ஆயினும் நினைத்த கருத்தைக் குறிப்பாயும் கண்டிப்பாயும் வெளியிடும் திறன் பெற்றவர். சரியாகச் சொல்வதாயின் பேசும் சக்தியை விட எழுதும் சக்தி பெரிதும் கைவரப்பெற்றவர்.

இவருடைய பத்திரிகைச் சாதனைகளை மதிப்பிடுவதற்குச் சமகாலச் சிந்தனையாளர்கள் பத்திரிகையாளர் கூறியவற்றை முதற்கண் தொகுத்தும், பின் விரித்தும் காண்போம்:

புதிய விழிப்புக்கு ஆதிகர்த்தர்

> இராமலிங்க சுவாமிகளும், 'சுதேசமித்திரன்' சுப்பிரமணிய அய்யரும் இவர்களைப் போன்ற வேறு சில மகான்களும் தமிழ்நாட்டின் புதிய விழிப்புக்கு ஆதி கர்த்தாக்களாக விளங்கினர் - பாரதியார்.
>
> மெய்ஞ்ஞானத் தனிவீரர்க்கு எண்ணத்தகுவன எல்லாம் இயற்றற்கு எளியனவே

தாய்ப் பாஷையாகிய தமிழைப் பற்றிய அபிமானமோ சுதேச வளர்ச்சியில் விருப்பமோ, பத்திரிகையினால் வரும் மகத்தான நன்மைகளைப் பற்றிய பூரண அறிவோ இல்லாத சுயநலப் பிரியர்களான தமிழர்கள் பெரும்பாலும் நிறைந்துள்ள இத்தமிழுலகத்தில் அய்யரவர்கள் சுதேசமித்திரனைப் பிரதிதினப் பத்திரிகையாக வெளியிட முன்வந்தது மிகத் துணிகரமான செய்கை என்று எண்ணக் கூடும். அய்யரவர்களோ,

எண்ணிய எண்ணியாங் கெய்துப எண்ணியார்
திண்ணியர் ஆகப் பெறின்

என்ற தேவர் மொழியைச் செவ்வனே உணர்ந்த மெய்ஞ்ஞானத் தனிவீரன், 'எண்ணத்தகுவன எல்லாம் இயற்கு எளியனவே' என்னும் உத்தமக் கொள்கை உடையவர். ஆகவே சுதேச மித்திரனையும் நிலைபெறச் செய்தார். - பண்டித எஸ். முத்துஸ்வாமி பிள்ளை

பரிசுத்த கடமையைக் கொண்டவர்

பல கோடி இந்தியருடைய அன்பிற்கும் பக்திக்கும் பூசனைக்கும் இலக்காய்ப் பிரகாசிக்கும் தேசபக்தர்களுள் ஸ்ரீதாதாபாய் நௌரோஜி முதலிய மகான்கள் தேசபக்தி என்பதை வேறு எந்தத் தேசபக்தர்களிடமிருந்தும் பயிலாமல் தாமே தமது கல்வியறிவினாலும் கருப்பத்திற்றானே தங்களோடு கலந்து நின் ஜீவகாருண்யம், பரோபகாரம், நீதியுணர்ச்சி முதலிய மகோன்னத குணங்களால் ஆக்கப்பட்ட தெய்வீக ஸ்பாவத்தினாலும் தமது தாய்நாட்டின் க்ஷேமத்தின் பொருட்டு உழைக்க வேண்டுமென்ற பரிசுத்த கடமையாகிய தேசபக்தியைத் தமக்குத் தாமே உபதேசித்தார்கள். ஆனால் கோபாலகிருஷ்ண கோகலே முதலியவர்கள் முறையே மஹாதேவ கோவிந்தரானடே முதலிய வேறு தேசபக்தர்களுடைய சகவாச புண்ணியத்தினாலும் உபதேசத்தினாலும் தேசபக்தி என்பதை உணர்ந்தார்கள். இந்த இரு வகுப்பாளருள் ஸ்ரீ ஜி. சுப்பிரமணிய ஐயர் நௌரோஜி வகுப்பைச் சேர்ந்தவராவர் - குருமலை சுந்தரம் பிள்ளை பி.ஏ.

சங்கபோயனுக்கும் இராம போயனுக்கும் அறிவூட்டியவர்

ஐயரவர்கள் பதிப்பிக்கும் மித்திரன் பத்திரிகை கனதனவான்களாகிய இராஜாக்கள் அரண்மனைகளை அலங்கரித்து வருவது போலவே கேவலம் (தாழ்ந்த வகுப்பாரிடத்தும்) சங்கபோயன், இராமபோயன் கையிலேயும், தாசிவேசிகள் கையிலேயும் குதித்து அவர்களுக்கு அறிவூட்டி வருகிறது - சேப. நரசிம்மலு நாயுடு.

தன்னையே சீர்திருத்தப் பிறரையும் சீர்திருத்த உழைத்த உண்மையான தேசாபிமானி.

தன்னையே சீர்திருத்திப் பிறரையும் சீர்திருத்த உழைத்த உண்மையான தேசாபிமானிகளில் ஒருவர். மன்னுயிரைத் தன்னுயிரெனப் பாவிப்பவர். சுயநலமே அறியாதவர். நம்மை நன்னெறியில் நடத்த முயன்றவர் - டி.எஸ்.பி. விருதுபட்டி (சுதேசமித்திரன் வாசகர்களுள் ஒருவர்).

தென்னகம் தந்த இதழியல் பெருந்திறலாளர்

நான்காம் தூணாகக் கருதப்படும் இதழியலின் பெருந்திறலாளர்களான பி.எம். மலபாரி (ஆசிரியர், இந்தியன் ஸ்பெக்டேட்டர், பம்பாய்), கிறிஸ்தோ தாஸ் பால் (ஆசிரியர், இந்து பேட்ரியட், கல்கத்தா) மற்றும் திலகருடன் (ஆசிரியர் கேசரி, மராட்டா, பம்பாய்) ஒருங்கே வைத்து எண்ணத் தக்கவர் திரு க. சுப்பிரமணிய ஐயர்.

- லீடர் இதழ் ஆசிரியர் சிஒய். சிந்தாமணி

'இந்து' நாளிதழின் பொன்விழாக் கொண்டாட்டத்தின் போது எழுதியது

இந்து நாளிதழ் பத்திரிகை வழி அவர் சென்னைக்கு வேண்டியன செய்தார். அது மட்டுமின்றிக் காங்கிரஸ் இயக்கம், சென்னை மகாஜன சபை போன்ற அமைப்புகளின் வழி சுரேந்திரநாத் பானர்ஜியும் மோதிலால் கோசும் வங்கத்திற்குச் செய்தவையை

ஒப்பவும், வாச்சா, திலகர் பம்பாய் மாநிலத்திற்குச் செய்தவையே ஒப்பவும் அவர் தமிழகத்திற்குச் செய்தார். அவர் காலத்தில் அவரே மிகச் சிறந்த இந்திய இதழியலாளர்.

திரு. க. சுப்பிரமணிய ஐயர் 'இந்து'வை உருவாக்கினார். இந்து அவரை உருவாக்கம் செய்தது. அதன் ஆசிரியராக இருபது ஆண்டுகள் இருந்து, சென்னை மாநிலத்தின் சக்தி வாய்ந்த நிறுவனமாக அதனை ஆக்கினார். தமக்குத் தெரியாதது குறித்து அவர் எழுதமாட்டார். வல்லமையோடுதான் அவர் எப்பொழுதும் எழுதுவார். அவருடைய வல்லமையையும், வலுக்குறைவையும் உள்ளது உள்ளவாறே எடுத்துக் கொள்வோமானால், இந்திய இதழியல் வரலாற்றுப் பதிவேட்டில் திரு. க. சுப்பிரமணிய ஐயரின் பெயர் என்றும் நிலைபெற்றிருக்கும். பொதுவாழ்வில் ஒன்றி, ஓய்வு ஒழிச்சலின்றித் தாய்நாட்டிற்குப் பாடுபட்டோர் வரிசையில் அவர் பெயர் இடம் பெறும். பொதுச்சேவைக்குரிய சிறந்த தகுதிப்பாடும் சுறுசுறுப்பும் தைரியமும், இடைவிடா முயற்சியும் நம்பிக்கையும் செயல் துணிபாற்றலும் அவரிடம் நிறைந்திருந்தன. வாழ்ந்த காலத்தில் போற்றப்பட்ட அவர் இறப்பிற்குப் பிறகு நினைக்கப் பெறாதவர் ஆகிவிட்டார் (சிப்பாய்க் கலகத்திற்குப் பின் இந்திய அரசியல் - சி.எய். சிந்தாமணி).

இந்துவைத்தான் நம்புவோம்

தென்இந்தியாவில் பொதுவாழ்விற்கான உணர்நிலைச் செல்வியை உருவாக்கி அதற்கு உயிரளித்து உற்சாக மூட்டியது இந்துவே. திரு. சுப்பிரமணிய ஐயரே எமக்கு வழிகாட்டியாகவும் உந்துசக்தியாகவும் விளங்கினார். எமது இளமைக் காலத்தில் இந்து இதழில் வெளிவந்த கட்டுரைகளைப் படித்துக் கிளர்ச்சியுறுவோம். உலகம் முழுதும் ஓரணியாக நின்று ஒரு கருத்தை வலியுறுத்த இந்து மாறுபட்டு அதற்கு

எதிராகக் கருத்து வெளியிடு மானால் நாங்கள் இந்துவைத்தான் நம்புவோம். அதனை ஏற்று அதன் வழி நடப்போம் - (சி கருணாகரமேனன்.)

(திரு. க. சுப்பிரமணிய ஐயருக்குப் பின் இந்து நாளிதழின் ஆசிரியராகப் பொறுப்பேற்றவர்)

முன்னத்தி ஏர் பிடித்தவர்

புற்கரண் மூடியிருந்த இந்திய வன்னிலத்தை முன்னத்தி ஏர் பிடித்து உழுது, காங்கிரஸ் பயிர் வளருவதற்கு ஏற்ற விளைநிலமாக மாற்றியவர். முதல் காங்கிரசின் முதல் தீர்மானத்தை முன்மொழிந்தவர். நவசென்னை நாயகராகக் கருதத்தக்கவர் அவர் - அம்பிகா சரண் மஜீம்தார் (அகில இந்திய காங்கிரஸ் தலைவர் 1916).

மிகச் சிறந்த சமூக சீர்திருத்தவாதி

இன்று சென்னையில் நாம் காணும் அரசியல் வாழ்வு அவருடைய தூண்டுதலாலும், உயிர்ப்பூட்டுதலாலும் விளைந்ததேயாகும். அதுவே முழு உண்மை என நான் கருதுகிறேன். தன் அடித்தளத்தைப் பரந்தும் ஆழ்ந்தும் நிறுவிக் கொண்ட இந்து இன்று மிக அற்புதமான வெற்றிப் பொலிவை எட்டியுள்ளது. சென்னை மகாஜன சபையை அவர் நிறுவினார். அவ்வமைப்பே இம்மாநிலத்தில் பெரும் செல்வாக்குடைய அரசியல் அமைப்பாக விளங்குகிறது. 'சுதேசமித்திரன்' இதழைத் தொடங்கினார். 1897இல் வெல்பி கமிஷன் முன்பு சாட்சிமளிப்பதற்காக அவர் இங்கிலாந்து நாட்டிற்குச் சென்றார்.

அப்பொழுது அவருடன் யானும் சென்றேன். பொருளாதாரப் பிரச்சனைகள் குறித்த அவரது அறிவாற்றல் வியக்கத்தக்கது. தான் எடுத்துரைக்கும் கருத்தை வேகமாகப் பிறர்க்கு நன்கு விளங்குமாறு

வகையில், தெள்ளத் தெளிவாக, ஆணி அறைந்தார் போலக் கேட்டோர் கவனத்தை ஈர்க்குமாறு பேசி அனைவருடைய நன்மதிப்பையும் பெறுவார். அத்தகைய மாமனிதர் நமது பெருமதிப்பிற்கு உரியவர். அவர் இதழாளராக, அரசியலமைப்பின் அமைப்பாள ராகப் பணிபுரிந்ததோடும், முற்றுப் பெற்றார் இலர், மிகச் சிறந்த சமுகச்சீர்திருத்தவாதியாகவும் செயல்பட்டார். என் நண்பர் சிறந்த சமுகச் சீர்திருத்தவாதி என்பதால் நான் மிகவும் மகிழ்ச்சியடைகிறேன். அவர் சொல்வதைச் செயல்படுத்துபவர் - சுரேந்திர நாத் பானர்ஜி (1914ஆம் ஆண்டு சென்னை மஹாஜன சபை அரங்கில் திரு. (க.சுப்பிரமணிய ஐயர் அவர்கள் திருவுருவப் படத்தைத் திறந்து வைத்துப் பேசியது).

உகத்துச் சுக சௌக்கியங்கள் எல்லாம் உன்னைச் சேர்ந்ததா? தாய் மகனிடம் கூறியது.

ஏனப்பா யானையைப் போலொத்த பலத்தையுடைய சமாசாரப் பத்திரிகையை நடத்தும் வேலையை உன் தோளில் சுமந்திருக்கிறாய்? உலகத்துச் சுகசௌக்கியங்கள் எல்லாம் உன்னைச் சேர்ந்ததா? இன்னும் எத்தனையோ ஓய்வுள்ளவர்கள் இதனை ஏன் வாங்கிச் செய்யமாட்டார்கள் என்று அவருடைய தாய் தன்னிடம் சொன்னதாக ஸ்ரீ ஜி. சுப்பிரமணிய ஐயர் என்னிடம் கூறியது உண்டு - திரு. கா. நடராஜன் (ஆசிரியர், 'இந்தியன் சோஷியல் ரிபார்மர்' பம்பாய்).

தன்னைச் சீர்திருத்திப் பிறரைச் சீர்திருத்திய வரலாறு

திரு. க. சுப்பிரமணிய ஐயருடைய மூத்தமகள் சிவப்பிரியாம்பாள் திருமணம் முடிந்து சாந்தி முகூர்த்தம் கழியுமுன்பே தமது பதிமூன்றாம் வயதில் விதவை ஆனாள். இது நாள்வரை விதவை மறுவிவாகத்தை ஆதரித்துப் பேசிவந்த ஐயரவர்களுக்குத் தம் வார்த்தைகளுக்குச் செயல்வடிவம் கொடுக்க ஒரு வாய்ப்புக்கிட்டியது. தம் மகள் சிவப்பிரியாம்பாளையும்

அவளை மறுமணம் செய்து கொள்ள இசைவு தெரிவித்த இளைஞர் இராமசாமியையும் 1889ஆம் ஆண்டு டிசம்பரில் பம்பாய்க்கு அழைத்துச் சென்றார். பம்பாய் நகரில் அவ்வாண்டு நடைபெற்ற காங்கிரஸ் மாநாட்டோடு ஒன்றுபடுமாறு திருமண ஏற்பாடு செய்யப்பட்டது. மேற்கு இந்தியாவில் விதவை மறுவிவாகத்திற்குப் பெரும் ஆதரவு அளித்து வந்த மாதவதாஸ் இரகுநாந்தாஸ் இல்லத்தில், டிசம்பர் 31ஆம் நாள் சிவப்பிரியாம்பாளுக்கு மறுமணம் நிகழ்ந்தது. இராகுநாத்தாஸ் தாமே முன்னின்று இத்திருமண நிழ்ச்சியை நடத்திவைத்தார். நிறுவப்பட்ட சமயக் கருத்துகளுக்கு மாறான கருத்துக்களை வலியுறுத்திய பிரிட்டிஷ் சிந்தனையாளர் சார்லஸ் பிரட்லா, சர் வில்லியம் வேடர்பன், இரானடே ஆகியோர் திருமணத்திற்கு வருகை புரிந்தோருள் குறிக்கத்தக்கவர்கள் ஆவர். பிரிட்டிஷ் பாராளுமன்ற உறுப்பினர் டபிள்யூ. எஸ். கேய்ன் என்பவரிடமும் திரு. சுப்பிரமணிய ஐயர், இத்திருமண குறித்துத் தாம் முடிவு எடுத்தது பற்றிப் பின்வருமாறு கூறினார்.

> என்னுயிரைப் போலவே நேசித்த என் மகளுக்கு ஏற்பட்ட ஆயுட்கால அவல நிலையைத் தாங்க இயலாது நான் இம்முடிவை எடுத்தேன். இம்முடிவால் ஜாதிப் பிரஷ்டம் போன்ற எதிர் வருந் தீங்குகளையும் சந்திக்கத் தயாரானேன்

இவர் திருமணத்தை நடத்தியமையால் எதிர்பாராத பல நெருக்கடிகளுக்கு ஆளானார். ஐயரவர்கள் குடும்பம் சமூகப் புறக்கணிப்பிற்கு உள்ளாயிற்று. சிறிய குற்றங்களுக்குக் கூடக் கடுமையான தண்டனைகள் வழங்குவதைத் தம் இயல்பாகக் கொண்டிருந்த பழமைவாதிகள், புதுமணத் தம்பதிகளை ஐயரவர்கள் தம்முடன் தங்குமாறு செய்தபோதிலும் இந்து நாளேட்டின் ஆசிரியராக இருந்தமையால் அவரைச் சாதியை விட்டு நீக்க அஞ்சினர்.

திருமண ஒப்புதலளிப்பு வயது மசோதா

மேற்கு இந்தியாவின் தலைசிறந்த பத்திரிகையாளரான திரு. பிஎம். மலபாரி அவர்கள் 1884ஆம் ஆண்டு 'இந்தியாவில் குழந்தை மணமும் - வலிந்து திணிக்கப்படும் விதவா வாழ்வும்' குறித்து தமது

குறிப்புகளை வெளியிட்டார். உயர்சாதி இந்துக்களிடையே நடைமுறையில் இருந்து வந்த இத்தீய பழக்கத்தால் ஏற்படும் விளைவுகளைச் சுட்டிக்காட்டினார். அதை நீக்குவதற்கு அவர் நூதனமான வழிமுறைகளைக் கடைப்பிடிக்க வேண்டுமென்றார். 1. இனித் திருமணமானவர்களை ஐந்தாண்டுகளுக்கு பின் கல்லூரி களில் மாணவர்களாகச் சேர்க்கக்கூடாது. 2. பொதுச் சேவைக்கான பணியிடங்களில் திருமண மாகாதவர்களுக்கு முன்னுரிமை வழங்க வேண்டும். 3. கணவர் இறந்தபின் மறுவிவாகம் செய்ய முன்வரும் விதவைகளைச் சாதி நீக்கம் செய்யும் அதிகாரம் சமயக் குருக்களுக்குக் கிடையாது என அரசு அறிவிக்க வேண்டும். 4. வலிந்து திணிக்கப்பட்ட விதவை வாழ்விலிருந்து தங்களை விடுவித்துக் கொள்ள முன்வரும் விதவைகளுக்குத் தகுந்த பாதுகாப்பு அளிக்க வேண்டும்.

அரசாங்கம் சட்டத் திருத்தங்களின் மூலம் சமூக நடைமுறைகளில் தலையிடுமானால் அதனால் முன்னேற்றம் ஏற்படுவதற்கு மாறாக எதிர்மறையான பலன்களே விளையும் என்று தென்னிந்தியச் சமூகச் சீர்திருத்தத் தலைவர்களான திரு. இரகுநாத ராவ், திரு. க. சுப்பிரமணிய ஐயர் போன்றோர் கருத்துத் தெரிவித்தனர். மலபாரியின் திட்ட முன்நகல் நாடு முழுவதும் பரவலாக வாதப்பிரதி வாதங்களைத் தோற்றுவித்தது.

அன்று பம்பாய் மாநில அரசின் தீர்ப்பாய உறுப்பினராக இருந்த திரு. மாக்ஸ்வல் மெல்வில் திருமண ஒப்புதலளிப்பு வயது பத்திலிருந்து பன்னிரெண்டாக உயர்த்தப்படவேண்டும் என்று கருத்துரைத்தார். அவ்வாலோசனை ஏற்கப்பட்டு, அதன்படி இந்தியன் பீனல்கோடு 375ஐ திருத்தி வயது வரம்பை உயர்த்த முடிவாயிற்று.

மகளிர் திருமண ஒப்புதலளிப்புச் சட்டம் நிறைவேற்றப் பட்டு ஏறத்தாழ பதினைந்து ஆண்டுகள் கழிந்த பின் பாரதி சுதேசமித்திரன் இதழில் 'இந்தியா'வில் விதவைகளின் பரிதாபகரமான நிலைமை' என்ற தலைப்பில் செய்தி விமர்சனம் ஒன்று எழுதுகின்றான். இவ்விமரிசனம் காந்தியடிகளால் நடத்தப்பட்ட 'நவஜீவன்' பத்திரிகையில் 'ஆசிரியருக்குக் கடிதங்கள்' எனும் பகுதியில் வெளியிடப்பட்ட கடிதத்தில் அமைந்துள்ள புள்ளி விவரங்களைத் தருவதோடு, கடிதம் எழுதுபவரின் இளகிய

மன உணர்வையும் தெரிவிக்கின்றது. இச்செய்தியைப் பாரதி மிகவும் சுருக்கமாகத் தொகுத்து வழங்குகிறான். பின்னர் மேற்குறித்த கட்டுரையில் வாசகர் கடிதத்தைப் பிரசுரித்த பத்திரிகையாசிரியர் மகாத்மா காந்தி, கைம்பெண்களின் எண்ணிக்கையைக் குறைப்பதற்குக் கூறும் வழிமுறையையும் விவரிக் கின்றான். 'மனைவியை இழந்து ஆண்மக்கள் புனர்விவாகம் செய்து கொள்ளுவதில்லை' என்று விரதம் பூணவேண்டும் என்பதே அவ்வழிமுறை. அதை அப்படியே தமிழில் பெயர்த்தெழுதிய பாரதி பின்வரும் விமரிசனத்தை அதன்கீழ் எழுதுகின்றான்.

> ஸ்திரி - விதவைகளின் தொகையைக் குறைக்க வழி கேட்டால் ஸ்ரீமான் காந்தி 'புருஷ விதவைகளின்' அதாவது புனர்விவாகமின்றி வருந்தும் ஆண்மக்களின் தொகையை அதிகப்படுத்த வேண்டு மென்கிறார். இதினின்றும் இப்போது ஸ்தீரி - விதவைகளின் பெருந்தொகையைக் கண்டு தமக்கு அழுகை வருவதாக ஸ்ரீமான் காந்தி சொல்லுவது போல், அப்பால் புருஷ விதவைகளின் பெருந்தொல்லையைக் கண்டு அழுவதற்கு ஹேது உண்டாகும்

என்கிறான்.

அக்கட்டுரையில் பாரதி தொடர்ந்து எழுதுகையில்,

> கிரமமாக ஒரு ஸ்திரியை மணம்புரிந்து கொண்டு அவளுடன் வாழ விரும்புவோர் வயது முதிர்ந்தோராயினும் அவர்களைக் குற்றம் சொல்வது நியாயமன்று. சிறிய பெண் குழந்தைகளை வயது முதிர்ந்த ஆண்மக்கள் மணம் புரியலாகாதென்பதை நாம் ஒருவேளை பேச்சுக்காக ஒப்புக்கொண்ட போதிலும் வயதேறிய பெண்களை வயது முற்றிய ஆண்மக்கள் மணம் புரிந்துகொள்ளக் கூடாதென்று தடுக்க எவனுக்கும் அதிகாரம் கிடையாது. எனவே எவ்வகையில் நோக்குமிடத்தும் ஸ்ரீமான் காந்தி சொல்லும் உபாயம் நியாய விரோதமானது; சாத்தியப்படாதது; பயனற்றது

என்று கூறுகிறார்.

தேசப்பிதா காந்தியடிகளுடைய யோசனையைப் பாரதி முற்றாக நிராகரித்தமைக்கான புள்ளிவிவரத்தை இனி அடியிற் காண்போம்.

ஒரு வயது நிறையாத பெண் சிசுக்களுள் ஆயிரத்திப் பதினான்கு விதவைகளும் ஒன்றுக்கு மேல் இரண்டு வயது நிறையாத பெண் சிசுக்களுள் எண்ணூற்றி ஐம்பத்தாறு விதவைகளும் இரண்டுக்கு மேல் மூன்று வயது நிறையாத பெண் சிசுக்களுள் ஆயிரத்தெண்ணூற்று ஏழு விதவைகளும் மூன்றுக்கு மேல் நான்கு வயது நிறையாத பெண் சிசுக்களுள் ஒன்பதினாயிரத்தி இருநூற்றி எழுபத்து மூன்று விதவைகளும் நான்குக்கு மேல் ஐந்து வயது நிறையாத பெண் சிசுக்களுள் பதினேழாயிரத்தி எழுநூற்றி மூன்று விதவைகளும் 15 வயதுச்குட்பட்ட பிற வயதுகளில் உள்ள விதவைகளின் தொகை 31.2 இலட்சம். இவர்களில் சற்றேறக்குறைய 18000 பேர் ஐந்து வயதுக்குட்பட்ட பெண் சிசுக்கள் மகளிர் திருமண ஒப்புதலளிப்பு வயதை 10இல் இருந்து 12ஆக உயர்த்தப் போராடிய இதழியல் முன்னோடி ஐயரவர்களிடம் பயிற்சி பெற்ற பாரதி திருமண வயது சட்டபூர்வமாக உயர்த்தப்பட்ட பின்பும் விதவைப் பெண் சிசு அவலம் தொடர்வதைக் காண்கிறான். இதனைக் களைவதற்கு எல்லா விதவைகளும் மறுமணம் செய்துகொள்ள இடம் கொடுப்பதே இந்தியாவில் மாதருக்குச் செய்யப்படும் அநியாயங்கள் எல்லாவற்றிலும் பெரிதான தகுந்த மாற்று. மற்ற பேச்செல்லாம் வீண் கதை என்று ஒதுக்கித் தள்ளுகிறான்.

'சந்திரிகையின் கதை' என்ற பாரதியின் முற்றுப்பெறாத கதையில் வேளாண்குடி கிராமத்து அக்ரஹாரத்தைச் சேர்ந்த இருபத்தைந்து வயதான இளம்விதவை விசாலாட்சி (பத்து வயதில் விதவையானவள்) திரு. ஜி. சுப்பிரமணிய ஐயர் அவர்களிடம் நூறு ரூபாய் பணமும், இளம் விதவைகளுக்கு விவாகம் செய்து வைப்பதில் மிகவும் சிரத்தையுடன் உழைத்து வந்த ராஜ மகேந்திரபுரத்தைச் சேர்ந்த வீரேசலிங்கம் பந்துலு அவர்களுக்கு ஒரு கடிதமும் பெற்றுச் செல்வதாகப் பாரதி தெரிவிக்கின்றார். சமூகத்தில் உயர்சாதியினர் இடையே இளம் விதவைகளின் எண்ணிக்கை அதிகமாயும் அவர்களின் அவலம் சொல்லவொண்ணாத அளவுக்கு இரங்கத் தக்கதாகவும் இருந்தமையால் அன்றோ பாரதி இப்பிரச்சினை பற்றிக் கதை எழுதுகின்றான்.

புரட்சிகர மனிதநேயக் கொள்கையின் தந்தை எனப் போற்றப்படும் நாவலாசிரியர் மாதவய்யா இளம் விதவைகளின் அவல வாழ்வு குறித்து 'முத்து மீனாட்சி' என்னும் குறுநாவலை 1903ஆம் ஆண்டு வெளியிடுகின்றார். இக்குறுநாவல் பாரதியின் கட்டுரைக்கு முன்னரே வெளிவந்துவிட்டது. இருப்பினும் இந்த அவலம் நீங்கவில்லை. இந்நிலையில் 1917ஆம் ஆண்டு வெளிவந்த 'தமிழர் நேசனில்' குழந்தை மணத்தால் விளையும் பெண்சிசு விதவை நிலையைப் பற்றி மாதவய்யா பின்வருமாறு எடுத்துரைக்கின்றார்.

'ஒரு வயது நிறையாத பெண் சிசுக்களுள் முப்பத்தோரு விதவைகளும், ஒன்றுக்கு மேல் இரண்டு வயதுக்குள் முப்பத்து நான்கு விதவைகளும், மூன்றுக்கு மேல் நான்கு வயதுக்குள் நூற்றி நாற்பது விதவைகளும் நான்குக்கு மேல் ஐந்து வயதுக்குள் முந்நூற்றி எண்பத்து மூன்று விதவைகளும்; பிற வயதுகளில் உள்ளோருமாகச் சேர்த்து 23068 விதவைகளும் 1911 ஜனசங்கைப்படி நம்முள் இருக்கின்றனர். இது எவ்வளவு பிரஜா நஷ்டம் என்று எழுதுகின்றார். நவஜீவனுக்குப் பின் தமிழர் நேசன் தரும்புள்ளி விவரம் இது. இப்புள்ளிவிவரங்கள் முழுமையானவை அல்ல என்பதை நாம் அறிவோம்.

திரு. க. சுப்பிரமணிய ஐயர் போன்ற சமூகச் சீர்திருத்தச் சிந்தனையாளர்கள் கால ஓட்டத்தின் போக்கிற்கு எதிராகத் துணிச்சலோடு செயல்பட்ட தன்மையைப் புரிந்துகொள்ள மேற்காட்டிய சான்றுகள் போதுமானவையன்றோ?

ஒவ்வொரு ஆண்டும் காங்கிரசின் அரசியல் மாநாடு நடைபெறும்போது, தேசிய சமூக மாநாடும் தனியே நடத்தி வந்தனர். 1889 டிசம்பரில் நடைபெற்ற தேசிய சமூக மாநாட்டில் அரசின் தீர்மானத்திற்குத் தொடக்கத்தில் எதிர்ப்பு இருந்தபோதிலும், இறுதியில் ஆதரவான தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

மாநாடு முடிந்தபின் சென்னைக்குத் திரும்பிய திரு. இரகுநாதராவும், திரு. க. சுப்பிரமணிய ஐயரும் திருமண ஒப்புதலளிப்பு வயது மசோதாவுக்குத் தாம் மனம் மாறி ஆதரவளித்தது ஏன்! என்பது குறித்து விளக்கமளித்தனர். திரு. இரகுநாதராவ் திருமண வயதை உயர்த்தக் கோருவது நியாயமானதே

என்ற தமது கருத்திற்கு ஆதரவாக இந்து மதத்தின் சிகரமாகக் கருதப்பெறும் வேதங்களை ஆதாரமாகக் காட்டினார். திரு. க. சுப்பிரமணிய ஐயர் மேலைத்தேயப் பகுத்தறிவுச் சிந்தனையாளர்களான ஸ்பினோசா மற்றும் டி.எச். கிரீன் போன்றோர் கருத்துக்களை ஆதாரமாகக் காட்டிச் சமூக விவகாரங்களில் அரசு தலையீடு அவசியமானதே என வாதிட்டார். எடுத்துக்காட்டாக,

> சட்டம் ஒழுங்கைநிலை நாட்டுவதோடு அரசின் பொறுப்பு முற்றுப் பெறாது. உயிர் சார்ந்த பிற கடப்பாடுகளையும் அது நேர்மையோடு நிறைவேற்ற வேண்டும். சொத்துக்களைப் பாதுகாப்பது, மக்களை மகிழ்ச்சியோடு வைத்திருப்பது, நீதியை நிலைபெறச் செய்வது ஆகியவற்றோடு அரசின் பொறுப்பு முடிந்து விடுவதில்லை. பொல்லாங்கைத் தடுப்பதோடு அரசின் செயல்பாடு முடிவதில்லை. அரசியலுக்குச் சட்டமும் நீதியும் முன்னீடேயன்றி, இறுதியன்று. அரசுக்குரிய சீரான இலக்கணம் மற்றும் அதன் உன்னத இலக்கு தேசியத் திறன்களை வளரச்செய்து, தேசிய வாழ்வை முழுநிறைவு உடைதாக ஆக்குதலாம். அதன் நிறைவுநிலை அதுவே எனலாம்

என்ற டி.எச். கிரின் வாசகங்களை அவர் மேற்கோளாகக் காட்டினார்.

1889ஆம் ஆண்டு ஜூன் மாதம் மதுரை ஐக்கிய அமைப்பு நடத்திய கூட்டமொன்றில் பேசும்போது சமூக, குடும்ப, அரசியல் அமைப்புகளில் காணப்படும் குறைபாடுகளைக் களைய வேண்டி அவர், அரசியல் ரீதியான நமது முன்னேற்றம், அதற்கு இணையான சமூகப் போக்கின் பிற முன்னேற்றங்களோடு ஒருங்கிணைதல் வேண்டும். நாட்டிலுள்ள படித்த சமூகத்தோரின் நடவடிக்கைகள் சமூக, குடும்ப அமைப்புகளின் முன்னேற்றத்தை நோக்கித் திருப்பி விடப்படுவதற்குப் பதிலாக அரசியல் முன்னேற்றத்தை நோக்கியே கூடுதலாகத் திருப்பி விடப்பட்டுள்ளது. இவ்வேற்றத்தாழ்வை நீக்க, காங்கிரசை ஒத்து விரிந்து பரந்த ஓரமைப்பை உருவாக்க வேண்டுமென்றார். சென்னையில் நடைபெற்ற கூட்டம் ஒன்றிலும் இதே கருத்தை வலியுறுத்திய அவர், மெய்யாகவே சமூகச் சீர்திருத்தம் அரசியல் சீர்திருத்தத்திற்கு முன்னரே ஏற்படுதல்

வேண்டும். வாக்குரிமை என்பது அரசியலில் மக்கள் அதைப் பயன்படுத்துவதற்குரிய தகுதியைப் பெறுவதைப் பொறுத்து அமைவது. நீண்ட ஒழுக்க நடைமுறை மற்றும் இதர பயிற்சிகளுக்குப் பின்புதான் தேசம் மென்மேலும் நேர்மை வாய்ந்ததாகவும் தன்னலமற்றதாகவும் துணிவுடையதாகவும் மாறும். அப்பொழுதுதான் அது ஐரோப்பிய நாடுகளுக்குச் சமமான அறிவுடையதாயும் ஆற்றல் மிகுந்ததாயும், நேர்மை உணர்வுடையதாயும் விளங்கும். இன்று நம்மிடையே நடைமுறையில் இருந்துவரும் சமூக நிறுவனங்கள் இக்குணங்கள் வளர்வதற்கு எதிரிடையானவை. ஆகவே தேசிய மறு உருவாக்கத்திற்குக் குறுக்கே நிற்கும் சமூக, சமயத் தடைகளை அகற்ற வேண்டியது சமூக சீர்திருத்தவாதிகளின் கடமையாகும்

சாதீய ஏதேச்சதிகாரப் போக்கும் பழமைப் பிடிப்பும் மிக்க இச்சமூக அமைப்பில் கல்வி மிகமிக மெதுவாகவே மாறுதல் கொண்டுவருகிறது. மூடச் சமூகத்தை ஓரிரு ஆண்டுகளில் கல்வி அறிவுடைய சமூகமாக மாற்ற முடியாது. அறியாமை இருளைத் தன்னார்வத் தொண்டு நிறுவனங்களும், தம் முயற்சியால் மிகக் குறைந்த அளவே அகற்ற இயலும். இந்நிலையில், ஆளும் அரசு அந்நிய அரசாக இருப்பதால், அரசுத் தலையீடு கூடாது என்பது நியாயமாகாது. விரைந்து செயல்பட்டு தன்னைத்தானே திருத்திக் கொள்ளும் சமூகங்களுக்கு அவ்வாதம் பொருந்தமேயன்றி, நோயாளியைப் போன்று பிறர் துணையின்றிச் செயல்பட இயலாத சமூகங்கட்கு அது பொருந்தாது என்றார்.

இந்து மற்றும் சுதேசமித்திரன் நாளிதழ்களின் ஆசிரியர் என்ற நிலையில் அவர் எழுதிய தலையங்கங்களிலும் மற்றும் கடிதப் பரிமாற்றப் பத்திகளிலும் இச்சட்டத் திருத்தத் தேவையை அவர் வலியுறுத்தினார். மக்கள் மனதிலிருந்து அளவுக்கதிகமான பீதியை நீக்க முயன்றார். இதன் காரணமாக இந்திய நாட்டில் தென்னக மக்களின் கருத்து ஊடகமாக இருந்த இந்து இதழ் 'ஒரு பக்கச் சார்பிலே' பேசத் தொடங்கிவிட்டது என்று அவர்மீது குற்றம் சாட்டினர். மாற்றுக் கருத்துடையோரை இந்து அளவுக்கதிமாக வன்மையாகச் சாடுகிறது என்றனர். மேலதிக எதிர்பார்ப்புகளோடு, கடுமுனைப்பான எல்லை கடந்து வாதங்களை முன்னிறுத்துவதன் மூலம் இந்தியாவின் முன்னேற்றத்திற்கு இவர் ஊறு

விளைவிக்கின்றார் என்று செய்தியாளர் ஒருவர் கருத்து வெளியிட்டார். சமூகச் சீர்திருத்தம் குறித்த தனது தீவிர முன்னேற்ற வாதத் திருப்புகையைப் பத்திரிகை தப்போது நியாப்படுத்தி வருகிறது என்றொருவர் குறைபட்டுக் கொண்டார். தீவிர சமயம் மற்றும் நீதி வாதங்கள் இந்து சமூக ஒழுங்கு முறைமையை நிலைகுலைவித்து நாட்டிற்குப் பேரிடர்களைத் தோற்றுவிக்கும் என்றும் கூறப்பட்டது. 'இந்து' இதழின் விற்பனை சரிந்துவிட்டது என வதந்திகளை மக்களிடையே பரப்பினர். எனினும் தன்னைத் திருத்திய ஐயரவர்கள், தன்னுடைய சமூகத்தைத் திருத்தும் பணியில் எதிர்ப்போர் பெருங்கூட்டமாகத் திரண்டு நிற்பது கண்டு அஞ்சவில்லை. இந்நிலையில் இந்து இதழின் உரிமையாளர் இருவருள் ஒருவராக இருந்த திரு. விஜயராகவாச்சாரியார் ஐயர் தமது சமூகச் சீர்திருத்தங் குறித்த தீவிர சிந்தனைகளை வெளியிட இந்து இதழைத் தொடர்ந்த பயன்படுத்துவதைப் பார்க்கிலும் சமூகச் சீர்திருத்தக் கருத்துக்களை வலியுறுத்துவதற்கு வேறு ஒரு இதழ் தொடங்குதல் நலம் என்று கருத்துத் தெரிவித்தார்.

அதனடிப்படையில்தான் திரு. கே. நடராஜன் அவர்களை ஆசிரியராகக் கொண்ட 'இந்தியன் சோஷியல் ரிபார்மர்' என்ற வார இதழ் வெளிவரத் தொடங்கிற்று. அவ்விதழிலும் ஐயரவர்கள் தொடர்ந்து எழுதினார். திரு. ஐயரவர்கள் உறுப்பினராக இருந்த 'திருவல்லிக்கேணி இலக்கியக் கழகம்' 1890ஆம் ஆண்டு நவம்பர் மாதம் அரசுக்கு அனுப்பிய மனுவில், திருமண ஒப்புதலளிப்பு வயதை 10 இலிருந்து 14 வயதாக உயர்த்தக் கோரியது. இருப்பினும் இச்சட்ட விதிமுறையைப் பின்பற்ற தவறுவோர்க்கு வழங்க உத்தேசித்திருந்த நாடு கடத்தல் தண்டனையை நீக்க வேண்டியது ஏனெனில் அத்தண்டனை சட்டத்தின் நோக்கத்தைச் சிதைத்துவிடும் என்று கூறியது. இறுதியில் சமரச விட்டுக் கொடுப்புக்கு இசையாத, லேன்ஸ் டவுண் உயரதிகாரச் சட்டமன்றத்தில் 1891 மார்ச்சில் திருத்தப்பெறாத திருமண ஒப்புதலளிப்பு மசோதாவை நிறைவேற்றிச் சட்டமாக்கினார். திருமண ஒப்புதலளிப்பு வயது 10இலிருந்து 12ஆக உயர்த்தப்பட்டது.

செங்கல்பட்டு உழவர் போராட்டம்

பின்தங்கிய மாவட்டமான செங்கல்பட்டு மாவட்டத்தில் பருவமழை தவறியதால் உழவர்கள் கிடைத்த வருமானத்தைக்

கொண்டு ஒருவாறு சமாளித்து வாழ்க்கை நடத்தினர். பொதுவாக உழவர்கள் வறுமை காரணமாகத் தாங்கள் அரசுக்குச் செலுத்த வேண்டிய தீர்வையை உரிய நேரத்தில் செலுத்தத் தவறினர். உடனுறையா நில பிரபுத்துவமும், வலிந்து வசூலிக்கப்படும் நிலவாரமும், அவர்கள் துயரை மேலும் அதிகரிக்கச் செய்தன. குறிப்பாக மாவட்ட ஆட்சித் தலைவர் பிரைஸ்ஸின் நன்மதிப்பைப் பெறுவதற்காகத் தாசில்தார் சீதாபதி நாயுடு தீர்வை வசூலிப்பதற்கு வலுக்கட்டாயமான முறைகளைக் கையாண்டார். இது குறித்து மேலதிகாரிகளுக்கு முறையீடு செய்தனர். ஆனால் பயன் எதுவும் ஏற்படவில்லை.

சென்னை ஆளுநராகக் கிராண்ட் டப் பொறுப்பேற்கும் முன்னரே காஞ்சிபுரம் வட்டத்தில் ஒரு கிராமத்தில் உழவர் சொத்துக்கள் ஜப்தி செய்யப்பட்டது குறித்துக் குழப்பம் இருந்து வந்தது. தாசில்தாருக்கு இலஞ்சம் வழங்க மறுத்தமையால் நாங்கள் துன்புறுத்தப்படுகிறோம் என்று உழவர்கள் வாதிட்டனர். மாவட்ட அதிகாரிகளை அணுகி மக்கள் தங்கள் குறைகளைத் தீர்க்க வேண்டினர். ஆனால் அம்முயற்சியும் தோற்றது. அரசாங்கம் ஒரு விசாரணைக்கு ஆஜராகுமாறு 200 உழவர்கள் கேட்டுக்கொள்ளப் பட்டனர். விசாரணை முடிவில் தாசில்தார் கறையற்றவர் ஆனார். விசாரணையின் சார்பற்ற நிலைகுறித்து உழவர்கள் ஐயங் கொண்டனர். ஆளுநர் கிராண்ட் டப் பைச் சந்திக்கத் தூதுக்குழு ஒன்று சென்றது. பாதிக்கப்பட்டோருக்கு நிவாரணம் வழங்குவதற்குப் பதிலாக, தாசில்தார் மீது குற்றம் சுமத்திய உழவர்கள் மீது நடவடிக்கை எடுத்த அதிகாரிகளுக்கு, ஆளுநர் பாதுகாப்பு அளித்தார். தாசில்தாரைப் பற்றி மோசமான அறிக்கை அளித்த கிராம நிர்வாக அதிகாரி வேலை நீக்கம் செய்யப்பட்டுப் பதினெட்டு மாதம் சிறைத் தண்டனை விதிக்கப் பெற்றார்.

இந்து நாளேடு இம்முழுக் கதைக்கும் ஆளுநரே காரணம் என்று குறை கூறியது. இந்து ஆசிரியர் சென்னைப் பிரமுகர்களோடு சேர்ந்து செங்கல்பட்டு உழவர்களுக்கு நிவாரணநிதி வசூலித்துக் கொடுத்து உதவினார். அரசாங்க தஸ்தாவெஜ்களைத் திருடிய குற்றச்சாட்டின் பேரில் தாசில்தார் 1888 ஆகஸ்டில் தண்டிக்கப்பட்ட தோடு செங்கல்பட்டு விவகாரம் முற்றுப்பெற்றது.

திரு. பி. கேசவப் பிள்ளை என்னும் மிகப் பிரபலமான பத்திரிகையாளர் தாசில்தாருக்கு நேர்ந்த சூழ்வினையைச்

சுட்டிக்காட்டி அடியிற்கண்டவாறு எழுதினார். இந்து நாளேடு அப்பொழுது வெளிக்கொணர்ந்த மாவட்ட நிர்வாக இழிசெயல்களுக்கு இது ஒருவகை மாதிரி எடுத்துக்காட்டு.

> கிராமங்களில் உள்ள கீழ்நிலை அதிகாரிகளிடமிருந்து தமக்குத் தேவையானவற்றை வெட்கமின்றித் தருவிக்கும் ஐரோப்பிய மற்றும் இந்திய அதிகாரிகளின் எண்ணிக்கை நாளுக்கு நாள் குறைந்து வருவதற்கு இந்துவிற்கு மக்கள் நன்றி செலுத்த வேண்டும். ஐரோப்பியரா, பிராமணரா, பிராமணரல்லாதவரா பாதிப்புக்குள்ளாவோர் யாவரேயாயினும், இந்து இது போன்ற கையூட்டு இழிசெய்கைகளைத் தயங்காது அம்பலப்படுத்தியது.

சேலம் நகர போராட்டம்

அடுத்தடுத்து வழங்கப்பட்ட கோர்ட்டு உத்தரவுகளை மீறி மசூதி வழியாக இந்துக்கள் ஊர்வலம் செல்ல இஸ்லாமியர் அனுமதி மறுத்ததனால் சேலம் நகரில் விளைந்த சில சிறிய நிகழ்வுகள், ஆளுநர் கிராண்ட டப்பின் நிர்வாகத்தில் வளமான கற்பனையோடு பல மடங்கு பெரிதாக்கப்பட்டு, அரசுத் துரோகக் கிளர்ச்சி என்று முத்திரை குத்தப்பட்டது. இக்கலகம் மூன்று நாள் நீடித்தது. சேலத்தில் சிறப்புக் காவல்படை தங்க வைக்கப்பட்டது. சிறப்பு நீதிபதி லிவிஸ் மேக்வீர் மற்றும் மலபாரிலிருந்து சிறப்பு மாவட்ட நீதிபதி விக்ரம் ஆகியோர் இட்டுக்கட்டப்பெற்ற குற்றச்சாட்டுகளின் அடிப்படையில் கைது செய்யப்பட்டோரை விசாரிக்க நியமிக்கப்பட்டனர். மருத்துவ அதிகாரி டாக்டர் மாணிக்கம் பிள்ளை உள்ளிட்டோருக்கு ஆயுள் தண்டனை வழங்கப்பட்டு அவர்கள் அந்தமான் தீவுக்கு அனுப்பப் பட்டனர். இந்த நிகழ்ச்சியில் தலையாய சிறப்புக்குரியது யாதென்றால், பெயர் பதிவு செய்யப்படாத வெற்று வாரண்டுகளை வழங்கியதேயாகும். கைதாவதனின்றும் தப்புவதற்காக மக்கள் வீடுகளைப் பாழடையப்போட்டு வெளியேறினர்.

பெரும்பாலான வழக்குகளில் உயர்நீதிமன்றமும் தண்டனையை உறுதி செய்தது. வரவிருக்கின்ற கிளர்ச்சி குறித்து அரசுக்கு முன்னரே தகவல் தராத குற்றத்திற்காகத்

திரு. சி. விஜயராகவாச்சாரியார் உள்ளிட்ட மூன்று அரசு வழக்குரைஞர்கள் பணிநீக்கம் செய்யப்பட்டனர். தங்கள் மீது சுமத்தப்பட்ட குற்றச்சாட்டுகள் பொய்யானவை என்பதை மெய்ப்பிக்க இவர்கள் சென்னையில் இரண்டாண்டுகள் பணியாற்ற வேண்டியதாயிற்று. இவ்வழக்கில் தண்டிக்கப்பட்டோருள் திரு. சி. விஜயராகவாச் சாரியாரும் ஒருவர் என்பதிலிருந்தே இவ்வழக்கின் தன்மையை அறிந்து கொள்ளலாம். இறுதியில் தாம் குற்றமற்றவர் என்பதை அவர் நிலைநாட்டினார். பொய்ச்சாட்சி கூறியோர் தண்டனை பெறவும் அவர் பாடுபட்டார். திரு. ச. விஜயராகவாச் சாரியார் மற்றுமுள்ள உள்ளூர் தலைவர்கள் தண்டனைக் குள்ளாதனதற்கு, இட்டுக் கட்டப்பெற்ற பொய்ச்சாட்சியங்களே காரணம் என்பதை உணர்ந்த கோவை நீதிபதி பார்க்கர் பொய்ச்சாட்சியம் அளித்தோர்க்குத் தண்டனை வழங்கிப் பிரிட்டிசாரின் நீதியுணர்வை நிலைநிறுத்தினார்.

வியக்கத்தக்க வகையில் அற்புதமாக நடந்த நிகழ்ச்சி களையும் புள்ளி விவரங்களையும் வெளியிட்ட இந்து இதழின் பணியைத் திரு. சி. விஜயராகவாச்சாரியார் வெகுவாகப் புகழ்ந்து பாராட்டினார். சேலம் சம்பவங்கள் குறித்த செய்தியைத் திரட்ட திரு. பி. கேசவ பிள்ளையைத் திரு. க. சுப்பிரமணிய ஐயர் சிறப்புச் செய்தியாளராக நியமனம் செய்தார். சேலம் சம்பவங்களால் பாதிக்கப்பட்டோர் விடுதலைக்கு 'இந்து' விரைந்து போராடியது.

> சேலத்தில் இந்து முகமதியர்களுக்குக் கலகம் கடந்த சமயத்தில் 'கவர்மெண்டார்' அநேகரை ஜெயிலுக்கு அனுப்பியபோது இந்து பத்திரிகை செய்த உபகாரத்தைச் சொல்லவும் வேண்டுமோ? இதோ இன்று இச்சபாநாயகருக்குப் பக்கத்தில் வீற்றிருக்கும் கனம்சேலம் விஜயராகவாச்சாரியாரை அநியாயமாகக் குற்றப்படுத்திச் சிறைச்சாலைக்கு அனுப்பியபோது, அந்த இந்து பத்திரிகை அவருடைய விடுதலைக்காகப் பட்டபாடு கொஞ்சமா? அக்காலத்தில் நிரபராதிகளான அநேகரைச் சிறைச்சாலை விட்டு நீக்கி அவர் மனைவிமார்களுக்கு மாங்கலிய பிச்சை கொடுத்தது இந்து பத்திரிகையல்லவா?

என்று ஆனந்த குணபோதினி ஆசிரியர் எஸ்.ஜி. இராமாநுஜுலு நாயுடு எழுதியுள்ளார். சேலம் இழிசெயல் பற்றி இலண்டனுக்குத்

தெரியப்படுத்திவிடுவேன் என்று ரிப்பன் பிரபு அச்சுறுத்திய பிறகே சென்னை மாநில அரசு பணிந்தது. ஆளுநர் டப் தம் பிடிவாதத்தைத் தளர்த்தினார்.

ஆட்சி பீடத்திலிருப்போர் எவரேயாயினும் குறைகண்ட இடத்து அஞ்சாது எதிர்த்துப் போராடிய திரு. க. சுப்பிரமணிய ஐயரவர்கள் இறந்தோரையும் விட்டுவிடுபவர் அல்லர். இறந்தவரிடம் காணப்பட்ட குறைகளைச் சுட்டி அவர் எழுதிய இறந்தோர் குறிப்பைப் படித்த பத்திரிகையாளர் ஒருவர், அக்குறிப்பை அவர் கவனத்திற்குக் கொண்டு வந்து வினவியபொழுது அவர் கூறிய பதில் வருமாறு:

> நான் தேச முன்னேற்றத்திற்கே மிகவும் உயர்தகவு அளிக்கிறேன். இந்தியாவின் ஒளியமயமான முன்னேற்றமன்றி வேறேதும் எனக்கு நெருக்கமானது அன்று. எமது நேசிப்பிற்குரிய உயரிய இலட்சியம் இதுவே. ஏனைய தனிநபர் சார்ந்த சலுகைகள் எமக்கு ஒரு பொருட்டன்று. ஒரு மனிதனுடைய போக்கோ செயல்பாடோ தேசிய நலனுக்கு எதிரான வகையில் இருக்குமாயின், அவருடைய உயர்வு தாழ்வு குறித்துக் கருத்திற் கொள்ளாது எவ்வளவு உயர்ந்தவராய் இருப்பினும் கருணையின்றி எம்மால் அவர் விமர்சிக்கப்படுவார் என்பதைத் தெளிவுபடுத்த விரும்புகிறேன். ஒரு மனிதர் இறந்துவிட்டால் அவருடைய பணியை நாம் முழுமையாக மதிப்பிட வேண்டும். இறந்தவருடைய பெயரை அவருக்குப்பின் நாம் சூட்டிக்கொள்ள இயலாது. நாம் எழுதுவது குறித்து இறந்தவர் வருந்தப்போவதில்லை. உயிர்வாழ்வோர் நம்மிடமிருந்து பாடங்கற்றுக் கொள்ளட்டும். தமக்குப் பின் நற்பெயரை விட்டுச் செல்ல எண்ணும் முதியோரும் இளையோரும் தாய் நாட்டுக்குத் தாம் ஆற்ற வேண்டிய கடமைகளில் கருத்துச் செலுத்துவாராக.
>
> தேசிய மதிப்பு மற்றும் தேசிய இலக்குகட்குத் தீங்கிழைப்போர் குறைகள் இறப்பிலும் மன்னிக்கப்பட மாட்டாது என்பதை எல்லோரும் உணரச்

செய்யவேண்டும். இறப்புக்குப் பின்னரும் தேச மக்களின் மதிப்பீட்டில் உயர்ந்து நிற்க விரும்புவோர் தேசத்திற்கான தங்கள் கடமைகளைச் செவ்வனே செய்வார்களாக. தன்னலப் போக்குகளும் பொதுநலனைக் குறைத்து மதிப்பிடும் தன்மைகளும் முழுமையாக வெளிப்படுத்தப் படவேண்டும்.

இவ்விறந்தோர் குறிப்பினை நான் மிகுந்த வருத்தத்துடன்தான் எழுதுகின்றேன். என்னால் இதை எழுதாது இருக்க இயலாது. தம் சொந்த முன்னேற்றத்திற்காகவோ அல்லது ஆட்சி பீடத்திலிருப்போரைப் புண்படுத்தி விடுவோமோ என்ற அச்சத்தின் காரணமாகவோ தேசிய நலனுக்கு அவர்கள் நிரந்தரமாக இழைத்துள்ள தீங்குகளைக் கருதுங்கால், அவர் எமக்கு உற்றார் என்றோ உறவினர் என்றோ எமக்குத் தோன்றுவது இல்லை.

-மெய்ஞானத் தனிவீரர் திரு. க. சுப்பிரமணிய ஐயர்

குருமலை சுந்தரம்பிள்ளையவர்கள் குறிப்பிடுவது போன்று, “நமது தாய் நாட்டின் க்ஷேமத்தின் பொருட்டு உழைக்க வேண்டுமென்ற பரிசுத்த கடமையைத் தமக்குத் தாமே உபதேசித்த உன்னதப் பெரியார் திரு. க. சுப்பிரமணிய ஐயருக்கன்றி, வேறு யாருக்கு இது போன்று வெட்டொன்று துண்டிரண்டு என்று தயக்கமின்றி கூறும் மனோதிடம் வாய்க்கும்!”

சங்க போயனுக்கும் இராம போயனுக்கும் அறிவூட்டியவர்

1878ஆம் ஆண்டு இந்து வார இதழைத் தோற்றுவித்த திரு. க. சுப்பிரமணிய ஐயர் 1881ஆம் ஆண்டு நவம்பர் 20ஆம் நாள் ‘சுதேசமித்திரன்’ வார இதழைத் தமிழில் தோற்றுவித்தார். சுதேசமித்திரன் இதழைத் தோற்றுவித்தமைக்கான காரணத்தை அவரே பின் வருமாறு குறிப்பிட்டுள்ளார்.

இந்து பத்திரிகை ஆங்கிலப் பத்திரிகையாக இருப்பதால் இங்கிலீஸ் பாஷையறியாத தமிழ் ஜனசங்கமும் தேசச் சமாசாரங்களை அறிந்து கொள்ள மார்க்கமில்லாதிருப்பதை யோசித்து சுதேசமித்திரன் பத்திரிகையை விருத்திசெய்து தமிழ் ஜன சமூகத்தாரின் அறிவை வளர்ப்பதே மேன்மை என்று கருதினேன்.

1881இல் தொடங்கப்பெற்ற சுதேசமித்திரன் 1893இல் வாரமிருமுறையாகவும், பின் 1897இல் வாரம் ஒருமுறையாகவும் வெளிவந்து, 1889இல் தமிழ் அரசியல் நாளேடாக வெளிவரலாயிற்று.

ஆங்கிலம் மற்றும் பிற மொழி அறிவும் பயிற்சியும் இல்லாத தமிழர்களுக்குப் பணிபுரிவதற்காகத் தோற்றுவிக்கப்பட்ட சுதேசமித்திரன் சாதாரண மக்கள் தேசிய இயக்கத்தில் பங்கு பெறப் பயிற்சி அளித்தது. அவரைப் போல அனுபவம் மிக்க தேர்ந்த பத்திரிகையாளர்கள் கூடத் தாய்மொழியில் பத்திரிகை தொடங்க முயற்சி மேற்கொள்ளத் தயங்கிய காலத்தில், அவர் மிகுந்த துணிச்சலோடு செயலில் இறங்கி மகிழ்ச்சியோடு கடின உழைப்பில் ஈடுபட்டார். தேசிய இயக்கத்தின் தலைமைப்பீடத்தில் மத்தியதர வர்க்கம் இனித் தொடர்ந்து இருக்க இயலாது. சாதாரண குடிமக்களே அப்பொறுப்பினை ஏற்கும் காலம் நெருங்கிவிட்டது என்ற தீர்க்கதரிசன உணர்வே அதற்கான காரணம் எனலாம்.

சுதேசமித்திரனின் முதல் பதினேழு ஆண்டுக்கால வரலாற்றில், இந்தியாவிலும் வெளி உலகிலும் குறிப்பிடத்தக்க வளமார்ந்த நிகழ்ச்சிகள் பல நடைபெற்றன. ஆர்வத்தால் தூண்டப் பெற்ற மக்கள், உலக நிகழ்ச்சிகளை மென்மேலும் தெரிந்துகொள்ள விரும்பினர். சுதேசமித்திரனும் அவர்கள் தேவையை நிறைவுசெய்ய உண்மையில் முயன்றது. லார்டு ரிப்பனின் ஸ்தல ஸ்தாபன ஆட்சிமுறை, பொது விவகாரங்களில் ஆர்வத்தைத் தோற்றுவித்தது. 1885இல் மக்களின் மனக்குறைகளை வெளியிடுவதற்கு காங்கிரஸ் அமைப்பும் தொடங்கப்பெற்றது. 19ஆம் நூற்றாண்டின் இறுதி ஆண்டுகளில் வெளியான நாட்டின் அரசியல் மீதான அதிருப்திச் செய்திகளை, மக்கள் பேரார்வத்துடன் படித்தார்கள். பாலகங்காதர திலகருக்கு விதிக்கப்பட்ட சிறைத்தண்டனை, போயர் யுத்தம் போன்றவை அவற்றிலடங்கும். உலக நிலைமை, உலக நிகழ்ச்சிகள் பற்றிய அறிவு வளரவே, உள்நாட்டு நிலைமை குறித்த அரசியலறிவு தெளிவடைந்தது. அதன் காரணமாகத் தேசிய எழுச்சி தோன்றியது என்று திரு. ஜே. நடராசன் இந்திய இதழியல் வரலாற்றில் எழுதுகின்றார்.

19ஆம் நூற்றாண்டின் இறுதி ஆண்டுகளிலும் இருபதாம் நூற்றாண்டின் தொடக்க ஆண்டுகளிலும் உலக நாடுகளில் பெரும் மாறுதல்கள் நிகழ்ந்தன. மேற்கத்திய எதிரியான ரஷ்யா, ஜப்பான்

யுத்தத்தில் 1904இல் படுதோல்வி அடைந்தது. இந்தியா உள்ளிட்ட கிழக்கு நாடுகளில் இது பெரும் பரப்பரப்பை ஏற்படுத்திற்று. மேற்கின் உயர்வு பற்றிய வெற்றுப்புனைவு தகர்ந்தது. அப்போர் கற்றுத்தந்த பாடத்தை சுதேசமித்திரன் மக்களுக்கு எடுத்துக்கூறியது. அது ஜப்பானின் தோற்றம் வளர்ச்சி குறித்தும் விரிவாக எழுதியது.

மேற்கூறிய போர், ருஷிய ஜப்பான் யுத்தம் குறித்து அமிர்தகுண போதினி இதழில் (1929 மார்ச்சு) திரு. எஸ்.ஜி. இராமாநுஜுலு நாயுடு 'பழங்காலத்துப் பத்திரிகைகள்' என்னும் தலைப்பில் இவ்வாறு எழுதினார்:

"அப்போது தொடங்கிய போர் யுத்தம் ஜனங்களுக்கு வாசிப்பிலே ரொம்ப ரொம்ப ருசியைத் தந்தது. பிரிட்டிஷார் போயர்களிடம் நன்றாகச் சிக்கிக் கொண்டு கலங்கவே, எல்லாம் அதைக் கவனிக்க ஆரம்பித்தார்கள். காலணா விலையில் பல தமிழ்ப் பத்திரிகைகள் தோன்றலாயின. 'பைப் பத்திரிக்கை' என்று ஒரு தம்பிடிக்கு ஒரு தினசரிப் பத்திரிகையும் சென்னையிலே தமிழிலிலும் தெலுங்கிலும் புறப்பட்டது. இதிலே இன்னொரு கூத்து, புதுச்சேரிப் பத்திரிகைகள் போயர் யுத்தத்தைப் பற்றி உண்மையாய் எழுதுகின்றன வென்றும், சென்னைப் பக்கத்துப் பத்திரிகைகளுக்கு அவ்வளவு சங்கதி எட்டுவதில்லையென்றும் பெரிய புகார் ஏற்பட்டுப் புதுச்சேரி பத்திரிகைகளை வெகுபேர் விரும்பினார்கள்

இதற்குப் பிறகு ருஷ்யா, ஜப்பான் சண்டை புகுந்தது. அதுவும் தமிழ்ப் பத்திரிகை வாசிப்புக்கு நல்ல அபிவிருத்தியைத் தந்தது.

இங்கிலீஷ் அரசாங்கமே எங்கே ருஷ்யர்கள் இந்தியாவை விழுங்கி விடுவார்களோவென்று நடுங்கிய நிலையில் இருக்கும் போது, அப்படிப்பட்ட ஒரு பிரமாண்டமான ருஷ்யாவை ஒரு சிறிய தீவான ஜப்பான் ஜெயித்துப் போடுவதென்றால் அந்தச் செய்தி வாசிக்க ருசியல்லவோ? ஆகவே, பத்திரிகைகளில் பலருக்குப் பிரியம் ஜனித்தது.

லார்டு கர்ஜான் செய்த விரும்பத்தகாத வங்கப் பிரிவினை, அதன் காரணமாகத் தோன்றிய சுதேசி எழுச்சி, அந்நியப் பொருள்

புறக்கணிப்பு, சென்னைக் கடற்கரையில் பிபின் சந்திரபால் பேசிய அனல் கக்கும் பேச்சு, தூத்துக்குடியில் சுதேசி ஸ்டீம் நேவிகேஷன் கம்பெனி தொடங்கியது. ஆஷ் படுகொலை, சுப்பிரமணிய சிவா, வ.உ. சிதம்பரம் பிள்ளை ஆகியோர் சிறைத் தண்டனை பெற்றது. அரசு நிந்தனைக் குற்றச்சாட்டுகளின் பேரில் சுதேசமித்திரன் மீது வழக்குத் தொடுத்தது. 1912இல் நடைபெற்ற பால்கன் யுத்தம், 1914இல் தொடங்கிய முதல் உலகப்போர் இவையனைத்துச் செய்திகளும் ஆர்ந்தமைந்த ஒழுகலாறுடைய தென்னகத்தை அடி ஆழம் வரை துழாவி, மக்களிடையே பொது விழிப்புணர்ச்சியைத் தோற்றுவித்தது.

உள்நாட்டு வெளிநாட்டுச் செய்திகளை ஒருவரி கூட விடாது மக்கள் படித்தார்கள். மக்களின் இடையறா ஆர்வத்தை அறிந்திருந்த திரு. க. சுப்பிரமணிய ஐயர் சுதேசமித்திரன் பத்திகள்வழி அதனைப் பூர்த்திசெய்யத் தம்மால் இயன்றன அனைத்தும் செய்தார். சந்தாதாரர்கள் பெருகினர். விற்பனை பெருகவே பொருள் வளம் அதிகரித்தது. ஆகவே சுதேசமித்திரன் நாளேடு ஆழமாக வேரூன்றி நிலைத்தது.

சுதேசமித்திரன் படித்த மக்களுக்குச் செய்தி வழங்கும் செய்திப் பத்திரிகையாக மட்டும் விளங்கவில்லை. தமிழ் மொழி வளர்ச்சிக்கும் அது பங்காற்றியது. தமிழ் மொழியில் அந்நாட்களில் செய்திப் பத்திரிகை நடத்துவது எளிய காரியமல்ல. மேற்கிலே தோன்றி நம் வாசற்கதவுகைள இடைவிடாது தட்டிக் கொண்டிருந்த புதிய கருத்துக்கள், சிந்தனைகளைத் தம் செவிகளில் நுழைய இடங்கொடுக்காது ஓடி ஒளிந்து கொண்டிருந்த பண்டிதர்கள், புலவர்களிடமிருந்து தமிழை விடுவித்தார் திரு. க. சுப்பிரமணிய ஐயர். எளிதில் எல்லோருக்கும் புரியக்கூடிய மொழிநடையில் உலக நிகழ்ச்சிகளையும், கருத்துக்களையும் எழுதுவதற்குத் திரு. க. சுப்பிரமணிய ஐயர் பெரிதும் சிரமப்பட்டார். அவர் புதிய தொடர்களை உருவாக்கியதோடு ‘கவர்மெண்ட்’, ‘போலீஸ்’, ‘ரயில்வேய்ஸ்’, ‘புராசிக்கியுசன்’ போன்ற ஆங்கிலச் சொற்களை அப்படியே பயன்படுத்தினார். நாளடைவில் அச்சொற்கள் மக்களிடையே அப்படியே வழங்கலாயிற்று. அவர் எளிய நடையிலே தெளிவாக எழுதினார். பொதுக்கூட்டங்களில் தலைவர்கள் தமிழிலேயே பேசவேண்டுமென்று வலியுறுத்தி ‘சுதேசமித்திரன்’ தமிழுக்குச் சேவை செய்தது.

திரு. க. சுப்பிரமணிய ஐயர் தமிழ்நாட்டில் தாம் சுற்றுப்பயணம் மேற்கொண்ட போதெல்லாம் தமிழிலேயே பேசினார். அதன் காரணமாகப் பாமரரும் மொழியை நேசிக்கத் தலைப்பட்டனர். அது அவர் மக்களின் பேராதரவைப் பெறக் காரணமாயிற்று. சுதேசமித்திரன் தமிழ்நாட்டிலுள்ள தமிழர்களுக்கு மட்டுமில்லாமல் கடல் கடந்த தமிழர்களுக்கு அரசியல் அறிவை ஊட்டியது. இலங்கை, பர்மா, மலேசியா, மோரீசு, தென்னாப்பிரிக்கா முதலிய நாடுகளில் வாழ்ந்த தமிழர்கள் பலர் இந்நாளேட்டின் சந்தாதாரர்களாக இருந்தனர். 1892ஆம் ஆண்டு முதல் 1914ஆம் ஆண்டு வரை சுதேசமித்திரன் தென்னாப்பிரிக்கத் தமிழர் அவலநிலை பற்றித் தொடர்ந்து செய்திகள் வெளியிட்டது. திரு. க. சுப்பிரமணிய ஐயர் ஆசிரியர் பொறுப்பேற்றிருந்த காலத்தில் தென்னாப்பிரிக்கத் தமிழர் பிரச்சினைகள் குறித்து 70க்கு மேற்பட்ட தலையங்கங்கள் சுதேசமித்திரனில் வெளியாயிற்று. இவ்விருபத்திரெண்டு வருடக்காலப் பகுதியில் தென்னாப்பிரிக்கத் தமிழர்கள் எழுதிய 195 கடிதங்கள் சுதேசமித்திரனில் வெளிவந்தன. அவற்றுள் 117 கடிதங்களை எழுதியவர் திருஞானசம்பன்னன் ஆவார். திருஞானசம்பன்னன் என்ற புனைபெயரில் சுதேசமித்திரனில் கடிதங்கள் எழுதியவர் பிறையாறு திருவிருத்தாசலம் பிள்ளையவர்கள் ஆவார். இவர் 1900ஆம் ஆண்டு நேடாவில் குடியேறியவர். ஆங்கிலப் பயிற்சியுடைய இவர் அங்குப் பள்ளி ஆசிரியராகப் பணிபுரிந்தவர். 'தமிழகம்' என்ற பெயரில் சங்கம் நிறுவி வயது வந்தவர்களுக்குத் தமிழ்க் கல்வி போதித்தவர்.

சுதேசமித்திரன் தலையங்கங்கள்

திரு.க. சுப்பிரமணிய ஐயரவர்கள் தம் தலையங்கத்தில் எழுதாத விஷயங்களே கிடையா. விலைப்பாலில் ஜலத்தைக் கலத்தல் முதல் அமெரிக்க ஸ்பெயின் யுத்தம் வரையில் எல்லாத் துறைகளிலும் அரிய பெரிய தலையங்கங்கள் எழுதியுள்ளார்.

அகில இந்திய காங்கிரசின் மூன்றாம் ஆண்டு மாநாடு 1887ஆம் ஆண்டு சென்னை மாநகரில் முதன்முறையாகக் கூடியது. பிற மாநிலங்களின் தலைநகரில் கூடிய காங்கிரஸ் மாநாடுகளிருந்து அம்மாநாடு வேறுபட்டு நிற்கும் தன்மையை 24.12.1887இல் சுதேசமித்திரன் தலையங்கத்தில் அடியிற்காணுமாறு கூறிற்று:

வங்காளத்தில் ஐசுவரியமிகுந்த பெரிய ஜமீன்தார்கள் எத்தனையோ பேர்களிருக்கிறார்கள். பம்பாயில் இராஜஐசுவரியம் பெற்ற வர்த்தகர்கள் ஏராளமாயிருக்கிறார்கள். இவர்களைப் போல ஐசுவரியம் படைத்த வியாபாரிகளாவது, வங்காளத்திலுள்ள வர்களைப் போல் மிக ஐசுவரியம் படைத்த பெரிய ஜமீன்தார்களாவது மிகுதியாக இங்கே இல்லை. ஆகையால் கல்கத்தா, பம்பாய்வாசிகள் அவர்களுடைய ஐசுவரிய மிகுதியால் செய்யக்கூடியது, இவ்வித இராஜதானியில் ஜனங்களுடைய ஒற்றுமையாலும் அவர்கள் ஒன்று கூடிக் குழுக்களாயிருந்து ஊக்மும் தேசாபிமானமும் காட்டி உழைப்பதினாலுமே கைகூடத்தக்கதாய் இருக்கிறது. அநேகக் கிராமங்களில் குடிகள் 1 அணா முதல் காங்கிரஸ் சபைக்குக் கையொப்பம் செய்து வந்ததையும் பார்த்து எவர்தான் காங்கிரஸ் சபை சாமான்ய ஜனங்களினுடைய அனுதாபமும் ஆதரவும் பெற்றதில்லையென்று சொல்லத் துணிவார்கள்.

நேடாலில் வாழ்ந்த இந்தியர்களின் நிலை குறித்துச் சுதேசமித்திரன் (1902 ஜூன் 27) கீழ்க்கண்டவாறு தலையங்கம் எழுதியது :

மிஸ்டர் காந்தி என்பவர் மட்டும் (நேடாலில் உள்ள) இந்தியர்களுக்குப் பரிந்து பேசத் தலைப்பட்டு, அவ்வூர் ஐரோப்பியர் செய்யும் அக்கிரமங்களை எடுத்துக்காட்டி, ஐரோப்பியருக்குள்ள உரிமை இந்தியர்களுக்கும் கிடைக்க வேண்டுமென்று வாதித்துக் கொண்டிராவிட்டால், இதற்குள்ளாக இந்தியர்களை நாட்டிலிருந்தே முடுக்கியோட்டி விட்டு மறுகாரியம் பார்த்திருப்பார்கள்.

பத்தொன்பதாம் நூற்றாண்டின் கடைக்கால் பருவம், விடுதலைக்கு முந்திய இருபதாம் நூற்றாண்டுத் தமிழ்ச் சமுதாய எழுச்சி, வரலாறு குறித்த மிகச் சிறந்த ஆவணம் சுதேசமித்திரன். அவ்வாவணம் இன்றுவரை சரியாகப் பயன்படுத்தப்படவில்லை. அதன் பெருமையறிந்த அறிஞர் ஒருவரின் கூற்றை இனிக் காண்போம். சுதேசமித்திரன் பொன் விழாத் தொடர்பாக 25.9.1932இல் சிதம்பரத்தில் நடைபெற்ற பொதுக்கூட்டத்தில் இராமகிருஷ்ண மடத்துத் துறவியும் இலங்கைப் பேரறிஞரும் அண்ணாமலைப் பல்கலைக்கழகப் பேராசிரியருமான விபுலாநந்தர் பின்வருமாறு கூறியுள்ளார்.

சுதேசமித்திரன் கடந்த ஐம்பது வருஷங்களாக நமக்கு ஒரு பெரும் பொக்கிஷத்தைச் சேர்த்து வைத்திருக்கிறது. ஐம்பது வருஷ நிகழ்ச்சிகளைக் கல்லில் பொன்னால் செதுக்கிய எழுத்துக்கள் போல் தன்னுள்ளே வைத்திருக்கிறது. மித்திரனை ஆரம்பம் முதல் இன்று வரை படித்துப் பார்த்தால் ஆராய்ச்சி யாளனுக்கு அது ஒரு பெருவிருந்தளிக்கும் என்பதில் ஐயமில்லை. கடந்த ஐம்பது ஆண்டுகளில் உலகில் பல மாறுபாடுகள் நிகழ்ந்திருக்கின்றன. கடந்த ஐம்பது ஆண்டுகளில் நம்மிடம் உலவிய பெரியார்கள் பலர். அவர்களது ஜீவிய சரித்திரத்தையும் பொன் மொழிகளையும் அவர்களது ஞாபகச் சின்னமாக நம்பொருட்டு மித்திரன் வைத்திருக்கிறது.

மித்திரன் நம் பொருட்டு இன்றும் பேரறிஞர் விபுலாநந்தர் கூறியவைகளை மைக்ரோ பிலிம்சுருளாக வைத்திருக்கிறது. நாம் அதை உரியமுறையில் பயன்படுத்தவில்லை.

தமிழ் இதழியல் வரலாற்றில் மித்திரன் பெறும் இடத்தைப் பேராசிரியர் எஸ். வையாபுரிப் பிள்ளை எழுதியுள்ளதை மேற்கோளாகக் காட்டி நிறைவு செய்வது பொருத்தமாக அமையும்:

“சுதேசமித்திரன் தோன்றி ஐம்பது வருஷங்கள் அடுத்த மாதத்தோடு பூர்த்தியாகின்றன. தமிழ்ப் பத்திரிகையுலகில் இது மிகவும் கொண்டாடத் தக்கதொரு நிகழ்ச்சியாம். எத்தனையோ பத்திரிகைகள் புற்றீசல் போலத் தோன்றி மறைவதை நாம் கண்கூடாகப் பார்க்கிறோம். அவைகள் போலாது, தனக்கே இயல்பாக அமைந்த வலிமையினாலே இடையூறுகளையெல்லாம் பொருட்படுத்தாது, இது மென்மேலும் செழித்தோங்கி வளர்ந்து வந்திருக்கிறது. இயல்பாக அமைந்த வலிமையென்று இங்கே கூறியது பத்திரிகைக்குரிய பொருள்நிலையைக் குறித்ததன்று. இதுவும் இன்றியமையாததே யாயினும் இதைக் காட்டிலும் சிறப்புடையதாகவும் எப்பொழுதும் நிலைபெற்றுநிற்பதாகவும் உள்ள அழியாச் செல்வம் ஒன்றிருக்கிறது. நேர்மையான கொள்கைகளையும் உயர்ந்த லட்சியங்களையும் மேற்கொண்டு அவற்றை ஒரு பொழுதும் நெகிழவிடாத திண்மைதான் இச்செல்வம். இச்செல்வத்தைப் பெறக்கூடிய நல்விதி

இப்பத்திரிகையின் ஆரம்பகாலந்தொட்டே இதற்கு வாய்த்திருக்கிது. காலஞ்சென்ற திரு. ஜி. சுப்பிரமணிய ஐயரவர்களை அறியாதார் யார்? அவர்களைப் போன்றவர்களால் *மிக்க அன்போடும் கவலையோடும் பாதுகாக்கப்பெற்று* வளர்ந்த இப்பத்திரிகைக்கு மேற்குறித்த திண்மைச் செல்வம் குறைவின்றி நிரம்பியுள்ளதென்பது எடுத்துச்சொல்லவும் வேண்டுமா?

இவ்வாறு இயல்பாக அமைந்த வலிமையினாலே இப்பத்திரிகை தமிழ் மக்களது உள்ளத்தில் எளிதிலே புகுந்து இடங் கொண்டுவிட்டது. அவர்களுடைய நன்மையையும், தேசத்தினது நன்மையையும் தலைநோக்கமாகக் கொண்டு எப்பொழுதும் உழைத்துவந்தமையாலே, அவர்களது ஆதரவு மென்மேலும் பெருகி வளர்வதாயிற்று. பத்திரிகையின் செல்வாக்கும் விரிந்து பரவுவதாயிற்று. அரசியல் விஷயங்களிலும் பிற பொதுவிஷயங்களிலும் நம்மவர்க்கு அறிவும் ஆசையும் உண்டாகச் செய்த பெருமை இப்பத்திரிகைக்கு உரியதாயிற்று" (கலைமகள் 1932 பக்.991-992).

யுனைடட் இந்தியா, தி மெட்ராஸ் ஸ்டேண்டர்டு ஆகியவற்றின் ஆசியரான வரலாறு

1897ஆம் ஆண்டு இந்தியச் செலவினம் குறித்து ஆராய ஆங்கில அரசு வெல்பி பிரபு தலைமையில் ஒரு இராஜாங்கக் குழுவை நியமித்தது. இக்குழுவின் முன் சாட்சியம் அளிக்கச் சென்னை மகாஜன சபையின் தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதியாகத் திரு. க. சுப்பிரமணியம் ஐயர் இலண்டனுக்குச் சென்று வந்தார். இலண்டனுக்குச் சென்ற இத்தூதுக் குழுவில் திரு. க. சுப்பிரமணிய ஐயரவர்களோடு இந்தியப் பிரதிநிதிகளாகச் சென்றவர்கள் திரு. தாதபாய் நௌரோஜி, திரு. சுரேந்திரநாத் பானர்ஜி ஆகியோர் ஆவர். அது தொடக்கம் இவர் இந்திய நாட்டின் பொருளாதாரப் பிரச்சனைகளில் தனிக்கவனம் செலுத்தத் தலைப்பட்டார். ஆங்கில அரசியல்வாதிகளின் கவனத்தை இந்திய விவகாரங்கள் குறித்துத் திருப்புவதற்கு இது மிக மிக அவசியமானது என்பதை நன்கறிந்திருந்த திரு. க. சுப்பிரமணிய ஐயர் அப்பணியில் இவர் தன்னை முழுமையாக ஈடுபடுத்திக் கொண்டார்.

இந்திய தேசிய இயக்கம் திரு க. சுப்பிரமணிய ஐயரை விட நாடு நன்கறிந்த பல அரசியல் தலைவர்களை வழங்கியுள்ளது

உண்மையே எனினும் பொருளாதாரத் தேசியம் குறித்து அவருக்கு ஈடு இணையாகப் பேச, எழுத வல்லவர்கள் மிகச் சிலரேயாவர்.

'இந்து' ஆங்கில நாளேட்டில் ஆசிரியர் பொறுப்பிலிருந்து விலகியபின் திரு. க. சுப்பிரமணிய ஐயர் 'யுனைடெட் இந்தியா' என்ற ஆங்கிலப் பொருளாதார வார இதழைத் தொடங்கினார். அவ்விதழில் நாட்டின் பொருளதாரப் பிரச்சனைகள் பற்றி வலிமையான சான்றாதாரங்களுடன் அமைந்த பல கட்டுரைகள் வெளியாயின. அக்கட்டுரைகள் தொகுக்கப்பெற்று, இந்தியாவின் பொருளாதார நலிவுக்கான காரணங்களைத் தெளிவாக விளக்கும் வகையில் 'Some Economic Aspects of British Rule' எனும் தலைப்பில் 1904ஆம் ஆண்டு சுதேசமித்திரன் வெளியீடாக நூல் வெளிவந்தது.

அலகதாபாத் 'லீடர்' பத்திரிகையின் ஆசிரியர் சி.ஒய். சிந்தாமணி, கோபாலகிருஷ்ண கோகலே கூறியதாகப் பின்வருமாறு கூறுகின்றார் :

> திரு. க. சுப்பிரமணிய ஐயரைப் போல தேர்ந்த நுட்பத்துடன் பொதுமக்கள் பிரச்சினைகளை ஆராய்ந்த பத்திரிகை ஆசிரியர் வேறு யாரும் இலர்.

இந்து நாளிதழின் உரிமத்தில் திரு. க. சுப்பிரமணிய ஐயரோடு பங்குதாரராக இருந்த திரு. முடும்பை விஜயராகவாச்சாரியார் சமூகச் சீர்திருத்த விஷயங்களில் அவரோடு மாறுபட்ட கருத்துடையவராக இருந்தார். இந்நிலையில் தன் கருத்துக்களை விட்டுக்கொடுத்து அவரோடு சமரசம் செய்துகொள்ள விரும்பாமையால் திரு. க. சுப்பிரமணிய ஐயர் இந்து நாளேட்டின் ஆசிரியர் பொறுப்பிலிருந்து விலகினார். அவ்வாறு விலகியபின் சென்னையிலிருந்து அப்போது வெளிவந்த ஆங்கில நாளேடான 'தி மெட்ராஸ் ஸ்டேண்டர்டு' எனும் பத்திரிகையின் ஆசிரியர் ஆனார். யுனைடெட் இந்தியா எனும் பெயரில் பொருளாதார வார இதழைத் தொடங்கிப் பொருளதார இதழியலுக்குத் திரு. க. சுப்பிரமணிய ஐயர் அடித்தளமிட்டார், ஏனையோர் அன்று எண்ணியும் பார்த்திராத மிகச் சரியான செயல் அன்றோ?

தென்னகம் தந்த இதழியல் பெருந்திறலாளர்

திரு. க. சுப்பிரமணிய ஐயரவர்களிடம் பயிற்சி பெற்ற இதழியலாளர்கள் பிற்காலத்தில் இதழியல் வரலாற்றில் சிறப்பிடம் பெற்றனர். அவர்களுள் சிலர் குறித்த விவரங்களைக் காண்போம்.

1. திரு. சி. கருணாகர மேனன்

இவர் இந்து நாளேட்டில் திரு. க. சுப்பிரமணிய ஐயரிடம் உதவி ஆசிரியராகப் பணிபுரிந்தவர். ஐயரவர்கள் இந்து நாளேட்டின் ஆசிரியர் பொறுப்பிலிருந்து விலகிய போது அந்நாளேட்டின் ஆசிரியர் பொறுப்பினை ஏற்றவர்.

2. திரு. கே. ஹயாவதன ராவ்

மூத்த பத்திரிகையாளர். திரு. க. சுப்பிரமணிய ஐயர் அவர்களின் நெருங்கிய நண்பர், 'இந்து', 'காமன்வில்' 'நியூ இந்தியா' போன்ற இதழ்களில் தொடர்ந்து கட்டுரைகள் எழுதியவர். திரு. க. சுப்பிரமணிய ஐயர் அவர்களின் வாழ்க்கை வரலாற்றை ஆங்கிலத்தில் எழுதியவர். இந்நூலை கணேஷ் கம்பெனி, தியாகராயநகர், சென்னை வெளியிட்டுள்ளது.

3. திரு. கே. நடராஜன், பி.ஏ.,

'இந்து' நாளேட்டின் உதவியாசிரியர்., 'இந்திய சோஷியல் ரிபார்மர்' என்னும் ஆங்கில வார ஏடு தொடக்கத்தில் சென்னையிலிருந்தும் பின்பு பம்பாயிலிருந்தும் வெளியாயிற்று. ஏறத்தாழ ஐம்பதாண்டுக் காலம் இவ்வார ஏடு வெளிவந்தது.

4 & 5. திரு. கே. வியாச ராவ் & திரு. சுப்பா ராவ்

கோவையைச் சேர்ந்த சகோதரர்கள், இந்து நாளேட்டில் திரு. க. சுப்பிரமணிய ஐயர் அவர்களிடம் உதவியாசிரியராகப் பணிபுரிந்தவர்கள். திரு. கே. சுப்பாராவ் 'ரிவைவிடு மெமரீஸ்' (Revied memories) என்ற தமது நூலில் இந்து நாளேட்டின் ஆசிரியராகத் திரு. க. சுப்பிரமணிய ஐயர் பணிபுரிந்தமை பற்றி விரிவாக எழுதுகின்றார்.

6. திரு. குருமலை சுந்தரம் பிள்ளை, பி.ஏ.

வார இதழாகவும் வாரம் இருமுறை இதழாகவும் திருநெல்வேலியில் வெளியான 'சர்வ ஜனமித்திரனில்' உதவி

ஆசிரியராகப் பணிபுரிந்தவர். சுதேசமித்திரனில் திரு. க. சுப்பிரமணிய ஐயரவர்களிடம் உதவி ஆசிரியராகப் பணிபுரிந்தவர். 'பொற்கொடி' நாவல் எழுதியவர். இலக்கண நூலாசிரியர். திரு. க. சுப்பிரமணிய ஐயரின் ஜீவிய சரிதத்தைத் தமிழில் எழுதியவர். சுதேசமித்திரன் வெள்ளிவிழா வெளியீடாக இந்நூலின் முதற்பாகம் வெளியானது. இரண்டாம் பாகம் வெளிவரவில்லை.

7. திரு. ஏ. சங்கரலிங்கம் பிள்ளை, பி.ஏ.

திரு. 'மெட்ராஸ் ஸ்டேண்டர்டு' என்ற ஆங்கில நாளேட்டின் ஆசிரியராகவும் வாரம் இருமுறை வெளியான 'சுதேசி' எனும் தமிழேட்டின் ஆசிரியராகவும் உரிமையாளராகவும் இருந்தவர். உதவி ஆசிரியராக சுதேசமித்திரன் தமிழ் நாளேட்டில் திரு. க. சுப்பிரமணிய ஐயரவர்களிடம் பணிபுரிந்தவர். பின் சுதேசமித்திரனிலிருந்து விலகி இந்து ஆங்கில நாளேட்டில் உதவியாசிரியரானார்.

8. திரு. சி. சுப்பிரமணிய பாரதி

உதவி ஆசிரியராக சுதேசமித்திரன் தமிழ் நாளேட்டில் திரு. க. சுப்பிரமணிய ஐயரின்கீழ்ப் பணிபுரிந்தார். சுதேசமித்திரனில் பணியாற்றுங் காலத்திலேயே 'சக்கரவர்த்தினி' எனும் மாதர் மாத இதழின் ஆசிரியராகவும் பணிபுரிந்தார். பின்னர் இந்தியா வார இதழ் ஆசிரியராகவும் 'கர்மயோகி', 'சூரியோதயம்,' 'விஜயா', 'Bala Bharatha' என்ற இதழ்களின் ஆசிரியராகவும் பணியாற்றினார்.

9. திரு. சி.ஓய். சிந்தாமணி

உதவி ஆசிரியராக இந்து நாளேட்டில் திரு. க. சுப்பிரமணிய ஐயரிடம் பணியாற்றினார். பின்னாளில் உத்திரபிரதேச மாநிலத்தில் புகழ் வாய்ந்த ஆங்கில நாளேடாக விளங்கிய 'லீடர்' இதழின் ஆசிரியர் ஆனார். லீடர் ஆங்கில நாளேடு அலகபாத் நகரிலிருந்து வெளிவந்தது.

10. திரு. சி. வி. சுவாமிநாதய்யர்

திரு. க. சுப்பிரமண்'ப ஐயரவர்களின் வேண்டுகோளின் பேரில் அவருக்குப் பதிலாக 'சுதேசமித்திரனில்' ஆசிரியராகப் பணிபுரிந்தவர். விவேக சிந்தாமணி இதழின் ஆசிரியராகப் பணிபுரிந்தவர்.

11. திரு. ஆர். கோதண்டராமய்யர்

உதவி ஆசிரியராக சுதேசமித்திரன் தமிழ் நாளேட்டில் பணிபுரிந்தார்.

12. திரு. வரகவி அ. சுப்பிரமணிய பாரதி

உதவி ஆசிரியராக சுதேசமித்திரன் தமிழ் நாளேட்டில் பணிபுரிந்தார்.

13. பண்டித ச.ம. நடேச சாஸ்திரி

இராஜம் ஐயர், மாதவய்யா ஆகியோரின் சம காலத்தவரான இவர் தமிழ் நாவல் முன்னோடிகளில் குறிப்பிடத்தக்க ஓர் ஆசிரியர். ஆங்கிலத்திலும் தமிழிலும் கதை இலக்கியத்துக்குப் பெருமை தேடித் தந்தவர். தமிழ் நாட்டில் வாய்மொழி வழக்கிலிருந்த பல நாடோடிக் கதைகளை இங்கிலாந்தில் வெளியான ஆங்கிலப் பத்திரிகைகளில் 1885, 1886ஆம் ஆண்டுகளிலேயே எழுதி அவற்றுக்கு ஒரு மதிப்புக் கொடுத்தவர். இவர் எழுதிய இன்னொரு நூல் 'ஸந்தோத்யானம்' என்பது. சுதேசமித்திரன் பத்திரிகையில் 1903, 1904ஆம் ஆண்டுகளில் வாராவாரம் தொடராக வந்த இந்தக் கதை, பின்னர் அவர் காலமாகி பதினாறு ஆண்டுகள் கழித்து 1922இல் புத்தகமாக வெளியிடப்பட்டது. டில்லியிலிருந்து மீர் அம்மான் என்ற உருது கவிஞர் எழுதிய 'நான்கு பக்கிரிகளின் கதை' என்பதன் மொழி பெயர்ப்பு இது. 1900 ஆண்டு இவர் தாம் எழுதி வெளியிட்ட முதல் நாவலான 'தீனதயாளு'வில் தம் சொந்தப் பெயரை அறிவிக்காமல் 'ஒரு சுதேசமித்திரன்' என்ற புனைபெயரில் வெளியிட்டார்.

இந்து, தி மெட்ராஸ் ஸ்டேண்டர்டு ஆகிய இரு ஆங்கில நாளேடுகட்கும் யுனைடெட் இந்தியா எனும் ஆங்கிலப் பொருளாதார ஏட்டிற்கும் சுதேசமித்திரன் எனும் தமிழ் அரசியல் நாளேட்டிற்கும் ஆசிரியப் பொறுப்பேற்று வழிநடத்திய திரு. க. சுப்பிரமணிய ஐயரவர்கள் பத்துக்கு மேற்பட்ட இதழியலாளருக்குப் பயிற்சி அளித்து, அவர்களை நாடு போற்றும் மிகச்சிறந்த பத்திரிகையாளராக உருவாக்கிய செயல் எளிதான செயலா? அப்பத்திரிகைப் பேராசனை இதழியல் பெருந்திறலாளர் எனல் ஏற்புடையதன்றோ?

மகாத்மாவை இனங்காட்டிய பரமகுரு

காந்தியடிகள் வாழ்க்கைச் சரித்திரத்தைப் பிரெஞ்ச் மொழியில் எழுதிய மகாமேதையான நோபல் பரிசு பெற்ற ரோமா ரோலா (Romain rolland) பின்வருமாறு எழுதியுள்ளார்.

1921ஆம் வருஷம் டிசம்பர் மாதத்திலே காந்தியின் ஆசிரமத்துக்கு ரவீந்திரநாத் தாகூர் போயிருந்தார். அப்பொழுது மகாத்மா என்னும் வார்த்தை, காணப்படும் உபநிஷத்து வாக்கியத்தை அக்கவிஞர் எடுத்துச்சொல்லித் தேவதூதரான காந்தியை 'மகாத்மா' என்றழைத்தார்.

ஆனால் காந்தியடிகள் வரப்போகும் பெருமையை முன்னதாகவே தீர்க்கதரிசனத்துடன் அறிந்து திரு. க. சுப்பிரமணிய ஐயரவர்கள், 24.12.1912 சுதேசமித்திரன் 'தென் ஆப்பிரிக்க இந்தியர்கள்' என்னும் தலைப்பில் எழுதிய தலையங்கத்தில் பின்வருமாறு குறிப்பிட்டுள்ளார்.

> *தென் ஆப்பிரிக்க இந்தியரின் கஷ்டங்களை நிவர்த்தி செய்ய வேண்டுமென்று தீக்ஷை செய்து கொண்டிருக்கும் மிஸ்டர் காந்தி, ஒரு மகாத்துமாவோ, ஈஸ்வராவதாரமோ வென்று உலகோர் நினைக்கும்படி தன் மறுப்பையும் உறுதியையும் சாவதானத் தையும் காட்டி வருகிறார்*

பரமகுருவைப் போற்றிய தேசப்பிதா

திரு. க. சுப்பிரமணிய ஐயர் மிகவும் நோய் வாய்ப்பட்டிருந்த போது காந்தியடிகள் அவரில்லத்திற்குச் சென்று அவரைச் சந்தித்தார். 1915 ஏப்ரலில் காந்தியடிகள் சென்னைக்கு வந்தபோது திரு. வி. எஸ். ஸ்ரீநிவாச சாஸ்திரியையும் உடன் அழைத்துக் கொண்டு அவரைச் சந்திக்கச் சென்றார். இச்சந்திப்புக் குறித்துத் திரு. ஸ்ரீநிவாச சாஸ்திரி எளிமையான ஆற்றல்மிக்க உரைநடையில் எழுதியுள்ளார். அது இளைய தலைமுறை தனக்கு முந்திய ஒரு முதிய தலைமுறையை வழி அனுப்புவது போன்று இருந்தது. தென்னாப்பிரிக்கச் சத்தியாக்கிரகப் போராட்டத்தினால் அப்பொழுது உலகளாவிய பாராட்டைக் காந்தி பெற்றிருந்தார். ஆனால் இந்திய விடுதலைக்கான அஹிம்சைப் போராட்ட நெறி

பற்றி அவர் இன்னமும் திட்டமிடாத நேரம் அது. காந்தியைப் போலவே சுப்பிரமணிய ஐயரும் பிரிட்டிஷ் காமன்வெல்த் சடையில் இந்தியா சகல உரிமையும் படைத்த முழு உறுப்பினராவதற்குப் பாடுபட்டுக் கொண்டிருந்த காலம் அது. திரு. க. சுப்பிரமணிய ஐயர் தேசத்திற்காகச் செய்த தியாகங்களை வேறு எவரையும் விடக் காந்தியடிகள் மிக நன்கு அறிந்தவர். தென்னாப்பிரிக்காவில் உள்ள இந்தியர்கள் நலன் கோரிப் பாடுபட்ட பொழுது அவர்களை ஒருங்கிணைப்பதற்குத் திரு. சுப்பிரமணிய ஐயருடைய உதவியை அவர் பெற்றதுண்டு. காந்தியடிகளும் அவரும் பேசிக்கொண்டிருந்த பொழுது, "ஆனால் நானும் இருக்கிறேன். பாருங்கள்! கடும் நோயினால் ஒன்றும் செய்யச் சக்தியற்றவனாகப் போய்விட்டேன்! என்னால் நாட்டிற்கு என்ன பயன்?'' என்று அவர் சொல்லிக்கொண்டு போனபோது, அவர் கண்களில் நீர் தளும்பத் தொடங்கிவிட்டது. காந்தியடிகள் உணர்ச்சி வயப்பட்டவராய் அவர் அருகில் சென்றார். "வருந்தாதீர்கள். நீங்கள் நாட்டிற்கு ஆற்ற வேண்டிய பணியை, உங்கள் பங்குக்குக் கூடுதலாகவே செய்துள்ளீர்கள். நீங்கள் வருத்தப்படுவதற்கு எவ்விதக் காரணமும் இல்லை. இப்பொழுது நீங்கள் ஓய்வெடுத்துக் கொண்டு உங்கள் உடல் ஆரோக்கியத்தைப் பேணிக் காத்துக்கொள்ளுங்கள். நீங்கள் விட்டுச் செல்லும் பணியை இனி மற்றவர்கள் தொடர்வார்கள்" என்று கூறிக்கொண்டே அவருடைய கண்ணீரைத் தமது துண்டால் துடைத்துவிட்டார்.

ஓராண்டு கழித்து 1916 ஏப்ரல் 15ஆம் நாள் திரு. க சுப்பிரமணிய ஐயர் காலமானார். எஸ்.ஜி. இராமாநுஜுலு நாயுடு அவர்கள் அமிர்தகுணபோதினியில் 1929ஆம் ஆண்டு எழுதிய 'பழங்காலத்துப் பத்திரிகைகள்' என்ற கட்டுரையொன்றில் குறிப்பிட்டது போல அவரைக்காய்ச் செடி போல ஆறுமாதத்துப் பயிர்களாகப் பத்திரிகைகள் தோன்றி மடிந்து கொண்டிருந்த அக்காலத்தில் 1878ஆம் ஆண்டில் செப்டம்பர் 20ஆம் நாள் இந்து ஆங்கில வார ஏட்டைத் தோற்றுவித்து, பின்னர் அதனை நாளேடாக மாற்றி நிலைபெறச் செய்து அதன் ஆசிரியராகத் தொடர்ந்து இருபது ஆண்டுகள் பணியாற்றியது தடம்பதித்த சாதனை.

1881ஆம் ஆண்டு வார இதழாகத் தோற்றுவிக்கப்பட்ட சுதேசமித்திரனைத் தமிழ் நாளேடாக மாற்றி விடுதலைக்கு

முன்னும் பின்னும் தமிழ் மக்களுக்குத் தொடர்ந்து பணிபுரியச் செய்தது ஈடுஇணையற்ற மற்றுமொரு மாபெரும் சாதனை. இவற்றிற்கு அடித்தளமாக அமைந்த ஜி. சுப்பிரமணிய ஐயர் என்கிற இதழாளரின் பணி பன்முகப் பார்வைக்கு உரியதாகும்.

நூற்பட்டியல்

1. குமரி மலர்-ஜனவரி, ஏ.கே. செட்டியார், 1972
2. புண்ணியவான் காந்தி (முதற் பாகம்), ஏ.கே. செட்டியார், 1969
3. தமிழ் இதழியல் சுவடுகள், மா.சு. சம்பந்தன், 1990
4. புதிய விழிப்பின் முன்னோடி, ஜி. சுப்பிரமணிய ஐயர், பெ.சு. மணி, 1987
5. G. Subramania Iyer, S.A. Govindarajan, 1978
6. Politics and Nationalist Awakening in South India, R. Sunthralingam, 1974
7. History of Indian Journalism, J. Natarajan, 1955
8. Tamil Press and the Nationalist movements from 1905 - 1939, Dr. Mohan Ram (Ph.d. Thesis, Madras University)

பாரதியார்

பெ.சு. மணி

முன்னுரை

பாரதியாரின் இதழியல் பணி குறித்துக் கட்டுரைகள் எழுதிய முன்னோடிகளுள், அமிர்தகுணபோதினி ஆசிரியர் எஸ்.ஜி. இராமனுஜுலு நாயுடு, 'பாரதி தமிழ்' தொகுப்பாசிரியர் பெ. தூரன், 'பாரதி புதையல்' தொகுப்பாசிரியர் ரா.அ. பத்மநாபன் ஆகியோர் குறிப்பிடத்தக்கவர்கள். இவ்வாறு கட்டுரைகள் பல வெளி வந்துள்ள போதிலும். தனியொரு ஆய்வு நூல் வெளி வரவில்லை. இந்தக் குறையைப் போக்க 'பத்திரிகையாளர் பாரதியார்' எனும் என்னுடைய நூல் 1989இல் வெளிவந்தது. இதற்கு முன் 1987 ஏப்ரல் 15, 16 தேதிகளில் சென்னைப் பல்கலைக்கழகத்தில் தமிழ்த்துறையின் சார்பில் பேராசிரியர் டாக்டர் ந. சஞ்சீவி ஏற்பாடு செய்த பாரதியார் அறக்கட்டளை கருத்தாய்வரங்கத்தில் 'பத்திரிகைத் துறையில் பாரதியார்' எனும் தலைப்பில் ஓர் ஆய்வுக் கட்டுரைப் படித்தேன்.

சுதேசமித்திரன், சக்ரவர்த்தினி, இந்தியா, விஜயா, கர்மயோகி, சூரியோதயம், தர்மம், பாலபாரத் (ஆங்கிலம்), பாலபாரதா (ஆங்கிலம்) முதலான இதழ்களில் பாரதியார் துணை ஆசிரியராகவும் ஆசியராகவும் கட்டுரையாளராகவும் இருந்து பணியாற்றியது முதன்முதலாக விரிவான முறையில் 'பத்திரிகையாளர் பாரதியார்' நூலில் ஆய்வு செய்யப்பெற்றுள்ளது.

மேற்கூறப்பெற்ற இதழ்களில் 'தர்மம்', 'பாலபாரதி' மட்டும் பார்வைக்குக் கிடைக்கவில்லை. பிற இதழ்கள் கிடைத்த அளவில் பயன்படுத்தப்பட்டன. கிடைக்காத இதழ்கள் சிலவற்றின் சில செய்திகள் அன்றைய சென்னை மாநில அரசின் 'நேடிவ் நியூஸ் பேப்பர் ரிப்போர்ட்' வழியே அறியப்பெற்றன. 'சுதேசமித்திரன்' இதழ்கள் பலவற்றின் 'மைக்ரோ பிலிம்' பிரதிகளும் பயன்படுத்தப் பட்டன. பாலபாரதி, விஜயா, சூரியோதயம் இதழ்கள் சில கிடைத்தன. 'இந்தியா' இதழ்கள் 1909 ஆண்டிற்குரியன முழுவதும் கிடைத்தன. எஞ்சியவை பல பார்வைக்குக் கிடைத்தன.

இவற்றையெல்லாம் பயன்படுத்தி எழுதப்பெற்ற பத்திரிகையாளர் பாரதியார் நூலில் பாரதியாரின் இதழியல் கோட்பாடுகள் கட்டமைக்கப்பெற்றுள்ளன.

சுதேசமித்திரனில் பாரதியார்

“தமிழ்நாட்டின் பத்திரிகையுலகிற்குச் சுதேசமித்திரன் தந்தையென்று கூறுதல் மிகையாகாது” என்று தமிழ் இதழியல் வரலாற்றில் அழுத்தமானச் சுவடுகளைப் பதித்த திரு.வி.க. கூறியுள்ளார்.[1] தமிழ்நாட்டின் புதிய விழிப்பிற்கு ஆதிகர்த்தாக்களுள் ஒருவரான சுதேசமித்திரன் ஜி. சுப்பிரமணிய ஐயர் என்று பாரதியாரால் புகழப்பெற்ற இதழியல் துறை மூலவர் ஜி. சுப்பிரமணிய ஐயர் (1885-1916) 1882 மார்ச்சு மாத்தில் சுதேசமித்திரனை வாரப்பதிப்பாகத் தொடங்கினார். 1893இல் வாரம் இருமுறை, 1897 இல் வாரம் மும்முறை, 1899இல் நாளேடு என்று வளர்ச்சிப்பெற்றது சுதேசமித்திரன். தினப்பதிப்புடன் சில ஆண்டுகள் வாரம் மும்முறைப் பதிப்பும் வெளிவந்துள்ளது.[2]

தூக்கத்தில் ஆழ்ந்து தாழ்வுற்றிருந்த தமிழரை “அமிழ்தென்னச் செந்தமிழில்” சுதேசமித்திரன் தோன்றி எழுப்பியது என்று தேசியச் செம்மல் வ.உ.சி. பாராட்டியுள்ளார்.[3]

இத்தகைய வரலாற்றுப் பின்னணியைக் கொண்ட சுதேசமித்திரன் நாளிதழில் பாரதியார் முதற்கட்டமாக 1904 நவம்பர் முதல் 1906 ஏப்ரல் வரையில் துணையாசிரியர்களுள் ஒருவராகச் சேர்ந்தார். “பத்திரிகைத் தொழிலில் எனக்கும் பழக்கமும் தேர்ச்சியும் வரும்படி செய்தது அவர்தான். அவரை நான் ஒருவகையில் பரம குருவாக மதிக்கின்றேன்” என்று பாரதியார் ஜி. சுப்பிரமணிய ஐயரைப் பற்றிக் குறிப்பிட்டதாகப் பாரதியாரின் சீடர் வ.ரா. எழுதியுள்ளார்.[4]

சுதேசமித்திரனில் பாரதியார் பெரும்பாலும் மொழி பெயர்ப்பதிலும், செய்திகளுக்குத் தலைப்புகள் தருவதிலும் இதழியல் பணியாற்றினார். கட்டுரைகள் எழுத வாய்ப்புத் தரப்படவில்லை யென்றாலும் தேசியக் கவிதைகள் எழுத வாய்ப்பு அளிக்கப்பெற்றது. சென்னை மாணவர் தமிழ்ச் சங்கத்து ‘வருஷாந்திர மீட்டிங்கில்’ பாரதியார் பேசியது ‘கருணை’ எனும் தலைப்பில் ஏப்ரல் 29, 1905இல் சுதேசமித்திரனில் வெளிவந்தது.

1906 பிப்ரவரி 13ஆம் இதழில் தேச பக்திப் பாக்கள் புனைந்து அனுப்புமாறு கேட்டுக்கொண்ட பாரதியாரின் விண்ணப்பம் வெளிவந்தது. பாரதியாரின் மொழிபெயர்ப்புத் திறமையையும் செய்திகளுக்குத் தலைப்புகள் தரும் திறனையும் ஜி. சுப்பிரமணிய ஐயர் பாராட்டியுள்ளதை, சுதேசமித்திரன் துணையாசிரியர்களுள் ஒருவரான 'வரகவி' சி. சுப்பிரமணிய பாரதியார் பின்வருமாறு எழுதியுள்ளார்.

> அடே பாரதி! கவனி - நான் சொல்லுகிறேன். விஷயத்தின் போக்கைக் கவனித்தபடி நீயும் அப்படியே எழுதி வருகிறாய்! அது தவறு!. . . தமிழ் படித்துவிட்டாற் போதுமா? எதுகை மோனையுடன் பாடி விட்டாற்போதுமா?. . . ஸி.எஸ். தேசியகவி சுப்பிரமணிய பாரதியைப் பார்! விஷயங்களெழுதி மகுடம் சூட்டிய (பெயரிட்ட)வுடன் தன்னையே மறந்து குதுகூலங்கொண்டு குதிக்கிறான்! அவனொரு வீரன் என்பதில் ஐயமில்லை!- ஆனால் சில சமயம் இளங்கன்றாய் விளங்குகின்றான்" என்றார்.[5]

"ரஸம் கெடாமல் தமிழில் மொழிபெயர்க்க உன்னைத் தவிர யாரால் முடியும்" என்று பாரதியாரிடம் ஸ்ரீ.க. கூறியதாகவும் வ.ரா. குறிப்பிட்டுள்ளார். தமது மொழிபெயர்ப்பு அனுபவத்தையும் பாரதியார் பின்வருமாறு வெளியிட்டுள்ளதாக வ.ரா. எழுதியுள்ளார்.

> இந்த மொழிபெயர்ப்பு வேலை எனக்கு எவ்வாறு ஒத்தாசை செய்தது தெரியுமா? இங்கிலீஷ் ரொம்ப நயமான பாஷையானதால் இங்கிலீஷின் கருத்து சிதைந்து போகாமல், தமிழர்களுக்கு அதை ஸ்வாரஸ்யமாகச் சொல்லும் பொருட்டு, நேரான தமிழ்ச் சொற்களை நான் கண்டுபிடிக்க வேண்டியதாயிற்று. தமிழ்ப்பாஷையின் கம்பீரமும், ரஸமும் அப்பொழுது எனக்கு இன்னும் தெளிவாய்த் தெரிந்தது.

சுதேசமித்திரனில் பாரதியார் முதற்கட்டமாகப் பணியாற்றியக் காலத்தில் அவர் பெற்றப் பத்திரிகைத் துறைப் பயிற்சியைத் தொகுத்துப் பார்ப்போம். தமிழ் செய்திப் பத்திரிகைகளில்

மொழிபெயர்ப்புகள் எவ்வாறு அமையவேண்டும் என்பதைப் பாரதியார் நன்கு கற்றறிந்தார். தேசிய - சர்வதேசிய அரசியல் தொடர்பான செய்திகளை, மாற்றுப் பத்திரிகைகள், செய்தி நிறுவனங்களின் தந்திகள், நூல்கள் மூலமாக விளக்கமாகப் புரிந்துக் கொள்ள வாய்ப்பு கிடைத்தது. பத்திரிகைத் துறையில் மேற்கொள்ள வேண்டிய அணுகுமுறைகள், பத்திரிகைத் துறையின் சக்தி வாய்ந்த பொதுமக்கள் தொடர்புச் சாதனத்தின் நுட்பங்கள் முதலானவற்றை நுணுக்கமாகத் தேர்ந்து தெளிய வாய்ப்பு கிட்டியது. பத்திரிகைத் தமிழைப் பற்றிய புரிதலோடு, பத்திரிகை ஆசிரியராவதற்கானத் தகுதியையும் பெறப்பயிற்சி யளித்தது. சுதேசமித்திரன் இதழியல் கோட்பாடுகள் எவ்வாறு உருவாக்கப் படுகின்றன; சூழலுக்கு ஏற்ப அவை எப்படி நடைமுறைப் படுத்தப்படுகின்றன என்பதையும் பாரதியார் தமது சுதேசமித்திரனின் முதற்காலப் பகுதியில் உள்வாங்கிக் கொண்டார்.

'சக்ரவர்த்தினி' ஆசிரியராக

சுதேசமித்திரனில் துணையாசிரியராக இருந்து கொண்டே 'சக்ரவர்த்தினி'யின் ஆசிரியர் பொறுப்பை ஏற்றுக்கொண்டார் பாரதியார். அவரை முதன்முதலில் இதழாசிரியராக அறிமுகப்படுத்தியது சக்ரவர்த்தினி. இந்த இதழின் உரிமையாளர் பி. வைத்தியநாதய்யர் எனும் புத்தக விற்பனையாளர். இதழின் அலுவலகம் திருவல்லிக்கேணி வீரராகவ முதலி தெரு எண் 100இல் இருந்தது. முதல் இதழ் 1905 ஆகஸ்ட்டில் வெளிவந்தது. 1906 ஆகஸ்டு வரையில் பாரதியார் ஆசிரியராகப் பணியாற்றினார்.

பாரதியாரின் தொடக்கக் கால இதழியல் கோட்பாடு சக்ரவர்த்தினியில் உருவெடுத்தது. இந்தக் கோட்பாடு பெண் கல்வியின் முக்கியத்துவத்தை உணர்த்தியதில் தொடங்கிற்று. அதன் முக்கியத்துவத்தை உணர்த்துவதற்காகப் பாரதியாரே பின்வரும் குறட்பாவை இயற்றி அதைத் தலையங்கத்தின் மேற்புறம் அச்சிட்டார்.

பெண்மை யறிவுயரும் பீடோங்கும் பெண்மைதான்
ஒண்மை யுறவோங்கு முலகு

இக்குறளின் முக்கியத்துவத்தைத் தாம் இறுதியாக ஆசிரியப்

பொறுப்பில் இருந்து விலகும் சமயத்தில் (1906 ஆகஸ்டு) பின்வருமாறு உணர்த்தியுள்ளார்.

> நமது பத்திரிகையின் முதற்பக்கத்திலே மாதந்தோறும் எழுதப்பட்டிருக்கும் குறளை நேயர்கள் கவனித்திருப் பார்களென்றே நம்புகிறோம்.
>
> *பெண்மை யறிவோங்கப் பீடுயுயரும்; பெண்மைதான்*
> *ஒண்மையுற வோங்கு முலகு*
>
> அறிவின் வளர்ச்சியினாலே பெண்மைக்குச் சிறப்புண்டாகும். பெண்மை பெருமையுடன் கலந்தவிடத்து அந்நாடு சிறப்படைவதாகும் என்பது பொருள். இதைத் தமிழ்நாட்டார் நன்கு மனங்கொண்டிருப்பதாகத் தோன்றவில்லை.

இதழ் குறித்த மகுட வாக்கியத்தில், "தமிழ்நாட்டு மாதர்களின் அபிவிருத்தியே நோக்கமாக வெளியிடப்படும் மாதந்தரப் பத்திரிகை" என்று தமிழிலும், "A TAMIL MONTHLY DEVOTED MAINLY TO THE ELEVATION OF INDIAN LADIES" என்று ஆங்கிலத்திலும் குறிப்பிடப்பட்டன.

முதல் இதழின் 'நமது பத்திரிகை' எனும் கட்டுரையில் பின்வரும் கருத்துக் கூறப்பெற்றுள்ளது.

> அஞ்ஞானப் பாலைவனத்தில் அறிவுநீர் காணாது வருந்தியலையும் நமது மாதர்களுக்குப் பெரிய ஏரி நீரளிக்க எம்மால் முடியாத தெனினும் நாம் தோண்டுகின்ற சிறுசுனை அனாவசிய மென்று யார் சொல்லத் துணிவார்கள்? அறிவின்மை யென்னும் பெருங்கடலில் தத்தளிக்கும் நமது பதினாயிரக் கணக்கான பெண்களைக் கரை சேர்ப்பதற்குச் சில பெருங்கப்பல்களிருந்த போதிலும் யாம் கொண்டுவரும் சிற்றோடம் அவசியமில்லை யென்று யாவரே கூறுவார்?

பெண்கள் முன்னேற்றத்திற்குரிய கடமையைச் செய்யத் தவறுபவர்கள் தேச விரோதிகள் என்றும், தேசாபிமானிகள் துணைநிற்க வேண்டும் என்று கூறிக் கட்டுரையை முடித்தார், பாரதியார்.

இவ்விதழில் கவிதைகள், கதைகள், நாடகங்கள் இவையனைத்தையும் விடக் கட்டுரைகளே மிகுந்திருந்தன.

சக்ரவர்த்தினி, மகளிர் இதழாக அறிவித்த போதிலும், மகளிர் சிலரே எழுதியுள்ளார். கோ. ஸ்வப்பனேசுவரி யம்மை, ஆர்.எஸ். சுப்புலட்சுமி அம்மாள், பண்டிதை அசலாம்பிகை அம்மையார் என அக்காலத்தில் புகழ்பூத்த மகளிர் எழுதியுள்ளனர்.

சக்ரவர்த்தினியின் இரண்டாம் ஆண்டுத் தொடக்கத்தைக் குறித்து எழுதப்பெற்ற "நமது பத்திரிகையின் அபிவிருத்தி எனும் தலையங்கக் கட்டுரையில் மகளிர் எழுத்துகள் இதழில் போதிய அளவு இடம்பெறாமல் இருந்ததைப் பின்வருமாறு வருத்தத்துடன் குறிப்பிட்டுள்ளார் பாரதியார்.

> தமிழ் நாட்டுப் பெண்மணிகளின் சீரையும் சிறப்பையும், அறிவு நலத்தையும் அபிவிருத்தி புரிவதே பெருநோக்கமாகக்கொண்ட இப்பத்திரிகை விஷயத்தில் மாதர்கள் நாம் விரும்பியபடி சிரத்தையெடுக்காமை பற்றி அவர்களிடம் நாம் குற்றம் கூற சுதந்திரம் பெற்றிருக்கின்றோம். நமது பத்திரிகையைப் படிக்கும் மாதர்களிலே பலர் இதற்குச் சிறிய உபநியாசங்கள், கதைகள், பாடல்கள், நாட்டு வர்த்தமானங்கள், சந்தேகங்கள் முதலியன எழுதியனுப்புவேண்டு மென்று வற்புறுத்திக் கேட்டுக்கொள்கிறோம். இதுவரை இப்பத்திரிகையிலே மாதர்களனுப்பிய விஷயங்கள் அதிகமாக இல்லாது போயினமை அதிருப்திக் கிடமாயிருக்கின்றது.[6]

சக்ரவத்தினியில் பாரதியாரின் இதழியல் கோட்பாடுகளை அவருடைய கட்டுரைகளில் இருந்து கட்டமைக்கலாம்.

பாரதியாரின் கட்டுரைகள் பின்வருவன: தாதாபாய் நவுரோஜி, வேல்ஸ் இளவரசரும் இளவரசியாரும், கோபால கிருஷ்ண கோகலே, பாரதகுமாரிகள் சென்னையில் ராஜதம்பதிகள் வரவு, சென்னையில் வேல்ஸ் இளவரசர் வந்த காலத்தில் நடந்த விசேஷங்கள், பவுத்த மார்க்கத்திலே மாதர்களின் நிலை, ஸ்ரீமத் ஸ்வாமி விவேகாநந்த பரமஹம்ஸர், ஸ்வாமி விவேகானந்தர், ஓர் பஞ்சாபி மாது, ஸ்பெயின் ராஜாவின் விவாக சமயத்திலே வெடிகுண்டு விபத்து, மாதர்களின் சுதந்திரங்கள், LOVE-காதல், நமது பத்திரிகையில் அபிவிருத்தி, ராஜாராம் மோஹனராயர், 1901-ம் வருஷத்து ஸென்ஸஸில் (CENSUS) மாதர் கல்வி கணக்கு.

'துளஸீபாயி என்ற ரஜபுத்திர கன்னிகையின் சரித்திரம்' எனும் சிறுகதையில் பாரதியாரின் இதழியல் கோட்பாடு வெளிப்பட்டுள்ளது.

அவருடைய கவிதைகள் ஒருசில வெளிவந்துள்ளன. இதழியல் கோட்பாட்டாய்விற்கு இவை தேவைப்படாது.

முற்கூறிய கட்டுரைகளில் சிலவற்றில் இதழியல் கோட்பாடுகள் எவ்வாறு வெளிப்பட்டுள்ளன என்பதைச் சுருக்கமாகப் பார்ப்போம்.

'பவுத்த மார்க்கத்திலே மாதர்களின் நிலை'

'எனது நாத்திக நண்பர்' என்றும், 'தென்னிந்தியாவின் அறிவுலக வாழ்க்கைக்கு (INTELLECTUAL LIFE OF SOUTHERN INDIA) தொண்டுகள் பல புரிந்தவர்' என்றும் பாரதியாரால் போற்றப் பெற்றவர் விஞ்ஞானப் பேராசிரியர் லட்சுமிநரசு (1860-1934). சென்னையில் நாத்திகம், பகுத்தறிவுவாதம், விஞ்ஞானநோக்கு, பௌத்த நெறி ஆகியவற்றை இணைத்துத் தீவிரப் பிரசாரம் செய்த முன்னோடிச் சிந்தனையாளர்களுள் ஒருவர், பேராசிரியர் லட்சுமிநரசு.

தமது கட்டுரைக்கு "சில முக்கியமான குறிப்புகள் ஸ்ரீ லஷ்மி நரசு நாயுடு அவர்கள் (PROFESSOR LAKSHMI NARASU OF THE MADRAS OF THE MADRAS CHRISTIAN COLLEGE) சமீபத்தில் ஒரு வாராந்தரப் பத்திரிகைக்கு எழுதியிருக்கும் உபந்நியாசத் தினின்று கிடைத்தன" என்று பாரதியார் குறிப்பிட்டுள்ளார். பாரதியார் குறிப்பிட்ட வாராந்தரப்பத்திரிகையின் பெயர் 'யதார்த்த பாஸ்கரன்' (ஆங்கிலம் தமிழ் இருமொழி இதழ்). இதில் பேராசிரியரின் 'THE ESSENCE OF BUDDHISM' எனும் கட்டுரை 1903-1904களில் தொடர்ச்சியாக வெளிவந்தது. இது 1911இல் தனி நூலாக வெளிவந்தது. பிற்காலத்தில் டாக்டர் அம்பேத்கர் அவர்களால் மறுபதிப்பாகவும் வெளியிடப்பெற்றது என்பதும் குறிப்பிடத்தக்கது.

தொடர் கட்டுரையில் வெளிவந்த 'WOMAN IN BUDDHISM' எனும் பகுதியைப் பாரதியார் தமது கட்டுரைக்குப் பயன்படுத்திக்கொண்டார்.[7]

பவுத்த மார்க்கத்தைக் குறித்துப் பேராசிரியர் கூறும் 'அபிப்பிராயங்கள் முழுதும் அங்கீகாரம் செய்துகொள்வதற்கு உரியன அல்லவென்பது மெய்யேயானாலும், புராதன பவுத்த. சரித்திர விஷயங்களிலே அவரது ஆராய்ச்சிகளைத் தழுவலாமென்பதில் திவலையேனும் சந்தேகமில்லை' என்று பாரதியார் குறிப்பிட்டுள்ளார்.

பெண்கள் முன்னேற்றத்திற்கான கருத்துகள் பௌத்த நெறியில் விளங்கியதைப் பாரதியார் தொகுத்தளித்துள்ளார்.

பெண் சுதந்திரம், பெண் கல்வி, குழந்தை மணம் இல்லாமை, "குருக்களேனும் சோதிடரேனும், தாய் தந்தையரேனும், விவாகத்தில் தலையிடுவதில்லை", "மனைவியின் சொத்தின் பேரில் கணவனுக்கு உரிமை கிடையாது", "விவாகக் கிரியையிலே டம்பமான வீண் அனுஷ்டானங்கள் அதிகமாக இல்லை", "ஞான சம்பாதனத்தில் பெண்களுக்கும் ஆண்களுக்கும் சிறிதேனும் வேற்றுமை பாராட்டுவது கிடையாது" முதலான பல சீரிய போதனைகள் 'பவுத்த மார்க்கத்தில்' உள்ளனவாகப் பாரதியார் இந்தக் கட்டுரையில் எடுத்துக் காட்டியுள்ளார். இவை யாவும் பாரதியார் கருத்துகளுக்கு இசைவானவையாகும்.

பாரத குமாரிகள்

பாரதியாரின் இதழியல் கோட்பாடுகளில் ஒன்றான விடுதலை இயக்கம் பெண் விடுதலை இயக்கத்துடன் இணைந்தே நிகழ்த்தப்பட வேண்டும் என்பது 'பாரதகுமாரிகள்' எனும் கட்டுரையில் நிறுவப்பெற்றுள்ளது. இந்தக் கட்டுரை, 1906 ஜனவரியில் வெளிவந்தது.

பாரததேவியின் 'ஆவித் துடிப்பை' பின்வருமாறு விளக்கியுள்ளார், பாரதியார்:

"மைத்ரேயியும், ஸீதையு மிகுந்த நாட்டிலே சூரிய கிரணம் பார்த்தறியாத புழுக்களைப் போன்று கல்வி அறிவு முதலிய யாதுமில்லாத பெண்கள் உலவுகிறார்கள். தலைமுறை தலைமுயையாக இப்பேதைப் பெண்கள், தோள்வலியும் ஆண்மையும் பெருந்தகையுமில்லாத அடிமைப் பிள்ளைகளைப் பெற்று என்னைப் பங்கப்படுத்துகிறார்கள். ஐயோ, ஐயோ! என்று பாரததேவி

ஆவி துடிப்பதினாலேதான் அவளது திவ்விய வதனத்தில் ஒளிமங்கி முதுமைக்குறிகள் தோன்றிவிட்டன."

மேற்கூறியவாறு 'பாரதாம்பிகை வருந்துதல் நீங்கற்குரிய உபாயம்' என்ன என்பதையும் ஒரு கோட்பாடாகப் பின்வருமாறு விளக்கியுள்ளார், பாரதியார்.

> இந்நாட்டு மாதர்கள் கல்வியும் ஞானப்பரப்பும் மிகப் பெற்றோங்கி அவர்கள் வயிற்றிலே பிறக்கும் மக்கள் நோய் நீங்கிய உடலும் இருள் நீங்கிய அறிவும் பெருந்தகைமையும் கருணையும் அடிமை நிலையில் வெறுப்பும் கொண்டு விளங்கத் தொடங்குவராயின் பாரதாம்பிகையின் மனத்துயர் ஆறத் தொடங்கும்.

விடுதலைப் போராட்டத்தில் பங்கேற்க 'அடிமைநிலையில் வெறுப்பு' கொள்ளத்தக்க மக்களைப் பெற்றெடுக்கவும் பெண் கல்வி உறுதுணையாக அமையவல்லது என்பதை வலியுறுத்தினார், பாரதியார்.

புறநானூற்று வீரத்தாய்மாரின் 'அழியாப்புகழ்' பற்றி இந்தியா இதழில் செப்டம்பர் 8, 1906இல், அதாவது சக்ரவர்த்தினியின் 'பாரத குமாரிகள்' கட்டுரை வெளிவந்த ஏழு மாதங்களுக்குப்பிறகு எழுதியதிலும், முற்கூறிய கருத்து ஒளிர்ந்தது.

குறள் வழியே

'பாரதகுமாரிகள்' கட்டுரையில், ''ஈன்ற பொழுதிற் பெரிதுவக்கும் தன்மகனைச் சான்றோன் எனக் கேட்ட தாய்'' எனும் குறட்பாவைக் கொண்டு வீரம்மிக்க மக்களைப் பெற்றெடுக்க உதவும் தாய்மையை விளக்கியுள்ளார், பாரதியார். இந்த விளக்கத்தில் குறிப்பிட்ட குறட்பாவிற்கு மறுதலையாகச் சில சொற்களை மாற்றி எதிர்மறை ஆய்வு மரபு வழி விளக்கமளித்துள்ளது குறிப்பிடத்தக்கது.

> *ஈன்ற பொழுதிற் பெரிதுவக்கும் தன்மகனைச்*
> *சான்றோனெனக் கேட்ட தாய்*

என்றார் வள்ளுவர். இது எத்தனை உண்மையோ அத்தனை இதன் எதிரிடையும் உண்மையாகும். புத்திரப்பேறு உண்டான

காலத்தில் மாதாவுக்குண்டான மகிழ்ச்சியைக் காட்டிலும் அப்புத்திரன் சான்றோனென்ற சொல்லைக் கேட்கும்போது அதிக மகிழ்ச்சி விளையுமாயின், மகன் சான்றோன் அல்லன் என்ற சொல் செவிப்படும் போது அத்தாய் மனம் அவன் இறக்கும்போது உண்டாகும் துயரத்திலும் அதிகத் துயரமடையு மல்லவா?" மாயும் பொழுதிற் பெரிதழுங்குந் தன்மகனைக் கீழோன் எனக் கேட்ட தாய்'' பாரதமாதாவும் இக்காரணத்தாலேயே துயரமடைந்து நிற்கின்றாள்."

'சான்றோன்' எனும் சொல், 'வீரன்' எனும் பொருளிலும் சங்க இலக்கியத்தில் வெளிவந்துள்ளது. புறநானூற்று 63ஆம் பாடலில் 'தேர்தர வந்த சான்றோர்' என்பதில் 'சான்றோர்' எனும் சொல் 'வீரர்' எனும் பொருளில் வந்துள்ளது. பதிற்றுப்பத்தில் 14ஆம் பாடலின் தலைப்பே 'சான்றோர் மெய்ம்மறை' என்பதாகும். (சான்றோர் மெய்ம்மறை வீரர்கட்டுக் கவசம்) குறட்பாவில் வரும் சான்றோன் என்பது 'கல்வி கேள்விகளால் நிறைந்தவன்' எனும் பொருளுடையது.

இதே கட்டுரையில் திருவள்ளுவர் குறிப்பிடும் 'செவியுணவு' என்பதற்கு, 'ஞானவுணவு' என்று பொருள் கூறி அதை அளிப்போர் மகளிர் ஆவர் என்பதைப் பின்வருமாறு விளக்கியுள்ளார்.

> உணவு கொடுப்பதென்றால் வயிற்றுக்கு மட்டிலுமில்லை. வள்ளுவரால் 'செவியுணவு' என்று கூறப்படும் ஞானவுணவிருக்கின்றதே, அதனை அளிப்போரும் மாதர்களே யாவர்.

இவ்வாறு கூறிவிட்டு 'பாரதகுமாரி'களுக்குப் பின்வரும் வேண்டுகோளையும் விடுத்தார், பாரதியார்.

''பாரதகுமாரிகளே! இந்நாட்டிற்கு ஞானவுணவும் தோள்வலியும், மனத்திடனும் கொடுத்து இதனைக் கைதூக்கி விடுவது உமது பெருங்கடமையாகும். நீங்கள் என்று வரை அலங்காரப் பொம்மைகளாக நிற்பீர்களோ, அதுவரை யெமக்கெல்லாம் ஓர் சக்தியும் கிடையாது."

மாதர்களின் சுதந்திரங்கள்

1906 ஜூன் மாத இதழில் வெளிவந்த 'மாதர்களின் சுதந்திரங்கள்' எனும் கட்டுரையிலும் 'சக்ரவர்த்தினி'யின் பெண்ணியம் தொடர்பான கோட்பாடு விளக்கமுற்றுள்ளது.

பாரதியார் தமது புதுச்சேரி வாழ்க்கைக் காலத்தில் சுதேச மித்திரனில் 'பெண் விடுதலை' குறித்து எழுதியக் கட்டுரைகளில் ஒலித்த 'போர்க்குர'லும், 'கனல் மணக்கும்' கருத்துகளும் சக்ரவர்த்தினியில் இந்தக் கட்டுரையில் வெளிப்படவில்லை யென்றாலும் அடிப்படை உரிமைகள் எடுத்துரைக்கப் பெற்றுள்ளன. இக்கட்டுரையில் அவரே பின்வருமாறு குறிப்பிட்டுள்ளது அக்கால அவருடைய கருத்து வளர்ச்சியின் படிநிலையைக் காட்டுகின்றது.

"நான் இங்கே இந்தியாவிலேயே இப்போது ஆசாரத் திருத்தக் காரர்களென்றும் ஆசாரத் திருத்த விரோதிகளென்றும் தம்மைச் சொல்லிக்கொள்ளும் இரண்டு பகுதியாருடனும் சண்டையிட்டுக் கொள்ளாமல், மாதர்களின் உண்மை நிலையையும் அவர்களுக்கு இயற்கையாகவுள்ள உரிமைகளையும்பற்றி மட்டிலும் குறிப்பிடுகிறேன்."

'தாய் உரிமை', 'மனைவி உரிமை', 'ராஜாங்க சம்பந்தமான சுதந்திரங்கள்' என வகைப்படுத்திக் கொண்டு, பாரதியார் மேலும் சில விளக்கங்களுடன் இக்கட்டுரையை எழுதியுள்ளார்.

'ராஜாங்க சம்பந்தமான சுதந்திரங்கள்' தொடர்பாகக் கூறப்பெற்றுள்ள பாரதியாரின் பின்வரும் கருத்துகள் அவருடைய பெண்ணியச் சிந்தனைகளின் பரிணாம வளர்ச்சியின் 'சக்ரவர்த்தியின்' கால கட்டத்தைக் குறிப்பனவாகும்.

"ராஜாங்க சுதந்திரங்கள் ஸ்தீரிகளுக்கு வெகு முக்கியமானவை யல்ல. அநாகரிக மனிதர்கள் அவர்களை இழிவாக நடத்தாமல் பாதுகாத்துக்கொள்வது அவர்களுக்கு இப்போது முக்கியமாக வேண்டியது." இவ்வாறு கூறப்பட்டதற்கான ஒரு காரணத்தை அவருடைய பின்வரும் கருத்தில் அறிகின்றோம்.

'ராஜாங்க சுதந்திரங்கள்' கோருவதற்குப் பெண்களுக்கு மூன்று விதமான உபாயங்கள் இருக்கின்றன என்பதைப் பற்றி அவரே பின்வருமாறு கூறியுள்ளார்.

> 'முதலாவது உபாயம் கல்வி - இரண்டாவது உபாயம் கல்வி. மூன்றாவது உபாயமும் கல்வியே. அதாவது கல்வியைத் தவிர வேறெல்லாவிதமான உபாயமும் சிறிதேனும் பயன்படாதென்பது கருத்து.'

கல்வியை மையப்படுத்திப் பெண்கள் முன்னேற்றம் காணவேண்டும் என்பது 'சக்ரவர்த்தினி'யின் இதழியல் கோட்பாடுகளில் முதன்மை பெற்றிருந்தது.

'ஓர் பஞ்சாபி மாது'

1905 அக்டோபர் மாத இதழில் 'ஓர் பஞ்சாபி மாது' எனும் பாரதியார் கட்டுரை வெளிவந்தது.

பாரதியார் பிற்காலத்தில் கவிதையில் படைத்த 'புதுமைப் பெண்'ணுக்குரிய இலட்சியப் பண்புகளின் மூல வித்துகளை இக்கட்டுரையில் காண்கின்றோம்.

பஞ்சாபி மாது பெண்ணுரிமை இயக்கத்தின் மிகச் சிறந்தப் பிரதிநிதியாகச் சித்தரிக்கப்பட்டுள்ளார். இது ஒரு கற்பனை படைப்பன்று என்று பாரதியார் குறிப்பிட்டுள்ளார். வைத்தியம் பரீட்சை தேறிச் சென்னைக்கு வந்த பெரியதோர் கவர்ன்மெண்ட் அதிகாரி'யின் இளம் மனைவி அவள் என்று பாரதியார் குறிப்பிட்டுள்ளார்.

பஞ்சாப் தேசத்தார் ஒருவரின் மனைவி அறிவாற்றலும் தேசபக்தியும் நிறைந்து பாரதம் பண்பாட்டின் விளக்கமாகத் திகழ்வதை உரையாடல் பாணியில் விரிவாக எழுதிவிட்டு 'முடிவுரை'யில் பின்வருமாறு பாரதியார் கூறியிருப்பது இதழியல் கோட்பாடாகவும் திகழ்கின்றது.

> இது போல இப்பெண்மணியின் சம்பாஷணைகள் பலவற்றைப் பெயர்த்தெழுத வேண்டுமென்ற நோக்கம் நமக்குண்டு. ஆயினும் இட முதலிய சவுகரியங்களின்மை பற்றி அங்ஙனம் செய்ய முடியவில்லை. எனினும் நாம் எழுதிவந்த மட்டில் இம்மாதிரி அரிய கல்வியும் அறிவும் குண விசேஷமும் இந்நாட்டார் மனதில் நன்கு பதிந்திருக்குமென்று நம்புகின்றோம். இத்தகைமை கொண்ட மாதர்கள் பலர் தமிழ்நாட்டில் பெருக வேண்டுமென்ற நமது மனப்பூர்வமான விருப்பத்தில் ஒவ்வொரு தேசாபிமானியும் கலப்பனென்று நம்புகிறோம்.

'துளஸீபாயி என்ற ரஜபுத்திர கன்னிகையின் சரித்திரம்'

'சக்ரவத்தினி'யில் ஐந்து மாதங்கள் தொடர்ந்து வந்த இந்த நெடுங்கதையைப் பாரதியார் 'சிறுகதை' என்று குறிப்பிட்டுள்ளார். இந்தச் சிறுகதை நவம்பர் 1905, ஜனவரி 1906, பிப்ரவரி 1906, ஜூன் 1906, ஜூலை 1906 ஆகிய ஐந்து மாதங்களில் வெளிவந்தது.[9] 'ஷெல்லிதாஸ்' என்ற பாரதியாரின் புனைபெயரிலே வெளிவந்த ஒரே ஒரு வெளியீடு இதுவன்றோ.

இந்தச் 'சிறுகதை'யில் 'சக்ரவர்த்தினி'யின் இதழியல் கோட்பாடாக இந்து - இஸ்லாமியர் ஒற்றுமை வலியுறுத்தப் பெற்றுள்ளது.

துளஸீபாயி என்னும் ராஜபுத்திர கன்னிகை, அக்பர் சக்ரவர்த்தியின் படைத்தலைவன் அப்ஸல்கான் இருவரிடையே மலர்ந்த காதல் இந்து இஸ்லாமிய ஒற்றுமைக்கு வழிவகுத்தது என்பதைப் பாரதியார் சித்தரித்துள்ளார்.

பாரதியார் கதை முடிவில் பின்வருமாறு விளக்கியுள்ளார்.

"இந்தச் சிறுகதையைப் படிப்போர்களுக்கு இது சிறிது ஆச்சரியமாகத் தோன்றக்கூடும். பரம்பரையாக மகமதிய துவேஷிகளான மஹாவீரர்களின் குலத்திலே ஜனித்த துளஸீ தேவிக்கு அவளது ரத்தத்திலேயே மகமதிய வெறுப்பு கலந்திருந்தது. உறக்கத்திலேகூட மகமதியனொருவனைக் கொலைபுரிவதாகக் கனவுகாணக்கூடிய ஜாதியிலே பிறந்த இந்த வீரகன்னிகை மகமதியனை விவாகம்செய்து கொள்ளலாமென்று நிச்சயிப்பது அசம்பாவிதமென்று நினைக்கக்கூடும். ஆனால், அப்படி நினைப்பவர்கள் காதலின் இயற்கையை அறியாதவர்கள்.

காதல் குலப் பகைமையை அறியமாட்டாது. காதல் மத விரோதிகளை அறிய மாட்டாது. காதல் ஜாதிபேதத்தை மறந்து விடும். காம தெய்வத்தின் உபாஸகர்கள் 'அத்வைதி'களேயல்லாமல் 'துவைதீ'களல்ல. தன்னை ஒருமுறை கொள்ளைக் காரர்களிடமிருந்தும் மற்றொருமுறை கொலைக் காரர்களிடமிருந்தும் காப்பாற்றி அதற்கப்பாலும் கூட தன்னைப் பலவந்தமாக அபஹரித்துக் கொள்ள வேண்டுமென்ற நோக்கம் சிறிதேனுமற்று விளங்குபவனாகிய மகமதிய குமாரனது வாலிபத்தையும் வீரத்தன்மையையும் லாவணியத்தையும் பெருந்தன்மையையும் நினைக்க நினைக்க அவளது மனம் உருகிப்போய்விட்டது.

ஜாதியாசாரம், மததுவேஷம் என்பவை யெல்லாம் அழிந்து போய்விட்டன.

விவாதக் கட்டுரைகள்

சக்ரவர்த்தினியின் பெண் வாசகர்கள் விவாதக் கட்டுரைகள் வாயிலாக மாறுபட்ட இரு விவாதங்களைப் புரிந்துகொண்டு சுயமாகவே 'நியாயத்தைக் கண்டுபிடிக்கும் வழக்கத்தில் பயிற்சி' பெற இரு விவாதக் கட்டுரைகளை வெளியிட்டார்.[10] முதல் இதழில் ஆசிரியரின் பின்வரும் சிறு அறிக்கை வெளியிடப் பெற்றுள்ளது.

> மாதந்தோறும் நமது பத்திரிகையில் பெண்களுக்கினிய ஏதேனுமோர் விஷயம் பற்றி மாறுபட்ட அபிப்ராயங் கொண்ட இருவர்களால் ஒவ்வொரு வியாசம் எழுதப்படும். ஒரே விஷயத்தைப் பற்றி ஜனங்கள் எத்தனை மாறுபாடான அபிப்பிராயம் வைத்துக் கொண்டிருத்தல் சாத்தியமென்பதை எடுத்துவிளக்கும் பொருட்டும் ஒரு விவாதத்தின் இரு கட்சிகளையும் கேட்டு நியாயத்தைக் கண்டுபிடிக்கும் வழக்கம் நமது மாதர்களுக்குள்ளே பலப்படும் பொருட்டும் இம்முறை அனுசரிக்கப்படுகின்றது.

முதல் விவாதத்தை முதல் இதழிலேயே இடம் பெறவைத்தார். விவாதத்திற்குரிய பொருள் ஆங்கிலக் கல்வியைப் பற்றியது.

"நமது மாதர்களுக்கு இங்கிலீஷ் கற்பித்தல் அவசியந்தானா?" என்று விவாதத்திற்குத் தலைப்பு தரப்பட்டது. 'ஆம்' என்று என். ராகவாசாரி, பி.ஏ. என்பவரின் கட்டுரையும், 'இல்லை' என்று சென்னை தமிழ்ப் பண்டிதர் தி. வெங்கட்ராம ஐயங்காரின் கட்டுரையும் வெளியிடப்பெற்றன.

இதழாசிரியர் தமது முடிவைக் கூறாமல் படிப்போரிடமே விட்டுவிட்டார். ஏன் எனில் பெண்வாசகர்ளிடையே 'நியாயத்தை கண்டுபிடிக்கும் பயிற்சியை' ஏற்படுத்தவேயாகும்.

இரண்டாவது விவாதக் கட்டுரையின் தலைப்பு "பெண்கள் அறிவுத்திறமையிலே புருடரிலும் குறைந்தவர்களா?" என்பதாகும்.

இந்த விவாதம் 1905 நவம்பர் இதழில் வெளியிடப்பெற்றது. 'ஆம்' என்னும் வாதத்தை என். ராகவாசாரியார், பி.ஏ., வும், 'இல்லை' எனும் வாதத்தை எஸ்.எஸ். பாரதி பி.ஏ.வும் முன்வைத்தனர். இங்கு எஸ்.எஸ். பாரதி' என்று குறிப்பிடப்பெற்றது, பாரதியாரின் நண்பர் சோமசுந்தர பாரதியார் ஆவார்.

அரசியல் சார்பான கருத்தியல்கள்

'சக்ரவர்த்தினி'யில் அரசியல் சார்பான கருத்தியல்கள் ஒரு சிலவே கூறப்பெற்றுள்ளன. 1905இல் வங்கத்தில் ஊற்றெடுத்துப் பெருக்கெடுத்தோடிய வந்தேமாதர, சுதேசிய இயக்க அரசியல் கருத்தியல்களை ஏற்றுக்கொண்டவர், பாரதியார். 'வந்தேமாதரம்' முழக்கத்தை ஏற்றிப் போற்றி இயற்றப்பெற்ற கவிதையை 'சக்ரவர்த்தினி'யில் 1906 பிப்ரவரியில் வெளியிட்டார்.

'வங்கமே வாழிய' என்னும் பாடல் (சுதேசமித்திரன் 15-10-1905) மூலம் வங்கத்தில் தோன்றிப் பரவிய சுதேசிய இயக்கத்தைப் பாடிப் பரவிய பாரதியார் 'சுதேசிய ஏலப்பாட்'டை சக்ரவர்த்தினியில் பின்வரும் குறிப்புடன் மறுவெளியீடு செய்தார்:

> தற்காலத்தில் இந்நாடு முழுவதும் பரவி வருவதாகிய சுதேசிய ஊக்கத்தின் சம்பந்தமாக, 'சிங்கைநேசன்' என்பவர் 'சுதேசமித்திரன்' பத்திரிகைக்கு எழுதியனுப்பியிருக்கும் பின்வரும் ஏலப்பாட்டை மாதர்கள் அன்புடன் படிப்பார்களென நம்புகின்றோம்"

பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத்தின் வேல்ஸ் இளவரசரும் இளவரசியும் ஜனவரி மாதம் 24ஆம் தேதி சென்னை வந்தனர். சுதேசமித்திரன் இதழியல் கோட்பாட்டிற்கு இணங்க துணையாசிரியரான பாரதியார், "வேல்ஸ் இளவரசருக்குப் பரத கண்டத் தாய் நல்வரவு கூறுதல்" எனும் தமது கவிதையை, ''பாரதமாதா தானே பணித்தன்று'' எனும் குறிப்புடன் சுதேசமித்திரனில் வெளியிட்டார். சக்ரவர்த்தியில் ஜனவரி 1906ஆம் இதழில் வேல்ஸ் இளவரசரை வரவேற்றுப் புனைந்த தமது பாடலுடன், தமிழ்ப் பேரறிஞர் பூவை கலியாண சுந்தர முதலியார், பண்டிதை அசலாம்பிகை அம்மையார் பாடல்களையும் வெளியிட்டார், பாரதியார். "சென்னையில் ராஜ தம்பதிகள் வரவு", 'சென்னையில் வேல்ஸ் இளவரசர் வந்து பாரதியார் எழுதி

வெளியிட்டுள்ளார். இதற்கு முன் நவம்பர் 1905ஆம் இதழில் "வேல்ஸ் இளவரசரும், இளவரசியும் எனும் தலைப்பில் ஒரு கட்டுரை வெளிவந்தது. வேல்ஸ் இளவரசர் வருகையை வரவேற்று பாரதியார் பாப்புனையலாமா? எனும் விமர்சனமும் உள்ளது.

'சக்ரவர்த்தினி'யில் 1906 மே மாதத்தில் வெளிவந்த பாரதியாரின் 'ஸ்பெயின் ராஜாவின் விவாக சமயத்திலே வெடிகுண்டு விபத்து' எனும் கட்டுரை ஐரோப்பாவில் தோன்றிய 'அனார்க்கிஸம்' (ANARCHISM) பற்றிய சிறு விமர்சனத்தைக் கொண்டுள்ளது. அரசியல் மற்றும் சமுதாய விடுதலை அடைய அரசு அதிகாரத்தைக் களைந்து எறிய விழையும் அரசியல் தீவிரவாதக் கொள்கை 'அனார்க்சிஸம்' என்றழைக்கப்பட்டது. பத்தொன்பதாம் நூற்றாண்டில் பிரான்ஸ், இத்தாலி, ஸ்பெயின் நாடுகளில் 'அனார்க்கிஸம்' பரவியிருந்தது.

இந்தக் கட்டுரையில் பெண் வாசகர்கள் விளங்கிக் கொள்ளத்தக்க வகையில் சில விளக்கங்களை எழுதியுள்ளார், பாரதியார். வெடிகுண்டு பற்றிய விளக்கம் வருமாறு: "வெடிகுண்டு (BOMB) என்பது உருக்கால் செய்யப்பட்டு உள்ளே பலமான வெடிமருந்தும் சிறு சிறு இரும்புத் துண்டுகளும் உடையதாயிருக்கும். அது ஒரு சாமானில் மோதினவுடனே வெடித்துப் போய் அருகிலே நூற்றுக்கணக்கான ஜனங்களிலிருந்த போதிலும் ஒரு க்ஷணத்திலே கொன்றுவிடும்."

'அனார்க்கிஸ்ட்' பற்றிய ஒரு விளக்கம், வருமாறு:

> 'அனார்க்கிஸ்ட்' என்றால் 'ஸர்வாதிகார விரோதி' என்பது பொருள். "உலகத்தில் ராஜாக்கள், பிரபுக்கள், அதிகாரிகள் முதலிய யாருமே இருக்கக்கூடாது; சர்வ ஜனங்களும் சமமாக இருந்து தேசங்களனைத்திலும் ஜனங்கள் தம்மைத் தாமேயே ஆண்டு கொள்ளவேண்டு'' மென்னும் கொள்கையை இக்கூட்டத்தார் வைத்திருக்கிறார்கள். இவர்கள் இரகசியமாகப் பற்பல இடங்களில் கூடி க்ஷண நேரத்தில் எத்தனையோ ஜனங்களை அழிக்கக்கூடிய 'வெடிகுண்டுகள்' தயார் செய்து உலகத்திலுள்ள ராஜாக்கள், சக்ரவர்த்திகள், மாகாணத் தலைவர்கள்

முதலிய அதிகாரிகளை நாசம் செய்ய முயற்சிபண்ணி வருகிறார்கள். அமெரிக்கா, இடாலி, ருஷிய - என்ற தேசங்களிலும் இவர்கள் சில ராஜாக்களை இதற்கு முன் வதை புரிந்திருக்கிறார்கள்.

கார்ல் மார்க்சும், ஏங்கல்சும் அனார்க்கிஸத்தை, தொழிலாளர் புரட்சி இயக்கத்திற்கு எதிரானது என்று கண்டனம் செய்துள்ளனர் என்பதும் குறிப்பிடத்தக்கது.

'ராஜபுத்திர சௌகரியங்கள்' (DIPLOMATIC ENDS) என்றால் என்ன? இப்போது அதையெல்லாம் விஸ்தரித்துக் கொண்டிருந்தால் சொல்ல வந்த சமாசாரம் சீக்கிரத்தில் முடியமாட்டாது. உங்கள் சகோதரர்களையேனும், கணவர்களை யேனும் அரித்தம் தெரிவிக்கும்படி வற்புறுத்துவீர்களாக" எனும் குறிப்பையும் தந்துள்ளளார், பாரதியார்.

தனிநபர் பயங்கர வாதத்தையோ, வன்முறை அரசியலையோ பாரதியார் ஆதரிக்கவில்லை என்பது சக்ரவர்த்தனி இதழியல் கோட்பாடாகத் தெளிவாகியுள்ளது.

'அனார்க்சிஸம்' தோன்றுவதற்கான அடிப்படைக் காரணத்தையும் பாரதியார் பின்வருமாறு குறிப்பிட்டுள்ளார்.

"இவர்கள் கருணையற்ற காட்டுமிருகங்களைப் போன்று செய்கைகள் செய்வதற்கு முக்கியமான முகாந்திரங்கள் இருக்குமென்பதில் ஆஷேபமில்லை. ஒரு மனிதன் அனாவசியமான செல்வத்திலே முங்கிப்போய் அக்கிரமங்களையே நாடி எத்தனையோ பேருக்குத் துன்பம் விளைவித்துக் கொண்டிருக்க, மற்றொரு மனிதன் நல்ல புத்திசாலியாக இருந்தபோதிலும் தனது ஆசை மனைவிக்கும், மக்களுக்கும் சோறு கொண்டு தரக்கூட வழியற்றவனாய், எல்லோராலும் இகழப்பட்டு வருவதை நாம் அடிக்கடி காண்கிறோம். இது நமது மனதிலெல்லாம் மிகுந்த துக்கத்தைக் கொடுக்கிறது. ஆனால் இதே விஷயத்தால் ஐரோப்பாவில் பல மனிதர்களின் நெஞ்சிலே பொறாமையும் ஆக்கிரகமுமுண்டாய், அனர்வசியமான செல்வம் பெற்று அக்கிரமபோகங்கள் அனுபவிக்கும் கூட்டத்தாரையே வேரறுத்துவிட வேண்டுமென்று அவர்கள் நிச்சயித்து - அனார்க்கிஸ்ட் கூட்டத்தைச் சேர்த்து விடுகிறார்கள்.

இவர்களுடைய நினைப்பு ஒருவேளை நியாயமாயிருந்த போதிலும் இவர்களது செய்கை மாதிரி மிகவும் மிருகத்தனமானமென்பதில் தடையில்லை"[12]

கட்டுரையின் இறுதியில், "இவர்களுடைய மனக்குறையை நீக்கிக் கொள்ளத் தகுதியான மார்க்கம் யாதென்பதைப் பற்றி இன்னொரு முறை எழுதுகிறேன்" என்று முடித்துள்ளார்.

அந்தத் தகுதியான மார்க்கம் எது என்பது எழுதப்படாமலேயே போய்விட்டது. இந்தக் கட்டுரை வெளிவந்த மூன்று மாதங்களுக்குப்பிறகு, பாரதியார் 'சக்ரவர்த்தினி' ஆசிரியராக நீடிக்கவில்லை.

1906 டிசம்பரில் கல்கத்தாவில் சகோதரி நிவேதிதாதேவியைச் சந்திப்பதற்கு முன்பே 1905 ஆகஸ்டிலேயே 'சக்ரவர்த்தினி'யில் பாரதியார் பெண் கல்வி, பெண் முன்னேற்றம் பற்றியச் சிந்தனைகளை வெளிப்படுத்தியுள்ளார் என்பது கவனத்திற்குரியது.

இந்தியாவின் இதழியல் கோட்பாடுகள்

பாரதியார் 'இந்தியா' வார இதழின் ஆசிரியராகவிருந்து அதன் இதழியல் கோட்பாடுகளை உருவாக்குவதில் பூரண சுதந்திரம் பெற்றிருந்தார். 'இந்தியா' இதழின் உரிமையாளர்கள் தேசிய அரசியல் நோக்கும் போக்கும் பாரதியாருக்கு ஒத்திசைவாக இருந்ததோடு ஊக்கமளித்தும் வந்தது.

சென்னை நகரகத்தில் மண்டயம் குடும்பத்தினர் என்று அழைக்கப்பெற்றவர்களும் எஸ்.என். திருமலாச்சாரியார், எம்.பி.டி. ஆசார்யா, எஸ். சீனிவாசசாரியார் தேசிய அரசியலில் திலகர் வழியைப் பின்பற்றியவர்கள். பாரதியார் திலகர் வழியில் பீடுநடை போட்டவர். செல்வமும் செல்வாக்கும் பெற்ற இந்த மண்டயம் குடும்பத்தினர், இந்தியா, விஜயா, பாலபாரதி, பாலபாரதா முதலான இதழ்களைத் தொடங்கி நடத்தியவர்கள். இவ்விதழ்களின் ஆசிரியராகப் பணியாற்றியவர் மகாகவி பாரதியார். முற்குறிப்பிட்ட நான்கு இதழ்களில் முதல் இரு இதழ்கள் தமிழ் இதழ்கள், பன்னிரு இதழ்கள் ஆங்கில இதழ்கள். இவை பிரிட்டிஷ் இந்தியாவில் சென்னையிலும், பிரெஞ்சு இந்தியாவில் புதுச்சேரியிலும் வெளிவந்தன.

'இந்தியா' இதழின் தோற்றம்

எஸ்.என். திருமலாச்சாரியாரை உரிமையாளராகக் கொண்டு சென்னை நகரத்தில் 'இந்தியா' வார இதழாக மே, 9-1906இல் தோன்றியது. இந்த இதழ் தோன்றிச் சில மாதங்கள் கழிய பாரதியார் 1906 செப்டம்பரில் பெயர் போடாத ஆசிரியராக நியமிக்கப்பெற்றார். அக்காலத்தில் அவர் சுதேசமித்திரனிலும், சக்ரவர்த்தினியிலும் பணியாற்றிக்கொண்டிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

'இந்தியா' தொடங்கப்பெற்றபொழுதே பாரதியார் அதில் எழுதினார் என்று மண்டயம் எஸ். சீனிவாசசாரியார் பின்வருமாறு குறிப்பிட்டுள்ளார்.

"சென்னையில் இப்பத்திரிகை வெளிவர ஆரம்பித்தபோதே அதற்குத் தலையங்கங்களைப் பாரதியார் எழுதி வந்தார்."[13]

முதல் இதழ்

'இந்தியா' வார இதழின் முதல்பக்கம் மட்டுமே அதுவும் சிதைந்த நிலையில் கிடைத்துள்ளது. இதன் முழுவிபரம் முதன்முறையாக இக்கட்டுரையாளரின் 'பத்திரிகையாளர் பாரதியார்' எனும் நூலில் (1989) வழங்கப்பெற்றது.

'இந்தியா' என்று தமிழிலும், இதன்கீழ் ஆங்கிலத்தில் 'INDIA' என்றும் எவ்வித எழுத்தலங்காரம் இல்லாமல் அச்சிடப் பெற்றுள்ளது. "புதன்கிழமை தோறும் வெளியாகும்" என்றும் குறிப்பிடப்பெற்றுள்ளது. வேறு எவ்வித இலட்சிய முழக்க முகப்பு வாசகங்கள் அச்சிடப்பெறவில்லை.

இடது பக்கத்தில் விளம்பர விகிதம் அச்சிடப்பெற்றுள்ளது. இதற்குக் கீழ்ப் பகுதியில் "பராபவ வருஷம் சித்திரை மாதம் 27-மே மாதம் 9, 1906-இ-1", என்று அச்சாகியுள்ளது. மேலே வருஷம், மாதம், தேதி என்பன அக்கால குறியீடுகளில் அச்சாகியுள்ளன.

முதல் பக்கம் மூன்று பத்திகளாகப் பிரிக்கப்பட்டுள்ளது. முதல் பத்தியில் (COLUMN), 'EDITORIAL' என ஆங்கிலத்தில் மட்டும் குறிப்பிடப்பெற்றுள்ளது. இதைத் தொடர்ந்து 1) 'ஒரு யானையும் யானைக் கூட்டமும்' - சுதேசிய பெருமுயற்சி நிவேதிதாதேவி எழுதியிருக்கிறார். 2) ஸர். புல்லர், 3) திட்டச்

சொல்லிக் கொடுத்தல், 4) பிரிட்டிஷாரும் துருக்கி தேசமும் என்பன செய்தித் தலைப்புகளாகத் தரப்பட்டுள்ளன.

"யானையும் யானைக் கூட்டமும்" என்னும் தலைப்பில் சிதைவுற்றது போக எஞ்சியிருப்பது வருமாறு:

"தனியாக இருக்கும் போது யானையை எளிதாக வென்று விடலாம். ஆனால் யானைக் கூட்டத்தை எவன் வெல்லத் துணிவான்" என்பதாக நாம் மற்றோரிடத்தில் பதிப்பித்திருக்கும் 'சுதேசிய பெருமுயற்சி' என்ற உபந்நியாசத்தில் நிவேதிதாதேவி எழுதியிருக்கிறார்."

மேலே குறிப்பிடப்பெற்றுள்ள 'சுதேசிய பெருமுயற்சி' எனும் கட்டுரை 1906 மார்ச் மாத 'இந்தியன் ரெவ்யூ' எனும் ஆங்கில இதழில் 'THE SWADESHI MOVEMENT' எனும் தலைப்பில் வெளிவந்தது. இக்கட்டுரையின் முதல் பத்தியில் வெளிவந்த பின்வரும் வரிகள் "யானையும் யானைக் கூட்டமும்" என்று 'இந்தியா'வின் முதல் இதழில் வெளிவந்தது.

> **We conquer a single elephant with ease. But where is the man who would attack a herd?**

> *நிவேதிதையின் கட்டுரை முழுவதும் 'இந்தியா'வில் வெளியிடப் பெற்றுள்ளது என்று ஆசிரியர் குறிப்பில் கூறப் பெற்றுள்ளது. ஆனால் அப்பகுதி கிடைக்க வில்லை.*

"சுதேசிய இயக்கத்தில் ஆண்மையும் சுய உதவியும் நெடுக எதிரொலிக்கின்றது. உதவி கோலி கையேந்துவதோ சலுகைகளுக்காகப் புலம்புவதோ இல்லை" என்றும் கட்டுரையின் ஆங்கில வரிகள் குறிப்பிட்டுள்ளன.

> சுதேசி இயக்கப் பிரசுரமும் இதழின் கருத்தியல் கோட்பாடுகளில் ஒன்றாகும் என்பதை மேலே கூறப்பெற்றுள்ள கருத்துகள் சுட்டிக்காட்டுகின்றன.

'இந்தியா'வின் முதல் இதழிலேயே சகோதரி நிவேதிதையின் தாக்கம் தொடங்கியதை அறிகின்றோம். இந்தியாவில் தேசியம், தேசிய இன வுணர்வு தேசியக் கோட்பாடுகளைப் பற்றியச் சிந்தனைகளை

நிவேதிதை கட்டுரைகள், கவிதைகளில் வெளிப்படுத்தியுள்ளார் (விவரமறிய பார்க்கவும் : பாரதியியல் ஆய்வுக்கட்டுரைகள் - பாகம் ஒன்று - 2001 - பெ.சு. மணி, பக்.214-219).

இரண்டாம் பத்தியின் தொடக்கத்தில் உள்ள வரிகள் வருமாறு:

"பொதுநலத்தைக் கருதி ஒரு தேசத்தின் பெரும்பான்மையான ஜனங்கள் ஒரே மனதுடன் உழைக்க நிச்சயத்து விடுவார்களானால் அவர்களுக்கு பலம் ஏற்பட்டுவிடுகிறது. அவர்களை எதிர்க்க தேவர்களாலும் முடியாது".

'திட்டச் சொல்லிக் கூலிகொடுத்தல் என்னும் துணைத் தலைப்பில் உள்ள வரிகள் சிதைந்தனபோக எஞ்சியவை பின்வருவன.

"... அதாவது இத்தேசத்திலே ஐரோப்பியர்களால் நடத்தப் படும் பத்திரிகைகளை நம்மவர்கள் போஷணை செய்யக்கூடாதென்ற நல்லுணர்ச்சியாகும். . . . முக்கியத் தலைவர்களையெல்லாம் ராஜத்துரோகி யென்றும் கலகப் பிரியர்களென்றும் நிந்தனை புரிவதுமே தொழிலாக உடைய அந்நியப் பத்திரிகைகளை இத்தேச ஜனங்களே போஷணை செய்வதென்றால் இதைக் காட்டிலும் மூடத்தன்மையான விஷயம் வேறென்ன இருக்கிறது."

இரு முக்கிய கருத்தியல்கள் முதல் இதழிலேயே வலியுறுத்தப் பெற்றுள்ளன. முதலாவது தேசிய ஒற்றுமையை உணர்த்தி இந்தியர்களை ஒன்றுதிரளச் செய்ய வேண்டும். இரண்டாவது, தேசபக்தர்களைப் பழிசாற்றும், அந்நியர் நடத்தும் பத்திரிகைகளை பகிஷ்காரம் செய்யவேண்டும்'

1906 டிசம்பரில் கல்கத்தாவில் சகோதரி நிவேதிதா தேவியைப் பாரதியார் சந்தித்தற்கு எட்டு மாதங்களுக்கு

'இந்தியா'வில் பாரதியார்

'இந்தியா' இதழில் பாரதியார் பெயர் ஆசிரியராக அச்சிடப் படவில்லை யென்றாலும், நடைமுறையில் அவர் ஆசிரியராக இருந்தார் என்பதற்குப் புறச் சான்றுகள் பல உள்ளன. மதுரை

விவேகபானு இதழில் நவம்பர் 24, 1906இல் வெளியிடப்பெற்றது. இதில் "இதனை நடத்துபவர் சுதேசமித்திரன் உதவி பத்திராதிபராயிருந்த கனம் ஸி. சுப்பிரமணிய பாரதியாரவர்களே" என்று குறிப்பிடப்பெற்றுள்ளது. "இந்தப் பத்திரிகைக்கு எப்பொழுதும் ஸி. சுப்பிரமணிய பாரதிதான் பத்திரிகையாசிரியராக இருந்தார்" என்று 'இந்தியா'வின் சட்டபூர்வமான ஆசிரியராகவிருந்த எம். சீனிவாசய்யங்கார் தமது வாக்கு மூலத்தில் கூறியுள்ளார்.[14]

'இந்தியா' சென்னையில் இறுதியாகச் செப்டம்பர் 5, 1908இல் வெளிவந்தது. 21-8-1908இல் 'இந்தியா'வின் பதிவு செய்யப்பெற்ற ஆசிரியரான எம். சீனிவாசய்யங்கார் கைது செய்யப்பெற்ற பிறகு பாரதியார் புதுச்சேரி சென்றுவிட்டார். இதற்குப் பிறகு வெளிவந்த இருவார இதழ்களுக்கு நீலகண்ட பிரம்மச்சாரி ஆசிரியப் பொறுப்பேற்றார்."[15]

புதுச்சேரி 'இந்தியா'வின் முதல் இதழ் அக்டோபர் 10, 1908இல் வெளிவந்தது. கடைசி இதழ் மார்ச் 12, 1910இல் வெளிவந்தது.

சென்னையிலும், புதுச்சேரியிலுமாகப் பாரதியார் மூன்று ஆண்டுகள் பத்து மாதங்கள் 'இந்தியா' ஆசிரியராகப் பணியாற்றியுள்ளார் என ஒருவாறு முடிவுசெய்யலாம். புதுச்சேரியில் - 'இந்தியா' சில காலம் நிறுத்தப்பட்டதாக, 17.5.1910 தேதியிட்ட சென்னை நகர காவல் துறை புலனாய்வுக் குறிப்பு கூறுகின்றது. மீண்டும் வெளிவந்ததையும் அதே குறிப்பு தெரிவிக்கின்றது. இடையில் நின்றுபோன காலம் கூறப்படாததால் ஓரிரு மாதங்களாக வெளிவராமல் இருந்திருக்கலாம், - எனவேதான் திட்டவட்டமாகச் சாற்றமுடியாமல் 'ஒருவாறு' என்று மேலே கூறவேண்டியுள்ளது.

இந்தியாவில் ஆசிரியராக இருந்துகொண்டே சென்னையில் ஆங்கில வார இதழாக வெளிவந்த 'பாலபாரதி' ஆசிரியராகவும் இதுவும் நின்ற பிறகு 'பாலபாரதா' எனும் மாத இதழிற்கும் பாரதியார் ஆசிரியராக விருந்தார்.

6-8-1908இல் 'இந்தியா'வின் உரிமையாளரான எம்.பி.டி. ஆசார்யா, எம். சீனிவாசய்யங்காரை சாயாவை 'இந்தியா'வின் மானேஜராக நியமித்துச் செய்யப்பெற்ற ஒப்பந்தத்தில் இரு

சாட்சிகளில் ஒருவராக "சி. சுப்பிரமணியபாரதி, எடிட்டர், "பாலபாரதா" "திருவல்லிக்கேணி" என்று ஆங்கிலத்தில் கையெழுத்திடப் பெற்றுள்ளது. மற்றொரு சாட்சி, "எஸ். என். திருமலாச்சாரி, உரிமையாளர், இந்தியா பிரிண்டிங் ஹவுஸ், சென்னை" என்று கையெழுத்திடப் பெற்றுள்ளது.

'இந்தியா'வின் கருத்தியல் கோட்பாடுகளை உருவாக்கியதை அறிவதற்கு முன்பு அதற்கு உறுதுணையாக விளங்கிய பாரதியாரின் தேசியம், "பாரதியார் பங்கேற்ற தேசிய அமைப்புகள்" பற்றிய குறிப்புகள் சிலவற்றை அறிதல் வேண்டும்.

பாரதியாரின் தேசியம்

புதிய சுடர், புதிய நெருப்பு, நவீன கிளர்ச்சி, நவீன மார்க்கம், நவீன உணர்ச்சி எனப் பலவாறாகத் தேசபக்தியை வருணித்துள்ளார் பாரதியார். அவருடைய தேசியம் மேற்கண்டவாறு வருணிக்கப் பெற்றத் தேசபக்தியில் மலர்ந்தது. தேசபக்தி, தேசிய உணர்விற்கான அரசியல் ஞானப்பயிற்சியைச் சுதேசமித்திரனில் பாரதியார் பெற்றார் என்பதை அவருடைய அரசியல் தோழர் வி. சக்கரை செட்டியார் பின்வருமாறு குறிப்பிட்டுள்ளார்.

> 1904ஆம் ஆண்டில் அவர் சென்னை சேர்ந்து புகழ்பெற்ற தலைவரும் பழந் தேசாபிமானியுமான சொர்க்கவாசி ஸ்ரீமத்ஜி. சுப்பிரமணிய ஐயரின்கீழ் உப ஆசிரியராக 'சுதேசமித்திரன்' பத்திரிகாலயத்திலிருந்து ராஜீய ஞானத்தில் பயிற்சி அடைந்தார்.

1904இல் தேசிய அரசியல் ஞானப்பயிற்சியைப் பெறத் தொடங்கிய பாரதியார் 1909இல் வெளிவந்த அவருடைய "ஜன்மபூமி -ஸ்வதேச கீதங்கள' எனும் நூலின் முகவுரையில் 'தேசபக்தி' மார்க்கத்தின் அன்பு பூண்டதைப் பின்வருமாறு கூறியுள்ளார்.

> சென்ற சுபகிருது வருஷத்திலே பாரத நாட்டில் சர்வ சுபங்களுக்கும் மூலாதாரமாகிய 'தேசபக்தி' என்ற நவீன மார்க்கம் தோன்றியது. நல்லோர்களின் சிந்தை யெல்லாம் உடனே புளகாங்கிதமாயின. நல்லோருடைய குணங்களிலே குறையுடையவனாகிய யானும் தேவியினது கிருபையினால் அப்படியே சுடரினிடத்து அன்பு பூண்டேன்.

இங்குப் பாரதியார் குறிப்பிட்ட 'சுபகிருது ஆண்டு', 1902ஆம் ஆண்டாகும். 1902இல் தேசிய அரசியலில் - காங்கிரஸ் இயக்கத்தில் எவ்வித எழுச்சியும் தோன்றவில்லை. 1905இல்தான் வந்தே மாதர இயக்கம், சுதேசிய இயக்கம் முதலானவை நவீன மார்க்கமாக வங்கத்தில் புத்தெழுச்சியாகப் பாய்ந்து பரவியது. பாரதியாரின் 'வங்கமே வாழிய' எனும் அவருடைய முதல் அரசியல் கவிதை சுதேசமித்திரனில் 15-9-1905இல் வெளிவந்தது; இந்த ஆண்டு விசுவாவசு ஆண்டாகும். 'சுபகிருது' ஆண்டன்று பாரதியார் ஞாபக மறதியாகச் சுபகிருது என்று குறிப்பிட்டுவிட்டதால் இவ்வுண்மையை பாரதியாரின், இளவல் சி. விசுவநாதன் அவர்களும் இக்கட்டுரையாளருக்கு எழுதியக் கடிதத்தில் குறிப்பிட்டுள்ளார்.[17]

பாரதியார் 'தேசியம்' எனும் சொல்லை ஆளவில்லை. நேஷனலிஸம் எனும் சொல்லைப் பாரதியார், 'ஜாதிய அறிவு' என்று மொழிபெயர்த்துள்ளார். 19-3-1907இல் இந்தியாவில் 'NATIONALISM' -ஜாதிய அறிவு' எனும் தலைப்பில் பின்வருமாறு விளக்கமளித்துள்ளார்.

> இந்தியாவிலே பிறந்து, இந்தியாவிலே வளர்ந்து இந்நாட்டின் க்ஷேம லாபங்களையே தமது க்ஷேம லாபங்களாகவுடைய எல்லா வகுப்பினரும் ஒரே ஜாதியென்ற, அந்த ஜாதி முழுமையும் உன்னதம் பெறுவதற்குரிய வழிகளை அனுசரிக்க வேண்டுமென்ற ஞானமே 'ஜாதிய ஞானம்' என்று கூறப்படும். இந்தியா பல பல பாஷைகளையும், மதங்களையும் இனங்களையும் உடைய நாடாதலால் இங்கே ஜாதிய ஞானம் ஏற்படுவது இயற்கைவிரோதமென்று சிலர் கூறுகின்றார்கள். இதை நாம் எத்தனையோ முறை கண்டனம் செய்து எழுதியிருக்கின்றோம்.

இதே கருத்தை 'ஸ்வராஜ்யம்' எனும் சொல்லில் உள்ள 'ஸ்வ' என்பது யார்? என்பதை விளக்கி எழுதியக் கட்டுரையிலும் (இந்தியா, 27-4-1907) பின்வருமாறு விளக்கியுள்ளார்.

"ஸ்வ என்பது பாரத தேவியைக் குறிப்பிடுகிறது. பாரத நாடு என்றால் கிருஸ்துவர் மட்டுமன்று; மகமதியர் மட்டுமன்று; எல்லா ஜனங்களும், அகண்ட பாரதம், பிரிவு செய்யப்படாத பாரதம்."

பாரதியாரின் தேசியம் ஆன்மீகத்தை அடிப்படையாகக் கொண்டது. அரவிந்தர் கூறியதைப்போல, பாரதியாரும், "சுதேசியம் கேவலம் ஒரு லௌகீக காரியமன்று; இது ஒரு தர்மம். இதில் பிரவேசிப்பவர்களுக்கு வீர்யம், தேஜஸ், கர்மயோகித் தன்மை முதலிய அரிய குணங்கள் வேண்டும்.

உண்மையான நாட்டுப்பற்று, ஆன்மீகமாக இருக்க வேண்டும். ஆனால், மறுவுலகம் பற்றிய நம்பிக்கையில் வரும் வேறுபாடுகளை, சமயச் சார்பற்ற தேச நிருமாண அரங்கில் கொண்டுவரக்கூடாது'' என்று பாரதியார் ஓர் ஆங்கிலக் கட்டுரையில் குறிப்பிட்டுள்ளார்.[18] இந்தக் கட்டுரையில் 1915லேயே பாரதியார், 'SECULAR NATION BUILDING' எனும் கருத்தமைப்பைக் கூறியுள்ளார்.

சிவாஜி விழாவைக் கொண்டாடிய பாரதியார், ''நாமெல்லோரும் மகமதிய மகான்களின் உற்சவத்தைக் கொண்டாட வேண்டும், . . . அக்பர் சக்ரவர்த்தியின் உற்சவத்தையும் கொண்டாட வேண்டும்" என்று 'இந்தியாவில் எழுதியுள்ளார்.[19] இதைப் போன்று வேறு பல சான்றுகள் மூலமாகவும் பாரதியாரின் தேசியம். 'இந்து தேசியம்' அன்று என்பதைத் தேர்ந்து தெளியலாம்.

மொழி வழித் தேசியம், பொருளாதார தேசியம், வன்முறைக் கலப்பற்ற தீவிரவாத தேசியம், சமூக சீர்திருத்தம் அவாவிய தேசியம் முதலானவற்றை உள்ளடக்கியது, பாரதியாரின் தேசியம். இவை யாவும் 'இந்தியா' இதழியல் கோட்பாடுகளில் விளக்கமுற்றுள்ளன.

பாரதியார் பங்கேற்ற தேசிய அமைப்புகள்

அமைப்பு சாராத, இயக்கம் சாராத அரசியலைப் போற்றியவர் அல்லர், பாரதியார். "பொது விஷயங்களில் கலக்காமல் விலகியிருந்து ஆலோசனை செய்வோருக்கு ராஜாங்க ஞானம் அதிகம் ஏற்படுமென்ற கொள்கை முழு உண்மையன்று" என்று பாரதியார் குறிப்பிட்டுள்ளார்.[20]

பாரதியாரின் இதழியல் கோட்பாடுகளின் உருவாக்கத்தில் அவர் பங்கேற்ற தேசிய அமைப்புகளுக்கும் பங்குண்டு.

பாரதியார் பங்கேற்ற முதல் தேசிய அமைப்பு, "மெட்ராஸ் சோஷல் ரிபார்ம் அசோசியேஷன்" என்பதாகும். 1904இல் இந்து

பத்திரிகைக்கு எழுதியக் கடிதத்தில் "உறுப்பினர், மெட்ராஸ் சோஷல் ரிபார்ம் அசோசியேஷன்" என்று கையெழுத்திட்டுள்ளார்.[21]

இந்தக் கடிதத்தில் பின்வரும் முக்கியமான அரசியல் - சமூக சீர்திருத்தக் கோட்பாட்டைப் பாரதியார் வலியுறுத்தியுள்ளார்.

> தேசிய உணர்வு இன்றி அரசியல் விடுதலை இல்லை. சாதி உணர்வு இருக்குமிடத்தில் தேசிய உணர்வுக்கு இடமில்லை. சமூக சீர்திருத்தம் இல்லாமல் அரசியல் சீர்திருத்தம் என்பது ஒரு கனவாகும்.

1904இல் கூறியக் கருத்தை 1906இல் பாரதியார் மாற்றிக் கொண்டு முதலில் வேண்டப்படுவது அரசியல் சீர்திருத்தமே என்பதை வலியுறுத்தத் தொடங்கினார்.

"ஆறாண்டுத் திங்கள் நிறைவேறும் வரை ராஜ தந்திரங்களுக்கு இத்தேசத்தார் தகுதியுடையவர்களில்லை என்று சொல்லுவோர் அயோக்கியர்களாக வேணும் அல்லது மூடர்களாக வேணும் இருக்க வேண்டுமென்பதில் ஆக்ஷேபமே கிடையாது". இவ்வாறு 'இந்தியா'வில் ஜூலை மாதம் 28ஆம் தேதி, 1906இல் பாரதியார் சில ஆசாரத்திருத்தல்காரர்களின் தப்பெண்ணம் - THE FALLACY OF SOME SOCIAL REFORMERS எனும் தலைப்பில் எழுதியக் கட்டுரையில் குறிப்பிட்டுள்ளார். இந்த மாற்றத்திற்கான காரணத்தையும் முற்கூறிய கட்டுரையில் பின்வருமாறு அறிகின்றோம்.

"இந்திய தேசத்தாரை உள்நாட்டு சச்சரவுகளில் மூட்டிவிட்டு, ஜாதி விவகாரங்களிலும் விதவா விவகாரச் சண்டைகளிலும் அவர்கள் ஒருவருக்கொருவர் மண்டைகளை உடைத்துக்கொண்டு கிடக்கட்டும். நாம் பக்கத்திலிருந்து வேடிக்கை பார்த்துச் சிரித்துக் கொண்டிருப்போம். எந்த உபாயத்தியனாலும் இந்தக் கருப்பு மனிதக்ரள் ராஜாங்க அநீதிகளிலே கருத்தைச் செலுத்தாமலிருந்தால் அதுவே போதுமானது என்பது மேற்படி வெள்ளை போதனா மூர்த்திகளின் உபதேசம்". திலகர் வழி தேசிய அரசியலில் அரசியல் சீர்திருத்தம் முன்னுரிமை பெற்றதும் பாரதியார் கருத்து மாற்றத்திற்கு மற்றொரு காரணமாகும். 'இந்தியா'வின் இதழியல் கோட்பாடுகளில் இந்தக் கருத்தோட்டம் செல்வாக்கு பெற்றது.

1909 ஏப்ரல் 10-ந்தேதி இந்தியா இதழில் (ப.4) வெளிவந்துள்ள கட்டுரையின் பின்வரும் செய்தியும் இங்குக் கவனத்திற்குரியது.

"ஜனாதாரச் சீர்திருத்தங்களே இப்போது முதலாவது செய்வேண்டுமென்று நினைப்பவர்கள் கீழே காட்டப்படும் பண்டிதர்களின் அபிப்பிராயங்களைக் கவனிப்பார்களாக.

ஐரோப்பாவில் சோஷலிஸ்ட் மார்க்கத்தாருக்கு மூலகுருவாகிய கார்ல்மார்க்ஸ் என்பவர் பின்வருமாறு சொல்லுகிறார்.

> எந்த சமயத்தில் பார்த்த போதிலும் ஒரு தேசத்து ஜனங்களின் ஆசாரங்கள், அறிவு, பயிற்சி முதலிய யாவும் அத்தேசத்தின் பொருள் நிலையையே பொறுத்தனவாகும்.

பால இந்தியா சபையில்

இந்தச் சபையின் வாயிலாகத்தான் பாரதியார் 1906இல் கல்கத்தா காங்கிரஸுக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டார். இந்தச் சபையின் கூட்டம் பிராட்வே சாலையில் இருந்த இந்தியா அலுவலகத்தில் நிகழ்ந்தது. இந்தச் சபையில் நடவடிக்கைகள் குறித்து மேல் விவரம் கிடைக்கவில்லை.

சுதேசி வஸ்து பிரசாரிணி சபையில்

சென்னையில் பாரதியார் தம்மோடு ஒத்த முற்போக்கு கொள்கைகளைக் கொண்டு இந்த தேசிய அமைப்பை நிறுவினார். இந்த அமைப்பின் தலைவர் பாரதியாரின் நண்பர் வி. சக்கரை செட்டியார். இவர் அப்போது சட்டக்கல்லூரி மாணவர். இந்த அமைப்பைப் பற்றி இந்தியாவில் 6.4.1907இல் 'சென்னையில் சில காலத்திற்கு முன்பு ஸ்தாபிக்கப்பட்ட' என்று குறிப்பிடப் பட்டுள்ளது.

இச்சபையின் சார்பில் சென்னையில் 17.9.1907இல் நடைபெற்றப் பொதுக்கூட்டத்தில் வந்தேமாதரம் பத்திரிகை மீதான வழக்கில் ஆறுமாத கடுங்காவல் தண்டனை விபின் சந்திரபாலருக்கு விதிக்கப்பட்டது; கண்டிக்கப்பட்டது.

இக்கூட்டத்தில் பாரதியார், சக்கரை செட்டியார், சுரேந்திரநாத் ஆர்யா ஆகியோர் பேசினர்.

பாலபாரதா சங்கத்தில்

பாலபாரத சங்கம் பாரதியாரால் நிறுவப்பெற்றது. பிப்ரவரி 6, 1907ஆம் இந்தியா இதழில் இந்தச் சங்கத்தைப் பற்றிப் பின்வருமாறு பாரதியார் எழுதினார்.

"ஆரம்பத்தில் சென்னை நகரத்தில் நாம் 'பாலபாரதம்' என்ற பத்திரிக்கையையும் பிரசுரித்து வரத்துவங்கினோம். இப்போது அதையொட்டி வேறு இடங்களிலேயும் பாலபாரத சபைகள் ஏற்பட்டு வருவது கண்டு மகிழ்ச்சியடைகிறோம்." பாலபாரதா சங்கம் அரசியல் சிறு வெளியீடினை வெளியிட்டது. இத்தகைய சிறு வெளியீடுகளில் ஒன்றாக "பாலபாரத சங்கம் முதலாவது பிரகடனம் - பத்தாவது அவதாரம்" எனும் தலைப்பும் மார்ச்சு 30, 1907இல் இந்தியாவில் ஒரு செய்தி வெளிவந்தது. இந்த வெளியீட்டில்தான் சுதேசியம் பத்தாவது அவதாரமாக வருணிக்கப்பட்டது. அரசியல் பொதுக்கூட்டங் களையும் இந்தச் சங்கம் நடத்தி வந்தது. இத்தகைய கூட்டம் ஒன்றில் 'நேஷனலிஸம்' எனும் தலைப்பில் சி. ராமலிங்க ரெட்டி என்பவர் 'திறமை மிகுந்த உபன்யாசம்' செய்ததாக இந்தியாவில் செய்தி வெளியிடப்பெற்றது. பஞ்சாபி என்னும் தீவிரவாத சகோதர இதழ் மீது ஏவப்பெற்ற அடக்குமுறைச் சட்டத்தைக் கண்டனம் செய்து சென்னைக் கடற்கரையில் பாலபாரதா சங்கத்தின் சார்பில் பொதுக் கூட்டம் நடத்தப்பட்டது. பாலபாரத சங்கத்தின் சார்பில் பாரதியார் விஜயவாடா சென்று, அங்குச் சொற்பொழிவாற்றி வந்த தீவிரவாதத் தேசியத் தலைவர்களுள் ஒருவரான விபின் சந்திரபாலரைச் சென்னைக்கு அழைத்து வந்தார். 3.5.1907இல் இருந்து 8.5.1907 வரையில் கடற்கரையில் ஆறு சொற்பொழிவுகளை நிகழ்த்தினார் விபின் சந்திரபாலர்.

சென்னை ஜனசங்கத்தில்

சனவரி, 11, 1908இல் திருவல்லிக்கேணியில் இந்த அமைப்பு ஏற்படுத்தப்பெற்றது. இதன் நிருவாகக் குழு உறுப்பினர்களை நியமிக்கப் பின்வரும் குழுவினரிடம் பொறுப்பு ஒப்படைக்கப் பட்டது. வ.உ. சிதம்பரம் பிள்ளை, வி. சக்கர செட்டியார்,

சி. சுப்பிரமணிய பாரதி, யதிராஜ், எஸ். ஸ்ரீநிவாச சாரியார், பிர.பி.எஸ். வரதராஜ சர்மா.

சுதேசியம், பகிஷ்கார பிரசுரம், உடற்பயிற்சி கழகங்கள்

கோட்பாடுகள்

'இந்தியா' முதல் இதழின் அனைத்துப் பக்கங்களும் கிடைக்கவில்லை. முதல்பக்கம் மட்டுமே சற்று சிதைவுற்ற நிலையில் கிடைத்ததை முன்பு கண்டோம். இதனால் இதழின் நோக்கம், கொள்கை முதலானவற்றை அறிய வாய்ப்பில்லை. 16 பக்கங்களைக் கொண்ட 'இந்தியா'வின் தயாரிப்பு செலவு மாதம் ஒன்றுக்கு 350 ரூபாய் ஆயிற்று என்றும் பாரதியாருக்கு மாத ஊதியம் 50 ரூபாய் வழங்கப்பெற்றது என்றும் அறிய முடிகின்றது.[22]

பாரதியாரின் அரசியல் தலைவர் திலகரின் மராட்டா (ஆங்கில இதழ்), கேசரி (மராட்டிய மொழி இதழ்), ராஷ்ட்ரமத் (மராட்டிய இதழ்), வங்கம் புரட்சி வீரர் பூபேந்திரநாத் சுத்தரின் 'யுகாந்தர்' (வங்கமொழி இதழ்), கல்கத்தா பிரபல பத்திரிகையாளர் பிரம்மபாந்த உபாத்யாயாவின் 'சந்தியா' (வங்க மொழி இதழ்), விபின் சுந்திரபாலரின் 'வந்தேமாதரம்' (ஆங்கில இதழ்) முதலான இதழ்களைப் போன்று 'இந்தியா'வும் திலகரின் தலைமையில் தோன்றிய புதிய தீவிரவாத தேசியத்தை ஆதரித்தது. பழைய காங்கிரஸ் கட்சியினரை 'நிதானக் கட்சியார்' எனினும், தீவிரவாத தேசிய அணியினரைப் புதிய கட்சியினர் எனவும் இந்தியா குறிப்பிடுவதைப் பெருவழக்காகக் கொண்டது. "புதிய கட்சிக்கு ஒரே பிரதிநிதியாக சென்னையில் இருந்து வெளிவந்தது 'இந்தியா' என்று பாரதியார் பெருமிதமாகக் குறிப்பிட்டுள்ளார்.

1918இல் பாரதியார் எழுதிவைத்த 'POLITICAL EVOLUTION IN THE MADRAS PRESIDENCY' எனும் கட்டுரையில் இந்தியாவின் பத்திரிகைக் கெள்கைப் பற்றிப் பின்வருமாறு குறிப்பிட்டுள்ளார்.

> அரசியல் சாசனத்திற்கு உட்பட்ட வழிமுறைகள் வாயிலாக பரிபூரண சுதந்திரம் கோரி பகிரங்கமாக ஆதரித்து வாதாடியது. இந்த வழிமுறைகள் காங்கிரசின் கையேந்தி பிச்சை கேட்கும் (MENDICANCY) முறைக்கு முற்றிலும் மாறுபட்டது.

சுதேசமித்திரன், இந்தியா இதழ்கள் காரணமாகப் புதிய அரசியல் இயக்கத்திற்குக் கிடைத்த ஆதரவைக் குறித்தும் பாரதியார் முற்கூறியக் கட்டுரையில் பின்வருமாறு கூறியுள்ளார்.

"தமிழ் படிக்கத் தெரிந்த மத்திய தர வகுப்பினர் வர்த்தகர்கள், நிலப்பிரபுக்கள், தொடக்கநிலைப்பள்ளி ஆசிரியர்கள், சிறு வியாபாரிகள், வழக்கறிஞர்களின் குமாஸ்தாக்கள் மற்றும் தமிழ் படிக்கத் தெரிந்த பெரும்பான்மையான பெண்கள் ஆகியோரிடமிருந்தே புதிய அரசியல் இயக்கத்திற்கு ஆதரவு கிடைத்தது. இதற்கு முக்கியக் காரணம் சுதேசமித்திரன், இந்தியா இதழ்களின் உழைப்பேயாகும். சுதேசமித்திரன் பழைய மிதவாதப் பிடிப்புகளில் இருந்து முற்றிலும் துண்டித்துக்கொள்ள இயலவில்லை. இதன் விளைவாக, இந்தியாவின் எதிர்பார்ப்பு களுக்கும் தேவைகளுக்கும் ஏற்றதொரு பிரதிநிதியாக இளைய தலைமுறையினரால் சுதேசமித்திரன் நோக்கப்படவில்லை. இளைஞர்கள் எதிர்பார்த்த பாத்திரத்தை 'இந்தியா' ஏற்றுக் கொண்டது".

1906ஆம் ஆண்டிற்காக 'மெட்ராஸ் நேடிவ் நியூஸ் பேப்பர்ஸ் ரிபோர்ட்' எனும் அக்கால அரசு ஆங்கில மொழி அறிக்கையில், இந்தியாவைப் பற்றியக் குறிப்பு பின்வருமாறு உள்ளது.

> உள்ளூர், பொது செய்திகளைக் கொண்டுள்ளது. சமய, சமூக அரசியல் செய்திகளை விவாதிப்பது; சுதேசிய இயக்கத்தைத் தீவிரமாக ஆதரிப்பது; வெளிப்பாட்டு முறை, வன்மையானது.

'இந்தியா' இதழின் கொள்கை அதன் உரிமை யாளர்களாலும் உருவாக்கப் பெற்றது என்பதும் குறிப்பிடத்தக்கது.

ஆவேசநடை

சீற்றமும் நையாண்டியும் கலந்த நேரடித் தன்மை வாய்ந்த ஆவேச நடையைப் பாரதியார் கையாண்டார். இந்தியா நெருப்பு மழை பொழிந்தது என்று பாரதியாரின் சகோதரப் பத்திரிகையாளர் இராமநுஜுலு நாயுடு கூறியுள்ளார்.

> "கோப வார்த்தைகளினும்' கோபம் மிகுந்தனவாக" அமைந்த நடையைப் பாரதியார் இந்தியாவில் பயன்படுத்தியதைப் பாரதியாரின் அரசியல் தோழர் வீரமுரசு சுப்பிரமணிய சிவா குறிப்பிட்டுள்ளார்.[23]

பத்திரிகைத் தமிழில் முன்பில்லாத தமிழ்நடையை அறிமுகம் செய்து வளம் சேர்த்ததும் இதழியல் கோட்பாடாகக் கருதத்தக்கதாகும்.

'இந்து சாதனம்' பாராட்டு

இலங்கை யாழ்ப்பாணத்தில் இருந்து 11.9.1889 முதல் வெளிவந்து நூற்றாண்டு விழாக் கண்டு இன்றும் வெளிவந்துக் கொண்டிருக்கும் 'இந்து சாதனம்' எனும் வரலாற்றுப் புகழ்கொண்ட இதழ், 'இந்தியா' இதழைப் பாராட்டி 13.10.1906இல் எழுதிய பின்வரும் குறிப்பு, அதன் இதழியல் கோட்பாட்டின் மற்றொரு பரிமாணத்தைச் சுட்டிக்காட்டுகின்றது.

> இந்தியா, இது சென்னை பிரமவாதின் அச்சியந்திர சாலையில் வாரத்துக்கொருமுறை 16 பக்கங்கள் கொண்ட "கிறெவாதி மோலியோ" சயிஸ் காகிதத்தில் அச்சிட்டு வெளிப்படுத்தும் ஓர் சிறந்த தமிழ்ப் பத்திரிகை. பெரிய இங்கிலீஷ் பத்திரிக்கையில் என்னென்ன விஷயங்கள் எழுதப்படுகின்றனவோ அந்த விஷயங்களெல்லாம் இந்தப் பத்திரிகையிலும் எழுதப்பட்டு வருகின்றன. இதனை வாசிப்போருக்கு இராஜாங்க விஷயங்களில் நல்லறிவும் தேசபிமானமும் உண்டாகும்.

வ.வே.சு. ஐயர் பாராட்டினார்

> நமது தென்னாட்டில் நமது இந்தியா ஒரு பத்திரிகைதான் ராஷ்டிரிய தீபத்தை சோரவிடாமல் காத்துவந்தது. மற்ற பத்திரிகைக ளெல்லாம் பீதியும் தன்னலமும் நிறைந்து ஆரிய ஜாதியின் பெருமையையும் கௌரவத்தையும் மறந்து, ராஜாங்க ஞானம் அடைய வேண்டிப் படிப்போருடைய மனதையெல்லாம் தாஸிய மார்க்கத்தில் செலுத்திக் கொண்டிருக்க, இந்தியா

> ஒன்று மாத்திரமே பயத்தை விட்டு ஆரியர்களுக்கு உரித்தான உன்னத அபிப்பிராயத்துடன் பராதீனத்தின் கேட்டையும் சுதந்திரத்தின் மேன்மையையும் இன்றியமை யாமையையும் பிரசங்கித்து வந்தது.[24]

'இந்தியா'வில் வெளிவந்துக் கொண்டிருந்த வ.வே.சு. ஐயரின் லண்டன் கடிதம் தொடரில் முற்கூறியவாறு வ.வே.சு. ஐயர் எழுதியதிலும், இதழின் கோட்பாடு விளக்க முயலுகின்றது. 'இந்தியா' வினுடைய அபிப்பிராயங்களாகிய பிணைதாரமான அமிருதம் ஜனங்களுடைய மயக்கத்தை நீக்கி, அவர்களுக்கு சுதந்திர உற்சாகத்தையும் ஆவலையும் கொடுத்துக்கொண்டு வருவதாகவும் வ.வே.சு. ஐயர் முற்கூறிய லண்டன் கடிதத்தில் குறிப்பிட்டுள்ளதும் இதழியல் கோட்பாட்டை எடுத்துரைக்கின்றது.

நிருபர்களுக்கு முக்கியமான அறிக்கை

1908 நவம்பர் 7இல் 'இந்தியா'வில் வெளிவந்த 'நிருபர்களுக்கு முக்கியமான அறிக்கை நிருப விஷயங்கள்' எனும் அறிக்கையின் பின்வரும் பதினோரு செய்திகள் 'இந்தியா'வின் இதழியல் கோட்பாடுகளை உருவாக்கும் நோக்குகளை உள்ளடக்கியுள்ளன.

1. சர்க்காரின் அக்கிரம அதிகார முறைகள்.

2. ஜனங்களிடத்தில் பொதுவாயுள்ள தீய வழக்கங்கள்

3. க்ரிஷித் தொழில், கைத்தொழில், வர்த்தகம் முதலிய முயற்சிகளின் முறைகள், அபிவர்த்திகள், செய்ய வேண்டிய சீர்திருத்தங்கள் எவ்வெந்தப் பொருள்களில் மேற்படி முயற்சிகள் நடைபெற்று வருகின்றனவென்ற விவரங்கள்.

4. ஜனாசாரங்களில் உள்ள குற்றங்குறைகள், அவற்றைச் சீர்திருத்த வழிகள்.

5. ராஜ்ய நிர்வாகத்திலும், யுத்தத்திலும், சாஸ்திரங்களிலும், கலைகளிலும் அவ்வவ்விடங்களில் முற்காலத்தில் நம் முன்னோர்களால் செய்யப்பட்ட பிரதாபச் செய்கைகள்.

6. இடிந்த கோட்டை கொத்தளங்களின் சரித்திரங்கள், மங்கிப்போன ராஜகுலங்கள், யுத்த வீரர்களின் குலங்கள், வித்வாம்சரின் குலங்கள் இவற்றின் முற்கால நிலைமைகள்.

7. ஜனங்களுக்குள் வழங்கிவரும் பழமொழிகளின் தாத்பரியங்கள், கர்ணபரம்பரையாய்ச் சொல்லப்பட்டு வரும் சரித்திரங்கள், கதைகள், பாராட்டுகள்.

8. அப்போதைக்கப்போது நடந்துவரும் முக்கியமான சம்பவங்கள், கொலை, களவு, அதிகாரிகளின் கொடுமைகள், திருவிழாக்கள், சந்தைகள், பெரிய உத்தியோகதர்களின் சுற்றுப் பிரயாணங்கள், அவர்கள் செய்யும் அமூல்கள், மடாதிபதிகளின் விஜயங்கள், அவர்கள் செய்யும் நல்ல, தீய செயல்கள்.

9. பொதுஜன சுகாதரங்கள், ஜல கஷ்டம், அசுத்தமான வழக்கங்கள், கொள்ளை நோய்கள் (வசூரி, காய்ச்சல், வாந்திபேதி, பிளேக், பஞ்சம் இவற்றின் நடமாட்டங்கள்)

10. தமிழ் பாஷை யல்லாத வேறு பாஷைகளில் எழுதப்பட்டுள்ள கிரந்தங்கள், பத்திரங்கள், பத்திரிகைகள், சிலாசாசனங்கள் ஆகிய இவற்றின் முக்கியாம்சங்களின் தமிழ்மொழிபெயர்ப்புகள், அச்சிட்டில்லாத அதாவது ஏட்டுப்பிரதிகளாயுள்ள கிரந்தங்களின் முக்கிய பாகங்களை அப்படியே எழுதியனுப்புதல்.

11. நவீன நிலைமைக்குக்கேற்றபடி இயற்றிய நாடகங்கள், கவிகள் (NOVELS) விநோதக் கதைகள்.

'நமது விஞ்ஞாபனம்'

1908 நவம்பர் 14இல் வெளிவந்த 'நமது விஞ்ஞா'னம் எனும் கட்டுரையின் பின்வரும் பகுதி, 'இந்தியா'வின் பிரிட்டிஷ் ஏகாதிபத்திய எதிர்ப்பு, சுதேசியப் பிரசாரம், புதிய கட்சியின் கோட்பாடுகள் முதலியனவற்றின் தொடர்பான இதழியல் கோட்பாடுகளுடன், பொதுவான அரசியல் நோக்கையும் தெளிவுப்படுத்தியது.

"ராஜாங்க விஷயங்களில் தலையிட்டு விளையாடிக் கெண்டிருப்பதற்குரிய காலம் கழிந்து போய்விட்டது. இனி ராஜாங்க விவகாரங்களில் முயற்சிசெய்யப் விருப்பமுடையோர் உடல், பொருள், ஆவி மூன்றையும் தத்தம் செய்து பாடுபடத் துணிந்தவர்களாயிருக்க வேண்டும். இதை நாம் நன்றாக அறிவோம். அறிந்தே இம்முயற்சியில் நமது கவனத்தையும் பொருளையும் மற்ற உடமைகளையும் செலவிட்டு வருகிறோம். . . .

ஏற்கனவே தமிழ்ப் பத்திரிகைகள் எல்லாவற்றையும் விட 'இந்தியா'வுக்கே தக்க பொதுஜன ஆதரவு ஏற்பட்டிருக்கின்றது. ஆனால், இனி இப்பத்திரிகை பிறருடையதென்றெண்ணாமல், தமிழர்கள் தம்முடையதாகவே நினைத்துத் துணைபுரியவேண்டு மென்கிற கருத்துடனேயே இந்த விஞ்ஞானபனம் எழுதப்பட்டது."

விடுதலைப் போராட்டத்தில் மக்கள் பெருந்திரளின் முக்கியத்துவத்தைக் குறித்து 25.5.1908இல், இந்தியாவில் ஒரு நிருபர் எழுதியது பின்வருமாறு வெளியிடப்பெற்றது (இந்த இதழ் கிடைக்கவில்லை. ஆனால் அரசு ஆணை ஒன்றில் ஆங்கிலத்தில் மேற்கோளாகக் குறிப்பிடப்பெற்றதின் தமிழாக்கம்)

''அந்நிய ஆட்சியில் மிகவும் துன்பப் படுபவர்கள் விவசாயிகளும் கூலிவேலை செய்பவர்களுமே ஆவர். அவர்களுக்குத்தான் சுயராஜ்யம் முக்கியமானதாகும். அவர்கள் எழுச்சி பெற்றுப் படைப்புத் தெய்வமான பிரம்மா கூட அவர்கள் முயற்சிகளைத் தடுத்துநிறுத்தமுடியாது."[25]

மேற்கூறிய செய்தி 'இந்தியா'வில் வெளிவந்த போதிலும் இதழின் கோட்பாடு, வர்க்கப் பார்வையில் அமைவதற்கான அரசியல் சூழல் அக்காலத்தில் வேர்பிடிக்கவில்லை.

'இந்தியா'வில் கேலிச்சித்திரங்கள்

பாரதியாரின் இதழியல் கோட்பாடுகளில், 'கார்ட்டூன்' எனும் ஆங்கிலச் சொல்லின் தமிழாக்கங்களில் ஒன்றான 'கேலிச்சித்திரம்' கொண்டு கருத்துக்களை வலிமையுடனும், தெளிவுடனும் வெளிப்படுத்தும் முறைமை ஒன்றாகும். கார்ட்டூன் என்பதைப் பாரதியார் 'விகட சித்திரம்' என்று குறிப்பிட்டார்.

1909 மார்ச்சு 13இல் இந்தியாவில் 'இந்தியா பத்திரிகையில் ஓர் புதிய அபிவிருத்தி' எனும் தலைப்பில் பாரதியார் எழுதியதில், ''தமிழ்நாட்டு வர்த்தமானப் பத்திரிகைகளிலே நமது பத்திரிகையொன்றுதான் விகட சித்திரங்கள் பதிப்பித்து வருவதென்ற விஷயம் நேயர்களுக்குத் தெரிந்திருக்கும்'' என்று குறிப்பிட்டுள்ளார்.

மேலே, "*நமது பத்திரிகை யொன்றுதான்*" என்று பாரதியார் அழுத்தத்துடன் குறிப்பிட்டுள்ளது, கவனத்திற்குரியது.

பாரதியாருக்கு முன் சமூக சீர்திருத்தம் தொடர்பான கார்ட்டூன் வெளிவந்தன என்றும் கூறப்பெற்றுள்ளது.[26] ஆனால் அரசியல் இதழ்களில் அரசியல் விகட சித்திரத்தை முதன்முதலில் பயன்படுத்தியவர் பாரதியார்தான் என்பது வரலாற்றுண்மையாகும். விகட சித்திரம் உயிர்ப்புடன் அமைய வேண்டும் என்பதற்காக ஓவியரிடம் விளக்கும்பொழுது, 'தமது முகத்திலும் அபிநயங்களிலும்' பாவனைகளை வெளிப்படுத்துவாராம், பாரதியார். சித்திரங்களுடன் சித்திரவிளக்கங்களும் புகழ்பெற்றன. விகட சித்திரங்கள் பெற்ற மாபெரும் வரவேற்பை அக்கால இந்தியா வாசகர்களில் ஒருவராக விளங்கிய பாரதிதாசன் பின்வருமாறு விளக்கியுள்ளார்.

> இந்தியா பத்திரிகையில் சித்திரவிளக்கம் தெளிவாக எழுதியிருக்கும். படங்கள் ராஜீய சம்பந்தமானவை. பத்திரிகை வெளிவருவதை வாசகர்கள் ஆவலோடு எதிர்பார்ப்பார்கள். படத்தை வெட்டி அட்டையில் ஒட்டி வீட்டுச் சுவரில் தொங்கவிட்டு வைப்பார்கள். ஒவ்வொரு படமும் இங்கிலீஷ்காரனுக்கும் இந்தியனுக்கும் உள்ள சம்பந்தத்தை இங்கிலீஷ் காரனிடம் இந்தியன் அனுபவிப்பதைக் குத்தலாக எடுத்துக்காட்டுவதுதான் அந்தப் பத்திரிகையிலே சுவையான பகுதி. அந்தச் சித்திரம்தான் முதலில் என்னைத் தன் பரிவாரங்களின் பக்கமாக இழுத்தது. அந்தச் சித்திரம் என்னை இன்னாரென்று எனக்குக் கூறிற்று.'[27]

பிரிட்டிஷ் ஏகாதிபத்ய எதிர்ப்புப் பிரசாரம், காங்கிரஸ் மிதவாதிகளைக் குத்தலும் கிண்டலுமாகத் தாக்கும் பிரசாரம் முதலானவை பெரும்பான்மையாகக் கேலிச்சித்திரங்களில் இடம்பெற்றன. பிரட்டிஷ் ஆதரவுப் பத்திரிகையான "ஹிந்து பஞ்ச்" எனும் பம்பாய் இதழில் வெளிவந்த ஒரு கேலிச்சித்திரத்தைக் கண்டுபிடித்து பிப்ரவரி 6, 1909ஆம் இதழில் பாரதியார் எழுதியுள்ளார். காங்கிரசை ஒரு வயதான நோயாளியாகச் சித்தரித்து, அந்த நோயாளியின் நாக்கை, நாக்பூர் மாஜிஸ்ட்ரேட் ஒரு டாக்டராக வந்து கத்தியால் வெட்டி எடுப்பதாகக் கேலிச்சித்திரம் வெளியிடப்பட்டது. இத்தகைய தரக்குறைவான

காட்டுமிராண்டித்தனமானக் கேலிச் சித்திர விளக்கத்திலும் உள்ளுறை, உவமைச் சிறப்பு நயம்பட அமைவதில் பாரதியார் கண்ணுங்கருத்துமாய் உள்ளார் என்றும் பிரிட்டிஷ் ஏகாதிபத்யம் கருதியது. முழுவதும் கேலிச்சித்திரங்கள் அடங்கிய இதழையும் வெளியிடும் எண்ணம் பாரதிக்கு இருந்ததை 1909 டிசம்பர் 4இல் இந்தியாவில் வெளிவந்த ஓர் அறிவிப்பில் அறிகிறோம். எழுத்தைமட்டுமின்றி, கேலிச்சித்திரத்தையும் விடுதலைப் போர்க்களத்தல் சக்திமிக்க ஆயுதமாகப் பயன் படுத்தினார் பாரதியார்.

'பத்திரிகை அடக்குமுறைச் சட்டம்' எதிர்ப்பில் பாரதியார்

இந்தியப் பத்திரிகைத் துறை வரலாற்றில் பத்திரிகைகளுக்கு எதிரான அடக்குமுறைக்கு எதிர்ப்புக் குரலைப் பத்திரிகை யாளராகவிருந்து முதன்முதலில் 1823இல் எழுப்பியவர் ராஜா ராம்மோகன் ராய். இந்த வரலாற்றில் தமது காலத்தில் பத்திரிகையாளர் பாரதியார் இணைந்தார். இந்தியாவின் இதழியல் கோட்பாடுகளில் பத்திரிகைகள் மீதான அடக்குமுறைகள் எதிர்ப்பும் ஒன்றாகும்.

1906 முதற்கொண்டே இந்தியா, பத்திரிகைத் துறை மீதான பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத்தின் அடக்குமுறைகளை எதிர்த்து இந்தியாவில் எழுதத் தொடங்கினார் பாரதியார். 1906 ஜூலை 28ஆம் தேதி இதழில் 'பஞ்சாபி பத்திரிகையும் பஞ்சாப் கவர்ன்மென்டாரும்' எனும் தலைப்பில் தமது வருத்தத்தைப் பின்வருமாறு வெளியிட்டார்.

'பஞ்சாபி' யென்ற பத்திரிகை லாசோரிலே பிரசாரம் செய்யப் படுகிறது. இது எப்போதும் பாஷைபாடும் கெஞ்சும் தன்மை. அடிமையச்சம் முதலியவையன்றி தைரியத்துடனும், மனச்சாட்சிக்கு விரோத மில்லாமலும் எழுதும் இயற்கையுடையது. இப் பத்திரிகையை மட்டிலும் பிராசிகியூட் செய்யப்புகுந்திருப்பதாக வர்த்தமானம் வந்திருப்பது நமக்கு மிகவும் வருத்தத்தை உண்டுபண்ணுகிறது" தீவிரவாத தேசிய அணியின் பிரசார இதழான 'பஞ்சாபி' தொடர்ந்து அடக்குமுறைக்கு ஆளானபொழுதெல்லாம் பாரதியார் எதிர்த்து எழுதிவந்தார். இந்த இதழ் மட்டுமல்லமல் பிற தேசிய இதழ்கள் மீது ஏவப்பெற்ற அடக்குமுறைகளையும் விமர்சித்து கண்டனம் செய்து வந்தார், பாரதியார்.

1907 ஜூன் 3இல் பத்திரிகைகள் ஒடுக்குவது தொடர்பாக வெளிவந்த இந்திய அரசாங்கத் தீர்மானத்தை பாரதியார் 'இந்தியா'வில் (ஜூன் 8, 1907) 'கவர்ன்மெண்டாரும் வர்த்தமானப்' பத்திரிகைகளும் எனும் தலைப்பில் கண்டித்து எழுதினார். முற்கூறிய இந்திய அரசாங்கத் தீர்மானம் 'ராஜத்துரோகம்' தொடர்பான கட்டுரைகள் மீது நடைமுறையில் உள்ள சட்டங்களைக் கொண்டு தேவையான நடவடிக்கைகளை எடுக்க மாநில அரசுகளுக்கு அதிகாரமளித்தது. இதனால் 1907 ஜூலை முதல் பத்திரிகைகள் மீதான வழக்குகள் பெருகின.

1908ஆம் ஆண்டு பத்திரிகைச் சட்டம் அடக்குமுறை பிரயோகத்தை மேலும் தீவிரப்படுத்தியது. இந்தச் சட்டத்தின் விளைவுகளைப்பற்றி ஜூன் 13, 1908ஆம் இந்தியா இதழில் பின்வருமாறு எழுதினார் பாரதியார். (இந்த இதழ் கிடைக்காத நிலையில் சென்னை அரசாங்க நேடிவ் நியூஸ் பேப்பர் ரிப்போர்ட்டில்" வெளிவந்ததின் தமிழாக்கத்தைத் தருகின்றோம்.)

"இந்தச் சட்டத்தில் மாஜிஸ்திரட்டுகளுக்கு வழங்கப் பெற்றுள்ள தனி அதிகாரம் சுதந்திரம் பற்றிய பிரசாரம் செய்யும் பத்திரிகைகளுக்கு எதிராகவும் பயன்படுத்தப்படும். இதனால், அரசாங்கத்திற்கு எதிரான மக்கள் அதிருப்தி மேலும் அதிகப்படும்; அரசாங்கத்திற்கு ஆபத்தை விளைவிக்கும். ஆனால் சுதந்திரம் வேண்டி நாம் எடுத்துக்கொண்டு வரும் முயற்சிகளைத் தடைசெய்ய இந்தச் சட்டத்தினால் முடியாது".

இந்தச் சட்டத்தை ஒரு கேலிச்சித்திரத்தின் மூலம் விமர்சனம் செய்துள்ளார் பாரதியார். ஆனால், இந்தக் கேலிச்சித்திரமும் சித்திரவிளக்கமும் வெளிவந்த 'இந்தியா' இதழ் (ஜூன் 27, 1908) கிடைக்கவில்லை. மெட்ராஸ் நேடிவ் நியூஸ் பேப்பர் ரிப்போர்ட்டில் வெளிவந்ததை அடிப்படையாகக் கொண்டு பின்வருமாறு ஒருவாறு அறிகின்றோம்.

இந்த அடக்குமுறைச் சட்டத்தைக் கொக்கு வடிவமெடுத்த பகாசூரன் என்னும் அரக்கனுக்கும் இந்த அரக்கன் வயிற்றைக் கிழித்துக் கொண்டு வெளிப்பட்ட ஸ்ரீகிருஷ்ண பகவானை, சுதந்திர தேவிக்கும் ஒப்பிட்டு கேலிச் சித்திரத்தை அமைத்தார் பாரதியார்.

பத்திரிகை அடக்குமுறைச் சட்டத்திற்குள் சிக்காமல் எழுதும் நுட்பங்களைப் பாரதியார் அறிந்திருந்திருந்தார் என்று

கூறப்பெற்றபோதிலும், அன்றைய சென்னை மாநில அரசு, இந்தியா மீது- பத்திரிகை மீது அடக்குமுறைச் சட்டத்தை ஏவி வழக்கு தொடர்ந்தது.

'இந்தியா' மீது வழக்கு

1908 ஜூன் மாதத்திலேயே 'இந்தியா'வில் வெளிவந்து கொண்டிருந்த சில கட்டுரைகள் 'ராஜத்துவேஷ'க் குற்றச்சாட்டிற்கு உரியன என்று காரணங்காட்டி, இந்தியா மீது நடவடிக்கை எடுக்க சென்னை அரசு ஆலோசிக்கத் தொடங்கிவிட்டது.[28]

ஆகஸ்டு 8, 1908 இல் 'இந்தியன் பீனல்கோடின்' 124ஏ, 153ஏ, 505ஆம் பிரிவுகளின்கீழ் இந்தியா மீது வழக்கு தொடர அரசு ஆணை வெளியிடப்பட்டது.

29.2.1908 முதல் 27.6.1908 வரையில் வெளிவந்த இருபது கட்டுரைகள் 'ராஜத்துவேஷ'க் குற்றத்திற்குரியன என்று தொடுக்கப் பெற்றன. இவற்றுள் இறுதியாகப் பின்வரும் மூன்று கட்டுரைகள் தேர்வு செய்யப்பெற்றன.

1. மஹாபாரதக் கதைகள் - 2.5.1908
2. எத்தனையோ கொள்ளைகளில் இதுவும் ஒரு கொள்ளை - 23.5.1908
3. ஏன் காலத்தை வீணாக்க வேண்டும் - 2.6.1908

இந்தக் காலகட்டத்தில் இந்தியாவின் ஆசிரியராகவும் அச்சிடுபவராகவும் எம். சீனிவாச அய்யங்கார் என்பவர் பெயர் பத்திரிகையில் அச்சிடப்பெற்றிருந்ததால் 'ஒன்றுமறியாதா' அவர் ஆகஸ்டு 20, 1908இல் கைது செய்யப்பட்டார். உண்மை ஆசிரியரான பாரதியாரும் உண்மையில் உரிமையாளரான எஸ்.என். திருமலாச்சாரியாரும் புதுச்சேரிக்குக் தப்பிச்சென்றனர். எம். சீனிவாச அய்யாங்கார் வாக்குமூலத்தில் முற்கூறியக் கட்டுரைகள் பாரதியாரால் எழுதப்பட்டன என்று தெரிவிக்கப் பட்டது. குற்றம் செய்யாத சீனிவாச அய்யங்காருக்கு ஐந்து வருஷம் தண்டனை கிடைத்தது.

தமது கட்டுரைக்களுக்குப் பொறுப்பேற்காமல் பாரதியார் புதுச்சேரி சென்றதாக அவருடைய நண்பர் எஸ்.ஜி. இராமாநுஜுலு நாயுடு பின்வருமாறு கண்டித்துள்ளார்.

"தம்மை நம்பிய ஒருவரை ஆபத்தில் சிக்கவைத்துவிட்டுத் தாம் தூரம் போய்விட்டமை பாரதியாரின் சரித்திரத்தில் ஒரு பெரிய களங்கமேயாகும்".

16.11.1908இல் சுதேசமித்திரனும் சீனிவாச அய்யாங்கார் குற்றமற்றவர் என்பதை பின்வருமாறு எழுதியது.

"ஸ்ரீநிவாசய்யாங்கார் குற்றமுள்ள வியாசங்களை எழுதினவரல்ல. எழுதினவரும், அந்தப் பேப்பருக்குச் சொந்தக்காரரும் அகப்படாமல் மறைந்துபோனார்கள்... துவக்கத்திலேய கவர்ன்மெண்டார் எச்சரித்திருந்தார்களானால் இப்போது ஓடிப்போயிருக்கிற எடிட்டரும் புரோப்பரைட்டரும் அப்படிப்பட்ட வியாசங்கள் தோன்ற இடங்கொடுத் திருக்கமாட்டார்கள். அவைகளால் விளையும் தீங்கும் குறைந்து இருக்கும்."

சுதேசமித்திரனின் முற்கூறியக் கருத்தின் இறுதிப் பகுதி 'தந்திரோபயமாக' எழுதப்பட்டதேயன்றி, பாரதியாரின் இதழியல் கோட்பாட்டின் தீவிரத்தன்மையைப் பிரதிபலிக்கவில்லை. புதுச்சேரி 'இந்தியா'வில் இந்தியா கேஸ் எனும் தலைப்பில் பாரதியார் எழுதியதிலும், கட்டுரைகளுக்கு அவரே பொறுப்பு என்பதைக் குறிப்பிடவில்லை.

பிரிட்டிஷ் தொழிலாளர் கட்சித் தலைவராக இருந்த ராம்ஸே மெக்டனால்டுவிற்கு 1914இல் பாரதியார் எழுதியக் கடிதம் 'இந்து' இதழில் வெளிவந்தது. இதில் அவர் சீனிவாசர் பற்றியும் பாண்டிச்சேரிக்குதாம் சென்றதைப் பற்றியும் எழுதியுள்ளார். அதன் தமிழாக்கம், வருமாறு:-

"பத்திரிகையை நடத்தும் பொறுப்பில் நான் இல்லை. ஆதலால் வேறு ஒருவர் சிறைக்கு அனுப்பப்பெற்றார். என்னுடைய பொதுஜனசேவை எதிர்பாராத விதமாகத் தடைப்பட்டது. தற்காலிகமான தடை என்று நான் நம்புகின்றேன். அரசின் குருட்டுத்தனம், போலீசின் பொய்யுரைகளுக்காகத் தியாகி என்று பெயரெடுக்கும் விருப்பார்வத்தில் எனக்கு விசேஷமான பற்று இல்லை. எனவே பிரெஞ்சுக் கொடி பறக்கும் புதுச்சேரியில் தஞ்சமடைந்தேன்".

நண்பர்களின் வற்புறுத்தல் காரணமாகவும் பிரிட்டிஷ் ஏகாதிபத்ய எதிர்ப்பும் பிரசாரத்தைத் தொடர்ந்து நடத்த வேண்டும் எனும் கொள்கையினாலும் பாரதியார் கைது செய்யப்படுவதைத் தவிர்த்து புதுச்சேரி சென்றார் எனும் விளக்கமும் கூறப்பட்டு வருகின்றது.

ராஜத்துவேஷத்திற்குரியன என்று குற்றம் சாட்டப்பெற்ற மூன்று கட்டுரைகள் அடங்கிய ‘இந்தியா’ இதழ்கள் கிடைக்கவில்லை. ஆனால் முதல் இரு கட்டுரைகளின் சில பகுதிகளின் ஆங்கில மொழியாக்கங்கள் மட்டும் ‘மெட்ராஸ் நேடிவ் நியூஸ் பேப்பர் ரிபோர்ட்’டில் கிடைத்துள்ளன.

முதல் கட்டுரையான ‘பிரிட்டிஷ் ஆட்சியின்கீழ் நீதி’யில் கூறப்பெற்றுள்ள சில கருத்துகள் வருமாறு:

“நமது பழங்கால அரசர்களைப் பற்றிய கதைகளில் அந்த அரசர்கள் அவர்களுடைய மிகச் சாதாரண குடிமக்களின் மொழிகளையும் சீற்றத்தையும் கண்டு அச்சமுற்றதை அறிகிறோம். ஆனால், இன்று பிரிட்டிஷ் கட்சியில் நீதி எப்படி வழங்கப்படுகின்றது? ஓர் இந்தியக்குடிமகனை ஒரு வெள்ளையன் கொன்றுவிட்டால், அதற்காக அவனை எந்த நீதிமன்றமும் தண்டித்துவிடமுடியாது. ஓ! பாரத புத்திரர்களே! நமது இன்றைய நிலைமையைப் பார்க்கும்பொழுது நம் நாட்டின் பழங்காலத்து நாய்கள் கூட நன்றாக வாழ்ந்தன.[29]

இரண்டாவது கட்டுரையில் “பொழுதுதெல்லாம் எங்கள் செல்வம் கொள்ளை கொண்டுபோகவோ? நாங்கள் சாகவோ?” எனும் பாரதியார் கவிதை வரிகளை நினைப்பூட்டும் வகையில் சில கருத்துகள் கூறப்பெற்றுள்ளன. சுயராஜ்யம் ஒன்றோ வெள்ளையார்களின் இந்தியச் செல்வத்தை வற்றடிக்கும்; கொள்ளையைத் தடுத்து நிறுத்தும், என்று நீண்ட எடுத்துக்காட்டுகளுடன் சாற்றப்பெற்றுள்ளது.

நவம்பர் 21, 1908இல் ‘இந்தியா’வில் இந்தியா கேஸ் எனும் தலைப்பில் எழுதப்பெற்றத் துணைத் தலையங்கம் இதழின் கோட்பாட்டைப் பின்வருமாறு விளக்கியுள்ளது.

“அவருக்குக் கிடைத்த தண்டனை சரியென்றும் அவர் குற்றவாளி என்றும் நாம் ஒப்புக் கொள்ளவில்லை. ஆனால், நாம்

சொல்லக் கடமைப்பட்டிருப்பதும் ஒன்றுண்டு. நம்முடைய தேசபக்தியை அவர்கள் ராஜத்துரோகம் (இ.பி.கோ.124A செக்ஷன் என்று சொல்லுகிறார்கள். நமது சுதேசபிமானத்தை அவர்கள் 'அன்னியரைப் பகைத்தல் (153 செக்ஷன்) என்கிறார்கள். நாம் அதற்குச் செய்வதென்ன?"

புதுச்சேரி 'இந்தியா'வின் இதழியல் கோட்பாடுகள்

பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத்தின் பத்திரிகை அடக்குமுறைகள் நேரடியாக பிரெஞ்சு ஆட்சியில் உள்ள புதுச்சேரியில் செயலற்றுப் போயின. இருப்பினும் சென்னை மாநில அரசு, புதுச்சேரி பிரெஞ்சு ஆளுநர்க்கு, 1908 நவம்பரில் வெளிவந்த நான்கு 'இந்தியா' இதழ்களையும், டிசம்பரில் வெளிவந்த இரு இதழ்களையும் இணைத்து ஒரு கடிதம் எழுதி, 'இந்தியா'வை ஒடுக்க உதவிபுரியுமாறு வேண்டுகோள் விடுத்தது.[30]

இந்தக் கடிதத்திற்கு பிரெஞ்சு ஆளுநர் தாம் எழுதிய பதில் கடிதத்தில் பிரெஞ்சு நாட்டில் அனுமதிக்கப்பெற்றுள்ள பத்திரிகை சுதந்திரத்தை மேற்படி 'இந்தியா' இதழ்கள் மீறவில்லையென்றும் இதனால் எவ்வித நடவடிக்கைகளையும் நீதிமன்றங்களில் எடுக்க இயலாது என்று கூறிவிட்டார்.

இந்த முயற்சிகளை யெல்லாம் அறிந்த பாரதியார், 'இந்தியா' வில் ஜனவரி 2, 1909இல் பின்வருமாறு எழுதினார்.

''பிரான்ஸ் தேசத்திற்கும் இங்கிலாந்திற்கும் அநேக நூற்றாண்டுகளாக விரோதமுண்டு. பிரான்ஸ் இங்கிலாந்தை 'துரோகி இங்கிலாந்து' என்று சொல்வது வழக்கம். இவ்வாறிருக்கச் சமீபத்தில் சில காரணங்களை உத்தேசித்து இவ்விரண்டு தேசங்களுக்கிடையே நட்புடன்படிக்கை நடந்திருக்கின்றது. இதை வைத்துக்கொண்டு பிரிட்டிஷ் பார்லிமெண்டில் மிஸ்டர் ரீஸ் என்பவன் 'பிரான்ஸ் தேசத்தில் பிரிட்டிஷ் ராஜத்துரோகப் பத்திரிகைகள் பிரசுரமாகின்றன. பிரான்ஸ் நம்முடன் சினேகமாயிருப்பதால் அதைத் தடுப்பதற்குரிய முயற்சிகள் செய்யும்படி கேட்டுக்கொள்ளவேண்டும்' என்று பேசியிருக்கிறான்.

'ராஜத்துரோகம் என்றால் என்ன அர்த்தம்? சாமானியமாக பிரிட்டிஷ்' சட்டத்துக்குட்பட்டுச் சில சுதந்திரங்களுக்கும் பாடுபட

வேண்டுமென்று எழுதினாற்கூட அது ராஜத்துரோகமென்பதாகப் பிரிட்டிஷ் கவர்ன்மெண்டார் புத்தியிலே படுகிறது. இதைப் பிரான்ஸ் தேசத்தார் எப்படி தடுக்க இச்சிப்பார்கள்? பிரான்ஸ் தேசமே ஸ்வதந்திர தேவியின் ஜன்மபூமி. அங்கேபோய் ஆங்கிலேயர் ஸ்வதந்திர தேவியைக் கொல்வதற்கு மருந்து கேட்கப் போவது அவர்களுடைய மண் புத்தியைக் காட்டுகிறது".

1908 நவம்பர் 21இல் இந்தியாவில் வெளிவந்த 'முதற்பிரயத்தனம்' எனும் கட்டுரையில் 'நமது செவிலித்தாயென்று கருதற்குரியதாகிய பிரான்ஸ் தேசத்தின்' என்று பாரதியார் குறிப்பிட்டுள்ளார்.

பிரெஞ்சுப் புரட்சியின் முழக்கங்கள்

பிரெஞ்சுப் புரட்சியின் முழக்கங்களான "ஸ்வதந்திரம் ஸமத்துவம் ஸகோதர தத்துவம்" என்பனவற்றைத் தமிழிலும் பிரெஞ்சு மொழியிலும் இந்தியாவின் முகப்பு மகுடங்களாக அமைத்தார்.

'இந்தியா'வின் முகப்பு மகுடச்சிறப்பை "நமது இந்தியா பத்திரிகையின் இரண்டாவது ஆண்டு" என்னும் தலையங்கக் கட்டுரையின் பின்வருமாறு 'இந்தியா' வருணித்துள்ளது.

"நமது 'இந்தியா' தேவியானவள் சூடிய சத்-சித்-ஆனந்தமான ஸ்வதந்திரம், ஸமத்துவம், ஸகோதரத்துவம் ஆகிய தத்துவ த்ரயங்களை இந்நாடு முழுவதும் பிரசாரம் செய்து அதைத் தனது முப்பது கோடி மக்களும் அனுஷ்டிக்குமாறு அவைகளுக்கு இருப்பிடமான நவபுர மென்னும் இப்புதுவை மாநகரின்கண் வீற்றிருந்து வருகிறாள்."

புதுவை 'இந்தியா'வின் இரண்டாவது வருஷம்

1909 அக்டோபர் 16இல் வெளிவந்த "*நமது இரண்டாவது வருஷம்*" எனும் தலையங்கத்தில் இந்தியாவின் இதழியல் கோட்பாடுகள் பற்றிய தொகுப்புரை அடங்கியுள்ளது. இதிலிருந்து சில பகுதிகள், பின்வருவன.

"ஐக்கியம், தைரியம், வீரம், தீரம், விடாமுயற்சி, நிஷ்காம்ய தேசஸேவை, ஸாத்வீக எதிர்ப்பு, தேச சத்திநிலை, தேசபக்தி

இவைகளைக் கைகொண்டு ஸ்வதேசீயம், வர்ஜனம், ஜாதீயக் கல்வி, ஸ்வராஜ் ஆகிய இந்நான்கு தர்மானுஷ்டானங்களையும் செய்து வரவேண்டியதுதான் பாரத புத்ரர்களின் கடமை என்பதை நாம் சுடர் விளக்கித் தூண்டுகோல் போலவும் நாட்டிற்குக் கையிலிலங்கு கனியென எடுத்துக்காட்டி வந்தோம். ஸ்ரீபாரத நாட்டின் முற்கால பெருமை, தற்கால சிறுமை, பாரதர்களின் புராதான நாகரிகங்கள், ஆரியர்களின் மேன்மை, திடபக்தி, தியாகம், தன்னல வெறுப்பு, ஜீவகாருண்யம், பரோபகாரம், தேசமஹாவிஸ்வாஸம் இவற்றைப் பற்றி வியாஸங்கள் எழுதிவந்தோம்.

'பிரிட்டிஷ் ஏகாதிபத்யத்தின் கொடுமைகளை எடுத்துக் காட்டி நியாய மார்க்கத்தை அவர்களுக்கு உபதேசித்துவந்தோம். . பாரதமாதாவின் முகம் உல்லாஸமாயும், திருவுள்ளம் உவப்பாயுமுள்ள திவ்ய கைங்கரியத்தை தம்மாலியன்ற வளவு கிரமப்படி நமது பத்திரிகை மூலமாய் நமது கடமையாகச் செய்து வருகிறோம்."

சில புதுமைகள்

மேலாண்மை, வடிவமைத்தல், திட்டமிடுதல் முதலானவற்றில் மண்டையம் குடும்பத்தினர் தொடக்கம் முதல் செல்வாக்கு செலுத்தியதுபோல புதுச்சேரி 'இந்தியா'விலும் செல்வாக்கு செலுத்திவந்தனர். சில மாற்றங்களும் நிகழ்ந்தன.

மார்ச்சு 13, 1909ஆம் இதழில் 'இந்தியா' பத்திரிகையில் 'ஓர் புதிய அபிவிருத்தி' எனும் தலைப்பில் எழுதப்பெற்ற பின்வரும் பகுதி ஒரு புதுமையை அவாவியது.

"அடுத்த வாரம் முதல் இன்னுமொரு புதிய அலங்காரம் நமது பத்திரிகைக்குச் செய்யக் கருதியிருக்கிறோம். அதாவது தலைப் பக்கத்திலுள்ள ஒரு சித்திரம் மட்டுமேயன்றிப் பக்கத்துக்குப் பக்கமுள்ள முக்கியமான வர்த்தமானங்களை விளக்குவதன் பொருட்டு அங்கங்கே சிறிய படங்களும் சித்திரங்களும் போடுவதாக உத்தேசம். தென்னிந்தியாவிலே இம்மாதிரி ஏற்பாடு தமிழ் இங்கிலீஷ், தெலுங்கு, கன்னடம் முதலிய எந்த பாஷைப் பத்திரிகைகளிலும் இதுவரை கிடையாது. நாம் நூதனமாகச் செய்யப்போகிறோம்". ஆனால் இந்த 'உத்தேசம்' நடைமுறைப் படுத்தப்படவில்லை.

இதழோடு அநுபந்தம்

அரவிந்தரின் சொற்பொழிவின் தனிச்சிறப்பைக் கருதி அதைத் தமிழாக்கம் செய்து தனி அநுபந்தமாக ஜூலை 3, 1909 இதழில் இணைத்து வெளியிடப்பெற்றது.

பிற மொழிப்பத்திரிகையின் கருத்துப்படங்களை வெளியிடுதல்

'இந்தியா'வில் 1909 செப்டம்பர் 18இல் ஐரோப்பிய பத்திரிகையான 'பஸ்கினோ"வில் இருந்தும், 1909 அக்டோபர் 2இல் இருந்தும் இரு கருத்துப்படங்கள் வெளியிடப்பெற்றன. இவ்விரண்டின் சித்திரவிளக்கங்களில் முதல் சித்திரம் பிரிட்டிஷ் ஏகாதிப்பத்தியத்திற்கு உண்டாகும் ஆபத்தை முன்கூட்டியே எச்சரிப்பதாக அமைந்துள்ளது. இந்தச் சித்திரம் "பாரத சுதேசிய தர்மம் என்று தமிழிலும், இங்கிலாந்து தேசத்தவன் - ஜிங்கோ இம்பீரியலிஸ்டு, "என்னுடைய பலமான கோட்டை இடிந்து விழ ஆரம்பித்துவிட்டதே என்று என் உடல் நடுநடுங்குதே" என்கிறான். "பஸ்கினோ பத்திரிகை" என்னும் குறிப்புரையுடனும் வெளி வந்துள்ளது. இந்தக் குறிப்புரையின் பிரெஞ்சு மூலமும் தரப்பட்டுள்ளது.

சித்திரவிளக்கம்

'இவ்வாரத்திய சித்திரமானது ஐரோப்பாவில் பிரசுரமாகும் பஸ்கினோ' பத்திரிகையில் இருந்து எடுத்துப் போடப் பட்டிருக்கிறது. பிரிட்டிஷர்கள் ஜீவனத்துக்கும் பெருமைக்கும் பலத்திற்கும் அடிப்படை அஸ்திவாரம் இந்தியா. இந்த அடிப்படையின் மேல் மற்ற கனடா, ஆஸ்திரேலியா, எகிப்து, கயானா, கினி, கொலம்பியா, டிராக்ஸ்வால், ஸொமாலி, ஜமாய்க்கா, மால்டா, ஜிப்ரால்டல் முதலிய நாடுகள் கம்பங்கள் போல் அடுக்கப் பட்டிருக்கின்றன. இதற்குமேல் பிரிட்டிஷ் ஏகாதி பத்தியத்தின் கோட்டை கொத்தளங்கள் கட்டப் பட்டிருக்கின்றன. அதன்மேல் மேற்படி ஏகாதிபத்தியத்தின் நிரங்குச அதிகாரக் கொடி பறக்கிறது. அதை ஓர் இங்கிலீஷ்காரன் நிர்ப்பயமாயும் நிர்விசனமாயும் பிடித்துக்கொண்டிருந்தான். இந்தியா நாட்டின்கண் எங்குப் பார்த்தாலும் 'பாரத ஸ்வேத தேசிய தர்மம்' ஆரம்பித்த பிறகு, அந்த அஸ்திவாரம் இடிந்து விழுந்துக்கொண்டே இருக்கிறது. இப்போது

பல கொடிய சட்டங்களில் பாரத ஸ்வதேசீய தர்மத்தை அடக்கியாள ஆரம்பித்து விட்டபடியால் இந்த அஸ்திவாரம் இடிந்துவிழ ஆரம்பித்துவிட்டது. முழுதும் விழுந்து விட்டால் என்ன செய்கிறது என்று இங்கிலீஸ்காரன் (ஜிங்கோ) ஒவ்வொருவனும் நடுங்குகிறான். இப்பேர்பட்ட கொடிய சட்டங்களைக் கொண்டு ஸ்வதேசீய தர்மத்தை அடக்கி நடத்தினால் பிரிட்டிஷர்கள் ஏகாதிபத்தியத்திற்கே உண்டாகும் ஆபத்தை பிரிட்டிஷர்களுக்கும் முன்னாடியாக எச்சரித்து வைக்க பஸ்கினோப் பத்திரிகை இதை வெளியிட்டிருக்கிறது.

இதர ஐரோப்பியர்களும் உலகமும் இங்கிலீஷ்காரருடைய ஜீவதாரத்திற்குக் காரணம் 'இந்தியா'தான் என்பதை இந்த மர்ம ஸ்தாலாஹாஸ்யத்தைத் தெரிந்துக்கொண்ட பிறகுங்கூட இங்கிலாந்தில் பால்லிமெண்டார் முதலியர் பலர் இதை நன்கறிந்தும் இன்றும் இந்தியாவைப் பல கொடிய அயோக்கியமான துஷ்ட சட்டங்களால் அடக்கியாண்டு வர எண்ணங்கொண்டு அப்படியே நடத்திவருவதே விந்தையே!!!

பிரெஞ்சுப் பத்திரிகையின் கேலிச் சித்திரத்தைப் பயன்படுத்தி, சுதேசிய இயக்கம், பிரிட்டிஷ் ஏகாதிபத்ய எதிர்ப்பியக்கம் இரண்டையும் 'இந்தியா' அதன் இதழியல் கோட்பாட்டிற்கு ஏற்பாகத் திறமையாக நடத்தியுள்ளது.

முற்கூறியவற்றுள் இரண்டாவது விகட சித்திரம் பொதுவாகப் பெங்காளிச் சித்திரம் என்று குறிப்பிடப்பெற்றுள்ளது. எந்த இதழில் இருந்து எடுக்கப்பெற்றது என்பது குறிப்பிடப்படவில்லை.

இந்தச் சித்திரம் காலச் சக்கரத்தின் சுழற்சியிலே சிறுமைச் சேற்றில் ஆழ்ந்துகிடந்த, நீசபாரதம் போய் மகாபாரதம் பிறக்கப்போவதைச் சித்திரித்தது.

அக்டோபர் 2, 1909இல் "வருங்காலத்து பாரத ஜாதி ஓர் திருஷ்டாந்தம்'' எனும் தலைப்பில் விகடச் சித்திரம் வெளியிடப்பெற்றது. சித்திரவிளக்கம் 50 வருஷங்களின் பிறகு பாரத ஜாதி எனும் தலைப்பில் வழக்கம்போல் இரண்டாம் பக்கத்தில் பின்வருமாறு எழுதப்பெற்றது.

"50 வருஷங்களின் பிறகு பாரத ஜாதி இன்ன மாதிரியாக இருக்குமென்பதற்கு ஓர் திருஷ்டாந்தமாக எழுதப்பட்டிருக்கும் பெங்காளிச் சித்திரமொன்றை இன்று முதற்பாகத்தில் பதிப்பித்திருக் கிறோம். 50 வருஷங்களின் பிறகு பாரத நாட்டில் ஆயத்தச் சட்டமிராது. ஜனங்களுக்கு வீரத் தன்மையிருக்கும். ராஜாங்கம் சுய ஆட்சிமுறை தழுவியதாயிருக்கும். அப்போது நமது வீரர்கள் பர தேசத்தாருடன் போர் செய்யப் புறப்படும் போது வாழ்க்கைத் துணைவியரான சுந்தரிகள் வாள்கொண்டு கையில் கொடுப்பார்கள். இக்கருத்துக்களெல்லாம் சித்திரத்தலே அமைந்திருக்கின்றன. இது மிகவும் அழகிய சித்திரம். முக்கிய அமிசங்களிலொன்றாகிய சித்திர சாஸ்திரத்திலும் நம்மவர்கள் உண்மையான தேர்ச்சிபெற்று வருகிறார் களென்பதற்கு இது நல்ல அடையாளம்."

மூன்று புதிய பகுதிகள்

இலக்கியப் பகுதி, ராஜரீகப் பகுதி, கைத்தொழிற் பகுதி எனும் தலைப்புகளில் கவிதைகள், கட்டுரைகள் இந்தியாவில் வெளியிடப் பெற்றுவந்தன.

'இலக்கியப் பகுதி'யில் பாரதியாரின் கவிதைகள் "கவிதா தேவி அருள்வேண்டல்" (10.1.1909), "குருகோவிந்தஸிம்ஹ விஜயம்" (30.1.1909) ஆரவிந்தரின் கவிதையொன்றின் தமிழாக்கமான 'கடல்' (12.6.1909) முதலானவை வெளியிடப்பெற்றன. பாரதியின் உரைநடைக் காவியமான 'ஞானரதம்' பிப்ரவரி 13, 1909இல் தொடங்கியது.

நவீன படைப்பிலக்கியம்

'இந்தியா' 1906இல் இருந்தே நவீன படைப்பிலக்கியத்தை வெளியிடும் இதழியல் கோட்பாட்டைக் கொண்டிருந்தது. தமிழ்ப் பேரறிஞர் திருமணம் செல்வகேசவராய முதலியாரின் 'சுற்பலங்காரம்' - CHSTITY (ஜூன் 23, 1906); த்ருட சீலன் - A NOVEL WITH A HERO - BY DREAMER" (ஜூலை 14, 1906); ஜி. வேணுகோபால் நாயுடுவின் 'எனது நெடுங்கனவு', பாரதியாரின் "ஸ்வர்ணகுமாரி" (பிப்ரவரி 2, 1907) முதலான படைப்பிலக்கியங்கள் வெளிவந்தது.

1909 ஜனவரி 2இல் 'சிறுவர்களுக்கான கதை' எனும் தலைப்பில் வெளிவந்த "பஞ்சகோண கோட்டை" எனும் சிறுகதை தலித்திய நோக்கில் எழுதப்பெற்றக் கதை.

பாரதியார் பரிமளா எனும் மொழிபெயர்ப்பு புதினத்திற்கு இந்தியாவின் தலையங்கத்தில் "ஆறு காளங்கள் வரை மதிப்புரை வரைந்தார்'' என்று பாரதியாரின் நண்பரும் எழுத்தாளரும் இதழாசிரியருமான பிரஜாலுகூலன் எஸ்.ஜி. இராமாயலுஜுலு நாயுடு எழுதியிருக்கின்றார். பங்கிம் சந்திரரின் பரிமணர் எனும் வங்க மொழி துப்பறியும் புதினம் என்று குறிப்பிட்டு, அதன் தமிழாக்கத்தை நேரடியாக வங்க மொழியில் இருந்து செய்யாமல், கன்னட மொழியில் இருந்து டி.வி. கிருஷ்ணசாமி சாஸ்திரியவர்களைக் கொண்டு தமிழில் மொழிபெயர்த்து 1907இல் எஸ்.ஜி. இராமாயலுஜுலு நாயுடு வெளியிட்டார். 'பரிமளா, பங்கிம் சந்திரர் எழுதியது என்று குறிப்பிடப்பட்டிருந்தாலும் அது அவருடையதன்று எனத் தெரிகின்றது. எப்படியிருந்தாலும் ஒரு படைப்பிலக்கியத்தைக் குறித்துத் தலையங்கம் எழுதப்பெற்றதாகக் கூறப்படும் செய்தி குறிப்பிடத்தக்கது. அந்தத் தலையங்கம் வெளிவந்ததாகக் கூறப்படும் இந்தியா பற்றிய விவரம் கிடைக்கவில்லை. இந்தச் சந்தர்ப்பத்தில் சுதேசமித்திரன் 1895 பிப்ரவரி 18இல் நாவலாசிரியர் எஸ். வி. குருசாமி சர்மாவின் ''பிரேமகொவத்யம்'' எனும் புதினத்தின் சுருக்கத்தையும் பாராட்டுரையையும் தலையங்கமாக எழுதியது என்பதும் நினைவு கூரத்தக்கது.

1906 டிசம்பர் 8இல் இந்தியாவில் வெளிவந்தத் தலையங்கத்தில் ''மதுர கலைகள் (FINE ARTS) தமிழ் நாட்டிலேயே எவ்வாறு இருக்கிறதென்பதைப் பற்றி'' ஆய்வு செய்துள்ளார் பாரதியார். கலைப்பஞ்சம் தோன்றியிருப்பதாகக் காரணம் குறித்துப் பாரதியார் எழுதியதாவது;

"பொதுவாகக் கூறுவோமாயின் ஒரு தேசத்து ஜனங்கள் மெய்யான உற்சாகமும் வீரத்தன்மைகள் புகழும் கொண்டிருக்கும்போது அங்கே பெரிய கலையெழுச்சி ஏற்படுகின்றது. அழிவுக்காலங்களிலேயும் தாழ்ச்சிக் காலங்களிலேயும் இடையிடையே ஜனங்கள் தாழ்நிலையைச் சபிக்கும் பொருட்டு மஹான்கள் தோன்றுவார்களேயல்லாமல் கலையின் வளர்ச்சி ஏற்படமாட்டாது.

'தமிழர்களாகிய நமக்குள்ளே ஆண்மை போய்விட்டது. வீரியம் போய்விட்டது. நமக்குத் தேசம் கிடையாது, ராஜ்யம்

கிடையாது; சுயாதீனம் கிடையாது. இந்த நிலைமையில் ஸரஸ்வதி இந்நாட்டடிலே வந்து அவதரிப்பாளா?"

'சுதந்திரதேவியின் துதி' எனும் தேசியப் பாடலில் (1909) பாரதியார், 'தேவியின் ஒளி பெறாத நாட்டில்', 'காவிய நூல்கள், ஞானக் கலைகள் வேதங்களுண்டோ' எனும் கேள்வியை எழுப்பியுள்ளதும் இங்குச் சிந்திக்கத்தக்கது.

இலண்டனில் இருந்து வ.வே.சு. ஐயர் 'வி.வி. சுப்பிரமணிய ஐயர்,' எனும் பெயரில் எழுதிவந்த "(இத்தாலி தேசத்தை அடிமை நிலையின்றும் மீட்டிய) ஜுஸேம் கரிபால்டி சரித்திரம்" முதல் அத்தியாயம் மார்ச் 20, 1909இல் பக்கம் 6இல் தொடங்கியது.

ஓர் அரியக் குறிப்பு

இந்த வரலாற்றுத் தொடரை வெளியிடுவதைக் குறிப்பிட்டு பாரதியார் "இவ்வாரம் பத்திரிகையில் ஓர் முக்கிய விஷயம்" எனும் தலைப்பில் எழுதிய பின்வரும் குறிப்பு இதழியல் கோட்பாடு 'உலக சரித்திர'த்தையும் வெளியிடுவதின் முக்கியத்துவத்தை உணர்த்தியது.

"இதிகாசம் (சரித்திரம்) எழுதும் தொழில் நம்மவர்க்குள்ளே மிக துர்லபமாய்விட்டது. உலக சரித்திரம் அறியாமையால் நம்மவர்கள் விழிக்கண் குருடர்களாய் லௌகிக விஷயங்கள் ஒன்றுக்குமே தகுதியில்லாமல் போய்விட்டார்கள். இந்த நிலைமையில் யாரேனும் ஓர் பண்டிதர் கல்வித்திறனும் அறிவு விலாசமும் ஹிருதயத் தூய்மையும் பெரிதுடையராய், ஒரு சரித்திர நூல் எழுத முற்படும்போது நமக்குச் சொல்லுதற்கரிய குதூகலமுண்டாகிறது. இப்பெருந்தொழில் செய்யப் பாரத்துவாஜ குலோத்பவராகிய ஸ்ரீசுப்பிரமணிய அய்யர் (இவர் இப்போது லண்டலில் பாரிஸ்டர் பரீசைக்குப் படித்து வருகின்றார்) என்ற வித்வான் தலைப்பட்டு நமது பத்திரிகைக்கு "கரிபால்டியின் சரித்திரம்" என்ற நூலினை எழுதியனுப்பியிருக்கிறார்.

இவர் ஆரம்பத்திலேயே பக்குவநிலை காண்பிக்கிறா ரென்பது அதைப் படிப்பவர்களுக்கே விளங்கும். நாளுக்கு நாள் இவரது திறமை சுக்லபக்ஷத்துச் சந்திரகலை போல வளர்ச்சி பெறவேண்டுமென்று தமிழ்த் தெய்வத்தின் திருவடிகளைச் சிந்திக்கின்றோம்."

அரசியல் உரிமைக் கோட்பாடுகளை விவாதித்து, மக்கள் உரிமையை முதன்மைப்படுத்திய பிராஞ்சு அரசியல் தத்துவ ஞானி ரூஸ்ஸோ (1712-1778) வின் 'சமுதாய ஒப்பந்தம்' னும் நூலைத் தமிழில் முதன்முதலில் மொழிபெயர்க்கும் முயற்சியை வ.வே.சு. ஐயர் மேற்கொண்டார். தமிழ் வாசகர்களுக்கு அரசியல் அறிவைத் தமிழிலேயே சுட்ட விரும்பிய வ.வே.சு. ஐயர் முயற்சிக்கு 'இந்தியா' வாய்ப்பளித்தது. இந்த மொழிபெயர்ப்பு 1909 ஜூன் 5ஆம் தேதி இதழில் இலக்கியப் பகுதியில் 'ழான்ழாக் ரூஸோ எழுதிய ஜன சமூக ஒப்பந்தம்' எனும் தலைப்பில் வெளிவரத்தொடங்கியது. ஆனால் இந்தியாவில் எவ்வளவு காலம் வெளிவந்தது; முற்றுப் பெற்றதா? என்பதை அறிய முடியவில்லை. எமது பார்வையில் 1909 செப்டம்பர் 18ஆம் இதழில் 'ரூஸ்ஸோ' வந்துள்ளது.

ராஜரீகப் பகுதி

அரசியல் நடப்புகள், செய்திகள் பல ராஜரீகப் பகுதியில் வெளியிடப்பட்டன. சான்றிற்கு ஓர் இதழை அறிவோம். பிப்ரவரி 20, 1909இல் பின்வரும் அரசியல் செய்திகள் வெளிவந்தன. 1. தென்காசி ஸ்ரீகோமதி நெசவு தொழிற்சாலை, 2. ஸ்ரீமான் தீனநாதரை விட்டுவிட்டார்கள் (ஹிந்துஸ்தான் பத்திராசிரியர்), 3. நமது லண்டன் கடிதம். (ஆங்கிலம்) உதவி ஸிஸிலித் தீவு பூகம்பத்திற்கு), 4. ருஷிய அராஜமானிகள் 5. ஸ்ரீகுப்தாவின் வேலை (இந்தியா கவுன்சில் மெம்பராவிட்டார்) 6. ஓர் உபாதானம் (ஆல் இந்தியா மகமடன் லீக் தலைவர் அமீர் அலி கான்சாகிபு - லார்டு மார்லியைச் சந்தித்தது.

ராஜரீகப் பகுதியில் குறிப்பிடத்தக்கது வ.வே.சு. ஐயரின் 'லண்டன் கடிதங்கள்' வெளியீடாகும். ஏனெனில் தேசிய சர்வதேசிய அரசியல் நடப்புகள், அயல் நாடுகளில் இந்தியப் புரட்சியாளர்கள் நடவடிக்கைகள் தமிழ், தமிழ்ப் பண்பாடு பற்றியப் பெருமிதங்கள் முதலானவை லண்டன் கடிதங்களில் பேசப்பட்டுள்ளன. 'இந்தியா' வின் இதழியல் கோட்பாடு பாரதியுடன் கருத்து வேற்றுமை முதலானஎவற்றிற்கு பிரச்சனை யாவும் லண்டன் கடிதங்கள் விளக்கின.

'இந்தியா'வில் மட்டுமல்லாமல் 'சூரியோதயம்', 'விஜயா' (புதுச்சேரி இதழ்கள்) விலும் லண்டன் கடிதங்கள் வெளிவந்துள்ளன.

லண்டன் கடிதங்கள்

'இந்தியா'வில் வெளிவந்த 23 லண்டன் கடிதங்கள் எமது பார்வைக்குக் கிடைத்தன. நவம்பர் 11, 1908இல் இருந்து இந்தியாவில் லண்டன் கடிதங்கள் வெளிவரத்தொடங்கின. வ.வே.சு. ஐயர் 1907 அக்டோபர் 10இல் லண்டனில் 'பாரிஸ்டர்' என்னும் வக்கீல் பட்டம் மேற்படிப்பிற்காக லண்டன் சென்றார். ஆங்கு ஷியாம்ஜி கிருஷ்ணவர்மா, விநாயக் தாமோதர் கவர்க்கரின் நட்புக்காரணமாக தனிநபர் பயங்கர வாதம் என்ற கூறப்பெற்ற வன்முறைபுரட்சிக் கொள்கையை ஏற்றுக்கொண்டார், வ.வே.சு. ஐயர் லண்டன் 'இந்தியா ஹவுஸ்' எனும் புரட்சி வீரர்கள் எனும் இடத்தில் இருந்து எழுதியதால் "லண்டன் கடிதங்கள்' எனப் பெயர் வந்தது. லண்டன் கடிதங்கள் பற்றிய ஆய்வு என்னுடைய வ.வே.சு. ஐயர் கடிதங்கள் எனும் நூலில் (முதற்பதிப்பு 2003) நிகழ்த்தப்பெற்றுள்ளது. இங்குச் சுருக்கமாகக் கூறப்படுகின்றது. பெரும்பாலும் 'பாரதப் பிரியன்' எனும் பெயரில் வ.வே.சு. எழுதிவந்தார்.

தமிழ்நாட்டின் பெருமை பேசிய லண்டன் கடிதங்கள்

'இந்தியா'வின் இதழியல் கோட்பாட்டிற்கிணங்க வ.வே.சு. ஐயர் தமிழ்நாட்டின் வரலாற்றுப் பெருமையை 'லண்டன் கடிதங்கள்' சிலவற்றில் விவரித்துள்ளார்.

6.11.1909இல் வெளிவந்த லண்டன் கடிதத்தில், "நம்முடைய ராஜ்யம் ஸ்ரீராமன் ஆண்ட நாடு, ஸ்ரீகண்ணபிரான் விளையாடிய நாடு, அசோகன், விக்கிரமன், போஜன் களித்திருந்த நாடு" என்று கூறத்தொடங்கி, "சோழன் பாண்டியன் புரந்தளித்த தாய்த்திருநாடு" என முடித்தார் வ.வே.சு. ஐயர். இவ்வாறே ஆகஸ்டு 27, 1909இல் வெளிவந்த லண்டன் கடிதத்தில், "2200 வருஷங்களுக்கு முந்தி வடஇந்தியா முழுவதையும் ஏகசக்ராதிபதியாய் ஆண்ட அசோக சத்ரபதி, சேர, சோழ, பாண்டிய நாடுகள் தனக்கு சமதையான 'சுதந்திரமுள்ள நாடுகள்' என்று தன்னுடைய சிலாசாசனங்களில் எழுதி வைத்திருக்கிறார்" என்று வ.வே.சு. ஐயர் 1909இல் மூவேந்தர் மரபின் வரலாற்றுப் பெருமிதத்தைச் சாற்றியுள்ளது குறிப்பிடத்தக்கது.

1909 ஆகஸ்டு 21இல் வெளிவந்த லண்டன் கடிதத்தின் தலைப்பு 'திராவிடர்களின் கடமை' என்பதாகும். இந்தக் கடிதத்தின்

தொடக்க வரிகள் அரவிந்தர், பாரதியார் குறிப்பிட்ட "தேசியம், கடவுளால் அனுப்பப்பட்டது" எனும் கோட்பாட்டையும் அது செய்யப்போகும் சாதனையையும் பின்வருமாறு வருணித்துள்ளன.

"நமது பரத கண்டத்தில் இப்போது பிரவர்த்தித்து நாளுக்கு நாள் நிமிஷத்திற்கு நிமிஷம் வளர்ந்து வந்துகொண்டிருக்கிற சுதேசிய ஆவேசமானது கேவலம் மனிதனால் உண்டாக்கப் பட்டதல்ல. ஆனால் ஈசுவராலேயே சிருஷ்டிக்கப்பட்டு, அவனுடைய அவாங்கமனோ கோசரமான பலத்தினாலேயே அந்த ஆவேசம் தன்னுடைய அபிவிர்த்திக்கு எதிரிடையாகவுள்ள இடையூறுகளை யெல்லாம் வென்று பரதக் கண்டத்தை பூலோக பலங்களில் பிரதமமானதாகவும் லோகோத்தாரமான தர்மங்களை அந்தக் காரத்தில் அமிழ்த்திருக்கிற இதர தேசங்களுக்குப் போதிக்கப்போகிற தர்மம் பிரதீபமாகவும் செய்து ஜயசாலியாய் ஜகதேச ஜோதியாய் விளக்கப்போகிறது என்கிறது."

இதே கடிதத்தில் தமிழ் மொழியின் பெருமை பின்வருமாறு பெருமிதமாக எடுத்துரைத்துள்ளார் வ.வே.சு. ஐயர்.

"பழமையிலும் திறத்திலும் எழுதப்பட்டிருக்கிற நூல்களின் யோக்யதையிலும் இப்பொழுது இந்தியா முழுவதிலும் பேசப்பட்டு வருகிற எந்த பாஷையையும்விடப் பல மடங்கு சிரேஷ்ட மானதன்று யாவராலும் ஒப்புக்கொள்ளப்பட்ட தமிழ் பாஷை நம்முடைய ஜாதியாரின் அறிவின் யோக்யதையை விசதமாக விளக்குகிறது.

லண்டன் கடிதங்கள் ஏற்படுத்திய கருத்து வேற்றுமை

ஆசிரியராக மட்டும் இருந்து பாரதியார் உருவாக்கிய இதழியல் நோக்கிற்கும் திட்டமிட்டு இதழை நடத்திய உரிமையாளர் இதழியல் நோக்கும் மோதி முரண்பட வைத்தது, சில லண்டன் கடிதங்கள்.

ஷியாம்ஜி கிருஷ்ணவர்மா எனும் புரட்சியாளர் லண்டனில் நிறுவிய 'இந்தியா ஹவுஸ்' எனும் இந்திய மாணவர் விடுதியிலும் சாவர்க்கரின் புரட்சிகரக் கொள்கைகளால் ஈர்க்கப்பெற்ற மதன்லால் திங்கரா (1887-1909) எனும் பொறியியல் மாணவன் தனிநபர் பயங்காரவாதக் கொள்கைக்கு ஏற்ப கர்னல்கள் வில்லியம்

கர்ஸன்வைலி எனும் பிரிட்டிஷ் அதிகாரியை லண்டனில் 1909 ஜூலை 1இல் சுட்டுக் கொன்று தூக்குமேடை ஏறினான். சாவர்க்கர் வழிகாட்டுதலில் இந்த இளம்புரட்சி வீரனை உருவாக்கியதில் வ.வே.சு. ஐயருக்குப் பெரும்பங்குண்டு.

புதுச்சேரி 'இந்தியா'வில் மதன்லால் திங்கராவின் தனிநபர் பயங்கரவாத நடவடிக்கையை விவரமாக 'லண்டன் நகரத்தில் கொலை' எனும் தலைப்பில் லண்டன் கடிதங்களில் எழுதிவந்தார் வ.வே.சு. ஐயர். பாரதியார் தனிநபர் பயங்கரவாதத்தை ஆதரிக்கவில்லை. ஆனால் இந்தியா இதழின் உரிமையாளர் வ.வே.சு. ஐயர் கருத்தை ஆதரித்தார். இதனால் வ.வே.சு. ஐயர் கட்டுரைகள் தொடர்ந்தன. 1909 ஆகஸ்டு 21ஆம் 'இந்தியா'வின் முதல் பக்கத்தில் கர்ஸான்வைலி, அவருடன் சேர்ந்து கொல்லப்பெற்ற டாக்டர் லால்காகாளு, மதன்லால் திங்கரா ஆகியோரின் படங்கள் வெளிவந்தன. நீதிமன்றத்தில் படிக்க அனுமதி மறுக்கப்பட்ட திங்கராவில் புகழ்பெற்ற வாக்குமூலம் தமிழில் மொழிபெயர்க்கப்பெற்று 'இந்தியா'வில் செப்டம்பர் 11, 1909இல் வெளியிடப்பட்டது.

மதன்லால் திங்கரா தொடர்பான செய்தி விமர்சனங்களில் பாரதியாருக்கும் வ.வே.சு. ஐயருக்குமிடையே கருத்து வேற்றுமை ஏற்பட்டது. திங்ராவின் புரட்சிகர அரசியல் கொலையைப் பல பாராட்டுச் செய்திகளுடன் 'இந்தியா'வில் வ.வே.சு. ஐயர் பாராட்டி எழுதிவந்தார். ஆனால் பாரதியார் பாராட்டி எழுதவில்லை. திங்ரா செய்த அரசியல் கொலையை "தேசத்தில் நடக்கும் அநியாயத்தில் சிலர் மனவெறுப்புண்டு பைத்தியக்காரர்களைப் போல் செய்யும் செயல்களுக்கு முக்கிய காரணம் அநீதிதானே" என்று 'இந்தியா'வில் (ஜூலை 24, 1909) பாரதியார் எழுதினார்.

திங்கராவின் செயலைப் பைத்தியக்காரத்தனம் எனக் கூறினால் கம்ஸனைக் கொன்ற கிருஷ்ணன் செயல், அப்ஸல்கானைக் கொன்ற சிவாஜியின் செயல் யாவும் பைத்தியக்காரத்தனமாகும் என வ.வே.சு. ஐயர் இந்தியாவில் தமது 'லண்டன் கடிதத்தில்' பாரதியாருக்குப் பதில் அளிப்பவர் போல் எழுதினார்.

திங்ராவின் உடலை, அவர் விருப்பப்படி எரியூட்ட எண்ணிய வ.வே.சு. ஐயர், இலண்டனில் இந்திய ராஜாங்கச் செயலாளரிடம் திங்ராவின் உடலை ஒப்படைக்குமாறு கேட்டார். ஆனால், இந்தக் கோரிக்கை நிராகரிக்கப்பட்டது. அரசாங்கமே திங்ராவின் உடலைப் புதைத்துவிட்டது. இந்நிகழ்ச்சியினைத் தொடர்ந்து திடீரென லண்டன் கிளாஸ்கோ மில்லில் தீவிபத்து ஏற்பட்டது. திங்ராவின் புனித உடலைத் தீண்ட அக்னி கடவுளுக்கு அனுமதி மறுக்கப்பட்டதால்தான், அக்னிக் கடவுள் சீற்றங்கொண்டு கிளாஸ்கோ மில்லை எரித்ததாக "அக்கினி பகவனுக்கு கோபம் வந்து விட்டதோ" எனும் தலைப்பில் 'இந்தியா'வில் (ஆகஸ்டு 12, 1909) வ.வே.சு. ஐயர் எழுதினார்.

பாரதியார் மறுப்பு

இந்தக் கருத்தைப் பாரதியார் ஏற்காமல் 1909 செப்டம்பர் 4ஆம் தேதி இதழில் பின்வருமாறு தலையங்கத்தில் எழுதினார்.

சென்ற வாரத்தில் நமது நிருபர் ஒருவர் ஸ்ரீமான் மதன்லால் திங்கரா விஷயமாய் எழுதியிருந்தார். அதை நாம் முற்றிலும் அங்கீகரிக்கவில்லை. ஸ்ரீமான் திங்கராவின் உயிர் ஏதோ இரண்டு லக்ஷம் பவுன் என்று ஒரு மதிப்பாய்க் கூறியிருக்கிறார். மேலும் கிளாஸ்கோ பருத்தி ஆலையில் தீ பிடித்ததைப் பற்றி ஸந்தோஷப் படுவது போல் எழுதுகிறார். கிளாஸ்கோவில், பருத்தி ஆலையில் நெருப்புப் பற்றி அது நஷ்டமடைந்துவிட்டால் தின்ங்கரா உயிர்தெழுந்துவிட்டாரா, நம் பாரதவாஸிகளுக்கு அதனால் என்ன அனுகூலமுண்டாய்விட்டது. நாமேன் அதைப் பழிவாங்குதலைப் போல் கொள்ளல் வேண்டும்.

"அற்பத்திற்கெல்லாம் ஸந்தோஷித்துப் பழிவாங்குவது இழிவான குணம். ஆரியர்களுடையதல்ல' நமது நாட்டில் ஒரு நாளும் கேட்டிருக்காத வெடிகுண்டு முதலிய பயங்கரமான செயல்கள் அநியாயமானவைகள். இவையெல்லாம் பிரிட்டிஷ் இந்தியா ஏகாதிபத்தியத்தின் நிரந்தரங்குசம் பிரபுத்துவ சட்ட திட்டங்களில் பலன்தானே? இறந்தபிறகும் அவர் தெரிவித்துக் கொண்டதைச் செய்விக்க ஆங்கிலேயருக்கு மனமிரங்காமலும் திங்கராவைச் சிறைக்கூடத்டதிலேயே புதைத்துவிட்டதைப் பற்றி லோகமெல்லாம் ஆங்கிலேயர்களை தூஷிக்கத்தான் தூஷிக்கிறார்கள்.

இவ்வாறே குதிளம்போஸ், வாஞ்சிநாதன் ஆகியோரின் புரட்சிகர அரசியல் கொலைகளைப் பாரதியார் ஏற்கவில்லை. அதே சமயத்தில் அரசு பயங்கரவாதம், புரட்சியாளர்களின் தனி நபர் பயங்கரவாதத்தைத் தோற்றுவிக்கிறது என்பதையும் குறிப் பிட்டுள்ளார்.

புதுவை 'இந்தியா'வில் தம்மையும் மீறியும் வன்முறைப் புரட்சிக் கருத்துகள் வெளிவர நிருவாகத்தினர் அனுமதித்தனர் எனும் கருத்தைப் பாரதியார் 'POLITICAL EVOLUTION IN MADRAS PRESIDENCY' எனும் கட்டுரையில் பின்வருமாறு குறிப்பிட்டுள்ளார்.

"என்னுடைய எதிர்ப்புகள் இருந்தும், பத்திரிகையை நடத்தியவர்கள், வன்மையான கருத்துகள் (STRONG THINGS) இதழில் வெளிவர அனுமதித்தார்கள். ஆகையால் பிரிட்டிஷ் அரசாங்கத்தால் பத்திரிகை தடை செய்யப்பெற்றது."

'இந்தியா' இதழின் மறைவு

புதுச்சேரியில் இருந்த பிரிட்டிஷ் தபால் அலுவலகத்தில் 'இந்தியா' இதழ்களை அனுமதிக்கக்கூடாதென்றும், இந்திய சுங்கத்துறை கூட்டத்தின்கீழ் 'இந்தியா' பிரட்டிஷ் இந்தியாவில் நுழையத் தடைசெய்யப்பட்டதென்றும் சென்னை மாநில அரசு ஆணைபிறப்பித்தது.

புதுச்சேரி 'இந்தியா'விற்குச் சென்னை மாநிலத் தமிழகத்தில்தான் சந்தாதாரர்கள் மிகுதியாக இருந்தனர். விற்பனைக்குத் தடைவிதிக்கப்பட்டதும், இந்தியாவை மேற்கொண்டு நடத்த முடியாத பொருளாதார நிர்ப்பந்தம் ஏற்பட்டது. 'இந்தியா'வை நிறுத்த வேண்டியதாயிற்று.

"இந்தியா' மீதான அடக்குமுறை குறித்து 'விஜயா'

1910 மார்ச் 23ஆம் தேதி 'விஜயா' இதழில் 'இந்தியா' நின்றுபோனதைக் குறித்து ஒரு செய்தி வெளிவந்துள்ளது. இந்தச் செய்தியில் தமிழ் மூலம் கிடைக்கவில்லை. சென்னை அரசாங்கத்தின் "நேடிவ் நியூஸ் பேப்பர் ரிப்போர்ட்"டில் (1910- ப.580) தொகுக்கப் பெற்றக் குறிப்பிட்ட செய்தி வருமாறு:

"அனைத்துத் தபால் அலுவலகங்களுக்கும் பிரிட்டிஷ் அரசு விடுத்துள்ள அறிவிப்பில் 'இந்தியா இதழ்கள் அனைத்தும்

சென்னை போலீஸ் கமிஷனர் அலுவலகத்திற்கு அனுப்பப்பட வேண்டும் எனக் குறிப்பிடப்பட்டுள்ளது. கடந்த நான்கு அல்லது ஐந்தாண்டுகளாக 'இந்தியா' உண்மையை எடுத்துரைத்து வருவதால் அதற்குக் கிடைக்கும் பரிசு, துன்பமே. தென்னிந்தியாவில் 'இந்தியா'வை ஒழுக்காகப் படிக்காமல் இருப்பவர் எவருமில்லை. பல சந்தர்ப்பங்களில் பிரிட்டிஷ் அரசுக்கு நல்ல ஆலோசனை கூறுவதில் அது கண்டிப்பு காட்டிய போதிலும், இந்தியர்கள் முன்னேற்றமே அதன் குறிக்கோளாக இருந்தது. நிலைமை இவ்வாறிருக்க பிரிட்டிஷ் அரசாங்கம் அதனிடம் கோபம் காட்டுவது, புரியவில்லை.

பத்திரிகை தொடங்கப்பெற்றக் காலத்தில் இருந்தே அரசாங்கம் தனது அதிகாரிகள் மூலமாகச் சந்தாதாரர்களிடம், சந்தா கட்டுவது விரும்பத்தக்காது என்று எச்சரித்து வந்தது. ஆனால், மக்கள் பத்திரிகைமீது வைத்திருந்த மதிப்பு குறையவில்லை. பத்திரிகையில் எழுதப்பட்டுவருவது வெறும் கதையாகவோ, நியாயமற்றதாகவோ இருந்திருந்தால் அரசாங்கத்திற்கு எதிராகச் சந்தாதாரர்கள் பத்திரிகையை ஆதரித்திருக்கமாட்டார்கள். எப்படி இருப்பினும் ஆங்கிலேயர் ஆட்சியின் சீற்றத்திற்குப் பலியாகி இந்தியா வெளிவராமல் நின்றுபோய்விட்டது.

இத்துடன் தமிழ் இதழியல் நோக்குகளில் புது வழி காட்டிய 'இந்தியா' வின் வரலாற்றுப் பாத்திரம், வரலாறாகிவிட்டது.

'விஜயா'வில் பாரதியார்

'இந்தியா'வைத் தொடர்ந்து பாரதியாரின் இதழியல் பயணம் 'விஜயா'வில் தொடர்ந்தது. 'இந்தியா' வைப்போலவே, 'விஜயா'வும் முதலில் சென்னையில் இருந்தும், பிறகு புதுச்சேரியில் இருந்தும் வெளிவந்தது.

சென்னையில் இருந்து வெளிவந்த 'விஜயா' இதழில் பாரதியார் பணியாற்றவில்லை. 'விஜயா' சென்னையில் நாளேடாக 1908 அக்டோபர் 19இல் இருந்து வெளிவரத் தொடங்கியதாக அரசு ஆணை ஒன்றின் குறிப்பில் தெரிகிறது. (அரசு ஆணை எண் 515 (பொது), 22 ஜூலை 1909) பாரதியார் சென்னையைவிட்டு புதுச்சேரிக்கு ஆகஸ்டு, 1908 இலேயே சென்றுவிட்டார். சென்னை, '83, நெ. ஹைரோட் திருவல்லிக்கேணி''யிலிருந்து 'விஜயா' வெளிவந்துள்ளது.

சென்னை 'விஜயா'வின் ஓர் இதழ்கூட இன்றுவரை கிடைக்கவில்லை. புதுச்சேரி 'இந்தியா', சென்னை அரசாங்கத்தின் "நேடிவ் நியூஸ் பேப்பர் ரிப்போர்ட்" வழியாக 'விஜயா' பற்றி அறியமுடிகின்றது. அரசாங்கத்தின் ரகசியத்தொகுப்பான இந்த அறிக்கையில் நவம்பர் 24, 1908ஆம் ஆண்டு வெளிவந்த இதழைப் பற்றியக் குறிப்பில், இதழிற்குச் சொந்த அச்சகம் இருந்தது. அதன் ஆசிரியர் பெயர் ஆர்.ஏ. ஸ்ரீரெங்கராஜன், வயது 22; 200 பிரதிகள் அச்சிடப்பெற்றதாகக் கூறப்பெற்றுள்ளது.

1909 ஜனவரி 9இல் இந்தியாவில் முதல் பக்கத்தில் வெளிவந்த விளம்பர சித்திரத்தில் அறியப்படும் செய்திகள், பின்வருவன.

1. "விஜயா" - சென்னையில் தமிழில் பிரசுரமாகும் தினசரிப் பத்திரிகை.

2. இலங்கைத் தீவுடன் கூடிய அன்றைய அகண்ட பாரதத்தில் பின்னணியில் நான்கு கரங்களுடைய பாரதமாதா சித்திரத்தில் இருகரங்களில் நான்கு குழந்தைகள் (இரு ஆண் - இரு பெண் குழந்தைகள்) அணைக்கப்பெற்றுள்ளன. மற்றிருகரங்களில் 'செங்கோல்' தாங்கப் பெற்றுள்ளன.

3. பாரதமாதா வந்தேமாதரம் எனும் சம்தகிருதமொழிச் சொற்களும், அல்லாஹு அக்பர் என்று அரபு வரிவடிவத்தில் அமைந்த சொல்லும் காணப்படுகின்றன.

4. சித்திரத்தின் கீழ்ப்புறத்தில் இடப்பக்கத்தில் குதிரைமுகம் கொண்ட ஓடம். அதில் இந்து, முஸ்லீம் ஆண்கள் இருவர் இணைந்து நிற்கின்றனர். வலப்புறத்தில் அன்னப்பறவை முகம் கொண்ட ஓடத்திலும் இந்து முஸ்லீம் ஆண்கள் இணைந்து நின்றுள்ளனர்.

5. கீழே இடப்புற ஓடத்தில் ஒரு கொடி பறக்கின்றது. அதில் 'த்வேஷம் வேண்டாம்' என்று தமிழிலும் வலப்புற ஓடத்தில் பறக்கும் கொடியில் தெலுங்கு மொழியில் 'த்வேஷமு ஒத்து' என்றும் எழுதப் பெற்றுள்ளது.

6. சந்தா வருமானம் : ஒரு வருஷத்திற்கு 8 ரூ. எட்டணா; மூன்று மாதத்திற்கு 2 ரூ, இரண்டணா; ஒரு மாதத்திற்கு 12 அணா தனிப்பிரதி விலை 6 பை.

மேற்காணும் செய்தியில் சென்னை விஜயாவின் இதழியல் கோட்பாடுகளில் தேசப்பற்றும் இந்து முஸ்லீம் சகோதரத்துவமும் மொழித்துவேஷம் வேண்டாம் என்பதும் விளக்கமுறுகின்றன.

சென்னை 'விஜயா'வின் பிப்ரவரி, 4, 1909ஆம் இதழில் அரைகுறையாகப் படித்த இளைஞர்கள் அரசாங்க ஊழியத்தை எதிர்பார்க்காமல் சிறுதொழில் முயற்சிகளில் ஈடுபடுமாறு ஒரு கட்டுரை வெளிவந்துள்ளது. இது, 'நேடிவ் நியூஸ் பேப்பர் ரிப்போர்ட்' மூலம் அறியப்பட்டது.

புதுச்சேரி இந்தியாவில் சென்னை விஜயாவின் சில கட்டுரைகள்

1. 1908 டிசம்பர் 12இல் பக்கம் 8இல் "நாளது நவம்பர் மாத 26, 28-வது இலக்கமுள்ள விஜயா என்ற பத்திரிகையில்" எனும் குறிப்புடன் பண்டையச் சுதேசி எனும் புனைபெயரில் எழுதப்பெற்ற பண்டைய தமிழ் அரசர்களின் நாணயங்கள் எனும் கட்டுரை வெளிவந்துள்ளது.

2. டிசம்பர் 26, 1908இல் பக்கம் 5இல் விஜயாவின் "ஸ்ரீபாத ஸ்ரீபோத சுந்திரமல்லிக்" எனும் கட்டுரை வெளிவந்துள்ளது.

3. 1909 ஜனவரி 16இல், பக்கம் 9இல் 'விஜயா'வின் "ஏற்றுமதி சரக்குகள்' எனும் கட்டுரை.

4. 1909 ஜூலை 30ஆம் தேதி தலையங்கத்தில் (உணவுப் பொருள்களின் விலை) 'விஜயா'வின் கருத்து கூறப்பெற்றுள்ளது.

5. 1909 பிப்ரவரி 13இல் (ப.9), 'விஜயா'வில் வெளிவந்த "ஹிந்துக்களுக்கு ஓர் எச்சரிக்கை" (ஜனத்தொகை பிறப்பு விகிதம் குறைவு பற்றிய கவலை) எனும் கட்டுரை.

6. 1909 மார்ச்சு 13 (ப.8) இல் விஜயாவில் இருந்து 'கற்பூரத்தின் வரலாறு கூறும் கற்பூரம்' எனும் கட்டுரை

பண்டிதர் க. அயோத்திதாசர் குறிப்பில் – விஜயா

தமிழகத்தில் ஆதிதிராவிடர் இயக்க முன்னோடி தலைவர்களுள் ஒருவரான பண்டிதர் க. அயோத்திதாஸ் (1845-1914) 19.6.1907இல் சென்னையில் தொடங்கிய "ஒரு பைசாத் தமிழன்"

எனும் வார இதழ் 26.8.1909இல் தமிழன் என பெயர் மாற்றம் பெற்றது. இந்த இதழில் மே. 19, 1909இல் "பறையனென்னும் மொழிமேலுள்ள பகையைப் பரக்கப் பாருங்கள்" எனும் கட்டுரை வெளிவந்துள்ளது. இந்தக் கட்டுரையில் இந்தியா வைஸ்ராய் லார்டு மிண்டோ, லேடி மிண்டோவின் நாயை ஒரு வெறி நாய் கடித்த செய்தியை 'விஜயா'வும் 'சுதேசமித்திரன்' வெளியிட்டது விமர்சனம் செய்யப்பெற்றுள்ளது. சுதேசமித்திரன், "வெறிநாய்" என்று குறிப்பிடாமல் 'பறைநாய்' என்று குறிப்பிட்டதை பிராம்மண எதிர்ப்பு நோக்கில் தமிழினில் கடுமையாகக் கண்டனம் செய்யப்பெற்றது. 'விஜயா'வில் 'வெறிநாய்' என்றே குறிப்பிடப் பெற்றது. இதை 'தமிழன்' இதழ், "கனந்தங்கிய விஜயா பத்திராதிபர் தனது பத்திரிகையில் வரைந்துள்ள நயத்தையும்' என்று பாராட்டியுள்ளது.

சென்னை 'விஜயா' வின் இதழியல் கோட்பாடுகளை உருவாக்கியதில் பாரதியார் பங்களிப்பு பற்றி அறிய வாய்ப்பில்லையென்றாலும், புதுச்சேரி 'இந்தியா'வின் சகோதரப் பத்திரிகையாக சென்னை 'விஜயா' விளங்கியது எனலாம். அரசு ஆணைஎண் 1010 நீதித்துறை - ரகசியம், ஜூலை 4, 1910 தரும் செய்தியில் சென்னை விஜயா 1909 மே 15இல் நின்றுபோய் இருக்கலாம் என அறியமுடிகின்றது. சென்னை 'விஜயா' புதுச்சேரிக்கு மாற்றப் பட்டதற்கான காரணத்தையும் அறிய வாய்ப்பில்லை.

புதுச்சேரி விஜயா

புதுச்சேரியில் 'விஜயா' செப்டம்பர் 7, 1909இல் கிருஷ்ண ஜெயந்தி நாளில் இருந்து வெளிவரத் தொடங்கியது. 1909 அக்டோபரில் பாரதியார் ஆசிரியரானார். உரிமையாளர் மண்டையம் எஸ். சீனிவாசசாரி; துணையாசிரியராகச் சேர்ந்த நீலகண்ட பிரம்மச்சாரி, எஸ். சீனிவாச்சாரியருடன் கொண்ட அரசியல் கருத்து வேற்றுமையால் 'விஜயா'வில் இருந்துவிலகி 'சூரியோதயம்' இதழில் ஆசிரியரானார்.[31]

புதுச்சேரியில் 'விஜயா' வெளிவரவிருப்பதைப்பற்றி 'இந்தியா'வில் ஆகஸ்டு 21, 1909- ப.12இல் ஒரு விளம்பரம் வந்தது. சென்னை விஜயா தோற்றம் பற்றிய அதே சித்திரத்துடன் பின்வரும் குறிப்புகளும் வெளியிடப்பெற்றன.

"விஜயா வென்ற பெயர் கொண்ட தினசரிப் பத்திரிகை அரிய பெரிய விஷயங்களிலும் உலக வர்த்தமானம் முற்றும் அடங்கிய விவசாயக் குறிப்புகள், கைத்தொழில் குறிப்புகளடங்கிய இனிய நடை பெற்றதுமாயுள்ளது. செப்டம்பர் மாதம் 7ஆம் தேதி கிருஷ்ண ஜயந்தியன்று துவங்கி வெளியாகும்."

"நமது பத்திரிகைக்கு முக்கிய நிருப நேயர்கள் ஸ்ரீமான் ஸி. ஸுப்ரமணிய பாரதி, ஸ்ரீமான் சா. வரதராஜன் முதலான இன்னும் அநேகர்" என்று குறிப்பிடப்பெற்றுள்ளது. 'நிருபநேயர்' என்று பாரதியார் குறிப்பிடப்பெற்றிருந்தாலும், அரசு ஆணை ஒன்றில் பாரதியார் ஆசிரியர் என்று தெளிவாகக் குறிப்பிடப்பெற்றுள்ளது.[32]

புதுச்சேரி 'இந்தியா', 'சூரியோதயம்' இரண்டுடன் சேர்த்து 'விஜயா'வும் தீவிரவாத இதழ்கள் (Leading extremist papers) என்னும் தீவிரக் கருத்துகளைக் கொண்ட கட்டுரைகளைக் கொண்டது என்றும் ஓர் அரசுஆணைக் குறிப்பு அக்காலத்தில் குறிப்பிட்டது.[33]

மதுரையில் 1908இல் இருந்து வெளிவந்த 'வித்யாபாநு' எனும் மாத இதழ் (ஆசிரியர்கள் ம. கோபாலகிருஷ்ணய்யர், மு.ரா. கந்தசாமிக் கவிராயர்), 'விஜயா'வின் சில குறிப்பிடத்தக்க அம்சங்களைக் கொண்ட ஒரு விளம்பரத்தை 1910 பிப்ரவரி இதழில் பின்வருமாறு வெளியிட்டது.

"விஜயா - தமிழ் தினசரிப் பத்திரிகை, ஹிந்து தர்மம், பாரத சரித்திரம், சாஸ்திரம், தொழில், கலைகள், சிற்பம், தற்கால நிலை, வருங்காலநிலை, உலக வர்த்தமானங்கள், அவற்றால் பாரத நாட்டிற்கு விளையக்கூடிய பலாபலன்கள் - இவையெல்லாம் இப்பத்திரிகையில் நாடோறும் விவரிக்கப்படும் விஷயங்களாகும். உயர்வு, ஸ்வதந்திரம் என்பனவற்றை நோக்கங்களாகக் கொண்டு ராஜாங்க சட்டவரம்பு பிறழாமல் இப்பத்திரிகை நடத்தப்படுகிறது. இதுவரை தமிழ்நாட்டில் இல்லாததோர் புதிய விசேஷம், இப்பத்திரிகையில் நாள்தோறும் சித்திரங்களும், பதிப்பிக்கப்படும், அடிக்கடி சித்திரத் தொகுதியில் அதிகரிக்கப்பட்ட வியாசங்கள் எழுதப்படும் ஸ்ரீமத். ஸி சுப்பிரமணிய பாரதி முதலியவர்கள் விஷயதானம் செய்வார்கள்.

நாள்தோறும் செய்தி விளக்கச் சித்திரங்களை முதன்முதலில் வெளியிட்ட நாளிதழ் 'விஜயா'தான் என்பது மேலேயுள்ள விளம்பர வாசகங்களில் இருந்து தெளிவாகின்றது.

உருவம் – உள்ளடக்கம்

நாளிதழின் பாதியளவுகொண்ட 'விஜயா'வின் மொத்தப் பக்கங்கள் நான்கு. முதல் பக்கத்தில், ஸ்வதந்திரம், ஸமத்துவம், ஸகோதரத்துவம்' எனும் பிரெஞ்சுப் புரட்சியின் முழக்கங்கள் தமிழிலும், பிரெஞ்சு மொழியிலும் மகுடமாக அமைந்துள்ளன. 'விஜயா' என்று தமிழிலும் ஆங்கிலத்திலும் குறிக்கப்பெற்று, 'பிரதி தினமும் மாலையில் பிரசுரிக்கப்படும்' எனும் வரியும் தடித்த எழுத்துக்களில் அச்சிடப்பெற்றுள்ளது. முதல்பக்கம், நான்காம் பக்கம் முழுவதிலும் விளம்பரங்கள் உள்ளன.

1910ஆம் வருஷம் ஜனவரி மாதம் 13ஆம் தேதி இலக்கம் 105இல் "தூத்துக்குடி சுதேசியக்கப்பல் கம்பெனி லிமிடெட்" எனும் தலைப்பில் வெளிவந்த விளம்பரத்தில் பின்வரும் வாசகங்கள் ஒருவரலாற்றுச் சிறப்பைச் சுட்டிக்காட்டுகின்றன.

"கடல்யாத்திரை விஷயத்தில் தற்காலத் தமிழர்கள் எடுக்கும் முதலாவது எடுப்பு. அந்நிய வர்த்தகங்களே நமது கடல்களின் ஸ்டீமர்கள் ஓட்டுவதில் தனியரசு செய்து வந்ததற்கும், இக்கம்பெனியே முதல் எதிரியாகத் தோன்றி நமது ஜாதிய மானத்தைக் காப்பாற்றுகின்றது."

இந்த விளம்பரம், தூத்துக்குடி சுதேசிக்கப்பல் கம்பெனியின் கவுரவ காரியதரிசி கிருஷ்ணய்யங்கார் பி.ஏ., பி.எல்., சார்பில் வெளியிடப்பெற்றது.

முதல்பக்கம் நான்கு பத்திகளாகப் பிரிக்கப்பட்டுள்ளன. வெளிநாட்டுச் சந்தாவும் உள்நாட்டுச் சந்தாவும் ஒன்றே. ஆண்டுச் சந்தா 10 ரூபாய்; தனிப்பிரதியின் விலை 0-0-6. "பிரெஞ்சுக் காலனியல்லாத இதர வெளிநாடுகளுக்கு அவ்வவ் வாரத்துப் பத்திரிகைகளை வாரம் ஒருமுறையாகச் சேர்த்து அனுப்பப்படும்" எனும் அறிவிப்பும் உள்ளது.

இரண்டாம் பக்கத்தில் தலையங்கமும் துணைத் தலையங்கமும் உள்ளன. தலையங்கம் நீண்டுவிட்டால் சில சமயங்களில் மூன்றாவது பக்கத்திலும் தொடர்ந்தது. இரண்டாம் பக்கத்தில் ஒவ்வொரு இதழிலும் பெரும்பான்மையாக ஏதாவதொரு படம் வெளியிடப்பெற்றது. விகடச் சித்திரங்கள் 'இந்தியா'

சித்திரவிளக்கங்கள் 'இந்தியா'வில் செல்வாக்கு செலுத்தின. அவை, விஜயாவில் இல்லை என்பது குறிப்பிடத்தக்கது. 'இந்தியா'வைப் போலவே பக்க எண்கள் 'விஜயா'விலும் தமிழிலேயே தரப்பட்டுள்ளன.

'இந்தியா'வில் கல்கி, கண்ணால் கண்டவன், குமாரவேல், கமலநாயகி, கராளகேஸரி, ஓர் ஹிந்து, பாரத தாசன் எனும் புனைபெயர்கள் தாங்கிப் பல கட்டுரைகள் வெளிவந்தது போன்று 'விஜயா'வில் வெளிவரவில்லை.

நேரடியாக விளித்து ஆவேசநடையில் 'இந்தியா'வில் பாரதியார் எழுதியவாறு 'விஜயா'வில் 1905 அக்டோபர் 5இல் வெளிவந்த "எதிர்க்கிறாயா? துணை செய்கிறாயா?" எனும் கட்டுரை வெளிவந்தது. "வி. கிருஷ்ணஸ்வாமி ஐயரை நேராக விளித்துச் சில வார்த்தைகள் சொல்ல விரும்புகிறோம்" என்று தொடங்கிக் குத்தலும் கிண்டலுமாகச் சாடியுள்ளார், பாரதியார். திலகரின் தீவிரவாத தேசியத்தை 'விஜயா' உறுதியாகப் பற்றியது.

'விஜயா'வில் பேட்டிக் கட்டுரைக்கும் இடமளித்தார், பாரதியார். 11.9.1909இல் "ஸ்ரீமான் அரவிந்த கோஷுடன் சம்பாஷணை" எனும் தலைப்பில் கட்டுரை வெளிவந்தது. அரவிந்தருடனான பேட்டி கல்கத்தாவில் நிகழ்ந்தது. பேட்டிக் கட்டுரையில் அரவிந்தரைத் தொடர்புபடுத்திய 'மானிக்டோலா தோட்டம் வெடிகுண்டு சதிவழக்கு', 'சிறையில் அரவிந்தர் ஸ்ரீகிருஷ்ணாரின் தெய்வ தரிசனம் பெற்றது, 'பாரத நாட்டின் நிகழ்கால எதிரிகாலத்தைப் பற்றியக் கருத்துகள்' "கேள்வி மறுமொழி" முறையில் வெளியிடப் பெற்றுள்ளன.

1910ஆம் ஆண்டு புதிய பத்திரிகை அடக்குமுறைச் சட்டம் நடைமுறைக்கு கொண்டு வந்த பொழுது, 'பிரிட்டிஷ் இந்தியாவில் பயமுறுத்தும் சட்டங்கள், புதிய பத்திரிகைச் சட்டம், புதிய பத்திரிகைச் சட்டமசோதா, புதுப்பத்திரிகை சட்டம்' எனும் கட்டுரைகள் 'விஜயா'வில் வெளிவந்தன. இவை 'இந்தியா'விலும் மறுவெளியீடுகளாக வந்துள்ளன. வெடிகுண்டு கலாசாரம், வன்முறை, பயங்கரவாதம் முதலானவற்றை 'விஜயா'வும் 'இந்தியா'வைப் போன்று ஆதரிக்கவில்லை. 1910 ஜனவரி 22இல் இந்தியாவில் விஜயாவில் வெளிவந்த 'ஸ்ரீமத் கீதையும் கொடுஞ்செயல்களும்'

எனும் கட்டுரை விஜயாவில் இதழியல் நோக்கு வன்முறையை ஆதரிப்பதன்று என்பதைத் தெளிவுபடுத்தியுள்ளது.

வெடிகுண்டு கலாசாரத்திற்கு எதிர்ப்பு

இந்தியா தேசியப் புரட்சிவீரர்கள் வரலாற்றில் 'பகவத்கீதை' மிகுந்த செல்வாக்கு பெற்றிருந்தது. ஆயுதமெடுத்துப் போரிடுவதை கீதை அனுமதிக்கின்றது என்று புரட்சி வீரர்கள் வேதவாக்காகக் கொண்டு ஒழுகினர். பகவத்கீதையில் ஆழத் தோய்ந்த பாரதியார், கீதையைத் தமிழாக்கம் செய்துள்ளார்; விளக்கவுரை எழுதியுள்ளார்.

கீதை கூறும் ஆயுதமேந்தி "கொலை செய்யத் தூண்டும் செயல்'' என்று கூறப்படுவதை இந்தக் கட்டுரையில் பாரதி விமர்சனம் செய்துள்ளதில் ஒரு பகுதி, வருமாறு.

"இந்த வெடிகுண்டு முதலிய கொடுஞ்செயல்களெல்லாம் தமது பாரநாட்டில் கேட்டிராத அநாகரிக காரியங்கள். சாந்தமூர்த்திகளான பாரதர்கள் தங்கள் எண்ணிறந்த கஷ்டங்களிடையில் சில சௌவுகரியங்கள் கேட்டும் கொடாமல் அவர்களை வெகு இழிவாய் நினைத்து அல்லல் செய்து வந்தபடியால் இதைக் கண்ட சில முன்யோசனையில்லாத சிறுவர்கள் பேய்த்தகை கொண்டு அந்த அன்னிய நாட்டு அநாசாரத்தை அன்னியர்கள் விஷயத்தில் கைக்கொண்டனர்.

"ஸ்ரீமத்பகவத் கீதையானது குருக்ஷேத்திரமெனும் யுத்த பூமியில் பாண்டவ கௌரவ சேனைகள் இருபுறத்திலும் அணிவகுத்துச் சமுத்திரம் போல் நிற்கையில் உலகத்தைக் காத்து தருமபரிபாலனம் செய்யவேண்டியதுதான் க்ஷத்திரியனுடைய கடமை. அதற்காக நீ யுத்தம் செய்து, பகைவர்களை வென்று, நாட்டிற்கரசனாகி, பிரஜைகளை தருமநீதி முறையில் பரிபாலனம் செய் - இவை யெல்லாம் நீயாகவே செய்யும் காரியமல்ல, கடவுள் கட்டளை என்ற ஸாத்வீக புத்தியுடன் யுத்தம் செய் என்று ஸ்ரீபகவான் பணித்தார். ஸாம - தான - பேத - தண்டம் எனும் நான்கு உபாயத்தில், வனவாஸ அஞ்ஞாத வாஸமெனும் ஸாம உபாயமும், ஸ்ரீகிருஷ்ணத் தூது எனும் தான உபாயமும், கர்ண அச்வத்தாமர்ளை பரீக்ஷித பேத உபாயமும் தவறிப் போய்விட்ட பிறகு மஹா சாந்தமூர்த்தியான ஸ்ரீபகவான் நான்காவதான தண்டோபாயத்தைக் கொள்ளும்படி பாண்டவர்களுக்கு

உபதேசித்தார். ஸ்ரீபகவத் கீதையில் அவனவனுக்கு ஏற்பட்டிருக்கும், கர்மத்தை (காரியத்தை) அவனவன் கடவுள் தனக்கு விதித்திருக்கும் கடமை என்று ஸாத்வீக புத்தியுடன் அயலவர்களின் புகழ்ச்சியையும் இகழ்ச்சியையும் பொருட்செய்யாமல் செய்து வரவேண்டியது என்று சொல்லப்பட்டிருப்பது வாஸ்தவந்தான். பார்த்தனும் அப்படியே செய்தான். ஆனால் வெடிகுண்டு வகையரா ஸங்கதிகள் ஆங்கில முதலிய ஐரோப்பிய நாடுகளின் துஷ்டவழக்கங்களில் ஒன்றே தவிர, மாட்சிமை தாங்கிய பாரத நாட்டில் ஸ்ரீபகவத் கீதையில் போதனையல்ல வென்பதை நாம் உறுதியாய்ச் சொல்லுகிறோம்."

'பகவத்கீதை முன்னுரை'யிலும் பாரதியார் கீதை கொலை நூல் அன்று என்பதை விளக்கியுள்ளார்.

'விஜயா' அடக்குமுறைக்குப் பலியானது

'இந்தியா' இதழ் நின்றபொழுது 'விஜயா' எழுதியக் கட்டுரையில் நாளிதழான விஜயா வார இதழும் மாறும் எனும் குறிப்பு பின்வருமாறு எழுதப்பெற்றுள்ளது.

"இப்பொழுது, 'இந்தியா' சந்தாதாரர்களுக்கு நாம் ஒன்று கூறவிரும்புகிறோம். 'விஜயா' நாளிதழை வார இதழாக மாற்றப் போகிறோம். இந்திய மக்கள் முன்னேற்றத்திற்கான வழிமுறைகளைப் பற்றி விவாதிக்கப் போகிறோம். பிரிட்டிஷ் அரசு தொடர்பான செய்திகள் பற்றிப் பேசப்போவதில்லை".

இதன்பிறகு 'விஜயா' வார இதழாக வெளிவந்துள்ளது. 1910 ஏப்ரல் 15, 22 தேதிகளில் 'விஜயா' வார இதழ்கள் வெளிவந்ததற்கான குறிப்புகள் உள்ளன.[34]

1910 பிப்ரவரியில் 'விஜயா'வைப் பறிமுதல் செய்ய சென்னை மாநில அரசு எண்ணத் தொடங்கியது. 'ராஜத் துரோகக் கட்டுரைகள்' பற்றிய குறிப்புகள் தொகுக்கப்பட்டன. 1910ஆம் ஆண்டு பத்திரிகைகள் சட்டத்தின்கீழ் சுங்கத் துறையினருக்கு 'விஜயா'வைப் பறிமுதல் செய்ய உத்திரவிடப்பட்டது. இந்தியாவிற்குள் நுழைய இதனால் 'விஜயா' விற்குத் தடையேற்பட்டது. புதுச்சேரியில் தீவிரவாத தேசியம் பிரசுர முரசுகளாக ஒலித்த இந்தியா, விஜயா, சூரியோதயம் மூன்றையும்

ஒடுக்கத் திட்டமிட்ட பிரிட்டிஷ் அரசு 'இந்தியா'வைத் தொடர்ந்து 'விஜயா'வையும் ஒடுக்கிவிட்டது. 17.5.1910ஆம் ஆண்டு சென்னை நகர காவல்துறை புலனாய்வு அறிக்கையில் 'விஜயா' பத்திரிகை நின்று போனது குறிப்பிடப்பெற்றுள்ளது.

'கர்மயோகி'யில் பாரதியார்

அரசியல் கொந்தளிப்புகள் இல்லாமல் ஆன்மிக அமைதியுடன் இதழாசிரியராகப் பணியாற்றும் வாய்ப்பைப் புதுச்சேரி 'கர்மயோகி' அளித்தது.

'கர்மயோகி' முதலில் மாத இதழாகவும் பிறகு மாதமிருமுறையாகவும் வெளிவந்தது. மாத இதழ், வார இதழ், நாளிதழ் ஆசிரியராகப் பெயர்பெற்ற பாரதியார், கர்மயோகி காரணமாக "மாதமிருமுறை" ஆசிரியனாகவும் பெயற்பெற்றார்.

அரவிந்தர் புகழ் பாடியதில் 'இந்தியா', 'விஜயா', 'சூரியோதயம்', வரிசையில் 'கர்மயோகி'யும் இணைந்தது.

கர்மயோகியின் இதழியல் நோக்கு பெயருக்கேற்ப ஆன்மிகத்தை மையமாகக் கொண்டது.

ஆகஸ்டு 8, 1909ஆம் ஆண்டு 'இந்தியா' இதழில் 'கர்மயோகி' பற்றிய விளம்பரம் பின்வருமாறு அமைந்தது.

"கர்மயோகி-(மாதந்தோறும் வெளியாகும் தமிழ்ப்பத்திரிகை). ஸ்ரீமான் அரவிந்த கோஷ் எழுதும் விஷயங்களடங்கிய 'கர்மயோகியின்' என்ற ஆங்கிலேயப் பத்திரிகையில் அற்புதமான வியாஸங்கள், வியாக்கியானங்கள், உபதேசங்கள் முதலியவற்றை மொழிபெயர்த்து இப்பத்திரிகை தமிழர்களுக்குதவும். பாரத நாட்டின் தத்துவ சாஸ்திரம், தர்மம், சுதேச பரிபாலனம் முதலியவற்றை உத்தாரணஞ்செய்யும் நோக்கமுடையது. மொழிபெயர்ப்போர், ஸ்ரீ. ஸி சுப்பிரமணிய பாரதி முதலியவர்கள். நமது ஜாதிய ஸம்ரக்ஷகனாகிய ஸ்ரீகிஷ்ணன் பிறந்த தினமான அடுத்த ஸ்ரீ ஜயந்தியன்று இப்பத்திரிகையின் முதல் ஸஞ்சிகை வெளியாகும்."

இந்த விளம்பரத்தின்படி 'கர்மயோகி' வெளிவரவில்லை. 1910 ஜனவரியில் வெளிவந்தது. முதல் இதழ் கிடைக்கவில்லை.

உருவம் உள்ளடக்கம்

எமக்குக் கிடைத்த 1910 மார்ச்சு இதழின் வழியே 'கர்மயோகி' யின் உருவம் உள்ளடக்கம் பற்றி அறியமுடிகின்றது. பத்திரிகையின் அளவு 28x18 செ.மீ. அட்டையுடன் சேர்த்து மொத்தப் பக்கங்கள் 32; ஆண்டு சந்தா ரூ.2; தனிப்பிரதி விலை அணா நான்கு.

மேலட்டையில் - குருக்ஷேத்திரம் போர்க்களத்தில் அருச்சுனன் காண்டீபம் நழுவிட, மனந்தளர்ந்த நிலையில் இருந்தபொழுது, சாரதியாக ஸ்ரீகிருஷ்ணர் நிகழ்த்திய கீதாவுபதேசக் காட்சிப்படம் அச்சிடப்பெற்றது. அரவிந்தரின் கர்மயோகி இதழைப் பின்பற்றியே மேலட்டைப் படம் அச்சிடப்பெற்றது.

"ஆரிய தர்மம், பாரத நாட்டுக் கலைகள், தொழில்கள், காவியங்கள் முதலானவற்றையெல்லாம் பற்றி விவகரிக்கும் ஓர் மாதந்தத் தமிழ்ப்பத்திரிகை" எனும் அறிவிப்புடன் "ஸ்ரீமான் ஸி. சுப்பிரமணியபாரதி, பத்திராதிபர்" எனும் குறிப்பும் இடம் பெற்றிருந்தது.

கீதையின் சுலோகங்கள் பெரும்பான்மையானவற்றை உரைநடையிலும் சிலவற்றைக் கவிதை வடிவத்திலும் தமிழாக்கம் செய்துள்ளார், பாரதியார். கர்மயோகியில் "ஹிந்து தர்மத்தின் ஜீவதத்துவங்கள்" எனும் கட்டுரையையும் பாரதியார் எழுதியுள்ளார். பகவத் கீதையின் ஸாங்கிய யோகத்தின் ஆறு சுலோகங்களை உரைநடையில் எடுத்தாண்டு முதல் ஸ்ரீவதத்துவமான ஆத்ம ஞானத்தை விளக்கியுள்ளார். பிற இரு ஜீவதத்துவங்களாக 'யஜ்ஷம்" (யக்ஞம்), "சாதுர்வர்ண்யம் நான்கு வருணங்கள் என்னும் விதி" என்பனவற்றைப் பற்றி எழுதியுள்ளார்.

1910 பிப்ரவரியில் வெளிவந்த 'சூரிய ஸம்பந்தி (ஹிந்து நாகரிகம்)யின் ஜீவதத்துவம்' எனும் கட்டுரையில் கர்மயோகியின் ஆன்மிகக் கோட்பாட்டை வலியுறுத்தியது.

நவமார்க்கம்

'தமிழ் ஸாஹித்யத்தில் நவமார்க்கம்' எனும் கட்டுரை (மே, 1910) தமிழ் இலக்கிய வளர்ச்சிக்குரிய 'கர்மயோகி'யின் இதழியல் கோட்பாட்டை அறிவிக்கிறது. கட்டுரையாளர், பெயர் "லக்ஷ்மண சங்கரன்", கட்டுரையாளர் பின்வரும் பகுதி 'நவமார்க்கம்' தோற்றத்தை விளக்குகின்றது.

"புலவர்காள்! . . .காவடிச் சிந்துக்கள், உலா, மடல்கள் பாடினது போதும். கலிங்கத்துப் பரணிகள் பாடுங்கள்; வீர ஸாகித்யம் பெருகட்டும், காம ஸாஹித்யம் பெருகினது போதும். இசை இயல் நாடகம் என்னும் ஸாஹித்யத்தின் மூன்று பிரிவுகளிலும் தமிழ் ஸாஹித்யம் மிகவும் க்ஷீணமடைந்திருக்கிறது.

"இப்பொழுது பாரததேசத்தில் பெருகி நிற்கும், 'நவமார்க்கம்' என்னும் பிரளயம் பெருகிக் கேட்டைச் சீர்குலைத்து நன்மை நாடுகிறதென்பதற்கறிகுறியாக மனோபாவ பூர்த்தியான ஸாஹித்யம் வரை ஆரம்பித்திருக்கிறது. இசையில் ஸ்ரீசுப்பிரமணியரது 'ஸ்வேரது கீதங்கள்' எனும் ஹிருதயத்தைப் பிளக்கும் பாக்கள் உதித்திருக்கின்றன. இயலில் ஸ்ரீபாரதியாரின் 'ஞானரதம்' எனும் நவீனகம் நவசாகையினறிகுறியாக விளங்குகிறது. இந்த நவீனத்தில் ஆசிரியர் உபயோகத்திருக்கும் வங்க சப்த சித்திரங்கள் நவீனகத்திற்கு ஓர் புதுமை கொடுக்கின்றது. நவ பொஹித்யம் தேக்கமடைந்து நில்லாமல் எக்காலமும் பெருகி வளர்வதாக என்பதே நமது கோரிக்கை" நவமார்க்கத்தின் (புதிய வழியில்) ஆதிகர்த்தாவாகப் பாரதியார் குறிப்பிடப்பட்டுள்ளது; கவனத்திற்குரியது.

ஆன்மிகக் கட்டுரைகளேயல்லாமல், வரலாற்றின் கட்டுரைகள் கர்மயோகியில் வெளிவந்துள்ளது.

உருவகக் கட்டுரையொன்றையும், பாரதியார் எழுதியுள்ளார். உருவக நயம் செறிந்த 'காளியும் காமனும்", அறமும் இன்பமுமாக உருவகப்படுத்தப்பட்டுள்ளன. பன்னிரண்டாம் நூற்றாண்டில் இஸ்லாமிய ஆட்சியை எதிர்த்துபோரிட்டு மாய்ந்த பிருத்விராஜன் வாழ்க்கை வரலாற்றின் சில பகுதிகளை எழுதமுற்பட்டார். ஆனால், முழுக்கட்டுரையும் கிடைக்கவில்லை. கட்டுரைத் தலைப்புப்பற்றிப் பாரதியார் முகவுரையில் பின்வருமாறு கூறியிருக்கின்றார்.

"காமனுக்கும் காளிக்கும் ஒரேவிதமாத பக்தியைக் கொடுத்து விட்டான் (பிருத்விராஜன்). இன்பத்தையும் அறத்தையும் ஒன்றுபோலவே வணங்குவானாயினால் அறத்தால் வருமின்பத்தை மாத்திரமே கொண்டிருப்பது பிழையன்று. இவர் அங்ஙனம் செய்யவில்லை. இன்பங் கண்டபோது, அறத்தை மறந்துவிடுவான். காமன் இராகுவால் விழுங்கப்பட்ட வீரியப் பரிதியென்று

பிருத்விராஜனை உவமிக்கலாம். இது பற்றியே இச்சிறிய நூலுக்கும் 'காமனும் காளியும்' என்ற பெயர் கொடுக்கப்பட்டிருக்கின்றது."

காவல்துறையின் கண்காணிப்பில்

'கர்மயோகி' பத்திரிகையைச் சென்னை மாநில அரசு கண்காணித்து வந்தது. 13.2.1910இல் 'மெட்ராஸ் ஸ்டாண்டர்ட்டில்' புதுச்சேரியில் பாரதியாரின் கர்மயோகி பத்திரிகை தோன்றியதைப் பற்றி ஒரு செய்தி வந்தது. ஜனவரி இதழில் கிருஷ்ணனை துதிசெய்யும் பாடலுடன், இந்தியத் தலைவர்கள் பற்றிய வாழ்க்கைக் குறிப்புகளும் வெளிவந்ததாக மெட்ராஸ் ஸ்டான்டர்ட் இந்தச் செய்தியைச் சென்னை நகர புலனாய்வுத் துறை தனது அறிக்கையில் குறிப்பிட்டுள்ளது.

1910 பிப்ரவரியில் வெளிவந்த 'சூர்யஸம்பந்தியின் (ஹிந்து நாகரிகம்) ஜீவதத்துவம்' மற்றும் இரு கட்டுரைகளையும் ஆங்கிலத்தில் ('OUR OWN COUNTRY UNION IS STRENGTH') புலனாய்வுத்துறை அறிக்கை குறிப்பிட்டுள்ளது. "இந்த ஆரிய நாகரிகத்தை மீண்டும் இந்நாட்டில் ஸ்தாபனஞ் செய்யவேண்டுமென்பதை சுதேச முயற்சியில் கருத்து" என்று முதல் கட்டுரை குறிப்பிடப்பட்டது காவல் துறையின் கண்காணிப்பிற்கு உரியதுதானே!

"கிருஷ்ணனுக்கும் நமது பத்திரிகை படிப்பவர்களுக்கும் அந்தரங்க சம்பாஷனைகள்" என்னுங் கட்டுரையின் பின்வரும் பகுதியும் முற்கூறிய காவல்துறை அறிக்கையில் பதிவாகியுள்ளது.

"நீ எனக்கு உனது குறைகளை யெழுதி நிவிருத்திகள் கேட்குமிடத்து உனக்கு லோகத்தார் சூட்டியிருக்கும் பெயரைக் குறிப்பிடாதே. அதில் பல அசவுகரியங்கள் உண்டாகும். என் பெயர் கிருஷ்ணன், உன் பெயர் காமன் கோமன் என்று ஏதேனும் வைத்துக்கொள்".

கர்மயோகி - மாதமிருமுறை

மாத இதழை கர்மயோகி மாதமிருமுறையாக வெளிவந்துள்ளது. இதைப்பற்றி அறிய அக்காலத்துச் சென்னை மாநில அரசு ஆணைக்குறிப்பொன்று உதவுகின்றது.[35] இந்தக் குறிப்பின் முக்கியச் செய்தி வருமாறு:

"கர்மயோகி - மாதமிருமுறை வெளியீடு; ஆசிரியர் சி. சுப்பிரமணியபாரதி - வெளியிடுவோர்: வி. கோவிந்த ராஜுலு நாயுடு - அச்சிடுவோர் - கிருஷ்ணஸ்வாமி பிள்ளை - அச்சகம் - வித்யாபிவிருத்தி பிரஸ் - தொடங்கியது மார்ச்சு 1910 - குரல் - கடுமையானது.

மாதமிருமுறை இதழ்கூட ஒன்று கூட - கிடைக்கவில்லை. முழுக்க முழுக்க ஆன்மிக இதழாக வெளிவந்த 'கர்மயோகி' மாத மிருமுறையின் 'குரல்' - கடுமையானது என்று கூறப்பட்டுள்ளது வியப்பளிக்கிறது.

பாலபாரத் - ஆங்கில இதழில் - பாரதியார்

பாரதியாரின் இதழியல் கோட்பாடுகளை அவர் ஆசிரியராக இருந்த தமிழ் இதழ்களைக் கொண்டு இதுகாறும் அறிந்தோம். அவர் ஆங்கில மொழி இதழாசியராகவிருந்து வெளிப்படுத்திய இதழியல் கோட்பாடுகளையும் சுருக்கமாக அறிவோம்.

சென்னையில் 'இந்தியா'வில் ஆசிரியராகவிருந்த காலத்திலேயே 'பாலபாரத்' எனும் ஆங்கில வார இதழின் ஆசிரியராகவும் பணியாற்றியுள்ளார். இந்த இதழும் மண்டையம் குடும்பத்தினர் நடத்திய பத்திரிகையாகும். இந்த வார இதழ் ஒன்று கூடக் கிடைக்கவில்லை. ஓராண்டு வெளிவந்துள்ளது.

'பாபாரத்' இதழின் தோற்றம் குறித்து அக்டோபர் 27, 1909 இல், இந்தியாவில் பின்வருமாறு செய்தி வெளியிடப்பெற்றது.

"நமது ஆபீஸிலிருந்து 'பாலபாரத்' என்ற ஆங்கில வாராந்திர பத்திரிகை பிரசுரமாகப் போகின்றது. இதன் நோக்கங்களும் நடைமுறைகளும் 'இந்தியா' பத்திரிகையின் மாதிரியையே ஒட்டியேயிருக்கும். தேசபக்தி, ஜனசேவை என்பவைகளே அப்பத்திரிகையின் தொழிலாகும். இந்தியா பத்திரிகையின் ஸகோதரியாக பாலபாரத் வெளிவருகின்றது என்றும் பாரதியார் குறிப்பிட்டுள்ளார்.

நவம்பர் 3, சனிக்கிழமை, 1906இல் தீபாவளித் திருநாளில் 'பாலபாரதி'யின் முதல் இதழ் வெளிவந்தது. இதன் உரிமையாளர் மண்டையம் எஸ்.என். திருமலாச்சாரியார்.

'பாலபாரத்' தொடர்பாகச் சகோதரி நிவேதிதையுடன் பாரதியாருக்குக் கடிதத் தொடர்பு இருந்துள்ளது. இந்தச் செய்தி 16.4.1907இல் எஸ்.என். திருமலாச்சாரி சகோதரி நிவேதிதைக்கு எழுதிய கடிதத்தில் பின்வருமாறு குறிப்பிடப் பெற்றுள்ளது.

"நான் உரிமையாளனாகவுள்ள என்னுடைய பத்திரிகை, 'பாலபாரத்' தங்கள் தெய்வீக இருப்பிடத்திற்கு ஒழுங்காக வந்து கொண்டிருக்கும் என நம்புகின்றேன். ஸ்ரீ சி. சுப்பிரமணிய பாரதி இந்தப் பத்திரிகையின் ஆசிரியர். அவர் உண்மையிலேயே சமூக ஆற்றல் உள்ளவர். அவரைத் தாங்கள் நேர்முகமாகவே அறிவீர்கள். தாங்கள் அவருக்கு எழுதியக் கடிதத்தை எங்களிடம் காண்பித்துள்ளார்."

சகோதரி நிவேதிதாவிற்கும் 'பாலபாரத்'திற்கும் இடையே நிலவிய தொடர்பு, சகோதரி நிவேதிதையின் வாழ்க்கை வரலாற்று நூலிலும் கூறப்பெற்றுள்ளது.

'பாலபாரத்' கட்டுரைகள் சில தமிழாக்கம் செய்யப்பெற்று 'இந்தியா'வில் வெளிவந்துள்ளன.[36]

'பாலபாரத்'தில் பாரதியார்

1907 நவம்பர் 3 முதல் புதிய நிருவாகத்தின்கீழ் 'பாலபாரத்' மாத இதழாக வெளிவரத்தொடங்கியது.

'புதிய நிருவாகம்' என்பது டாக்டர் எம்.சி. நஞ்சுண்ட ராவ் எனும் தேசபக்தரின் நிருவாகமாகும். ஆசிரியராகப் பாரதி பொறுப்பேற்றார். இதன் அலுவலகம் முதலில் மயிலாப்பூரில் இருந்து பிறகு, திருவல்லிக்கேணிக்கு மாறியது.

'பாலபாரத்'வின் ஐந்து இதழ்கள் எமது பார்வைக்குக் கிடைத்தன.

'பாலபாரதா'வின் முதல் இதழ்

இதன் அளவு 23X17 செ.மீ.; ஆண்டு சந்தா ரூ.1.80, தனிப்பிரதி விலை ஆறணா. அரசியல், ஆன்மிகத் துறைகள் இரண்டிலும் வாசகர்களும் அறிவுவளர்ச்சி ஏற்படுத்துவதை ஒரு கோட்பாடாகக் கொண்டது, பாலபாரதா.

முதல் இதழில் "OUR SELVES" (நாம்) எனும் தலைப்பில் இதழின் கொள்கைகள் கூறப்பட்டுள்ளன. இதன் ஒருபகுதி வருமாறு:

“தேசிய வாழ்க்கையின் அனைத்துத் துறைகளிலும் வேதாந்தச் சிந்தனையும், இலட்சியமும் மேலிட, சாதனை புரிந்திட, தாய் நாட்டிற்குத் தொண்டு புரிவோம். இதுவே எங்கள் ஆதார கருதி. . . தேசிய தர்ம இலட்சியங்களையும் தேசிய உணர்வையும் இளைய பாரதத்தினர் உண்மையாகப் புரிந்துகொள்ளப் பாடுபடுவதே எங்கள் இலட்சியம் “பாலபாரத்' இனிமேல் ஒரு செய்திப் பத்திரிகையாக இராது. ஒரு வழிகாட்டியாக இருக்கும். வெறும் விவரங்களைவிட இலட்சியங்கள் கருத்தில் கொள்ளப்படும்.”

சுவாமி விவேகானந்தர் போதனைகளை, வரலாற்றை பாலபாரதா பரப்பியது. ‘இந்தியா', ‘விஜயா' போன்று பாலபாரதாவிலும் பாரதியாரின் "Signed articles" இல்லை.

பாரதியாரின் ஆசிரியக் குறிப்புகள்

'பாலபாரத்'வில் வெளிவந்த ஆசிரியர் குறிப்புகள் இதழின் கோட்பாடுகளையும் விளக்கின. முதல் இதழில் (நவம்பர் 3, 1907) வெளிவந்த நான்காவது ஆசிரியர் குறிப்பில் தாய் மொழிப்பற்று வரலாற்று நாடகத் தேவைப்பற்றிக் கூறப்பெற்றுள்ளன.

தாய்மொழி பற்றிய குறிப்பு

“ஒரு நாட்டின் மிகப் பெரிய படைப்பு, அதன் மொழியாகும். மொழி பற்றிய புத்தெழுச்சிகளோடு, தேசியப் புத்தெழுச்சிகள் பெரும்பாலும் எப்பொழுதும் தொடங்குகின்றன. சுதேச மொழிகளில் உயிர் இருக்க வேண்டும். தனது தாய்மொழியில் சிந்திக்கப் பயிற்சியில்லாத தலைசிறந்த மனிதன் என்றும் இருந்ததில்லை. நோய்க்கான மூலக்கூறுகளை அறிய முற்படுவதுபோல, நாம், நமது சிந்தனையிலே குழப்பத்தைக் காணும்பொழுது, அதற்குரியக் காரணங்களைத் தேடவேண்டும். . . . ஒவ்வொரு இந்திய மொழியிலும் நாட்டுரிமைப் பண்பு முன்வைக்கப்பட வேண்டும். இது ஒவ்வொரு அந்தப்புரத்திற்கும் உழவர் வீட்டிற்கும் குடிசைக்கும் கொண்டுச் செல்லப்பட வேண்டும்.”

வரலாற்று நாடகத்தின் தேவை

"வரலாற்றில் தேசியவுணர்வு தன்னைத்தானே வெளிப்படுத்திக் கொள்கிறது. ஒவ்வொரு முற்றத்திலும் வரலாறு பற்றிய பேச்சே இருக்கட்டும். வரலாற்று நாடகங்கள் நமக்குத் தேவை. கடந்த நூறு ஆண்டுகள் கால வரலாற்றை நாம் ஒதுக்க வேண்டாம். அன்றாடப் பிரச்சினைகளை நாம் பார்க்க வேண்டும். நமக்கு முன்னே உள்ள சற்று மேலானவர்கள் பிரச்சினைகளை அல்ல. நமது தேசம், நமது மக்கள், நமது பூமி இன்னோரன்ன பிறவற்றின் மீது பற்றும் பாசமும் கொண்டு, இந்து - இஸ்லாமியர்கள் ஒற்றுமைப் பேணும் நாடகத்தைப் பார்ப்போம்"

புதுச்சேரியில் பாலபாரதா

புதுச்சேரியில் இருந்து வெளிவந்த 'பாலபாரதா' இதழ் ஒன்றுகூட கிடைக்கவில்லை. ஆனால், பாலபாரதா வெளிவந்ததற்கான சான்றுகள் உள.

புதுச்சேரி, கர்மயோகி ரௌம்ப வருஷம் (1909) பங்குனி மாதம் இதழில் 'பாலபாரதா' பற்றிய விளம்பரம் ஆங்கிலத்தில் வெளிவந்தது. இதன் தமிழாக்கம் வருமாறு:

"இந்திய முற்போக்கு சிந்தனையின் மாத இதழ். ஆசிரியர் சி. சுப்பிரமணிய பாரதி; சகோதரி நிவேதிதா மற்றும் புகழ் பெற்றச் சிந்தனையாளர்களால் பாராட்டப்பெறுவது. ஆண்டு சந்தா ரூ.1.80.

அரசு ஆணை ஒன்றின் குறிப்பில், 'பாலபாரதா'வைப் பற்றிய விவரம் பின்வருமாறு கூறப்பெற்றுள்ளது.

"பெயர் பாலபாரதா; மொழி: ஆங்கிலம்; பருவம் மாத இதழ் ஆண்டு சந்தா ரூ.3-0.0; பிரதிகள் 200; அச்சகம் சைகோன் சின்னையா பிரஸ் பாண்டிச்சேரி, உரிமையாளர் சைகோன் சின்னையா, வயது 45, சுதேசக் கிறிஸ்துவர், சைகோனில் பாரிஸ்டரின் குமாஸ்தவாக இருந்தார். ஆசிரியர் சி. சுப்பிரமணிய பாரதியார், சென்னையில் இருந்து வந்தவர். அங்கு 'ராஜத்துவேஷ இயக்கங்கள் அனைத்திலும் பங்கேற்றவர். இந்து பிராமணர் - வயது 31; இந்தியா பத்திரிகையின் ஆசிரியருமாவார்.

வெளியிடுவோர்

எஸ். லட்சுமி நாராயண ஐயர், இந்து பிராமணர் - வயது 36, வில்லியனூரைச் சேர்ந்தவர்.

சுதேசியம். குறிப்பு. மீண்டும் தொடங்கப்பெற்றது. ஆனால் ஏப்ரல் 1910 இதழோடு நின்றுவிட்டது.

பாரதியாரின் இதழியல் கோட்பாடு, கிடைத்த தமிழ் ஆங்கில இதழ்கள், நேடிவ் நியூஸ் பேப்பர் ரிப்போர்ட் முதலானவற்றைக் கொண்டு விவாதிக்கப்பெற்றுள்ளது. மேலும் சான்றுகள் கிடைக்கும் பொழுது, அவருடைய இதழியல் கோட்பாடுகளின் பன்முகத்தன்மை மேலும் விரிவடையும்.

குறிப்புகள்

1. நவசக்தி - சிலம்பு 13, பரல் 27, ப.77
2. விவரமறிய பார்க்கவும்- விடுதலைப் போரில் தமிழ் இதழ்கள் - 1998 - பெ.சு.மணி - மணிவாசகர் பதிப்பகம் - சென்னை
3. "ஸ்ரீ.ஜி. சுப்பிரமணிய ஐயர் - சிவபதமடைந்த பதிகம்" - வ.உ. சிதம்பரம் பிள்ளை - சுதேசமித்திரன்- 27.5.1916
4. 'மகாகவி பரதியார்' - தொடர் கட்டுரை - வ.ரா. காந்தி இதழ், சென்னை, 13.10.1906 - ஆசிரியர் டி.எஸ். சொக்கலிங்கம், ப.31
5. குமரிமலர் - மாத இதழ், ஆகஸ்டு 1975, ஆசிரியர் ஏ.கே. செட்டியார்
6. சக்கரவர்த்தினி, ஆகஸ்டு, 1906, ப.2
7. இதுகுறித்த விளக்கம் முதன்முதலில் "பத்திரிகையாளர் பாரதியார்" - 1989 எனும் நூலில் (ஆசிரியர் : பெ.சு. மணி) வெளிவந்துள்ளது.
8. இந்தக் கட்டுரை 'சக்ரவர்த்தினியில் இருந்து கண்டெடுக்கப் பெற்று முதன்முறையாகப் 'பாரதியார் எழுத்துகள், சில புதிய கண்டுபிடிப்புகள்' எனும் நூலில் (1989) 'ஆசிரியர், பெ.சு. மணி, வெளியிடப்பெற்றது'.
9. இந்தச் சிறுகதை முழுமையும் முதன்முறையாக, 'பாரதியார்' எழுத்துகள், சில புதிய கண்டுபிடிப்புகள்' எனும் நூலில் வெளிவந்தது.

10. இவ்விரு கட்டுரைகளும் விரிவாக முதன்முதலில் 'பத்திரிகையாளர் பாரதியார்' நூலில் வெளியிடப்பெற்று ஆய்வு செய்யப் பெற்றுள்ளது.

11. சக்ரவர்த்தினி, நவம்பர் - 1905, பக். 94-95

12. சக்ரவர்த்தினி, மே, 1906, ப.221

13. பாரதி புதையல், மூன்றாம் தொகுதி, 1975, ரா.அ. பத்மநாபன், ப.179

14. 'இந்தியா', டிசம்பர், 22, 1906

15. புரட்சி வீரர் நீலகண்ட பிரம்மசாரி, 1978, ரா.அ. பத்மநாபன், ப.85

16. பார்க்க: 'ஓர் அரிய ஆவணம்', பத்திரிகையாளர் பாரதியார், ப.260

17. 20.1.1982இல் மானாமதுரை முகவரியில் இருந்து பாரதியார் இளவல் சி. விசுவநாதன் எழுதியக் கடிதத்தில் பின்வரும் கருத்து குறிப்பிடப்பட்டது.

18. "PATRIOTISM AND RELIGIOUS DIFFERENCES"- NEW INDIA EDITOR, ANNIE BESANT, ENGLISH DAILY, MADRAS, 18.5.1915

19. "சிவாஜி மகோத்சவத்தால் நாம் அறிவதென்ன?" - தலையங்கம் - இந்தியா, 23.6.1906

20. பாரத ஜனசபை, காங்கிரஸ் மகாசபையின் சரித்திரம், 1920, பாரதியார், சுதேசமித்திரன் வெளியீடு, ப.151

21. பாரதியாரும் சமூக சீர்திருத்தமும், 1980, பெ.சு.மணி, திருமகள் நிலையம் வெளியீடு, சென்னை, ப.45

22. இந்தியா, நவம்பர், 21, 1908, பக்.7-8

23. வீரமுரசு சுப்பிரமணிய சிவா, முதற்பதிப்பு, 1984, பெ.சு. மணி, ப.339

24. இந்தியா, 8.11.1908

25. அரசு ஆணை எண்.1542- நீதித்துறை, 15.10.1911-தமிழ்நாடு ஆவணக் காப்பகம்.

26. இதழியல் நோக்கு, 1981, மா.ரா. இளங்கோவன், ப.62

27. "இந்திய விடுதலை இயக்கத்தில் பாரதிதாசன்" - டாக்டர் இரா. இளவரசு, புலமை, இலக்கிய மாத இதழ், சூன், 1976

28. POLICE ABSTRACT, VOL.XXI, 1908, தமிழ்நாடு ஆவணக் காப்பகம்.

29. மெட்ராஸ் நேடிவ் நியூஸ் பேப்பர் ரிப்போர்ட், 1908, ப. 342, தமிழ்நாடு ஆவணக்காப்பகம்.

30. G.O.1143, JUD'L- Confd'l - 31.8.1909, தமிழ் நாடு ஆவணக் காப்பகம்.

31. G.O,1206, Jud'l, confd'l, 27.7.1911

32. G.O.1067, Jud;l. Confd'l, 31.8.1909

33. முற்கூறிய அரசு ஆணை எண். 1067

34. நேடிவ் நியூஸ் பேப்பர் ரிப்போர்ட், 1910, தமிழ்நாடு ஆவணக் காப்பகம்

35. முற்கூறிய அரசு ஆணை எண்.1067

36. பத்திரிகையாளர் பாரதியார், 1989, பெ.சு.மணி, பூங்கொடி பதிப்பகம், மயிலாப்பூர், சென்னை, ப.201

பி. வரதராஜுலு நாயுடு

கு. பகவதி

முன்னுரை

தடம் பதித்தல், சாதனை புரிதல், தன்னைப் பதிவு செய்து கொள்ளல் என்பன எளிதான செயலல்ல; தொடர்ந்த ஈடுபாடு, ஆழ்ந்த சிந்தனை, அயராத உழைப்பு இவற்றிற்குத் தேவை. இவையிருப்பின் எத்துறையிலும் ஒரு மனிதன் தன்னை அடையாளம் காட்ட இயலும். இதழியல் துறையில் தன்னை அடையாளம் காட்டியவர், தன் தடம் பதித்துச் சாதனை செய்தவர் டாக்டர் பி.வரதராஜுலு நாயுடு.

1887இல் பிறந்தார்; 1957இல் மறைந்தார் டாக்டர் நாயுடு. வாழ்ந்த இந்த 70 ஆண்டுகளில் இருந்த இவரது காலச்சூழல், மனிதநேயத்துடன் கூடிய இவரது ஆளுமைப்பண்பு இரண்டும் இணைந்து விடுதலை என்ற இலக்கை அவருக்கு இனம் காட்டிற்று. அந்த இலக்கை நோக்கி உழைத்தார் இவர். அந்த உழைப்பு இவரைப் பல துறைகளில் உயர்த்திற்று. அந்த உயர்வில் ஒன்றே இதழியல் துறையில் இவருக்குக் கிடைத்த வெற்றி.

டாக்டர் நாயுடு, சிறு வயதிலேயே தேசப்பற்றுடன் திகழ்ந்தார். 'எளிய குடும்பத்தில் பிறந்த வரதராஜுலு நாயுடு எட்டாம் வயதில் தந்தையையும் பன்னிரண்டாம் வயதில் தாயாரையும் இழந்தார். கோயம்புத்தூரில் தாயாரின் சகோதரி வீட்டில் பெற்ற ஆதரவினால் கல்வி கற்றார். உயர்நிலைக் கல்வி கற்கும்பொழுதே நாடெங்கும் பரவிய வந்தே மாதரம் இயக்கம் இவரைக் கவர்ந்தது. 1906இல் வங்கப் பிரிவினை இயக்கத்தைத் தொடர்ந்து 'வந்தே மாதரம் என்போம் எங்கள் மாநிலத் தாயை வணங்குதல் என்போம்' என்னும் தேசிய முழக்கத்தோடு மக்கள் இயக்கமாகப் பரவிய வந்தே மாதர இயக்கத்தில் இணைந்தார் இளைஞரான வரதராஜுலு. 'முற்போக்காளர் சங்கம்' என்னும் ஓர் அமைப்பை மாணவர்களிடையே அமைத்தார். அந்நியத் துணி விலக்கு, சுதேசியம் என்னும் தேசிய இலட்சியங்களை முழங்கியதால்

பள்ளியிலிருந்து விலக வேண்டிய சூழல் ஏற்பட்டது. கல்வியா? நாட்டுப் பணியா? என்னும் வினா எழுந்த பொழுது 'நாட்டுப் பணியே' என்பதைத் தேர்ந்தெடுத்தார்' என்கிறார் பெ.சு.மணி.[1] இது விளையும் பயிர் முளையிலேயே தெரியும் என்பதற்கோர் சான்று.

இவரது தன்னலற்ற பான்மைக்கு மேலுமோர் சான்று தனது மருத்துவத் தொழிலை - பொருளாதார வளம் தந்த மருத்துவத் தொழிலை நாட்டிற்காகத் துறந்தது. இதுபற்றியும் பெ.சு.மணி தெளிவாக,

> நாட்டுப் பிணி தீர்க்க முனைந்த வரதராஜுலுவுக்கு மக்கள் நோய் தீர்க்கும் பணியில் ஆர்வம் மலர்ந்தது. கல்கத்தா தேசியக் கல்லூரியில் இரண்டு ஆண்டுகள் இந்திய மருத்துவத்தை - சித்த வைத்தியத்தைக் கற்றுத் தேர்ந்தார். பர்மா மருத்துவக் கல்வித் துறையில் சேர்ந்து மேலும் தமது மருத்துவத் தகுதியை வளப்படுத்திக் கொண்டார். திருப்பூரை இருப்பிடமாகக் கொண்டு மருத்துவத் தொழிலில் ஈடுபட்டார். டாக்டர் வரதராஜுலு நாயுடு. எங்கும் புகழ் பரவியது. . . . ஓராண்டு வருமானம் 24000 ரூபாய்க்குக் கிட்டியது. ஆண்டொன்றுக்கு மூவாயிரம் ரூபாய் வருமான வரி கட்டும் அளவிற்குப் பணம் குவிந்தது. . . 1916இல் தேசிய அரசியலில் தீவிரமாகப் பங்கேற்றார் டாக்டர் நாயுடு. இதனால் மருத்துவப் பணியைக் கைவிட நேர்ந்தது"[2]

என்கின்றார்.

டாக்டர் நாயுடு, தமிழ் நாடு காங்கிரஸ் கமிட்டித் தலைவர்; அகில இந்தியக் காங்கிரஸ் காரியக் கமிட்டி அங்கத்தினர் என பலப் பதவிகளை ஏற்றார். தலைமையேற்றற்குரிய தனித்தகுதிகள் பல இவரிடம் இருந்தன. பேச்சாற்றல், எழுத்தாற்றல், நாட்டுப்பற்று, மொழிப்பற்று, சமூகப்பற்று, தன்னலமற்ற பாங்கு, யாருக்கும் எதற்கும் அஞ்சாமை, எதையும் துணிவுடன் செயற்படுத்தும் இயல்பு போன்ற பல சிறந்த பண்புகள் இவரின் ஆளுமைப் பண்புகளாக மிளிர்ந்தன.

இவரது பேச்சாற்றல் பற்றிக் கூறும் சிற்றரசு,

சமூக ஏற்றத் தாழ்வுகள், பொருளாதார பேதங்கள், ஜாதிமுறைகள் என்னும் இழிவுகள், தீண்டாமை, அண்டாமை என்னும் அறியாமை அவ்வளவையும் சாடி நிற்கும் இவரது சொற்பொழிவு, இன்னாருக்காக இதை எல்லாம் விட்டுவிட்டுப் பேச வேண்டும் இன்ன தலைவருக்காக இன்னின்ன உண்மைகளை மறைத்துவிட வேண்டும் என்ற வித்தியாசமோ, பாரபட்சமோ, முகஸ்துதியோ இருப்பதில்லை இவருடைய பேச்சில். ஆவேசமிக்க பேச்சாளி என்றோ அனல் கக்கும்

பேச்சாளியன்றோ இவரைச் சொல்ல முடியாது என்றாலும் படித்தவர்கள் முதல் பாமரர் வரை கேட்டு ரசித்து உடனே செயல்படும் நிலையிலே இருக்கும் இவர் பேச்சு

என்கின்றது.[3] மேலும்,

தடைபடாமல் மலையுச்சியிலிருந்து அடிவாரம் நோக்கி ஓடிவரும் நீர் அருவி போல், தட்டுத் தடங்கல் இல்லாமல் சொற்கள் ஒன்றன்பின் ஒன்றாக ஓடிவந்துகொண்டே இருக்கும். இடையறாத நோக்கங்களோடு ஊடாடிக் கொண்டிருக்கும். தலைவர்கள் சொற்பொழிவுகளில் எவ்வளவு சூல் கொண்ட கருத்துகள் மின்னுமோ அவ்வளவும் இவர் பேச்சில் இடம்பெறும். சுருக்கமான உதாரணங்களால் பெரிய விஷயங்களை விளக்கும் முறையிலே மிகக் கைதேர்ந்தவர். . இவர் பேசுகிறார் என்றால் அன்று அந்த ஊரில் ஒரு மகத்தான பிரசங்கத் திருவிழா என்று பொருள். எதிரிகளுக்கு இடி, சனாதனிகளுக்குச் சூடு, விடுதலை விரும்பிகளுக்கு விருந்து, தர்க்கவாதிகளுக்குச் சிந்தனை, ஆட்சிக்கு அறைகூவல், துன்பப்படுவோருக்கு ஆறுதல், செயல் வீரர்களுக்கு அழைப்பு எல்லாம் கலந்திருக்கும் இவரது பேச்சில். பேச்சும் ஒரு இசையைப் போலத்தான் என்ற முறையில் வீரம், விவேகம், வாதம் போன்ற பகுதிகள் வரும்போது அதற்கேற்ற வகையில் சொற்களின் ஒலி குறைந்தும் மிகுந்தும் காணப்படும்.[4]

என்று கூறுவது, இவரது பேச்சாற்றலைத் தெளிவுபடுத்தும். நாடறிந்த இவரது பேச்சைப் போன்றே இவரது எழுத்தின் மூலமாக இவரது நாட்டு விடுதலை, சமூக விடுதலை வேட்கையை நாடறிய வைத்தன இவரது இதழ்கள்.

நாயுடு நடத்திய இதழ்கள்

டாக்டர் நாயுடு நான்கு இதழ்கள் நடத்தினார். இவற்றுள், முதலில் இவர் நடத்திய இதழ் பிரபஞ்சமித்திரன்.

'மங்கலம் ஷண்முக முதலியார் உரிமையாளராகவும் சுப்பிரமணிய சிவா ஆசிரியராகவும் இருந்த 'பிரபஞ்சமித்திரன்' மிகுந்த பொருள் இழப்பில் நடந்து கொண்டிருந்த பொழுதும், 1916ஆம் ஆண்டு இறுதியில் டாக்டர் நாயுடு பிரபஞ்சமித்திரனை வாங்கினார். அவரே ஆசிரியர் ஆனார். இரண்டாண்டுகள் பிரபஞ்சமித்திரன் வார இதழாக வெளிவந்தது. அரசியல் பிரசாரத்திலும் சமூக சீர்திருத்தப் பிரசாரத்திலும் 'பிரபஞ்சமித்திரன்' டாக்டர் நாயுடுவிற்கே உரிய வேகத்தையும் விவேகத்தையும் வெளிப்படுத்தியது. 1918ஆம் வருஷம் டாக்டர் நாயுடு சிறைப்பட்ட பொழுது ஆயிரம் ரூபாய் ஜாமீன் கேட்டுப் பத்திரிகையை அடக்கிவிட்டது பிரிட்டிஷ் ஏகாதிபத்தியம்' என்பது பிபரபஞ்சமித்திரன் வரலாறு.[5]

'சிறை மீண்டதும் 1919ஆம் ஆண்டு இறுதியில் சேலத்தில் 'தமிழ்நாடு' என்னும் பெயரில் ஒரு வார இதழைத் தொடங்கினார் டாக்டர் நாயுடு. . . 1925இல் தமிழ் நாடு வாரப்பதிப்பு சென்னையிலிருந்து வெளிவந்தது. 14.4.1926இல் தமிழ்நாடு நாளேடு தோன்றியது. வாரப்பதிப்பும் தினப்பதிப்பும் பத்திரிகைத் தமிழ் வளர்ச்சிக்குப் பாடுபட்டன. சுதேசமித்திரனுக்கு வலுவான போட்டியாக 'தமிழ்நாடு' நாளேடு செல்வாக்குப்பெற்றது. . . . . 1936 செப்டம்பர் 26இல் வெளிவந்த தலையங்கத்தில் 'தீவிரமான சமய, சமூக அரசியல் துறைகளில் கழிக்க வேண்டுமென்ற எண்ணம் காரணமாகத் தமிழ்நாடு இதழை நிறுத்தப்போவதாக அறிவித்தார். 1936 இறுதியில் வாரப் பதிப்பும், தினப்பதிப்பும் நின்றன. நான்காண்டுகள் கழித்து மீண்டும் வாரப்பதிப்பு மட்டும் வெளிவரத் தொடங்கி, சில ஆண்டுகள் நடந்தது'[6] என்பது தமிழ்நாடு நாளேட்டின் வரலாறு.

இவர் நடத்திய ஆங்கில இதழ் 'இந்தியன் எக்ஸ்பிரஸ்'. 'இந்தியன் எக்ஸ்பிரஸ்' ஆங்கில நாளேட் டயும் முதலில் தொடங்கியவர் இவரே. பிறகுதான் சதானந்தம் வழியாக, ராம்நாத் கோயங்காவிடம் சென்றது.[7]

'ஆந்திர பிரஜா' என்ற தெலுங்கு தினசரியும் இவர் நடத்திக் கொண்டிருந்தார்' என்று கூறுகின்றார் சிற்றரசு.[8]

இதழ் நடத்திய காலச்சூழல்

நாயுடுவின் காலம் விடுதலை போராட்டக் காலம். மக்கள் கல்வியறிவு, பொது அறிவு குன்றிய நிலையில் விடுதலை குறித்த விழிப்புணர்ச்சி பெறாத காலம். இது ஒரு புறமிருக்க, இன்னொரு புறம் விடுதலையை வேண்டிய மக்கள், ஆட்சியாளர்களிடம் தம் எதிர்ப்பைத் தெரிவித்துக் கொண்டிருந்த காலம். அதனால் தண்டனை பெற்றுக்கொண்டிருந்த காலம்.

இந்த விடுதலை தொடர்பான உணர்வுகளை வெளிப்படுத்த தமிழர் பல விதங்களில் போராடினர். அவற்றுள் ஒன்று இதழ்களின் மூலம் போராடியது. இதுபற்றி 'இந்தியா விடுதலைப் போரில் பல்வேறு படைக்கலன்களை ஏந்தியது. இந்தப் படைக்கலன்களுள் ஒன்று இந்திய இதழியல் ஆகும். பொதுமக்கள் கருத்தை உருவாக்கவும் எழுத்துரிமை, பேச்சுரிமை, போராட்ட உணர்வு முதலானவற்றை முன்னெடுத்துச் சென்றதில் இந்திய இதழியல் துறைக்குப் பெரும்பங்கு உண்டு' என்ற பெ.சு. மணியின் எண்ணம் இங்குக் குறிப்பிடத்தக்கது.9

இதழியல் துறை நாயுடுவின் காலத்தில் சிறிதுசிறிதாக முன்னேறிக் கொண்டிருந்தது. இருப்பினும், தமிழக மக்களின் இதழ் படிக்கும் ஆர்வம் முன்னேறியிருக்க வில்லை. இது குறித்துக் கூறும் வளவனின் கருத்து அன்றைய காலச்சூழலைத் தெளிவாக்க வல்லது. இவர்,

> தமிழகத்தில் உள்ள ஏறத்தாழ பத்தாயிரம் கிராமங்களில் ஏழாயிரம் கிராமங்களைச் சார்ந்த மக்கள் பத்திரிகை என்றால் என்ன என்றே தெரியாத நிலையிலிருந்த காலத்தையும் சூழலையும் நினைத்துக் கொள்ள வேண்டும். எஞ்சியிருக்கும் மூவாயிரம் கிராமங்களிலும்

> படித்தவர்களாகக் கருதப்படுவோர் எண்ணிக்கை நாலாயிரம் இருக்கும். அவர்களுள் ஒவ்வொரு கிராமத்திலும் யாராவது ஒரு பணக்காரர் வீட்டில் ஏதாவது ஒரு நாளிதழ் வரும். அதை ஒன்பது பேர் படிக்கக் கூடும். இந்த நிலையைப் பார்த்தால் ஒவ்வோர் ஊரிலும் பொதுச் செய்திகளைத் தெரிந்துகொள்பவர் பத்துப் பேர் இருந்தால் அதிகம்

என்று கூறி, மேலும்,

> அந்நியர் ஆட்சி, அதன் கெடுபிடிகள், மொழியறியாத, அவர்களிடத்தில் அவர்களைப் பற்றிக் குறைசொல்லி யிருப்பதாக யாரேனும் கூறிவிட்டால் எல்லாப் படிகளையும் பறிமுதல் செய்தல் முதலியவற்றால் பத்திரிகைகளுக்கும் ஆசிரியர்களுக்கும் ஏற்படும் இழப்பும் தண்டனையும் அக்காலத்தில் தாங்கிக் கொள்ள முடியாத அளவில் இருந்தன. தலைநகரங்களில் அல்லது பெருநகரங்களில் பத்திரிகையை நடத்தினால் செய்திகளை எளிதில் பெறலாம். படித்தவர் எண்ணிக்கையும் கூடுதலாக இருக்கும்.... அதே வேளையில் பத்திரிகைகளிடையே போட்டியும் இருக்கும். இவற்றுக்கும் ஈடுகொடுத்தாக வேண்டும். தொலைதூர நகரங்களில் பத்திரிகையை நடத்தினால் விற்பனை குறைவாக இருக்கும். செய்தி திரட்டுவதும் எளிதாக இராது. வெளியூர்களுக்குப் பத்திரிகை போய்ச்சேர சில நாளாகும். இவ்வளவு தொல்லைகளுக்குமிடையே பத்திரிகை நடத்துவது என்பது பெருஞ் சாதனைதான்

என்கிறார்.[10]

எனவே இதழ் நடத்துவது என்பது நாயுடுவின் காலத்தில் எளிதாக இருக்கவில்லை எனினும் இதழ் நடத்துவதன் தேவையையுணர்ந்து, அவர் இதழ்களை நடத்தினார் என்பதை நாம் உணருதல் இயலுகிறது. மேலும் அக்கால மக்களின் அரசியல் ஈடுபாடற்ற நிலையை, "பூர்வம் நமது ஜனங்கள் தேசப் பொதுக்

காரியங்களில் பிரவேசித்தது இல்லை. அரசர்களும் ராஜதந்திரிகளும் தேசத்தை நிர்வாகம் செய்வதில் ஜனங்களுடைய கூட்டுறவை நாடியவர்கள் அல்லர். ஆகையால் ஜனங்களுக்கு ராஜிய சம்பந்தமாய் அறிவும் ஊக்கமும் உண்டாக வேண்டும் என்று விரும்பி புஸ்தகங்கள் செய்தவர்கள் இல்லை. இந்தியா அதன் பூர்வீக உன்னத நிலையை இழந்து அந்நியருக்கு வசப்பட்டுப்போனது முக்கியமாக இதே காரணத்தினால்தான்"[11] என்ற ஜி. சுப்பிரமணிய ஐயரின் கருத்தைப் படிக்கும்போதும் உணர்ந்து கொள்ள இயலுகிறது. எனவே அன்று டாக்டர் நாயுடு போன்றவர்கள் இதழ் நடத்தியமை என்பது உண்மையான தேசச் சேவை அடிப்படையிலேயே என்பதற்கு மாற்றுக் கருத்துக்கு இடமில்லாத ஒன்று.

இதழ்களின் நோக்கம்

நாயுடுவின் பேச்சு, எழுத்து, செயற்பாடுகள் அனைத்திலும் காணப்பட்ட தேசச் சேவையுணர்வு, சமூக விடுதலையுணர்வு என்பனவே அவரது இதழ்களின் நோக்கமாவும் இருந்தன. அவையே அவரது இதழ்களிலும் பிரதிபலித்தன. 'தமிழ்நாடு இதழிற்கு டாக்டர் நாயுடு தேர்ந்து எடுத்த இலச்சினை அவருடைய கொள்கையை அழுத்தமாக உணர்த்த வல்லது. மூவண்ணக் கொடியின் நடுவே கலப்பை ஏந்திய ஓர் உழவன்; மோதும் நிலையில் இரு வீரவாள்கள்;' 'சுயராஜ்ய வாழ்வே, சுகவாழ்வு' என்னும் வாசகம்"[12] இவருடைய நோக்கத்தைப் பிரதிபலிப்பன. மேலும் இவரே '1916ஆம் ஆண்டில் தீவிரமாகத் தேசியப் போராட்டத்தில் இறங்கிய பிறகு, தமிழ் மக்களைத் தட்டியெழுப்பத் தமிழ்ப் பத்திரிகையொன்று நடத்த வேண்டுமென்ற எண்ணம் தெளிவுபடுத்துகிறது.

விடுதலை என்பது குறித்த இவருடைய எண்ணம் பரந்துபட்டது. இவரே,

> சுதந்திரம் மனித வர்க்கத்தின் பிறப்புரிமை யாகும். சுதந்திரம் என்பது ராஜிய சுதந்திரத்தை, சமூக சுதந்திரம், சிறு கூட்டத்தார் தம்முடைய நயவஞ்சகத்தால் பெரும்பான்மையோரை ஏமாற்றி ஆதிக்கம் செலுத்துவது போன்ற மோசங்களில் இருந்து குடிமக்கள் விடுதலை பெறும் சுதந்திரம் ஆகிய பல

> சுதந்திரங்களும் உண்டு. நாம் கோருவது பரிபூரண சுதந்திரமாகும். ராஜிய சமய சமூக விடுதலையே நாம் வேண்டுகிறோம். வெள்ளைக்காரனுக்குக் குறிப்பிட்ட விசேஷ சுதந்திரமும் அந்தஸ்தும் இருப்பதை நாம் ஏற்றுக்கொள்ள முடியாது. சமய சமூக உயர்வும் மற்றவர்களுக்கு இல்லாத 'பிறப்புரிமை' என்னப்பட்ட பாத்தியதைகளும் பிராமணருக்குக் கொடுக்கப் படுவதை நாம் ஆட்சேபிக்கிறோம்.[13]

என, தமிழ்நாடு (20.12.1925) தலையங்கத்தில் எழுதியிருப்பது இவரது விடுதலை குறித்த எண்ணத்தை வெளிப்படுத்துவதாகும். எனவே நாட்டு விடுதலையையே உண்மையான விடுதலை என்பதை உணர்த்தும் நிலையில், இதழ்களையும் நடத்தினார் இவர்.

மேலும் இவரது இதழ்கள் பற்றிப் பிறரின் கருத்துகளும் இவரது இந்நோக்கினைச் சிறப்பாக எடுத்தியம்புகின்றன.

> இந்தியாவில் உள்ள தமிழருக்கும், பிற நாடுகளில் சென்றுள்ள தமிழருக்கும் 'தமிழ் நாடு' பத்திரிகை செய்து வந்திருக்கும் சிறந்த சேவை பாராட்டத் தக்கதாகும். தமிழரிடையே தன்மான உணர்ச்சியை உண்டுபண்ணி, அரசியல் அறிவை ஊட்டி, தேசம் முன்னேற்றமடையத் தாங்கள் பெரிதும் வேலை செய்து வந்திருக்கிறார்கள். பிறருடைய தயை, தாட்சண்யம், எதிர்ப்பு இவைகளைச் சிறிதும் பொருட்படுத்தாமல் தாங்கள் நடுநிலைமையுடன் தமிழரின் முன்னேற்றத்திற்காகவே வேலை செய்து வந்திருக்கிறீர்கள்

எனப் பாராட்டியுள்ளார் சர்.கே.வி. ரெட்டியார்[15]. சென்னை சர்க்கார் முதன் மந்திரி திவான்பகதூர் பி. முனுசாமி நாயுடு 'தேசிய விஷயங்களைப் பாமர ஜனங்களுக்கு முதன்முதலில் போதித்து வந்தவர் டாக்டர் வரதராசுவே யாவார்' என்றுரைத்துள்ளார்.[16]

இதழ்களின் பொருண்மை

பொதுவாக, ஓர் இலக்கியம் சிறக்க, அதன் பொருள், வடிவம், வெளியீடு ஆகியன சிறப்புற அமைய வேண்டும் என்பது

அறிஞர் எண்ணம். இதை நன்குணர்ந்தவர் நாயுடு. எனவே தன் நோக்கம் நிறைவேற தாம் வெளியிட்ட இதழ்களில் இவற்றைச் சிறப்புற அமைத்துக்கொண்டார்.

இவரது இதழ்களின் பொருண்மைகள் நாட்டு விடுதலை. சமூக விடுதலை, மக்கள் விழிப்புணர்ச்சி சார்ந்தவையாகவே அமைந்தன. இச் செய்திகளைக் கட்டுரைகளாக, தலையங்கங்களாக வெளியிட்டார் நாயுடு. நீதிக்காகப் பல போராட்டங்களையும் இதழ் வழியே நடத்தினார்.

இதனைப் பற்றிக் கூறும் மா.சு. சம்பந்தன், "கோயிலில் பொட்டுக் கட்டும் வழக்கத்தையும் பெண்களை இழிவு படுத்தும் கொடுமையையும் எதிர்த்துக் குரல் கொடுத்தது தமிழ்நாடு. வ.வே.சு. ஐயர் தலைமையில் நடைபெற்ற சேரன்மாதேவி குருகுலத்தில் பார்ப்பனப் பிள்ளைகளுக்குத் தனியாகவும் மற்ற பிள்ளைகளுக்கு வேறாகவும் உணவு பரிமாறிய ஏற்றத்தாழ்வு மனப்பான்மையை வன்மையாகக் கண்டித்துப் போராடியது தமிழ்நாடு' என எடுத்துரைக்கின்றார்[17]. மேலும் குருகுலம் அநீதி பற்றி நாயுடுவே தன் தமிழ்நாடு தலையங்கத்தில், "சேரமாதேவியில் உள்ள ஒரு குருகுலத்தால் எவ்வளவு நலம் விளையுமென்று எதிர்பார்க்கப் பட்டதோ அவ்வளவு தீமை இப்பொழுது விளைந்து வருகிறது. தமிழ்நாட்டில் எங்கணும் பிராமணர், பிராமணர் அல்லாதார் பிணக்கெழுச்சிக்கு அக்குருகுலம் நிலைக்களனாக நின்று கொண்டிருக்கிறது. குருகுலம் எந்நோக்கோடு தொடங்கப் பெற்றதோ அந்நோக்கத்தை நிறைவேற்றும் முறையில் அதன் நடைமுறை நிகழ்ந்துவரின் எவ்வித விவாதமும் நாட்டில் தலைகாட்டியிராது. அதன் தலைவர் 'சமரசம்', 'சமரசம்' என்று பொருள் திரட்டி மூன்று மாத காலம் தாம் சொன்னவாறே குருகுலத்தைச் சமரசமாக நடத்திக்காட்டி, பின்னர் சமரசத்தைச் சாதிரசமாமகத் திருப்பினமையால் தமிழ் நாட்டில் கிளர்ச்சி ஏற்பட்டது" என எழுதிச் செல்கிறார்.[18] என்ன சமாதானம் கூறப்பட்டாலும் அது குருகுல எதிர்ப்புப் போராட்டத்தைத் தணியச் செய்ய முடியவில்லை என்றியம்பும் பெ.சு. மணி இது குறித்து திரு.வி.க. 'பெருங்கிளர்ச்சி டாக்டர் வரதராஜுலு நாயுடு மூலம் நிகழ்த்தப்பட்டது என்றமையையும் குறிப்பிடுகிறார்.[19]

இவ்வாறு, தீண்டாமை, பெண்ணுரிமை போன்ற சமூக நீதி காக்க தம் இதழ்கள் வழி போராடிய வரதராஜுலு, நாட்டு

விடுதலைக்காக மிகவும் போராடினார். இவரது கட்டுரைகள் இவரது எண்ணப்படியே மக்களைத் தட்டி எழுப்பும்படி அமைந்தன. மக்கள் எழுச்சியுறும் படியும் விடுதலை பற்றி விழிப்புணர்ச்சி பெறும் வண்ணமும் அவை அமைந்தன. 'சுதந்திரப் போராட்டம்', 'இந்தியா விடுதலை பெற ஆயுதம் ஏந்த வேண்டும்' போன்ற பல கட்டுரைகள் இவர் எழுதியனவற்றுள் குறிப்பிடத் தக்கன.

ஆயின் ஆட்சியாளர்க்கு இவை அதிருப்தியைக் கொடுத்ததால் இவர் சிறை செய்யப்பட்ட நிகழ்ச்சிகளும் இவரது வரலாற்றில் நடந்தன. "தமிழ்நாடு பத்திரிகையில் சட்டவிரோதமான கட்டுரைகள் எழுதினார் என்ற காரணத்துக்காக, சேலம் டிஸ்ரிக்ட் மாஜிஸ்ட்ரேட் கோர்ட்டில் 9 மாதங்கள் கடுங்காவல் தண்டனை விதிக்கப்பட்டது."[20]

மேலும் தமிழ்நாடு நாளேடாக வளர்ச்சிப் பெற்ற பின்னர், மேல்சுட்டிய பொருண்மைகளுடன், "உலகச் செய்திகளையும் வெளிநாட்டு அரசியல் தலைவர்களின் பேச்சு, செயல் முதலியவை களையும் நாட்டு மக்கள் நன்கு உணர்ந்து கொள்ளும் வகையில் வெளியிட்டு வந்தது. தமிழ் மக்கள் விரும்பிய செய்திகளும் இதில் வெளியிடப்பட்டன" என்கிறார் மா.சு. சம்பந்தன்.[21]

தான் நடத்திய இதழ்களில் மட்டுமல்ல, பிற இதழ்களில் எழுதும்போதும் விடுதலை குறித்த சிந்தனைகளை இவரிடம் பிரதிபலித்தன.

பாரத மணி இதழில் (2.7.39) இவர், "ஒரு தேசிய அரசாங்கத்தில் எல்லோரது உரிமைகளும் பாதுகாக்கப்பட வேண்டும். எல்லோரும் ஆண்டவன் குழந்தைகள் எந்த மதத்தைச் சேர்ந்தவர்களாயிருந்தாலும் சரி, அயலானைக் கஷ்டத்துக்கு உள்ளாக்கினாலும் மதக் கொள்கைகளுக்கு விரோதம் ஆனால் சுயேச்சை என்பது எல்லா மதங்களைக் காட்டிலும் மேலானது. இந்தப் புனிதமான சட்டத்தை எந்தச் சர்க்காராவது மீறினால் பொதுஜனங்கள் அதற்குக் கீழ்ப்படிய மாட்டார்கள்" என்கின்றமை அதற்கொரு ஒரு சான்று.[22]

தன் நோக்கத்திற்கு ஏற்ப, செய்திகளை மக்களுக்கு அளித்த நாயுடு, இவற்றை வெளிப்படுத்திய விதங்களும் சிறப்பானவை. தம்

கருத்துகள் மக்களைச் சென்று அடையவேண்டும் என்பது இவரது அவா. எனவே அதற்கேற்ப இதழின் வெளியீட்டு உத்திகளையும் அமைத்துக் கொண்டார்.

தலையங்கம்

இதழுக்குத் தலையானது தலையங்கம். முக்கியமான செய்திகள் ஆசிரியரால் இப்பகுதியில் எழுதப்படும். ஆசிரியர் சிந்தனைகள் இதன்வழிச் சிறப்பாக வெளிப்படும். நாயுடுவும் தம் எண்ணங்களைத் தலையங்கம் மூலம் மக்களுக்குச் சென்றடையச் செய்தார். அவை பிற இதழ்களும் தங்கள் இதழ்களில் வெளியிடும் வண்ணம் சிறப்பு மிக்கவையாக இருந்தன. "தமிழ்நாடு இதழ் சேலத்திலிருந்து வந்துகொண்டிருந்தபோது வரதராசுலு அவர்கள் வாரந்தோறும் எழுதும் தலையங்கங்களைத் தந்தியில் வரவழைத்து இந்துப் பத்திரிகை வெளியிட்டு வந்தது. இது வரதராசுலு அவர்களின் எழுத்துவன்மையைப் புலப்படுத்தும்".[23] "சுதேசமித்திரனும் இவரது தலையங்கங்களை எடுத்து வெளியிட்டு வந்தது"[24] போன்றன இவரது தலையங்கங்களுக்கு அன்று இருந்த வரவேற்பைப் புலப்படுத்துகின்றன.

கருத்துப்படம்

இவரது காலத்திற்கு முன்னரேயே கருத்துப்படங்கள் இதழ்களில் இடம்பெறத் தொடங்கின. அவை சமயம், சமுதாயம் சார்ந்து இருந்தன. முதன்முதலில் பாரதியார் கேலிச் சித்திரங்களில் அரசியல் சார்ந்த செய்திகளை மக்கட்கு உணர்த்தினார். தொடர்ந்து கருத்துப்படங்களைத் தம் இதழ்களில் வெளியிட்டு வந்தவர் வரதராசுலு நாயுடு. இவருக்குப் பின்னால் வந்த பேனா மன்னர் சொக்கலிங்கம் இதனைத் தொடர்ந்தார்.

> அரசியல் துறையில் கார்ட்டூன்களை வெளியிட்டு வாசகர்களைக் கவர்ந்த சிறப்பு பாரதியாருக்கு உரியதாகும். 1906ஆம் ஆண்டில் பாரதியார் தமது இந்தியா வார இதழில் கார்ட்டூன்களைத் தொடர்ந்து வெளியிட்டார். அவை மக்களைப் பெரிதும் கவர்ந்தன[25]

என்று கூறும் மா.ரா. இளங்கோவன், "1930இல் வெளிவந்த

'தமிழ்நாடு' வார இதழில்தான் ஆசிரியர் டாக்டர் பி. வரதராஜுலு நாயுடு கார்ட்டூன்களைத் தொடர்ந்து வெளியிட்டு இதழின் ஓர் அங்கமாக அதனைப் பிறர் கருதுமாறு செய்தார். இதனால் விற்பனை அதிகரிப்பதைக் கண்ட பிற இதழாசிரியர்களும் கார்ட்டூன் வெளியிடத் தொடங்கினர்" என்கின்றார்.[26]

மொழிநடை

மொழிநடை ஒரு சிறந்த வெளியீட்டு உத்தி. கருத்துகளை மக்கள் செவிகளுக்கு ஏற்றவாறு அறிவிப்பதில் அது பெரும்பங்கு வகிக்க வல்லது. தெரியாத மொழி, குழப்பமான சிக்கலான மொழிநடை, பிறமொழிக் கலப்புடைய நடைகள் ஆகியன வாசிப்பாளர்களின் செவிகளுக்கு இதமாக இராது. வாசிப்பதற்கும் அவற்றை மனங்கொள்வதற்கும் அவை அரிதானவை. எனவே இதழ்களிலும் மொழிநடை சிறப்பாகக் கருதப்பட வேண்டிய ஒன்று. இதுவும் சென்று சேரவேண்டிய மக்களின் கல்வியறிவுக்கு ஏற்றவாறு அமைக்கப்பட வேண்டும். இதனை நன்கு உணர்ந்தவர் டாக்டர் நாயுடு.

வரதராஜுலு நாயுடு ஏற்கெனவே சுட்டியபடி கல்வி அறிவும் பொது அறிவும் அரசியல் அறிவும் குறைந்த அல்லது பெறாத அன்றைய தமிழ் மக்களின் அறியாமை இருளை அகற்றி அவர்களுக்கு விழிப்புணர்ச்சியை ஊட்டவேண்டி இதழ் நடத்தினார். டாக்டர் நாயுடுவின் காலத்தில் வெளிவந்த இதழ்கள் தமிழ் ஆங்கிலம் சமஸ்கிருதம் கலந்த மொழிநடையைக் கொண்டு இருந்தன. திரு.வி.க. தனித்தமிழ் நடையைக் கையாண்டுக் கொண்டிருந்த அக்காலக் கட்டத்தில் பாமர மக்களிடம் தம் கருத்துகள் சென்று சேரவேண்டு மென்று விரும்பிய நாயுடு அதற்கேற்ப தம் நடையை அமைத்துக் கொண்டார். பாமர மக்களுக்குச் செய்திகளைச் சொல்ல, அவர்களது பாமரத் தமிழ் நடையையே கையாண்டார். இதுவும் இதழியலில் அவர் பெற்ற வெற்றிக்குக் காரணமாகும். இது குறித்துப் பல அறிஞர்களின் கருத்துகளும் இங்குச் சுட்டத்தக்கன. இவர் நடையைப் பற்றி வரா.

> பண்டிதர்கள் கூடினால் விளங்காத தமிழ், இங்கிலீஷ்
> படித்த அன்பர்கள் கூடினால் விளங்காத இங்கிலீஷ்.

> இந்தக் கட்டுப்பாடான குறும்புத்தனத்தைத் தவிடு பொடியாக்கிய ஏகபோக பாக்கியமும் பாத்தியமும் வரதராஜுலு நாயுடு அவர்களுக்கே உரித்தானதாகும். பாமரத் தமிழுக்குப் பெருமையும் பொலிவும் பலமும் உண்டு என்பதை நிலைநாட்டிய புண்ணியத்தை எவரும் நாயுடு அவர்களுடன் பங்குப் போட்டுக் கொள்ள முடியாது[27]

எனக் கூறியிருப்பது இவரின் நடைச்சிறப்பை மட்டுமல்லாது சிந்தனைத் தெளிவுடன் தம் நடையை அமைத்துக்கொண்ட சிறப்பையும் தெளிவுபடுத்தும். "சிக்கலான அரசியல் பிரச்சினைகளை எளிய தமிழில் தெளிவாகவும் விளக்கமாகவும் அழுத்தமாகவும் தெரிவிக்க முடியும் என்பதை உறுதிப்படுத்தியவர் டாக்டர் நாயுடு" என சோமலெ கூறுகிறார்.[28]

இந்நடையும் மிகவும் விறுவிறுப்பாக இருந்தது என்பதை மா.சு. சம்பந்தன் இவர் தமிழ் நாடு என்னும் நாளிதழை விறுவிறுப்பான நடையில் விடுதலைப் போரில் வெடிகுண்டு போல் எழுதி வந்தார்" எனக் கூறுவதன் மூலம் உணரலாம்.

விளம்பரம்

இதழ்களின் செலவை எதிர்நோக்குதற் பொருட்டு இதழ்களில் விளம்பரங்களை வெளியிட்டவர் நாயுடு.

> டாக்டர் நாயுடு அவர்கள் தமது பத்திரிகையின் மூலம் வர்த்தகர்களுக்கு அரிய சேவை புரிந்துள்ளார். 'தமிழ்நாடு'வில் விளம்பரம் செய்த பல வர்த்தகர்கள் மிக்க அனுகூலமடைந்துள்ளனர். சில வருஷ காலத்துக்கு முன்பு வரை விளம்பரமானது வெள்ளை வர்த்தகர்களது ஏகபோக உரிமை போலிருந்தது. பத்திரிகையில் விளம்பரம் செய்வதன் பயனை இப்பொழுது இந்திய வர்த்தகர்கள் நன்கு உணர்ந்துள்ளனர். அனால் அவர்களுக்கு ஏராள லாபம் கிடைக்கிறது. விளம்பரத்தின் பலனை இந்திய வர்த்தகர்கள் உணரும்படிச் செய்யத் தூண்டுகோலாக இருந்தவர் டாக்டர் வரதராஜுலு நாயுடுவே[31]

என்கின்ற செய்தியை அறியும்போது தம் இதழின் மூலம் வர்த்தகர்கள் வளம்பெற துணை நின்றதோடு மக்களும் இவ் விளம்பரச் செய்திகளைக் கண்டு பயன் அடைய உதவியிருக்கின்றனர் என்பதை அறிந்துகொள்ள இயலுகிறது, இது நாயுடுவின் இதழ் வெளியீட்டு அறிவிற்கு மற்றுமோர் சான்று.

விலைக்குறைப்பு

இவ்வாறு காலத்திற்கேற்ப மக்களுக்குச் செய்திகளைத் தரவிரும்பி, அச்செய்திகளை வெளியிடும் உத்தி முறைகளிலும் மொழி நடையிலும் கருத்துடன் செயல்பட்டு வந்தவர் டாக்டர் நாயுடு. இதழ்கள் மக்களை எளிதாகச் சென்று சேரவேண்டும் என்றும் விரும்பினார். "தமிழ்நாடு இதழ் விலை பிற இதழ்களின் விலையைவிட குறைந்தது"[30] என்று அறிகின்றபொழுது, இதுவும் ஓர் சிறந்த இதழியல் உத்தியாக இவரால் கையாளப்பட்டதோ என எண்ணத் தோன்றுகிறது.

மேலும் தமிழ் இதழியல் துறையில் 'தமிழ்நாடு' செய்த புரட்சி என, அளவிலும் விலையிலும் தமிழ்நாடு இதழிற்கும் மித்திரன் இதழிற்கும் நடந்த போட்டியைப் பற்றிக் கூறும் பேனா மன்னர் டி.எஸ். சொக்கலிங்கம், அந்தப் போட்டியில் தமிழ்நாடு பெற்ற வெற்றியைப் பற்றிச் சிறப்பாகப் புரட்சி எனக் குறிப்பிடுகிறார்.

> 'தமிழ்நாடு'க்கு எப்பொழுதுமே விளக்கெண்ணெய் கொள்கை கிடையாது. ஆகையால் 'தமிழ்நாடு' வாசகர்கள் அதிகமாயிருந்தது இயற்கையே. இதில் மற்றொரு முக்கியமான விஷயம். சனியைத் தவிர பாக்கி நாட்களில் 'தமிழ்நாடு' முதல் வருஷத்தில் 8 பக்கங்களுடனும், இரண்டாவது வருஷத்தில் 10 பக்கங்களுடனும் வெளிவந்தது. மூன்றாவது வருஷத்தில்தான் 12 பக்கங்கள் போடப்பட்டது. அப்படியிருந்தும் பக்கங்கள் குறைவு என்பதற்காக அதற்கு ஆதரவு குறைந்து விடவில்லை. எனவே போட்டியிலோ, புரட்சியிலோ பக்கங்கள் மட்டும் ஒரு முக்கிய காரணமாய் இருப்பதில்லை. அதற்கு முன் தோன்றிய பத்திரிகைகளைப் போல் இல்லாமல் 'தமிழ்நாடு' நிலைத்துவிட்டது. தமிழ்ப் பத்திரிகைப் புரட்சியில் இது ஒரு முக்கியமான சம்பவம்'[32]

என்பது 'தமிழ்நாடு' இதழின் சிறப்பிற்கு மேலும் ஓர் சான்று. டாக்டர் நாயுடுவின் இதழியல் பணியின் சிறப்பிற்கும் இது ஓர் சான்று.

முடிவுரை

இதழியல் துறை இன்று, கணினி மூலம் செய்திகளை உலகமெங்கும் உடனுக்குடன் பரப்பும் ஆற்றலுடன் திகழ்கிறது. எனினும் நாயுடுவின் காலத்தில் இதழியல் துறையில் இன்று இருப்பதைப் போன்று, புதுப்புது கருவிகள் ஆகியன அன்றைய இதழாசிரியர்களிடம் இல்லை. எனினும் அவர்கள் தங்கள் காலத்துக்கு ஏற்பவும் தம் கொள்கைகளின் அடிப்படையிலும் இதழ்களை வெற்றிகரமாக நடத்தினர்; புதுப்புது உத்திகளைக் கையாண்டனர். கையாண்டு இதழியல் வளர்ச்சிக்குத் துணைநின்றனர். இதனால் இதழியல் துறை காலந்தோறும் வளர்ந்து வந்தது; இன்று பெருவளர்ச்சியை எட்டியுள்ளது. இந்த வளர்ச்சியில் முக்கிய பங்கேற்றவர் - பங்காற்றியவர் டாக்டர் நாயுடு என்றால் அது மிகையல்ல.

டாக்டர் நாயுடு தமக்கு முன்னே வந்த இதழ்களையும், தம் கால இதழ்களையும் நன்கு கற்றவர்; நன்கு உணர்ந்தவர். எனவே தாம் நடத்திய இதழ்களை ஏன் நடத்துகிறோம்? எதற்காக நடத்துகிறோம்? எப்படி நடத்த வேண்டும்? எப்படி நடத்தினால் இதழ்களைத் தொடங்கியதற்கான நோக்கம் நிறைவேறும் என்பது குறித்த்ச் சிந்தனைகளுடன் செயல்பட்டார்.

இவருடைய இதழ்கள் தமிழிலும் ஆங்கிலத்திலும் தெலுங்கிலும் வெளிவந்தன. எல்லா மொழி மக்களிடமும் தம் செய்திகள் பரவ வேண்டும் என்ற நோக்கில் பல மொழி இதழ்களை நடத்தினார்.

விடுதலை சார்ந்த கருத்துகளை, சமூகம் சார்ந்த செய்திகளை, மக்களிடம் சென்று சேரும்படியாக, மக்கள் விழிப்புணர்ச்சி பெறும் வண்ணம் தம் இதழ்களில் வெளியிட்டார். பிற இதழ்களில் உள்ள நல்ல அணுகுமுறைகளைத் தாமும் பின்பற்றினார்.

குறிப்பாக, கருத்துப் படங்கள் இவருக்கு முன்பே இதழ்களில் வெளியிடப்பட்டு வந்தன; எனினும் இவர் தொடர்ந்து இவற்றைத், தம் இதழ்களில் வெளியிட்டார்.

தவிர, இவர் தம் இதழ்களில் புதிய உத்திகளைக் கையாண்டமை, இதழியல் வளர்ச்சியில் இவருடைய இடத்தினை முக்கியப்படுத்துகிறது.

இதழ்களில் எழுதும் தலையங்கங்கள் மக்களை மிகவும் கவர்வன; சிந்திக்கத் தூண்டுவன என்பதிலும் இவர் உறுதியும் தெளிவும் பெற்றவராக இருந்திருக்கிறார். எனவே தம் தலையங்கங்களில் முக்கியமான செய்திகளை எழுதினார். இவற்றைப் பிற பத்திரிகையாளர்களும் தம் பத்திரிகைகளில் வெளியிட்டுள்ளனர் என்று அறியும்போது, இவரது தலையங்கங்களின் சிறப்பினைப் புரிந்துகொள்ள இயலுகிறது.

பாமரத் தமிழ்நடையின் மூலம் வெளியாகும், கருத்துகள் மக்களை எளிதில் அடையவல்லது; மக்கள் செய்திகளை உள்வாங்கிக் கொள்ளச் செய்ய வல்லது என்பதை உணர்ந்து அதனைச் செயல்படுத்திய முறை இதழியல் வளர்ச்சியில் ஒரு மைல்கல்.

மேலும் இதழ்களை மக்கள் வாங்கிப்படிக்கும் தன்மையை மிகுவிக்க இதழ்களின் விலையைக் குறைத்தமை; விளம்பரம் பற்றிய இவரது அணுகுமுறை ஆகியன சிறப்புடையன.

எனவே நோக்கத்திற்கு ஏற்ப பொருண்மைகள், வெளியீட்டு உத்திகள் போன்றவற்றை அமைத்தல் என்பது இதழியல் வளர்ச்சிக்கு அடித்தளம் அமைத்துக் கொடுப்பன என்பது இதழியல் துறைக்கு நாயுடு அளித்த கொடை.

இவ்வாறு நாயுடு நடத்திய இதழ்களின் வெற்றியில் அவரது உழைப்பும் சிந்தனையும் இணைந்து செயல்பட்டன. தவிர, அவர் இவற்றை எந்தச் சூழலில் நடத்தினார் என்பதும் எந்தக் காலத்தில் நடத்தினார் என்பதும் இதழியல் துறையில் அவருடைய முக்கியத்துவத்தை மிகுவிக்கும் விஷயங்கள்.

ஏற்கெனவே குறிப்பிட்டவாறு, நாயுடுவின் காலம் விடுதலை போராட்டக் காலம். நாட்டு விடுதலையின்றி, சமூக விடுதலையும் இன்றி மக்கள் அல்லல்பட்டு அவதிப்பட்டு வந்த காலம். அம்மக்களின் விடுதலைக்காக இதழ் நடத்தினார் நாயுடு. எனவே அவருடைய இதழ்களில் ஒவ்வொரு பகுதியும் விடுதலை

குறித்தே அமைந்தன. எனினும் இவற்றையும் பல துன்பங்களுக்கு இடையே, ஆட்சியாளர் கொடுத்த துன்பம், சமூகம் கொடுத்த துன்பம் எனப் பல துன்பங்களுக்கு இடையே நடத்தினார். இதற்குக் காரணம் அவரது மனித நேயம், மன உறுதி. எதற்கும் அஞ்சாமை, நேர்மை, துணிவு, அடிபணியாமை என்பன. எனவே எதற்கும் அஞ்சாது, துணிவுடன் எந்த நோக்கத்திற்காக இதழ் தொடங்கப்படுகிறதோ அந்நோக்கத்தை மனதில் கொண்டு அதற்கேற்ப வெளியீட்டு உத்திகளையும் கையாண்டால் இதழ் வளர்ச்சி என்பது அசாதாரணமானதன்று; சாதாரணமானதுதான் என்பதைத் தாம் நடத்திய இதழ்கள் வழி சாதித்துக் காட்டியவர் நாயுடு. மேலும் இதழாசிரியர் எவ்வாறு அமைய வேண்டும் என்று இவரே தமது 'தமிழ் நாடு' இதழில் (10.4.31) 'பத்திரிகைகளின் கடமை' என்று தலைப்பிட்ட தலையங்கத்தில்,

> பத்திராதிபர்கள் பொறுப்பு வெகு கஷ்டமானது. பத்திராதிபர்க்கு அளவற்ற ஆண்மை வேண்டும் அதற்குத் தக்க அடக்கமும் வேண்டும். உண்மையைச் சொல்ல வேண்டும். உற்றார் உறவினர் தாட்சண்யங்களைப் பொருட்படுத்தலாகாது. ஜனங்களின் தவறுகளை ஆணித்தரமாக எடுத்துக் காட்ட வேண்டும். அவர்களுடைய ஆத்திரத்தைக் கண்டு அஞ்சலாகாது. ஈசுவர சேவையை விட தேசத் சேவை உயர்ந்தது என்பதே நமது அபிப்பிராயம்[33]

என்று எழுதியுள்ள தன்மையிலேயே இவர் வாழ்ந்து வந்தார். இதனை நோக்க இதழ் ஆசிரியர்கள் அவர் காலத்தில் மட்டுமல்ல, இன்றும் என்றும் இவ்விலக்கணங்களைக் கொண்டு திகழ்ந்தால், இதழியல்துறை என்பது ஓர் ஆயுதமாக, மக்களைப் பாதுகாக்கும் அரணாக அமையும் என்பது, டாக்டர் நாயுடு இதழாசிரியர்களுக்கு விட்டுச்சென்ற சிறந்த அறிவுரை.

மேலும் எந்த ஒரு செயலும் ஈடுபாட்டுடன் செய்யப்பெறின் அதன் வெற்றி உறுதி என்பதைத் தம் இதழியல் மூலம் சாதித்துக் காட்டியவர் நாயுடு. இவர் பலர் இதழியலில் ஈடுபாட்டுடன் உழைக்க வழிகாட்டியாக இருந்தார் என்பதும் கீழே சுட்டப்படும் செய்தியால் தெரியவருகிறது.

> செய்திகளுக்குப் போடும் ஒவ்வொரு தலைப்பையும் அவர் அலசிப் பார்ப்பார். செய்திக்கு ஏற்றதாகவோ விறுவிறுப்போடோ இல்லாமல் போனால் கண்டிப்பார். இவ்வாறு கண்டித்துத் தலைப்புகள் போடுவதிலும் எழுதுவதிலும், இருந்த தவறுகளைச் சுட்டிக்காட்டித் திருத்தியதன் பயனாக என் போன்ற கற்றுக்குட்டிகள் அந்த நாளில் எவ்வளவோ நன்மை அடைந்ததோடு சிறந்த பயிற்சி பெற்றவர்களும் ஆனோம்.[34]

இவரது சிறப்பு இவரைத் 'தென்னாட்டுத் திலகர்' என்று போற்றச் செய்தது. பெரியாரை இதழியல் துறையில் ஈர்க்கச் செய்தது. நாட்டு விடுதலைக்காகப் பெரியோர் பலரைப் போராடத் தூண்டியது என்பது இவரது வரலாறு தரும் எண்ணம். குறிப்பாக, பெருந்தலைவர் காமராசர் கூற்று இங்குக் குறிப்பிடத்தக்கது. "அவருடைய வாழ்க்கையே தியாகங்கள் நிறைந்தது. மகாத்மாகாந்தி கைது செய்யப்பட்டபோது பிரிட்டிஷ் ஆட்சியை ஏற்காமல் வருமானவரி செலுத்தாமல் மறுத்துத் தென்னிந்தியாவிற்கு வழிகாட்டினார். 1920 முதல் காங்கிரசுடன் தொடர்பு கொண்டு ஸ்ரீ ஈ.வெ. ராமசாமி நாயக்கரும் நானும் அரசியல் உணர்வு பெற்று காங்கிரஸ் தொண்டு செய்வதற்குக் காரணமாக இருந்தவர் நாயுடுதான். அரை நூற்றாண்டு கால வாழ்க்கையில் பல மேடு பள்ளங்களைக் கண்ட அவர் வாழ்க்கை, பெற்ற சுதந்திரத்தைப் பேணி பாதுகாக்கத் தூண்டவல்லது".[35]

எனவே முழுமையாக டாக்டர் பி. வரதராஜுலு நாயுடு அவர்களின் இதழியல் பணிகளை ஆராய்கின்ற பொழுது தன்னலம் கருதாது, உயர்வான எண்ணம் கொண்டு, இதழ்ப்பணி புரிந்தவர் என்ற நிலையில்,

1. இதழியலை ஆராய்ந்து அணுகியவர்
2. பல்லாற்றானும் இதழியலை வளர்த்தவர்
3. பின்னர் வந்த இதழாளர்க்கு வழிகாட்டியவர்

எனப் பட்டியலிடலாம். இவரது சாதனை- இதழியல் துறையில் பதித்த தடம் அழுத்தமானது; குறிப்பிடத்தக்கது என்பது தெளிவு.

குறிப்புகள்

1. தேசிய சங்கநாதம் டாக்டர் பி. வரதராஜுலு நாயுடு - பெ.சு. மணி, ப.1
2. மேலது, ப.2
3. டாக்டர் பி. வரதராஜுலு நாயுடு அவர்களின் வாழ்க்கை வரலாறு, சி.பி. சிற்றரசு, பக். 24-25
4. மேலது, பக்.49,50
5. தேசிய சங்கநாதம் டாக்டர் பி. வரதராஜுலு நாயுடு, பெ.சு.மணி, ப.14
6. மேலது, பக். 14, 15
7. மேலது, ப. 15
8. டக்டர் பி. வரதராஜுலு நாயுடு அவர்களின் வாழ்க்கை வரலாறு, கி.பி. சிற்றரசு, ப.18
9. விடுதலைப் போரில் தமிழ் இதழ்கள், பெ.சு. மணி, ப.18
10. இந்திய விடுதலைக்கு முந்தைய தமிழ் இதழ்கள், இ. சுந்தரமூர்த்தி, மா.ரா. அரசு (பதி), பக். 177-178
11. விடுதலைப்போரில் தமிழ் இதழ்கள், பெ.சு.மணி, ப.160
12. தேசிய சங்க நாதம் டாக்டர் பி. வரதராஜுலு நாயுடு, பெ.சு.மணி, ப.15
13. இந்திய விடுதலைக்கு முந்தைய தமிழ் இதழ்கள், இ. சுந்தரமூர்த்தி, மா.ரா. அரசு (பதிப்.), ப.186
14. டாக்டர் பி. வரதராஜுலு நாயுடு அவர்களின் வாழ்க்கை வரலாறு, சி.பி. சிற்றரசு, ப.52
15. மேலது, ப.52
16. மேலது, ப.52
17. தமிழ் இதழியல் வரலாறு - மா.சு. சம்பந்தன், ப.28
18. விடுதலைப் போரில் தமிழ் இதழ்கள், பெ.சு.மணி, பக்.307, 308
19. மேலது, ப.307
20. டாக்டர் பி. வரதராஜுலு நாயுடு அவர்களின் வாழ்க்கை வரலாறு, சி.பி. சிற்றரசு, ப.22
21. தமிழ் இதழியல் வரலாறு, மா.சு. சம்பந்தன், ப.79
22. மேலது, ப.83-84
23. இந்திய விடுதலைக்கு முந்தைய தமிழ் இதழ்கள், ப.184
24. தமிழ் இதழியல் வரலாறு, மா.சு. சம்பந்தன், ப.238
25. இதழியல் நோக்கு, மா.ரா. இளங்கோவன், ப.63

26. மேலது.
27. தமிழ் இதழ்கள், சோமலெ, ப.24
28. மேலது
29. தமிழ் இதழியல் வரலாறு, மா.சு. சம்பந்தன், ப.238
30. விடுதலைப்போரில் தமிழ் இதழ்கள், பெ.சு. மணி, ப.335
31. டாக்டர் வரதராஜுலு நாயுடு அவர்களின் வாழ்க்கை வரலாறு, சி.பி. சிற்றரசு, ப.51
32. விடுதலைப்போரில் தமிழ் இதழ்கள், பக்.335-336
33. தமிழ் இதழியல் வரலாறு, மா.சு. சம்பந்தன், 79
34. விடுதலைப் போரில் தமிழ் இதழ்கள், பெ.சு. மணி, ப.328
35. தேசிய சங்கநாதம் டாக்டர் பி. வரதராஜுலு நாயுடு, பெ.சு.மணி, ப.15

பார்வை நூல்கள்

1. இளங்கோவன், மா.ரா., *இதழியல் நோக்கு,* சேகர் பதிப்பகம், சென்னை, 1981
2. இளங்கோவன், மா.ரா., *இந்திய இதழ்கள் – கிழக்கிந்தியக் கம்பெனிக் காலம்,* சேகர் பதிப்பகம், சென்னை, 1981
3. இளங்கோவன், மா.ரா., *முற்காலத் தமிழ் இதழ்கள் ஓர் அறிமுகம்,* சேகர் பதிப்பகம், சென்னை, 1981
4. சம்பந்தன், மா.சு., *தமிழ் இதழியல் வரலாறு,* தமிழர் பதிப்பகம், சென்னை, 1987
5. சிற்றரசு, சி.பி., *டாக்டர் பி. வரதராஜுலு நாயுடு அவர்களின் வாழ்க்கை வரலாறு,* அஸோஸியர்ஸ் பப்ளிஷிங் ஹௌஸ், சென்னை, 1957
6. சுந்தரமூர்த்தி, இ., அரசு, மா.ரா. (பதிப்.) *இந்திய விடுதலைக்கு முந்தைய தமிழ் இதழ்கள் – தொகுதி 1,* உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம், சென்னை, 1998
7. சோமலெ, *தமிழ் இதழ்கள்,* சென்னை பல்கலைக்கழகம், 1978
8. மணி, பெ.சு., *தேசிய சங்கநாதம் டாக்டர் பி. வரதராஜுலு நாயுடு அவர்களின் வாழ்க்கைச் சுருக்கம்,* வெளியீடு : இயக்குநர், செய்தி, மக்கள் தொடர்புத்துறை, தமிழ்நாடு அரசு, 1988
9. மணி, பெ.சு., *விடுதலைப் போரில் தமிழ் இதழ்கள்,* மணிவாசகர் பதிப்பகம், சென்னை, 1998

பெரியார்

க. திருநாவுக்கரசு

தமிழ்நாட்டில் சுயமரியாதை, தன்மானம் எனும் சொற்களைக் கேட்ட மாத்திரத்திலேயே நமக்குப் பெரியார் நினைவு இயல்பாக வந்துவிடும். அவரது இயற்பெயர் ஈ.வெ. இராமசாமி என்பது மறைந்து விடும்; பெரியார் எனும் பட்டப்பெயரே இயற்பெயராய் நின்று விடும். அப்பெரியாரை அனைவரும் நாத்திகராய்த்தான் அறிவர். அவர் அரசியல் பதவிகளில் இல்லாமலேயே அரசியலை இயக்கிய சாதனையாளர். பெரியாரைப் போல அப்படி இன்னொருவரை எடுத்துக்காட்ட முடியாது. அத்தகைய சாதனையாளரான பெரியார் தமது சுயமரியாதை இயக்கக் கொள்கைகளை இயக்கத்தவர்களுக்கும் நாட்டு மக்களுக்கும் தெரிவிப்பதற்காகவும் அரசியல் நடப்புகளைக் குறித்து அவ்வப்போது கருத்துகளைத் தெரிவிப்பதற்காகவும் மாத, வார, நாளேடுகளை நடத்தினார். இதற்காக அவர் ஓர் இதழாளராகப் பணியாற்றினார். அவர் நடத்திய இதழ்களின் வழி இதழாளர் பெரியாரின் பணி எத்தகையது என்பதனை இக்கட்டுரையில் இனிக் காண்போம். இதழாளர் பெரியாரை நாம் அறிந்துகொள்ளும் முன் அவரது வாழ்க்கை வரலாற்றை மிகச் சுருக்கமாகத் தெரிந்து கொள்வோம்.

பெரியாரின் வாழ்க்கைச் சுருக்கமும் அவரது கொள்கைகளும்

பெரியார் 17.9.1879இல் வேங்கடப்ப நாயக்கர்க்கும் சின்னத் தாயாரம்மாளுக்கும் இரண்டாவது மகனாகப் பிறந்தார். அவருக்கு ஒரு தமையனாரும் இரண்டு தங்கைகளும் உண்டு. பெரியார் 95 ஆண்டுகள் வாழ்ந்து 24.12.1973இல் இயற்கை எய்தினார். தமிழ்நாட்டின் பொது வாழ்க்கையில் அவர் இயற்கை எய்தும் வரை 55 ஆண்டுகள் இடையறாது பணியாற்றினார்.

பெரியாரின் பள்ளிக்கல்வி அவரது 10ஆவது வயதிலேயே (4ஆம் வகுப்போடு) முடிந்து விடுகிறது. தமது 11ஆவது வயது

முதற்கொண்டு தகப்பனாருக்கு உதவியாக அவர்களது மண்டிக் கடையில் மூட்டைகளில் கட்டப்பட்டுள்ள சரக்குகளுக்கு முகவரி எழுதுவது; ஏலம் போடுவது போன்ற வணிக ஈடுபாட்டில் இறங்கினார். பெரியாரின் பெற்றோர் மிகக் கடுமையாக உழைத்துச் செல்வந்தர் ஆனவர்கள். தந்தையாரை விடத் தாயாரின் கடுமையான உழைப்பும் வழிகாட்டுதலும்தான் குடும்பம் செல்வ நிலையை அடைய காரணங்களாக இருந்திருக்கின்றன. இச்செய்தியைப் பெரியாரே 'என்னைப் பெற்ற ஏழைகள்' எனும் கட்டுரையில் தெரிவித்து இருக்கிறார்.

பெரியாரின் வரலாற்றைப் பார்க்கிறபோது அவர் இளம்பருவம் முதல் சுதந்திரப் போக்கு உடையவராகவே இருந்திருக் கிறார். கவலை, பயம், அச்சம் அவரை ஆட்கொண்டதாகவே தெரியவில்லை. மாறாக வெடிப்புறப் பேசுவது, வினாத் தொடுப்பது, ஆராய்ச்சி அறிவோடு விவாதிப்பது, நகைச்சுவை உணர்வோடு சிக்கல்களை எடுத்துக்கூறுவது அவர்க்கு இளமையிலேயே இயல்பானதாக இருந்துவந்து இருக்கின்றன.

பெரியார் தமது 19ஆவது வயதில் நாகம்மையாரைத் திருமணம் செய்து கொண்டார். இவர்களுக்குப் பெண் மகவு ஒன்று பிறந்து 5 மாதத்திலேயே இறந்துவிட்டது. பின்னர் குழந்தையே இல்லை. மீண்டும் பெரியார் தமது 70ஆவது வயதில் 1949இல் மணியம்மையாரைப் பதிவுத் திருமணம் செய்துகொண்டார்.

பெற்றோரின் செல்வச் செழிப்பு ஈரோட்டில் பெருஞ் செல்வாக்கைக் குடும்பத்திற்குத் தேடித்தந்தது. பெரியார் குடும்பத்தினர் வைணவ மரபினர். அதற்கேற்ப பத்திக்குரிய சிறப்புகளும் பூசனைகளும் நாளும் வீட்டில் நிகழ்ந்துகொண்டே இருந்தன. இதனால் துறவிகள், சந்நியாசிகள், பாகவதர்கள் போன்றோரின் வருகைகள் அதிகரித்தன. அவர்களுக்கு சன்மானங் களும் வழங்கப்பட்டன.

வீட்டின் இச்சூழ்நிலையால் இதிகாசங்கள், புராணங்கள் பற்றிய விவரங்கள் பெரியார்க்கு அத்துப்படியாயின. அவர் கல்லாதன எல்லாங் கேட்டறிந்தார். அவரது சிந்தனையைக் கிளற அவை காரணங்களாயின. 1900ஆம் ஆண்டில் மிகத் தெளிவான ஓர் நிலைக்கு அவர் ஆயத்தமாகிவிட்டார். ஆனாலும் பெரியார்

எதனையும் அய்யத்தோடு நோக்கி ஆராய்வதில் முனைந்தார். 1904இல் பொன்னுசாமி என்கிற கைவல்யம் அவர்களிடம் பெரியார்க்கு நட்பு உண்டாயிற்று. இதனால் பெரியாரின் விவாதம் மேலும் விரிவடைந்தது. கடவுள், மதம், இதிகாசங்கள், புராணங்கள், ஆன்மா, மறுபிறப்பு, சொர்க்கம், நரகம், சோதிடம் போன்ற சமூகம் ஏற்றுக் கொண்டுள்ள நம்பிக்கைகளின் மீது மண்டிக் கடையில் இருந்தவாறே விவாதிக்கத் தொடங்கினார். மண்டிக்கு வருவோர் போவோர் மீதும் இவ்விவாதத்தின் வீச்சு விழவே செய்தது. அதுபோலவே வீட்டுக்கு வரும் துறவிகள், சந்நியாசிகள், பாகவதர்கள் ஆகியோரிடமும் இவ்விவாதம் தொடர்ந்தது.

இவ்விவாதம் குறித்துத் தமது தந்தையாரிடம் பையனின் வாயாடித்தனத்தை திறமையைப் பலரும் எடுத்துக்கூறினர். இதனைப் பெரியாரின் தந்தையாரும் ஒரு வகையில் பெருமையாகவே கருதினார். இந்திய விடுதலை இயக்கமான காங்கிரசின் மீது பெரியார் 1907 முதலே நாட்டங் கொண்டார். 1908ஆம் ஆண்டு முதல் ஆண்டுதோறும் நடைபெறும் அகில இந்திய காங்கிரஸ் மாநாடுகளுக்குச் சென்று வரலானார். காங்கிரசின் மீது ஈடுபாடு வளர்ந்தது. 1911இல் தந்தையார் இயற்கை எய்தினார். தந்தையார் காலத்திலேயே வணிகப் பொறுப்புகள் பெரியாரின் பெயர்க்கு மாற்றம் செய்யப்பட்டுவிட்டன. ஊரின் பல முக்கியப் பொறுப்புகள் பெரியார்க்குக் கிடைத்தன. அதாவது 1914-க்கும் 1918-க்கும் இடையில் அவர் 28 கௌரவ பதவிகளில் செல்வாக்கு உள்ளவராக இருந்தார். 1919இல் பெரியார் ஈரோடு நகரசபைத் தலைவரானார். இதே சமயத்தில் இராஜாஜியும் சேலம் நகரசபைத் தலைவராகத் தேர்ந்தெடுக்கப் பட்டார்.

இந்திய விடுதலை இயக்கமான காங்கிரஸ் இக்கால கட்டத்தில் மாபெரும் எழுச்சியோடு திகழ்ந்தது. இராஜாஜி பெரியாரைக் காங்கிரசில் உறுப்பினர் ஆக்கினார் (பெரியார் பொது வாழ்க்கைக்கு வருவதற்கு மூன்று பேர் காரணம் என்பார் திரு.வி.க. ஒருவர் இராஜாஜி; மற்றைய இருவர் வ.உ.சி., வரதராஜுலு நாயுடு) அப்போது பெரியார்க்கு வயது 40. பெரியாரின் நாடு தழுவிய பொது வாழ்க்கை என்பது இங்கே இருந்துதான் தொடங்குகிறது. பெரியார் காங்கிரசில் 1919 முதல் 1925 வரை ஆறு ஆண்டுகளே இருந்தார். இந்தக் காலகட்டத்தில் அகில இந்திய காங்கிரசிலும் தமிழ்நாடு

காங்கிரசிலும் சாதீய மேலாண்மை ஓங்கி இருந்ததை முழுமையாக அறிந்து கொண்டார். 1920 முதல் 1925 வரை நடைபெற்ற தமிழ் மாகாண காங்கிரஸ் மாநாட்டில் ஒவ்வொரு ஆண்டும் பெரியாரால் கொண்டு வரப்பட்ட வகுப்புவாரி பிரதிநிதித்துவத் தீர்மானம் தோல்வியைத் தழுவிக்கொண்டே வந்தது. இது, காங்கிரஸ் பார்ப்பனர் அல்லாத மக்களுக்கு இழைக்கும் தீங்கு என்று உணர்ந்தார் பெரியார். ஆகவே அவர் 1925 நவம்பர் 22இல் காங்கிரசிலிருந்து வெளியேறினார்.

பார்ப்பனர் அல்லாத வெகுமக்களின் சுயமரியாதையைப் பாதிக்கக் கூடிய விதத்தில் காங்கிரஸ் நடந்துகொண்டதால் பெரியார் அவர்களுடைய ஆதரவாளர்களுடன் வெளியேறிய இந்நாளை சுயமரியாதை இயக்கம் தோன்றிய நாளாகக் கருதலாம். இதற்கு முன்பு பெரியாரின் குடிஅரசு ஏடு தொடங்கிய நாளான 2.5.1925ஆம் நாளை சுயமரியாதை இயக்கம் தோன்றிய நாள் எனக் கொள்ளலாம் என்று குறிப்பிட்டு இருக்கிறேன். அந்த முடிவு தவறு. அதைவிட பெரியார் காங்கிரசிலிருந்து வெளியேறிய நாளே 'சரியானது' என்று கருத அத்தனை பொருத்தமும் இருக்கிறது. சில ஆய்வாளர்கள் 1926ஆம் ஆண்டுதான் சுயமரியாதை இயக்கம் தோன்றிய ஆண்டு என்று நிறுவிக்காட்டுவர். மொத்தத்தில் சுயமரியாதை இயக்கம் தொடங்கிய நாள் என்று எதுவும் குறிப்பாகக் கூறமுடியவில்லை என்பதே உண்மை.

பெரியார், காங்கிரசில் இருந்த காலத்தில் நீதிக்கட்சிக்கு எதிராகக் காங்கிரசின் கிளையாகச் செயல்பட்ட பார்ப்பனர் அல்லாதார்க்காகத் தோற்றுவிக்கப்பட்ட சென்னை மாகாண சங்கத்தில் பணியாற்றினார். காங்கிரசாரைப் போலவே சென்னை மாகான சங்கத்தின் பணியும் அமைந்து இருந்தது. காங்கிரசை மீறிப் பார்ப்பனர் அல்லாத மக்களுக்குச் சென்னை மாகாண சங்கத்தால் ஒன்றும் செய்துவிட முடியாது. எனவே இந்த அமைப்புகள் பார்ப்பனர் அல்லாத மக்களுக்குப் பயன் அளிக்கக் கூடியது இல்லை என்று உணர்ந்த பெரியார் சுயமரியாதை இயக்கத்தைத் தோற்றுவித்தார்.

இந்திய விடுதலைப் போராட்டக் காலத்தில் தென்னாட்டிலும் வடநாட்டிலும் காங்கிரசுக்கு எதிராக இரண்ட வித நிலைப்பாடுகள் மேற்கொள்ளப்பட்டன. அவை

தென்னாட்டில் பார்ப்பனர் - பார்ப்பனர் அல்லாதார் என்றும், வடநாட்டில் இந்து - முஸ்லிம் என்றும் அரசியல் இயக்கப்பட்டது. இப்பிளவுகள் நாட்டுப் பற்றைக் காட்டிலும் மிக அப்பட்டமாகத் தெரிந்தன. இதனைக் காங்கிரஸ் வகுப்புவாதம் என விமர்சனம் செய்தது.

பெரியார் வெளிப்படையாகவே பார்ப்பனர் அல்லாதார் நலன் பற்றிப் பேசுவதற்கு முன்பாகவே தென்னிந்திய நலவுரிமைச் சங்கம் - (South Indian Liberal Federation) - ஜஸ்டிஸ் கட்சி - நீதிக்கட்சி 20.11.1916இல் அமைப்புக் கூட்டத்தைக் கூட்டி - அதுகுறித்த அறிக்கையை வெளியிட்டுவிட்டது. இந்த அரசியல் இயக்கத்தினுடைய நோக்கம் அரசியலிலிருந்து பார்ப்பனர் ஆதிக்கத்தை ஒழிப்பதாகவே இருந்தது. நீதிக்கட்சியின் இந்தக் கோபம் ஒருவகையில் சரியானதே எனும்படியாக இந்தியாவில் வறுமையைப் பற்றிய ஆராய்ச்சி என்கிற நூலின் முன்னுரையில் ஏ.என். சிவராமன் கூறுகிறார்.

நீதிக்கட்சியின் பணியைப் போன்றது அன்று பெரியாரின் பணி. அது மிகக் கடுமையானது; மிகத் துன்பமானது; நினைத்துப் பார்ப்பதற்கே மலைப்பானது ஆகும். அரசியலில் அல்ல - சமூக அமைப்பில் மேல் அடுக்கில் இருக்கிற பார்ப்பன ஆதிக்கத்தை ஒழிப்பதே சுயமரியாதை இயக்கத்தின் - பெரியாரின் பணியாக இருந்தது. 1925இல் காங்கிரசிலிருந்து பெரியார் வெளியேறுகிறபோது அவரது பிரகடனத்தின் சாரம் அதுவாகத்தான் இருந்தது.

ஆனால் 1927 வரை காந்தியடிகள் மீது அல்லது காங்கிரசின் மீது பெரியார்க்கு ஒரு நம்பிக்கை இருந்து வந்தாலும் அது முழுமையாக இல்லை. காங்கிரசை விட்டு வெளிவந்த கால கட்டத்தில் நடைபெற்ற உள்ளாட்சித் தேர்தல்களில் (1925) பெரியார் பகிரங்கமாக நீதிக்கட்சியை ஆதரித்தார். 1927-க்குப் பிறகு காந்தியடிகள் எதிர்ப்பு, காங்கிரஸ் எதிர்ப்பு, பார்ப்பன எதிர்ப்பு, கடவுள் மற்றும் மத எதிர்ப்பு எனக் கடுமையான பிரச்சாரத்தில் பெரியார் ஈடுபடலானார்.

காங்கிரசில் இருந்து ஆறு ஆண்டுகளில் பெரியார் இந்திய சமூக அமைப்பைப் பற்றிய காந்தியடிகளின் மதிப்பீட்டை அறியவில்லையோ என்று தோன்றுகிறது. ஏனெனில் காந்தியடிகள்

தம்மை ஒரு சநாதனவாதியாகவே அறிவித்துக் கொண்டார். 'யங் இந்தியா'வில் 6.10.1921 இதழில் எழுதவும் செய்தார். தீண்டாமை ஒழிப்பு இயக்கம் என்பது தீண்டத்தகாதோரிடையே சமமாக உட்கார்ந்து சாப்பிடுவது - அவர்களோடு மண உறவுகளை வைத்துக் கொள்வது போன்ற இலட்சியங்களுக்கானது இல்லை எனவும், காந்தியடிகள் 1.5.1924இல் Young India-வில் எழுதினார். 1919இல் காங்கிரசில் சேர்ந்த பெரியார் Young India-வில் காந்தியடிகள் எழுதிய கருத்துகளை ஒட்டியே செயல்பட்டு இருக்கிறார். இதற்கு முதல் குடி அரசு இதழே (2.5.1925) சான்று.

பெரியார் 1920 முதல் காங்கிரசில் 1925 வரை வகுப்புவாரி பிரதிநிதித்துவத்திற்கான தீர்மானங்களைத் தொடர்ந்துகொண்டு வந்து, அவை தோற்றுப்போன நிலையிலும் 1927 வரை காந்தியடிகள் மீதும் காங்கிரசின் மீதும் பெரியார் நம்பிக்கை வைத்திருந்தார். பெரியாரின் பரிணாம வளர்ச்சியைக் 'குடி அரசு' இதழின் அமைப்பு மற்றும் உள்ளடக்கத்திலிருந்து தெரிந்துகொள்ள முடிகிறது.

காந்தியடிகளின் விடுதலைப் போராட்ட வரலாற்றில் ஒத்துழையாமை இயக்கம், அந்நியப் பொருள்கள் பகிஷ்கரிப்பு, கள்ளுக்கடை மறியல், உப்பு சத்தியாகிரகம், வெள்ளையனே வெளியேறு இயக்கம் ஆகிய போராட்டங்கள் மிக முக்கியமானவை ஆகும். இப்போராட்டங்களில் மூன்றில் பெரியார் கலந்துகொண்டு போராடியவர்; சிறை சென்றவர். காங்கிரசில் இருந்த பலருக்கு முன் மாதிரியாக இருந்தவர். இவ்வளவு உழைப்பைச் செலுத்தியும் காங்கிரசில் அவரால் தொடர முடியவில்லை. உப்பு சத்தியாகிரகப் போராட்டத்தை ஆதரிக்க வேண்டும் என ஈரோடு சுயமரியாதை மாநாட்டில் ஜீவா பேசினார். பெரியார்க்கு உப்பு சத்தியாகிரகத்தை ஆதரிக்க மனமில்லை. கோவை அய்யாமுத்துவை எதிர்த்துப் பேச செய்து, அதன் மூலம் எதிர்த்தார் பெரியார்! காங்கிரசை எதிர்ப்பதில் முழுவீச்சுக்குத் தயாரானார் பெரியார்!

நீதிக்கட்சி பார்ப்பனர் அல்லாதார் அரசியல் ஆதிக்கத்தைப் பெறுவதில்தான் அக்கறைக் காட்டியது. ஆனால் பெரியாரின் சுயமரியாதை இயக்கமோ சமுதாயத் துறையில் பார்ப்பனர் ஆதிக்கத்தை வேரறுக்கக் கிளம்பியது. வர்ணாசிரமத்தை வீழ்த்தவும் சாதியை ஒழிக்கவும் பணியாற்றி வந்தது. சுயமரியாதை இயக்கத்தின் மூலம் பெரியார் ஒரே நேரத்தில் இரண்டு பணிகளைச் செய்தார்.

ஒன்று வர்ண, சாதி, சமய ஒழிப்புப் பணி. இன்னொன்று அரசியல் அதிகாரத்தில் இருப்பவர்களைக் கொண்டு சுயமரியாதை இயக்கக் கொள்கைகளை நிறைவேற்றிக்கொள்ள அவர்களைப் பயன்படுத்திக் கொள்வது. இவ்விரண்டு பணிகளைப் பெரியார் இறுதிவரை செய்தார். இரண்டாவது அணுகுமுறையால் அவரது நிலைப் பாடுகளில் ஏதோ மாற்றம் இருப்பது போன்ற ஒரு தோற்றத்தை ஏற்படுத்தியது. ஆனால் உண்மையில் அவரோ கொள்கைகளில் மிக உறுதியாக இருந்தார்.

பெரியார் 1927-க்குப் பிறகு அவர் மரணம் அடையும் வரையும் முக்கிய வரலாற்று நிகழ்வுகள் என்பது பின்வருமாறு அமைந்திருந்தது. உப்பு சத்தியாகிரக எதிர்ப்பு, அறநிலையத்துறைப் பாதுகாப்புச் சட்ட வரவேற்பு, வகுப்புவாரி பிரதிநிதித்துவ ஆணை வரவேற்பு, தேவதாசி ஒழிப்புச் சட்ட வரவேற்பு, சைமன் கமிஷனுக்கு ஆதரவு, மலேசிய சுற்றுப்பயணம், அய்ரோப்பிய சுற்றுப்பயணம், அய்ரோப்பிய பயணத்தின்போது 3 மாதம் ரஷியாவில் தங்குதல், பொதுவுடைமைப் பற்று, பொதுவுடைமைப் பிரச்சாரம் மற்றும் வெளியீடுகளைக் கொண்டு வருதல், பெரியாரின் பொதுவுடைமைப் பிரச்சாரத்தால் லார்டு வெலிங்டனின் கலக்கம், சர்.எ.டி. பன்னீர்செல்வத்தின் தூது, காங்கிரசுக்கும் நீதிக்கட்சிக்கும் சுயமரியாதை இயக்கத்தின் வேலைத் திட்டத்தை அனுப்புதல், நீதிக்கட்சியை ஆதரித்தல் இடையிடையே கடுமையான விமர்சனம் செய்தல், நீதிக்கட்சியின் தேர்தல் தோல்வி, இராஜாஜியின் முதல் அமைச்சரவை, முதல் இந்தி எதிர்ப்புப் போராட்டத்தைத் தலைமையேற்று நடத்துதல், நீதிக்கட்சியின் தலைவராகத் தேர்ந்தெடுத்தல், கிரிப்ஸ் தூதுக்குழுவைச் சந்தித்து தனிநாடு கோரிக்கையை வற்புறுத்தல், இரண்டாம் உலகப்போர் ஆதரவு, தமிழ்நாடு தமிழருக்கே எனும் முழக்கம், இராஜாஜியின் முதல் அமைச்சரவை விலகல், பெரியாரை அமைச்சரவை அமைக்கச் சொல்லி வெள்ளையர் கோரிக்கை, அதனையே வழிமொழிந்து இராஜாஜி கோரிக்கை, பெரியாரின் நிராகரிப்பு, தமிழ்நாடு தனிநாடு கோரிக்கையைத் திராவிட நாடாக மாற்றுதல், 'வெள்ளையனே வெளியேறு' இயக்கத்தை எதிர்த்தல், திராவிட நாடு - தனி நாட்டுக் கொள்கைக்கு இராஜாஜியின் ஆதரவு, நீதிக்கட்சி + சுயமரியாதை இயக்கம் = திராவிடர் கழகம் ஆதல், இந்திய அரசியல் நிர்ணய சபைக்கு எதிர்ப்பு, சுதந்திர நாளை துக்க நாள் என்று அறிவித்தல்,

பெரியாரோடு அறிஞர் அண்ணா மாறுபாடு கொள்ளுதல், வெளியேறுதல், பெரியார் இயக்கம் தொடருதல், 1950இல் உச்ச நீதிமன்றம் சென்னை மாகாண அரசு நடைமுறைப்படுத்தி வரும் வகுப்புவாரி உத்தரவு இந்திய அரசியல் சட்டத்திற்கு முரணானது எனத் தீர்ப்பு வழங்குதல் - இதுகுறித்துப் பெரியாரின் போர்ப் பிரகடனம், அதன்பின் முதல் அரசியல் சட்டத் திருத்தம், சுதந்திரத்திற்குப் பின் நடந்த முதல் தேர்தலில் பெரியாரின் நடவடிக்கைகள், மீண்டும் இராஜாஜி முதல்வர், இந்திப் பெயர் பலகை அழிப்புப் போர், பிள்ளையார் உடைப்புப் போர், இராஜாஜியின் கல்வித் திட்டத்தை எதிர்த்துப் போர், இராஜாஜி முதல் அமைச்சர் பொறுப்பிலிருந்து விலகுதல், காமராசர் முதல்வர் ஆதல், காமராசரை - காங்கிரசைப் பெரியார் ஆதரிக்கத் தொடங்குதல், தேசியக்கொடி எரிப்புப் போராட்ட அறிவிப்பு, புத்தர் கொள்கைப் பிரச்சார மாநாடு நடத்துதல் பர்மா பயணம், ஆந்திரப் பிரிவினை, சென்னையைத் தமிழ்நாட்டோடு தக்க வைக்க பெரியாரின் பணி, தட்சிண பிரதேச திட்டத்திற்குப் பெரியார் எதிர்ப்பு, இராமன் பட எரிப்பு, இந்திய அரசியல் சட்டப் பகுதி எரிப்பு, இந்திய தேசப்பட எரிப்பு, திராவிட நாடு கொள்கையை விட்டு 'தமிழ்நாடு தமிழருக்கே' எனும் முழக்கம், காமராசர் முதல்வர் பொறுப்பிலிருந்து விலகுதல், இராமாயண எரிப்பு, 4ஆம் இந்தி எதிர்ப்புப் போராட்டத்தின்போது - அதாவது 1965இல் பெரியாரின் நிலைப்பாடு, 1954 முதல் 14 ஆண்டுகள் பெரியாரின் காமராசர் - காங்கிரஸ் ஆதரவு, 1967 தேர்தலின்போது அறிஞர் அண்ணா முதல்வர் ஆதல், பெரியார் - அண்ணா சந்திப்பு, கடவுள் மறுப்புக் கொள்கையைப் பிரகடனப்படுத்துதல், டெல்லி ஆதிக்க கண்டன நாள், கர்ப்பகிரக கிளர்ச்சி நாள், இன இழிவுப் போக்க அனைத்துச் சாதியினரும் அர்ச்சகர் ஆகலாம் எனும் சட்டத்திற்கு ஆதரவு, சேலம் இன இழிவு மாநாடு, இராமன் படம் அவமானப்படுத்தப்பட்டு எரிக்கப்பட்ட நிகழ்ச்சி, மீண்டும் தி.மு.க. ஆட்சி, திருவாரூர் மாநாடு, வேளாங்கண்ணி பயிற்சி பாசறை, 1973 டிசம்பர் 19ஆம் தேதி தியாகரா நகர் இறுதிப் பேருரை, 24.12.1973இல் வேலூர் சி.எம்.சி. மருத்துவமனையில் இயற்கை எய்தினார். இவ்வளவு முக்கியக் குறிப்புகளைக் கொண்டதே பெரியாரின் வாழ்க்கை வரலாறு ஆகும்.

பெரியாரின் 55 ஆண்டுகால நெடிய போராட்ட வாழ்க்கை - புரட்சிகர வரலாறு பல பகுப்புகளை உடையதாயினும் ஒரே

நோக்கத்தைத்தான் அது வற்புறுத்துகிறது. சமயமற்ற, வர்ணபேதமற்ற, சாதியற்ற, ஒரு சமத்துவ சமுதாயமாகத் தமிழ்நாடு திகழ வேண்டும் என்பதே பெரியாரின் இலட்சிய வேட்கையாக இருந்தது.

அவரது இலட்சியங்களை நிறைவேற்ற அவரே ஆட்சியில் பங்கேற்காமல் ஆளுவோரை இயக்கி வைத்த ஆளுமை உடையவர் பெரியார். சமயமற்ற, வர்ணபேதமற்ற, சாதிகளற்ற சமுதாயத்தை அமைக்கப் பெரியார் மக்களிடம் செல்ல பயன்படுத்திய இரண்டு முக்கிய கருவிகள் ஒன்று மேடைப் பேச்சு, இரண்டாவது எழுத்து. பெரியாரின் மேடை பேச்சு - அவர் மக்களை நேரிடையாகச் சந்திக்க வைத்தது. எழுத்து-அவரது நடவடிக்கைகளை ஆவணப்படுத்தியது. ஆவணங்கள் ஆகிவிட்ட அவரது எழுத்துகள்தாம் இதழாளர் பெரியாரை நம் முன் கொண்டு வந்து நிறுத்துகிறது.

பெரியாரை அறிஞர் அண்ணா மிகச் சுருக்கமாக அவரது எல்லாப் பண்புகளையும் வெளிப்படுத்தும் விதத்தில் திராவிட நாடு இதழில் எழுதினார்.

பெரியார் பொறுப்பேற்றுத் தொடங்கிய இதழ்கள்

பெரியாரின் மேடைப்பேச்சு அனைத்துத் தரப்பு மக்களையும் கவர்ந்த ஒன்றாகும். இவரது பேச்சுத் திறனை அறிஞர் முதல் பாமரர் வரை பாராட்டி இருக்கின்றனர். மேடைப் பேச்சு நிகழ்த்துகிறபோது கேட்போருடன் அதன் பயன் முடிந்து விடுகிறது. பேச்சையும் இலட்சியம் சார்ந்த எழுத்துகளையும் எழுதுகிறபோது - பதிவாக்குகிறபோது அதன் பயன்பாட்டு எல்லை விரிவடைகிறது. அது ஆவணமாகிப் பாதுகாக்கப்படுவதாகிறது. பின்னர் அது வரலாற்றுச் சான்று ஆவணமாக மதிக்கப்படுகிறது. ஓர் இதழின் தேவை என்பது எவ்வளவு முக்கியமானது என்பதைப் பெரியார் உணர்ந்திருந்தார். ஒத்துழையாமை இயக்கப் போராட்டத்தின்போது 1922ஆம் ஆண்டு கோவை சிறையில் இருந்த பெரியார்க்கு, பத்திரிகை நடத்த வேண்டும் என்கிற எண்ணம் உண்டாயிற்று. இத்தருணத்தில் ஹிந்து, மெயில், சுதேசமித்திரன், ஜஸ்டிஸ், திராவிடன், தேசபக்தன் பின்னர் நவசக்தி, ஃபிரி இண்டியா போன்ற முக்கிய பத்திரிகைகள் மக்கள் கவனத்தைக் கவர்ந்த ஏடுகளாக வெளிவந்து கொண்டிருந்தன. இதழ்கள் நாட்டில் மக்கள் செல்வாக்கோடு வெளிவந்து

கொண்டிருந்தபோதுதான் பெரியார் ஓர் இதழை நடத்த வேண்டும் என்கிற முடிவுக்கு வரலானார். இதுகுறித்துப் பெரியார்,

> நமது நாட்டு மக்களுள், சுயமரியாதையையும் சமத்துவத்தையும் சகோதரத்துவத்தையும் உண்டாக்க 'குடிஅரசு' எனும் ஒரு பத்திரிகையை ஆரம்பிக்க வேண்டும் என்பதாக முதல் நானும் எனது நண்பர் ஸ்ரீமான் தங்கப்பெருமாள் பிள்ளையும் 1922இல் கோயம்புத்தூர் ஜெயிலில் சிறைவாசம் செய்யும்போதே நினைத்தோம்.

அதுபோலவே வெளியில் வந்த கொஞ்ச நாள்களுக்குள் குடி அரசு என்ற ஒரு வாரப் பத்திரிகையும், 'கொங்கு நாடு' என்று ஒரு மாதாந்திரமும் நடத்தப் போவதாய் 19.1.1923 தேதியில் சர்க்காரில் ரிஜிஸ்டர் செய்யப்பட்டது.

குடியரசு ஏட்டின் தலையங்கத்தில் 1.5.1927ஆம் தேதிய இதழில் இப்படி எழுதியிருக்கிறார் என்றாலும் அவரே இவ்விரு இதழ் குறித்து 'ஓர் விளக்கம்' எனத் தலைப்பிட்டு எழுதியதில் குடி அரசை நாளேடாகவும் கொங்கு நாடு இதழை வார இதழாகவும் பதிவு செய்ததாக எழுதியிருக்கிறார்.

பெரியார் திட்டமிட்டப்படி குடி அரசு 2.5.1925 தேதியிட்டு முதல் இதழாக வெளிவரத் தொடங்கியது. கொங்கு நாடு மாதாந்திர இதழ் வெளிவந்ததாகத் தெரியவில்லை. பெரியார் முதன்முதலில் குடி அரசு வார இதழைத்தான் தொடங்கினார். இதற்கு அடுத்து 'ரிவோல்ட்' எனும் ஆங்கில வார ஏடு 6, 7.11.1928இல் தொடங்கப் பட்டது. இந்த இதழ் 55 இதழ்கள் வெளிவந்து 19.1.1930இல் நின்று விட்டது. 'ரிவோல்ட்' தமிழில் 'புரட்சி' எனும் பெயரில் வார ஏடாக 20.11.1933இல் தொடங்கப்பட்டது. இந்த இதழ் எத்தனை காலம் வெளிவந்து நின்றுவிட்டது என்கிற விவரம் இன்னும் கிடைக்கவில்லை.

பகுத்தறிவு தினசரி ஏடு 15.3.1934இல் தொடங்கப்பட்டது. இந்த நாளேடு சுமார் 2 மாத காலம் வெளிவந்து 6.1.1935இல் நின்று விட்டது. இந்த நாளேடு தொடர்ந்து நாள்தோறும் வெளியிடப் படவில்லை என்று தெரிகிறது. 'பகுத்தறிவு' மாத இதழ் 1.5.1935இல் தொடங்கப்பட்டது. இந்த இதழ் நான்கு ஆண்டுகள் வெளிவந்தது.

நீதிக்கட்சியின் ஏடான 'திராவிடன்' நாளேட்டில் 1927 செப்டம்பர் முதல் ஆசிரியர் பொறுப்பேற்று பெரியார் சிறிது காலம் நடத்தினார்.

'விடுதலை' ஏடு 1.6.1935 முதல் வாரம் இருமுறை ஏடாக நீதிக்கட்சிக்காகத் தொடங்கப்பட்டது. இரண்டு ஆண்டுகள் கழித்து நாடேளாக மாற்றப்பட்டது. டி.ஏ.வி. நாதனால் நீதிக்கட்சிக்காகத் தொடங்கப்பட்ட விடுதலை பின்னர்தான் பெரியாரின் பொறுப்பிற்கு வந்தது.

'உண்மை' 14.1.1970 இல் மாத ஏடாகத் தொடங்கப்பட்டது. இப்போது மாதம் இருமுறை ஏடாக வெளிவந்து கொண்டு இருக்கிறது.

The Modern Rationlist-1971 செப்டம்பர் முதல் மாத இதழாக வெளிவரத் தொடங்கியது. இப்போதும் மாத இதழாக வெளிவந்து கொண்டு இருக்கிறது. இப்படிப் பெரியாரின் ஏடுகளாகக் குடி அரசு, ரிவோல்ட், புரட்சி, பகுத்தறிவு நாளேடு, பகுத்தறிவு மாத இதழ், விடுதலை நாளேடு, உண்மை மாத இதழ், The Modern Rationlist மாத இதழ் ஆகியவை அவரது காலத்தில் வெளியிடப்பட்டு வந்தன. இவற்றில் இப்போதும் விடுதலை, உண்மை, The Modern Rationlist போன்ற இதழ்கள் வெளிவந்துகொண்டு இருக்கின்றன.

இவை அத்தனை இதழ்களிலும் 2.5.1925 முதல் 19.12.1973 வரை பெரியாரின் கட்டுரைகள், பிற எழுத்து வடிவங்கள், சொற்பொழிவுகள் இடம்பெற்று இருக்கின்றன. பிற அறிஞர்கள், கவிஞர்களின் ஆய்வுரைகள், கவிதைகள் இடம்பெற்றிருக்கின்றன.

இவ்வேடுகளில் குடிஅரசு இதழும் விடுதலை இதழுமே பெரியாரின் முழுப்பரிமாணத்தைக் காட்டிநிற்கின்றன. அவர் ஓர்; இதழாளர் என்பதை நிலைநாட்டி வருகின்றன. அவர் பொறுப்பேற்று நடத்திய மற்ற இதழ்களில் - அதன் ஆயுள் குறைவாக இருந்ததால் அவரின் இதழாளர்க்குரிய அனைத்து ஆளுமையையும் அவற்றில் காண முடியவில்லை.

நான் சாதாரணமாக ஒரு வெறும் பேச்சாளியல்ல;
அல்லது விஷயங்களை எல்லாம் படித்து அறிந்து

> மக்களுக்கு எடுத்துச் சொல்லும் வடியான படிப்பாளியும் அல்ல; நான் ஒரு கருத்தாளி. உலகத்தைப் பார்த்து எப்படி நடந்தால் அவர்களுக்கும் நல்லது - நாட்டுக்கும் நல்லது என்று தான் சொந்தமாகக் கொண்ட கருத்தினைக் கூறி வருபவன்
> - விடுதலை 25.11.1964 பக்கம் 3 - பத்தி 3
> (பெரியாரில் 5. தாம் மா. நன்னன் தொகுத்தது).

> என்னைப் பொறுத்த வரையிலும் நான் என்றும் கட்சிக்காரனாக இல்லவே இல்லை. எப்பொழுதும் நான் கொள்கைக்காரனாகவே இருந்தேன்
> - விடுதலை 1.6.1954, பக்கம் 2 - பத்தி 1

இக்கூற்றுகளிலிருந்து பெரியார் ஒரு கொள்கைகாரராகவும் அதே நேரத்தில் மக்களிடையே தாம் சிந்தித்த கருத்துகளை அவர்களின் நலம் விழைந்து கூறுபவராகவும் இருப்பதால் இவர்க்கு உறுதியாகப் பத்திரிகை ஒன்று தேவையானதே ஆகும்.

ஆகவே, பெரியார் தாமாகவே முன்வந்து ஏடு நடத்த மூன்று முக்கிய காரணங்கள் இருந்தன.

1. இந்திய சமூக அமைப்பு, மக்கள் ஏற்றுக்கொண்ட மரபு, அதனால் வெகுமக்களான சூத்திரர்களின் பாதிப்பு அதனை அவர் கண்டறிந்து சொல்லுவதற்குப் பொதுமேடை மட்டும் போதாது. இந்திய விடுதலை இயக்கத்தினர் தமது கருத்துகளை வெளியிட ஏடுகளைக் கொண்டிருத்தல் போல தாமும் ஏடுகளின் வழி கொள்கையைப் பரப்ப வேண்டும். தமது சிந்தனைகளை, கருத்தை, கொள்கைகளை ஆவணப்படுத்த வேண்டும்.

2. பெரியார் குடி அரசு தொடங்கிய காலகட்டத்தில் இருந்த ஏடுகளும் சரி, பின்னர் வெளிவந்த பெரும்பாலான ஏடுகளும் சரி- பெரியாரின் கொள்கைகளை - கொள்கை சார்ந்த ஆய்வுகளை வெளியிட முன்வாரா. தெளிவும் திட்பமும் உடைய தமது கொள்கைகளை வெளியிட தமக்கென்று சொந்த ஏடு அவசியம் தேவை.

3. பெரியாரின் பணி என்பது அழிவு வேலையில் புதிய நிர்மாணிப்பு ஆனதினால் - எதிரிகளின் தாக்குதல்கள் மிக

அதிகமாக இருந்தன. அவர் எதிரிகளின் வினாக்களுக்கு விடை சொல்ல வேண்டியிருந்தது. மறுப்புக்கு மறுப்பு கூற வேண்டியிருந்தது.

மேலும் பெரியார் ஏடு நடத்த அவர்க்கு ஒரு தெளிவான கொள்கை இருந்தது. அதற்கான காரணங்களும் இருந்தன. அவர் மாபெரும் மக்கள் பேச்சாளர் எனும் பாரட்டைச் சமூகத்தின் அனைத்துத் தரப்பினரிடமும் பெற்றிருந்தார். ஆனால் ஏடு நடத்த - இதழ் நடத்த - பத்திரிகை நடத்த உரைநடை வளம் மிக்கவரா பெரியார்? அதற்குரிய தகுதியும் எழுத்து வன்மையும் உடையவரா பெரியார்? - எனும் வினாவை எழுப்பினால் அதற்கு விடை தர முன் வருகிறார் க.நா. சுப்பிரமணியம்.

அவர் 'உரைநடையில் வார்த்தைச் செட்டு' எனும் தலைப்பில் பெரியாரின் உரைநடையைப் பற்றி தினமணி 4.5.1988இல் கீழ்க்காணும்படி எழுதினார்.

> . . . இலக்கியங்களைப் பற்றி விரிவுரை நடத்திய பேராசிரியர்களும் சமூக, அரசியல் விஷயங்களை ஜனங்களுக்குப் புரிகிற மொழியில் எடுத்துரைத்த அரசியல்வாதிகளும் திராவிடப் பேச்சாளர்களும் வார்த்தைகளை அதிகமாக உபயோகித்து விஷயத்தையும், நடையையும் வேகம், உஷ்ணம் உள்ளதாகப் பண்ணினார்கள். ஈ.வெ.ரா.வின் நடையிலும் ஓர் இலக்கியத்தரமான வார்த்தைச் செட்டைக் காணலாம்.
>
> பாரதியாரைப் போல, அவர் பேச்சிலும் துல்லியமாகக் காண முடிந்தது. மற்றவர்கள் பேச்சில் உள்ளதை மறைக்கும் போக்குதான் காணப்பட்டது. ஈ.வெரா.வின் இலக்கியச் சேவை மிகவும் தரமானது என்று சொல்ல வேண்டும். இத்தனைக்கும் அவர் இலக்கியச் சேவை செய்ய முன்வந்ததாகச் சொல்லவில்லை. மற்றவர்கள்தான் சொல்லிக்கொண்டார்கள்.

பெரியார் பல இதழ்களை நடத்தினாலும் அதில் அவர் எழுதினாலும் அவரது முழு வடிவத்தையும் காட்டி நிற்கும் ஏடுகள் இரண்டுதான். 1. குடி அரசு 2. விடுதலை. இந்த இரண்டு ஏடுகளும்

பெரியார் இயக்கக் கொள்கை கோட்பாடுகளின் வடிகால்களாகத் திகழ்ந்தன. அவரது பொது வாழ்க்கையின் ஒவ்வொரு அசைவையும் அவை வெளிப்படுத்தின. பெரியாரின் பொதுவாழ்க்கை நடவடிக்கைகளை 1925 முதல் 1973 வரை அதாவது அவர் இயற்கை எய்தியது வரை அறிவதற்குரிய பெரிய ஆவணங்களாகத் திகழுகின்றன. பெரியார் ஓர் இதழாளர் என்பதை அவ்வேடுகளின் ஒவ்வொரு பக்கங்களும் பறைசாற்றிக் கொண்டு இருக்கின்றன.

ஒருவரோ அல்லது ஓர் இயக்கமோ அல்லது அரசியல் கட்சியோ இதழ்களை ஏன் நடத்த வேண்டும்? இதற்கு விடையாக மூன்று காரணங்களைக் கூறுகிறார் தமிழ்ப் பத்திரிகை உலகின் முடிசூடா மன்னரான சி.பா. ஆதித்தனார். அவை :

1. சாதாரணமாகத் தங்களுக்குத் தெரிந்ததைப் பிறருக்குச் சொல்லுவதற்காகப் பத்திரிகைகளை நடத்துவார்கள்.

2. சிலர் நடந்ததை எடுத்துச்சொல்வதற்கு இதழ்கள் நடத்துவார்கள்.

3. சிலர் மக்கள் எதை எதிர்பார்க்கிறார்களோ - எதை விரும்புகிறார்களோ அதற்காகப் பத்திரிகை நடத்துவார்கள் (தமிழ் இதழ்கள், சோமலெ)

இந்த மூன்று அம்சங்களோடு இன்னொன்றையும் நாம் சேர்த்துக் கொள்ள வேண்டும். அதாவது,

4. இதழ்களின் மூலம் கருத்தைப் பரப்பி, கொள்கையை விளக்கி பொதுமக்களிடையே ஒரு கருத்துருவை - அபிப்ராயத்தை உருவாக்கி மக்கள் இயக்கத்தைக் கூட்ட முயல்வது.

பெரியார் 1,2,4 அம்சங்களைக் கொண்டே குடி அரசையும் விடுதலையையும் நடத்தினார்.

ஆக, பெரியார் பழைய ஏற்பாடுகளை இடித்து நொறுக்குகிற ஒரு புரட்சியாளர்; கொள்கையாளர். அந்தக் கொள்கையை மக்களுக்கு மக்கள் மொழியில் எடுத்துச் சொல்கிற மிகச் சிறந்த பேச்சாளர். தாம் பேசுவதை இதழ்களின் வழி எழுதுவதற்குரிய உரைநடை வளம் மிக்கவர். எழுதுவதோடு இதழாளராக இருந்து ஏட்டை வெளிக்கொணரும் ஆற்றல் - பணபலம் உடையவர்.

இதழாளர்க்குரிய இலக்கணம், அளவுகோல், எதிர்பார்ப்பு ஆகிய அனைத்துப் பண்புகளும் பெரியார்க்கு உண்டு. அவரிடம் கொள்கை இருக்கிறது; அதை விளக்கப் பேச்சாற்றல் இருக்கிறது; எழுத மொழிநடை இருக்கிறது; வெளியிட ஆற்றல் இருக்கிறது; எதிர்பார்ப்பு இருக்கிறது என்பதை இதுகாறும் அறிந்துகொண்டோம். இனி, அவர் எவ்வாறு இதழாளராகப் பரிணமிக்கிறார் - எப்படி தமது பல்வேறு பரிமாணங்களை வெளிப்படுத்துகிறார் எனப் பார்க்கப் போகின்றோம்.

இதழாளர் பெரியார்

குடி அரசு வார ஏடும் விடுதலை நாளேடும்

தமிழ்நாட்டில் பெரியார் சமூக, அரசியல், பொருளாதாரக் கொள்கைகளைப் பற்றி மிக விரிவான பிரச்சாரத்தை மேற்கொண்டார். தமிழ், ஆங்கிலம் மற்றும் இதர பருவ இதழ்களின் ஆதரவு அவர்க்கு எப்போதும் இருந்தது இல்லை. ஆகவே அவரது சொற்பொழிவுகள் எந்த இதழ்களிலும் முழு வீச்சுடன் அப்படியே வெளிவந்ததுமில்லை. அவர் போராட்ட அறிவிப்புகள் வெளியிட்டால் அந்த அறிவிப்புகள் நாளேடுகளில் வரும். அவரது கைது, அவர் சிறைச்சாலை செல்லுவது போன்றவைகள் இடம் பெறும். சிறையில் அவர் படிக்கும் புத்தகங்கள் ஆய்வுகள் பற்றிக் கருத்துப் படங்கள் வெளியிடுவார்கள். அவரது போராட்டத்தின் நோக்கத்தை முழு அளவில் எந்த ஏடும் வெளியிட்டதில்லை. பெரியார் கருதும் கொள்கை அல்லது எண்ணும் கருதுகோள் 'இதுதான்' என்று பொதுமக்களிடம் எந்த ஏடுகளும் எடுத்துச் சொன்னதில்லை. இன்னும் சொல்வதானால் தமிழ்நாட்டு நாளேடுகள் அவரைப் பற்றிய செய்திகளை வெளியிடுவதில் ஒரு பரபரப்பை - வியப்பை வெளிக்காட்டியதே ஒழிய அதில் ஆழமாக ஊடுருவியுள்ள 'சமூகத்தளையை' வெளிக்கொணர உதவவில்லை. ஆகவே அவராகக் குடி அரசு இதழைத் தொடங்கித் தமது கொள்கைகளை எழுதினார்; பேச்சுகளை வெளியிட்டார். தமக்கு ஆதரவாக உள்ள பிறரது கருத்துகளையும் எழுத்துகளையும் அவர் பயன்படுத்திக் கொண்டார்.

பெரியாரின் 55 ஆண்டுக் காலப் பணிகளில் அவர் எழுதியவைகளும் பேசியவைகளும் மிக மிக அதிகம். அவை

அத்தனையும் சமய, சாதி, வர்ணாசிரமமற்ற அனைத்திலும் சமத்துவம் நோக்கிய குறிக்கோளை உடையதாகவே இருந்தது. எனவே பெரியாரின் விஷயங்களின் பரப்புப் பெரியதாகையால் அதனை எளிதாக்கிக் கொள்வதற்காகப் பெரியாரின் இதழியல் பணிகளைக் கீழ்க்காணும் பகுப்புகளாகப் பிரித்துக் கொள்ளலாம்.

1. பெண் விடுதலை
2. இந்திய சமூக அமைப்பு; அதில் வெகுமக்களான சூத்திரர்களின் நிலை
3. சூத்திரர்களின் நிலையை மாற்ற என்ன செய்ய வேண்டும்?
4. அரசியல் சுதந்திரம் சுயமரியாதையோடு கிடைக்க வேண்டும் என்பதன் பொருள் என்ன?
5. பெரியார் சுதந்திர நாளை ஏற்றுக்கொள்ளாததற்கு என்ன காரணம்?
6. சமயம் சார்ந்தவைகளின் மீது பெரியாரின் பார்வை
7. பெரியாரின் பொருளியல் கொள்கைகள்

இப்பகுப்புகளில் உள்ளவற்றை எடுத்துக்கொண்டு குடி அரசு வார ஏட்டிலும் விடுதலை நாளேட்டிலும் அவரது இதழியல் பணி எப்படி இருந்தது என்பதைப் பார்க்கப் போகின்றோம்.

குடி அரசு ஏடு தொடங்கப்பட்ட காலத்திலேயே நாளேடும் ஒன்று தொடங்க வேண்டும் என்கிற எண்ணம் பெரியார்க்கு இருந்து வந்து இருக்கிறது. ஆங்கிலத்திலும் ஒரு நாளேடு இருக்க வேண்டும் என்றும் விரும்பியவர் பெரியார். அதனைத் தமது பேச்சுகளின் மூலம் பொதுமேடைகளிலேயே கூறியிருக்கிறார்.

குடி அரசு தொடங்கியது குறித்து விரிவான பதிவுகள் இருக்கின்றன. ஆனால் விடுதலை ஏட்டின் தொடக்கம் குறித்து நீதிக் கட்சியினரின் சரியான, முறையான பதிவுகள் இல்லை. இந்த ஏடு குறித்துக் குடி அரசு ஏட்டில் பெரியார் எழுதியதுதான் சிறந்ததொரு ஆவணமாக நமக்குக் கிடைத்து இருக்கிறது. அது வருமாறு:

'ஜஸ்டிஸ் கட்சி'யின் சார்பாக ஜூன் மாதம் முதல் தேதியில் இருந்து தமிழ்ப் பத்திரிகை ஒன்று 'விடுதலை' என்னும் பேரால், வாரம் இரு முறையாகச் சென்னையில் இருந்து வெளியாகி இரண்டு இதழ்கள் நமது பார்வைக்கு வந்தன. அதைப் பற்றி ஒரு மதிப்புரை எழுத வேண்டிய அவசியம் எதுவும் இருப்பதாக நமக்குத் தோன்றவில்லை.

ஏனெனில், 2, 3 வருஷங்களாகவே பரிசுத்த வீர ரத்த ஓட்டமுள்ள ஒவ்வொரு பார்ப்பனரல்லாதாரும், இரவும் பகலுமாய்த் தமிழ்ப் பத்திரிகை! தமிழ்ப் பத்திரிகை!! தமிழ்ப் பத்திரிகை!!! என்கின்ற தாகத்துடன் அலைந்து கொண்டிருந்ததும், அதை எந்தத் தலைவர்களும் கவனியாமல் அலட்சியமாய் இருந்ததும், அதன் பயன்களைச் சமீப காலத்தில் ஏற்பட்ட பல தேர்தல்களின் மூலம் அனுபவித்ததும், மறுபடியும் புதிய முறையில் முன்னிலும் அதிகமாக இரண்டு பங்கு சப்தத்துடன் தமிழ்ப் பத்திரிகை! தமிழ்ப் பத்திரிகை!! தமிழ்ப் பத்திரிகை!!! என்று மக்கள் கூப்பாடு போட்டதுமான விஷயம் யாரும் அறியாததல்ல.

அப்படிப்பட்ட நிலையில் விடுதலை என்னும் பேரால் பத்திரிகை வெளியாய் இருப்பதைப் பார்த்து எந்தப் பார்ப்பனரல்லாதாரும் தங்களுக்கு ஏதோ ஒரு 'பாக்கியம்' கிடைத்ததாக மகிழ்ச்சியடைவார்களே ஒழிய, இதற்கு மதிப்புரை வருகின்றதா? அது எப்படி வருகின்றது? என்று யாரும் கவனிக்க மாட்டார்கள்.

ஆதலால் நாம் மதிப்புரை எழுதும் வீண் வேலையில் பிரவேசிக்காமல், வந்து விட்டது! தமிழ்ப் பத்திரிகை!! என்று விளம்பரம் செய்யவே ஆசைப்படுகின்றோம்.

விடுதலை பத்திரிகை இன்று வாரம் இருமுறையாக வெளிவந்தாலும் கூடிய சீக்கிரம் தமிழ் மக்கள் ஆதரவுக்கு ஏற்பத் தினசரி ஆகும் என்பதில் நமக்கு அய்யமில்லை.

பத்திரிகையானது நல்ல மாதிரியில் பார்ப்பன விஷமப் பிரச்சாரங்களுக்கு மார்பைக் காட்டும் முறையில்

விஷயங்களைக் கொண்டு வெளியாகி வருவதால் அதை ஆதரிக்க வேண்டிய அவசியம் எந்த விதத்திலும் குறைவாகக் காணப்படவில்லை என்றே சொல்லுவோம்.

இப் பத்திரிகைக்கு உள்ள கஷ்டம் எதிர்ப்பு, சூழ்ச்சி, தொல்லை ஆகிய விஷயங்களைப் பற்றி நாம் விவரிக்க வேண்டியதில்லை.

இப்படிப்பட்ட தொல்லைகளுக்கு இடையே ஒரு பத்திரிகை வாழ்வதென்றால் மிகவும் ஆச்சரியமான காரியமாகும்.

இதுவரை பார்ப்பனர்களுக்கு விரோதமானது என்று காணப்பட்ட பத்திரிகைகள் எதுவும் நமது நாட்டில் வாழவே இல்லை.

எவ்வளவோ வீரமாக ஆரம்பித்த பத்திரிகைகள் எல்லாம் வருடாந்திரம் ஆவதற்குள் ஒன்று பார்ப்பனர்களுக்கு அடிமையாக வேண்டியது அல்லது மறைந்து போக வேண்டியது என்கின்ற நிலையில் இருந்து வந்திருக்கிறது.

இப்படிப்பட்ட நிலையில் 'குடி அரசு' ஏதோ பாஷாணத்தில் புழுத்த புழுப்போல் உயிர் வைத்துக்கொண்டு வருகின்றது என்றாலும் அதுவும் இதுவரை அடையாத கஷ்டமோ தொல்லையோ இனிப் புதிதாக ஒன்று இருப்பதாகத் தோன்றவில்லை.

இப்படிப்பட்ட நிலையில் 'விடுதலை' தோன்றி இருக்கின்றது என்பது ஒரு விதத்தில் சந்தோஷம் என்றாலும், மற்றொரு விஷயத்தில் எந்த நிமிஷத்திலும் அதற்கு ஆபத்து வரப்போகின்றதோ என்று பயப்பட வேண்டியதாகவே இருக்கிறது.

எப்படியோ ஒரு விதத்தில் தமிழ் மக்கள் எதிர்பார்த்தபடி தமிழ் பத்திரிகை வந்து விட்டது. அதை ஆதரித்துத் தினசரியாக்கி நிலைநிறுத்த வேண்டியது தமிழ் மக்கள் கடமையே ஒழிய, இனித்

தலைவர்களைக் குற்றம் சொல்ல வேண்டிய அவசியமே இல்லை.

அதன் நோக்கம், அதன் தொண்டு ஆகியவைகளைப் பற்றி யாரும் சந்தேகப்பட வேண்டிய காரணமே யாருக்கும் கிடையாது. ஆகையால் அதைப்பற்றிக் கவலைப்படாமலும் அதற்கு யாரும் புத்தி புகட்டும் வேலையில் இறங்காமலும் ஒவ்வொருவரும் சந்தாதாரர்களாகச் சேர்ந்துவிட வேண்டும். சந்தாத் தொகை வாரம் இருமுறைக்கு வருஷம் ரூ.3-10-0 ஆகும்.

இதைவிடக் குறைந்த தொகைக்கு தமிழ்நாட்டிலோ, இந்தியாவிலோ ஒரு வாரம் இருமுறை 10 பக்கம் விஷயம் கொண்ட பத்திரிகை ஒன்று இருப்பதாக நமக்குத் தெரியவில்லை. ஆகையால் ஒவ்வொருவரும் ரூ.3-10-0 நாளையே மணி ஆர்டர் அனுப்பி விடவேண்டியது அவசியமான காரியம் ஆகும். 3 மாதத்திற்குள் 2000 சந்தாவாவது சேர்ந்தால் 'விடுதலை' தினசரி ஆகிவிடலாம் என்பதில் சந்தேகமில்லை.

அதன் பத்திராதிபர் தோழர் டி.ஏ.வி. நாதன் அவர்கள் ஜஸ்டிஸ் பத்திரிகையை நடத்தி வந்தவர் ஆனதால் அப்பேர்ப்பட்ட அறிவாளியால் நடக்கும் பத்திரிகை நீடூழி வாழ்ந்து பாமர மக்களுக்கும் பண்டிதர்களுக்கும் பயன்பட்டு உலக மக்களுக்கு உண்மை விடுதலையைக் கொடுக்கவேண்டும் என்று ஆசைப்படுகிறோம். - குடி அரசு, 7.6.1935

குடி அரசு டி.ஏ.வி. நாதனை ஆசிரியராகக் கொண்டு வார இருமுறை ஏடாக ஜஸ்டிஸ் கட்சியின் சார்பாக 7.6.1935 முதல் 31.12.1936 வரைதான் வெளிவந்து இருக்கிறது. இந்த வார இருமுறை ஏடு 14, மவுண்ட் ரோடு, மதராஸ் முகவரியிலிருந்து (தற்போது தேவி தியேட்டர் அருகே இருந்து) வெளியிடப்பட்டு வந்தது. 1937 ஜனவரி முதல் பண்டித எஸ். முத்துசாமி பிள்ளை அவர்களை ஆசிரியராகக் கொண்டு நாளேடாகக் காலணா விலையில் வெளிவந்தது. மேற்சொன்ன முகவரியிலிருந்து வெளிவந்து கொண்டிருந்த விடுதலை 1937 ஜனவரி 3ஆம் தேதி முதல் ஈரோட்டிலிருந்து

வெளிவரத் தொடங்கியது. நீதிக்கட்சியின் இருமுறை வார ஏடு நாளேடாக மலர்ந்தபோது பெரியாரின் கைவசம் விடுதலை வந்துவிட்டது. பெரியார் வசம் நீதிக்கட்சி ஏடு எப்படி நிர்வாக மாறுதல் அடைந்தது என்கிற விவரம் தெரியவில்லை. ஆனால் கீழ்க்காணும் விவரங்கள் விடுதலை பொன் விழா மலரில் கூறப்பட்டுள்ளன. அது வருமாறு:

1939இல் அண்ணா அவர்கள் விடுதலை ஏட்டின் பொறுப்பாசிரியராக இருந்து, அதன்பின் 21.12.1941இல் அப்பொறுப்பிலிருந்து விலகிக்கொண்டார்.

விடுதலை ஏட்டில் ஒரு கட்டுரைக்காக 124-எ பிரிவின்படியும், விடுதலை வெளியீட்டாளர் ஈ.வெ. கிருஷ்ணசாமி அவர்கள் மீதும், ஆசிரியர் பண்டித முத்துசாமி பிள்ளை மீதும் ராஜகோபாலாச் சாரியார் அரசு வழக்குத் தொடுத்து இவருவருக்கும் 6 மாதச் சிறைத் தண்டனை வழங்கியது.

அதன் காரணமாக அ. பொன்னம்பலனார் 'விடுதலை'யின் அதிகாரபூர்வ ஆசிரியர் பொறுப்பை 9.1.1939 முதல் ஏற்றுக் கொண்டார்.

'விடுதலை' ஏடு யுத்தப் பிரச்சாரத்திற்காகத் தரப்பட்டது. அந்தக் காலகட்டத்தில் 'குத்தூசி' குருசாமி அவர்கள் 12.9.1943 முதல் 30.9.1945 வரை பொறுப்பாசிரியராக இருந்தார். என். கரிவரதசாமி அதிகாரபூர்வ ஆசிரியராக இருந்தார்.

யுத்த பிரச்சாரத்திற்காக வழங்கப்பட்ட விடுதலை மீண்டும் தந்தை பெரியாரின் பொறுப்புக்கு 6.6.1946 முதல் வந்தது. அதன் அதிகாரபூர்வ ஆசிரியராக கே.ஏ. மணி என்கிற மணியம்மையார் இருந்தார். தனி இதழ் விலை முக்காலணா. சென்னை, பாலகிருஷ்ண பிள்ளை தெருவிலிருந்து விடுதலை வெளியாகத் தொடங்கியது.

20.6.1943 முதல் குத்தூசி குருசாமி 'விடுதலை' பொறுப்பாசிரியராக இருந்தார். 2.1.1962 வரை அவர் அப்பொறுப்பில் இருந்தார்.

ஒவ்வொரு ஆண்டும் ஜூலை முதல் தேதியன்று 'திராவிட நாடு பிரிவினை நாள்' கொண்டாடுமாறு தோழர்களுக்குத் தந்தை

பெரியார் விடுதலையில் அறிக்கைவிட்டார். இதனால் சென்னை மாகாண அரசு ரூ.2000த்தை 'விடுதலை' ஜாமீனாகக் கட்ட வேண்டும் என்று ஏட்டின் பதிப்பாசிரியரும், வெளியீட்டாளருமாகிய மணியம்மையார் அவர்களுக்கு ஆணை பிறப்பித்தது.

இந்தப் பிரச்சினையைப் பொதுமக்களிடத்தில் தந்தை பெரியார் வைத்தார்! 'விடுதலை'யின் ஈடு இணையற்ற தொண்டின் அவசியத்தை உணர்ந்த பொது மக்களோ ரூ.15,200 அள்ளித் தந்தனர்.

குருசாமி அவர்களைத் தொடர்ந்து கி. வீரமணி அவர்கள் விடுதலை பொறுப்பாசிரியராக இருந்து வருகிறார். அன்னை மணியம்மையார் அவர்களது மறைவுக்குப் பிறகு 21.3.1978 முதல் கி. வீரமணி அவர்கள் அதிகாரபூர்வ ஆசிரியராகவும், பிரசுரதாரராகவும் இருந்து வருகின்றார்.

விடுதலையின் அதிகாரபூர்வ ஆசிரியர்கள்

1. டி.ஏ.வி. நாதன், 2. பண்டித எஸ். முத்துசாமி பிள்ளை, 3. அ. பொன்னம்பலனார், 4. என். கரிவரதசாமி, 5. கே.ஏ. மணி (அன்னை மணியம்மையார் அவர்களின் ஆரம்பப் பெயர்), 6. ஈ.வெ.ரா. மணியம்மை (திருமணத்திற்குப் பின்னர் பெயரில் சிறிது மாறுதல்), 7. கி. வீரமணி

விடுதலையின் பொறுப்பாசிரியர்கள்

1. சி.என். அண்ணாதுரை, (அறிஞர் அண்ணா), 2. சா. குருசாமி, 3. சாமி. சிதம்பரனார், 4. கி. வீரமணி

பெரியாரின் 55 ஆண்டுகால பொதுவாழ்க்கையில் அவர் 48 ஆண்டுகள் தமது சொந்த ஏடுகளில் பல்வேறு சமூக, அரசியல், பொருளாதரப் பிரச்சினைகள் குறித்துக் கருத்துத் தெரிவித்து இருக்கிறார். நாம் பெரியாரின் பணிகளைப் பகுத்துக்கொண்ட ஏழு தலைப்புக்கேற்ற வண்ணம் அவர் குடி அரசையும் விடுதலையையும் பயன்படுத்திக்கொண்ட விதத்தினை எடுத்து இங்கே விளக்க இருக்கிறோம்.

முதலில் அவரது குடி அரசு வார இதழை எடுத்துக் கொள்வோம். குடி அரசு முதல் இதழ் 2.5.1925; கடைசி இதழ் 8.10.1949. கடைசி இதழ் தேதியை இன்னும் நாம் முடிவு

செய்யவில்லை. ஆனால் 1949ஆம் ஆண்டிற்குப் பிறகு குடி அரசு இதழ் வெளியிடப்பட வில்லை. இங்கே நாம் குடி அரசு இதழின் அமைப்பு எப்படி இருந்தது என்றோ, அதன் ஆசிரியர்கள் யார் யார் இருந்தார்கள் என்றோ, எவரெவரின் கட்டுரைகள், கவிதைகள் வெளிவந்தன என்றோ, அதன் நிர்வாகத்தைப் பற்றியோ கூறப்போவதில்லை. தமிழ்நாட்டு அரசியலில் குடி அரசின் மூலம் பெரியார் இதழாளர் எனும் முறையில் அவ்வப்போது தோன்றிய சிக்கல்களை எவ்வாறு பார்த்தார்? வடிவம் அமைத்தார்; பரிந்துரைத்தார்; இறுதி முடிவு எடுத்தார் என்பதைத் தான் நாம் பகுத்துக் கொண்டபடி பார்க்கப் போகிறோம்.

குடி அரசின் முதல் இதழ் மற்றும் 1927, 1928, 1929 ஆண்டுகளின் இதழ்களைப் பார்க்கிறபோது அவற்றின் உள்ளடக்கங்களைச் சமய சீர்திருத்தங்கள் கொண்டது மாதிரியாகத் தோற்றமளிக்கிறது. பகுத்தறிவுக் கொண்டு ஒன்றைப் பற்றி எழுதுவதும் பார்ப்பதும் பேசுவதுமானது நாத்திகமாய் ஆகிவிடாது. பெரியார் தமது குடி அரசு முதல் இதழில் தம்மை நாத்திகராய் அவர் பிரகனடப்படுத்திக் கொள்ளவும் இல்லை. குடிஅரசு ஏட்டின் அலுவலகத் திறப்பு விழாவில் பெரியார் பேசுகிறபோது,

> *இப்பத்திரிகாலயத்தைத் திறப்பதற்கு ஈசன் அருளால் ஸ்ரீ சுவாமிகள் போன்ற பெரியார் கிடைத்தது அரிதேயாகும்*

என்று குறிப்பிட்டு இருக்கிறார். இங்கே பெரியார் ஸ்ரீ சுவாமிகள் எனக் குறிப்பிட்டு இருப்பவர் - திருப்பாதிரிப்புலியூர் சிவசண்முக மெய்ஞ்ஞான சிவாச்சாரியார். இவரை ஞானியார் அடிகள் எனக் கூறுவர். பெரியாரின் திறப்பு விழாப் பேச்சு அவருக்குள்ளே கடவுள் நம்பிக்கையை எடுத்துக்காட்டுகிறது. இதற்கு அவரது குடி அரசே சான்றாகத் திகழுகிறது. பெரியார் படிப்படியாக மாறுதல் அடைந்து வருவதைக் குடி அரசு ஏடு கூறாமல் கூறுகிறது. 1925, 1926ஆம் ஆண்டுகளில் பெரியார் இருந்த நிலை வேறு; 1927 கடைசியில் பெரியார் இருந்த நிலை வேறு. அவருள் மாறுதல் நிகழ்ந்திருப்பதைக் குடி அரசு ஏட்டின் அட்டைப்படம் வெளிப்படுத்துகிறது. குடி அரசு இதழ் 25.12.1927 தேதியிட்டதிலிருந்து முகப்பில் இருந்த காந்தி, பாரத மாதா போன்ற படங்கள் அகற்றப்பட்டு விடுகின்றன. கதர் வாழ்க என்று

அச்சிடப்பட்டிருந்த வாசகமும் நீக்கப்படுகிறது. மாதா கோயில், மசூதி, கோயில் கோபுரம், முனிவரின் தவக்கோலம் அட்டையின் முத்திரையிலிருந்து எடுக்கப்பட்டுவிடுகிறது. பெரியார் அதுவரை ஈ.வெ. ராமசாமி நாயக்கர் - எனத் சாதி ஒட்டோடு பெயர் பொறிக்கப்பட்டு வந்ததையும் நீக்கி விடுகிறார். பெரியாரினுள் நிகழ்ந்த இந்த மாற்றத்தைக் குடி அரசு ஏடுதான் நமக்குத் தெரிவிக்கிறது

தனிநபரின் சுயமரியாதை இன்றி அரசியல் சுதந்திரத்தால் என்ன பயன்? என்ற வினாவை எழுப்பிய பெரியார் அதற்கேற்ப ஒவ்வொரு கட்டத்திலும் தம்மை ஆயத்தப்படுத்திக் கொண்டே முன்னேறினார் என்பதைக் குடிஅரசு நமக்குத் தெரிவிக்கிறது. எடுத்துக்காட்டிற்காக 1926இல் கோவையில் பெரியார் ஆற்றிய சொற்பொழிவை 13.6.1926 இல் அவர் இடம்பெறச் செய்து இருக்கிறார். அச்சொற்பொழிவில் அவர் இந்திய சமூக அமைப்பில் வகுப்புகள் - சாதிகள் இருப்பதை ஒப்புக்கொண்டு அவை பிரிட்டிஷ் ஆட்சியில் அனுபவித்து வந்த உத்தியோகங்களைப் பின்னடையச் செய்து விட்டன. அந்த இடங்களைக் காங்கிரசின் மூலம் பிராமணர்கள் பெற்றுவிடுகிறார்கள் என்ற கண்டுபிடிப்பை வெளியிடுகிறார். அந்தப் பகுதியைப் பெரியாருடைய சொற்களாலேயே கீழே தருகிறோம்.

> காங்கிரசின் ஆதி சூழ்ச்சியே, பிராமணர்கள் எவ்வாறு உத்தியோகம் சாம்பாதிப்பது என்கிற அஸ்திவாரத்தின் மேல் கட்டப்பட்டதாகும். அதற்கு ஏற்றாற்போல அந்தச் சாதிக்கு சுபாவமாய் உள்ள உருப்போடும் வித்தையை உத்தியோகத்திற்கு யோக்கியதையாய் வைத்து, அதற்கேற்ற பள்ளிக்கூடங்களை விருத்தி செய்தார்கள். இதன்மூலம் உத்தியோகம் பெற்ற பிராமணர்களால் வெள்ளைக்காரர்களுக்குப் பல விதத்திலும் உபயோகமிருந்ததால் அவர்களும் இந்தப் பிராமணர்களுக்கு அனுகூலமான உத்தியோக யோக்கியதையையே பரப்பிவிட்டார்கள். இப்போது வர வர மேற்படி உத்தியோகங்களின் யோக்கியதையும் குறைந்துவிட்டது.
>
> பெரும்பாலும் வெள்ளைக்கார அதிகாரிகளுக்கு உள்ள

சகல தேவைகளையும் நிறைவேற்றி வைக்கக் கூடியவர்களும் சுயமரியாதை அற்றவர்களும் மனச்சாட்சியை இழந்தவர்களுந்தான் நல்ல டெப்டி கலெக்டர், நல்ல தாசில்தார், நல்ல முன்சீபு, நல்ல மாஜிஸ்டிரேட், நல்ல இன்ஸ்பெக்டர்களாக விளங்குகிறார்கள். இந்த உத்தியோகத்திற்கே இவ்வளவு வேண்டுமானால் இன்னும் பெரிய உத்தியோகத்திற்கு எவ்வளவு வேண்டும்? இந்த முறையில் பிராமணரல்லாத வகுப்பார் உத்தியோகம் பெற அஞ்சுகிறார்கள். துணிந்து யாராவது ஒப்புக் கொண்டாலும் மேற்படி யோக்கியதை இல்லாத காரணத்தால் நல்ல உத்தியோகஸ்தர்களாக ஆக முடிவதில்லை.

இம்மாதிரி காங்கிரஸ் நம் நாட்டில் ஏற்படாதிருந்தால் நமது ஜனங்களின் யோக்கியதை இவ்வளவு கேவலமாய்ப் போய் இருக்காது. வெள்ளைக் காரர்களும் இவ்வளவு கொடுமையான முறையில் ஆளத் துணிந்து இருக்கமாட்டார்கள். ஆதலால், பிராமணரல்லாதார் நிலைமையை இவ்வளவு கேவலத்திற்கு கொண்டுவந்து விட்டதற்கு முக்கிய காரணங்களில் இந்தக் காங்கிரசும் பிரதானமானது. காங்கிரஸ் என்பதே உத்தியோகம் பெற ஏற்பட்டதுதான். அது நமது நாட்டுப் பிராமணர்களால் வளர்க்கப்பட்டதால் பிராமணர்கள் உத்தியோகம் பெறத்தக்க வகையில் நிலை நின்றுவிட்டது. எந்த அந்தஸ்தும் எந்த உத்தியோகமும் எந்தப் பதவியும் எந்தப் பெரிய உத்தியோகங்களையும் எடுத்துக் கொண்டீர்களானால் அந்தப் பதவியும் உத்தியோகமும் காங்கிரசின் பலனாக ஏற்பட்டதாகத்தான் இருக்கும்.

இனி பிராமணரல்லாதாரால் சமூகத்திற்கு ஏதேனும் யோக்கியதை உண்டாக வேண்டுமானால், இந்தக் காங்கிரஸ் அழிய வேண்டும். இது உள்ளவரை பிராமணரல்லாதார் உருப்படியாக முடியாது. ***மகாத்மா காங்கிரஸ் உருவாக வேண்டும்.***

(கோயம்புத்தூரில் சொற்பொழிவு, குடிஆரசு 13.6.1926, பெரியார் ஈ.வெ.ரா. சிந்தனைகள் பக். 910-911)

1925, 1926, 1927 டிசம்பர் வரை - பெரியாரின் அரசியல் எதிர்காலம் பற்றித் தெளிவில்லாமல் இருக்கிறது என Towards Self Respect: Periyar EVR on a new world எனும் நூலில் ஆய்வறிஞர் சரஸ்வதி அம்மையார் குறிப்பிடுகிறார் (Politically, during three years EVR not clear about his own political future).

நாம் ஆய்வறிஞர் சரஸ்வதி அம்மையாரின் கூற்றுக்குச் சற்று மாறுபடுகின்றோம். காங்கிரசின் பார்ப்பனத் தலைமை பார்ப்பனர் அல்லாத வெகுமக்களைக் கடைத்தேற்ற உதவாது. அதை நம்ப முடியாது. பார்ப்பனர் அல்லாத காந்தியடிகள் முழுத் தலைமை ஏற்று மகாத்மா காங்கிரஸ் உருவாக வேண்டும் எனப் பெரியார் விரும்பினார். இதிலிருந்து நாம் தொடக்கத்தில் தெரிவித்ததுப் போல காந்தியடிகளின் Young India கருத்தை இக்காலக்கட்டத்தில் பெரியார் பார்க்காததால் - படிக்காததால் காந்தியடிகளை முழுமையாக நம்பியுள்ளதை நாம் தெரிந்து கொள்ளுகிறோம்.

ஓர் இதழாளர் தாம் சார்ந்துள்ள வெகுமக்களின் நன்மைக்காக அவரே பேசிய கருத்தைப் பத்திரிகையில் வெளியிட்டு அதன் மூலம் மக்கள் கருத்தை உருாக்க முனைந்ததையே மேற்சொன்ன கோவை சொற்பொழிவு விளக்குகிறது. இந்தக் கோவை சொற்பொழிவில் பெரியார் 'பிராமணர்' என்றே குறிப்பிட்டு இருப்பதைக் காணலாம். 1928-க்குப் பின்னர் பிராமணர் என்ற சொல்லின் பயன்பாட்டை நிறுத்திவிட்டு பெரும்பாலும் பார்ப்பனர் எனும் சொல்லையே அவர் பயன்படுத்தத் தொடங்கினார். இதே போல பெரியார் தமது குடி அரசில் இன்னொரு மாறுதலையும் ஏற்படுத்தினார். அதாவது 1927-க்குப் பிறகு திரு, திருமதி, செல்வி, தோழர் போன்ற சொற்களைப் பயன்படுத்தினார். அவரது கட்டுரைகளில் 1932-க்குப் பின் பெரிதும் தோழியர், தோழர் என்றே எழுதலானார். ஓர் இதழாளர் வடமொழி நீக்கித் தமிழ் மொழியை வளர்த்தெடுப்பதிலும் அக்கறைக் காட்ட முடியும் என்பதே தூயத் தமிழ்ச் சொற்களைப் பயன்படுத்தியமை எடுத்துக்காட்டுகிறது.

உலகிலேயே பெண்கள் பற்றி மிக அதிகமாகக் கவலைப்பட்ட ஒரே தலைவர் பெரியார். ஆகவே அவர் 1930களில் தேவதாசி ஒழிப்புச் சட்டம் கொண்டு வந்தபோது சட்டமன்றத்திற்கு வெளியே இருந்து கொண்டு சட்டமன்றம் அதைச் சட்டமாக்குவதில் காலதாமதம் காட்டுவது அரசுக்குப்

பொருந்தாது; பொதுஜன அபிப்ராயம் எப்படி இருந்த போதிலும் அந்தச் சட்டத்தை அரசு நிறைவேற்றியே ஆக வேண்டும் என மிக அழுத்தம் திருத்தமாகக் குடி அரசில் எழுதினார். அதனை முழுவதுமாக இங்கே எடுத்துக்காட்ட விரும்புகின்றோம். ஏனெனில் ஓர் இதழாளனுக்கு இருக்கிற திட்பம், விஷயங்களைத் தொகுத்துச் சொல்கிற ஆற்றல், சமூக அக்கறை ஆகியன பெரியார்க்கு இருந்ததை இதிலே காணலாம். அது மட்டுமன்று. அரசு சட்ட நகலைப் பெரியார்கு அனுப்பி அவரது கருத்தைக் கேட்டு இருக்கிறார்கள். இது பெரியாரின் சமூக ஆளுமையைக் காட்டுகிறது. இனி, தேவதாசி ஒழிப்புச் சட்டம் குறித்துப் பெரியாரின் கருத்தைப் பார்ப்போம்.

தேவதாசி ஒழிப்புச் சட்டம்

> கோயில்களில் பெண்களைப் பொட்டுக் கட்டுவதைத் தடுக்கச் சட்டம் செய்யவேணுமாய்த் திருமதி முத்துலட்சுமி அம்மாள் அவர்களால் சட்டசபைக்கு அனுப்பப்பட்டிருக்கும் சட்டத்தைச் சர்க்கார் நமக்கு அனுப்பி அதன்மீது நமது அபிப்பிராயம் கேட்டிருக்கின்றார்கள்.
>
> இதற்காகச் சர்க்கார் பொதுஜனங்களின் அபிப்பிராயம் கேட்பது என்பது கோமாளித்தனம் என்பதே நமது அபிப்பிராயம். ஏனெனில், கோவில்களில் கடவுகள் பெயரால் பெண்களுக்குப் பொட்டுக்கட்டி, அவர்களையே பொதுமகளிர்க ளாக்கி, நாட்டில் விபச்சாரிதனத்திற்குச் செல்வாக்கும் மதிப்பும், சமய சமூக முக்கிய ஸ்தானங்களின் தாராளமாய் இடமும் அளித்துவரும் ஒரு கெட்ட வழக்கம் நமது நாட்டில் வெகு காலமாய் இருந்து வருகின்றது. அன்றியும், நாளாவட்டத்தில் இது ஒரு வகுப்பிற்கே உரியது என்பதாகி, இயற்கையுடன் கலந்த ஒரு தள்ளமுடியாத கெடுதியாய் இந்த நாட்டில் நிலைபெற்றும் விட்டது. ஒரு நாட்டில் நாகரிகமுள்ள அரசாங்கமாவது அல்லது நாட்டின் சுயமரியாதையையோ, பிரஜைகளுடைய ஒழுக்கத்தையோ, நலத்தையோ கோரின அரசாங்கமாவது ஒன்றிருந்தால், இந்த இழிவான

கெட்ட பழக்கம், கடவுள் பேராலும் மதத்தின் பேராலும் சமூகத்தின் பேராலும் தேசிய வழக்கத்தின் பேராலும் இருந்துவர ஒருகண நேரமும் விட்டுக்கொண்டு வந்திருக்காது என்றே சொல்லுவோம்.

ஆனால், நமது இந்தியாவில் வெள்ளைக்கார ஆட்சி குடிபுகவும், நிலைபெறவும் நம் நாட்டுச் சுயநலப் பார்ப்பனர்கள் உளவாளிகளாகவும் உதவியாகவும் இருந்து வந்ததால், அப்பார்பனர்களுக்கு அனுகூலமாக வெள்ளைக்காரர்களும் இருக்கவேண்டிய அவசியம் ஏற்பட்டு இருந்ததால், அந்தப் பார்ப்பனர்கள் சொல்லுகின்றபடியே நடந்து வெள்ளைக்காரர்கள் தங்கள் காரியத்தைச் சாதித்துக் கொள்ளவேண்டிய அவசியத்தில் பட்டுவிட்டார்கள். இந்தக் காரணங்களால் அவர்கள் பார்ப்பனர்களுக்கு விரோதமாய்ச் சீர்திருத்தத் துறையிலாவது, மனிதத் தன்மைத் துறையிலாவது இதுவரை ஒருவித முற்போக்கான காரியமும் செய்யாமலே இருக்க வேண்டியவர்களாகிவிட்டார்கள். ஆனால், இப்போது கொஞ்ச காலமாய் அப்பார்ப்பனர்களின் தந்திரத்தையும் சூழ்ச்சியையும் கண்டுபிடித்து, அவர்களது யோக்கியதைகளை அடியோடு வெளியாக்கி, சீர்திருத்தங்களை உத்தேசித்து நாமும் வெள்ளைக் காரர்களை மிரட்டக்கூடிய சமயம் மிரட்டியும் ஆதரிக்கக் கூடிய சமயம் ஆதரித்தும், பார்ப்பனர்களின் செல்வாக்கை ஒழித்து நமது சக்தியையும், தீவிர ஆசைகளையும் காட்ட ஆரம்பித்து விட்டதால், இப்போது ஏதோ சிறிது அளவிற்காவது சர்க்கார் சீர்திருத்தத் துறையில் நமது இஷ்டத்திற்கும் இணங்கும்படியான நிலைமை ஏற்பட்டிருக்கின்றது. இந்த நிலைமையின் பலனேதான் இப்போது நமது கொள்கைகள் சிலது, நாட்டில் பிரச்சாரம் செய்யவும் செல்வாக்குப் பெறவும் இடம் ஏற்பட்டதும்; சட்டசபையில் இது சமயம் ஒரு முடிவைப் பெற்றுத் தீர வேண்டிய அவசியம் ஏற்பட்டுப் பொதுஜன அபிப்ராயத்திற்க வர நேர்ந்ததுமாகும்.

நிற்க, இப்போது திருமதி டாக்டர் முத்துலட்சுமி அம்மாள் அவர்களால் சென்னை சட்டசபைக்கு அனுப்பப்பட்டிருக்கும் 'பொட்டுக் கட்டுவதை ஒழிக்கும்' இந்த மசோதாவானது வெகுகாலமாகவே ஜனப்பிரதிநிதிகள் என்பவர்களால் பொதுக் கூட்டங்களிலும் பொதுமகாநாடுகளிலும் கண்டித்துப் பேசப்பட்டிருப்பதுடன், இம் மாதிரி ஒரு சட்டம் செய்ய வேண்டும் என்று இந்திய சட்டசபைக் கூட்டங்களிலும் அடிக்கடி பிரஸ்தாபிக்கப்பட்டு வந்திருக்கின்றது. இது சம்பந்தமாகத் திருமதி டாக்டர் முத்துலட்சுமி அம்மாள் அவர்கள் ஒரு துண்டுப் பிரசுரம் வெளியிட்டு இருக்கிறார். அதன் சுருக்கமாவது:

தேவதாசி மசோதா

இந்தச் சமூகக் கொடுமையை ஒழிக்க ஆரம்பித்த கிளர்ச்சியானது 1868 வருடம் முதல் நடைபெற்று வருகிறது. 1906, 1907 வருடம் உலக தேசிய மகாநாட்டில் இந்தக் கொடிய கெட்ட வழக்கத்தை ஒழிப்பதற்காகப் பல மாகாண சர்க்கார் அபிப்பிராயங் களையும் அறிந்து தம்மால் கூடியவரை ஒழிப்பதென முடிவு செய்ததினின்று இந்திய கவர்ன்மெண்டும் இந்தத் தேவதாசி மசோதாவில் அதிகச் சிரத்தைக் காட்டி வந்தது.

1912ஆம் வருடம் பழைய இம்பீரியல் சட்ட நிரூபணச் சபையில் மூன்று இந்திய அங்கத்தினர்கள் - கனம் மாணிக்ஜி தாதாபாய், முதோல்கர், மேட்கித் ஆகியவர்கள் - இந்தக் கொடிய பழக்கத்தை ஒழிப்பதற்கு இதே எண்ணத்தோடு வேறே மூன்று மசோதாக்கள் கொண்டுவந்தனர். இந்திய சர்க்கார் இந்த மசோதாவை உள்நாட்டுச் சர்க்காருக்கு அனுப்பி, அவர்களது அபிப்பிராயம் தந்தவுடன் 1913ஆம் வருடம் செப்டம்பர் மாதம் தாங்களாகவே ஒரு மசோதாவைக் கொண்டுவந்தார்கள். மீண்டும் அம்மசோதா ஒரு செலக்ட் கமிட்டிக்கு அனுப்பப் பட்டு அவர்களது ரிப்போர்ட்டையும் 1914ஆம் வருடம் மார்ச் மாதம்

பெற்றார்கள். அந்த ரிப்போர்ட் மறுபடியும், இப்போதைப் போலவே பொதுஜன அபிப்பிராயத்திற்கு விடப்பட்டது. இம்மசோதாவை நிறைவேற்றுவதில் எல்லோருக்கும் பூரண எண்ணம் இருந்தபோதிலும், அத்தகைய பெண்களை எவ்வாறு காப்பாற்றுவது என்பது போன்ற சில சில்லறை விவாதங்கள் கிளப்பி விடப்பட்டதால் அம்மசோதா தானாகவே அதுசமயம் மறைந்துவிட்டது.

அதன்பின்னர், மகா யுத்தக்கிளர்ச்சியினால் அது கவனிக்கப்பட முடியாமல் போயிற்று. பிறகு 1922ஆம் வருடம் டாக்டர் கோர் மீண்டும் அதை இந்தியச் சட்டசபையில் கொண்டுவந்தார். மேற்படி தீர்மானத்தின்மேல் விவாதம் நிகழ்ந்து கடைசியாக அது மறுபடியும் பொதுஜன அபிப்பிராயத்திற்கு பிரசுரிக்கப்பட வேண்டுமென்ற பிரேரேபணை அதிகப்படியான வோட்டுக்களால் தோற்கடிக்கப் பட்டது. பிறகு மேற்படி 1922ஆம் வருடத்திய தீர்மானத்தின் மீது, 1924ஆம் வருடம் அதைச் சட்டமாக்கப்பட்டதோடு, அதை அனுசரித்து இந்தியன் பினல்கோடு 327, 373 செக்ஷன்கள் திருத்தப்பட்டன. அதன் சட்டம் 1925ஆம் வருடம் ஜனவரி மாதம் முதல் தேதியினின்று அமுலுக்கு வந்தது. அதில் 14 வயதிற்கு மேற்பட்ட பெண்களுக்குப் பொட்டுக் கட்டுதல் கூடாது என்றே சாத்திரத்தால் தடுக்கப்பட்டு இருக்கிறது. ஏனெனில், பொட்டுக் கட்டப்பட வேண்டிய பெண் சாத்திரப்படி கன்னிகையாய் இருக்கவேண்டுமாதலால், 14 வயதிற்குள்தான் இந்தச் சடங்கு செய்வது வழக்கமாக இருந்து வந்தது. அதாவது, எந்தப் பெண்ணையும் 14 வயதிற்குமேல் பொட்டுக்கட்ட எந்தக் கோயில் அதிகாரியும் அனுமதிப்பதில்லை. ஆனால், மேற்படி சட்டம் வந்தபிறகு 16 வயதிற்குக் கீழ்ப்பட்ட பெண்களுக்குப் பொட்டுக்கட்டப்பட்டால், கோயில் அதிகாரிகள் குற்றவாளிகளாவதோடு அந்த விதமாக அனேக கேஸ்கள் நடந்து, அந்த 25ஆவது சட்டப்படி

தண்டனை பெற்றிருக்கிறார்கள். ஆகவே, வைதீகர்களது அபிப்பிராயப்படிப் பார்த்தாலுங்கூட, சாத்திரப்படி 18 வயதுக்கு மேற்பட்ட பெண்களுக்குக் கோயில்களில் பொட்டுக்கட்ட அனுமதிப்பதில்லை என்று தெரிகிறது.

இந்தியன் பினல் கோடுப்படி, ஒரு மைனர் பெண்ணைப் பொட்டுக்கட்டுவது குற்றம் என்றாலும், பேராசையுள்ள பெற்றோர்கள் சிலர் தங்கள் பெண்களுக்குப் பொட்டுக்கட்டிக் கோவிலிடமிருந்து உத்திரவு பெற்று விடுகின்றார்கள். இது விபச்சாரத்திற்கு அனுமதி கொடுத்ததாகுமேயன்றி வேறில்லை. பொதுஜன அபிப்பிராயம் இதைச் சட்டமாக்க அனுகூலமாகி இருக்கிறது. பத்திரிகைகளில் இதை ஆதரித்தெழுதியும் பொதுக்கூட்டங்களில் ஆதரித்துத் தீர்மானங்கள் நிறைவேற்றியும் சுமார் 13 வருடத்திற்கு மேற்பட்ட ஆண்டு பெண் சங்கங்களில் அதை ஆதரித்துத் தீர்மானங்கள் நிறைவேற்றியும் இந்தக் கொடிய பழக்கத்தினால் அல்லலுறும் சமூகத்தினரே இதைச் சட்டமாக்க வற்புறுத்தி எழுதியும் இருக்கின்றனர். டிஸ்டிரிக்டு போர்டு, முனிஸிபாலிடிகளிலும் தங்களது ஆதரவைத் தெரிவித்து இருக்கின்றார்கள். இவ்வாறெல்லாம் இருக்க, இச்சட்டத்திற்குப் பொதுஜன அபிப்பிராயத்தை அறிய விரும்புவானேன் என்பது விளங்கவில்லை.

இந்த நாள்பட்ட கொடிய சமூகக் கொடுமையை ஒழிக்க யாருக்கும் ஆட்சேபமோ எதிர் அபிப்பிராயமோ இருக்க முடியாது. இந்தியத் தலைவர்கள் கூறியிருப்பதுபோல், 'தேவதாசி' என்று ஒரு வகுப்பு இருப்பது இந்தச் சமூகத்திற்கே இழிவானதும் அல்லாமல், இந்து மதத்திற்கே பெரும் பழியுமாகும். ஒரு தனிப்பட்ட பெண்ணுக்கு ஏற்படும் இழிவு பெண்ணுலகிற்கே ஏற்பட்டதாகுமாகையால், இவ்வழக்கம் பெண்களின் அந்தஸ்தையும் கவுரவத்தையும் பெரிதும் பாதிக்கக் கூடியதாய்

இருக்கின்றது. அன்றியும் ஒரு குறிப்பிட்ட சாதியையோ சமூகத்தையோ விபச்சாரத்திற்கு அனுமதி கொடுப்பதும் பின்னர் அவர்களை இழிந்த சமூகமாமகக் கருதுவதும் பெரும் சமூகக் கொடுமையாகும். சிறு குழந்தைகளில் இருந்தே துராச்சார வழிகளில் பயிற்றுவிப்பது ஜனசமூக விதிகளையே மீறியதாகும்.

எனவே இப்படிப்பட்ட நிலைமையில் இனி இதைப் பற்றிப் பொதுஜனங்களுடைய அபிப் பிராயத்தைத் தெரியவேண்டிய அவசியமே இல்லை.

தவிர, இது விஷயத்தில் சாத்திர சம்பந்தமான வைதீகர்களின் ஆட்சேபத்துக்கும் இடமில்லை. ஏனெனில் 14 வயதுக்குமுன் கன்னிப்பெண்ணாய் இருக்கும்போதுதான் பொட்டுக்கட்ட வேண்டும் என்று இருக்கின்றது. இந்தியன் பினல்கோடு 372, 373 செக்ஷன்களின் படியோ 18 வயதுக்குள் பொட்டுக் கட்டக்கூடாது என்றும், கட்டினால் ஒரு வருஷக் கடினக் காவல் தண்டனையும் அபராதமும் என்றும் இருக்கின்றது. ஆகவே, இது விஷயத்தில் வைதீகமும், இந்து மதமும் 1924ஆம் வருஷத்திலேயே ஒழிந்துவிட்டது. இந்நிலையில் இப்போதைய வைதீகர்கள் என்பவர்கள் இதை ஆட்சேபிப்பதானால் - ஒன்று அவர்களது சாத்திரம் அவர்களுக்குத் தெரியாமல் இருக்க வேண்டும்; அல்லது தாசிகள் மூலம் தங்கள் வகுப்பார்களில் சிலர் வயிறு வளர்ப்பது கெட்டுப் போகுமோ என்கின்ற சாதி அபிமானமாக இருக்க வேண்டும்.

அடுத்தாற்போல், பொதுஜனங்கள் எந்த விதத்திலாவது இந்தச் சட்டத்தை ஆட்சேபிப்பார்களா என்று எண்ணுவதும் - ஒன்று, முட்டாள்தனமாகவோ அல்லது யோக்கியப் பொறுப்பற்ற தன்மையாகவோ தான் இருக்கவேண்டும். ஏனெனில், இந்து சமூகத்தில் கடவுள் பேரால், மதத்தின் பேரால் விபச்சாரிகளை ஏற்படுத்த வேண்டுமென்று எந்தச் சமூகத்தாரோ, தேசத்தாரோ கருதுவார்களானால் அவர்களைப் போல்

காட்டுமிராண்டிகளோ கெட்டவர்களோ இருக்கவே முடியாது. மற்றபடி, எந்தச் சமூகமாவது இம்மாதிரியான தொழில் தங்கள் வகுப்புக்கு இருக்க வேண்டுமென்று கேட்பார்களேயானால், அவர்களைப் போல் சுயமரியாதையற்றவர்களும் இழிகுல மக்களும் வேறு யாரும் இருக்க முடியாது. எந்தப் பெண்களாவது இந்தத் தொழிலில் ஜீவிக்கலாம் என்று கருதி அதற்காகச் சுவாமியையும் மதத்தையும் உதவிக்கு உபயோகப்படுத்த நினைத்தால், அவர்களைப் போல் ஈனப் பெண்கள் வேறு எங்குமே இருக்கவே முடியாது.

ஆகவே, இந்தச் சட்டம் சென்ற சட்டசபைக் கூட்டத்திலேயே நிறைவேற்றப்பட்டிருக்க வேண்டியது மிக்க அவசியமும் யோக்கியமுமான காரியமாகும். ஆனால் அந்தப்படி நிறைவேற்றப்படாமல் இருக்க, சட்டமெம்பர் ஆட்சேபணைகளைக் கிளப்பி, இதைப் பொதுஜன அபிப்பிராயத்திற்கு அனுப்புவது என்னும் பேரால் தடைப்படுத்திவிட்டது மிகவும் வருந்தத் தக்கதாகும். அதற்கு அனுகூலமாய் ஜஸ்டிஸ் கட்சி அங்கத்தினர்கள் வோட்டு கொடுத்தது மிகவும் மானக்கேடான காரியமாகும். அக்கட்சியார்கள் இந்தக் காரியத்தைக்கூடச் செய்ய முடியவில்லை யானால், பின் என்ன வேலை செய்யத்தான் அந்தச் சட்டசபையை நடத்திக்கொண்டிருக்கிறார்கள் என்பது நமக்குப் புலனாகவில்லை. ‘காங்கிரஸ் காரர்கள் சட்டசபையில் இல்லாததால் இச்சட்டம் நிறைவேறாமல் போயிற்று என்று திருமதி டாக்டர் முத்துலட்சுமி நமக்கு எழுதியிருப்பதைப் பார்க்க, நமக்குத் தாங்க முடியாத அவமானமாகவே இருந்தது.

எப்படியானாலும், அடுத்த சட்டசபைக் கூட்டத்திலாவது இச்சட்டம் நிறைவேறாமல் போகுமேயானால் சர்க்காரின் யோக்கியத்திலும் ஜஸ்டிஸ் கட்சியாரின் சுயமரியாதையிலும் தெருவில் போகின்றவனுக்குக் கூட மதிப்பும் நம்பிக்கையும் இருக்காது என்றே சொல்லுவோம். (குடி அரசு - தலையங்கம் - 23.3.1930)

தேவதாசி ஒழிப்புச் சட்டம் முதலில் சட்டமன்றத்தில் தோற்றுப் போனதைக் கண்டனம் செய்தே இவ்வாறு பெரியார் எழுதினார். இதன் பின்னர் இச்சட்டம் நிறைவேறியது. மக்கள் நலன் - பெண்களின் நலன் முக்கியமானது என்பதையும் பிரச்சினைகளின் மீது எவ்வாறு கருத்துகளை எடுத்துவைக்க வேண்டும் என்பதற்கும் பெரியார் எழுதிய இந்தக் குடி அரசின் தலையங்கமே போதுமானதாகும்.

இத்தலையங்கத்திற்குப் பிறகு விபச்சாரம் குறித்து அவர் எழுதிய (26.10.1930) தலையங்கம் ஆழமான ஆய்வு மட்டுமன்றி 'ஒழுக்கம்' என்பது சமுதாயத்தில் எப்படி மாறுபாடுகளுடன் விளங்குகிறது என்பதை மிகத் தெளிவாக விளக்கிச் சொல்கிறது.

இந்திய சமூக அமைப்பில் சூத்திரர்களின் நிலை என்னமாய் இருந்தது? பிரிட்டிஷார் வந்ததும் என்ன 'தந்திரம்' செய்யப்பட்டது? சமுதாயம் அரசியல் என்பது ஒன்றா? வேறு, வேறா? - என்பது குறித்து எழுதியும் பேசியும் வந்தார் பெரியார். இது தொடர்புடைய இரண்டு பேச்சுகள் குடி அரசிலும், விடுதலையிலும் வெளிவந்தன. வெகுமக்களான சூத்திரர்கள் என்ன நிலையில் இருந்தார்கள் என்பதை அந்தப் பேச்சில் பெரியார் குறிப்பிடுவதைக் காணலாம். இப்போது அவ்விரு பேச்சுகளைப் பார்ப்போம்.

> சமுதாயம் வேறு; அரசியல் வேறு என்று கூறுவது தவறாகும். சமுதாய அமைப்பைச் சரிவர நடத்துவதுதானே அரசாங்கத்தின் கடமையாகும்? சமுதாய அமைப்புக்கு வழிவகை அமைப்பதே மதத்தின் தத்துவமாகும். முஸ்லிம்களும் கிறிஸ்தவர்களும் தங்களது மதங்களை அவ்விதமே கையாண்டு வருகின்றனர். ஆனால் நமது மதம் இருக்கிறதே, அது நமது சமுதாய அமைப்பின் முன்னேற்றத்திற்கு முற்றிலும் மாறுபட்டதாய் இருக்கிறது. நம் அரசாங்கம் என்பதோ மக்களுக்காக அல்லாமல், அரசாங்கத்தாருக்காக மக்கள் வாழ வேண்டிய தலைகீழ்த் தத்துவத்தில் நாம் உழன்று வருகின்றோம்.
>
> எனவே, நாமும் நமது நாடும் முன்னேற வேண்டுமானால், சமுதாயத் துறையிலே பெரும்

மாறுதலை உண்டாக்கவேண்டுவது அவசியமாகும். அதன் பின்னரே, நல்ல ஆட்சியும் ஏற்படுத்த முடியும் என்பது திண்ணம். அவ்வாறு இல்லாது, இன்றைய சமுதாய அமைப்பைக் கொண்டே, யார் ஆட்சி செய்தாலும் மக்களுக்கு ஏற்பட்டுள்ள தொல்லைகள் ஒரு சிறிதும் நீங்குவதற்கு வழி இல்லை; வழிவகையும் இருக்க முடியாது. (பொன்மலையில், 22.5.1949இல் சொற்பொழிவு, குடி அரசு, 23.5.1949)

அரசியல் என்று தனியாக ஒரு விஷயம் இல்லை; அரசியல் என்பது மக்கள் வாழ்வில் சுமத்தப்பட்ட எல்லா விஷயங்களையும் சேர்த்துக் கூறுவதுதான் அரசியல். அதாவது, சமுதாயம், பொருளாதாரம், கல்வி, வியாபாரம், கைத்தொழில், பகுத்தறிவு இன்னும் மற்றும் அனேக காரியங்களைக் கொண்டதுதான் அரசியல். ஆனால் இன்றைய தினம் மக்கள் என்ன கருதுகிறார்கள் என்றால் அரசியல் என்பது வேறு, சமுதாயம் வேறு என நினைத்துக் கொண்டு, தனித்தனியாகப் பிரித்துப் பேசுகிறார்கள்.

ஆகவே, சமுதாயம் வேறு, அரசியல் வேறு என்று நினைத்துக்கொண்டு பிரிப்பதின் காரணம் என்ன? அதாவது, அரசியல் விஷயமாகப் பேசுவதாய் இருந்தால் அது 'பொலிடிக்கல்' என்றும் சமுதாய விஷயமாக இருந்தால் அது 'சோஷியல்' என்றும் பிரித்து மக்களுடைய சமுதாயத் துறை சீர்படுவதற்கு இல்லாமல் செய்வதற்காகவே செய்த ஒரு தந்திரம் இது என்றுதான் சொல்ல வேண்டும். இந்த நாட்டிலேதான் இப்படிச் சொல்லுகிறோமே தவிர, வேறு எந்த நாட்டிலும் இப்படித் தனியாகப் பிரித்துக் கையாளுவது கிடையாது.

ஏன் அப்படி அமைந்தது என்றால், இந்த நாட்டினுடைய சமுதாய அமைப்பு பெரும்பாலும் ஒரு சிறிய கூட்டத்தாருடைய பிழைப்புக்காகவே

அமைக்கப்பட்டுவிட்டது. ஆகவே, சமுதாயத் துறையில் ஏதாவது மாறுதல் பண்ண வேண்டுமெனக் கருதினால்கூட அதனால் பிழைக்கிற கூட்டத்தார், 'இது தவறு, இதைத் தவிர வேறு ஏதாவது பேசு' என்று சொல்லித் தடுத்துக்கொண்டே வருகிறார்கள். அப்படி வந்ததாலேதான் இந்நாட்டில் வெள்ளைக் காரருடைய ஆட்சி ஏற்பட்டும் - அவர்கள் அரசியல் துறையில் சரியாக நடந்துவந்தும் - சமுதாயத் துறையில் கைவைப்பதற்குத் துணியவில்லை. அப்படியே துணிந்தாலும் அன்றைய தினம் பெரிய எதிர்ப்பு இருந்துதான் வந்தது. வெள்ளைக் காரனுடைய ஆட்சியிலே ஒரு பெரும் நெருக்கடி ஏற்பட்டபோது, 'நாங்கள் அரசியல் துறையில் மாத்திரம் பிரவேசிக்றோமே தவிர, சமுதாயத் துறையில் எவ்விதமாகவும் பிரவேசிக்கவில்லை' என்று சொன்னார்கள். அதைத்தான் இப்பொழுது, 'பிரிட்டிஷார் கொடுத்த வாக்குறுதி' என்று சொல்லிக் கொள்வது. ஏதாவது ஒரு வார்த்தை பேசவந்தால், அதைப் பற்றி உடனடியாக 'சர்க்கார் சமுதாயத் துறையில் பிரவேசிக்கக் கூடாது என்று சொல்லி இருக்கிறது. ஆகையால், ஒருவரும் சமுதாயத் துறையில் பிரவேசிக்கக்கூடாது' என்று சொல்லிவிட்டார்கள். எங்களைப் பொறுத்த வரையில் நாங்கள் அதை வெவ்வேறாகப் பிரிப்பது இல்லை.

எங்களுடைய முக்கியமான சங்கதிகளெல்லாம் சமுதாயத்தைப் பற்றிய சங்கதிதான். இதற்காக நீண்ட நாட்களாக நாங்கள் பாடுபட்டு வருகிறோம். இந்த 25 ஆண்டுகளாக நாங்கள் செய்த வேலைகள் எல்லாம் சமுதாயத்திற்குப் பயன்படும் முறையில்தான் செய்து வருகிறோம். எங்களுடைய கொள்கைகள் எல்லாம் சமுதாய சம்பந்தமாகவேதான் இருக்கும் (பாண்டமங்கலத்தில் 10.10.1951இல் சொற்பொழிவு, விடுதலை, 14.10.1951)

பெரியார் இப்படி பேசுவதற்குக் காரணம் இல்லாமல் இல்லை. எஸ். சத்தியமூர்த்தி அய்யர் 1939 ஜூலையில் சென்னை லயோலா கல்லூரி நிகழ்ச்சி ஒன்றில் பேசிய பேச்சு 25.7.9039இல் மெயில் ஏடு வெளியிட்டது. அந்தப் பேச்சின் தமிழாக்கத்தைக் குடி அரசு (30.7.1939) பிரசுரித்தது.

> என் கைக்கு அதிகாரம் வந்தால், நான் சர்வாதிகாரியானால் இந்தியர்களை (இந்தி மட்டுமில்லாமல்) சமஸ்கிருதத்தையும் கட்டாயமாகப் படிக்கும்படி செய்வேன். சர்க்கார் உத்தியோகஸ்தர் களுக்கும் சமஸ்கிருதம் படிக்க வேண்டும் என்கின்ற நிபந்தனையும் ஏற்படுத்தி விடுவேன். காந்தியார் உயிருடன் இருக்கும்போதே இந்தியாவில் இராமராஜ்யம் ஏற்பட்டுவிட வேண்டும் என்று மிக ஆவலாய் இருக்கிறேன். இராம ராஜ்யம் என்பது வர்ணாசிரம முறைப்படி ஒவ்வொருவனும் அவனவன் ஜாதி தர்மப்படி நடந்துகொள்ள வேண்டியதுதான்!" ராமர் காலத்தில் மக்கள் இந்த வர்ணாசிரம முறைப்படியே அதாவது பிராமணன், சத்திரியன், வைசியன், சூத்திரன் எனப் பிரிக்கப்பட்டு அவனவனுக்கு சாஸ்திரப்படி ஏற்பட்ட கர்மங்களை அவனவன் செய்துகொண்டு திருப்தியாய் இருந்தான். அதனால் யார் மீதும் வருத்தப்படவில்லை.

இந்தப் பேச்சைக் குடி அரசு ஏன் வெளியிட வேண்டும்? தாம் செய்து வருகிற வர்ணாசிரம எதிர்ப்புப் பணிகளுக்கு வர்ண மேலடுக்கில் முதல் நிலையில் இருக்கிற ஒருவரின் குரலை - சூத்திர மக்களுக்கு எடுத்துக்காட்டுவதற்காகப் பெரியார் அவரது இதழைப் பயன்படுத்தினார். தமது கருதுகோளுக்கு ஏற்ப மக்களைத் திரட்ட இதழாளர் நிலையில் தமது ஏட்டை ஒரு கருவியாகப் பயன்படுத்துகிற பாங்கை நாம் இங்கே உணர்ந்துகொள்ள முடிகிறது.

காங்கிரசின் நடவடிக்கைகளும் சத்தியமூர்த்தி அய்யரின் பேச்சும் இதர காங்கிரஸ் தலைவர்களின் செயல்பாடுகளும் சூத்திர மக்களுக்கு விடிவை ஏற்படுத்தக் கூடியனவாகப் பெரியார் கருதவில்லை. அவர்கள் 'இராம ராஜ்யம்' படைப்பதில்தான் குறியாய்

இருப்பார்கள் என்று கருதினார் அல்லது வர்ண மேலடுக்கின் முதல்நிலையினர்களின் ஆதிக்கம்தான் இந்திய விடுதலைக்குப் பின்னும் ஆட்சி அதிகாரத்தில் இருக்கும் என்பதை மிகுந்த அச்சத்துடன் அவர் நோக்கினார். ஆகவே மாகாணப் பிரிவினை, தனிநாடு கோரிக்கை என்பதை விடவும் பிரிட்டிஷாரின் நேரடி ஆட்சியின்கீழ் திராவிட நாடு இருக்க வேண்டும் என்று விரும்பினார். இது சூத்திரர்களின் நிலையை மாற்றவும் மேல்சாதி ஆதிக்கத்தை அகற்றவும் பிரிட்டிஷாரின் 'நேரடி' ஆட்சி பயன்படும் என்று பெரியார் கருதினார்.

பெரியார்க்கு 1928-க்குப் பிறகு ஏற்பட்ட பெரிய மாற்றங்களில் சுதந்திரம் வழங்கப்பட்டால் அது மேல்சாதி ஆதிக்கமாகத்தான் இருக்கும் - அதற்குள் அவர்களின் 'எல்லாக் கொள்கைகளும்' நடைமுறைப்படுத்தப்படுவதாக ஆகிவிடும் என்பதால் இந்தியாவை ஒரு தேசமாகக் கருதாமல் ஆதாரப்பூர்வமாக அதனைப் பெரியார் மறுத்து எழுதினார். தமது கொள்கைக்கு ஏற்ப அந்த ஆதாரத்தை நிலைநாட்டி தாம் கருதிய சமுதாயத்தைப் பெரியார் தப்பிக்க விரும்பினார். அதற்காகக் குடி அரசு ஏட்டை அவர் பயன்படுத்தினார்.

சுயராஜ்யம் - சுதந்திரம் - விடுதலை என்று மக்கள் எதை நினைத்துக்கொண்டு இருக்கிறார்கள்? - என்கிற கேள்விக்குப் பெரியார் குடி அரசில் பின்வருமாறு எழுதினார்.

> சுயராஜ்ய மென்னும் பதம் நமது நாட்டில் பெரும்பான்மையாய் ஒவ்வொருவருக்கும் தங்கள் தங்கள் சுயநலத்துக்கே பயன்படுத்தப்பட்டு வருவதோடு, பாமர ஜனங்கள் அதை அறியாதபடி சுயகாரியப் புலிகளால் சூழ்ச்சிகள் செய்யப்பட்டு வருகின்றது. சுயராஜ்யம் என்பதைப் பலர் பல விதமாக நினைத்துக் கொண்டிருக்கிறார்கள்.
>
> திருடர்கள் தாங்கள் திருடுவதைப் பிறர் கவனியாமல் விட்டுவிடுவதுதான் சுயராஜ்யமென்று நினைக்கிறார்கள். சிறையிலிருக்கும் கைதிகள் தங்களை வெளியில் விட்டுவிடுவதுதான் சுயராஜ்யம் என்று நினைக்கிறார்கள். குடிகாரர்கள், தாங்கள்

தாராளமாகவும் விலை நயமாகவும் வேண்டிய அளவு குடிக்க வசமுள்ளதாய், கலால் வரி எடுபட்டுப் போவதுதான் சுயராஜ்யமென்று நினைக்கிறார்கள். பாமர ஜனங்கள் பலர் இந்தியாவை விட்டு வெள்ளைக்காரரை விரட்டிவிடுவதுதான் சுயராஜ்ய மென்று நினைக்கிறார்கள். ஏழைகள் ரூபாய் 1க்கு 8 படி அரிசி விற்பதுதான் சுயராஜ்யமென்று நினைக்கிறார்கள். தரித்திரர்கள் பணக்காரரின் சொத்துக்களை யெல்லாம் பிடுங்கித் தங்களுக்குச் சரிசமானமாய்ப் பங்கிட்டுக் கொடுப்பதுதான் சுயராஜ்யமென்று நினைக்கிறார்கள்.

இவையெல்லாம் அறியாமையால் நினைப்பதாக வைத்துக் கொண்டாலும் அறிந்தவர்கள், படித்தவர்கள் என்போரோ, வெள்ளைக்காரர் உத்தியோகங்களை யெல்லாம் தாங்களே அனுபவித்துக்கொண்டு 500, 1000, 5000, 10000 ரூபாய் சம்பளம் பெறுவதுதான் சுயராஜ்யமென்று நினைக்கிறார்கள். உயர்ந்தோர்கள் என்கின்ற பிராமணர்களோ பாமர ஜனங்களைக் கொண்டு கிளர்ச்சி செய்வித்து மேற்படி சம்பளமுள்ள சர்க்கார் உத்தியோகங்களையும் பதவிகளையும் தாங்களே பெறுவதும், தாங்கள் பிறவியில் உயர்ந்தவர்கள், மற்றவர்கள் தாழ்ந்தவர்களென்பதை நிலைநிறுத்தி ஆதிக்கம் பெறுவதுதான் சுயராஜ்யமென்று நினைக்கிறார்கள். இராஜ தந்திரிகள் என்போரும் இராஜீயவாதிகள் என்போரும் சீமையிலிருந்து பார்லிமெண்டார் மூலம் நமக்கு வழங்கப்படும் சில அதிகாரங்களையும் பதவி களையுந்தான் சுயராஜ்யமென்று நினைக்கிறார்கள். காங்கிரஸ் தற்காலம் பிரதான ஸ்தானம் வகிப்பதாய்ச் சொல்லப்படும் சுயராஜ்யக் கட்சியார் என்போரும், அரசாங்கத்திடமிருந்து எதையாவது பெறுவதைத்தான் சுயராஜ்யமென்று சொல்லிக் கொண்டிருக்கிறார்கள் (இவற்றை யெல்லாம் அறிந்துதான் இங்கிலாந்தில் ஸ்ரீமான் சத்தியமூர்த்தியின் பிரசங்கம் கேட்ட கர்னல் வெட்ஜ்வுட் துரை இந்தியர்கள் இன்னமும்

தங்களுக்கு வேண்டியது என்ன (சுயராஜ்யம்) வென்பதையே தெரிந்து கொள்ளவில்லை என்று சொன்னார் போலும்!) - குடி அரசு - தலையங்கம் - 15.11.1925.

பெரியார் கருதிய சுதந்திரம் என்பது என்ன? தனிமனித சுயமரியாதையுடன் கூடிய சுதந்திரம்தான் உண்மையில் சுதந்திரமாகும். அதுவே உண்மையில் சுகவாழ்வு என்று எழுச்சியும் பேசியும் வந்தவர் பெரியார். தனிமனித சுயமரியாதை என்பது இந்திய சமூக அமைப்பில் வெகுமக்களான சூத்திரர்களை நாலாம் சாதியாக சமத்துவம் அல்லாமல் கடைநிலைக்குத் தள்ளப்பட்டு உள்ளதே ஆகும். வர்ண அடுக்குமுறை ஒழிக்கப்பட்டு இங்கே சமத்துவம் நிலைநாட்டப்பட வேண்டும். இந்தச் சமத்துவத்தோடு கூடிய சுதந்திரம்தான் உண்மையான சுதந்திரம். சமுதாயம், அரசியல் என்று பிரிக்கப்பட்டு சமுதாய அந்தஸ்தில் நாலாம் ஐந்தாம் சாதிகள் இயக்கப்படுவதும் அரசியலில் மட்டும் சுதந்திரம் என்று முழங்குவதும் ஏற்றுக்கொள்ளத் தக்கதல்ல என்கிற கருத்துடையவர் பெரியார். அதனால்தான் சமுதாயம், அரசியல் என்று இங்கே பிரித்திருப்பது நம்பிக்கைக்குரிய செயல் அல்ல என்று எழுதியதை மேலே கண்டோம்.

சமுதாயத்தில் நிலவுகிற இந்தச் சமமற்ற போக்கைப் பெரியார் மாற்ற விரும்பியே பணியாற்றினார். சமுதாயத்திலே சமமற்ற மக்களிடையே - அரசியல் அதிகாரத்தைக் கைப்பற்றுவதும் வைத்திருப்பதும் அர்த்தமற்றது என்று குடி அரசில் (1.5.1932) அவர் எழுதினார். அது மட்டுமன்று. பார்ப்பனர்களிடமிருந்து அரசியல் அதிகாரத்தைக் கைப்பற்றிப் பணக்காரப் பார்ப்பனர் அல்லாதவர் களிடம் அதை மாற்றுவதும் சுயமரியாதை இயக்கத்தினுடைய பணியன்று என்றும், குடி அரசில் (1.1.1933) பெரியார் எழுதினார்.

இந்த அடிப்படையில்தான் அவர் திராவிட நாடு - தமிழ்நாடு ஆகியனவற்றைத் தனிநாடுகளாக்கக் கோரினார்; போராடினார். ஒரு கட்டத்தில் 'திராவிட நாடு' வெள்ளையர் ஆட்சியின் நேரடிப் பார்வையில் இருக்க வேண்டும் என்றும் தீர்மானத்தை நிறைவேற்றினார்.

இவையெல்லாம் வெள்ளையர்கள் காலத்திலேயே நிறைவேறாததினாலும் அவர்கள் வழங்கிய சுதந்திரம் என்பது

சுயமரியாதையற்ற சுதந்திரம் என்பதாலும் 1947 ஆகஸ்டு 15யை பெரியார் 'துக்க நாள்' என்று எழுதினார். அதனால்தான் அவர் அந்த சுதந்திரத்தை ஏற்க மறுத்தார். அது மட்டுமன்று. சுதந்திரத்திற்கு முன்பாக அவர் வெள்ளையனைப் பற்றியும் காங்கிரசைப் பற்றியும் பின்வருமாறு எழுதுகிறார்.

> வெள்ளையன் இந்த நாட்டை விட்டுப் போய்விடுகிறேன் என்று சொல்லுவது (1941இல்) மற்ற வல்லரசுகளிடம் அவன் செய்துகொண்ட ஒப்பந்தம். 'சண்டை நீங்கினவுடன் அவரவர்கள் நாட்டை அவரவர்களிடம் விட்டுவிட வேண்டும்'-என்ற நிபந்தனை செய்துகொண்டார்கள். அந்தப்படியே அமெரிக்கன் பிலிப்பைன் நாட்டை விட்டுவிட்டான். அதைப் போலவே பிரெஞ்சுக்காரனும் விட்டு விட்டான். ஆனால் நமது நாட்டை நம்மிடம் விடாமல் வெள்ளைக்காரன் தந்திரம் செய்கிறான். காங்கிரஸ் அவனை வெளியே விடாமல் தடுத்து நிற்கின்றது. (குடி அரசு 6.7.1946, 18.8.1946; ஈ.வெ.ரா. சிந்தனைகள், பக். 711, 712)

பெரியாரின் இந்த எழுத்துகள் சொல்லுவது என்ன? சுதந்திரம் என்று நீங்கள் கேட்டுப் போராடுவதை நாங்கள் செய்து கொள்ளுகின்ற ஒப்பந்தத்தினால்தான் தரவேண்டி இருக்கிறது என்பதும், நாடு பிரிட்டிஷ் இந்தியா, சுதேச சமஸ்தானங்கள், முஸ்லிம் லீகின் கோரிக்கை என்று மூன்று விதமாக இருக்கிறது. ஆகவே நீங்கள் ஒரு முடிவுக்கு வந்து எங்களிடம் தெரிவியுங்கள் எனக் காங்கிரசுக்கு வெள்ளையன் சொல்லாமல் சொல்லுவதுதான் பெரியாரின் எழுத்துகளில் தெரிகின்றன.

ஆனால் சமஸ்தானங்களைப் பற்றியும் முஸ்லிம் லீகின் பாகிஸ்தான் கோரிக்கையைப் பற்றியும் பிரிட்டிஷ் இந்தியாவுக்குச் சுதந்திரம் வழங்குவது குறித்தும் பரிசீலனைக்கு எடுத்துக்கொண்டு கருத்துகளை வழங்கிய வெள்ளையத் துரைத்தனம் 'திராவிட நாடு' கோரிக்கையைப் பற்றி எந்தவிதக் கருத்தையும் கூறியதாகப் பதிவுகளில் ஏதும் காணோம்.

பிரிட்டிஷார் வழங்கிய சுதந்திரம் என்பது சர்வதேச யுத்த ஒப்பந்தத்தின் அடிப்படையில்தான் என்பது பெரியாரின் கூற்றாக

அமைகிறது. இருப்பினும் அந்தச் சுதந்திரம் என்பது வர்ண மேலடுக்கில் இருப்பவர்களே அரசியல் ஆதிக்கம் செலுத்துவர் என்பதால் அவர் அதனை 'துக்க நாள்' என்று கூறினார்.

சுதந்திரம் குறித்துப் பெரியார் பல அறிக்கைகள் வெளியிட்டார் என்றாலும் 'ஏமாற்றும் திருவிழாவைத் திராவிடர்கள் கொண்டாட வேண்டாம் - பெரியார் அறிக்கை' என விடுதலையில் வெளிவந்த அறிக்கை அவர் எண்ணியபடி இந்த சுதந்திரம் இருக்காது என்பதை வெளிப்படுத்துவதாகும். அந்த அறிக்கை வருமாறு:

ஏமாற்றும் திருவிழாவைத் திராவிடர்கள் கொண்டாட வேண்டாம் - பெரியார் அறிக்கை

> வெள்ளையர்கள் இந்தியாவை விட்டு வெளியேறிவிடவில்லை. இந்தியாவுக்குக் குடியேற்ற நாட்டு அந்தஸ்து அளித்திருப்பதாய்ச் சொல்லுவதன் மூலம், இந்தியாவின் நிர்வாக அதிகாரத்தை இந்தியருக்கு மாற்றியிக்கிறார்கள்.
>
> இந்தியர்களில் எல்லாக் கட்சி மக்களிடையேயும் அதிகாரத்தை ஒப்புவிக்காமலும் எல்லோருடைய குறைகளைக் கேட்காமலும் எல்லாக் கட்சியாரையும் சமரசப்படுத்தாமலும் தங்களுக்குப் பல வழிகளிலும் வியாபாரத்திற்கும் பிரிட்டன் நலத்திற்கும் சில இரகசிய ஒப்பந்தங்களைச் செய்து கொண்டு காங்கிரஸ்காரரிடம் மாத்திரம் அதாவது, பார்ப்பன ஆதிக்கமும் வடநாட்டார் சுரண்டல் வசதியும் கொண்ட - ஒரு சுயநல தந்திர சூழ்ச்சி கொண்ட கோஷ்டியார் கைக்கு அதிகாரத்தை மாற்றிவிட்டு, அவர்களுக்குப் பாதுகாப்புத் தரும் நிபந்தனையோடு அதிகாரத்தை மாற்றி இருக்கிறார்கள்.
>
> எனவே, குடியேற்ற நாட்டு அந்தஸ்து என்பது அதிகார மாற்றமே தவிர, நாடு ஒப்படைப்பு அல்ல.
>
> உதாரணமாக, இந்தியாவுக்கு அரசர் ஜார்ஜ் மன்னர் ஆவார். மேற்பார்வையாளர், கவர்னர் - ஜெனரல் மேன்மை தங்கிய மவுண்ட்பேட்டன் ஆவார்.

ஆதலால், வெள்ளையருக்கும் காங்கிரசுக்கும் ஏற்பட்ட ஓர் ஒப்பந்த ஆட்சிதானே ஒழிய, இந்திய மக்களுக்கு ஏற்பட்ட சுதந்திர ஆட்சியல்ல. இதன் பயனாய் இந்த நாட்டிலுள்ள காங்கிரசல்லாத மக்களுக்கு நன்மை இல்லை; பிரதிநிதித்துவம் இல்லை. வருணாசிரம தர்மக் கொடுமை ஒழிவதில்லை.

ஏற்படப் போகும் மாகாண ஆட்சி என்பது வெள்ளையர் அதிகார ஆட்சிக்காலத்திலிருந்த உரிமையைவிட மோசமான ஆட்சியேயாகும். அதிகாரங்கள் யாவும் மத்திய அரசாங்கத்திற்குத்தான் உண்டு.

சில அதிகாரங்கள்தாம் மாகாணங்களுக்கு என்றாலும், அவைகளும் கவர்னருக்கே ஒழிய, மந்திரிகளுக்கல்ல.

கவர்னர், தெரிந்தெடுக்கப்பட்ட மந்திரிகளுக்குட் பட்டவரல்லர்; மந்திரிகள் வெறும் பொம்மைகள் - அதாவது ஆலோசனை சொல்லுபவர்கள் ஆவார்கள்.

சென்னை மாகாணத்துக்கு 2000 மைல் தூரமான டில்லியில் இருக்கும் பிரஸிடெண்ட் கையில், சென்னை மாகாண மக்களை நடத்தும் ஆட்சி இருக்கிறது.

பிரஸிடெண்டும் மத்திய அரசாங்க மந்திரிகளும் அசெம்பிளி மெம்பர்களும் சேர்ந்த மொத்த கணக்கில் 10இல் ஒரு பாக எண்ணிக்கைக்குக் குறைவான எண்ணிக்கையாளர்தாம், அங்கு சென்னை மாகாணப் பிரதிநிதிகளாய் இருப்பார்கள். அவர்களும் பெரிதும் ஆரிய அடிமைகளாகத்தாம் இருப்பார்கள்.

வடநாட்டுக்கும் தென்னாட்டுக்கும் சமுதாயத் துறையிலும் பொருளாதாரத் துறையிலும் ஏராளமான பேதம் உண்டு.

வியாபாரத்தில் வடநாட்டார் கொள்ளை இனியும் அதிகப்படுமே ஒழிய, சிறிதும் குறையாது.

மதக் கொடுமையால் சமுதாயக் கொடுமை வடநாட்டார் இஷ்டப்படிதான் பெருகுமே தவிர, சமுதாய சமத்துவம் ஏற்பட வழி இல்லை.

நாம் இன்று திராவிட நாடு கேட்பது முக்கியமாய் வட நாட்டான் பொருளாதாரச் சுரண்டலும் ஆரியன் விளைத்த சமுதாய இழிவும் நீங்க வேண்டும் என்பதற்காகவேயாகும்.

அதாவது - இன்று நைஜாம், திருவாங்கூர், மைசூர் நாடுகள் விரும்புவது போல் சென்னை மாகாண நாலேமுக்கால் கோடி திராவிட மக்கள் தங்களது கலாச்சாரம், பொருளாதாரம் முதலியவைகளுக்கு ஏற்ற சுயேச்சை நாடாக இருக்க வேண்டும் என்பதே.

ஆதலால், வெள்ளையர் நம்மை மோசடி செய்ததை வெறுக்கவும் அதாவது, வட நாட்டு பனியாக் களுடையவும் ஆரியப் பார்ப்பனர்களுடையவும் சூழ்ச்சிக்கும் ஏமாற்றுக்கும் உள்ள தந்திரத்திற்கும் நாம் ஏமாந்து விடவில்லை என்பதைக் காட்டவும் பூரண சுயேச்சையுள்ள திராவிட நாடுதான் நமது இலட்சியமே தவிர, அதற்குக் குறைந்த எதைக் கொண்டும் நாம் திருப்தியடைய மாட்டோம்; ஓய மாட்டோம்; கிளர்ச்சி செய்தே தீருவோம் என்பதைக் காட்டவும் இம்மாதம் 15ஆம் தேதி நடக்கும் சுதந்திரத் திருநாள் என்னும் 'ஆரியர் - பனியா' ஏமாற்றுத் திருவிழாவில் நாம் கலந்து கொள்வதில்லை என்கிறோம்.

இதைக் காங்கிரஸ்காரரும், ஆரியர்-பனியாக்கள் அடிமைகளும் திரித்துக் கூறி 'வெள்ளையனை வெளியேற்றுவது திராவிடர் கழகத்தாருக்கு இஷ்டமில்லை' என்று விஷமப் பிரச்சாரம் செய்வார்களாகில், அது காங்கிரசாரின் மற்றொரு பித்தலாட்டப் பிரச்சாரம் என்று திராவிட மக்கள் கருத வேண்டுமேயொழிய ஏமாந்து போகக் கூடாதென்று வேண்டிக்கொள்கிறேன். - விடுதலை 6.8.1947; (ஈ.வெ.ரா. சிந்தனைகள், பக். 686-688)

அடுத்து சமயம் சார்ந்தவர்களின் மீது பெரியாரின் பார்வையைப் பாருங்கள். அவர் இயற்கை எய்துவதற்கு ஓர் ஆண்டு இரண்டு மாதங்கள் இருந்த நிலையில் விடுதலையில் எழுதிய தலையங்கத்தில்,

> எதற்காக இந்து; எதற்காகக் கிறிஸ்தவர்; எதற்காக முஸ்லிம் முதலிய மதங்கள் வேண்டும்? இவர்களுக்குத் தனித்தனி வேதம், வேஷம், செய்கைகள் முதலியன எதற்காகத் தேவையாக இருக்கின்றன? இவைகளால் பிரிவினை உணர்ச்சியல்லாமல் சமுதாயத்திற்கு நலனென்ன என்று கேட்கிறேன்.
>
> கடவுளாலும், இந்த வேதங்களாலும் பிரிவினை உணர்ச்சி தவிர வேறு பலன் என்ன என்று கேட்கிறேன். இவைகளெல்லாம் ஒருபுறமிருந்தாலும், இவற்றால் மனிதனது அறிவு கெட்டு, வளர்ச்சி பாழாகி - இந்த 20ஆவது நூற்றாண்டிலும் மனிதன் அறிவிற்கும் சிந்தனைக்கும் ஏற்றபடி வளராமல் தேங்கிக் கிடக்கிறான். இது எவ்வளவு பெரிய கேடு? மனித வாழ்வினால் எந்த மனிதன் கவலை, தொல்லை, அடிமைத்தனம் இல்லாமல் இருக்க முடிகிறது? ஏன் பிறக்க வேண்டும்? ஏன் சாக வேண்டும்? இவை இரண்டும் இல்லாமல் செய்து கொள்ள மனிதனால் முடியாதா? பாழும் கடவுளால்தான் இது முடியாததாக இருக்கிறதே!
>
> பிறத்தல், சாகடித்தல் (ஆக்கல், அழித்தல்) என்ற இரண்டைத் தவிர, கடவுள் வேறு வேலை எதைப் பார்க்கிறானாம்? இந்தக் காரியத்திற்கு 'ஒரு கடவுள்?' - 'பல கடவுள்கள்' ஏன்?
>
> ஆகவே, தன்னைப் பகுத்தறிவுள்ள மனிதன் என்று உணர்ந்த எவனும் மனித சமுதாயத்துக்கு ஏதாவது தொண்டு செய்யவேண்டு மென்றால், தன் வாழ்நாளில் ஏதாவது ஒரு நல்ல காரியம் செய்தோம் என்று கூறிக் கொள்ளவோ-வேண்டுமானால், கடவுள், மதம், வேதங்கள் ஒழிக்கப்பட்டத் தன்னால் கூடியதைச் செய்ய வேண்டும்.

இதுதான் அறிவுள்ள மனிதர்க்கு அடையாளம் என்பது என் கருத்து - விடுதலை தலையங்கம், 18.10.1972

என்று எழுதினார்.

பெரியார் தமது எழுத்துகளில் அவரது கொள்கைக்கு ஏற்ற சான்றுகளைச் சேர்த்துக் காட்டி வாழ்க்கையை இயற்கையோடு இயைந்த வாழ்க்கையாக அமைத்துக்கொள்ள வேண்டும் என்பதை அவர் வற்புறுத்தி வந்தார். அதற்காக அவர் எதையும் ஈவு இரக்கமின்றி, தயவு தாட்சண்யமின்றி மிகக் கடுமையாக விமர்சனம் செய்து எழுதினார்; பேசினார். பெரும்பான்மையான மக்கள் ஏற்றுக் கொண்ட சமயம், பழக்க, வழக்கங்கள், மரபுகள் ஆகியவைகளின் மீது மிக கடுமையாகப் போர் தொடுத்தவர் அவர். அதற்கு ஒரு சான்றே மேலே நாம் எடுத்துக்காட்டிய விடுதலையில் அவர் எழுதிய தலையங்கமாகும்.

பெரியாரின் பொருளியல் பார்வை என்பது பொதுவுடைமை நோக்கிய சிந்தனையே ஆகும். பெரியார் சிக்கனத்திற்குப் பெயர் போனவர். ஆனால் அவர் கருமி அல்லர். அவரது பொருளியல் பார்வை எப்படி இருக்கின்றது என்பதைக் கீழ்க்காணும் அவரது எழுத்துகள் எடுத்துக்காட்டுகின்றன.

ஏழை மக்களுக்கு உதவி செய்வது என்பது ஏழ்மைத் தன்மை மனித சமுதாயத்தில் இல்லாதிருக்குமாறு செய்வதே தவிர அங்கொருவனுக்கும் இங்கொருவனுக்கும் பிச்சை சோறு போட்டுச் சோம்பேறியாக்குவது அன்று. - விடுதலை, 22.4.1950

தேவை நிறைவேறாமல். ஏற்படும் குறைபாடும், அளவுக்கு மேற்பட்ட ஆசை நிறைவேறாததால் ஏற்படும் குறைபாடும் பொதுவுடைமையினால் தீரும். - உண்மை, 14.2.1972

பொதுவுடைமை என்பது பகுத்தறிவின் எல்லையாகும். - விடுதலை, 24.4.1967

பொதுவுடைமை வேறு; பொதுவுரிமை வேறு. பொதுவுடைமை என்பது சமபங்கு என்பதாகும். பொதுவுரிமை என்பது சம அனுபவம் என்பது ஆகும். - குடி அரசு, 25.3.1944

ஒரு கூட்டத்தில் பெரியார், "இந்த நாட்டிலே உண்மையான கம்யூனிசக் கொள்கை உடைய ஆட்சி ஏற்படுமானால் திராவிட

நாடு பிரிவினைக் கிளர்ச்சிக்கு அவசியமில்லாமல் போய்விடலாம்" (விடுதலை 5.11.1951) என்று குறிப்பிட்டார். இதே செய்தியை ஹிந்து ஏடு 5.11.1951இல் ஒரு படி மேல போய் பின்வருமாறு அந்தச் செய்தியை வெளியிட்டு இருந்தது. அது இதுதான்:

Dravida Kazhagam to Merge with Communists

Mr. E.V. Ramaswamy Naicker announced at a public meeting organised by his party in Dindigul, that the D.K. would soon merge with the Communist Party and that, with the Communists coming to power, there would be no need any further for the formation of an independent Dravidian State.

இந்தச் செய்தியை 'This Day that age - 50 years ago' எனும் தலைப்பின்கீழ் 5.11.2001 அன்று ஹிந்து மறு வெளியீடு செய்தது என்பது குறிப்பிடத்தக்கது.

இதுகாறும் நாம் எடுத்துக்காட்டிய பெரியார் அவர்களின் எழுத்துகளைக் கொண்டு இதழாளர் பெரியாரை நம்மால் உணர்ந்தும் அறிந்தும் கொள்ள முடிகிறது. ஓர் இதழாளர் கொள்கையாள ராகவும், ஓர் இயக்கத்தின் தலைவராகவும், தமது மக்களை வழிநடத்துபவராகவும் இருப்பின் பத்திரிகையின் தேவை எவ்வளவு இன்றியமையாதது என்பது பெரியாரின் வாழ்க்கை யிலிருந்து பெறப்படுகிற செய்தியாக இருக்கிறது. அவர் எழுதிய அறிக்கைகள், கட்டுரைகள், உரையாடல்கள், போராட்டம் பற்றிய அறிவிப்புகள், விளக்கங்கள், தன்னிலை விளக்கங்கள் மற்றும் அவரது சொற்பொழிவுகள் என அவ்வளவும் அவரது பத்திரிகைகளில் இடம்பெற்று இருக்கின்றன. அதில் சமூக, அரசியல், பொருளாதாரப் பிரச்சினைகள் விரிவாக அலசப் பட்டுள்ளன. சிக்கல்களைப் பெரியார் பார்க்கும் விதம் மிக வித்தியாசமாக இருக்கும். உண்மையில் அவற்றிலிருந்து எல்லாம் 50 சதவீதம் அளவுக்காவது எடுத்துக் காட்டினால்தான் இதழாளர் பெரியாரின் முழுப் பரிமாணத்தையும் அவரது பல்வேறு பரிமாணங்களையும் பார்வைகளையும் வழங்க முடியும் என்பது என் மதிப்பீடு.

பெரியார் பெரும்பாலும் அவரது பெயரிலேயே எழுதினார். 'சித்திரபுத்திரன்' எனும் புனைப்பெயரிலும் அவர் எழுதியிருக்கிறார்.

வேறு பெயர்களில் எழுதி இருக்கிறாரா என்று இன்னும் துல்லியமாக ஆய்வுச் செய்யப்படவில்லை. பிற்காலத்தில் அவரது கையெழுத்திட்ட 'பிளாக்' போடப்பட்டு அறிக்கைகள் வெளிவந்தன. எந்த ஆண்டுகளிலிருந்து இப்படி கையெழுத்திட்டு அறிக்கைகள், தலையங்கங்கள் வெளிவந்தன என்பதையும் ஆராய வேண்டும். அப்படி வெளியிட ஏதோ ஒரு அவசியம்- தேவை ஏற்பட்டு இருக்க வேண்டும் என்று தோன்றுகிறது.

அவரது உரைநடை வளத்தைக் கொண்டு பிறர் பெரியாரைப் போல எப்போதாவது அவரது பத்திரிகைகளில் எழுதியிருக்க முடியுமா? என்று கருதுவதற்கு இடமில்லை. பெரியாரது நடையில் எழுதக் கூடியவர்கள் யாரும் இருந்ததாகவும் தெரியவில்லை. எவர் வழியும் அத்தகைய செய்திகளைக் கேட்டதும் இல்லை. அத்தகைய பதிவுகளும் இல்லை.

எடுத்துக்காட்டிற்காக நாகை சொ. கோபாலகிருஷ்ணன் என்பவர் மறைமலையடிகளின் சீடர். அவரது உரைநடை அடிகளுடையது போலவே இருக்கும் என்பார் மறை. திருநாவுக்கரசு. இவரது உரைநடையால் பண்டிதமணி கதிரேசஞ் செட்டியார் மயங்கி தம்மைப் பற்றி மறைமலையடிகள் எழுதியது என்று நினைத்து ஒரு சிக்கல் ஏற்பட்டு வழக்கு மன்றமே செல்ல நேர்ந்தது.

திரு. வி.க.வின் நவசக்தி வெளிவந்த காலத்தில் அதன் தலையங்கங்களை வெ. சாமிநாத சர்மாவும் எழுதுவதுண்டு. சர்மாவின் உரைநடை திரு. வி.க.வின் உரைநடையைப் போலவே இருந்ததால் திரு. வி.க. எழுதிய தலையங்கம் சர்மா எழுதிய தலையங்கம் என வித்தியாசப்படுத்திப் பார்க்க இயலாமல் இருந்தது.

அறிஞர் அண்ணா நடத்தி வந்த திராவிட நாடு வார இதழில் 1949 முதல் 1958 வரை அதன் துணை ஆசிரியராகப் பணியாற்றி வந்தார் இராம. அரங்கண்ணல். இவரது எழுத்துகள் அறிஞர் அண்ணாவின் உரைநடையைப் போலவே இருக்கும். மேலே குறிப்பிட்ட காலத்தில் பெயர் போடாமல் வெளிவந்த திராவிட நாடு கட்டுரைகள், பல தலையங்கங்கள் அண்ணா எழுதியதா, அரங்கண்ணல் எழுதியதா என்று இன்னமும் முடிவு எடுக்கப்படாமல் இருக்கின்றன.

நாம் மேலே குறிப்பிட்ட நிழல் எழுத்தாளர்களின் தொல்லை பெரியார்க்கு இல்லை. அதனால்தான் தினமணி ஆசிரியராக இருந்த ஏ.என். சிவராமன் தாம் எழுதும் தலையங்கங்களில் மட்டும் தமது பெயரைப் போட்டு எழுதும் வழக்கமுடையவராக இருந்தார் போலும்! பெரியாரோடு தொடர்புடைய இதழ்களை முழுவதும் வைத்துப் பார்க்கும் பொழுது,

1. நீதிக் கட்சிக்காரர்கள் பெரியாரை அழைத்து 'திராவிடன்' ஏட்டை நடத்துமாறு கேட்டுக் கொண்டதற்கு என்ன காரணம்?
2. எவ்வளவு காலம் பெரியார் 'திராவிடன்' இதழுக்கு ஆசிரியராக இருந்தார்? திராவிடனிலிருந்து பெரியார் விலகினாரா? அல்லது பத்திரிகை நிறுத்தப்பட்டு விட்டதா?
3. நீதிக் கட்சியின் அதிகாரபூர்வ ஏடாக இருந்த விடுதலை பெரியார் கைக்கு வந்தது எப்படி?
4. யுத்த காலத்தில் பத்திரிகையில் என்னென்ன செய்திகள் இருக்க வேண்டும் என்பது ஏதாவது உண்டா?
5. நீதிக் கட்சியினரின் அச்சகம் தொடர்பாக ஏதேனும் வழக்குகள் பெரியார் மீது போட்டது உண்டா?
6. குடி அரசு கடைசி இதழின் தேதி என்ன?

என்பன போன்ற வினாக்களுக்கு விடை காண வேண்டிய தேவை இருக்கின்றது.

துணைநூற்பட்டியல்

இதழ்களும் நூல்களும்

குடி அரசு

விடுதலை

திராவிட நாடு

இந்து

தினமணி

விடுதலை-பொன்விழா மலர்

சிந்தனையாளன் மலர் 1998

பெரியார் ஈ.வெ.ரா. சிந்தனைகள்

மறைமலையடிகள் வரலாறு

இரா. அரங்கண்ணலின் நினைவுகள்

தமிழ் இதழ்கள், சோமலெ, சென்னைப் பல்கலைக் கழக வெளியீடு, 1978

முதல் குடி அரசு : சில பிரச்சினைகள் விமரிசனங்கள், முருக. இராசலிங்கம், 1988

பெரியாரியல் தொகுப்புகள், மா. நன்னன்

திரு.வி.க. வாழ்க்கைக் குறிப்புகள்

ஆகஸ்ட் 15, எஸ்.வி. இராஜதுரை

Towards Self-Respect Periyar EVR on a New World,

கல்கி

த. வசந்தான்

பத்திரிகையாளராக-படைப்பிலக்கியவாதியாக-விமர்சகராக-பொதுவாழ்வில் ஈடுபட்டு சுதந்திரத்திற்கு முன்னும் சுதந்திரத்திற்குப் பின்னும் வாழ்ந்த பத்திரிகையாளர் கல்கியின் பணி எவ்வாறு பொலிவு பெற்றது; அதற்கான தளங்கள் களங்கள் போன்றவற்றைச் சுருக்கமாகச் சொல்வதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

கல்கி பாங்கர் விநாயகராவ் நூலுக்கு 54 பக்க முன்னுரை 17.7.1947 எட்டயபுரத்தில் இருந்து எழுதியுள்ளார். அதில் தனது 22 வருடங்களுக்கு முன் நிகழ்ந்தவற்றை நினைவுகூரும் முகமாக முகவுரை தொடங்குகின்றது.

ஈரோட்டில் கதர்போர்டில் தான் பார்த்த வேலையை விட்டுவிட்டு சென்னையில் 'நவசக்தி' பத்திரிகை உதவி ஆசிரியராகப் பயணம் தொடங்கும் கல்கி தன்னை யார் எழுத்தாளராக்கினார் என்பதை முதலில் தெளிவுபடுத்திவிடுகின்றார்.

> எழுத்தாளர் உலகில் யாராவது என்னைத் தாக்கும் போதெல்லாம், அந்தத் தாக்குதல்களை அப்படியே நான் வாங்கி, திருச்சி தேசபக்தர் டாக்டர் டி.எஸ்.எஸ். ராஜனுக்கு அனுப்பிவிடுவது வழக்கம். ஏனென்றால், எழுத்தாளர் உலகிற்குள் என்னைக் கழுத்தைப் பிடித்துத் தள்ளியவர் டாக்டர் டி.எஸ்.எஸ். ராஜன்தான் (க.க. I ப.15)

டாக்டர் ராஜன் 'மகாநாட்டுக்காகவோ கமிட்டி கூட்டத்துக்காகவோ' திருச்சி வந்த திரு.வி.க.விடம் கல்கியைப் பற்றிச் சொல்ல 'இதுவரையில் தமிழில் ஏதாவது எழுதியிருக்கிறாயா?' என்று கல்கி கேட்கின்றார். கல்கியிடம் சில துண்டுப்பிரசுரங்களைக் காட்டுகின்றார். அவற்றுள் மகாத்மா காந்தி எழுதிய செய்தி ஒன்றின் மொழிபெயர்ப்பைப் படித்த திரு.வி.க. 'தமிழ்நடை பிழையில்லாமல் இருக்கிறது'. சென்னைக்குப் போய் கடிதம் எழுதுகின்றேன் எனச்

சொல்லுகின்றார். 'திரு ரா.கி. யாண்டுள்ளார்?' அவருக்கு 'நவசக்தி'யில் தொண்டாற்ற விருப்பமிருப்பின் இதுபோழ்து இவண் வரலாம்' என மாகாண காங்கிரஸ் செயலர் எஸ். ராமநாதனுக்கு ஒரு கடிதம் எழுதினார்.

> பத்திரிகை உலகிலே புகுந்து சேவை செய்ய வேண்டுமென்ற ஆசை நீண்ட நாளாக உண்டு. இப்போது உணவு மந்திரியாக இருக்கும் (டாக்டர் டி.எஸ்.எஸ். ராஜன் சென்னை மந்திரி சபையில் உணவு மந்திரியாக இருந்தபோது எழுதப்பட்டது இது). டாக்டர் ராஜன் எனக்கு ரொம்ப காலமாகவே 'அறிவு மந்திரி'. என் கைநாடியைப் பிடித்துப் பார்த்த டாக்டர் 'நான் புத்திசாலி' என்று கண்டுபிடித்து என்னைச் சென்னைக்கு மூட்டைகட்டி அனுப்பி வைத்தார். (எ.அ.ப. 136)

முன்பு 'நீ கெட்டிக்காரப் பையன்', 'நீ முன்னுக்கு வரவேண்டியவன்' எனச் சொல்லித் திரு.வி.க.வுக்கு ஒரு கடிதம் தந்த டி.எஸ்.எஸ். ராஜன், பிழையின்றி எழுதுவதாகச் சொன்ன திரு.வி.க. எழுதிய 'தபால் கார்டு' நீர் மேல் மிதக்கும் தாவரம் போல் அலைபாய்ந்த கொண்டிருந்த கல்கியை நவசக்தியில் சேர்த்தது. 'இரண்டே வாக்கியங்கள் கொண்ட (திரு.வி.க.வின் கடிதம்) இந்தக் கடிதம் எனக்கு எவ்வளவு பெருமையையும் குதூகலத்தையும் அளித்தது எனச் சொல்வது நம்மைச் சிந்திக்க வைக்கிறது. உறவுகளை விவரிக்கும் விதம் - விவரிக்கும் பாங்கு - நடை - சுயவெளிப்பாடு - உள்மன ஓட்டம் இப்படிச் சிறுசிறு செய்திகள் கல்கியின் எழுத்தாற்றலுக்குப் பிள்ளையார்சுழி போட்டு விடுகின்றது. ஏன் அவ்வப்போது நமக்கும்தான்.

நவசக்தியில் பத்திரிகையாளராகப் பணியைத் தொடங்கி, கல்கியாகிய ஆற்றினைத் திரு.வி.க. என்கின்ற அணை தடுத்து நிறுத்த முடியவில்லை. சில வருடங்களுக்குப் பிறகு வேறு இடத்திற்குச் செல்கின்றார்.

> இதோ பார்! உன்னைப் போகச் சொல்ல எனக்கு விருப்பமில்லை. நீயோ பிடிவாதம் பிடிக்கிறாய். உன்னைப்போல் சிலர் அவசரப்பட்டு ஒரு காரியம்

> செய்துவிட்டுப் பிறகு .... உன்னுடைய ஸ்தானத்தை இன்னும் ஆறு மாதத்திற்குக் காலியாக வைத்திருக்கிறேன். இந்த ஆறு மாதத்திற்குள் நீ எப்போது வேண்டுமானாலும் திரும்ப வந்து சேர்ந்து கொள்ளலாம். ஆறு மாதத்திற்குப் பிறகு உன்னைக் கேட்டுவிட்டு அப்புறம் வேறொருவரை நியமித்துக் கொள்கின்றேன். (க.க. I பக். 26-27)

மேற்காணும் செய்தி திரு.வி.க.வின் பெருந்தன்மையையும், 'பாம்பறியும் பாம்பின் கால்' என்பதற்கு ஏற்ப கல்கியின் எழுத்தாற்றலில் நம்பிக்கை கொண்ட தமிழ்த் தென்றலின் கல்கி பத்திரிகையாளனைப் பற்றிய கருத்துக் கணிப்பையும் இலைமறை காய் போல் உணர்த்துகின்றது.

மகாத்மா தமது கட்டுரையில் பரம்பொருளைக் குறிக்க 'லார்ட் சிவா' என்று எழுதியிருந்தார். தமிழில் நவசக்தியில் அதை மொழிபெயர்த்த கல்கி 'இறைவன்' என்று எழுதிவிட்டார். அதற்கு திரு.வி.க. தன்னை அழைத்து கேட்ட கேள்விகளையும் தான் அளித்த பதில்களையும் எழுதிய கல்கி,

> திரு.வி.க.வுக்கு உண்மையில் மத வேற்றுமை உணர்ச்சியே கிடையாது. எனக்கு ஒருவேளை அந்த மாதிரி பைத்தியக் கார வேற்றுமை உணர்ச்சி இருக்குமோ என்று சந்தேகித்துத்தான் தன்னைக் குறுக்குவிசாரணை செய்ததாகவும் அம்மாதிரி ஒன்றும் இல்லை என்று அறிந்ததும் பெரிதும் திருப்தியடைந்தார் (க.சி.க. பக்.15-16)

என்றும் குறிப்பிடுகின்றார்.

'நவசக்தியில்' நான் ஏறக்குறைய நாலு வருஷம் வேலை பார்த்தேன். இந்த நான்கு வருஷத்தில் திரு.வி.க. ஒரு தடவையாவது கடிந்து பேசியதில்லை. முகத்தைச் சிணுங்கியது கூடக் கிடையாது (க.சி.க.ப. 17). மேலே குறித்த சிவபெருமான் சம்பவம் தவிர எனப் பணி செய்த இடத்தின் சிறப்பை விளக்குகிறார்.

ஸ்ரீ திரு.வி.கலியாணசுந்தர முதலியார் அவர்களைப் போல் நல்ல மனிதர் வேறொருவர் இருக்க முடியாது. எவ்வளவோ அன்பும்

ஆதரவுமாக அவர் என்னை நடத்தி வந்தார். ஒரு தடவையாவது ஒரு குற்றம் கூறியது கிடையாது. ஆயினும் மூன்று வருஷத்துக்கெல்லாம் 'நவசக்தி'யை விட்டு வேறுவித வேலை பார்க்க வேண்டுமென்ற ஆவல் எனக்கு உண்டாகிவிட்டது. 'வெளி' என்று சொன்னாலும் தவறில்லை' (பா.வி.ப. 11) 'கல்கி' 'வெறி' என்று குறிப்பிடுவது - ஒரு மாற்றம் - ஒருபடி முன்னோக்கிய பயணம் எனச் சொல்லலாம்.

'கையில் வித்தை இருக்கும் போது கவலை என்ன? 300 ரூபாயுடன் நவசக்தி வேலையை விட்ட கல்கி நாலைந்து மாதம் காலம் தள்ளலாம்' (பொ.பு.ப. 210) என எண்ணுகின்றார்.

நவசக்தியிலிருந்து தான் விலகிய சம்பவத்தை விரிக்கும் கல்கி, திரு.வி.க. தான் விலக விரும்புவதாகத் தெரிவித்த போது 'அவரால் அதை நம்ப முடியவேயில்லை. வியப்பும் வருத்தமும் கூட அடைந்தார். விலகிக்கொள்ள விரும்புவதற்குக் காரணம் கேட்டதுடன், 'இங்கு ஏதாவது குறை உண்டா?' என்றும் விசாரித்தார்.

உண்மை என்னவென்றால், 'நவசக்தி' காரியாலயத்தில் எனக்கு ஒரு குறையும் இருக்கவில்லை. எந்தப் பத்திரிகாலயத்திலும் ஓர் உதவி ஆசிரியருக்கு அவ்வளவு உரிமையும் மரியாதையும் அளிக்கமாட்டார்கள் என்பதை நன்கு அறிந்திருந்தேன். 'நவசக்தி'யில் நான் செய்த தொண்டு எனக்கே அவ்வளவு திருப்தி அளிக்காதது தான் நான் விலகிக்கொள்ள விரும்பியதற்குக் காரணம். பெரும்பாலும் மொழிபெயர்ப்பு வேலைதான் 'நவசக்தி'யில் நான் செய்ய நேர்ந்தது. திரு.வி.க.வின் தமிழ் நடையை என்னால் கையாள முடியவில்லை. என்னுடைய நடையில் நான் சொந்தமாக எழுத முயன்ற விஷயங்கள் 'நவசக்தி'க்குப் பொருத்தமாக அமையவில்லை. இதனால் என் மனம் அமைதியை இழந்துவிட்டது. வேலையில் ஊக்கம் இல்லாமல் போய்விட்டது. அதன்பிறகு 'நவசக்தி'யில் இருப்பது திரு.வி.க.வின் அன்பைத் தவறாக உபயோகப்படுத்திக் கொள்வதாகும் என்று கருதினேன் (க.சி.க. பக் .18-19).

இச் சம்பவம் கல்கியின் எழுத்துப்பணியின் தேடலையும் பணி என்பது பணத்திற்காகச் செய்வதல்ல; ஈடுபாட்டுடன் செய்வது என்பதையும் புலப்படுத்துகிறது.

எழுத்தாளர்கள் ஒரு பத்திரிகையிலிருந்து இன்னொரு பத்திரிகைக்கு மாறியதாகவோ, தாங்களே புதிய பத்திரிகை ஆரம்பித்ததாகவோ கேள்விப்படும் போது நான் சிறிதும் வியப்படைவதில்லை. எழுத்தாளர் என்போர் ஒரு விநோதமான இனத்தினர். ஓர் இடத்தில் நிலையாக இருக்க அவர்களால் முடிவதில்லை. தம் இஷ்டம் போல் சுயேச்சையாக எவ்விதக் கட்டுப்பாடுமின்றி எழுதவேண்டும் என்று ஆவல் பெரும்பாலான எழுத்தாளர் உள்ளத்தில் எப்போதும் இருந்து கொண்டிருக்கும். மேலேயுள்ளவர்கள் எவ்வளவு நல்லவர்களாயிருந்தாலும் சரிதான், மாறுதல் வெறி திடீரென்று சில சமயம் தோன்றத்தான் செய்யும். (பா.வி.மு.பக். 10-11)

கல்கியின் மேற்குறித்த முன்னுரை கல்கியின் ஆளுமைக்கும் ஓர் உரைகல்லாகும். நவசக்தியில் வேலையைவிட்ட கல்கி மறுநாள் ராஜகோபாலாச்சாரியார் சென்னை வந்திருப்பதை அறிந்து சந்திக்கின்றார். ''பட்டணத்தில் வேலை இன்றிச் சும்மா திரியக்கூடாது; கெட்டுப்போவாய்; இரண்டு நாளைக்குள் ஆசிரமத்துக்குப் புறப்பட்டுவிடு! அங்கே சந்தானம் இருக்கிறார்; உன்னைப் பார்த்துக் கொள்வார். நான் வடக்கே இருந்து திரும்பி வந்ததும் பத்திரிகைப் பற்றி யோசிக்கலாம்!" (பா.வி.மு.ப. 12) என்று கூறுகிறார்.

திருச்செங்கோடு புறப்பட்ட கல்கியைக் "கதை கட்டுரை எழுதி வி.பி.பி.யில் அனுப்பிவிடுங்கள். அப்போதுதான் நீங்கள் அனுப்புவது பத்திரமாய் வந்துசேரும். எனக்கும் தனியாக மணியார்டர் செய்யவேண்டிய வேலை இராது' (பொ.பு. ப.212) என்றும், எந்தத் தலைப்பை வேண்டுமானாலும் தலையங்கத்திற்குத் தெரிவுசெய்து கொள்ளுங்கள். நான் ரூ.75/- கொடுத்துப் பெற்றுக் கொள்கின்றேன் எனச் சொல்லித் தூண்டில்போட்டு விடுகிறார் வாசன்.

காந்தி மகானிடம் எனக்கு இருந்த பத்தி அப்போது ராஜாஜியிடமும் இருந்தது. ஒருபடி அதிகமாகவே இருந்தது. ராஜாஜியின் தோற்றம், பேச்சு, அவருடைய ஒழுக்கத்தையும், தியாக வாழ்க்கையையும் பற்றி நான் தெரிந்து கொண்டிருந்த விவரங்கள்

எல்லாம் அத்தகைய பக்தியை எனக்கு உண்டாக்கி இருந்தன (பாரி ப.13) எனக் கல்கி சுட்டுவது, தனக்குக் சுட்டிய வீட்டை அவருக்காக விட்டுக்கொடுத்து வெளியேறுவதற்கான வித்து ராஜாஜியிடம் தனக்குள்ள ஈடுபாடு இறுதிவரை தொடர்ந்ததற்கும் கல்கியின் மனதில் ஆழப் பதிந்துவிட்டது என்பதையும் புலப்படுத்துகிறது.

> திருச்செங்கோடு காந்தி ஆசிரமத்தில் நான் வசித்த மூன்று வருஷந்தான் என் வாழ்க்கையிலேயே உற்சாகமும் குதூகலமும் நிறைந்திருந்த காலமாகும் (பா.வி. ப.16)

எனத் தன் வாழ்வைச் சரியாகப் பரிசீலனை செய்துள்ளார் கல்கி. திருச்செங்கோடு வாழ்வு ஆச்சாரியாரின் அணுக்கத் தொண்டராகக் காலம் முழுவதும் செயல்பட வழிவகுத்தது. 'விமோசனம்' என்னும் மதுவிலக்குப் பத்திரிகையைப் பத்து அடிக்குப் பத்தடி இருந்த அறையில் 40 பக்கங்கள் அளவில் ராஜாஜியின் வழிகாட்டுதலோடு திருவல்லிக்கேணியில் இருந்த ஹிந்தி பிரச்சார சபையில் முதல் இதழை அச்சடித்தார் (1000 பிரதிகள்). இரண்டாவது இதழிலிருந்து தானே பொறுப்பேற்று நடத்தி மாதம் ஒருமுறை சென்னைக்குச் சென்று மூன்று நாளைக்குள் அச்சிட்டு பணியைத் தொடர்ந்தார்.

'விமோசனம்' மொத்தம் 10 இதழ்கள் வெளிவந்தன. 10ஆவது இதழ் ராஜாஜி சிறையில் இருக்கும்பொழுது கல்கி வெளியிட்டு (4000 பிரதிகள்) அவருடைய அனுமதியோடு பத்திரிகை நிறுத்த இருக்கும் அறிக்கையையும் பிரசுரம் செய்து நிறுத்திவிட்டார் கல்கி.

மீண்டும் ஒரு மாற்றம் நிகழப்போவதைத் தன் எழுத்தில் வடிக்கின்றார்.

''ராஜாஜி பக்கத்தில் இருந்தவரையில் அவருக்கு மதுவிலக்கில் இருந்த உணர்ச்சியின் வேகம் என்னையும் ஆட்கொண்டிருந்தது. அவர்கள் அப்பால் சென்றதும் என்னுடைய உணர்ச்சியின் வேகமும் குறைந்து போய்விட்டது. உணர்ச்சியில்லாத எழுத்தில் சக்தி என்ன இருக்கும்? பத்திரிகைதான் எப்படி நடத்தமுடியும்? (பா.வி. ப.59) உப்பு சத்தியாக்கிரகம் செய்யச்சென்ற ஆச்சாரியார் மதுவிலக்கு வேலை செய்ய கல்கிக்குக் கட்டளையிட்டார். 'அந்நாளில் டாக்டர் அம்மாள், நண்பர்

சதாசிவம் இவர்களுடன் சிலசமயம் சேர்ந்தும் சிலசமயம் தனியாகவும் என்னாலியன்ற தொண்டுசெய்து வந்தேன் என்று மட்டும் குறிப்பிடுகிறேன். அந்நாளில் நான் முக்கியமாகச் செய்த வேலை உள்ளூர் சென்று அங்குள்ள நண்பர்களின் உதவியினால்,

'சுதந்திரப்போர்'
'மகாத்மா சிறைவாசம்'
'மகாத்மா சரித்திரம்'
'சுயராஜ்யம் ஏன்?'

என்ற காலணாப் பிரசுரங்கள் ஒரு லட்சம் பிரதிகள் அச்சடித்து வந்ததாகும். துமிலனுடன் பெங்களூர் சென்று அச்சிட்டு கதர்க்கடை, கதர்த்துணிக் கட்டுகளில் ஒளித்துவைத்துப் பல அயலூர்க் கதர் கடைகளுக்கு அனுப்புவார்களாம் (பொ.பு. ப.248) எனத் தன் பணியை மதிப்பீடு செய்கிறார் கல்கி.

மூடநம்பிக்கைகளில் மனிதன் தன் நேரத்தை வீணடித்துக் கொண்டிருப்பதைச் சுட்டிக்காட்டிய கல்கி, முதல் கட்டுரையிலேயே (ஆனந்தவிகடனில் வெளிவந்தது) சமூக அவலங்களை வெளிப்படையாகச் சாடுகின்றார். "தம்பி! இந்த ஜாதகம் பார்க்கிற பைத்தியம் மட்டும் எனக்குக் கட்டோடு பிடிக்காது. என்வரையில் நான் ஒவ்வொரு படி முன்னேறியதும் என்னுடைய சொந்த உழைப்பினால்தான். ஆனால் ஜோசியரிடம் போய்க் கேட்டால் என்ன சொல்லுவார் தெரியுமா? ஏதோ ஒரு செவ்வாய், ஒரு சுக்கிரன், ஒரு சூரியன்தான் காரணம் என்று சொல்லுவார். இதை எப்படிக் கேட்டுக்கொண்டு சகிப்பது? ஒப்புக் கொள்வது என்பதோ முடியவே முடியாத காரியம்" (எ.அ. ப.28) என மீ.ப. சோமு கண்ணீரின் கதையில் எழுதியிருப்பதும் மனங்கொளத் தக்கது.

"சிறந்த எழுத்தாளர் ஒருவர் தமிழநாட்டிற்குக் கிடைத்தார் என்று அவரை ஆசிரியராக அமைத்த விஷயத்தில் ஆனந்தமடைந்தேன். 'அவரைப்போல இன்னொரு எழுத்தாளர் கிடைப்பாரா?' என்று நான் அப்பொழுதே ஆச்சரியப்பட்டதுண்டு. அந்த ஆச்சரியம் இன்னும் தீரவில்லை" (எ.அ. ப.142) என்ற வாசனின் குரல் கல்கியை எழுத்தாளராக இனம் கண்டதாக அமைகிறது. எனவே தான் ஜனவரி 1932இல் வெளிவந்த ஆனந்தவிகடனில்,

இரண்டு மாணிக்கங்கள்
அழகும் கற்பனையும் கருத்தும் நகைச்சுவையும்
ஒருங்கே தாண்டவமாடும் நூல்!

ஏட்டிக்குப் போட்டி (விலை ரூபா 1.4.0. பக்.28)
சாரதையின் தந்திரம் (விலை அணா. 0.12.0)
(கல்கி எழுதியது)

இந்த இரண்டு நூல்கள் படிப்பவரை இன்பச் சாகரத்திலாழ்த்தி ஆரம்ப முதல் கடைசி (கிடைக்குமிடம்: வாஸன் புத்தகசாலை, 244, தங்கசாலை வீதி, மதராஸ்) வரை நகை விருந்தளித்து மெய்மறந்திருக்கும்படி செய்யுமென்பது திண்ணம் எனப் பொருத்தமாக விளம்பரம் கொடுத்திருக்கின்றார்.

நெல்லையப்பர்

'ஒருநாள் ஒரு நண்பர் ஒருவரை அழைத்துக்கொண்டு என் இல்லத்துக்கு நெல்லையப்பர் வந்தார். 'ஆனந்தவிகடன்' பத்திரிகைக்கு விஷயதானம் செய்ய ஆவலுடன் இருக்கிறார். அவரைத் தாங்கள் உபயோகப்படுத்திக் கொள்ளமுடியுமா?' என்று வாசனிடம் கேட்டு ரா.கி.யை அறிமுகப்படுத்தியதாகக் குறிப்பிடுகிறார் 'நான் கண்ட கல்கி' எழுதிய வாசன்.

ஒரு கட்டுரை எழுதி அனுப்பச் சொல்லுங்கள் பார்க்கிறேன் என்று வாசன் சொல்ல இரண்டு நாட்களில் முதல் கட்டுரை 'ஏட்டிக்குப் போட்டி! - கல்கி' என்ற புனைபெயரில் வெளிவந்தது.

"எழுத்தில் ஹாஸ்யமே வரக்கூடாது, படிப்பவர்கள் சிரித்துவிட்டால் பாபம், தமிழை வளர்ப்பது ஒன்றுதான் பத்திரிகையின் கடமை" என்று கரடுமுரடாகப் பல கட்டுரைகள் வந்து கொண்டிருந்த காலம் அது. அதற்கு முற்றிலும் மாறுபட்டதாக இருந்தது கல்கியின் 'ஏட்டிக்குப் போட்டி!'. குழந்தைக்கும் புரியக்கூடியதாக இருந்தது, அவர் எழுதிய நடை படிக்க முடிந்தது. படிக்கும் போதே சிரிப்பு வந்தது. அடிப்படைக் கருத்தும் ஆழமாக இருந்தது 'ஆகா, இவ்வளவு நன்றாக எழுதுபவர் ஒருவர் இருக்கிறாரே' என்று நான் ஆனந்தமடைந்தேன். கட்டுரையை இரண்டு, மூன்று முறை படித்தேன். கூட இருந்தவர்களுக்கும் படித்துக் காட்டினேன். அவர்களும் விழுந்து

விழுந்து சிரித்தார்கள்', (எ.அ. பக்.41-2) எனச் சொல்லும் வாசனின் கூற்று, கல்கியையும்", கட்டுரையையும் ரத்தினச் சுருக்கமாக எடைபோட்டு விடுகின்றது. நடை, கருத்து, நகைச்சுவை ஆகிய மூன்றும் கலந்து அவர் வழங்கிய கட்டுரையின் ஒரு சிறு கூறு இதோ!

"நமது முன்னோர்கள் செய்து வைத்த ஏற்பாடு எவ்வளவு அழகானது பாருங்கள். மாதங்களிலே மார்கழியும் புரட்டாசியும் கெட்டவை. ஒரு மாதத்தை எடுத்துக்கொண்டால் அமாவாசை, பாட்டிமுகம், நவமி, திதி இவை உதவா. பின்னர் பரணி கார்த்திகை நட்சத்திரங்கள், வாரத்திலோ வெள்ளிக்கிழமை கலக நாள்; சனிக்கிழமை, செவ்வாய்க்கிழமை ஆகா - செவ்வாயோ வெறுவாயோ என்று கேட்டதில்லையா? பின்னர் மரணயோகமும், கரிநாளும். மாதம், திதி, நட்சத்திரம், கிழமை, யோகம் எல்லாம் கூடிய நாள் ஒன்றிருந்தால் அதில் ராகுகாலம், தியாஜ்யம், பிரதோஷம் இந்த வேளைகள் கூடா. இவ்வளவு விபத்துக்களையும் கடந்து ஒருவன் ஏதேனும் காரியம் செய்யப்போனால், யாரேனும் ஒரு சிறு தும்மல் தும்மிவிட்டால் போதும்; அன்று விடுமுறைதான். . . . ஒரு சந்தேகம் சுமார் 160 வருஷங்களுக்கு முன்பு கிளைவ் என்றும் துஷ்டப்பையன், பிழைப்புக்கு வழிதேடி இங்கிலாந்திலிருந்து இந்தியாவுக்குப் புறப்பட்டானே அவன் நாளும் நட்சத்திரமும், மரண யோகமும், காலமும் பார்த்துக் கொண்டா புறப்பட்டான்? அவன் இந்தப் பாரத நாட்டிலே பிரிட்டீஷ் சாம்ராஜ்யத்தைப் பலமாக நிலைநாட்டி விடவில்லையா? (க.க. III, பக். 19-20)

"அரசியலை, அழகு அழகாக, கோவை கோவையாக, சுளை சுளையாக எடுத்து மக்களுக்கு சாதாரண மக்களுக்கு அவர்களுடைய பாஷையிலே எழுதி, தமிழ்நாட்டில் அரசியலறிவைப் பரப்பிய பெருமை அவரையன்றோ சாரும்? காந்தியத்துக்கும் சுதந்திரப் போராட்டத்துக்கும் தம்முடைய பேனாவின் மூலம் செய்த சேவை கொஞ்சமா நஞ்சமா? குன்றைக் குடைந்து கோபுரம் கட்டிய பண்டைத் தமிழர் போல, பேனாவின் மூலம் மகா கடினமான விஷயத்தையும் தேனாக ஆக்கி வாயிலே ஊற்றியவர் அவரல்லவா? (எ.அ. ப. 11) என 'அபூர்வ எழுத்தாளராக'க் கல்கியைக் குறிப்பிட்டு அவரின் எளியநடை பற்றிப் பேசுகின்றார் கல்கியில் உதவியாசிரியராகப் பணியாற்றிய எம்.எல். சபரிராஜன். 'ஓ!

மாம்பழமே!' என்ற தலைப்பில் கல்கி எழுதிய கட்டுரை சபரி ராஜனின் கூற்றுக்கு இலக்கணமாக அமைந்துள்ளது எனில் மிகையில்லை.

நவசக்தியில் முதன்முதலில் எழுத்தாளராகப் பணியைத் தொடங்கிய கல்கிக்கு "நீண்ட காலம் வழிகாட்ட வேண்டிய அவசியம் எனக்கு ஏற்படவில்லை. வெகுசீக்கிரத்தில் அவர் தடம் பிடித்துக் கொண்டுவிட்டார். சொற்ப காலத்திற்குப் பிறகு அவர் நூற்றுக்கணக்கான எழுத்தாளர்களுக்கு வழிகாட்டியாயிருந்து வந்தாரென்பதைத் தமிழுலகம் நன்கறியும். பர்மா, சிலோன், மலேயா முதலிய தென்கிழக்காசிய நாடுகளில் அவருக்கு எத்தனையோ ஏகலைவர்கள் இருக்கிறார்களல்லவா?' (எ.அ. ப.180) என அரும்பும் நிலையிலே கல்கியின் ஆற்றலை மதிப்பீடு செய்யும் சாமிநாத சர்மா, "பத்திரிகை பணி நேரம் போக மீதி நேரங்களில் கல்கி எப்போதும் புத்தகம் படிப்பார்; கைராட்டையில் நூல் நூற்பார் என்றும் சிறுகதைகள் படிப்பதில் அதிகம் விருப்பம் காட்டாத திரு.வி.க. கூட நவசக்தியில் வரும் கல்கி சிறுகதைகளைப் படித்து மகிழ்வார்" என்றும் குறிப்பிடுகின்றார்.

பேனாச் சித்திரத்தில் வல்லவரான கல்கி திருத்தம் இருந்தால் முகம் சுளிக்காமல் மாற்றவேண்டிய காரணத்தைக் கேட்டுத் தெரிந்து கொள்வார். 'பிற்காலத்தில் பெயரும் புகழும் கல்கியை நாடிவருமென்பதை முன்கூட்டித் தெரிந்து கொண்டிருந்த சுப்பிரமணிய சிவா.

> *பிள்ளையாண்டான் சீக்கிரத்தில் முன்னுக்கு வருவான்; உங்களுடைய சிஷ்யனல்லவா?*
>
> *(எ.அ. ப.182)*

என்று திரு.வி.க.விடம் சொல்லிக் கல்கியின் முதுகைத் தட்டிக்கொடுத்தார். நவசக்தி அலுவலகத்துக்கு அடிக்கடி வந்து ஈ.வெ. ராமசாமி நாயக்கருக்கு "கல்கியின் தெளிந்த உரைநடை அதிகமாகக் கவர்ந்திருந்தது. கல்கியோடு அடிக்கடி பேச்சுக்கொடுப்பார். அவருடைய சாதுர்யமான பதில்களைக் கேட்டு வியப்பார். 'பிற்காலத்தில் இவர் சிறந்த அறிவாளியாகப் பிரகாசிப்பார்" (எ.அ. ப 182) என்று திரு.வி.க.விடம் கூறுவார் என்றும் பஜனைகளில் கலந்து கொண்டு பாரதியின் பாடல்களை

உருக்கமாகப் பாடுவார் என்றும் கல்கி எழுத்தாளராகப் பெருமை பெற்றதை அவர் பணியாற்றிய நவசக்தி அலவலகத்திற்கு வந்தவர்களின் கூற்றுக்களைக் கொண்டும் பதிவு செய்துள்ளார்.

1930இல் 'ஏட்டிக்குப் போட்டி'யை வாசித்த ரசிகமணி டி.கே.சி. "முதல் கட்டுரையை வாசிக்க ஆரம்பித்தேன். பாராவுக்கு மேல் பாரா கும்மாளி போட்டுக்கொண்டு ஓடிற்று. அடடா!, தமிழ் பாஷை இத்தனை விளையாட்டையும் பாவத்தையும் எங்கேதான் ஒளித்து வைத்திருந்தது!. . . முதல் கட்டுரையை மூன்று தடவை வாசித்து அனுபவித்த பிறகுதான் அடுத்துள்ள கட்டுரைகளுக்குப் போகமுடிந்தது. . . அதை வாசித்துவிட்டால் சகுனம் நாள் நட்சத்திரம் பார்ப்பதைப் பற்றி எரிச்சல் கோபம் ஒன்றும் வராது; சிரிப்புத்தான் பொங்கிக் கொண்டு வரும்" (எ.அ. பக்.130-131) தமிழ் பாஷைக்குக் கருவியாக வாய்ந்தவர் ஆசிரியர் கல்கி எனக் கல்கியின் செய்தியையும் நடைச் சிறப்பையும் பாராட்டுகிறார்.

1931இல் ஏட்டிக்குப் போட்டி, சாரதையின் தந்திரம் வாசிக்கக் கிடைத்தன. ரா.கி. திருச்செங்கோடு காந்தி ஆசிரமத்தில் இருப்பதாக நண்பர் சொன்னார்.

'புஸ்தகங்களை வாசித்துக் கொண்டிருந்த போது தமிழ் மகளுக்கு என்றும் இல்லாத நல்ல காலம் வந்ததாகவும், படுக்கையோடு படுக்கையாய்க் கிடத்திருக்க அவள் எழுந்து நிற்கவும் உல்லாசமாய் ஓடவும் ஆடவும் ஆரம்பித்தது போலவும் தோன்றிற்று. . . . உ.வே.சா.விடம். 'ஐயா, தமிழ்நாட்டில் ஒருவர் தமிழ் எழுதுகிறார்' என்றேன். இந்த விதமாகப் பேசி வருடம் ஆகிவிட்டது. ஆசிரியர் பிறகு 'ஆனந்தவிகட'னுக்கு ஆசிரியர் ஆகிவிட்டார். 'ரா.கி.' அல்லது 'கல்கி' என்ற பெயரின் கீழ் என்ன கட்டுரை வந்தாலும், என்ன கதை வந்தாலும் யாரும் வாசிக்காமல் விடுவதில்லை' (எ.அ. பக்.224-225) என்ற வழக்கறிஞரின் கூற்று கல்கியின் எழுத்தாற்றலைப் பறைசாற்றுகின்றது. எழுத்தின்வழி வாசிப்புப் பழக்கத்தை ஏற்படுத்தி வசியப்படுத்தும் கலை கல்கிக்கு முதல் கட்டுரையிலேயே தொடங்கிவிட்டது. கடுநடையில் எழுதி வந்த தமிழர்கள் மத்தியில் கல்கியின் நடை பாலைவனச் சோலையாக அமைந்ததைக் கல்கி எழுத்தாற்றலைப் பற்றி வியந்தவர்கள் ஆங்காங்கு ஒப்பிட்டுக் காட்டுகின்றனர்.

'அரசியல் விஷயமாகப் பத்திரிகை உலகத்தின் ஜாம்பவான்களே திணறும்படியாகவும் வியக்கும்படியாகவும் தலையங்கங்கள் வெளிவந்தன. 'விகடன்'னில் உள்ள தலையங்கங்கள் அரசியலோ சமூகத் திருத்தமோ ஏதானாலும் சரி, உண்மையைப் பீரங்கிக் குண்டுகளைப் போல் வீசி எறிந்தன; அக்கினிச் சுவாலைகளைக் கக்கின; மக்கள் மனதில் இறுகிக்கிடந்த மூட நம்பிக்கைகளைத் தகர்த்து இருளையும் ஓட்டிவிட ஆரம்பித்தன. "பொதுவாகப் பத்திரிகையில் தலையங்கம் என்றால் வாசியாமல் விடப்படும் பத்தி; விகடனில் தலையங்கமோ வாசியாமால் தீராத பத்தி" (எ.அ.ப. 225) என்பது வழக்கறிஞரின் கல்கி எழுத்தாற்றல் பற்றிய கருத்துக்கணிப்பு. கல்கி அரசியல் ஈடுபாடு, அரசியல் அனுபவம், பல்துறை ஞானம், ஆங்கில வாசிப்பு, மொழிபெயர்ப்புத்திறன், வாசிப்புப் பழக்கம், அயராத உழைப்பு, தன்னம்பிக்கை எல்லாவற்றுக்கும் மேலாக எழுத்தாற்றல் பல்துறை மக்களையும், பல்துறை வல்லுநர்களையும் அவரைப் பற்றிப் பேசவைத்தது அல்லது எழுத வைத்தது எனச் சொல்லலாம்.

இப்படிக் காணாமலே எழுத்தால் நட்புக்கொண்ட ரசிகமணியை, கல்கி, 'நான் என்ன எழுதினாலும் அதைப் பாராட்டி உற்சாகப்படுத்தியவர் டி.கே.சி. "நான் என்ன எழுதினாலும் அதில் உள்ள குற்றத்தைச் சொல்லி என்னைத் திருத்தியவர் ராஜாஜி. இந்த இருவருக்கும் நான் கடன்பட்டிருப்பது போல் வேறு யாருக்கும் கடன்பட்டதில்லை" (எ.அ. ப.317) என நன்றி பாராட்டுவதும், அவர்கள் நட்பு இறுதிவரையில் 'ஆல்போல் தழைத்து அருகுபோல் வேரூன்றியதையும்' பத்திரிகையுலகம் பறைசாற்றும்.

11.9.1970 அன்று சாவிக்காக நேர்காணலில் கலந்துகொண்ட காமராஜர் "உங்களை ரொம்பத் தாக்கி எழுதினாரே கல்கி நீங்க என்ன நினைக்கிறீங்க?" என்ற கேள்விக்கு, "என் பேரிலே உள்ள கோபத்தினாலே அவர் அப்படி எழுதினாருங்கறதைவிட ராஜாஜியின் பேரிலுள்ள பக்தியினால் எழுதினாருங்கறதுதான் என் அபிப்பிராயம். எப்படி எழுதினாலும் ரொம்பத் தெளிவான எழுத்து. காங்கிரஸை வளர்க்கறதுக்கு அவரும் வாசனும் ரொம்ப உதவி செஞ்சிருக்காங்க" (பொ.பு. ப. 363) என அரசியல் தராசில் பத்திரிகையாளரைத் துல்லியமாக எடைபோட்டிருப்பதற்குச் சிறந்த எடுத்துக்காட்டு.

கல்கியின் கட்டுரைகள் அவரது அரசியல் வாழ்க்கையையும் நகைச்சுவையோடு வெளிப்படுத்தக்கூடிய ஆற்றலையுடையவை. காட்டாக, 'சில சுறுசுறுப்புக்காரர்கள்' காட்டும் குறிப்பு சில "சுறுசுறுப்பில் சிற்றெறும்பையும் ஜப்பானியரையும் தோற்கடிக்கக் கூடிய சில தேசபக்தர்கள் திருச்சி சிறையில் இருந்தார்கள். அவர்களுள் ஸ்ரீ டி.எஸ். அவிநாசிலிங்கம் ஒருவர்" (க.சி.க. ப.40) - அவிநாசிலிங்கம் சிநேகிதர்களுடன் அளவளாவுதல் என்றால் அவர்களுடைய முதுகுக்குக் கொஞ்சம் அபாயந்தான் என்றும், தொடையில் தட்டிக் கொடுப்பவர் என்றால் ஓமந்தூர் ராமசாமி ரெட்டியார் ஞாபகம் வருகிறது. 'பக்கத்தில் உட்கார்ந்திருப் பவர்களின் தொடைக்கு அவரால் ரொம்ப ஹிம்சை உண்டு. அவருக்கு சந்தோஷமும் உற்சாகமும் எவ்வளவுக்கெவ்வளவு அதிகமாகிறதோ அவ்வளவுக்கு மேற்படி ஹி'ம்சையும் அதிகமாகிவிடும். வால்மீக ராமாயணம் கேட்பதற்குத் தவறாமல் அவர் வருவதுண்டு. . . . ஸ்ரீ வரதாச்சாரியின் இராமாயண பக்தி உச்ச ஸ்தாயிக்குப் போகும் சமயங்களில் ஸ்ரீ ரெட்டியாரும் குதூகலத்தில் மெய்மறந்து பக்கத்திலிருப்பவர்களின் தொடையில் பளீர் என்று அடித்துவிடுவார். ஸ்ரீ ரெட்டியாரின் குதூகலத்தை நாலைந்து தடவை ருசி பார்த்து பிறகு ஸ்ரீ சந்தானம் ஒரு யுக்தி செய்தார். இரமாயணத்துக்கு வரும்போது கையில் ஒரு தலையணையும் எடுத்துக் கொண்டுவந்து தொடைமீது வைத்துக் கொள்வார். விழுகிற அறை தலையணை மீது விழட்டும் என்றுதான்" (க.சி.க. பக். 42-43). இப்படித் தாம் சந்தித்த பெரிய மனிதர்கள், சிறையில் நடந்த நிகழ்வுகள் எல்லாம் கல்கியின் எழுதுகோல்வழி வரும்போது வாசிப்பாளர்களோடு பேசுகின்றது.

திருச்சி சிறையைப் பற்றி எதை மறந்தாலும் டாக்டர் பி. சீனிவாசன் போட்டுக்கொடுத்த டீயை மறக்க முடியாது. 'மூன்று நிமிஷ விதி'தான். அது அதாவது தேயிலை வெந்நீரில் ஊறுவது மூன்று நிமிஷத்துக்கு ஒரு விநாடி குறையக் கூடாது. ஒரு விநாடி அதிகமாகவும் கூடாது எனக் குறிப்பிடும் கல்கி, 'ஒரு கையில் மேல் வேஷ்டியைச் சுருட்டி வைத்துக் கொண்டு அதன்மேல் உறிஞ்சிச் சாப்பிட வேண்டும். டீயை நன்றாய் ஆற்றிவிட்டு அப்புறம் கடகடவென்று வாயில் ஊற்றிக்கொண்டு குடிப்பது உண்டே அதைப் பஞ்சமா பாதகத்தில்தான் சேர்க்க வேண்டும்" (க.சி.க. ப.44) எனச் சிறந்த சுவைஞனாக இருந்து, அதைக் குடிக்கும் முறையையும் குறிப்பிடுகின்றார்.

"என் தந்தையின் உதவி கொண்டு ஏற்படுத்தப்பட்ட பாண்டுரங்கன் எலிமெண்டரி பாடசாலையில் உபாத்தியாயராக இருந்த ஸ்ரீஅய்யாசாமி ஐயரால் கிருஷ்ணமூர்த்தி அடைந்த பயன் சொல்லிமுடியாது . . . .மாயூரத்தில் படிக்கும் போது மகாதான தெரு பாண்டுரங்க மடத்தில் ஸ்ரீசிவராம கிருஷ்ண சாஸ்திரிகள் ஹரிகதையைக் கேட்கத் தவறமாட்டோம். . .இவனும் அவர்கள் மாதிரியே ஹரிகதை செய்யத் தொடங்கினான். இரண்டு மணிநேரம் மூன்றுமணி நேரம் நடக்கும். கிராமத்தார்கள் தவிர பக்கத்து ஊர்களிலிருந்தும் ஜனங்கள் வந்து கிருஷ்ணமூர்த்தியின் கதையை ஆர்வத்துடன் கேட்பார்கள்" (அ.அ. ப.349) எனத் தம்பியின் கதைசொல்லும் ஆற்றலையும் அதற்கு அய்யாசாமி ஐயர் தூண்டுகோலாக விளங்கியதையும் குறிப்பிடுகிறார் கல்கியின் சகோதரர் ரா. வேங்கடராமய்யர்.

தந்தை இல்லாத மகன் இளம்பருவத்தில் தக்க வழிப்படுத்தலோடு தன்னை உருவாக்கிக் கொண்டதில் அய்யாசாமி ஐயருக்கும் பெரும்பங்கு உண்டு.

கதைசொல்லும் ஆற்றல் படைத்த கல்கி கட்டுரை எழுதுவதிலும் வல்லவர்,

> பொருளாதாரச் சிக்கல்களையும் அரசியல் சிக்கல்களையும் குறைந்த கல்வியறிவுடையவர்களும் புரிந்துகொள்ளும் தெளிவான எளிய முறையில் எழுதிப் புகழ் பெற்றார். அவருடைய தலைப்புக் கட்டுரைகளைப் படிக்கவே மக்கள் அவ் விதழ்களை (ஆனந்த விகடன், கல்கி) வாங்கினர் என்று கூறலாம் (ப. 270)

என்பது 1966இல் சென்னைப் பல்கலைக்கழகத்தில் கல்கி அறக்கட்டளைப் பொழிவு நிகழ்த்திய அறிஞரின் மதிப்பீடு.*

இசை

'சதிர்' எனப்படும் ஆட்டத்தின் மீது 20 வருடங்களாக நிலைத்திருந்த கல்கியின் எண்ணத்தைத் திரு.வி.க. ஏற்பாடு

* மா. இராசமாணிக்கனார், இருபதாம் நூற்றாண்டில் தமிழ் உரைநடை வளர்ச்சி

செய்திருந்த பாலசரஸ்வதியின் நடனத்தைப் பார்த்தபிறகு கல்கி நீக்கிக் கொள்கின்றார்.

மாயூரம் நகர உயர்நிலைப் பள்ளியில் படிக்கும்போது திருவிடைமருதூர் செம்பொன்னார் கோயில் சகோதரர்களின் நாதஸ்வர இசைக் கச்சேரியையும் வீரசாமிப் பிள்ளையும் ராஜரத்தினம் பிள்ளையும் சேர்ந்து வாசிக்கும் நாதஸ்வர இசையையும் இரவு முழுவதும் கேட்டு ரசிப்பது வழக்கம். 35 சங்கீத ரசிகரான கல்கியின் சங்கீதம் பற்றிய விமர்சனம்:

> பழைய சிநேகிதர்களைச் சந்திப்பதற்கு மயிலாப்பூர் ரஸிக ரஞ்சனி சபை இருந்த இடம் என்று கண்டிருக்கிறேன். ஆறு மாதத்திற்கு முன்பு பிரிந்த சிநேகிதர்களை யெல்லாம் அந்தச் சபையில் மறுபடியும் சந்திக்கும் பாக்கியம் எனக்குக் கிடைத்தது. தோடி, பைரவி, சங்கராபரணம், காம்போதி, கரகரப்பிரியா முதலிய சிநேகிதர்களைத் தான் குறிப்பிடுகிறேன் (பொ.பு. ப.408 / கல்கி 16.1.48)

ராகங்களை நண்பராக்கும் கல்கி, அவற்றைச் சரியாகச் செய்யாதவர்களை 'கர்நாடகம்' என்ற பெயரில் வெளுத்துக்கட்டுகிறார். சான்று:

> ஸ்வரங்களை உரலில் போட்டு உலக்கை கொண்டு அவல் இடிப்பதுபோல் இடிக்கிறார். பின்னல் வில்லில் நாணேற்றிக் காதளவு இழுத்து வாங்கிப் பாணப்பிரயோகம் செய்கிறார். பிறகு கழுத்தைப் பிடித்து நெட்டுகிறார்
> (பொ.பு. 396)

என எழுத அவர் பத்திரிகை வாயிலாகக் கண்டனம் தெரிவிக்கின்றார்.

இப்படி விமரிசனம் செய்ததால்தான் கல்கியால் குட்டுப்பட்டவர்கள் திருத்திக் கொண்டார்கள்; அவர் பாராட்டைப் பெரிதாக நினைத்தார்கள்.

இன்றுகூட 15-08-2001 அன்று 'வணக்கம் தமிழகத்தில்' வந்த நடிகை மனோரமா கல்கிகூட அதைப் பாராட்டி எழுதினார் எனச்

சொல்லுகின்றார் என்றால் அவர் பேனாவுக்கு இருந்த ஆற்றலை அறிய முடிகிறது.

எனினும் அத்திறனாய்வு வேறு, தனிமனிதன் உறவு என்பது வேறு என்பதில் தெளிவாக இருந்தவர் கல்கி. கிருஷ்ணையரைத் தம் சொந்தப் பத்திரிகையில் வானொலி நிகழ்ச்சியை விமரிசனம் செய்யச் சொன்னார். 'இசைத்தேனீ' என்ற அவரும் 3½ ஆண்டுகள் தன் பணியைச் செய்தார். மேலும் ராஜா சர் அண்ணாமலை செட்டியாரின் ஆதரவுடன் சங்கீத வித்வான் மாநாடு நடத்தினார். 'தமிழ்ப் பாட்டுக்களுக்கு முக்கியத்துவமும் கௌரவமும் கொடுத்துப் பாடச் செய்யவேண்டும்' எனத் தீர்மானம் நிறைவேற்றினார். 16.8.41 அன்று அந்நிகழ்ச்சியை 'ஆடல்பாடல்' எனத் தலைப்பிட்டு எழுதினார். ராஜா சர் அண்ணாமலை செட்டியார், ஆர்.கே. சண்முகம் செட்டியார் ஆகியோர் நிதி திரட்டி 4 லட்சம் ரூபாய் மூலதனத்துடன் தமிழ்ச் சங்கத்திற்கு நிதி வைத்தனர். அச் சங்கத்தின் (பொ.பு. ப.390) துணையுடன் பன்னிரண்டு நாள் இசை விழா நடத்தினார் (க.நி. ப.17) 19.4.43 தமிழிசை விழாவை முன்னிட்டு சிறப்பு மலர் வெளியிட்டார்.

"ஸ்ரீராஜரத்தினம் பிள்ளையின் *தோடி ஆலாபனையை முதன்முதலில் கேட்ட போது, அவருடைய கற்பனையை விட்டுத்தள்ளுங்கள்-நம்முடைய மனதில் என்னென்ன இன்பமயமான கற்பனைகள் எல்லாம் உதித்தன. குழந்தை தாயிடம் கொஞ்சும் குரலைக் கேட்டோம்; ரதியும் மன்மதனும் பேசிக்கொண்ட காதல்மொழிகளைக் கேட்டோம்; முருகன் சிவபெருமான் செவி குளிர மொழிந்த உபதேசித்ததைக் கேட்டோம்; கலைமகள் கவிஞனுக்கு அருளிய ஆசி மொழிகளைக் கேட்டோம்; நாரத முனிவருடைய தம்புரா சுருதியைக் கேட்டோம்; இராவணன் தன் எலும்பை ஒடித்து வீணையாகச் செய்த வாசித்த கானத்தைக் கேட்டோம்; கானப் பறவைகளின் கலகல த்வனியைக் கேட்டோம், கோலக் குயில்களின் குரல் இனிமையைக் கேட்டோம் (க.நி. ப.151) எனத் தோடி ராகத்தைப் பற்றி மேலும் விவரித்து, "அந்த

* வாசன் மகள் லட்சுமி திருமணத்தின்போது திருவாவடுதுறை ராஜரத்தினம் பிள்ளை கச்சேரி இடம் பெற்றது; ரூ.12,000 அன்பளிப்பாக வழங்கினார்கள்.

ராகத்தை அவ்வளவு அற்புதமாக இவர் கையாளகின்றார் என்றால் அவர் மற்ற ராகங்களை எப்படி விந்தைகள் தோன்ற வாசிக்கிறார் என்பதைப் பற்றிச் சொல்ல வேண்டியதில்லை" என்று இசை விமர்சனம் செய்யும் கல்கியின் நடைச்சிறப்பையும் வியக்கா மலிருக்க இயலாது.

'இசைக்கலையின் தவப்புதல்வர்! செம்மங்குடி சீனிவாசய்யர்' பற்றி 'இரண்டு இரண்டு குடமாக இரண்டு கையிலும் எடுத்துக்கொண்டு போய் இறைவனுடைய திருமேனியில் தேனைக் கொட்டி அபிஷேகம் செய்திருப்பார்!! (க.சி.க. ப.166) 'கானக்குயில் திருமதி எம்.எஸ். சுப்புலட்சுமி' பற்றி, "தோடி வர்ணம் ஆரம்பித்தது முதல் கடைசியில் மங்களம் பாடி முடிக்கும் வரையில் கச்சேரி உச்ச நிலையிலிருந்து கீழிறங்கவேயில்லை". 'ராக ஆலாபனத்தில் கரகரப்பிரியா மிக உயர்வாயிருந்தது. சங்கராபரணம் பிரமாதமாயிருந்தது; தடவைக்குத் தடவை இந்த ராகத்தை எம்.எஸ். ஆலாபனம் செய்வது பிரமாதமாகிக் கொண்டுதான் வருகிறது. இந்த ஆலாபனத்தின் போது ஒரு சமயம் ஒரு சுழட்டல் பூர்த்தியாவதற்குள் மூன்று தடவை கரகோஷம் வந்தது என்றால், ஆலாபனம் எவ்வளவு உயர்தரமாயிருந்திருக்குமென்று ஊகிக்கலாம். இடையிடையே கார்வை கொடுத்துக்கொண்டு மேலே படிப்படியாகச் சென்று, மேல் ஸ்தாயியில் வட்டமிட்டு நின்று, சங்கதிகளைப் பொழிந்து, கடைசியில் பஞ்சமத்தைத் தொடும்போது யாருக்கும் புளகாங்கிதம் உண்டாகாமலிருக்க முடியாது. (க.கி.க. ப.180)

இப்படி பட்டம்மாள், கிட்டப்பா, எம்.எல். வசந்தகுமாரி போன்றோரின் இசை இனிமையைத்தன் இசைஞானத்தால் நல்ல தமிழில் அளந்தறிந்தவர் கல்கி.

நல்ல தமிழுக்கான அடித்தளம் எப்படி அமைந்தது என்பதை,

> ...திரு.வி.க. முதலான சான்றோரிடம் பெற்ற தமிழ்ப்புலமையின் பலனாகப் புதுமைத் தமிழைக் கொச்சை - வட்டார சாதி வாக்கிலிருந்து விலக்கி, இலக்கிய விழுப்ப நிலைக்கு உயர்த்திய சிறப்பும் அவரது எழுதுகோலுக்கு உரியது. (ப. 274)

என்று காரண காரியத்தோடு விளக்குகின்றார் இருபதாம் நூற்றாண்டில் தமிழ் உரைநடை வளர்ச்சியை ஆய்வு செய்த முனைவர் மா. இராசமாணிக்கனார். இந்த விளக்கம் கல்கியின் பல்துறை பற்றிய கட்டுரைகளுக்கும் பொருந்தும்.

திரைப்பட விமர்சனம்

கல்கி திரைப்படங்களுக்கு ஆசிரியர் குழுவையும் அழைத்துச் செல்வது வழக்கம். கல்கியின் விமர்சனத்தால் திரைப்படங்கள் உயிர்பெற்றன.

> பக்த நந்தனார் (1935) படத்திற்குக் கல்கி விமர்சனம்:
>
> சுந்தரம்பாளுக்கு வேஷப் பொருத்தம் இல்லை. நீலகிரித் தொடர்போல் இருக்கிறார். . . மொத்தத்தில் இந்த டாக்கியில் குறை என்பதே இல்லாமல் மிகவும் உயர்தரமாய் நடித்திருப்பவர்கள் யாரென்று கேட்டால் தென்னை மரம், எருமைமாடு, ஆட்டுக்குட்டி என்றுதான் சொல்லவேண்டும் (பொ.பு. ப.390)

கல்கியின் விமர்சன ஆற்றலுக்கு, தைரியமும் திறனாய்வுத் திறனும் வழிகாட்டின.

வாசனின் சகுந்தலா படத்தை நீளத்திற்காக விமரிசித்த கல்கி, 'சந்திரலேகா'வைப் பாராட்டுகிறார் (பொ.பு. ப.550). ஔவையார் படத்தை இயக்கி வசனம் எழுதிய கொத்தமங்கலம் சுப்புவுக்கு ஒரு பாராட்டுவிழா நடத்துகின்றார். சம்சாரம் படத்தில் குழந்தைகள் பிச்சை எடுக்கும்போது தாயார் பாடிய பாட்டை இனிமையாக இருக்கிறது என்று ஒரு பத்திரிகை எழுத, அந்த இனிமையில் இடிவிழ (பொ.பு. ப.556) / க.நி. ப.514) எனத் தாக்குதல் செய்கிறார் கல்கி. ஏ.வி.எம். புகைப்படத்தையும் வெளியிட்டுப் பாராட்டி எழுதுகின்றார். ஆக, திரைப்பட விமர்சனத்தைப் பொறுத்தவரையில் கல்கியின் கருத்து தங்கத்தராசு போல் துல்லியமாக இருந்தது. இதை,

> சொந்த நன்மைகளையோ விருப்பு வெறுப்புக்களையோ பொதுவிவாதத்தில் கலக்கும் வழக்கத்தை நான் அடியோடு வெறுக்கின்றேன் (பொ.பு. ப.554)

எனக் கல்கியே தெளிவுபடுத்துகின்றார்.

"ராஜாஜி சினிமாவுக்குப் போகாதீர்கள் எனச் சொல்லிவர, 'ராஜாஜி போன்றவர்கள் ஸினிமா பார்க்கப் போங்கள்' என்று சொல்ல முன்வரும்படியான நல்ல படங்கள் வருவதற்கு முயற்சி செய்ய வேண்டும். ராஜாஜியின் கருத்துக்களைப் பொதுவாக மதிப்பவன் நான். ஆனால் சினிமா பற்றிய அவருடைய கருத்தை மட்டும் நான் ஒப்புக் கொள்ளவில்லை. . . .அவருடைய கருத்தை நான் ஏற்காவிட்டாலும், அவர் மீதுள்ள மரியாதை காரணமாக இரண்டு உறுதிகள் செய்துகொண்டேன். ஒன்றின்படி சிறிது காலம் படம் ஏதும் பார்க்காமல் இருந்தேன். இன்னொன்றின்படி சினிமாத் தணிக்கை ஆலோசனைக் குழுவிலிருந்து விலகிக்கொண்டேன்" (பொ.பு. பக்.557-558) என்னும் கல்கியின் சொற்கள் நம்மோடு பேசி, அவர் யார்? என்பதைக் காட்டுவதோடு, தனக்குப் பிடித்த செய்தியைக் கூட - பதவி கூட மரியாதை காரணமாக ஒதுக்குவது தனிமனித உறவுகளைப் பற்றிச் சிந்திக்கவும் வைக்கின்றது.

அறிஞர் அண்ணாவின் 'ஓரிரவு' நாடகம் பற்றி 'ஓரரிவு' என்ற கட்டுரையில் காணலாம் (07.12.1947). கல்கி தகுதியுடையவர்கள், தகுதியான படைப்புகள் எங்கிருந்தாலும் பாராட்டத் தவறியதில்லை; தயங்கியதுமில்லை.

"தமிழ்மொழியை எவ்வளவு வன்மையாகக் கையாளமுடியும் என்பதற்கு மனோகரனின் இராஜசபைப் பேச்சு நல்ல எடுத்துக்காட்டு" என 'மனோகரா'வின் வெற்றியைக்' குறித்து எழுதினார் கல்கி. மனோகரனின் இராஜசபைப் பேச்சை,

> சொற்பிரவாகம், சொல் வெள்ளம், சொல் பிரளயம், சொல் சண்டமாருதம் என்றெல்லாம் சொன்னாலும் திருப்தி உண்டாகவில்லை. சொல் அம்பு மழை, சொல் குண்டு மழை, அணுகுண்டு சொல்மாரி, எரிமலைச் சொற்பொழிவு என்றெல்லாம் சொல்லக்கூடிய விதமாக மனோகரன் தீப்பொறி பறக்கும் காரசாரமான சொற்களைக் கொட்டித் தீர்க்கிறான் (க.க. I ப.225)

என்று படவிமர்சனம் செய்யும் கல்கியின் கூற்று உண்மை என்பதை அந்தப் படம் பார்த்தவர்கள் அப்படியே ஏற்றுக்கொள்வார்கள். அதனால்தான் தமிழ்த் திரைப்படத் தயாரிப்பு உலகின் அரசராக இருந்த ஏ.வி.எம். கல்கி 'சபாபதி' படத்துக்குச் சிறப்பாக விமரிசனம்

எழுதினார் என்பதை நினைக்க நினைக்க இப்போதும் பெருமையாக இருக்கிறது (பொ.பு.ப.550) என்று 1974இல் எழுதுகிறார்.

சான்றோர்களை அடையாளம் காட்டல்

தமிழுக்குத் தொண்டு செய்த சான்றோர்கள் - படைப்பாளிகள் யாராக இருந்தாலும் அவர்களின் சாதனைகளையும் இழப்பையும் கல்கி தன் எழுத்துக்களில் பதிவு செய்கின்றார்.

'வீழ்ந்த ஆலமரம்' என்ற கட்டுரையில் தமிழ்த்தாத்தா பணியை நினைவுகூர்ந்து, தமக்கு அவருடன் ஏற்பட்ட அறிமுகத்தையும், என் சரித்திரம் எழுதத்தூண்டிய முறையையும் எழுதுகின்றார்.

"விசாலமாகத் தழைத்து விழுதுவிட்டு வளர்ந்திருந்த ஆலமரம் வீழ்ந்ததைப் போல் மகாமகோபாத்தியாய டாக்டர் உ.வே. சாமிநாதய்யர் நம்மைப் பிரிந்து சென்று விட்டார். திருவட்டீசுவரன் பேட்டை 'தியாகராஜ விலாச'த்தின் மேல் மாடியில் தமிழ்த்தாத்தா இன்று இல்லை. விசு பலகையில் படுத்தவண்ணம் ஓலைச் சுவடியையோ புத்தகத்தையோ பார்த்துக் கொண்டிருக்கவில்லை. சீடப்பிள்ளைகளிடம் எழுதுவதற்கு விஷயம் சொல்லிக் கொண்டிருக்கவில்லை என்பதை நினைத்தால் நெஞ்சை என்னமோ செய்கிறது. தமிழ்த்தாத்தா போய்விட்டார்; அவருடைய ஸ்தானம் இனி எக்காலத்தில் பூர்த்தியாகப்போகிறது? (க.சி.க. ப.105)

தமிழ்த்தாத்தாவின் 'என் சரித்திரம்' முழுதும் படித்தவர்கள், மேற்காட்டிய பத்தியைப் படிக்கும்போது கல்கியின் எழுத்தாற்றல் அவர்களை அழச் செய்துவிடும்.

"டி.கே.சிதம்பரநாத முதலியார் உம்மைப் பற்றிச் சொல்லியிருக்கிறார்' என்றார். 'தமிழ்ப்பாட்டி' என்ற தலைப்பில் கல்கி எழுதியிருந்த கட்டுரையையும் 'தப்பிலிகள்' என்ற கதையையும் குறிப்பிட்டு தமிழ்த்தாத்தா திருப்பித் திருப்பித் தமது பாராட்டுதலைத் தெரிவித்தார். தாம் ரசித்த சிலசில வாக்கியங்களையும் அப்படியே சொன்னார். எனக்கு இதெல்லாம் ஒருபக்கம் சந்தோஷமா யிருந்தாலும், இன்னொரு பக்கம் சங்கடமாயிருந்தது" என்று 'வீழ்ந்த ஆலமரம்' பற்றி

எழுதும்பொழுது தனக்கும் தமிழ்த்தாத்தாவுக்கும் இடையே நிகழ்ந்த உரையாடலை நினைவு கூர்கின்றார். கல்கியின் எழுத்தாற்றலை அவருடன் அப்போது நேரடி அறிமுகம் இல்லாதிருந்தவர்கள் அடையாளம் கண்டதை மேற்காட்டிய சான்றுவழி நாமும் அறிகின்றோம்.

'அறுபத்து மூன்று நாயன்மார்கள் வானுலகில் வந்திருந்து எங்களுடன் சேர்ந்து அறுபத்து நால்வராக ஆகிவிடுங்கள்' என்று அழைத்திருப்பார்கள்.

பன்னிரண்டு ஆழ்வார்களும் விஜயம் செய்து 'எங்களுடன் பதின்மூன்றாவது ஆழ்வாராக அமருக: என்று கூறியிருப்பார்கள் (க.க. II ப.224)

'புத்த பிஷுக்களும் சமண முனிவர்களும் கிறிஸ்துவ தபோதனர்களும் வந்து நல்வரவு கூறியிருப்பார்கள்'

இப்படி திரு.வி.க.வின் இழப்பை வெளிப்படுத்துகின்றார். 'தமிழை ஒன்றுக்கும் உதவாத மொழி என்று கற்றவர்கள் ஆங்கிலம் பேசிவந்த காலத்தில் மேடையிலும் எழுத்திலும் தூய தமிழைப் போற்றியும் எழுதியும் வந்த திரு.வி.க.வின் பணிகளை நினைவுகூர்ந்து போற்றிப் புகழ்கின்றார்.

''மறைந்த மாமலை!'யில் மறைமலையடிகளின் தமிழ்ப்பணியைப் பேசுகின்றார். "தமிழும், தமிழகமும் சைவ சமயமும் உள்ளவரையில் மறைமலையடிகளின் அரிய தொண்டின் பெருமை குன்றிலிட்ட விளக்காக என்றென்றும் ஒளிவீசிக் கொண்டிருக்கும் என்பதில் ஐயமில்லை" (க.க. II ப.234) என அவரைப்பற்றி ஒரு சிறு வரலாறு படைத்துவிடுகின்றார் கட்டுரையில்.

வாசனின் தாயார் ஸ்ரீபாலாம்பாள் இறந்தபொழுது வாஸனைப் பற்றிப் புகழ்ந்து எழுதுகின்றார். "எப்போதாவது ஸ்ரீ வாஸன் தமது இளம்பிராய வரலாற்றை எழுதினால் அது தாய்மையின் அற்புதச் சக்தியை விளக்கும் உணர்ச்சி நிறைந்த இலக்கியமாகும் (க.க. II ப.174).

மேலும் தமிழ்நாட்டில் முதன்முதலாக ஒரு பத்திரிகையை அரை லட்சம் பேருக்கு மேல் வாங்கிப் படிக்கும்படி செய்தவர். அவர் சொந்த வாழ்க்கையைப் பற்றி அறிந்தவர்கள் அவர்

அடைந்துள்ள வெற்றிக்கெல்லாம் முதல் காரணம் அவருடைய தாயார் ஸ்ரீபாலாம்பாள் அம்மாள் என்பதை அறிவார்கள்" என்று, தாம் 10 ஆண்டுகள் பணிசெய்த விகடன் ஆசிரியரின் தாயாருக்கு மரியாதை செய்கின்றார்.

'முதல் எழுத்தாளர்' என்று வ.ரா. வைக் காட்சிப்படுத்தும் கல்கி 30 ஆண்டுகளுக்கு முன்பு திருச்சிராப்பள்ளி பெரிய கடைத்தெருவில் ஒரு கட்டடத்தின் மச்சில் இலவச வாசகசாலையில் தாம் 'லோகமான்ய திலகர் வழக்கு' என்னும் ஆங்கில நூலைப் படித்துக் கொண்டிருந்த போது நடைபெற்ற சம்பவத்தை நினைவுகூர்ந்து நம் கண்முன் வ.ரா.வை நிறுத்துகிறார்.

"அறிவும் ஆற்றலும் ஆத்திரமும் தன்னம்பிக்கையும் அவருடைய முகத்தில் சுடர்விட்டுப் பிரகாசித்தன. பொதுவாக நல்ல அறிவாளி என்றும், ஆனால் ஏதோ கோபமாயிருக்கிறார் என்றும் தோன்றியது. பின் 'ஓகோ! இந்தப் பிள்ளையாண்டான் திலகர் பிரசங்கம் படிக்கிறான். திலகர் பிரசங்கம்! இங்கிலஷை 'இம்ப்ரூவ்' செய்து கொள்வதற்காகப் படிக்கிறான். இந்தப் புத்தகமே தமிழில் இருக்கட்டும், படிக்கமாட்டான்", (க.சி.க. ப.23) இப்படி வ.ரா. வுக்கும் வாசகசாலை மானேஜருக்கும் நிகழ்ந்தவற்றைப் பற்றிக் குறிப்பிட்டு "அன்றைக்கு ஸ்ரீ வ.ரா. அவர்களைப் பற்றி நான் தெரிந்துகொண்டது அவ்வளவுதான். ஆனால் அதுவே அப்போதைக்குப் போதுமானதாயிருந்தது. என்றைக்கும் மறக்கமுடியாதபடி வரா. என் மனத்தில் பதிந்துவிட்டார்" என்று 18.07.1948இல் வ.ரா. மணிவிழாவில் அவருக்குப் பொற்கிழி அளிக்க நிதி திரட்டும்பொழுது எழுதும் கல்கியின் பெருந்தன்மையையும் நடைச்சிறப்பையும் அறியலாம்.

"பாரதியாரை வெளிச்சத்துக்குக் கொண்டுவந்து, அந்த மகாகவிக்கு முதன்முதல் மரியாதை செலுத்திய இருபெரும் எழுத்தாளர்கள். . .வ.ரா.வும் கல்கியும்" (க.நி. ப.523) என்னும் பகீரதன் மதிப்பீடும் அவர்களின் படைப்பைத் துல்லியமாகக் காட்டும். கல்கியும் சிறுகதைப் போட்டி நடத்தும்போது வ.ரா. நடுவராக இருந்து 2000க்கும் மேற்பட்ட சிறுகதைகளை நான்கைந்து மாதங்கள் பகீரதன் படித்துக் காட்ட தெரிவு செய்ததும் ஒரு படைப்பாளி/எழுத்தாளர் மற்றொரு படைப்பாளிக்கு / எழுத்தாளருக்குச் செய்த மரியாதையாகும்.

திரு.வி.க.

'தமிழ்த்தந்தை திரு.வி.க.' என்னும் கட்டுரையில் "ஒரு சமயம் திரு.வி.க.வை, 'ராயப்பேட்டை முனிவர்' என்று நான் குறிப்பிட்டிருந்தேன். அரசியல் உலகம், பத்திரிகை உலகம், தொழிலாளர் உலகம் ஆகிய மூன்று சங்கடமான உலகங்களில் சஞ்சரித்தபோதிலும் அவருடைய சொந்த வாழ்க்கை முனிபுங்கவரின் உத்தம வாழ்க்கையாகவே இருந்தது.

அவருடைய தோற்றம் தூய்மையே உருக்கொண்டது போல இருக்கும். வெண்மையான எளிய கதர் ஆடை அணிவார். சநாதன ஹிந்து தர்மத்தில் அவருடைய ஆழ்ந்த பற்றுக்கு அடையாளமாக அவருடைய உச்சிக்குடுமி விளங்கும். அவர் எவ்வளவு புரட்சிகரமான சீர்திருத்த கருத்துக்களை வெளியிட்டபோதிலும், அவற்றுக்கெல்லாம் மூலவேர் சநாதன ஹிந்து தர்மத்திலேதான் நிலைபெற்றிருக்கும் க.சி.க. ப.14) எனச் சொல்லோவியம் தீட்டிச் சரியாக அறிமுகம் செய்கின்றார் வாசிப்பாளர்களுக்கு.

"நீ ஹிந்து மதத்தைச் சேர்ந்தவன்; ஹிந்து தெய்வங்களிடம் நீ பக்தியுடனிருக்க வேண்டும்; ஹிந்து சமூகத்தில் பற்றுக் கொண்டிருக்க வேண்டும்; ஆனால் ஹிந்து கோவில்களுக்குள் மட்டும் வரக்கூடாது என்றால் யாருக்குத்தான் ஆத்திரம் உண்டாகமால் இருக்கும்? அந்த நிலைமையில் சிலர் வேறு மதங்களுக்குப் போய்விடுவதில் கொஞ்சமாவது வியப்புண்டா? கிடையவே கிடையாது" (க.சி.க. ப.139) எனக் காரண காரியத்தோடு கூடிய அணுகுமுறையைக் காட்டுகின்றார். ஸ்ரீரங்கம் ரங்கநாதர் ஆலயம், மதுரை மீனாட்சியம்மன் கோவில், கும்பகோணம் கும்பேசுவர சுவாமி கோயில் ஆகிய கோயில்களுக்குத் தான் சென்றுவந்த அனுபவங்களை 'என் ஆலயப் பிரவேசம்' எனத் தலைப்பிட்டு எழுதுகின்றார். "அவர்களுடைய நிலைமையில் நான் இருந்திருந்தால் கிறிஸ்தவ மதத்துக்கோ இஸ்லாம் மதத்துக்கோ அல்லது நாஸ்திக மதத்துக்கோ எப்பொழுதோ போயிருப்பே னென்று தோன்றிற்று" என்றும் "தீண்டாமை ஒழிந்தாலொழிய நமது சமூகம் நாசமாக வேண்டியதுதான் என்று நிச்சயம் ஏற்பட்டது" (க.சி.க. ப.138) என்றும் சிறந்த பத்திரிகையாளராக நின்று தன் கருத்தை அச்சமின்றி எடுத்தெழுதுகின்றார்.

கதம்பம்

'வரதட்சணையும் வைதிகர்களும்' (ஆனந்தவிகடன், பக். 1032-1037, 1932) என்னும் கட்டுரையில் கல்கி தீர்வாகத் குறிப்பிடுவது,

> குடும்ப சொத்தில் பெண்களுக்கு சமபாகம் கொடுத்து விடுங்கள். அப்போது வரதட்சணையும் அதனுடைய தாயாதிகளான இன்னும் பல தீமைகளும் தாமே ஒழிந்துபோகும். அது செய்யாதவரையில் வரதட்சணையை ஒழிக்க வேண்டுமென்று நீங்கள் எவ்வளவு அழுத்தமாகத்
> தீர்மானித்தாலும் அது மோர்க்குழம்புத் தீர்மானத்திலும் மோசமான விளக்கெண்ணெய்த் தீர்மானமாகவே முடியும்.

இது 'வெட்டு ஒன்று துண்டு இரண்டு' எனச் சிக்கலுக்கு விடைதேடும் அவருடைய எழுத்துக்குச் சான்றாகும். 'தமிழகத்தில் பெண் தலைமை' என்ற கட்டுரையில் (ஆ.வி., பக். 945-956, 1931) டாக்டர் பிச்சைமுத்து அம்மாள் பற்றிப்பாராட்டி எழுதிய கல்கி, "அந்த அம்மாளிடம் எனக்குப் பிடிக்காத விஷயம் ஒன்றே ஒன்று; அது என்ன தெரியுமா? அவருடைய பெயர்தான்" எனக் கட்டுரையை முடிப்பது அம்மாவின் குணத்தைப் புகழ்வதோடு, பெயர் வைக்கும்போது காமாசோமாவென பெயர் வைக்கக்கூடாது என்றும் எண்ணத் தூண்டுகிறது.

பரீட்சை என்னும் பாதகம்

> எந்தவிதமான கல்வி முறையிலும் ஏதோ ஒருவிதமான பரீட்சை அவசியமாயிருக்கலாம். ஆனால் அந்தப் பரீட்சை குழந்தைகளின் இளம் உள்ளத்தில் பீதியை உண்டாக்கக்கூடாது. அவர்களுடைய மூளையைப் பலவீனப்படுத்தக்கூடாது. அவர்களுடைய உடல்நலத்தைப் பாதிக்கக்கூடாது; பரிட்சையில் தேறாததற்காகத் தற்கொலை செய்துகொள்ளத் தூண்டும் சூழ்நிலையும் கூடாது (க.க. II ப.61)

எனக் குழந்தைகளின் நலன் பற்றிப் பேசுகின்றார்.

நான் படித்தது பச்சைப் புத்தகம்

பட்டிக்காட்டு மாப்பிள்ளை மாமனார் வீட்டுக்குப் போனான். மாப்பிள்ளை படித்தவர் என்பதால் எல்லோரும் 'இந்தப்

புத்தகத்தைப் படித்துக் காட்டுங்கள்' என்று கேட்க, 'நான் எங்களூரில் படித்தது பச்சை அட்டை போட்ட புத்தகம்; இது நீல அட்டைப் புத்தகமாயிருக்கிறதே! இதைப் படிக்க இயலாது என்று திருப்பிக் கொடுத்துவிட்டான்' என்று கதை சொல்லி, "ஆரம்பப் பாடசாலை உள்ள ஒவ்வொரு கிராமத்திலும் ஒரு புத்தகசாலை நிறுவப்பட வேண்டும். அப்படி நிறுவிய புத்தகசாலைக்குச் சர்க்காரே ஒவ்வொரு ஆண்டிலும் வெளியாகும் நல்ல தமிழ்ப் புத்தகங்களை வாங்கி அனுப்பி வைக்கவேண்டும்" (க.க. II ப.72) எனப் படிக்கும் பழக்கத்தை வளர்க்க அரசு ஆவன செய்ய வேண்டுகிறார்.

''சிறை அனுபவங்களைக் கலந்து அவர் எழுதிய கட்டுரைகளின் மூலம் நூற்றுக்கணக்கான தமிழ்நாட்டு இளைஞர்களைக் காங்கிரஸ் பணியில் ஈடுபடச் செய்து தயங்காமல் சிறை செல்ல வைத்த பெருமை அவருக்கு உண்டு" (எ.அ.ப. 143). இதைவிட அவர் எழுத்தாற்றலுக்கு வேறு சான்றும் வேண்டும்கொல்!

ஒத்துழையாமை இயக்கம் நாடெங்கும் பரவ, சட்டசபையைப் புறக்கணித்தல், வழக்கறிஞர்கள் தன் தொழிலைத் துறத்தல், மாணவர்கள் கல்விக்கூடங்களை விட்டு வெளியேறுதல் ஆகியவற்றைச் செயல்படுத்தத் தொடங்கினர். ஜனவரி 1922 முதல் ஜனவரி 1923 வரை சட்ட மறுப்பு இயக்கத்தின் போது கல்கி முசிரி சப் ஜெயில், திருச்சி மற்றும் கடலூர் சிறைச்சாலையில் காலம் கழிக்கின்றார். 'சிறைவாச ஞாபகங்கள்' என்று எழுதுகின்றார்.

"கைதிகளின் இரண்டு காலிலும் இரண்டு இரும்புக்காப்பு, அவைகளில் கோர்த்திருந்த இரண்டு நீளச் சங்கிலிகளையும் எடுத்து இடுப்பில் சொருகிக் கொண்டோ அல்லது கையில் பிடித்துக் கொண்டோதான் நடக்க வேண்டும். அவை ஒன்றொடொன்று இடிக்கும்போது பெண்களின் பாதசரம் போல் கலீர் கலீர் என்று ஒலிக்கும்". (க.க. ப.9) இப்படி துன்பத்திலும் நகைச்சுவையை இழையோடவிடுகிறது அவர் எழுத்து.

"ஸ்நானம் செய்ய என்ன வழி?' என்று வார்டரைக் கேட்டேன். 'ஸ்நானமா? ஸ்நானம், பூஜை, புனஸ்காரம், புண்ணியவாசனம் எல்லாம் ஆத்துக்குப் போன பிறகுதான்' என்று

வார்டர் பிராமண பாஷையில் பரிகாசம் செய்தான். மறுநாள் காலையில் என்னுடைய பழைய நண்பர் . . . 'இங்கே தலையில் மயிர் நிறைய வைத்துக் கொண்டிருந்தால் தொந்திரவு. கொஞ்சமாய் உச்சிக்குடுமி வைத்துக் கொண்டால் போதும்' என்றார். சிறையில் தலைமயிரை அடியோடு எடுத்து மொட்டையடிக்க வேண்டுமென்பது கட்டாயமில்லை என்றும், ஆனால் சுகாதாரத்தை முன்னிட்டு நிறையை மயிர் வைத்துக் கொள்ளுதல் நல்லதல்லவென்றும் சொன்னார். என் தாயார் அருமையாக எண்ணெய் தடவி வாரி வளர்த்த என் தலைமயிருக்கு வரப்போகும் கதியை நினைந்து இரங்கினேன்'' (ப. 11) என அந்த வாரக் கட்டுரையை முடிக்கின்றார். வாசிப்பாளர்களின் உளவியலை உணர்ந்து வைத்திருந்தார் எழுத்தாளர் கல்கி. எந்தச் செய்தியைச் சொன்னாலும் அதில் உணவுக்கு உப்பு சேர்ப்பது போல சிறிது நகைச்சுவையையும் தூவி வைத்தார்.

"மூத்தலைபுரத்திலிருந்து சமுத்திரபுரிக்குக் கைதியாகப் போனதைப் போல் அவ்வளவு சந்தோஷமான பிரயாணம் செய்ததே கிடையாது. முதலாவது மூட்டை முடிச்சு பெட்டி படுக்கை முதலியவை ஒன்றுமில்லை. . . இரண்டாவது டிக்கட் வாங்கும் பிரமப்பிரயத்தனம் இல்லை. மூன்றாவது ரயில் வந்து நின்றதும் உள்ளேயிருப்பவர்கள் வெளியே பிடித்துத் தள்ள வெளியேயுள்ளவர்கள் உள்ளே பிடித்துத் தள்ள மல்யுத்தம் புரிந்து ரயிலேறும் அபாரப் பிராயாசையும் கிடையாது" (ப.29) என எள்ளல் சுவையோடு எடுத்தெழுதுகின்றார்.

இரண்டாவது சிறைவாசம் (செப்டம்பர் 1930 முதல் மார்ச் 1931 வரை) கோயம்புத்தூர் சிறையிலும் (3½ மாதம்) கள்ளிக்கோட்டைச் சிறையிலும் (2½) மாதம் சட்டமறுப்பு இயக்கத்தின்போது செல்கின்றார். "சுமார் ஒன்பது மாதங்களுக்கு முன்பு . . .எவ்வாறு கை, கால், செவி, மூக்கு, சகல அவயவங்களுடன் முழுமையாகச் சென்றேனோ அதேவிதமாக அவ்வுறப்புக்களில் ஒன்றைக் கூட இழந்துவிடாமல் பூரண தேகத்துடன் திரும்பி வந்து சேர்ந்தேன். . . சுதந்திர தேவியைக் கொண்டு வந்தேனில்லை; ஆனால் என் உயிரை ஜாக்கிரதையாகக் காப்பாற்றிக் கொண்டு வந்தேன்" (ப.40 & 42)

புதிய சிறைவாச ஞாபகங்கள் - 1 என்பதில் "சிறையில் புதிய புத்தகம் ஒன்றும் நான் எழுதவில்லை. இது தமிழர்களுக்குச்

சந்தோஷமான செய்தியல்லவா? இதன் பொருட்டு அவர்கள் யாருக்காவது நன்றி பாராட்டுவதென்றால், எனக்கும் பேனாவுக்கும் காகிதம் கொடுக்க மறுத்த அதிகாரிகளுக்கும்தான் நன்றி செலுத்த வேண்டும்" (ப. 54) என்று, தான் சிறையில் பட்டபாட்டைச் சொல்வதோடு, வாசிப்பாளர்களையும் தம் நடையால் ஈர்த்துக்கொள்ளும் ஆற்றலுடைய எழுத்துநடை கல்கிக்குரியது என்பதும் தெரிகின்றது.

வானொலிப் பேச்சு - பத்திரிகை நடை

ஜூன் 16, 1938 சென்னை மாகாணப் பிரதம மந்திரியாக ராஜாஜி இருந்தபொழுது சென்னை வானொலி நிலையம் தொடங்கப்பட்டது.

> 20-ஆம் நூற்றாண்டின் மகத்தான விஞ்ஞான அற்புதங்களுக்குள்ளே ரேடியோ அற்புதமும் ஒன்று என்று நேயர்களுக்குச் சொல்ல வேண்டியதில்லை. லண்டனிலே ஒருவர் பாடுகிறதாம், அதைச் சென்னையிலள்ள நாம் கேட்கிறோம். இத்தகைய ஆச்சரியமான சாதனத்தின். . . ரேடியோ கருவிகள் விதேசி என்பதைக்கூட நாம் பொருட்படுத்துகிறோம் இல்லை. அறிவைப் பரப்புகிற சாதனங்களைப் பொறுத்தவரையில் நாம் சுதேசி விரதத்தைக் கூட கைவிடத் தயாராகிறோம் (பொ.பு. ப.465).

என 26.6.38 ஆனந்தவிகடனில் எழுதுகிறார் கல்கி. நாட்டு நடப்பை எழுதுவது போல் இருந்தாலும் கடைசியில் தன் எண்ணத்தையும் எழுத்தில் வடித்துவிடுவது கல்கியின் தனிச்சிறப்பு.

சென்னை வானொலி தொடங்கி ஏழாம் நாள் (23.6.1938) கல்கி பேச்சு ஒரு கதையுடன் தொடங்குவதைப் பார்ப்போமா?

'ஒரு நாள் காஞ்சிபுரம் உபய வேதாந்த தாத்தையங்கார் ஸ்வாமிகள், அவருடைய வேலைக்காரன் குப்பனைக் கூப்பிட்டு, 'அடே, குப்பா, நீ உடனே ஸ்ரீ பெரும்புதூர் திருவேங்கடாச்சாரி அய்யங்கார் ஸ்வாமி வீட்டுக்கு ஓடிப்போய் திருகுடந்தை திரு. நாராயண அய்யங்கார் ஸ்வாமி திருக்கோயில் ஆராதனைக்குப் போனபோது திருப்பாசி வழுக்கவே திருவடி தவறி விழுந்தார் என்று

சொல்லு என்பதாகத் திருவாய் மலர்ந்தருளினார். 'ஆகட்டும் சாமி!' என்றான் குப்பன் . . . என்னடா சொல்வாய்? . . அதற்குக் குப்பன்,

தெரியதா சாமி! கும்பகோணத்துப் பாப்பான்
குட்டையிலே விழுந்தான்னு சொல்வேன் என்றான் (ப. 465)

நேயர்களே! குப்பன் சொன்ன முறை சிறுகதை லட்சணத்துக்குப் பொருத்தமானது.

இப்படிக் கதையுடன் தொடங்கும் கல்கி நடை பளிச்சென்று சொல்ல வந்ததைச் சொல்ல வேண்டும் எனக் கூறுகின்றார். கல்கியை அவதார புருஷராகக் கண்ட சாமி,

> தமிழில் எழுதலாம், எளிய நடையில் எழுதலாம்,
> ஹாஸ்யமாக எழுதலாம், அரசியலைப் பற்றி எழுதலாம்
> சிற்பங்களைப் பற்றி எழுதலாம், விஞ்ஞானம் ஆத்மஞானம்
>
> முதலிய் சகல ஞானங்களைப் பற்றியும் புரியும்படி
> லாவகமாக எழுதலாம்; கற்றவரும் மற்றவரும் படித்து
> ரஸிக்கும் முறையில் எழுதலாம் என்று வழிகாட்டியவர் கல்கி . .

எனக் குறிப்பிடுவது முற்றிலும் பொருத்தம் என்பதை அவரது படைப்புகள் வழி நாம் அறிந்து கொள்கிறோம்.

எந்தச் செய்தியைச் சொன்னாலும் எளிமை, தெளிவு, உவமை, பொருத்தமான பழமொழி, நாட்டுநடப்பு, கல்கியின் கருத்து என்பன போன்ற செய்திகளைச் சேர்த்துக் குழைத்துச் சொல்வதில் கல்கிக்கு நிகர் கல்கிதான். இதே நடைதான் கல்கியின் எழுத்துப்பணிக்கும் அமைந்தது. அரசியலாகட்டும், சிறையிலாகட்டும் எங்கும் எதிலும் இனிய எளிய நடையைப் பின்பற்றினார்.

மகாத்மா காந்தியின் இறப்பை 'சத்தியம் செத்ததோ?' என்ற தலைப்பில் எழுதும் கல்கி 'எத்தனை காலம் இனி வாழ்ந்திருந்தாலும் 1948ஆம் வருஷம் ஜனவரி மாதம் 30ஆம் தேதி வரையில் இருந்தது போல் இனி நம் வாழ்க்கை ஒருகாலும் இராது' என்றும்,

"காந்தி சொன்னார்; கதர் அணிந்தோம். காந்தி சொன்னார்; காங்கிரஸில் சேர்ந்தோம். காந்தி சொன்னார்; மதுவிலக்குப் போர் நடத்தினோம். காந்தி சொன்னார்; தீண்டாமையை ஒழித்தோம்.

காந்தி சொன்னார்; 'ரகுபதி ராகவ' பாடினோம். காந்தி சொன்னார்; சட்டசபையைப் பகிஷ்கரித்தோம். காந்தி சொன்னார்; மஞ்சள் பெட்டியில் வோட்டுப் போட்டோம்* காந்தி சொன்னார்; சிறை புகுந்தோம்; அடிப்பட்டோம்; நூல் நூற்றோம்.

காந்தி ஒரு விஷயத்தைப் பற்றி ஒன்றும் சொல்லவில்லையென்றால் அதைப்பற்றி அவர் என்ன சொலக்கூடும் என்று யோசனை செய்தோம்" (க.சி.க. ப. 190) என்றும், 'மாதருக்குள் ஒரு தெய்வம்' பற்றி சித்திரிக்கின்றார். காந்தி சொல்லுக்காகப் பாதியில் பள்ளிப் படிப்பைத் துறந்த கல்கி, காந்தி பற்றி எழுதியுள்ள அனைத்தும் அவருக்கும் பொருந்தும்.

மலேரியா சுரம் வந்ததும் காந்திஜியை வெள்ளை அரசாங்கம் விடுதலை செய்தது. இதுகுறித்து 1944இல் கல்கி எழுதிய தலையங்கத்தின் ஒரு சிறுபகுதி;

அரசியல்

> கடைசியாக மலேரியா சுரம் வந்து சிறையின் பூட்டை உடைத்தது. மகாத்மாவை விடுதலை செய்தது. நாற்பது கோடி மக்களாலும் அவர்களுடைய தலைவர்களாலும் பத்திரிகைகளினாலும் செய்யமுடியாத காரியத்தைக் கேவலம் கொசுக்கடி செய்து முடித்தது.
>
> இது நமக்குப் பெருமை தரும் விஷயம் அன்று; நாம் மகிழ வேண்டிய நிலைமையும் அன்று (பொ.பு. ப.578)

இப்பகுதி சிரிக்க வைப்பதுபோல் தோன்றினாலும் சிந்திக்கவும் வைக்கின்றது. கடினமான செய்திகூட கல்கி எழுத்தால் எளியதாகப்படுகின்றது. கல்கியின் நடைச்சிறப்பும் அதற்குக் கைகொடுக்கின்றது.

---

* காங்கிரஸ் - மஞ்சள் பெட்டியிலும்

ஜஸ்டிஸ் கட்சி - வெள்ளைப் பெட்டியிலும் ஓட்டுப் போட்டார்கள். அப்பொழுது நிறைய கட்சிகள், சின்னங்கள் இல்லை. காலப் போக்கில் சின்னங்களை அந்தப் பெட்டியில் ஒட்டினார்கள்.

இசை

கிட்டப்பாவின் சங்கீதம் பற்றிச் சொல்லோவியம் தீட்டும் கல்கி, "கிட்டப்பாவின் சாரீர மேன்மையைப் பற்றிச் சொல்லவேண்டியதில்லை. மேல் ஸ்தாயியில் அநாயசமாக சஞ்சரிக்கும் சக்தியுடையது; பனிக்காலத்தில் காலைவேளையில் பவளமல்லிகைச் செடியிலிருந்து பனித்துளிகளும் புஷ்பங்களும் கலகலவென்று உதிர்வது போல் சங்கதிகளை உதிர்க்கும் இயல்புவாய்ந்தது; கேட்போர் செவியையும் உள்ளத்தையும் ஒருங்கே பரவசப்படுத்தும் மோஹன சக்தி பொருந்தியது. அந்த சாரீரம் இசைத்தட்டுக்கு எடுத்ததாயும் அமைந்தது இன்னும் விசேஷமாகும்" (க.கி.க. ப.190) என்று சொல்லும் செய்தியை வாங்கும்போதே பவளமல்லிகை உதிரும் புலர்காலைப்பொழுதும் நம் கண்முன் நிற்கிறது.

"மயக்கமில்லாத எவருக்கும் புரியக்கூடிய தெறிப்பான நடை.. தாம் சொல்ல வேண்டிய கருத்தைப் படிப்பவர்களுக்கு நேராகக் கிட்டும்படி செய்துவிடுவதில் கல்கி மிகவும் சமர்த்தர். அகராதியின் துணையோ, உரையாசிரியர்களின் உதவியோ கல்கியின் எழுத்துக்களைப் படிக்கத் தேவையில்லை" என்னும் முருக சுப்பிரமணியன் கூற்று, அவரது எந்தக் கட்டுரையைப் படித்தாலும் விளங்கும் (எ.க. ப.21)

சிறை

"பெரிய மனிதர்களும் உத்தியோகஸ்தர்களும் வருஷந்தோறும் அந்தந்த 'ஸீஸன்' தவறாமல் உதகமண்டலம், கொடைக்கானல், குற்றாலம், பங்களூர் முதலிய சுக வாசஸ்தலங்களுக்குப் போகிறார்களல்லவா? அதுபோலவே சிறைக்குப் போகும் ஒவ்வொரு 'ஸீஸ'னுக்கும் தவறாமல் வந்து சேரும் நண்பர்கள் சிலர் உண்டு" (க.கா.ப. ப.79) என்று உவமைவழி நாட்டுநடப்பைச் சொல்லில் தீட்டிய கல்கி ஸ்ரீ சதாசிவம் மூன்றாவது தடவையாக வந்திருப்பதைக் குறிப்பிடுகின்றார்.

"கல்கி கிருஷ்ணமூர்த்தி அவர்களுடைய மூச்செல்லாம் அரசியல், நாட்டு விடுதலை இயக்கத்தில் அவரை இரண்டறக் கலந்திருந்தார். எனவே அரசியல் கட்டுரைகளை எழுதித் தமிழ்மக்களிடம் ஓர் எழுச்சியையும் விழிப்பையும்

உண்டாக்கிவிடுவது என்று அவர் உறுதிகொண்டார். அரசியல் கட்டுரையையே ஆசிரியர் எழுதும் தலைப்புக் கட்டுரையாக வெளியிட்டார்" (த.இ. ப.41) என்பார். 1974இல் சென்னைப் பல்கலைக்கழகத்தில் கல்கி அறக்கட்டளைப் பொழிவு நிகழ்த்திய சோமலெ.

ஜிடி. நாயுடுவின் 'நான் கண்ட உலகம்' என்ற நூலை, "நூற்றிருப்பத்தெட்டு பக்கமுள்ள இந்த நூலுக்கு எடைக்கு எடை தங்கம் கொடுத்து வாங்கலாம். தங்கத்தைவிட விலை உயர்ந்த பிளாடினம், யுரேனியம், தோரியம் முதலிய உலோகங்களை எடைக்கு எடை கொடுத்தும் வாங்கலாம் அல்லது புத்தகத்தில் குறிப்பிட்டிருக்கும் ரூ.1.10.0 கொடுத்தும் வாங்கிப் படிக்கலாம்" (க.சி.க. ப. 58) என நாயுடுவின் புத்தகத்தை எடைபோடும் கல்கி, முடிக்கும்போது நகைச்சுவையோடு எழுதி, படிக்கத் தூண்டும்விதத்தில் முடிக்கின்றார்.

நின்றது

சாதாரண செய்திகூட கல்கி நடையால் நினைவில் நிற்கும் என்பதற்கு ஒரு காட்டு:

> சில நாளைக்கு முன் பிராட்வே முனையில் சற்றுநேரம் நான் நின்று கொண்டிருக்க நேரிட்டது. அங்கே என்னை ஒருவரும் உட்காரச் சொல்லவில்லை யாதலாலும், வண்ணாரப்பேட்டை டிராம் வண்டியை நான் பிடிக்க வேண்டி இருந்த தாலும் அவ்வாறு நின்று கொண்டிருந்தேன் (பொ.பு. ப.613)

'சில சமயம் பல காரணங்களை முன்னிட்டு மனத்தில் உள்ள உணர்ச்சிகளை அடக்கி, வெந்நீரை விளாவிக் குளிரச்செய்து பத்திரிகையில் எழுத வேண்டியிருக்கிறது' என விட்டலபுரம் வேங்கடாச்சாரிக்கு கல்கி எழுதியுள்ளார். இப்படிச் குளிரச் செய்து எழுதியதே தமிழ்நாட்டைக் கலக்கியது என்றால் அப்படியே எழுதியிருப்பார் என்றால்?'. அவர் எழுத்தை ஏப்ரல் 2001 மார்ச்சு மாதம் வெளிவந்த காலச்சுவடு இதழ் 34 (பக். 25-3) சுட்டிக் காட்டியதை ஈண்டு நினைவு கூர்வது பொருத்தம்.

தாழ்த்தப்பட்டவர்களின் ஆலயப் பிரவேசத்தை எதிர்த்து காந்திக்கு சங்கராச்சாரியார் ஒரு கடிதம் எழுதினார். அதைக்

கண்டித்து கல்கி ஆனந்தவிகடனில் ஒரு தலையங்கம் எழுதினார். அதில் சங்கராச்சாரியாரை,

> நீங்கள் லோக குருவும் அல்ல . . . ஒரு மதத்தினரின் குருவும் கூட அல்ல. ஒரு சாதியினரின் குரு கூட அல்ல. வெறும் ஒரு மடத்தின் நிர்வாகி. எனவே நீங்கள் அந்த வேலையை மட்டும் பார்த்துக் கொண்டு இருங்கள் (காலச்சுவடு, ப.31)

என்று கடுமையாக விமர்சித்து எழுதியிருந்தார். இப்போது அப்படி ஒரு தலையங்கத்தை வெகுசனப் பத்திரிகையில் பார்க்கவே முடியாது எனப் பாராட்டியுள்ளது.

மாயூரம் தேசபக்தர் சாமி அய்யங்கார் தீவிர முயற்சி செய்து கல்கியை மந்திரியாக்க நினைத்தார். ஓமந்தூர் ரெட்டியாரும் அதே செய்தியை வற்புறுத்தினார். கல்கி 'நான் மந்திரி பதவியில் இருந்து மக்களுக்குப் பணி செய்வதை விட மிகச் சிறப்பாகப் பத்திரிகை ஆசிரியர் பதவியில் இருந்து பணியாற்று முடியும் என்று நம்புகின்றேன். பத்திரிகை ஆசிரியர் பதவி என் கடைசி மூச்சுவரை இருக்கும்.

இன்னொரு விதத்தில் பார்த்தாலும் தேச நலத்துக்காகப் பத்திரிகையாசிரியராகவும் இருப்பது மந்திரி பதவியை விட உயர்ந்தது. நான் ஆசிரியர் பதவியைத்தான் உயர்வாகக் கருதுகிறேன்' (க.நி. பக்.342-3) எனச் சொல்லியிருப்பது என்ன தீர்க்கமான முடிவு. கல்கியின் முழு ஆளுமை, பெருமிதம் பத்திரிகையில் அனைத்தையும் எழுதும் பதவி, நிரந்தரப் பதவி என்னும் எண்ணம் மந்திரி நண்பர்களை வைத்துக்கொண்டு அதைவிட உயர்ந்தது பத்திரிகை ஆசிரியர் பதவி எனத் துணிந்துசொல்லும் திறன் இவையெல்லாம்தான் பத்திரிகையாளர் கல்கி.

'54 வயதில் அவர் மறைந்தபோதிலும் 5000 ஆண்டுகள் தமிழ்நாட்டுக்கும் தமிழுக்கும் தமிழ் அறிஞர்களுக்கும் செய்ய வேண்டிய சேவைகளைச் செய்திருக்கின்றார் (பொ. ப.531) என்று சுந்தாவும்,

> ***கல்கி தனிமனிதராகத் தம் பேனாவினால் சாதித்த சாதனைகளை இன்று ஓர் அரசு நினைத்தால் கூட முடியாது (க.நி. ப.596)***

என்று பகீரதனும் பத்திரிகையாளர் கல்கியை மதிப்பிடுவது மெத்தப் பொருத்தம்.

தொகுப்புரை

கல்கி குடும்பத்தினருக்கு நல்ல உறுப்பினர். சகோதரர்களுக்கு நல்ல தலைவன். நல்ல கணவன், நல்ல தந்தை, நல்ல நண்பர். மொத்தத்தில் நல்ல மனிதர். அவருடைய படைப்பும் சமூகப் பொறுப்புக்களை மக்களுக்கு உணர்த்தின.

நல்ல சிந்தனையாளர், நல்ல எழுத்தாளர், நல்ல படைப்பாளர், நல்ல பத்திரிகையாளர்.

9 வயதில் தந்தையை இழந்தார். அய்யாசாமி அய்யர் தந்தையின் இடத்திலிருந்து அவருக்குக் கல்வி கொடுத்து வளர்க்கின்றார்.

திருச்சி வாழ்க்கை, காந்தியடிகள் அழைப்பு கல்கியை அரசியலுக்கு அழைக்கின்றது.

சிறைக்கூடத்தில் நட்பு கிளைகள் விட்டு விரிவடைகின்றது.

அரசியலோடு எழுத்துப் பணி, மொழிபெயர்ப்புப் பணி இளமை எல்லாம் சேர்ந்து சுறுசுறுப்புக்காரராக மாற்றுகின்றது.

ஆழமான கல்வி, வாசிப்புப் பழக்கம், ஆங்கிலத்திலும் இடுபாடு ஏற்பட்டு எழுத்தோடு மொழிபெயர்ப்பிலும் வல்லவராகின்றார்.

1922 சதாசிவத்துடன் தொடங்கிய நட்பு.

1923 ராஜாஜியுடன் ஏற்பட்ட நட்பு, திரு.வி.க. தொடர்பு, 1931 ரசிகமணியின் நட்பு, பள்ளித் தோழர்கள் முத்து, சுப்பு, நட்பு, அலுவலக ஊழியர்களுடன் கொண்ட நட்பு.

இந்நட்பு மனித உறவைப் பலப்படுத்தியதோடு பத்திரிகையாளராகச் சுடர சிறந்த அரண்களாக அமைந்தன. இவர்களின் நட்பால் கல்கியின் எழுத்தாற்றல் நாளுக்கு நாள் மடைதிறந்த வெள்ளம் போல் பெருகியது.

தந்தை இல்லாததால் தன் படிப்புச் செலவைத் தமையன் மேல் சுமத்த விரும்பாமல், தனித்துநின்று நண்பர்களுடன் சிறைசென்று நண்பர்களால் நெறிப்படுத்தப்பட்டு, தனக்கென்று ஒரு நெறியைப் பின்பற்றித் தன் தனித்தன்மையை விளக்கியவர்.

12 வயது முதல் 17 வயது வரை கதை, பஜனை, அண்ணன் அண்ணிக்கு உதவி இப்படிப் பணிசெய்த கல்கி, மாணவராக இருக்கும்போதே எழுத்தாற்றல் மிக்கவரானார். அதனை அறிந்து வெளிச்சத்துக்குக் கொண்டுவந்தவர் மருத்துவர் ராஜன். பக்குவப்படுத்தி அனுப்பியவர் திரு.வி.க. தட்டியெடுத்தவர் இராஜாஜி. தங்கமாக்கியவர் வாசன். சொக்கத் தங்கமாக்கியவை டி.கே.சி.யின் கடிதங்களும் நட்பும்.

புத்தமங்கலம், திருச்சி, ராயப்பேட்டை, திருச்செங்கோடு, சென்னை ஆகியன கல்கி என்ற பத்திரிகையாளரின் களங்கள்.

கல்கியின் தேசப்பற்று, தமிழ்ப்பற்று, திரு.வி.க.வின் நவசக்தி, ராஜாஜியின் விமோசனம், வாசனின் ஆனந்தவிகடன், கல்கியின் கல்கி, சதாசிவத்தின் நிர்வாகத் திறன் இவையெல்லாம் கல்கியை முழுப் பத்திரிகையாளராக வளர்த்தெடுத்தது.

தமிழை வளர்த்தெடுத்த இதழ், மதுவை ஒழிக்க மட்டும் போராடிய இதழ், வாசிப்பாளரைப் பெருக்கிய இதழ், மிகச் சிறந்த நாவல்கள், சிறுகதைகள், கட்டுரைகள், தலையங்கங்கள், கல்கி பயிரிட்டு அறுவடை செய்த இதழ் ஆகிய நான்கும் கல்கியை மிகப் பெரிய ஆளுமையுடையவராக ஆக்கிவிட்டன.

பொது சேவை, சமூக நலனில் அக்கறை, அன்றாட வாழ்வில் மனித வாழ்வில் காணும் அவலங்களுக்குத் துணிவாகத் தீர்வு காணுதல், எந்தச் செய்தியாக இருந்தாலும் காரண காரியங்களுடன் அணுகி, குறைகளைச் சுட்டி, தீர்வுகளைக் கூறும் கல்கியின் பேனா.

பாரதி, திரு.வி.க., வ.ரா., புதுமைப்பித்தன், காந்தி இப்படி எந்தப் பணியாக இருந்தாலும் பகைமை பாராட்டாது திருந்தச்செய்யும் கல்கியின் துணிவு.

சிறை செல்லும் போதுகூட, திருமணத்திற்குமுன் சென்ற கல்கிக்கும், திருமணத்திற்குப் பின் சென்ற கல்கிக்கும் இடையேயுள்ள வேறுபாடு, பொறுப்பு, திட்டமிடல் அவரின் ஆளமையைக் காட்டுகின்றது.

தனக்குச் சரியென்று பட்டதைத் துணிவுடன் எழுதும் ஆற்றல் மிக்க பத்திரிகையாளர்.

தரமான எழுத்தாளர்.

எழுத்து வேட்கை நவசக்தியிலிருக்கும் போதே விமோசனத்துக்கும், விமோசனத்தில் இருந்து கொண்டே ஆனந்தவிகடனுக்கும், வழிவராத போது துணிந்து விட்டுவிட்டு சிறைக்கூடம் சென்று மீண்டும் நண்பர் சதாசிவத்துடன் கல்கியைத் தொடங்கித் தீர்த்துக் கொள்ளுதல்.

பத்திரிகையாளர் கல்கியின் பணி முதல் பாகம் நவசக்தியிலும், விமோசனத்திலும் நடுபாகத்தை விகடனிலும், கடைபாகத்தை கல்கியிலும் செழித்து வளர்ந்தது.

இசை, நாடகம், பயணம், அரசியல், ஆசிரியர், மாணவர், பாடத்திட்டம், கல்வி, திரைப்படம், நூலகம், தமிழ், கவிஞர்கள், இப்படி அனைத்துத் துறையையும் விமர்சிக்கும் ஆற்றலுடையர்.

பாரதி பாடல்களை நன்றாகப் பாடுவார்; ராட்டை நூற்கத் தெரியும், கதாகாலட்சேபம் செய்யத் தெரியும்.

மேடைப் பேச்சாளர்; மொழிபெயர்ப்பாளர்.

நகைச்சுவை உணர்வுடையவர்.

தீண்டாமை, பெண்கல்வி, மூடப் பழக்கவழக்கம் இப்படி சமூகத்தைத் தாக்கும் தடைகளை எழுத்தின்வழி தகர்க்கப் பாடுபட்டவர்.

சுதந்திரத்திற்கு முன்னும், சுதந்திரத்திற்குப் பின்னும் இந்தியாவின் நிலை பற்றிச் சிந்தித்தவர்.

பழைய வரலாறுகளையும் நாவல்வழித் தொகுத்தவர்.

எல்லா வயதினரையும் எல்லாத் துறையினரையும் திருப்திப் படுத்தக்கூடிய நடை.

பத்திரிகை என்னும் ஊடகத்தைச் சரியாகப் பயன்படுத்தி, தானும் உயர்ந்து மக்களையும் மகிழ்வித்து நெறிப்படுத்தியவர் கல்கி.

கல்கி ஒரு தனி மனிதராக இல்லை; சமூக சேவராக - பொதுவாழ்வில் நாட்டமுடையவராக - பல்துறை ஆர்வலராக - மாபெரும் சமூகமாகவே வாழ்ந்திருக்கின்றார்.

துணைநூற் பட்டியல்

முதன்மை நூல்கள்

சுந்தா, பொன்னியின் புதல்வர், வானதி பதிப்பகம், 1976

பகீரதன், கல்கி நினைவுகள், திருவரசு புத்தக நிலையம், 1998

பாலன், சுப்ர. (தொ.ஆ.), எழுத்துலகில் அமரதாரா, வானதி, 1999

விக்கிரமன், எப்போ வருவாரோ?, சாரதா பதிப்பகம், 2000

துணை நூல்கள்

இரத்தினம், கா.பொ. (ப.ஆ.), எழுத்தாளர் கல்கி, பழனியப்பா பிரதர்ஸ், 1966

இராசமாணிக்கனார், மா. இருபதாம் நூற்றாண்டில் தமிழ் உரைநடை வளர்ச்சி, பாரி நிலையம், 1978

கல்கி, கல்கியின் சிறந்த கட்டுரைகள், பாவை பப்ளிகேஷன்ஸ், 2000

----------------, கண்ணீரால் காத்த பயிர், வானதி, 1999.

----------------, பாங்கர் விநாயகராவ், வானதி 1999, 1996

----------------, பொய்மான் கரடு, பாலரவி அண்ட் கோ, 1981, மறுபதிப்பு 1976

----------------, மோகினித் தீவு, சாரதா பதிப்பகம், 2000.

சாமிநாத சர்மா, வெ, நான் கண்ட நால்வர், பூங்கொடி பதிப்பகம், 1998.

----------------, சீனிச்சாமி, து., (ப.ஆ.) கல்கியின் கதை உலகம், தமிழ்ப் பல்கலைக்கழகம், 1999.

சோமலே, தமிழ் இதழ்கள், சென்னைப் பல்கலைக்கழகம், 1975.

திரிபுரசுந்தரி, ஆ., இதழாளர் இராஜாஜி, டாக்டர் மா. இராசமாணிக்கனார் இதழியல் ஆய்வு மையம்.

மணி, பி.எஸ். கல்கி சகாப்தம், மகாகவி பதிப்பகம், 1993.

மணி, பெ.சு., விடுதலைப் போரில் தமிழ் இதழ்கள், மணிவாசகர் பதிப்பகம், 1998.

மீனாட்சி முருகரத்தினம், கல்கியின் சிறுகதைகள், சர்வோதய இலக்கியப் பண்ணை, 1976.

மோகன், இரா., கல்கி, சாகித்ய அக்காதெமி, 2000.

மோகன், இரா. (தொ.ஆ. & ப.ஆ.) கல்கி கட்டுரைகள், தொகுதி 1, 2, 3, மணிவாசகர் பதிப்பகம், 1999.

சுருக்க விளக்கம்

எ.அ.	-	எழுத்துலகில் அமரதாரா
எ.க.	-	எழுத்தாளர் கல்கி
க.க.	-	கல்கி கட்டுரைகள் 1,2,3
க.சி.க.	-	கல்கியின் சிறந்த கட்டுரைகள்
க.கா.ப.	-	கண்ணீரால் காத்த பயிர்
க.நி.	-	கல்கி நினைவுகள்
த.இ.	-	தமிழ் இதழ்கள்
பா.வி.	-	பாங்கர் விநாயகராவ் / பா.வி. முன்னுரை
பொ.பு.	-	பொன்னியின் புதல்வர்

சி.பா. ஆதித்தனார்

அ.மா. சாமி

தமிழ்நாட்டில் இன்று தமிழ் இதழ்கள் தழைத்துச் செழித்து விளங்குகின்றன. நாளிதழ், வார இதழ், வாரமிருமுறை இதழ் என்று பல்கிப் பெருகித் திகழ்கின்றன. பல நிறுவனங்கள் ஒன்றுக்கு மேற்பட்ட இதழ்கள் வெளியிடுகின்றன. வாசகர்களும் இரண்டு, மூன்று இதழ்கள் வரை வாங்கிப் படிக்கிறார்கள். இதழ்கள் நடத்துவது என்பது, ஆலமரம்போல விரிந்து பரந்து ஒரு பெருந்தொழிலாக வளர்ச்சி அடைந்துவிட்டது. இதற்கு வித்திட்டவர், அமரர் சி.பா. ஆதித்தனார் என்று சொல்லுவது முற்றிலும் சரியாக இருக்கும். இது மறைக்க முடியாதது மட்டுமல்ல, யாரும் மறுக்க முடியாதுங்கூட.

ஆதித்தனார் இல்லாமல் தமிழ் இதழியல் வரலாறு இல்லை. அந்த அளவுக்குத் தமிழ் இதழியல் வளர்ச்சிக்கு அவர் வழிகாட்டியிருக்கிறார். புதிய முயற்சிகள் செய்து வெற்றிபெற்று, சாதனைகள் புரிந்திருக்கிறார். அவர் ஆதித்தனார் அல்ல, சாதித்தனார்!

பிறவி இதழாளர்

ஆதித்தனார் ஒரு பிறவி இதழாளர். கர்ணன் காதில் குண்டலங்களுடன் பிறந்தான் என்று பாரதக் கதை சொல்லுவார்கள். அதுபோல, கையில் எழுதுகோலுடன் பிறந்தவர், ஆதித்தனார். இதழியல் என்பது அவரது குருதியில் ஊறிப்போன ஒன்று.

திருச்சியில் கல்லூரியில் படித்துக்கொண்டிருந்த காலத்திலேயே, நூல்கள் எழுதி வெளியிட்டார். அந்த நூல்களை அச்சிடச் சொந்த அச்சகம் நடத்தினார். 'பாரிஸ்டர்' படிப்புப் படிக்க இலண்டனுக்குச் சென்றபோதும், அங்கிருந்து பல தமிழ் - ஆங்கில இதழ்களுக்குச் செய்தி மடல்கள் எழுதி அனுப்பினார். அதில் கிடைத்த வருமானம், அவரது அன்றாடச் செலவுக்கு, படிப்புச் செலவுக்குச் சரியாக இருந்தது.

பாரிஸ்டர் பட்டம் பெற்ற பின்பு சிங்கப்பூருக்குப் போய், வழக்கறிஞராகப் பணியாற்றினார். அப்பொழுது அங்கே தமிழவேள் கோ. சாரங்கபாணி அவர்கள் 'தமிழ் முரசு' இதழ் தொடங்க ஆதித்தனார் உதவினார்.

இரண்டாவது உலகப்போர் நடந்து கொண்டிருந்த நேரத்தில் (1942இல்) ஆதித்தனார் தமிழ்நாட்டுக்குத் திரும்பினார். அப்போது இந்திய விடுதலைப் போரும் உச்சக்கட்டத்தில் இருந்தது. செய்தி இதழ் தொடங்க இதுதான் சரியான நேரம் என்பதை உணர்ந்த ஆதித்தனார், கறுப்பு உடையை மூட்டை கட்டி வைத்துவிட்டு, இதழியல் தொழிலில் இறங்கினார்.

அவருக்குப் பெண் கொடுத்த மாமனார்கூட அதை எதிர்த்தார். "அதெல்லாம் எதற்கு மாப்பிள்ளை? இன்றைய செய்தித்தாள் இன்று விற்பனையாகாவிட்டால் நாளை பழைய தாள்; யாரும் வாங்க மாட்டார்கள், படிக்க மாட்டார்கள். பலசரக்குக் கடையில் பொட்டலம் மடிக்கத்தான் பயன்படும். அரிசி வாங்கி விற்கலாம்; பருப்பு வாங்கி விற்கலாம். இவை அன்றாடம் மக்களுக்குத் தேவையான பொருட்கள். இன்று விற்காவிட்டாலும், நாளை விற்பனையாகும். வாங்கிய விலைக்கே விற்றால்கூட சாக்கு மிச்சப்படும். எனவே, இதழ் நடத்த வேண்டாம்" என்று மாமனார் கூறினார்.

அவர் கூறியது நூற்றுக்கு நூறு உண்மை. உலகில் அடக்க விலைக்கும் குறைவான விலையில் விற்கப்படும் ஒரு பொருள் உண்டு என்றால், அது இதழ்தான்! "உழுதவன் கணக்கு பார்த்தால் உழக்குக்கூட மிஞ்சாது" என்பார்கள். அதுபோல, இதழாளன் கணக்குப் பார்த்தால், கட்டியிருக்கும் வேட்டிகூட மிஞ்சாது! "இதழாளன் கணக்குப் பார்த்தால் எழுதுகோல் கூட மிஞ்சாது" என்று புதுமொழி சொல்லலாம்!

ஆதித்தனார் சிங்கப்பூரில் பாரிஸ்டராக இருந்து சம்பாதித்துத் தமிழ்நாட்டுக்குக் கொண்டுவந்த பணம், முப்பத்தைந்து இலட்சம். இதழ் நடத்தியதில் அத்தனை பணத்தையும் இழந்து, கடனாளியாகவும் ஆனார்!

மதுரை முரசு

இலண்டனில் பாரிஸ்டர் படிப்பை முடித்ததும் சென்னை திரும்பினார் ஆதித்தனார். சென்னையில் 1933இல் 'மகாசனம்'

என்னும் வார இதழைத் தொடங்கினார். 'மகாசனம்' இதழுக்குப் பிறகு ஆதித்தனார் 1942 சூலையில் 'மதுரை முரசு' என்னும் வாரம் இருமுறை இதழைத் தொடங்கினார். அப்போது மதுரையில் நடந்த விடுதலைப் போரில் போலீசார் சுட்டு மூன்று பேர் மாண்டார்கள். ஆனால், 'ஒருவர் இறந்தார்' என்று செய்தி வெளியிட வேண்டும் என்று அதிகாரிகள் சொன்னார்கள். ஆனால், ஆதித்தனார் அதை மீறி, 'மூன்று பேர் சாவு' என்று செய்தி வெளியிட்டார். இதனால் போர் நேர அதிகாரத்தைப் பயன்படுத்தி, 'மதுரை முரசு' இதழை அதிகாரிகள் தடை செய்தனர்.

இன்று இந்திரா காந்தி அம்மையார் கொண்டுவந்த நெருக்கடி கால சட்டங்களை மீறி, சில இதழ்கள் செய்தி வெளியிட்டன. இதற்கு அன்றே ஆதித்தனார் வழி காட்டினார்! அன்று 'மதுரை முரசு' தடை செய்யப்பட்டது போல, நெருக்கடி நேரத்தில் இந்தியா முழுவதும் பல நூறு இதழ்கள் தடை செய்யப்பட்டன.

தமிழன்

அடுத்து, ஆகஸ்டு, 1942இல் 'தமிழன்' என்ற வார இதழை ஆதித்தனார் தொடங்கினார். அதன் முதல் இதழில் அட்டைப்படமாகப் பாவேந்தன் பாரதிதாசனின் படம் இடம்பெற்றது.

அதுபோன்று, இதழ்களில் எழுதும் எழுத்தாளர்களுக்கு 'அன்பளிப்பு' வழங்கும் முறைக்கும் முன்னோடி, 'தமிழன்' தான். அதற்கு முன்பெல்லாம் எழுத்தாளர்கள் இதழ்களுக்கு 'விஷயதானம்' செய்வார்கள். 'தமிழன்'தான் முதன் முதல் எழுத்தாளர்களுக்கு அன்பளிப்பு அனுப்பிவைத்தான்.

தினத்தந்தி

'தமிழன்' வெற்றிநடை போட்டுக் கொண்டிருந்தபோதே ஆதித்தனார் நவம்பர் 1942இல் 'தந்தி'யைத் தொடங்கினார்.

ஆதித்தனார் 'தந்தி'யை மதுரையில் தொடங்கியதற்கு ஒரு காரணம் இருக்கிறது. அந்நாளில் நாளிதழ்கள் சென்னையில் மட்டுமே அச்சாயின. புதிய இதழ் ஒன்று, அந்தப் பழைய இதழ்களின் போட்டியைச் சமாளிக்க வேண்டியிருக்கும்.

அதுகூட இரண்டாவது காரணந்தான். முதல் காரணம், சென்னையில் மாலையில் அச்சாகி, புகைவண்டியில் அனுப்பப்பட்டு, மறுநாள் காலையில்தான் மற்ற மாவட்டங்களில் செய்தித்தாள்கள் வெளியாகும். இந்தச் செய்தித்தாள்களில் முதல் நாள் மாலையில் கிடைத்த செய்திகள் மட்டுமே இருக்கும்; காலையில் அவை பழைய செய்திகள் ஆகிவிடும். அந்த செய்திகள் ஐரோப்பாவில் போர்க்களத் திலிருந்து வருவதால், இரண்டு நாள் பழையதாகக்கூட இருக்கும். மக்களுக்கோ போர்முனைச் செய்திகள் சூடாக வேண்டும். மதுரையில் நள்ளிரவு 12 மணிவரை செய்திகளைப் பெற்று அச்சிட்டால், மறுநாள் அதிகாலை 5 மணிக்கு அச்செய்திகள் சுடச்சுட இருக்கும் அல்லவா? வாசகர்கள் விரும்பிப்படிப்பார்கள் அல்லவா? செய்தித்தாள் விற்பனையாகும் அல்லவா? எனவேதான் ஆதித்தனார் 'தந்தி'யை மதுரையில் தொடங்கினார்.

'தந்தி'யில் சில செய்திகளில் நட்சத்திரக் குறியிட்டு, 'இந்தச் செய்திகள் சென்னைத் தாள்களில் நாளைத்தான் வெளிவரும்' என்று ஆதித்தனாரே 'தந்தி'யில் குறிப்பு அச்சிட்டார். இதனால் 'தந்தி'யில் விற்பனை பெருகியதுடன், "தந்தி செய்திகளை முந்தித் தருகிறது" என்ற பெயரும் கிடைத்தது.

இந்த வகையிலும் ஆதித்தனார் ஒரு வழிகாட்டியாக விளங்குகிறார். இன்று ஒவ்வொரு செய்தித்தாளும் போட்டி போட்டுக்கொண்டு, மாவட்டப் பதிப்புகள் வெளியிடுவதைப் பார்க்கிறோம். இதனால் வாசகர்களுக்குச் செய்திகள் சுடச்சுடக் கிடைக்கின்றன.

புதிய உத்திகள்

ஆதித்தனார் செய்திகளை சுடச்சுடக் கொடுத்து மட்டுமல்ல; அந்தச் செய்திகள் யாருக்குப் போய்ச்சேர வேண்டுமோ, அவர்களுக்குப் புரியும்படி கொடுத்தார். புரியாததை யாரும் வாங்கிப் படிக்க மாட்டார்கள் அல்லவா?

தமிழ்நாட்டில் அன்று எழுதப்படிக்கத் தெரிந்தவர்கள் பத்து விழுக்காடு மக்களே. அவர்களில் பாதிப் பேர் எழுத்துக்கூட்டிப் படிக்கக்கூடியவர்கள். அவர்களும் 'தந்தி'யை வாங்கிப் படிக்கும் படியாகப் புதிய புதிய உத்திகளை ஆதித்தனார் புகுத்தினார்.

அன்றைக்கு சுதேசமித்ரனும், தினமணியுந்தான் முன்னணி நாளிதழ்கள். அந்த இதழ்களைப் படித்தவர்கள் படித்தார்கள். சுதேசமித்திரனுக்குத் 'தஞ்சாவூர் பண்ணையார் இதழ்' என்றே பெயர். நாட்டுப்பற்று மிக்க பணக்காரர்கள் 'தினமணி' வாங்கிப்படித்தார்கள். இவர்கள் இருவரையும் விட்டுவிட்டுப் பாமரர்களைக் கவரவேண்டும் என்ற முயற்சியில் ஆதித்தனார் இறங்கினார். செய்திகளைத் தேர்ந்து எடுப்பதிலும், அவற்றை வாசகர்களுக்குக் கொடுப்பதிலும் புதிய முறைகளை ஆதித்தனார் கையாண்டார்.

செய்திக்குப் புதிய இலக்கணம்

முதலில், செய்திகளைத் தேர்ந்து எடுப்பதில் ஆதித்தனார் மாற்றம் செய்தார். 'எது செய்தி?' என்பதற்குப் புதிய இலக்கணம் கண்டார்.

அன்றைய செய்தித்தாள்கள் அரசியல் செய்திகளுக்கு அதிக இடம் கொடுத்தன. ஆனால் ஆதித்தனார் அரசியல் செய்திகளுக்கு அதிக முக்கியத்துவம் அளிக்கவில்லை.

ஆதித்தனாரே நடத்திய 'நாம் தமிழர்' இயக்கச் செய்திகள் கூட அளவோடுதான் 'தந்தி'யில் இடம்பெற்றன. (நாம் தமிழர் இயக்கச் செய்திகளை வெளியிட 'தமிழ்க்கொடி' என்ற தனி வார இதழை ஆதித்தனார் நடத்தினார்.) "அரசியல் இதழ் என்பது அலைகடலில் செல்லும் கப்பலைப் போன்றது, அலை உயரும்போது, கப்பலும் உயரும். அலை தாழும் போது கப்பலும் தாழும்" என்பார், ஆதித்தனார்.

இலண்டனில், வாசிங்டனில், மாஸ்கோவில் நடப்பதுதான் செய்தி என்று அன்று நினைத்தார்கள். ஆனால், "உன் நாட்டில், உன் ஊரில், உன் தெருவில், உன் பக்கத்து வீட்டில் நடப்பதுதான் செய்தி" என்று ஆதித்தனார் நிலைநாட்டினார்.

கொலை, கொள்ளை, கற்பழிப்புகளை ஆதித்தனார் செய்தி ஆக்கினார். அந்தச் செய்திகளுக்கு முக்கியத்துவம் கொடுத்தார். ஒவ்வொரு பக்கத்திலும் இரண்டு, மூன்று குற்றச் செய்திகளைத் தந்தார்.

"பக்கத்து வீட்டுப் பருவப் பெண்ணைக் கடத்திப்போய் விட்டானாம்! இதெல்லாம் ஒரு செய்தியா?" என்று, படித்துவிட்டு,

ஆம், படித்துவிட்டுத்தான், தூக்கி எறிந்தார்கள். "நான் 'தந்தி'யைக் கையால் தொடுவதேயில்லை" என்று சிலர் பெருமை பேசினர்கள்.

ஆனால், இன்று நடப்பது என்ன? ஆதித்தனாராவது தனக்கு வந்த செய்திகளை வெளியிட்டார். இன்றோ, "எந்த இடத்துக்குப் போனால், 'அந்த' மாதிரிப் பெண்கள் கிடைப்பார்கள்' என்று தேடிப் போய்க் கண்டுபிடித்து, செய்தியாக வெளியிடுகிறார்கள்! அதுவும் படத்துடன்!! எங்கே கொலை விழும், எவனை எவன் 'இஸ்து' கொண்டுபோவான் என்று இதழாளர்கள் காத்துக் கொண்டிருக் கிறார்கள்! அந்தச் செய்திகளைக் கொடுப்பதில் போட்டா போட்டி.

இந்தச் செய்திகளுக்கு வாசர்களிடம் நல்ல வரவேற்பு இருந்தது. "நான் கொடுப்பதைத்தான் வாசகர்கள் படிக்கவேண்டும்" என்று ஆதித்தனார் நினைக்கவில்லை. அப்படி நினைத்தவர்கள் எல்லாம் 'கடை விரித்தோம், கொள்வாரில்லை' என்று கடையை மூடிவிட்டார்கள். வாசகர்கள் விரும்பிப் படிக்கும் செய்திகளை ஆதித்தனார் கொடுத்தார். "இதெல்லாம் ஒரு செய்தியா?" என்றவர்கள் கூட 'தந்தி'யை விரும்பிப் படித்தார்கள். "தந்தி படிக்காமல் என்ன? 'இந்து'க்குள் வைத்துப் படிக்கிறார்கள்" என்று ஒருமுறை ராஜாஜி சொன்னார்.

நடிகர் – நடிகைகள்

திரைப்பட நடிகர், நடிகைகள் பற்றிய செய்திகளுக்கு ஆதித்தனார் அதிக இடம் கொடுத்தார். ஏனென்றால் அவர்கள் வாசகர்களுக்கு நன்கு அறிமுகமானவர்கள். எனவே, அவர்களைப் பற்றிய செய்திகளை வாசகர்கள் விரும்பிப் படித்தார்கள்.

"அது சரி, லைலா பற்றிய செய்தியை வெளியிடட்டும். லைலா நாய்குட்டி போட்டதைக் கூடச் செய்தியாக வெளியிடவேண்டுமா?" என்று கேட்டார்கள். அரசி எலிசபெத்தின் குதிரை குட்டி போட்டால், அதை இலண்டன் இதழ்கள்முதல் பக்கத்தில் படத்துடன் செய்தியாக வெளியிடுவதை அறியாதவர்கள், இவர்கள்!

இன்றைய இதழ்கள் மட்டுமல்ல; தொலைக்காட்சிகளும் ஆதித்தனார் மிஞ்சிவிட்டன என்பதை நான் சொல்ல

வேண்டியதில்லை! நடிகர், நடிகைகளைப் பற்றிய செய்திகள் வெளியிடாத இதழ் ஏது?

ஆதித்தனார் 'தந்தி'யில் முதல் பக்கத்தில் 'கவர்ச்சிப்படம்' என்று ஒரு நடிகையின் படம் வெளியிட்டார். இன்றைய இதழ்களோ முன்பக்க அட்டை, பின்பக்க அட்டை, நடுப்பக்கம், உள்பக்கங்கள் என்று பக்கத்துக்குப் பக்கம் நடிகைகளின் கவர்ச்சிப்படங்களை வெளியிடுகின்றன.

படங்கள்

நடிகர் நடிகைகளை மட்டுமல்ல; எந்த நிகழ்ச்சி நடந்தாலும், அதைப் படமாக எடுத்து ஆதித்தனார் வெளியிட்டார். பக்கத்துக்குப் பக்கம் படம் இருக்கும்.

அன்று இதையும் குறை கூறினார்கள். "படிக்கச் செய்தியேயில்லை. படத்தைப் போட்டு அடைக்கிறார்கள்'' என்று சொன்னார்கள். இன்று முழுப்படங்கள், அதுவும் வண்ணப்படங்கள் வெளியிடப்படுவதைப் பார்க்கிறோம்.

"ஒரு படம் ஓராயிரம் சொல்லுக்குச் சமம்" என்றார்கள். அது மட்டுமல்ல; இன்று தொலைக்காட்சிப் பெட்டிகளுடன் போட்டியிட இதழ்களுக்குப் படங்கள் தேவைப்படுகின்றன. இதை அன்றே உணர்ந்து ஆதித்தனார் வழிகாட்டிவிட்டார்.

திரைப்படச் செய்திகள்

ஆதித்தனார் திரைப்படச் செய்திகளுக்கு அதிக இடம் அளித்ததுடன், அந்தச் செய்திகளைக் கொடுக்கும் முறையிலும் மாறுதல் செய்தார்.

''துரியோதனன் பாஞ்சாலியைத் துகில் உரிந்தான்'' என்றுதான் அந்தக் காலத்தில் திரைப்படச் செய்திகள் எழுதுவார்கள். அதை ஆதித்தனார் மாற்றினார். "சிவாஜி கணேசன் பத்மினியைத் துகில் உரிந்தார்" என்று எழுதினார். ஏனென்றால் இவர்களைத்தான் வாசகர்களுக்குத் தெரியும். ''சிவாஜி துரியோதனனாகவும், பத்மினி பாஞ்சாலியாகவும் நடித்தார்கள்" என்று செய்தி முடியும்.

அன்றைக்கு இவ்வாறு செய்தி எழுத ஏகப்பட்ட எதிர்ப்பு. ''சிவாஜி என்ன பத்மினியையா துகில் உரிந்தார்?'' என்று

கேட்டார்கள். ஆனால், இன்றோ, ஆதித்தனார் தடத்தைத்தான் அனைவரும் பின்பற்றுகிறார்கள்!

அன்றைக்கே ஆதித்தனார் நடிகர் - நடிகைகளைப் பற்றிய 'கிசுகிசு'ப்புகளையும் வெளியிட்டார்.

மசாலா

"ஆதித்தனார் ஆபாசமாக எழுதுகிறார், ஆபாசப்படம் வெளியிடுகிறார்" என்றெல்லாம் சிலர் சொன்னார்கள். ஆனால், ஆதித்தனார் இதை மறுத்தார். ஆதித்தனார் கவர்ச்சியை அனுமதித்தாரே தவிர, ஆபாசத்தை ஒருபோதும் அனுமதிக்கவில்லை.

ஓட்டல் சாப்பாடு என்றால், மசாலா கொஞ்சம் தூக்கலாகத்தான் இருக்கும்! சாப்பாடு சற்றுக் காரசாரமாக இருந்தால்தான் ஓட்டலைத் தேடி வருவார்கள். "கொய்த பழம் வேண்டுமா? கொய்யாப் பழம் வேண்டுமா?" என்று நாடக மேடைகளில் பாடிக்கொண்டிருந்த காலம், அது. பாமர ரசிகர்களைக் கவர அந்தக் கவர்ச்சி தேவைப்பட்டது.

அன்று கவர்ச்சி 'மில்லி' கணக்கில் இருந்தது. இன்று லிட்டர் கணக்கில் போய்விட்டதைப் பார்க்கிறோம்.

அதேபோல, குற்றச்செய்திகளை வெளியிடுவதிலும் ஆதித்தனார் ஒரு நெறி வைத்திருந்தார். அந்தச் செய்திகள் மனித உறவுகளைத் தொடக்கூடியதாக இருக்கவேண்டும்; தவறு செய்தவன் தண்டனை பெறவேண்டும்.

அறிவு வளர்ச்சி

"இந்த செய்திகளைப் படிப்பதால், வாசகர்களுக்கு என்ன ஆதாயம்? உலக அறிவு வளருமா?" என்று கேட்டார்கள்.

ஆனால், அறிவு வளர்ச்சிக்காக ஆதித்தனார் 'தந்தி' நடத்தவில்லை. "அது பல்கலைக்கழகத்தின் வேலை" என்று சொன்னார். ஆதித்தனாரின் முதல் நோக்கம், வாசகர்களைக் கவர்வது. அப்படிக் கவர்ந்ததால்தான் இன்று பாமரர்களும் இதழ்கள் படிக்கிறார்கள். குளங்குட்டையில் நீச்சல் கற்றுத்தானே கடலில் நீந்த வேண்டும்!

ஆதித்தனாருக்கு முன்புவரை இதழ்கள் நடத்துவது 'தொண்டு' ஆக இருந்தது. அதைத் 'தொழில்' ஆக மாற்றியவர் ஆதித்தனார்தான். தொழிலாக மாறியதன் காரணமாகவே இன்று தமிழ் இதழ்கள் வானவில்லைப்போல் வர்ணக்கோலத்துடன் வளர்ச்சி அடைந்துவிட்டன. திரு.வி.க. கட்டைப்பேனாவில் எழுதினார்; இன்று கணினி எழுதுகிறது.

அதுபோல, இதழ்களின் நோக்கமும் இன்று மாறிவிட்டது. இதழ்களின் நோக்கம், பொழுதுபோக்கு. "படித்தால்தான் தூக்கம் வருகிறது" என்று சொல்லும்படி, இதழ்கள் தூக்க மாத்திரைகளாக மாறிவிட்டன. இதற்கு வித்திட்டவர் ஆதித்தனாரே.

இதழ்கள் படித்தால், அறிவு வளர்ச்சி ஏற்படாதா? நெல்லுக்கு இறைக்கும் நீர் அங்கே புல்லுக்கும் பொசியுமாம்.

தலைவர்கள்

அன்றைய இதழ்களுக்குக் காந்தியும் நேருவுந்தான் தலைவர்கள். மிஞ்சிப் போனால், காமராசர், ராஜாஜி. ஆனால் ஆதித்தனார் தந்தை பெரியார், அறிஞர் அண்ணா, பி. இராமமூர்த்தி, முத்துராமலிங்கத் தேவர் போன்ற தமிழ்நாட்டுத் தலைவர்களுக்கு முதலிடம் தந்தார். இவர்கள்தான் தமிழ்ப் பாமரர்களின் தலைவர்கள்.

இது தமிழ்நாட்டில் ஒரு அரசியல் மாற்றத்தையே கொண்டு வந்தது. அறிஞர் அண்ணா அவர்கள் முதலமைச்சர் ஆனார். அப்போது "இந்த வெற்றியில் 'தினத்தந்தி'க்கும் பங்கு உண்டு" என்று ராஜாஜி பாராட்டினார். இன்று தமிழ் இதழ்களில் தமிழ்த்தலைவர்கள் தலைநிமிர்ந்து நடை போடுவதைப் பார்க்கிறோம்.

தலைப்பு எழுத்துக்கள்

செய்திகளைத் தேர்ந்து எடுப்பதில் மாறுதல் செய்ததுபோல, செய்திகளை வாசகர்களுக்கு வழங்குவதிலும் புரட்சி செய்தார், ஆதித்தனார்.

முதலில் பாமரர்களும் படிக்கும்படியாகக் கொட்டை கொட்டை எழுத்துக்களில் தலைப்புகளை அச்சிட்டார். "யானைத் தலைபோல இருக்கிறது! எழுத்துக்களே பத்திரிகையில் பாதி

இடத்தை அடைத்துவிடும் போலிருக்கிறதே!" என்று அன்று கேலி பேசினார்கள். இன்று, அதே முறையை எல்லா இதழ்களும் பின்பற்றுவதைப் பார்க்கிறோம்.

காந்தியடிகள் சுட்டுக்கொல்லப்பட்ட செய்தியை மூன்றாம் பக்கத்தில் ஒற்றைப் பாத்திச் செய்தியாக 'இந்து' வெளியிட்ட காலம் அது. ஆதித்தனாரோ எட்டுப் பாத்திச் செய்தி என்றும், நாலு பாத்தி - மூன்று பாத்தி செய்தியென்றும் வெளியிட்டார். இன்று 'இந்து'வே கூட முதல் பக்கத்தில் 3 பாத்தி, 4 பாத்திச் செய்திகள் வெளியிடுவதைப் பார்க்கிறோம்.

சதக் சதக்! குபீர் குபீர்!

தலைப்புகளை நாடகப் பாணியில் கொடுத்தார், ஆதித்தனார்.

'சதக் சதக் என்று குத்தினான்!'
'குபீர் என்று சிரித்தான்'
'கேவிக்கேவி அழுதான்'

என்று தலைப்புகள் இருக்கும்.

பாமர மக்களைக் கவர்ந்து இழுக்க இப்படித் தலைப்புகள் தேவைப்பட்டன. 'அழுதாள்' என்பதைவிட, 'ஓ . . . என்று அழுதாள்' என்று கூறுவதில் ஒரு உயிர்ப்பு, ஒரு துடிப்பு இருக்கிறது அல்லவா? கேட்பவர்களும் 'உம் . . . பிறகு . . .' என்று அக்கறையோடு கேட்பார்கள் அல்லவா?

ஆதித்தனார் ஒரு 'பாரிஸ்டர்'. ஆனால், வாசகர்களுக்காக அவர் தன்னை ஒரு பாமரனாக ஆக்கிக் கொண்டார் என்றுதான் சொல்லவேண்டும். பாமரர்களை மேலே தூக்கிவிட அவர் கீழே வரவேண்டியிருந்தது. பள்ளத்தில் இருப்பவரை மேட்டில் இருப்பவர் கை கொடுத்துத் தூக்கிவிடுவது உண்டு. ஆதித்தனாரோ தானும் பள்ளத்தில் குதித்து, அவர்களைத் தன் தோளில் ஏற்றித் தூக்கிவிட்டார்!

எளிய நடை

எழுத்துக்கூட்டிப் படிப்பவர்களுக்கு வசதியாக, எளிய நடையில், சிறுசிறு சொற்களைக்கொண்டு, சின்னச் சின்ன

வரிகளாக எழுதினார். புதிய நடை ஒன்றையே ஆதித்தனார் படைத்தார்.

தமிழ் இலக்கிய வரலாறு எழுதிய மு. அருணாசலம் அவர்கள், தமிழை, தமிழ் நடையை 64 வகையாகப் பிரித்தார். அடுக்குத் தமிழ், அழகுத் தமிழ், அக்கிரகாரத் தமிழ் . . . . என்று அடுக்கிய அவர், 'ஆதித்தனார் தமிழ்' என்றும் ஒன்றைக் கண்டார். ஆம், இதழ்களுக்கு ஏற்றப்புதிய நடை ஒன்றை ஆதித்தனார் படைத்தார். அந்த எளிய நடையைத்தான் இன்று எல்லாத் தமிழ் இதழ்களும் பின்பற்றுகின்றன.

இதற்காக எழுத்து, சொல், சொற்றொடர் எல்லாவற்றையும் ஆதித்தனார் எளிமைப்படுத்தினார்.

'ஔவையார்' என்று எழுதினால், எழுத்துக் கூட்டிப் படிப்பவர், 'ஒ. ள. வை. . யா. ர்' என்று படிக்கக்கூடும். எனவே, 'அவ்வையார்' என்று எழுதினார்.

'செக்கஸ்லோவாகியா' என்ற நாட்டின் பெயரை, படிக்க வசதியாக, 'செக்க - கலேவாகியா' என்று பிரித்து எழுதச் சொன்னார், ஆதித்தனார். இன்று உண்மையாகவே அந்த நாடு, 'செக்' என்றும், 'கலோவாகியா' என்றும் இரண்டு நாடாகப் பிரிந்துவிட்டது.

செய்திகள் 25 செ.மீ. நீளத்துக்குமேல் இருக்கக்கூடாது.

"ஜாமீனில் எடுப்பதற்காக வக்கீல் வந்தார்" என்று எழுதாமல் "ஜாமீனில் எடுக்க வக்கீல் வந்தார்" என்று சுருக்கினார்.

"காரால் மோதப்பட்டு சிறுவ்ன் சாவு" - இப்படி எழுதுவது தவறு. "கார் மோதி சிறுவன் சாவு" என்று எழுதவேண்டும்.

"இருதரப்பாரும் மோதிக்கொண்டு கல் வீசியதில், 45 பேர் காயம் அடைந்து, மருத்துவமனையில் சேர்க்கப்பட்டார்கள்" என்பதை "இருதரப்பாரும் மோதிக்கொண்டார்கள். கல் வீசினார்கள். அதில் 45 பேர் காயம் அடைந்தார்கள். அவர்கள் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டார்கள்" என்று, சிறு சிறு வரிகளாக எழுதினால், படிப்பவர்கள் மூச்சு முட்ட மாட்டார்கள்!

பேச்சு வழக்கில் உள்ள சொற்களைத்தான் பயன்படுத்த வேண்டும். எதையும் கரத்தில் ஏந்தக்கூடாது; கையில் பிடிக்க வேண்டும்.

அதற்காக "ரூபாய்க்கு இரண்டு வாயப் பயம்" என்று எழுதக் கூடாது. 'வாழைப்பழம்' என்று கொச்சை நீக்கி எழுதவேண்டும்.

வெளிநாட்டுச் செய்திகளையும், ஆதித்தனார் விட்டு விடவில்லை. 'வெளிநாட்டுச் செய்திகள்' என்று தொகுத்துக் கொடுத்தார். (அந்நாளில் 'தினமணி'யில் "தமிழ்நாட்டுச் செய்திகள்" என்று தொகுத்துத்தரப்பட்டன!)

மாவட்டம், வழக்கறிஞர், பேருந்து போன்ற புதிய சொற்களையும் பயன்படுத்த ஆதித்தனார் அனுமதித்தார். 'பழைய அமைச்சர்', 'பேரவைத் தலைவர்', சிரிப்பு, சிக்கல், கடையடைப்பு, தாக்கல் செய்தார், போலீஸ் காவல், வெளிநடப்பு, துப்பாக்கிசூடு, அன்பளிப்பு, கருத்துப்படம், உறுதிமொழி, தூதர், புதுக்காசு, நடுவர், தீக்குளிப்பு, பிறப்பு இறப்புக்கணக்கு, பொருட்காட்சி, நோய், முற்றுகைப் போராட்டம், முழு அடைப்பு, 'வீட்டு சினிமா' போன்ற புதிய சொற்களையும், வழக்கிழந்த சொற்களையும் பயன்படுத்தினார்.

செய்திகளை எப்படித் தேர்ந்து எடுக்கவேண்டும், எழுதவேண்டும் என்பதற்கு ஆதித்தனார் நிலையான குறிப்புகளையும் கொடுத்தார். அவை தொகுக்கப்பட்டு 'இதழாளர் கையேடு' என்று நூலாக வெளிவந்திருக்கிறது. இது வேறு இதழ்களில் இல்லாத வழக்கம் மட்டுமல்ல; 'தினத்தந்தி'யின் வெற்றிக்கு என்ன காரணம் என்பதை அறிந்து, மற்ற இதழ்களும் பின்பற்றப்பயன்படுகிறது

இலக்கணம்

ஆதித்தனாருக்குத் தமிழ் ஆர்வம் உண்டு. தமிழ் வெல்ல வேண்டும் என்ற ஆசை உண்டு. (வெல்க தமிழ் என்பதுதான் தினந்தந்தியின் முழக்கமாக இருக்கிறது) ஆனால், வாசகர்கள்மீது அவர் தமிழைத் திணிக்கவில்லை.

செய்திகளை எழுதும்போது இலக்கணம் பற்றி அதிகக் கவலைப்படவில்லை. ஒற்று எழுத்துக்களை ஒதுக்கினார். 'மனத்தில்' என்று எழுத வேண்டியதில்லை. 'மனதில்' என்று எழுதினால் போதும் என்றார். 'இலட்டு' என்று எழுதினால், 'ஈ . . . . லட்டு . . . ' என்று எழுத்துக்கூட்டிப் படிக்கக்கூடும்! எனவே, 'லட்டு' என்று எழுதவேண்டும். "நாம் யாருக்காக எழுதுகிறோமோ

அவர்கள் படிக்கும்படி எழுதவேண்டும்'' என்பதுதான் ஆதித்தனாரின் இலக்கணமாக இருந்தது.

தஞ்சைத் தமிழ்ப் பல்கலைக்கழகத்தின் முதல் துணை வேந்தரான வ.அய். சுப்பிரமணியம் அவர்கள், எம்.ஏ. படித்து முடித்ததும் முதலில் 'தந்தி'யில் சேர மனுச்செய்தார். அவருக்கு நேர்காணலுக்கு அழைப்பு வந்தது. ஆதித்தனாரைச் சந்தித்தார். "எம்.ஏ., படித்த நீங்கள் ஏன் 'தந்தி'யில் பணியாற்ற விரும்புகிறீர்கள்?" என்று ஆதித்தனார் கேட்டார். "தந்தியில் இலக்கணப் பிழை அதிகமாக இருக்கிறது. குறிப்பாக, ஒற்று எழுத்துகள் மிகுமிடத்தில் மிகுவதில்லை. அந்தக் குறையை நீக்கி, நல்ல தமிழில் செய்திகளை எழுத விரும்புகிறேன்" எனறு சுப்பிரமணியன் சொன்னார். "நீங்கள் வெளிப்படையாகப் பேசியதால், நானும் வெளிப்படையாகச் சொல்லுகிறேன்" என்ற ஆதித்தனார், மேலும் கூறினார். "தந்தி பாமர மக்கள் படிக்கும் பத்திரிகை. அவர்கள் படிக்கும் படிதான் எழுத வேண்டும். அதற்குப் பத்துப் படித்தவர்கள் போதும்" என்றார்.

எளிதில் படிக்க

எளிய நடை, எளிமையான செய்தி, செய்தியைச் சொல்லும் தலைப்புகள் என்று இருந்ததால், 'தந்தி'யை எளிமையாகப் படிக்க முடிந்தது.

வீட்டுத் திண்ணையில் அமர்ந்துகொண்டு, பண்ணையார்கள் நாள் முழுக்க 'சுதேசமித்திரன்' படிப்பார்கள்; பணக்காரர்கள் ஓய்வு நேரத்தில் 'தினமணி' படித்தார்கள். சாய்வு நாற்காலியில் விழுந்து கிடக்கும் ஓய்வு ஊதியம் பெறுகிறவர்கள் நாளையும் பொழுதையும் கடத்த 'இந்து' பயன்படுகிறது. ஆனால், 'தந்தி'யை ஒருசில நிமிடத்தில் பார்த்துவிட்டு, படித்துவிட்டு, போட்டு விட்டு, நமது வேலையைப் பார்க்கலாம்.

மற்ற இதழ்களில் இல்லாத சிரிப்பு, படக்கதை, தொடர்கதை என்று புதிய பகுதிகளைப் புகுத்தியும் வாசகர்களைக் கவர்ந்தார், ஆதித்தனார். அவரது ஒரே நோக்கம், 'தந்தி'யின் வளர்ச்சிதான். அந்த நோக்கத்தில் வெற்றியும்பெற்றார். கடந்த 40 ஆண்டு காலமாகத் தமிழ் இதழ்களில் 'தினத்தந்தி' முதலிடத்தில் இருக்கிறது என்றால், அதற்கு ஆதித்தனார் அமைத்த அடித்தளமே காரணம்.

சிவந்தி ஆதித்தனார்

இன்று டாக்டர் சிவந்தி ஆதித்தனார் 'தினத்தந்தி'யை நடத்திச் செல்லுகிறார். தந்தையார் தடம் பதித்த பாதையில் தடம்புரளாமல் போகிறார். இதனால் இந்தியாவிலேயே அதிக வாசகர்களைக் கொண்ட (ஒரு கோடி வாசகர்கள்) முதல் இதழாகத் 'தினத்தந்தி' திகழ்கிறது.

ஆனால், 'தினத்தந்தி'யின் செய்தியில், நடையில், செய்தியைக் கொடுக்கும் முறையில் சிலபல மாறுதல்கள். 'சதக் சதக்' தலைப்புகளை இப்போது காணமுடிவதில்லை; "பக்கத்து வீட்டுப் பையனுடன் பருவப் பெண் ஓட்டம்" செய்திகளைப் பார்க்க இயலவில்லை. அதற்குப் பதில் செவ்வாய்க்கு வானூர்தி, அந்தராக்ஸ் போன்ற சிறப்புக் கட்டுரைகள் இடம்பெறுகின்றன.

இதற்குக் என்ன காரணம்? ஆதித்தனார் "தந்தி" தொடங்கிய போது, தமிழ்நாட்டில் படித்தவர்கள் பத்து விழுக்காடு; இப்போது அறுபது விழுக்காடு. இதற்கு ஏற்பத் 'தினத்தந்தி'யும் தன்னை உயர்த்திக் கொண்டுவிட்டது.

ஆதித்தனார் சொல்லுவார்-"தினத்தந்தி என்பது ஒரு குளத்தில் மிதக்கும் தாமரைப்பூ போன்றது. குளத்தில் தண்ணீர் உயர உயரத் தாமரையும் மேலே போகும். அதுபோல, வாசகர்களின் தரம் உயர உயர 'தந்தி'யும் தன்னை உயர்த்திக்கெள்ளவேண்டும். இல்லாவிட்டால், சேற்றில் சிக்கிய வண்டி போல ஆகிவிடும்".

அய்யா ஆதித்தனார் அவர்களையே வழிகாட்டியாகக் கொண்டிருப்பதால்தான் 'தந்தி'யின் சாதனை இன்றும் தொடர்கிறது.

ஆதித்தனாரின் சாதனையை "பாமரர்களைப் படிக்க வைத்தார்" என்று ஒரு வரியில் முடித்துவிடுவார்கள். ஆனால், அது மட்டும் ஆதித்தனாரின் சாதனை அல்ல. அவரது சாதனை இன்னும் பெரியது. வரலாறு படைத்தது. அதைத் தந்தை பெரியார் கூறுகிறார்.

> "செயற்கரிய செய்த பெரியார் ஆதித்தனார். யாருமே செய்யாத அரிய செயல்களை அவர் செய்திருக்கிறார். இதை நான்தான் நன்கு உணர்கிறேன். முப்பது

ஆண்டுக்கு முன்பு தமிழனுக்கு என்று ஒரு பத்திரிகை கிடையாது. ஒரு சிலர் தொடங்கிய பத்திரிகைகளும் தலைதூக்க முடியாமல் ஒழிந்தன. ஆதித்தனார் ஒரு பத்திரிகை தொடங்கினார் - மளமளவென்று வளர்ந்தது. எல்லாவற்றையும் சமாளித்துக் கொண்டு வளர்ந்தது. நன்றாகவே வேரூன்றிவிட்டது. இது எவ்வளவு பெரிய செயல் என்று எனக்குத்தான் தெரியும். நாமும் பத்திரிகை நடத்தலாம் என்ற துணிவை மற்றவர்களுக்குக் கொடுத்தவர் ஆதித்தனார்தான். ஆகவேதான் ஆதித்தனாரை 'செயற்கரிய செய்த பெரியார்' என்று சொல்லுகிறேன்".

'நாமும் பத்திரிகை நடத்தலாம்' என்ற துணிவை மட்டும் மற்றவர்களுக்குக் கொடுக்கவில்லை, ஆதித்தனார். வெற்றியுடன் இதழ் நடத்தப் பாதையும் அமைத்துத் தந்துள்ளார், அந்த சாதித்தனார்!

அறிஞர் அண்ணா

பு.இரா. முத்துக்கிருட்டிணன்

சமூக நீதியுடன் கூடிய விழிப்புணர்வு, அரசியல் விடிவு என்ற இரண்டையும் மட்டுமே தமது இலக்குகளாக அடையாளப்படுத்திக் கொண்ட அண்ணா அவர்கள், அவற்றை அடையும் கருவிகளாகவே தம் பேச்சாற்றலையும் எழுதுந் திறனையும் பயன்படுத்தினார். அப்படி வெளிப்படுத்துவதற்கான களங்கள் தேவைப்பட்டன. மேடையிலே பேசி இலட்சியத்தை எடுத்துச்சொல்லி, மக்களைத் திரட்டி ஓர் அணியில் நிறுத்துவது ஒரு நிலை. தம் சிந்தனைப் பட்டறையில் கனன்று சுடர் விடும் எண்ணங்களின் பிழிவைத் தெளிவாகவும் சுவைபடவும் விளக்குவதற்குப் பல்வேறு உத்திகளைக் கையாண்டு மக்களைச் சென்று சேரும் வகையில் எழுத்தில் கொண்டு வர வேண்டும். இது இன்னொரு நிலை. இதற்கு ஒரே வழி, தமக்கு முழு எழுத்துச் சுதந்திரம் தரும் ஓர் இதழ் வேண்டும் என்று எண்ணினார்.

இப்படி அவருக்குள்ள எவ்வளவோ சிறப்புகளை அடுக்கினாலும், முதலும் முடிவுமாக அவர் ஓர் இதழாளர். தம் 26ஆவது வயதில் கல்லூரிப் படிப்பை முடித்தபின், அலுவலகப் பணிக்குப் போகாமல், பொதுவாழ்வில் ஈடுபடுவது என்று தன்னம்பிக்கையோடு முடிவெடுத்த அண்ணா அவர்கள், இதழ்ப் பணியையே தம் பொதுவாழ்வுப் பணியாகத் தொடங்கினார். 1969இல் தாம் கண்மூடும் வரை இதழ்ப்பணியையே தம் பொதுவாழ்வின் அடிநாதமாகக் கருதினார். முதன்முறையாக அவர் கிழக்கு நாடுகளுக்குச் சுற்றுப்பயணம் சென்றபோது கடவுச்சீட்டுக்கு (Passport) விண்ணப்பித்தார். விண்ணப்பத்தாளில் தம்முடைய தொழில் (Profession) 'இதழாளர்' (Journalist) என்றுதான் குறிப்பிட்டார். அதுவே ஆவணங்களில் பதிவும் ஆயிற்று. எனவே அண்ணா அவர்கள் தாமே விரும்பி ஏற்றுக்கொண்ட முதன்மையான பொதுவாழ்வுப் பணி - இதழ்ப் பணிதான்.

சூழ்நிலை ஓர் இளைஞரைப் புடம் போடுகிறது

அண்ணா அவர்களைச் செதுக்கிய காலச் சூழல்கள், அவர் படித்துத் தெரிந்தவை, பார்த்துப் புரிந்தவை, பட்டுப் பெற்றவை ஆகியன அவரது எதிர்காலத்தை வடிவமைத்துக் கொடுத்தன.

"நிலைமையை நான் உண்டாக்கவில்லை. நிலைமை என்னை உண்டாக்கிற்று. நிலைமையைப் புரிந்து நான் பணியாற்றுகிறேன். அவ்வளவுதான்" என்று பேரறிஞர் அண்ணா அவர்கள் பல சூழ்நிலைகளில் எழுதினார்கள் - பேசினார்கள். உண்மை அதுதான்.

இந்தியத் துணைக்கண்டத்துத் தென்கோடித் தமிழ் மண்ணில் உருவாகி வந்த நிலைமைகளின் விளைவாய்த் *தென்னிந்திய நல உரிமைச் சங்கமும்*, காங்கிரசுப் பேரியக்கத்தில் இருந்து விலகி வந்த பெரியார் தொடங்கித் தலைமையேற்று நடத்திய சுயமரியாதை இயக்கமும், ஆற்றி வந்த பெரும்பணியில் பெரியாருடன் தம்மை இணைத்துக் கொண்டார் பேரறிஞர் அண்ணா.

1935இல் திருப்பூரில் நடைபெற்ற செங்குந்த இளைஞர் மாநாட்டில், பெரியார் அவர்களை அண்ணா சந்திக்க நேர்ந்தது. பெரியார் அண்ணாவிடம், "என்ன செய்துகொண்டிருக்கிறாய்?" என்று கேட்டார்.

"படிக்கிறேன், பரீட்சை எழுதி இருக்கிறேன்" என்றார் அண்ணா.

"உத்தியோகம் பார்க்கப் போகிறாயா?" - பெரியார் கேட்டார்.

"இல்லை, உத்தியோகம் பார்க்க விருப்பம் இல்லை, பொதுவாழ்வில் ஈடுபட விருப்பம்" என்றார் அண்ணா.

அண்ணாவின் வாழ்க்கையைத் திசைமாற்றிய அவர் விரும்பிய இந்த முடிவைச் செயல்படுத்த, சண்டே அப்சர்வர் பாலசுப்பிரமணியம் பெரிதும் துணைசெய்தார். நீதிக்கட்சி முன்னணியினரான பொப்பிலி அரசரிடம் உதவியாளராகச் சேர உதவி செய்தார். அடுத்த சில ஆண்டுகளில், அண்ணாவின் எதிர்காலம் எப்படி இருக்கும் என்பதற்கு முன்னோட்டமாக நிலைமைகள் உருவாயின. அண்ணாவின் கல்லூரிப் பேராசிரியர் மா. வரதராசன் அவர்கள் ஊட்டிய உற்சாகத்தாலும், தந்த ஒத்துழைப்பாலும் அண்ணா சட்டக் கல்லூரியில் சேர்ந்து சட்டம் பயின்றார். மூன்றே மாதங்கள்தான். பொருள்முடை சட்டப் படிப்பைக் கைவிட வேண்டியதாயிற்று. அதே 1935ஆம் ஆண்டில்தான், சென்னையில் தங்கசாலைத் தெருவின்

வடகோடியில், தாம் குடியிருந்த கொண்டித் தோப்பை உள்ளடக்கிய பெத்தநாயக்கன் பேட்டைத் தொகுதிக்கு, நீதிக்கட்சியின் சார்பில் சென்னை மாநகராட்சி உறுப்பினர் பொறுப்புக்குப் போட்டியிட்டுத் தோற்றார்.

சென்னை இராஜதானியை ஆண்ட நீதிக்கட்சியின் பிரதம அமைச்சராக இருந்த பொப்பிலி அரசரின் (ராவ் ஸ்வேதாசலபதி ராமகிருஷ்ண ரங்காராவ்) உதவியாளராக இருந்தபோது, அவரது சொற்பொழிவை அண்ணா மொழிபெயர்க்க வேண்டி இருந்தது. அதேபோல் சென்னை மாநகரத்தின் மேயரும், நீதிக்கட்சியின் முன்னணியினருமான திரு. பாசுதேவ் என்ற தொழிற்சங்கத் தலைவரின் பொதுநிகழ்ச்சிகளிலும் தொழிற்சங்க அரங்கங்களிலும் அண்ணா உரையாற்றினார். இப்படி ஒரு பேச்சாளராக மட்டுமே அறிமுகமாகி இருந்த அண்ணா அவர்களை 1936இல் முதன்முதலில் தாம் தொடங்கிய 'பாலபாரதி' என்ற இதழுக்கு ஆசிரியராக்கி ஒரு எழுத்தாளராக அடையாளம் காட்டினார், திரு. பாசுதேவ். 1937இல் அண்ணா அவர்களை ஆசிரியராகக் கொண்டு 'நவயுகம்' என்ற இதழை, காஞ்சி மணிமொழியார் சென்னையில் தொடங்கினார். பதின்மூன்றே வாரங்கள் வெளிவந்த நவயுகத்தில் அண்ணா சுவையான கட்டுரைகளை எழுதி இருக்கிறார். நவயுகம் அண்ணா அவர்களை ஒரு இதழாளராக நிலைப்படுத்தியது.

1935இல் பெரியாரைச் சந்தித்தபோதே அவரது துணிவும், எளிமையும் ஆரவாரம் இல்லாத பொதுத்தொண்டும், மக்களிடையே விழிப்புணர்ச்சி ஊட்டுவதற்காகவே அவர் மேற்கொண்டிருந்த தன்னலமற்ற சேவையும், அண்ணா அவர்களை வெகுவாகக் கவர்ந்திருந்தன. அந்த நாளில் கிட்டத்தட்ட ஓராண்டு முழுமையும் அவர் பல ஐரோப்பிய நாடுகளுக்குப் பயணம் சென்றதும், சோவியத் ரஷ்யாவில் தங்கி இருந்ததும், ரஷ்யத் தலைவர் ஜோசப் ஸ்டாலின் தலைமை ஏற்ற அவ்வாண்டு மேதின விழாவில், பெரியார் ஸ்டாலினுக்கு அறிமுகம் செய்துவைக்கப் பட்டார் என்பதும், அண்ணா அவர்களின் மனத்தில் பெரியாரைப் பற்றி ஒரு மரியாதையும் மதிப்பும் உண்டாகக் காரணங்களாய் அமைந்தன. இந்த நிலையில்தான் அண்ணா அவர்களின் சிறப்பாற்றல்களைச் சரியாக மதிப்பிட்டு வைத்திருந்த பெரியார், 1935இல் டி.ஏ.வி. நாதன் அவர்களை ஆசிரியராகக் கொண்டு தொடங்கப்பெற்று நடந்து

வந்த விடுதலை இதழை, பொதுத்தேர்தலுக்கு முன்னால் நாளிதழ் ஆக்கும் முயற்சி மேற்கொண்ட போது, துணையாசிரியராக இருந்து அதை நடத்தும்படி அண்ணாவைக் கேட்டுக்கொண்டார். குடியரசு, விடுதலை இதழ்களில் அண்ணா பணியாற்றிய நாட்களில், இடையிடையே அரசியல் மேடைகளிலும் சொற்பொழிவாற்றிக் கொண்டிருந்தார். என்றாலும் ஓர் ஏக்கம் அவர் மனத்தில் குடி கொண்டு கோலோச்சத் தொடங்கியது. இந்தி எதிர்ப்பின் விளைவாய், 'தமிழ்நாடு தமிழருக்கே' என்று தொடங்கிய முழக்கத்தை 'திராவிட நாடு திராவிடருக்கே' என்று தீர்க்கதரிசனத்தோடு மாற்றினார் அண்ணா. இங்கு வாழ்ந்து கொண்டிருந்த மக்களைத் 'திராவிடர்' என்றும் தமிழகம், ஆந்திரம், கேரளம், கர்நாடகம், ஒரிசாவின் தென்பகுதியை இணைத்திருந்த ஆட்சியின் எல்லைப் பரப்பை 'திராவிட நாடு' என்றும் அடையாளப்படுத்தினார். மெல்லத் துளிர்த்த இந்த உணர்ச்சி, உருப்பெற்று வளரத்தொடங்கிய போது, அப்போது வெளிவந்து கொண்டிருந்த நீதிக்கட்சி, சுயமரியாதை இயக்க இதழ்கள், குறிக்கோளை வென்றெடுக்கப் போதாது என்று எண்ணினார். ஆகவே இந்தக் கருத்துகளை மக்களிடையே தெளிவாகப் பரப்பவும், பொருளியல் அரசியல் நிகழ்வுகளிலும், பிரிட்டிஷ் அரசு-காங்கிரசு இயக்கத்தின் ஊடாடல்கள் பற்றியும் கருத்துத் தெரிவிக்கவும் ஓர் புதிய இதழ் தேவை என்று நம்பினார்.

இரட்டை ஆட்சி முறையைப் பயன்படுத்திக் கொண்டு 20 ஆண்டுகள் இந்த மண்ணை மிகச் சிறப்பாக, தமக்குக் கிடைத்த வரம்புக்குட்பட்ட ஆட்சி வாய்ப்பைப் பயன்படுத்திக் கொண்டு, இந்தியத் துணைக்கண்டமே வியக்கும் வகையில் ஆட்சி நடத்திய நீதிக்கட்சி - தென்னிந்திய நல உரிமைச் சங்கம் - இப்படி அரசியலில் இருந்து ஒதுங்கிச் செயலிழந்து ஓய்ந்து போய், 'பதவியில் பங்கு' என்பதை மட்டுமே பேசிக் கொண்டிருப்பதை அண்ணா மாற்ற விரும்பினார். தாம் விரும்பிய பாதையில் இயக்கத் தோழர்களையும் பொதுமக்களையும் பயிற்றுவித்து விழிப்படையச் செய்ய, குறிப்பாக அரசியல் கருத்துகளையும் செய்தி - விமர்சனங்களையும் தெளிவாக எழுதிடத் தாமே ஓர் இதழ் தொடங்கினால் நல்லது என்றும் எண்ணினார்.

நீதிக் கட்சியின் நாட்களில் அக்கட்சியின் கொள்கைகளை, சிறப்பான செயல்பாடுகளை மக்களிடையே விளக்கமாக எடுத்துச் சொல்லத்தக்க தமிழ் இதழ் ஏதும் இல்லை என்றே சொல்லலாம்.

திராவிடநாடு இதழ்

இந்த நெருக்கடியான கால நிலைதான் அண்ணாவைத் 'திராவிடநாடு' இதழ் தொடங்க உந்தியது. சொந்தமாக இதழ் தொடங்க வேண்டுமென்ற தம் எண்ணத்தைத் நண்பர்களிடமும் தம் சிற்றன்னையிடமும் (தொத்தா) சொல்லிக் கொண்டிருந்தாரே தவிர, அதற்குத் தேவையான பணவசதி இல்லை. ஆனால் நல்ல நண்பர்கள் இருந்தார்கள் துணைக்கு. அண்ணாவின் முனைப்பும், ஆர்வமும் வீட்டாரை நெருக்கின. அண்ணாவின் சிற்றன்னையார் காஞ்சிபுரத்தின் தென்கோடியில் பாலாற்றங்கரையோரம் இருந்த தேனம்பாக்கத்தில், தங்களுக்குச் சொந்தமான சிறிய துண்டு நிலம் ஒன்றை அடைமானம் வைத்து 'சின்ன காஞ்சிபுரம் கூட்டுறவு அர்பன் பாங்கு' என்ற வங்கியில் காஞ்சிப்பெரியவர் சுயமரியாதை இயக்கத்தூண் ஏ.கே. தங்கவேலரின் அண்ணன் ஏ.கே. பொன்னுசாமி, அந்த வங்கித் தலைவராக இருந்தபோது, அவருடைய உதவியால் ரூ.500 கடன் பெற்று, அண்ணா இதழ் தொடங்க ஏற்பாடு செய்தார். அவர் வாழ்ந்த வரகுவாசல் தெரு வீட்டிற்கு மிக அணித்தே, மேற்கே சில வீடுகள் தள்ளி இருந்த நிமந்தகாரத் தெரு என்ற குறுக்குத் தெருவில் 51ஆம் இலக்கமுள்ள, நண்பர் டி.பி.எஸ். பொன்னப்பாவுக்குச் சொந்தமான சிறிய ஓட்டு வீட்டில் அலுவலகம் தொடங்கப்பெற்றது. இதழுக்கு அண்ணா இட்ட பெயர் 'திராவிட நாடு'.

1968இல் சென்னை எழும்பூரில் தினத்தந்தி நாளிதழின் வெள்ளி விழாவில் பேசுகையில், அறிஞர் அண்ணா, பொதுவாக இதழ்கள் பற்றிப் பேசினார். அப்போது, "ஓர் இதழின் பெயர், அதன் பெயரைக் கேட்டவுடன், இதழின் கொள்கையைக் குறிப்பதாக, உள்ளடக்கத்தை வெளிப்படுத்துவதாக, மனத்தில் ஒரு தாக்கத்தை ஏற்படுத்துவதாக இருக்க வேண்டும்" என்று சொன்னார். 'திராவிட நாடு' என்ற பெயரைக் கேட்டவுடன் எவருக்கும் அண்ணா சொன்ன அனைத்தும் நினைவுக்கு வரும்.

'திராவிட நாடு' இதழ் தொடங்குவதற்கு எல்லா வகைகளிலும் உதவியாக இருந்தவர், பின்னாளில் அண்ணாவின் உறவினரான, இளைஞர் டி.பி.எஸ். பொன்னப்பா, (இவர்தான் சிஎன்.ஏ. பரிமளம் அவர்களின் தந்தை). அந்த நாளில் அண்ணாவின் பள்ளித் தோழர் சிவி. இராசகோபால் (மிராசுதார்) அவர்களுடன்

சேர்ந்து பொன்ராஜ் பிக்சர்ஸ்க்காக அந்த நாள் நடிகையான டி.ஆர். இராஜகுமாரியைக் கதாநாயகியாகக் கொண்டு 'மந்தாரவதி' என்ற திரைப்படம் எடுத்தவர். அவருடைய நிமந்தகாரத் தெரு வீட்டில்தான் 'திராவிட நாடு' தொடங்கியது. அச்சுப்பொறி வாங்க வசதி இன்மையால் வெளி அச்சகத்தில் அச்சடிக்க வேண்டி இருந்தது. அறிஞர் அண்ணா அவர்களைப் போலவே திராவிட நாடு இதழும் இதழியலில் தடம்பதித்து, திராவிட இயக்க இதழ்களுக்கு முன்னோடியாக அமைந்து, புத்தொளி பாய்ச்சத் தொடங்கியது. வியர்வைக் குலத்தை விடியலை நோக்கி அழைத்துச் செல்வதற்காக புறப்பட்ட 'திராவிட நாடு' சனிக்கிழமை பிற்பகல் அல்லது மாலையில் காஞ்சிபுரத்தில் கிடைத்துவிடும். ஞாயிற்றுக்கிழமை காலையில் போனால் இதழ் கிடைக்காது. விரலிடுக்கில் ஓரணாவை (இன்றைய 6 காசு) வைத்துக்கொண்டு இதழ் வருகிற நேரத்தில் காத்திருப்பார்கள். இரண்டு மணி நேரத்திற்குள் விற்றுத் தீர்ந்துவிடும்.

08.03.1942 (விசு வருடம் மாசி 25ஆம் தேதி ஞாயிறு) திராவிட நாடு முதல் இதழ் (மலர், இதழ்) சி.என். அண்ணாதுரை, எம்.ஏ. அவர்களை ஆசிரியரார்கக் கொண்டு, முகிழ்த்தது. காஞ்சிபுரம் அடிசன்பேட்டை, தி யுனைடெட் பிரிண்டிங் ஓர்க்ஸ் என்ற அச்சகத்தில் அச்சிடப்பட்டு, சின்ன காஞ்சிபுரம், நிமந்தகாரத் தெரு, இலக்கம் 51இல் இருந்து வெளியிடப்பெற்றது. 12 பக்கங்கள், விலை ஓரணா. முதல் இதழில் 11 பக்கங்களில் கட்டுரைகள், போர்ச் செய்திகள், அரசியல் விமர்சனங்கள், 12ஆம் பக்கத்தில் இரண்டு விளம்பரங்கள்.

திராவிட நாடு தொடங்கப்பட்ட நேரம், நிலைமை பற்றி அண்ணா தம் முதல் தலையங்கத்தில் குறிப்பிடுகிறார். பத்திரிகை சுதந்திரம் பறிக்கப் பட்டிருந்த நேரம். காகிதத் தட்டுபாடு இருந்தது. அதனால் இதழ்களுக்குக் காகிதக கட்டுப்பாடும் விதிக்கப்பட்டிருந்தது. மலாயா, சிங்கப்பூர், பர்மா (மியான்மர்), அந்தமான் பகுதிகளைத் தன் கட்டுப்பாட்டில் கொண்டு வந்துவிட்டது ஜப்பான். 'இன்றோ நாளையோ இந்தியாவில் கால் வைக்கலாம்' என்ற நிலை. 'இந்தியர் அனைவரும் எவ்விதத் தயக்கமும் இன்றியும், அரசியல் கட்சிகள் எவ்வித முன்நிபந்தனை இன்றியும் இந்தியாவின் தற்காப்புக்கு மனப்பூர்வமாக உதவ

வேண்டும்' என்று நாட்டை ஆண்ட பிரிட்டிஷ் அரசு மக்களை வேண்டிக் கொண்டது. "போர் முடிந்த உடனே இந்தியாவுக்கு முழு விடுதலை (பூரண சுயராஜ்யம்) அளிப்பதாக அரசு இப்போது ஒப்புக்கொண்டால் நாங்கள் உடனே அரசின் போர் முயற்சிகளில் ஒத்துழைப்போம் என்று அரசிடம் காங்கிரசு தீர்மானமாக அறிவித்துவிட்ட நிலை. அரசு இதற்கு ஒப்புக் கொள்ளவில்லை. காங்கிரசுக்கும் பிரிட்டிஷ் அரசுக்கும் இடையே ஏற்பட்ட கருத்து வேறுபாடுகளால், காந்தியடிகள் ஒத்துழையாமை இயக்கம் தொடங்கி 'வெள்ளையனே வெளியேறு' என்ற போராட்டத்தை அறிவித்தார். நாட்டில் குழப்பமும் கொந்தளிப்புமான நிலை. இந்நிலையில்தான் 'திராவிட நாடு' முதல் இதழ் தலையங்கத்துக்கு 'கொந்தளிப்பில்' என்று அண்ணா தலைப்புக் கொடுத்தார்.

> காற்றடிக்குது, கடல் குமுறுது, கப்பலும் பிரயாணத்தைத் தொடங்கிவிட்டது. இருண்ட வானம், சுருண்டு விழும் அலைகள், மை இருட்டு, ஆனாலும் பிரயாணம் நடந்தே தீர வேண்டும். கொந்தளிப்பிலும் கப்பல் சென்றுதான் ஆக வேண்டும். கடமை அழைக்கும்போது, காலத்தினால் ஏற்படும் கஷ்டத்தைச் சாக்காகக் கூறித் தப்பித்துக் கொள்வது மன்னிக்க முடியாத குற்றமாகும். எனவே கொந்தளிப்பு மிக்க இவ்வேளையில், 'திராவிடநாடு' வெளியிடுவதற்காக நாம் மன்னிப்புக் கோரவில்லை. மாறாக, நெருக்கடியான நேரத்தில் திராவிட நாடு' தமிழுக்குப் பணியாற்றப் புறப்படுவதற்காகத் தமிழர், அமைதியும் ஆனந்தமும் குடிகொண்டிருக்கும் காலத்தில் ஆதரிக்கும் அளவை விடச் சற்று அதிகமாகத் தமது ஆதரவைத் திராவிட நாட்டக்குக் காட்ட வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறோம்.

அந்தத் தலையங்கத்தின் தொடக்கப் பத்தி இது. அண்ணா, தம் எழுத்தையே வாளும் கேடயமுமாகப் பயன்படுத்தினார். அதற்குத் 'திராவிட நாடு' பெரிதும் பயன்பட்டது. தொடக்க நாட்களில் 12 பக்கங்களையும் அவரே எழுதினார். முதல் இதழிலே அவர் எழுதி இருக்கிற அத்தனை படைப்புகளுமே, தாம் எற்றுக்கொண்டு வழி நடத்துகிற கொள்கைகளை வெளிப்படுத்தும்

கருவிகளாகத்தான் அமைந்துள்ளன. முதல் இதழிலேயே தம்முடைய திராவிட நாடு இதழ் முழுக்க முழுக்கச் சமூக, பொருளியல், அரசியல் 'கொள்கைப்பரப்பு இதழ்' என்பதை மெய்ப்பித்து விட்டார்.

கவர்ச்சி கொஞ்சம் கூட இல்லாத, சாதாரண நியூஸ் பிரிண்ட் தாளில் அச்சிடப்பட்ட இந்தப் பன்னிரண்டு பக்க இதழைக் காத்திருந்து வாங்கிக்கொண்டு போய், ஒரே மூச்சில் அவ்வளவையும் படித்து, அடுத்தவருக்கும் படிக்கக் கொடுக்கும் கொள்கைப் பிடிப்பு மிக்க இயக்கத் தொண்டர்களும், ஆர்வங் கொண்ட பொதுமக்களும் மெல்ல மெல்ல அணி சேரத் தொடங்கினார்கள்.

ஒருவரே பன்னிரன்டு பக்கங்கள் எழுதினால், படிப்பவர்களுக்குச் சோர்வு தட்டிவிடக் கூடும். எனவே அண்ணா வெவ்வேறு புனைபெயர்களில் எழுதினார். தாம் சொல்ல நினைத்த செய்திகளை வெவ்வேறு வடிவங்களில் படைத்து வழங்கினார்; வெவ்வேறு மொழி நடையில் எழுதினார். நமக்குத் தெரிந்து அண்ணா 20 புனைபெயர்களில் எழுதியிருக்கிறார். ஆணி, கொழு, சம்மட்டி, சிறைபுகுந்தோன், வழிப்போக்கன் என்பதெல்லாம் அண்ணாவின் புனை பெயர்கள்.

சௌமியன்	11.02.1934	ஆனந்த விகடன் கதை.
பரதன்	13.02.1938	குடியரசு. அதன் பின்னர் திராவிட நாட்டில் பலமுறை பரதன் பகிரங்கக் கடிதம்
நக்கீரன்	03.04.1938	குடியரசு, 1947 வரை திராவிட நாட்டில் 'நக்கீரன்' பெயரில் எழுதினார். அதன் பின்னர் இந்தப் புனைப்பெயரில் ஈழத்து அடிகள் எழுதினார்.
வீரன்	09.01.1939	குடியரசு
குறும்பன்	1939	குடியரசு - நாடகம்
துரை	1942	திராவிட நாடு - ரோமாபுரி ராணிகள் தொடர்

வீனஸ்	15.03.1942	திராவிட நாடு
சமதர்மன்	1943	திராவிட நாடு
ஒற்றன்	1943	திராவிட நாடு
ஆணி	1944	திராவிட நாடு
நீலன்	1944	திராவிட நாடு - நீலன் நிருபம்
சம்மட்டி	29.04.1945	திராவிட நாடு- ஊரார் உரையாடல்
காலன்	17.06.1945	திராவிட நாடு
பேகன்	04.11.1945	திராவிட நாடு
வழிப்போக்கன்	1945	திராவிட நாடு
சிறைபுகுந்தோன்	1946	திராவிட நாடு
குறிப்போன்	1946	திராவிட நாடு
கொழு	12.01.1947	திராவிட நாடு
குயில்	14.01.1949	திராவிட நாடு
கீரதர்	18.04.1949	திராவிட நாடு

1947இல் விடுதலை இதழ் சென்னையிலிருந்து வெளிவரத் தொடங்கியபோது விடுதலையுடன் ஈரோட்டிலிருந்து சென்னை வந்த தோழர் இராம. அரங்கண்ணல், பெரியார் திருமணத்தை ஒட்டி ஏற்பட்ட மனக் கசப்பினால் பெரியாரிடமிருந்து விலகி, அண்ணா அவர்களுடன் காஞ்சிபுரம் சென்று 'திராவிட நாடு' இதழுக்குப் பொறுப்பேற்று எழுதத் தொடங்கினார். எழுத்துப் பணியைப் பகிர்ந்துகொள்ள திறமை மிக்க தோழர் ஒருவர் வந்தது அண்ணாவுக்குப் பெரிதும் உதவியாக இருந்தது.

1942 மார்ச்சு முதல் 1944 மே மாதம் வரை நிமந்தகாரத் தெருவில் நெருக்கடியான இடத்தில் செயல்பட்டுக் கொண்டிருந்த திராவிட நாடு, அதன்பின், அது அச்சடிக்கப்பட்ட தி யுனைடெட் பிரிண்டிங் ஒர்க்ஸ்க்கு அருகிலேயே, ஆடிசன்பேட்டை தேரடி அருகில், வசதியான வாடகைக் கட்டடத்திற்குக் குடி பெயர்ந்தது. வறுமையிலேயே பிறந்து, சவலைக் குழந்தையாகவே வளர்ந்து வந்த திராவிட நாடு நிதிப்பற்றாக் குறையினால், தவழ முடியாத சப்பாணியாகவே இருந்தது. அதற்கு நிதி திரட்ட வேண்டும், அதே நேரம் கொள்கைப்பிரசாரமும் மேற்கொள்ள வாகாகவும்

வசதியாகவும் இருக்கும் என்ற எண்ணத்தில் நடிப்பிசைப் புலவர் கே.ஆர். இராமசாமியும், திராவிட நாடு இதழின் மேலாளராக இருந்த ஈழத்து அடிகளும், டி.பி.எஸ். பொன்னப்பா அவர்களும் முடிவு செய்து அண்ணாவை, தாங்கள் நடிப்பதற்காக ஒரு சமூக நாடகம் எழுதித் தரும்படி வற்புறுத்தினார்கள். இப்படி எழுதப்பட்டதுதான் 'சந்திரோதயம்'. அதன் மூலம் சமூக நாடகங்கள் நடத்தி, கிடைக்கும் வருவாயில் ஒரு பகுதியைத் திராவிட நாடு இதழுக்கு வழங்கி வந்தார். இந்த நாடகங்களுக்கான ஒத்திகையுங் கூட திராவிட நாடு அலுவலகத்தில்தான் நடைபெற்றது. நாடக நடிகர்களும் அந்தக் கட்டடத்திலேயே தங்கிக் கொண்டார்கள். நடிகர் வளையாபதி முத்துக் கிருஷ்ணன், நாடக வசனங்களைப் பிரித்துக் கொடுத்து ஒத்திகையையும் கவனித்துக் கொண்டார். திராவிடர் இயக்கத்துக் கருத்துகள் மக்களைச் சென்றடைய அண்ணா பயன்படுத்திய இன்னொரு உத்தி இந்த நாடக ஆக்கம் என்றாலும், முதன்முதலாக அவர் நாடகம் எழுதத் தொடங்கியதே திராவிட நாடு இதழின் வளர்ச்சிக்காகத்தான் என்பது கருத்தில் கொள்ளத்தக்க உண்மை. இதில் இன்னொரு புதுமையும் சிறப்பும் உண்டு. இதற்கு முந்தின நாட்களில் நாடகக் குழுக்கள் தம் நிரந்தர நடிகர்களைக் கொண்டுதான் நாடகங்களை நடத்துவது வழக்கம். அண்ணாவின் நாடகங்களிலோ, யார் யாரெல்லாமோ நடித்தார்கள். எங்கெங்கெல்லாமோ பணி செய்பவர்கள், கொள்கைப் பற்றின் காரணமாக இந்த நாடகங்களில் நடிக்க வந்தார்கள். இதற்கிடையே அண்ணாவின் நாடகம் '*வேலைக்காரி*' திரைப்படம் ஆகியது. அதற்காக அண்ணா ஊதியமாகப் பெற்ற ரூ.12,000/-த்தில் ரூ.6000/-த்தைச் செலவிட்டு, சின்ன காஞ்சிபுரம் திருக்கச்சி நம்பித் தெருவில் 95ஆம் இலக்கமுள்ள வீட்டை, திராவிட நாடு இதழுக்காக அண்ணாவின் சிற்றன்னை வாங்கினார்கள். 14.12.1947 இதழ் தொடங்கி, சொந்தக் கட்டடத்திலிருந்து சொந்த அச்சு இயந்திரத்தில் அச்சிட்டு திராவிட நாடு உலா வரலாயிற்று. 1942 மார்ச்சு தொடங்கியதிலிருந்து இதுவரை, இந்த இடைக்காலத்தில். திராவிட நாடு இதழ் சாதித்ததும் அதிகம், சந்தித்த சோதனைகளும் அப்படியே!

திராவிட நாடு இதழில் பணி ஆற்றிய ஒவ்வொருவரும் ஒவ்வொரு வார்ப்பு. அவர்கள் சம்பளம் வாங்கிக் கொண்டு வேலை

செய்தார்களே தவிர, சம்பளத்துக்காக வேலை செய்தவர்கள் அல்லர். திராவிட நாடு ஒரு குடும்பம். திராவிட நாடு இதழில் பணியாற்றிய ஈழத்து அடிகள், கே.டி. எஸ்.மணி, வெ. சம்பந்தம், ஆர். கிருஷ்ணமூர்த்தி, மாணிக்கம், இராசாபாதர், ஏழுமலை, பஞ்சாட்சரம், தக்கோலம் ராமசாமி ஆகிய இவர்கள் எல்லாருமே அண்ணாவின் நாடகங்களில் நடிப்பவர்கள். ஈழத்து அடிகள் மேலாளராக மட்டுமன்றிப் பெரியபுராண ஆராய்ச்சிக் கட்டுரைகள் எழுதியிருக்கிறார். கரூரில் இந்தி எதிர்ப்புப் போரை முன்னின்று நிகழ்த்தியவர்; அண்ணாவுடன் சிறையிருந்தவர்; வெ. சம்பந்தம் அச்சுக் கோப்பவர் என்றாலும் கட்டுரைகள், கதைகள் எழுதுவதுடன் அண்ணாவின் 'நீதிதேவன் மயக்கத்'தில் நீதிதேவனாக நடிப்பவர். கிருஷ்ணமூர்த்தி ஒரு சிறந்த நடிகர். அண்ணாவின் சந்திரமோகன் நாடகத்தில் சிவாஜியாக வேடமிட்ட வி.சி. கணேசன், திரைப்படங்களில் புகழ் பெற்று ஒதுங்கிய பிறகு, ஈ.வெ.கி. சம்பத் 'சிவாஜி' வேடம் தாங்கினார். ஓர் ஊரில் நாடகத்துக்குச் சம்பத் வரவில்லை. இந்தக் கிருஷ்ணமூர்த்திதான் சிவாஜியாக வேடமிட்டு மிகச் சிறப்பாக நடித்தார். எல்லாருக்கும் எல்லா நடிகர்களின் பாடமும் மனப்பாடம்! "ஆபத்பாந்தவர்கள்"! இவர்கள் எல்லாருமே அண்ணாவிடம் பாசத்தோடு பழகுகிறவர்கள்.

திராவிட நாடு இதழில் படைப்புகள் வழங்கியோர்

வாழ்க்கையில் பின்னாளில் பெரும் பொறுப்புகள் வகித்தவர்கள் பலர், தொடக்க நாட்களில் திராவிட நாடு இதழில் எழுத்தோவியங்கள் தீட்டி இருக்கிறார்கள். அவர்களில் சிலர்: பாரதிதாசன், புதுவைசிவம் (சிவப்பிரகாசம்), ஈழத்து அடிகள், கா. அப்பாசாமி, இரா. நெடுஞ்செழியன், இரா. செழியன், கம்பதாசன், எஸ்.வி. லிங்கம், தில்லை வில்லாளன், கே.ஜி. தாமரை மணாளன், வா.செ. குலோத்துங்கன் (வா. செ. குழந்தைசாமி), கைவல்யம், மா. நன்னன், சாத்தூர் இராமசாமி, கோவை இளஞ்சேரன், வெ. சம்பந்தம், எஸ். வேதரத்தினம், மதுரகவி வி. முருகேச பாகவதர், திரும்பாம்பரம் தி. சாமிநாத பிள்ளை (அண்ணாமலைப் பல்கலைக்கழக இசைக் கல்லூரி). புகழ் மேவ வாழ்ந்த இவர்களைத் தவிர இன்னும் ஏராளமானவர்கள் எழுதி இருக்கிறார்கள்.

அண்ணாவின் வழியில்

சுயமரியாதை இயக்கத்தைத் தம் 'குடியரசு' மூலம் பெரியார் அவர்கள் பெரியவர்கள் இடையில் - குடும்பத் தலைவர்கள் மூலம்

முன்னெடுத்துச் சென்றார்கள். தென்னிந்திய நலவுரிமைச் சங்கமும் துவக்க நாட்களில் - டாக்டர் சி. நடேசனார், பிட்டி தியாகராயர், டாக்டர் டி.எம். நாயர், பனகல் அரசர் இராமராயர் பொறுப்பில் இருந்த காலங்களில் - சமூகத்தில் ஏற்படுத்திய ஆழமான தாக்கமும், மக்களிடை இருந்த பரவலான ஆதரவும் குறையத் தொடங்கின. இதன் காரணம், மெழுகுவத்தியாய்த் தன்னை எரித்துக்கொண்ட நீதிக் கட்சியின் அளப்பரிய சாதனைகள் கொள்கைப்பரப்புக்கு இதழ்கள் தேவை. அந்த முறையில் நீதிக்கட்சி செயல்படவே இல்லை. எவ்வளவோ வசதி இருந்தும் 'ஜஸ்டிஸ்' ஆங்கில இதழும், தமிழ் 'திராவிடன்' இதழும், தளர்நடை போட்டே வந்தன. பெரியாரின் குடி அரசைப் பயந்து பயந்து படித்தார்கள்.

பலர் அண்ணா திராவிட நாடு தொடங்கிய பிறகுதான், அண்ணாவின் எழுத்துவீச்சால் தாக்குண்டு, சிந்திக்கத் தொடங்கி, தாமும் எழுத வேண்டும் - இதழ் தொடங்க வேண்டும் - என்று முனைப்பும் ஆர்வமும் காட்டினார்கள். அண்ணாவுக்கு நெருக்கமாக இருந்த காஞ்சி மணிமொழியார், என்.வி. நடராசன், புலவர் பு. செல்வராசு, க. அன்பழகன், இரா. நெடுஞ்செழியன், இரா. செழியன் போன்றோர் கிழமை ஏடுகள், மாத இதழ்கள் தொடங்கினார்கள். பிறகு அணி அணியாய் இதழ்கள் வெளியாகி வெற்றிநடை போட்டன. இப்படி திராவிட இயக்கத்தின் கொள்கைப்பரப்புக் கருவிகளாக இதழ்கள் தோன்றுவது அண்ணாவுக்குப் பெருமகிழ்ச்சியையும், அடுத்த கட்டப் பணிக்கு அயத்தமாக வேண்டும் என்ற உணர்வையும் உண்டாக்கின.

பெரியாரின் 69ஆம் அகவை 'பெரியார் வாரம்' கொண்டாடிய பொழுது, 28.9.1947 திராவிட நாடு இதழில் மிகுந்த மகிழ்ச்சியுடன் ஒரு கட்டுரை எழுதினார் அண்ணா.

> துவக்க நாட்களில் ஒரே ஒரு இதழ்! குடி அரசு! அதைப் படிக்கவே பயப்படுவார்கள். படித்தவர் பதறுவர். அது நாட்டிலே பரவ ஒட்டாதபடி பல சதிச் செயல்கள் நடைபெற்றன. 'அந்த ஒரு இதழ் என்ன செய்ய முடியும்? என்று பேசி இறுமாந்தனர், பல பத்திரிகைகள் தங்கள் பக்க பலமாக உள்ளன என்ற தைரியத்திலே! அவர்கள் கண் திறந்து பார்க்கட்டும்.

இந்த வாரம் பெரியாரின் பெருந்தொண்டினைச் சிறப்பித்து விளக்குவது ஒரு குடி அரசு மட்டுமா? அல்ல! அல்ல!! ஆரியம் எதிர்பார்த்திருக்கவே முடியாது. நாமே கூடச் சில ஆண்டுகளுக்கு முன்னால் நினைத்திருக்க முடியாது. அவ்வளவு இதழ்கள் - அழகான வடிவு - ஆர்வமிக்க இளைஞர்களின் எழுத்தோவியங்கள். அவ்வளவு இதழ்களும் இன்று திராவிட இன முரசுகள். ஒரு ஐஸ்டிஸ் இதழ் எத்தனை மந்திரிகளின் பணத்தைச் சாப்பிட்டு ஏப்பம் விட்டு அஜீர்ணத்தாலேயே இறந்து பட்டது. ஒரு திராவிடன் ஓடி ஆடிப் பாடுபட்டு இறந்து விட்டது. ஆனால் இன்று!

இதோ மகிழ்ச்சியும் பெருமையும் தரக்கூடிய அட்டவணை

மன்றம்

தீப்பொறி (வேலூர்)	பொன்னி	நகரதூதன்
தீப்பொறி (சென்னை)	குயில் (மாதம்)	சண்டே அப்சர்வர் (ஆங்கிலம்)
திராவிட அரசு	குயில் (வாரம்)	லிபரேடர் (ஆங்கிலம்)
திராவிட முரசு	குயில் (கவிதை)	கோவை முரசு
போர்வாள்	தமிழ்நாடு (சென்னை)	வழிகாட்டி
திராவிடன்	நிலவு	சமத்துவம்
பூந்தோட்டம்	மயில்	சமரசம்
தோழன்	திராவிட மணி	தமிழ் ஏடு
அழகு	சூறாவளி	குரல்
கதிரவன்	புதுவாழ்வு	விடுதலை
டார்ப்பிடோ	நியூ ஐஸ்டிஸ் (ஆங்கிலம்)	குடி அரசு
இன ஒலி	தமிழகம்	ஐஸ்டிசைட்
மறுமலர்ச்சி	திராவிடம்	திராவிட நாடு

> வளர்ந்து விட்டன; வளர்ந்து கொண்டே உள்ளன. வளரும் வளம் திராவிடத்துக்கு ஏற்பட்டுவிட்டது. குறிக்கோள் அற்றுக்கிடந்த திராவிடத்துக்குத் தக்கதோர் குறிக்கோளைக் காட்டும் அக்காரியத்தை அவர் (பெரியார்) செய்து முடித்து விட்டார். நமது வணக்கம் அவருக்கு. சுரங்கத்திலிருந்து தங்கப் பாளங்களை வெளியே கொண்டு வந்தாகி விட்டது. ஆம். இனி, அணிமணி செய்யும் காரியந்தான் இருக்கிறது. அதைச் செய்ய வழிவகுத்துத் தரும் வேலைதான் பெரியாருக்கு.

'நிலவளம்' இதழாசிரியர் திரு. க. சந்திரசேகரன் அவர்கள் தொகுத்த 257 திராவிட இயக்க இதழ்களின் பட்டியலை, திராவிட இயக்க ஆய்வறிஞர் திரு. க. திருநாவுக்கரசு அவர்கள் தம்முடைய 'திராவிட இயக்க இதழ்கள் - ஓர் ஆய்வு' என்ற நூலில் வெளியிட்டுள்ளார்கள். அவற்றில் பெரும்பாலானவை 1942இல், அண்ணா திராவிட நாடு தொடங்கிய பின்னர், அவ்விதழின் தாக்கத்தால் வெளியானவையே என்பதை உறுதியாகச் சொல்லலாம்.

இத்தனை இதழ்களும் அண்ணாவின் எழுத்து வீச்சைத் திராவிட நாடு மூலம் கண்டு அதன் ஈர்ப்பில் கட்டுண்டு, அந்தக் கருத்துகளை அண்ணாவுடன் நாமும் சேர்ந்து பரப்புவோம் என்று உந்தப்பட்ட முன்னணி இளைஞர்களால் தொடங்கப்பட்ட இதழ்கள். அண்ணா அவர்கள் தம் தம்பிகளைப் பற்றிச் சொல்லுங்கால், "என் தம்பிகள் என்னைப் போல் ஆற்றலை நிரம்பப் பெற்றிருக்கிறார்கள். மெத்த மகிழ்ச்சியாக இருக்கிறது. ஆனால் என் இயல்புகளையும் அவர்கள் பெற வேண்டும் என்று விரும்புகிறேன்" என்று தம் எழுத்திலும் பேச்சிலும் குறிப்பிட்டிருக்கிறார்கள்.

சென்னையில் புரசவாக்கத்தில் வேளாளத் தெருவில் திரு. க.அன்பழகன் அவர்கள் இல்லத்தில் அண்ணா அவர்கள் நண்பர்களுடன் பலமணி நேரம் தங்கி உரையாடுவார்கள். உள்ளந் திறந்த, தடையும் இடையீடும் இல்லாத, அவரவர் தம் கருத்துகளை வெளியிட, அந்த இடம் ஒரு சிந்தனையாளர் பட்டறையாக இருந்தது என்பார்கள். அதில் (பேராசிரியர்) க.அன்பழகன், இரா. நெடுஞ்செழியன், இரா. செழியன், ப. வாணன் போன்ற (அன்றைய) இளைஞர்கள் பலர் பங்கு கொண்டு கலந்துரையாடி இருக்கிறார்கள்.

இவ்வளவு இதழ்கள் வளர்ந்து வரும் நிலை பற்றி மகிழ்ச்சியுடன் முரசு கொட்டிய அண்ணா அவர்கள் அதன் ஊடே ஜஸ்டிஸ் தலைவர்களின் முறைக்கும் இதற்கும் நேர்மாறு' என்று இலைமறை காயாக ஒரு செய்தியைச் சொல்லுகிறார். 'ஜஸ்டிஸ்' இதழும், 'திராவிட'னும் இறந்து போனதை வேதனையுடன் சொல்லும் போதே, குடி அரசும், விடுதலையும் தவிர வேறு இதழ்கள் வெளிவரவில்லையே என்ற ஆதங்கம் அதில் தெரிகிறது. தந்தை பெரியார் அவர்கள் இதழியலில் தடம் பதித்த ஒரு சாதனையாளர் என்றாலும், சுயமரியாதை இயக்கக் காலத்தில் கூட விடுதலை தவிர வேறு இதழ்கள் வெளிவரவில்லை என்பதே உண்மை. குடி அரசு இதழைச் சுயமரியாதை இயக்கப் பிரச்சார இதழாகவே பெரியார் நடத்தி வந்தார்.

திராவிட நாடு இதழுக்கு எவ்வளவோ இடர்கள் வந்தன. அண்ணா அவர்கள் 4.4.1948 தேதியிட்ட திராவிட நாடு இதழில், 'காந்தி இராமசாமியும், பெரியர் இராமசாமியும்' என்ற தலைப்பிலும், 18.4.1948 இதழில் 'வெள்ளி முளைக்க' என்ற தலைப்பிலும், ஓமந்தூர் இராமசாமியாரைக் கவிழ்க்கக் காங்கிரசுப் பார்ப்பனர்கள் கங்கணம் கட்டிக்கொண்டு வேலை செய்ததையும், அதிலிருந்து அவர் தப்பிப் பிழைத்ததையும் அடிப்படையாக வைத்து எழுதிய இரண்டு கட்டுரைகளும் 1931ஆம் வருடத்திய இந்தியப் பத்திரிகை அவசரச் சட்டத்தின்படி திராவிட நாடு இதழின் வெளியீட்டாளராகிய அண்ணா அவர்கள் குற்றம் செய்தவர் என்று கருதி-13 மாதங்களுக்குப்பின் வழக்குத் தொடர்ந்த சென்னை மாகாண சர்க்கார் ரூ.3000/-ஐ ஜாமீன் தொகையாக 25.6.1949-க்குள் செங்கற்பட்டு மாவட்ட நீதிபதியிடம் கட்ட வேண்டும் என்று ஆணை பிறப்பித்திருந்தது. இந்த அநீதியைத் துடைக்க அண்ணா அவர்கள், சென்னை உயர்நீதி மன்றத்தில் காங்கிரசு ஆட்சிமீது வழக்குத் தொடர்ந்தார்கள். இவ்வழக்கை விசாரித்த நீதிபதிகள் - பிரதம நீதிபதி இராஜ மன்னார், நீதிபதிகள் பஞ்சாபகேச சாஸ்திரி, சுந்திரா ரெட்டி ஆகியோர் மாகாண சர்க்கார் குறிப்பிட்ட குற்றங்கள் எவையும் இக்கட்டுரைகளில் இடம்பெறவில்லையென்று முடிவு செய்து, ஜாமீன் தொகை கட்ட வேண்டுமென்று மாகாண சர்க்கார் பணித்த உத்தரவைத் தள்ளுபடி செய்து 4.11.1949 அன்று தீர்ப்பு வழங்கினார்கள்.

இந்த நிலைமையை வெளியிட்டு, திராவிட நாடு, திராவிட மக்களின் நலனுக்காகப் பாடுபடுகிறது என்பதை அறிவிக்கவும், திராவிட மக்களின் ஆதரவு அதற்கு உண்டு என்பதை மெய்ப்பிக்கவும், தங்களாலான நன்கொடையை இந்நெருக்கடி தீரும் வகையில் அளித்தருளக் கோருகிறேன் என்று 5.6.1949 தேதியிட்ட திராவிட நாடு இதழில் அண்ணா வேண்டுகோள் வெளியிட்டார். வேண்டுகோள் விடுத்த ஒரு வாரத்துக்குள்ளாகவே, குறிப்பிட்ட தொகை சேர்ந்து விட்டதால், நன்கொடை வழங்கியவர்களுக்கு நன்றி தெரிவித்தும், அன்பர்கள் யாரும் இனி பணம் அனுப்ப வேண்டாமென்றும் கேட்டுக்கொண்டு 19.6.1949 இதழில் அண்ணா அவர்கள் ஓர் அறிவிப்பு வெளியிட்டார்கள். அபராதம் கட்டும் அரசு ஆணையை நீதிபதிகள் தள்ளுபடி செய்து விட்டதால் தமக்குப் பணம் அனுப்பியவர்களுக்கு அண்ணா அவர்கள் நன்தொடைகளைப் பணவிடை மூலம் திருப்பி அனுப்பி, தனித்தனியே நன்றியும் தெரிவித்துக் கொண்டார். இப்படிப் பண்புகளின் உறைவிடமாகவும், மற்றவர்களுக்கு எடுத்துக் காட்டாகவும் விளங்கியவர் அண்ணா!

'ஆரிய மாயை' நூலைத் தடை செய்த அதை எழுதியமைக்காக அண்ணாவுக்கு அபராதம் விதித்து, அண்ணா அதைக் கட்ட மறுத்ததால் அவருக்கு ஆறுமாதச் சிறைத் தண்டனை வழங்கப்பட்டது. இப்படிச் சோதனைகள் வந்தாலும், அண்ணாவின் இதழியல் ஆளுமைக்கு முடி கவித்தாற் போல அமைந்த நிகழ்ச்சியும் ஒன்று உண்டு.

அண்ணாதுரை தீர்மானம்

தோன்றும் துறையெல்லாம் தம் முத்திரை பதித்தவர் அண்ணா. நீதிக் கட்சியின் தலைவராகப் பெரியார் பொறுப்பேற்றுக் கொண்ட பின்னர், அக்கட்சியின் சென்னை மாநாட்டை 1942இல் தலைமையேற்று நடத்தினார். அதையொட்டி நீதிக் கட்சியின் செயல்முறைகளில் ஏற்பட்டுவிட்ட குறைபாடுகளை நீக்கிப் புத்துயிர் ஊட்டவும் கட்டமைப்பில் அடிப்படை மாற்றங்களைச் செய்யவும், பெருமக்களின் காவலில் இருந்த கட்சியை மக்களிடையே கொண்டு செல்லவும் திட்டமிட்டார். பெரியார் அவர்களிடமும் கலந்துரையாடினார். 1944இல் சேலத்தில் நடைபெற்ற நீதிக்கட்சி மாநாட்டில் சில தீர்மானங்களைக் கொண்டு வர அண்ணா

விரும்பினார். பெரியார் இசைவு அளித்ததோடு நில்லாமல் அந்தத் தீர்மானங்களைத் தம் மொழிநடையில் எழுதி அதற்கு 'அண்ணாதுரை தீர்மானம்' என்றே பெயரிட்டார்.

20 ஆண்டுகள் நேர்மையான ஓர் ஆட்சியைத் தந்து, ஒடுக்கப்பட்ட மக்களின் இருண்டுகிடந்த வாழ்வில் ஒளியேற்றிப் புரட்சி செய்த ஒரு பேரியக்கமாக விளங்கிய *தென்னிந்திய நிலவுரிமைச் சங்கத்தின் பெயரையே* மாற்றிய தீர்மானம். அத்துடன் மூன்று முக்கிய தீர்மானங்களும் உண்டு. அவற்றைத் தாமே எழுதியதோடு மட்டுமின்றிக் காஞ்சிபுரத்துக்கு ஆள் அனுப்பி திராவிட நாடு இதழ் சம்பந்தமான 'பிளாக்கு'களை ஈரோட்டுக்குக் கொண்டு சென்று, அத்தீர்மானங்கள் வெளியாகிய திராவிட நாடு இதழை, விடுதலை அச்சகத்திலேயே அச்சிட்டு வெளியிட ஏற்பாடு செய்தார் பெரியார். இது, அண்ணா அவர்களின் இதழியல் ஆளுமைக்குத் தரப்பட்ட மிகப் பெரிய சான்றிதழ். திராவிட நாடு இதழில் வெளிவந்தால்தான், அது கட்சித் தோழர்களின் முழுமையான ஒப்புதல் பெற்றதாக ஆகும் என்று குறிப்பாக உணர்த்துவதுதானே!

அண்ணா முன்மொழிந்த தீர்மானங்கள்

1. பிரிட்டிஷ் ஏகாதிபத்தியம் வழங்கிய சர். இராவ்பகதூர், திவான் பகதூர், இராவ் சாகிப் போன்ற கௌரவப் பட்டங்களைத் துறக்க வேண்டும். மீண்டும் அந்தப் பட்டங்களையோ விருதுகளையோ பெறக் கூடாது.

2. உள்ளாட்சி மன்றத் தலைவர், கௌரவ மாஜிஸ்ட்ரேட் முதலிய நியமனப் பதவிகளை வகிப்பவர்கள், அப்பதவிகளிலிருந்து விலகிக்கொள்ள வேண்டும்.

3. பெயருக்குப் பின்னால் உள்ள சாதிப் பெயரை விட்டொழிக்க வேண்டும். எதிர்காலத்தில் எவரும் சாதிப் பெயர்களைப் பயன்படுத்தக் கூடாது.

4. தென்னிந்திய நலவுரிமைச் சங்கம் (ஜஸ்டிஸ் கட்சி) என்ற பெயரை மாற்றி, '*திராவிடர் கழகம்*' என்று பெயரிடப்பட வேண்டும்.

இந்தத் தீர்மானங்களின் வேகம் தாங்காமல் நீதிக் கட்சியின் பெரும்புள்ளிகள் மெல்ல ஒதுங்கலானார்கள். விளைவு இதனால் திராவிடர் கழகம் உருவாகி வளர்ந்து.

பெரியார் திருமண ஏற்பாட்டை ஒட்டித் இயக்கத் தோழர்கள், அண்ணாவின் கருத்தை அறிய ஆர்வத்தோடு திராவிட நாடு படித்துக் கொண்டிருந்தார்கள். அண்ணா ஆறஅமர சிந்தித்து, நண்பர்களுடன் பல கோணங்களில் இருந்து விவாதித்து, முடிந்த முடிவாகத் திராவிடர் கழகத்திலிருந்து விலகி 'திராவிட முன்னேற்றக் கழகம்' அமைத்தார்.

மாலைமணி ஒலிக்கத் தொடங்கியது

இந்தப் புதிய அமைப்புக்கு ஒரு நாளிதழ் தொடங்க எண்ணியபோது தோழர், டி.எம். பார்த்தசாரதி அவர்களின் சொந்த இதழாக சிறிய அளவில் 10.08.1949 முதல் வெளிவந்தது. அவ்விதழைப் பெரிதாக்கி ஒரு லிமிடெட் கம்பெனியின் பெயரால் திராவிட முன்னேற்றக் கழகத்துக்குப் பயன்படுத்திட அண்ணா முயன்றார். அண்ணா, டபிள்யூ. கே. தேவராசன், டி.எம். பார்த்தசாரதி, காஞ்சிபுரம் புட்டாசாமி, கே.ஏ. மதியழகனின் அண்ணன் கே.ஏ. முருகேசன் ஆகிய ஐந்து டைரக்டர்கள், ஆளுக்கு ரூ. 5000/- போடுவதாக ஏற்பாடு. ஏனோ இந்த முயற்சி முழுமை பெறாமலே போய்விட்டது.

மாலைமணி இதழுக்கு அண்ணா ஆசிரியர். காஞ்சி கல்யாணசுந்தரம், விடுதலையில் இருந்த விலகி வந்த பூ. கணேசன், டி.எஸ். வேலன், நாகபூஷணம் ஆகியோர் அடங்கிய ஆசிரியர் குழு. அவர்களுக்குத் துணையாக மா. செங்குட்டுவன், இறைமுடிமணி ஆகியோர். திராவிட முன்னேற்றக் கழகம் தொடங்கிய நேரம். புதிய கழகத்தின் அடிப்படைக் கட்டமைப்பை ஆழமாகச் சிந்தித்து, தம் எண்ணங்களைப் பலரிடமும் கலந்து பேசி உருவாக்குதல், கிளைக் கழகங்கள் தோன்றத் தொடங்கிய நிலையில் அதில் கவனம் செலுத்துதல் போன்ற நெருக்கடிகளால் மாலைமணியில் அண்ணா முழு ஈடுபாடு காட்ட முடியாது போயிற்று.

நடிப்பிசைப் புலவர் கே.ஆர். இராமசாமி அவர்கள் தமது 'திராவிட நடிகர் கழக'த்தின் மூலம் தொடர்ந்து பல நாடகங்கள் நடத்தி, திராவிட முன்னேற்றக் கழகத்திற்காக வட சென்னையில் இராயபுரம், சூரிய நாராயண செட்டித் தெருவில், 26ஆம் எண்ணுள்ள வசதியான கட்டடத்தைத் தலைமை நிலையத்துக்காக வாங்கி அதில் ஓர் அச்சு இயந்திரம் வாங்கிவைத்து அழகிரி அச்சகம்

அமைத்துக் கொடுத்து, ஒரு நிர்வாகப் பொலிவை உண்டாக்கினார். 202, தங்கசாலைத் தெருவில் வாடகைக் கட்டடத்தில் இயங்கி வந்த தி.மு.க. தலைமை நிலையத்தின் புதிய கட்டடத்துக்கு 'அறிவகம்' என்று அண்ணா பெயரிட்டார். அந்தக் கட்டடத்தின் தரைத்தளத்தில்தான் அழகிரி அச்சகமும், நம் நாடு அலுவலகமும் செயல்பட்டன.

தொடக்க நாட்களில் நம் நாடு இதழுக்கென்று தனி மேலாளரும், நிர்வாக அமைப்பும் இருந்தன. பின்னாளில் நிலைமை கருதி, தலைமை நிலையத்து நிர்வாகப் பொறுப்பாளர்களே நம் நாடு நிர்வாகத்தையும் ஏற்று நடத்தினார்கள். 15.6.1953 முதல் நம் நாடு நாளிதழ் தி.மு.க. பொதுச் செயலாளர் அறிஞர் அண்ணா அவர்களை ஆசிரியராகக் கொண்டு வெளிவந்தது. பின்னர் நாவலர் இரா. நெடுஞ்செழியன், வெளியீட்டுச் செயலாளர் சி.பி. சிற்றரசு, இரா. செழியன் ஆகியோர் 'நம் நாடு' ஆசிரியர்களாகப் பணியாற்றினார்கள்.

'நம் நாடு' தி.மு.க. நாளிதழாக வெளிவரும் முன்னர், 1938ஆம் ஆண்டு அளவில் காங்கிரசைச் சேர்ந்தவர்கள், அப்பெயரில் வார இதழ் ஒன்றை நடத்தி வந்தார்கள் என்ற குறிப்பைத் திராவிட இயக்க ஆய்வறிஞர் திரு. க. திருநாவுக்கரசு அவர்கள் பதிவு செய்துள்ளார்.

திராவிட நாடு போலவே நம் நாடும் ஒரு குடும்பம். தி.மு.க. தலைமை நிலையத்தின் மேலாளராக இருந்த திரு. மு. சண்முகமும், துணை மேலாளராக இருந்த சோ. தேவராசனும் நம் நாடு இதழைச் சிறப்பாக நடத்தி வந்தார்கள். காஞ்சி. கலியாணசுந்தரம் பொறுப்பாசிரியாகவும் அவர் துணைக்குத் திரு. மா. செங்குட்டுவனும் மிகவும் வசதிக் குறைவான சூழல்கள், நெருக்கடிகள். சம்பளங்கூட சில மாதங்களில் காலந்தாழ்த்தி வழங்கப்பட்ட நேரத்திலும் கொள்கைப் பிடிப்புடனும் ஈடுபாட்டுடனும் பணி செய்தனர். பெரியாரின் விடுதலையில் அனுபவம் பெற்று அறிஞர் அண்ணா விரும்பி அழைத்த ஃபோர்மன் இராமலிங்கம், அச்சுக் கோக்கும் சங்கரநாராயணன், முத்து, அச்சியந்திரம் இயக்கும் கணபதி, அச்சுத்தாள், அஞ்சல்கட்டுப் பொறுப்பாளர் சிவஞானம் ஆகியோர் ஆவர்.

தொடக்க நாட்களில் அண்ணா அவர்கள் சென்னை நிகழ்ச்சிகளில் கலந்துகொண்டு இரவு 11.00 / 12.00 மணி அளவில் கூட அறிவகம் வருவார். அருகிலேயே குடியிருந்த திரு சிவஞானமும், அந்நேரத்திலும் அலுவலகத்தில் இருக்கும் இராமலிங்கமும் உடனிருந்து அண்ணாவுக்கு உதவி செய்வார்கள். நம் நாடு இதழ் பற்றி மிகுந்த ஆர்வத்துடன் நடைமுறைத் தொல்லைகள் பற்றிக் கேட்டறிவார் அண்ணா. சில நேரங்களில் மாடியில் தங்கிக் கட்டுரைகள் எழுதிக் கொடுப்பதும் உண்டு. "இந்தப் பொருள் பற்றி இன்று கட்டுரை எழுதினால் பொருளும் பொருத்தமும் உள்ளதாக அமையுமா?'' என்று திரு. இராமலிங்கத்தைக் கேட்டுங்கூட அண்ணா எழுதியதுண்டு. இராமலிங்கத்தின் ஆற்றலில் அவ்வளவு நம்பிக்கை.

எந்த நாளிலும் நம் நாடு செய்தி சேகரிப்புக்கென்று எந்த வசதியும் இருந்ததில்லை! திரு. காஞ்சி கலியாணசுந்தரம் அவர்கள் தலையங்கம் மட்டும் எழுதிக் கொடுத்துவிட்டுச் சென்று விடுவார். திரு. மா. செங்குட்டுவன் அவர்கள் சட்டமன்றத்துக்கும், சென்னை நகர நிகழ்ச்சிகளுக்கும் சென்று குறிப்பு எடுப்பார். மெய்ப்புத் திருத்தல் போன்ற இதழின் மற்ற பொறுப்புகளையும் அவர் கவனித்துக் கொண்டார்.

அண்ணா அவர்களுக்குத் 'தாம் ஆற்றும் மிகச் சிறந்த சொற்பொழிவுகள் காற்றோடு போய்விடுகின்றன' என்ற வருத்தம் உண்டு. அதிலும் வழக்கறிஞர் சங்கம், அரிமா சங்கம், ரோட்டரி சங்கம், கல்லூரிகளின் மாணவர் ஆங்கிலப் பேரவை, வரலாற்றுப் பேரவை போன்ற ஆங்கிலத்தில் பேச வேண்டிய கட்டாயம் நிறைந்த சூழலில் அவர் ஆற்றும் - கல்லூரிகளில் பாடமாக வைக்கப்பட வேண்டிய அளவு - மிகச் சிறந்த ஆங்கிலச் சொற்பொழிவுகளும், அவற்றில் அவர் வழங்கும் சிந்தனை விருந்தும் பதிவாகாமலே போவதால், அந்த நேரத்துக்கு அந்த நிகழ்ச்சிக்கு வந்தவர்களுக்குப் பயன்பட்டதே தவிர, பொதுமக்களுக்குப் பயன்படவில்லையே என்ற கவலை இருந்தது அண்ணாவுக்கு. அதனால், சிறப்புக் கூட்ட நிகழ்ச்சிகளை உள்ளடக்கிய சுற்றுப்பயணங்கள் மேற்கொண்டபோது, இக்கட்டுரையாளரை உடன் அழைத்துச் சென்றார். நம் நாடு இதழ் மூலம் அந்தக் கருத்துகள் மக்களைச் சென்று அடைய வேண்டும் என்ற எதிர்பார்ப்பு. அவருடைய தமிழ்ச்

சொற்பொழிவுகளை மட்டுமின்றி, அண்ணா அவர்களின் ஆங்கில சிறப்புச் சொற்பொழிவுகளையும் அவரது தமிழ்ச் சொற்பொழிவு நடையிலேயே நம் நாடு இதழில் இந்தக் கட்டுரையாளர் வழங்கினார். சிறந்த கருத்துகள், 'பெட்டிச் செய்தி'களாக நாள்தோறும் வெளிவரும். படிப்பவர் கவனத்தை ஈர்க்கும் வகையில் அவற்றைக் கட்டமைப்பதில் ஃபோர்மென் இராமலிங்கம் வல்லவர். இந்தக் கட்டுரையாளர், 'முத்து', 'பூரணன்' என்ற பெயர்களிலும், ரிசர்வ் வங்கியில் எழுத்தராக இருந்த திரு. எஸ். இராமசாமி என்ற தோழர், 'எஸ்.ஆர்.' என்ற பெயரிலும் 1960களில் நாள்தோறும் அரசியல் கட்டுரைகள், விமர்சனங்கள் எழுதி வந்தார்கள். 1967 தேர்தலுக்கு முந்திய சில மாத நம் நாடு இதழ்கள் தி.மு.க.வின் கொள்கை விளக்கக் களஞ்சியங்களாகத் திகழ்ந்தன.

தி.மு.க.வின் மேடைப் பேச்சாளர்கள் நம் நாடு இதழ்களை அடுக்கி மடித்து வைத்துக் கொண்டு, 'இதை வைத்துக் கொண்டு இன்னும் பத்துக் கூட்டங்கள் பேசி விடலாம்' என்று பெருமையோடு சொல்லிக் கொள்ளுவார்கள். 'இவ்வளவு சின்ன (டெம்மியில் பாதி) அளவில் இருக்கிறதே என்று தோழர்கள் கேட்டபோது, நாவலர் நெடுஞ்செழியன் அவர்கள், 'படித்ததும் சட்டைப் பையில் மடித்து வைத்துக் கொள்ள' என்று உணர்ந்து சொன்னார். கழகப் பேச்சாளர்கள் நம் நாடு இதழ்களைப் பொத்திக் காத்தனர்.

இந்த நிலையில் நம் நாடு இதழைப் பெரிய அளவில் - தினமணி, தினத்தந்தி போல - கொண்டு வர அண்ணா விரும்பினார்கள். அதற்கு முன்னோடி முயற்சியாக 1966 டிசம்பர் 29,30,31, 1967 சனவரி 1 நாட்களில் சென்னை விருகம்பாக்கத்தில் நடைபெற்ற திராவிட முன்னேற்றக் கழக மாநில மாநாட்டில் நான்கு நாட்களும் நம் நாடு டெம்மி அளவில் வெளியாயிற்று. முந்தின நாள் தலைவர்கள் பேசிய பேச்சுகளும் நிகழ்ச்சிகளின் விவரமும், அன்றைய நம் நாட்டில் பதிவாகி இருப்பதைக் கண்ட மாநாட்டுக்கு வந்த தோழர்கள், வியந்து பாராட்டினார்கள். இதற்காக நம் நாடு குடும்பம் உழைத்த உழைப்பு எவ்வளவு தெரியுமா? சாதாரண டெம்மி அச்சு இயந்திரத்தில் ஒவ்வொரு பக்கமாக 4 முறை 4 பக்கங்களை அச்சிட்டு வெளியிட வேண்டியதாயிற்று.

திடீரென ஒரு நாள் மாலை 7.00/7.30 மணி அளவில் அண்ணா அறிவகம் வந்தார்கள். தலைமை நிலைய அலுவலகப் பொறுப்பில் இருந்த திரு. சண்முகம், திரு. தேவராசன் ஆகியோரிடம், நம் நாடு இதழைத் தொடர்ந்து பெரிய அளவில் கொண்டு வர ஏற்பாடு செய்யுங்கள்", என்று சொல்லிவிட்டுச் சென்றார். அதன்படி 1967 தேர்தலுக்கு முன்னால் நம் நாடு பெரிய அளவில் வரத்தொடங்கியது. அழகிரி அச்சகத்தில் அச்சுக் கோத்து அந்தச் சட்டங்(frame)களை அப்படியே, பிராட்வே பிரகாசம் சாலையில் இருந்த 'ஆந்திர பத்திரிகா' அச்சகத்தில் கொண்டு போய்க் கொடுத்து, இரண்டே மணி நேரத்தில் அச்சிட்டு வெளியிட்டார்கள். இந்தக் குறிப்பிட்ட பணியில் அறிவகத்தின் துணை மேலாளர், திரு. சோ. தேவராசன் அவர்களின் ஆலோசனையும், செயற்பாடும் நம் நாடு வரலாற்றில் பதியத்தக்கன.

நம் நாடு இதழின் மீது அண்ணா கொண்டிருந்த பாசமும் அதன் வளர்ச்சியில் அவர் கொண்டிருந்த அக்கறையும் அளப்பரியன. பெரிய எழுத்துகளில் ஒரு மூன்று, நான்கு பத்தித் தலைப்பு, அடுத்து நடுத்தர அளவில் ஒரு தலைப்பு, அடுத்துச் சிறிய எழுத்துகளில் ஒரு தலைப்புக் கட்டுவதும், செய்திகளைச் செறிவாக அடுக்குவதுமே ஒரு தனி அழகு. அந்த நளினம் ஃபோர்மென் இராமலிங்கத்துக்கே சொந்தம்! அண்ணா அவர்களே சில நேரங்களில், பக்கத்தில் பலரும் இருக்க, பெரிய அமைப்பிலான நம் நாடு இதழைக் கையில் வைத்துக் கொண்டு, அதில் செய்திகள் அடுக்கி இருக்கும் அழகை மனந்திறந்து பாராட்டி இருக்கிறார். ஒரு முறை திரு. ம.பொ. சிவஞானம் அவர்கள் சென்னையில் ஆற்றிய சொற்பொழிவைத் தேவை கருதி, 'நம் நாடு' முழுமையாக வெளியிட்டது. அடுத்த நாள், தினமணி ஆசிரியர் எ.என். சிவராமன் அவர்கள், அறிவகத்துக்குத் தொலைபேசியில் தொடர்பு கொண்டு, 'ம.பொ.சியின் பேச்சை உள் பத்தித் தலைப்புகளுடன் மிக அழகாக வெளியிட்டிருக்கிறீர்கள். அற்புதமாக இருக்கிறது. பேச்சைக் குறிப்பெடுத்து எழுதித் தந்தவருக்கு என் பாராட்டு சொல்லுங்கள்' என்றார். இந்தக் கட்டுரையாளர்தான் அந்தப் பேச்சைக் குறிப்பெடுத்தவர். அந்த அளவு நம் நாடு இதழ், இதழியல் சிறப்பறிந்த பலராலும் பாராட்டப் பெற்றது. அறிஞர் அண்ணாவின் ஆளுமை சாதித்த சாதனை அது!

நம் நாடு பெரும் பொருள் இழப்புக்கிடையே வெளிவந்தமையால், ஒரு இக்கட்டான நேரத்தில், தி.மு.க.வின் பொருளாளராக இருந்த கலைஞர் மு. கருணாநிதி அவர்கள், "அண்ணா! நட்டம் அதிகமாகிக் கொண்டே போகிறது. நம் நாடு இதழை நிறுத்தி விடலாமா?" என்று கேட்டார்கள். "வேண்டாம். நம் நாடு வளர்ச்சி நிதிக்காக ஒரு நாள் வைத்து, நிதி திரட்டுவோம். எந்த நிலையிலும் நம் நாட்டை நிறுத்த வேண்டாம்" என்று சொல்லிவிட்டு, "நான் என் ஒரு மாத ஊதியத்தைத் தருகின்றேன், (அப்போது அவர் மாநிலங்களவை உறுப்பினராக இருந்தார்) மற்ற சட்டமன்ற, மேலவை, நாடாளுமன்ற உறுப்பினர்களும் ஒரு மாத ஊதியம் தரட்டும்" என்றார். ஒரு நாள் வசூலில் கிட்டத்தட்ட ஒரு இலட்சம் ரூபாய்க்கு மேல் திரண்டது. 'இயக்கத்தின் கொள்கை முரசும் ஓய்ந்து விடக்கூடாது' என்பதில் அண்ணா கண்டிப்பாக இருந்தார். என்றாலும் பின்னாளில் நம் நாடு வெளிவர முடியாமற் போயிற்று.

இந்த நேரத்தில் ஒரு செய்தியைப் பதிவு செய்வது பொருத்தமாக இருக்கும். நம் நாடு பெரிய அளவில் நடத்தப்பட வேண்டும் என்பது பற்றிப் பேசப்பட்டுக் கொண்டிருந்த நேரம். பம்பாய் திராவிட முன்னேற்றக் கழகத்தின் செயலாளர் திரு. தியாகராாசன் அவர்கள், பொறுப்பில் இருந்த திரு. பொற்கோ, ஆரிய சங்கரன் போன்றோருடன் அறிவகம் வந்து, "நாங்கள் புதிய பெரிய அச்சு இயந்திரம் வாங்கித் தர ஏற்பாடு செய்கிறோம், நம் நாடு பெரிதாக வர நீங்கள் ஏற்பாடு செய்யுங்கள்" என்றார். இந்தத் தகவலை அண்ணா அவர்களிடம் சொன்னபோது, அவருக்கு ஒரு தயக்கம் - அச்சம் இருந்தது. "இந்த முயற்சியில் நம் இயக்கத் தோழர்கள் மட்டுமே இருந்தால் பரவாயில்லை. ஆனால் வசூலில் அல்லது உதவியில் பெரும் பணக்காரர்கள் தொடர்பு இருந்துவிட்டால் . . இப்போதைக்கு வேண்டாம்," என்று அம்முயற்சியைத் தடுத்து விட்டார். பணக்காரர்களின் உதவி தம் இயக்கத்துக்கு எந்த நிலையிலும் மறைமுகமாகக் கூட வேண்டாம் என்பதில் அவர் மிகக் கவனமாக இருந்தார்.

ஹோம்லண்ட், ஹோம் ரூல் - ஆங்கில இதழ்கள்

தமிழ் அறியாத பிற மாநிலத்தவர், தி.மு.கழகத்தின் கருத்துகளைப் புரிந்துகொள்ள வேண்டும், குறிப்பாக 'இந்தித்

திணிப்புப் பற்றிய தமிழர்களின் அச்சம் நியாயமானது' என்பதை இந்தி மாநிலத்தவர்கள் சரியாகப் புரிந்துகொள்ளும் வகையில் விளக்கமளிக்க வேண்டும் என்ற காரணங்களுக்காக ஆங்கில இதழ் தொடங்க விரும்பினார். முதலில் 'ஹோம்லண்ட்', பிறகு 'ஹோம்ரூல்' ஆகிய இதழ்களைத் தொடங்கினார். திரு எம்.எஸ். வெங்கடாசலம் இந்த இதழ்களில் எழுதியும், நிர்வகித்தும் அண்ணாவுக்குத் துணையாக இருந்தார். ஆங்கில இதழ்களுக்கு வி.பி. இராமன் போன்றோர் தொடர்பும் இருந்தது. முறையான - கட்டுக்கோப்பான நிர்வாகம் இல்லாமை, துணையாக இருந்தவர்கள் தொடர்ந்து பணியாற்ற முடியாத நிலைமை போன்ற காரணங்களால் அவ்விதழ்கள் முடங்கிப் போயின.

திரு. இராம. அரங்கண்ணல் அவர்கள், 'திராவிட நாட்டில்' எவ்வளவோ வசதிக் குறைவுகளுக்கு இடையில், எட்டரை ஆண்டுக் காலம், ஏராளமான படைப்புகளை வழங்கிச் சிறப்பாகப் பணியாற்றிக் கொண்டிருந்தார். அவருக்குத் திருமணம் ஆனதால் காஞ்சியில் வாடகைக்கு வீடு எடுத்துக் குடும்பம் அமைத்தார். இடையில் அவருக்குத் திரைப்படத்துறை தொடர்பு ஏற்பட்டதால், அடிக்கடி சென்னை செல்ல வேண்டியதாயிற்று. அதனால் குடும்பத்தோடு சென்னைக்குக் குடி பெயர நேர்ந்தது. அண்ணா அவர்களும் சென்னை நுங்கம்பாக்கத்தில் வீடு வாங்கி அங்கேயே தங்கலானார்கள். காஞ்சி வந்து எழுதுவதோடு, திராவிட நாட்டுக்கு, அண்ணா சென்னையிலிருந்து எழுதி அனுப்பிக் கொண்டிருந்தார். 1942 முதல் 1963 தொடக்கம் வரை 21 ஆண்டுகள் திராவிட நாடு திராவிட இயக்கத் தோழர்களின் சிந்தனையை வழி நடத்திக் கொண்டிருந்தது. மாநிலங்களவை உறுப்பினராக அன பிறகு, அண்ணா அவர்களுக்கு, தொடர்ந்து கடமை நெருக்கல்கள் வளர்ந்தன; அடிக்கடி உடல் நலம் குறைந்தது. திராவிட நாடு இதழை நடத்தும் நிர்வாகப் பொறுப்பை முறையாகப் பார்த்துக் கொள்ள, முட்டுப்பாடின்றி நடத்திச் செல்ல அவருக்கு நேரம் கிடைக்கவில்லை. அதன் விளைவாய் ஏற்பட்ட பொருளாதார நெருக்கடியும் காரணமாகத் திராவிட நாடு இதழ் நிறுத்தப்பட்டது.

காஞ்சி இதழ் தோன்றியது

'காஞ்சி' கிழமை இதழின் முதல் வெளியீட்டில் 'தம்பிக்கு' எழுதிய கடிதத்தில்,

> எனக்கு மட்டுமே தொல்லை தந்த நிலைமைகளைப் பற்றி, தம்பி, உன்னிடம் சொல்லி, உன் மனத்துக்குச் சங்கடம் உண்டாக்க விரும்பவில்லை. பல்வேறு காரணங்களால் திராவிட நாடு நிறுத்தப்பட்டது. பல திங்களாகி விட்டதால், 'திராவிட நாடு' என்ற பெயருடன் இதழ் நடத்தத் துரைத்தனம் அளித்திருந்த அனுமதி காலாவதியாகிவிட்டது. அதனால் நான் சிறையில் இருந்தபோது, என் இளைய மகன் இளங்கோவன், 'காஞ்சி' எனும் பெயரில், கிழமை இதழ் - இலக்கிய இதழ் நடத்த, பெற்றிருந்த அனுமதியைப் பயன்படுத்தி, என் பணியினைத் தொடர்ந்திட எண்ணுகின்றேன். 'திராவிட நாடு' இதழ் நடத்திட மீண்டும் துரைத்தன அனுமதி கிடைத்ததும், அந்தப் பெயருடன் இதழ் வெளிவரும். 'காஞ்சி' இலக்கிய இதழாகி விடும்.

என்று எழுதினார்.

திராவிட நாடு கோரிக்கையைத் திராவிட முன்னேற்றக் கழகம் விட்டு விட்ட பிறகு, மாநிலங்களவை உறுப்பினர் என்ற புதிய சூழலில், அவ்வியக்கத்தின் பொறுப்பில் இவ்இதழை நடத்திக் கொண்டிருப்பதும் ஓர் இக்கட்டான நிலையே! அரசின் ஒப்புதல் காலாவதி ஆனதும் ஒரு வகையில் நன்மையே ஆனது! காஞ்சி இதழில் அண்ணா அவர்கள் மீண்டும் எழுதத் தொடங்கினார்கள். 16 பக்கமுள்ள காஞ்சி இதழ், அண்ணா அவர்களை ஆசிரியராகக் கொண்டு, காஞ்சிபுரம் திருக்கச்சி நம்பித் தெரு, 86ஆம் எண்ணுள்ள இடத்திலிருந்து, அல்லி அச்சகத்தில் அச்சிடப்பட்டு சி.என்.ஏ. இளங்கோவனால் 26-07-1964 அன்று முதன்முதலாய் வெளியிடப்பட்டது. திரு. எஸ். முத்துராமனும், சுந்தரேசனும் சிலகாலம் காஞ்சியைக் கவனித்துக் கொண்டனர். அண்ணா அவர்களின் மறைவுக்குப் பின்னரும் காஞ்சி வெளிவந்து கொண்டிருந்தது. திராவிட நாடு சென்று சேர்ந்த அதே இதயங்களைக் காஞ்சியும் சென்று அடைந்தது.

அண்ணாவின் மொழிநடை

அறிஞர் அண்ணா அவர்களின் மொழிநடை எப்போதும் ஒரே மாதிரி இருந்ததில்லை. தாம் மக்களுக்குச் சொல்ல நினைத்த

கருத்துகளுக்கேற்ப, அமைத்துக் கொண்ட இலக்கிய வடிவங்களுக்குத் தகுந்தார்போல் மொழிநடை மாறுபட்டது.

அண்ணாவின் இலக்கு கருத்துப் புரட்சி மூலம் மக்களிடையே மறுமலர்ச்சி. அதற்குக் கருவி எழுத்து. எனவே தாம் எழுதும் சிறுகதையோ, நாடகமோ, வரலாற்றுச் சித்திரமோ, ‘அற்புதம்’ என்று பாராட்டப்பட வேண்டும் என்பதற்காக அவர் எழுதவில்லை. அவர் கலை கலைக்காகவே என்று கதைத்துக் கொண்டிருக்கும் ‘அறிவுஜீவி’ அன்று. அவர் மக்களுக்காக எழுதினார். மக்களை மலர்விக்க எழுதினார். வெவ்வேறு நடைகளில் எழுதினார். வெவ்வேறு இலக்கிய வடிவங்களுக்கு வெவ்வேறு பாணியைக் கையாண்டார். இதை அவர் தெரிந்தே செய்தார்.

திராவிட நாடு இதழில் முதலில் தொடர்களாக எழுதப்பட்டுப் பின்னர் நூல் வடிவம் பெற்ற ‘மாஜி கடவுள்கள்’, ‘ரோமாபுரி ராணிகள்’ போன்ற வரலாற்றுக் கட்டுரைகளில் வடமொழிச் சொற்கள் விரவி வரும். சரியான தூய தமிழ்ச் சொல் வேண்டும் என்று தேடித் தம் எண்ண ஓட்டத்துக்கு அவர் அணை போடுவதில்லை. அவர் பயின்ற காலத்து நிலை அப்படி. பள்ளியில் ‘வெண்பாப்’புலி வேலுசாமிப் பிள்ளை போன்ற தமிழாசிரியர்களிடமும், கல்லூரியில் மோசூர் கந்தசாமியார், மணி திருநாவுக்கரசு போன்றோரிடம் தமிழ் பயின்றார் என்றாலும், அந்த நாள் உரைநடை வழக்கு அப்படி! பார்வதி, பி.ஏ., ரங்கோன் ராதா, குமரிக் கோட்டம், கலிங்கராணி போன்ற நெடுங்கதைகளில் பயின்று வந்த நடை, அரசியல் ஆய்வுக் கட்டுரைகளில் மாறிவிடும்.

மொழி நடை பற்றி அண்ணா

> மொழிநடை என்பது ‘வானவில்’. அது நெடுநேரம் அழகு தராது. மொழி நயத்துக்காகக் கருத்தைப் பலியிட்டு விடக் கூடாது. ஓசை நயம், அடுக்குத் தொடர், இரட்டைக் கிளவி போன்றவை பூங்காவில் உள்ள கவின்மலர்கள்! மணமுள்ளவைகளைப் பதமாகப் பறித்துக் பக்குவமாக மாலை தொடுக்க வேண்டும். அப்பொழுதுதான் கவர்ச்சி கிடைக்கும். ஓசை நயத்தை எப்படியும் பெற்றே தீர வேண்டும்

என்று முயன்றாலே, காது குடைச்சல் ஏற்படுவது மட்டுமல்ல, மொழிக்கு ஏற்பட்டுள்ள பெருமதிப்பும் குன்றும், குறையும்.

சில தொடரியங்கள் இலக்கியத்தில் இருந்தாலும், அவற்றிற்கு உயிரூட்டி, உணர்வூட்டி மக்களிடம் எளிதாக உலவ விட்டார் அண்ணா. அவற்றின் பின்னரே பாமரத் தமிழர் தம் தாய்மொழியின் ஆற்றலை - வளத்தைப் புரிந்த கொள்ள முடிந்தது. எடுத்துக்காட்டாக,

'தம்பி உடையான் படைக்கு அஞ்சான்'

'நாமார்க்கும் குடியல்லோம்'

'இப்படை தோற்கின் எப்படை ஜெயிக்கும்?'

'ஒன்றே குலம், ஒருவனே தேவன்'

தொடரியத்தின் ஈற்றில் எழுவாயை அமைத்து எழுதும் மொழிநடை தமிழ் உரைநடைக்குப் புதியது; அண்ணாவுக்கே உரியது. இந்த மொழிநடையும், தம் கருத்தை மெய்ப்பிக்க வாதங்களை அடுக்கும் முறையும், திறனும், ஆங்கில அறிஞர் இராபர்ட் ஜி. இங்கர்சால் போலவே இருக்கும். ஏராளமான ஆங்கில நூல்களைக் கருத்தூன்றிப் படித்தவர் அண்ணா. கருத்துத் தாக்கம் மட்டுமன்றி, மொழிநடைத் தாக்கமும் ஏற்பட்டிருக்கலாம். அந்த நடை தமிழுக்கும், தமிழர்களுக்கு கிடைத்த ஒரு நல்வாய்ப்பே!

மேதைகளைப் பேதைகள் விலைக்கு வாங்கிய காலம். கொக்கு சுடும் துப்பாக்கிகளைக் காட்டி, வெள்ளைக்காரன் கோட்டை கொத்தளங்களைப் பிடித்த காலம். கட்ட பொம்மன்களைக் காட்டிக் கொடுக்கக் காட்டு ராஜாக்கள் வாழ்ந்த காலம். காலத்தையும், நிலைமைகளையும் கண்முன் நிறுத்தும் சொல்லோவியம் இது. ஓசை நயத்துக்கும் நடைச் சிறப்புக்கும் சிறந்த எடுத்துக்காட்டு.

திராவிட நாட்டிலும், காஞ்சியிலும் அண்ணா அவர்கள் தம்பிக்குக் கடிதம் எழுதினார்கள். அந்தக் கடிதங்களில் அண்ணா தம்பிகளுடன் நேரில் பேசினார்.

'உன்னிடம் பகிர்ந்து கொள்வதிலே, எனக்கென்ன தயக்கம் தம்பி!' என்றார்.

'சிறையிலே தம்பி!' என்று தொடங்கி சிறைச்சாலைச் செய்தி ஒன்றை எழுதுவார்.

'தம்பி! எப்போதோ படித்த ஒரு வரலாற்றுத் துணுக்கு நினைவுக்கு வருகிறது' என்று எழுதி, மெக்சிகோ நாட்டின் விடுதலை வீரன் ஜோரேஸ் பற்றிய வரலாற்று நிகழ்ச்சியைக் குறிப்பிடுகிறார்.

தாம் ஒரு திண்ணையில் சாய்வாக அமர்ந்து கொண்டு பக்கத்தில் இருக்கும் தம் தம்பியிடம் தம்மை ஒளிவு - மறைவு இல்லாமல் பாசத்தோடு வெளிப்படுத்திக் கொள்ளும் பாங்கு அந்தக் கடிதங்களில் வெளிப்படும். இந்தப் பாச உணர்வுதான் அண்ணாவைத் தோழர்களோடு ஈர்த்துப் பிணைத்த சக்தி!

எவ்வளவோ எழுத்தாளர்கள் கடிதங்கள் மூலம் தம் கருத்துக்களைச் சொன்னார்கள். ஆனால் *படிப்பவர் மனத்தைப் பிசைந்து, கடிதத்தின் உணர்வோடு ஒன்றிப் போக வைக்கிற வசியக் கலை அண்ணா அவர்களுக்கு மட்டுமே கை வந்தது. அன்றிருந்த சூழலில் தனிமனிதர்களின் மீட்சியை இலக்காகக் கொண்டு,* ஒடுக்கப்பட்டு வாழ்விழந்து, தாழ்ந்து போயிருந்த மக்களைத் திரட்டுவதற்குத் 'திராவிடர் கழகம்' ஒரு மந்திரச்சொல்லாகவே இருந்தது. ஆனால் பெரியாரின் செயல்பாடுகளால் ஏற்பட்ட மனவேறுபாட்டால் அண்ணா புத்தியக்கம் கண்டபோது, திராவிடர்களின் எண்ணங்களைப் படிப்படியாகப் பூகோள அடிப்படைக்கு மாற்றி சமூக, பொருளாதார நல்வாழ்வை நோக்கி அழைத்துச் சென்றார். புதிய அமைப்பைத் 'திராவிட முன்னேற்றக் கழகம்' என்றார். இன உணர்வை வளர்த்து, மொழிப்பற்றை ஊட்டி, மாற்றாரை மதிக்கும் பண்பைக் கற்றுக் கொடுத்தார். தம்முடைய இயக்கத் தோழர்கள், எதிர்க்கட்சியினரை எதிரிகளாகவே பாவித்து, எழுத்திலும் பேச்சிலும் காழ்ப்புணர்ச்சி காட்டியபோது, அவர் தம் உடன்பிறந்தார்க்குச் சொன்ன அறிவுரைதான் 'மாற்றான் தோட்டத்து மல்லிகைக்கும் மணம் உண்டு' என்பது. தம் இயக்க முன்னணியினர் தம் பேச்சாலும் எழுத்தாலும் பிற நடவடிக்கைகளாலும் தோழர்களை உணர்ச்சிப் பிழம்பாக்கி வளர்த்தபோது, அந்தக் காட்டாற்று வெள்ளம் போன்ற உணர்ச்சிக்கு அணை போடக் கற்பித்ததுதான், 'கடமை, கண்ணியம், கட்டுப்பாடு'.

சென்னை இராஜதானியிலிருந்து ஆந்திரம், மொழி அடிப்படையில் போராடிப் பிரிந்தது. அடுத்து, கர்நாடகமும் கேரளமும் பிரிந்தன. 1951 அளவில் சென்னை இராஜதானியில் தமிழகம் மட்டுமே எஞ்சியிருந்தது. அது சென்னை மாநிலம் என்றே அழைக்கப்பட்டது. ஒரு பக்கம் திராவிட முன்னேற்றக் கழகம் அளவிலும், தரத்திலும், மதிப்பிலும் வளர்ந்து, உயர்ந்து, மக்களிடையே அளவுமீறிய செல்வாக்குப் பெறலாயிற்று. எஞ்சியிருந்த தமிழகத்துக்குத் தமிழ் மாநிலம் - தமிழ்நாடு - என்ற பெயர் வைக்க நடுவரசு மறுத்தது. இந்தி மொழி ஒன்றே ஆட்சி மொழி என்று நடுவரசு சட்டம் செய்தபோது, மொழி முதன்மையும், பண்பாட்டுப் பாரம்பரியமும் கொண்ட தமிழர்கள் சார்பாகத் திமுக. குரல் கொடுத்தது. அது வளர்ந்து அனைத்துக் கட்சிக் குரலாகியது. இந்தி மட்டுமே ஆட்சிமொழி என்ற நிலையிலிருந்து நடுவரசு பின் வாங்கியது - தள்ளி வைத்தது. ஆனால் இந்தி மொழித் திணிப்பை ஒரு பெரிய போராட்டமாக்கி முன்னெடுத்துச் சென்றது திராவிட முன்னேற்றக் கழகந்தான். அதற்குப் பின்னரே மற்ற சில மாநிலங்களும் எதிர்ப்புக் குரல் கொடுத்தன. இந்த நிலையை இந்தி மாநிலக்காரர்களால் செரிக்க முடியவில்லை. இந்த இயக்கத்தை எப்படியும் தடைசெய்தே ஆக வேண்டும் என்ற அடிப்படைக் குறிக்கோளுடன் சட்டம் செய்தார்க்ள.

அண்ணா அவர்கள், காலச் சூழல்களைக் கணக்கில் கொண்டு ஆந்திரம், கேரளம், கர்நாடகம் பிரிந்தபின் தமிழகத்தின் அரசியலிலும் அனைத்திந்திய அரங்கிலும் ஏற்பட்ட சூழல் மாறுபாடுகளைக் கூர்மையாகக் கவனித்து, அவற்றிற்கேற்ப, இதழ்களில் எழுதினார் - மேடைகளில் பேசினார். 'திராவிட நாடு திராவிடருக்கே' என்று முழங்கிய அண்ணா அவர்கள் 'திராவிடம்' என்ற பூகோள அமைப்பே சிதறி, மாநிலங்கள் பிரிந்துவிட்ட பிறகு, 'திராவிட நாடு திராவிடருக்கே' என்ற கோரிக்கையில் பொருளும் இராது. மாறிய சூழ்நிலையில் அது பொருத்தமும் இல்லை என்பதை உணர்ந்தார். அந்தப் புதுப்பாதையை நோக்கி இயக்கத்தை வழிநடத்தத் தொடங்கினார். எனவே இந்தியக் கூட்டாட்சி முறை பற்றிப் பேசத் தொடங்கினார். மத்திய - மாநில அரசுகளின் அதிகாரப் பகிர்வுகள் பற்றி இதழ்களில் எழுதினார். அரசுகளுக்கு இடையே நிலவ வேண்டிய உறவுகள் - உரிமைகள் பற்றிச் சிறப்பான விளக்கங்கள் அளித்துத் தம் இயக்கத்தவரைப் புதியதொரு

திருப்பத்துக்கு ஆயத்தப்படுத்தினார். ஆக, தமிழக மக்களை ஒரு கூட்டாட்சி அமைப்பு நோக்கி அழைத்துச் சென்றார். இந்த நிலையில்தான் 'பிரிவினைத் தடைச் சட்டம்' வந்தது. செஞ்சீனம் இந்தியாவின் எல்லையில் சீண்டிப் பார்த்தது. அண்ணா எதிர்ப்பார்த்திருந்த காலம் கனிந்துவிட்டது. அந்த நேரம் வேலூர் சிறையில் இருந்து விடுதலையான அண்ணா அவர்கள் 'திராவிடநாடு கோரிக்கையைக் கைவிடுகிறேன்' என்று வெளிப்படையாக அறிவித்தார். இந்த அறிவிப்பு,

> *வினைவலியும் தன்வலியும் மாற்றான் வலியும்*
> *துணைவலியும் தூக்கிச் செயல்*

என்ற வள்ளுவத்தின் - அரசியலில் வலியறிதல் மாண்புக்குச் சரியான எடுத்துக்காட்டு.

எந்தக் கோரிக்கையைத் தம் உயிர் மூச்சாக வைத்து அண்ணா பணியாற்றி வந்தாரோ அதையே, " 'விட்டு விடுகிறேன்' - ஆனால் 'தனி நாட்டுக்குரிய காரணங்கள் அப்படியே நீடிக்கின்றன" என்றார். ஏற்கனவே தம் இயக்கத்தவரை ஆயத்தப்படுத்தி வைத்திருந்தமையால், சூழ்நிலை மாற்றத்துக்கு ஏற்ப அண்ணா புதிய கொள்கை வகுத்து, கேடு ஏதும் ஏற்பட்டு விடாமல் இயக்கத்தை வழி நடத்திச் செல்ல முடிந்தது. இந்த அரசியல் விரகாண்மையில் - இராசதந்திரத்தில், அண்ணாவின் இதழ்களுக்கு முக்கியப் பங்கு உண்டு. இதழ்கள் மூலம் அண்ணா அவர்கள் தோழர்களைப் பக்குவப்படுத்தி வைத்திருந்தார். அண்ணாவின் இந்தப் புதுவழியை மறுதலிப்பின்றித் தோழர்கள் ஒப்புக்கொண்டார்கள்.

அண்ணாவின் தொடர்ச்சியான இதழ்ப் பணியின் விளைவாக 82 ஆண்டுகள் பாரம்பரியம் கொண்ட காங்கிரசுப் பேரியக்கம் இனி மீண்டு எழ முடியாதவாறு தமிழக ஆட்சிப் பொறுப்பில் இருந்து வீழ்த்தப்பட்டது. மலையேறும்போது நேராக உயரே போக முடியாமல், தடையைத் தாண்டிச் செல்ல கொண்டை ஊசி வளைவு (Hari pin bend) ஏற்படுத்திச் செல்வது போல அண்ணா பெற்ற இந்த வெற்றி, உலக அரசியல் கட்சிகளின் வரலாற்றில் ஒரு முத்திரை பதித்தது. பேரறிஞர் அண்ணா அவர்களின் இந்த அரசியல் ஆளுமையில் முக்கிய அங்கம் வகிப்பது அவரது இதழியல் ஆளுமை என்பதை உறுதியாகச் சொல்ல முடியும்.

ஜீவா

பொன்னீலன்

20ஆம் நூற்றாண்டுத் தமிழகம் தந்த முப்பரிமாணம் கொண்ட முழுமையான மனிதர்களில் முதன்மையான ஒருவர் ஜீவா. தேச விடுதலை, தேசமக்களின் பொருளாதார விடுதலை, அவர்களின் பண்பாட்டு விடுதலை ஆகிய இந்த மூன்று பரிமாணங்களும் ஜீவாவிடம் ஒன்றிலிருந்து இன்னொன்றைப் பிரிக்க முடியாமல் சமநிலைப்பட்டிருந்தன. நாட்டு விடுதலை, நாட்டு முன்னேற்றம், ஆகிய காந்தியச் சிந்தனைகள் சிறுவயதிலேயே அவரைப் பற்றிக் கொண்டவை. சாகும் வரை அவை அவரிடம் குறையவே இல்லை. அதேசமயம் சாதி, சமய, மொழி, இனச் சமத்துவப் பண்பாட்டுணர்ச்சி என அவருக்குள் வளர்ந்த பண்பாட்டுணர்வுப் போக்குகள் இறுதிவரை அவரை ஒரு பெரியாரியவாதியாக இயக்கின. நாட்டு மக்கள் அனைவரும் கல்வி கற்று, உழைத்துத் தங்கள் உழைப்பைத் தாங்களே அனுபவித்துச் சிறப்பாக வாழவேண்டுமென்ற அடிப்படையான மார்க்சியச் சிந்தனையும் அவரைவிட்டு ஒரு போதும் விலகவில்லை. அதிசயம் என்னவென்றால், இந்த மூன்று அம்சங்களும் அவருடைய சமூகவாழ்வு தொடங்கும்போதே அவரிடம் தூக்கலாகத் துலங்கத் தொடங்கிவிட்டன.

ஜீவாவின் இதழியல் பணிகள் 20ஆம் நூற்றாண்டு சுயமரியாதை மற்றும் இடதுசாரி இயக்க வளர்ச்சியோடு நேரடியாகத் தொடர்புடையவை. தீவிர காந்தி பக்தராகவும் தீண்டாமைக்கு எதிரான சுயமரியாதைப் போராளியாகவும் இளமையில் உருவான ஜீவா, சேரன்மாதேவியிலுள்ள, பரத்வாஜர் ஆசிரமத்தில் உணவு பரிமாறுவதில் ஏற்பட்ட சிக்கலில் அன்றைய காங்கிரஸ் தலைவர்களான பெரியார் ஈ.வெரா., சோமயாஜுலு முதலியவர்களின் அணியில் நின்றார். ஏற்கெனவே நெஞ்சில் கனன்று கொண்டிருந்த சுயமரியாதைச் சிந்தனையானது அவரைப் பெரியாரை நோக்கி ஈர்க்கிறது. ஆனாலும் காந்தியடிகளிடம் அவருக்கு இருந்த ஈடுபாடு அப்போது சிறிதும் குறையவில்லை. பிள்ளையார்பட்டிச் சிராவயல்

காசி விஸ்வநாதன் செட்டியார் என்ற காந்திய பக்தரின் அழைப்பின் பேரில் சேரன்மாதேவியிலிருந்து சிராவயல் சென்று காந்தி ஆசிரமத்தில் பணியாற்றுகிறார் ஜீவா. அங்கு அவருக்கு ஏற்பட்ட முதல் இதழியல் தொடர்பு காந்தி நடத்தி வந்த 'அரிஜன்' இதழோடுதான். சுதந்திர இந்தியாவில் ஜாதி நிலை எப்படி இருக்கும்; பெண்களின் நிலை எப்படி இருக்கும் என்று அரிஜனில் காந்தியடிகள் ஒரு கட்டுரை எழுதினார். தீண்டாமை நீங்கிய வருணாசிரம தருமத்தை உறுதிப்படுத்தும் பாணியில் இருந்தது அக்கட்டுரை. ஜீவாவுக்கு அது பிடிக்கவில்லை. காந்திஜிக்கு மறுப்புக் கடிதம் எழுதினார். அந்த மறுப்புக்கடிதம் காந்தியடிகளைச் சிராவயல் வரவைத்ததும், இருவருக்கும் இடையில் நடந்த விவாதத்தின் முடிவில், "நீங்கள்தான் இந்தியாவின் சொத்து" என்று காந்தியடிகள் ஜீவாவைப் பாராட்டியதும் வரலாறு. காந்தியடிகளுடனான இந்த விவாதம் ஜீவாவை சுயமரியாதை இயக்கத்தை நோக்கி உந்தித் தள்ளியதும் வரலாறு.

அந்த உந்துதலால் சிராவயல் ஆசிரம ஆசிரியப் பணியைத் தொடர்ந்து ஜீவா கிட்டத்தட்ட நான்கு ஆண்டுகள் சிவகங்கையில் தங்கி ஆசிரியப் பணி செய்திருக்கிறார். அக்காலத்தில் சுயமரியாதை இயக்கத் தலைவர்களில் ஒருவராக விளங்கிய எஸ். ராமச்சந்திரன் சேர்வை சிவகங்கை மன்னரின் வழக்கறிஞராக இருந்தார். அவர் ஏற்பாட்டில் ஜீவா சுயமரியாதைப் பிரச்சாரப் பணியையும் ஆசிரியர் பணியையும் அந்த வட்டாரத்தில் செய்துவந்தார். ராமச்சந்திரன் சேர்வை பெரியாரின் நெருங்கிய தோழர்களில் ஒருவர். இவர் மூலம் ஜீவாவுக்குப் பெரியாரின் குடியரசு இதழுடன் தொடர்பு ஏற்படுகிறது. இக்காலத்தில் ஜீவா சுயமரியாதை இயக்கப் பாடல்கள் எழுதத் தொடங்கினார். இந்தப் பாடல்களில் ஒன்றிரண்டை அவர் அன்று நடத்திய பள்ளி மாணவர்களுக்குப் பாடமாகக் கற்றுக் கொடுத்திருக்கிறார். 1933இல் ராமச்சந்திரன் சேர்வை மறையும்வரை ஜீவா சிவகங்கையிலிருந்து தன் இயக்கப் பணிகளைச் செய்து கொண்டிருந்திருக்கிறார் (தகவல்: வீர ஜெயராமன், திராவிடக் கழகம், சிவகங்கை, வயது 67)

1932இல் ஜீவா காரைக்குடி சட்ட மறுப்புக் குழுத் தலைவராயிருந்தபோது, கைதாகிச் சிறைத் தண்டனை பெற்றார்.

லாகூர் சதி வழக்கில் தண்டனை பெற்ற பகத்சிங்கின் தோழர்களைச் சிறையில் சந்தித்து, அவர்களுடன் பழகி, மார்க்சீய ஆர்வம் பெற்றுச் சிறையிலிருந்து விடுதலை ஆனார். வெளியே வந்தபின் ம.சிங்காரவேலரின் தொடர்பு ஜீவாவின் மார்க்சீய அறிவை வளர்த்தது. பெரியாரோடு தொடர்பும் நெருக்கமாயிற்று.

இந்தச் சூழலில் 1933இல் முகவை மாவட்டம் தெம்மாப்பட்டு என்னும் ஊரில் பெரியார் பேசிய கூட்டத்தில் ஜீவாவும் பேசினார். பெரியாரை ஜீவாவின் பேச்சு ஈர்த்துவிட்டது. 'என்ன பண்ணிக் கொண்டிருக்கிறீர்கள்' என்று ஜீவாவைக் கேட்டார்.

ஆசிரியராகப் பாடம் சொல்லிக் கொடுத்துக் கொண்டிருக்கிறேன் என்றார் ஜீவா.

பெரியவர்களுக்கே சொல்லிக்கொடுக்க வேண்டிய பாடங்கள் ஏராளம் இருக்கின்றன; சிறு பையன்களுக்கு அவசரம் இல்லை. போய் வேலையை விட்டுவிட்டு வாருங்கள் என்றார் பெரியார்.

ஜீவா ஒப்புக் கொண்டார். சுயமரியாதைப் பிரச்சாரப் பணிக்குத் தன்னை ஒப்புக் கொடுத்தார். 1933-35 மூன்று ஆண்டுகள் அவர் இடைவிடாத சுயமரியாதைப் பிரச்சாரம் செய்தார்.

இந்தக் காலத்தில் பெரியார் நடத்திவந்த குடியரசு, பகுத்தறிவு, புரட்சி ஆகிய வார இதழ்களில் பல கட்டுரைகள் எழுதினார் ஜீவா. கடவுள் மறுப்பு, மூடத்தனங்கள் ஒழிப்பு, சுயமரியாதைச் சிந்தனை மற்றும் சமதர்மக் கருத்துக்கள் விதைப்பு, மனுதர்ம எதிர்ப்பு, பெண் எழுச்சி போன்ற அடிப்படைகளைக் கொண்டவைகளாக இருந்தன அவை. இந்த அடிப்படைகள் ஜீவாவை காந்தி அடிகளுக்கு நேரெதிரான நிலையில் கொண்டுநிறுத்தின. 'புரட்சி' இதழில் வெளிவந்த 'காந்தி பகிஷ்காரம்', (11-2-34) அரிஜன காந்தியை சமதர்மிகள் பகிஷ்கரிப்பது ஏன்?' (11-4-34), 'காந்தியின் நாடகம்' (4-3-34) ஆகிய கட்டுரைகள் காந்தியை அப்பட்டமாக எதிர்த்தன. காந்தி பிற்போக்கான மனுதர்மக் கோட்பாட்டின் அடிப்படையில் வருணாசிரம ஏற்றத்தாழ்வை ஆதரிக்கிறார் என்பதாலும், பார்ப்பனரையும் பணக்காரர்களையும் ஆதரிக்கிறார் என்பதாலும், ஒடுக்கப்பட்ட

மக்களை இதரர்களோடு ஒன்றாக்குவதற்குப் பதிலாக, அவர்களுக்கு அரிஜனங்கள் என்று பட்டம் கட்டிப் பிரித்து வைக்கிறார் என்பதாலும் காந்தியைப் பகிஷ்கரிக்க வேண்டும் என்று பிரகடனம் செய்தார் ஜீவா. காந்திஜியின் சீர்திருத்தவாதம் புரட்சிக்கு விரோதமானது என்றும் அறிக்கை வெளியிட்டார்.

நாத்திகவாதத்தையும் வலிமையாகப் பிரச்சாரம் செய்தார் ஜீவா. புரட்சி 21.1.34 இதழில் அவர் பின்வருமாறு எழுதினார்.

> கடவுள் நமது தினசரி வாழ்க்கையில் மிதமிஞ்சிக் கலந்துவிட்டார். பாசாங்குக்காரர்களும் பித்தலாட்டக் காரர்களும் கடவுள் உணர்ச்சியைத் தங்களுக்குச் சாதகமாக்கிக் கொள்வதில் ஆச்சர்யபடுவதற்கில்லை. மோசக்காரர்களிடமிருந்து விடுதலை பெறுவதினும், 'கடவுளிடமிருந்து விடுதலை' பெறுவது சுலபம். 2500 ஆண்டுகளுக்கு முன் புத்தன் கூறியதைப் போன்றும், இன்று ரஷ்யா காட்டுவதைப் போன்றும், கடவுளுணர்ச்சியிலிருந்து வெளிப்பட்டாலொழிய மனித சமூகத்திற்குக் கரையேற்றமில்லை.[1]

சமதர்மம் பற்றியும் இக்கட்டுரைகளில் விரிவாக எழுதியிருக்கிறார் ஜீவா. அவர் சொல்லுகிறார்.

> சமதர்மிகள் என்ன சொல்லுகிறார்கள்? எப்பொழுது உற்பத்திச் சாதனங்களும் உழைப்பின் பலனைப் பங்கிடும் உரிமையும் பொதுவாக்கப்படுகின்றதோ, அப்பொழுது யாவர்க்கும் வேலை கிடைக்கும். அளவுக்கு மிஞ்சி யாரும் பாடுபட வேண்டிய அவசியமில்லை. எல்லோரும் சமூகத்துக்கு அவசியமான வேலைகளையே செய்வார்கள். வாழ்க்கைக்கு இன்றியமையாத பொருள்களுக்கு எவரும் முடைபட நேரிடாது. சமூகத்துக்குப் பயன்படும் யாவற்றையும் பொதுவுடைமையாக்கி விட்டால் கொடிய வறுமை பூண்டற்றுப் போகும். தரித்திரத்திலிருந்து நேரடியாகப் பிறக்கும் அறியாமை, அமைதியின்மை, அநேகமாய்ச் சமூக

> நோய் நொடிகள், பல குற்றங்கள் முதலிய தீமைகளும் இருந்த இடம் தெரியாமல் மறைந்துவிடும்.[2]

அரிஜன காந்தியை சமதர்மிகள் பகிஷ்கரிப்பதேன்? என்ற கட்டுரை ரொம்பவும் வித்தியாசமானது. காந்தியைக் கண்டனம் செய்வதற்காகவே எழுதப்பட்டக் கட்டுரை இது. அதில்,

> வருணாசிரமத்தை உடும்புப் பிடியாய்ப் பிடித்துக்கொண்டும், சாதீய முறைகளை அனுஷ்டித்துக் கொண்டும், தீண்டாமைப் பிசாசைக் கொன்று விடலாம் என்று காந்திஜி சித்தாந்தம் செய்கிறார். பொதுப் பள்ளிகளையும் குளங்களையும் கிணறுகளையும் வீதிகளையும் ஸ்தலங்களையும், ஒடுக்கப்பட்டவர்களுக்குத் திறந்து விடுவதனாலும், விசேஷமாக ஆலயப் பிரவேசத்தினாலும் தீண்டாமையை இருந்த இடம் தெரியாமல் செய்துவிட முடியும் என்று அவர் அடிக்கடி உபதேசித்து வருகிறார். . . ஆனால் சம தர்மிகளோ, தீண்டாமைக் கேட்டைச் சுட்டுப் பொசுக்கித் துடைக்க வேண்டுமானால், சம பந்தி போஜனமும் கலப்பு மணமும் பொருளாதார சமத்துவம் அவசியமென்று இடையறாது பிரச்சாரம் செய்து வருகிறார்கள். உயர்வுதாழ்வு காணும் பேத உணர்ச்சியே தீண்டாமை வர்க்கத்தின் ஆணிவேர் என்பது சமதர்மிகளின் முடிவு. சாதி, மதம், தேசம், நிறம், பால், பொருள் வேற்றுமைகளே இந்தக் கொடிய பேத உணர்ச்சி கொழுத்துப் பருத்து வளரும்படிச் செய்யும் பூச்சிகளென்பது சமதர்மிகளின் தீர்மானம்.[3]

இப்படிப் பேசுகின்ற நாத்திக ஜீவா அன்றைய கோயில் நுழைவுப் போராட்டங்களையும் கடுமையாகக் கண்டித்திருக்கிறார். ஆலயப் பிரவேசப் போராட்டங்களை முட்டாள்தனமானவை என்று அவர் நிராகரிக்கிறார்.

6.5.34 புரட்சி இதழில் ஜீவா, 'குருட்டு முதலாளித்துவமும் செவிட்டு சர்க்காரும்' என்ற கட்டுரை எழுதினார். முழுக்க, முழுக்க

முதலாளித்துவத்துக்கு எதிராகவும் தொழிலாளி வர்க்கத்துக்கு ஆதரவாகவும், போராடும் தொழிலாளியை அடக்கி ஒடுக்கும் அரசாங்கத்துக்குக் கண்டனமாகவும் அமைந்த இந்தக் கட்டுரைக்காக அன்றைய அரசு அப்பத்திரிகை மீது நடவடிக்கை எடுத்தது. பத்திரிகை நின்றுபோய், மீண்டும் சிறிது காலம் கழித்து உயிர்பெற்றது. ஜோலார்பேட்டைத் தோழர் பார்த்தசாரதி 5.8.34இல் தொடங்கிய 'சமதர்மம்' என்ற பத்திரிகையிலும் தொடர்ந்து எழுதினார் ஜீவா.

சமதர்மத்திலும் பிராமணிய எதிர்ப்பு, காங்கிரஸ் எதிர்ப்பு, காந்திய எதிர்ப்பு, கடவுள் எதிர்ப்பு, சாதி எதிர்ப்பு, மத எதிர்ப்பு ஆகியவைகளோடு பெண்ணுரிமை சுயமரியாதை, சமதர்மம் ஆகியவைகளையும் வற்புறுத்தினார் ஜீவா.

12.9.34 சமதர்ம இதழில்,

> சோவியத் வாழ்வால் மனித சமாஜத்தை நிர்மாணித்த தோழர் லெனினுடைய வாழ்க்கை வரலாறு உலகத் தொழிலாளருக்கு, சர்வதேச சமதர்மிகளுக்கு, சிறப்பாக இளம் தமிழர்கட்கு அறிவிலே உண்மையேற்றி, நரம்பிலே அன்பைத் தாக்கி, குருதியிலே வீரத்தைக் கலந்து, எலும்பிலே ரோஷத்தைப் பாய்ச்சி, புத்துயிரையும் புது உணர்ச்சியையும் கூட்டுமென்பது எனது துணிவு. உலகப் பிரசித்தி பெற்ற பேராசிரியர் ரோமெயின் ரோலண்டு, 'தற்காலத்தில் கர்மயோகியும் மகா தியாகியும் லெனின் ஒருவர்தான்' என்று லெனினுக்குப் புகழ்மாலை சூட்டியிருப்பதை நோக்குங்கள்

என்று லெனினுக்குப் புகழ் ஆரம் சூட்டுகின்றார்.[4]

சமதர்மம் 12-4-34, 31-10-34களில் எழுதிய 'சொல்லும் செயலும்' என்ற கட்டுரையின் இறுதியில், விதையுங்கள்; ஆனால் கொடியவர்களை அறுவடை செய்ய விடாதீர். பொருள் தேடுங்கள்; ஆனால் ஏமாற்றுக்காரர்களுக்கு விட்டு விடாதீர். நெய்யுங்கள்; ஆனால் சோம்பேறியை அணிய விடாதீர் என்ற ஷெல்லியின் வரிகளை மேற்கோள் காட்டி, உழைக்கும் மக்களுக்கு உற்சாகமூட்டுகிறார்[5] (ஜீவா, சமதர்மம், ப. 143)

9.12.34 சமதர்மத்தில் எழுதப்பட்டிருந்த கட்டுரையில் ஜீவா கீழ்க்கண்டவாறு குறிப்பிடுகிறார்.

மாகாண சுயமரியாதை மாநாடு கூட்ட வேண்டிய அவசியத்தை வற்புறுத்தி, சமதர்மம் ஒரு தலையங்கம் எழுதியிருந்தது. அந்தத் தலையங்கம், தோழர்களுடைய பார்வைக்கு எட்டிற்றோ என்னமோ, யானறியேன். இரண்டொரு சங்கங்கள் தவிர, நூற்றுக்கு மேற்பட்ட சங்கங்கள், சாதகமாகவோ பாதகமாகவோ ஒரு வார்த்தை கூடக் கூறவில்லை. எந்தத் தோழரும் இவ்விஷயத்தை வலியுறுத்தியதாக அறியோம். தோழர் ஈ.வெ.ரா.வின் உள்ளம் ஜஸ்டிஸ் கட்சியின் புனருத்தாரணத்தில் பதிந்து கிடப்பதாகத் தெரிகிறது. மாகாண சங்கக் காரியதரிசியான தோழர் எஸ். இராமநாதனின் மூச்சுப் பேச்சே காணவில்லை. அஞ்ஞாத வாசம் செய்கிறாரோ என்னமோ.[6]

பகத்சிங் சிறையிலிருக்கும்போது எழுதிய, 'நான் ஏன் நாத்திகன் ஆனேன்' என்ற நூலைக் குடியரசு பதிப்பகம் 1936இல் வெளியிட்டது. ஜீவா அதை மொழிபெயர்த்தார். இதற்காக அன்றைய போலீசாரால் ஜீவா கைது செய்யப்பட்டு, கை, கால் விலங்கிடப்பட்டு, கோவை மாவட்டம் முழுவதும் இழுத்தடிக்கப் பட்டார் என்பதையும் இங்கே குறிப்பிடுவது பொருத்தமாக இருக்கும்.

1935 மே தினத்தன்று தோழர் கே. முருகேசன், டி.என். ராமச்சந்திரன் ஆகியோரால் தொடங்கப்பட்ட 'புது உலகம்' என்ற பத்திரிகையிலும் ஜீவா கட்டுரைகள் எழுதினார்.[7]

இந்த மூன்றாண்டு காலத்தில் ஜீவா தீவிரமான ஒரு சமூகக் கட்டுரையாளராக வளர்வதையும், அந்த வளர்ச்சி சுயமரியாதைத் திசைவழியிலிருந்து படிப்படியாக சமதர்மத் திசை நோக்கித் திரும்புவதையும் காணமுடியும்.

ஜீவாவின் இந்தத் திசைவழி மாற்றத்தினால் பெரியாருக்கும் ஜீவாவுக்கும் இடையே தோன்றி வளர்ந்த கருத்து முரண்பாடுகள் 1936 பிப்ரவரியில் திருத்துறைப்பூண்டியில் நடந்த சுயமரியாதை சமதர்ம மாநாட்டில் தெளிவாக வெளிப்பட்டது. இதன்விளைாக 1936 பிப்ரவரியில் ஜீவாவைச் செயலாளராகக் கொண்டு சுயமரியாதை சமதர்மக்கட்சி தொடங்கப்பட்டது. அதன் முதல் மாநாடு 1.11.36இல்

திருச்சியில் கூட்டப்பட்டது. அதைத் தொடங்கி வைக்க வந்த எஸ்.ஏ. டாங்கே, சுயமரியாதை சமதர்மக் கட்சியைக் கலைத்துவிட்டு, எல்லாம் காங்கிரஸ் சோஷலிஸ்ட் கட்சியில் சேரும்படி வழிகாட்டினார். அது ஏற்றுக் கொள்ளப்பட்டு, அதன் அடிப்படையில் ஜீவா காங்கிரஸ் சோசலிஸ்ட் கட்சியில் சேர்ந்து, 1937 நவம்பரில் சேலம் நகரில் கூட்டப்பட்ட காங்கிரஸ் சோசலிஸ்ட் கட்சியின் முதன் மாநாட்டில் அதன் பொதுச் செயலாளராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார். காங்கிரஸ் சோஷலிஸ்ட் கட்சியின் பத்திரிகையாக 6-11-1937 நவம்பர் புரட்சி தினத்தன்று 'ஜனசக்தி' வார இதழ் மலர்ந்தது. ஜனசக்தியின் ஆசிரியராக ஜீவா பொறுப்பேற்றார். நிர்வாகி பி. சீனிவாசராவ். இதழைக் கவனிக்க ஓர் ஆசிரியர் குழுவும் இருந்தது.

முதல் ஜனசக்தியின் தலையங்கம் இவ்வாறு தொடங்கியது:

> வெடிக்கப் போகும் பாறையின் மேல் உட்கார்ந்திருக்கும் மனிதனின் நிலைமைதான் இன்றைய மனித சமூக வாழ்வின் நிலையும், அரித்துத் தின்னும் தரித்திரத்திலிருந்து கூண்டோடு கரையேறுவதற்காக மூச்சைப் பிடித்துக்கொண்டு போராடும் பொதுஜனங்களின் போராட்டம் உலக ரீதியாகிவிட்டது. அடிமைக் குகைகளிலிருந்து வெளிப்பட்டு சுதந்திர ஒளியில் குளிக்கும் வேட்கையுடன் எண்டிசைகளிலிருந்தும் ஒடுக்கப் பட்டோரும் நசுக்கப்பட்டோரும் தங்களுடைய சக்தியை உருட்டித் திரட்டி ஒருமுருமுகப் முகப்படுத்தி வருகிறார்கள்

ஜீவாவின் சொல்லழகுக்குச் சிறந்த உதாரணம் இது.

> . . . . உலகம் உடம்பு, தேசங்கள் உறுப்புகள், தனிமனிதர்கள் அணுமுட்டைகள் என்று கூறத்தக்க மாதிரி மனித வாழ்வு விரிவடைந்திருக்கிறது. சமூகப் பொருளாதார அரசியல் வாழ்வில் ஒரு பாகத்தை விட்டு மற்றொரு பாகத்தைப் பிரிக்க முடியாத படி இன்று நாம் ஒன்றுபட்டுவிட்டோம். . . . மனித சமூக வாழ்வில்

> புரட்சி சக்திக்கும் அதன் எதிர்ப்பு சக்திக்கும் நடந்து கொண்டிருக்கும் போராட்டத்தின் ஒரு பகுதிதான் இன்று நாம் பிரிட்டீஷ் ஏகாதிபத்தியத்தை எதிர்த்து இந்தியாவில் நடத்திக் கொண்டிருக்கும் பூரண சுயேட்சைப் போராட்டம் என்று உணர வேண்டும். . . . இந்த மகத்தானக் காரியத்தை வெற்றிகரமாக சாதிக்க வேண்டுமாயின் மார்க்சீய கண்ணோட்டத்தோடு போராட்டத்தை நடத்தினால் தான் முடியும். . . .

ஜீவாவின் சொல்வன்மை இந்தத் தலையங்கத்தில் பளிச்சென்று புலப்படுகிறது. ஜனசக்தியைக் கட்சி அரசியல் பத்திரிகையாக மட்டும் நடத்தாமல், பொருளாதார அரசியல் விடுதலையோடு பண்பாட்டு விடுதலைக்கான பேராயுதமாகவும் விரிவு படுத்தினார் ஜீவா.

20.11.37 ஜனசக்தி இதழில் வேலைநிறுத்தம் என்னும் கடும்புயல் என்றத் தலையங்கம் வெளிவந்தது. சமஸ்தானங்களில் நடந்த அடக்குமுறைகள் பற்றி அதற்கு முந்திய வார இதழில் சீனிவாசராவ் ஒரு காரசாரமான கட்டுரை எழுதினார். கடன் பிரச்சனையைப் பற்றித் தோழர் பி. ராமமூர்த்தி எழுதிய கட்டுரை ஆழமானது. டாக்டர் ஜி. அதிகாரி எழுதிய, 'வர்க்கப் போர் என்றால் என்ன' என்ற கூர்மையான அரசியல் கட்டுரை 9.11.37 இதழில் வந்தது.

ஆனால் ஜீவா இவைகளோடு திருப்தியடையவில்லை. ஜனசக்தியை ஒரு கலை இலக்கியப் பேராயுதமாகவும் கூர்த்தீட்டினார். 13.11.37 இதழில் 'காலுக்குச் செருப்புமில்லை' என்ற அவருடைய புகழ் பெற்றப்பாடல் வெளிவந்தது. பாவேந்தரின் 'புதியதோர் உலகம் செய்வோம்' என்ற அற்புதப் பாடல் 20.11.37 இதழில் வெளிவந்தது. வெ.நா. திருமூர்த்தியின் பாடல்கள், பட்டுக்கோட்டை கல்யாணசுந்தரம் பாடல்கள், கவிஞர் தமிழ் ஒளியின் பாடல்கள் எனத் தொடர்ந்து ஜனசக்தியைக் கவிதைகள் அலங்கரித்தன.

தொடக்கக் காலம் முதலே நாடகக் கலை, திரைப்படக் கலைக் கலைஞர்களோடு மிக நெருக்கமான உறவு வைத்திருந்தார்

ஜீவா. எனவே அக்காலச் கலைஞர்கள் தங்கள் கலைப் படைப்புகளில் ஜனசக்தியின் லட்சியங்களைப் பிரச்சாரம் செய்ததோடு, ஜனசக்தியின் வளர்ச்சியிலும் அக்கறை செலுத்தினார்கள். ஜனசக்தி வளர்ச்சி நிதிக்காக மதுரை நாடக சங்கச் செயலாளர் தோழர் எஸ். குருசாமியின் முன்முயற்சியால் எஸ்.எஸ். விஸ்வநாததாஸ் டி.கே. நடராஜ் பிள்ளை, கே.பி. ஜானகி, வி.எஸ். சிவம் அய்யர், பி.எம். காதர் பாட்ஷா போன்ற அக்காலப் பிரபலக் கலைஞர்களைக் கொண்டு ஒரு நாடகம் சிறப்பாக நடத்தப்பட்டது. நடிகர் எம்.ஜி. நடராஜ பிள்ளை மறைந்ததை ஒட்டி நடந்த இரங்கல் கூட்டத்தில் தலைமை வகித்த ஜீவா, ஏகாதிபத்தியத்தின் அடக்குமுறைக் கொள்கைதான் அவர் (நடராஜ பிள்ளை) அகால மரணம் அடையக் காரணம் என்றும், ஆகவே ஏகாதிபத்தியத்தை ஒழிக்க நடிகர்கள் முன்வர வேண்டும் என்றும், தமிழ் நாடக மேடையின் நிலைமை, அதனைத் திருத்தும் மார்க்கம் முதலியவைகளைப் பற்றியும் விரிவாகப் பேசியதாக 9.7.38 ஜனசக்தி இதழில் செய்தி வெளியாகி உள்ளது.

செய்திகளுக்குத் தலைப்பு கொடுப்பதும் செய்திகளைக் கவர்ச்சிகரமாக வடிவமைப்பதிலும் படங்களை இடையிடையே போட்டு ஈர்ப்பை அதிகப்படுத்துவதிலும் எழுத்து வடிவங்களைத் தொடர்ந்து மேம்படுத்துவதிலும் ஜனசக்தி கவனம் செலுத்தியிருக்கிறது.

1939இல் டி.கே.எஸ். சகோதரர்கள் திண்டுக்கல்லில் நாடகம் நடத்திக்கொண்டிருந்தபோது, ஜீவா அங்கே சென்றார். 'ஜனசக்தி' நிதிக்காக ஒரு நாடகம் வேண்டுமென்றார். டி.கே.எஸ். சகோதரர்கள் ஒப்புக்கொண்டு ஒரு நாடகம் நடத்தினார்கள். ஆனால் போதிய வசூல் இல்லை. 'ஜனசக்தி' வார இதழைத் தினசரியாக்க வேண்டுமென்றும், அதற்கு தேவையான இயந்திரங்கள் வாங்க ரூ.5,000 கடனாக வேண்டுமென்றும் ஜீவா அவர்களிடம் கேட்டார். அப்போது டி.கே.எஸ். சகோதர்கள் நால்வரும் கூடிப் பேசினார்கள். மனமுவந்து முடிவு செய்தார்கள். பணத்தைப் பெற்றுக்கொண்டு ஜீவா சென்னை புறப்பட்டார். அங்கே அவர் கைது செய்யப்பட்டார். ஜனசக்தி தினசரியாகவில்லை. . . . .

பாரதியிடம் இளமையிலேயே ஜீவா ஆழமாக ஈடுபாடு கொண்டிருந்தார். அவரைத் தன் வழிகாட்டியாகவே ஜீவா

கருதினார். பொது உடைமைச் சமுதாயம் மலர்ந்திடப் பாரதி கருத்துக்களைப் பரப்புவது முக்கியமானது எனக் கருதினார். அந்த அடிப்படையில் 15.9.38 ஜனசக்தி இதழில் பாரதி தினத்தை அதிவிமரிசையாகப் பயன்தரும் முறையில் தமிழ் நாடு எங்கும் கொண்டாட வேண்டும் என்று வேண்டுகோள் விட்டார். ஏன் கொண்டாட வேண்டும்? விளக்குகிறார் ஜீவா.

> பாரதி தினத்தை அர்த்த புஷ்டியுடன் கொண்டாடினால், அது புதுமை செய்யும் ஆவேசத்தைக் கொண்டாடுவதாகும். புது உலக வாழ்வைக் கொண்டாடுவதாகும். பாரதியார் சீட்டுக்கவியும் அல்ல. கலைக்காகக் கலை என்கிற மாயா வினோதக் கவியும் அல்ல. அவர் ஜன சமூக வாழ்வை உயர்த்தும் பொருட்டுத் தலைநிமிர்ந்து நின்ற "வெள்ளத்தின் பெருக்கைப் போல கலைப் பெருக்கும் கவிப் பெருக்கும்" கொண்ட ஜீவப் பிரவாகக் கவி; பிரபுத்துவ முதலாளித்துவ சமூக அமைப்புகளின் பிற்போக்கான கருத்துக்கள் பாரதியாரின் எழுத்துக்களில் பல இடங்களில் காணப்பட்ட போதிலும், பரிணமித்துவரும் புது உலகத்தின் நவீனக் கருத்துக்களைப் புரட்சிகரமாக முதன்முதலில் வெளியிட்ட பெருமை தமிழ்ப் புலவர்களிலேயே காலம் சென்ற ஸ்ரீ சுப்ரமணிய பாரதியாருக்குத்தான் உரியது என்பதே நமது திடமான முடிவு.

என்றார்.

இந்த அறிவிப்பின் ஒவ்வொரு வார்த்தையும் ஜீவா பாரதியை எப்படி மதிப்பிடுகிறார் என்பதன் தெளிவான சாட்சி. 30களிலேயே கம்யூனிஸ்டுகள், ஜீவாவை எப்படிப் போற்றி வளர்த்தார்கள் என்பதற்கும் இதுவே சாட்சி. இந்த விளம்பரத்துக்குப் பின்னர்தான் நாட்டில் பாரதி விழா மக்கள் விழாவாக எங்கும் கொண்டாடப் பட்டது என்பது வரலாறு.

மாணவர் இயக்கங்களை வளர்ப்பதிலும் அன்றைய ஜனசக்தி அதிக அக்கறை செலுத்தியது. 1937 - 1938இல் அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தில் படித்துக் கொண்டிருந்த

தோழர் கா. பாலதண்டாயுதம் தலைமையில் நடந்த மாணவர் போராட்டச் செய்திகளை ஜனசக்தி முக்கியத்துவம் கொடுத்து வெளியிட்டது.

அரிய கருத்துப் படங்களையும் வெளியிட்டது ஜனசக்தி. விடுதலை பெற்று எழும் விவசாயி பற்றிய கருத்துப்படம் (9.3.37) சோவியத்தில் நாஜிகளுக்குப் பரிசு (29.3.44), விலைவாசி பற்றிய கருத்துபடம், 1946 கடற்படை எழுச்சி பற்றிய உலக புகழ் பெற்ற சித்த பிரசாத் தீட்டிய ஓவியம், 1948 ஆள்கொல்லிச் சட்டம் பற்றி பிரபல ஓவியர் ரா.கி. வரைந்த படம் (ரா.கி. ஜனசக்தி மூலம்தான் தமிழகத்துக்கு அறிமுகமானார்) போன்றவை காலத்தை வென்று நிற்கும் கருத்துப்படங்கள்.

இவ்வளவு சிறப்புகளுடன் நடத்தப்பட்டாலும் அரசாங்கத்தின் தாக்குதலுக்கு ஜனசக்தி அடிக்கடி உள்ளாயிற்று. மூன்றாவது இதழ் வெளிவந்ததும் ஜனசக்தி நின்றுவிட்டது. மாநிலத்தைக் காங்கிரஸ் கட்சி ஆண்டு கொண்டிருந்தது. அவர்களுடைய போலீஸ் தொல்லைக்குப் பயந்து பி.என். பிரஸ் உரிமையாளர்கள் ஜனசக்தியை அச்சிட மறுத்துவிட்டனர். ஜீவா, சீனிவாசராவ், ராமமூர்த்தி போன்ற தோழர்களின் இடைவிடா முயற்சியால் ஒரு அச்சு இயந்திரம் வாங்கப்பட்டு அச்சகம் திறக்கப்பட்டது. போலீஸ் கண்காணிப்பிலிருந்து தப்புவதற்காக அந்த அச்சகத்திற்கு 'ஜேசு பிரஸ்' என்று தோழர்கள் பெயரிட்டார்கள். 6.7.38இல் ஜனசக்தி மறுபிறப்பு எடுத்தது. 1939 செப்டம்பரில் மீண்டும் நின்றது. கம்யூனிஸ்ட் கட்சிக்குக் கடுமையான பொருளாதார நெருக்கடி. பண வசூலுக்காகத் தோழர்களுடன் சேர்ந்து ஜீவா தமிழ்நாடு முழுவதும் அலைந்தார்.

ஒருமுறை ஜனசக்திக்காகக் காரைக்குடி வட்டாரத்தில் நிதி திரட்டி விட்டு மதுரைக்கு வந்தாராம் ஜீவா. கடுமையான பசி அவருக்கு. இட்லி வாங்கிக் கொடுங்கள் என்று தோழர்களிடம் கேட்டாராம். ஜீவா சாப்பிட்டுக் கொண்டிருந்தபோது, அவர் சட்டைப் பையில் பெரும் பணம் இருந்ததைக் கவனித்த ஒரு தோழர், இவ்வளவு பணத்தை வைத்துக் கொண்டு எங்களிடம் இட்லி கேட்டீரே தோழரே! நீங்களல்லவா வாங்கித் தந்திருக்க வேண்டும் என்றாராம். "இது ஜனசக்தி பணம். ஒரு காசு கூட நான் தொடமாட்டேன்" என்றாராம் ஜீவா.

ஜனசக்தியை ஜீவா, தோழர்கள் பி.ராமமூர்த்தி, எ.எஸ்.கே. முருகேசன் ஆகியோர் எவ்வாறு வளர்த்தார்கள் என்பதைப் பாலன் கீழ்க்கண்டவாறு சித்திரிக்கிறார்.

> ஹோட்டலிலிருந்து ஒரு எடுப்புச் சாப்பாடு வரவழைக்கப்படும். அதனை அனைவரும் பகிர்ந்து உண்டு பசி போக்கி, பத்திரிகை நடத்தி வந்தனர். இந்த ஒருவேளை ஒரு எடுப்புச் சாப்பாட்டுக்கே காலையில் இருந்து பணம் தேட வேண்டும்?[8]

1942இல் சென்னை மாகாணத்திலிருந்து நாடு கடத்தப் பட்டார் ஜீவா. அவர் காரைக்காலுக்குச் சென்றார். காரைக்கால் அரசாங்கம் அவரை நாடு கடத்தியது. அங்கிருந்து மும்பாய் சென்றார். மும்பாய் அரசும் அவரைத் துரத்தி அடித்தது. தப்பித்து, அங்கிருந்து திருவாங்கூருக்கு (இன்றைய கேரளா) வந்த அவரைப் பொதுக் கூட்டத்தில், பேச முடியாதபடி 'வாய்ப்பூட்டுச் சட்டம்' போட்டு ஒடுக்கியது திருவாங்கூர் அரசு. அவரை அவருடைய சொந்த ஊரான பூதபாண்டியை விட்டு வெளியே வருவதையும் தடை செய்தது. மூன்று ஆண்டு கால வனவாசத்துக்குப் பிறகு 45 அக்டோபரில் ஜீவா விடுதலையாகிச் சென்னைக்கு வந்தார். மீண்டும் ஜனசக்தி பொறுப்பை ஏற்றுக்கொண்டார். 47இல் நாடு சுதந்திரம் பெற்ற போது "வீழ்ந்தது யூனியன் ஜாக் உயர்ந்தது மூவர்ணக்கொடி" என்று வாழ்த்தி வரவேற்றது ஜனசக்தி.

1947இல் அக்டோபரில் நடந்த எட்டையபுரம் பாரதி மணிமண்டபம் திறப்புவிழா பற்றிய ஜீவாவின் செய்தி பாரதியைத் தமிழகம் எப்படிக் கொண்டாட வேண்டும் என்று அற்புதமாக விளக்குகிறது.

விடுதலைக்குபின் தேசிய இனப்பிரச்சனையில் தீவிர அக்கறை செலுத்தியது ஜனசக்தி. பல கட்டுரைகளை அது வெளியிட்டது. 7.12.47 கட்டுரை அவற்றில் மிக முக்கியமானது.

47இல் வெ.நா. திருமூர்த்தி எழுதிய ஒரு கவிதையில்,

நீடித்த மதவெறியை பணவெறியை வீழ்த்தி
நிலத்தொழிலும் பிறதொழிலும் ஜனசர்க்கார் நடத்தும்

ஈடில்லாப் புதியதமிழ் நாட்டிற்காய்த் தினமும்
இனிவரவாய் வரவிருக்கும் ஜனசக்தி வாழ்க

என்று வாழ்த்தினார். பிரிக்கப்படாத சென்னை ராஜதானியின் தமிழ்ப் பகுதிகளுக்கு அன்றே 'தமிழ் நாடு' என்று கம்யூனிஸ்டுகள் பெயரிட்டு அழைக்கத் தொடங்கினார்கள் என்பதை இந்த வரிகள் காட்டும்.

இக்காலத்தில்தான் இன்றைய சிறுகதை மன்னன் ஜெயகாந்தன் அரை டிக்கட்டில் ரயில் ஏறி, ஒரு துணிப்பையுடன் அச்சு கோர்க்கும் பணியாளராக ஜனசக்தி அலுவலகத்துக்கு வந்தார். அவர் வந்த காலத்தில் ஜனசக்தியில் ஜீவாவோடு சீனிவாசராவ், சர்மா, எம்.ஆர்.வி., ஏ.எஸ்.கே., எஸ்.ஆர்.கே., ஆர்.கே.கே., இஸ்மத் பாட்ஷா, பி. ராமமூர்த்தி, ஐ. மாயாண்டி பாரதி, ஆர். ஹெச். நாதன், ஆர். ராமநாதன் ஆகியோர் ஜனசக்தியில் பணிப்புரிந்து கொண்டிருந்தார்கள்.

புதிதாகப் பதவி ஏற்ற காங்கிரஸ் சர்க்கார் 1948 காலத்தில் கம்யூனிஸ்டுகளை வேட்டையாடியது. சிறைகளிலும் வெளியிடங்களிலும் பல அரிய தோழர்கள் சுட்டுக் கொல்லப்பட்டார்கள். கம்யூனிஸ்ட் கட்சி தடை செய்யப்பட்டது. ஜனசக்தி நின்று போனது. 'முன்னணி', 'போரணி', 'உலக அரசியல்' என்று பல பெயர்களில் மாதமிருமுறை இதழ்களைக் கம்யூனிஸ்ட்டுகள் வெளியிட்டனர். இவ்விதழ்களில் குயிலன், தமிழ் ஒளி ஆகிய கவிஞர்கள் பணியாற்றியது குறிப்பிடத்தக்கது.

இந்திய விடுதலை தினத்தன்று கம்யூனிஸ்ட் கட்சியின் தமிழ்நாடு குழு, 'ஜனநாயகம்' என்ற ஒரு மாத இதழைத் தொடங்கியது. அதன் ஆசிரியராகவும் ஜீவாவே பொறுப்பேற்றார். அரசியல், பொருளாதாரம், பண்பாடு ஆகிய மூன்று துறைகளிலும் கவனம் செலுத்தி, தமிழ் மக்களை முற்போக்குத் திசையில் வளர்த்தெடுக்கும் ஒரு மாத இதழாக அதுவும் உருவாக்கப்பட்டது. ஜீவா, ராமமூர்த்தி, கே. முத்தையா, சீனிவாசராவ் போன்ற தோழர்கள் கூர்மையான அரசியல் பொருளாதாரக் கட்டுரைகள் எழுதினர். இவற்றுடன் தமிழ்ஒளி, குயிலன், இரா. முத்துலிங்கம், வே.நா. திருமூர்த்தி போத்தனூர் கா. ராயப்பன் போன்றோர் கதைகளும் கவிதைகளும் எழுதினர்; புத்தக விமர்சனங்களும் இடம்பெற்றன.

எஸ்.எ. டாங்கே, சஜ்ஜாத் ஜாகீர் போன்ற பேரறிஞர்களின் கட்டுரைகளும் மொழி பெயர்த்து வெளியிடப்பட்டன. தேசிய இனப்பிரச்சனை, மொழிப்பிரச்சனை போன்றவை பற்றியும் கட்டுரைகள் வெளிவந்தன.

மத நல்லிணக்கத்தைப் பாதுகாப்பதிலும் ஜனசக்தி தீவிர அக்கறை செலுத்திற்று. தேச விடுதலையைத் தொடர்ந்து, இந்தியாவிலும் பாகிஸ்தானிலும் படுபயங்கரமான மத மோதல்கள் எழுந்தன.

தேசபக்தியுள்ள ரயில்வேத் தொழிலாளர்கள் ரயில் ஓட்ட முன்வர வேண்டுமென்று நேரு அரசு வேண்டுகோள் விடுத்தது.

இந்தச் சூழ்நிலையில் பொன்மலையில் 1947 அக்டோபர் 21இல் கூடிய முதன் இந்திய ரயில்வேத் தொழிலாளர் சங்கத்தின் மத்திய கவுன்சில் கூட்டத்தில், தோழர் எம். கல்யாணசுந்தரம் டில்லி நிலைமையைத் தான் நேரில் கண்டவாறு எடுத்துக் கூறியதையும், அந்தக் கூட்டத்தில் இந்தியாவுக்கும் பாகிஸ்தானுக்கும் இடையில் ரயில்களை ஓட்ட தோழர் எம். கல்யாணசுந்தரம் தலைமையில் 64 ரயில் தொழிலாளர்களைக் கொண்ட குழுவை அனுப்புவதுதென்று செய்யப்பட்ட முடிவையும் ஜனசக்தி விரிவாக வெளியிட்டிருந்தது. அந்த 64 தோழர்களின் சாதனைகளையும் தொடர்ந்து வெளியிட்டு, ஜனசக்தி மக்களுக்கு வழிகாட்டியது.

இந்த மதக்கலவரச் சூழலில் வகுப்புவாத வெறிக்கு எதிராகக் காந்தியடிகள் துணிச்சலாகத் தொடர்ந்து போராடினார். இதைப் பாராட்டி அவருடைய 79ஆவது பிறந்த தினத்தையொட்டி ‘காந்திஜீக்கு வணக்கம்’ என்ற தலைப்பில் ஜனசக்தி இவ்வாறு எழுதியது.

> . . . தன் தள்ளாத வயதில் காந்திஜீ நம்முடைய எதிர்காலத்தையே உருவாக்கக் கூடிய முக்கியமான விசயங்களில் தேசத்தின் மனச்சாட்சியைத் தட்டி எழுப்பி வருகிறார். . . அவருடைய பிறந்த தினத்தை நாம் எல்லோரும் மிகப்பெரிய சமாதான விழாவாகவே கொண்டாடுவோம்.

இந்த நேரத்தில் ரகுநாதன் நெல்லையில் இருந்தார். அவருடன் நா.வா., தி.க.சி. போன்றோர் ‘கலைஞர் கழகம்’ என்ற

ஒரு இடதுசாரி இலக்கிய அமைப்பைத் தோற்றுவித்து நடத்திக் கொண்டிருந்தார்கள். அந்த அமைப்பில் பேச வந்த ஜீவா, ரகுநாதனிடம் ஜனநாயகம் மாத இதழ் பற்றிச் சொல்லி, அதற்குக் கதை, கவிதை, அனுப்பும்படிக் கேட்டுக்கொண்டார். ரகுநாதனும் ஒப்புக்கொண்டார்.

1948 ஜனவரி 30இல் காந்தியடிகள் சுட்டுக் கொல்லப்பட்டார். அந்த சோக நிகழ்ச்சியை ரகுநாதன் ஒரு கவிதையாக எழுதி, ஜனநாயகத்துக்கு அனுப்பினார். கவிதையை ஜீவா வெளியிட்டார். ஆனால் "ரகுநாதன் எழுதுபவை அவருடைய சொந்தக் கருத்துக்களே தவிர, அவை ஆசிரியர் குழுவின் கருத்துக்கள் அல்ல" என்ற குறிப்போடு வந்தது.

சத்தியத்தின் இன்னுருவாய். சாத்துவிகப் பேரொளியாய்.
பத்தியங்கள் பலநோற்று பாரதத்தின் நோய்நொடியைக்
கத்தியின்றி ரத்தமின்றிக் களைந்தெறியப் பாடுபட்ட
சத்தியவான் போய்மறைந்தான் சண்டாளன்
கொன்றுவிட்டான்

என்பது பாடல். அடிப்படையில் இது அகிம்சையை வலியுறுத்தும் பாடல். கம்யூனிஸ்ட் கட்சியோ கல்கத்தாவில் ஆயுதப் புரட்சியைப் பிரகடனம் செய்யப் போகிற ஆயுதப் போருக்குத் தயாராகிக்கொண்டிருந்தது. வர்க்கப்புரட்சியை முடிப்பதற்காகக் கத்தியைத் தீட்டிக் கொண்டிருந்த கட்சித் தோழர்கள் காந்தியத்தை ஒப்புக் கொள்ளவில்லை. ஆனால் ஜீவா எழுத்தாளர்களை மதித்தார். அவர்களின் எழுத்துச் சுதந்திரத்தை மதித்தார். இதுவே அவருடைய தனிச்சிறப்பு.

1948 பெப்ரவரியில் கம்யூனிஸ்ட் கட்சித் தடைசெய்யப் பட்டது. நாடெங்கும் கம்யூனிஸ்டுகள் கொடூரமாக வேட்டையாடப் பட்டனர். சிறைக்குள்ளும் வெளியேயும் பலர் கொலை செய்யப்பட்டனர். பல தலைவர்களைப் போலவே ஜீவாவும் தலைமறைவானார். தோணி ஏறி அவர் இலங்கை போனார். ஜனசக்தி நின்று போனது. சூழ்நிலைகள் ஓரளவு திருந்தியதும் நடுவில் மீண்டும் ஜனசக்தி உயிர்பெற்றது. ராயப்பேட்டையில் பேய் வீடு என்று மக்களால் புறக்கணிக்கப்பட்ட ஒரு பாழ் வீட்டை வாடைக்கு எடுத்து, அச்சு இயந்திரம் அமைத்து ஜனசக்தி

அச்சிடப்பட்டது. தோழர்கள் ஆளவந்தாரும் ராதா கிருஷ்ணனும் முயற்சி எடுத்துப் பத்திரிகையை வெளிக்கொணர்ந்தார்கள். முதல் பொதுத்தேர்தலை ஒட்டி ஜனசக்தி தினசரியாகிறது. 61 இடங்களில் வெற்றி பெற்று கம்யூனிஸ்ட் கட்சி சென்னை சட்டமன்றத்தில் ஆட்சி அமைக்கவும் சூழல் உருவாகியது. ஆனால் அது வசப்படவில்லை. இக்காலத்தில் ஜனசக்தி பெரிய அளவில் தினசரியாக வெளிவருகிறது.[9]

தொடர்ந்து தமிழகத்துக்குத் தமிழ் நாடு என்று பெயர் வைக்க வேண்டும் என்றும், தமிழ் ஆட்சி மொழி மற்றும் கல்வி மொழி ஆக வேண்டும் என்றும் ஜனசக்தி வலியுறுத்தியது. சென்னை மாகாணத்துக்குத் தமிழ்நாடு என்று பெயர்வைக்கக் கோரி 56 அக்டோபரில் தியாகி சங்கரலிங்கனார் உண்ணாவிரதம் இருந்து மரணமடைந்தார். 15.10.56இல் ஜனசக்தி அதுபற்றி இவ்வாறு தலையங்கம் எழுதியது.

> இன்றைய ஆட்சியின் போக்கைக் கண்டு மனம் வெந்து உருகி அணுஅணுவாய்ச் செத்து மடிந்தார் அமரர் சங்கரலிங்கனார். தமிழ்த்தாய் பெற்றெடுத்த உத்தமப் புதல்வர்களில் உத்தமராய், சுத்த வீரராய், கொள்கைக்காக உயர்ந்த தியாகியாய் மடிந்தார் ஒரு தேசபக்தர். சென்னை ராஜியத்தைத் தமிழ்நாடு என்று பெயரிட வேண்டுமென்றார் சங்கரலிங்கனார். காமராஜர் கருத்துப்படி இது ஒரு சாதாரண கோரிக்கை. ஏன் ஏற்கவில்லை? ஏற்றிருந்தால் ஒரு தியாகியின் உயிர் பாதுகாக்கப்பட்டிருக்கும். . . .

27.12.56இல் தமிழ் ஆட்சிமொழி மசோதா சட்டமன்றத்தில் நிறைவேற்றப்பட்டபோது, ஜனசக்தியில் இவ்வாறு எழுதிப் பூரித்தார் ஜீவா.

> 'அன்னை அரியணை ஏறினாள்' என்ற தலைப்பிட்டு, இந்த நூற்றாண்டுத் தமிழனின் வரலாற்றில் நேற்று ஒரு நிகரற்ற நிகழ்ச்சி நடந்திருக்கிறது. மூன்று கோடித் தமிழ்ப் பெருமக்களும் ஒருசேரப் பூரிப்படையும் வகையில் சட்டசபை உறுப்பினர் அனைவரும் 'தமிழ் வாழ்க' என்று முழங்க, தமிழை

> ஆட்சியாக்கும் மசோதா மிகக் கோலாகலமாக நிறைவேறிவிட்டது. . . . சாபத் தீட்டால் இரண்டு நூற்றாண்டுகளாகத் தரங்கெட்டுத் தாழ்வுற்றுக் கிடந்தாள் (தமிழ்). நேற்று மீண்டும் அரியணை ஏறிவிட்டாள்.

சென்னை ராஜியம் என்று தமிழகத்துக்கு அன்றிருந்த பெயரை மாற்றவும் ஜனசக்தி மூலம் வற்புறுத்தினார் ஜீவா. இந்தக் கோரிக்கையைத் தமிழ்மக்களிடம் மேலும் கூர்மையாக்க, வலியுறுத்த முதல் நடவடிக்கையாக மாநிலக் கட்சி நிர்ணயிக்கும் ஒரு நாளைத் 'தமிழ்நாடு' நாளாக மிக விரிந்த அளவில் தமிழகம் எங்கும் கொண்டாடும் முயற்சியில் கட்சியின் சகல கிளைகளும் கட்சிச் சார்புடைய எல்லா நிறுவனங்களும் முழுமூச்சுடன் பங்குகொள்ள வேண்டுமென்று கட்சி மாநாட்டில் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தை ஜனசக்தியில் முக்கியத்துவப்படுத்தி வெளியிட்டார்.

இந்தப் பொதுக்கிளர்ச்சியில் எல்லாக் கட்சியினரும் கருத்தோட்டக்காரர்களும், பொதுவாகத் தமிழ்ப் பெருமக்கள் அனைவரும் ஒன்றுபட்ட உணர்ச்சியுடன் வெற்றிபெறும் வரையில் தொடர்ந்து பங்கு கொள்ளவேண்டுமென்றும் கட்சியின் நிலையைத் தெளிவுபடுத்தி எழுதினார் ஜீவா.

ஆட்சி மொழியாகத் தமிழ் மொழி ஏற்றுக்கொள்ளப்பட்ட பிறகும் நிர்வாகத்தின் எல்லாத் துறைகளிலும் நீதிமன்றத்திலும் தமிழ் மொழியை விரைவாக ஏற்றுக்கொள்வதில் காட்டும் தயக்கத்தையும் கண்டித்து கட்சி எடுத்த முடிவை அழுத்தந்திருத்தமாக வெளியிட்டார் ஜீவா.

1961 மே மாதத்தில் கலை இலக்கியப் பெருமன்றம் தோற்றுவிக்கப்பட்டபோது அதற்குத் 'தமிழ்நாடு கலை இலக்கியப் பெருமன்றம்' என்று தமிழ் உணர்வோடு பெயரிட்டார் ஜீவா.

தொடர்ந்து தமிழ், தமிழன், தமிழ்நாடு, தமிழ்ப் பண்பாடு என்ற போராட்டத் தமிழ் மக்களை ஜனசக்தி வழியாகத் தூண்டி கொண்டேயிருந்தார் ஜீவா.

இலக்கிய வெளியீட்டுப் பணியையும் உற்சாகப்படுத்தியது ஜனசக்தி. சிறந்த இலக்கியப் பணி என்றத் தலைப்பில் 20.8.58இல்,

> இன்று என்றுமில்லாத விதத்தில் பற்பல பதிப்பகங்கள் தோன்றி, வரவேற்கத்தக்க விதத்தில் தமிழுக்குப் பணிபுரிந்து வருகின்றன. அண்மையில் சில ஆண்டுகளாகச் சங்க இலக்கியங்கள், திருக்குறள், கம்பராமாயணம், சிலப்பதிகாரம் போன்ற பழம் பெருநூல்கள் பல்வேறு வகையாக வெளியிடப்பட்டு வருகின்றன. அடுத்து ஒன்றிரண்டு ஆண்டுகளாகச் சிறந்த தமிழ் நூல்கள் மலிவுப்பதிப்பு களாகத் தோன்றி வெளிவரும் வேகத்தில் நம்மைத் திணற அடித்து வருகின்றன. இந்த மலிவுப் பதிப்புத்துறையில் 'மர்ரே' கம்பனியாரும், சக்தி நிலையத்தாரும் இன்ன பிற பதிப்பகத்தாரும் செய்து வரும் பணி என்றும் தமிழனின் நன்றியறிதலுக்குரிய பணி

என்று தமிழுணர்வோடு ஜீவா கம்யூனிஸ்ட் இயக்கத்தில் ஈடுபாட்டோடு உழைத்துக்கொண்டே தலையங்கம் எழுதி வெளியிட்டார்.

'ஓடுகிற ஓட்டத்தில்' என்னும் தலைப்பில் ஜீவா சில குட்டிக்கதைகளையும் ஜனசக்தியில் எழுதினார். அவை அக்கால அரசியலைக் கேலி செய்யும் நையாண்டிக் கதைகள்.

1958இல் கேரளத்தில் ஜனநாயக முறையில் தோழர் ஈ.எம்.எஸ். அவர்கள் தலைமையில் அமைந்த முதல் கம்யூனிஸ்ட் அரசை வீழ்த்த அன்றைய கிறிஸ்தவக் குருமார்கள் பெரும் போராட்டங்களை நடத்தினார்கள். காரணம், அந்த அரசின் சீர்திருத்த நடவடிக்கைகள் கிறிஸ்தவப் பாதிரிகளின் அதிகாரத்தை ஒடுக்கின. ரப்பர் தோட்ட முதலாளிகளும் நெருக்கடிக் குள்ளாக்கினர். எனவே இவர்கள் இருவரும் சேர்ந்து 'கேரளம் போச்சு' என்று அரசுக்கு எதிராகக் கிளர்ச்சி செய்து மக்களைத் தூண்டிவிட்டனர். இதைக் கேலி செய்து 20.8.58இல் ஜீவா எழுதிய ஒரு நரிக் கதையின் சுருக்கமாவது:

> பெருமழை. ஒரு நரியை ஆறு இழுத்துக்கொண்டு போனது. அய்யோ, உலகம் போச்சு, உலகம் போச்சு, என்று கத்திக்கொண்டே போனது நரி. நரியை ஒரு

விவசாயி காப்பாற்றினான். உலகம் எங்கே போச்சு? என்று அவன் நரியைக் கேட்டான். 'நான் போனேன் என்றால் உலகமே போச்சுதானே', என்றது நரி.

இது மாதிரி நிறையக் கதைகள் ஜனசக்தியில் வந்தன.

ஜீவா தொடக்கக் காலத்தில் கவிஞராக இருந்தவர். பின் ஆசிரியராக, சுதந்திரப் போராளியாக, சுயமரியாதை இயக்க வீரராக, சமதர்மத் தலைவராக அவருடைய வாழ்வு படிப்படியாக வளர்ச்சி யடைகிறது. அவருடைய இதழியல் வாழ்வும் இந்த அம்சங்களைத் தெளிவாகப் பிரதிபலிக்கின்றன. இந்த நெடும்பயணத்தில் அவருக்குள்ளே ஆரம்பத்தில் சுடர்விட்ட கவிதையுணர்வு பலவித உருமாற்றம் அடைந்து, படிப்படியாக வளர்ந்து வருவதையும் பார்க்க முடிகிறது. 50களின் இறுதிகளில் இந்தக் கவிதை உணர்வு பாரதி உணர்வாகவும் கம்பன் உணர்வாகவும் பெருக்கெடுத்துப் பாய்கிறது. இந்தக் கவிப்பெருக்கைத் தனக்கு வெளியே பல இளம் தோழர்களிடமும் அவர் கண்டார். இவற்றிக்கு ஒரு வடிவம் கொடுக்க ஜீவா முயன்றார். அதன் அருமையான வெளிப்பாடே 1959 நவம்பரில் மலர்ந்த 'தாமரை' என்னும் மக்கள் கலை இலக்கிய மாத இதழ்,

தாமரை என்றொரு ஏடு மலர்ந்தது
தமிழ்மணம் பரப்ப – சுவைத்
தேமது ரத்துளி சிந்தி இலக்கியச்
சிந்தைகளை நிரப்ப – இன்று (தாமரை)

தம்மவர் மற்றவர் என்னும் குணமன்றி
தத்துநடை போட்டு – முகம்
விம்மச் சிரிக்கும் குழந்தை யெனபுது
வெற்றி வரங்கேட்டு – இன்று (தாமரை)

என்று மக்கள் கவிஞன் பட்டுக்கோட்டையாரால் வாழ்த்தி வரவேற்கப்பட்ட தாமரையை இதற்காக ஜீவா உருவாக்கினார். ஏற்கெனவே இந்தத் துறையில் ஓரளவுக்கு 'ஜனசக்தி'யும், முழுமையாக 'சாந்தி'யும், 'சரஸ்வதி'யும் உழைத்தன. என்றாலும் முழுக்க முழுக்க முற்போக்கு இலக்கியப் பணிக்கு அர்ப்பணிக்கப்பட்ட இதழ் வேண்டும் என்ற ஜீவாவின் ஆசை

தாமரை மூலமே நிறைவேறிற்று. தாமரையை முற்போக்கு இலக்கிய இதழுக்கு ஒரு முன்மாதிரியாக ஜீவா வளர்த்தார்.

முதல் இதழ் தலையங்கத்தில் அவர் சொல்லுகிறார்:

> கலை இலக்கியத் துறையில் வளரும் ஜனநாயக உணர்வோடு பணிபுரிய தாமரை மலர்கிறது. சென்ற காலக் கூறுகளின் சிறந்த வழித்தோன்றலாக விளங்கும்; நிகழ்கால அனுபவத்தைத் தன்வயமாக்க முன்நிற்கும்; வருங்கால முழுவடிவ லட்சியத்தை நோக்கி தளராத முயற்சிக் கரங்களை நீட்டித் தாவித்தாவிச் செல்ல முன்னேறும். இவ்வாறு தாமரை வளரும் தமிழகத்தின் சர்வவல்லமை பொருந்திய கரங்களில் தவழ்ந்து மென்மேலும் வாழ்த்தும் வளமும் பெற்று சிறக்கும்.
>
> முதல் தாமரையே மிக அருமையான நல்ல மணத்தோடு அமைந்துவிட்டது. இலக்கியத்தை வளர்க்கும் நோக்கத்துடன் தாமரை மலர்கிறது. இன்றைய இலக்கிய உலகில் ஜனநாயகத் தன்மை கொண்ட மனிதாபிமான லட்சியத்தையும் உணர்ச்சியையும் வளர்ப்பதே நல்லிலக்கிய கர்த்தாக்களின் கடமை என்று நான் கருதுகிறேன். இந்த லட்சியத்தை வளர்க்கும் பணியில் விரிந்து பரந்த அடிப்படையில் பலதரப்பட்ட கருத்துக் களுக்கும் இடம் தந்து தாமரை தானும் வளர்ந்து பிறரையும் வளர்க்க உதவும்

என்ற ரகுநாதனின் வாழ்த்தை மெய்ப்பிக்கும் வகையில் அமைந்தது. அன்றைய தமிழகத்தின் மிகவும் பிரபலமான படைப்பாளிகளான கு. அழகரிசாமி, ஜெயகாந்தன், நா. பார்த்தசாரதி, கா. சுப்பிரமணியம் போன்றோரின் கதைகளையும், டாக்டர் மா. ராசமாணிக்கனார், டி.கே. சண்முகம், சாமி சிதம்பரனார், நா. வானமாமலை போன்றோரின் கட்டுரைகளையும் இதழ்களில் கொண்டிருந்தது. இதுபோக, சிறு நாடகம், மொழிபெயர்ப்புகள், கவிதைகள், துணுக்குகள் என ஏராளமான ரசனையான விஷயங்கள் பக்கங்களுக்குச் சுவை கூட்டின.

ஜீவாவின் காலம் வரை இந்த இதழ் அமைப்பைத் தாமரை பேணி வந்துள்ளது. சில சிறுகதைகள், சில கவிதைகள், சில

இலக்கிய அறிமுகக் கட்டுரைகள், கலை, கலைஞர் அறிமுகக் கட்டுரைகள், வரலாற்றுக் கட்டுரைகள், விஞ்ஞானக் கட்டுரைகள், குழந்தைகளுக்கான பகுதிகள், துணுக்குகள் போன்ற பகுதிகள் கிட்டத்தட்ட எல்லா இதழ்களிலும் ஒரு ஒழுங்கோடு அமைந்துள்ளன.

தாமரைக்கு அட்டைப் படங்கள் தேர்ந்தெடுப்பதிலும் கவனம் செலுத்தியிருக்கிறார் ஜீவா. மக்களுக்கு முதலில் உணர்ச்சியூட்டி, அவர்கள் அனுபவத்தை மேம்படுத்துகிற எதார்த்த ஓவியங்களையே அவர் அட்டைப்படமாகத் தேர்ந்தெடுத்திருக்கிறார். சீன 'மக்கள் யுத்தக்' களத்தில் ஒரு தந்தையும் மகனும் உட்கார்ந்து தோளில் துப்பாக்கித் தொங்க, புல்லாங்குழல் இசைக்கும் ஓவியம் அற்புதமானது.

தலையங்கத்திலும் அதிக கவனம் செலுத்தினார் ஜீவா. பல்கலைக்கழகத்தில் தமிழைப் பயிற்று மொழியாக்க வற்புறுத்தியும் கம்பனையும் பாரதியும் முக்கியப்படுத்தியும் தலையங்கங்கள் எழுதினார். பல தலையங்கங்கள் அரசியல் பிரச்சனைகளையும் மையப்படுத்தி எழுதப்பட்டன. சிறு கதைகள், விமர்சனங்கள், கட்டுரைகள், நாட்டுப்புற ஆய்வுகள் இவைகளுக்கும் தாமரை அதிக முக்கியத்துவம் அளித்தது. பாரதி சாதனைப் பற்றிய ஆர்.கே. கண்ணனின் தொடர் கட்டுரை ஜீவா காலத்துத் தாமரையில்தான் வெளிவந்தது. அதைப்போல 'பொற்காலங்கள்' பற்றிய பொய்மையைப் பேராசிரியர் நா.வா. வின் கட்டுரைகள் உடைத்தெறிந்ததும், இக்காலத்துத் தாமரையில்தான். 3பாரதி ஆய்விலும் ஜீவா அதிகக் கவனம் செலுத்தினார். தாகூர் நூற்றாண்டுச் சிறப்பு மலரையும் தாமரை வெளியிட்டது. ஆனால் கவிதைக்குப் போதிய இடம் அளிக்கப்படவில்லை. ஜீவா காலத்துத் தாமரை எல்லா மட்டத்திலும் சிறப்பாக வரவேற்கப்பட்டது. தாமரையில் தங்கள் படைப்பு வருவதைப் படைப்பாளிகள் பெரும்பேறாகக் கருதினர்.

தாமரையையும் ஜனசக்தியையும் தன் இரு கண்களாகப் போற்றி உழைத்த ஜீவாவின் உடல்நிலை படிப்படியாகச் சீர்கேடு அடைந்தது. 1962இல் அவர் சோவியத் நாடு சென்று உடல்நலம் தேறித் திரும்பினார். ஆனாலும் இந்திய - சீன எல்லை மோதல்கள், இந்திய கம்யூனிஸ்ட் கட்சிக்குள்ளே ஏற்பட்ட முரண்பாடுகள், பிளவுகள், அவருடைய ஓய்வு ஒழிச்சல் இல்லாத உழைப்பு மற்றும் அலைச்சல் எல்லாமாகச் சேர்ந்து, ஜீவாவின் உடல் நலம்

கடுமையாகப் பாதித்தது. 1963 ஜனவரி 17ஆம் தேதி ஜனசக்தியில் பணியாற்றிவிட்டு வீட்டுக்குத் திரும்பிய அவர் மறுநாள் அதிகாலையில் மறைந்தார். மறுநாள் வெளிவந்த ஜனசக்தி அவருடைய மறைவுச் செய்தியைத் தாங்கி இப்படி வெளிவந்தது:

> தேசிய தியாகச் சுடர், தமிழக ஒளிவிளக்கு அணைந்தது. தொழிலாளி வர்க்கத்தின் தோன்றாத் துணைவர் ஜீவா அமரரானார். எழுச்சிப் பெருங்கடல், இலக்கியப் பேராசானைத் தமிழன்னை இழந்தாள்!

'அந்தோ காலன் செய்த கொடுமை' என்ற தலைப்பிட்டு இந்திய கம்யூனிஸ்ட் கட்சி தமிழ் மாநிலக் குழுவின் இரங்கல் செய்தியை ஜனவரி 19 ஜனசக்தி வெளியிட்டது. அதன் இறுதிப் பகுதி இவ்வாறு அமைகிறது. "முப்பது ஆண்டுகளாக நான் தமிழ்நாட்டில் பேசிவருகிறேன். இன்னும் என்னை மூலை முடுக்கெல்லாம் பேச இழுத்துச் செல்கிறார்கள். தலைவர்கள் சிறையில் இருப்பதினால் நான் போகத்தான் வேண்டி இருக்கிறது, போகிறேன். சோவியத் ருசியாவுக்குப் போன பொழுது நான் ஒரு முடிவுக்கு வந்தேன். இனி ஓர் இடத்தில் இருந்து, விஷயங்களை ஆழ்ந்து ஆய்ந்து, நிரந்தரமான ஒரு பங்கை ஆற்றப் பாடுபட வேண்டுமென்று. அந்த ஆசை பூர்த்தியாக, அந்தோ! காலன் இடம் கொடுக்கவில்லையே."

இந்த அறிக்கையின் முடிவு, இறுதி கால ஜீவா பற்றி ஆழ்ந்து யோசிக்க வைக்கிறது. இறுதி கால ஜீவாவின் கனவு எழுத வேண்டுமென்ற கனவு. ஓரிடத்தில் இருந்து, விஷயங்களை ஆழ்ந்து ஆய்ந்து, நிரந்தரமான ஒரு பங்கை நாட்டிற்கு ஆற்றப் பாடுபட வேண்டுமென்ற கனவு.

தன் இறுதிக்காலத்தில் ஜீவா வைத்திருந்த முக்கிய பொறுப்புக்கள் எவை? ஜனசக்தி ஆசிரியர் பொறுப்பு, தாமரை ஆசிரியர் பொறுப்பு, கலை இலக்கியப் பெருமன்றத் தலைமைப் பொறுப்பு. அவர் எழுதுவதென்றால் எவற்றில் எழுதியிருப்பார்? ஜனசக்தியிலும் தாமரையிலும்தான் எழுதியிருப்பார். ஆக, ஜீவாவின் இறுதிக்கனவு என்ன? முழுக்க முழுக்க ஒரு இதழாளராக வேண்டும் என்ற கனவு. தன் கனவுகளை யெல்லாம் மக்களுடன் இதழ்கள் வழியே பகிர்ந்துகொள்ள வேண்டும். அவர்களுடன் தொடர்ந்து உரையாட வேண்டும் என்ற பெருங்கனவு. இதழியலை ஜீவா எப்படி மதித்தார் நேசித்தார் என்பதை இதன்மூலம் நாம் யூகித்துக் கொள்ள முடியும்.

இதழாளர் ஜீவாவின் சாதனைகள் எவை? இதழியல் பணி என்பது வெறும் பிழைப்பு வழியல்ல. சமூகப் போராட்டத்தை ஜீவாவின் எழுத்துத் தளத்தில் விசாலமாக நடத்தும் உயரிய பணி என்று வலியுறுத்துகிறது.

இடதுசாரிக் கருத்துக்களைத் தமிழ் மக்களிடையேப் பரப்ப இதழ்களைப் பயன்படுத்தியதில் முன்னவராகவும், முதல்வராகவும், விளங்குகிறார் ஜீவா. ஆற்றல் மிக்க எழுத்துக்களால் தமிழ் இதழ்களைச் சமூக முன்னேற்றத்துக்கான ஆயுதங்களாகக் கூர்மையாகப் பயன்படுத்தியவர்களிலும் முதன்மையான ஒருவர் அவர். பண்டித மொழியும் இல்லாமல், கொச்சை மொழியும் இல்லாமல் மக்களை வசப்படுத்தக் கூடிய சரளமான எளிமையான உரைநடையை இதழ்களில் லாவகமாகப் பயன்படுத்திய ஒரு சிலரின் அவரும் ஒருவர்.

தமிழ் இலக்கியத்தின் மீது ஆழ்ந்த ஈடுபாட்டையும் இலக்கியத்தின் ஊடாகச் சமூக மேம்பாட்டில் ஈடுபாட்டையும் உருவாக்கி, சமூகத்துக்கும் கலை இலக்கியத்துக்கும் இடையில் உயிரோட்டமான உறவை வளர்த்து முதன்மைப்படுத்தியவர்களில் முக்கியமானவர் ஜீவா.

ஜீவாவின் இதழியல் பணி இன்னும் விரிவாக ஆராயப்பட்டு தகவல்கள் தொகுக்கப்பட வேண்டும். அவை தமிழனின் தனிவாழ்வையும் பொதுவாழ்வையும் மேம்படுத்தும் ஆற்றல் மிக்க உணர்வு விதைகளாக நீண்ட காலத்துக்குப் பயன்படும்.

குறிப்புகள்

1. ஜீவாவும் சமதர்மமும், களஞ்சூர் செல்வராஜ், ப.5
2. மேலது, பக். 42-43
3. மேலது, ப. 26
4. மேலது
5. சிங்கார வேலர் - தென் இந்தியாவின் முதல் கம்யூனிஸ்ட், கே. முருகேசன் மற்றும் சி.எஸ். சுப்ரமணியம், ப. 82
6. ஜனசக்தி, பொன்விழா மலர் (6.11.1987), ப. 30
7. மேலது

வை. கோவிந்தன்

பழ. அதியமான்

புத்தக வெளியீடும், அச்சிடப்பட்ட பிற வெளியீடுகளும் (இவற்றில் காலமுறை இதழ்களைச் சேர்க்கலாம்) நாகரிகச் சமூகத்தின் முக்கிய நிகழ்வுகளாகும். எல்லாச் சமூகங்களிலும் அறிவைப் பரப்பும் முறைகளில் முக்கிய இடத்தை இவை பெறுகின்றன. கல்விக் கூடங்களில் அறிவுப் பரவலுக்கு மட்டுமல்லாமல், சமூகத் தொடர்புகளின் எல்லா நிலைகளிலும் இவற்றின் தேவை உணரப்படுகிறது. சுதந்திரமான அல்லது சுதந்திரத்தை விரும்பும் எச் சமூகத்திலும் இவற்றின் தேவை உணரப்படும். புதிய தேசத்தைக் கட்டமைக்கப் பாடுபடும் தேசங்களின் சமூகங்களுக்கு இவை இன்றியமையாத அவசரத் தேவைகளாகும். சமூகத்தின் இந்தத் தேவையை உணர்ந்து, தமது ஆற்றலால் சரிவர பூர்த்தி செய்பவர்கள் சாதனையாளராக அச்சமூகத்தால் (பெரும்பாலும் அடுத்த தலைமுறையினரால்) நினைவு கூரப்படுவார்கள். வாழுங் காலத்தில், சமூகத்தின் சராசரி பொதுமக்களுக்கும் புலப்படாதவராய், ஆறாத் துயரில் அவர்கள் வாழ்க்கை கழிந்திருக்கவும் கூடும்.

தமிழ்ச் சூழலில், இதழியல் துறையில் இவ்வகை சாதனை யாளர்களை நினைத்துப் பார்க்க நாம் இங்கே கூடியிருக்கிறோம்.

தமிழ் இதழியலின் சாதனையாளர்களுள் ஒருவராக சக்தி வை. கோவிந்தன் (1913 - 1966) மதிக்கத் தக்கவர்தானே? என்ற வினாவுக்கு விடை அளிக்க அவரது இதழியல் பணிகளைப் பார்க்க முயலும் முயற்சிதான் இக்கட்டுரை.

கண்ணையும், கருத்தையும் ஒருசேரக் கவரும் 'சக்தி' காரியாலயப் பதிப்புகளைப் பார்த்தவருக்கும், படித்தவருக்கும் புத்தக வெளியீட்டுத் துறையில் புழங்கியவருக்கும், சக்தி கோவிந்தனின் புத்தக வெளியீட்டுத் துறையின் சாதனை பெரிதாகத் தோன்றும். இதழ் வெளியீட்டில் மாதா மாதம் பெற்ற இதழியல் அனுபவம், நூல் வெளியீட்டிற்கும்; பதிப்பகம் மூலமாகப் பெற்ற நூல் ஆக்கப்

பயிற்சி சக்தி இதழ் வெளியீட்டிற்கும் ஒன்றுக்கொன்று நிச்சயம் துணையாக அமைந்திருக்கும்.

அன்பு நிலையம், சக்தி காரியாலயம் மூலமாக 100க்கும் மேற்பட்ட நூல்களை வெளியிட்ட வை. கோவிந்தன், சக்தி, அணில், கதைக்கடல், மங்கை, பாப்பா ஆகிய இதழ்களின் தோற்றத்திற்கும், வெளியீட்டிற்கும் காரணமாக இருந்தார். நூல் வெளியீடுகளின் சாதனைகளுக்குச் சற்றும் குறைந்ததல்ல இவ்விதழ்களின் குறிப்பாக 'சக்தி'யின் சாதனை.

மாத இதழின் ஆசிரியராகவும், நூல் வெளியிடும் பதிப்பாளராகவும், நூல்களை விற்கும் விற்பனையாளராகவும் பல பணிகளை மேற்கொண்ட வை. கோவின் (இனி இவரை இப்படி அழைக்கலாம்) இதழியல் சாதனைகளை மதிப்பிட முயலும்போது அவரது பதிப்புப் பணிகள் இடைவந்து நம்மை மயக்குவது தவிர்க்க இயலாதது. (தவிர்க்க முயற்சி மேற்கொள்ளப்பட்டுள்ளது).

> ஒரு தரமான, வெகுஜன ரசனை சாரா மாத இதழை நீண்ட காலம் நடத்தியமையும் புத்தக வெளியீட்டில் மலிவுப் பதிப்பை முன்வைத்து வாங்குவோர் எண்ணிக்கையைப் பெருக்கியது போல இதழியல் துறையில் வாசகப் பரப்பை மிகுதியாக்கியமையும்

தமிழில் 1880 களிலிருந்தே பல்வேறு இதழ்கள் தொடர்ந்து வெளிவந்த போதிலும், உப்பு சத்தியாகிரகம் போராட்டத்திற்குப் பிறகு விடுதலைப் போராட்டம் தொய்வுற்றிருந்த 1930களில்தான் தமிழில் இதழியலில் புது உற்சாக நிலை ஏற்பட்டது. இதில் மணிக்கொடி, காந்தி, சுதந்திர சங்கு, ஆனந்தவிகடன், கலைமகள், பிரசண்ட விகடன், சக்தி போன்ற காலமுறை இதழ்களின் பங்கு மிகுதி.

மணிக்கொடியில் தொடக்கத்தில் அரசியலும், பின்னர் இலக்கியமும் ஆதிக்கம் பெற்றன. காந்தியில் அரசியல் நெடி அதிகமாக வீசும். சுதந்திரசங்குவில் தேசிய விடுதலை முழக்கம் அதிகமாக கேட்கும். ஆனந்தவிகடன், வெகுஜன ரசனையை வளர்ப்பதில் முன்னோடும் பிள்ளை. கலைமகள் தூய இலக்கிய பரம்பரையைக் கட்டக் காக்கும். பிரசண்ட விகடன் கதை

கட்டுரைகளை சிலாகிப்பான். பாரத தேவி, ஜனரஞ்சகத்திற்குத் தாவி தாவிப் பாய்வாள். ஆனால் சக்தி, அளவில், அழுத்தத்தில் எந்த ஒன்றையும் சார்ந்து விடாமல் தரமான பல் (சுவை அல்ல) துறை இதழாக வெளிவந்தது.

'சக்தி' இதழ் ஒவ்வொன்றும் எப்படி அமைய வேண்டும்? என்று அதன் ஆசிரியர்கள் விரும்பினார்கள் என்பது அதன் தரத்தை உறுதி செய்வதாக இருக்கிறது.

"சக்தி இதழின் ஒவ்வொரு இதழும் ஒரு பரிட்சையில் தேற வேண்டும் என்பது நமது திட்டத்தின் அடிப்படையான கருத்து. அதாவது ஒரு இதழைப் படித்த ஒருவர், இதே இதழ்

(1) கேவல உணர்ச்சிகளை எழுப்பாமல் மனத்திற்கு இன்ப மூட்டிற்றா?

(2) ஏதாவது ஒரு புதிய பொருளையாவது நமக்குப் புலப்படுத்தி அறிவை விசாலமாக்கிற்றா?

(3) உள்ளத்தைத் தூண்டி, உணர்ச்சியைக் கிளறி நமது குண வளர்ச்சிக்குச் சிறிதாவது உதவிற்றா?

என்ற கேள்விகளைத் தமக்குத் தாமே கேட்டுக் கொள்வாரானால் ஒன்றுக்கேனும் 'ஆம்' என்ற திடமான பதில் அவருக்குக் கிடைக்க வேண்டும்" (சக்தி விக்கிரம, ஆடி - 1940) - என்று ஒரு திட்டத்தை முன் வைக்கின்றனர் 'சக்தி' ஆசிரியர்கள்.

தரங்குறையாத, அல்லது தரங்குறையக்கூடாது என்ற எண்ணமுடன் ஒரு இதழைக்கொண்டு வருபவர்க்கே இத்தகைய 'விஷப்பரிட்சை' வைக்கத் தோன்றும்.

போட்டிப் பந்தயங்கள் என்ற சூதாட்டங்களாலும், சினிமா நடிக, நடிகையரின் அங்க லாவண்யங்கள் குறித்த துணுக்குகளாலும், விகடம் என்ற பெயரினவான கிச்சு கிச்சு மூட்டுதல்களாலும், மாத, வார பலன்கள் என்ற மூடநம்பிக்கை வளர்ப்புகளாலும் பத்திரிகைகள் பல கொடி கட்டிப் பறந்த சூழலில் இவ்வகை ஜனரஞ்சன அம்சங்கள் எதுவுமில்லாமல் அழகான, இலக்கிய ரசனையை வளர்ப்பதையும், அரசியல், அறிவியல், ஆன்மிகம், குழந்தைகள் போன்ற பல்துறை அறிவுக்கருத்துகள்

வெளிப்படுத்துவதையும் நோக்கமாகக் கொண்டவள் சக்தி. மற்ற இதழ்களை நோக்க (ஆ.வி. கலைமகள் போன்ற பண பலம் கொண்ட இதழ்களைத் தவிர்த்து) நீண்ட காலம் வந்த இதழ் சக்தியே. மணிக்கொடி (1933 - 34, 1954), சுதந்திரசங்கு (1930 - 34) காந்தி (1931 - 33), பிரசண்ட விகடன் ( ). சக்தி 1939 தொடங்கி, 1954 வரை 15 ஆண்டுக்காலம் (சற்று இடைவெளி விட்டுதான் என்றாலும்) வெளிவந்ததை சாதனையாகவே கருதவேண்டியிருக்கிறது.

இந்தியாவில் புதிதாய் உருக்கொண்ட தேசிய எண்ணத்தைப் பத்திரிகைகளும், காலமுறை இதழ்களும் வளர்த்துக் கொண்டிருந்த சூழலில், தேசிய எண்ணத்தோடு, பொருளாதார, அரசியல், சமூக, ஆன்மீக அறிவைத் தம் இதழ்மூலம் மக்களிடம் வளர்க்க வை.கோ. விரும்பினார். பெரும் எண்ணிக்கையில் மக்களை அடையும் முயற்சியிலும் ஈடுபட்டார். பெரும்பான்மையான மக்களை அடைய வேண்டுமானால் அதற்குத் தேவை மலிவு விலை. இந்த அடிப்படையில்தான் 'மலிவுப் பதிப்பு' எண்ணத்தை அவர் செயல்படுத்தினார்.

பாரதியார் கவிதைகள் 500 பக்கங்கள் - 1959ஆம் ஆண்டில் விலை ரூ.1.50. விற்ற பிரதிகள் 15,000. வெளியிட்ட சில நாள்களில் - இது செட்டியாரான அவரது கணக்கே. வியாசர் விருந்து - 350 பக்கங்கள் - நூலின் விலை ரூ.1.00. விற்ற பிரதிகள் 80,000. வெளிவந்த சில மாதங்களில். இன்னும் 1,00,000 பிரதிகளுக்கு order இருக்கிறது. - இது வை.கோ.வின் மலிவுவிலை நூல்களின் சாதனை.

மலிவு விலையில் நூல்களைத் தயாரித்து விற்பனையைப் பெருக்கியது போலவே, குறைந்த விலையில்தான் 'சக்தி' இதழையும் வெளியிட்டு வந்தார். 1925இல் வெளிவந்த மாதவையாவின் 'பஞ்சாமிர்தம்' மாத இதழின் விலை ரூ.8 அணா (பக்.88). ஏறக்குறைய 15 ஆண்டுகள் கழித்து வெளிவந்த மாத இதழான சக்தி (பக். 78 - 102 வரை) யின் விலை 4 அணா மட்டுமே. இவ்விரண்டு இதழ்களின் தாள்கள் ஏறக்குறைய ஒரே தரத்தவை. அதிலும் உயர்ந்த ஒன்றைச் சொல்ல வேண்டுமானால் சக்தியின் தாள்களே உயர்ந்தவை. பெரும்வாசகர் பரப்பை, மலிவுப் பதிப்பின் தடத்தில் அடைய விரும்பியது முக்கியமான செய்திதான்.

தமிழின் முதல் டைஜஸ்ட் இதழாக 'சக்தி'

'சக்தி'க்கென்று எழுதப்பட்டு அதில் பிரசுரமான படைப்புகளின் எண்ணிக்கை குறைவுதான். முன்னரே வெளிவந்த அல்லது வெளிவரவிருந்த பல நூல்களின் அல்லது கட்டுரைகளின் சுருக்கப்பட்ட, மொழிபெயர்க்கப்பட்ட பகுதிகளே 'சக்தி'யில் வெளியாயின. சுத்தானந்த பாரதியின் மஹாசக்தி காவியம், ஹரிந்திரநாத்தின் கூண்டுக்கிளியில் இடம்பெற்ற நாடகங்கள் சுத்தானந்த பாரதியின் 'அருவியின் அழைப்பு' (1925 சுதேசமித்திரன்) என்ற கட்டுரை, காந்தி, விவேகானந்தர், டால்ஸ்டாய் இவர்களின் பல்வேறு கட்டுரைச் சுருக்கங்கள் ஆகியன சக்தியின் தொடக்ககால இதழ்களில் வெளிவந்த இவ்வாறன படைப்புகளாகும். இந்த வகை டைஜஸ்ட் வகை மாதிரிகளின் மற்ற தமிழ் முயற்சிகளான குமரி மலர் ( ) மஞ்சரி (1948) ஆகியன சக்திக்குப் பிறகு வெளியானவையே எனவே தமிழின் முதல் டைஜஸ்ட் (தொகுப்பு நூல்) முயற்சியாகச் சக்தியைக் கருதலாம்.

காலப்போக்கில் பல்வேறு துணை ஆசிரியர்களின் பொறுப்பில் பல்வேறு கட்டுரைகள் சக்தியில் வெளியாயின. சுத்தானந்த பாரதியாரின் நேரடிச் செல்வாக்கு (சக்தியில்) மிகுந்திருந்த காலத்தில் மதம், யோகம் தொடர்பான கட்டுரைகள் மிகுதியாக வந்தன. தி.ஜ. ரங்கராஜன் துணை ஆசிரியராக இருந்த காலத்தில் மொழிபெயர்ப்பு கதைகளும், நேர்காணல் கட்டுரைகளும், சினிமா, இதழியல் அச்சுக்கலை தொடர்பான கட்டுரைகளும், முக்கிய இடத்தைப் பிடித்தன. கு. அழகிரிசாமியின் காலத்தில் 'தமிழ் நாட்டு கிராமிய இலக்கியம்' முக்கிய இடத்தைப் பிடித்தன. சுப. நாராயணன் காலத்தில் தமிழ் மொழி, எழுத்துச் சீர்திருத்தம் தொடர்பான கட்டுரைகள் கவனிப்புக்குள்ளாயின என்பதால் டைஜஸ்ட் வகைக் கட்டுரைகளின் விழுக்காடு குறைந்தும், கூடியும் மாறி இருந்தாலும் முதல் டைஜஸ்ட் என்ற நிலையில் சக்தியையே நினைத்துப் பார்க்க முடிகிறது.

சிந்தாந்த வேற்றுமை பாராட்டாது பல்வேறு சித்தாந்தங் களைப் பேசும் கட்டுரைகளை வெளியிட்டது சாதனைகளுள் மற்றொன்று.

"அவர் (மஹாத்மா) நில் என்றால் நிற்போம்; செல் என்றால் செல்வோம். அதுவே நமது கடமையாம்" - இதுதான் சக்தியின் அரசியல் நிலைப்பாடு. (சக்தி பிரமாதி ஆவணி).

"வை.கோ. அடிப்படையில் காந்தி சார்பான காங்கிரஸ் அனுதாபியாக இருப்பினும், கம்யூனிஸ சித்தாந்தத்தில் பற்று கொண்டவர்" - இது அவருடன் பழகிய மூத்த பதிப்பாளர் கண. முத்தையாவின் கூற்று. வைகோ.வின் வகுப்பறைக் கல்வியோ, காந்தி சார்போ, அவரது விரிந்த நோக்கத்தைத் தடை செய்யவில்லை.

"சிறுகதை, விகடங்களோடு இலக்கியம் முடிந்துவிடவில்லை. சர்க்காரைக் குறை கூறுவதோடு ராஜியம் தீர்ந்துவிட வில்லை. பட்டினி வர்ணனையோடு பொருளாதாரம் முற்றுப் பெறவில்லை. கலைஞரைக் கேலி செய்வதோ சாஸ்திரங்களும், கலைகளும் பூர்த்தியாகி விடவில்லை. அந்தத் துறைகள் மிகமிக அகண்டமானவை" என்று எழுதி இதை மனத்தில் பதித்த எழுத்தாளர்களும் எழுத்துமே சக்திக்குத் தேவை என்று அவர் கோருகிறார். இந்தத் தேவையை நிறைவேற்றும்போது சித்தாந்தமோ, மொழியோ, தம் சுய விருப்பு வெறுப்போ அன்றி வேறெதுவோ தடையாக இல்லாமல் பார்த்துக் கொண்டார்.

காந்தியின் பொருளாதாரச் சிந்தனையின் தமிழ்ப் பதிப்பான J.C. குமரப்பாவின் பல கட்டுரைகள் வெளிவந்த சக்தியில்தான், காரல் மார்க்சிஸ் பொருளாதார சிந்தனைகளை விவரிக்கும் கட்டுரைகளும் வெளிவந்தன.

சீனாவில் நடப்பது என்ன? கிரீசில் தேர்தல் நாடகம் (ஏப்ரல் 1946), இந்தியாவில் பிரிட்டீஷ் ஆட்சி, காரல்மார்கஸ் (ஜூலை 1947) போன்ற கட்டுரைகளும், வெ. சாமிநாத சர்மா எழுதிய அரசியல் கட்டுரைகளும், ரா. ஹாலக்ய நாதன் எழுதிய மார்க்சீய கட்டுரைகளும் சித்தாந்த வேறுபாட்டை விடவும், சித்தாந்த அறிவுக்கு முன் இடம் அளித்ததால் விளைந்த கட்டுரைகளாகும்.

> காலத்தின் தேவைக்கும், மாறுதலுக்கும் ஏற்றபடி நாட்டின் புதிய முன்னேற்றத்தைக் கருதி சிறந்த அறிவாளிகளின் கூட்டுறவால் சக்தி பல துறைகளிலும் தன்னால் இயன்ற பணி செய்யவே தமிழர் முன் தோன்றுகிறாள்

என்ற தம் முதல் இதழ் பிரகடனத்திற்கேற்பவே வை.கோ. செயல்பட்டிருக்கிறார்.

காந்தியின் காங்கிரசையும், காந்தியின் பொருளாதார கருத்து களையுமே சக்தி தன் பிரசாரத்திற்கு எடுத்துக் கொண்டது. அதன் விருப்பமும் அதுதான். பத்திரிகை தர்மத்திற்கு ஏற்பவும், ஒரு சமன் தோன்றுபடியாகவும் பொதுவுடைமைக் கருத்துகளையும் வெளியிட்டுக் கொண்டது என்றே அது தொடாமல் விட்ட சில விஷயங்கள் நம்மை உறுத்தும்போது சொல்லத் தோன்றுகிறது. தமிழ்நாட்டில் காங்கிரசுக்கு எதிராகச் செயல்பட்டுக் கொண்டிருந்த ஜஸ்டிசு - உம், பெரியார் கருத்துகளும் சக்திக்கு வேம்புதான்.

எனினும் 'கம்யூனிஸ்ட்டுகளே எனது விரோதிகள்' அவர்களை ஒழிப்பதுதான் என் வேலை எனும்படி ஒரு பெரிய பிரமுகர் பொது அறிவிப்பு கொடுக்கும்படியான சூழல் தோன்றுமளவிற்கு, கம்யூனிஸ்ட்டுகளுக்கு எதிரான மனோபாவம் நிலவிய சூழலில் வை.கோ. கம்யூனிஸ்ட்டுகள் மகிழும் கட்டுரைகளை வெளியிட்டமை நிச்சயம் பாராட்டுக்குரியதுதான். சக்தி 1950களில் நின்று வெளியான போது தோழர் கைலாசபதி சக்தி தொடர்ந்து வெளி வரவேண்டும் என்று விரும்பி வாசகர் கடிதம் எழுதியதைப் புரிந்துகொள்ள முடிகிறது.

பத்திரிகை என்பது பல சிந்தனைகள் போரிடும் போர்க்களம் என்ற ரீதியில் பல்வேறுபட்ட சிந்தனைகளை வெளியிட்டு இன்றைய தேவையாக நாம் ஏங்கும் பன்முகப் பார்வை என்னும் காத்திரமான அம்சத்துக்கு முன்னோடியாக வை.கோ. திகழ்ந்ததையும் சாதனையாகக் கருதலாம்.

சக்தி, இதழியலின் நோக்கத்திற்கு ஊறு வராமல் அதற்குத் துணையாகும் சக்திகளைப் பயன்படுத்தி வளர்ந்தது. இது இதழியலில் இருப்போர்க்கும் பயன்படும் ஒரு நன்னடத்தை உருவாக்கம்.

இதழ்த் தயாரிப்புச் செலவில் கணிசமான பகுதியை நிறைவு செய்பவை அதன் விளம்பர வருமானம். இதழ்கள் தொடர்ந்து வெளிவர உதவி செய்பவை விளம்பரங்கள்தாம். இவை காலப் போக்கில் இதழின் உள்ளடக்கத்தைத் தீர்மானிக்கும் சக்தியாக மாறிவிடும் அபாயமும் உண்டு. விளம்பரதாரர்களின் விருப்பங்களுக் காக மென்பொருளைத் திட்டமிடும் நிலைக்கு தொடர்பு

சாதனங்கள் சென்று விடுகின்றன. ஆனால் வை.கோ. இதில் சமரசம் செய்து கொள்ளாதவராக இருந்து நல்நெறி ஒன்றை உருவாக்கியிருக்கிறார்.

சக்தியின் துணை ஆசிரியராக இருந்த எழுத்தாளர் கு.அ. ஒரு சம்பவத்தைக் குறிப்பிடுகிறார்.

> மகாத்மா காந்தி, குமரப்பா முதலியவர்கள் கண்டனம் செய்த ஓர் உணவுப் பொருளை விற்பனை செய்யும் ஒரு கம்பெனியார் குமரப்பாவின் ஒரு கட்டுரையைச் 'சக்தி' வெளியிட்டதற்காக விளம்பரம் கொடுப்பதை நிறுத்தி விட்டார்கள். பத்திரிகை பிற்காலத்தில் நின்றதற்கு இதுவும் ஒரு காரணம். அந்தக் கட்டுரைக்கு மறுப்பு போட்டால் பல பக்கங்கள் விளம்பரம் தருவதாகச் சொன்னார்கள். பத்திரிகையை நிறுத்தினாலும் நிறுத்துவேனே ஒழிய மகாத்மா கருத்துக்கு மறுப்பு போடமாட்டேன் என்றார் வை.கோ." (கு.அ. கட்டுரைகள், ப. 446)

இது அவரது உறுதிப்பாட்டிற்கு ஒரு சான்று. அதோடு, அவரது சக்தியில் வந்த விளம்பரங்கள் ஆபாசமற்றவையாக, பொது ஒழுக்கத்திற்கு ஆதரவான, நுகர்வோர் உரிமையைப் பாதிக்காத வகையிலேயே இருந்தன. நவீன தொழிலின் அங்கமான தட்டச்சு, கேபிள் வயர்கள், திரிகர் பிரோசஸ் Block Maker, காப்பீடு, புத்தகம், கிராமபோன் ரிக்காடும் பழக்கடை விளம்பரங்கள் அவற்றுள் சில.

காலமுறை இதழ்களில் 'துணுக்கு'களை அறிமுகப்படுத்திச் செல்வாக்கு பெறச் செய்தது.

துணுக்குகள், பொன்மொழிகள் என்ற பெயர்களில் இன்று பத்திரிகைகளில் வெளிவருபவை நமக்கு ஆயாசத்தைத் தருபவையாக இருக்கின்றன. இடம் பொருள் (Context) இவற்றைக் கொண்டுதான் எச்சொல்லுக்கும் பொருள் இருக்கமுடியும். இந்த மொழிசார்ந்த, புரிதல் சார்ந்த உண்மையை மறுதலிக்குமுகமாகவே பொன் மொழிகளும் துணுக்குகளும் பத்திரிகைகளில் இடம் பெறுகின்றன. ஆனால் துணுக்குகளும், பொன் மொழிகளும் இவை போன்றவையும் குறிப்பிட்ட நிலை வாசகனைக் கவர்ந்து வாசிப்பின் வலையில் விழச் செய்யக் கூடியவைதான். பலதரப்பட்ட

வாசக நிலை உள்ள, படிப்பறிவு விகிதம் ஏறிக்கொண்டு வரும் வளரும் நாடுகளில் துணுக்களின் பயன்பாட்டை முற்றிலும் நிராகரித்துவிட முடியாது. துணுக்குகளை வாசக ஆர்வத்தைத் தூண்டும் விதமாகவும், நகைச் சுவை ததும்பும் விதமாகவும், அறவுரை தரும் விதமாகவும் வெளியிட்டு துணுக்கு இலக்கியத்தில் முன்னோடியாக நிற்கிறார் சக்தி கோவிந்தன்.

கவிஞர் ல. சண்முக சுந்தரம் 'சக்தி'யை வாழ்த்திப் பாடிய செய்யுள் ஒன்று, துணுக்குகளை சக்தி வெளியிட்டதைக் குறிப்பாகக் காட்டிச் செல்கிறது.

ஆய்வோர்க்கு நல்விருந்தாய், ஆயாது பல்பொருளை
　மேய்வோர்க்கும் நல்விருந்தாய் மேவுமே தோய்வால்
ஒளிவிட்டு நின்று உணர்வை உணர்த்தித்
　துளிர்விட்ட சக்தித் துணர்.

தொடக்கக் கால இதழ்களில் துணுக்குகள் இல்லை. பின்னரே துணுக்குகளை அவர் புகுத்தினார். இன்றைய நிலையிலும் மோசம் என்று சொல்ல முடியாத துணுக்குகளே அதில் வந்தன. அதில் ஒன்று:

"மாரீஸ் என்ற தளபதி, ஓர் உத்தியோகஸ்தனுக்கு மரண தண்டனை விதித்து அவனைக் கொல்லச் செய்துவிட்டார். கொலையுண்டவனின் மகன் ஆத்திரங்கொண்டு, பழிக்குப் பழி வாங்க எண்ணி, தளபதிக்கு விரோதமாய் சதி செய்தான்; அகப்பட்டுக்கொண்டான். அவனுக்கும் மரண தண்டனை விதித்தான் தளபதி.

தண்டனையை நிறைவேற்றுமுன், அந்த வாலிபனின் தாய் தளபதியிடம் சென்றாள். கருணை கூர்ந்து என் மகனை மன்னிக்க வேண்டும் என்று கெஞ்சினாள்.

தாயே உன் புருஷனுக்கு மரண தண்டனை விதித்தேன். அவருக்குக் கருணை காட்ட வேண்டுமென்று, நீ வந்து கேட்கவில்லை. இப்போது மகனுக்குப் பரிந்துகொண்டு வந்திருக்கிறாயே? ஏன் இந்த வித்தியாசம் என்று தளபதி கேட்டார்.

என் புருஷனுக்கு யாரும் கருணை காட்டத் தேவையில்லை அதனால்தான் நான் வரவில்லை. ஏனெனில் அவர் நிரபராதி

நிரபராதிக்கு நீதிதான் வேண்டும். குற்றவாளிக்குத்தான் கருணை வேண்டும். என் மகன் குற்றவாளி. அதனால்தான் வந்தேன்" என்றாள் அந்தப் பெண்மணி.

இந்தப் பதிலைக் கேட்டு, தளபதி மனமுருகி விட்டார். வாலிபனுக்கு மன்னிப்பும் அளித்தார் - சக்தி. தாரண, பங்குனி.

தமிழ் வாசகர்களுக்கு, முதன்முதலில் மேல்நாட்டு ஆசிரியர்களை அறிமுகப்படுத்தியது.

'கதவைத் திற காற்று வரட்டும்' என்றறிவுறுத்திய கவிதைகள் வருமுன்னரே, கதவைத் திறந்து வைத்திருந்தவர் வை. கோவிந்தன். தமிழ் இலக்கியத்துள்ளேயே உழலுவதைத் தவிர்த்து, மேல்நாட்டு கலைச் செல்வங்களைத் தமிழாக்கித் தந்த பணியைச் சக்தி சிறப்பாகச் செய்தது.

தமிழ்நாட்டிலும் வெளிநாடுகளிலும் உள்ள அறிஞர், அறிவியலாளர்கள், எழுத்தாளர்கள், அரசியல் நிபுணர்கள், இவர்களின் வாழ்க்கை வரலாறுகள், இவர்களின் அறிவுரைகள், கட்டுரைகளைத் தமிழ் மக்களுக்கு முதன்முதலாக அதிக அளவில் அறிமுகம் செய்து வைத்தது சக்திதான் - இது கு. அழகிரிசாமியின் மதிப்பீடு.

ரஷ்யாவின் ட்ராஸ்கி, சீனாவின் ந. லீயூ சட்ஸ், சியாஸ் - கே. ஷேக். இங்கிலாந்தின் அமெரி, பீவர்புரூக், லாடெவல், தென்னாப்பிரிக் காவின் ஸமட்ஸ் மற்றும் சார்லி ஆண்ட்ரூஸ் ஆகியோரின் வாழ்க்கை வரலாறுகளை 'பிரபலஸ்தர் வரிசை' என்ற தலைப்பில் 'சக்தி' வெளியிட்டுள்ளது.

தி.ஜ.ர. 'ஸினிமாக் கடிதம்' என்ற தலைப்பில் பல மாதங்களுக்குத் திரைப்படத் தொழிலைப் பற்றி 6 கட்டுரைகள் எழுதியுள்ளார். இவை அன்றைய நிலையில் புதிதாகத் தொடங்கிய சினிமாத் தொழில் பற்றியன. மக்களின் எதிர்பார்ப்புகளும், மேல்நாட்டில் இத் தொழில் எப்படி இருந்தது / இருக்கிறது என்பதைப் பற்றிய விவரங்களும் இக்கட்டுரைகளில் இருந்தன.

இவை தவிர, வேதாந்த விசாரணை என்ற வரிசையில் விவேகானந்தர், ஆர். ராஜமய்யர், ரூஸோ, காந்தி, லுவெலிள் பௌவல், Alexil - Carel, Olap Stableton ஆகியோரின் ஆன்மீகக்

கட்டுரைகள் தமிழ் மொழி பெயர்ப்பாகச் சுருக்க வடிவங்களாக வெளிவந்துள்ளன.

வாழ்க்கையைப் பற்றியும், மனிதர்களைப் பற்றியும் ஒரு அம்சமும் விட்டுவிடாது, எல்லாப் பகுதிகளையும் , எல்லா மனிதர்களையும் பற்றியும் அக்கறை கொண்ட இதழாகச் சக்தி விளங்கியது அல்லது விளங்க முயற்சி செய்தது.

'சக்தி' முழு இலக்கிய இதழா? என்ற கேள்வி கேட்டால் இல்லை என்ற பதில்தான், கிடைக்கும். "இலக்கியமும், அரசியல், பொருளாதாரம், சமயம், சமூகம், சாஸ்திரம், கலை ஆகிய பல்வேறு துறைகளிலும் தனது அளவு, உருவம், இயல்பு ஆகியவற்றுக்குப் பொருந்த எவ்வளவு கூடுமோ அவ்வளவு நிறைந்த சேவையையும் புரிய வேண்டுமென்பது 'சக்தி'யின் நோக்கமும் ஆசையுமாகும்" (1940 - ஜூன்) என்று தம் இதழ் நோக்கத்தை வை.கோ. வலியுறுத்தினார். இலக்கியம் என்பது வாழ்க்கையின் ஒரு கூறு. அதுவே வாழ்க்கை அல்ல. அதுபோலவே 'சக்தி'யில் இலக்கியக் கட்டுரைகளும் இடம் பெற்றன. அவ்வகை அமைவு, இலக்கியத்தைப் புறந்தள்ளியதாகாது. மாறாக வாழ்க்கையின் பெறுமானங்களுள் ஒன்றாக இலக்கியத்தையும் உயர்த்திய காரியமாகக் கருதுதல் வேண்டும். அறிவை வளர்ப்பதற்கு இலக்கியத்தை ஒரு துறையாக (Discriphine) சக்தி பயன்படுத்திக் கொண்டது.

இலக்கியத்தை வணிகப்பொருளாக மாற்றாமல், உணர்வைப் பரப்பும், அறிவைப் பரப்பும் கலை அறிவுச் சாதனமாக சக்தி பார்த்தது என்பது, அதன் துணை ஆசிரியர்களின் பெயர்ப் பட்டியலைப் பார்த்தாலே தெரியும்- தொ.மு.சி. ரகுநாதன், தி.ஜ.ர, கு. அழகிரிசாமி, சுப. நாராயணன்.

கதைகள் மட்டுமே வெளிவந்தால்தான் நாட்டில் அதிக அளவில் பத்திரிகை விற்குமென்று தெரிந்திருந்தும் சமுதாயம் பயனடைய வேண்டுமென எல்லா வகைக் கட்டுரைகளையும் மிகுந்த சிரமத்தின் ஊடே வெளியிட்டார் வை.கோ.

குழந்தைகள், பெண்கள் ஆகியோர் மனிதரின் மொத்த எண்ணிக்கையில் சரிபாதிக்கும் மேலே. வாசகர்களிலும் கணிசமான பகுதியினர் பெண்கள். குழந்தைகள், பெண்கள் என்று "இவர்களுக்கு மட்டுமே" என தமிழில் பல பத்திரிகைகள் வந்திருக்கின்றன. சக்தி இதழில் குழந்தைகளுக்கென்று பாலர்

பக்கம், குழந்தை அறிவு என்ற வகையில் இட ஒதுக்கீடு உண்டு. அவற்றில் வை. கோவிந்தன், அழ. வள்ளியப்பன் உள்ளிட்ட பலரும் எழுதியுள்ளனர். கவிமணியின் தோட்டத்தில் மேய்ந்த வெள்ளைப் பசுவையும், அங்கே துள்ளிக் குதித்த கன்றுக் குட்டியையும் ஒரு சேர ஓட்டி வந்து 'சக்தி'யில் கட்டியவர் வை. கோவிந்தன்தான். இன்று நினைக்கும்போது, சற்று சாதாரணமாகத் தோன்றினாலும், 'அணில்' ஒரு குழந்தைகளுக்கான இதழையும், 'மங்கை' என்ற பெயரில் 'குகப்பிரியை' விசாலாட்சி போன்றறோரை ஆசிரியைகளாகக் கொண்டு பெண்களுக்கான இதழையும் வை.கோ. நடத்தினார். இவை வாழ்க்கை, மற்றும் மனிதர்களின் முழுமையும் கவனிக்கும் ஒரு முழுப் பார்வையாகத் தோன்றுகிறது.

நாம் இங்கே குறிப்பிட்ட சாதனைகளைத் தவிர, 'சக்தி'யே தன் சாதனைகளாகச் சிலவற்றை 1953 நவம்பர் 'சக்தி' இதழில் தெரிவித்துக் கொள்கிறது.

"முதன்முதலாக அழகிய முறையில் வெளிவந்த மாத வெளியீடு 'சக்தி' என்றும், முதன்முதலாகக் கவிதைகளை வெளியிட்டு புதிய, புதிய கவிஞர்களைத் தோற்றுவித்தது சக்தி" என்பதும் நாம் குறிப்பிடாத சாதனைகள் சில.

இதில் முதல் பகுதி மிகையற்றது. பார்க்க அழகாக, தொட மிருதுவாக, படிக்க மகிழ்வாக வெளிவந்த மாத இதழ் 'சக்தி' என்பதை அதைப் பார்த்தவரும், படித்தவரும் ஒப்புக்கொள்வர். அதன் அச்சு, அமைப்பு, அட்டைகள், கட்டடம், அட்டைகளிலும் உள்ளேயும் வந்த ஒளிப்படங்கள் முதலாக இதழ் தயாரிப்பில் காட்டிய சிரத்தை ஆகியவை போற்றத்தக்கன. இன்றும் (அது வெளிவந்து 50 ஆண்டுகள் ஆகிவிட்ட நிலையில்) சக்தியோடு (அதே அளவில்) இன்று வெளிவரும் வேறு பத்திரிகைகளையும் சேர்த்துவைத்தால், தேதி பார்க்காமல் சாதாரண வாசகனால் வித்தியாசப்படுத்தி சக்தி இதழைக் கண்டுபிடிக்க முடியாது என்ற வகையில் வெளிப்பார்வையிலும் இன்றைய தரத்தில் அன்றைய இதழ். அதோடு பத்திரிகையில் ஒவ்வொரு இதழிலும் ஆர்ட் காகிதத்தில் எட்டுப்பக்கங்களில் போட்டோக்களை வெளியிடும் முன்னோடி முயற்சியையும் சக்தி செய்து வைத்திருக்கிறது.

கவிதைகள் அறிமுகம் என்கிறபோது பிச்சமூர்த்தி 'பிளி' என்ற பெயரில் சில கவிதைகள் எழுதியிருக்கிறார். கவிமணி, அழ.

வள்ளியப்பா, சுத்தானந்த பாரதி போன்றோரின் சில செய்யுட்கள் வந்துள்ளன. வேறு சில பத்திரிகைகளில் வெளிவந்துள்ள கவிதைகளின் தரத்தோடும், எண்ணிக்கையோடும் ஒப்பிடும் போது சக்தியின் கவிதைச்சாதனை குறைவோ என்று தோன்றுகிறது.

வை.கோ.வை இன்றும், நினைக்க அடிப்படையான காரணமாகத் தோன்றுவது, காலத்தின் வரவாக வந்த புதுத்தொழிலை அதாவது அச்சகத் தொழிலை, பதிப்புத் தொழிலை அஞ்சாமல் ஏற்றுக்கொண்டதும் அதை நன்றாகப் புரிந்து செயல் பட்டதுமே என்றே தோன்றுகிறது.

தனது பரம்பரைத் தொழிலான வட்டிக்கு விடும் பணத் தொழிலை விட்டுவிட்டு, தமக்கும் தம் பரம்பரைக்கும், ஏன் தாம் வாழும் நாட்டிற்கும் புதியதான ஒரு தொழிலை இவர் ஏற்றுக் கொண்டது வியப்பாகவே இருக்கிறது. ஒரு புதுத் தொழிலைப் புரிந்து கொள்வதற்குரிய (ஆங்கில) மொழி அறிவும், கல்விப் படிப்பும் குறைந்த அளவிலேயே தமக்கு உண்டு என்று தெரிந்திருந்தும் இப் புதுத் தொழிலை ஏற்றுச் செய்ய நினைத்தது அவரது துணிச்சலையே காட்டுகிறது. சமூகத்தில் இத் தொழிலுக்குள்ள தேவையை உணர்ந்ததே தொழில் தேர்வுக்கான காரணமாக இருக்கக்கூடும்.

கையெழுத்துப் பிரதியை அவர் தேர்ந்தெடுத்த விதம், அதை அச்சகத்துக்கு அனுப்புமுன் அச்சுக்கேற்ப அதை தயாரித்த விதம், புத்தக அளவு, அதற்கேற்ற காகிதம், அச்சுக்கான எழுத்தளவு, சேர்க்க வேண்டிய ஒளிப்படங்கள், கட்டடம், புத்தக உறைகள், அதன் மேல் வண்ணம் ஆகியன பற்றிய ஆழமான, அகலமான தகவல் அறிவு, கணத்தின் தேவைக்கேற்ப செய்யும் முடிவு, அதிலும் விரைந்த முடிவு ஆகியவையே அவரது தொழில் வெற்றிக்கும் காரணங்கள். அதோடு விற்பனை யம்சம் பற்றிய தெளிவும் அவருக்கு இருந்தது. சந்தா சேகரிக்க வெளிநாட்டு முகவர்கள், பயணம் மேற்கொள்ளும் உள் நாட்டு முகவர்கள், பதிப்பக நூல்களைப் பற்றி தொடர்ந்து விளம்பரப் படுத்திக் கொண்டே இருப்பது, புத்தகசாலைகள் நிறுவி புத்தகங்கள் விற்பது போன்ற விற்பனையின் அத்தனை வகை செயல்பாடுகளையும் கையாண்டு அவர் வெற்றி பெற்றார்.

பிரச்சனை என்று வரும்போது அதை சமாளிக்கும் விதமும் ஒருவரை எடைபோட பயன்படும். 1950களின் இடைப்பகுதியில் 'சக்தி'க்கு ஒரு பிரச்சனை. இதழ்களுக்கான 'பத்திரிகை காகிதக் கட்டுப்பாட்டுச் சட்டம்' அமுலுக்கு வந்தபோது, இதனாலும், வேறு சில காரணங்களாலும் சக்தி இதழைத் தொடர்ந்து நடத்த முடியாத நிலை ஏற்பட்டது. அந்தச் சூழலை வை.கோ. கையாண்ட விதம் வித்தியாசமானது. கால முறை மற்றும் பத்திரிகைகளுக்கே இச்சட்டம் பொருந்தும். நூல் ஆக்கங்களுக்கு காகிதம் கிடைப்பதில் இவ்வளவு பிரச்னை இல்லை. எனவே, 'சக்தி மலர்' என்ற பெயரில் 12 மாதங்களுக்கு 12 நூல்களை வெளியிடத் திட்டமிட்டார். அந்த வகையில் சக்தி. மே 1950 சக்தி மலர் "தர்ம ரட்சகனாக" வெளிவந்தது. இந்த வரிசையில் ஜீவப் பிரவாகம், திரிவேணி, யாத்திரை கம்பன் என் காதலன், காவியக் காதல் போன்றன வெளியாயின. (இத்தகவல் உதவி - புதுக்கோட்டை இ. கிருஷ்ணமூர்த்தி).

இங்கே குறிப்பிட்டவை எல்லாம் சாதனைகளாக எனக்கும் என் முன்னோர் சிலருக்கும் தோன்றியவை. இவற்றைச் சாதனைகளாக சிலருக்கு மதிக்க முடியாமல் போகலாம். ஆனால் வை. கோவிந்தனை நினைவூட்டும் நினைவுக் குறிப்புகள் என்ற வகையில் இவை முக்கியமானவையாய் எனக்குத் தோன்றுகிறது.

புதுவை இதழ்கள்

நா. செங்கமலத்தாயார்

பாரத நாட்டை நான்கு நூற்றாண்டுகளுக்கு முன் ஆங்கில ஏகாதிபத்தியம் அடிமைப்படுத்தியது. அந்த அடிமைத் தளையை உடைத்தெறிந்து இந்தியா சுதந்திரம் பெற்றது.

இந்தியாவின் ஐந்து பகுதிகளான புதுச்சேரி, காரைக்கால், மாஹி, ஏனாம், சந்திரநாகூர் ஆகியவற்றைப் பிரெஞ்சு ஏகாதிபத்தியம் கைப்பற்றி அரசாண்டது. பிரெஞ்சிந்திய மக்களின் விடுதலைப் போராட்டத்தின் விளைவால் 1954ஆம் ஆண்டு புதுவை மாநிலம் விடுதலை பெற்றது. இந்தியத் தாயகத்துடன் இணைந்தது. நடுவண் அரசின் கீழ் செயல்படும் ஒன்றியப் பகுதியாகப் புதுவை மாநிலம் செயல்படத் தொடங்கியது. புதுச்சேரி ஒன்றியப் பகுதியில் புதுவையும், காரைக்காலும் தமிழ் மொழி பேசும் மக்களைக் கொண்ட பகுதிகளாகும்.

புதுச்சேரி ஒன்றிய ஆட்சிப்பரப்பு, சின்னஞ்சிறியதாகும். ஆயினும் இப்பகுதியில் உள்ள மக்கள் அனைத்துத் துறைகளிலும் சிறப்புற்று விளங்கினர். மொழி, இலக்கியம், பண்பாடு, இதழியல், கலை ஆகிய துறைகளில் புதுவை பெற்றுள்ள வளர்ச்சி பெரிதாகும். இவ்வகையில் புதுவை ஒன்றியப் பகுதியில் ஒன்றான புதுவைப் பகுதியில் மட்டும் தோன்றி வளர்ந்த இதழ்களை இக்கட்டுரை ஆராய்கிறது.

புதுவையில் 1778ஆம் ஆண்டிலேயே அச்சகம் இருந்தது. இதனை,

1778ஆம் ஆண்டு ரெஜிமெண்ட் தெ போலீஸ் (Réglement de Police) சட்டத்தின் 36-347 விதிகளின் படி, லெப்டினென்ட் தெ போலீஸ் (Lieutenant de Police) அனுமதி இல்லாமல் அச்சகத்தில் சிலவகை வெளியீடுகள் வெளியிடுவது தடைசெய்யப்பட்டது என்ற குறிப்பின் மூலம் அறிய முடிகிறது.

பிரான்சில் ஏற்பட்ட புரட்சியானது பிரெஞ்சுக்காரர்களின் ஆளுகைக்கு உட்பட்ட நாடுகளில் வாழ்ந்த மக்களிடையே புதிய

விழிப்புணர்வை ஏற்படுத்தியது. அரசாங்கத்தில் நாள்தோறும் ஏற்படும் மாற்றங்களை, அரசின் செயல்பாடுகளை அறிந்து கொள்வதில் மக்கள் பெரிதும் ஆர்வம் காட்டினர். இந்தச் சூழலில் 1816இல் அரசு அச்சகம் நிறுவப்பட்டு அரசாங்க அறிவிப்புகள், விதிகள், துண்டறிக்கைகள் வெளியிடப்பட்டன. 1823இல் அரசாங்க ஆணைகள், அறிவிப்புகள் Archives Administratives des Establishments Francais de I 'Inde' (ஆர்க்கிவ்ஸ் அட்மினிஸ்டிரேட்டிவ்ஸ் தெஸ் எஸ்டாபிலிஷ்மெண்ட்ஸ் பிரான்சே தெ இண்டே) என்ற இதழின் மூலம் வெளியிடப்பட்டன. 1828இல் அவ்விதழ் Bulletin des Actres Administratives (புல்லட்டின் தெஸ் அக்ட்ரஸ் அட்மினிஸ்ரேட்டிவ்ஸ்) என்று பெயர் மாற்றம் செய்யப்பட்டது. இதே ஆண்டு அரசு அச்சகத்தில் தமிழ் அச்சுப்பிரிவு தொடங்கப்பட்டது.

1838இல் சி. குரே (C. Guerre) என்ற பிரெஞ்சுக்காரருக்கு அரசியல், நிர்வாகம், இலக்கியம், வணிகம் முதலான செய்திகளை வெளியிடுவதற்கான ஓரிதழ் தொடங்க அனுமதி அளிக்கப்பட்டது. அதற்கு அவரே வெளியீட்டாளரகாவும், ஆசிரியராகவும் இருந்தார். அதே ஆண்டில் இலெட்சுமணன் பிள்ளை என்ற தமிழாசிரியருக்குத் தமிழ் அச்சகத்தைத் தொடங்க அனுமதி வழங்கப்பட்டது. வேங்கடராயர் என்பவர் 'Soleil Indian' (இந்திய ஞாயிறு) என்ற இதழைத் தொடங்க அனுமதி அளிக்கப்பட்டது. *இதுவே புதுவையில் வெளிவந்த முதல் தமிழ் இதழாகும்.*

1850ஆம் ஆண்டுக்கும் 1900ஆம் ஆண்டுக்கும் இடைப்பட்ட காலகட்டங்களில் புதுச்சேரியில் அச்சகங்கள் பல்கிப் பெருகின. அதனால் அதிக அளவில் இதழ்கள் வெளியிடப்பட்டன. 1883இல் 'Le Progre's de I' Inde Francaise' (லெ புரோகிரஸ் தெ இண்டே பிரான்சே) (புதுவை முன்னேற்றம்) என்ற பெயரில் வெளிவந்த இதழ் 1917வரை நடைபெற்றது. இது குடியரசுக் கொள்கைகளை வலியுறுத்தியதோடு குறள், நாலடியார் போன்ற நூல்களின் வெண்பாக்களையும் கொண்டதாக அமைந்தது. இது விதவை மறுமணத்திற்காகப் போராடியதோடு, 1867இல் பிரான்சில் கொண்டுவரப்பட்ட கொத்தடிமை ஒழிப்புச் சட்டத்தைப் புதுவையிலும் கொண்டு வரவேண்டும் என்று வலியுறுத்தியது. ஸ்ரீ

சுஜனரஞ்சனி என்ற இதழானது நிர்வாகக் குறைகளையோ அல்லது ஆளுநர்கள், மேயர்களின் செயற்பாடுகளையோ விமர்சிக்கும் இதழாக வெளியிடப்பட்டது. மேலும் பிரிட்டிஷ் இந்தியாவின் அரசியல் நிலையையும் இந்திய தேசியக் காங்கிரஸ் குழுக்கூட்ட அறிக்கை களையும் தலையங்கங்களாக வெளியிட்டது. சிறுகதைகளை வெளியிடுவதை ஊக்கப்படுத்தியது. இப்பத்திரிகையைக் குறித்து தேசசேவகன் இதழ் மதிப்புரை வழங்கியுள்ளது.

ஸ்ரீ சுஜனரஞ்சனி

> இப்பத்திரிகை புதுச்சேரியினின்று வாரமொருமுறை வெளியாகும் தமிழ் - பிரெஞ்சு சமாசாரப் பத்திரிகை. இதன் ஆசிரியர் ஸ்ரீமான் டாக்டர் பரமாநந்த மரியதாசு அவர்கள்.
>
> இப்பத்திரிகை அவ்வப்போது சர்க்காரின் சோர்வுகளைக் கண்காணித்துப் போராடுவதில் விசேஷ சிரத்தையுடையது. ஜனசாதக வழியில் உழைக்கக் கூடியது. வலியாரெனத் தம்மை யெண்ணி யிறுமாந்து பொதுவிஷயத்தில் தலைநீட்டிக் கண் உருட்டும் பிறரைச் 'சீ' என்ற இகழவல்லது.
>
> [தேசசேவகன் - 1923 - சனவரி - 2 : 9 - புத்தகம் - 1, இலக்கம் 9 - 10 - ப - 5]

இம்மதிப்புரையில் இருந்து இப்பத்திரிகை சுமார் 30 ஆண்டுகளுக்கு மேலாக நடத்தப்பட்டு வந்ததை அறிய முடிகிறது.

20ஆம் நூற்றாண்டின் முற்பகுதியில் புதுவையில் பல்வேறு இதழ்கள் வெளியிடப்பட்டன. இக்காலகட்டத்தில் வெளியிடப் பட்ட இதழ்கள் இதழியல் வரலாற்றில் முத்திரை பதிக்கத்தக்கவை. மகாகவி பாரதியாரும், பாவேந்தர் பாரதிதாசனாரும் புதுவை இதழியல் வளர்ச்சிக்கு ஆற்றிய தொண்டு சிறப்பானதாகும். அரவிந்தர், வ.வே.சு. ஐயர், வ.ரா. போன்றோரின் படைப்புகளும் இக்காலகட்டத்தில் வெளியான இதழ்களில் இடம்பெற்றன.

20ஆம் நூற்றாண்டின் முதல் 25 ஆண்டு கால கட்டத்தில் பல்வேறு இதழ்கள் வெளியிடப்பட்டன. புதுவை நேசன் (1900), யூனியன் இந்து (1901), புதுவை சிந்தாமணி (1903), சன்மார்க்க

போதினி (1903), சுதேசவர்த்தமானி (1904), சர்வவியாபி (1907), இந்தியா (1908), விஜயா (1908), சூர்யோதயம் (1909), தி பாண்டி மெயில் (1910), சுகாபிவிருத்தினி (1914, 1924), ஆர்யா (1914), கற்பகம் (1915), தமிழ் மகவு (1918) தேசசேவகன் (1922), ஆத்மசக்தி (1924), பராசக்தி (1924).

இந்தியா (1908)

இந்தியா இதழ் முதலில் சென்னையிலும், பின்னர் புதுவையிலும் நடத்தப்பட்டது. சென்னையில் 9-6-1906 முதல் வெளியிடப்பட்ட இந்தியா இதழானது ஆங்கில அரசின் அடக்குமுறையின் காரணமாக 5-9-1908இல் நிறுத்தப்பட்டது. இப்பத்திரிகையின் பதிவு பெற்ற ஆசிரியரான எம். ஸ்ரீநிவாசய்யங்கார் கைது செய்யப்பட்டார். அதன் ஆசிரியராகத் திகழ்ந்த பாரதியாரும் கைதாகும் நிலை ஏற்பட்டது. இதன் காரணமாகப் பாரதியார் புதுச்சேரிக்கு வரநேரிட்டது. இந்தியா இதழும் புதுவையில் 10-10-1908 முதல் வெளிவரத் தொடங்கியது. அதன் பொறுப்பாளராகப் புதுவையைச் சேர்ந்தவர்தான் இருக்க வேண்டும் என்ற பிரெஞ்சு சட்டத்தின்படி இதன் பதிவு பெற்ற பொறுப்பாளராக வில்லியனூரைச் சேர்ந்த எஸ். லக்ஷ்மி நாராயணன் அய்யர் செயல்பட்டார்.

புதுவையில் இந்தியா இதழ் முதலில் சிறிய அளவிலும் பின்னர் பெரிய அளவிலும் வெளியிடப்பட்டது. அதன் முகப்பில் பிரெஞ்சு அரசின் கொள்கைகளான சுதந்திரம், சமத்துவம், சகோதரத்துவம் என்று தமிழிலும், அதற்கு மேலே பிரெஞ்சிலும் வெளியிடப்பட்டுள்ளது.

இந்தியா இதழ் 16 பக்கங்களைக் கொண்டதாக விளங்கியது. முதல் பக்கத்தில் கருத்துப்படம் (கார்டூன்) இடம் பெற்றிருந்தது குறிப்பிடத்தக்கது. இவை அன்றைய அரசியல் சூழலைச் சித்திரிப்பனவாகத் திகழ்ந்தன. பாரதியாரின் கட்டுரைகள் இவ்விதழை அணி செய்தன. அரவிந்தரின் மாணிக்க தோலா வெடிகுண்டு வழக்கு, அவரது சொற்பொழிவுகள், கடிதங்கள், வ.உ.சியின் தூத்துக்குடி கப்பல் கம்பெனி பற்றிய குறிப்புகள் ஆகியவை குறிப்பிடத்தக்கன. புதுவையிலிருந்து வெளியிடப்பெற்ற இந்தியா 12-3-1910இல் நின்று போயிற்று என்று ஆய்வாளர் பலர் குறிப்பிடுகின்றனர். ஆனால் ஆங்கில அரசின் புலனாய்வுத் துறை

குறிப்பில் இவ்விதழ் பின்னும் ஓராண்டு வெளிவந்ததாகக் குறிப்பிடப்பட்டுள்ளது. (மேற்கோள். இதழாளர் பாரதி, ப.24)

விஜயா (1908)

சென்னையில் நடத்தப்பட்டு வந்த 'விஜயா' என்ற இதழும் புதுச்சேரிக்கு மாற்றப்பட்டது. இவ்விதழ் வெளிவரவிருப்பதைக் குறித்து இந்தியா இதழில் விளம்பரம் ஒன்று வெளியிடப்பட்டது.

> விஜயா என்ற பெயர் கொண்ட தினசரிப்பத்திரிகை அரிய பெரிய விஷயங்களிலும் உலகவர்த்தமானம் முற்றும் அடங்கிய விவசாயக் குறிப்புகள், கைத்தொழில் குறிப்புகளடங்கிய இனிய நடைபெற்றது மாயுள்ளது. செப்டம்பர் மாதம் 7ம் தேதி கிருஷ்ண ஜயந்தியன்று துவங்கி வெளியாகும் (இந்தியா = 21 - 8 - 1909 - ப.12).

விஜயா இதழின் முதல் பக்கத்தில் விஜயா என்று தமிழிலும் VIJAYA என்று அதற்குக்கீழே ஆங்கிலத்திலும் இதழின் பெயர் குறிப்பிடப்பட்டுள்ளது. அதற்கு மேலே ஸ்வந்திரம், ஸமத்துவம், ஸஹோதரத்துவம் என்று தமிழிலும், பிரெஞ்சிலும் குறிப்பிடப் பட்டுள்ளது. மாலையில் வெளியிடப் பெற்றதை 'பிரதி தினமும் மாலையில் பிரசுரிக்கப்படும்' என்ற குறிப்பின் வழி அறியமுடிகிறது. முதல் பக்கத்தில் விளம்பரமும், இரண்டாம் பக்கத்தில் தலையங்கமும் காணப்படுகின்றன. முதல் பக்கம் நான்கு பத்திகளாகப் பிரிக்கப் பட்டுள்ளது. இவ்விதழில் வெளியான எதிர்க்கிறாயா? துணை செய்கிறாயா? என்ற தலையங்கம் குறிப்பிடத்தக்க ஒன்றாகும். காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்த மிதவாதத் தலைவர்களுள் ஒருவரான வி. கிருஷ்ணசாமி அய்யர் பதவி ஆசையின் காரணமாகச் சென்னை உயர்நீதி மன்ற நீதிபதி பொறுப்பை ஏற்றுக்கொண்டார். இந்நிலையில் பாரதியார் இத்தலையங்கத்தில்,

> வஞ்சனை, நடிப்பு, ஏமாற்று, பாவனை, வேஷம் பொய் ... ஸ்தந்திர தாகந்தான் இப்போது உங்களை ஹைகோர்ட்டு ஜட்ஜ் வேலையை ஒப்புக் கொள்ளும்படி தூண்டிவிட்டதோ? .... ஐயோ! வி.கிருஷ்ணசாமி ஐயரே, என்ன ஜன்மம் எடுத்துவிட்டீர் (விஜயா - 5 - 10 - 1909)

என்று மிகக்கடுமையாகச் சாடுகிறார் பாரதியார். 17-5-1910 நாளிட்ட புலனாய்வுத்துறை குறிப்பில் இந்திய இதழ்கள் சட்டத்தின் ஆணையின்படி விஜயா இதழ் நின்று போய்விட்டதாகக் குறிப்பிடப்பட்டுள்ளது.

சூரியோதயம் (1909)

புதுவையைச் சேர்ந்த சைகோன் சின்னைய நாயுடுவை உரிமையாளராகவும், ஆசிரியராகவும், வெளியிடுபவராகவும்கொண்டு வெளிவந்த இதழ் 'சூரியோதய'மாகும். இவ்விதழில் சுப்பிரமணிய பாரதியார், நீலகண்ட பிரம்மச்சாரி ஆகியோர் கட்டுரைகளை எழுதியுள்ளனர். இந்த இதழின் முகப்பில் சூரியோதயம் என்று தமிழிலும் அதன்கீழ் L' AURORE என்று பிரெஞ்சு மொழியிலும் அச்சிடப்பட்டுள்ளது. ஆதிவாரந் தோறும் பிரசுரமாக்கப் பெறும் என்று அச்சிடப்பட்டுள்ளது. (13-2-1910). இவ்விதழ் 1910 மார்ச்சு மாதத்தில் நின்றுவிட்டதாக முனைவர் இறையரசனும், 1910 ஜூனில் நின்றுவிட்டதாகப் பாரதி ஆய்வாளர் திரு பெ.சு. மணியும் குறிப்பிட்டுள்ளனர்.

கர்மயோகி

கல்கத்தாவில் அரவிந்தரால் 'கர்மயோகின்' என்ற இதழ் வெளியிடப்பட்டதைத் தொடர்ந்து தமிழில் 'கர்மயோகி' என்ற பெயரில் பாரதியை ஆசிரியராகக் கொண்டு ஓரிதழ் வெளிவந்தது. அரவிந்தரின் கருத்துக்கள் இவ்விதழில் வெளியிடப்பட்டதை 8-8-1909 இந்தியா இதழின் மூலம் அறியமுடிகிறது.

> கர்மயோகி - மாதந்தோறும் வெளியாகும் தமிழ்ப் பத்திரிகை. ஸ்ரீமான் அரவிந்தகோஷ் எழுதும் விஷயங்களடங்கிய கர்மயோகின் என்ற ஆங்கிலப் பத்திரிகையின் அற்புதமான வியாஸங்கள், வியாக்கியானங்கள், உபதேசங்கள் முதலியவற்றை மொழிபெயர்த்து இப்பத்திரிகை தமிழர்களுக்குதவும். பாரதநாட்டின் தத்துவ சாஸ்திரம், தர்மம், சுதேச பரிபாலனம் முதலியவற்றை உத்தாரணஞ் செய்யும் நோக்கமுடையது. மொழிபெயர்ப்போர் ஸ்ரீயுத ஸி. சுப்பிரமணிய பாரதி முதலியவர்கள் நமது ஜாதீய ஸம்ரக்ஷகனாகிய ஸ்ரீகிருஷ்ணன் பிறந்ததினமான

> அடுத்த 'ஸ்ரீ ஜயந்தி' யன்று இப்பத்திரிகையின் முதல் சஞ்சிகை வெளியாகும்.

இதில் குறிப்பிட்டுள்ள தினத்தன்று கர்மயோகி வெளி வரவில்லை.

கர்மயோகி 32 பக்கங்கள் கொண்டதாகத் தனிப்பிரதி விலை 4 அணாவிற்கும் ஆண்டுச்சந்தா 2 ரூபாய்க்கும் விற்பனை செய்யப் பட்டது. 1910 மார்ச்சு மாத இதழின் முகப்பில் 'கர்மயோகின்' இதழை அடியொற்றி கீதாவுபதேச நிகழ்ச்சி படமாகத் தீட்டப்பட்டுள்ளது. அதன் இடது மூலையில்,

> அப்படியே அறிந்தவன் பற்றில்லாதவனாய் உலக நன்மையை விரும்பித் தொழில் செய்யவேண்டும் (பகவத் கீதை)

என்று அச்சிடப்பட்டுள்ளது.

தர்மம்

புதுவையில் பாரதி 'தர்மம்' என்றொரு இதழை நடத்தினார் வ.வே.சு. ஐயர் என்ற நூலில் திரு. ரா. அ. பத்மநாபன், (பக்.130)

> இளைஞர்களின் பயிற்சிக்காக ஈஸ்வரன் தர்மராஜா கோவில் தெருவில் 89 ம் இல்லத்தில் இருந்தது ஐயர் துவக்கிய தர்மாலயம். அங்கே தருமம் என்ற தேசிய மாதமிருமுறை பத்திரிகை வெளியாயிற்று. அது பற்றியே அந்த இடத்துக்குத் தர்மாலயம் என்ற பெயரும் ஏற்பட்டது

என்கிறார்.

பாரதி, வ.வே.சு. ஐயர், நீலகண்ட பிரம்மச்சாரி ஆகியோர் இணைந்து இவ்விதழை நடத்தியுள்ளனர். இது கிருஷ்ணசாமி அய்யரால் வெளியிடப்பட்டது. பாரதியின் பெயர் பதிவில் குறிப்பிடப்படவில்லை. எம். நாராயணன் என்பவரால் அச்சிடப் பட்டதாகத் தெரியவருகிறது.

சுகாபிவிருத்தினி (1914)

புதுவை, ஒர்லெயான்பேட்டை ப. வேங்கடாசல நாயக்கரைப் பத்திராதிபராகக் கொண்டு தொடங்கப்பட்ட இதழ்

'சுகாபிவிருத்தினி'யாகும். ஆனந்தரதங்கப்பிள்ளை வீதியில் இருந்த சுகாபிவிருத்தினி அச்சுக்கூடத்தில் இவ்விதழ் அச்சிடப்பட்டது. நன்மை கடைபிடி, நாடொப்பன செய் என்பனவற்றையும் பிரெஞ்சு முழக்கங்களான சுதந்திரம், சமத்துவம், சகோதரத்துவம் என்பவற்றையும் கொள்கைகளாகக் கொண்டு நடத்தப்பட்டது.

செல்வத்துட் செல்வஞ் செவிச்செல்வ மச்செல்வம்
செல்வத்து ளெல்லாந் தலை

என்ற திருக்குறளும் இதன் முகப்பை அலங்கரித்தன.

சுகாபிவிருத்தினி இதழில் அரசாட்சியருக்கு மக்களின் குறைகள் எடுத்துச்சொல்லப்பட்டன. அரசு தொடர்பான செய்திகள் வெளியிடப்பட்டன. இவ்விதழில் சிறப்பாகச் சொல்லப்பட்ட செய்தி யொன்றின் மூலம் பெண்ணடிமை பேசி வந்த காலகட்டத்தில் புதுவையில் படித்த பெண்கள் பலர் ஒன்று கூடி நலவழிச்சங்கம் ஒன்றை ஏற்படுத்துவதற்கு அரசின் ஒப்புதலைப் பெற்றதையும் அறியமுடிகிறது.

மேலும் அரசாங்கத்தின் வரவு செலவுத் திட்டங்கள் பிரெஞ்சில் வெளியிடப்பட்டன. அனைத்துத் தரப்பு மக்களும் இதனை உணர்ந்து கொள்ள தமிழில் வெளியிடப்படவேண்டும் என்று இவ்விதழ் வலியுறுத்தியது.

புதுவையைப் புகலிடமாகக் கொண்டு வாழ்ந்து வந்த தேசபக்தர்களுள் ஒருவரான வ.வே.சு. ஐயர் இனி பிரட்டிஷ் அரசின் எல்லைக்குள் வரலாமென்று அரசு உத்தரவிட்டது. இதனைக் கேள்வியுற்ற அய்யரவர்கள் புதுவையைவிட்டுப் புறப்பட்டுச் சென்றார். இதனை 'புதுவைக்கு வந்திருந்த சிறந்த தேசாபிமானிகளிலொருவர் பிரிட்டிஷ் எல்லைக்குள் பிரசித்த பிரயாணமாயினார்' என்று தலைப்பிட்டு செய்தி வெளியிடப்பட்டது. அப்போது புதுவையில் இருந்த அனைத்து தரப்பு மக்களும் ஒருங்குகூடி அய்யரை வழியனுப்பி வைத்தனர். அய்யரின் சொற்பொழிவிற்குப் பின்னர் ஏழு நேரிசை வெண்பாக்கள் கொண்ட பிரிவு உபசாரப் பத்திரம் வழங்கப்பட்டது.

வர்த்தமானங்கள் என்ற பகுதியில் தேசபக்தன் இதழுக்குப் பாரதி எழுதிய கடிதமொன்று வெளியிடப்பட்டுள்ளது.

கடையம் 5, மார்ச்சு, 1920

ஐயா, என் மீது ராஜாங்கத்தார் விதித்திருந்த எல்லாவித நிபந்தனைகளும் எடுபட்டுப் போய் விட்டனவென்று எனக்கு ஸர்க்காரிடமிருந்து, தகவல் கிடைத்திருக்கிறது. இந்த ஸந்தோஷகரமான செய்தியைத் தங்கள் பத்திரிகை மூலமாகத் தமிழ்நாட்டு மக்களுக்குத் தெரிவிக்கும்படி வேண்டுகிறேன். தங்களுக்கு மஹாசக்தி நலம் தருக.

தங்களன்புள்ள
சி. சுப்பிரமணிய பாரதி

இதிலிருந்து ஆங்கில அரசால் பாரதிக்கு விதிக்கப் பட்டிருந்த தடை நீங்கியதை அறியமுடிகிறது இவ்விதழ் பிரெஞ்சும் - தமிழும் கலந்த நடையில் வெளிவந்ததை இதில் இடம்பெற்றுள்ள கட்டுரைகளின் வழி அறிய முடிகிறது.

கற்பகம் (1915)

திரு. பி. நாராயணசாமி முதலியார் அவர்களை ஆசிரியராகக் கொண்டு 'கற்பகம்' என்ற இதழ் புதுவையிலிருந்து வெளிவந்ததை ஆத்மசக்தி இதழின் மூலம் அறியமுடிகிறது.

> கற்பகம் - ஓர் செந்தமிழ் மாத சஞ்சிகை. இதில் வித்யா விஷயம், கல்வி, சாஸ்திரம், சுகாதாரம், வைத்தியம், விவசாயம், வியாபாரம், கைத்தொழில், வேதாந்தம், இராஜங்க விஷயம், ஜனாங்க சீர்திருத்தம், இராஜபக்தி, நூதன கற்பிதங்கள், மதவிஷயம், சிறுவர், சிறுமியர்களுக்கான விஷயங்கள், உலக அற்புதம், வர்த்தமானம், விநோதக் கூற்று முதலான அரும் விஷயங்கள் வித்வத் சிரோன்மணிகளால் எழுதப்பட்டு வெளிவந்துலவுகிறது (ஆத்மசக்தி, செப்டம்பர் - 1923 - ப. 112).

வருஷ சந்தா உள்நாட்டிற்கு	ரூ. 1 - 0 - 0
வெளிநாட்டிற்கு	ரூ. 1 - 8 - 0

கற்பகம் ஆபீஸ், புதுவை.

தேசசேவகன் (1922)

பழனி சின்னைய - இரத்தினசாமி நாயுடுவால் 7-11-22இல் 67, ஆனந்தரங்கம்பிள்ளை வீதி என்ற முகவரியில் இருந்து

'தேசசேவகன்' இதழ் தொடங்கப்பட்டது. 'நாடெங்கும் வாழக் கேடொன்றும் இல்லை' என்ற பழமொழி இவ்விதழின் முகப்பில் குறிப்பிடப்பட்டுள்ளது. தேசசேவகனில் பாவேந்தரின் பல படைப்புகள் வெளியிடப்பட்டன. தேசசேவகன் என்று தமிழிலும் அதன்கீழே LE PATRIOTE என்று பிரெஞ்சிலும் இவ்விதழின் பெயர் குறிக்கப்பட்டுள்ளது. தேசிய இயக்கத் தலைவர்களோடு கொண்ட தொடர்பினால் தேசப்பற்றாளராகத் திகழ்ந்த பாவேந்தர் இவ்விதழில் பாரத தேவியின் பெருமையைக் குறித்தும், சுதந்திரத்தின் அமரத்தன்மை குறித்தும் பல பாடல்களை எழுதியுள்ளார். 'பிரதி மங்கல வாரமும் வெளிவரும்' என்று இவ்விதழில் குறிக்கப் பட்டுள்ளது. பாவேந்தர் மட்டுமல்லாது ரா. கனகலிங்கம், வாசுதேவசர்மா, பி.வி.ஆர். ஆகியோரின் கட்டுரைகளும் இவ்விதழில் இடம்பெற்றுள்ளன.

ஆத்மசக்தி (1924)

தேசபக்தியை ஊட்டும் இதழாக ஜெகநாதம் அச்சகத்தில் அச்சடிக்கப்பட்டு, ஆத்மசக்தி காரியாலயத்தில் இருந்து வெளியிடப்பட்ட இதழ் ஆத்மசக்தியாகும். பி. நாராயணசாமி முதலியார் இதன் பத்திராதிபராக இருந்து செயல்பட்டார். ஆத்மசக்தியில் வெளியிடப்பட்ட விளம்பரத்தில் கீழ்க்கண்டவாறு குறிப்பிடப்பட்டுள்ளது.

> ஆத்மசக்தி தேசீய தமிழ் மாதாந்தப் பத்திரிகை ருத்ரோத்காரி ஆடி முதல் வெளிவருகிறது. இதில் தேசபக்தியைப் புகட்டும் இனிய தேசீய கீதங்கள், இலக்கிய இலக்கண ஆராய்ச்சி, தமிழ்நாட்டின் நிலை, தமிழர் நிலை, தமிழின் நிலை, தேச முன்னேற்றம், ஹாஸ்யம், கதை, வேதாந்தம், வர்த்தகம், பொதுவர்த்தமானம் முதலிய சிறந்த விஷயங்கள் கொண்டுள்ளது (ஆத்மசக்தி - தொகுதி 1 - 1924 - பிப்ரவரி - பகுதி - 8).

சிங்கப்பூர், பினாங்கு முதலிய நாடுகளிலும் இவ்விதழ் விற்பனை செய்யப்பட்டுள்ளது. திரு (இலக்ஷுமி) வாணி (சரஸ்வதி) என்ற பாடல்கள் க.சு. பாரதிதாசன் அவர்களால் எழுதப்பட்டுள்ளன. கி.வ.ஜ., கோவை சீனிவாசன், மு. மாணிக்க

நாயகர் போன்றோரின் படைப்புகளும் இவ்விதழில் வெளியிடப்பட்டன.

கலைமகள் இதழ் பங்காருபத்தர் அவர்களை ஆசிரியராகக் கொண்டு கலைமகள் கழகத்தின் மூலம் வெளியிடப்பட்ட இலக்கிய இதழாகும். 1918 இல் வெளியான தமிழ்மகவு வி. துரைசாமி முதலியார் அவர்களை ஆசிரியராகக் கொண்டு வெளியிடப்பட்ட மற்றொரு முக்கிய இதழாகும். பராசக்தியும் ஆத்மசக்தியைப் போன்று வேதாந்தக் கருத்துக்களைப் பெரிதும் வலியுறுத்தும் இதழாகும்.

1925ஆம் ஆண்டிற்கும், 1954 ஆம் ஆண்டிற்கும் இடைப்பட்ட காலகட்டம் புதுவை இதழியல் வரலாற்றில் மற்றொரு காலகட்டமாகும். 1930களில் இந்தியாவில் நடைபெற்ற சுதந்திரப் போராட்டமும், மகாத்மா காந்தி, ஜவகர்லால் நேரு ஆகியோரின் வருகையும் புதுவையில் வாழ்ந்துவந்த தலைவர்களிடையே புத்துணர்ச்சியை ஊட்டியது எனலாம். சமூகப் பொருளாதாரத் துறைகளில் ஏற்றத்தாழ்வுகளும், சுரண்டலும், வேலையின்மையும் தலைவிரித்தாடிய காலகட்டம். தொழிலாளர் தம் உரிமைக்குரலை முன்வைத்து ஆங்காங்கே போராட்டங்களை நடத்திய காலகட்டம். தந்தை பெரியாரின் சுயமரியாதை இயக்கம் வளர்ச்சியடைந்த காலகட்டம். இக்காலகட்டத்தில் புதுவை அரசை எதிர்த்துப் போர்க்குரல் எழுப்பிய சுதந்திரம், சுகாபிவிருத்தினி, குடியரசு ஆகிய இதழ்கள் தடைசெய்யப்பட்டன.

இத்தகு நெருக்கடியான சூழலில் புதுவையில் அரசியல், இலக்கியம், சமயம், சுயமரியாதைச் சிந்தனை சார்ந்த இதழ்கள் வெளிவரத் தொடங்கின. 1926இல் பரோபகாரி, 1927இல், ஜோதி, சுகந்த வாசம் வீசும் சிறிய புஷ்பம், ஜரூல் இஸ்லாம், 1929 இல் தேசபந்து, சந்திரா, 1930 இல் சர்பிரசாதயுதம் பாரதம், துயப்ளேக்ஸ், தாய்நாடு, புதுவை முரசு, 1931இல் அலார் தொழிலாளர் மித்திரன், 1932 இல் ஞானபோதினி, சுதந்திரநாடு, 1933இல் வித்தகம், 1934இல் சுதந்திரம், பொன்மலர், விதூஷகன், தேசோபகார், சுப்ரமண்ய பாரதி கவிதாமண்டலம், 1936 இல் நாடகம், 1937இல் சந்ரோகுலநேசன், பாரதமாதா, புதுயுகம், எதிரொலி, 1938இல் சமூகமித்திரன், சரஸ்வதி, 1939இல் பொதுஜன ஊழியன், 1940இல் தமிழணங்கு ஆகிய

இதழ்கள் புதுவையிலிருந்து வெளியிடப்பட்டன. இவற்றுள் குறிப்பிடத்தக்க சில இதழ்கள் ஆற்றிய தொண்டினை விரித்துக் காணலாம்.

தாய்நாடு (1930)

வேணுகோபால் என்பவர் 'தாய்நாடு' என்ற இதழைத் தொடங்கினார். பாவேந்தருடைய கருத்துக்களை வெளிப்படுத்தும் கிழமை இதழாக இவ்விதழ் விளங்கியது. அரசியலார் சிலர் அடித்தட்டு மக்களை அடக்கியொடுக்கி நசுக்குவதை நேரடியாகக் கண்டித்துப் பாவேந்தர் இவ்விதழில் பல செய்திகளை வெளியிட்டுள்ளார்.

துய்ப்ளேக்ஸ் (1930)

'துய்ப்ளேக்ஸ் இதழ்' 1930 இல் வெளியிட்டதாக Gazettier of Pondicherry என்ற தொகுதியில் காணப்படுகிறது. ஆனால் இது 1933 இல் வெளியிடப்பட்டிருக்க வேண்டும் என்பதை சுகாபிவிருத்தினி இதழில் வெளியான பத்திரிகை வரவு மூலம் அறியமுடிகிறது.

> பத்திரிகை வரவு : துய்ப்ளேக்ஸ்
> இப்பெயர் பூண்ட தமிழ் வாரப் பத்திரிகை
> 4 மாத காலமாகப் பிரெஞ்சிந்தியாப் புதுவையில்
> உலவி வருகின்றது. பிரிட்டிஷிந்தியா மக்களுக்கும்
> இப்பத்திரிகை யத்தியாவசியமென்று சொல்லலாம்
> இத்தகைய பத்திரிகைகளைச் சோரவிடாது
> சகோதரர்கள் ஆதரிக்க வேண்டியது கடமையாகும்.
> இப்பத்திரிகையின் சந்தா ரூ. 1 - இ.நூ. 3/6 மாதத்திற்கு
> 1 - 12 - 0. தனிப் பத்திரிகை அணா 1. முன்பணம்
> கட்டிப் பெற்றுக் கொள்ள வேண்டும்.
> (சுகாபிவிருத்தினி. 1934. ஜனவரி. இலக்கம் - 7 - 8)

மேலும் புதுச்சேரி காசுக்கடை அருகில் உள்ள துய்ப்ளேக்ஸ் காரியாலத்தில் இருந்து இவ்விதழ் அச்சிடப்பட்டதையும் அறிய முடிகின்றது.

புதுவை முரசு (1930)

சுயமரியாதை இயக்கக் கருத்துகளை குடியரசு இதழ் போன்று பரப்பவேண்டும் என்று விரும்பிய பாவேந்தர் புதுவையில்

தொடங்கிய இதழே புதுவை முரசாகும். பாவேந்தர் அரசுப்பணியில் இருந்த காரணத்தால் இவ்விதழில் நேரடியாக ஈடுபட முடியவில்லை. லகாஷ் வெளியீட்டாளராகவும், ம. நோயெல் பொறுப்பாசிரிய ராகவும், எஸ். சிவப்பிரகாசம் நிர்வாகப் பொறுப்பாளராகவும், க. இராமகிருஷ்ணன் ஆசிரியராகவும் இருந்து செயல்பட 'புதுவை முரசு' இதழ் புதுவையில் இருந்து வெளியிடப்பட்டது.

புதுவை முரசு இதழானது புத்தக வடிவில் இருபது பக்கங் களோடு திங்கள்கிழமை தோறும் வெளியிடப்பட்டது. இவ்விதழைக் குறித்து குடியரசு இதழானது தனது கருத்தை வெளியிடும் போது

> புதுவை முரசு, இப்பெயர் கொண்ட வாரப் பத்திரிகை ஒன்று வரப்பெற்றோம். இதன் ஆசிரியர் புதுவை க. இராமகிருஷ்ணனவர்களாவார்கள். இது நல்ல தாளில் தெள்ளிய நடையில் கண்கவர் வனப்பிதாயுள்ளது.
>
> இது சமய, சமூக பேதங்களை யொழித்து சீர்திருத்தத் துறையில் சமத்வ, சகோதரத்வ முதலிய நன்னோக் கத்துடன் வெளிவருகின்றது. இதில் சுயமரியாதை விஷயமான பாட்டுகளும், கதைகளும், தீண்டாமையை ஒழிக்கும் கட்டுரைகளும் அடங்கியிருக்கிறது. இப்பத்திரிகை 20 பக்கங் களுடன் அழகிய அட்டையுடன் வெளி வந்துள்ளது. (புதுவை முரசு, நவம்பர் 1930, ப. 16)

புதுவை முரசு நிலைய வெளியீடுகளாகப் பாவேந்தரின் தாழ்த்தப்பட்டார் சமத்துவப்பாட்டு, சஞ்சீவி பர்வதத்தின் சாரல் ஆகிய இரு நூல்களும் வெளியிடப்பட்டன.

இவ்விதழ் புதுவை கலாநிதி அச்சகத்தில் அச்சடிக்கப்பட்டது. பத்திராதிபர் ம. நோயெல் எண். 4, "லல்லி தொலாந்தால் வீதி என்ற முகவரியில் இருந்து வெளியிடப்பட்டது. முதலில் பத்திரிகையின் பொறுப்பாளராக ம.நோயெலும், பின்னர் புதுவைச் சிவமும் இருந்திருக்கின்றனர்".

புதுவைச் சிவம் இதன் பொறுப்பாளராக அமர்த்தப்பட்டதை பிரெஞ்சு அரசின் உத்தரவில்,

> தங்களிடமிருந்து பெறப்பட்ட உறுதிமொழி 8ஆம் விதி, 29. July 1881ஆம் ஆண்டு சட்டம் அச்சக இதழ் வெளியீட்டுக்கானது. அந்த உறுதியளிப்பின்படி 'புதுவை முரசு' என்னும் தலைப்பின்கீழ் திரு. ச. சிவப்பிரகாசம் அவர்கள் நாளிதழ் வெளியிட இன்றிலிருந்து அனுமதி யளிக்கப்படுகிறது - (இருநகல் - புதுவை, செப்டம்பர் - 25 - 1931 பாவேந்தரும், புதுவைச் சிவமும் - ப. 21)

கிறித்துவ மதகுருமார்களின் ஊழலைக் குறித்துப் 'பாடசாலை ஆழ்வான்' என்ற பெயரிலும், 'கத்தோலிக்கச் சிறுவன்' என்ற பெயரிலும் கட்டுரைகள் வெளிவந்தன. இதனால் கிறித்துவ மதக்குருக்கள் நோயெல் மீது வழக்குத் தொடரப்பட்ட நிலையில் பொறுப்பாசிரியர் பணியை புதுவைச்சிவம் ஏற்க வேண்டிய சூழல் ஏற்பட்டது.

இராமகிருஷ்ணன் அவர்களைத் தொடர்ந்து குருசாமி அவர்கள் இதன் ஆசிரியப் பொறுப்பை ஏற்றுக்கொண்டுள்ளார். இது குறித்து 22-12-1930இல் வெளியான புதுவை முரசில் வாசர்களுக்கு என்ற பகுதியில்,

> புதுவை முரசின் வெளியிடுபவராகிய நண்பர் திருவாளர் நோயெல் அவர்களின் விருப்பத்தின் படியும், அதன் ஆசிரியர் திருவாளர் ராமகிருஷ்ணன் அவர்களின் விருப்பத்தின்படியும் நான் 'புதுவை முரசின்' ஆசிரியனாக இருப்பதற்கு இசைந்தமைக்கு முக்கிய காரணங்கள் இரண்டு உண்டு (புதுவை முரசு 22 - 12-1930, பக்.13)

22-12-1930 வரை க. இராமகிருஷ்ணன் புதுவை முரசின் ஆசிரியராகவும் 29-12-1930 முதல் எஸ். குருசாமி ஆசிரியராகவும் பணியாற்றியுள்ளனர்.

'கிண்டற்காரன்' என்ற பெயரில் பாவேந்தர் எழுதிய துணுக்குகள் வெளியிடப்பட்டன.

வித்தகம் (1933)

திரு. மா.சு. சம்பந்தம் எழுதிய 'தமிழ் இதழியல் வரலாறு' என்னும் நூலில் 1930 - 1940 ஆண்டு காலகட்டங்களில் சைவ சமயம் சார்ந்து மூன்று இதழ்கள் மட்டுமே வெளிவந்ததாகக் குறிப்பிடப் பட்டுள்ளது. புதுவையில் இருந்து வெளியான 'வித்தகம்' இதழைப் பற்றிய குறிப்பு காணப்படவில்லை.

பிணமாகி உடல் வீழாது சிவமாகி அத்துவிதமடைதலே உயர்முக்தி என்று சைவசமயிகள் கூறுவர். இந்த முக்திநிலை உணர்த்தும் வகையில் இரா. நாகரத்தினம் அவர்களைப் பதிப்பாசிரியராகவும், தென்கோவை பண்டிதர் ச. கந்தையா பிள்ளை அவர்களை ஆசிரியராகவும் கொண்டு அம்பத்தாடையர் மடத்து வீதி இலக்கம் 4இல் அமைந்திருந்த நந்தி வெளியீட்டு மன்றத்தின் மூலம் 1933ஆம் ஆண்டு வித்தகம் இதழ் வெளியிடப்பட்டது. இவ்விதழைச் சந்தானம் அச்சகத்தினர் அச்சிட்டனர்.

நத்தம்போற் கேடு முளதாகுஞ் சாக்காடும்
வித்தகர்க் கல்லா லரிது

எனும் குறள் கருத்துகளை அடிப்படையாகக் கொண்டு தமிழ்ச் சான்றோர் அருளிய மறைபொருளை விளக்கும் வகையில் இவ்விதழ் அமையப் பெற்றுள்ளது.

பிரெஞ்சு குடியரசின் உரிமை முழக்கங்களான சுதந்திரம், சமத்துவம், சகோரத்துவம் என்ற மூன்றும் வித்தகம் இதழின் முகப்பை அலங்கரித்தன. வித்தகம் என்று ஆங்கிலத்திலும், தமிழிலும் குறிப்பிடப்பட்டுள்ளது. வியாழன்தோறும் வெளியிடப்பட்ட இவ்விதழ் இந்தியாவில் மட்டுமல்லாது இலங்கை, மலேசியா, பிரான்சு முதலிய நாடுகளிலும் விற்பனை செய்யப்பட்டது. முகப்பின் கீழ் திருமந்திரம், திருவாசகம், ஔவைக்குறள், சுத்தசாதகம் போன்ற இலக்கியங்கள் வெளியிடப்பட்டன. மொத்த பக்கங்கள் -8.

வித்தகம் இதழில் வெளியான கட்டுரைகள் செந்தமிழ் நடையில் தெளிவான போக்கில் கருத்துகளைத் திறம்பட வலியுறுத்தும் பாங்கில் அமைந்திருந்தன. சுத்தானந்த பாரதியார், பேரறிஞர் சி. வேலுப் பிள்ளை ஆகியோர் இவ்விதழ் குறித்து மதிப்புரை வழங்கியுள்ளனர்.

யாழ்ப்பாணத்தில் இருந்து வெளிவந்த ஈழகேசரி இதழில் வித்தகம் இதழ் குறித்துச் சிறந்ததொரு மதிப்புரை வெளியிடப் பட்டுள்ளது.

புதுவை நகர்ப்பிறந்து புத்தமுதாய்ப் பொங்கும்
அதியோக வித்தகமே ஐய! நிதிபோன்
மறைந்த தமிழ்மாமணமு மாதேவன் மாண்பும்
சிறந்த பெருஞ் சிஷ்டனெனச் செப்பு
– (வரகவி கன்னியப்ப முதலியார் வித்தகம்
21 – 12 – 33)

இவ்விதழின் ஆசிரியர் யாழ்ப்பாணத்தில் உள்ள கல்வியாளர் பயிற்சிக் கல்லூரியில் பேராசிரியராகப் பணிபுரிந்தவர். இதன் பத்திராதிபர் இரா. நாகரத்தினம் அவர்களின் இல்லத்தில் தங்கி வித்தகம் இதழில் தனிக்கட்டுரைகளையும், தொடர் கட்டுரைகளையும் எழுதியுள்ளார். மேலும் இலங்கை பேரறிஞர்களான கணேசய்யர் (ஈழநாடும் தமிழும்) க.பொ. இரத்தினம் போன்றோரின் படைப்புகளும் இதில் இடம் பெற்றுள்ளன. தலையாய அறம், உடம்பின், ஆரியமும் தமிழும், பெண்பாற் புலவர்கள், உயிர் வருக்கம் போன்ற தொடர் கட்டுரைகள் வெளிவந்துள்ளன.

யாழ்ப்பாணத்தைச் சேர்ந்தவர் வித்தகம் இதழின் ஆசிரியராகத் திகழ்ந்த காரணத்தால், அங்கு வெளியிடப்பட்ட நூல்கள் மதிப்புரைக்கு அனுப்பப்பட்டுள்ளன. இவ்விதழின் வழி சு.மு. இராமசுப்பிரமணியன் இயற்றிய மயூரகிரியுலா, பொன்னையா பிள்ளை எழுதிய பயிற்சி மாலை, க.பொ. இரத்தினம் வெளியிட்ட பேரம்பலப்புலவர் நினைவுமலர், சி. சிங்கமணப் பாணர் இயற்றிய ஐயனார் இரட்டை மணிமாலை, ஸ்ரீ சொக்கலிங்க சுவாமிகள் எழுதிய ஸ்ரீகுமாரதேவ சுவாமிகள் அபிஷேக மாலை மூலமும் உரையும் உள்ளிட்ட பல்வேறு நூல்கள் அக்காலக்கட்டத்தில் இலங்கையில் வெளியிடப்பட்டதை அறியமுடிகிறது.

1934ஆம் ஆண்டு சென்னையில் நடைபெற்ற தமிழன்பர் மாநாட்டிலே தமிழ் நெடுங்கணக்கில் சீர்திருத்தம் செய்வதற்காகத் தீர்மானம் ஒன்றை வைத்தனர். இதனை எதிர்த்துக் கந்தையாப் பிள்ளை தமிழ் நெடுங்கணக்குத் திருத்தத் தீர்மானம் என்ற

கட்டுரையை வித்தகம் இதழில் வெளியிட்டார். அதில் அரிய பெரிய வேத உண்மைகளைக் கொண்டு தமிழ் நெடுங்கணக்கு மிளிர்கின்றது என்று குறிப்பிட்டுள்ளார். இதனை ஆதரித்து யாழ்ப்பாணம், வ.மு. இரத்திநேசுவரையர் அவர்களும் அறிக்கை ஒன்றை வெளியிட்டதை அறிய முடிகிறது (1-2-34-வித்தகம்)

1933ஆம் ஆண்டு தொடங்கப்பெற்ற இவ்விதழ் மூன்று ஆண்டுகள் தொடர்ந்து வெளியிடப்பட்டது. 1936இல் நிறுத்தப் பட்டது.

சுதந்திரம் (1934)

1934இல் தொடங்கப்பட்ட 'இவ்விதழ்' பொன்விழா கண்ட இதழாகும். பிரெஞ்சிந்திய விடுதலை இயக்கத்தின் மூச்சாக விளங்கிய இவ்விதழை வ. சுப்பையா அவர்கள் நிறுவி அதன் ஆசிரியராகவும் விளங்கினார்.

பிரெஞ்சு இந்திய விடுதலைக்காகப் புதுவையில் வாழ்ந்த தலைவர்கள் ஆற்றிய தொண்டினை, பிரெஞ்சு ஏகாதிபத்திய ஆட்சியில் மக்கள் அடைந்திட்ட இன்னல்களைப் படம்பிடித்துக் காட்டும் கருவியாக இவ்விதழ் விளங்கியது.

ஸ்ரீசுப்ரமண்ய பாரதி கவிதா மண்டலம் (1935)

1935ஆம் ஆண்டு தொடங்கப்பட்ட கவிதை இதழ் 'ஸ்ரீசுப்ரமண்ய பாரதி கவிதா மண்டல'மாகும். பாரதிதாசனை ஆசிரியராகக் கொண்டு திங்கள் தோறும் வெளியிடப்பட்ட இவ்விதழ் புதுவை சைகோன் சின்னையா அச்சகத்தில் அச்சடிக்கப்பட்டது. ஏழு இதழ்கள் மட்டுமே வெளியிடப்பட்டன. (பவ ஆண்டு 1935 - பங்குனி - 1935, யுவ ஆண்டு புரட்டாசி) முதல் ஐந்து இதழ்களில் எல்லோரும் அறிந்த பாரதியின் உருவப்படமும், குறுந்தாடியுடன் கூடிய தோற்றத்துடன் விளங்கும் பாரதியின் உருவப்படமும் இடம் பெற்றுள்ளது.

'நமது பத்திரிகைக்குக் கவிதை தந்து உதவ முன்வரும் கவிஞர்கட்கு வேண்டுகோள்' என்ற தலைப்பில் இவ்விதழின் குறிக்கோள் தரப்பட்டுள்ளது.

1. எக்கொள்கை பற்றியும் எழுதுக. எண்ணங்களைக் கவிதையால் அமைத்தல் வேண்டும்.

2. அனைவரும் பாட்டுக்களைப் படித்துச் சுவையறிதல் வேண்டும். தமிழ்க் கவிஞர்கள் பெருகுதல் வேண்டும். இதனால் தமிழர் வாழ்வு உயர்வு பெற வேண்டும் என்ற எண்ணத்தோடு ஸ்ரீசுப்ரமணிய பாரதியார் எளிய நடையில், புதிய வகையில் சுவையோடு கவிதை தந்தார்கள். இதில் அவர்கள் வெற்றி பெற்றார்கள். அவர்கட்குப்பின் அவ்வகையிற் கவிதை வரைதல் வேண்டும் என முயல்பவர்கள் பலர் உண்டு.

3. பாரதி கவிதா மண்டலம் சிறப்புறுதல் வேண்டும். பெருகுதல் வேண்டும். இயற்கையழகு, தமிழ், நாடகம் இவை பற்றிக் கவிதை புனைந்து உதவுக. மாணவர்கட்குப் பாட்டு எழுதித் தருக. தேசியம் பாடுக. சமூகசீர்திருத்தம் பாடுக. பெண்கள் உரிமை பாடுக. பெண்கள் முன்னேற்றம் பாடுக. பெண்கள் பெறும் கொடுமையைப் பாடுக. பிற மொழியில் உள்ள பாட்டுக்களைத் தமிழ்ப் பாட்டுக்களாக்கித் தருக. உங்கள் உள்ளத்தில் ததும்பி வரும் இனிய தமிழ்க் கவிதைகளைத் தொகுத்துக் காட்டுவதுதான் - தமிழுக்குத் தொண்டு செய்வதுதான் - ஸ்ரீ சுப்ரமண்ய பாரதி கவிதா மண்டலம் மேற்போட்டுக் கொண்ட வேலை.

ஆதரிக்க வேண்டுகிறேன். ஆசிரியன்
(ஸ்ரீ சுப்ரமண்ய பாரதி கவிதா மண்டலம். 4 - 1 - வெ. 1 - 1935. ப. 2)

பாரதியார் நாமம் வாழ்க, செந்தமிழ் நாடெனும் போதினிலே, திருப்பள்ளி எழுச்சி, நாடக விமர்சனம், பாரதியார் பட்டினி உபதேசம், பாரதியார் அலங்காரக் குறும்பு, பாரதியார் முன் இரு பிரசங்கங்கள், பாரதியார் சமத்வ உள்ளம், பாரதியாரும் நாடகமும், பாரதியாரும் பையனும் எனும் கவிதைகள் பாவேந்தரால் எழுதப்பட்டுள்ளன.

பிற நாட்டு நல்லறிஞர் சாத்திரங்கள் தமிழ் மொழியில் மொழி பெயர்க்கப்பட வேண்டும் என்ற பாரதியின் விருப்பத்திற்கேற்ப மேலை நாட்டுக் கவிஞர்களான ஷெல்லி, கீட்ஸ், ஷேக்ஸ்பியர், ஆந்திரேஷெனியே போன்ற கவிஞர்களின் படைப்புகள் பலரால் தமிழில் மொழிபெயர்க்கப்பட்டுள்ளன.

மேலும் சிவப்பிரகாசம், நடனசபாபதி, எஸ்.ஆர். சுப்பிரமணியம், காசி விசுவநாதன், சுத்தானந்த பாரதி, சாமி, சிதம்பரனார், மு.த. வேலாயுதனார் போன்றோரின் படைப்புகளும் இவ்விதழில் இடம்பெற்றன.

தடம்பதித்த சாதனையாளர்கள்

புதுவையில் 1882ஆம் ஆண்டு முதல் 1941ஆம் ஆண்டுவரை வெளியிட்ட இதழ்களை வரலாற்றுக் கண்ணோட்டத்துடன் நோக்கிய போது இதழியல் வரலாற்றில் மகாகவி பாரதியாரும், பாவேந்தர் பாரதிதாசனாரும் தடம் பதித்த சாதனையாளர்களாகக் கருதப்படுகின்றனர். பாரதி வாழ்ந்த முப்பத்தொன்பது ஆண்டுகளில் அவர் புதுவையில் வாழ்ந்த பத்தாண்டுகள் (1908 - 1918) மிகவும் முக்கிய காலகட்டமாகும். அவருடைய படைப்புகளில் பெரும்பாலானவை புதுவையில் இருந்து வெளிவந்த இந்தியா, விஜயா, கர்மயோகி, சூர்யோதம் போன்ற இதழ்களில் வெளியிடப்பட்டவைகளாகும். இவற்றுள் இந்தியா இதழைத் தவிர ஏனைய இதழ்களில் சில இதழ்களே கிடைத்துள்ளன. இவ்விதழ்கள் அனைத்தும் கிடைக்கப் பெற்றால் தேசிய விடுதலையை முன்னிறுத்தும் பல படைப்புகள் கிடைக்கும். பாரதியின் முழு ஆளுமை வெளிப்பட்டிருக்கும். இவ்விதழ்களில் பாரதி எழுதியுள்ளவற்றை நோக்கும் போது அந்நாளில் பெரும்பாலும் வழக்கில் இருந்த தமிழும் வடமொழியும் கலந்தே மொழிநடையே கையாளப்பட்டதை அறியமுடிகிறது.

பாரதியாரோடு புதுவையில் ஒருங்கிணைந்து செயல்பட்ட பாவேந்தர் பாரதிதாசன் முதலில் தேசியச் சிந்தனையாளராக - விடுதலை வேட்கையுள்ளவராக இறைப்பற்று உடையவராகத் திகழ்ந்ததை, தேசசேவகன், ஆத்மசக்தி ஆகிய இதழ்களில் வெளிவந்த அவரது படைப்புகளின் வழி அறிய முடிகிறது.

கடவுள் பற்றாளராகத் திகழ்ந்த பாவேந்தர் சுயமரியாதை இயக்கச் சார்பாளராக மாறியதைப் புதுவை முரசு இதழில் வெளியான படைப்புகளின் வழி அறிய முடிகிறது. தமிழ்க்கவிஞர்கள் பல்கிப் பெருக வேண்டும் என்ற உயரிய நோக்கத்திற்காக உருவாக்கப்பட்ட ஸ்ரீ சுப்ரமண்ய பாரதி கவிதா மண்டலம் அதன் நோக்கத்தைப் பெரிதும் நிறைவேற்றியது என்றே கொள்ளமுடிகிறது. 'பாவேந்தர் பரம்பரை' என்ற கவிஞர் பரம்பரை உருவாக இவ்விதழ் அடிகோலியது எனலாம். எனவே இதழியல் வளர்ச்சிக்குப் பாவேந்தர் ஆற்றிய தொண்டு மகத்தானது எனலாம்.

தமிழ் இதழ்கள் 1942 - 2000
மொழி

தங்க. மணியன்

1942ஆம் ஆண்டுக்கு முன்னரும் பின்னரும் எண்ணற்ற நாளிதழ்கள் தோன்றின. ஆனால் அவைகளில் பெரும்பாலானவை மறைந்தன; சில வாழ்ந்தன; வளர்ந்தன. வளர்ந்த நாளிதழ்களில்கூட எல்லா நாளிதழ்களும் மக்கள் நாளிதழாக வளரமுடியவில்லை. மக்களின் மனதில் இடம்பெற்று மக்கள் நாளிதழாக வளர்ந்த பெருமை தினத்தந்தி ஒன்றே சாரும். அதற்குக் காரணம் அவ்வேடு எளிய தமிழில், மக்கள் பேசுகின்ற தமிழில் சமுதாயத்தின் அடித் தட்டு மக்களுக்கும் புரியுமாறு செய்திகளைக் கொடுப்பதுதான். இதற்காக அப்பத்திரிக்கை எளிமையாக்க முறையைப் பின்பற்றியது.

எளிமையாக்கம் என்பது படிப்பதற்கும், புரிந்து கொள்வதற்கும் ஏற்ப மொழியை எளிமைப் படுத்துவதாகும். இவ் எளிமையாக்கத்தைப் புதுமையாக்கத்தின் ஒரு கூறாகக் கருதுவர் மொழியியல் அறிஞர்கள். தினத்தந்தி தனது வாசகர்கள் எளிமையாகப் படிப்பதற்கும் புரிந்து கொள்வதற்கும் ஏற்பு, எவ்வாறு மொழியைக் கையாண்டுள்ளது என்பதை விளக்குவதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

எழுத்தெளிமை

அ) 'ஔ'காரம்

எழுத்துக் கூட்டிப் படிப்பவர்க்கு 'ஔ' என்னும் எழுத்தைப் படிப்பது கடினம். ஆகவே இவ்வெழுத்தைப் பின்வருமாறு மாற்றி எழுதுகிறது தினத்தந்தி.

(எ-டு)	தவறு	சரி
	ஔவையார்	அவ்வையார்
	கௌரி	கவுரி
	மௌண்ட் ரோடு	மவுண்ட் ரோடு
	வௌவால்	வவ்வால்
	திரௌபதி	திரவுபதி

இவ்வெடுத்துக்காட்டுகளில் 'ஔ'என்பது 'அவ்' என்றும் 'அவு' என்றும் எழுதப்படுகின்றது. இவற்றுள் 'அவ்' வகரத்தின் முன்னரும் 'அவு' ஏனைய இடங்களிலும் வருகின்றன.

ஆ) ஆய்தம் (ஃ)

ஆய்தத்தைத் தவிர்த்துச் செய்திகளைத் தருகின்றது தினத்தந்தி. இதற்குக் காரணங்கள்,

1. இவ்வெழுத்து தமிழில் பெரும்பான்மையான சொற்களில் இடம்பெறுவது இல்லை. இவ்வெழுத்து இடம்பெறுகின்ற சொற்களும் அருகிய வழக்கினவாகக் காணப்படுகின்றன

2. இவ்வெழுத்து ஒலிப்பதற்குக் கடினமாக உள்ளது.

3. பேச்சு வழக்கில் இவ்வெழுத்து இடம்பெறுவது இல்லை.

என்பவைகளே. இதனால் இன்றைய எழுத்தாளர்கள் இவ்வெழுத்தைத் தவிர்த்தும், இவ்வெழுத்து இடம்பெறும் சொல்லுக்குப் பதிலாக வேறு சொல்லைப் பயன்படுத்தியும் எழுதுகின்றது தினத்தந்தி.

(எ-டு) அஃதாவது > அதாவது

எஃகு > உருக்கு

இ) வடமொழி எழுத்துக்கள்

வடமொழி எழுத்துக்களாகிய ஸ, ஷ க்ஷ, ஜ, ஹ ஆகிய எழுத்துக்களைக் கூடியவரை தவிர்ப்பதோடு சொல் சிதையாமலும் ஒலிப்பு மாறாமலும் அவற்றைப் பேச்சு வழக்கிலுள்ள தமிழ் எழுத்துக்களால் மாற்றி எழுதுகின்றது தினத்தந்தி.

1. 'ஸ'கரம்

சொற்களில் வருகின்ற 'ஸ'கரத்தைத் தமிழ் 'ச'கரத்தால் மாற்றி எழுதுகின்றது. அவ்வாறு மாற்றி எழுதும்போது தமிழுக்கு ஒவ்வாத மெய்ம்மயக்கம் வரின் அதனைத் தவிர்ப்பதற்காக 'ச'கரத்துடன் 'உ'கரம் சேர்ந்து எழுதப்படுகின்றது.

(எ-டு)	ராஜேஸ்வரி	>	ராஜேசுவரி
	பாட்டாஸ்	>	பட்டாசு

அதனால் 'மாஸ்கோ' என்பதை 'மாசுகோ' என்றோ 'பாகிஸ்தான்' என்பதை 'பாகிசுதான்' என்றோ எழுதக்கூடாது; ஏனெனில் இவை ஒலிப்பதற்குக் கடினமாக இருக்கும் என்கிறது கையேடு.

மேலும் எழுத்தை மாற்றுவதால் பொருள் குழப்பம் ஏற்படுமானால் அத்தகைய சொற்களிலும் எழுத்தை மாற்றக்கூடாது என்பது தினத்தந்தியின் கொள்கை.

(எ-டு)	பஸ்	>	பஸ்	(சரி)
		>	பசு	(தவறு)

ஏனெனில் 'பசு' என்ற சொல் (மாட்டின் ஒரு வகையினைக் குறிக்கும் சொல்லாகத்) தமிழ் மொழியில் முன்னரே இருப்பதால் பேருந்தைக் குறிக்கும் 'பஸ்' என்பதை 'பசு' என்று எழுதினால் பொருள் குழப்பம் ஏற்படும். இதனைத் தவிர்க்கும் பொருட்டே இது போன்ற இடங்களில் எழுத்தினை மாற்றி எழுதுவதில்லை தினத்தந்தி.

2. 'ஜ'கரம்

தினந்தந்தி மொழியை நோக்கும் பொழுது இயற்பெயர்களில் வருகின்ற 'ஜ'கரம் மாறாமலும் ஏனைய இடங்களில் வருகின்ற 'ஜ'கரம் 'ச'கரமாக மாற்றமடைந்தும் வருவதைக் காணலாம்

(எ-டு)	ராஜாஜி	>	ராஜாஜி
	காமராஜர்	>	காமராஜர்
	ஜாதி	>	சாதி

3. 'க்ஷ'கரம்

'க்ஷ'கரம் மொழி முதலில் வரும்போது 'ச'கரமாகவும் ஏனைய இடங்களில் வரும்போது 'ட்ச'வாகவும் மாற்றி எழுதுப்படுகின்றது.

(எ-டு)	க்ஷத்திரியர்	>	சத்திரியர்
	கக்ஷி	>	கட்சி
	ரக்ஷாபந்தன்	>	ரட்சாபந்தன்

4 'ஹ'கரம்

தினத்தந்தி 'ஹ'கரத்தை சில இடங்களில் மாற்றியும் சில இடங்களில் மாற்றாமலும் பயன்படுத்துகின்றது. மாற்றி எழுதும் போது 'ஹ'கரம் வீழ்கின்றது; 'ஹ'கரத்துடன் வரும் உயிர் மட்டும் பயன்படுத்தப்படுகின்றது.

(எ-டு)	ஹரியானா	>	அரியானா
	ஹோமியோபதி	>	ஓமியோபதி
	ஹீத்	>	ஹீத்
	ஹோம்	>	ஹோம்

இச்சொற்களில் காணப்படும் மாற்றங்களுக்கும் மாற்றமின்மைக்கும் காரணம் ஒலிப்பு எளிமையேயாகும்.

5. 'ஷ'கரம்

'ஷ'கரம் பேச்சு வழக்கில் 'ச'கரமாக ஒலிக்கப்படுவதால் பெரும்பான்மையான இடங்களில் 'ஷ'கரத்திற்குப் பதிலாக 'ச'கரம் பயன்படுத்தப்படுகிறது. ஒரு சில இடங்களில் 'ட'கரம் வருகிறது.

(எ-டு)	வருஷம்	>	வருடம்
	வேஷ்டி	>	வேட்டி

6. சில நேரங்களில் வடமொழி எழுத்துக்கள் உள்ள சொற்களைத் தவிர்த்து அவற்றிற்குச் சரியான பழக்கத்திலுள்ள தமிழ்ச் சொற்களைத் தினத்தந்தி பயன்படுத்துகின்றது.

(எ-டு)	ஜலம்	>	தண்ணீர்
	புஷ்பம்	>	பூ
	புருஷன்	>	கணவன்
	க்ஷயரோகம்	>	காசநோய்
	ஹிருதயம்	>	இதயம்

சொல் எளிமை

தினத்தந்தி எழுத்து நிலையில் எளிமையாக்கத்தைக் கைக் கொண்டது போலவே சொல் நிலையிலும் எளிமையாக்கத்தைக்

கைக்கொண்டுள்ளது. பொதுவாக, ஒரு சொல் 8 எழுத்துக்களுக்கு மேல் இருக்கக் கூடாது என்பது தினத்தந்தி கையேடு கூறும் விதி. இதனைக் கருத்திற்கொண்டு, தினத்தந்தி பின்வருமாறு சொற்களை எளிமைப்படுத்திக் கையாளுகின்றது.

அ) சொற்களைப் பிரித்து எழுதும் முறை

சொற்களைப் பிரித்து எழுதியும், உடம்படு மெய்யைத் தவிர்த்தும் எழுதியும் சொற்களை எளிமைப்படுத்துகின்றது தினத்தந்தி.

(எ-டு)

தொழிலாளர்களிடையே > தொழிலாளர்கள் இடையே

அனைத்திந்தியா > அனைத்து இந்தியா

இந்தியெதிர்ப்பு > இந்தி எதிர்ப்பு

ஆ) துணைவினையைப் பிரித்து எழுதுதல்

துணைவினைகளைப் பிரித்து எழுதுவதன் மூலம் தினத்தந்தி கூட்டுவினைகளை எளிமைப்படுத்துகின்றது.

(எ-டு) வந்துகொண்டிருந்தார் > வந்துகொண்டு இருந்தார்

உட்கார்த்திருந்தார் > உட்கார்ந்து இருந்தார்

ஏற்பாடாயிற்று > ஏற்பாடு ஆயிற்று

இ) சிறிய சொற்கள்

நீளமான சொற்களுக்குப் பதிலாகச் சிறிய சொற்களைப் பயன்படுத்துகின்றது தினத்தந்தி.

(எ-டு) வற்புறுத்துவதற்காக > வற்புறுத்த

கேட்டீர்களானால் > கேட்டால்

ஈ) எளிமையான சொற்கள்

வாசகர்கள் படிப்பதற்கு ஏற்றவாறு கடினமான சொற்களுக்குப் பதிலாக எளிமையான சொற்களைத் தினத்தந்தி தேர்ந்தெடுக்கின்றது.

(எ-டு) முக்கியத்துவம் > முக்கியம்

முதலாளித்துவக் கட்சி> பணக்காரர் கட்சி / முதலாளிகள் கட்சி

உ) கலைச் சொற்களைத் தவிர்த்தல்

கலைச் சொற்கள் சாதாரணமான மக்களுக்குப் புரியாது என்பதால் கலைச் சொற்களைத் தவிர்த்துச் செய்திகளைத் தருகின்றது தினத்தந்தி.

(எ-டு) பூர்ஷ்வா > பணக்காரர்கள் / முதலாளிகள்

விண்வெளி > வானவெளி

அண்ணாயிசம் > அண்ணாவின் கொள்கைகள்

ஊ) சொற்பெயர்ச்சி

வழக்கிலுள்ள சொல்லைப் பயன்படுத்தாமல் புதிய சொல்லைப் பயன்படுத்துகின்ற தமிழ்ப் பத்திரிகைகள். இவ்வாறு வேறு ஒரு சொல்லைப் பயன்படுத்தக் காரணம்,

1. புதுச்சொல் ஆற்றல் மிகு சொல்லாக இருத்தல்
2. சொல் சிறிதாக இருத்தல்
3. தொடர்புடைய வேறு பல சொற்களின் ஆக்கத்திற்கு ஏற்றதாக இருத்தல் என்பன.

(எ-டு) நூல் நிலையம் > நூலகம்

செயலாளர் > செயலர்

எ) புணர்ச்சி எளிமை

சந்தி நீக்கம் எளிமையாக்கத்தின் ஒரு பிரிவாகக் கருதப்படுகின்றது. பெரும்பாலான பத்திரிகைகள் புணர்ச்சி விதிகளைப் பின்பற்றுவதில்லை. புணர்ச்சி விதிகளைப் பின்பற்றாது சந்தியினை நீக்கி எழுதுவதால் படிப்பவர்கள் பொருளைப் புரிந்து கொள்வதில் எவ்விதக் குழப்பமும் அடைவதில்லை. ஆகவே, பெரும்பான்மையான தமிழ்ப் பத்திரிகைகள் சந்தியைப் பற்றிக்

கவலைப்படாமல் எழுதுகின்றன. இதற்குத் தினத்தந்தியும் விதிவிலக்கல்ல.

தமிழிலக்கண நெறிப்படி சொல்லின் இறுதியில் வரும் 'ல'கர 'ள'கரங்கள் வருமொழி முதலில் க, ச, த, ப ஆகிய எழுத்துக்களில் ஏதேனும் ஒன்று வரின் அவை முறையே 'ற'கரமாகவும், 'ட'கரமாகவும் மாறும். ஆனால் தமிழ்ப் பத்திரிகைகள் இவ்விதியைப் பெரும்பாலும் பின்பற்றுவதில்லை.

(எ-டு) உடல் பயிற்சி

கல் சட்டி

புல் தரை

கல் கண்டு

அந்த, இந்த ஆகிய சுட்டு அடைகளுக்குப் பின்னும், வினைஉரிச் சொல்லாக்க விகுதியின் பின்னும், இரண்டு, நான்கு ஆகிய வேற்றுமை உருபுகளுக்குப் பின்னும் க,ச,த,ப, ஆகியவற்றுள் ஏதேனும் ஒரு எழுத்தில் ஆரம்பமாகும் சொல் வருமானால் ஒற்று மிக வேண்டும் என்பது தமிழ்ச் சட்டம். ஆனால் தினத்தந்தி,

(எ-டு) இந்த சட்டம்

அந்த பதவி

தவறாக செய்தார்

அவனை கண்டேன்

அவனுக்கு கொடுத்தான்

என ஒற்று மிகாமல் எழுதுகின்றது.

ஏ) துடிப்பான சொற்களைப் பயன்படுத்துதல்

தலைப்புகள் விறுவிறுப்பாக இருக்கவும், படிப்பவரின் கவனத்தை ஈர்த்து ஆர்வத்தைத் தூண்டவும், அதிர்ச்சி, அதிர்வேட்டு, அபாயச் சங்கு, அலறல், குமுறல், துடிதுடிப்பு, சுறுசுறுப்பு, கொந்தளிப்பு, கூக்குரல், இடிமுழக்கம், போன்ற சொற்களைப் பயன்படுத்துகின்றது தினத்தந்தி.

ஐ) *பிறமொழிச் சொற்கள்*

மக்கள் பேச்சு வழக்கிலுள்ள பிறமொழிச் சொற்களை அப்படியே பயன்படுத்துகின்றது தினத்தந்தி.

(எ-டு) சைக்கிள்

பஸ்

போலீஸ்

ஒ) *புதுச் சொற்களைப் பயன்படுத்துதல்*

தினத்தந்தி புதுச் சொற்களைப் பயன்படுத்துவதிலும் ஏனைய நாளிதழ்களுக்குப் பின்தங்கிய இதழன்று.

(எ-டு) பேருந்து

ஆளுநர்

பதிவாளர்

செவிலியர்

விண்வெளிக் கலம்

தொடர் வண்டி

ஓ) *பொருத்தமான சொல்லைப் பயன்படுத்துதல்*

செய்திகளைத் தரும்போது சொற்களைத் தேர்ந்தெடுத்துப் பயன்படுத்த வேண்டும். இவ்வாறு பொருத்தமான சொற்களைப் பயன்படுத்துவது, குழப்பத்தைத் தவிர்க்கும்; படிப்பவர்களுக்குப் புரிந்து கொள்ள ஏதுவாகும். சில சொற்களின் பயன்பாடு தினத்தந்தியில் பின்வருமாறு அமைந்துள்ளது.

ஏற்படுதல்

இச்சொல்லை எல்லா இடங்களிலும் பயன்படுத்தக்கூடாது. நிரந்தரமாக ஏற்படுத்தப்பட்ட ஒன்றுக்கே ஏற்படுதல் என்ற சொல்லைப் பயன்படுத்துகிறது தினத்தந்தி.

(எ.டு) ஆஸ்பத்திரி ஏற்பட்டது --- சரி

பரபரப்பு ஏற்பட்டது --- தவறு

ஏனெனில் 'பரபரப்பு' நிரந்தரமானதல்ல. ஆகவே பரபரப்பைப் பற்றி எழுதும்போது 'பரபரப்பை உண்டாக்கி இருக்கிறது' என்று எழுத வேண்டும்.

மகத்தான / பிரமாண்ட

'மகத்தான' என்னும் சொல் நல்ல சொல். தான் ஆதரிக்கக் கூடியவர்களைப் பற்றி எழுதும்போது 'மகத்தான வரவேற்பு', பிரமாண்ட வரவேற்பு என்று எழுதுவது தினத்தந்தியின் நடைமுறை.

ஔ) ஒரு சொல்லைத் திரும்பத் திரும்பப் பயன்படுத்தாமை

ஒரு செய்தியில் ஒரே சொல்லைத் திரும்பத் திரும்பத் தினத்தந்தி பயன்படுத்துவதில்லை. அதற்குப் பதிலாக அதே பொருளைத் தருகின்ற வேறு வேறு சொற்களைப் பயன்படுத்து கின்றது.

எடுத்துக்காட்டாக முதலில் பேய் மழை என்ற சொல்லைப் பயன்படுத்தினால், பின்னர் அதே சொல்லைப் பயன்படுத்தாமல், அதே பொருளைத் தருகின்ற கனமழை, பெருமழை, அடைமழை, புயல்மழை போன்ற சொற்களைப் பயன்படுத்துகின்றது.

வாக்கிய எளிமை

எழுத்துக்களையும், சொற்களையும் படிப்பதற்கும், புரிந்து கொள்வதற்கும் ஏற்றாற்போல் எளிமையாக்குவதைப் போலவே, வாக்கியங்களையும், எளிமையாக்கிப் பயன்படுத்துகின்றது தினத்தந்தி.

நிறுத்தல் குறிகளின் பயன்பாடு

வாக்கியங்களின் புரிதல் தன்மையை எளிமைப்படுத்துவதற் காக நிறுத்திப்படிக்க வேண்டிய இடங்களில் கால்புள்ளி, அரைப்புள்ளி, முக்கால்புள்ளி, முற்றுப்புள்ளி ஆகியவைகளைப் பயன்படுத்துகின்றது தினத்தந்தி.

(எ-டு) **இதற்கிடையே, பரூக் அப்துல்லா கட்சியில் இருந்து விலகி, ஷா ஆதரவாளர்களாக மாறிய 13 எம்.எல்.ஏக்கள்**

பதவி இழந்ததாக சபாநாயகர் அறிவித்துள்ளார். ஆனால், இந்த உறுப்பினர்கள் பதவியை ரத்து செய்ய முடியாது என்று, காஷ்மீர் ஐகோர்ட்டு கூறியுள்ளது.

கொடுக்கப்பட்டுள்ள இப்பகுதியில், வாசகர்கள் குழப்பமின்றித் தெளிவாகப் புரிந்து கொள்வதற்கு ஏற்றாற்போல் ஏற்ற இடத்தில் நான்கு நிறுத்தல் குறிகளைப் பயன்படுத்தியுள்ளது தினத்தந்தி.

வரையறுத்த அமைப்புகளைப் பயன் படுத்துதல்

ஒரு சில குறிப்பிட்ட தொடரமைப்புகளை வாக்கியத்தில் திரும்பத் திரும்பப் பயன்படுத்துகின்றது. இது வாசகர்கள் புரிந்து கொள்ள எளிமையாக இருக்கின்றது.

(எ.டு) தீவிர புலன் விசாரணை

திடீர் சோதனை

படுகாயம் அடைந்தார்

பரிதாபமாகச் செத்தார்

துடிதுடித்துச் செத்தார்

வேற்றுமை உருபை வெளிப்படையாகப் பயன்படுத்துதல்

வேற்றுமை உருபை வெளிப்படையாகப் பயன்படுத்த வேண்டிய இடங்களில் பயன்படுத்த வேண்டும். இல்லையெனில் அவ்வாக்கியம் பொருள் மயக்கத்திற்கு இடம் தந்து குழப்பத்தை உண்டாக்கிவிடும்.

(எ-டு) 1. அண்ணா பெயரை சூட்டினார் (தவறு)

அண்ணாவின் பெயரைச் சூட்டினார் (சரி)

2. டெல்லி போனார் (தவறு)

டெல்லிக்குப் போனார் (சரி)

மொழிபெயர்ப்பு எளிமை

வேற்று மொழிச் சொற்களை மொழிபெயர்க்கும்போது ஒவ்வொரு வேற்றுமொழிச் சொல்லுக்கும் ஒவ்வொரு சொல்லைப்

பயன்படுத்துகின்றது தினத்தந்தி. இதனால் பொருள் குழப்பம் தவிர்க்கப்படுகின்றது.

Bulldozer = முட்டித்தள்ளும் இயந்திரம்

Tractor = டிராக்டர்

Crane = பளுதூக்கும் இயந்திரம்

வெளியீட்டு முறை எளிமை

படிப்பவர்கள் செய்திகளை விளக்கமாகவும், தெளிவாகவும், புரிந்துகொள்ளுவதற்கேற்பச் செய்திகளை வெளியிடுகின்றது தினத்தந்தி. இதற்காகப் பின்வரும் உத்திகளைத் தினத்தந்தி கையாளுகின்றது.

1. முன்பின் தொடர்புடன் செய்தியினை வெளியிடல்
2. சிறு சிறு பத்திகளை அமைத்தல் (பெரும்பாலும் ஒரு பத்தியில் ஒரு வாக்கியமே அமைகின்றது)
3. பத்திகளைப் பொருத்தமான இணைப்புச் சொல் மூலம் இணைத்தல்
4. துணைத் தலைப்புகளுடன் விளக்கச் செய்தியை வெளியிடல்

இவ்வுத்திகளைப் பயன்படுத்தித் தினத்தந்தி செய்திகளை வெளியிடுவதால் செய்திகள் குழப்பமின்றி வாசகர்களுக்குத் தெளிவாகப் புரிகின்றன.

இவ்வாறு தினத்தந்தி நாளிதழ் மொழியின் பல நிலைகளிலும் எளிமையாக்கத்தைக் கையாண்டு மக்கள் மனத்தைச் சூறை கொண்டதைப் பார்த்தசாரதி தன்னுடைய ‘இந்தியாவில் இதழியல்‘ (ப.253) என்ற நூலில் “தினத்தந்தியில் எளிதாகப் புரிந்து கொள்ளக்கூடிய கிராமிய மொழியில் - நடையில் செய்திகள் இருந்தன. வாசகர்கள் விரும்பியதை ஆதித்தனார் கொடுத்தார். வாசகர்களும் ஆவலுடன் படித்தார்கள்.

தலைப்புகள்

தலைப்புகள் 12 புள்ளிகள் கொண்ட தடித்த எழுத்துக்களில் அமைந்திருக்கின்றன. இவை பெரும்பாலும் ஒரு வரி தலைப்புகளாகவே அமைந்துள்ளன.

எழுத்துருக்கள் **(Fonts)**

ஒரே விதமான எழுத்துருவே இதழ் முழுவதும் பயன்படுத்தப் பட்டுள்ளது. புள்ளி அளவுகள் மட்டுமே மாறுகின்றன. பொதுவாக 10 புள்ளிகள் அளவுள்ள எழுத்துக்களும் 8 புள்ளிகள் அளவுள்ள எழுத்துக்களும் பயன்படுத்தப்பட்டுள்ளன.

இட நிரப்பிகள்

பக்க வடிவமைப்புக்கு இடநிரப்பிகளையோ துணுக்குச் செய்திகளையோ எங்கும் பயன்படுத்தவில்லை. ஒரே ஒரு இதழில் மட்டும் கட்டுரையின் முடிவில் காலி இடத்தை நிரப்ப எந்தத் தொடர்பும் இல்லாமல் பத்து பழமொழிகளை அமைத்துள்ளனர். அதாவது பழமொழிகளை இடநிரப்பியாகப் பயன்படுத்தி உள்ளனர்.

படங்கள், ஓவியங்கள், பெட்டிச் செய்திகள் ஆகியன தத்துவ போதினி இதழில் எங்கும் இடம் பெறவில்லை.

முடிவுரை

தமிழ் இதழியலின் தொடக்க காலத்தில் வெளிவந்த இதழ்களின் படி இதழாளர்கள் கருத்துக்கு அதிக முக்கியத்துவம் கொடுத்துள்ளனர். வணிக ரீதியான போட்டிகள் குறைவாக இருந்த காரணத்தாலும், தொழில்நுட்ப வசதிகள் இல்லாத காரணத்தாலும் அவர்கள் வடிவமைப்பைப் பற்றிக் கவலைப்படவில்லை என்று உணர முடிகிறது.

தினத்தந்தியின் விற்பனை ஓகோ என்று பெருகியது. ஏழை எளிய மக்கள், ரிக்ஷாக்காரர்கள், தொழிலாளர்கள் ஆகியவர்களிடம் நுழையும்படியாக அவர் தினத்தந்தியை நடத்தினார். நாளிதழ் படிக்கும் பழக்கத்தை அவர்களிடம் உண்டாக்கினார். இது தமிழ் இதழியலுக்கு ஆதித்தனார் செய்த மகத்தான தொண்டு ஆகும் என்று பாராட்டுகின்றார்.

துணை நூல்கள்

1. Annamalai. E.I, 1980 "Simplification as a Process of Modernization" in Sociolinguistics and Dialectology, Eds.S.Agesthiyalingom & K.Karunakaran, Annamalai University, Annamalai Nagar.

2. Parthasarathy, R., 1989 Journalism in India, Sterling Publishers Pvt. Ltd. New Delhi.

3. ஆதித்தனார், சி.பா., 1971 நாள் - தாள் கையேடு, சென்னை

4. மணியன், தங்க., 1978 பத்திரிகைத் தமிழ், மாணிக்கம் பதிப்பகம், பரணம், திருச்சி மாவட்டம்.

5. - - - - - 1986 பத்திரிகை மொழிநடை, மாணிக்கம் பதிப்பகம், பரணம், திருச்சி மாவட்டம்.

6. சாமி, அ.மா., 1990 இதழாளர் ஆதித்தனார், உலகத் தமிழ் ஆராய்ச்சி நிறுவனம், சென்னை.

கண்ணதாசன்

ஜே.ஆர். இலட்சுமி

முன்னுரை

கண்ணதாசன் கவித்திறன் போலவே இதழியல் வரலாற்றிலும் தடம் பதித்த சாதனையாளராவார். இக்கட்டுரையில் கண்ணதாசனின் ஆளுமை, மொழிநடை பெறும் முக்கியத்துவமும், அவரது இதழியல் பணிகள் பற்றியும் கூறப்படுகின்றன.

போற்றுபவர் போற்றட்டும்; புழுதிவாரித்
தூற்றுபவர் தூற்றட்டும்; தொடர்ந்து செல்வேன்
ஏற்றதொரு கருத்தை என(து) உள்ளம் என்றால்
எடுத்துரைப்பேன்; எவர்வரினும் நில்லேன்; அஞ்சேன்
(கண்ணதாசன் இதழ் – டிசம்பர் 1977)

என்ற கண்ணதாசன் இலட்சிய வரிகள் அவரது இதழியல் பணிக்கு அவரே வகுத்த ஏற்றதொரு இலக்கணம் ஆகும்.

எழுத்தாளர் கண்ணதாசன்

இளம் பருவ எழுத்தார்வம்

கண்ணதாசன் இளமைப் பருவதில் தன் கிராமத் தெய்வமான மலையரசி அம்மனிடம் அளவு கடந்த பக்தி உடையவராய் இருந்திருக்கிறார். தமது 12ஆவது வயதில் பாப்பாத்தி உருணிக் கரையில் அமர்ந்து எதையாவது எழுதுவதைத் தான் வழக்கமாகக் கொண்டிருந்திருக்கிறார். கவிஞர் தமது 13ஆவது வயதில் எழுதிய முதற்கவிதை

வீணாகானம் விடியமுன் கேட்டது
கர்ணாமிர்தம் காதுக்கு இனிமை
தூக்கம் கலைந்து துள்ளி எழுந்தேன்
படுக்கையில் இருந்தே பருகினேன் அமுதம்
(அருணன், கண்ணதாசன் கவிதைகளில்
வண்ணக்கோலங்கள், ப.1)

என்பதாகும். செட்டிநாட்டு நாடோடிப் பாடல்களும் பட்டினத்து அடிகளார் பாடல்களும் இவரைப் பெரிதும் ஆட்கொண்டன. இளமை முதலாகத் தமிழ்ப்பற்றும், பாடல்கள், கதைகள், கட்டுரைகள் எழுத வேண்டும் என்ற பேராவலும் கொண்டவராய் இருந்திருக்கிறார். ஆகவே, கிராமத்தில் பாரதமாதா வாசக சாலை என்பதில், சுதேசமித்திரன், ஆனந்த விகடன், ஹனுமான், ஹிந்துஸ்தான் ஆகிய பத்திரிகைகள் அனைத்தையும் படித்து முடித்துவிடுவதை வழக்கமாகக் கொண்டிருந்திருக்கிறார். ‘கண்டது கற்கப் பண்டிதனாவான்’ என்றபடி எது கையில் கிடைக்கிறதோ அதையெல்லாம் படித்து அதுபோல எதுகை மோனையில் எழுதிப் பார்த்திருக்கிறார். இவரது பெற்றோர்கள் இவரை வேலைக்கு அனுப்ப முயன்றிருக்கிறார்கள். ஆனால் எந்த வேலையும் கிடைக்கவில்லை. எனவே, “நமக்குத் தொழில் கவிதை, நாட்டுக்குழைத்தல், இமைப்பொழுதும் சோராதிருத்தல்” இவையே கவிஞரின் இலட்சிய கனவுகள் ஆயின. ஆனாலும், பின்னாளில் பல துறைகளில் தலையிட்டு எழுத வேண்டிய காலங்களை நான் வீணாக்கிவிட்டேன் என்று வருந்தியும் இருக்கிறார்.

புனைபெயர்கள்

கவிஞர் தமது இரண்டு வயதுக் குழந்தைப் பருவத்தில் ‘சுட்டிப்பயல்’ என்ற பெயர் பெற்றார். அவர் சினிமாவில் நடிக்க வேண்டித் தம் பெயரைச் ‘சந்திரமோகன்’ என மாற்றிக்கொண்டார். ஆனால் இவரது இயற்பெயர் முத்தையா. இவர் சுவீகார மகனாக மாறியபோது இவருக்குச் சூட்டப்பெற்ற பெயர் நாராயணன். ‘திருமகள்’ பத்திரிகையில் ஆசிரியராகப் பொறுப்பேற்றபோது அவர் தமக்குச் சூட்டிக்கொண்ட புனைபெயர் கண்ணதாசன். பின்னர் பத்திரிகைகளில் எழுதுவதற்காக அவ்வப்போது வேறுசில புனைப்பெயர்களைத் தமக்குச் சூட்டிக்கொள்வதும் உண்டு. காரைமுத்துப் புலவர், வணங்காமுடி, கதா, கமகப்பிரியா, பார்வதிநாதன், ஆரோக்கியசாமி ஆகியவை இவர் சூட்டிக்கொண்ட புனைப்பெயர்கள் ஆகும்.

காரைமுத்துப் புலவர் என்ற பெயரில் தென்றலில் அவர் எழுதிய ‘இலக்கியத்தில் காதல்’ என்னும் தொடர்க்கட்டுரை இளைஞர்களை மட்டுமல்லாது முதியவர்களையும் ஈர்த்தது. இலக்கியத்தை நன்கு பயின்றவர்களுக்கு மட்டுமின்றி - புதிதாகப்

பயில்பவர்களுக்கும் இனித்தது. அந்த நடையிலே விறுவிறுப்பு, நகைச்சுவை, காதற்சுவை அனைத்தும் இருந்தன. வணங்காமுடி என்னும் புனைபெயரில் 'சிரிப்புத்தான் வருகுதையா' என்ற தலைப்பில் அரசியல் செய்திகளையும் தத்துவ விளக்கங்களையும் எழுதிவிட்டு 'கதா' என்று எளிமையாகப் பெயரை எழுதியிருக்கிறார். சில நேரங்களில் திரைப்படங்களில் பாடல்கள் எழுதும்போது, தமிழ் மன்னன், முத்து என்றும் பெயர் தந்திருக்கிறார்.

முதற்கவிதை வெளியீடு

1944ஆம் ஆண்டில் 'திருமகள்' எனும் ஏட்டில்தான் கவிஞர் எழுதிய முதல் கவிதை வெளிவந்தது. முதல் கவிதை காதல் கவிதை. காதலனுக்குக் காதலி மடல் தீட்டுவது போன்று அமைந்த கவிதை அது

காலை குளித்தெழுந்து
கண் சாந்துப் பொட்டுமிட்டு
கருநாகப் பாம்பெனவே
கார்கூந்தல் பின்னலிட்டுக்
காத்திருந்தேன் உம் வரவை
கடைக்கண்ணால் பார்த்திருந்தேன்
(கண்ணதாசன், வனவாசம், ப. 60)

என்பதாகும்.

இதழ்ப் பணியின் தொடக்கம்

கவிஞருக்குப் புதுக்கோட்டை அருகில் உள்ள இராமச்சந்திரபுரம் என்ற இடத்தில் வேலை கிடைத்தது. முதலில் அவருக்குக் கொடுக்கப்பட்ட வேலை (புரூஃப்) மெய்ப்புத் திருத்துவது. ஒரு நாள் பத்திரிகைக்கு ஒரு தலையங்கம் எழுதிக் கொடுக்கும்படி அவரைக் கேட்டனர். அதன்படி 'வருக, வருக', என்றும் 'பாரதத் தாய் சிரிக்கிறாள்' என்றும் தலைப்பிட்டு எழுதிக்கொடுத்தார். இரண்டு தலையங்கங்களையும் படித்து மகிழ்ந்த அதிபர் பழைய ஆசிரியரை நிறுத்திவிட்டு கவிஞரை ஆசிரியராக நியமித்தார். எழுத்தாளர் பத்திரிகை ஆசிரியரானதும் தன்னுடைய ஆசைகளையும் ஆர்வத்தையும் ஏராளமாக எழுதலானார். இப்படியாக அவர் ஒரு எழுத்தாளராகப் பத்திரிகை உலகில் உருக்கொண்டார்.

பணியாற்றிய இதழ்கள்

1954இல் தொடங்கி 1971வரை கவிஞர் ஒன்பது இதழ்களுக்கு ஆசிரியராகப் பணியாற்றினார்.

திருமகள் - 1944

திரை ஒலி, மேதாவி - 1945-46 ஆசிரியர்

தென்றல் - கிழமை இதழ் - 1954

தென்றல்திரை - 1954

சண்டமாருதம் - 1954

முல்லை - மாத இலக்கிய இதழ் - 1957

தென்றல் - நாளிதழ் - 1960

கண்ணதாசன் - மாத இதழ் 1968-69

கடிதம் - 1968-69

1944ஆம் ஆண்டு 'திருமகளி'ல் ஆசிரியராகப் பொறுப்பேற்றார். அப்பொழுது சென்னையில் 'அருணோதயம்' என்ற பெயரில் பதிப்பகம் நடத்தும் அருணாசலமும் கவிஞர் குயிலனும் கூட்டாகத் தென்றல் என்ற திங்கள் இதழைத் துவங்கியிருந்தனர். தென்றலின் முதல் இதழுக்கு, கவிஞர் 'பூலிவளை' என்று ஒரு சொற்சித்திரம் எழுதிக் கொடுத்தார். இதே திங்கள் இதழான தென்றலைத்தான் கவிஞர் அவர்கள் பின்னாளில் சுவீகரித்துக்கொண்டார்.

1945-46இல் 'திரைஒலி' பத்திரிகை ஆசிரியராகவும் இருந்தார். சென்னையில் நடைபெற்ற இரண்டாவது தமிழ் ஆசிரியர் மாநாட்டுக்கான செயற்குழுக் கூட்டம் நடந்துகொண்டு இருந்தது. அப்போது எழுத்தார்வம் மிக்க அவர் எழுத்தாளர்களைப் பார்ப்பதற்காகவே அங்குப் போனார். அங்கே தினமணியில் உதவி ஆசிரியராகப் பணியாற்றிய திரு. வ.உ.சியின் மகன் திரு. சுப்பிரமணியத்தின் தொடர்பபைப் பெற்றார். அவருடைய சிபாரிசின் பேரில் 'மேதாவி' என்ற பத்திரிகையின் ஆசிரியரானார். அங்கே அவருக்கும் பத்திரிகை உரிமையாளருக்கும் ஏற்பட்ட பணச் சிக்கலால் பத்திரிகை ஆசிரியர் வேலையிலிருந்து நின்றுவிட்டார். அதைத் தொடர்ந்து 1947ஆம் ஆண்டு சேலம் 'மாடர்ன் தியேட்டர்' நடத்தி வந்த 'சண்டமாருதம்' என்னும் மாதமிருமுறைப்

பத்திரிகையில் ஆசிரியராகப் பண்யாற்றினார். கவிஞர் சினிமாவுக்குக் கதை எழுதும் வாய்ப்புக் கிடைக்கும் என்ற ஆசையில்தான் அந்தப் பத்திரிகையில் சேர்ந்திருக்கிறார். (கவிஞர் கண்ணதாசன், எனது சுயசரிதம், ப.6)

இவர் பத்திரிகையில் சேரும்போது ஐந்நூறு பிரதிகள் மட்டும் விற்பனையாகிக் கொண்டிருந்தது. அவர் சேர்ந்தவுடன் 'தேவலோகத்தில் சில நாட்கள்' என்ற கட்டுரையை அதில் எழுதினார். அதன்பின் ஐந்நூறு பிரதிகள் மட்டுமே விற்பனையாகிக் கொண்டிருந்த பத்திரிகை அறுநூற்று ஐம்பதாயிற்று.

இப்பத்திரிகையில் இருந்து வெளியேறுவதற்கான காரணத்தை இங்கு ஒரு நிகழ்ச்சி மூலம் காணலாம். ஒரு நாள் ஒரு பத்திரிகையில் நாவலர் நெடுஞ்செழியன் கட்டுரையைப் படித்து, அதைத் திரும்பவும் வெளியிட எண்ணி, 'சண்டமாருதத்தில்' அதை வெளியிடுவதற்காக மாடர்ன் தியேட்டர்க்குச் சொந்தமான 'கஜலெட்சுமி அச்சகத்தில்' அதைக் அச்சுக்கோர்த்தலுக்குக் கொடுத்தார். அச்சுக்கோர்த்தல் நடந்து கொண்டிருக்கும்போது மாடர்ன் தியேட்டர் விநியோக இலாகாவிற்கும் சண்டமாருதத்திற்கும் மேலாளரான திரு. தாமோதரன், அச்சகத்திற்கு வந்து அதைப் பார்த்து, அதைக் அச்சுக்கோர்க்க வேண்டாம் என்று சொல்லிவிட்டார். இந்தச் செய்தி கவிஞரிடம் சொல்லப்பட்டதும் அவருக்குக் கோபம் வந்துவிட்டது. எவ்வளவு தரித்திர நிலையில் இருந்தாலும், அவருடைய பொறுப்புகளில் யாராவது குறுக்கிட்டால் அவருக்குக் கோபம் வருவது வழக்கம். மேலாளர் தாமோதரனோடு சண்டையிட்டுக்கொண்டு வேலையை ராஜினாமாச் செய்து கடிதமெழுதினார். அதனால் சண்டாருதத்தை நிறுத்திவிட்டு கதை இலாகாவில் சேர்த்துக்கொள்ளப்பட்டார். 1949இல் திரைஒலி, மேதாவி ஆகிய இரு பத்திரிகைகளிலும் ஆசிரியராகப் பணிபுரிந்தார்.

தம், எண்ணங்களை வெளிப்படுத்த, தம் மனத்தில் அலைமோதும் சிந்தனைகளை உலகிற்கு உணர்த்த மிகுந்த துடிப்போடு 1954இல் தென்றல் இதழைத் துவக்கினார். தென்றலைப் பன்னிரண்டு பக்க அளவில் இரண்டணாவுக்கு விற்பனை செய்தார். தாம் எழுதிய 'கட்டுரைகள்' என்ற கற்பனையுடன் முதல் இதழ் வெளிவந்தது. அந்த நேரத்தில் தமிழுக்கு அந்தப் பாணி புதிதாக இருந்ததால் பாராட்டப்பெற்றது.

தென்றலில் கவிஞரின் எழுத்துக்கிருந்த வரவேற்பு எப்படியும் நல்லதொரு எதிர்காலம் உண்டு என்ற நம்பிக்கையை உறுதி செய்தது. ஆனாலும் நிர்வாகக் கோளாறினாலும் சுய கவனிப்பின்மையாலும் விற்பனையாளர்களின் மோசடியினாலும் தென்றல் நஷ்டம் அடைந்தது. ஆனாலும், தான் சார்ந்துள்ள திரை உலகம் பற்றிய சுவையான செய்திகளை வெளி உலகத்துக்குத் தெரிவிப்பதாக 1954இல் தென்றல் திரை என்றொரு சினிமாப் பத்திரிகையும் (மாதம் இரு முறை வெளிவரும் வகையில்) ஆரம்பித்தார். இக்காலக் கட்டங்களில் தமக்கே உரிய துணிச்சலினால் என்ன எழுதுகிறோம்; எவரைப் பற்றி எழுதுகிறோம் என்ற வேறுபாடு இல்லாமல் எல்லோரையும் தாக்கி எழுதி, அரசியலிலும், கலை உலகிலும் பகையைத் தேடிக்கொண்டார்.

தென்றல் பத்திரிகையைக் கண்ணதாசன் உயிராக நேசித்தார். தென்றல்தான் அவரைச் சிறந்த எழுத்தாளன் என்பதைக் காட்டத் தொடங்கிற்று.

நூற்றுக்கணக்கான கவிஞர்களையும் எழுத்தாளர்களையும் தென்றல் தயார் செய்தது. கடுமையான இலக்கணத்தைக் கொண்ட வெண்பாவை நூற்றுக்கணக்கான மாணவர்கள் எழுதத் தொடங்கினார்கள். தென்றலில் முக்கியப் பங்கு கொண்ட உதவி ஆசிரியர் தமிழ்ப்பித்தன் ஆவார்.

அதிகபட்சம் இருபதினாயிரம் பிரதிகளே வெளிவந்த தென்றல், இந்தியாவில் எந்தப் பத்திரிகையும் கிளப்பாத சூறாவளியைப் பலமுறை உருவாக்கிற்று. 'கண்ணகி பத்தினியல்லள்' என்ற பேராசிரியர் வெ. சுப்பிரமணிய ஆச்சாரியார் சொன்னதைக் கேள்விப்பட்டு கண்ணதாசன் வெகுண்டு தாக்கி எழுதினார். மேலும், அவர் அண்ணாவைப் பேசவிடவில்லை என்று பன்மொழிப் புலவர் தெ.பொ.மீயைக் கடுமையாக விமர்சித்தும், ம.பொ.சி, திரு. காமராஜர் ஆகியோரையும் தாக்கியும் எழுதினார் (கவிஞர் கண்ணதாசன், வனவாசம், ப. 47).

ஒன்பது வருடங்கள் நஷ்டக் கணக்கிலேயே தென்றல் ஓடிக்கொண்டிருந்தது. 1954ஆம் ஆண்டில் இருந்து 1960ஆம் ஆண்டு வரை அண்ணாவைப் பற்றி 'அண்ணா நாற்பது',

'கடற்கரையில் அண்ணா' என்றெல்லாம் எழுதிக் கொண்டிருந்த தென்றல் 1961ஆம் ஆண்டு முதல் அண்ணாவை விமர்சனம் செய்யத் தொடங்கிற்று. இதில்தான் கவிஞர் கண்ணதாசனின் எழுத்துக்களில் முரண்பாடு ஆரம்பமானது. ஆனாலும் பத்திரிகையின் விற்பனை பாதிக்கப்படவில்லை. கழகத்துக்குப் பதிலாகக் காங்கிரஸ்காரர்கள் வாங்குவதற்குத் தலைப்பட்டார்கள்.

தாம் முரண்படுவது பற்றிக் கவிஞர் சிறிதுகூடக் கவலைப்படவில்லை. காரணம் ஒவ்வொருவர் வாழ்விலும் முரண்பாடு தவிர்க்க முடியாதது என்ற கருத்துக்கொண்டிருந்தார் எனத் தெரிகிறது.

தேர்தலுக்காகத் தென்றலைத் நாளேடாகவும் மாற்றினார். தென்றலைப் பத்திரமாகக் காப்பாற்ற எண்ணினார். ஆனால் தென்றல் பறிபோனது. அதனால் வாழ்க்கை முழுவதையுமே இழந்துவிட்டதைப் போன்ற உணர்வு அவருக்கு ஏற்பட்டது. ஆனாலும், எப்படியாவது அதே பெயரில் ஒன்றை நடத்தியாக வேண்டும் என்று உறுதியோடு இருந்தார்.

மீண்டும் அதனைக் கவிஞர் வாங்கித் தினத்தாளாக நடத்தினார். தென்றலும் தென்றல் திரையும் லாபமின்றி நடந்துகொண்டிருக்கும் போது 'சண்டமாருதம்' என்ற பெயரில் மாதம் இருமுறை இதழ் ஒன்றைத் துவக்கினார்.

இவ்விதழ் 1949-50களில் மாடர்ன் தியேட்டர்ஸ் வளாகத்திலிருந்து வெளிவந்தது. இது சுயமரியாதை இயக்கத்திலிருந்து கிடைத்த முதல் நாளிதழ் ஆகும். இதன் விளம்பர வாசகமே சுவையானது. அதன் தன்மையைச் சுட்டிக்காட்டவது - "குத்தீட்டி ஒரு புறத்தைக் குத்த வேண்டும்; கோடாரி ஒரு புறத்தைப் பிளக்க வேண்டும்" இத்தகைய போர்க்குணத்தோடு வெளிவந்த சண்டமாருதத்தின் ஆசிரியர் கலைஞர் செல்ல பாண்டியன். இவ்விதழ் எட்டு பக்கத்துடன் ஒண்ணரையணா விலையுடன் வெளிவந்தது. ஒரு நாள் தென்றல் திரை போலவே சண்டமாருதமும் நின்றுபோனது.

இச்சூழலில் அப்போது 'தென்றல் திரை' என்ற பத்திரிகையை கே.ஆர். பாலன் என்பவர் நடத்திக் கொண்டிருந்தார். 'தென்றல் திரை' ஏற்கனவே கவிஞர் ஆரம்பித்து

நடத்திக்கொண்டிருந்த பத்திரிகை. இரண்டு வருட காலம் அதை நடத்தி சினிமாத் தொழிலில் ஏராளமான பகைவர்களைத் தேடிக்கொண்ட பிறகு சேலத்தைச் சேர்ந்த பத்மநாபன் என்பவருக்கு விற்றுவிட்டார். அவர் அதை கே.ஆர். பாலனுக்கு விற்றுவிட்டார். மீண்டும் பஞ்சு அருணாசலம் அந்தப் பத்திரிகையை வாங்கினார்.

தேர்தல் தோல்விக்குப் பிறகு 'தென்றல்' நின்றதும், 'தென்றல் திரை' ஆரம்பிப்பதற்கு முன்பு 'இனமுழக்கம்' என்ற பத்திரிகையின் ஆசிரியர் பொறுப்பை ஏற்றுக்கொண்டார். அதற்கு முன்பு அது திமு.க. ஆதரவு பத்திரிகையாக இருந்தது. இதில் பெயருக்குத்தான் ஆசிரியராக இருந்தாரே தவிர அதில் எதைப் பற்றியும் எழுதியதில்லை. எனவே அதன் நிர்வாகி பாண்டியமாதேவி காவியத்தை 'இனமுழக்கம்' இதழில் மறுபிரசுரம் செய்து கவிஞரை எழுதி முடிக்கச் செய்துவிடலாம் என்று கருதினார்; கவிஞரிடம் கேட்டார்; அவரும் சம்மதித்தார். ஆறு வருட இடைவெளிக்குப் பிறகு பாண்டியமாதேவி 'இனமுழக்கம்' இதழில் மறுபிரசுரம் ஆனது. அவ்வேளையில் திரையுலகில் கவிஞரது புகழ் வளர்ந்து கொண்டிருந்தது. எனவே, பத்திரிகையில் அவரது கவனத்தைச் செலுத்த முடியவில்லை. ஆசிரியர் பொறுப்பிலிருந்து விலகிக்கொண்டார்.

1957ஆம் ஆண்டில் மிகச் சிறந்த மாத இலக்கிய இதழாக 'முல்லை' துவக்கப்பட்டது. இதில் 'ஆட்டனத்தி ஆதிமந்தி' தொடராக வெளிவந்தது. இதை கற்பனை கலவாது குறுங்காவியமாக எழுதினேன் என்று குறிப்பிட்டிருக்கிறார். 1961ஆம் ஆண்டு இவ்விதழில் 'ஈழ மகள் கண்ணீர்' என்பதை ஆரம்பித்தார். மூன்று இதழ்கள் வந்ததோடு, வழக்கமாக இடையூறுகளால் 1962இல் நின்றுபோனது. நாளேடாக நடந்த தென்றலும் நின்றுபோனது. சில அரசியல் காரணங்களுக்காக இவை இரண்டும் நின்றதற்குப் பிறகு ஏற்கனவே தன்னால் நடத்தப்பட்டு மூன்றாவது நபரிடம் மாறிய 'தென்றல் திரை'யை மீண்டும் விலைக்கு வாங்கினார்.

1968ஆம் ஆண்டு முதல் 'கண்ணதாசன்' பத்திரிகை ஒரு சரித்திரத்தை உருவாக்கிக் கொண்டிருந்தது என்றுதான் சொல்லவேண்டும். 'தென்றல்', 'முல்லை' போலவே தமிழ்ப் பத்திரிகை உலகுக்கு அதுவும் ஒரு புதுப்பாதை காட்டிற்று. ஐந்து

வருட இடைவெளிக்குப் பிறகு தனது பெயரிலேயே 'கண்ணதாசன்' மாத இதழைத் துவக்கினார். 160 பக்கங்களைக் கொண்டும், ரூபாய் ஒன்று விலையுடனும் வெளிவந்தது. துணிச்சலுடன் வெளிவந்த இந்த இதழ் பதினெட்டு மாதங்களே வாழ்ந்தது.

இவ்விதழ் ஒருபோதும் பெண்களின் படத்தை அட்டையில் போட்டதில்லை; ஆராய்ச்சிக்குரிய துணுக்குகளை வெளியிட்டிருக்கிறது; வரலாற்றுச் சம்பவங்களைச் சுவைபடத் தந்திருக்கிறது; மரபுக்கவிதை, புதுக்கவிதை இரண்டுக்கும் அதிகப் பக்கங்களை ஒதுக்கியிருக்கிறது. கண்ணதாசன் இதழ் அதிகபட்சம் பதினைந்தாயிரம் பிரதிகளை எட்டியது. பல கல்லூரிகளில் கண்ணதாசன் இதழைப் பார்த்துக் கல்லூரிப் பாடங்களில் மாணவர்கள் தெளிவு பெற்றிருந்திருக்கிறார்கள் என்பதை அறியமுடிகிறது (கவிஞர் கண்ணதாசன், வனவாசம், ப. 175).

கண்ணதாசன் இதழ் துவங்கி நிறுத்தப்படுவதற்கு முன் அவர் கடிதம் என்ற பெயரில் நாளிதழ் ஒன்றைத் துவக்கினார். 1969இல் காங்கிரஸ் இரண்டானபோது கவிஞர் இடதுசாரி அணியில் சேர்ந்தார். அதற்காகத் துவக்கப்பட்டதே கடிதம். நாளிதழாக வந்த கடிதம் 1970-71இல் வார இதழாக மாற்றம் கொண்டு பதிமூன்று இதழ்களே வந்து நிறுத்தப்பட்டது.

நடத்திய பத்திரிகைகளில் நஷ்டம் ஏற்பட்டாலும் கவிஞர் பத்திரிகை நடத்தியதற்கான காரணம் என்னவென்றால் தமது கருத்துகளைச் சுதந்திரமாகச் சொல்லவும் எழுதவும் அவருக்கு எப்போதும் ஒரு பத்திரிகை தேவையாக இருந்தது என்பதுதான்.

கண்ணதாசன் - ஒரு பத்திரிகையாளர்

கண்ணதாசன் மென்மையான சுபாவமும் உண்மையான உள்ளமும் எல்லோரையும் நண்பனாகப் பாவிக்கும் பாங்கும் கொண்டவர். அவரது இதயத்திலே தாம் ஒரு முதலாளி என்ற எண்ணம் அவர் தென்றல் இதழில் ஆசிரியராக இருந்தபோதும் கிடையாது. திரைப்பட நிறுவனத்தின் அதிபராக இருந்த காலத்திலும் கிடையாது.

கண்ணதாசனின் அடக்கக் குணம் பற்றி ஒரு நிகழ்ச்சி மூலம் அறிந்துகொள்ளலாம். திருச்சி மாவட்டத்தில் லால்குடி அருகில் உள்ள கல்லக்குடி ரயில் நிலையத்தில் 'டால்மியாபுரம்'

என்ற பெயர்ப்பலகை வைத்திருந்தார்கள். அதை மாற்ற வேண்டும்; கல்லக்குடி என்னும் பெயரே ரயில் நிலையப் பெயர்ப் பலகையில் இடம் பெறவேண்டும் என்று அண்ணாவைப் பொதுச் செயலாளராகக் கொண்டிருந்த தி.மு.கழகம் பலமுறை வலியுறுத்தியது. அன்றைய மைய அரசு அந்தக் கோரிக்கைக்குச் செவிசாய்க்கவில்லை. எனவே பேரறிஞர் அண்ணா அந்தப் பெயர்ப்பலகையை அழிக்கும் போராட்டம் ஒன்றை 1953ஆம் ஆண்டில் உருவாக்கினார். டால்மியாபுரம் பெயர் அழிப்புப் போராட்டத்தின் முதல் அணி கலைஞர் மு. கருணாநிதி அவர்களின் தலைமையில் சென்றது. அப்போது அவ்வணி கைது செய்யப்பட்டது. இரண்டாவது அணி காரைக்குடி இராம. சுப்பையா தலைமையிலும் மூன்றாவது அணி கண்ணதாசன் தலைமையிலும் சென்றன. இரண்டு அணிகளும் காவலர்களால் கைது செய்யப்பட்டன. இந்நிகழ்ச்சியைக் கவிஞர் தென்றல் இதழைத் தொடங்கிய பின்னர் தொடர் காவியமாக எழுதி வந்தார். படிப்போர் வீறுகொள்ளும் வகையிலும், அவர்கள் அந்தக் களத்தைக் கண் முன்னால் காண்பது போன்ற விதத்திலும், துள்ளு நடையில் கவிதையை எழுதித் தமிழ்க் கவிதை ரசிகர்களை மகிழ்வித்தார்.

இதனை, கம்பனின் யுத்த காண்டத்தைப் படிப்பது போல இருக்கிறது என்று சிலரும், கலிங்கத்துப் பரணியில் கூட இவ்வளவு வேகம் இல்லை என்று இப்படிச் சிலரும் நாமே அந்தப் போராட்டத்தில் கலந்துகொண்டிருப்பது போன்ற உணர்வு ஏற்படுகிறது (தமிழ்பித்தன், பாட்டுக்குயில் கண்ணதாசன்) என்று இப்படி சிலரும் கூறியிருக்கிறார்கள்.

இரண்டு அணியினரின் போராட்டத்தையும் எழுதிய இவர் தலைமையேற்ற மூன்றாவது அணியின் பெருமையைத் தாமே எழுதாமல் தமது வாசக நண்பர்கள் மற்றும் வேறு கவிஞர்களின் கருத்துக்கள் மூலம் தமது இதழில் வெளியிட்டார்.

போராட்டத்தில் பங்கு பெற்றுப் புகழ் பெற்ற கவிஞர், தாம் கலந்துகொண்ட வரலாற்றுப் புகழ்மிக்க நிகழ்ச்சியைக் கவிதையாகத் தாமே எழுதுவதற்குத் தயங்கிவிடக் காரணம் அவரது தன்னடக்கம் என்பதை எண்ணும் போது எவரும் அவரைப் பாராட்டாமல் இருக்கமுடியாது. அவரது சொந்தப் பத்திரிகையில் எழுதுவதை

யாரும் தடுக்க முடியாது. ஆனால் அவர் அப்படிச் செய்யவில்லை. இது அவரது அடக்கக் குணத்தைத்தான் காட்டுகிறது.

கண்ணதாசன் சுயவிமர்சன குணம் கொண்டவர். தம்மைத் தாமே விமரிசனம் செய்துகொள்வதிலும் தமது குறையைத் தாமே எடுத்துரைப்பதிலும், கவிஞர் தயங்கியதே கிடையாது. தமக்குள்ள பலவீனத்தைத் தாமே எடுத்துச்சொல்லிவிட்டால் மற்றவர் அதை எடுத்துரைத்துத் தம்மை மடக்க முடியாது என்பதுதான் கவிஞரின் கூற்று.

கலைஞர் கருணாநிதியுடன் பலமுறை மோதல்களை நடத்திய கவிஞர், கலைஞரின் பிறந்த நாள் விழாவை 20.6.1971இல் கொண்டாடியபோது தமது 'கடிதம்' இதழின் மூலமாகச் செய்த 'சுயவிமரிசனம்' குறிப்பிடத்தக்கது.

> புகழுடையோர் வரிசையில் கருணாநிதியும் ஒருவர் என்பதால் மட்டும் நான் அவரது பிறந்த நாள் விழாவை நடத்தவில்லை. எங்களுக்குப் புகழே இல்லாமல் - எங்களை உலகம் அறியாமல் சாதாரண மனிதர்களாகச் சென்னையிலும் சேலத்திலும் வாழ்ந்த காலங்களை நான் நினைவுப்படுத்திக் கொள்கிறேன். அந்நாளில் இருந்து படிப்படியான வளர்ச்சியை எண்ணிப் பார்க்கிறேன். வாழ்க்கையின் கீழ்க் கோடியிலிருந்து மேற்கோடிக்கு வரும் வழியில் பட்டபாடுகள், நிகழ்ந்த அவலங்கள், தொடர்ந்துவந்த துயரங்கள் அனைத்தும் நெஞ்சில் நிற்கின்றன. இதற்கிடையில் நட்பு பகையாகி, ஆராதிக்கப்பட வேண்டிய அன்பு கசப்பாகி இரு துருவங்களாகப் பிரிந்தோம். அந்தப் பிரிவின் பிறகும் அவரை நான் கவனித்து வந்திருக்கிறேன். என்னை அவரும் கவனித்து வந்திருக்கிறார். நான் அரசியலைக் குழப்பிக்கொண்டு கலையிலும் இலக்கியத்திலும் முன்னேறினேன் - அவரோ மூன்று துறைகளிலும் ஒரே சீராக முன்னேறினார். அரசியலில் அவரிடம் நான் தோற்றுவிட்டேன் என்பதை ஒப்புக் கொள்வதில் எனக்கு வெட்கமில்லை. அவரைப் போல அத்தனை காலச் சிறைவாசத்தையும்

> உழைப்பையும் நான் மேற்கொண்டிருக்க முடியுமா என்பது சந்தேகமே. ஆகவே அவரது வெற்றியை மதிக்க வேண்டியது என்னுடைய கடமையாகும்'

என்ற கண்ணதாசனின் மனப்பக்குவத்தை எடுத்துக்காட்டும் பொழுது, அலுவலகச் சிறுவன் திருத்தம் கூறினால் கூட அதை ஏற்றுச் சரி செய்யும் பணிவும் பக்குவமும் அவருக்கிருந்தது (கவிஞர் கண்ணதாசன், அனுபவ மொழிகள்).

பத்திரிகைத் துறையில் கண்ணதாசன் காலக் கட்டத்தில்தான் இணை ஆசிரியர் என்ற சொல்லாக்கமே உருவாக்கப்பட்டது. பொதுவாகப் பத்திரிகைத் துறையில் ஆசிரியர், உதவி ஆசிரியர் மற்றும் துணை ஆசிரியர் என்ற பொறுப்புகள் அமைந்திருக்கும். ஆனால் கண்ணதாசனோ தமது பத்திரிகையான கண்ணதாசனில் இராம. கண்ணப்பனுக்கு இணை ஆசிரியர் என்ற பொறுப்பைக் கொடுத்திருந்தது அவரது பெருந்தன்மைகோர் எடுத்துக்காட்டாகும் (கவிஞர் அமுதோன் பேட்டி).

இதழ்களின் அமைப்புமுறை – உருவமும் உள்ளடக்கமும்

பண்பாடுகளையும் மரபுகளையும் மக்களுக்குக் கற்றுக்கொடுக்கப் புலவர்கள் இலக்கியத்தின் துணையை நாடினர். இத்தகைய இலக்கியக் கட்டுரைகளையும் இலக்கணக் கட்டுரைகளையும் தாங்கி வந்த இதழ்கள் இலக்கிய இதழ்கள் எனப்பட்டன. பிற்காலத்தில் இலக்கிய இதழ்களில் சிறுகதை, நாவல் தொடர், நாடகம், கவிதைகள் போன்றனவும் வெளிவரலாயின. இத்தகைய இலக்கிய முயற்சியை முதன்முதலில் செய்த பெருமை மணிக்கொடி இதழையே சாரும். இதற்குப் பின் வந்த இதழ்கள் அனைத்தும் இம்முயற்சியைக் கையாளத் தொடங்கின. இவ்வகையில் கண்ணதாசனின் இதழ்களையும் அடக்கலாம்.

தென்றல்

தென்றல் இதழ் 12 பக்கங்கள் கொண்டதாக அமைந்திருந்தது. இதில் தொல்காப்பியச் சுவை என்ற பகுதி இலக்கியச் சுவை கொண்டதாகும். அடுத்து 'எண்ணம்' என்ற தலைப்பில் ஒவ்வொரு இதழிலும் தலையங்கம் எழுதப்பட்டு வந்தது.

22.6.1954 அன்று வெளியானது முதல் தென்றல் இதழில் 'கூட்டுக்குரல்' என்று ஒரு கற்பனைக் காவியத்தை எழுதியிருந்தார்.

இவர் எழுதிய முதல் உருவகமும் இதுதான். 'சிறைமீண்ட காதலர்க்கு' என்ற இரண்டாவது உருவகம் தென்றலின் இரண்டாவது இதழிலேயே வெளிவந்தது. (கண்ணதாசன், ஞானமாலிகா, ப. V)

தலையங்கம்–அமைப்பு முறை

இவரது தலையங்கத் தலைப்புகளிலேயே ஒரு கவிநயத்தைக் காணலாம்.

1. சொல்லின் செல்வருக்குத் தடையா! இதைச் செய்தது அங்குள்ள கூலிப்படையா?
2. காங்கிரசுக்குக் கல்யாணமாம்! விழுந்து கொட்டடா காத்தவராயா
3. கோட்டை விட்ட கோமானும் நாட்டை மீட்கும் நகரத் தந்தையும்
4. நமது விளக்கமும் மறுப்பும்
5. இனிப் பஞ்சமில்லை சோறற்ற சபலையில்லை
6. ஆர்த்தெழுந்தனர் கைகோர்த்தெழுந்தனர்
7. இலங்கைத் தமிழரும் நேருவும்
8. பொழிந்த மேகம் பொக்கென நின்றதே
9. பலமாகத் தட்டுங்கள்
10. மனோகரன் குரல்
11. நாடும் மொழியும்
12. தேவகோட்டைத் தீர்மானம்
13. வெள்ளக் கொடுமையும் புகைவண்டிகளின் தாமதமும்
14. உரிமை வேண்டும்
15. செட்டிநாடு சென்று வருவோம்
16. வெட்கம் வெட்கம்
17. காந்தியோ பரம ஏழை சந்யாசி

என்பவை சில தலைப்புகள் ஆகும்.

கண்ணதாசனின் பதில்களுக்காக அமைக்கப்பட்ட பகுதி 'ஐயம் அகற்று' என்பதாகும். இலங்கையிலிருந்து வெளியாகும் தமிழ்

தினசரியான 'தினகரன்' எனும் ஏட்டின் வாசகர்கள் அவ்வேட்டின் மூலம் விடுத்த வினாக்களுக்கு ஆசிரியர் கண்ணதாசன் அவ்வேட்டின் 15.11.1959, 20.11.1959 நாளிட்ட இதழ்களில், 'தினகரன் வாசகர்கள் கேள்விகளுக்குப் பதில்' என்று தலைப்பிட்டு, பதிலளித்திருக்கிறார்.

தென்றலில் கவிஞரே பல கட்டுரைகளை எழுதிவந்துள்ளார். இதழில் இடம் பெறவேண்டிய பெட்டிச்செய்தி உட்பட அவரது கவனிப்பு மிகுந்த அளவில் இருந்துள்ளது. இலக்கியக் கட்டுரை, அரசியல் கட்டுரை, சிறுகதை, கவிதை, தொடர்கதை, செய்திகள் இவற்றையும் கவிஞரே ஆர்வத்துடன் எழுதிவந்தார். அவற்றிற்கு அவர் தரும் தலைப்புக் கூடப் பிறரது பாராட்டுக்களைப் பெற்று வருவது உண்டு. அவரது கட்டுரைக்கு மட்டுமல்லாது பிறரது கட்டுரையென்றாலும் தென்றலில் இடம் பெற்றால் அதற்குக் கவிஞர் சூட்டும் தலைப்பு தனிச்சிறப்புக்குரியதாக விளங்கியிருக்கிறது.

ஆய்வுக் கட்டுரைகள் பல இடம் பெற்றுள்ளன. 'பரிமேலழகர் உரை சரியா? தப்பா', 'கலையும் மனிதனும்', 'கலைஞனைக் கலைஞனாகவே காண விழைகிறது உலகம், கலைஞனை மனிதனாகக் காண விரும்பமில்லை உலகம்', 'பண்டைத் திராவிடம்', 'சீன இந்திய உறவு', 'திறனாய்வு ஒரு கலை' என்பன போன்ற ஆய்வுக் கட்டுரைகள் பலவும் இடம்பெற்றுள்ளன.

மேலும், நூல்நயம், சிறுகதைகள், விநாயக புராணம் என்றும், கற்பனை நாடகம், பல கட்டுரைகள், வெண்பாப் போட்டிகள் போன்ற பகுதிகளும் இடம் பெற்றுள்ளன. ஈரிதழும் ஒட்டாத குறள்கள் என்னும் தலைப்பில் பட்டியலிட்டுக் காட்டிய விதம் புதுமையாகவும் சிறப்பாகவும் உள்ளது. கவிஞர் கண்ணதாசன் தென்றலில் எழுதிய சரித்திரம் தழுவிய கற்பனைச் சிறுகதைகள் 'ஈழங்கொண்ட இராசாதிராசன்', 'ஏகவாசகன் குலோத்துங்கசோழ வாணகோவரையன்', 'நல்லியக்கோடன்', பூப்பல்லக்கு' என்பவை குறிப்பிடத்தக்கவைகளாகும்..

முதல் ஆராய்ச்சிக் கட்டுரை

தென்றலில் கண்ணதாசன் எழுதிய இலக்கிய விமர்சனங்கள் பலரால் வரவேற்கப்பட்டன. ஒருமுறை திரு. ம.பொ.சி. அவர்கள்

ஒரு தினப்பத்திரிகையில் ''பண்டைக்காலத் தமிழர்களின் திருமணங்களில் தாலிகட்டும் பழக்கம் இருந்தது என்றும், அது தொன்றுதொட்டு வரும் மரபு என்றும், தாலி எதற்கு என்று கேட்கும் சீர்திருத்தவாதிகள் தமிழே படிக்காத மூடர்கள்" என்பது போலவும் எழுதியிருந்தார்.

கண்ணதாசன் தாலிக்கு விரோதியல்லவென்றாலும், பழங்காலத் திருமணங்களில் தாலி கட்டும் பழக்கம் இருந்ததில்லையென்று கருதுபவராக இருந்திருக்கிறார். டாக்டர் மா. இராசமாணிக்கனார் ஒரு தினப் பத்திரிகையில் எழுதியிருந்ததைக் கொண்டே அவரும் இந்த முடிவிற்கு வந்திருக்கிறார். அந்தக் கருத்தை மறுத்துத்தான் ம.பொ.சி. அவர்களின் கட்டுரை பிறந்திருந்தது.

சங்க இலக்கியங்களிலிருந்து, கம்பனது இராம காதை வரை அவர் துருவி ஆராய்ந்தார். அது பற்றித் தென்றலிலே ஒரு கட்டுரை எழுதினார். இதுவே கண்ணதாசன் எழுதிய முதல் ஆராய்ச்சிக் கட்டுரையாகும். இக்கட்டுரை மிகுந்த பரபரப்பையும் இலக்கிய ரசிகர்களின் நெஞ்சில் அவருக்கு ஒரு தனி இடத்தையும் ஏற்படுத்தியது (கண்ணதாசன், வனவாசம், ப. 246).

தென்றலின் 'மூவர் கற்பில் மூத்த கற்பு' என்ற ஆராய்ச்சிக் கட்டுரையையும், தமது பெயரை எழுதாது, 'கோழை' என்ற கட்டுரை ஒன்றையும் 1956ஆம் ஆண்டு எழுதி உள்ளார். 'மூவர் கற்பில் மூத்த கற்பு' என்று ஆராய்ந்து முடிவுக்கு வந்த கவிஞர் அதை வலியுறுத்திச் சில மாதங்களுக்குப் பிறகு ஒரு நீண்ட கவிதையும், மாதவி' என்ற தலைப்பில் எழுதியுள்ளார் (கவிஞர் கண்ணதாசன், கட்டுரைகள், ப.7).

தென்றலின் கடைசிப் பக்கத்தில் 'வெண்பாப் போட்டி' ஒன்றைக் கிழமைதோறும் வைத்து, எண்ணற்ற இளைஞர்களை எழுதத்தூண்டிய பெருந்தன்மை கவிஞர்க்குண்டு. பின்பு அவற்றில் சிறந்த ஆயிரம் வெண்பாக்களைத் தொகுத்து, முன்னுரையோடு பதிப்பித்தார் கவிஞர். தென்றல் நின்றபோது பத்திரிகையை ஒரு பிள்ளை போல வளர்த்து, அதனைப் பறிகொடுப்பதாகப் பாவித்து எழுதிய 'கண்மணி தென்றல்' என்ற கவிதை இலக்கிய வரலாற்றுச் சிறப்பு வாய்ந்தது. அதில்,

மூடல் அகத்திருந்த முள்ளெடுத்து நோய் தீர்க்கும்
ஏடாக வந்த இளந்தென்றல் செல்வமது!
கற்றோர் அவைக்குக் களிப்பூட்டுந் தென்றலது!
கல்லாத மாந்தர்க்கும் கண்கொடுத்த தென்றலது!
பெற்றோர்க்குப் பிள்ளை; பிள்ளைக்குத் தாய்; உறவே
அற்றோர்க்கும் சொந்தம்; அரிவையர்க்கு மணவாளன்;
காளையர்க்குக் கன்னி; காதலர்க்குத் தூதுமடல்!
பாளை மணக்கவரும் பாலகர்க்குத் தொட்டிலது!

என்று தமது ஆற்றாமையை வெளிப்படுத்தியுள்ளார்.

தமது ஆழ்ந்த புலமையை வெளிப்படுத்தும் ஒரு கருவியாகத்தான் கவிஞர் தென்றலைத் துவக்கினார்; பிறரது கருத்துகளுக்கும் மதிப்பளித்தார்.

தி.மு.க. வாசகர்களை மட்டுமல்லாது தென்றல் பலதரப்பட்டவர்களையும் வாசகர்களாகக் கொண்டிருந்தது. கல்லூரிப் பேராசிரியர்களிடத்திலும் ஏராளமான மாணவர்களிடத்தும் அதற்குப் பெரும் செல்வாக்கு இருந்தது. 'மணிக்கொடிக் காலம்', 'சரஸ்வதி காலம்' என்று குறிப்பிட்டுச் சொல்வதைப் போல் தென்றல் ஒரு சகாப்தத்தை உண்டாக்கியது என்று சொல்லலாம். இதிலிருந்து புறப்பட்ட கவிஞர்களும் எழுத்தாளர்களும் ஏராளம். குறிப்பிட்டுச் சொல்வதென்றால், இலக்கியக் கட்டுரைகள் எழுதியவர்களின் வரிசையில்,

நாவலர் நெடுஞ்செழியன்
ஞா. தேவநேயப் பாவாணர்
பன்மொழிப்புலவர் அப்பாதுரையார்
டாக்டர் மா. இராசமாணிக்கனார்
டாக்டர் மு. வரதராசனார்
டாக்டர் அ. சிதம்பரனார்
பேராசிரியர் ஔவை துரைசாமி
பேராசிரியர் அ.கி. பரந்தாமனார்

சிறுகதைகள் எழுதியவர்களில்,

கே.ஏ. மதியழகன்

இரா. செழியன்
தில்லை. வில்லாளன்
மா.கி. தசரதன்
க. அறிவழகன்
இராதா மணாளன்
தில்லை. மறைமுதல்வன்
நா. பாண்டுரங்கன்

கட்டுரைகள் எழுதியவர்களில்,

க. அன்பழகன்
சி.பி. சிற்றரசு
எம்.எஸ். வெங்கடாசலம்
உ. பில்லப்பன்
முகவை ஆர்.எஸ். பாண்டியன்
மு. சண்முகம்
தென்னரசு

காவியம் படைத்தவர்களில்,

வாணிதாசன்
முடியரசன்
கண்ணதாசன்

ஆகியோர்களைக் குறிப்பிடலாம்.

கண்ணதாசன் தென்றல் இதழில், தம் வாழ்க்கையில் சந்தித்த வேறுபட்ட குணங்களை அடிப்படையாகக் கொண்டு, 'வாழ்க்கையில் வந்த நண்பர்கள்' என்ற தலைப்பில் தொடர்கட்டுரை எழுதினார். இதில் நண்பர்களின் பெயர்கள் குறிப்பிடப்படவில்லை. அவர்களின் குணநலன்கள் வெளிப்படையாக இருந்தன (தென்றல் இதழ், 5.10.57).

கண்ணதாசன் - இதழ்

'கண்ணதாசன்' என்னும் இதழை ஆரம்பிக்கும்பொழுது 'குமுதம்' வார ஏடு நான்கணாவிற்கு விற்றது. இந்தக் காலக்கட்டத்தில் குமுதத்தைவிட நான்கு பங்கு விலையில், விற்பனையாகக் கூடிய ஒரு இலக்கியப் பத்திரிகை வரமுடியுமா

என்றால், வரமுடியும் என்று காட்டிய பத்திரிகை. இருபத்தி ஐயாயிரம் பிரதிகள் வரை விற்பனையாகி உள்ளது. இப்பத்திரிகை 1968ஆம் ஆண்டு ஜனவரி மாதம் மாத இதழாக, விலை ரூபாய் ஒன்றுடன், 160 பக்கங்கள் கொண்டதாக வெளிவந்தது. பின்னர் அதன் விலை ஒன்றரை ரூபாய் ஆயிற்று. கண்ணதாசன் உருவம், உள்ளடக்கம் இரண்டிலும் முத்திரை பதித்தது.

கண்ணதாசன் தி.மு.க.விலிருந்து விலகி ஈ.வெ.கி. சம்பத்துடன் தமிழ்த் தேசியக் கட்சி ஆரம்பித்தார். பின்னர் அதைக் காங்கிரசுடன் இணைத்து 1967 பொதுத்தேர்தலில் நின்று தோல்வியுற்றார். அப்பொழுது தி.மு.க. ஆட்சி ஏற்பட்டு காங்கிரசுக்குப் புதுவேகம் அளிக்கக் காமராஜர் இளைஞர்களை உற்சாகப்படுத்தத் தொடங்கிய காலம். அதுவே, 'கண்ணதாசன்' வெளிவந்த காலம்.

கண்ணதாசன் தம்முடைய பத்திரிகையில் தம்மை இவ்வாறு அறிமுகப்படுத்திக் கொண்டார். 'கவிதையிலோ, காவியத்திலோ புதிய மரபுகள் அல்லது புதிய உத்திகள் எவற்றையும் நான் கைக்கொள்ளவில்லை. இரண்டு யுகங்களுக்கு நடுவில் நான் நிற்கிறேன். கடந்த யுகத்தைப் பிரதிபலிக்கிறேன். வரப்போகும் யுகத்தைத் துவக்கி வைக்கிறேன். எத்தகைய விமர்சனத்திற்கும் நான் எப்போதும் தயாராக இருக்கிறேன். கூடிப் புகர்வோரைப் போலவே குற்றம் சொல்வோரையும் நான் நேசிக்கிறேன்".

இவ்விதழில், தலையங்கம், ஐயம் அகற்று, கவிதை, செப்புமொழிகள், குறுநாவல், துணுக்கு, பிறமொழிக் கவிதைகள், நூல்நயம் முதலியன இடம்பெற்றுள்ளன. தலையங்கங்கள் வழியாகக் கண்டிக்க வேண்டியவற்றைக் கண்டித்திருக்கிறார். பாராட்ட வேண்டியவைகளையும் மனதாரப் பாராட்டி இருக்கிறார். (எ.கா.) வரிச்சலுகை, துக்கம் கொண்டாடினால் என்ன?, பேரிழப்பு, தி.ஜ.ர. மணிவிழா, காங்கிரசும் தமிழ் உணர்ச்சியும், நூல் நிலையங்கள், ஜெயகாந்தன், பாடப் புத்தகங்களை மாற்றுக, இந்தியா மறக்க முடியாத இந்திரா, தமிழ்த்திரை உலகம் தாயில்லாக் குழந்தை, ஒரு நல்ல காரியம் என்பவை சில தலைப்புகள் ஆகும். கண்ணதாசன் பத்திரிகையில் எழுதியவர்கள் அநேகர் என்றாலும், குறிப்பிட்டுச் சொல்வதென்றால், என்.ஆர். தாசன், வல்லிக்கண்ணன், தி.க. சிவசங்கரன், கு. சின்னப்பபாரதி, டி. செல்வராஜ்,

ச. செந்தில்நாதன், கந்தர்வன், பொன்னீலன், மு. மேத்தா, சிற்பி, புவியரசு, நா. காமராசன், வைரமுத்து, நீல பத்மநாபன், ப. செயப்பிரகாசம் மற்றும் வானம்பாடி கவிஞர்கள், தாமரை எழுத்தாளர்கள் ஜெயகாந்தன், பாலதண்டாயுதம் போன்றவர்களும் ஆவார்கள்.

'ஜெயகாந்தனின், 'சினிமாவுக்குப் போன சித்தாளு' என்ற நாவல் இதில்தான் வெளிவந்தது. மேலும் 1946இல் நடைபெற்ற கப்பற்படை எழுச்சியைப் பற்றிய ஒரு கட்டுரை இதில் வெளியானது. அதனால் பல இளம் எழுத்தாளர்கள் சுதந்திரப் போராட்டத்தின் மறுபக்கத்தைப் பற்றித் தெரிந்துகொள்ள முடிந்தது.

'கண்ணதாசன்' மொழிபெயர்ப்புக்கு மிக முக்கியத்துவம் கொடுத்தது. இந்தியாவின் பிற மொழிகளில் படைக்கப்பட்ட முற்போக்குப் படைப்புகள், பிற நாடுகளில் தோன்றிய அழியாத படைப்புகள் எல்லாம் கண்ணதாசனில் தமிழ் வழியாக இடம் பெற்றன. பாப்லா நெருடாவைப் பலர் அறிந்துகொள்ள இந்தப் பத்திரிகைதான் உதவியது.

கண்ணதாசன் ஒவ்வொரு இதழிலும் தம் கை வண்ணத்தைக் காட்டுவார். அவர் எழுதும் பகுதிகள் கூடுதலான உருவ அழகைப் பெற்றிருக்கும். 'செப்புமொழி பதினெட்டு' என்ற ஒரு பகுதி இரண்டு அல்லது மூன்று வரிகளில், கீழ்க்கண்டவாறு,

> அமைதியை நாடுங்கள், கூட்டத்திலிருந்து விலகி இருங்கள், மனதுக்குச் சுகமான விஷயங்ளைச் சிந்தியுங்கள், பதமான காய்கறிகளைச் சாப்பிடுங்கள் - அங்கே அடிக்கிற காற்றுக்கூட உங்களுக்கு இதமாக இருக்கும் (கண்ணதாசன் இதழ், டிசம்பர் 1977)

என்றும், இதுபோன்று சமுதாயம், கலை, இலக்கியம், அரசியல் பற்றி அவர்கூறும் விமர்சனக் கருத்துக்கள் படிப்போரைப் பரவசம் அடையச் செய்வதாக இருந்து உள்ளது.

மக்கள் எழுத்தாளர் சங்கத்தின் தோற்றத்திற்குக் கண்ணதாசன் உதவியது. 1973ஆம் ஆண்டு ஜூன் மாதம் மக்கள் எழுத்தாளர் சங்கம் நடத்திய மாநில மாநாட்டு நிகழ்ச்சிகள் அப்படியே கண்ணதாசனில் பதிவானது; அத்துடன் அந்த மாநாட்டில் வெளியிடப்பட்ட கொள்கை அறிக்கை அப்படியே

பிரசுரமானது. கவிஞர் கண்ணதாசனின் அரசியல், சமூக, பொருளாதாரப் பார்வைகள் எப்போதும் ஒரே மாதிரியாக இருந்ததில்லை. கண்ணதாசன் தி.மு.க.வை விட்டு விலகிய பிறகு அவருக்கு ஒரு தேசியப் பார்வை கிடைத்தது. அது அவரின் படைப்புகளிலும் எதிரொலித்தது. அவர் தி.மு.க.வை விட்டு விலகித் தமிழ்த் தேசியக் கட்சி கண்டு, பின்னர் காங்கிரசில் இணைந்தபோது ராஜாஜியின் சுதந்திரா கட்சியை எதிர்ப்பதில் முனைப்பாக இருந்தார். சுதந்திரா கட்சி முதலாளிகள் கட்சி என்பதலே, முதலாளித்துவத்திற்கு எதிராக எழுதவும் பேசவும் வேண்டிய சூழ்நிலை உருவானது.

(எ.கா.)

ஆலை யரசுகள் சோலை மிராசுகள்
பாலில் மிதந்தது போதும் – அதைக்
காலில் மிதித்திட வாரும் – இங்கு
வேலை இழந்தவர் வீதி முனைகளில்
கூழுக் கலைவதைப் பாரும் – அவர்
கூட்டத்தை ஓரணி சேரும்

இக்கவிதை கண்ணதாசனில் வெளிவந்ததாகும்.

கண்ணதாசன் மாத இதழ் வெளிவந்த காலத்தில் மார்க்சிஸ்ட் கம்யூனிட் கட்சி உதயமாகிவிட்ட போதிலும், இந்திய கம்யூனிஸ்ட் கட்சியோடுதான் கவிஞருக்கு நெருக்கமான தொடர்பு இருந்தது. குறிப்பாகப் பாலதண்டாயுதம் அவருக்கு மிக நெருக்கமான தோழராக இருந்தார். பாலதண்டாயுதம் கண்ணதாசனில் எழுதினார். அவர் மறைந்த பிறகு 'காம்ரேட் பாலன்' என்று ஒரு தொடர்கட்டுரையை ஜெயகாந்தன் எழுதினார்.

கண்ணதாசன் மாத இதழின் இணை ஆசிரியர் இராம. கண்ணப்பன். இவர் கவிஞரின் மனநிலையைப் புரிந்துகொண்டு செயல்படக்கூடியவர். இவ்விதழ் ஆறு ஆண்டுகள் தன் அழுத்தமான முத்திரையைப் பதித்துப் பின்னர் நின்றுபோனது. இடையில் ஒருமுறை நின்றதும் உண்டு. சில இதழ்கள் சேர்ந்து வந்ததும் உண்டு.

காமராஜரின் மரணம், பாலதண்டாயுதத்தின் மரணம், காங்கிரஸ் பிளவு, அ.தி.மு.க. தோற்றம், இப்படிப் பல சூழல்களைக்

கவிஞர் கண்ணதாசன் சந்திக்க வேண்டியிருந்தது. இவ்வேளையில் ஆன்மீகம் இவரை வென்றது. அர்த்தமுள்ள இந்துமதம் எழுதினார். அவர் அடையாளம் மாறத் தொடங்கியது. கண்ணதாசனின் பத்திரிகையும் முற்றுப்பெற்றது. என்றாலும் அந்தக் குறுகிய காலத்தில் இலக்கியப் பத்திரிகை உலகில் அதன் சாதனை சில வகைகளில் வெல்லுதற்கரியது.

6. கண்ணதாசனின் பத்திரிகைகளின் தனித்தன்மை

தென்றலில் கண்ணதாசன், தமது கட்டுரைக்கு மட்டுமல்லாது, பிறரது கட்டுரையென்றாலும், கவிஞர் சூட்டும் தலைப்பு தனிச்சிறப்புக்குரியதாக விளங்கும். தலைப்புகளைக் கவிதை நடையிலேயே வழங்குவார் கவிஞர். அந்தத் தலைப்புகள் அவருக்குப் பெரும் புகழைத் தேடித் தந்திருக்கின்றன.

தலைவன் திருநகர் வாரீரோ
தாயகம் மீட்டிடச் சேரீரோ
புலமைக் காஞ்சியைப் பாரீரோ
புதுமைக் கருத்துரை கேளீரோ

இது கவிஞர் எழுதிய கவிதையின் ஒரு பகுதி அல்ல - பேரறிஞர் அண்ணா வாழ்ந்து வந்த காஞ்சிபுரத்தில் நடைபெற்ற மாநாட்டில் கலந்துகொள்ள வருமாறு தோழர்களை அழைத்து எழுதப் பெற்றிருந்த கட்டுரையின் தலைப்பு.

இதுபோல் தமிழின் பெருமை குறித்து வெளியிடப் பெற்ற ஒரு கட்டுரைக்குக் கவிஞர் தந்த சுவையான தலைப்பு,

அகிலமெல்லாம் புகழ்ந்தோதும்
அழகு தமிழ் இலக்கியத்தின்
புகழ் பாடாப் புலவர்களின்
வாயென்ன வாயே
புலிக்கெல்லாம் கற்பனைகள்
தந்தவளாம் தாயே

என்றும்,

சலியாத உழைப்பாளி தங்கக் கம்பி
தமிழ் காத்த நடராசன் நல்லதம்பி

என்று என்.வி. நடராசன் அவர்களின் புகைப்படத்தை வெளியிட்டு, கவிஞர் தந்த விளக்கம் இது.

துரோகச் செயல் செய்த சிலரைக் குறித்து எழுதப்பெற்ற கட்டுரைக்குக் கவிஞர் வழங்கிய தலைப்பு,

"வீடணா" உன் குணத்தை
மிச்சம் வைத்துப் போனாயோ?

இது ஆவடியிலே 1955ஆம் ஆண்டு ஜனவரியில் நடைபெற்ற அகில இந்திய காங்கிரஸ் மாநாட்டில் தமிழகத் தியாகிகளின் பெயர் மறக்கப்பட்டது - மறைக்கப்பட்டது குறித்து எழுதப்பெற்ற கட்டுரைக்குக் கவிஞர் கொடுத்த தலைப்பு,

திருப்பூர் குமரனெங்கே?
சிதம்பரனார் நினைவெங்கே
தில்லையாடி வள்ளியம்மை
திருப்பெயரும் இல்லையய்யா

இதழில் திரைப்பட விமர்சனப் பகுதிக்குக் கவிஞர் கொடுத்திருந்த தலைப்பு,

பார்த்தோம்
பட்டது
சொல்கிறோம்

என்பதாகும்.

கவிஞர் தயாரிக்கும் விளம்பரங்களில் கூட, கவிதைதான் அமைந்திருக்கும். 'தென்றல்' உருவாக்கிய பொங்கல் மலருக்குக் கவிஞர் சூட்டிய விளம்பரக் கவிதை,

பொம்மைகள் இல்லை
பொருளே நிறைந்திருக்கும்
பகட்டுக் குறைத்திருக்கும்
பயனே நிறைந்திருக்கும்

என்பதாகும்.

தவிர்க்கமுடியாத காரணத்தால் தென்றல் இரண்டு வாரங்களாக நிறுத்தப்பெற்றது. பின்னர் புதிய பொலிவுடன் வெளிவரத் தொடங்கியது. அப்போது தென்றல் இதழில் கவிஞர் செய்த அறிவிப்பும் கவிதையே.

சற்று
நின்று வரும் தென்றல் – இனி
என்றும் வரும்

இப்படி எங்கும் கவிதையை - எதிலும் கவிதையை இடம்பெறச் செய்வது கவிஞரின் இலட்சியமாகவே இருந்து வந்திருக்கிறது.

தென்றல் வார இதழைத் தொடங்கிய காலத்தில் இதழ்தோறும் கவிதை எழுதிவந்தார் கவிஞர். இதோடு உரைநடை, நாடகம், சிறுகதை, கட்டுரை ஆகியவற்றையும் எழுதிவந்தார். எனினும் கவிதையில் தனிக்கவனம் செலுத்திவந்தார். ஆனால் நாளடைவில் திரைப்பட வசனப் பணியும் பாடல் பணியும் அவரது நேரத்தை மிகவும் கவர்ந்துகொண்டதால், தென்றல் இதழில் வாரம் தவறாமல் இடம்பெற்று வந்த அவரது கவிதை இரண்டு வாரத்துக்கு ஒரு முறை தோன்றும் சூழ்நிலை ஏற்பட்டது. இதனால் ரசிகர்கள் வருந்தத் தொடங்கினார்கள். ரசிகர்களின் குறைதீர்க்கும் வகையில், தலையங்கத்தைக் கவிதையாகவே எழுத ஆரம்பித்துவிட்டார்.

தென்றல் இதழுக்குப் பலரும் படைப்புகளை அனுப்பி வந்ததால் கட்டுரைகளும் கவிதைகளும் குவியலாகக் குவிந்தனவாம். பலர் பக்கம் பக்கமாக எழுதிவந்தார்களாம். எனவே, எழுத்தாளர்கள், கவிஞர்கள் ஆர்வத்தைத் தடைசெய்யக்கூடாது என்பதால், கவிஞர்களைத் திருப்தி செய்ய 'வெண்பாப் போட்டி' என்னும் பகுதியை 1955இல் தொடங்கினார்.

வெண்பாப் போட்டி என்பது வெண்பாவின் ஈற்றடியைக் கொடுத்து, முதல் மூன்றடிகளையும் தக்க விதத்தில் முடிப்பதாகும். அவ்வாறு எழுதி அனுப்பப்படும் வெண்பாவில் மிகச் சிறந்தது என்று தேர்தெடுக்கப்பெறும் வெண்பாவை எழுதிய கவிஞருக்குத் தென்றல் இதழின் ஓராண்டுச் சந்தா இலவசம். ஆண்டு சந்தா ரூ.6. (தமிழ்ப்பித்தன், இதழியல் உலகில் தமிழரசு).

வெண்பாப் போட்டிக்கு கவிஞர் இலக்கியக் கருத்தையும், அரசியல் கருத்தையும் ஈற்றடியாக்கித் தந்திருக்கிறார்.

(எ.கா.)

1. நெஞ்சிலே யிட்ட நெருப்பு
2. தொட்டாலும் தோன்றும் சுகம்

3. 'கலை' எனத் தொடங்கி
'தலை' என முடித்தல்
4. கூடிக் கெடுப்பார் குணம்
5. சூழ்ச்சிகளைத் தூளாக்கும் தோள்
6. கொந்தளிக்கும் மக்கள் குணம்
7. சாதியினால் தோன்றும் தடை
8. மேயப் புகுந்த விதம்
9. நேரத்தால் நோகுதே நெஞ்சம்

வெண்பாப் போட்டிப் பகுதி தமிழகத்தில் ஒரு புதிய எழுச்சியை உருவாக்கியது. படிப்பாளர்களின் தொகையையும் அது அதிகரித்தது. பல கவிஞர்களின் வெண்பாக்கள், ஈற்றடி அறிவிக்கப் பெற்ற மறுநாளே வந்துவிடும். வெண்பாப் போட்டி கவிஞர்களையும் தென்றல் இதழையும் வளர்த்தது. பள்ளிகளிலும் கல்லூரிகளிலும் தென்றலின் பெருமையையும் வளர்த்தது. 'வெண்பாப் போட்டி' பகுதிக்காக மட்டுமே தென்றல் இதழை வாங்கியவர்களும் உண்டு.

'பூக்காமற் போகுமோ பூ' என்ற ஈற்றடியுடன் தொடங்கப்பெற்ற வெண்பாப் போட்டி ஏறக்குறைய 6 ஆண்டுகள் தொடர்ந்து நடைபெற்றது குறிப்பிடத்தக்கதாகும்.

ஒருமுறை பழைய 'சக்தி' பத்திரிகையின் கட்டுரையில், 'ஷேக்ஸ்பியர்' கூடத் தனக்கு முன்னால் இருந்த நாடக ஆசிரியர் ஒருவரின் நாடகங்களைத்தான் இயற்றினார் என்று இருந்ததைப் படித்திருந்தார். அதையே 22-06-54 அன்று வெளியான தென்றல் முதல் இதழுக்கு முதல் பக்கச் செய்தியாகக் கொண்டார். அதில் 'திருடித்தான் புகழ்பெற்றான் ஷேக்ஸ்பியர்' என்று தலைப்பிட்டு எழுதினார். இவ்வாறு முதல் இதழிலேயே குறும்பு செய்யத் தொடங்கிவிட்டார். இவ்வகையில் இவரது பத்திரிகைகளின் கருப்பொருள், உத்தி, புலமைத்திறம், பத்திரிகையின் பெருமை வெளிப்படுகிறது.

கண்ணதாசன் எழுதிய பிற இதழ்கள்

1964 மே 31ஆம் நாள் மறைந்த பிரதமர் நேருவின் உடல் டில்லியில் எரியூட்டப்பட்ட நாள். அன்று எழுதிய,

சாவே உனக்கொரு நாள்
சாவு வந்து சேராதோ
சஞ்சலமே நீயுமொரு
சஞ்சலத்தைக் காணாயோ?
தீயே உனக்கொரு நாள்
தீமூட்டிப் பாரோமோ?
தெய்வமே உன்னையும் நாம்
தேம்பி அழ வையோமோ?

என்ற பாடலைக் கவிஞர் அப்போது நடத்தி வந்த 'தென்றல் திரை' நாளேட்டில் வெளியிட்டார். அதை ஆனந்த விகடன் மறுவெளியீடு செய்தது குறிப்பிடத்தக்கது.

17.07.80 தேதியிட்ட குமுதம் இதழில் 'இந்த வாரம் சந்தித்தேன்' என்ற பகுதியில் தம்மைக் குறித்துச் சுயவிமர்சன முறையில் ஒரு கட்டுரையினைச் சுவையாக எழுதியுள்ளார். அதில் சில பகுதிகளாக, "அவசரத்தில் காரியம் செய்து, சாவகாசத்தில் சங்கடப்படுவது அவனது இயற்கையான சுபாவம். மேலும், தவறுகளின் மீது நின்றுகொண்டே அவற்றை மறந்துவிட அவன் முயன்றான். சில நேரங்களில் நியாயம் கற்பிக்கவும் முயன்றான். அதனால் அவன் நெஞ்சு அழும் போதே வாய் சிரித்துக் கொண்டிருந்தது. அவனுக்கு உலகத்தில் எதுவுமே பெரியதல்ல. சம்பாதிக்கத் தெரிந்தவன், பத்திரப்படுத்தத் தெரியாதவன். சேமிப்பு இல்லாத காரணத்தால் பல நேரங்களில் கண்ணீரையே எண்ணிப் பெட்டியில் வைக்க வேண்டியதாயிற்று" என்று கூறிவிட்டு, கடைசி வரியில், "அவனிடமிருந்து என்னால் விடைபெற முடியவில்லை. காரணம் இது என் 'சுயதரிசனம்' " என்று குறிப்பிட்டுக் கட்டுரையை முடித்திருக்கிறார்.

இந்த சுய விமரிசனம்தான் மற்றக் கவிஞர்களுக்கும் கண்ணதாசனுக்கும் இடையே உள்ள வேறுபாடு - வெளிப்படையான உணர்வு என்றும் கூறலாம். மேலும், கண்ணதாசன் 'அணிகலம்', 'தாய்நாடு', 'பொன்னி', 'குமுதம்' இதழ்களிலும் எழுதி வந்துள்ளார். 'அர்த்தமுள்ள இந்துமதம்' என்ற தலைப்பில் 'சாவி' பத்திரிகையிலும் எழுதி உள்ளார். 'துக்ளக்' பத்திரிகையில், 'நான் ஒரு இந்து மதம்' என்றும், 'நமது மூதாதையர் முட்டாள்களல்ல' என்ற தலைப்பிலும் கட்டுரைகள் எழுதி

உள்ளார். அரசியல் கட்டுரைகளை நவசக்தி நாளிதழிலும் எழுதி உள்ளார்.

1972ஆம் ஆண்டு கவிஞர் இரண்டாவது முறையாக நண்பர்களின் அழைப்புக்கு இணங்க மலேஷியா, சிங்கப்பூர், தாய்லாந்து முதலிய நாடுகளுக்குச் சென்று சுற்றுப்பயணம் செய்துவிட்டுத் திரும்பிவந்தார். அது குறித்த தமது பசுமையான நினைவுகளை 'அலை ஓசை' நாளிதழில் பதிவு செய்தார்.

அவ்வப்போது கண்ணதாசன் மனோதர்மத்துக்குத் தோன்றிய கருத்துக்களைக் கல்கியில் கடைசிப் பக்கமாக எழுதி வந்துள்ளார். சான்றாக,

1. ஒரு குழந்தை அழுகிறது
2. முதுமை
3. இளமைக்கு
4. நம்பிக்கை
5. பார்த்துப் போ
6. அவனிடம் பேசுகிறேன்
7. சகிப்புத்தன்மை
8. ஞானஸ்நானம்
9. காதல் என்பது
10. அவளுக்கு மட்டும்
11. ஊழ்வினை நம்பிக்கை
12. உடம்பார் அழியின்
13. குதிரை கிடைத்தால் லகானை மறந்து விடாதீர்கள்
14. பகுத்தறிவு
15. மூடநம்பிக்கை
16. ஆத்மாவில் பலமிருந்தால்
17. மகாநிர்வாணம்
18. அதன் பெயர் லட்சியம்
19. பராசக்திக்கு விண்ணப்பம்

20. கல்லானால் கடவுளாகலாம்
21. அதோ எங்கள் மூதாதையர்
22. பயனற்ற படிப்பு
23. இந்திய மருத்துவம்
24. புறம்போக்கு
25. அரசாங்கத் துறை
26. இந்த நாகரிகம்
27. பொருளாதாரம்
28. எது உங்கள் ராசி
29. சட்டமும் தர்மமும்
30. அது ஒரு வரம்

சோ அவர்கள் தமது துக்ளக் பத்திரிகையில் ஏதாவது எழுத வேண்டும் என்று கேட்டார். 'எண்ணங்கள் ஆயிரம்' என்ற தலைப்பையும் அவரே சொன்னார். சில காலம் அந்தத் தலைப்பில் எழுதி வந்தார். எழுத்தாளர் மாநாட்டு விவரங்களை 'தாய்நாடு' இதழில் எழுதினார்.

கல்கி இதழில் 'கடைசிப் பக்கம்' எழுதி முடித்தபின்பு ராணி இதழில் 'சேரமான் காதலி' என்ற தொடர்கதையும் எழுதி முடித்தார். தொடர்ந்து 'முதற்பக்கம்' எழுதவேண்டும் என்று கேட்டதனால், கல்கி நிறுத்தப்படும் வரையில் எழுதினார். சில சான்றுகள்

தலைப்புகள்

1. நம்பிக்கை
2. சரித்திரம்
3. நான் ஒரு இந்து
4. நமது மூதாதையர்கள்
5. வானத்து விளக்கு
6. மொழி வெறுப்பு - விழி இழப்பு
7. மனித இயந்திரத்தின் தலைமை 'மெக்கானிக்'
8. பதவி - பூர்வ புண்ணியம்

9. முடியும் பொழுதெல்லாம் விடியும்
10. அரசியல்வாதிகள்
11. நாங்கள் அரசியல்வாதிகள்
12. வேலைநிறுத்தங்கள்
13. மறதி - மடி - துயில்
14. சட்டமும் தேச பக்தியும்
15. தீபமாலிகா
16. தலைமாட்டில் குத்துவிளக்குகள்
17. எங்கள் தலைவனே
18. தராசுக்கு இரண்டு தட்டு
19. தத்துவம் பிறந்த இடம்

இவ்வாறு பிற பத்திரிகைகளிலும் தம்மை ஈடுபடுத்திக்கொண்டார்.

நடைச்சிறப்பு

கவிதையில் சிறந்து விளங்கிய கண்ணதாசன் அவர்கள், உரைநடை எழுதுவதிலும் சிறப்பான தேர்ச்சி பெற்றிருந்தார். அவர் எழுதிவந்த காலத்திலிருந்த திராவிட இதழ்களின் நடையிலிருந்து மாறுபட்டு, தமக்கென ஒரு நடையை அமைத்துக்கொண்டார். அதைப் பற்றி அவரே தென்றல் தலையங்கத்தில் (31.07.54) கூறுவது:

> நாம் பயந்ததுண்டு; தமிழை நாம் கையாளுகிற முறை திராவிட மக்களால் வரவேற்கப்படுமா என்று ஐயப்பட்டதுண்டு. இயக்கத்திலுள்ள சகோதரர்களின் 'ஓசை நடை'யிலிருந்து மாறுபடுகிறோமே, இது மக்களுக்குப் பிடிக்குமா என்று நினைத்ததுண்டு. எல்லாம் பிடிக்கிறது; ரொம்பப் பிடிக்கிறது; இந்த எளிமைக்குப் பெரும் வரவேற்பிருக்கிறது என்று தோழர்களின் கடிதங்கள் கூறுகின்றன. உண்மையில், நடையை மாற்றிப் பார்ப்போமே என்று நாம் ஆசைப்பட்டோமே தவிர, ஓசை நடையில் நமக்கு வெறுப்பில்லை. அந்த நடையில் எழுத முயன்றாலும், அது 'காப்பி'யாகத்தான் இருக்கும். அண்ணாவின் 'தமிழ் நடை' அவருக்கே உரியது. அதை மற்றவர்கள்

'ஓசை நடை'யாக மாற்றிக் கொண்டார்கள். ஆகவே நாம் மாறுபட்டது, புதுமுறையில் ஏற்பட்ட ஆசையால்தான். ஓசை நடையில் எழுதக் கூடாதா என்று எழுதிக் கேட்ட நண்பர்களுக்காகவே இதைக் கூறுகிறேன்.

கருத்துக்காகவே மொழி; சொல் முயற்சியில் தெளிவிருக்க வேண்டும். இது அண்ணாவின் முறை. இதைப் பாடமாக வைத்துத்தான் நாமும் நமது நடையைக் கணித்துக் கொண்டோம். கருத்துக்களைச் சொல்வதற்கு - முழுமை பெற வைப்பதற்கு இது வசதியாக இருக்கிறது.

தம்முடைய புதியவகை நடை கெட்டுப் போகாமல் இருக்க அப்பொழுது வந்து கொண்டிருந்த எந்த ஒரு திராவிட இதழையும் படிக்காமல் இருந்தார் என்பதை 'வனவாசத்தில்' பின்வருமாறு கூறுகிறார்:

"பொதுவாக, அவன் அண்ணாத்துரையின் திராவிட நாடு பத்திரிக்கை உட்பட எந்தத் தி.மு.க. பத்திரிக்கையையும் படிப்பதில்லை. காரணம் அவர்களின் சத்தற்ற தமிழ்நடை தன்னைப் பற்றிக்கொள்ளக் கூடாதே என்ற பயம்".

தி.மு.க.விலிருந்து விலகும் கட்டத்தில் 'பாவமன்னிப்பு' என்ற தலைப்பில் மேற்கண்ட பாணியில் தோற்றமளிக்கும் ஒரு கட்டுரை எழுதினார். கட்சியில் நடிகர்களுக்குள்ள செல்வாக்கைக் கடுமையாகக் கண்டிக்க விரும்பி ஒரு கற்பனை நாட்டையும் கற்பனைக் காட்சியையும் படைத்து அதில் நடிகர்களைக் கேலி செய்திருந்தார். சிலர் அதற்குப் பதில் சொல்லும் வகையில் அதே பாணியில் கட்டுரைகள் எழுதி வெளியிட்டார்கள். அவற்றை அண்ணாதுரை படித்துவிட்டு "இந்த மாதிரி முயற்சியும் பாணியும் உங்களில் யாருக்கும் வராது. ஆகவே வேறு முறையில் எழுதுங்கள்" என்று சொன்னாராம்.

நடை அழகு இருந்தால் மட்டும் போதுமா? சொல்ல வந்த விஷயத்தைத் தெளிவாகச் சொல்ல வேண்டுமல்லவா?

கண்ணதாசன் இந்தக் கருத்தை வலியுறுத்தித் தம்முடைய தென்றல் தலையங்கத்தில் (31.07.54) பின்வருமாறு கூறுகிறார்:

இளம் எழுத்தாளர்களிடமிருந்தும் கதை, கட்டுரைகள் வந்துள்ளன. முழுதும் படித்துப் பார்த்தோம். உண்மையைச் சொல்லுகிறோம். மனதில் திருப்தி இல்லை. நடை அழகுக்காக, கருத்தை அந்தரத்தில் விட்டு இருக்கிறார்கள். ஒரு வரி விஷயத்தையே திரும்பத் திரும்ப பதினெட்டு வரியில் கூறுகிறார்கள். ஐயோ! வெறும் சொற்குவியல்! இது வேண்டாம்'.

பிறருக்குக் கூறியது போலவே, இவருடைய நடையில், பொருள் பொதிந்த சொற்களையே காண்கிறோம். மேலும் இயல்பான இவருடைய கவிநயத்தையும் உணர்ச்சிபூர்வமான எழுத்தையும் இவருடைய நடையில் காணலாம்.

முடிவுரை

ஒரு கவிஞன், எழுத்தாளன், அரசியல்வாதி என்பவைகளுக்கெல்லாம் அப்பால் கண்ணதாசன் என்ற ஒரு மனிதன் நிறைந்து நிற்கிறான். இந்த மனிதனோ குழந்தை உள்ளம் படைத்தவன். தன் உள்ளத்தில் தோன்றுவதை ஒளிவு மறைவு இல்லாமல் விளைவுகளைப் பற்றிச் சிறிதும் சிந்தியாமல் வெளியிட்டுவிடுகிற குணம் படைத்த மனிதன். இம்மனிதன் எளிதில் உணர்ச்சிவசப்படக் கூடியவன். தன் நண்பர்களுடனும் பகைத்துக் கொள்ளும் பண்பினன்.

கண்ணதாசன் இலக்கியத் துறையைத் தமது ஆத்ம திருப்திக்காகவும் திரைப்படத் துறையை வருமானத்துக்காகவும் பயன்படுத்திக்கொள்ள விரும்பிச் செயல்பட்டவர். பொதுவாக வாழ்வில் எல்லாத் துறைகளிலும், முழுமையாக ஈடுபடுகிறவர்களுடைய வாழ்க்கை, முரண்பாடுகள் நிறைந்ததாகத் தோன்றுவது சாதாரணம். அத்தகைய முரண்பாடுகள் கண்ணதாசனின் சொல்லிலும், செயலிலும் நிறைந்து காணப்படுகின்றன. இதில் குறிப்பிடத்தக்கது என்னவென்றால், தம்முடைய வாழ்க்கையில் காணப்படும் முரண்பாடுகளை முதலிலே உணர்ந்துகொள்கிறார் கண்ணதாசன். இந்த முரண்பாடுகள் அவருடைய எழுத்திலும் பிரதிபலிப்பது இயற்கையே. இதை வெளிப்படையாக அவர் கூறத் தயங்குவதில்லை. இதற்குச் சான்றாக அவருடைய அடியிற்கண்ட கூற்றையே எடுத்துக்கொள்ளலாம். ''ஒவ்வொன்றும் அன்றாட உணர்ச்சிகளில் விளைந்த

கவிதைகளாதலின் பலவகையான உணர்ச்சிகள் கொழுந்து விடுகின்றன" என்கிறார் (கவிஞர் கண்ணதாசன் பொன்விழாமலர், எம்.எம். இஸ்மாயில், கவிஞனின் இருமுகம், ப. 13).

இறுதியாக 1981ஆம் ஆண்டு ஜூலை மாதம், கவிஞர் கண்ணதாசனின் உடல் நலம் குன்றியது. அதனால் அவர் 24-7-1981 அன்று அமெரிக்காவில் உள்ள சிகாகோ நகர் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டார். தொடர்ந்து 3 மாதங்கள் மருத்துவ சிகிச்சை அளித்தும் பலனளிக்காமல் போயிற்று. கண்ணதாசன் 17-10-1981 அன்று அமரநிலை அடைந்தார். 20-10-1981 அன்று அவரது உடல் சென்னைக்குக் கொண்டு வரப்பெற்று மக்களின் பார்வைக்கு வைக்கப்பெற்றது. 22.10.1981 அன்று அரசு மரியாதையுடன் எரியூட்டப்பெற்றது. என்றாலும்

மானிட இனத்தை ஆட்டி வைப்பேன் - அவர்
மாண்டுவிட்டால் அதைப் பாடி வைப்பேன்
நான் நிரந்தரமானவன் அழிவதில்லை
எந்த-நிலையிலும் எனக்கு மரணமில்லை

என்ற நிலையிலே இன்றும் நம்மோடு நிலைத்து நிறைந்துள்ளார்.

துணைநூற்பட்டியல்

முதன்மை ஆதாரம்

தென்றல் இதழ்கள்

கண்ணதாசன் இதழ்கள்

துணை ஆதாரங்கள்

1. அருணன், கண்ணதாசன் கவிதைகளில் வண்ணக் கோலங்கள், குமரிப் பதிப்பகம், 1995
2. இராம. கண்ணப்பன், கவிஞர் கண்ணதாசனின் அனுபவமொழிகள், பார்வதி கண்ணதாசன் பதிப்பகம், சென்னை, 1999
3. இராம. கண்ணப்பன், கவிஞர் கண்ணதாசனின் முற்றுப்பெறாத காவியங்கள், கண்ணதாசன் பதிப்பகம், சென்னை, 1991

4. இராம. கண்ணப்பன், கண்ணதாசனின் அர்த்தமுள்ள அனுபவங்கள், கங்கை புத்தக நிலையம், சென்னை, 1994

5. இராம. கண்ணப்பன் (தொ-ர்.), கவிஞர் கண்ணதாசன் பொன்விழா மலர், கண்ணதாசன் பதிப்பகம், சென்னை, 1994

6. கண்ணதாசன், கண்ணதாசன் கவிதைகள் -மூன்றாம் தொகுதி, வானதி பதிப்பகம், ஜனவரி 1982, சென்னை

7. கவிஞர் கண்ணதாசன், உயிர் ஓவியங்கள், ராமன் பதிப்பகம், சென்னை, 1978

8. கவிஞர் கண்ணதாசன், வனவாசம், வானதி பதிப்பகம், சென்னை, 2000

9. இராம . கண்ணப்பன் (தொ-ர்.), கவிஞர் கண்ணதாசன் (கட்டுரைகள்), கண்ணதாசன் பதிப்பகம், சென்னை, 2000

10. இராம. கண்ணப்பன் (தொ-ர்), கவிஞர் கண்ணதாசன் (இலக்கிய புத்தகங்கள்), கண்ணதாசன் பதிப்பகம், சென்னை, 2000

11. இராம. கண்ணப்பன் (தொ-ர்), கவிஞர் கண்ணதாசன், (தலையங்கங்கள்), கண்ணதாசன் பதிப்பகம், சென்னை, 2000

12. இராம. கண்ணப்பன் (தொ-ர்), கவிஞர் கண்ணதாசன், போய்வருகிறேன், கண்ணதாசன் பதிப்பகம், சென்னை, 2000

13. கவிஞர் கண்ணதாசன், எனது வசந்த காலங்கள், கண்ணதாசன் பதிப்பகம், சென்னை, 2000

14. கண்ணதாசன், எனது சுயசரிதம், கண்ணதாசன் பதிப்பகம், சென்னை, 1999

15. கவிஞர் கண்ணதாசன், கடைசிப் பக்கம், கண்ணதாசன் பதிப்பகம், சென்னை, 2000

16. கவிஞர் கண்ணதாசன், ஞானமாலிகா, வானதி பதிப்பகம், சென்னை, 1999

17. கவிஞர் கண்ணதாசன், வனவாசம், வானதி பதிப்பகம், சென்னை, 2000

18. கவிஞர் கண்ணதாசன், ஆட்டனத்தி ஆதிமந்தி, வானதி பதிப்பகம், சென்னை, 2000

19. கவிஞர் கண்ணதாசன், செப்பு மொழிகள், வானதி பதிப்பகம், சென்னை, 1999

20. கவிஞர் கண்ணதாசன், அனார்கலி, வானதி பதிப்பகம், சென்னை, 1999

21. கவிஞர் கண்ணதாசன், நான் பார்த்த அரசியல், கண்ணதாசன் பதிப்பகம், சென்னை, 1999

22. கவிஞர் கண்ணதாசன், எண்ணங்கள் ஆயிரம், கண்ணதாசன் பதிப்பகம், சென்னை, 2000

23. சரசுவதி ராமநாதன், கம்பனும் கண்ணதாசனும், வானதி பதிப்பகம், சென்னை, 1998

24. சங்கரன், ஆர்.பி., கலைஞருக்கு ஒரு வாழ்த்துக் கடிதம், ஏஞ்சல் அச்சகம், சென்னை, 1999

25. சாமி, அ.மா., இதழாளர் ஆதித்தனார், உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம், சென்னை, 1990

26. சாமி, அ.மா. 19ஆம் நூற்றாண்டுத் தமிழ் இதழ்கள், நவமணி பதிப்பகம், சென்னை, 1995

27. தமிழ்ப்பித்தன், பாட்டுக்குயில் கண்ணதாசன், வானதி பதிப்பகம், சென்னை.

28. தமிழ்ப்பித்தன், இதழியல் உலகில் தமிழரசு, மணிவாசகர் பதிப்பகம், சென்னை, 1991

29. திருநாவுக்கரசு, க., திராவிட இயக்க இதழ்கள் - ஒரு பார்வை, நக்கீரன் பதிப்பகம், சென்னை, 1998

நேர்காணல்

1. திரு. இராம. கண்ணப்பன்   2. கவிஞர் அமுதோன்

இலங்கை இலக்கியச் சிற்றிதழ்கள் - வரலாறும் சாதனையும்

செ. யோகராசா

1. முன்னுரை

இலங்கை இலக்கியச் சிற்றிதழ்கள் பற்றி நோக்குவதற்குமுன் அதற்கு அனுசரணையாக மூன்று விடயங்களை வற்புறுத்த வேண்டும். அவையாவன :

i. 'இதழியல்' என்ற தொடர், பத்திரிகை (New paper), சிற்றிதழ் (Little Journals இதனை; சஞ்சிகை Magazine என்றும் அழைப்பர்) ஆகிய இருவகை ஊடகங்களையும் உள்ளடக்கியுள்ளது.

ii. சிற்றிதழ் என்பது சிறப்பு நிலைப்பட்ட (Specialized) இதழ் என்ற நோக்கில் பல்துறை சார்ந்த சிற்றிதழ்களை உள்ளடக்கியுள்ளது.

iii. இத்தகைய பல்துறை சார்ந்த சிற்றிதழ்களுள் இலக்கியச் சிற்றிதழ்களே இங்குக் கவனத்திற்குட்படுகின்றது.

மேலும், இலங்கை - தமிழக இலக்கியச் சிற்றிதழ்களை ஒப்பீட்டு நிலைநின்று கவனிக்கும்போது, இவற்றிடையே முக்கிய வேறுபாடொன்று காணப்படுவது பற்றியும் குறிப்பிடவேண்டியுள்ளது. அதாவது தமிழ்நாட்டில் உள்ளதுபோன்று இலங்கையில் பத்திரிகை, இலக்கியச் சிற்றிதழ் என்பனவற்றிற்கிடையில் வேறுபாடு காணப்படுவதில்லை என்பதே அதுவாகும்

2. அணுகுமுறை

இவ்வாய்வில் பின்வரும் விடயங்கள் முனைப்புப் பெற்றுள்ளன.

i. இலங்கைச் சிற்றிதழ்களின் குறுகிய கால வரலாற்றைக் குறிப்பிட்ட கால இலங்கை அரசியல், சமூக மாற்றங்களுக்கமைய காலகட்டங்களாக வகுத்து ஆராய்தல்.

ii. ஒவ்வொரு காலகட்டத் தேவைகளையும் அவ்வக்கால இலக்கியச் சிற்றிதழ்கள் எந்தளவிற்கு பூர்த்தி செய்துள்ளன என்று கவனித்தல்.

iii. இலங்கை இலக்கியச் சிற்றிதழ்களுக்கும் பத்திரிகைகளுக்குமிடையிலான ஊடாட்டம் பற்றி அவதானித்தல்.

iv. இலங்கை இலக்கிய வளர்ச்சியில் இவ் இலக்கியச் சிற்றிதழ்களின் பங்கு எத்தகையதென்று நோக்குதல். (இவ்விதத்தில் மிக முக்கியமான இலக்கியச் சிற்றிதழ்கள் பற்றி மட்டுமே இவ்வாய்வு கவனத்திற்கொள்ளப் படவுள்ளது)

3. சிற்றிதழ் – ஒரு விளக்கம்

இதற்கு முன் இலக்கியச் சிற்றிதழ் என்றால் யாது? என்பது பற்றிய தெளிவு அவசியம். இத்தொடர்பில் பேராசிரியர் கா. சிவத்தம்பி பின்வருமாறு கூறியுள்ளமை மனங்கொள்ளத்தக்கது.

> இலக்கியச் சிற்றிதழ்கள் இலக்கியத்தில் ஆர்வம் கொண்டவர்களுக்குப் பிரதான தொடர்புச் சாதனமாகும். இதுனுள் படைப்பியல் அம்சங்களும் (ஆக்கங்கள்) விமர்சனவியல் அம்சங்களும் இடம்பெறும். இந்த இலக்கியத்தின் தன்மை (காலம்) வேறுபடலாம். (பண்டைய தமிழ் இலக்கியங்கள் - செந்தமிழ், செந்தமிழ்ச்செல்வி) அல்லது தரம் (முற்றிலும் ஆய்வு மட்டங்கள், அவையல்லாதன) (உ-ம்: புலமை) வேறுபடலாம். தமிழ் இலக்கியச் சிற்றிதழ் வளர்ச்சியை நோக்கும்போது, அது, பிரதானமாக நவீன இலக்கியம் பற்றியதாகவும் அந்த இலக்கியத்தில் ஆர்வம் கொண்ட படைப்பிலக்கிய கர்த்தாக்கள், விமரிசகர்கள், வாசகர்கள் சம்பந்தப்பட்டதாகவும் அமைவதைக் காணலாம்.

இவற்றை மனதிலிருத்திக்கொண்டு அப்பால் செல்வோம்.

4. இலக்கியச் சிற்றிதழ்களின் தோற்றமும் வளர்ச்சியும்

4.1. 1945ஆம் ஆண்டு தொடக்கம் 1955ஆம் ஆண்டு வரையிலான கால கட்டம் :

இக் காலப்பகுதியே இலங்கையில் இலக்கியச் சிற்றிதழ்கள் தோற்றம் பெற்ற காலமாகும். இக் காலப்பகுதி, இலங்கை அரசியலைப் பொறுத்தளவில் இலங்கைக்குச் சுதந்திரம் கிடைக்கவுள்ள மூன்றாண்டுகளுக்கு முன்னர் தொடக்கம் சுதந்திரம் கிடைத்த பின்னரான ஏழு ஆண்டுகளை உள்ளடக்குகின்றது. இலங்கைக்குச் சுதந்திரம் கிடைத்த வரலாறு இந்தியச் சுதந்திர வரலாறு போன்று போராட்ட நிலைப்பட்டதன்று. இன்னொருவிதமாகக் கூறின், இலங்கை சிங்கள மக்கள் மத்தியில் 'இலங்கையர்' என்ற உணர்வு முகிழ்ப்பதற்கு ஏறத்தாழ எட்டாண்டுகள் (1956). சென்றன. இலங்கைத் தமிழர் மத்தியில் அதற்கு ஏறத்தாழ பத்தாண்டுகள் (1958) தேவைப்பட்டன.

மறுபுறம், இலங்கை அரசியல் மார்க்சிய நோக்குடைய அரசியல் கட்சி (இலங்கை கம்யூனிஸ்ட் கட்சி 1943) யின் தோற்றம் இக்காலப் பகுதியில் நிகழ்கின்றது.

மேலும், இலங்கை அரசியல் துறையில் அமுலுக்கு வந்த சோல்பரி குழுவினரின் சிபார்சுகளினால் (1943) ஏற்பட்ட மாற்றங்களும் முக்கியமானவையே. குறிப்பாக, இலவசக் கல்விமுறை அமுலாக்கப்பட்ட காரணத்தினால் பொருளாதாரத்தில் பின்தங்கிய, கிராமங்களிலே வாழ்ந்த இளந்தலைமுறையினர் பாடசாலைக் கல்வி - நவீன கல்வி - பெறும் வாய்ப்பு ஏற்படுகின்றது. இதனால் கிராம நகர ஊடாட்டம் நிகழ்கின்றது. இத்தொடர்பில் இக்காலப்பகுதி எழுத்தாளரொருவரது நினைவலைகள் பற்றிக் குறிப்பிடுவது பொருத்மானது:[2]

> வாலிபத்தின் வைகறையிலே பள்ளி மாணவனாக யாழ்ப்பாண நகரக் கல்லூரிக்கு வந்துவிட்டு மாலையில் கிராமத்தை நோக்கிப் புகைவண்டியில் செல்லுகையில் சில சமயம் தன்னந்தனியாக ரயில் வண்டியிலிருப்பேன். அப்பொழுது என் கண்கள் வயல்வெளிகளையும் தூரத்துத் தொடுவானையும் உற்றுநோக்கும். . .உள்ளத்திலும் உடம்பிலும் சுறுசுறுப்பும் துடிதுடிப்பும் நிறைந்த காலம்.. . உலகையே என் சிந்தனையால் அளந்து விடவேண்டு மென்று பேராசை கொண்ட காலம். . .

மேற்குறித்த 'சூழ்நிலையில் உருவான புதிய-இளைய தலைமுறையினருள் ஒருசாரார், இலக்கியத்தைப் பொறுத்தவரையில், நவீன இலக்கிய நாட்டம், இலக்கியத்தரம் பற்றிய சிரத்தை, ஈழத்து இலக்கியம் பற்றிய பிரக்ஞை என்பனவற்றைப் பெற்றிருந்தனர். இன்னொரு சாரார், மேற்கூறியவற்றோடு, மார்க்சியச் சிந்தனைகளில் ஈடுபாடு கொண்டிருந்தனர். இன்னொரு விதமாகக் கூறின் இவையே 'இக்கால' சிற்றிதழ்களின் இலக்கியத்தின் தேவைகளாயின:

இலக்கியத் தேவைகள் மேற்கூறியவாறாக இக்காலப் பகுதியில் வெளிவந்துகொண்டிருந்த வீரகேசரி (1930), தினகரன் (1932), ஈழகேசரி (1930) ஆகிய பத்திரிகைகள் எந்தளவிற்கு அத் தேவைகளைப் பூர்த்தி செய்வனவாக இருந்துள்ளன என்பதையும் கவனிக்கவேண்டும்.

மேற்குறித்த பத்திரிகைகளுள் வீரகேசரி, தினகரன் ஆகியவை இந்திய எழுத்தாளரது படைப்புகளுக்கே இடமளித்து வந்தன. மாறாக, இலங்கையைப் பின்னணியாகக் கொண்டு வெளிவரும் படைப்புகளில் மாற்றங்கள் செய்யப்பட்டன. இதுபற்றி 'இக்கால' எழுத்தாளரொருவர் பின்வருமாறு கூறியமை குறிப்பிடத்தக்கது.[3]

> அப்பொழுது கதைகள் இந்திய பின்புலத்தில் இந்திய தமிழ் மக்களது வாழ்க்கைப் பின்னணியில் எழுதுவதே வழக்காக இருந்தது. நான் இந்தக் கதை நிகழிடங்கள் கல்முனை, திருகோணமலை என்றும் நூர்ஜஹானின் தந்தை போடியார் இப்றாகிம் என்றும் மற்றும் காரியாலயம், லிகிதர் மாவட்டம் என்ற சொற்பிரயோகங்களும் கதையில் வந்தன. ஆனால் பிரசுரமான கதையில் கதை நிகழிடங்கள் செங்கல்பட்டு, வித்தியமலை என்றும் மற்றும் ஜமீன்தார் இப்றாகிம் என்றும், ஆபீஸ் குமாஸ்தா, ஜில்லா என்றும் சொற்பிரயோகங்கள் மாற்றப்பட்டன. இலங்கை கதைகளின் தன்மை அப்போது எவ்வாறு இருந்தது என்பதற்கு இது ஒரு உதாரணமாகும்.

மாறாக, 'ஈழகேசரி' முற்கூறிய தேவைகள் சாத்தியமாவதற் கிடமளித்து வந்ததென்பது உண்மையே எனினும், 'ஈழகேசரி'

பத்திரிகை, அரசியல் சமூகச்சீர்திருத்தம் எனப் பல்துறை நாட்டம் கொண்டிருந்த தென்பதையும் அவற்றுள் ஒன்றாகவே இலக்கியச் செயற்பாடுகள் அமைந்திருந்ததென்பதையும் இங்கே நினைவுகூர வேண்டியுள்ளது.

ஆக, இலக்கியச் சிற்றிதழ் உருவாவதற்கான தேவை - காலநிர்ப்பந்தம் - உருவாகிக்கொண்டிருந்தது.

இலக்கிய அமைப்புகள் ஆங்காங்கே செயற்படத் தொடங்கி யிருந்தன (மறுமலர்ச்சிச் சங்கம், யாழ்ப்பாணம் - 1943; இலங்கை முற்போக்கு எழுத்தாளர் சங்கம், கொழும்பு - 1946).

இத்தகைய இலக்கிய அமைப்புகள் சார்ந்தோர் சிலர் தமிழகத்துடன் நெருக்கமான உறவுகள் கொண்டிருந்தனர்.

மேற்கூறிய பின்னணியில் இலங்கையில் இக்காலப் பகுதியில் தோற்றம் பெற்ற இலக்கியச் சிற்றிதழ்களுள் மறுமலர்ச்சி (1946), பாரதி (1946) ஆகியவை எமது (1948) கவனத்திற்குரியவையாகின்றன.

மறுமலர்ச்சி

24 இதழ்கள் மட்டுமே வெளிவந்த 'மறுமலர்ச்சி' (19465 பங்குனி 1948 அக்டோபர்) யின் முதல் இதழில் அதன் நோக்கம் பற்றிப் பின்வருமாறு கூறப்பட்டுள்ளது.

> ..... இதனுடைய வளர்ச்சி இலக்கியத்தின் வளர்ச்சி, இதனுடைய இதயத்துடிப்பே இலக்கியம்தான். அரசியல், சமூக விஷயங்களைக் குத்திக் கிளறுவதற்காகவே புதுமையான இலக்கியங்களை மறுமலர்ச்சி சிருஷ்டிக்கப் போவதில்லை. ஆனால், இலக்கிய வளர்ச்சியிலே சமூக வளர்ச்சி பின்னிவரும் என்பதனை மறுமலர்ச்சி நிரூபிக்கும். . . .

எனவே, இலக்கிய வளர்ச்சியை அதாவது 'தூய்மையான' இலக்கிய நோக்கினை முதன்மைப்படுத்துவதும் அதற்கு அடுத்ததாகவே சமூக நோக்கினை முதன்மைப்படுத்துவதும் 'மறுமலர்ச்சி'யின் நோக்கங்களாகின்றன.

நவீன கவிதை, சிறுகதைப் படைப்புகளை பிரசுரித்ததோடு இலக்கிய 'மறுமலர்ச்சி', 'மரபு இலக்கியம்', 'நவீன இலக்கியம்',

விமர்சனம், ஈழத்து இலக்கியம் முதலியன குறித்து இலக்கியத் தெளிவினை ஏற்படுத்தும் நோக்குடனும் மறுமலர்ச்சி செயற்பட்டு வந்துள்ளது. இவ்விதத்தில் அக்கால இலக்கியத் தேவையின் கணிசமான பகுதியை அது பூர்த்தி செய்துள்ளது.

இன்று பின்நோக்கிப் பார்க்கும்போது ஈழத்து இலக்கிய வளர்ச்சியில் 'மறுமலர்ச்சி' பெற்றுள்ள இடம் முக்கியமானதென்பது புலப்படுகின்றது. இவ்விதத்தில் பின்வரும் விடயங்கள் மனங்கொள்ளப்படவேண்டியன:

i. ஈழத்திலே நாற்பதுகளளவில் பிரக்ஞைபூர்வமாக நவீன கவிதை உருவாவதற்கு மறுமலர்ச்சி வழிவகுத்தமை, இவ்விதத்தில் ஈழத்து நவீன தமிழ்க்கவிதை முன்னோடிகளான மஹாகவி, நாவற்குழியூர் நடராஜன், சாரதா (வித்துவான் சரவணமுத்து) முதலானோரின் படைப்புகளுக்குக் களமாக அமைந்தமை.

ii. ஈழத்திலே சிறுகதை முப்பதுகளளவிலே கால்கொண்டதாயினும் நாற்பதுகளிலேயே புத்தெழுச்சி பெற்று ஈழத்து மண்ணுடன் - மக்களது வாழ்க்கையுடன் ஈழத்துக் கிராமங்களுடன் கலந்துறவாடத் தொடங்கியது. இவ்விதத்தில் மறுமலர்ச்சி எழுத்தாளரது படைப்புகள் முக்கியம் பெறுகின்றமை (எ-டு: அ.செ. முருகானந்தன், வரதர், கு. பெரியதம்பி)

பாரதி

ஆறு இதழ்கள் மட்டுமே வெளிவந்த பாரதி (ஜனவரி, 1946) யின் முதல் இதழில் அதன் நோக்கம் பற்றி, இவ்வாறு கூறப்பட்டுள்ளது :

> பாரதி அணுசக்தி யுகத்தின் சிருஷ்டி விஞ்ஞான முடிவுகளின் புரட்சி ஏற்படுத்திய அணுசக்தி போல, *தமிழ் மொழிக்குப் புதுமைப் போக்களித்த மகாகவி பாரதியாரின் பெயர் தாங்கி வருகிறது* அவர் தமிழுக்குப் *புதுவழி காட்டியது போலவே,* பாரதியும் கண்டதும் காதல் கதைகள் மலிந்த இன்றைய தமிழிலக்கிய போக்கிற்குப்

> புதுவழிகாட்டும். தமிழ் தமிழுக்காகவே என்று தம் கூட்டத்திற்குள்ளேயே மொழியைச் சிறைப்படுத்திக் கொண்ட பண்டிதர்களின் இரும்புப்பிடியினின்று அதனை மீட்டு மக்கள் சொத்தாக்கினார் பாரதியார். இன்று, பாரதி பரம்பரையில் வந்தோம் என்று ஜம்பமடிக்கும் எழுத்தாளர் கோஷ்டி கலை கலைக்காகவே என்று அப்பண்டிதர் பல்லவியையே வேறு ராகத்தில் பாடுகிறது. *தமிழைச் சிறை மீட்ட* பாரதியார் செய்த சேவையை 'பாரதி'யின் இலட்சியமும். . . . . ஏகாதிபத்தியத்தை அழிக்கப் பாடிய பாரதியார் மூப்பது கோடி ஜனங்களின் சங்க முழுமைக்கும் *பொதுவுடைமையான ஒப்பில்லாத சமுதாயத்தை ஆக்கவும்* கவி பாடினார். அவர் காட்டும் பாதையில் 'பாரதி' யாத்திரை தொடங்குகிறது

ஆக, பொதுவுடைமைச் சித்தாந்தம் சார்ந்த சமூக, அரசியல் நோக்கு, புதுமை நோக்கு, எளிமை, பழமைவாத எதிர்ப்பு முதலியன 'பாரதி'யின் நோக்கங்களாகின்றன. இவ்வாறு நோக்கும்போது 'மறுமலர்ச்சி'யின் நோக்கங்களிலிருந்து 'பாரதி'யின் நோக்கங்கள் சில விதங்களில் ஒன்றுபட்டிருப்பினும் அடிப்படையில் வேறுபாடு கொண்டிருப்பது (அதாவது 'பாரதி'யின் நோக்கங்களாவன. சமூக நோக்கிற்கு முதன்மை, அஃது பொதுவுடைமைச் சித்தாந்தஞ் சார்ந்திருத்தல் என்பன) மனங்கொள்ளத்தக்கது.

அது எவ்வாறாயினும், ஈழத்து இலக்கிய வளர்ச்சியில் 'பாரதி' பெறும் இடம் பின்வருமாறுள்ளது:

i. ஈழத்து எழுத்தாளர், வாசகர் மத்தியிலே மார்க்சியம் சார்ந்தோரது முற்போக்கு சிந்தனையையும் அச்சிந்தனை தாங்கிய படைப்புகளையும் முதன்முதலாக அறிமுகப் படுத்தியமை. (தமிழில் வெளியான பொதுவுடைமை தழுவிய முற்போக்கு இதழ்களுள் 'பாரதி' இரண்டாவது; முதலாவது தமிழ் நாட்டிலிருந்து வெளிவந்துள்ளதாக அறியப்படுகிறது.)

ii. இவ்விதத்தில் ஈழத்திலே முற்போக்கு எழுத்தாளர் பரம்பரையின் தோற்றத்திற்குக் கால்கோளிட்டமை (எ-டு: கே கணேஸ், அ.ந. கந்தசாமி)

iii. இத்தகைய நோக்குடைய மொழிபெயர்ப்பு ஆக்கங்களை பிரசுரித்தமை (எ-டு: மார்க்ஸிம் கார்க்கி, முல்க்ராஜ் ஆனந்)

iv. இலங்கை எழுத்தாளர், வாசகர் மத்தியிலே, இதழ்களிலே வெளிவரும் படைப்புகளூடாகவும், சிந்தனைகளூடாகவும் சர்வதேசப் பார்வை முகிழ்க்க வாய்ப்பளித்தமை. (இத்தகைய நோக்கும் போக்கும் இன்றுவரை வெளிவரும் முற்போக்கு இலக்கியச் சிற்றிதழ்களூடாக வளம்பெற்று வந்துள்ளது)

பாரதி (மட்டக்களப்பு)

மேற்கூறிய 'மறுமலர்ச்சி', 'பாரதி' ஆகிய இரு இலக்கியச் சிற்றிதழ்கள் பற்றி அறியப்பட்ட அளவிற்கு இங்குக் குறிப்பிடும் பாரதி பற்றி இலங்கையர் பலரும் அறிந்திருக்க மாட்டார்கள்.[4] பாரதி பத்திற்கு மேற்பட்ட இதழ்களாவது வெளிவந்திருப்பதாக ஊகிக்க முடியுமாயினும், (இவ்வாய்வாளருக்குக் கிடைத்தள்ள) ஐந்து இதழ்களை அடிப்படையாகக் கொண்டு இவ்விதழ் பற்றிப் பின்வரும் விடயங்களை எடுத்துரைக்க முடிகின்றது:

i. இலங்கை எழுத்தாளர்களை ஊக்குவிக்கும் பொருட்டு சிறுகதைப் போட்டியை நடத்தியுள்ளமை.

ii. முற்கூறிய 'பாரதி', 'மறுமலர்ச்சி' ஆகியவற்றை விட, இலங்கையின் சமூக, அரசியல் விவகாரங்களில் - பிரச்சினைகளில் - அக்கறை காட்டி அத்தகைய ஆக்கங்களை (எ-டு: கட்டுரை ஆசிரியர் தலையங்கம், வாசகர் கடிதம்) வெளியிட்டுள்ளமை.

iii. 'பாரதி', 'மறுமலர்ச்சி' ஆகியவற்றுடன் ஒப்பிடும்போது, ஆய்வுக் கட்டுரைகளுக்கு இடமளித்துள்ளமை (எ-டு: பாரதியின் பாடல்கள் பற்றிய திறனாய்வு)

iv. 'மறுமலர்ச்சி' பெருமளவிலே யாழ்ப்பாண பிரதேச எழுத்தாளருக்கும், 'பாரதி' யாழ்ப்பாணம் கொழும்பு பிரதேச எழுத்தாளருக்கும் இடமளித்த வேளையில் இது (ஏனைய பிரதேச எழுத்தாளர்களோடு) மட்டக்களப்பு பிரதேச எழுத்தாளர்களை ஊக்குவித்தமை.

இன்று பின்நோக்கிப் பார்க்கும்போது இறுதியாகக் கூறிய விடயமே இப்'பாரதி'யின் முக்கிய பங்களிப்பாகின்றது என்று

கூறமுடிகிறது. ஏனெனில் மட்டக்களப்பு பிரதேச எழுத்தாளர்கள் அன்றுள்ள சூழலில் இதழியல் உலகில் பெருமளவு கவனிப்பைப் பெறாமல் இருந்துள்ள நிலையில் நின்று பார்க்கின்ற போதும் இப்பாரதி மறைவுற்றபின் மட்டக்களப்பிலிருந்து அவ்வப்போது இலக்கியச் சிற்றிதழ்கள் வெளிவந்த நிலைமையை அவதானிக்கும் போதும் எனது மேற்கூறிய அபிப்பிராயமே உறுதி பெறுகின்றது.

தவிர இக்காலப் பகுதியில் திருகோணமலையிலிருந்து 'எரிமலை' என்றொரு இலக்கியச் சிற்றிதழ் வெளிவந்துள்ளதாக அறியப்படினும் அதுபற்றி எதுவுமே அறியமுடியாதுள்ளது.

எவ்வாறாயினும் ஈழத்தில் நவீன இலக்கிய வளர்ச்சி பற்றி பிரக்ஞை பூர்வமாகவும், பரந்துபட்ட நிலையிலும் இக்காலப்பகுதியில் 'ஈழகேசரி'யைவிட இவ் இலக்கியச் சிற்றிதழ்களே சிந்தித்து செயற்பட்டு வந்துள்ளன என்று கூறுவதிலே தவறில்லை. எனினும் இத்தகைய ஆரோக்கியமான நிலைமை தொடரவில்லை.

4.2 1956ஆம் ஆண்டு தொடக்கம் 1975ஆம் அண்டு வரையான காலகட்டம்

இலங்கையின் அரசியல், சமூக வரலாற்றிலே இக்காலப் பகுதி முக்கியமானது. ஒருபுறம், இக்காலப் பகுதியிலே ஏற்பட்ட அரசியல் மாற்றங்களினால் இலங்கையர் மத்தியிலே 'இலங்கையர்' என்ற தேசிய உணர்வு முன்னர் கூறியது போன்று சுதந்திரம் கிடைத்து எட்டாண்டுகள் கடந்து இப்போதுதான் மெல்லென முகிழ்க்க ஆரம்பிக்கிறது. மறுபுறம், இலங்கைத் தமிழரில் ஒருசாரார் ஒரு நிலையில் தாம் தமிழர் என்ற விகிதத்தில் இந்தியாவுடன் தமிழ்நாட்டுடன் தொடர்புபட்டாலும் இன்னொரு நிலையில் தாம் இலங்கையர் என்ற உணர்வுக்கு ஆட்படத்தொடங்குகின்றனர்.

இச்சூழலில் இலங்கை இலக்கிய உலகிலே 'ஈழத்து இலக்கியம்', 'ஈழத்து எழுத்தாளர்' என்ற உணர்வுநிலை உருவாகத் தொடங்குகின்றது. ஆனால் இத்தகைய புதிய மாற்றத்தினை வெளிப்படுத்தும் நிலையில் இக்கால இலங்கைப் பத்திரிகைகள் இருக்கவில்லை. (இக்காலப்பகுதி தினகரன் பத்திரிகையின் போக்கினைப் பற்றி எழுத்தாளரொருவர் எழுதியுள்ளமை பற்றி ஏலவே குறிப்பிடப்பட்டுள்ளது)

குறிப்பிடத்தக்க இலக்கியச் சிற்றிதழ்கள் எவையும் இவ்வேளை வெளிவந்திருக்கவில்லை.

எனினும், மேற்கூறியவாறான ஆரோக்கியமற்ற நிலைமை எழுத்தாளர் சிலரால் உணரப்பட்டது. விளைவாக, 'கலைச்செல்வி' (1958) என்ற சிற்றிதழ் இக்காலப் பகுதியிலே பிறப்பெடுகின்றது.

இன்னொருபுறம், இக்காலப் பகுதியிலே ஈழத்து இலக்கியம் என்ற உணர்வு மார்க்சியம் சார்ந்த முற்போக்கு எழுத்தாளர்களி னாலேயே ஆழமாகவும் பரவலாகவும் வெளிப்படுத்தப்பட்டது. எனவே, இத்தகையோருட் சிலர் தமது அரசியல் இலக்கிய நோக்குகளுக்கமைவாக இலக்கியச் சிற்றிதழ்களை ஆரம்பிக் கின்றனர். புதுமை இலக்கியம் (1950), மரகதம் (1961), வசந்தம் (1965), மல்லிகை (1968), குமரன் (1971), களனி (1973), தாயகம் (1974), சமர் (1979) முதலான இலக்கியச் சிற்றிதழ்கள் வெளிவரத்தொடங்கின (இவற்றுள் மல்லிகை, தாயகம் என்பன இன்றுவரை தொடர்ந்து வெளிவருகின்றன). இவற்றுள், வசதியும் முக்கியத்துவமும் கருதி மரகதம், மல்லிகை, குமரன், தாயகம் ஆகியன பற்றியே இங்குக் கவனிக்கப்படுகின்றன.

கலைச்செல்வி

ஏறத்தாழ எட்டு ஆண்டுகள் (1958 - 1965) வெளிவந்த கலைச் செல்வியின் முதல் இதழில் அதன் நோக்கம் பற்றிப் பின்வருமாறு குறிப்பிடப்படுகிறது.

> இலங்கை எழுத்தாளர்கள் என்றுமே இந்தியப் பத்திரிகைகளை நம்பியிருக்க முடியாது. ஈழத்திலேயே புதிய பத்திரிகைகள் உதயமாக வேண்டும். . . . இங்கே தலைசிறந்த எழுத்தாளர்கள் இருக்கிறார்கள். . . . அவர்களுடைய ஆற்றலும் திறமையும் மேலும் வளரவும் அவர்களுடைய திறமான புலமையினை வெளிநாட்டவரும் அறிந்து வணங்கவும் என்னால் ஏதும் செய்ய முடியாதா என்று ஏங்கத் தொடங்கினேன். . . நமது தனித்தன்மைகளை நிலைநாட்டி, நமது கலைத்திறனையும் கற்பனைவளத்தையும் உலகோருக்கு எடுத்துக் காட்டி, எல்லோர்க்கும் மகிழ்வூட்டக்கூடிய கலைத்தூதன்

இங்கு இல்லை. தேமதுரத் தமிழோசை உலகமெல்லாம் பரவவேண்டும். தமிழனின் மொழி, கலை, கலாசாரம் ஆகியவற்றிற்கு அவற்றின் தொன்மை மணம் குன்றாது புதுமை மெருகேற்ற வேண்டும்.

மேற்கூறிய நோக்கங்களுடன் தொடங்கிய 'கலைச்செல்வி' ஈழத்து சிற்றிதழ் வரலாற்றில் பின்வரும் காரணங்களுக்காக முக்கியம் பெற்றுள்ளது.

i. ஈழத்தில் சிற்றிதழ்களின் வரவு குன்றி ஈழத்து நவீன இலக்கிய கர்த்தாக்களுக்கு பிரசுர களமில்லாத நிலையில் கலைச்செல்வி அத்தகையோரது முக்கியமான பிரசுரகளமாக விளங்கியமை.

ii. புதிதாக முகிழ்ந்த 'ஈழத்து இலக்கியம்' பற்றிய உணர்வு வேரூன்றுவதற்கேற்றவாறு செயற்பட்டமை.

iii. பிற்காலத்தில் முக்கியம் பெற்றுள்ள ஈழத்து எழுத்தாளர் பலரது வளர்ப்புப் பண்ணையாகத் திகழ்ந்தமை: எ-டு: செங்கை ஆழியான், மு. பொன்னம்பலம், செ. யோகநாதன், பா. சந்தியசீலன், தீ. ஞானசேகரன், செம்பியன்செல்வன், தெணியான், சாந்தன், முனியப்பதாசன், யோ. பெனடிக்ற்பாலன்

iv. பெண் எழுத்தாளர்களை ஊக்கப்படுத்தியமை

v. மேற்கூறிய பின்னணியில், பல்கலைக்கழக ஆய்வாளர்கள், மரபுவாதிகளான பண்டிதர்கள், முற்போக்கு அணியார் எனப் பலநிலைப்பட்டோரது எழுத்துக்களும் பிரசுரமாக வாய்ப்பளித்தமை.

மரகதம்

'பாரதி'க்குப் பின்னர் இலங்கையில் (பொதுவுடை சார்ந்த) முற்போக்கு இதழ் என்ற விதத்தில் வெளிவந்தது புதுமை இலக்கியம். ஆயினும் இவ்விதழ் கட்டுரைகளையே தாங்கி வெளிவந்தது. எனவே, இவ்விதழைத் தவிர்த்து நோக்கும்போது மரகதமே முக்கியம் பெறுகின்றது. அது தன் நோக்கம் பற்றி இவ்வாறு குறிப்பிடுகின்றது. (மரகதம், செப். 61) :

மக்களுக்குத் தீமையான எதையும் சொல்லவோ சுயநலக்காரர்களும் சுயநலமனப்பான்மை

யுள்ளவர்களும் தம் கருத்துக்களை என்மூலம்
வெளியிடவோ நான் என்றும் அனுமதிக்கமாட்டேன்

இம் 'மரகதத்'திலேயே ஆக்க இலக்கியப் படைப்புகள் முதன்முதலாக வெளிவருகின்றன; தவிர, 'ஈழத்து இலக்கியம்', 'தேசிய இலக்கியம்' பற்றிய ஆக்கபூர்வமான சிந்தனைகளும் கட்டுரைகளூடாக முதன்முதலாக முன்வைக்கப்படுகின்றன.

மல்லிகை

ஈழத்தில் நீண்ட காலமாக வெளிவந்து கொண்டிருக்கும் ஒரே ஒரு சஞ்சிகையான 'மல்லிகை'யின் முக்கியத்துவம் பற்றிப் பின்வருமாறு கூற முடியும்.

i. ஈழத்தின் பல பிரதேச எழுத்தாளர்களையும் எழுத்துகளினூடாக ஒன்றிணைத்தமை.

ii. முற்போக்கு எழுத்தாளர் பலரது படைப்புகளின் பிரசுரகளமாக விளங்கியமை.

iii. பிரதேச மலர்கள் வெளியிட்டதனூடாகப் புதிய பிரதேச எழுத்தாளர்கள் பலருக்கு வாய்ப்பளித்தமை. (எ-டு: கெக்கிறாவை ஸகானா, நீர்கொழும்பு லெ. முருகபூபதி, திக்வெலை கமால்).

iv. முஸ்லீம் எழுத்தாளர் பலர் நன்கறியப்பட்டமை. (எ-டு: கெக்கிறாவை ஸகானா, திக்வெலை கமால், முபஷீர்).

v. ஆய்வுக் கட்டுரைகளைப் பிரசுரித்தமை (எ-டு: க. கைலாசபதி, கா. சிவத்தம்பி, நுஃமான், மு. பொன்னம்பலம்)

vi. ஈழத்தின் மொழிபெயர்ப்பு இலக்கியத்துறை வளம்பெற வழிவகுத்தமை. எ-டு: சிங்கள இலக்கிய மொழிபெயர்ப்புகள் பல பிரசுரமானமை; அழகு சுப்பிரமணியம் என்ற 'ஆங்கில எழுத்தாளரை மொழிபெயர்ப்புகளூடாக ஈழத்து வாசகர்களுக்கு அறிமுகப் படுத்தியமை.

vii. குறிப்பிடத்தக்க சில இலக்கிய சர்ச்சைகள் நிகழ்வதற்குக் களமமைத்தமை.

குமரன்

குறிப்பாக, ஈழத்தில் வெளியான முற்போக்குச் சார்ந்த இலக்கியச் சிற்றிதழ்களுள் பலவற்றுள் மார்க்சியக் கோட்பாடு

தொடர்பான அதிகளவு கட்டுரைகளை வெளியிட இலக்கியச் சிற்றிதழ் குமரன் மட்டுமேயாகும்.

தாயகம்

1974 ஆரம்பித்து இடையிலே சில காலம் 'வனவாசம்' செய்துவிட்டு, மீண்டும், 1984 தொடங்கி இன்று வரை வந்து கொண்டிருக்கும், 'தாயகம்' என்ற இலக்கியச் சிற்றிதழ், குறிப்பாக, மலையகப் பிரதேசத்தில் முற்போக்கிலக்கிய கர்த்தாக்கள் உருவாவதற்கு வழிவகுத்துள்ளது. 'தாயகம்' சார்ந்ததான தேசிய கலை இலக்கியப் பேரவை குறிப்பிடத்தக்க, ஆய்வுக் கருத்தரங்குகளை நடத்துவதிலும் கருத்தரங்குக் கட்டுரைகளை நூலுருப்பெறச் செய்வதிலும் (எ-டு: பாரதி பன்முகப்பார்வை) இன்றுவரை ஈடுபட்டு வருகின்றது.

முறையே மேற்கூறியவாறு முக்கியமான இரு போக்குகளின் வெளிப்பாடாக விளங்கிய கலைச்செல்வி (இலக்கியத்தரம்)யினதும் ஏனைய, மல்லிகை, குமரன், தாயகம் (முற்போக்கு இலக்கியச் சிரத்தை) என்பவற்றினதும் போக்குகளுக்குட்படாமல் தனித்துவ நோக்குகளுடன் வெளிவந்த வேறிரு சஞ்சிகைகளும் எமது கவனத்திற்குரியனவாகின்றன. அவை, பூரணி (1972), சிரித்திரன் (1965) என்பனவாகும்.

பூரணி

மு. தளையசிங்கத்தினை பிரதம ஆசிரியராகக் கொண்டு வெளிவந்த பூரணி இதழ், குறிப்பாக, மு. தளையசிங்கத்தின் (பிரபஞ்ச யதார்த்தவாதம் முதலிய) கலை, இலக்கிய சிந்தனைகள் வெளிப்படுவதற்கு ஏற்ற களமாக விளங்கியது. அத்துடன் அத்தகைய சிந்தனைகளை உள்வாங்கிய படைப்பாளிகள் உருவாவதற்கும் (எ-டு: மு. பொன்னம்பலம், சு. வில்வரத்தினம்) வழிவகுத்துள்ளது.

சிரித்திரன்

நகைச்சுவையை முக்கியநோக்கமாகக் கொண்டு இலங்கையில் மட்டுமன்றித் தமிழிலேயே நீண்ட காலம் வெளிவந்துள்ள சிரித்திரன் நகைச்சுவைக்கப்பால் அங்கத் நோக்கில் இலங்கையின் சமூக, அரசியல், கலை, இலக்கிய உலகின்

போக்குகளை விமர்சித்து வந்தமை காரணமாகத் தமிழ் இலக்கியச் சிற்றிதழ் வரலாற்றில் முக்கியமான இடம்பெற்றுள்ளது என்பதிலே தவறில்லை.

மேற்கூறியவை தவிர, இக்காலப்பகுதியில் வெளிவந்து எமது கவனத்தை ஈர்க்கக்கூடிய வேறு சில இலக்கியச் சிற்றிதழ்களுமுள்ளன. எ-டு: மலர்.

மலர்

கிழக்கு மாகணத்தைச் சார்ந்த மட்டக்களப்பு பிரதேசத்தில் இருந்து வெளிவந்த 'மலர்' (1970) குறிப்பாகக் கிழக்கு மாகாண எழுத்தாளர்கள் மத்தியிலே புத்துணர்ச்சி ஏற்படுவதற்கு வழிவகுத்துள்ளது.

குறிப்பிட்ட இக்காலப் பகுதியில் இலங்கைத் தமிழ்ப் பத்திரிகைளின் போக்கிலே மாற்றங்கள் ஏற்பட்டமை பற்றியும் இங்குக் குறிப்பிடவேண்டும். ஈழத்து இலக்கியம் பற்றிய உணர்வு முகிழ்த்த இக்காலப் பகுதியில் தமிழக ஆக்கங்களுக்கு முதன்மையளித்து வந்த இலங்கைப் பத்திரிகைகள் (தினகரன், வீரகேசரி) தமது இயல்பினை மாற்றிக்கொள்கின்றன. இக்காலப்பகுதியிலே (1957-1961) க. கைலாசபதி தினகரன் பத்திரிகை பிரதம ஆசிரியராக விளங்கியமை தினகரனின் இத்தகைய செயற்பாடுகள் ஆழமும் அகலமும் பெற வழிவகுத்தது. ஈழத்து இலக்கியம் பல திசைகளில் வேகமாக வளர்ச்சிபெற்றதோடு, ஈழத்தின் பல பிரதேச எழுத்தாளர்களும் (எ-டு: மட்டக்களப்பு, மலையகம்) பயன்பெறும் வாய்ப்பும் வசதியும் ஏற்பட்டமை இன்று பின்நோக்கிப் பார்க்கும் போது நன்கு புலனாகின்றது. தினகரன் மட்டுமன்றி இக்காலப் பகுதியிலேயே வெளியான வீரகேசரி முதலான ஏனைய பத்திரிகைகளும் இத்தகைய மாற்றத்தை ஏற்படுத்திக் கொண்டன. ஆகவே, இக்காலப் பகுதியிலே ஈழத்து இலக்கியச் சிற்றிதழ்களுக்கும் பத்திரிகைகளுக்குமான இடைவெளி குறைந்துபோய்விட்ட ஆரோக்கியமான நிலைமை ஏறத்தாழ எழுபத்தைந்து வரை தொடர்ந்து காணப்பட்டது.

4.3 1975ஆம் ஆண்டு தொடக்கம் 1985ஆம் ஆண்டு வரையிலான காலகட்டம்:

இலங்கைத் தமிழர் அரசியலில், தமிழ்த்தேசிய உணர்ச்சி கூர்மைபெறத் தொடங்கிய ஆரம்பகாலம் இதுவாகும். இத்தகைய

சூழலில் (இலங்கைத்) தேசிய உணர்வினை முதன்மைப்படுத்தி வெளிவந்து கொண்டிருந்த இலக்கியச் சிற்றிதழ்கள் தடுமாறத் தொடங்கிய நிலையில் புதிய, இலக்கியச் சிற்றிதழ்களின் வரவு தவிர்க்க இயலாததாயிற்று. இவ்விதத்தில் இக்காலப் பகுதியில் வெளிவந்த இலக்கியச் சிற்றிதழ்களுள் சுடர் (1975), அலை (1976), புதிசு (1980) தீர்த்தக்கரை என்பன கவனத்திற்குரியன

சுடர்

'சுடர்' முதல் இதழின் தலையங்கம் இங்குக் கவனத்திற்குரியதாகிறது. அது, பின்வருமாறு:

> சுடர் முற்று முழுதாக ஓர் கலை இலக்கிய ஏடாகவே இருக்கும். அதேவேளையில் *முழுத்தமிழினத்தையும் தமிழ் ஈழநாட்டையும் பாதிக்கின்ற பிரச்சினைகளில்* தன்னுடைய கருத்தை அவ்வப்போது ஆணித்தரமாகச் சொல்லவும் அது தயங்காது. . . . சுடர் தரமான ஏடாகவே வெளிவரும். ஆனால், 'தரம்' என்று கூறிக்கொண்டு கெசட் ஆகவோ 'றெயில்வே கைடு' போலவோ அது வெளிவராது. மக்கள் விரும்பும் அம்சங்கள் கொண்ட சஞ்சிகையாகவே சுடர் வெளிவரும். . .

மேற்குறிப்பிட்ட நோக்கங்களுக்கமைவாக வெளிவந்த 'சுடர்' தமிழரசுக் கட்சியின் அரசியல் பிரச்சார ஏடாக ஏலவே நீண்டகாலமாக வெளிவந்து கொண்டிருந்த சுதந்திரன் பத்திரிகை நிறுவனத்தால் வெளியிடப்பட்டதென்பது குறிப்பிடத்தக்கது. எனவே, தீவிர தமிழுணர்ச்சி கொண்ட படைப்புகளுக்கு அது இடமளித்து வந்தமை வியப்பிற்குரியதன்று. எனினும், அரசியல் சார்புடன் அல்லது சார்பின்றிச் சுடரில் வெளியான படைப்புகளின் கலைத்துவம் கேள்விக்குரியது.

அலை

மேற்கூறிய அரசியல், இலக்கியச் சூழலில், தீவிர இலக்கிய வாசிப்பும் தமிழ்நாட்டு சமகால கலை இலக்கிய பரிச்சயமும் மிக்க இளைஞர் குழாமொன்றின் செயற்பாடு காரணமாக 'அலை' என்ற இலக்கியச் சிற்றிதழின் பிறப்பு இடம்பெற்றது.

இலங்கை இலக்கியச் சிற்றிதழ் என்ற விதத்திலே 'அலை'யின் முக்கியத்துவம் பின்வரும் விதங்களிலமைகின்றது:

1. பிரக்ஞைபூர்வமாகப் படைப்புகளின் கலையழகில் கவனஞ் செலுத்தியமை; அத்தகைய ஆற்றல்கொண்ட புதிய தலைமுறையினரை இனங்கண்டு வளர்த்தெடுத்தமை. எ-டு: உமாவரதராஜன், ரஞ்சகுமார்.

2. முற்போக்கு எழுத்தாளரது படைப்புகளின் அழகியல் அம்சங்கள், கருத்தியல் அம்சங்களில் முதன்முதலாக அக்கறைசெலுத்தி அவற்றை விமர்சனத்திற்குட்படுத்தியமை.

3. இலக்கியம் தவிர்ந்த, பிற கலைகளில் (எ-டு: நவீன ஓவியம், சினிமா) ஈடுபாடுகாட்டி, இளந்தலைமுறை வாசகர், ரசிகர்கள் மத்தியிலே ரசனை உணர்வினை ஏற்படுத்தியமை.

4. 'தமிழ்த்தேசியப் பிரச்சினையைப் பெரும்பாலான பத்திரிகைகளும் இலக்கியச் சிற்றிதழ்களும் மறிதலித்த அல்லது கவனிக்காத நிலையிலே அதுபற்றிய ஆக்கபூர்வமான தெளிவான அபிப்பிராயங்களை முன்வைத்தமை.

5. தரமான நூல்வெளியீட்டு முயற்சிகளில் கவனஞ் செலுத்தியமை.

6. (சிறந்த இலக்கியச் சிற்றிதழ்களுக்குரிய நோக்கிற்கேற்ப) ஆக்கபூர்வமான நிலையில் செயற்பாட்டு முயற்சிகளில் ஈடுபட்டமை. (எ-டு: ஓவியக் கண்காட்சி)

7. மேற்கூறிய நோக்குகள் - போக்குகள் - கொண்ட புதிய இலக்கியச் சிற்தழ்களின் தோற்றத்திற்கு வழிகாட்டியாக விளங்கியமை. (எ-டு: 'புதிசு')

புதிசு

புதிய, (வயதிலே குறைந்த) இளந்தலைமுறையினரால் தொடங்கப்பட்ட இவ்விதழின் சாதனைகள் பலவாயிம் அடுத்தலைமுறை எழுத்தாளர் பலரை இனங்காணச் செய்தமை அவற்றுள் முக்கியமாகின்றது. (எ-டு: சேரன், ஒளவை, ஊர்வசி)

தீர்த்தக்கரை

மலையகத்திலிருந்து முன்னரும் இலக்கியச் சிற்றிதழ்கள் சில வெளிவந்திருப்பினும் இவ்விதழின் வருகையுடனேயே இளந்தலைமுறை எழுத்தாளர் மத்தியில் புத்தெழுச்சி ஏற்படுகின்றது. இவ்விதழ்களில் வெளியான சிறுகதைகளே (பின்னர் தொகுப்பாக வெளிவந்துள்ளது). மலையகச் சிறுகதை வளர்ச்சிப்போக்கில் ஆரோக்கியமான முக்கியமான மாற்றமொன்றினை ஆரம்பித்து வைத்துள்ளன.

இக்காலப்பகுதியின் பிரபலமான பத்திரிகைகளின் நோக்கை அவதானிக்கிறபோது பொதுவாக அவை பல்வேறு காரணங்களினால் தமிழ்த்தேசியம் பற்றிய சாதகமான நோக்குடன் செயற்படாமை புலப்படுகின்றது. எனவே, தமிழ்த்தேசியம் சார்ந்த படைப்புகள் மேற்கூறிய இலக்கியச் சிற்றிதழ்களிலேயே பெருமளவு வெளிவருகின்றமை குறிப்பிடத்தக்கது.

4.4. 1985ஆம் ஆண்டு தொடக்கம் இன்று வரையான காலகட்டம்

இலங்கையில் இக்கால கட்ட அரசியல், ஒரு புறத்தில் தமிழ்தேசிய உணர்ச்சி தனிநாட்டுக் கோரிக்கையாக -ஆயுதமேந்திய பல்வேறு விடுதலை இயக்கங்களின் போராட்டச் செயற்பாடுகளைச் சந்திப்பதாகப் பரிணமித்தது. இன்னொரு புறத்தில் சிங்களப் பேரினவாதச் செயற்பாடுகள் முனைப்புற்று அதன் உச்சகட்டமாக 1983இல் இனக் கலவரம் ஏற்பட்டு அதன் பாரதூரமான விளைவுகளை இலங்கை முழுவதுமே எதிர்கொண்ட காலமாகியது.

மேற்கூறிய சூழலில், குறிப்பாகத் தமிழ்பேசும் மக்கள் மத்தியிலே ஏற்பட்ட மாற்றங்களுள் பின்வருவன கவனத்திற்குரியன வாகின்றன:

1. புலப்பெயர்வு: 1983ஆம் ஆண்டு இனக் கலவர விளைவுகளிலே இலங்கைத் தமிழர் இலங்கையிலிருந்து ஐரோப்பா, கனடா, அவுஸ்திரேலியா முதலான நாடுகளுக்குப் புலம்பெயரத் தொடங்கியமை.

2. பெண்கள் மத்தியில் விழிப்புணர்வு: இலங்கை அரசியலில் ஏற்பட்ட மாற்றங்களும் உலகளாவிய ரீதியில் பெண்கள்

மத்தியிலேற்பட்ட விழிப்புணர்ச்சியும் பெண்நிலைவாதச் சிந்தனைகள் முகிழ்ப்பதற்கு வழிவகுத்தமை.

3. மலையக மக்கள் மத்தியிலும், முஸ்லீம் மக்கள் மத்தியிலும் உருவாகிவந்த அரசியல், சமூக விழிப்புணர்ச்சி முனைப்புற்றமை.

4. வடக்கு கிழக்கு மாகாணங்களில் வாழ்கின்ற தமிழ்பேசும் மக்களின் வாழ்க்கை, குறிப்பாகத் தொண்ணூறுகளிலிருந்து போர்க்கால வாழ்க்கையாக மாற்றங்கண்டமை (இவ்விதத்தில் ஏற்பட்ட உள்நாட்டு இடப்பெயர்வுகள், அகதிமுகாம் வாழ்க்கைநிலை இராணுவக் கட்டுப்பாடுள்ள கட்டுப்பாடில்லாத பிரதேச நிர்வாக முறைமை முதலியன மனங்கொள்ளப்பட வேண்டியன)

மேற்கூறிய பின்னணியில், புதிய இலக்கியச் சிற்றிதழ்கள் தோற்றம்பெறுவது தவிர்க்க இயலாததே. இவற்றைப் பின்வருமாறு வகைப்படுத்தி விளக்கலாம்.

4.4.1. புகலிட இலக்கியச் சிற்றிதழ்கள்

முற்கூறியவாறு இலங்கையிலிருந்து புலம்பெயர்ந்து பிற நாடுகள் சென்ற இளந்தலைமுறையினரால் தூண்டில் தொடக்கம் உயிர் நிழல்வரை இலக்கியச் சிற்றிதழ்கள் பல வெளியிடப்பட்டன; வெளியிடப்பட்டு வருகின்றன. இவற்றின் பங்களிப்புகளுள் பின்வருவன முக்கியம் பெறுகின்றன.

அ. சிங்களப் பேரினவாத செயற்பாடுகள், தமிழீழ விடுதலை இயக்கங்களின் செயற்பாடுகள் பற்றிய மாற்றுக்கருத்துகள், விமர்சனங்கள் கொண்ட ஆக்கங்கள் இடம்பெறுதல்.

ஆ. முற்றிலும் புதிதான, புகலிட வாழ்க்கை அனுபவங்கள் வெளிப்படுதல்: இவ்விதத்தில், ஈழத்து இலக்கியப் பரப்பு விரிவடைதல் (எ-டு: தமிழ் இளைஞர்களின் பாலியல் உணர்வு வெளிப்பாடுகள்; மாற்றமுறும் தமிழ்க்குடும்பங்களின் பெண்களின் வாழ்க்கைமுறை)

இ. நவீன கலை, இலக்கிய கொள்கைகளின்பால் இலங்கை எழுத்தாளர்கள் ஈடுபாடு கொள்ளுதல் (எ-டு: பின்

நவீனத்துவம் பற்றி இலங்கையிலிருந்து எழுதப்படுவதை விட இலங்கையரால் புகலிட நாடுகளிலிருந்து எழுதப்படுவன அதிகம்)

ஈ. நூல் பிரசுர வெளியீட்டு முயற்சிகள் (எ-டு: எக்ஸில் சஞ்சிகை வெளியீடுகள்)

4.4.2. பெண்நிலைவாத நோக்குடைய இலக்கியச் சிற்றிதழ்கள்

இலங்கையிலிருந்து 'தோழி' தொடக்கம் 'பெண்' வரையில் (புகலிட நாடுகளிலிருந்து வெளிவருவனவற்றுள் சக்தி, 'பெண்கள் சந்திப்பு மலர்கள்' என்பன முக்கியமானவை) வெளிவரும் சிற்றிதழ்கள் இலங்கை இலக்கியச் சிற்றிதழ் வரலாற்றில் மட்டுமன்றி தமிழ் இலக்கியச் சிற்றிதழ்கள் வரலாற்றிலேயே முக்கிய இடம் பெறுகின்றன. ஒப்பீட்டுநிலையில் நோக்கும்போது தமிழ்நாட்டிலிருந்து வெளிவருவன யாவும் (எ-டு: மங்கை) பெண்கள் பற்றிய பாரம்பரியச் சிந்தனைகளை வெளிப்படுத்திவர, மாறாக, இலங்கையிலிருந்து வெளிவருவன, பெண்நிலைவாத நோக்குடன் வெளிவருகின்றமை விதந்துரைக்கப்பட வேண்டியது. (இவ்விதத்தில் மட்டக்களப்பி லிருந்து வெளிவரும் 'பெண்' இதழின் பங்களிப்பு கணிசமானது; தனித்துக் கவனிக்கப்படவேண்டியது)

4.4.3. விடுதலை இயக்கங்கள் சார்பாக வெளிவரும் இலக்கியச் சிற்றிதழ்கள்

தமிழ்நாட்டிலிருந்து முன்னர் வெளிவந்த 'பாலம்' தொடக்கம் இலங்கையிலிருந்து நீண்ட காலமாக வெளிவரும் 'வெளிச்சம்' வரையிலான இலக்கியச் சிற்றிதழ்களிலே வெளிவரும் இலங்கை எழுத்தாளரது படைப்புகள் பற்றி (இத்தகைய சிற்றிதழ்கள் தவிர, மாற்றுப்பத்திரிகையாக இலங்கையிலிருந்து வெளிவந்த திசை (1987), சரிநிகர் (1990), பிரதேசப் பத்திரிகைகளாக வெளிவந்த (எ-டு: முரசொலி, ஈழநாதம்), வெளிவருகின்ற (எ-டு: உதயன்) குறிப்பாகப் போர்க்காலம் பற்றிய - போராட்டம் - பற்றிய படைப்புகள் பற்றி அவதானிக்கும்போது அவை மூன்றாம் உலக நாடுகளின் அத்தகைய எழுத்துகளுக்கு நிகராக வெளிவருகின்றமையை அவதானிக்க முடிகின்றது.

4.4.4. மலையக, இலக்கியச் சிற்றிதழ்கள்

குறிப்பாக, எண்பதுகள் தொடக்கம், இலங்கையில் மலையகப் பிரதேசத்தில் வாழ்கின்ற மக்களிடையே பரவலாக வெளிப்பட்டு வந்த இனத் தேசிய உணர்ச்சியின் எதிரொலியை வெளிப்படுத்தும் இலக்கியச் சிற்றிதழ்கள் வெளிவருகின்றமை. எ-டு: (முன்னர் வெளிவந்த) தீர்த்தக்கரை, நந்தலாலா.

4.4.5. முஸ்லீம் எழுத்தாளரது இலக்கியச் சிற்றிதழ்கள்

இலங்கை முஸ்லீம் மக்கள் மத்தியில் உருவாகி வந்த தேசிய/ சமூக உணர்வின் வெளிப்பாட்டின் விளைவாக ஏற்பட்ட விழிப்புணர்ச்சி நிலையில் இக்காலப் பகுதியில் குறிப்பாக, கிழக்கு மாகாணத்திலிருந்து அவ்வப்போது இலக்கியச் சிற்றிதழ்கள் வெளிவந்து கொண்டிருப்பதனை அவதானிக்கலாம். (எ-டு: 'முனைப்பு', தடம், பூவிழி, 'எனவே') இவற்றினூடாக, குறிப்பிடத்தக்க இளந்தலைமுறை எழுத்தாளர்கள் பலரை இனங்காண முடிகின்றது.

5. இதுவரை கூறப்பட்ட இலக்கியச் சிற்றிதழ்கள் தவிர, வேறு சிலவகை இலங்கை இலக்கியச் சிற்றிதழ்கள் பற்றியும் இங்குக் குறிப்பிட்டாக வேண்டும். அவையாவை.

i. ***கவிதை இலக்கியச் சிற்றிதழ்கள்:*** இலங்கையில் கவிதைக்கான சிற்றிதழ் முயற்சிகள் தொடர்பான ஆரோக்கிய பாரம்பரியமொன்று இருந்து வருகின்றது. 'தேன்மொழி' தொடக்கம் 'கவிதை' வரையில் அவ்வப்போது வெளிவந்த கவிதை இலக்கிய சிற்றிதழ்கள், இலங்கை நவீன கவிதை வளர்ச்சிப்போக்கில் முக்கிய பங்களிப்பை ஆற்றி வந்துள்ளன. ஒப்பீட்டு நோக்கில் பொதுவாகத் தமிழகத்தில் வெளியானவற்றைவிட இவற்றின் பங்களிப்பு குறிப்பிடத் தக்கதென்றே கூறவேண்டும்.

ii. ***நாடக இலக்கியச் சிற்றிதழ்கள்:*** இலங்கையில் நாடகம் சார்பான சிற்றிதழ்கள் குறைவே. அண்மைக் காலந்தொடக்கமே இவற்றின் வரவு இடம்பெற்றுள்ளது (எ-டு: கலைமுகம், ஆற்றுகை). எனினும் இலங்கையிலிருந்து வெளிவரும் ஏனைய இலக்கியச் சிற்றிதழ்களைவிட

இலங்கை நாடக வளர்ச்சித்துறையில் இவற்றின் பாதிப்பு குறைவென்றே கூறத்தோன்றுகிறது.

iii. ***இலங்கைத் தமிழ் இலக்கியம் பற்றி ஆங்கிலத்தில் வெளிவரும் சிற்றிதழ்:*** இலங்கை எழுத்தாளரான தமிழ் படைப்புகளை ஆங்கிலத்தில் மொழிபெயர்ப்புச் செய்து வெளியிட்டு வருவதன் முக்கிய நோக்கமாகக் கொண்டு வெளிவருகின்ற Third Eye (1993) என்ற ஆங்கில இதழின் வரவும் தமிழ் இலக்கியச் சிற்றிதழ் வரலாற்றில் முக்கிய கவனிப்பிற்குரியதேயாகும்.

6. அண்மைக்கால இலக்கியச் சிற்றிதழ்கள்

இலங்கை இலக்கியச் சிற்றிதழ்கள் என்று நோக்கும்போது, முன்மைய காலங்களைவிட, கடந்த சில வருடங்களாகத் தேக்க நிலையையே அவதானிக்க முடிகின்றது. நீண்ட காலமாக வெளிவரும் 'மல்லிகை'யோடு புதியதாக மூன்றாவது மனிதன், ஞானம் ஆகிய இரு இலக்கிய இதழ்கள் மட்டுமே இப்போது வெளிவருகின்றன.

இவற்றுள் 'மூன்றாவது மனிதன்' குறிப்பிடத்தக்கதொன்றாக வுள்ளது. குறிப்பாக, சமகால இலக்கிய பிரச்சனைகள், போக்குகள் பற்றிய அதிக சிரத்தையெடுத்து அத்தகைய விதத்திலான கட்டுரைகள், பேட்டிகள், நூல் அறிமுகங்கள், விமர்சனங்கள், மொழிபெயர்ப்புகள் முதலியவற்றை வெளியிட்டுவருகின்றது. மேலும் மூன்றாவது மனிதனில் வெளிவருவனவற்றையும் அத்தகைய நோக்குடன் வேறு இதழ்களிலோ தனிப்படவோ எழுதப்படுவனவற்றையும் நூலுருவில் வெளியிடும் முயற்சியிலும் ஈடுபட்டுள்ளது.

இலங்கையரது புகலிட இலக்கியச் சிற்றிதழ்களின் வரவிலும் தேக்கநிலையே வெளிப்படுகின்றது. தொண்ணூறுகளில் ஏறத்தாழ முப்பது இதழ்கள் வெளிவந்திருக்குமெனில், அண்மைக்காலப் பகுதியிலே ஐந்தாறு இதழ்களே வெளிவருவதை அவதானிக்க முடிகின்றது. எனினும், முன்னைய புகலிட இலக்கியச் சிற்றிதழ்களைவிட இப்போது வருவனவற்றிலே இவற்றில் வெளிவரும் படைப்புகள் தரத்திலும், புதிய சிந்தனைகள் வெளிப்படுத்துவதிலும் வளர்ச்சி கண்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

அத்துடன் தமிழக எழுத்தாளரது ஆக்கங்களுக்கும் முக்கிய இடமளித்து வருகின்றன.

இக்காலப் பகுதியில், தமிழ்த்தேசியம் சார்ந்த பெரும்பாலான படைப்புகள் அவை இலங்கையிலிருந்து வெளிவருகின்றவாயினும் சரி, புகலிட நாடுகளிலிருந்து வெளிவருகின்றவாயினும் சரி இலக்கியச் சிற்றிதழ்களிலேயே பெருமளவு வெளிவருவதனை அவதானிக்க முடிகின்றது. பிரபலமான பத்திரிகைகளில் அவை வெளிவராத -வெளிவரமுடியாத நிலைமையே உள்ளது. எனினும், மாற்றுப் பத்திரிகை என்று கூறக் கூடியவாறுள்ள திசை, சரிநிகர் பத்திரிகை களிலும் பிரதேசமட்டப் பத்திரிகைகளாக (யாழ்ப்பாணத்திலிருந்து) ஏலவே வெளிவந்த முரசொலி, ஈழநாதம் இப்போது வெளிவரும் உதயன் முதலியனவற்றிலும் - படைப்புகளிடையே தர வேறுபாடுகளிலிருப்பினும் - அவ்வாறான படைப்புகள் அதிகளவு வெளிவருகின்றமை குறிப்பிடத்தக்கது.

7. *முடிவுரை*

இதுவரை கூறியவற்றைத் தொகுத்து நினைவுகூரும் போது இலங்கை நவீன இலக்கிய உருவாக்கத்திலும் அதன் பன்முக வளர்ச்சியிலும் இலங்கை இலக்கியச் சிற்றிதழ்களின் பங்களிப்பு கணிசமானதென்பது ஓரளவு புலப்படுமென்று கருதுகின்றேன்.

அதே வேளையில் இலக்கியச் சிற்றிதழ்களுக்குச் சமமாக பத்திரிகைகளின் பங்களிப்பும் முக்கியமானதென்பதும் இலக்கியச் சிற்றிதழ்களுக்கும் பத்திரிகைகளுக்குமிடையிலான இடைவெளி சில காலப் பகுதிகளில் அதிகரித்திருப்பது போன்றிருப்பினும் நுணுகி நோக்கும்போது பத்திரிகைகளின் அத்தகைய பங்களிப்பு மற்றொரு தளத்தில் (எ-டு: பிரதேசப் பத்திரிகைகள்) இடம்பெற்று வந்திருப்பதும் கவனத்திற்குரியதே.

தவிர இலங்கையில் மகிழ்வளிப்பு வாசிப்பு (Entertainment Reading) நோக்குடைய வர்த்தக / ஜனரஞ்சக நோக்குடைய இலக்கிய இதழ்கள் வெளிவருவது வெகு அரிதாக இடம்பெற்று வந்துள்ளது. ஏனெனில், இலங்கையில் அதற்கான விற்பனைச் சந்தை வாய்ப்பும் (அண்மைக் காலம் வரை) பிரசுர வாய்ப்பும் அரிதாகவே உள்ளன. எனினும், பொழுதுபோக்கு நோக்குடைய வாசகர் வட்டம் இலங்கையில் பரந்து காணப்படுகின்ற தென்பதும்,

தமிழ் நாட்டிலிருந்து இறக்குமதியாகின்ற அத்தகைய இலக்கிய இதழ்கள் அவர்களது அபிலாஷைகளை சிரமமோ தயக்கமோ இன்றி நிறைவேற்றிவருகின்றது என்பதும் கசப்பான உண்மைகளே!

குறிப்பு

1. சிவத்தம்பி, பேராசிரியர் கா., ***தமிழ் இலக்கிய வரலாற்றில் இதழ்கள்,*** விரிவான ஆய்விற்கான சில குறிப்புகள். **தேசிகம்,** பதிப்பாசிரியர் க. இரகுபரன், பாலர் ஞானோதய சங்கம், யாழ்ப்பாணம், பக். 71-79, 2000
2. கந்தசாமி, அநா., ***புதுமை இலக்கியம்,*** இலங்கை முற்போக்கு எழுத்தாளர் சங்கம், கொழும்பு, 1956
3. அப்துல்ஸமது, அ.ஸ., 'எனது முதற்கதை' ***களம்,*** அக்கரைப்பற்று, ப. 11, யூலை 1996
4. யோகராசா. செ., ஈழத்துச் சஞ்சிகை வரலாற்றில் பாரதி, ***வெளி,*** முதலாவது ஆண்டுமலர், கலை பண்பாட்டுப்பீடம், கிழக்குப் பல்கலைக்கழகம், பக். 15-18, 1998.

உசாத்துணை

இலங்கை இலக்கியச் சிற்றிதழ்கள்

1. *மறுமலர்ச்சி,* தி.ச. வரதராசன் (மறுமலர்ச்சிச் சங்கம்) யாழ்ப்பாணம், 1946.
2. *பாரதி,* கே. ராமநாதன் கே. கணேஷ், கொழும்பு, 1946.
3. *பாரதி,* மண்டூர், 1948.
4. *தேன்மொழி,* (கவிதை இதழ்) தி.ச. வரதராசன் மஹாகவி யாழ்ப்பாணம், 1955.
5. *கலைச்செல்வி,* சி. சரவணபவன் (சிற்பி), சுன்னாகம், 1958.
6. விவேகி, மு.வி. ஆசீர்வாதம், யாழ்ப்பாணம், 1960.
7. மரகதம், இளங்கீரன், கொழும்பு, 1961.
8. மலைமுரசு, க.ப.சிவம், ஈழக்குமார், கண்டி, 1962.
9. தேனருவி, அருண்மொழி, கொழும்பு, 1962.
10. இளம்பிறை, எம்.ஏ. ரஹ்மான், கொழும்பு, 1964.

11. சிரித்திரன், யாழ்ப்பாணம், 1965.
12. வசந்தம், இ.செ. கந்தசாமி, நல்லூர், 1965.
13. மல்லிகை, டொமினிக் ஜீவா, யாழ்ப்பாணம், 1968.
14. பாடும்மீன், நீலாவணன், கல்முனை, 1967.
15. குங்குமம், குங்குமம் நாதன், கொழும்பு, 1969.
16. கவிஞன் (கவிதைக் காலாண்டிதழ்), எம்.ஏ.நுஃமான், கல்முனை, 1969.
17. நோக்கு (கவிதைக் காலாண்டிதழ்), இ. முருகையன், இ. இரத்தினம், கொழும்பு, 1970.
18. கற்பகம், இளம் எழுத்தாளர் முன்னேற்றப் பேரவை, கொழும்பு, 1970.
19. மலர், இரா. நாகலிங்கம், மட்டக்களப்பு, 1970.
20. அஞ்சலி, ஏ.எம். செல்வராசா, வத்தளை, 1971.
21. குமரன், செ. கணேசலிங்கம், கொழும்பு, 1971.
22. பூங்குன்றம், கண்டி, 1971.
23. பூரணி, என்.கே. மகாலிங்கம், க. சட்டநாதன், கொழும்பு, 1972.
24. களனி, க. இராசரத்தினம், மக்கள் கலாசாரப் பேரவை, கிளிநொச்சி, 1973.
25. தாயகம், தேசிய கலை இலக்கியப் பேரவை, யாழ்ப்பாணம், 1974.
26. அக்னி, ஈழவாணன், கொழும்பு, 1975.
27. அலை, அ. யேசுராசா, 1975.
28. நதி, மு. ராஜாங்கம், கண்டி, 1975.
29. சமர், டானியல் அன்ரனி, யாழ்ப்பாணம், 1979.
30. கீற்று, நா. லோகேந்திரலிங்கன், கல்லூரான், கல்முனை, 1979.
31. தீர்த்தக்கரை, எஸ். சாந்திகுமார், கண்டி, 1980.
32. புதிசு, இளவாளை விஜயேந்திரன், அளவெட்டி, அ. ரவி, இளவாலை, 1980.
33. கிருதயுகம், பண்டிதர் க. வீரகத்தி, யாழ்ப்பாணம், 1981.
34. தாரகை, கணமகேஸ்வரன், மட்டக்களப்பு, 1982.

35. பூபாளம், (கவிதை இதழ்) அல்அஸூமத், கவின்கமல், மத்துகம, 1982.

36. தடாகம், கலைமகள் ஹிதாயா, மஜீத், சாய்ந்தமருது, 1984.

37. தோழி, செல்வி.எஸ். தியாகராஜா, திருநெல்வேலி, 1984.

வெளிச்சம் (யாழ்ப்பாணம்), தடம் (அக்கரைப்பற்று), ஆகவே (திருகோணமலை), எனவே, இனி (காத்தான்குடி), முனைப்பு (மருதமுனை), வயல் (மட்டக்களப்பு), சமாதானம் (மருதமுனை), வியூகம் (கல்முனை), அகிலம் (கண்டி), அரங்கம் (மட்டக்களப்பு), பெண் (மட்டக்களப்பு), நிவேதினி (கொழும்பு), நங்கை (யாழ்ப்பாணம்), கவிதை (கவிதை இதழ்) யாழ்ப்பாணம், பூவிழி (கல்முனை), களம் (அக்கரைப்பற்று), ஞானம் (கண்டி), மூன்றாவது மனிதன் (கொழும்பு), இருப்பு (கல்முனை), உதயன் (மட்டக்களப்பு), நந்தலாலா (அட்டன்), தூண்டில் (ஜேர்மனி), தேடல் (கனடா), மனிதம் (சுவிற்சிலாந்து), புதுமை (ஜேர்மனி), சிந்தனை (ஜேர்மனி), அம்மா (பிரான்ஸ்), மௌனம் (பிரான்ஸ்), சக்தி (நோர்வே), சுவடு (நோர்வே), காலம் (கனடா), புலம் (லண்டன்), தேனீ (நெதலாந்து), அஆஇ (நெதலாந்து), நான்காவது பரிமாணம் (கனடா), அக்கினிக்குஞ்சு (அவுஸ்திரேலியா), மரபு (அவுஸ்திரேலியா), அவுஸ்திரேலியா முரசு (அவுஸ்திரேலியா), உயிர் நிழல் (பிரான்ஸ்), எக்ஸில் (பிரான்ஸ்).

புலம்பெயர் நிலையில் தமிழ்ப் பத்திரிகைகள்-பத்திரிகைகளுக்கான விடயப்பொருளும் வாசகர் தேவைகளும்

பூபாலரத்தினம் சீவகன்

தாம் செல்லும் இடமெல்லாம் தமது மொழியையும் கலாசாரத்தையும் கொண்டு சென்று நிறுவ முயலும் குணாதிசயம் உலகில் உள்ள சில இனங்களுக்கு மாத்திரமே இருக்கும் ஒரு சிறப்பம்சமாகக் கொள்ளப்படுகின்றது. அந்தச் சில இனங்களில் தமிழர்களும் அடங்குவதையிட்டு நாம் பெருமை கொள்ளலாம்.

தமிழர் புலப்பெயர்வு

தமிழர்களின் புலப்பெயர்வுகள் பல கால கட்டங்களில் இடம் பெற்றிருக்கின்ற போதிலும் நான் இங்கு ஆய்வுக்கு எடுத்துக் கொண்டுள்ள விடயம் ஈழத்தமிழர்களின் புலப்பெயர்வை அடிப்படையாகக் கொண்டதாகும். குறிப்பாக 1983ஆம் ஆண்டில் இலங்கையில் இடம்பெற்ற இனக் கலவரத்தையடுத்து ஈழத்தமிழர்கள் தமது நாட்டுக்கு உள்ளேயும் வெளியேயும் இடம்பெயரத் தொடங்கினர்.

வெளிநாடுகளுக்குப் புலம்பெயரத் தொடங்கிய ஈழத் தமிழர்கள் வடக்கே கனடா முதல் தெற்கே அவுஸ்திரேலியா வரை பல நாடுகளில் புலம்பெயர்ந்து வாழ்ந்துவருகின்றனர். கனடா நாட்டில் அண்மைய புள்ளிவிபரங்களின்படி சுமார் 2 லட்சம் ஈழத்தமிழர்கள் அகதிகளாகத் தஞ்சம் கோரியுள்ளனர். அவுஸ்திரேலியாவிலும் இதுபோல் சுமார் ஒரு லட்சம் பேர் வரை தஞ்சம் கோரியுள்ளனர்.

ஐரோப்பாவைப் பொறுத்தவரை பிரித்தானியா, பிரான்ஸ், நோர்வே, நெதர்லாந்து, சுவீஸ், சுவீடன், ஜேர்மனி எனப் பல நாடுகளிலும் ஈழத்தமிழர்கள் தஞ்சம் கோரியுள்ளனர்.

இலங்கை கணிப்பீடுகளின்படி 5 லட்சத்துக்கும் அதிகமான ஈழத்தமிழர்கள் வெளிநாடுகளுக்குப் புலம்பெயர்ந்து சென்றுள்ளதாகத் தெரிகின்றது.

பிரித்தானியாவில் இதுவரை சுமார் ஒரு லட்சம் ஈழத் தமிழர்கள் தஞ்சம் கோரியுள்ளதாகப் பிரித்தானிய உள்ளக அலுவலக தகவல்கள் கூறுகின்றன.

இந்த வகையில் இடம்பெயர்ந்து சென்ற தமிழர்களை அடிப்படையாகக் கொண்டே நான் இந்தக் கட்டுரையைத் தயாரித்துள்ளேன்.

புலம்பெயர் வாழ்வின் சிரமங்கள்

பாதுகாப்புக்காகவும் சில சமயங்களில் பொருளாதாரத் தேவைகளுக்காகவும் இந்த நாடுகளில் தஞ்சமடைந்த தமிழர்கள் அங்கு எதிர்நோக்கிய சிரமங்கள் மிகவும் அதிகமாகும்.

அந்த நாட்டில் தமக்கான வதிவிட அனுமதியை உறுதிப் படுத்திக் கொள்ளுதல் முதல் சமூக, பொருளாதார, கலாசார ரீதியாக அங்கு இவர்கள் பல சிரமங்களை எதிர்கொண்டனர்.

அந்நிய நாட்டு சமூக ஏற்பாடுகளும் கலாசாரமும் ஈழத் தமிழர்கள் மீது ஒரு பெரும் எடுப்பில் தாக்கங்களை ஏற்படுத்தினாலும் தமது சமூக அமைப்பு முறைகள் கட்டுப்பாடுகள் மற்றும் கலாசாரம் ஆகியவற்றை, தாம் புலம்பெயர்ந்த நாட்டிலும் கடைப்பிடித்தல் ஈழத்தமிழர் பின்நிற்கவில்லை என்றே கூறவேண்டும்.

தமது தாயக வேர்களுடனான தமது பிடிமானத்தைத் தொடர்ந்தும் இறுக்கிப் பிடித்துக்கொள்வதில் ஈழத்தமிழர் காண்பித்த அக்கறையே, தமிழ் பத்திரிகைகள் முதல் வானொலிகள் மற்றும் தொலைக்காட்சிகள் வரை அவர்கள் சென்ற இடமெல்லாம் உருவாவதற்குக் காரணமாக அமைந்தது என்று கூறலாம்.

தாம் புலம்பெயர்ந்த நாடுகளின் கலாசாரத்தின் வேகத்துக்கு ஈடுகொடுக்க முடியாமல் அதனுள் அமிழ்ந்து போன சமூகங்கள் உண்டு. ஆனால் இந்த விடயத்தில் தாம் அடிபட்டுப் போவதைத்

தடுப்பதில் ஈழத்தமிழர்கள் காண்பிக்கும் அக்கறையும் பிரயத்தனமும் உலகத் தமிழர்கள் பெருமைப்பட்டுக்கொள்ளக் கூடிய விடயமாகும்.

இந்த அக்கறையும் பிரயத்தனமும்தான் மேற்குலக நாடுகளில் தமிழ் ஊடகங்கள் கால்பதிப்பதற்கும் அங்கு வேர் ஊன்றுவதற்கும் காரணமாக இருந்தன.

அவற்றுடன் இந்த இடப்பெயர்வுகளின் பொழுது புலம்பெயர்ந்த கூட்டங்களில் ஊடகவியலாளர்களும் இருந்தமையும் அங்குத் தமிழ் ஊடகங்கள் நிலைகொள்ளுவதற்கு ஏதுவாக அமைந்து விட்டது.

அதேவேளை தொடர்பு ஊடகங்கள் புலம்பெயர்ந்த கதையும் இங்கு இடம்பெற்றதுண்டு.

வாசகர் குணநலன்

புலம்பெயர்ந்த ஈழத்து தமிழ் வாசகர்களைப் பொறுத்தவரை நான் முன்பு கூறியதைப்போல் புதிய கலாசாரங்களிலும் பண்பாடுகளிலும் மூழ்கிப்போவதை அவர்கள் தீர்க்கமாக எதிர்த்து நின்றனர் என்றே கூறவேண்டும்.

தாயகத்தில் ஏற்கனவே தமது மொழிக்காகவும் இனத்துக்காகவும் போரிட்ட அவர்களது மனோநிலை, மாற்று சூழலிலும் தமது கலாசாரத்தை நிலைநிறுத்துவது தொடர்பில் அவர்களுக்கு ஒரு வலுவான மன உறுதியைக் கொடுத்துள்ளது என்றே கூறவேண்டும்.

குழுவாகப் புலம்பெயரக் கிடைத்த சந்தர்ப்பமும் இதற்குச் சற்று ஏதுவாக அமைந்துவிட்டது.

பிறப்பு முதல் இறப்பு வரையிலான சடங்குகளையும் இந்தத் தமிழர்கள் தம்முடன் புலம்பெயரச் செய்துவிட்டனர்.

உண்மையில் அந்நிய மண்ணின் தாக்கம் பெருமளவில் இந்தத் தலைமுறையைச் சேர்ந்த புலம்பெயர்ந்த தமிழர்களிடம் தோல்விகண்டு விட்டது என்றே கூறவேண்டும்.

தமது கலாசாரத்தின் கூறுகள் அது சாதகமானதோ அல்லது பாதகமானதோ, தேவையானதோ அல்லது தவிர்க்கப்பட

வேண்டியதோ எதுவாயினும் அனைத்தையும் தம்முடன் இவர்கள் எடுத்துச்சென்றனர் என்பதும் இங்கு உண்மையாகும்.

திருமணச் சடங்குகள் முதல் மரணச் சடங்கு வரை அனைத்தும் புரோகிதரின் சமூகத்துடன் புலம்பெயர் மண்ணில் நிகழ்கின்றன. மேற்கத்தைய நாடுகளின் மிகவும் நெரிசல் மிக்க சாலைகளை மறித்துக்கொண்டு தேர்த்திருவிழாக்களும் தமிழர்களால் நடத்தப்படுகின்றன.

பல விமர்சனங்களுக்கு மத்தியிலும் பூப்புனித நீராட்டு விழாக்கள் மண்டப ஏற்பாட்டுடன் சிறப்பாகக் கொண்டாடப் படுகின்றன.

பிள்ளை வளர்ப்பு முறையிலும் தமது பழக்க வழக்கங்களையே தமிழர்கள் இங்குத் தொடர விளைகின்றனர். எந்தத் தவறு செய்தாலும் பிள்ளைகளைத் தொடக்கூடாது என்பது ஐரோப்பியச் சட்டம். ஆனால் பிள்ளைகளை அடித்து வளர்க்கும் முறையைக் கைவிடத் தமிழர்கள் அங்குத் தயாராக இல்லை. இந்த மாறுபாடுகள் இங்கு அவர்களுக்குப் பெரும் சிரமங்களை ஏற்படுத்தினாலும் இது தொடர்பில் தமது தரப்பு வாதத்தை விட்டுக் கொடுக்கத் தமிழர்கள் தயாராக இல்லை.

அவ்வளவு ஏன்? ஒரு திருடனைப் பிடித்தால் கூட அவனை அடிக்கக்கூடாது என்பது லண்டன் பொலிஸே கடைப்பிடிக்கும் சட்டம். எந்தக் காரணத்தினாலும் எவர் உடலிலும் அவர் அனுமதியின்றி இன்னுமொருவர் இங்குக் கைவைக்க முடியாது. ஆனால் தமிழர்களோ இங்குத் தமது பிரச்சினைகளை ஆயுத முனையில் தீர்ப்பதில் பின்நிற்பதில்லை. இந்த வகையான சம்பவங்கள் மிகக் குறைவுதான் என்றாலும் அவை பதச்சோறாகிவிடுவதைத் தவிர்க்க முடியவில்லை. இவற்றை இங்கு நான் குறிப்பிடுவதற்குக் காரணம், தமது பழக்க வழக்கம் எதுவாக இருந்தாலும் அதனை விட்டு விலகப் புலம்பெயர்ந்த தமிழர்கள் தயாராக இல்லை என்பதைச் சுட்டிக் காட்டவே.

தமது பழக்கவழக்கம், பண்பாடு, கலாச்சாரம் போன்றவற்றின் மீது அளவு கடந்து இவர்கள் வைத்திருக்கும் பற்று தாயக விடத்திலும் தொடர்கின்றது. அங்கு நடக்கும் கோயில் தீர்த்தத்துக்கு இங்கு நீராடுவார்கள். அங்கு நடக்கும் மரணத்துக்கு

இங்கு இரவுபகல் துக்கம் அனுட்டிப்பார்கள். உறவினர்கள் கூடிச் சோறு ஆக்கிப் போடுவார்கள். அதேபோன்று ஈழத்து நிகழ்வுகளை அறிவதில் அளவுகடந்த ஆர்வமும் காட்டுவார்கள். ஈழத்து விடயமென்றால் அது, இது என்றில்லாமல் அனைத்திலும் ஆர்வம் காட்டுவார்கள். இந்த மனோநிலைதான் இங்குத் தமிழ் ஊடகங்களுக்கான தேவையை உறுதிப்படுத்தியது.

நான் செய்தி தயாரித்து வழங்கும் தமிழ் ஒலிபரப்பு கூட்டுத்தாபனத்தில் செய்தி ஒலிபரப்பிற்காகச் செய்தியைத் தொகுப்பதில் ஒரு நாள் சிறு கருத்து முரண்பாடு ஏற்பட்டது. யாழ் குடாநாட்டில் ஏதோ ஓர் இடத்தில் ஒரு நிலக்கண்ணி வெடித்ததில் 4 மாடுகள் இறந்தன என்பது செய்தி. ஐரோப்பிய ஊடகம் ஒன்றில் 4 மாடுகள் இறந்த செய்தியை ஒலிபரப்புவதா என்பது ஒருவரது வாதம். இதனால் செய்தி ஒலிபரப்பின் தரம் பாதிக்கப்படும் என்பது அவரது வாதம். அதிலும் நியாயம் இருப்பதுபோல் தான் தெரிந்தது. ஆனால் அதனையும் மீறி அந்தச் செய்தி ஒலிபரப்பாகிவிட்டது. அன்று செய்தி முடிந்த பின்பு அன்றைய செய்தி அறிக்கைகள் தொடர்பாக 4-5 தொலைபேசி அழைப்புகள் எமக்குக் கிடைத்தன. இந்த 4-5 அழைப்புகளுமே இந்த மாடுகள் இறந்த செய்தியைப் பற்றிதான்.

"அந்த இடத்தில் நிலக்கண்ணி வெடிக்க சாத்தியமில்லையே?" என்பது ஒன்று. "இன்னாரின் மகனான இன்னார்தான் அங்கு மாட்டுக்காளை வைத்திருந்தார். ஆகவே அவை அவரது மாடுகளாகத்தான் இருக்கும். அவர் பாவம்" என்பது அடுத்தது. "மாடுகளில் என்ன குறியிடப்பட்டிருந்தது என்பதை வினவியது அடுத்த அழைப்பு. இப்படியாகத்தான் அடுத்ததும் இருந்தது". செய்தியின் தரம்பற்றிப் பேசி, மாடுகள் இறந்த செய்தியை ஒலிபரப்ப வேண்டாம் என்று கூறிய செய்தித் தயாரிப்பாளர் அரண்டு போய்விட்டார். "காபுல் நகர் மீதான தாக்குதல் முதல் ஏனைய எந்தச் செய்தியைப் பற்றியும் எவரும் கவலைப்படவில்லை".

ஆகவே தரம் என்பது குறித்தும் சந்தேகம் எழுந்துவிட்டது. அந்த அளவுக்கு இந்த புலம்பெயர் தமிழர்களுக்குத் தாயக செய்திகளில் ஆர்வம்.

பிரித்தானியாவில் செய்தி ஒலிபரப்பும் எந்தத் தமிழ் வானொலியும் "பிரதமர் இன்று இதனை கூறினார்" என்று

செய்தியில் குறிப்பிட்டால், அங்கு எவரும் அது டொனி பிளயர் கூறியதாக இருக்கும் என்று எதிர்ப்பார்ப்பதில்லை. இலங்கை பிரதமர் இதனை கூறினார் என்றே எடுத்துக்கொள்வார்கள்.

உண்மையில் இந்தப் புலம்பெயர் மனிதன், தான் இலங்கையில் வாழ்வதாக உணர்கின்றான் அல்லது அப்படியே வாழ முயற்சிக்கின்றான் அல்லது இன்னமும் ஈழத்தவன் என்ற உணர்விலேயே வாழ்கின்றான் என்பதையே இது குறிக்கின்றது.

இங்கு வாழும் சிறுபான்மை சமூகங்கள் தமது பிள்ளைகளைப் பிரித்தானியர்களாக வளர்க்க வேண்டும் என்று சில தினங்களுக்கு முன்பு பிரித்தானிய உள்ளகச் செயலாளர் தெரிவித்துள்ளார். அவரது இந்தக் கூற்றுக்குச் சிறுபான்மை சமூகங்கள் மத்தியில் கடும் எதிர்ப்பும் எழுந்துள்ளது. அவர்கள் பிரித்தானியாவில் வாழ்கின்ற போதிலும் தமது தனித்துவத்தை, அடையாளத்தை இழக்கத் தயாராக இல்லை. இந்த எதிர்ப்பு மனப்பான்மை ஈழத்தமிழர்கள் மனதிலும் உள்ளது. அவர்கள் தமது குழந்தைகள் உலகின் எந்தக் கோடியில் வாழ்ந்தாலும் அவர்களைத் தமிழர்களாக அடையாளப்படுத்துவதிலேயே அக்கறை கொள்வார்கள்.

தமது குழந்தைகள் தமிழர்களாக வளரவேண்டும் என்பதில் இவர்களுக்கு உள்ள அக்கறை தமிழ் மொழியை அவர்களுக்குக் கற்றுக் கொடுப்பதிலும் ஏற்பட்டது. இதுவும் தமிழர் இல்லங்களில் தமிழ் பத்திரிகைகள் நுழைவதற்கு ஒரு காரணமாயிற்று.

தமிழகச் சினிமாவும் இங்குத் தமிழர்கள் மத்தியில் பெரும் செல்வாக்கைப் பெற்றுள்ளது. அன்றாட கஷ்டங்களுக்கு மத்தியில் ஒரு மூன்று மணிநேரம் தன்னைத் தமிழ் சினிமாவின் கதாநாயகனாகப் பாவித்து அதன் மூலம் தனது கற்பனை வாழ்க்கைக்கு மகிழ்ச்சி சேர்க்கும் பண்புக்கு இங்குள்ள ஈழத்து இளைஞர்களும் விதிவிலக்கல்ல. தமிழ் சினிமாவுக்கு அவர்கள் கொடுக்கும் முக்கியத்துவத்தை அவர்கள் இங்குள்ள மாற்று மொழிப்படங்களுக்குக் கொடுப்பதில்லை. தம்மை ஆங்கிலப்படக் கதாநாயகனாகக் கற்பனை செய்து சுகம் காணவும் ஈழத்து இளைஞன் தயாராக இல்லை. இதனால் தென்னிந்திய சினிமா நட்சத்திரங்களும் பாடகர்களும் இங்கு நடத்தும் நிகழ்ச்சிகள் பொருளாதார ரீதியில் சோடை போவதில்லை.

உண்மையில் வானொலி, தொலைக்காட்சி ஆகியவற்றுடன் ஒப்பிடும்போது இங்குள்ள ஈழத்தமிழர்கள் மத்தியில் பத்திரிகை வாசிப்புக்கான சாத்தியம் சற்று குறைவாகவே காணப்படுகின்றது. அதற்கு முக்கிய காரணம் நேரமின்மையாகும். தினமும் 18 மணிநேரம் உழைக்கும் ஈழத்து இளைஞர்களின் எண்ணிக்கை இங்கு அதிகம். தமது புலப்பெயர்வுக்காக அவர்கள் பல லட்சங்கள் செலவிட நேர்வதும் ஊரில் உள்ள சகோதரிக்குச் சீதனம்கொடுக்கப் பல லட்சம் சேர்க்க வேண்டிய நிர்ப்பந்தமும் இவர்களை இப்படி உழைக்க செய்கின்றது. ஐரோப்பிய நாடுகள் முழுமையாக உறங்கும் வேளைகளில் இங்குள்ள பெற்றோலிய நிலைகளிலும் பல்பொருள் அங்காடிகளிலும் ஈழத்து இளைஞன் கண்விழித்து உழைப்பார்கள். உறங்குவதற்கு 6 மணிநேரம் ஒதுக்குவதே இந்த இளைஞர்களுக்கு பெரும் சிரமமாக இருக்கும். இந்த நிலையில் ஓர் இடத்தில் அமர்ந்து பத்திரிகைகளை வாசிப்பதற்கு நேரம் கிடைப்பது மிகவும் சிரமம்.

தொலைவில் உள்ள தமது பணியிடத்துக்குச் செல்தற்காகப் பல மணி நேரம் காரை செலுத்திச் செல்லும் போது மத்திய அலை வானொலி மூலம் தமது நாட்டு நடப்புகளையும் சினிமாப் படப் பாடல்களையும் கேட்பது இவர்களது வழமை. இதனையும் மீறிப் பத்திரிகை படிப்பதாக இருந்தால் பெற்றோல் நிலையங்களிலும், கடைகளிலும் பாவனையாளர்கள் அதிகளவில் வராத அதிகாலை 1 மணி முதல் 3 மணிவரை இவர்கள் படித்தாக வேண்டும். அதிகாலை 2 மணிக்குப் பெற்றோல் நிலையத்தில் 'வான்முரசு' பத்திரிகையும் குமுதமும் படிக்கும் தமிழ் இளைஞனை நான் பார்த்திருக்கிறேன்.

இந்த நேரத்தில் சில பெற்றோல் நிலையங்களில் இன்டர்நெற் மூலம் குமுதமும் விகடனும் பார்ப்பவர்களும் உண்டு.

சிறுசஞ்சிகைகளும் அவற்றின் வாசகர்களும்

புலம்பெயர் மண்ணிலும் சிறுசஞ்சிகைகள் பெருமளவில் வெளிவருகின்றன. இவற்றின் வாசகர் வட்டம் நான் எனது ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளும் வாசகர்களில் இருந்து பெரிதும் மாறுபட்டது. சிறுசஞ்சிகைகளின் வாசகர் வட்டம் ஒப்பீட்டளவில் சிறிதாக இருந்தாலும் அவர்களது தேடல்களும் வாசிப்பு தரமும்

சாதாரண வாசகர்களில் இருந்து பெரிதும் மாறுபட்டதாகவே காணப்படுகின்றன. சாதாரண வாசகர்கள் சிறுசஞ்சிகைகளில் பெரிதும் ஆர்வம் காட்டாவிட்டாலும் சிறுசஞ்சிகை வாசகர்களின் தேடல்கள் பொதுவில் எந்த வரம்பையும் தாண்ட தயாராகத்தான் இருக்கின்றன.

அதேபோன்று சிறுசஞ்சிகைகள் அலசும் விடயங்களும் சாதாரண பத்திரிகைகளைப் போலல்லாது மிகவும் பரந்துபட்டதாகவே காணப்படுகின்றன. அதேவேளை சிறு சஞ்சிகைகள் மற்றும் அதன் வாசகர்கள் குறித்த ஆய்வுகள் மிகவும் பரந்துபட்ட அளவில் மேற்கொள்ளப்படவேண்டிய ஒன்று என்பதால் அவற்றை நான் இங்குத் தவிர்க்கின்றேன். ஆகவே எனது இந்த ஆய்வு சாதாரண பத்திரிகைகளுடன் மாத்திரமே மட்டுப்படுத்தப்படுகின்றது.

தமிழ் பத்திரிகைகளின் விலை

பொருளாதார வருமானத்தை எடுத்துக்கொண்டால் இங்கு இரண்டு அடிப்படையில் தமிழ் பத்திரிகைகள் வெளிவருகின்றன. முதலாவது பத்திரிகைகள் பணத்துக்கு விற்கப்படும் பத்திரிகை களாகும். இரண்டாவது வகைப் பத்திரிகைகள் விளம்பரப் பத்திரிகைகள், இவை இலவசமாக விநியோகிக்கப்படுகின்றன.

விற்பனைக்கு வரும் பத்திரிகைகளைப் பொறுத்தவரை அவற்றின் விலை ஒப்பீட்டளவில் இங்குள்ள தேசிய பத்திரிகைகளுடன் ஒப்பிடும்போது பல மடங்கு அதிகமாகவே உள்ளது. உதாரணமாக லண்டனில் நூற்றுக்கும் அதிகமான பக்கங்கள் கொண்ட ஒரு ஆங்கிலப் பத்திரிகையை (பலவண்ண) 35 பென்சுகளுக்கு வாங்கமுடியும். ஆனால் இங்கு வெளியாகும் 32 பக்க தமிழ் பத்திரிகைகளை சுமார் ஒரு பவுண் (100 பென்ஸ்) கொடுத்தே வாங்க வேண்டியிருக்கும்.

இந்த நிலைமைக்குத் தமிழ் பத்திரிகைகளின் உற்பத்திச் செலவே காரணம் என்று கூறவேண்டும்.

இங்குள்ள மக்கள் தொகைக்கேற்ப ஆங்கிலப் பத்திரிகைகள் பல லட்சம் பிரதிகள் அச்சாகும் சூழ்நிலையில் தமிழ்ப் பத்திரிகைகள் பெரும்பாலும் சில ஆயிரங்கள் மாத்திரமே

அச்சிடப்படுகின்றன. அத்துடன் இந்த ஆங்கில பத்திரிகை நிறுவனங்கள் தமது தேவைக்கென தனியான அச்சகங்களை வைத்திருக்கும் அதேவேளையில், இந்தத் தமிழ்ப் பத்திரிகைகள் பிற அச்சகங்களையே நாடவேண்டியுள்ளது. இந்த நிலைமை உற்பத்திச் செலவில் இங்குப் பெரும் வேறுபாட்டை ஏற்படுத்துகின்றது.

விளம்பரப் பத்திரிகைகள் பெரும்பாலும் 18 பக்கங்களுடன் இலவசமாக வெளியிடப்படுகின்றன. வழமையாகப் பத்திரிகைகள் விளம்பரங்களுக்கு 40 வீத இடமே அதிகபட்சம் ஒதுக்கப்படும். ஆனால் புலம்பெயர்ந்த மண்ணில் வெளியாகும் இந்த விளம்பரப் பத்திரிகைகள் அதற்கு விதிவிலக்கு. இவற்றில் 80 வீதத்துக்கும் அதிகமான இடம் விளம்பரத்துக்கு ஒதுக்கப்படுகின்றது. அதனால் இவற்றின் மீது வாசகர்களுக்கு நாட்டம் சற்று குறைவாகவே காணப்படுகின்றது.

எப்படியாயினும் விளம்பரத்தின் மூலமே இந்தப் பத்திரிகைகள் முழுமையாகக் கொண்டு நடத்த முடியும் என்பதால் அவை தொடர்ச்சியாக வெளிவருவதில் பெரும் தடை எதுவும் இருப்பதில்லை. இந்தப் பத்திரிகைகளில் விடயப் பொருளுக்கு 20 வீதம் மாத்திரமே ஒதுக்கப்படுவதால் அவை வெளியிடும் விடயங்கள் தரம் குறைந்தவை என்ற வாதத்துக்கு நான் வரவில்லை. ஆனால் வாசகர்களின் வாசிப்புக்கான அம்சங்களின் பரப்பு குறைந்து விடுகின்றது.

பத்திரிகை விளம்பரத்தைப் பொறுத்த வரையில்கூட ஒப்பீட்டளவில் தமிழ் நிறுவனங்கள் நல்லெண்ண அடிப்படையில் வழங்கும் விளம்பரங்களே இவற்றைக் காப்பாற்றுகின்றன. புலம்பெயர் நாடுகளில் தமிழர்கள் பல தொழில் முயற்சிகளில் ஈடுபடுகின்ற போதிலும் தமிழர்களால் நடத்தப்படும் பெரும் விருத்தி பெற்ற வியாபார நிறுவனங்கள் இங்குக் குறைவு. சிறிய சிறிய கடைகளாகவே பெருமளவில் தமிழர்கள் இங்கு நடத்துகின்றனர். இவற்றுக்கான வியாபார வட்டம் பெரும்பாலும் அதன் சுற்றுவட்டாரத்திலேயே மட்டுப்படுத்தப்பட்டு விடுவதால், பத்திரிகைகளில் விளம்பரம் செய்து வியாபாரம் செய்ய வேண்டிய நிலைமை அவர்களுக்குக் கிடையாது. ஆகவே ஓரளவுக்குப் பொதுநலன் அடிப்படையிலேயே இந்த நிறுவனங்கள் விளம்பரம் செய்கின்றன என்று கூறவேண்டும்.

ஆனால் பிறந்த தின விளம்பரங்களும் மரண அறிவித்தல்களுமே இந்தப் பத்திரிகைகளுக்குப் பெரும் வரப்பிரசாதமாக அமைகின்றன.

பத்திரிகைகளின் அமைப்பு

பத்திரிகைகளின் அமைப்பைப் பொறுத்தவரை இங்கு வெளியாகின்ற பெரும்பாலான தமிழ் பத்திரிகைகள் டப்லொயிட்டு களாகவே வெளிவருகின்றன. அதேவேளை நியுஸ்பிரிண்ட் காகிதம் விலை குறைவாதலால் அதனிலேயே அச்சிடப்படுகின்றன.

பெரும்பாலும் வண்ணப் பத்திரிகைகள் குறைவு. வான்முரசு போன்ற ஒரு சில பத்திரிகைகள் வண்ணத்தில் வெளிவருகின்றன. புலம்பெயர் மண்ணில் நாளிதழ்களை வெளியிடுவது சிரமம். ஆகவே பெரும்பாலான பத்திரிகைகள் வாராந்திர பத்திரிகைகளாகவும் சில மாத இதழ்களாகவும் வெளியாகின்றன. விளம்பரப் பத்திரிகைகள் மாதம் இருமுறை அல்லது ஒருமுறை வெளியாகின்றன.

ஐரோப்பாவைப் பொறுத்தவரை விளம்பரப் பத்திரிகைகள் அந்தந்த நாடுகளுடன் தமது விநியோகத்தை மட்டுப்படுத்திக் கொள்ள ஏனையவை ஐரோப்பிய நாடுகள் அனைத்துக்கும் விநியோகிக்கப் படுகின்றன. வான்முரசு, ஈழமுரசு, ஈழ நாடு போன்றவை ஐரோப்பிய நாடுகள் எங்கிலும் விநியோகிக்கப் படுகின்றன.

இங்கு வெளியாகும் பெரும்பாலான பத்திரிகைகளின் வடிவமைப்பில் யாழ்ப்பாணத்தில் முன்பு வெளியான பிராந்திய தமிழ் பத்திரிகைளின் சாயலைக் காணமுடியும். இங்குள்ள பெரும்பாலான பத்திரிகை ஆசிரியர்கள் யாழ்ப்பாண பிராந்திய பத்திரிகைகளால் வளர்க்கப்பட்டவர்கள் என்பது இதற்குக் காரணமாக இருக்கலாம்.

தொழில்சார் நிபுணத்துவம்

இங்குள்ள பத்திரிகையாளர்களின் தொழில்சார் நிபுணத்துவக் குறைபாடு அவர்களால் வெளியிடப்படும் பத்திரிகைகளில் தென்படுவதாக ஒரு குற்றச்சாட்டும் இங்குக் காணப்படுகின்றது. தம்மை முழுமையான பத்திரிகை ஆசிரியர்களாக வளர்த்துக்கொள்ளாத செய்தியாளர்கள் அல்லது பத்திரிகைகளுக்குக் கட்டுரைகளை மாத்திரம் அனுப்பிக்

கொண்டிருந்தவர்கள் இங்குப் பத்திரிகைகளை நடத்தப் புறப்பட்டதால் அவற்றின் தரம் தொழில்சார் தகைமையை எட்டவில்லை என்ற குற்றச்சாட்டும் காணப்படுகின்றது.

சில பத்திரிகைகள் ஓரளவுக்கு இந்தத் தரத்தைக் கொண்டிருந்தாலும் பெரும்பாலானவற்றில் அது இல்லை என்றே கூறவேண்டும்.

பத்திரிகைகளுக்கான விடயப்பொருள்

இந்தப் பத்திரிகைகளைப் பொறுத்தவரை இவற்றுக்கான விடயப்பொருள் பெரும்பாலும் மட்டுப்படுத்தப்பட்ட ஒன்றாகவே காணப்படுகின்றது என்றே கூறவேண்டும்.

இலங்கை நிகழ்வுகளை வாசகர்கள் பெரிதும் எதிர்பார்ப்பதால் இந்தப் பத்திரிகைகள் இலங்கை அரசியல், போர், அகதிகளின் இடம்பெயர்வு, அதன் மூலமான அவலங்கள் என்பவற்றுடன் தமது விடயப்பொருளை மட்டுப்படுத்திக் கொள்கின்றன.

இலங்கை அரசியலை இவை ஆழமாக ஆராய்கின்றனவா என்றால், இல்லை என்றே கூறவேண்டும். விடுதலைப் போராட்ட வீரர்களை தியாகிகளாகச் சித்தரிக்கும் அதேவேளையில் சிங்கள அரசியல் கட்சிகளையும் அவற்றுடன் இணங்கும் அனைத்து தமிழ் கட்சிகளையும் இவை விரோதிகளாகவே பார்க்கின்றன. இந்த அடிப்படையிலேயே ஆக்கங்களும் அமைகின்றன. அவர்களைக் கேலி செய்யும் வகையிலேயே தலையங்கங்களும் அமைகின்றன. இந்த விடயத்தில் மாற்றுக் கருத்துகளுக்கு இடமளிக்க புலம்பெயர் தமிழ் பத்திரிகைகள் தயாரில்லை என்றே கூற வேண்டும்.

ஈழத்தமிழர்களுக்காக ஒரு ஆயுதப் போராட்டம் நடக்கின்ற சூழ்நிலையில் அதனை ஆதரிக்க வேண்டிய ஒரு தார்மீக தேவை இந்தப் பத்திரிகைககளுக்கு ஆரம்பத்தில் இருந்தது என்னவோ உண்மைதான். அதேவேளை அதற்கு எதிராக எழுத விளையும் வேளையில் தமிழர்கள் தம்மை நிராகரித்து விடுவார்கள் என்ற அச்சமும் அவர்களுக்கு இருந்தது. இதனால் இந்தப் பத்திரிகைகள் அதற்கு ஆதரவாகவும் சிங்கள தரப்புக் கெதிராகவும் எழுதத் தலைப்பட்டன. பத்திரிகைளுக்கு இடையே போட்டிகள்

ஆரம்பிக்கவே இந்த விடயத்தை யார் அழுத்தமாகக் கடைப்பிடிப்பது என்ற போட்டியும் இந்தப் பத்திரிகைகள் மத்தியில் எழுந்துவிட்டது. தனிப்பட்ட ரீதியில் விடுதலைப் போராட்ட வீரர்களை எதிர்க்கும் பத்திரிகையாளர்கள் கூட பத்திரிகையில் எழுதும் போது அவர்களைப் பாராட்டும் ஒரு போக்கே காணப்படுகின்றது. இல்லாவிட்டால் மாறாக எழுத விளைபவர்களுக்கு இந்தப் பத்திரிகைகள் இடமளிக்கத் தயாராக இல்லை என்றும் கூறலாம். இதனால் மாற்று கருத்துகள் வெளிப்பட சாத்தியம் இல்லாமல் போய்விட்டது.

இலங்கை அரசாங்கத்தினால் ஆங்கில மொழியிலும் இங்குச் சில பத்திரிகைகள் வெளியாகின்றன. இவை தமிழர் போராட்டத்தைக் கொச்சைப்படுத்தும் வகையிலேயே தகவல்கள் வெளியிடுவது வழக்கம். இவற்றை அவை ஒரு பிரச்சார தந்திரமாகவே செய்து வருகின்றன. இதற்கு மாற்றாகப் பிரச்சாரம் செய்யவேண்டிய அல்லது அந்த பிரச்சாரத்தை முறியடிக்க வேண்டிய ஒரு தேவையும் புலம் பெயர் தமிழ் பத்திரிகைகளுக்கு உண்டு. இவை சிங்கள அரசையும் அதன் ஆதரவாளர்களையும் எதிர்த்து எழுதுவதற்கு இதுவும் ஒரு காரணமாகக் கூறப்படுகின்றது.

ஆனால் மாற்று அரசியல் சிந்தனைகளுக்கோ அல்லது அவை தொடர்பான விவாதங்களுக்கோ இவை களமமைக்க தயங்குவதுதான் வேதனைக்குரிய விடயமாகும். அனைத்துக் கருத்துக்களுக்கும் களமாக இவை அமையவில்லை என்பதுதான் உண்மை. ஒரே போக்கிலேயே அனைத்தும் அலசுகின்றன.

பிற நாடுகளில் ஏற்படும் சில முக்கிய மாற்றங்கள் குறித்தும் இவை பெரிதாகக் கவலைப்படுவது கிடையாது. அகதி, இடப்பெயர்வு போன்ற எமது நாடு சம்பந்தப்பட்ட விடயங்கள் தொடர்பான பிறநாட்டு அனுபவங்களும் இங்கு விவாதத்துக்கு விடப்படுவதில்லை. இதனால் வாசிப்பின் வளர்ச்சி ஒரு வட்டத்துக்குள்ளேயே மட்டுப்படுத்தப்பட்டு விடுகின்றது.

அழகியற்பொருளாகப் பார்க்கப்படும் போர்

இலங்கையின் வடக்கு கிழக்கு போர் நடவடிக்கைகள் குறித்து இந்தப் பத்திரிகைகள் போட்டி போட்டுக்கொண்டு செய்திகளை வெளியிடுகின்றன. இது தொடர்பான தகவல்களை

அறிந்துகொள்வதில் புலம்பெயர் தமிழர்களுக்கு உள்ள ஆர்வம் இதற்குக் காரணமாகும்.

அதேவேளை போர்ச்செய்திகளை வெளியிடுவதில் ஒரு தவறான போக்கும் இங்குக் காணப்படுகின்றது. போரின் அனர்த்தங்களை, அவலங்களை வெளியிட்டு அதனை நிறுத்துவதற்கான அவசியத்தை வலியுறுத்துவதற்கு பதிலாகப் போரை ஒரு அழகியல் பொருளாக வர்ணித்து அதனை ஊக்கப்படுத்தும் வகையிலேயே இந்தப் பத்திரிகைகள் செயற்படுகின்றன என்ற விமர்சனமும் உண்டு.

போரை ஒரு இரத்த அழிவுக்கு, உயிர் அழிவுக்கு உரிய விடயமாகப் பார்க்காமல் ஒரு கிரிக்கெட் போட்டி போன்று வர்ணிக்கும் போக்கு இந்தப் பத்திரிகைகளில் காணப்படுகின்றது.

"இந்தத் தரப்பில் இத்தனை பேர் பலி, எதிர்தரப்பில் இத்தனைபேர் பலி" என்பதை ஒரு கிரிக்கெட் போட்டிக்கான ஓட்ட எண்ணிக்கையே வெளியிடுவது போன்று இவை வெளியிடுகின்றன. அந்தச் செய்திகளுக்கான ஆதாரங்களைப் பற்றி இவை பெரிதாக அலட்டிக் கொள்வதில்லை.

இந்த வகை செய்தி வெளியீடு போரை வளர்க்க உதவுமே ஒழிய அதனைத் தணிக்க உதவாது என்ற விமர்சனமும் கூறப்படுகின்றது. இந்த வகைப் போக்கு இலங்கையில் வெளிவரும் அனைத்து மொழி பத்திரிகைகளிலும் காணப்படும் ஒன்றுதான். இது தவிர்க்கப்பட வேண்டும்.

புலம்பெயர் மண்ணின் பிரச்சினைகள் இந்தப் பத்திரிகைகளில் ஓரளவு வெளிவருகின்ற போதிலும் அவை போதாது என்றே கூறப்படுகின்றது. புலம்பெயர் நாடுகளில் ஏற்படும் அரசியல் மாற்றங்களும் குடியேற்று மற்றும் பாதுகாப்பு சட்ட மாற்றங்களும் அகதிகள் விடயத்தில் அடிக்கடி பெரும் சிக்கல்களை ஏற்படுத்தி வருகின்றன.

அகதிக்கான அந்தஸ்து கோருதல், தமது வதிவிட உரிமையை உறுதிப்படுத்திக் கொள்ளுதல் போன்ற விடயங்களில் இந்தச் சட்டமாற்றங்கள் அடிக்கடி பெரும் தாக்கத்தை ஏற்படுத்துகின்றன. பிரித்தானியா போன்ற நாடுகளில் அண்மையில்

கொண்டுவரப்பட்ட பயங்கரவாத தடைச்சட்டம் மற்றும் விடுதலைப்புலிகள் அமைப்புக்கு எதிரான தடை போன்றவை இங்குள்ள அகதிகளின் விடயங்களில் பெரும் பாதிப்பை ஏற்படுத்தி வருகின்றன. ஆனால் இவை குறித்து இலங்கை அகதிகள் மத்தியில் போதிய விழிப்புணர்வு கிடையாது. இங்கு வாழும் ஏனைய சிறுபான்மை இன சமூகங்கள் இந்த விடயங்கள் குறித்து விவாதிக்கும் அளவுக்கு இலங்கைத் தமிழர்கள் இவற்றைப் பெரிதாக விவாதிப்பதில்லை என்றே கூறவேண்டும். இவை குறித்து இந்தப் பத்திரிகைகளும் பெரிதாய அலட்டிக்கொள்வதில்லை. நாடு கடத்தப்படும் அகதிகளின் எண்ணிக்கையை வெளியிடுவதுடன் தமது பணி முடிந்துவிட்டது என்ற போக்கில் இவை நடப்பது போல் தெரிகின்றது.

இந்த விவகாரங்கள் குறித்து ஒரு விழிப்புணர்வை ஏற்படுத்துவதோ அல்லது இது குறித்துத் தமிழர்களை ஒன்று திரட்டுவதிலோ இவை பின்தங்கியே காணப்படுகின்றன. இந்த விடயத்தில் தமிழ் மக்களை வழி நடத்துவதில் தமக்குள்ள பொறுப்பை இவை பொருட்படுத்தவில்லை என்றே கூறவேண்டும்.

அதேபோன்றே புலம்பெயர் மண்ணில் தமிழர்கள் எதிர்கொள்ளும் ஏனைய சமூகப் பிரச்சினைகளையும் இவை பெரிதும் பொருட்படுத்தவில்லை. புது இடங்களில் பிள்ளை வளர்ப்பில், பெண்களின் விடயத்தில் தமிழர்கள் எதிர்கொள்ளும் பிரச்சினைகளை இவை பெரிதாக விவாதிக்கத் தவறிவிட்டன என்றே கூறவேண்டும்.

பெண்ணியம் குறித்தோ பெண்களின் ஏனைய பிரச்சினைகள் குறித்தோ இவை பெரிதாக அலட்டிக் கொள்வதில்லை. புலம்பெயர் நாடுகளில் வீடுகளிலும் பணியிடங்களிலும் தமிழ் பெண்கள் எதிர்நோக்கும் புதிய பிரச்சினைகள் ஏராளம். இந்த விடயத்தில் அவர்களை வழிநடத்தும் பொறுப்பை இந்தப் பத்திரிகைகள் தட்டிக் கழித்து விட்டன என்றே கூறவேண்டும். வெறுமனே கோலம் போடுவது குறித்தும் சமையல் கலை குறித்தும் குறிப்பு வெளியிட்டால் போதுமென்ற போக்கே காணப்படுகின்றது. தமிழ் இணையத்தளங்களில் வெளியாகும் சமையல் குறிப்புகள் இதற்கு வசதியாகப் போய்விட்டன.

இந்தச் சமூக விடயங்களைப் பொறுத்த வரை சிறுசஞ்சிகைகளின் பங்களிப்பு ஒப்பீட்டளவில் மிகவும் சிறப்பு என்றே கூறவேண்டும். குழந்தை வளர்ப்பு முதல் பாலியல் உறவில் ஓரினச் சேர்க்கை வரை அவை விலாவாரியாக ஆராய்கின்றன என்றே கூறவேண்டும். அதற்கு தேவையான தளத்தை அவை ஏற்படுத்தியுள்ளன என்றும் கூறலாம்.

பிறநாட்டு செய்திகள் தொடர்பிலும் இந்தப் பத்திரிகைகளின் கவனம் குறைவாகவே உள்ளது. ஒன்றிரண்டு விடயங்களுக்கு மேல் வெளிநாட்டு தகவல்களை வெளியிடுவதில்லை. அவையும் ஆழமாக ஆராயப்படுகின்றனவா, என்றால் இல்லை என்றே கூறவேண்டும்.

உண்மையில் வெளிநாடுகளில் தஞ்சம் கோரியிருக்கின்ற போதிலும் வெளிநாடுகளில் ஏற்படும் மாற்றங்கள், விருத்திகள் குறித்து அங்கு வாழும் தமிழர்கள் மத்தியில் விழிப்புணர்வு குறைவாகவே உளளது. இங்கே, இது நடந்தது என்பதற்கு அப்பால் இந்த விடயங்களை இந்தப் பத்திரிகைகளும் ஆய்வுக்கு எடுப்பதில்லை.

ஆய்வுக்கு எடுக்கப்படும் பிறநாட்டு விடயங்கள் தொடர்பாகக் கூட பெரும்பாலும் உள்நாட்டு விமர்சகர்களின் கருத்துக்களே பிரசுரிக்கப்படுகின்றன. சம்பந்தப்பட்ட நாட்டைச் சேர்ந்தவரின் அல்லது அந்த விடயம் சம்பந்தப்பட்டவரின் கருத்துக்கள் பெரும்பாலும் இந்தப் பத்திரிகைகளில் இடம்பெறுவதில்லை. அந்த அளவுக்கு இந்தப் பத்திரிகைகள் தமது தொடர்பை வளர்த்துக்கொள்ளவில்லை என்றே கூற வேண்டும்.

பிரித்தானியாவில் கொண்டுவரப்பட்ட பயங்கரவாத தடைச் சட்டம் தொடர்பான பாராளுமன்ற விவாதங்களுக்கோ அல்லது அது தொடர்பான உள்துறை அமைச்சரின் பத்திரிகையாளர் சந்திப்புக்கோ வான்முரசு மற்றும் தமிழ் ஒலிபரப்பு கூட்டுத்தாபனம் தவிர்ந்த ஏனைய ஊடகங்களின் செய்தியாளர்கள் எவரும் வந்திருக்கவில்லை. செய்தி ஏஜன்சிகள் மற்றும் ஆங்கில ஊடகங்களில் வெளியாகும் செய்திக் குறிப்புகளைப் பயன்படுத்தியே ஏனையவை செய்தி வெளியிட்டன.

பத்திரிகையாளர் சந்திப்புகளில் கலந்து கொள்வதன் மூலம் அந்தந்த விவகாரங்கள் தொடர்பில் தமிழ் மக்கள் பிரத்தியேகமாக எவ்வாறு பாதிக்கப்படுகின்றனர் என்பதை உரியவர்களிடம் இருந்தே நேரடியாகக் கேட்டு அறிந்து கொள்ளும் வாய்ப்பை இதனால் இந்தப் பத்திரிகைகள் இழந்து விடுகின்றன.

அதுமாத்திரமின்றி இந்தச் சந்தர்ப்பங்களில் தாம் எவ்வாறு நடந்து கொள்ள முடியும், இந்தச் சட்டங்கள் பத்திரிகையாளர் விடயத்தில் எந்த வகையில் விதிவிலக்குகளை அளித்துள்ளன என்பது போன்ற விடயங்களைத் தெளிவுபடுத்திக்கொள்ளும் சந்தர்ப்பத்தையும் இந்தப் பத்திரிகையாளர் சந்திப்புகளைத் தவிர்ப்பதன் மூலம் இந்தப் பத்திரிகைகளும் அவற்றின் செய்தியாளர்களும் இழந்து விடுகின்றனர்.

பிரித்தானியாவில் விடுதலைப்புலிகள் மீது தடை விதிக்கப் பட்ட போது விடுதலைப்புலிகள் யுத்த நிறுத்தத்தை அறிந்து இலங்கை அரசாங்கத்தைப் பேச்சுக்கு அழைத்திருந்தனர். புதிய தடைச் சட்டத்தின் மூலம் விடுதலைப்புலிகளுக்கு ஆதரவாகப் பிரச்சாரம் செய்வது அல்லது கருத்து வெளியிடுவது பொதுவாகத் தடுக்கப் பட்டிருந்தது.

ஆனால் புலிகளின் யுத்த நிறுத்தம் சம்பந்தமாகவும் அவர்களது பேச்சுவார்த்தைக்கான அழைப்பு தொடர்பாகவும் தெரிவிக்கப்படும் எந்தக் கருத்தும் புலிகளின் நிலைப்பாட்டுக்குச் சாதகமாக அமையும் சூழ்நிலையே அப்போது காணப்பட்டது. தார்மீக அடிப்படையில் அதில் தவறும் கிடையாது ஆனால் இந்த பிரித்தானிய தடைச்சட்டம் அதனைத் தடுக்குமா? என்ற ஒரு கேள்வியும் அப்போது பத்திரிகையாளர் மத்தியில் எழுந்தது. ஆனால் பிரித்தானிய அமைச்சரின் இதுதொடர்பாக பத்திரிகையாளர் சந்திப்பின் போது இந்தக் கேள்விகளுக்கு நேரடியாகப் பதிலும் கிடைத்தது. ஆனால் நான் முன்பு குறிப்பிட்டது போல் வான்முரசு மற்றும் தமிழ் ஒலிபரப்பு கூட்டுத்தாபனம் ஆகியவற்றின் செய்தியாளர்களைத் தவிர வேறு எந்தத் தமிழ் ஊடகவியலாளரும் அந்த சந்திப்பில் கலந்து கொள்ளவில்லை.

தமிழர் வட்டாரங்களில் நடைபெறும் கூட்டங்கள் மற்றும் கருத்தரங்குகளில் கலந்து கொண்டால் மாத்திரம் போதும் என்ற

வகையிலான ஒரு மனப்பாங்கே இந்தப் பத்திரிகையாளர்கள் மத்தியில் காணப்படுகின்றது. இதனால் இவர்களது ஆக்கங்கள் கூறும் கருத்துகள் குறுகிய வட்டங்களுக்கு உள்ளே அடங்கிவிடுகின்றன.

இன்டர்நெற் தளங்களில் தகவல் தேடும் போதுகூட இந்தப் பத்திரிகைகள் பெரிதும் தமிழ் தளங்களுடன் தமது தேடலை மட்டுப்படுத்திக்கொள்கின்றன. அதுவும் அந்தத் தளங்களில் உள்ள ஆக்கங்களை அப்படியே நேரடியாகப் பிரதியாக்கம் செய்யும் ஒரு பழக்கமே இங்குக் காணப்படுகின்றது. குமுதம், விகடன் போன்ற சஞ்சிகைகள் இங்கு விற்பனைக்கு வருகின்ற போதிலும் அவற்றின் தகவல் தளங்களில் இருந்து நேரடியாக ஆக்கங்களைப் பிரதி செய்து சேர்த்துக்கொள்ளும் சில பத்திரிகைகளும் இங்கு இருக்கத்தான் செய்கின்றன.

இன்டர்நெற்றின் மாற்று மொழி தளங்களில் தேடலை மேற்கொள்வது அறிவு விருத்திக்குச் சிறிது பயன்படும் என்று நினைக்கின்றேன். அதன் மூலம் வாசகர்களுக்கான விடய ஆர்வத்தையும் அதிகரிக்க முடியும். தமிழ் தளங்களில் தகவல்களை ஆதாரம் காட்டும் பண்பும் இங்குள்ள பத்திரிகைகளில் குறைவாகத் தான் காணப்படுகின்றது.

சினிமாவைப் பொறுத்தவரை ஓரளவுக்குத் தமிழக மற்றும் இலங்கை பத்திரிகைகளையே இந்தப் பத்திரிகைகளும் பின்பற்றுகின்றன. தமிழகச் சினிமாவுக்கே முன்னிடம் வழங்கப்படு கின்றது. வேற்றுமொழி சினிமாப் படங்களைப் பற்றிய செய்திகள் மிகவும் குறைவு. தமிழக சினிமாவை பற்றி எழுதும்போது கூட நடிக, நடிகைகளின் அந்தரங்க விடயங்களை எழுதுவதில் காட்டப்படும் ஆர்வம் ஏனைய தரமான சினிமா விமர்சனங்களை எழுதுவதில் காட்டப்படுவதில்லை என்றே கூறவேண்டும். சினிமா தகவல்களும் நேரிடையாக இன்டர்நெற்றில் தமிழகச் சினிமா செய்தி தளங்களில் இருந்து இறக்கப்படுகின்றன. ஏனைய ஆக்கங்களை ஓரளவுக்கு இலங்கை மொழி வழக்கைப் பின்பற்றியதாக இருக்க சினிமா விடயங்கள் மாத்திரம் தமிழகப் பேச்சு வழக்கில் அமைவதில் இருந்து இதனை உணர்ந்து கொள்ளலாம். வழமையாக இந்தப் பத்திரிகைகளில் குறைந்தது 2 பக்கங்கள் சினிமாவுக்கு ஒதுக்கப்படுகின்றன. பத்திரிகை வண்ணப்

பத்திரிகையாக இருந்தால் குறைந்தது ஒரு வண்ணப் பக்கமாவது சினிமாவுக்கு ஒதுக்கப்படும்.

தரமான சினிமா விமர்சனங்களுக்கும் சிறுசஞ்சிகைகளை நாடவேண்டிய ஒரு நிலையே இங்குக் காணப்படுகின்றது. இந்தப் பத்திரிகைகளில் சினிமா விமர்சனம் இடம்பெறுவது மிகமிகக் குறைவு.

இலங்கையில் வெளியான தினமுரசு பத்திரிகை அரசியல் தொடர் ஒன்றை வெற்றிகரமாக வெளியிட்டதைத் தொடர்ந்து இங்கும் புலம்பெயர்ந்த பத்திரிகைகள் பல அப்படியான முயற்சிகளில் ஈடுபட்டுள்ளன. பல தொடர்கள் வருகின்றன. ஆனால் இவை அனைத்தும் ஆதாரபூர்வமான தொடர்களாக இல்லை என்பதே பொதுவான அபிப்பிராயமாக இருக்கின்றது. அரசியல் வரலாறு தொடர்பான உண்மை தரவுகளில் ஆர்வம் காட்டுவதை விட இந்தக் கட்டுரைகளை எப்படி உணர்ச்சிவசப்படத்தக்க வகையில் எழுதமுடியும் என்பதிலேயே இதன் ஆசிரியர்கள் அக்கறை காட்டுவதாகத் தெரிகின்றது. அதே போன்றே இராணுவ விமர்சனங்களும் விஞ்ஞான ரீதியான ஆய்வுகளாக இல்லாமல் வாசகர்களை உவகை கொள்ளச் செய்வதையே நோக்கமாகக் கொண்டு எழுதப்படுகின்றன. இவை ஈழப்போராட்டத்துக்கு இங்குள்ள தமிழர்கள் தமது ஆதரவைத் தொடர்ந்து வழங்குவதற்குக் காரணமாக இருந்தாலும், தாயகத் தற்போதைய நிலவரங்கள் குறித்து ஒரு விவாதத்துக்கான தளம் இங்குத் தவறவிடப்படுகின்றது.

இலக்கியத்தைப் பொறுத்தவரை கதைகளும் தொடர்கதைகளும் இந்தப் பத்திரிகைகளில் ஒப்பீட்டளவில் சிறப்பாக அமைந்துள்ளன என்றே கூறலாம். தரமான இலக்கிய விமர்சனங்களுக்கு இங்குத் தளம் இல்லைதான். ஆனால் கவிதைகள் ஒரு வேகத்துடன் வெளிவரத்தான் செய்கின்றன.

கதைகள் பெரும்பாலும் தமது புகலிட சோகங்களைப் பிரிவுகளை வெளிப்படுத்துபவையாக அமைகின்றன. தாயக அனர்த்தங்களுக்கும் அவை இடமளிக்கின்றன. கவிதைகளில் ஈழப் போராட்டமும் காதலும் சமஅளவில் இடம்பிடிக்கின்றன.

கவிதைகள் மரபுக்கு உட்பட்டவையாகவும் அதற்கு அடங்காதவையாகவும் வெளிவருகின்றன. ஆசிரிய பீடத்தினரால்

எழுதப்படும் கவிதைகளைவிட வாசகர்களினால் எழுதப்படும் கவிதைகளே அதிகம். ஏதாவது ஆக்கங்களை எழுதி அனுப்புங்கள் என்று அறிவித்தல் விடுத்தால், வந்து குவியும் ஆக்கங்கள் அனைத்தும் கவிதைகளாகவே அமைகின்றன.

எப்படியாயினும் இந்தப் பத்திரிகைகள் இலக்கியத்துக்கு ஒதுக்கும் பக்கங்களின் எண்ணிக்கை போதாது என்ற குறைபாடு வழமைபோல் இலக்கியவாதிகள் மத்தியில் காணப்படத்தான் செய்கின்றது.

சிறுவர்களுக்கெனவும் ஒரு பக்கம் ஒதுக்கப்படுகின்றது. தாயக தகவல்கள், ஊர்களின் பெயர், சிறுவர்களின் ஆக்கங்கள், சில போட்டிகள் என்பவற்றால் இந்தப் பக்கங்கள் நிரப்பப்படுகின்றன.

புகலிட தமிழர்களின் அடுத்த சந்ததி அங்குத் தமிழ்மொழியை அறிந்துகொள்ளும் வகையில் போதுமான அளவுக்கு இந்தப் பத்திரிகைகள் எதுவும் செய்யவில்லை என்றே கூறவேண்டும். ஏனெனில் பல தமிழ் வீடுகளில் தமது குழந்தைகளுக்குத் தமிழ் அறிவு வளர வேண்டும் என்ற நோக்கிலேயே தமிழ் பத்திரிகைகளை வாங்குவதை நான் பார்த்திருக்கிறேன். ஆனால் அந்த வகையில் குழந்தைகளுக்குத் தமிழ் மொழியைக் கற்பிக்கும் வகையில் இந்தப் பத்திரிகைகள் திட்டமிட்டு எதுவும் செய்யவில்லை என்றே கூறவேண்டும்.

புலம்பெயர் தமிழர்களின் பத்திரிகைகளில் தினசரி வெளியாகும் பத்திரிகை கிடையாது. பெரும்பாலும் வாராந்திர, மாதாந்திர பத்திரிகைகளே வெளிவருகின்றன.

அதனால் தினசரி வெளியாகும் செய்திகளின் தொகுப்பைத் தமது வாரப்பத்திரிகைகள் ஒருவார முடிவில் சில பத்திரிகைகள் வெளியிடுகின்றன. ஆனால் இங்குள்ள தமிழர்களைப் பொறுத்தவரை தினசரி வானொலி மூலமோ தொலைக்காட்சிகள் மூலமோ அதனை அறிந்து கொள்கின்றனர். ஆகவே இந்தப் பத்திரிகைகள் தமது பல பக்கங்களை கடந்த வார செய்திகளுக்கு ஒதுக்குவது வாசகர்களை ஓரளவு சோர்வடையவே செய்கின்றது. இது மாற்றப்படவேண்டும். சில பத்திரிகைகளில் செய்திகளுக்கும் கட்டுரைகளுக்கும் இடையே உள்ள வேறுபாட்டை தெளிவாகத்

தெரியும் அளவுக்கு அவை எழுதப்படுவதில்லை. சில செய்திகளில் ஆசிரியர்களின் அபிப்பிராயம் தெளிவாகத் தெரியுமளவுக்கு அவை கலந்து எழுதப்படுகின்றன. ஆகவே இங்குச் செய்திகளை உள்ளதை உள்ளபடியே வழங்கும் திறனும் குறைந்து போகின்றது. இதனால் அதனை உள்ளது உள்ளபடி வாசகர் அறிந்துகொள்ளும் சாத்தியமும் இல்லாதுபோகின்றது. இதன் மூலம் வாசகர்கள் தகவலைக் காய்தல் உவர்த்தல் இன்றி அறிந்து அதற்கேற்ப தாமே முடிவு செய்யும் நிலைமை இங்கு இல்லாது போகின்றது.

புலம் பெயர் தமிழ் பத்திரிகைகள் பெரும்பாலும் ஈழத்தமிழர்களை வாசகர்களாகக்கொண்டு வெளிவருகின்ற போதிலும் இவற்றில் இந்தியச் செய்திகள் குறிப்பாகத் தமிழக தகவல்கள் முக்கிய இடத்தைப் பிடித்துவிடுகின்றன. குறைந்தபட்சம் இரண்டு பக்கங்களையாவது தமிழகத் தகவல்களுக்கு இவை ஒதுக்குகின்றன. தமது தாயகத்தில் தாம் வாழ்ந்த காலம் முதல், புலம்பெயர்ந்த பின்பு வரை தமிழக அரசியல் நிலவரங்கள் மற்றும் சமூக விடயங்களில் ஈழத்தமிழர்களுக்கு உள்ள ஆர்வத்தின் அடிப்படையிலேயே தமிழகச் செய்திகளுக்கு அங்கு முக்கியத்துவம் வழங்கப்படுகிறது. பெரும்பாலும் இந்தியத் தகவல்கள் இன்டர்நெற்றில் இந்திய தமிழ் தகவல் தளங்களிலிருந்தே பெறப்படுகின்றன. அவை அப்படியே பிரதியாக்கம் செய்யப்படுவதையும் காணக்கூடியதாக உள்ளது. இலங்கைத் தகவல்களைவிட இந்திய தகவல்கள் இன்டர்நெற்றில் படங்களுடன் வெளிவருவதும் இதற்கு உசிதமான நிலையாகும் இந்தத் தடவை இலங்கை பாராளுமன்றத்துக்குத் தெரிவான இலங்கையின் வடகிழக்கு தமிழ்த் தலைவர்களின் புகைப் படங்களைவிட தமிழக தலைவர்களின் புகைப்படங்களை இந்தப் பத்திரிகைகளின் மூலம் அங்குள்ளவர்கள் அதிகம் பார்த்திருப்பார்கள் என்று கூறலாம்.

இதே வேளையில் ஈழத்தமிழர் விவகாரத்தில் அதிக ஆர்வம் காட்டுவதாக அவர்கள் நினைக்கும் வை. கோபால்சாமி, பழ. நெடுமாறன், டாக்டர் ராமதாஸ் போன்றவர்கள் பற்றிய செய்திகளுக்கு எதிர்பார்ப்பு அதிகம் என்றும் கூறலாம். ஆனாலும் 'தலித்தியம்' போன்ற விடயங்கள் குறித்து இந்தப் பத்திரிகைகள் பெரிதாகக் கவனம் கொள்வதில்லை என்றே கூறவேண்டும்.

புலம் பெயர் நிலையில் தமிழர்களால் நடத்தப்படும் இந்தப் பத்திரிகைகளின் குறைகள் பல பற்றிக் குறிப்பிடும் அதேவேளை அவற்றுக்கான காரணங்கள் குறித்தும் இங்கு ஆராய்ந்தாக வேண்டும்.

பொதுவாக இந்தப் பத்திரிகைகளைப் பொறுத்தவரை அவற்றின் வாசகர்களின் எண்ணிக்கை இலங்கை, இந்தியா மற்றும் மலேசியா போன்ற நாடுகளில் உள்ள தமிழ் வாசகர்களுடன் எண்ணிக்கை ஒப்பிடும்போது மிகக் குறைவாகவே இருக்கின்றது.

இலங்கையிலிருந்து புலம் பெயர்ந்த சுமார் 5 லட்சம் பேரை மையமாக வைத்து இவை வெளியாகின்ற போதிலும் இவர்கள் உலகின் பல பாகங்களுக்கும் பரந்து போய்விட்டதால், இந்தப் பத்திரிகைகளால் இவர்கள் அனைவரையும் சென்றடைய முடிவதில்லை. ஒவ்வொரு தனி நாட்டிலும் கூட இவர்கள் ஒரு சில இடங்களைத் தவிர பல இடங்களில் சிறு சிறு குழுக்களாகத் தனித்தனியாகவே வசிக்கின்றனர். ஆகவே இந்தப் பத்திரிகைகளின் விநியோக எண்ணிக்கை மிக மிகக் குறைவாகவே உள்ளது. இதனால் தமிழ் நாட்டைப் போன்று இங்கெல்லாம் பத்திரிகையின் விற்பனையை மாத்திரம் நம்பி பத்திரிகை நடத்த முடியாது.

இலங்கையில் கூட யாழ்ப்பாணப் போக்குவரத்துக்குத் தடை செய்யப்பட்ட வேளையில் இப்படியான ஒரு நிலை உருவானது என்றும் கூறலாம்.

இந்த நிலைமை காரணமாக எழும் பொருளாதாரப் பற்றாக்குறை இங்கெல்லாம் பத்திரிகையாளர்களைப் பெரும்பாலும் முழுநேர பத்திரிகையாளர்களாகச் செயற்பட அனுமதிப்பதில்லை. பகுதி நேரமாகப் பத்திரிகையாளர்களால் செய்யப்படும் இந்தப்பணி கூடப் பெரும்பாலும் தொண்டு அடிப்படையிலேயே எதிர்பார்க்கப் படுகிறது.

இதனால் ஆசிரியர் பீடத்தில் இடம்பெறுபவர்களின் எண்ணிக்கையும் மிகவும் குறைவாகவே காணப்படுகின்றது. தமிழ் தட்டச்சிலும் பக்க வடிவமைப்பிலும் தகுதி பெற்றவர்களைக் கண்டுபிடிப்பதும் பெரும் சிரமமாக உள்ளது. அவர்களுக்கு ஊதியம் கொடுப்பது அதனிலும் சிரமம்.

கட்டுரை எழுதுவது முதல் அதனை திருத்துவது, ஒப்பு நோக்குவது வரை பெரும்பாலும் ஒருவரே செய்யவேண்டியிருக்கும். இந்த மாதிரியான வேலைப்பளு, ஊதியக்குறைவு, நேரத் தட்டுப்பாடு பொருளாதார நிலை என்பனவே இங்குப் பல குறைபாடுகளுக்குக் காரணமாக அமைகின்றன.

அதேபோல் தொழில்சார் நிபுணத்துவம் பெற்ற தமிழ் பத்திரிகையாளர்களும் இங்குக் குறைவு. தொழில்சார் நிபுணத்துவம் குறைபாடு என்பது இங்கு உள்ள அனைத்துத் தமிழ் தொடர்பு சாதனங்களிலும் காணப்படுகிறது.

இதனால் தமிழ் இலக்கணப்பிழை முதல் பல குறைகள் இந்த நிபுணத்துவ குறைபாட்டால் இடம் பெறுகின்றன. உண்மையில் ஒரு பத்திரிகையைக் கொண்டு வரவேண்டும் என்ற இவர்களது ஆர்வம் மாத்திரமே இவர்களது முதலீடாக உள்ளது. "ஆலை இல்லா ஊருக்கு இலுப்பம்பூ சர்க்கரை" என்ற நிலையே பெரும்பாலும் காணப்படுகின்றது.

இந்த நிலையை ஒரே நாளில் தீர்த்துவிடவும் முடியாது. அதற்குத் திட்டமிட்ட நடவடிக்கைகள் தேவை. இவை எல்லாவற்றுக்கும் முன்பாகத் தமிழ் பத்திரிகையாளர்கள் மத்தியில் ஒரு கூட்டுறவும் தேவைப்படுகின்றது. இது இங்கு உருவாகும் பல பிரச்சினைகளை தவிர்க்க உதவும்.

வாசகர் தேவை

தனது தாயகத்துடனான, வேருடனான பிடிமானத்தை வலுப்படுத்திக் கொள்வதே இங்குள்ள தமிழ் வாசகனின் முக்கிய அடிப்படைத் தேவையாக இருக்கின்றது. இதற்காகவே அவன் தமிழ் இதழ்களை எதிர்பார்க்கிறான்.

இந்த வாசகனின் நேரப்பற்றாக்குறையும் தமிழ் வாசிப்புத் திறன் மட்டமும் பெரும்பாலும் மேலோட்டமாகச் செய்திகளைப் பார்த்துச் செல்லும் பண்பையே உருவாக்கியுள்ளது.

ஆகவே விடயத்தைச் சுருக்கித் தெளிவாக ஒரே பார்வையில் புரிந்துகொள்ளக்கூடிய வகையில் வழங்கவேண்டியது இந்தப் பத்திரிகைகளின் பொறுப்பாகும்.

இவர்களது தமிழ் அறிவின் மட்டத்தைக் கருத்தில் கொண்டு மிகவும் இலகு தமிழில் ஆக்கங்கள் எழுதப்படவேண்டும். அதேவேளை புலம்பெயர் மண்ணில் உள்ள அடுத்த தலைமுறையினருக்குத் தமிழ் மொழிகளைப் பரிச்சயம் செய்யும் பணிகளிலும் இந்தப் பத்திரிகைகள் ஈடுபடவேண்டும். இது ஒரு இலகுவான காரியமல்ல. இது தொடர்பாய் நன்றாக ஆய்வுகள் செய்யப்பட்டு அதனடிப்படையில் திட்டமிட்டு இந்தப் பத்திரிகைகள் மொழிப்பயிற்சியை வழங்க முன்வரவேண்டும்.

செய்திகளைக் கையாளும்போது நடுநிலை மாறாது அவற்றை உள்ளது உள்ளபடியே கொடுக்க முயற்சி செய்ய வேண்டும். இதன் மூலமே வாசகர்கள் தகவல்களை உள்ளது உள்ளபடி புரிந்துகொண்டு அதற்கேற்ப முடிவுகளை எடுக்க முடியும். எந்த விவகாரத்திலும் முடிவெடுக்கும் உரிமை வாசகர்களிடம் முன்வைக்கப்படவேண்டும்.

வாசகர்களின் முடிவு எடுக்கும் உரிமையைத் தாம் பறித்துவிடக் கூடாது. தமது அபிப்ராயத்தை மாத்திரம் அல்லது ஒரு தரப்பின் அபிப்ராயத்தை மாத்திரம் வாசகர்களுக்கு அறிவித்து அவர்களது முடிவெடுக்கும் உரிமையைப் பத்திரிகைகள் தாம் தட்டிப் பறித்துவிடக் கூடாது.

எந்த ஒரு பொது விடயத்திலும் ஒரு விவாதத்துக்கான தளத்தை இவை ஏற்படுத்தித் தர வேண்டும். இதன் மூலமே வாசகனின் சிந்தனையிலும் வாசிப்பிலும் வளர்ச்சியை ஏற்படுத்தமுடியும். இந்த நிலைமை புலம் பெயர் பத்திரிகைகளில் தற்போது குறைவாகவே காணப்படுகின்றது. அது மாற்றப் படவேண்டும்.

இலங்கை விவகாரங்களை உணர்வு பூர்வமாக அலசுவதைத் தவிர்த்து அறிவுபூர்வமாக அலச முன்வரவேண்டும். போரை ஒரு அழகுப்பொருளாகப் பார்க்கும் தன்மையை மாற்றி அதன் அவலங்களும் அழிவுகளும் முன்வைக்கப்பட்டு சமாதானத்தை நோக்கி வாசகர்களை ஒன்றுதிரட்ட இந்தப் பத்திரிகைகள் முன்வர வேண்டும். அதே வேளை சிங்கள அரசின் உதவியுடன் வெளியாகும் பிறமொழி ஊடகங்களின் பொய்ப்பிரச்சார தந்திரங்களை விவாதித்து ஆக்கபூர்வமான வகையில் அவற்றை முறியடிக்க

முன்வர வேண்டும். இது ஒரு கயிற்றில் நடப்பது போன்ற பணிதான். ஆனால் அதனைச் செய்தாகவேண்டிய அவசியம் உள்ளது.

புலம்பெயர் வாழ்வின் அவலங்களும் சோகங்களும், பெண் உரிமை போன்ற விடயங்களும் வெறுமனே கதைகள், கவிதைகளுக்கான உட்பொருளாக மாத்திரம் இருப்பதைத் தவிர்த்து அவற்றை விஞ்ஞானபூர்வமாக விவாதிக்க இந்தப் பத்திரிகைகள் முன்வர வேண்டும். பெண்களுக்கான தேவைகள் சமையல்கலையும் கோலமிடலும்தான் என்ற நிலையை மாற்றிப் பெண்ணியம் தொடர்பான ஆக்கபூர்வமான ஆய்வுகளுக்கு வழி செய்யவேண்டும்.

புலம்பெயர் மண்ணில் உள்ள பிற சமூகங்கள் குறித்த அறிவு எமது தமிழர்களுக்கு மிகவும் குறைவாகவே உள்ளது. அவர்களுடனான புரிந்துணர்வின்மை இங்குப் பல மோதல்களுக்கும் ஆயுதபாவனைகளுக்கும் வழி செய்துள்ளன. இந்த நிலைமை மாறவேண்டுமானால் புலம்பெயர் மண்ணிலுள்ள ஏனைய சமூகங்கள் மற்றும் அவர்களின் கலாச்சாரம் குறித்து ஒரு புரிந்துணர்வு தமிழ் மக்களுக்குத் தேவைப்படுகிறது. இந்த விடயத்தில் இந்தப் பத்திரிகைகள் அதிக கவனம் செலுத்த வேண்டும்.

அகதிகள் விவகாரங்களைப் பாதிக்கும் சட்டமாற்றங்கள் மற்றும் ஏனைய மாற்றங்கள் குறித்தும் புலம்பெயர் தமிழர்கள் அதிகம் அறிந்துகொள்ளவேண்டிய ஒரு தேவை இருக்கின்றது. முன்பு கூறியதுபோல் இது பல வகைகளில் அவர்களுக்கு உதவும். இந்த விடயங்களிலும் தமிழ் பத்திரிகைகள் அதிக கவனம் செலுத்தவேண்டும். இந்த விடயங்கள் தொடர்பில் வாசகர்களை வழிப்படுத்தவேண்டிய ஒரு கடப்பாடு இந்தப் பத்திரிகைகளுக்கு உண்டு.

பிறநாட்டு விடயங்களில் சாதாரண தமிழ் வாசகர்கள் அக்கறை செலுத்துவது ஒப்பீட்டளவில் குறைவாக இருக்கலாம். அதற்காக அந்த விடயங்களை இந்தப் பத்திரிகைகள் முழுமையாக ஒதுக்கிவிட முடியாது. இவை தொடர்பிலும் அதிக அக்கறை செலுத்துவதுடன் எமது பிரச்சினைகளையொத்த பிறநாட்டு பிரச்சினைகள் தொடர்பில் ஆழமான அலசல்களுக்கு வழி சமைக்க வேண்டும்.

சினிமா மற்றும் பொழுதுபோக்கு அம்சங்களில் படிப்படியாக ஒரு தரமான ரசனைக்கு வழிசெய்ய வேண்டும். நடிகைகளின் அரை நிர்வாணப் படத்தையே வாசகர்கள் விரும்புகின்றார்கள் என்ற காரணத்துக்காக அதனைப் பிரசுரிப்பதில் ஆர்வம் காட்டாமல் தரமான ரசனைக்கு அவர்களுக்கு வழிகாட்ட வேண்டும். தமிழக-இந்திய விடயங்களும் இன்னும் கொஞ்சம் ஆழமாக அலசப்படலாம்.

பத்திரிகைகளில் பிரசுரமாகும் ஆக்கங்கள் பெரும்பாலும் ஒரு சிறிய வட்டத்துக்குள் இருக்கும் ஒரு சிலராலேயே எழுதப்படுவதாகத் தெரிகின்றது. பிறநாட்டு, பிறமொழி அறிஞர்களின் ஆய்வுகளுக்கு முக்கியத்துவம் கொடுக்கப்படுவது மிகவும் குறைவாக உள்ளது. இதனால் கருத்தாடல்கள் கூட ஒரு சிறிய வட்டத்துக்குள்ளேயே முடங்கி வருகின்றன. இந்த நிலைமை தவிர்க்கப்படவேண்டும். பிறமொழி, பிற சமூக அறிஞர்களின் கருத்துகளுக்கு முக்கியத்துவமளித்துப் பிரசுரிக்க முன் வரவேண்டும்.

விளம்பரங்களுக்கு ஒதுக்கப்படும் இடம் ஒரு கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வரப்படவேண்டும். பத்திரிகை நிறுவனத்தின் பொருளாதார வசதியுடன் இந்த டியம் நேரடியாக தொடர்பு கொண்ட ஒன்று. மிகவும் சிறிய வாசகர் வட்டத்தைத் கொண்ட இந்தப் பத்தரிகைகளுக்கு இது மிகவும் சிரமமான காரியம்தான். ஆனால் இந்த விடயத்தை அதிக சிரத்தையுடன் கவனத்தில் கொள்ளாவிட்டால் காலப்போக்கில் பத்திரிகை மீதான தமிழ் வாசகர்களின் அபிமானம் குறைந்து போகலாம். மரண அறிவித்தல்களை ஒரு முழுப்பக்கத்துக்குப் பிரசுரிக்கும் வழமையிலும் ஒரு பரிசீலனை தேவை.

பத்திரிகைகளின் விலையிலும் ஒரு வகை கட்டுப்பாடு கொண்டு வருதல் நலம் என்றே நினைக்கின்றேன். இதுவும் ஓரளவுக்கு வாசகர்களின் எண்ணிக்கைய அதிகரிக்க ஏதுவாகலாம்.

இதுவும் மிகவும் சிரமமான காரியமே. ஆனாலும் ஏனைய மொழிப் பத்திரிகைகள் குறைந்த விலையில் வெளிவரும்போது தமிழ் பத்திரிகைகளும் அதில் கவனம் செலுத்துதல் அவசியமே.

பக்க வடிவமைப்பிலும் புதுமைகள் புகுத்தப்படுத்தல் அவசியம் என்றே நினைக்கின்றேன். கையால் அச்சுக்கோர்த்த

காலத்து வடிவமைப்புடனே பத்திரிகைகள் வெளிருவது தவிர்க்கப்படவேண்டும்.

அதேவேளை தொழில்சார் ரீதியிலான பயிற்சிகளும் ஏற்பாடு செய்யப்படவேண்டும். இதற்கு ஆங்காங்குள்ள தொண்டு நிறுவனங்களின் உதவி நாடப்படலாம். பக்கவடிவமைப்பு முதல் ஆசிரியர் தலையங்கம் வரை சிறந்த பயிற்சி தேவைப்படுகின்றது. இதற்கு இந்தியா போன்ற நாடுகளில் உள்ள பத்திரிகை துறைசார் அமைப்புகள் உதவலாம்.

இவை எல்லாவற்றிலும் முக்கியமாகத் தமிழ் பத்திரிகையாளர்கள் மத்தியில் ஒரு இணைப்பு தேவைப்படுகின்றது. கருத்துக்களை, தகவல்களைப் பரிமாறிக்கொள்வது முதல் எதிர்கொள்ளும் அனைத்துப் பிரச்சினைகளிலும் கைகோர்த்துப் போராட இவை வசதி செய்யும் என்று நினைக்கின்றேன். இந்த ஒருங்கிணைப்பு சர்வதேச பத்திரிகையாளர்கள் மட்டத்துக்கு விஸ்தரிக்கப்படுவதும் அவசியமாகும்.

சென்னைப் பல்கலைக்கழகம்
உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்
காஞ்சி மணிமொழியார் தமிழ்ப் பேரவை
டாக்டர் மா. இராசமாணிக்கனார்
இதழியல் ஆய்வு மையம்

இணைந்து நடத்தும்

தமிழில் இதழியல்
பன்னாட்டுக் கருத்தரங்கம்

அழைப்பிதழ்

(இதழியல் கருத்தரங்கம் - 11)

அன்புடையீர்,

வணக்கம்.

தமிழ் இதழியல் தொடர்பான கருத்தரங்குகள் வரிசையில் 1997 முதல் 1999 ஆம் ஆண்டு வரை பத்துக் கருத்தரங்குகள் நிகழ்ந்துள்ளன. அவ்வரிசையின் நிறைவாகத் **தமிழில் இதழியல்-பன்னாட்டுக் கருத்தரங்கம் 2001 டிசம்பர் 21, 22, 23** ஆகிய தேதிகளில் **சென்னைப் பல்கலைக்கழகத்தில்** (எப்-50, பேரவை அரங்கு) நிகழவுள்ளது. தமிழகத்திலிருந்தும் புதுவையிலிருந்தும் அயலகத்திலிருந்தும் அறிஞர்கள் கலந்து கொண்டு சிறப்பிக்க உள்ளனர்.

அனைவரும் வருகைதந்து சிறப்பிக்குமாறு வேண்டுகிறோம்.

உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்
சென்னை

சென்னைப் பல்கலைக் கழகம்
சென்னை

காஞ்சி மணிமொழியார் தமிழ்ப் பேரவை
சென்னை

டாக்டர் மா. இராசமாணிக்கனார் இதழியல் ஆய்வுமையம்
சென்னை

தொடக்கவிழா

21.12.2001 முற்பகல் 10.00 -1.00
வெள்ளி

தலைமை

முனைவர் **இ. சுந்தரமூர்த்தி** அவர்கள்
பேராசிரியர் - தலைவர்
தமிழ் இலக்கியத் துறை, சென்னைப் பல்கலைக்கழகம்

தொடக்கவுரை

முனைவர் **பொற்கோ** அவர்கள்
துணைவேந்தர், சென்னைப் பல்கலைக்கழகம்

முதன்மை உரை

முனைவர் **கா. சிவத்தம்பி** அவர்கள்
தகைசார் ஓய்வு நிலைப் பேராசிரியர்
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், இலங்கை

சிறப்புரை

முனைவர் **சிற்பி பாலசுப்பிரமணியன்** அவர்கள்
தமிழ்த்துறைத் தலைவர் (ஓய்வு) பாரதியார் பல்கலைக்கழகம், கோவை

முனைவர் **ச. மெய்யப்பன்** அவர்கள்
நிறுவனர், மணிவாசகர் பதிப்பகம், சிதம்பரம்

முனைவர் **ம. இராசேந்திரன்** அவர்கள்
இயக்குநர், தமிழ் வளர்ச்சித் துறை, தமிழ்நாடு அரசு

வாழ்த்துரை

முனைவர் **இராம. தட்சிணாமூர்த்தி** அவர்கள்
தமிழ்த்துறைத் தலைவர், பச்சையப்பன் கல்லூரி, சென்னை

முனைவர் **நா. செயப்பிரகாசு** அவர்கள்
பேராசிரியர், தமிழ்த்துறை, பச்சையப்பன் கல்லூரி, சென்னை

முதல் அமர்வு

21-12-2001 பிற்பகல் 2.00 -5.00

வெள்ளி

பொருள் : தமிழ் இதழ்கள் 1831 - 1881

தலைமை

முனைவர் இராம. குருநாதன்

கட்டுரையாளர்	தலைப்பு
திரு.பெ.சு. மணி	கருத்தியல் கோட்பாடு
திரு. இளந்தமிழன்	அமைப்பும் ஆக்கமும்
முனைவர் மோ. தமிழ்மாறன்	மொழி
திரு. மா.ரா. அரசு	பெர்சிவல்

இரண்டாம் அமர்வு

22-12-2001 முற்பகல் 10.00 -1.00

சனி

பொருள் : தமிழ் இதழ்கள் 1882 - 1941

தலைமை

திருமிகு விஜய திருவேங்கடம்

கட்டுரையாளர்	தலைப்பு
திரு. பெ.சு. மணி	கருத்தியல் கோட்பாடு
முனைவர் மு. சுதந்திரமுத்து	அமைப்பும் ஆக்கமும்
முனைவர் இராம. சுந்தரம்	மொழி
பேராசிரியர் செ.போத்திரெட்டி	ஜி. சுப்பிரமணிய ஐயர்
முனைவர் ப. மகாலிங்கம்	திரு.வி.க.
முனைவர் கு. பகவதி	வரதராசுலு நாயுடு

மூன்றாம் அமர்வு

22-12-2001 பிற்பகல் 2.00 - 5.00
சனி

பொருள் : தமிழ் இதழ்கள் 1882 - 1941

தலைமை

முனைவர் **மு. தங்கராசு**

கட்டுரையாளர்	தலைப்பு
திரு.பெ.சு. மணி	பாரதியார்
திரு. க. திருநாவுக்கரசு	பெரியார்
திரு. மா. ரா. அரசு	டி.எஸ். சொக்கலிங்கம்
முனைவர் த. வசந்தாள்	கல்கி
முனைவர் பழ. அதியமான்	வை. கோவிந்தன்
முனைவர் நா. செங்கமலத்தாயார்	புதுவை இதழ்கள்

நான்காம் அமர்வு

23-12-2001 முற்பகல் 10.00 -1.00
ஞாயிறு

பொருள் : தமிழ் இதழ்கள் 1942 - 2000

தலைமை

திருமிகு **மே.து. ராசுகுமார்**

கட்டுரையாளர்	தலைப்பு
பேரா. ஆ. சிவசுப்பிரமணியன்	கருத்தியல் கோட்பாடு
முனைவர் தொ. பரமசிவம்	அமைப்பும் ஆக்கமும்
முனைவர் தங்க. மணியன்	மொழி
திரு. முத்துக்கிருட்டிணன்	அண்ணா
திரு. அ.மா.சாமி	சி. பா. ஆதித்தனார்
திரு. மா. செங்குட்டுவன்	கலைஞர்
திரு. பொன்னீலன்	ப. ஜீவானந்தம்
முனைவர் ஜே.ஆர். இலட்சுமி	கண்ணதாசன்

ஐந்தாம் அமர்வு

23-12-2001 பிற்பகல் 2.00 -5.00
ஞாயிறு

பொருள் : அயலகத் தமிழ் இதழ்கள்

தலைமை

முனைவர் **கா. சிவத்தம்பி**

கட்டுரையாளர்	தலைப்பு
கலாநிதி செ. யோகராசா	இலங்கையின் இலக்கியச் சிற்றிதழ்கள்
கலாநிதி அம்மன்கிளி முருகதாஸ்	இலங்கையில் தமிழ் இதழியல் வளர்ச்சி
திரு. ம. வசந்தன் (சிவகுமார்)	இலங்கையில் மாற்று இதழ்கள்-தேவையும் வரலாறும்
திரு. த. சிவராம்	இலங்கை இதழ்களில் அரசியல் பற்றிய எழுது முறை
திரு. சி. பாரதி	வாசகர் கவர்ச்சி - இதழியல் துறையில் தொழிற்பட்டுள்ள முறைமை
ஜனாப் மெ. பௌசர்	இலங்கையின் சஞ்சிகைகள்- அச்சும் அமைப்பும்
திருமதி ம. தேவகௌரி	இலங்கை இதழியல் துறையில் பெண்கள்

நிறைவு விழா

23-12-2001 மாலை 5.00 -7.00

தலைமை

முனைவர் **தமிழன்பன்** அவர்கள்
தமிழ்ப் பேராசிரியர் (ஓய்வு) புதுக்கல்லூரி, சென்னை

சிறப்புரை

முனைவர் **அ.அ. மணவாளன்** அவர்கள்
தமிழ் மொழித்துறைத் தலைவர் (ஓய்வு) சென்னைப் பல்கலைக்கழகம்

முனைவர் **இரா. இளவரசு** அவர்கள்
பேராசிரியர்-தலைவர், பாரதிதாசன் உயராய்வு மையம்
பாரதிதாசன் பல்கலைக்கழகம், திருச்சி

நிறைவுரை

பேராசிரியர் **மா. இளஞ்செழியன்** அவர்கள்
முதல்வர் (ஓய்வு) கந்தசாமி நாயுடு கல்லூரி, சென்னை

இதுவரை நிகழ்ந்த இதழியல் கருத்தரங்குகள் - 10

நாள்	கருத்தரங்கப் பொருள்	நிகழிடம்
13-10-97 14-10-97	இந்திய விடுதலைக்கு முந்தைய தமிழ் இதழ்கள் 1	தமிழ் மொழித்துறை சென்னைப் பல்கலைக்கழகம்
13-12-97 14-12-97	இந்திய விடுதலைக்கு முந்தைய தமிழ் இதழ்கள் 2	பச்சையப்பன் கல்லூரி சென்னை
6-2-98 7-2-98	திராவிட இயக்க இதழ்கள் 1	தமிழ் இலக்கியத்துறை சென்னைப் பல்கலைக்கழகம்
3-4-98 4-4-98	இந்திய விடுதலைக்கு முந்தைய தமிழ் இதழ்கள் 3	காதி பவன் சென்னை
29-7-98	இந்திய விடுதலைக்கு முந்தைய தமிழ் இதழ்கள் 4	சென்னை வானொலி நிலையம் சென்னை
21-9-98 22-9-98	திராவிட இயக்க இதழ்கள் 2	தமிழ் இலக்கியத்துறை சென்னைப் பல்கலைக்கழகம்
11-12-98 12-12-98	தமிழ் ஆய்வு இதழ்கள்	பச்சையப்பன் கல்லூரி சென்னை
10-4-99 11-4-99	பொதுவுடைமை இயக்க இதழ்கள்	உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம் சென்னை
24-7-99	மகளிர் இதழ்கள்	உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம் சென்னை
8-10-99 9-10-99 10-10-99	தமிழ் இலக்கிய இதழ்கள்	உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம் சென்னை

உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்
சென்னை - 600 113

அண்மை வெளியீடுகள்

	ரூ.பை.
சங்கத் தமிழ் பகுதி 1	100.00
சங்கத் தமிழ் பகுதி 2	100.00
சங்கத் தமிழ் பகுதி 3	115.00
சங்கத் தமிழ் பகுதி 4	130.00
சங்கத் தமிழ் பகுதி 5	110.00
Freudism in the Novels of James Joyce and T.Jankiraman:A comparative study	125.00
இலக்கணத்தொகை யாப்பு பாட்டியல்	290.00
தென்கிழக்கு ஆசியா நாடுகளில் தமிழ்ப்பண்பாடு	310.00
பதிற்றுப்பத்து மூலமும் ஆராய்ச்சிப்புத்துரையும்	170.00
தமிழ் மொழிபெயர்ப்பு முன்னோடிகள்	185.00
மனிதப் புனிதர் கக்கன்	110.00
மொழிபெயர்ப்பு:ஒரு கவின்கலை	75.00
மூவர்தமிழ் மூன்று பார்வைகள்	50.00
காமன்வெல்த் நாடுகளின் கவிதைகள்	100.00
அறிஞர்கள் பார்வையில் பேரறிஞர் அண்ணா	145.00
அறிஞர் அண்ணா-மொபசான் சிறுகதைகள்-ஒப்பாய்வு	160.00
இராசேந்திர சோழன் வெளியிட்ட எசாலம் செப்பேடுகள்	55.00
கடலடியில் தமிழர் நாகரிகம்	55.00
படைப்பு நெறிமுறைகள்	150.00
Comparative Studies in Literary Cultures	100.00
Sangam Classics:New Perspecties	105.00
அரங்கியல் நோக்கில் கபிலர் பாடல்களில் காணலாகும் கதைமாந்தர்கள்	100.00
கடற்பொறியியற் கலைச்சொற்கள் (குறுங்கலைக்களஞ்சியம்)	150.00
சங்க இலக்கியத்தில் சமூக ஆய்வுகள்	55.00
தமிழ் வாழ்க்கை வரலாற்றிலக்கியம்	170.00
கவிஞர் குலோத்துங்கனின் மானுடயாத்திரை காவிய வானில் புதிய தாரகை	45.00
தமிழ் நாடக வகையும் வரலாறும்	110.00
வா.செ.கு.என்ற ஆளுமையாளர்	50.00
உ.வே.சா.வின் குறுந்தொகை உரைத்திறன்	45.00
மருதத்தில் மக்கள் வாழ்வியல்	40.00
வல்லம் புராணம்	200.00
இதழியல் உலகம்	120.00
தமிழும் தமிழ்க் கற்பித்தலும்	60.00
படைப்பிலக்கியம்-விளிம்புநிலை மக்கள் ஆய்வுநோக்கு	100.00
பழந்தமிழும் கிளைமொழிகளும்	65.00
உலக மொழிகளில் தமிழ்ச்சொற்களும் இலக்கணக்கூறுகளும்	85.00
அரசகுலச் சான்றோர் வரலாறும் மதுரைக்காஞ்சியும்	115.00
பெயரியல்	55.00

---

730 தமிழில் இதழியல் **270.00**